Koviloor Digital Library

1906

॥ ஸ்ரீசீதாராமாப்யாம் நம: ॥

மகரிஷி ஸ்ரீ வால்மீகி அருளிய

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

உத்தர காண்டம்

(தமிழ் மூலம் – மொழிபெயர்ப்பு) – (ஐந்தாம் பாகம்)

श्रीमद्वाल्मीकीयरामायणम् (उत्तरकाण्डम् सटीक) पार्ट-५ (तमिल)



Acc. No: 30629
186

गीताप्रेस गोरखपुर
GITA PRESS, GORAKHPUR [SINCE 1923]

கீதா பிரஸ், கோரக்பூர்.

Koviloor Digital Library

Koviloor Digital Library

18-6

॥ ஸ்ரீஹரி: ॥

1906

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்
உத்தர காண்டம்
(தமிழ் மூலம் – மொழிபெயர்ப்பு)
(ஐந்தாவது பாகம்)

श्रीमद्वाल्मीकीयरामायणम्—Volume V

उत्तरकाण्डम् (तमिल)

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ
த்வமேவ ப₃ந்து₄ஶ்ச ஸகா₂ த்வமேவ ।
த்வமேவ வித்₃யா த்₃ரவிணம் த்வமேவ
த்வமேவ ஸர்வம் மம தே₃வதே₃வ ॥

ஆருயிர் அன்னையும் நீயே, அருமைத் தந்தையும் நீயே,
உறவும் சுற்றமும் நீயே, உற்ற நண்பனும் நீயே,
கற்கும் கல்வியும் நீயே, சேர்க்கும் செல்வமும் நீயே,
அனைத்தும் ஆன என்றன் ஆதிதேவனும் நீயே!

COIMBATORE
PH : 99431 12202

கீதா பிரஸ், கோரக்பூர் – 273005. (உ.பி.)

30629
LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

Our Publications are available at —

1. Gita Press Sales Depot, Gita Press Mansion,
8/1-M, Race Course Road (Near Thomas Park Bus-stop)
COIMBATORE-641018. Mobile : 9943112202
2. Gita Press Gorakhpur Book Shop
Electro House, No. 23, Ramanathan Street, KILPAUK,
CHENNAI- 600010. Ph. : (044) 26615959

Second Reprint 2018 1,000
Total 4,000

❖ **Price : ₹ 140**

(One Hundred and Forty Rupees only)

Printed & Published by :

Gita Press, Gorakhpur—273005 (INDIA)

(a unit of Gobind Bhavan-Karyalaya, Kolkata)

Phone : (0551) 2334721, 2331250, 2331251

web : **gitapress.org** e-mail : **booksales@gitapress.org**

Visit gitapressbookshop.in for online purchase of Gitapress publications.

Koviloor Digital Library

13-6

॥ ஸ்ரீஹரி: ॥

பதிப்பாளர் உரை

இராமபிரானுடைய பெருங்கருணையால், ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தின் ஐந்தாவது பாகம் (உத்தர காண்டம்) அடியார்களின் திருக்கரங்களில் வண்ணமிகு மலராக நறுமணம் வீசித் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

மாமுனிவர் வால்மீகியின் இராமாயணத்தில் ஏழு காண்டங்கள் உள்ளன.

'நான், கடந்த ஒன்பது நாட்களாக இராமாயண பாராயணம் செய்து வந்தேன். இன்றுடன் நிறைவடைந்தது' என்று மகிழ்ச்சியுடன் ஓர் அன்பர் தெரிவித்தால், அது சரியான செய்தி அல்ல. யுத்த காண்டத்தின் முடிவில், இராம பட்டாபிஷேகம் என்ற மங்களகரமான நிகழ்ச்சி நிறைவேறியபின், பட்டாபிஷேகத்தைக் காண்பதற்காக வந்திருந்த அரக்க–வானரத் தலைவர்கள், தகுந்த முறையில் கௌரவிக்கப்படுகிறார்கள்; பின்னர், இராமனின் அனுமதியைப் பெற்று, தத்தம் நாடுகளுக்குச் செல்கிறார்கள் – என்று சொல்லி முடித்த பின்னர், 'இராமாயண பாராயணத்தால் என்னென்ன நன்மைகள் விளைகின்றன' என்பதையும் விளக்கமாகக் கூறியிருக்கிறார், வால்மீகி.

இராமாயண பாராயணம் செய்பவர்கள், அந்த நன்மைகளின் பட்டியலைப் படித்துவிட்டு மனநிறைவு அடைகிறார்கள்; இராமபிரானின் பேரருளுக்குப் பாத்திரமாகிறார்கள்; தாங்கள் விரும்பிய பலனை அடைகிறார்கள்.

ஆனால், அதைத் தொடர்ந்து 'உத்தர காண்டம்' என்ற பகுதி இருப்பதைக்கூட பல அன்பர்கள் கவனித்ததில்லை.

உத்தர காண்டத்தில் அப்படி என்ன அற்புதமான நிகழ்ச்சிகள் இருக்கின்றன? வானரர், கரடி, அரக்கர் பிறப்பு பற்றிய தேவரகசியங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

அப்புறம், சீதையைக் காட்டுக்கு அனுப்பி வைக்கிற, மனத்திற்குக் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடிய நிகழ்ச்சி.

நிறைவாக, இராமபிரானே சரயூ நதியில் வீழ்ந்து பூத உடலைத் துறக்கும் சோகமயமான சம்பவம். இவைகளையெல்லாம் படித்துத்தான் ஆகவேண்டுமா?

'கோலாகலமான இராமபட்டாபிஷேகத்தோடு பாராயணத்தை நிறுத்தினால், எவ்வளவு பேரானந்தமாக இருக்கிறது!.....'

– இம்மாதிரியான வாதங்களுக்கு என்ன பதில் சொல்ல முடியும்?

வால்மீகி ராமாயணத்தில் இருபத்து நான்காயிரம் சுலோகங்கள் உள்ளன என்பது, சர்ச்சைக்கு இடமில்லாத விஷயம்.

யுத்த காண்டத்துடன் பாராயணத்தை முடித்துவிட்டால், இருபத்து நான்காயிரம் சுலோகங்களையும் படித்து முடித்துவிட்டதாக ஆகுமா? உத்தர காண்டத்திலுள்ள ஆறாயிரம் சுலோகங்கள் விடுபட்டுப் போகின்றனவே?

ஆகவே, இராமாயண பாராயணம் செய்பவர்கள், 'நான், இராமபட்டாபிஷேகம் வரை பாராயணம் செய்தேன்' என்று சொல்வது பொருத்தமாக இருக்காது.

Koviloor Digital Library

உத்தர காண்டத்தில் ஏராளமான செய்திகள் இருக்கின்றன. அவைகளையும் படித்துத் தெரிந்து கொண்டால்தான், நாம் இராமாயணம் முழுவதையும் படித்து நிறைவு செய்ததாக ஆகும்.

தரையைப் பிளந்து கொண்டு பூமிதேவியே வந்து, சீதையை அழைத்துச் சென்ற காட்சி வருணனைகளைப் படிக்கும்போது, வாசகரின் கண்களில், உலகநாயகியான மகாலட்சுமியே மெய்யுருவாகக் காட்சி தருகிறாள் என்பதை அனுபவபூர்வமாக உணரலாம்.

இராமனுடைய வழித்தோன்றல்கள் பற்றிய செய்திகள் நெறிபிறழாமல் கூறப்பட்டுள்ளதைக் கண்டு வியப்புத் தோன்றுகிறது.

இராமபிரான் தன்னந்தனியனாக, சரயூ நதியின் வழியே திருநாட்டுக்கு எழுந்தருளி விடவில்லை. தன்னுடன் வாழ்ந்திருந்த புல்–பூண்டு முதலியவற்றையும் உடன் அழைத்துச் சென்றார். அவைகளுக்காக 'சாந்திநிகம்' என்ற தனியானதொரு தெய்விகத் திருநாட்டை உண்டாக்கிக் கொடுத்தார்.

இராமனுக்கு நிகரான கருணை வள்ளலைக் காண்பதரிது. அந்த வள்ளன்மையை, உத்தர காண்டம் தெள்ளத்தெளிவாக விளக்கிக் காட்டுகிறது. உத்தர காண்டம், உத்தம காண்டம் என்று போற்றத்தக்கது.

பால காண்டம் தொடங்கி, உத்தர காண்டம் வரை இராமாயணத்தைப் பாராயணம் செய்து, தாரக மந்திர வடிவினனான ஸ்ரீராமமூர்த்தியின் நல்லருளைப் பெற்று உய்வோமாக. இராமன் திருவடிகளில் புகலடைந்துள்ள நம் எல்லோரையும், அவன் காத்து ரட்சிப்பானாக.

அனைத்து நலன்களையும் அருளவல்ல இந்தப் புனித நூலை, அன்பர்கள் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம். அவ்விருப்பத்திற்கேற்ப, எங்களுக்கு இப்புனித காவியத்தை மிகத் தெள்ளிய நடையில் தமிழாக்கம் செய்து தந்து உதவிய, **சென்னை, பண்டிட் டி.எஸ். கோதண்டராமன், B.A.,B.Lit.,** அவர்களுக்கும், மேலும், இந்நூலின் அச்சுப்பிரதிகளில் மூல சுலோகங்களைச் சரிபார்த்துதவிய, **ஸ்ரீரங்கம், பிரும்மவித்யரத்னா, வைத்ய S.V. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள்** அவர்களுக்கும் ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் பேரருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம். அவர்களுக்கு எங்களது நன்றி உரித்தாகுக.

பாராயணம் செய்வோர் அனைவருக்கும் ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் பேரருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறோம்.

ஜெய் ஸ்ரீராம்!

கோ₃ஷ்பதீ₃க்ருதவாராஸிம் மஸகீக்ருத ராக்ஷஸம் ।
ராமாயணமஹாமாலாரத்நம் வந்தே₃ऽநிலாத்மஜம் ॥

'சீதா–லட்சுமண–ஹனுமத் சமேத ஸ்ரீராமனுக்கு ஜெய்!'

— பதிப்பாளர்கள்

Koviloor Digital Library

॥ ஸ்ரீஹரி: ॥

தேவநாகரி எழுத்துக்கள்

வடமொழிச் சொற்களைப் பிழையின்றி உச்சரிக்க உதவியாக, ஆங்கில எழுத்துக்களின் துணைகொண்டு 2, 3, 4 என்னும் குறியீடுகளுடன் வடமொழி எழுத்துக்களுக்கு நிகரான தமிழ் ஒலி வடிவங்களும் தரப்பட்டுள்ளன.

[ka] क க	**[kha]** ख க$_2$	**[ga]** ग க$_3$	**[gha]** घ க$_4$
[ca] च ச	**[cha]** छ ச$_2$	**[ja]** ज ஜ	**[jha]** झ ஜ꠲
[ta] ट ட	**[tta]** ठ ட$_2$	**[da]** ड ட$_3$	**[dda]** ढ ட$_4$
[tha] त த	**[thha]** थ த$_2$	**[dha]** द த$_3$	**[dhha]** ध த$_4$
[pa] प ப	**[pha]** फ ப$_2$	**[ba]** ब ப$_3$	**[bha]** भ ப$_4$
[ŝha] श ശ	**[sha]** ष ஷ	**[sa]** स ஸ	
[gna] ज्ञ ஞ/க்ஞ	**[ksha]** क्ष க்ஷ	**[ṟi]** ऋ ரு	

'ശ' என்னும் எழுத்து பிசகு, கசடு என்னும் சொற்களில் வரும் 'ச'வைப் போல் ஒலிக்கும்.

'ரு' என்னும் எழுத்து எருது, விருது என்னும் சொற்களில் வரும் 'ரு'வைப் போல் ஒலிக்கும்.

சமஸ்கிருத சுலோகங்களில் சில இடங்களில் 'ऽ' அல்லது 'ऽऽ' என்னும் குறியீடுகளைக் காணலாம். இதற்கு **'அவக்$_3$ரஹம்'** என்று பெயர். இந்த இடங்களில் முறையே **'அ', 'ஆ'** என்னும் எழுத்துக்கள் தொக்கி நிற்கின்றன என்று அறிக.

Koviloor Digital Library

॥ ஸ்ரீஹரி: ॥

பொருளடக்கம்

ஸர்க்கம் எண்	பொருள்	பக்கம் எண்
	பதிப்பாளர் உரை	3
	தேவநாகரி எழுத்துக்கள்	5
	பொருளடக்கம்	6

உத்தர காண்டம்

1.	இராமனின் கேள்விகள்	11
2.	புலஸ்தியர் உற்பத்தி	17
3.	குபேரன் வரலாறு	21
4.	அரக்கர் குலத்தின் வரலாறு	27
5.	சுகேசியின் பரம்பரை	31
6.	மகாவிஷ்ணு–மால்யவான் போர்	37
7.	மாலி மாய்ந்தான்!	47
8.	சுமாலி முதலியோர் தோல்வி அடைதல்	55
9.	இராவணன் முதலியோர் பிறப்பு	59
10.	இராவணன் முதலியோர் வரம் பெறுதல்	65
11.	இராவணன் இலங்கையை அடைதல்	71
12.	இராவணன் முதலியோருக்குத் திருமணம்	79
13.	குபேரனுடைய தூதன் கொல்லப்பட்டான்!	83
14.	யக்ஷர்–அரக்கர் போர்	89
15.	இராவணன், புஷ்பக விமானத்தைக் கவர்ந்து சென்றான்!	93
16.	இராவணன் என்ற பெயர் பெறுதல்	99
17.	வேதவதி கொடுத்த சாபம்	107
18.	மருத்தனை வென்றான், இராவணன்!	113
19.	அனரண்யன் கொடுத்த சாபம்	117
20.	இராவணனைத் தூண்டிவிடுதல்	121
21.	யமன்–இராவணன் பெரும்போர்!	127
22.	யமனை வெற்றி கொள்ளுதல்	133
23.	வருணனை வெற்றி கொள்ளுதல்	139

Koviloor Digital Library

ஸர்க்கம் எண்	பொருள்	பக்கம் எண்
24.	சூர்ப்பணகை, கரன் ஆகியோரை தண்டகாரண்யம் செல்ல ஆணையிடுதல்	147
25.	தேவலோகத்தின் மீது படையெடுத்தல்	153
26.	நளகூபரன் சாபம் கொடுத்தல்	161
27.	சுமாலி மாய்ந்தான்!	169
28.	ஜயந்தனை மறைத்து வைத்தல்	175
29.	இந்திரன் பிடிபட்டான்!	183
30.	இந்திரன் தோற்றதற்கான காரணம்	189
31.	இராவணன், சிவனை ஆராதித்தல்	195
32.	இராவணன் பிடிபட்டான்!	201
33.	இராவணன் விடுதலை	211
34.	வாலி–இராவணன் நட்பு	215
35.	அனுமான் பிறப்பு	221
36.	அனுமானுக்கு வரம் கொடுத்தல்	231
37.	அரசவையில் இராமன்!	239
38.	ஜனகன் முதலியோர் விடைபெற்றுச் செல்லுதல்	243
39.	வானரர் மகிழ்ச்சி	247
40.	அனுமான் வேண்டுகோள்	251
41.	புஷ்பகத்தைத் திருப்பி அனுப்புவது	255
42.	பூங்காவில் சீதா–ராமர்கள்	259
43.	பத்ரன் கூறியது	263
44.	இலக்குவன் முதலியோரை அழைப்பித்தல்	267
45.	'சீதையை வனத்தில் விட்டுவிட்டு வா!'	271
46.	கங்கைக் கரைக்கு சீதையை அழைத்துச் செல்வது	273
47.	சீதையிடம் இராமனின் ஆணையைக் கூறுதல்	279
48.	சீதையைத் துறத்தல்	281
49.	வால்மீகியின் ஆசிரமத்திற்குச் செல்வது	285
50.	சுமந்திரர் ரகசியத்தை வெளிப்படுத்துதல்	289
51.	சுமந்திரர், துர்வாசர் சொல்லியதைக் கூறுதல்	291
52.	லட்சுமணன், இராமனுக்கு ஆறுதல் கூறுதல்	295
53.	நிருகன் பெற்ற சாபம்	297
54.	பொந்துக்குள் நிருகன்!	301

Koviloor Digital Library

ஸர்க்கம் எண்	பொருள்	பக்கம் எண்
55.	நிமியும் வசிஷ்டரும் சாபம் கொடுத்தல்	305
56.	மைத்ராவருணி ஆதல்	307
57.	நிமி, பிராணிகளின் கண்ணிமைப்பில் இடம் பெறுதல்	311
58.	யயாதிக்குக் கிடைத்த சாபம்	315
59.	புருவுக்கு முடிசூட்டுதல்	319
இடைச்செருகல்	1. இராமனிடம் முறையீடு செய்ய ஒரு நாயின் வருகை	323
,,	2. இராமன் அளித்த தீர்ப்பு	327
60.	சியவனர் முதலான முனிவர் வருகை	333
61.	'லவணனிடமிருந்து காப்பாற்றுங்கள்!'	337
62.	சத்ருக்னனுக்கு ஆணையிடுதல்	341
63.	லவணனை வெல்லும் உபாயம்	343
64.	சத்ருக்னன் புறப்படுதல்	347
65.	கல்மாஷபாதன் வரலாறு	351
66.	குச–லவர்கள் பிறப்பு	355
67.	மன்னன் மாந்தாதா வதம்	357
68.	லவண–சத்ருக்னரிடையே வாக்குவாதம்	361
69.	லவணன் மாய்ந்தான்!	365
70.	மதுராபுரியில் பிரவேசித்தல்	371
71.	சத்ருக்னன் அயோத்திக்குப் புறப்படுதல்	373
72.	சத்ருக்னன், இராமனைச் சந்தித்தல்	377
73.	அந்தணர் அரற்றுதல்	379
74.	நாரதர் வந்தார்!	381
75.	உரிமையில்லாதவன் செய்த தவம்	387
76.	சம்பூக வதம்	389
77.	அகஸ்தியர் கூறிய ஸ்வர்கி வரலாறு	397
78.	ஆபரணம் எவ்வாறு கிடைத்தது?	399
79.	மன்னன் தண்டனின் ஆட்சி	403
80.	பிருகுவின் புதல்வியைக் கைப்பற்றுதல்	407
81.	சுக்ராசார்யார் கொடுத்த சாபம்	409
82.	இராமன் அயோத்திக்குத் திரும்புதல்	411
83.	ராஜசூயம் செய்யலாமே!	415
84.	விருத்திரனின் தவத்தை வருணித்தல்	417

Koviloor Digital Library

ஸர்க்கம் எண்	பொருள்	பக்கம் எண்
85.	விருத்திரன் வதம்	421
86.	இந்திரன் புனிதமடைந்தான்!	423
87.	மன்னன் இளன் வரலாறு	427
88.	இளா–புதன் சந்திப்பு	431
89.	புரூரவன் பிறப்பு	433
90.	இளா, ஆணாகவே மாறினாள்!	437
91.	அசுவமேதம் செய்ய இராமன் ஆணையிடுதல்	441
92.	அசுவமேத யாகம்	445
93.	வால்மீகி ஆணை	447
94.	இராமாயண அரங்கேற்றம்	449
95.	வால்மீகியிடம் தூதர் வருகை	455
96.	வால்மீகியின் சாட்சியம்	457
97.	சீதை ரஸாதலம் புகுதல்	459
98.	இராமன் சாந்தம் அடைந்தார்!	463
99.	கௌசல்யை முதலியோரின் இறுதிக்காலம்	467
100.	பரதன், கந்தர்வ நாட்டின் மீது படையெடுத்தல்	471
101.	கந்தர்வர் வீழ்ச்சியும், தட்ச–புஷ்கலன் ஆட்சியும்	473
102.	அங்கதனுக்கும் சந்திரகேதுவுக்கும் அரசு அளித்தல்	477
103.	இராமனைச் சந்திக்க, காலன் வந்தான்!	479
104.	பிரும்மாவின் செய்தியை இராமனுக்குக் கூறுதல்	481
105.	துர்வாசர் வருகை	485
106.	இராமன், இலக்குவனைத் துறந்தார்!	487
107.	குச–லவர்களுக்குப் பட்டம் சூட்டுதல்	489
108.	விபீஷணன் முதலியோருக்கு இட்ட கட்டளை	493
109.	இராமன் திருநாட்டுக்குப் புறப்படுதல்	499
110.	இராமன் பரமபதம் எழுந்தருளல்	501
111.	இராமாயண மகிமை	505

Koviloor Digital Library

॥ ஸ்ரீஹரி: ॥

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய

உத்தரகாண்ட$_3$:

ப்ரத$_2$ம: ஸர்க$_3$:

ராமப்ரஶ்ந:

ப்ராப்தராஜ்யஸ்ய ராமஸ்ய ராக்ஷஸாநாம் வதே$_4$ க்ருதே ।
ஆஜக்$_3$முர்முநய: ஸர்வே ராக$_4$வம் ப்ரதிநந்தி$_3$தும் ॥ (1)

கௌஶிகோऽத$_2$ யவக்ரீதோ க$_3$ார்க்$_3$யோ க$_3$ாலவ ஏவ ச ।
காண்வோ மேத$_4$ாதிதே$_2$: புத்ர: பூர்வஸ்யாம் தி$_3$ஶி யே ஶ்ரிதா: ॥ (2)

ஸ்வஸ்த்யாத்ரேயோऽத$_2$ ப$_4$க$_3$வாந்நமுசி: ப்ரமுசிஸ்தத$_2$ா ।
அக$_3$ஸ்த்யோऽத்ரிஶ்ச ப$_4$க$_3$வாந் ஸுமுகோ$_2$ விமுக$_2$ஸ்தத$_2$ா ॥
ஆஜக்$_3$முஸ்தே ஸஹாக$_3$ஸ்த்யா யே ஸ்தி$_2$தா த$_3$க்ஷிணாம் தி$_3$ஶம் ॥ (3)

ந்ருஷத்$_3$கு$_3$: கவஷோ தௌ$_4$ம்யோ ரௌத்$_3$ரேயஶ்ச மஹாந்ருஷி: ।
தேऽப்யாஜக்$_3$மு: ஸஶிஷ்யா வை யே ஶ்ரிதா: பஶ்சிமாம் தி$_3$ஶம் ॥ (4)

வஸிஷ்ட$_2$:காஶ்யபோऽத$_2$ாத்ரிர்விஶ்வாமித்ர:ஸகௌ$_3$தம: ।
ஜமத$_3$க்$_3$நிர்ப$_4$ரத்$_3$வாஜஸ்தேऽபி ஸப்தர்ஷயஸ்தத$_2$ா ॥
உதீ$_3$ச்யாம் தி$_3$ஶி ஸப்தைதே நித்யமேவ நிவாஸிந: ॥ (5)

ஸம்ப்ராப்ய தே மஹாத்மாநோ ராக$_4$வஸ்ய நிவேஶநம் ।
விஷ்டி$_2$தா: ப்ரதிஹாரார்த$_2$ம் ஹுதாஶநஸமப்ரப$_4$ா: ॥
வேத$_3$வேத$_3$ாங்க$_3$வித$_3$ுஷோ நாநாஶாஸ்த்ரவிஶாரத$_3$ா: ॥ (6)

த்$_3$வா:ஸ்த$_2$ம் ப்ரோவாச த$_4$ர்மாத்மா ஹ்யக$_3$ஸ்த்யோ முநிஸத்தம: ।
நிவேத்$_3$யதாம் த$_3$ாஶரதே$_2$ர்ருஷீநஸ்மாந் ஸமாக$_3$தாந் ॥ (7)

ப்ரதீஹாரஸ்ததஸ்தூர்ணமக$_3$ஸ்த்யவசநாத்$_3$த்ருதம் ।
ஸமீபம் ராக$_4$வஸ்யாஶு ப்ரவிவேஶ மஹாத்மந: ॥ (8)

நயேங்கி$_3$தக்ஞ: ஸத்$_3$வ்ருத்தோ த$_3$க்ஷோ தை$_4$ர்யஸமந்வித: ।
ஸ ராமம் த்$_3$ருஶ்ய ஸஹஸா பூர்ணசந்த்$_3$ரஸமப்ரப$_4$ம் ॥
அக$_3$ஸ்த்யம் கத$_2$யாமாஸ ஸம்ப்ராப்தம்ருஷிபி$_4$: ஸஹ ॥ (9)

ஶ்ருத்வா ப்ராப்தாந் முநீம்ஸ்தாம்ஸ்து ப$_3$ாலஸூர்யஸமப்ரப$_4$ாந் ।
ப்ரத்யுவாச ததோ த்$_3$வா:ஸ்த$_2$ம் ப்ரவேஶய யத$_2$ாஸுக$_2$ம் ॥ (10)

Koviloor Digital Library

॥ ஸ்ரீஹரி: ॥

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய

உத்தர காண்டம்

ஸர்க்கம் : ஒன்று

இராமனின் கேள்விகள்

இராமன், அரக்கர்களை அழித்து ஒழித்து பின் (கோசல நாட்டின்) ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதும், இராகவனைப் பாராட்டி வாழ்த்துவதற்காக எல்லா முனிவர்களும் (அயோத்திக்கு) வந்தார்கள். (இராகவன் என்ற சொல், இலக்குவனைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.) (1)

கிழக்குப் பிரதேசங்களில் வசிக்கும் முக்கிய முனிவர்களான கௌசிகர், யவக்ரீதர், கார்க்யர், காலவர், மேதாதிதியின் குமாரரான கண்வர் (முதலியோர் வந்தார்கள்); (2)

ஸ்வஸ்த்யாத்ரேயர் (நன்மையைச் செய்யும் ஆத்ரேயர்), பகவான் நமுசி, பிரமுசி, அகஸ்தியர், பகவான் அத்ரி, ஸுமுகர், விமுகர் முதலியோர் தெற்குப் பிரதேசத்தில் வாழ்பவர்கள். இவர்களும் அகஸ்தியருடன் வந்தார்கள். (3)

மேற்குத் திசையில் வாழ்பவர்களான ந்ருஷத்கு, கவஷர், தௌம்யர், மாமுனிவரான ரௌத்ரேயர் ஆகியோர் தத்தம் சீடர்களுடன் வந்தார்கள். (4)

வடக்குத் திசையில் எப்போதும் வசித்து வருபவர்களான வசிஷ்டர், காசியபர், அத்ரி, விசுவாமித்திரர், கௌதமர், ஜமதக்னி, பரத்வாஜர் என்ற முனிவர் எழுவரும் வந்தார்கள். (தவவலிமை பெற்ற முனிவர்களாதலால், பல உடல்களை மேற்கொண்டு பல இடங்களில் இருக்க முடியும். சப்தரிஷி மண்டலத்திலிருந்து வந்த வசிஷ்டர், இங்கே குறிப்பிடப்படுகிறார். அதே சமயத்தில் அயோத்தியில் ராஜகுருவாகவும் இருக்க முடியும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விசுவாமித்திரர், ஸித்தாசிரமத்தில் வேள்வி இயற்றியவர் அல்லர்; இவர் வேறொருவர்.) (5)

கொழுந்துவிட்டெரியும் அக்னியைப் போல் பிரகாசிப்பவர்கள்; வேத–வேதாந்தங்களைக் கற்றுணர்ந்தவர்கள்; பலவகையான சாஸ்திரங்களிலும் வல்லுநர்கள். மேலும், அதிமானுட சக்தி படைத்தவர்களுமான அவர்கள், இராமனுடைய மாளிகை வாசலை அடைந்து தங்கள் வருகை பற்றித் தெரிவிப்பதற்காக அங்கேயே இருந்தார்கள். (6)

முனிவர்களுள் சிறந்தவரும் அறநெறியாளருமான அகஸ்தியர், வாயிற்காப்போனிடம் ''முனிவர்களான நாங்கள் எல்லோரும் வந்திருக்கிறோம் என்று தசரத குமாரனிடம் தெரிவிப்பாயாக'' என்று கூறினார். (7)

அகஸ்தியருடைய சொற்களைக் கேட்டவுடன் வாயிற்காவலன், மகாத்மாவான இராமன் இருந்த இடத்திற்கு விரைந்து சென்று அணுகினான். (8)

அரசுப் பணிமுறைகள் அறிந்தவன்; மனநிலையை அறிந்து செயல்படுபவன்; நன்னடத்தை உள்ளவன்; திறமைமிக்கவன்; தைரியமுடையவன் – இத்தகைய குணச்சிறப்புகளைக் கொண்ட வாயிற்காவலன், முழுநிலாவைப் போல் ஒளிவீசும் இராமனைப் பார்த்து அநேக முனிவர்களுடன்கூட அகஸ்தியர் வந்திருப்பதாக விண்ணப்பித்தான். (9)

உதிக்கின்ற இளம்சூரியனைப்போல் ஒளிவீசும் மாமுனிவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைக் கேட்டதும், ''இன்சொல் கூறி அவர்களை உள்ளே அனுப்பி வை'' என்றார், இராமன். (10)

Koviloor Digital Library

தாந் ஸம்ப்ராப்தாந் முநீந் த்3ருஷ்ட்வா ப்ரத்யுத்த2ாய க்ருதாஞ்ஜலி: ।
பாத்3யார்க்4யாதி3பி4ராநர்ச்ய க3ாம் நிவேத்3ய ச ஸாத3ரம் ॥
ராமோऽபி4வாத்3ய ப்ரயத ஆஸநாந்யாதி3தே3ஶ ஹ ॥ (11)

தேஷு காஞ்சநசித்ரேஷு ஸ்வாஸ்தீர்ணேஷு ஸுகே2ஷு ச ।
குஶாந்தர்த4ாநதத்3தேஷு ம்ருக3சர்மயுதேஷு ச ॥
யத2ார்ஹமுபவிஷ்டாஸ்தே ஆஸநேஷ்வ்ருஷிபுங்க3வா: ॥ (12)

ராமேண குஶலம் ப்ருஷ்டா: ஸஶிஷ்யா: ஸபுரோக3மா: ।
மஹர்ஷயோ வேத3விதே3ா ராமம் வசநமப்ருவந் ॥ (13)

குஶலம் நோ மஹாப3ாஹோ ஸர்வத்ர ரகு4நந்த3ந ।
த்வாம் து தி3ஷ்ட்யா குஶலிநம் பஶ்யாமோ ஹதஶாத்ரவம் ॥ (14)

தி3ஷ்ட்யா த்வயா ஹதோ ராஜந் ராவணோ லோகராவண: ।
ந ஹி ப4ார: ஸ தே ராம ராவண: புத்ரபௌத்ரவாந் ॥ (15)

ஸத4நுஸ்த்வம் ஹி லோகாந்ஸ்த்ரீந் விஜயேத2ா ந ஸம்ஶய: ।
தி3ஷ்ட்யா த்வயா ஹதோ ராம ராவணோ ராக்ஷஸேஶ்வர: ॥ (16)

தி3ஷ்ட்யா விஜயிநம் த்வாத்3ய பஶ்யாம: ஸஹ ஸீதயா ।
லக்ஷ்மணேந ச த4ர்மாத்மந் ப்4ராத்ரா த்வத்3தி4தகாரிணா ॥
மாத்ருபி4ர்ப்4ராத்ருஸஹிதம் பஶ்யாமோऽத்3ய வயம் ந்ருப ॥ (17)

தி3ஷ்ட்யா ப்ரஹஸ்தோ விகடோ விரூபாக்ஷோ மஹோத3ர: ।
அகம்பநஶ்ச து3ர்த4ர்ஷோ நிஹதாஸ்தே நிஶாசரா: ॥ (18)

யஸ்ய ப்ரமாணாத்3விபுலம் ப்ரமாணம் நேஹ வித்3யதே ।
தி3ஷ்ட்யா தே ஸமரே ராம கும்ப4கர்ணோ நிபாதித: ॥ (19)

த்ரிஶிராஶ்சாதிகாயஶ்ச தே3வாந்தகநராந்தகௌ ।
தி3ஷ்ட்யா தே நிஹதா ராம மஹாவீர்யா நிஶாசரா: ॥ (20)

கும்ப4ஶ்சைவ நிகும்ப4ஶ்ச ராக்ஷஸௌ பீ4மத3ர்ஶநௌ ।
தி3ஷ்ட்யா தௌ நிஹதௌ ராம கும்ப4கர்ணஸுதௌ ம்ருதே4 ॥ (21)

யுத்3தே4ாந்மத்தஶ்ச மத்தஶ்ச காலாந்தகயமோபமௌ ।
யஜ்ஞகோபஶ்ச ப3லவாந் தூ4ம்ராக்ஷோ நாம ராக்ஷஸ: ॥ (22)

குர்வந்த: கத3நம் கே4ாரமேதே ஶஸ்த்ராஸ்த்ரபாரக3ா: ।
அந்தகப்ரதிமைர்ப3ாணைர்தி3ஷ்ட்யா விநிஹதாஸ்த்வயா ॥ (23)

தி3ஷ்ட்யா த்வம் ராக்ஷஸேந்த்3ரேண த்3வந்த்3வயுத்3த4முபாக3த: ।
தே3வதாநாமவத்4யேந விஜயம் ப்ராப்தவாநஸி ॥ (24)

Koviloor Digital Library

சபைக்குள் நுழைந்த முனிவர்களைக் கண்டவுடன் இராமன், இருக்கையிலிருந்து எழுந்து கைகளைக் கூப்பி வரவேற்றார். பாத்யம், அர்க்யம் முதலான உபசாரங்களைச் செய்து, மிக்க மகிழ்ச்சியுடன் கோதானம் செய்தார். பணிவுடன் அவர்களை வணங்கி, அவர்கள் அமர்வதற்கு ஆசனங்களைக் காட்டினார். (11)

பொன் வேலைப்பாடு செய்யப்பட்டிருந்த அந்த இருக்கைகள், விசாலமாகவும் சுகமாகவும் இருந்தன; தர்பாசனங்கள் விரிக்கப்பட்டு, அதன்மேல் மான்தோல் போடப்பட்டிருந்தது. உத்தம முனிவர்களான அவர்கள் தத்தம் தகுதிக்கு ஏற்றபடி ஆசனங்களில் அமர்ந்து கொண்டார்கள். (12)

சீடர்களோடும் ஆசார்யர்களோடும் வந்திருந்த அவர்களைப் பார்த்து இராமன் குசலம் விசாரித்ததும், வேதவித்தகர்களான மாமுனிவர்கள் இராமனை நோக்கிக் கூறினார்கள்— (13)

''தோள்வலி மிக்கவரே! ரகுநந்தனரே! நாங்கள் எல்லாவிதங்களிலும் சுகமாக இருக்கிறோம். எதிரிகளைக் கொன்று, தெய்வாதீனமாக உயிருடன் சௌக்கியமாகத் திரும்பியிருக்கும் உங்களைக் காண்கிறோம். (14)

மன்னரே! உலகத்தைக் கதறவடித்த இராவணன், இறைவன் திருவருளால் உங்களால் மாய்க்கப்பட்டான். (மாவீரர்களான) புதல்வர்களோடும் பேரன்களோடும் இருந்த இராவணன், உங்களுக்கு ஒரு சுமையாக இருக்கவில்லை. (அவனை வேரோடு அழிப்பது உங்களுக்கு ஓர் அரிய செயல் அல்ல; எளிதாகவே செய்து முடித்துவிட்டீர்கள்.) (15)

நீங்கள் கையில் வில்லை எடுத்துக்கொண்டு விட்டால், மூன்று உலகங்களையும் வெல்லக் கூடியவர் என்பதில் ஐயமில்லை. அரக்கர் தலைவனான இராவணன், அதிருஷ்டவசமாக உங்களால் கொல்லப்பட்டான். (16)

அறநெறியை உயிர்மூச்சாகக் கொண்டவரே! சீதையோடும் உங்கள் நலனைச் செய்யும் சகோதரன் இலக்குவனோடும் வெற்றித்திருவுடன் பொலியும் உங்களைத் தெய்வ வசத்தால் இப்போது கண்களால் காண்கிறோம். மன்னரே! அன்னைமார்களோடும் மற்ற சகோதரர்களோடும் (பரத–சத்ருக்னர்களோடும்) உங்களைக் கண்ணால் காணும் பேறு பெற்றோம். (17)

பிரஹஸ்தன், விகடன், விரூபாக்ஷன், மஹோதரன், எவராலும் வெல்லமுடியாத அகம்பனன் ஆகிய அரக்க மாவீரர்கள், தெய்வத்தின் அருளால் உங்களால் மாய்க்கப்பட்டார்கள். (18)

இராமா! எவனுடைய பெருத்த சரீரத்திற்கு நிகரான உடல் உடையவன் வேறு எவனும் இல்லையோ, அப்படிப்பட்ட கும்பகர்ணன், உங்களால் கொல்லப்பட்டான் என்பது எங்கள் நல்லதிருஷ்டமே. (19)

இராமனே! அளவிடமுடியாத வீரம் கொண்ட அரக்கர்களான திரிசிரஸ், அதிகாயன், தேவாந்தகன், நராந்தகன் ஆகியோர் எங்கள் நற்பேற்றினால் உங்களால் கொல்லப்பட்டார்கள். (20)

கும்பகர்ணனுடைய புதல்வர்களும் பயங்கரமான உருவமுடையவர்களுமான கும்ப–நிகும்பர்கள், எங்கள் நல்லூழ் காரணமாக போர்க்களத்தில் உங்களால் கொல்லப்பட்டார்கள். (21)

யமன் போன்ற யுத்தோன்மத்தன், மத்தன், யக்ஞகோபன், ஆற்றல்மிக்க தூம்ராக்ஷன் என்னும் அரக்கன் ஆகிய இவர்கள் அஸ்திர–சஸ்திரக் கலையில் நிபுணர்கள்; உலகில் பெரும் அழிவைச் செய்து கொண்டிருந்தவர்கள். நல்லகாலமாக, பிரளய காலத்தில் எல்லாப் பிராணிகளின் உயிரைக் குடித்து பேரழிவைச் செய்யும் அந்தகன் போன்ற பாணங்களாலும் தெய்வ சங்கல்பத்தாலும் உங்களால் கொல்லப்பட்டார்கள். (22,23)

தேவர்களாலும் வெற்றிகொள்ள முடியாத அரக்க மன்னனுடன் தனித்துப் போர் நிகழ்த்தி, தெய்வ அருளால் வெற்றி அடைந்தீர்கள் என்பது மகிழ்ச்சிகரமான விஷயம். (24)

Koviloor Digital Library

ஸங்க்$_2$யே தஸ்ய த கிஞ்சித்து ராவணஸ்ய பராப$_4$வ: ।
த்$_3$வந்த்$_3$வயுத்$_3$த$_4$மநுப்ராப்தோ தி$_3$ஷ்ட்யா தே ராவணிர்ஹத: ॥ (25)

தி$_3$ஷ்ட்யா தஸ்ய மஹாபா$_3$ஹோ காலஸ்யேவாபி$_4$தா$_4$வத: ।
முக்த: ஸுரரிபோர்வீர ப்ராப்தஶ்ச விஜயஸ்த்வயா ॥ (26)

அபி$_4$நந்தா$_3$ம தே ஸர்வே ஸம்ஶ்ருத்யேந்த்$_3$ரஜிதோ வத$_4$ம் ।
ஸோऽவத்$_4$ய: ஸர்வபூ$_4$தாநாம் மஹாமாயாத$_4$ரோ யுதி$_4$ ॥
விஸ்மயஸ்த்வேஷ சாஸ்மாகம் தம் ஶ்ருத்வேந்த்$_3$ரஜிதம் ஹதம் ॥ (27)

ஏதே சாந்யே ச ப$_3$ஹவோ ராக்ஷஸா: காமரூபிண: ।
தி$_3$ஷ்ட்யா த்வயா ஹதா வீரா ரகூ$_4$ணாம் குலவர்த$_4$ந ॥ (28)

த$_3$த்த்வா புண்யாமிமாம் வீர ஸௌம்யாமப$_4$யத$_3$க்ஷிணாம் ।
தி$_3$ஷ்ட்யா வர்த$_4$ஸி காகுத்ஸ்த$_2$ ஜயேநாமித்ரகர்ஶந ॥ (29)

ஶ்ருத்வா து தேஷாம் வசநம்ருஷீணாம் பா$_4$விதாத்மநாம் ।
விஸ்மயம் பரமம் க$_3$த்வா ராம: ப்ராஞ்ஜலிரப்$_3$ரவீத் ॥ (30)

ப$_4$க$_3$வந்த: கும்ப$_4$கர்ணம் ராவணம் ச நிஶாசரம் ।
அதிக்ரம்ய மஹாவீர்யௌ கிம் ப்ரஶம்ஸத$_2$ ராவணிம் ॥ (31)

மஹோத$_3$ரம் ப்ரஹஸ்தம் ச விரூபாக்ஷம் ச ராக்ஷஸம் ।
மத்தோந்மத்தௌ ச து$_3$ர்த$_4$ர்ஷௌ தே$_3$வாந்தகநராந்தகௌ ॥
அதிக்ரம்ய மஹாவீர்யாந் கிம் ப்ரஶம்ஸத$_2$ ராவணிம் ॥ (32)

அதிகாயம் த்ரிஶிரஸம் தூ$_4$ம்ராக்ஷம் ச நிஶாசரம் ।
அதிக்ரம்ய மஹாவீர்யாந் கிம் ப்ரஶம்ஸத$_2$ ராவணிம் ॥ (33)

கீத்$_3$ருஶோ வை ப்ரபா$_4$வோऽஸ்ய கிம் ப$_3$லம் க: பராக்ரம: ।
கேந வா காரணேநைஷ ராவணாத$_3$திரிச்யதே ॥ (34)

ஶக்யம் யதி$_3$ மயா ஶ்ரோதும் ந க$_2$ல்வாக்ஞாபயாமி வ: ।
யதி$_3$ கு$_3$ஹ்யம் ந சேத்$_3$வக்தும் ஶ்ரோதுமிச்சா$_2$மி கத்$_2$யதாம் ॥ (35)

ஶக்ரோऽபி விஜிதஸ்தேந கத$_2$ம் லப்$_3$த$_4$வரஶ்ச ஸ: ।
கத$_2$ம் ச ப$_3$லவாந் புத்ரோ ந பிதா தஸ்ய ராவண: ॥ (36)

கத$_2$ம் பிதுஶ்சாப்$_4$யதி$_4$கோ மஹாஹவே
ஶக்ரஸ்ய ஜேதா ஹி கத$_2$ம் ஸ ராக்ஷஸ: ।
வராஶ்ச லப்$_3$தா$_4$: கத$_2$யஸ்வ மேऽத்$_3$ய
பாப்ரச்ச$_2$தஶ்சாஸ்ய முநீந்த்$_3$ர ஸர்வம் ॥ (37)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகியே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ப்ரத$_2$ம: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

உங்கள் உத்தரவுப்படி, இலக்குவன் நிகழ்த்திய தனிப்போரில் இராவண மைந்தன் கொல்லப்பட்டான் – என்பதுடன் ஒப்பிடும்போது, போரில் இராவணன் அவமானம் (தோல்வி) அடைந்தான் – என்பது, சாமான்ய விஷயமே. (25)

பெருந்தோளரே! வீரரே! காலனைப் போல் எதிர்த்து வந்த அவனால் ஏவப்பட்ட நாகபாச வலையிலிருந்து விடுபட்டு, தெய்வத்தின் அருளால் நீங்கள் வெற்றி பெற்றீர்கள். (26)

இந்திரஜித் கொல்லப்பட்டான் என்ற செய்தியைக் கேட்டு, நாங்கள் எல்லோரும் உங்களைப் பாராட்டுகிறோம். போரில் மாயாஜாலங்களைக் காட்டும் அவன், எவராலும் வெல்லப்பட முடியாதவனாக இருந்தான். அதனால், இந்திரஜித் கொல்லப்பட்டான் என்பதைக் கேட்டு நாங்கள் பேராச்சரியம் அடைந்தோம். (27)

ரகுகுலத்தின் பெருமையை வளர்ப்பவரே! இவர்களும், நினைத்த உருவம் எடுக்கக்கூடிய மற்றும் பல அரக்கர்களும், மக்களின் நல்வினை காரணமாக உங்களால் கொல்லப்பட்டார்கள். (28)

வீரரே! காகுத்தரே! எதிரிகளைக் கசக்கிப் பிழிபவரே! உலகத்திற்கு மிகவும் தேவையான போற்றத்தக்க அபயதானம் அளித்துள்ள உங்களுக்கு, பகவான் மேலும் மேலும் பெருமையை அளிப்பாராக.'' (29)

மெய்யுணர்வுடைய அந்த முனிவர்களின் உரையைக் கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்த இராமன், கைகளைக் கூப்பிக்கொண்டு கேட்டார்— (30)

''எல்லையில்லா ஆற்றல் கொண்ட அரக்கர்களான கும்பகர்ணன், இராவணன் ஆகியோரை ஒதுக்கிவிட்டு, இராவணன் புதல்வனான இந்திரஜித்தை ஏன் புகழ்கிறீர்கள்? (31)

மஹோதரன், பிரஹஸ்தன், அரக்கனான விரூபாக்ஷன், மத்தன், உன்மத்தன், பிறரால் எதிர்த்து நிற்க முடியாத தேவாந்தகன், நராந்தகன் முதலிய மாவீரர்களை விட்டுவிட்டு, இந்திரஜித்தை ஏன் புகழ்கிறீர்கள்? (32)

அதிகாயன், திரிசிரஸ், அரக்கனான தூம்ராக்ஷன் முதலிய மாவீரர்களைப் புறந்தள்ளி, இந்திரஜித்தை ஏன் புகழ்கிறீர்கள்? (33)

அவனுடைய பிரபாவம் எப்படிப்பட்டது? பலம் என்ன? வெற்றி கொள்ள முடியாத தனிப்பட்ட பேராற்றல் எப்படி வந்தது? எந்தக் காரணத்தால் அவன் இராவணனைக் காட்டிலும் மேலோங்கி நிற்கிறான்? (34)

(இது குறித்து) நான் கேட்கத்தகுந்தவன் என்றால், சொல்லக்கூடாத ரகசியம் இல்லையென்றால், (இந்திரஜித்தின் சிறப்பைப் பற்றி) நான் கேட்க விரும்புகிறேன்; சொல்லும்படி உங்களையே கேட்டுக் கொள்கிறேன்; ஆணையிடவில்லை. (35)

இந்திரனும் அவனால் வெல்லப்பட்டான் – என்றால், அத்தகைய வரத்தை அவன் (இந்திரஜித்) எவ்வாறு பெற்றான்? தந்தையான இராவணனைக் காட்டிலும், மைந்தன் அதிக ஆற்றலுடையவனாக இருந்தது, எவ்வாறு? (36)

மாமுனிவரே! அரக்கனான இந்திரஜித், போர்க்களத்தில் இராவணனைக் காட்டிலும் அதிக ஆற்றலுடையவனாக இருந்ததும், இந்திரனையும் வெற்றி கொண்டதும் எப்படி? அவன் பல வரங்களைப் பெற்றது, எப்படி? இப்போது இவைகளைப் பற்றி நான் தெரிந்துகொள்ள விரும்பிக் கேட்கிறேன். அருள்கூர்ந்து எல்லா செய்திகளையும் கூறவேண்டும். (37)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
முதலாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

த்$_3$விதீய: ஸர்க$_3$:

பௌலஸ்த்யோத்பத்தி:

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ராக$_4$வஸ்ய மஹாத்மந: ।
கும்ப$_4$யோநிர்மஹாதேஜா ராமமேதது$_3$வாச ஹ ॥ (1)

ஶ்ருணு ராம யதா$_2$வ்ருத்தம் தஸ்ய தேஜோப$_3$லம் மஹத் ।
ஜகா$_4$ந ஶத்ரூந் யேநாஸௌ ந ச வத்$_4$ய: ஸ ஶத்ருபி$_4$: ॥ (2)

தாவத்தே ராவணஸ்யேத$_3$ம் குலம் ஜந்ம ச ராக$_4$வ ।
வரப்ரதா$_3$நம் ச ததா$_2$ தஸ்மை த$_3$த்தம் ப்$_3$ரவீமி தே ॥ (3)

புரா க்ருதயுகே$_3$ ராம ப்ரஜாபதிஸுத: ப்ரபு$_4$: ।
புலஸ்த்யோ நாம ப்$_3$ரஹ்மர்ஷி: ஸாக்ஷாதி$_3$வ பிதாமஹ: ॥ (4)

நாநுகீர்த்யா கு$_3$ணாஸ்தஸ்ய த$_4$ர்மத: ஶீலதஸ்ததா$_2$ ।
ப்ரஜாபதே: புத்ர இதி வக்தும் ஶக்யம் ஹி நாமத: ॥ (5)

ப்ரஜாபதிஸுதத்வேந தே$_3$வாநாம் வல்லபோ$_4$ ஹி ஸ: ।
இஷ்ட: ஸர்வஸ்ய லோகஸ்ய கு$_3$ணை: ஶுப்$_4$ரைர்மஹாமதி: ॥ (6)

ஸ து த$_4$ர்மப்ரஸங்கே$_3$ந மேரோ: பார்ஶ்வே மஹாகி$_3$ரே: ।
த்ருணபி$_3$ந்த$_3$வாஶ்ரமம் க$_3$த்வா ந்யவஸந்முநிபுங்க$_3$வ: ॥ (7)

தபஸ்தேபே ஸ த$_4$ர்மாத்மா ஸ்வாத்$_4$யாயநியதேந்த்$_3$ரிய: ।
க$_3$த்வாஶ்ரமபத$_3$ம் தஸ்ய விக்$_4$நம் குர்வந்தி கந்யகா: ॥ (8)

தே$_3$வபந்நக$_3$கந்யாஶ்ச ராஜர்ஷிதநயாஶ்ச யா: ।
க்ரீட$_3$ந்த்யோऽப்ஸரஸஶ்சைவ தம் தே$_3$ஶமுபபேதி$_3$ரே ॥ (9)


ஸர்வர்துஷூபபோ$_4$க்$_3$யத்வாத்$_3$ரம்யத்வாத் காநநஸ்ய ச ।
நித்யஶஸ்தாஸ்து தம் தே$_3$ஶம் க$_3$த்வா க்ரீட$_3$ந்தி கந்யகா: ॥ (10)

தே$_3$ஶஸ்ய ரமணீயத்வாத் புலஸ்த்யோ யத்ர ஸ த்$_3$விஜ: ।
கா$_3$யந்த்யோ வாத$_3$யந்த்யஶ்ச லாஸயந்த்யஸ்ததை$_2$வ ச ॥
முநேஸ்தபஸ்விநஸ்தஸ்ய விக்$_4$நம் சக்ருரநிந்தி$_3$தா: ॥ (11)

அத$_2$ க்ருத்$_3$தோ$_4$ மஹாதேஜா வ்யாஜஹார மஹாமுநி: ।
யா மே த$_3$ர்ஶநமாக$_3$ச்சே$_2$த் ஸா க$_3$ர்ப$_4$ம் தா$_4$ரயிஷ்யதி ॥ (12)


தாஸ்து ஸர்வா: ப்ரதிஶ்ருத்ய தஸ்ய வாக்யம் மஹாத்மந: ।
ப்$_3$ரஹ்மஶாபப$_4$யாத்$_3$பீ$_4$தாஸ்தம் தே$_3$ஶம் நோபசக்ரமு: ॥
த்ருணபி$_3$ந்தோ$_3$ஸ்து ராஜர்ஷேஸ்தநயா ந ஶ்ருணோதி தத் ॥ (13)

Koviloor Digital Library




ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் பட்டாபிஷேகம்

Koviloor Digital Library



பல இடங்களிலிருந்து வந்த ரிஷி முனிவர்கள் ராமசந்திரமூர்த்தியைப் போற்றுகிறார்கள்.

Koviloor Digital Library




ரிஷி வால்மீகி குச-லவர்களுக்கு இராமாயணம் கற்பிக்கிறார்.




ரிஷி வால்மீகி குச-லவர்களுக்கு வில்வித்தை கற்பிக்கிறார்.

Koviloor Digital Library




அரசவையில் குச-லவர்கள் இராம காவியம் இசைப்பதை, ஸ்ரீராமன் கேட்கிறார்.

Koviloor Digital Library




அசுவமேத யாகத்திற்கு வேண்டி குதிரையை விடுகிறார்கள்.

Koviloor Digital Library




ஸ்ரீராமன், தங்கத்தால் செய்த சீதாதேவி பிரதிமையுடன், அசுவமேத யாகம் செய்கிறார்.

Koviloor Digital Library



ஸ்ரீராமனின் அவதார காரியம் முடிந்ததும் காலனின்
வருகையால், ஸ்ரீராமன் லட்சுமணனிடம் தனது லீலையை
முடிக்க வேண்டியது குறித்து பேசுகிறார்.

Koviloor Digital Library



ஸ்ரீராமன் தன்னுடன், அயோத்தியில் உள்ள சகல ஜீவராசிகளையும்
சரயூ நதி வழியாக வைகுண்டத்திற்கு அழைத்துச் செல்கிறார்.

Koviloor Digital Library

ஸர்க்கம் : இரண்டு

புலஸ்தியர் உற்பத்தி

மகாத்மாவான இராமன் கூறியதைக் கேட்டு, தவப்பொலிவு படைத்த அகஸ்தியர், இராமனிடம் பின்வருமாறு கூறினார்— (1)

இராமா! அவன் (இந்திரஜித்) எந்த பல–பராக்கிரமத்தினால் எதிரிகளைக் கொன்று வீழ்த்தினானோ, எதனால் அவன் பகைவர்களால் கொல்ல முடியாதவனாக இருந்தானோ, அந்தக் காரணத்தைக் கூறுகிறேன், கேளுங்கள். (2)

இராகவனே! நீங்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்கு முன்னுரையாக, இராவணனுடைய குலம், பிறப்பு, வரங்களைப் பெறுதல் முதலியவைகளைக் கூறப்போகிறேன், கேளுங்கள். (3)

இராமா! முன்னொரு கிருதயுகத்தில், பிரஜாபதி பிரும்மாவின் மானஸ புத்திரனாக புலஸ்தியர் என்ற பெயருடையவர் தோன்றினார். பிரும்மரிஷியான அவர், சாட்சாத் பிரும்மாவைப் போலவே தெய்வ சக்தி கொண்டவராக இருந்தார். (4)

அறத்தின் அடிப்படையிலும் ஒழுக்கத்தின் அடிப்படையிலும் அமைந்த அவருடைய நற்குணங்களை வார்த்தைகளால் விளக்க முடியாது. பிரஜாபதியின் புதல்வர் என்று சொல்வதே, அவருடைய சிறப்பை உணர்த்தப் போதுமானது. (5)

பிரும்மாவின் புதல்வர் என்பதால், தேவர்கள் எல்லோரும் அவரிடம் மதிப்பு வைத்திருந்தார்கள். பேரறிவாளரான அவர், தன்னுடைய உயர்குணங்களாலும் தூய நடத்தையாலும் எல்லா மக்களாலும் விரும்பத்தக்கவராக இருந்தார். (6)

ஒரு சமயம், தவம் செய்வதற்காக மாமலையான மேருவின் அருகிலிருந்த 'த்ருணபிந்து' என்ற முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்று வசிக்கத் தொடங்கினார். (7)

அறத்தையே உயிராகக் கொண்ட அவர், புலன்களை அடக்கி, வேதங்களை ஓதிக்கொண்டு தவம் செய்து வந்தார். சில இளநங்கைகள் அவர் ஆசிரம வளாகத்திற்குச் சென்று அவருக்கு இடையூறு செய்தார்கள். (8)

தேவ–நாக–ராஜரிஷிகளின் பெண்களும் அப்சரசுகளும் வேடிக்கையாக விளையாடிக் கொண்டே, அவர் இருந்த இடத்தை அடைந்தார்கள். (9)

அந்தக் கானகப் பிரதேசம், எல்லாப் பருவ காலங்களிலும் சுகத்தைக் கொடுப்பதாக இருந்ததாலும் கண்ணுக்கினியதாக இருந்ததாலும், அந்த இளநங்கைகள் தினந்தோறும் அவ்விடத்திற்குச் சென்று விளையாடிக் கொண்டிருந்தார்கள். (10)

பிரும்மரிஷியான புலஸ்தியர் வசித்துக் கொண்டிருந்த பிரதேசம் மிகவும் அழகாக இருந்ததால், கள்ளங்கபடமற்ற அந்தப் பெண்கள் அவ்விடத்திற்குச் சென்று ஆடிப் பாடி, இசைக் கருவிகளை இசைத்து, முனிவருடைய தவத்திற்கு இடையூறு விளைவித்தார்கள். (11)

அதனால் கோபங்கொண்ட மகாதேஜஸ்வியான மாமுனிவர், 'எந்த நங்கை என் கண்களில் படுகிறாளோ, அவள் கருத்தரிப்பாளாக' என்று பெருங்குரலில் கூறினார். (12)

தவச்செல்வரான அவருடைய சொற்களைக் கேட்ட அந்தப் பெண்கள் எல்லோரும் பிரும்மரிஷியின் சாபத்திற்குப் பயந்து, அவர் இருந்த இடத்திற்குப் போகாமல் இருந்தார்கள். ஆனால், ராஜரிஷியான த்ருணபிந்துவின் புதல்வி முனிவரின் சொற்களைக் காதால் கேட்கவில்லை. (13)

Koviloor Digital Library

க$_3$த்வாஶ்ரமபத$_3$ம் தத்ர விசசார ஸுநிர்ப$_4$யா ।
ந ஸாபஶ்யத் ஸ்தி$_2$தா தத்ர காஞ்சித$_3$ப்$_4$யாக$_3$தாம் ஸகீ$_2$ம் ॥ (14)

தஸ்மிந் காலே மஹாதேஜா: ப்ராஜாபத்யோ மஹாந்ருஷி: ।
ஸ்வாத்$_4$யாயமகரோத்தத்ர தபஸா பா$_4$வித: ஸ்வயம் ॥ (15)

ஸா து வேத$_3$ஶ்ருதிம் ஶ்ருத்வா த்$_3$ருஷ்ட்வா வை தபஸோ நிதி$_4$ம் ।
அப$_4$வத் பாண்டு$_3$தே$_3$ஹா ஸா ஸுவ்யஞ்ஜிதஶரீரஜா ॥ (16)

ப$_3$பூ$_4$வ ச ஸமுத்$_3$விக்$_3$நா த்$_3$ருஷ்ட்வா தத்$_3$தோ$_3$ஷமாத்மந: ।
இத$_3$ம் மே கிம் த்விதி க்ஞாத்வா பிதுர்க$_3$த்வாஶ்ரமே ஸ்தி$_2$தா ॥ (17)

தாம் து த்$_3$ருஷ்ட்வா ததா$_2$பூ$_4$தாம் த்ருணபி$_3$ந்து$_3$ரதா$_2$ப்$_3$ரவீத் ।
கிம் த்வமேதத்த்வஸத்$_3$ருஶம் தா$_4$ரயஸ்யாத்மநோ வபு: ॥ (18)

ஸா து க்ருத்வாஞ்ஜலிம் தீ$_3$நா கந்யோவாச தபோத$_4$நம் ।
ந ஜாநே காரணம் தாத யேந மே ரூபமீத்$_3$ருஶம் ॥ (19)

கிம் து பூர்வம் க$_3$தாஸ்ம்யேகா மஹர்ஷேர்பா$_4$விதாத்மந: ।
புலஸ்த்யஸ்யாஶ்ரமம் தி$_3$வ்யமந்வேஷ்டும் ஸ்வஸகீ$_2$ஜநம் ॥ (20)

ந ச பஶ்யாம்யஹம் தத்ர காஞ்சித$_3$ப்$_4$யாக$_3$தாம் ஸகீ$_2$ம் ।
ரூபஸ்ய து விபர்யாஸம் த்$_3$ருஷ்ட்வா த்ராஸாதி$_3$ஹாக$_3$தா ॥ (21)

த்ருணபி$_3$ந்து$_3$ஸ்து ராஜர்ஷிஸ்தபஸா த்$_3$யோதிதப்ரப$_4$: ।
த்$_4$யாநம் விவேஶ தச்சாபி ஹ்யபஶ்யத்$_3$ருஷிகர்மஜம் ॥ (22)

ஸ து விக்ஞாய தம் ஶாபம் மஹர்ஷேர்பா$_4$விதாத்மந: ।
க்$_3$ருஹீத்வா தநயாம் க$_3$த்வா புலஸ்த்யமித$_3$மப்$_3$ரவீத் ॥ (23)

ப$_4$க$_3$வம்ஸ்தநயாம் மே த்வம் கு$_3$ணை: ஸ்வைரேவ பூ$_4$ஷிதாம் ।
பி$_4$க்ஷாம் ப்ரதிக்$_3$ருஹாணேமாம் மஹர்ஷே ஸ்வயமுத்$_3$யதாம் ॥ (24)

தபஶ்சரணயுக்தஸ்ய ஶ்ராம்யமாணேந்த்$_3$ரியஸ்ய தே ।
ஶுஶ்ரூஷணபரா நித்யம் ப$_4$விஷ்யதி ந ஸம்ஶய: ॥ (25)

தம் ப்$_3$ருவாணம் து தத்$_3$வாக்யம் ராஜர்ஷிம் தா$_4$ர்மிகம் ததா$_3$ ।
ஜிக்$_4$ருக்ஷுரப்$_3$ரவீத் கந்யாம் பா$_3$ட$_4$மித்யேவ ஸ த்$_3$விஜ: ॥ (26)

த$_3$த்த்வா ஸ து யதா$_2$ந்யாயம் ஸ்வமாஶ்ரமபத$_3$ம் க$_3$த: ।
ஸாபி தத்ராவஸத் கந்யா தோஷயந்தீ பதிம் கு$_3$ணை: ॥ (27)

தஸ்யாஸ்து ஶீலவ்ருத்தாப்$_4$யாம் துதோஷ முநிபுங்க$_3$வ: ।
ப்ரீத: ஸ து மஹாதேஜா வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (28)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_3_Back

Koviloor Digital Library

அதனால், அவள் வழக்கம்போல் அவ்விடம் சென்று விருப்பம் போல் சுற்றிக் கொண்டிருந்தாள். ஆனால், அவ்விடத்திற்கு ஒரு தோழியும் வராததைக் கண்டாள். (14)

அந்த வேளையில், பிரஜாபதியின் புதல்வரும் தவப்பொலிவு பெற்றவருமான மாமுனிவர் புலஸ்தியர், அந்த இடத்தில் வேதபாராயணம் செய்து கொண்டிருந்தார். (15)

அவள் (த்ருணபிந்துவின் மகள்) மறை ஒலியைக் கேட்டாள்; தபோநிதியான புலஸ்தியரையும் பார்த்தாள். உடனே, (அவருடைய சாபத்தின்படி அவள் கருத்தரித்து, அதனால்) அவள் உடல் வெளுத்து, கருவுற்றதன் அங்க அடையாளங்களைப் பெற்றாள். (16)

தனக்கு ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு அவள் அச்சம் கொண்டாள். 'இது எனக்கு எப்படி ஏற்பட்டது?' என்று எண்ணியவாறே தந்தையின் ஆசிரமத்திற்குச் சென்றாள். (17)

கருத்தரித்தவளாக வந்து நிற்கும் அவளைப் பார்த்து, ''உனக்கு ஏற்றதல்லாத இந்த நிலையை அடைந்து, உன் சரீரத்தைச் சுமந்து கொண்டிருப்பது ஏன்?'' என்று (வெறுப்புடன்) கேட்டார். (கன்னிப்பெண் கருத்தரித்தல் என்பது அறம் பிறழ்ந்த செயல். அந்தக் குற்றத்தைச் செய்தவள் உயிரோடு இருக்கலாமா?) (18)

இரங்கத்தக்க நிலையிலிருந்த அந்தப் பெண் கைகளைக் கூப்பிக்கொண்டு, தவச்செல்வரான தந்தையைப் பார்த்து பின்வருமாறு கூறினாள்— ''தந்தையே! எதனால் என் உருவம் இவ்வாறு மாறியது? என்ற காரணத்தை நான் அறியேன். (19)

சிறிதுநேரத்திற்கு முன், பரம்பொருளிடம் நிலைத்த நெஞ்சுடைய மாமுனிவர் புலஸ்தியருடைய தெய்வ நலம் பொருந்திய ஆசிரமத்திற்கு என் தோழிகளைத் தேடிக் கொண்டு தனியே சென்றிருந்தேன். (20)

அங்கு ஒரு தோழியையும் நான் காணவில்லை. ஆனால், என் உருவ மாற்றத்தைக் கண்டு பயந்து இங்கே வந்துவிட்டேன்.'' (21)

ராஜரிஷி த்ருணபிந்து தவத்தால் பிரகாசிப்பவர். அவர், கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்தார். அப்போது (பெண்ணின் மாற்றம்) புலஸ்திய ரிஷியினால் ஏற்பட்டது என்பதைத் தெரிந்துகொண்டார். (22)

அவர், 'பரம்பொருளில் நிலைத்த நெஞ்சுடைய மாமுனிவரின் சாபத்தின் விளைவு இது' என்பதை உணர்ந்துகொண்டு, தன் மகளுடன் புலஸ்தியரிடம் சென்று, இவ்வாறு கூறினார்— (23)

''ஐயனே! என்னுடைய மகள் எல்லா நற்குணங்களும் உடையவள். தாங்கள் இவளைத் தானாகவே வந்த பிக்ஷையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். (24)

தாங்கள் எப்போதும் தவம் செய்வதிலேயே ஈடுபட்டிருக்கிறீர்கள்; புலன்களை அடக்கி வைத்திருக்கிறீர்கள். (உடலைப் பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளாதத் தங்களுக்கு) இவள் எப்போதும் பணிவிடை செய்து கொண்டிருப்பாள் என்பதில் ஐயமில்லை.'' (25)

அறம் தவறாத ராஜரிஷியான அவருடைய சொற்களைக் கேட்ட, அந்தப் பிரும்மரிஷி புலஸ்தியர், அவளை ஏற்றுக்கொள்ளும் விருப்பங்கொண்டு, 'சரி' என்று கூறினார். (26)

அவர் (த்ருணபிந்து) முறைப்படித் தன் பெண்ணை 'கன்னிகாதானம்' செய்து கொடுத்துவிட்டு, தன் ஆசிரமத்திற்குச் சென்றுவிட்டார். அந்தப் பெண், தன் இனிய குணங்களால் கணவரை மகிழ்வித்து, அங்கே வாழ்ந்து கொண்டிருந்தாள். (27)

அவளுடைய நற்குண–நன்னடத்தைகளால் மிகவும் மகிழ்ந்த தேஜஸ்வியான மாமுனிவர், இவ்வாறு கூறினார்— (28)

Koviloor Digital Library

பரிதுஷ்டோऽஸ்மி ஸுஸ்ரோணி கு$_3$ணாநாம் ஸம்பதா$_3$ ப்$_4$ருஸம் ।
தஸ்மாத்$_3$தே$_3$வி த$_3$தா$_3$ம்யத்$_3$ய புத்ரமாத்மஸமம் தவ ॥ (29)

உப$_4$யோர்வம்ஸகர்தாரம் பௌலஸ்த்ய இதி விஸ்ருதம் ।
யஸ்மாத்து விஸ்ருதோ வேத$_3$ஸ்த்வயைஷோऽத்$_4$யயதோ மம ॥
தஸ்மாத் ஸ விஸ்ரவா நாம ப$_4$விஷ்யதி ந ஸம்ஸய: ॥ (30)

ஏவமுக்தா து ஸா தே$_3$வீ ப்ரஹ்ருஷ்டேநாந்தராத்மநா ।
அசிரேணைவ காலேநாஸூத விஸ்ரவஸம் ஸுதம் ॥ (31)

த்ரிஷு லோகேஷு விக்$_2$யாதம் யஸோத$_4$ர்மஸமந்விதம் ।
ஸ்ருதிமாந் ஸமத$_3$ர்ஸீ ச வ்ரதாசாரரதஸ்தத$_2$ா ॥
பிதேவ தபஸா யுக்தோ ஹ்யப$_4$வத்$_3$விஸ்ரவா முநி: ॥ (32)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்$_3$விதீய: ஸர்க$_3$: ॥

த்$_3$ருதீய: ஸர்க$_3$:

வைஸ்ரவணலோகபாலபத$_3$லங்காதி$_3$ப்ராப்தி:

அத$_2$ புத்ர: புலஸ்த்யஸ்ய விஸ்ரவா முநிபுங்க$_3$வ: ।
அசிரேணைவ காலேந பிதேவ தபஸி ஸ்தி$_2$த: ॥ (1)

ஸத்யவாஞ்சீலவாஞ்ஸாந்த: ஸ்வாத்$_4$யாயநிரத: ஸுசி: ।
ஸர்வபோ$_4$கே$_3$ஷ்வஸம்ஸக்தோ நித்யம் த$_4$ர்மபராயண: ॥ (2)

க்ஞாத்வா தஸ்ய து தத்$_3$வ்ருத்தம் ப$_4$ரத்$_3$வாஜோ மஹாமுநி: ।
த$_3$தௌ$_3$ விஸ்ரவஸே ப$_4$ார்யாம் ஸ்வஸுதாம் தே$_3$வவர்ணிநீம் ॥ (3)

ப்ரதிக்$_3$ருஹ்ய து த$_4$ர்மேண ப$_4$ரத்$_3$வாஜஸுதாம் தத$_3$ா ।
ப்ரஜாந்வேஷிகயா பு$_3$த்$_3$த்$_4$யா ஸ்ரேயோ ஹ்யஸ்ய விசிந்தயந் ॥ (4)

முத$_3$ா பரமயா யுக்தோ விஸ்ரவா முநிபுங்க$_3$வ: ।
ஸ தஸ்யாம் வீர்யஸம்பந்நமபத்யம் பரமாத்$_3$பு$_4$தம் ॥ (5)

ஜநயாமாஸ த$_4$ர்மக்ஞ: ஸர்வைர்ப்$_3$ரஹ்மகுணைர்யுதம் ।
தஸ்மிஞ்ஜாதே து ஸம்ஹ்ருஷ்ட: ஸம்ப$_3$பூ$_4$வ பிதாமஹ: ॥ (6)

த்$_3$ருஷ்ட்வா ஸ்ரேயஸ்கரீம் பு$_3$த்$_3$தி$_4$ம் த$_4$நாத்$_4$யக்ஷோ ப$_4$விஷ்யதி ।
நாம தஸ்யாகரோத் ப்ரீத: ஸார்த$_4$ம் தே$_3$வர்ஷிபி$_4$ஸ்தத$_3$ா ॥ (7)

யஸ்மாத்$_3$விஸ்ரவஸோऽபத்யம் ஸாத்$_3$ருஸ்யாத்$_3$விஸ்ரவா இவ ।
தஸ்மாத்$_3$வைஸ்ரவணோ நாம ப$_4$விஷ்யத்யேஷ விஸ்ருத: ॥ (8)

Koviloor Digital Library

''பெண்மணியே! உன் குணச்சிறப்பினால் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். அதனால், தேவி! எனக்கு நிகரான ஒரு புதல்வனை உனக்குக் கொடுக்கிறேன். (29)

அவன், நம் இரு குலத்தையும் விளங்கச் செய்பவனாக இருப்பான்; பௌலஸ்த்யன் என்று புகழ் பெறுவான். நான் வேதம் ஓதிக்கொண்டிருந்தபோது, நீ வந்து கேட்டிருக்கிறாய். அதனால், அவனுக்கு 'விச்ரவஸ்' (வேதத்தை நன்கு கேட்டவன் – விச்ரவணன்) என்ற பெயர் ஏற்படப் போகிறது என்பது நிச்சயம்.'' (30)

இதைக் கேட்டு உளம் மகிழ்ந்த அந்தப் பெண், விரைவிலேயே விச்ரவஸ் என்ற புதல்வனை ஈன்றாள். (31)

விச்ரவஸ் என்ற அந்த முனிவர், தன் அறவொழுக்கத்தால் மூன்று உலகங்களிலும் பெயர் பெற்று விளங்கினார். அவர், நல்ல கேள்விஞானம் உடையவர்; சமநோக்கு உடையவர்; விரத அனுஷ்டானங்களைக் கடைப்பிடிப்பதில் பெரிதும் ஈடுபாடு உடையவராக இருந்தார். (32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : மூன்று

குபேரன் வரலாறு

புலஸ்தியருடைய புதல்வரும், முனிவர்களுள் சிறந்தவருமான விச்ரவஸ், வெகுவிரைவிலேயே தந்தையைப் போல் (கடுமையான) தவத்தில் ஈடுபட்டார். (1)

சத்தியமே பேசுபவர்; நல்லொழுக்கமுடையவர்; அமைதியானவர்; வேதம் ஓதுதலில் ஈடுபாடுடையவர்; மனத்தூய்மை உடையவர்; எல்லாவிதமான புலனின்பங்களிலும் தொடர்பு அற்றவர்; எப்போதும் அறநெறிப்படி வாழ்ந்து வருபவர். (2)

இவ்வளவு சிறந்த குணங்கள் அமையப் பெற்றவர் என்பதைத் தெரிந்துகொண்ட பரத்வாஜ மாமுனிவர், தேவ மடந்தைக்கு ஒப்பான தன் புதல்வியை விச்ரவஸுக்கு விவாகம் செய்து கொடுத்தார். (3)

இல்லறமாகிய நல்லறத்தைக் கடைப்பிடிப்பதற்காக, பரத்வாஜருடைய புதல்வியை விச்ரவஸ் விவாகம் செய்து கொண்டார். சிறந்த முனிவரான விச்ரவஸ், மக்களுக்கு நல்லதே செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன், மிக்க மனக்களிப்போடு மாவீரம் உடைய அதிசயமான ஒரு மகவை அவளிடம் உற்பத்தி செய்தார். அவனிடம் அந்தணர்களுக்குரிய எல்லா இயல்புகளும் இருந்தன. இப்படியாக அவன் பிறந்ததும், பாட்டனார் புலஸ்தியர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். (4–6)

அவர் தன் ஞானதிருஷ்டியால், 'இந்தக் குழந்தை உலகுக்கு நன்மை செய்யும் நல்லறிவு படைத்தவன்; பிற்காலத்தில் செல்வத்திற்கு அதிபதியாக விளங்குவான்' என்பதைக் கண்டுணர்ந்து, மனப்பிரீதியுடன் தேவரிஷிகளுடன்கூட பெயர் சூட்டும் சடங்கினைச் செய்து முடித்தார். (7)

'விச்ரவஸின் மைந்தன், அவரைப் போலவே இருக்கிறான். அதனால், 'வைச்ரவணன்' என்ற பெயரால் இவன் புகழுடன் விளங்கட்டும்' என்று அவர்கள் கூறினார்கள். (8)

Koviloor Digital Library

ஸ து வைஶ்ரவணஸ்தத்ர தபோவநக$_{3}$தஸ்ததா$_{3}$ ।
அவர்த$_{4}$தாஹுதிஹுதோ மஹாதேஜா யதா$_{2}$நல: ॥ (9)

தஸ்யாஶ்ரமபத$_{3}$ஸ்த$_{2}$ஸ்ய பு$_{3}$த்$_{3}$தி$_{4}$ர்ஜக்ஞே மஹாத்மந: ।
சரிஷ்யே பரமம் த$_{4}$ர்மம் த$_{4}$ர்மோ ஹி பரமா க$_{3}$தி: ॥ (10)

ஸ து வர்ஷஸஹஸ்ராணி தபஸ்தப்த்வா மஹாவநே ।
யந்த்ரிதோ நியமைருக்$_{3}$ரைஶ்சகார ஸுமஹத்தப: ॥ (11)

பூர்ணே வர்ஷஸஹஸ்ராந்தே தம் தம் விதி$_{4}$மகல்பயத் ।
ஜலாஶீ மாருதாஹாரோ நிராஹாரஸ்ததை$_{2}$வ ச ॥
ஏவம் வர்ஷஸஹஸ்ராணி ஜக்$_{3}$முஸ்தாந்யேகவர்ஷவத் ॥ (12)

அத$_{2}$ ப்ரீதோ மஹாதேஜா: ஸேந்த்ரை: ஸுரக$_{3}$ணை: ஸஹ ।
க$_{3}$த்வா தஸ்யாஶ்ரமபத$_{3}$ம் ப்$_{3}$ரஹ்மேத$_{3}$ம் வாக்யமப்$_{3}$ரவீத் ॥ (13)

பரிதுஷ்டோऽஸ்மி தே வத்ஸ கர்மணாநேந ஸுவ்ரத ।
வரம் வ்ருணீஷ்வ ப$_{4}$த்$_{3}$ரம் தே வரார்ஹஸ்த்வம் மஹாமதே ॥ (14)

அதா$_{2}$ப்$_{3}$ரவீத்$_{3}$வைஶ்ரவண: பிதாமஹமுபஸ்தி$_{2}$தம் ।
ப$_{4}$க$_{3}$வந்(ல்)லோகபாலத்வமிச்சே$_{2}$யம் வித்தரக்ஷணம் ॥ (15)

அதா$_{2}$ப்$_{3}$ரவீத்$_{3}$வைஶ்ரவணம் பரிதுஷ்டேந சேதஸா ।
ப்$_{3}$ரஹ்மா ஸுரக$_{3}$ணை: ஸார்த$_{4}$ம் பா$_{3}$ட$_{4}$மித்யேவ ஹ்ருஷ்டவத் ॥ (16)

அஹம் வை லோகபாலாநாம் சதுர்த$_{2}$ம் ஸ்ரஷ்டுமுத்$_{3}$யத: ।
யமேந்த்$_{3}$ரவருணாநாம் ச பத$_{3}$ம் யத்தவ சேப்ஸிதம் ॥ (17)

தத்$_{3}$க$_{3}$ச்ச$_{2}$ த்வம் ஹி த$_{4}$ர்மக்ஞ நிதீ$_{4}$ஶத்வமவாப்நுஹி ।
ஶக்ராம்பு$_{3}$பயமாநாம் ச சதுர்த$_{2}$ஸ்த்வம் ப$_{4}$விஷ்யஸி ॥ (18)

ஏதச்ச புஷ்பகம் நாம விமாநம் ஸூர்யஸந்நிப$_{4}$ம் ।
ப்ரதிக்$_{3}$ருஹ்ணீஷ்வ யாநார்த$_{2}$ம் த்ரித$_{3}$ஶை: ஸமதாம் வ்ரஜ ॥ (19)

ஸ்வஸ்தி தேऽஸ்து க$_{3}$மிஷ்யாம: ஸர்வ ஏவ யதா$_{2}$க$_{3}$தம் ।
க்ருதக்ருத்யா வயம் தாத த$_{3}$த்த்வா தவ வரத்$_{3}$வயம் ॥
இத்யுக்த்வா ஸ க$_{3}$தோ ப்$_{3}$ரஹ்மா ஸ்வஸ்தா$_{2}$நம் த்ரித$_{3}$ஶை: ஸஹ ॥ (20)

க$_{3}$தேஷு ப்$_{3}$ரஹ்மபூர்வேஷு தே$_{3}$வேஷ்வத$_{2}$ நப$_{4}$:ஸ்த$_{2}$லம் ।
த$_{4}$நேஶ: பிதரம் ப்ராஹ ப்ராஞ்ஜலி: ப்ரயதாத்மவாந் ॥ (21)

நிவாஸநம் ந மே தே$_{3}$வோ வித$_{3}$தே$_{4}$ ஸ ப்ரஜாபதி: ।
ப$_{4}$க$_{3}$வந்(ல்)லப்$_{3}$த$_{4}$வாநஸ்மி வரமிஷ்டம் பிதாமஹாத் ॥ (22)

Koviloor Digital Library

தவச்சாலையில் வாழ்ந்து கொண்டிருந்த வைச்ரவணன், நெய் அவி சொரியப்பட்ட வேள்வி அக்னியைப் போல், ஆன்மப்பொலிவுடன் வளர்ந்து கொண்டே வந்தான். (9)

ஆசிரமத்தில் வசித்து வந்த காரணத்தால் மகாத்மா வைச்ரவணரின் மனத்தில், 'அறவழிப்பட்டதான தவத்தில் நான் ஈடுபடவேண்டும்; ஏனென்றால், அறம்தான் வாழ்வின் முக்கிய நோக்கம்' என்ற எண்ணம் எழுந்தது. (10)

பெருங்காட்டுக்குள் சென்று மனத்தை முழுமையாகச் செலுத்தி கடுமையான நியமங்களை மேற்கொண்டு, ஆயிரம் ஆண்டுக்காலம் மிக நெடிய தவத்தைச் செய்தார். (11)

ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைந்தவுடன் அவர், சில கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டார். நீர் மட்டுமே உணவு; பின்னர், காற்றே உணவு; பின்னர், எவ்வித உணவும் இல்லை! இவ்வாறு பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள், ஓர் ஆண்டைப் போல (குறுகிய காலத்தில்) கழிந்தன. (12)

அப்போது, அவருடைய கடுமையான தவத்தினால் மனமகிழ்ந்த பிரும்மா, இந்திரன் முதலான தேவர்களுடன் அவருடைய ஆசிரமத்திற்குச் சென்று பின்வருமாறு கூறினார்— (13)

''குழந்தாய்! நல்விரதங்களைக் கடைப்பிடிப்பவனே! உன்னுடைய நீண்ட தவம் என்ற செயலால், நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். வாழ்க, நீ! நீ விரும்பும் வரத்தைக் கேள். பேரறிவு கொண்டவனே! நீ வரம் பெறுவதற்குத் தகுதி உடையவன்.'' (14)

எதிரே வந்து காட்சி தரும் பிரும்மாவைப் பார்த்து, ''பகவானே! உலக மக்களைப் பரிபாலித்தல், செல்வத்தைக் காப்பாற்றுதல் – என்ற அதிகாரத்தை விரும்புகிறேன்'' என்று கூறினார். (15)

தேவகணங்கள் புடைசூழ நின்ற பிரும்மா, உள்ளம் பூரித்தவராக வைச்ரவணரைப் பார்த்து, ''அவ்வாறே ஆகட்டும்'' என்றார். (16)

(அவர் மேலும் கூறினார்—) ''நான், உலக மக்களைக் காப்பாற்றும் பதவிக்கு நான்காவதாக ஒருவரைப் படைக்கும் முயற்சியில் இருக்கிறேன். யமன், இந்திரன், வருணன் ஆகிய மூவரும் பெற்றுள்ள பதவியை உன் விருப்பப்படி அடைவாய். அந்த நான்காவது இடத்தை நீ ஏற்றுக்கொள். அறம் அறிந்தவனே! (உலக பரிபாலனம் என்ற பொறுப்புடன்கூட) செல்வத்திற்குத் தலைவன் என்ற பதவியையும் உனக்கு அளிக்கிறேன். இந்திரன், வருணன், யமன் ஆகியவர்களை அடுத்து, நீ நான்காமவன் ஆகப் போகிறாய். (17,18)

சூரியனைப் போன்ற ஒளிபடைத்த 'புஷ்பகம்' என்ற பெயர் கொண்ட இந்த விமானத்தை ஏற்று, பயணங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு, தேவர்களுக்கு நிகராகச் சுற்றி வருவாயாக. (19)

உனக்கு மங்கலம் உண்டாவதாகுக. நாங்கள் எல்லோரும் வந்தவாறே திரும்பிச் செல்கிறோம். அன்பனே! உனக்கு இரண்டு வரங்களைக் கொடுத்ததன் மூலம், நாங்கள், எங்கள் கடமையைச் செய்தவர்களாகிவிட்டோம்.'' இவ்வாறு கூறிவிட்டு, தேவர்களோடுகூட பிரும்மா தன் இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டார். (20)

வான்வழியே பிரும்மா முதலான தேவர்கள் சென்ற பிறகு, செல்வத்திற்கு அதிபதியும், புலன்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவருமான வைச்ரவணன், தன் தந்தை விச்ரவஸின் எதிரில் கைகூப்பிக் கொண்டு கூறினார்— (21)

''தந்தையே! பிரும்மாவிடமிருந்து, நான் விரும்பிய வரத்தைப் பெற்றுவிட்டேன். ஆனால், பிரஜாபதியான அவர், என் வசிப்பிடம் பற்றி எதுவும் கூறவில்லை. (22)

Koviloor Digital Library

தம் பஶ்ய ப$_4$க$_3$வந் கஞ்சிந்நிவாஸம் ஸாது$_4$ மே ப்ரபோ$_4$ ।
ந ச பீடா$_3$ ப$_4$வேத்$_3$யத்ர ப்ராணிநோ யஸ்ய கஸ்யசித் ॥ (23)

ஏவமுக்தஸ்து புத்ரேண விஶ்ரவா முநிபுங்க$_3$வ: ।
வசநம் ப்ராஹ த$_4$ர்மக்ஞ: ஶ்ரூயதாமிதி ஸத்தம: ॥ (24)

த$_3$க்ஷிணஸ்யோத$_3$தே$_4$ஸ்தீரே த்ரிகூடோ நாம பர்வத: ।
தஸ்யாக்$_3$ரே து விஶாலா ஸா மஹேந்த்$_3$ரஸ்ய புரீ யதா$_2$ ॥ (25)

லங்கா நாம புரீ ரம்யா நிர்மிதா விஸ்வகர்மணா ।
ராக்ஷஸாநாம் நிவாஸார்த$_2$ம் யதே$_2$ந்த்$_3$ரஸ்யாமராவதீ ॥ (26)

தத்ர த்வம் வஸ ப$_4$த்$_3$ரம் தே லங்காயாம் நாத்ர ஸம்ஶய: ।
ஹேமப்ராகாரபரிகா$_4$ யந்த்ரஶஸ்த்ரஸமாவ்ருதா ॥ (27)

ரமணீயா புரீ ஸா ஹி ருக்மவைதூ$_3$ர்யதோரணா ।
ராக்ஷஸை: ஸா பரித்யக்தா புரா விஷ்ணுப$_4$யார்தி$_3$தை: ॥ (28)

ஶூந்யா ரக்ஷோக$_3$ணை: ஸர்வை ரஸாதலதலம் க$_3$தை: ।
ஶூந்யா ஸம்ப்ரதி லங்கா ஸா ப்ரபு$_4$ஸ்தஸ்யா ந வித்$_3$யதே ॥ (29)

ஸ த்வம் தத்ர நிவாஸாய க$_3$ச்ச$_2$ புத்ர யதா$_2$ஸுக$_2$ம் ।
நிர்தோ$_3$ஷஸ்தத்ர தே வாஸோ ந பா$_3$தா$_4$ தத்ர கஸ்யசித் ॥ (30)

ஏதச்ச்$_2$ருத்வா ஸ த$_4$ர்மாத்மா த$_4$ர்மிஷ்ட$_2$ம் வசநம் பிது: ।
நிவாஸயாமாஸ ததா$_3$ லங்காம் பர்வதமூர்த$_4$நி ॥ (31)

நைர்ருதாநாம் ஸஹஸ்ரைஸ்து ஹ்ருஷ்டை: ப்ரமுதி$_3$தை: ஸஹ ।
அசிரேணைவ காலேந ஸம்பூர்ணா தஸ்ய ஶாஸநாத் ॥ (32)

ஸ து தத்ராவஸத் ப்ரீதோ த$_4$ர்மாத்மா நைர்ருதர்ஷப$_4$: ।
ஸமுத்$_3$ரபரிகா$_2$யாம் து லங்காயாம் விஶ்ரவாத்மஜ: ॥ (33)

காலே காலே து த$_4$ர்மாத்மா புஷ்பகேண த$_4$நேஶ்வர: ।
அப்$_4$யாக$_3$ச்ச$_2$த்$_3$விநீதாத்மா பிதரம் மாதரம் ச ஹி ॥ (34)

ஸ தே$_3$வக$_3$ந்த$_4$ர்வக$_3$ணைரபி$_4$ஷ்டுதஸ்–
ததா$_2$ப்ஸரோந்ருத்யவிபூ$_4$ஷிதாலய: ।
க$_3$ப$_4$ஸ்திபி$_4$: ஸூர்ய இவாவபா$_4$ஸயந்
பிது: ஸமீபம் ப்ரயயௌ ஸ வித்தப: ॥ (35)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்ருதீய: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

ஆகவே, அருமைத் தந்தையே! நான் வசிப்பதற்கு ஏற்றதான எந்த இடத்தில் எந்தப் பிராணிக்கும் எவ்விதத் துன்பமும் ஏற்படாதோ, அவ்விதமான நல்ல இடத்தைத் தாங்கள்தான் கண்டுபிடித்துக் கூறவேண்டும்.'' (23)

இவ்வாறு புதல்வன் கூறியதைக் கேட்ட, அறநெறி அறிந்தவரும் உத்தமரும், முனிபுங்கவருமான விச்ரவஸ், ''பிள்ளாய்! சொல்கிறேன் கேட்பாயாக'' என்றார். (24)

''பெருங்கடலின் தெற்குக்கரையில், திரிகூடம் என்ற மலை இருக்கிறது. அதன் உச்சியில், மகேந்திரனுடைய பட்டணம் போன்ற விசாலமான நகரம் இருக்கிறது. (25)

இந்திரனுடைய அமராவதியைப் போன்று சகல வசதிகளையும் கொண்ட, இலங்கை என்ற அழகான நகரம் அரக்கர்கள் வசிப்பதற்காக, விசுவகர்மாவினால் முன்னர் நிர்மாணிக்கப்பட்டது. (26)

உனக்கு மங்களம் உண்டாவதாகுக! அந்த இலங்கைப் பட்டணத்தில், எவ்விதத் தொந்தரவுமின்றி நீ வசித்து வருவாயாக. அந்த நகரத்தின் மதிற்சுவர்கள் தங்கத்தால் எழுப்பப்பட்டவை; சுற்றிலும் அகழி இருக்கிறது; யந்திரங்களும் சஸ்திரங்களும் பொருத்தப்பட்டுப் பாதுகாப்புடன் இருக்கிறது. (27)

பேரழகுடன் விளங்கும் அந்த நகரத்தில், பொன்னாலும் வைடூர்யத்தாலும் ஆன தோரணங்கள் ஒளி வீசுகின்றன. மகாவிஷ்ணுவிடம் ஏற்பட்ட அச்சத்தால், வெகுகாலத்திற்கு முன்பே, அரக்கர்கள் அங்கிருந்து வெளியேறிச் சென்றுவிட்டார்கள். (28)

அரக்கர்கள் எல்லோரும் ரஸாதலம் சென்றுவிட்டதால், அந்த நகரம் சூன்யமாகப் போய்விட்டது. தற்சமயம், இலங்கை பாழடைந்து கிடக்கிறது. அங்கு, தலைவன் யாரும் இல்லை. (29)

மைந்தனே! அங்கே சுகமாக வசிப்பதற்காகச் செல்வாயாக. நீ அங்கே வசிப்பதில் குற்றமேதும் இல்லை. எவரிடமிருந்தும் இடைஞ்சல் ஏதும் வராது.'' (30)

அறம் தவறாதவரான தந்தையின் சொற்களைக் கேட்ட தருமாத்மாவான வைச்ரவணன், மலையுச்சியில் அமைந்திருந்த இலங்கையில், அப்போது முதற்கொண்டு வசிக்கத் தொடங்கினார். (31)

அவருடைய ஆணைப்படி, சில நாட்களிலேயே, ஆயிரக்கணக்கான நைர்ருதர்கள் வந்து, மகிழ்ச்சியும் குதூகலமும் பொங்க வசிக்கத் தொடங்கினார்கள். (32)

பெருங்கடலையே அகழியாகக் கொண்ட அந்த இலங்கைப் பட்டணத்தில் விச்ரவஸின் புதல்வன் தருமாத்மாவான வைச்ரவணன், நைர்ருதர்களுக்குத் தலைவனாக, மனக்களிப்புடன் வாழ்ந்து வந்தார். (33)

செல்வத்திற்கு அதிபதியான வைச்ரவணன், பெற்றோருக்குப் பணிந்து நடப்பவர். அவ்வப்போது புஷ்பக விமானத்தில் ஏறிச்சென்று அன்னையையும் தந்தையையும் கண்டு வணங்கி வந்தார். (34)

தேவ–கந்தர்வர்கள் அவரைப் போற்றிப் புகழ்ந்தார்கள். அவர் மாளிகையில் அப்சரப் பெண்டிர் நடனமாடினார்கள். கிரணங்களால் பிரகாசிக்கும் சூரியனைப் போல் விளங்கிய செல்வத்திற்கு அதிபதியான அவர், ஒரு சமயம், தன் தந்தையைக் காணச் சென்றார். (35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

சதுர்த$_2$: ஸர்க$_3$:

ராவணாதி$_3$பூர்வதநராக்ஷஸோத்பத்திகத$_2$நம்

ஶ்ருத்வாக$_3$ஸ்த்யேரிதம் வாக்யம் ராமோ விஸ்மயமாக$_3$த: ।
கத$_2$மாஸீத்து லங்காயாம் ஸம்பவோ ரக்ஷஸாம் புரா ॥ (1)

தத: ஶிர: கம்பயித்வா த்ரேதாக்$_3$நிஸமவிக்$_3$ரஹம் ।
தமக$_3$ஸ்த்யம் முஹுர்த்$_3$ருஷ்ட்வா ஸ்மயமாநோऽப்$_4$யப$_4$ாஷத ॥ (2)

ப$_4$க$_3$வந் பூர்வமப்யேஷா லங்காஸீத் பிஶிதாஶிநாம் ।
ஶ்ருத்வேத$_3$ம் ப$_4$க$_3$வத்$_3$வாக்யம் ஜாதோ மே விஸ்மய: பர: ॥ (3)

புலஸ்த்யவம்ஶாது$_3$த்$_3$பூ$_4$தா ராக்ஷஸா இதி ந: ஶ்ருதம் ।
இதா$_3$நீமந்யதஶ்சாபி ஸம்ப$_4$வ: கீர்திதஸ்த்வயா ॥ (4)

ராவணாத் கும்ப$_4$கர்ணாச்ச ப்ரஹஸ்தாத்$_3$விகடாத$_3$பி ।
ராவணஸ்ய ச புத்ரேப்$_4$ய: கிம் நு தே ப$_3$லவத்தரா: ॥ (5)

க ஏஷாம் பூர்வகோ ப்$_3$ரஹ்மந் கிம்நாமா ச ப$_3$லோத்கட: ।
அபராத$_4$ம் ச கம் ப்ராப்ய விஷ்ணுநா த்$_3$ராவிதா: கத$_2$ம் ॥ (6)

ஏதத்$_3$விஸ்தரத: ஸர்வம் கத$_2$யஸ்வ மமாநக$_4$ ।
கௌதூஹலமித$_3$ம் மஹ்யம் நுத$_3$ ப$_4$ாநுர்யதா$_2$ தம: ॥ (7)

ராக$_4$வஸ்ய வச: ஶ்ருத்வா ஸம்ஸ்காராலங்க்ருதம் ஶுப$_4$ம் ।
ஈஷத்$_3$விஸ்மயமாநஸ்தமக$_3$ஸ்த்ய: ப்ராஹ ராக$_4$வம் ॥ (8)

ப்ரஜாபதி: புரா ஸ்ருஷ்ட்வா ஹ்யப: ஸலிலஸம்ப$_4$வ: ।
தாஸாம் கோ$_3$பாயநே ஸத்த்வாநஸ்ருஜத் பத்$_3$மஸம்ப$_4$வ: ॥ (9)

தே ஸத்த்வா: ஸத்த்வகர்தாரம் விநீதவது$_3$பஸ்தி$_2$தா: ।
கிம் குர்ம இதி ப$_4$ாஷந்த: க்ஷுத்பிபாஸாப$_4$யார்தி$_3$தா: ॥ (10)

ப்ரஜாபதிஸ்து தாந்யாஹ ஸத்த்வாநி ப்ரஹஸந்நிவ ।
ஆப$_4$ாஷ்ய வாசா யத்நேந ரக்ஷத்$_4$வமிதி மாநத$_3$: ॥ (11)

ரக்ஷாமேதி ச தத்ராந்யே யக்ஷாம இதி சாபரே ।
பு$_4$ங்க்ஷிதாபு$_4$ங்க்ஷிதைருக்தஸ்ததஸ்தாநாஹ பூ$_4$தக்ருத் ॥ (12)

ரக்ஷாமேதி ச யைருக்தம் ராக்ஷஸாஸ்தே ப$_4$வந்து வ: ।
யக்ஷாம இதி யைருக்தம் யக்ஷா ஏவ ப$_4$வந்து வ: ॥ (13)

தத்ர ஹேதி: ப்ரஹேதிஶ்ச ப்$_4$ராதரௌ ராக்ஷஸாதி$_4$பௌ ।
மது$_4$கைடப$_4$ஸங்காஶௌ ப$_3$பூ$_4$வதுரரிந்த$_3$மௌ ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : நான்கு

அரக்கர் குலத்தின் வரலாறு

அகஸ்தியருடைய சொற்களைக் கேட்டு, இராமன் ஆச்சரியமடைந்தார். இலங்கையில் வெகுகாலத்திற்கு முன், அரக்கர்கள் எவ்வாறு இருந்திருக்க முடியும்? (என்ற ஐயம் எழுந்தது. அரக்கர் குல முதல்வராக விச்ரவஸ் கருதப்படுகிறார். எனவே, அவருக்கு முன், இலங்கையில் அரக்கர்கள் இருந்தார்களா? – என்பதால் ஆச்சரியம்.) (1)

ஆச்சரியத்தின் வெளிப்பாடாகத் தன் தலையை ஆட்டிக்கொண்டு, மூன்று அக்னிகளுமே உருப்பெற்று வந்தாற்போலிருக்கும் அகஸ்தியரை அடிக்கடி நோக்கி, இளமுறுவலுடன் கேட்டார்— (2)

''அண்ணலே! புலால் உண்ணும் அரக்கர்கள் வசம், முன்னர் இலங்கை இருந்தது என்பதைத் தாங்கள் கூறியதைக் கேட்டதும் எனக்கு மிகவும் ஆச்சரியம் உண்டாயிற்று. புலஸ்தியருடைய பரம்பரையில் அரக்கர்கள் தோன்றினார்கள் என்று நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம்; இப்போது, வேறு வழியாகவும் அவர்கள் தோன்றினார்கள் என்று தாங்கள் கூறுகிறீர்கள். (3,4)

முன்னர் இருந்த அரக்கர்கள், இராவணன், கும்பகர்ணன், பிரஹஸ்தன், விகடன் மற்றும் இராவணனுடைய புதல்வர்கள் ஆகியோரைக் காட்டிலும் மேலான சக்தி படைத்தவர்களாக இருந்தார்களா? (5)

அந்தணாளரே! அவர்களின் முன்னோர் யார்? மகாபலசாலியான அவர்களுடைய பெயர் என்ன? அவர்கள் என்ன தவறு செய்து, அதன் காரணமாக இலங்கையிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டார்கள்? (6)

தூயவரே! இந்த விஷயங்களையெல்லாம் விளக்கமாகத் தாங்கள் கூறியருள வேண்டும். தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் எனக்கு இருக்கிறது. சூரியன் இருளைப் போக்குவதைப் போல, தாங்கள் என் சந்தேகங்களைப் போக்கவேண்டும்.'' (7)

சொல், வாக்கியம், பொருள் ஆகிய மூன்று வகையிலும் சிறந்து விளங்கிய இராமனுடைய உரையைக் கேட்டு, சற்றே புன்முறுவல் செய்து, இராகவனை நோக்கி அகஸ்தியர் கூறினார்— நீரில் உண்டாகும் தாமரையில் தோன்றிய பிரஜாபதியான பிரும்மா, முன்னர், கடலில் நீரை நிரப்பினார். தாமரையில் தோன்றிய அவர் கடல்நீரைக் காப்பதற்காக நீர்வாழ் உயிர்களைப் படைத்தார். (8,9)

அந்தப் பிராணிகள், பசி–தாகத்தால் பீடிக்கப்பட்டு, 'இப்போது நாம் என்ன செய்வோம்?' என்று தங்களுக்குள் பேசிக்கொண்டு, தங்களைப் படைத்த பிரும்மாவிடம் சென்று வணங்கி நின்றன. அந்தப் பிராணிகளைப் பார்த்து, அவர்களைக் காப்பாற்றும் அருளுள்ளம் கொண்ட பிரும்மா, 'பிராணிகளே!' என்ற சொல்லால் அழைத்து, 'கவனமாகக் காப்பாற்றுங்கள்' என்று கூறினார். (10,11)

பசி–தாகத்தினால் தவித்துக் கொண்டிருந்த அந்த ஜந்துக்களில் ஒரு பகுதியினர், 'நாங்கள் காப்பாற்றுவோம்' என்றார்கள். வேறு சிலர், 'நாங்கள் பூசனை செய்வோம்' என்றும் கூறினார்கள். அதைக் கேட்ட பின்னர், பிராணிகளைப் படைக்கும் பிரும்மா கூறினார்— (12)

'உங்களில், ரக்ஷாம (காப்பாற்றுவோம்) என்று சொன்னவர்கள், ராக்ஷஸர்களாகப் போகக் கடவர்; யக்ஷாம (பூசனை செய்வோம்) என்று சொன்னவர்கள் யக்ஷர்களாக ஆகக் கடவர். அவ்விதம் அரக்கர்களாகப் போனவர்களில் ஹேதி, ப்ரஹேதி என்ற சகோதரர்கள், அரக்கத் தலைவர்கள் ஆனார்கள். எதிரிகளை அடக்கவல்ல அவர்கள், மது–கைடபர்களைப் போல மிகவும் பராக்கிரமசாலிகளாக இருந்தார்கள். (13,14)

Koviloor Digital Library

ப்ரஹேதிர்த4ார்மிகஸ்தத்ர தபோவநக3தஸ்தத3ா ।
ஹேதிர்த3ாரக்ரியார்தே2 து பரம் யத்நமத2ாகரோத் ॥ (15)

ஸ காலப4கி3நீம் கந்யாம் ப4யாம் நாம ப4யாவஹாம் ।
உத3ாவஹத3மேயாத்மா ஸ்வயமேவ மஹாமதி: ॥ (16)

ஸ தஸ்யாம் ஜநயாமாஸ ஹேதீ ராக்ஷஸபுங்க3வ: ।
புத்ரம் புத்ரவதாம் ஶ்ரேஷ்டே2ா வித்3யுத்கேஶ இதி ஶ்ருதம் ॥ (17)

வித்3யுத்கேஶோ ஹேதிபுத்ர: ஸ தீ3ப்தார்கஸமப்ரப4: ।
வ்யவர்த4த மஹாதேஜாஸ்தோயமத்4ய இவாம்பு3ஜம் ॥ (18)

ஸ யத3ா யௌவநம் ப4த்3ரமநுப்ராப்தோ நிஶாசர: ।
ததோ த3ாரக்ரியாம் தஸ்ய கர்தும் வ்யவஸித: பிதா ॥ (19)

ஸந்த்4யாயாஸ்தநயாம் ஸோऽத2 ஸந்த்4யாதுல்யாம் ப்ரப4ாவத: ।
வரயாமாஸ புத்ரார்த2ம் ஹேதீ ராக்ஷஸபுங்க3வ: ॥ (20)

அவஶ்யமேவ த3ாதவ்யா பரஸ்மை ஸேதி ஸந்த்4யயா ।
சிந்தயித்வா ஸுதா த3த்தா வித்3யுத்கேஶாய ராக4வ ॥ (21)

ஸந்த்4யாயாஸ்தநயாம் லப்3த்4வா வித்3யுத்கேஶோ நிஶாசர: ।
ரமதே ஸ்ம தயா ஸார்த4ம் பௌலோம்யா மக4வாநிவ ॥ (22)

கேநசித்த்வத2 காலேந ராம ஸாலகடங்கடா ।
வித்3யுத்கேஶாத்3க3ர்ப4மாப க4நராஜிரிவார்ணவாத் ॥ (23)

தத: ஸா ராக்ஷஸீ க3ர்ப4ம் க4நக3ர்ப4ஸமப்ரப4ம் ।
ப்ரஸூதா மந்த3ரம் க3த்வா க3ங்க3ா க3ர்ப4மிவாக்3நிஜம் ॥ (24)

தமுத்ஸ்ருஜ்ய து ஸா க3ர்ப4ம் வித்3யுத்கேஶரதார்தி2நீ ।
ரேமே து ஸார்த4ம் பதிநா விஸ்ம்ருத்ய ஸுதமாத்மஜம் ॥ (25)

உத்ஸ்ருஷ்டஸ்து தத3ா க3ர்பே4ா க4நஶப்3த3ஸமஸ்வந: ।
தயோத்ஸ்ருஷ்ட: ஸ து ஶிஶு: ஶரத3ர்கஸமத்3யுதி: ॥
நித4ாயாஸ்யே ஸ்வயம் முஷ்டிம் ருரோத3 ஶநகைஸ்தத3ா ॥ (26)

ததோ வ்ருஷப4மாஸ்த2ாய பார்வத்யா ஸஹித: ஶிவ: ।
வாயுமார்கே3ண க3ச்ச2ந் வை ஶுஶ்ராவ ருதி3தஸ்வநம் ॥ (27)

அபஶ்யது3மயா ஸார்த4ம் ருத3ந்தம் ராக்ஷஸாத்மஜம் ।
காருண்யப4ாவாத் பார்வத்யா ப4வஸ்த்ரிபுரஸூத3ந: ॥
தம் ராக்ஷஸாத்மஜம் சக்ரே மாதுரேவ வய:ஸமம் ॥ (28)

அமரம் சைவ தம் க்ருத்வா மஹாதே3வோऽக்ஷரோऽவ்யய: ।
புரமாகாஶக3ம் ப்ராத3ாத் பார்வத்யா: ப்ரியகாம்யயா ॥ (29)

Koviloor Digital Library

அறப்பற்றுடையவனான ப்ரஹேதி, அப்போதே தவம் செய்வதற்காகக் காட்டுக்குப் போய்விட்டான். ஹேதி, திருமணம் செய்துகொள்ள விரும்பி மிகவும் முயற்சி செய்தான். (15)

நிகரில்லாத வலிமையும் அறிவுத்திறனும் கொண்ட அவன், யமனிடம் தானே சென்று, யமனுடைய சகோதரியான பயா என்ற பெயருடைய பயங்கரமான பெண்ணைக் கேட்டுப் பெற்று மணந்து கொண்டான். (16)

புதல்வர்களைப் பெற்றவர்களில் சிறந்தவனும் அரக்க மன்னனுமான ஹேதி, அவளிடம் ஒரு மகனைத் தோற்றுவித்தான். வித்யுத்கேசன் என்று அவனுக்குப் பெயர். (17)

ஹேதியின் மைந்தனான வித்யுத்கேசன், ஒளிக்கதிர்களால் பிரகாசிக்கும் சூரியனுக்கு நிகரான ஒளியுடன் விளங்கினான். நீரோடையில் வளரும் தாமரையைப் போல், நாள்தோறும் பெரும் பொலிவுடன் வளர்ந்து வந்தான். (18)

அந்த அரக்கன் வாலிபப் பருவத்தை அடைந்ததும், அவனுக்கு விவாகம் செய்விக்க, தந்தை ஹேதி முயற்சி செய்தான். அரக்கர் வேந்தன் ஹேதி, ஸந்த்யாதேவியின் புதல்வியைத் (தாய்க்கு நிகரான வசீகரத் தோற்றமுடையவளைத்) தன் புதல்வனுக்கு விவாகம் செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டான். (19,20)

இராகவா! 'புதல்வியை (உரிய காலத்தில்) யாரோ ஒருவனிடம் ஒப்படைக்கத்தானே வேண்டும்?' என்று சிந்தித்து, வித்யுத்கேசனுக்கு விவாகம் செய்து கொடுத்தாள். (21)

ஸந்த்யையின் மகளை மணந்து கொண்ட அரக்கன் வித்யுத்கேசன், இந்திராணியுடன் கூடிய இந்திரனைப் போல, உல்லாசமாக சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான். (22)

இராமபிரானே! சிறிது காலத்திற்குப் பிறகு (ஸந்த்யாதேவியின் மகளான) ஸாலகடங்கடா, மேகக்கூட்டம் கடலிலிருந்து தண்ணீரைக் கிரகிப்பதைப் போல, வித்யுத்கேசன் மூலம் கருத்தரித்தாள். (23)

பின்னர், அந்த அரக்கி மந்தரமலைக்குச் சென்று, கங்காதேவி அக்னியால் கொண்டு வரப்பட்ட சிவதேஜஸை ஏற்று குமரனைப் பெற்றெடுத்ததைப் போல, மின்னலுக்கு நிகரான ஒளிபடைத்த ஒரு மகவைப் பெற்றாள். (24)

வித்யுத்கேசனுடன் உல்லாசமாக இருக்க விரும்பிய அவள், அந்தக் குழந்தையை அங்கேயே விட்டுவிட்டாள்; தான் ஈன்ற சிசுவை மறந்து கணவருடன் சுகமாக இன்புற்றிருந்தாள். (25)

தனித்து விடப்பட்ட அந்தக் குழந்தையின் குரல், மேகத்தின் கர்ஜனை போலிருந்தது. சரத்கால சூரியனைப் போல் ஒளியுடன் விளங்கிற்று. தானாகவே கைவிரல்களை வாயில் வைத்துக் கொண்டு மெல்ல அழ ஆரம்பித்தது. (26)

அப்போது, பார்வதியுடன்கூட ரிஷபத்தின் மீது ஏறிக்கொண்டு காற்றுப்போக்கில் சென்று கொண்டிருந்த பரமசிவன், குழந்தையின் அழுகைக் குரலைக் கேட்டார். (27)

உமாதேவியுடன் அவர், அழுது கொண்டிருக்கும் அரக்கக் குழந்தையைப் பார்த்தார். பார்வதிக்கு இரக்கம் தோன்றியது. கணவரை வேண்டினாள். முப்புரங்களை எரித்த சிவபெருமான், அந்த அரக்கக் குழந்தையை, அதன் தாய்க்கு சமமான வயதுடையவனாக அப்போதே வளரச் செய்தார். (28)

பார்வதிக்குப் பிரியமானதைச் செய்யும் பொருட்டு, அழிவற்றவரும் எவ்வித மாறுதலும் இல்லாதவருமான சிவபிரான், அவனுக்கு இறவாமையைக் கொடுத்ததோடு, வானத்தில் பறந்து செல்லக்கூடிய ஒரு நகரத்தையும் (நகரம் போல் விசாலமான விமானத்தையும்) தந்தருளினார். (29)

Koviloor Digital Library

உமயாபி வரோ த$_3$த்தோ ராக்ஷஸாநாம் ந்ருபாத்மஜ ।
ஸத்$_3$யோபலப்$_3$தி$_4$ர்க$_3$ர்ப$_4$ஸ்ய ப்ரஸூதி: ஸத்$_3$ய ஏவ ச ॥
ஸத்$_3$ய ஏவ வய:ப்ராப்திர்மாதுரேவ வய:ஸமம் ॥ (30)

தத: ஸுகேஶோ வரத$_3$ாநக$_3$ர்வித:
ஶ்ரியம் ப்ரபே$_4$ா: ப்ராப்ய ஹரஸ்ய பார்ஶ்வத: ।
சசார ஸர்வத்ர மஹாந் மஹாமதி:
க$_2$க$_3$ம் புரம் ப்ராப்ய புரந்த$_3$ரோ யத$_2$ா ॥ (31)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ சதுர்த$_2$: ஸர்க$_3$: ॥

பஞ்சம: ஸர்க$_3$:

மால்யவத$_3$ாத்$_3$யபத்யோத்பத்தி:

ஸுகேஶம் த$_4$ார்மிகம் த்$_3$ருஷ்ட்வா வரலப்$_3$த$_4$ம் ச ராக்ஷஸம் ।
க்$_3$ராமணிர்நாம க$_3$ந்த$_4$ர்வோ விஶ்வாவஸுஸமப்ரப$_4$: ॥ (1)

தஸ்ய தே$_3$வவதீ நாம த்$_3$விதீயா ஸ்ரீரிவாத்மஜா ।
த்ரிஷு லோகேஷு விக்$_2$யாதா ரூபயௌவநஶாலிநீ ॥
தாம் ஸுகேஶாய த$_4$ர்மேண த$_3$தௌ$_3$ ரக்ஷ: ஶ்ரியம் யத$_2$ா ॥ (2)

வரத$_3$ாநக்ருதைஶ்வர்யம் ஸா தம் ப்ராப்ய பதிம் ப்ரியம் ।
ஆஸீத்$_3$ தே$_3$வவதீ துஷ்டா த$_4$நம் ப்ராப்யேவ நிர்த$_4$ந: ॥ (3)

ஸ தயா ஸஹ ஸம்யுக்தோ ரராஜ ரஜநீசர: ।
அஞ்ஜநாத$_3$பி$_4$நிஷ்க்ராந்த: கரேண்வேவ மஹாக$_3$ஜ: ॥ (4)

தே$_3$வவத்யாம் ஸுகேஶஸ்து ஜநயாமாஸ ராக$_4$வ ।
த்ரீந் புத்ராஞ்ஜநயமாஸ த்ரேதாக்$_3$நிஸமவிக்$_3$ரஹாந் ॥ (5)

மால்யவந்தம் ஸுமாலிம் ச மாலிம் ச ப$_3$லிநாம் வரம் ।
த்ரீந்ஸ்த்ரிநேத்ரஸமாந் புத்ராந் ராக்ஷஸாந் ராக்ஷஸாதி$_4$ப: ॥ (6)

த்ரயோ லோகா இவாவ்யக்$_3$ரா: ஸ்தி$_2$தாஸ்த்ரய இவாக்$_3$நய: ।
த்ரயோ மந்த்ரா இவாத்யுக்$_3$ராஸ்த்ரயோ கே$_4$ாரா இவாமயா: ॥ (7)

த்ரய: ஸுகேஶஸ்ய ஸுதாஸ்த்ரேதாக்$_3$நிஸமதேஜஸ: ।
விவ்ருத்$_3$தி$_4$மக$_3$மம்ஸ்தத்ர வ்யாத$_4$யோபேக்ஷிதா இவ ॥ (8)

Koviloor Digital Library

மன்னர் மைந்தரே! அரக்கர்களுக்கு (அரக்கர் குலப்பெண்டிருக்கு) உமாதேவியால் ஒரு வரம் கொடுக்கப்பட்டது. (அரக்கிகளுக்கு, குழந்தை பெற்றுக் கொள்வதில் ஆசை இருந்தது; ஆனால், குழந்தையைப் பேணிக்காப்பதில் அக்கறை இல்லை – என்பது இப்போது தெளிவாகத் தெரிந்துவிட்டது. தாய்மார்களின் கவனிப்பு இல்லாத சின்னஞ்சிறு சிசு கஷ்டப்படுமே? – என்ற இரக்கத்தால்) 'இனி, அரக்கிகள் விரைவில் சூல்கொண்டு, உடனேயே குழந்தையைப் பெற்றுவிடுவார்கள்; பிறந்த குழந்தை அப்போதே, தன் அன்னைக்குச் சமமான வயதை அடைந்துவிடும்.' (30)

வித்யுத்கேசனின் புதல்வனான சுகேசன், பரமேசுவரனிடமிருந்து ஏராளமான செல்வப்பேறுகளை அடைந்தான்; மிக்க அறிவாளியாக இருந்தான்; வரங்களைப் பெற்றதால் அகந்தை கொண்டிருந்தான். ஆகாயத்தில் தடையில்லாமல் செல்லக்கூடிய கோட்டை நகரத்தைப் பெற்று, இந்திரனைப் போன்ற பெருமையுடன், அவன் எல்லா இடங்களிலும் சுற்றி வந்தான். (31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐந்து

சுகேசியின் பரம்பரை

(அகஸ்தியர் கூறுகிறார்—) கந்தர்வர்களின் தலைவன் விசுவாவசுக்கு நிகரான கிராமணீ என்ற கந்தர்வன், அரக்கர் குலத்தில் தோன்றிய சுகேசன் அறநெறியில் நிற்பதையும், பல வரங்களைப் பெற்று உன்னத நிலையில் இருப்பதையும் பார்த்தான். மூன்று உலகங்களிலும் புகழ்பெற்றவளும், நல்ல தோற்றமும் இளமையும் உடையவளும், இரண்டாவது திருமகள் போன்றவளுமான தன் புதல்வி தேவவதி என்பவளை, உருப்பெற்று வந்த அரக்கர்களின் செல்வச் செழுமையையே கொடுப்பதைப் போல, முறைப்படி சுகேசனுக்கு மணம் செய்து கொடுத்தான். (1,2)

பல வரங்களைப் பெற்றதனால் விளைந்த செல்வச் செழிப்போடு விளங்கிய அவனை, மனத்திற்குகந்த கணவனாகப் பெற்ற தேவவதி, பரம ஏழை ஒருவனுக்குப் பொருட்குவியல் கிடைத்தாற்போல, எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தாள். அஞ்ஜனம் என்ற திசையானையிடமிருந்து தோன்றிய ஒரு பெரிய ஆண்யானை, ஒரு பெண்யானையுடன் கூடிக் களித்திருப்பதைப் போல, அந்த அரக்கன் கந்தர்வப் பெண்ணுடன் கூடிக் களித்து மகிழ்ச்சியோடிருந்தான். (3,4)

இராகவா! சுகேசன், தேவவதியிடம் (இல்லறம் நடத்துவோர், நாள்தோறும் அவி சொரிந்து பரிபாலிக்க வேண்டிய) மூன்று அக்னிகளுக்கு நிகரான (பிரகாசம் பொருந்திய) மூன்று புதல்வர்களைத் தோற்றுவித்தான். அரக்கத் தலைவனான சுகேசன், முக்கண்ணராகிய பரமேசுவரனுக்கு நிகரான மூன்று அரக்கப் புதல்வர்களை அடைந்தான். மால்யவான், சுமாலி, மாலி என்ற பெயருடைய மூவரில், மாலி என்பவன் மிக்க பலசாலியாக இருந்தான். (5,6)

அவர்கள், மூன்று உலகங்களையும் போன்று உறுதி கொண்டவர்கள்; மூன்று அக்னிகளைப் போன்று தேசு மிக்கவர்கள்; மூன்று மந்திரங்களைப் போன்று சக்தி உடையவர்கள்; பித்தம், வாதம், கபம் என்ற மூன்று காரணங்களால் உண்டாகும் நோயைப்போல் பயங்கரமானவர்கள். (மூன்று மந்திரங்கள் = மூன்று சக்திகள்; எதிர்ப்பில்லாத தலைமை, சோர்வின்மை, மந்திரம்; அல்லது, மூன்று வேதங்களையும் கொள்ளலாம்.) (7)

சுகேசனுடைய மூன்று புதல்வர்களும் மூன்று வகையான அக்னியைப் போல் ஜொலித்தார்கள். கவனிக்காமல் விடப்பட்ட நோய் வேகமாக வளர்வதைப் போல, அவர்கள் மூவரும் வேகமாக வளர்ச்சியை அடைந்தார்கள். (8)

Koviloor Digital Library

வரப்ராப்திம் பிதுஸ்தே து க்ஞாத்வைஶ்வர்யம் தபோப$_3$லாத் ।
தபஸ்தப்தும் க$_3$தா மேரும் ப்$_4$ராதர: க்ருதநிஶ்சயா: ॥ (9)

ப்ரக்$_3$ருஹ்ய நியமாந் கோ$_4$ராந் ராக்ஷஸா ந்ருபஸத்தம ।
விசேருஸ்தே தபோ கோ$_4$ரம் ஸர்வபூ$_4$தப$_4$யாவஹம் ॥ (10)

ஸத்யார்ஜவஶமோபேதைஸ்தபோபி$_4$ரதிது$_3$ஷ்கரை: ।
ஸந்தாபயந்தஸ்த்ரீந்(ல்)லோகாந் ஸதே$_3$வாஸுரமானுஷாந் ॥ (11)

ததோ விபு$_4$ஶ்சதுர்வக்த்ரோ விமாநவரமாஸ்தி$_2$த: ।
ஸுகேஶபுத்ராநாமந்த்ரய வரதோ$_3$ऽஸ்மீத்யபா$_4$ஷத ॥ (12)

ப்$_3$ரஹ்மாணம் வரத$_3$ம் க்ஞாத்வா ஸேந்த்$_3$ரைர்தே$_3$வக$_3$ணைர்வ்ருதம் ।
ஊசு: ப்ராஞ்ஜலய: ஸர்வே வேபமாநா இவ த்$_3$ருமா: ॥ (13)

தபஸாராதி$_4$தோ தே$_3$வ யதி$_3$ நோ தி$_3$ஶஸே வரம் ।
அஜேயா: ஶத்ருஹந்தாரஸ்ததை$_2$வ சிரஜீவிந: ॥
ப்ரப$_4$விஷ்ணவோ ப$_4$வாமேதி பரஸ்பரமநுவ்ரதா: ॥ (14)

ஏவம் ப$_4$விஷ்யதீத்யுக்த்வா ஸுகேஶதநயாந் விபு$_4$: ।
ஸ யயௌ ப்$_3$ரஹ்மலோகாய ப்$_3$ரஹ்மா ப்$_3$ராஹ்மணவத்ஸல: ॥ (15)

வரம் லப்$_3$த்$_4$வா து தே ஸர்வே ராம ராத்ரிஞ்சராஸ்ததா$_3$ ।
ஸுராஸுராந் ப்ரபா$_3$த$_4$ந்தே வரதா$_3$நஸுநிர்ப$_4$யா: ॥ (16)

தைர்வத்$_4$யமாநாஸ்த்ரித$_3$ஶா: ஸர்ஷிஸங்கா$_4$: ஸசாரணா: ।
த்ராதாரம் நாதி$_4$க$_3$ச்ச$_2$ந்தி நிரயஸ்தா$_2$ யதா$_2$ நரா: ॥ (17)

அத$_2$ தே விஶ்வகர்மாணம் ஶில்பிநாம் வரமவ்யயம் ।
ஊசு: ஸமேத்ய ஸம்ஹ்ருஷ்டா ராக்ஷஸா ரகு$_4$ஸத்தம ॥ (18)

ஓஜஸ்தேஜோப$_3$லவதாம் மஹதாமாத்மதேஜஸா ।
க்$_3$ருஹகர்தா ப$_4$வாநேவ தே$_3$வாநாம் ஹ்ருத$_3$யேப்ஸிதம் ॥ (19)

அஸ்மாகமபி தாவத்த்வம் க்$_3$ருஹம் குரு மஹாமதே ।
ஹிமவந்தமுபாஶ்ரித்ய மேரும் மந்த$_3$ரமேவ வா ॥
மஹேஶ்வரக்$_3$ருஹப்ரக்$_2$யம் க்$_3$ருஹம் ந: க்ரியதாம் மஹத் ॥ (20)

விஶ்வகர்மா ததஸ்தேஷாம் ராக்ஷஸாநாம் மஹாபு$_4$ஜ: ।
நிவாஸம் கத$_2$யாமாஸ ஶக்ரஸ்யேவாமராவதீம் ॥ (21)

த$_3$க்ஷிணஸ்யோத$_3$தே$_4$ஸ்தீரே த்ரிகூடோ நாம பர்வத: ।
ஸுவேல இதி சாப்யந்யோ த்$_3$விதீயஸ்தத்ர ஸத்தமா: ॥ (22)

Koviloor Digital Library

தங்களுடைய தந்தை, தவவலிமையினால் (உமா–மகேசுவரர்களிடமிருந்து) வரங்களையும், நிகரற்ற செல்வச் செழிப்பையும் பெற்றார் என்பதை அறிந்துகொண்ட சகோதரர் மூவரும் (தாங்களும் அவ்வாறே பெருமை பெறவேண்டும் என்று) உறுதியான முடிவெடுத்து, தவம் செய்வதற்காக மேருமலையை நோக்கிச் சென்றார்கள். (9)

மாமன்னரே! அந்த இராக்கதர்கள், கடுமையான நியமங்களைக் கடைப்பிடித்தவர்களாக – சத்தியம், நேர்மை, புலனடக்கம் முதலியவைகளை மேற்கொண்டு – செயற்கரிய தவத்தால் மூன்று உலகங்களிலுமிருந்த தேவ–அசுர–மானுடர்களை வறுத்தெடுத்து, எல்லா உயிர்களுக்கும் அச்சத்தைக் கொடுக்கும் பயங்கரமான தவத்தைச் செய்தார்கள். (10,11)

நான்முகம் படைத்த பகவான் பிரும்மா, சிறந்த விமானத்தில் சுகேசனுடைய மைந்தர்கள் தவம் செய்யும் இடத்திற்கு வந்து, அவர்களை அழைத்து, ''நான் வரம் கொடுப்பதற்காக வந்திருக்கிறேன்'' என்று கூறினார். (12)

இந்திரன் முதலான தேவர்கள் சூழ, வரம் கொடுப்பதற்காகப் பிரும்மா வந்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்ட அம்மூவரும், (பக்தி பரவசத்தினால்) காற்றில் நடுங்கும் மரங்களைப் போல நடுங்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு பின்வருமாறு கூறினார்கள்— (13)

''பரம்பொருளே! எங்கள் தவ வழிபாட்டினால் தாங்கள் மகிழ்ச்சி அடைந்து, எங்களுக்கு வரம் கொடுக்கும் மனம் உடையவரானால், நாங்கள் எவராலும் வெற்றிகொள்ள முடியாதவர்களாக, எதிரிகளை மாய்ப்பவர்களாக, எக்காலத்திலும் வாழ்பவர்களாக, பேராற்றல் படைத்தவர்களாக, ஒருவருக்கொருவர் அன்புடையவர்களாக இருக்கவேண்டும் – என்ற வரத்தை அருள்வீர்களாக.'' (14)

அந்தணர்களிடம் அன்புடைய பிரும்மதேவர், சுகேசனுடைய புதல்வர்களைப் பார்த்து ''அவ்வாறே ஆகுக'' என்று கூறிவிட்டுப் பிரும்மலோகம் சென்றார். (15)

இராமனே! வரம் பெற்ற இராச்சுற்றிகளான அவர்கள் எல்லோரும் (மூவரும்), வரத்தின் பயனாக, சிறிதளவுகூட பயப்படாமல் தேவர்களையும் அசுரர்களையும் துன்புறுத்தத் தொடங்கினார்கள். (16)

அவர்களால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள், முனிவர்கள் மற்றும் சாரணர்கள் ஆகியோர், நரகத்தில் விழுந்து கிடக்கும் மனிதர்களைப் போல், தங்களைக் காப்பாற்றுவார் எவரையும் காணாது தவித்தார்கள். (17)

ரகுவம்ச திலகமே! ஒரு சமயம் சிற்பிகளில் முதன்மையானவரும் அழிவற்றவருமான விசுவகர்மாவிடம் சென்று, அரக்கர்கள் ஆனந்தக் களிப்புடன் (பின்வருமாறு) கூறினார்கள்— ''ஆண்மை, பராக்கிரமம், உடல்பலம், மிக்க ஆன்மவொளி உடைய தேவர்கள் விரும்புகிறபடியெல்லாம் கட்டிட வேலை செய்பவர், தாங்கள். (18,19)

ஆகவே, பேரறிஞரே! எங்களுக்கும் தாங்கள்தான் இருப்பிடத்தை நிர்மாணித்துத் தரவேண்டும். இமாலயம், மேருமலை, மந்தரமலை ஆகிய எந்த இடமாக இருந்தாலும் சரி. அங்கே, பரமேசுவரன் வசிக்கும் கைலாயம் போன்ற உன்னதமான வாசஸ்தலத்தை எங்களுக்கு அமைத்துக் கொடுங்கள்.'' (20)

அப்போது கைத்திறன் கொண்ட விசுவகர்மா, இந்திரனுடைய அமராவதிக்கு இணையான ஓர் இடத்தைப் பற்றி அவர்களிடம் கூறினார்— (21)

''தென்கடலின் கரையில், திரிகூடம் என்ற பெயருடைய மலை இருக்கிறது; அரக்கப் பெரியோர்களே! அங்கேயே சுவேலம் என்ற இன்னொரு மலையும் இருக்கிறது. (22)

Koviloor Digital Library

ஶிக$_2$ரே தஸ்ய ஶைலஸ்ய மத்$_4$யமே஽ம்பு$_3$த$_3$ஸந்நிபே$_4$ ।
ஶகுநைரபி து$_3$ஷ்ப்ராபே டங்கச்சி$_2$ந்நசதுர்தி$_3$ஶி ॥ (23)

த்ரிம்ஶத்$_3$யோஜநவிஸ்தீர்ணா ஶதயோஜநமாயதா ।
ஸ்வர்ணப்ராகாரஸம்வீதா ஹேமதோரணஸம்வ்ருதா ॥
மயா லங்கேதி நக$_3$ரீ ஶக்ராக்ஞப்தேந நிர்மிதா ॥ (24)

தஸ்யாம் வஸத து$_3$ர்த$_4$ர்ஷா யூயம் ராக்ஷஸபுங்க$_3$வா: ।
அமராவதீம் ஸமாஸாத்$_3$ய ஸேந்த்$_3$ரா இவ தி$_3$வௌகஸ: ॥ (25)

லங்காது$_3$ர்க$_3$ம் ஸமாஸாத்$_3$ய ராக்ஷஸைர்ப$_3$ஹுபி$_4$ர்வ்ருதா: ।
ப$_4$விஷ்யத$_2$ து$_3$ராத$_4$ர்ஷா: ஶத்ரூணாம் ஶத்ருஸூத$_3$நா: ॥ (26)

விஶ்வகர்மவச: ஶ்ருத்வா ததஸ்தே ராக்ஷஸோத்தமா: ।
ஸஹஸ்ராநுசரா பூ$_4$த்வா க$_3$த்வா தாமவஸந் புரீம் ॥ (27)

த்$_3$ருட$_4$ப்ராகாரபரிகா$_2$ம் ஹைமைர்க்$_3$ருஹஶதைர்வ்ருதாம் ।
லங்காமவாப்ய தே ஹ்ருஷ்டா ந்யவஸந் ரஜநீசரா: ॥ (28)

ஏதஸ்மிந்நேவ காலே து யதா$_2$காமம் ச ராக$_4$வ ।
நர்மதா$_3$ நாம க$_3$ந்த$_4$ர்வீ ப$_3$பூ$_4$வ ரகு$_4$நந்த$_3$ந ॥
தஸ்யா: கந்யாத்ரயம் ஹ்யாஸீத்$_3$த்$_4$ரீஶ்ரீகீர்திஸமத்$_3$யுதி ॥ (29)

ஜ்யேஷ்ட$_2$க்ரமேண ஸா தேஷாம் ராக்ஷஸாநாமராக்ஷஸீ ।
கந்யாஸ்தா: ப்ரத$_3$தௌ$_3$ ஹ்ருஷ்டா பூர்ணசந்த்$_3$ரநிபா$_4$நநா: ॥ (30)

த்ரயாணாம் ராக்ஷஸேந்த்$_3$ராணாம் திஸ்ரோ க$_3$ந்த$_4$ர்வகந்யகா: ।
த$_3$த்தா மாத்ரா மஹாபா$_4$கா$_3$ நக்ஷத்ரே ப$_4$க$_3$தை$_3$வதே ॥ (31)

க்ருததா$_3$ராஸ்து தே ராம ஸுகேஶதநயாஸ்ததா$_3$ ।
சிக்ரீடு$_3$: ஸஹ பா$_4$ர்யாபி$_4$ரப்ஸரோபி$_4$ரிவாமரா: ॥ (32)

ததோ மால்யவதோ பா$_4$ர்யா ஸுந்த$_3$ரீ நாம ஸுந்த$_3$ரீ ।
ஸ தஸ்யாம் ஜநயாமாஸ யத$_3$பத்யம் நிபோ$_3$த$_4$ தத் ॥ (33)

வஜ்ரமுஷ்டிர்விரூபாக்ஷோ து$_3$ர்முக$_2$ஶ்சைவ ராக்ஷஸ: ।
ஸுப்தக்$_4$நோ யக்ஞகோபஶ்ச மத்தோந்மத்தௌ ததை$_2$வ ச ॥
அநலா சாப$_4$வத் கந்யா ஸுந்த$_3$ர்யாம் ராம ஸுந்த$_3$ரீ ॥ (34)

ஸுமாலிநோ஽பி பா$_4$ர்யாஸீத் பூர்ணசந்த்$_3$ரநிபா$_4$நநா ।
நாம்நா கேதுமதீ நாம ப்ராணேப்$_4$யோ஽பி க$_3$ரீயஸீ ॥ (35)

ஸுமாலீ ஜநயாமாஸ யத$_3$பத்யம் நிஶாசர: ।
கேதுமத்யாம் மஹாராஜ தந்நிபோ$_3$தா$_4$நுபூர்வஶ: ॥ (36)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_4_Back

Koviloor Digital Library

அந்த மலையின் முகட்டில், மேகம் போன்ற வண்ணமுடைய நடுச்சிகரம், நாற்புறமும் உளியால் செதுக்கப்பட்டு வழவழவென்று ஆக்கப்பட்டு, பறவைகள்கூடப் பறந்து சென்று அடைய முடியாத இடம் இருக்கிறது. இந்திரனின் ஆணைப்படி, அங்கே இலங்கை என்ற நகரத்தை உண்டாக்கினேன். அது, முந்நூறு யோஜனை நீளமும், நூறு யோஜனை அகலமும் உடையது. அதன் மதிற்சுவர்களும் நுழைவாயிலும் தங்கத்தால் செய்யப்பட்டவை. (23,24)

இராக்கதத் தலைவர்களே! இந்திரன் தலைமையில் அமரர்கள், அமராவதிப் பட்டணத்தில் சுகமாக வசிப்பதைப் போல, எவராலும் அணுக முடியாத அந்த (இலங்கை) நகரத்தில் சென்று வசிப்பீர்களாக. (25)

எதிரிகளை அடக்குபவர்களே! ஏராளமான அரக்கர்களுடன் இலங்கைக் கோட்டைக்குச் சென்று தங்கினீர்களேயானால், எதிரிகளால் நெருங்க முடியாதவர்களாகி விடுவீர்கள்.'' (26)

விசுவகர்மாவின் சொற்களைக் கேட்ட அந்த அரக்கத் தலைவர்கள், ஆயிரக்கணக்கான பணியாளர்களை உண்டாக்கி, அவர்களுடன்கூட அந்த நகரத்திற்குச் சென்று வசிக்கத் தொடங்கினார்கள். (27)

இராச்சுற்றிகளான அவர்கள், உறுதியான மதிற்சுவர்களையும் அகழிகளையும் உடையதும், பொன்னாலாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான வீடுகளைக் கொண்டதுமான இலங்கையில், மனக்களிப்புடன் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். (28)

ரகு பரம்பரைக்குப் பெருமை சேர்க்கும் இராமனே! இது இவ்வாறிருக்க, அந்த நாட்களில் நர்மதா என்ற பெயருடைய கந்தர்வப் பெண்மணி இருந்தாள். அவளுக்கு, நாணம்–செழுமை–புகழ் ஆகியவற்றின் அதிதேவதைகளைப் போன்ற சிறப்புடைய மூன்று கன்னிகைகள் இருந்தார்கள். (29)

முழுநிலவைப் போன்று அழகிய முகமுடைய அவர்களை, அவள் (நர்மதா) அரக்க இனத்தவளாக இல்லாதபோதிலும், சுகேசனுடைய புதல்வர்களுக்கு மூத்த வரிசைப்படி மகிழ்ச்சியோடு விவாகம் செய்து கொடுத்தாள். (30)

அன்னை நர்மதா, உத்தர நட்சத்திரத்தில் பாக்கியசாலிகளான மூன்று கந்தர்வப் பெண்களையும் மூன்று அரக்கத் தலைவர்களுக்கு விவாகம் செய்து கொடுத்தாள். (31)

விவாகம் செய்துகொண்ட சுகேச மைந்தர்கள், அப்சரப் பெண்டிர்களுடன் அமரர்கள் களித்திருப்பதைப் போல, தத்தம் மனைவியுடன் உல்லாசமாக விளையாடிக் களித்தார்கள். (32)

மால்யவானின் மனைவி சுந்தரி பெயருக்கேற்றபடி அழகு படைத்தவள். அவள் மூலம் மால்யவான் தோற்றுவித்த சந்ததியின் பெயர்களைச் சொல்கிறேன், கேளுங்கள். (33)

வஜ்ரமுஷ்டி, விருபாக்ஷன், துர்முகன், ஸுப்தக்நன், யக்ஞகோபன், மத்தன், உன்மத்தன் ஆகிய அரக்கர்களைத் தோற்றுவித்தான். (மேலும்) சுந்தரியின் அழகான பெண்ணாக அநலா என்பவள் பிறந்தாள். (34)

முழுமதியைப் போன்று வசீகரமான முகம் கொண்ட கேதுமதி என்பவள், சுமாலியின் மனைவி; உயிரைக் காட்டிலும் மேலானவள், அவள். (35)

மாமன்னரே! அரக்கன் சுமாலி, கேதுமதியின் மூலம் பிறப்பித்த சந்ததியின் பெயர்களை வரிசைப்படி கூறுகிறேன், கேளுங்கள். (36)

Koviloor Digital Library

ப்ரஹஸ்தோऽகம்பநஶ்சைவ விகட: காலகார்முக: ।
தூ$_4$ம்ராக்ஷஶ்சைவ த$_3$ண்ட$_3$ஶ்ச ஸுபார்ஶ்வஶ்ச மஹாப$_3$ல: ॥
ஸம்ஹ்ராதி$_3$: ப்ரக$_4$ஸஶ்சைவ ப$_4$ாஸகர்ணஶ்ச ராக்ஷஸ: ॥ (37)

ராகா புஷ்போத்கடா சைவ கைகஸீ ச ஶுசிஸ்மிதா ।
கும்பீ$_4$நஸீ ச இத்யேதே ஸுமாலே: ப்ரஸவா: ஸ்ம்ருதா: ॥ (38)

மாலேஸ்து வஸுத$_4$ா நாம க$_3$ந்த$_4$ர்வீ ரூபஶாலிநீ ।
ப$_4$ார்யாஸீத் பத்$_3$மபத்ராக்ஷீ ஸ்வக்ஷீ யக்ஷீ வரோபமா ॥ (39)

ஸுமாலேரநுஜஸ்தஸ்யாம் ஜநயாமாஸ யத் ப்ரபே$_4$ா ।
அபத்யம் கத்$_2$யமாநம் து மயா த்வம் ஶ்ருணு ராக$_4$வ ॥ (40)

அநிலஶ்சாநலஶ்சைவ ஹர: ஸம்பாதிரேவ ச ।
ஏதே விபீ$_4$ஷணாமாத்யா மாலேயாஸ்து நிஶாசரா: ॥ (41)

ததஸ்து தே ராக்ஷஸபுங்க$_3$வாஸ்த்ரயோ
நிஶாசரை: புத்ரஶதைஶ்ச ஸம்வ்ருதா: ।
ஸுராந் ஸஹேந்த்$_3$ராந்ருஷிநாக$_3$யக்ஷாந்
ப$_3$ப$_3$ாதி$_4$ரே தாந் ப$_3$ஹுவீர்யத$_3$ர்பிதா: ॥ (42)

ஜக$_3$த்$_3$ப்$_4$ரமந்தோऽநிலவத்து$_3$ராஸத$_3$ா ரணேஷு ம்ருத்யுப்ரதிமாநதேஜஸ: ।
வரப்ரத$_3$ாநாத$_3$திக$_3$ர்விதா ப்$_4$ருஶம் க்ரதுக்ரியாணாம் ப்ரஶமங்கரா: ஸத$_3$ா ॥ (43)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ பஞ்சம: ஸர்க$_3$: ॥

ஷஷ்ட$_2$: ஸர்க$_3$:

விஷ்ணுமால்யவத$_3$ாதி$_3$யுத்$_3$த$_4$ம்

தைர்வத்$_4$யமாநா தே$_3$வாஶ்ச ருஷயஶ்ச தபோத$_4$நா: ।
ப$_4$யார்தா: ஶரணம் ஜக்$_3$முர்தே$_3$வதே$_3$வம் மஹேஶ்வரம் ॥ (1)

ஜக$_3$த்ஸ்ருஷ்ட்யந்தகர்தாரமஜமவ்யக்தரூபிணம் ।
ஆத$_4$ாரம் ஸர்வலோகாநாமாராத்$_4$யம் பரமம் கு$_3$ரும் ॥ (2)

தே ஸமேத்ய து காமாரிம் த்ரிபுராரிம் த்ரிலோசநம் ।
ஊசு: ப்ராஞ்ஜலயோ தே$_3$வா ப$_4$யக$_3$த்$_3$க$_3$த$_3$ப$_4$ாஷிண: ॥ (3)

ஸுகேஶபுத்ரைர்ப$_4$க$_3$வந் பிதாமஹவரோத்$_3$த$_4$தை: ।
ப்ரஜாத்$_4$யக்ஷ ப்ரஜா: ஸர்வா ப$_3$ாத்$_4$யந்தே ரிபுப$_3$ாத$_4$நை: ॥ (4)

ஶரண்யாந்யஶரண்யாநி ஹ்யாஶ்ரமாணி க்ருதாநி ந: ।
ஸ்வர்க$_3$ாச்ச தே$_3$வாந் ப்ரச்யாவ்ய ஸ்வர்கே$_3$ க்ரீட$_3$ந்தி தே$_3$வவத் ॥ (5)

Koviloor Digital Library

பிரஹஸ்தன், அகம்பனன், விகடன், காலகார்முகன், தூம்ராக்ஷன், தண்டன், மகாபலசாலியான ஸுபார்ச்வன், ஸம்ஹ்ராதி, ப்ரகஸன், பாஸகர்ணன் என்ற மைந்தர்கள்; ராகா, புஷ்போத்கடா, கவர்ச்சியாகப் புன்னகைக்கும் கைகஸி, கும்பீநஸி – என்ற பெண்கள். இவர்கள் சுமாலியின் பரம்பரையினராகக் கருதப்படுகிறார்கள். (37,38)

தாமரை இதழ் போன்று அகலமான அழகிய கண்களை உடையவளும், யக்ஷ மங்கையைப் போல உவமை கூற முடியாத கவின்மிகு தோற்றமுடையவளுமான வசுதா என்பவள், மாலியின் மனைவி. (39)

அண்ணலே! இராகவனே! சுமாலியின் தம்பியான மாலி, அவளிடம் தோற்றுவித்தவர்களைப் பற்றிக் கூறுகிறேன், கேளுங்கள். (40)

அநலன், அநிலன், ஹரன், ஸம்பாதி ஆகிய நான்கு அரக்கர்களும் மாலியின் புதல்வர்கள். தற்சமயம், இவர்கள் விபீஷணனின் அமைச்சர்களாக இருக்கிறார்கள். (41)

மால்யவான் முதலான மூன்று அரக்கத் தலைவர்களும், தங்களுடைய நூற்றுக்கணக்கான புதல்வர்களுடனும் மற்றுமுள்ள அரக்கர்களோடும்கூட பலவகையான சக்திகளாலும் வீரத்தாலும் செருக்குக் கொண்டு, இந்திரன் உள்ளிட்ட தேவர்கள், முனிவர்கள், நாகர்கள் மற்றும் யக்ஷர்களுக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கினார்கள். (42)

காற்றைப் போல் தங்கு தடை இல்லாமல், அவர்கள் எல்லா உலகங்களிலும் சுற்றி வந்தார்கள். யமனைப் போன்று தாக்கி அழிக்கும் ஆற்றல் பெற்றிருந்த அவர்கள் போர்க்களத்தில் வெற்றிகொள்ள முடியாதவர்கள். ஏராளமான வரங்களைப் பெற்றிருந்ததால் மிக்க இறுமாப்புடன் இருந்தார்கள். அதனால், எப்போதும் வேள்விச் சடங்குகளை அழித்து வந்தார்கள். (43)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஐந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஆறு

மகாவிஷ்ணு– மால்யவான் போர்

(அகஸ்தியர் தொடர்ந்து சொல்கிறார்— இராமா!) அவர்களால் (சுகேசன் புதல்வர்களால்) துன்புறுத்தப்பட்ட தேவர்கள், முனிவர்கள், தவச்செல்வர்கள் ஆகியோர் மிகவும் மனம் கலங்கி தேவதேவனான பரமேசுவரனிடம் சென்றார்கள். (1)

உலகத்தைப் படைப்பவர்–அழிப்பவர்; பிறப்பிலி; கண்ணுக்குப் புலப்படாத உருவத்தினர்; எல்லா உலகங்களுக்கும் ஆதாரமாக இருப்பவர்; வணக்கத்திற்குரியவர்; மிக உயர்ந்த ஆசார்யர்; மன்மதனை வென்றவர்; முப்புரங்களை அழித்தவர்; முக்கண்ணர் ஆகிய மகாதேவரை அடைந்து, கைகளைக் கூப்பிக் கொண்டு அச்சத்தால் நெஞ்சம் தழுதழுக்கக் கூறினார்கள்— (2,3)

''பகவானே! மக்கள் தலைவரே! சுகேசனுடைய புத்திரர்கள், பிரும்மாவிடமிருந்து பெற்ற வரங்களால் மிகவும் அகந்தை கொண்டு, எதிரிகளுக்குத் தொல்லை கொடுக்கும் வழிகளை மேற்கொண்டு, எல்லா மக்களுக்கும் கஷ்டம் கொடுத்து வருகிறார்கள். (4)

எல்லோருக்கும் அடைக்கலம் கொடுக்கும் இடங்களாக விளங்கிய எங்கள் ஆசிரமங்கள், மனிதர் வாழ முடியாதபடி நொறுக்கித் தள்ளப்பட்டுவிட்டன. தேவலோகத்திலிருந்து தேவர்களைத் துரத்திவிட்டு, அவர்களே தேவர்களைப் போல் ஆனந்தமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (5)

Koviloor Digital Library

அஹம் விஷ்ணுரஹம் ருத்3ரோ ப்3ரஹ்மாஹம் தே3வராட3ஹம் ।
அஹம் யமஶ்ச வருணஶ்சந்த்3ரோऽஹம் ரவிரப்யஹம் ॥ (6)

இதி மாலீ ஸுமாலீ ச மால்யவாம்ஶ்சைவ ராக்ஷஸா: ।
ப3ாத4ந்தே ஸமரோத்3த4ர்ஷா யே ச தேஷாம் புரஸ்ஸரா: ॥ (7)

தந்நோ தே3வ ப4யார்தாநாமப4யம் த3ாதுமர்ஹஸி ।
அஶிவம் வபுராஸ்த2ாய ஜஹி வை தே3வகண்டகாந் ॥ (8)

இத்யுக்த்ஸ்து ஸுரை: ஸர்வை: கபர்தீ3 நீலலோஹித: ।
ஸுகேஶம் ப்ரதி ஸாபேக்ஷ: ப்ராஹ தே3வக3ணாந் ப்ரபு4: ॥ (9)

அஹம் தாந்ந ஹநிஷ்யாமி மயாऽவத்4யா ஹி தேऽஸுரா: ।
கிம் து மந்த்ரம் ப்ரத3ாஸ்யாமி யோ வை தாந்நிஹநிஷ்யதி ॥ (10)

ஏதமேவ ஸமுத்3யோக3ம் புரஸ்க்ருத்ய மஹர்ஷய: ।
க3ச்ச2த்4வம் ஶரணம் விஷ்ணும் ஹநிஷ்யதி ஸ தாந் ப்ரபு4: ॥ (11)

ததஸ்து ஜயஶப்3தே3ந ப்ரதிநந்த்3ய மஹேஶ்வரம் ।
விஷ்ணோ: ஸமீபமாஜக்3முர்நிஶாசரப4யார்தி3தா: ॥ (12)

ஶங்க2சக்ரத4ரம் தே3வம் ப்ரணம்ய ப3ஹுமாந்ய ச ।
ஊசு: ஸம்ப்4ராந்தவத்3வாக்யம் ஸுகேஶதநயாந் ப்ரதி ॥ (13)

ஸுகேஶதநயைர்தே3வ த்ரிபி4ஸ்த்ரேதாக்3நிஸந்நிபை4: ।
ஆக்ரம்ய வரத3ாநேந ஸ்த2ாநாந்யபஹ்ருதாநி ந: ॥ (14)

லங்கா நாம புரீ து3ர்க3ா த்ரிகூடஶிக2ரே ஸ்தி2தா ।
தத்ர ஸ்தி2தா: ப்ரப3ாத4ந்தே ஸர்வாந்ந: க்ஷணத3ாசரா: ॥ (15)

ஸ த்வமஸ்மத்3தி4தார்த2ாய ஜஹி தாந் மது4ஸூத3ந ।
ஶரணம் த்வாம் வயம் ப்ராப்தா க3திர்ப4வ ஸுரேஶ்வர ॥ (16)

ராக்ஷஸாந் ஸமரே து3ஷ்டாந் ஸாநுப3ந்த4ாந் மதே3ாத்3த4தாந் ।
சக்ரக்ருத்தாஸ்யகமலாந்நிவேத3ய யமாய வை ॥ (17)

ப4யேஷ்வப4யதே3ாऽஸ்மாகம் நாந்யோऽஸ்தி ப4வதா விநா ।
நுத3 த்வம் நோ ப4யம் தே3வ நீஹாரமிவ ப4ாஸ்கர: ॥ (18)

இத்யேவம் தை3வதைருக்தோ தே3வதே3வோ ஜநார்த3ந: ।
அப4யம் ப4யதே3ாऽரீணாம் த3த்த்வா தே3வாநுவாச ஹ ॥ (19)

ஸுகேஶம் ராக்ஷஸம் ஜாநே ஈஶாநவரத3ர்பிதம் ।
தாம்ஶ்சாஸ்ய தநயாஞ்ஜாநே யேஷாம் ஜ்யேஷ்ட2: ஸ மால்யவாந் ॥ (20)

Koviloor Digital Library

அரக்கர்களான மால்யவான், சுமாலி, மாலி ஆகிய மூவரும், 'நானே விஷ்ணு; நானே ருத்ரன்; நானே பிரும்மா; நானே இந்திரன்; நான் யமன், வருணன், சந்திரன்; சூரியனும் நானே!' என்று, போரில் எவராலும் வெற்றிகொள்ள முடியாதவர்களான அவர்கள் முழக்கம் செய்கிறார்கள். அவர்களுக்கு முன்னால் வரும் முதல் அணியினர், எங்களுக்கு மிகவும் கஷ்டம் கொடுக்கிறார்கள். (6,7)

தேவரே! பயத்தால் நடுங்கிக் கொண்டிருக்கும் எங்களுக்கு அபயம் அளிக்கவேண்டும்; தேவர்களை முள்ளாகக் குத்தித் துன்புறுத்தும் அவர்களை (தாங்கள்), ரௌத்திராகாரமான உருவம் எடுத்துக் கொல்ல வேண்டும்.'' (8)

இவ்வாறு எல்லா தேவர்களாலும் வேண்டிக் கொள்ளப்பட்ட, செம்பட்டைச் சடையரான மகாதேவன், சுகேசனிடம் (தனக்கு) இருந்த மதிப்பினால், தேவர் கூட்டத்தைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (9)

''(என்னால் காப்பாற்றப்பட்ட சுகேசனின் புதல்வர்களாதலால்,) அவர்களை நான் கொல்ல மாட்டேன். ஆனால், அவர்களைக் கொல்லக்கூடிய வழியை உங்களுக்குச் சொல்கிறேன். (10)

மாமுனிவர்களாகிய நீங்கள் எல்லோரும் இதே வேண்டுகோளை முன்வைத்து, சரணாகதி செய்வோர்க்கு அடைக்கலம் தரும் விஷ்ணுவிடம் செல்லுங்கள். பிரபுவான அவர், அவர்களை (மால்யவான் முதலியோரை)க் கொல்வார்.'' (11)

உடனே, மகேசுவரருக்கு வெற்றி வாழ்த்தும் நன்றியும் கூறிவிட்டு, அரக்கர்களிடம் அச்சம் கொண்டிருந்த அவர்கள், விஷ்ணுவிடம் வந்து சேர்ந்தார்கள். (12)

சங்கு–சக்கரம் தரித்த விஷ்ணுதேவரை வணங்கிப் போற்றி, சுகேசனுடைய புதல்வர்களைப் பற்றி, வாய் குழறக் கூறினார்கள்— (13)

''தேவரே! மூன்று வகை நித்யாக்னி போன்ற சுகேசனின் புதல்வர்களான மூவரும், வரங்கள் பெற்றுள்ளதால் செருக்கடைந்து, எங்களைத் தாக்கி எங்கள் இடங்களைப் பிடித்துக் கொண்டு விட்டார்கள். (14)

திரிகூட மலையின் உச்சியில் இலங்கை என்ற கோட்டைப் பட்டணத்தில் இருந்துகொண்டு, அரக்கர்கள் எங்கள் எல்லோரையும் மிகவும் துன்புறுத்துகிறார்கள். (15)

மதுசூதனரே! எங்களுக்கு நலம் ஏற்படும் பொருட்டு, தாங்கள் அவர்களைக் கொல்ல வேண்டும். அமரர் தலைவரே! நாங்கள், தங்களைச் சரண் அடைந்துவிட்டோம். எங்களுக்குத் தஞ்சம் அளிக்க வேண்டும். (16)

இறுமாப்புக் கொண்டு மதிமயங்கித் திரிபவர்களும், கொடிய போர் செய்ய வல்லவர்களுமான அரக்கர்களை, சொந்த பந்தங்களோடுகூட சக்ராயுதத்தால் மாய்த்து, அவர்கள் முகங்களாகிய தாமரைகளை யமராஜனுக்கு அர்ப்பணியுங்கள். (17)

பயத்தால் தவித்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு தங்களைத் தவிர அபயம் அளிக்கக் கூடியவர் எவரும் இல்லை. ஆதலால், தேவ! சூரியன் பனிமூட்டத்தை அழிப்பதைப் போல, தாங்கள் எங்கள் அச்சத்தைப் போக்க வேண்டும்.'' (18)

தேவர்கள் இவ்வாறு வேண்டிக் கொண்டதும், பகைவர்களுக்குப் பயத்தைக் கொடுக்கும் தேவதேவரான பகவான் ஜனார்தனன், தேவர்களுக்கு அபயம் அளித்து, அவர்களைப் பார்த்துக் கூறினார்— (19)

''பரமேசுவரனிடமிருந்து வரம் பெற்றதால் தருக்கித் திரியும் இராக்கதன் சுகேசனை, நான் அறிவேன்; மால்யவானை மூத்தவனாகக் கொண்ட அவனுடைய புதல்வர்களையும் அறிவேன். (20)

Koviloor Digital Library

தாநஹம் ஸமதிக்ராந்தமர்யாத$_3$ாந் ராக்ஷஸாத$_4$மாந் ।
நிஹநிஷ்யாமி ஸங்க்ருத்$_3$த$_4$: ஸுரா ப$_4$வத விஜ்வரா: ॥ (21)

இத்யுக்தாஸ்தே ஸுரா: ஸர்வே விஷ்ணுநா ப்ரப$_4$விஷ்ணுநா ।
யத$_2$ாவாஸம் யயுர்ஹ்ருஷ்டா: ப்ரஶம்ஸந்தோ ஜநார்த$_3$நம் ॥ (22)

விபு$_3$த$_4$ாநாம் ஸமுத்$_3$யோக$_3$ம் மால்யவாம்ஸ்து நிஶாசர: ।
ஶ்ருத்வா தௌ ப்$_4$ராதரௌ வீராவித$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (23)

அமரா ருஷயஶ்சைவ ஸங்க$_3$ம்ய கில ஶங்கரம் ।
அஸ்மத்$_3$வத$_4$ம் பரீப்ஸந்த இத$_3$ம் வசநமப்$_3$ருவந் ॥ (24)

ஸுகேஶதநயா தே$_3$வ வரத$_3$ாநப$_3$லோத்$_3$த$_4$ா: ।
ப$_3$ாத$_4$ந்தேऽஸ்மாந் ஸமுத்$_3$த்$_3$ருப்தா கே$_4$ாரரூபா: பதே$_3$ பதே$_3$ ॥ (25)

ராக்ஷஸைரபி$_4$பூ$_4$தா: ஸ்ம ந ஶக்தா: ஸ்ம ப்ரஜாபதே ।
ஸ்வேஷு ஸத்$_3$மஸு ஸம்ஸ்த$_2$ாதும் ப$_4$யாத்தேஷாம் து$_3$ராத்மநாம் ॥ (26)

தத$_3$ஸ்மாகம் ஹிதார்த$_2$ாய ஜஹி தாம்ஶ்ச த்ரிலோசந ।
ராக்ஷஸாந் ஹுங்க்ருதேநைவ த$_3$ஹ ப்ரத$_3$ஹதாம் வர ॥ (27)

இத்யேவம் த்ரித$_3$ஶைருக்தோ நிஶம்யாந்த$_4$கஸூத$_3$ந: ।
ஶிர: கரம் ச து$_4$ந்வாந இத$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (28)

அவத்$_4$யா மம தே தே$_3$வா: ஸுகேஶதநயா ரணே ।
மந்த்ரம் து வ: ப்ரத$_3$ாஸ்யாமி யஸ்தாந் வை நிஹநிஷ்யதி ॥ (29)

யோऽஸௌ சக்ரக$_3$த$_3$ாபாணி: பீதவாஸா ஜநார்த$_3$ந: ।
ஹரிர்நாராயண: ஶ்ரீமாஞ்ஶரணம் தம் ப்ரபத்$_3$யத$_2$ ॥ (30)

ஹராத$_3$வாப்ய தே மந்த்ரம் காமாரிமபி$_4$வாத்$_3$ய ச ।
நாராயணாலயம் ப்ராப்ய தஸ்மை ஸர்வம் ந்யவேத$_3$யந் ॥ (31)

ததோ நாராயணேநோக்தா தே$_3$வா இந்த்$_3$ரபுரோக$_3$மா: ।
ஸுராரீந்ஸ்தாந் ஹநிஷ்யாமி ஸுரா ப$_4$வத விஜ்வரா: ॥ (32)

தே$_3$வாநாம் ப$_4$யபீ$_4$தாநாம் ஹரிணா ராக்ஷஸர்ஷபெ$_4$ள ।
ப்ரதிக்ஞாதோ வதே$_4$ऽஸ்மாகம் சிந்த்யதாம் யதி$_3$ஹ க்ஷமம் ॥ (33)

ஹிரண்யகஶிபோர்ம்ருத்யுரந்யேஷாம் ச ஸுரத்$_3$விஷாம் ।
து$_3$:க$_2$ம் நாராயணம் ஜேதும் யோ நோ ஹந்துமபீ$_4$ப்ஸதி ॥ (34)

தத: ஸுமாலீ மாலீ ச ஶ்ருத்வா மால்யவதோ வச: ।
ஊசதுர்ப்$_4$ராதரம் ஜ்யேஷ்ட$_2$மஶ்விநாவிவ வாஸவம் ॥ (35)

ஸ்வதீ$_4$தம் த$_3$த்தமிஷ்டம் சாப்யைஶ்வர்யம் பரிபாலிதம் ।
ஆயுர்நிராமயம் ப்ராப்தம் ஸுத$_4$ர்ம: ப்ராபித: பதி$_2$ ॥ (36)

Koviloor Digital Library

தேவர்களே! அறத்தின் எல்லையைக் கடந்து சென்றுவிட்ட அரக்கப்பதர்களான அவர்களை, நான், கோபத்தை ஏற்றுக்கொண்டு கொல்லப் போகிறேன். கவலைப்படாமல் செல்லுங்கள்.'' (21)

எல்லாச் செயல்களையும் செய்யவல்ல விஷ்ணு இவ்வாறு உறுதியளித்ததும், தேவர்கள் எல்லோரும் ஆறுதல் அடைந்தார்கள். ஜனார்தனனைப் போற்றிப் புகழ்ந்துவிட்டுத் தத்தம் இருப்பிடத்திற்கு ஏகினார்கள். (22)

(தங்களுக்கு எதிரான) தேவர்களின் இந்த முயற்சியைப் பற்றிக் கேள்விப்பட்ட இராக்கதன் மால்யவான், வீரர்களான தன் இரு சகோதரர்களை நோக்கி(ப் பின்வருமாறு) கூறினான்— (23)

''நாம் கொலை செய்யப்படுவதை விரும்பும் தேவர்களும் முனிவர்களும் ஒன்றாகச் சேர்ந்து சிவபெருமானிடம் சென்று (பின்வருமாறு) வேண்டியிருக்கிறார்கள்— (24)

'ஐயனே! சுகேசனுடைய பயங்கரமான தோற்றமுடைய புதல்வர்கள், தங்களிடமிருந்து பெற்ற வரங்களால் செருக்கும் மதிமயக்கமும் கொண்டு, ஒவ்வொரு அடியிலும் எங்களைத் துன்புறுத்தி வருகிறார்கள். (25)

மக்கட்தலைவரே! அரக்கர்களால் தோற்கடிக்கப்பட்ட நாங்கள், துஷ்டர்களான அவர்களிடமுள்ள அச்சத்தினால் எங்கள் வீடுகளில் தங்க முடியவில்லை. (26)

முக்கண்ணரே! எங்களைக் காப்பதற்காக, தாங்கள் அவர்களைக் கொல்லவேண்டும். எரித்து அழிப்பவர்களில் தலையாயவரே! 'ஹும்' என்ற உறுமல் சத்தத்தாலேயே அந்த அரக்கர்களைத் தங்களால் அழிக்க முடியும்.' (27)

தேவர்கள் இவ்வாறு கூறியதைக் கேட்ட காலகாலர் (பரமசிவன்) தலை–கைகால்களை ஆட்டி (அவர்கள் வேண்டுகோளை ஏற்க இயலாமையை உணர்த்தி) பின்வருமாறு கூறினார்— (28)

'தேவர்களே! சுகேசனின் புதல்வர்கள் போரில் என்னால் கொல்லத்தக்கவர் அல்லர். எவர் அவர்களை மாய்க்கப் போகிறாரோ (மாய்க்க வல்லவரோ), அவரைப் பற்றிக் கூறுகிறேன்— (29)

'கைகளில் சக்ராயுதமும் கதாயுதமும் உடையவர்; பட்டாடை அணிந்தவர்; ஜனார்தனர்; ஹரி; நாராயணர்; சகலவிதமான சம்பத்துக்களும் அமையப் பெற்றவரான, அவரைத் தஞ்சம் அடையுங்கள்.' (30)

காமகாலரான மகாதேவரிடமிருந்து இந்த ஆலோசனையைப் பெற்ற அவர்கள், நாராயணன் இருப்பிடம் சென்று அவரிடம் எல்லாவற்றையும் கூறினார்கள்— (31)

நாராயணன், 'தேவர்களே! உங்களுக்குப் பகைவர்களான அவர்களை நிச்சயம் ஒழிப்பேன்! கவலைப்படாதீர்கள்' என்று, இந்திரனை முன்னிட்டுச் சென்ற தேவர்களுக்கு உறுதியளித்தார். (32)

இராக்கதப் பெருவீரர்களே! அச்சத்தால் கலங்கிக் கொண்டிருந்த தேவர்களுக்கு, நம்மைக் கொல்வதாக நாராயணன் வாக்குறுதி அளித்திருக்கிறார். ஆகவே, இந்த விஷயமாக நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். (33)

ஹிரண்யகசிபுவையும் மற்றும் பல தேவ விரோதிகளையும் கொன்றழித்தவரும், தற்போது நம்மைக் கொல்ல விரும்புகிறவருமான நாராயணனை வெல்வது மிக அரிய செயலாகும்.'' (34)

அசுவினீதேவர் (என்ற இரட்டையரான தேவ மருத்துவர்கள்) இந்திரனிடம் கூறுவதையொப்ப, மூத்த சகோதரனான மால்யவான் சொன்னதைக் கேட்ட சுமாலியும் மாலியும் மனந்திறந்து (பின்வருமாறு) கூறினார்கள்— (35)

''மூத்தவரே! நாம், வேதப்பயிற்சி–தானம்–வேள்விகள் செய்திருக்கிறோம்; நமக்குக் கிடைத்துள்ள உன்னதப் பெருமைகளை அனுபவித்துப் பாதுகாத்து வந்திருக்கிறோம்; நோயற்ற நீண்ட ஆயுளைப் பெற்றிருக்கிறோம்; இதுவரையில் நாம் அறநெறியையே பின்பற்றி வந்திருக்கிறோம். (36)

Koviloor Digital Library

தே$_3$வஸாக$_3$ரமக்ஷோப்$_4$யம் ஶஸ்த்ரை: ஸமவகா$_3$ஹ்ய ச ।
ஜிதா த்$_3$விஷோ ஹ்யப்ரதிமாஸ்தந்நோ ம்ருத்யுக்ருதம் ப$_4$யம் ॥ (37)

நாராயணஶ்ச ருத்$_3$ரஶ்ச ஶக்ரஶ்சாபி யமஸ்ததா$_2$ ।
அஸ்மாகம் ப்ரமுகே$_2$ ஸ்தா$_2$தும் ஸர்வே பி$_3$ப்$_4$யதி ஸர்வதா$_3$ ॥ (38)

விஷ்ணோர்த்$_3$வேஷஸ்ய நாஸ்த்யேவ காரணம் ராக்ஷஸேஶ்வர ।
தே$_3$வாநாமேவ தோ$_3$ஷேண விஷ்ணோ: ப்ரசலிதம் மந: ॥ (39)

தஸ்மாதத்$_3$ய ஸமுத்$_3$யுக்தா: ஸர்வஸைந்யஸமாவ்ருதா: ।
தே$_3$வாநேவ ஜிக$_4$ம்ஸாம யேப்$_4$யோ தோ$_3$ஷ: ஸமுத்தி$_2$த: ॥ (40)

ஏவம் ஸம்மந்த்ர்ய ப$_3$லிந: ஸர்வே ஸைந்யஸமாவ்ருதா: ।
உத்$_3$யோக$_3$ம் கோ$_4$ஷயித்வா து ஸர்வே நைர்ருதபுங்க$_3$வா: ॥ (41)

யுத்$_3$தா$_4$ய நிர்யயு: க்ருத்$_3$தா$_4$ ஜம்ப$_4$வ்ருத்ரப$_3$லா இவ ।
இதி தே ராம ஸம்மந்த்ரய ஸர்வோத்$_3$யோகே$_3$ந ராக்ஷஸா: ॥ (42)

யுத்$_3$தா$_4$ய நிர்யயு: ஸர்வே மஹாகாயா மஹாப$_3$லா: ।
ஸ்யந்த$_3$நைர்வாரணைஶ்சைவ ஹயைஶ்ச கி$_3$ரிஸந்நிபை$_4$: ॥ (43)

க$_2$ரைர்கோ$_3$பீ$_4$ ரதோ$_2$ஷ்ட்ரைஶ்ச ஶிம்ஶுமாரைர்பு$_4$ஜங்க$_3$மை: ।
மகரை: கச்ச$_2$பைர்மீநைர்விஹங்கை$_3$ர்க$_3$ருடோ$_3$பமை: ॥ (44)

ஸிம்ஹைர்வ்யாக்$_4$ரைர்வராஹைஶ்ச ஸ்ருமரைஶ்சமரைரபி ।
த்யக்த்வா லங்காம் க$_3$தா: ஸர்வே ராக்ஷஸா ப$_3$லக$_3$ர்விதா: ॥ (45)

ப்ரயாதா தே$_3$வலோகாய யோத்$_3$து$_4$ம் தை$_3$வதஶத்ரவ: ।
லங்காவிபர்யயம் த்$_3$ருஷ்ட்வா யாநி லங்காலயாந்யத$_2$ ॥ (46)

பூ$_4$தாநி ப$_4$யத$_3$ர்ஶீநி விமநஸ்காநி ஸர்வஶ: ।
ரதோ$_2$த்தமைருஹ்யமாநா: ஶதஶோऽத$_2$ ஸஹஸ்ரஶ: ॥ (47)

ப்ரயாதா ராக்ஷஸாஸ்தூர்ணம் தே$_3$வலோகம் ப்ரயத்நத: ।
ரக்ஷஸாமேவ மார்கே$_3$ண தை$_3$வதாந்யபசக்ரமு: ॥ (48)

பூ$_4$தாநி ப$_4$யத$_3$ர்ஶீநி விஷமஸ்தா$_2$நி ஸர்வஶ: ।
பௌ$_4$மாஶ்சைவாந்தரிக்ஷாஶ்ச காலாக்ஞப்தா ப$_4$யாவஹா: ॥ (49)

உத்பாதா ராக்ஷஸேந்த்$_3$ராணாமப$_4$வாய ஸமுத்தி$_2$தா: ।
அஸ்தீ$_2$நி மேகா$_4$ வவ்ருஷுருஷ்ணம் ஶோணிதமேவ ச ॥ (50)

வேலாம் ஸமுத்$_3$ராஶ்சோத்க்ராந்தாஶ்சேலுஶ்சாப்யத$_2$ பூ$_4$த$_4$ரா: ।
அட்டஹாஸாந் விமுஞ்சந்தோ க$_4$நநாத$_3$ஸமஸ்வநா: ॥ (51)

வாஶ்யந்த்யஶ்ச ஶிவாஸ்தத்ர தா$_3$ருணம் கோ$_4$ரத$_3$ர்ஶநா: ।
ஸம்பதந்த்யத$_2$ பூ$_4$தாநி த்$_3$ருஶ்யந்தே ச யதா$_2$க்ரமம் ॥ (52)

Koviloor Digital Library

ஆழங்காண முடியாத தேவர்கள் படை என்ற பெருங்கடலில் நாம் சஸ்திரங்களோடு மூழ்கி, நிகரற்ற வீரங்கொண்ட விரோதிகளை எதிர்த்து வெற்றி பெற்றுள்ளோம். அதனால், நமக்கு யமபயம் என்பது இல்லை. (போரில் யாரும் நம்மை வெல்ல முடியாது. கொன்றுபோட முடியாது. காலன் நம்மை நெருங்க மாட்டான்.) (37)

நாராயணனும் ருத்ரனும் இந்திரனும் யமனும் நம் எதிரே நிற்பதற்குக்கூடப் பயந்து கொண்டிருக்கிறார்கள். (38)

அரக்க மன்னரே! விஷ்ணு நம்மிடம் பகை பாராட்டுவதற்குக் காரணமே இல்லை. (ஏனென்றால், நாம் அவருக்கு எந்தக் கெடுதலும் செய்யவில்லையே?) தேவர்கள் சென்று நம்மைப் பற்றிக் குறை கூறியதால், அவர் மனம் திரிந்திருக்கிறது. (39)

ஆகவே, இப்போதே எல்லாப் படைவீரர்களும் புடைசூழ, நாம் எல்லோரும் ஒன்றாகக் கூடிச் சென்று – எந்த தேவர்களால் நமக்கு ஆபத்துக்கான அறிகுறி தோன்றியிருக்கிறதோ – அவர்களைக் கொன்று போடுவோம்.'' (40)

ஆற்றல் மிக்கவர்களும் அரக்கத் தலைவர்களுமான அவர்கள் மேற்கண்டவாறு நிச்சயம் செய்து, கோபம் கொண்டவர்களாக, போருக்கு அறைகூவல் விடுத்து, முன்பு ஜம்பனும் விருத்திரனும் (தேவர்களை எதிர்த்துப்) படைகளுடன் சென்றதைப் போல, போர் புரிவதற்காக புறப்பட்டுச் சென்றார்கள். (41)

இராமனே! (முன்னர் கூறியபடி) தேவர்களுடன் போர் செய்து அவர்களை அழிப்பதற்காக பேருடலும் பேராற்றலும் படைத்த அரக்கர்கள் முழு முயற்சிகளுடன் புறப்பட்டார்கள். (42)

தங்கள் ஆற்றலினால் செருக்குக் கொண்டிருந்த எல்லா அரக்கர்களும் இலங்கையை விடுத்து, தேர், யானை, யானை போல் பேருருவம் கொண்ட குதிரை, கழுதை, காளை, ஒட்டகம், சிசுமாரம், சர்ப்பம், முதலை, ஆமை, மீன், கருடனுக்கு நிகரான பறவை, சிங்கம், புலி, பன்றி, மான், கவயம் (என்னும் பசு இனம்) ஆகியவற்றை வாகனங்களாகக் கொண்டு, (தேவர்களுடன்) போர் புரிவதற்காகத் தேவலோகத்தை நோக்கிச் சென்றார்கள். (43–45)

இலங்கையிலிருந்த பிராணிகள் (மற்றும் கிராம தேவதைகள்) அச்சம் விளைவிக்கும் சகுனங்களைக் கண்டு, இலங்கை அழியப்போவதை உணர்ந்து, மனத்திற்குள் வேதனைப்பட்டார்கள். (46)

உத்தமமான தேர்களில் ஏறிக்கொண்டு நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான அரக்கர்கள் வெகுவேகமாக தேவலோகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் செல்லும் வழியிலேயே (அவர்கள் கண் முன்னாலேயே) இலங்கை நகர தேவதைகள், அவ்விடத்தை விட்டு வெளியேறிச் சென்றன. (47)

எல்லாப் புறங்களிலும் உயிர்ப்பிராணிகள் தகாத இடங்களில் இருந்து கொண்டு அச்சத்தைத் தோற்றுவித்தன. அப்போது காலதேவன் ஆணைப்படி பூமியிலும் ஆகாயத்திலும் அரக்கத் தலைவர்களுக்கு நாசத்தைக் குறிக்கும் பயங்கரமான அபசகுனங்கள் தோன்றின. மேகங்கள், எலும்புத் துண்டுகளையும் சூடான இரத்தத்தையும் பொழிந்தன. (48–50)

பெருங்கடல் கரையைக் கடந்து சீறிக்கொண்டு சென்றது; மலைகள் குலுங்கின; விலங்குகள் இடியைப் போன்று பேரொலி எழுப்பிக் கொண்டு திரிந்தன; பயங்கரமான தோற்றமுடைய நரிகள் கடூரமாக ஊளையிட்டன; பஞ்சபூதங்களும் வரிசைக்கிரமமாக அமிழ்ந்து போய்க் கொண்டிருப்பதைப் போல் தோன்றின. (51,52)

Koviloor Digital Library

க்$_3$ரு$_4$த்ரசக்ரம் மஹச்சாத்ர ஜ்வலநோத்$_3$கா$_3$ரிபி$_4$ர்முகை$_2$: ।
ராக்ஷஸாநாமுபரி கே$_2$ ப்$_4$ரமதேலாதசக்ரவத் ॥ (53)

கபோதா ரக்தபாதா$_3$ஶ்ச ஶாரிகா வித்$_3$ருதா யயு: ।
காகா வாஶ்யந்தி தத்ரைவ பி$_3$ட$_3$ாலா வை த்$_3$விபாதி$_3$கா: ॥ (54)

உத்பாதாம்ஸ்தாநநாத்$_3$ருத்ய ராக்ஷஸா ப$_3$லக$_3$ர்விதா: ।
யாந்த்யேவ ந நிவர்தந்தே ம்ருத்யுபாஶாவபாஶிதா: ॥ (55)

மால்யவாம்ஶ்ச ஸுமாலீ ச மாலீ ச ஸுமஹாப$_3$லா: ।
ஆஸந் புரஸ்ஸராஸ்தேஷாம் க்ரதூநாமிவ பாவகா: ॥ (56)

மால்யவந்தம் ச தே ஸர்வே மால்யவந்தமிவாசலம் ।
நிஶாசரா ஹ்யாஶ்ரயந்தி த$_4$ாதாரமிவ தே$_3$வதா: ॥ (57)

தத்$_3$ப$_3$லம் ராக்ஷஸேந்த்$_3$ராணாம் மஹாப்$_4$ரக$_4$நநாதி$_3$தம் ।
ஜயேப்ஸயா தே$_3$வலோகம் யயௌ மாலிவஶே ஸ்தி$_2$தம் ॥ (58)

ராக்ஷஸாநாம் ஸமுத்$_3$யோக$_3$ம் தம் து நாராயண: ப்ரபு$_4$: ।
தே$_3$வதூ$_3$தாது$_3$பஶ்ருத்ய சக்ரே யுத்$_3$தே$_4$ தத$_3$ா மந: ॥ (59)

ஸ ஸஜ்ஜாயுத$_4$தூணீரோ வைநதேயோபரி ஸ்தி$_2$த: ।
ஆஸஜ்ய கவசம் தி$_3$வ்யம் ஸஹஸ்ரார்கஸமத்$_3$யுதி ॥ (60)

ஆப$_3$த்$_4$ய ஶரஸம்பூர்ணே இஷுதீ$_4$ விமலே தத$_3$ா ।
ஶ்ரோணிஸூத்ரம் ச க$_2$ட்$_3$க$_3$ம் ச விமலம் கமலேக்ஷண: ॥ (61)

ஶங்க$_2$சக்ரக$_3$த$_3$ாஶார்ங்க$_3$க$_2$ட்$_3$க$_3$ாக்$_2$யப்ரவராயுத$_4$ாந் ।
ஸுபர்ணம் கி$_3$ரிஸங்காஶம் வைநதேயமத$_2$ாஸ்தி$_2$த: ॥ (62)

ராக்ஷஸாநாமப$_4$ாவாய யயௌ தூர்ணதரம் ப்ரபு$_4$: ।
ஸுபர்ணப்ருஷ்டே$_2$ ஸ ப$_3$பௌ$_4$ ஶ்யாம: பீதாம்ப$_3$ரோ ஹரி: ॥
காஞ்சநஸ்ய கி$_3$ரே: ஶ்ருங்கே$_3$ ஸதடி$_3$த்தோயதோ$_3$ யத$_2$ா ॥ (63)

ஸ ஸித்$_3$த$_4$தே$_3$வர்ஷிமஹோரகை$_3$ஶ்ச க$_3$ந்த$_4$ர்வயக்ஷைருபகீ$_3$யமாந: ।
ஸமாஸஸாத$_3$ாஸுரஸைந்யஶத்ரூந்ஶ்சக்ராஸிஶார்ங்க$_3$ாயுத$_4$ஶங்க$_2$பாணி: ॥ (64)

ஸுபர்ணபக்ஷாநிலநுந்நபக்ஷம் ப்$_4$ரமத்பதாகம் ப்ரவிகீர்ணஶஸ்த்ரம் ।
சசால தத்$_3$ராக்ஷஸராஜஸைந்யம் சலோபலம் நீல இவாசலேந்த்$_3$ர: ॥ (65)

தத: ஶரை: ஶோணிதமாம்ஸரூஷிதைர்யுக$_3$ாந்தவைஶ்வாநரதுல்யவிக்$_3$ரஹை: ।
நிஶாசரா: ஸம்பரிவார்ய மாத$_4$வம் வராயுதை$_4$ர்நிர்பி$_3$பி$_4$து$_3$: ஸஹஸ்ரஶ: ॥ (66)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஷஷ்ட$_2$: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

கழுகுகளின் வாயிலிருந்து கொழுந்து விட்டெரியும் நெருப்புச் சுவாலைகள் புறப்பட்டன; அவைகள், நெருப்பு வளையம் போல் அரக்கர் கூட்டத்தின் மேலே சுற்றிச் சுற்றி வந்தன. (53)

புறாக்கள், கிளிகள், மைனாக்கள் எல்லாம் இலங்கையைவிட்டுப் பறந்து சென்றன; காகங்கள் கரைந்தன; பூனைகள் அலறின; நாற்கால் பிராணிகள் அவலமாகக் குரல் எழுப்பின. (54)

தங்கள் ஆற்றலால் இறுமாந்திருந்த அரக்கர்கள், இந்த அபசகுனங்களைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து முன்னேறிச் சென்றார்கள். காலதேவனின் பாசத்தால் கட்டப்பட்டிருந்த அவர்கள் (இலங்கைக்குத்) திரும்பிச் செல்லவில்லை. (55)

வலிமை மிக்கவர்களான மால்யவான், சுமாலி, மாலி ஆகியோர் ஆகுதி சொரியப்பட்ட வேள்வி அக்னியைப் போல் ஜொலித்துக் கொண்டு முன்னே சென்றார்கள். (56)

தேவர்கள், பிரும்மாவை அண்டியிருப்பதைப் போல, மால்யவான் என்ற மலை போன்று உறுதி வாய்ந்த மால்யவானை அவர்கள் எல்லோரும் அண்டியிருந்தார்கள். (57)

மாலியின் தலைமையிலிருந்த அரக்கர்களின் படை, மேகங்களைப் போல் இடியோசை எழுப்பிக் கொண்டு, வெற்றியைப் பெறும் விருப்பத்துடன் தேவலோகத்தை அடைந்தது. (58)

தேவதூதர்கள் மூலமாக அரக்கர்களின் போர் முயற்சியைத் தெரிந்துகொண்ட பிரபு நாராயணன், அவர்களுடன் போர் புரியத் தீர்மானித்தார். (59)

அவர், அம்புகள் நிறைந்த அம்பறையை அணிந்து கொண்டார்; ஆயிரம் சூரியனுக்கு ஒப்பான கவசத்தைத் தரித்துக் கொண்டார்; மேலும் தாமரைக்கண்ணரான அவர், அம்புகள் நிறைந்த அழகான இரண்டு அம்புறாத்தூணிகளையும், இடுப்பில் வார்ப்பட்டையை அணிந்துகொண்டு, பட்டாக்கத்தியையும் செருகிக் கொண்டார்; சங்கு, சக்கரம், கதை, சார்ங்கம் (என்னும் வில்), கத்தி ஆகிய உத்தம ஆயுதங்களைத் தரித்துக் கொண்டு, கவின்மிகு இறக்கைகளைக் கொண்ட கருடன் மேல் ஆரோகணித்தவராக, சர்வ வல்லமை பொருந்திய அவர், அரக்கர்களை ஒழிப்பதற்காக வெகுவேகமாகச் சென்றார். (60–62)

பட்டாடை உடுத்தியிருந்தவரும் கருடன் மேல் அமர்ந்திருந்த சியாம வண்ணத்தருமான ஸ்ரீமந்நாராயணன், பொற்சிகரத்தில் மின்னல் கூட்டங்களுடன் விளங்கும் மேகம் போல் பிரகாசித்தார். அப்போது சித்தர்கள், தேவரிஷிகள், மாபெரும் நாகர்கள், கந்தர்வர்கள், யக்ஷர்கள் முதலியோர், அவரைப் போற்றிப் பாட்டிசைத்தார்கள். கைகளில் சக்கராயுதம், போர்வாள், சார்ங்கம் என்ற வில், சங்கு ஆகியவைகளைத் தாங்கிக் கொண்டு, அசுரப் படையின் பகைவர்கள் (தேவர்கள்) புடைசூழ, அரக்கர்கள் இருந்த இடத்தை அடைந்தார். (63,64)

கருடனின் இறகுகளின் சூறாவளி போன்ற காற்றின் வேகத்தைத் தாங்கமாட்டாமல், அரக்கர் படை ஸ்தம்பித்து நின்றது; தேர்களில் கட்டியிருந்த கொடிகள் சுற்றிச் சுழன்றன; எல்லோருடைய கைகளிலிருந்தும் அஸ்திர–சஸ்திரங்கள் நழுவி விழுந்தன; அரக்க மன்னன் மால்யவானின் படை முழுவதும் நடுங்கத் தொடங்கியது. அதைக் காண்பதற்கு, ஒரு மலைச்சிகரம் ஆடி அசைந்து தன் உச்சியிலிருந்து பெரும் பாறைகளை உதிர்ப்பதைப் போலிருந்தது. (65)

பின்னர் அரக்கர்கள், நாராயணனை நாற்புறமும் சூழ்ந்து கொண்டு, இரத்தம்–மாமிசம் தோய்ந்தவைகளும் பிரளயகால அக்னியைப் போல் நெருப்பைக் கக்குபவைகளுமான அம்புகளாலும் மற்றும் பல ஆயிரக்கணக்கான ஆயுதங்களாலும் தாக்கத் தொடங்கினார்கள். (66)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஆறாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஸப்தம: ஸர்க$_3$:

மாலிவத$_4$:

நாராயணகி$_3$ரிம் தே து க$_3$ர்ஜந்தோ ராக்ஷஸாம்பு$_3$தா$_3$: ।
வவ்ருஷு: ஶரவர்ஷேண வர்ஷேணேவாத்$_3$ரிமம்பு$_3$தா$_3$: ॥ (1)

ஶ்யாமாவதா$_3$தஸ்தைர்விஷ்ணுர்நீலைர்நக்தஞ்சரோத்தமை: ।
வ்ருதோऽஞ்ஜநகி$_3$ரீவாஸீத்$_3$வர்ஷமாணை: பயோத$_4$ரை: ॥ (2)

ஶலபா$_4$ இவ கேதா$_3$ரம் மஶகா இவ பாவகம் ।
யதா$_2$ம்ருதக$_4$டம் த$_3$ம்ஶா மகரா இவ சார்ணவம் ॥ (3)

ததா$_2$ ரக்ஷோத$_4$நுர்முக்தா வஜ்ராநில மநோஜவா: ।
ஹரிம் விஶந்தி ஸ்ம ஶரா லோகா இவ விபர்யயே ॥ (4)

ஸ்யந்த$_3$நை: ஸ்யந்த$_3$நக$_3$தா க$_3$ஜைஶ்ச க$_3$ஜப்ருஷ்ட$_2$கா$_3$: ।
அஶ்வாரோஹாஸ்ததா$_2$ஶ்வைஶ்ச பாதா$_3$தாஶ்சாம்ப$_3$ரே ஸ்தி$_2$தா: ॥ (5)

ராக்ஷஸேந்த்$_3$ரா கி$_3$ரிநிபா$_4$: ஶரை: ஶக்த்ய்ருஷ்டிதோமரை: ।
நிருச்ச்$_2$வாஸம் ஹரிம் சக்ரு: ப்ராணாயாமா இவ த்$_3$விஜம் ॥ (6)

நிஶாசரைஸ்தாட்$_3$யமாநோ மீநைரிவ மஹோதத$_3$தி$_4$: ।
ஶார்ங்க$_3$மாயம்ய து$_3$ர்த$_4$ர்ஷோ ராக்ஷஸேப்$_4$யோऽஸ்ருஜச்ச$_2$ராந் ॥ (7)

ஶரை: பூர்ணாயதோத்ஸ்ருஷ்டைர்வஜ்ரவக்த்ரைர்மநோஜவை: ।
சிச்சே$_2$த$_3$ விஷ்ணுர்நிஶிதை: ஶதஶோऽத$_2$ ஸஹஸ்ரஶ: ॥ (8)

வித்$_3$ராவ்ய ஶரவர்ஷேண வர்ஷம் வாயுரிவோத்தி$_2$தம் ।
பாஞ்சஜந்யம் மஹாஶங்க$_2$ம் ப்ரத$_3$த்$_4$மௌ புருஷோத்தம: ॥ (9)

ஸோऽம்பு$_3$ஜோ ஹரிணா த்$_4$மாத: ஸர்வப்ராணேந ஶங்க$_2$ராட் ।
ரராஸ பீ$_4$மநிஹ்ராத$_3$ஸ்த்ரைலோக்யம் வ்யத$_2$யந்நிவ ॥ (10)

ஶங்க$_2$ராஜரவ: ஸோऽத$_2$ த்ராஸயாமாஸ ராக்ஷஸாந் ।
ம்ருக$_3$ராஜ இவாரண்யே ஸமதா$_3$நிவ குஞ்ஜராந் ॥ (11)

ந ஶேகுரஶ்வா: ஸம்ஸ்தா$_2$தும் விமதா$_3$: குஞ்ஜரா ப$_4$வந் ।
ஸ்யந்த$_3$நேப்$_4$யஶ்ச்யுதா வீரா: ஶங்க$_2$ராவிதது$_3$ர்ப$_3$லா: ॥ (12)

ஶார்ங்க$_3$சாபவிநிர்முக்தா வஜ்ரதுல்யாநநா: ஶரா: ।
விதா$_3$ர்ய தாநி ரக்ஷாம்ஸி ஸுபுங்கா: விவிஶு: க்ஷிதிம் ॥ (13)

Koviloor Digital Library

ஸர்க்கம் : ஏழு

மாலி மாய்ந்தான்!

மேகங்கள், ஒரு மலையின் மீது மழையைப் பொழிந்து, அதை முழுமையாகக் குளிப்பாட்டுவதைப் போல, அரக்கர் கூட்டம் என்ற மேகக்கூட்டம் இடிமுழக்கம் செய்து கொண்டு, அஸ்திரங்களாகிற தண்ணீரை, நாராயணன் என்ற மலை மீது பொழிந்து, அவரை வாட்டியெடுத்தது. (1)

ஸ்ரீமந்நாராயணனின் உடல்வண்ணம் ஒளிவீசும் சியாம மயமானது; அரக்க வீரர்களோ கருவண்ணம் கொண்டவர்கள். நாராயணனைச் சூழ்ந்து கொண்டு அரக்கர்கள் அம்புமாரி பெய்ததைக் காணுங்கால், அஞ்ஜன மலையைச் சூழ்ந்துகொண்டு கருமுகில்கள் மழை பொழிவதைப் போலிருந்தது. (2)

பயிர் நிலங்களில் வெட்டுக்கிளிகள் புகுந்துக் கொள்வது போலவும், நெருப்பில் பூச்சிகள் விழுவது போலவும், கள்குடத்தில் ஈக்கள் விழுந்து அமிழ்வதைப் போலவும், கடலுக்குள் முதலைகள் சென்று மறைவதைப் போலவும், அரக்கர்கள் ஏவிய வஜ்ரம் போல் கூரியவைகளும் வாயுவேகம்–மனோவேகம் போல் செல்பவைகளுமான படைக்கலங்கள், விஷ்ணுவின் திருவுடலுக்குள் சென்று மறைந்தன – பிரளய காலத்தில், எல்லா உலகங்களும் அவர் உடலுக்குள்ளேயே சென்று லயமடைவதைப் போல! (3,4)

தேரில் ஏறி நின்று போர் புரிபவர்கள், யானையின் மேல் அமர்ந்து போர் செய்பவர்கள், குதிரை வீரர்கள், காலாட்படையினர் ஆகிய அனைவரும் வானத்திலிருந்து போர் புரிந்தார்கள். மலைபோல் பேருருவம் கொண்ட அரக்கர்கள், வேல், இருபுறமும் கூர்மையான வாள், தோமரம் (எறியாயுதம்) மற்றும் அம்புகள் ஆகியவற்றால் நாராயணனைத் தாக்கி, இருபிறப்பாளர்கள் பிராணாயாமம் செய்யும்போது மூச்சைக் கட்டுப்படுத்தி வைப்பதைப் போல, அவரை (நாராயணனை) மூச்சுவிட முடியாமல் செய்தார்கள். (5,6)

மீன்கள் பெருங்கடலில் துள்ளி விளையாடுவதைப் போல, அரக்கர்கள் மகாவிஷ்ணுவைத் தாக்கினார்கள். (மீன்கள் அடித்து உதைத்துத் துவைப்பதனால், கடலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. அதுபோல, அரக்கர்களின் தாக்குதலால் ஆதிப்பரம்பொருளான நாராயணனுக்கு எவ்விதத் துன்பமும் ஏற்படவில்லை.) அவ்வமயம், எவராலும் வெற்றிகொள்ள முடியாத பகவான் நாராயணன், சார்ங்கம் என்ற வில்லில் அம்புகளைப் பூட்டி, அரக்கர்களை நோக்கிச் செலுத்தினார். (7)

வில்லை நன்றாக வளைத்து விடப்பட்டவைகளும், வஜ்ராயுதத்தின் பேராற்றல் கொண்டவைகளும், மனோவேகத்துடன் செல்லக் கூடியவைகளுமான நூறாயிரக்கணக்கான கூர்மையான பாணங்களால் அவர்களைப் பிளந்து தள்ளினார், மகாவிஷ்ணு. பெருங்காற்று, மேகத்தையும் மழையையும் துரத்தி விடுவதைப் போல, அம்புமாரிகளால் அரக்கர்களைச் சிதறவடித்த புருஷோத்தமனான நாராயணன், மகிமை மிக்க 'பாஞ்சஜன்யம்' என்ற சங்கத்தை எடுத்து ஊதினார். (8,9)

நீரில் தோன்றிய மகோன்னதமான சங்கை, நாராயணன் முழு மூச்சுடன் ஊதியபோது எழுந்த பயங்கரமான பேரொலியால் மூன்று உலக மக்களும் ஆடிப்போனார்கள். காட்டில், மதங்கொண்ட யானைகள் சிங்கத்தின் குரலைக் கேட்டதுமே எப்படிப் பதறிப் போகுமோ, அதேபோல, சங்குகளின் தலைவன் போன்ற பாஞ்சஜன்யத்தின் ஒலியைக் கேட்டதுமே அரக்கர்கள் பதறிப் போனார்கள். (10,11)

சங்கத்வனியைக் கேட்டதும் அச்சத்தால் ஆற்றலையும் துணிச்சலையும் இழந்த குதிரைகள் போர்க்களத்தில் நிற்கக்கூட முடியவில்லை; யானைகள் மதம் இறங்கிப் போயின; தேர்வீரர்கள் தேரிலிருந்து கீழே விழுந்தார்கள். சார்ங்கம் என்ற வில்லிலிருந்து விடப்பட்டவைகளும், வஜ்ரம் போல் கூர்மையான தலைப்பகுதியைக் கொண்டவைகளும், சிறகுகள் கட்டப்பட்டவைகளுமான பாணங்கள், அரக்கர்களைத் துளைத்துச் சென்று பூமிக்குள் புகுந்து கொண்டன. (12,13)

Koviloor Digital Library

பி$_4$த்$_3$யமாநா: ஶரை: ஸங்க்$_2$யே நாராயணகரச்யுதை: ।
நிபேதூ ராக்ஷஸா பூ$_4$மௌ ஶைலா வஜ்ரஹதா இவ ॥ (14)

வ்ரணாநி பரக$_3$ாத்ரேப்$_4$யோ விஷ்ணுசக்ரக்ருதாநி வை ।
அஸ்ருக் க்ஷரந்தி த$_4$ாராபி$_4$: ஸ்வர்ணத$_4$ாரா இவாசலா: ॥ (15)

ஶங்க$_2$ராஜரவஶ்சாபி ஶார்ங்க$_3$சாபரவஸ்தத$_2$ா ।
ராக்ஷஸாநாம் ரவாம்ஶ்சாபி க்$_3$ரஸதே வைஷ்ணவோ ரவ: ॥ (16)

தேஷாம் ஶிரோத$_4$ராந் தூ$_4$தாஞ்ஶரத்$_4$வஜத$_4$நூம்ஷி ச ।
ரத$_2$ாந் பதாகாஸ்தூணீராம்ஶ்சிச்சே$_2$த$_3$ ஸ ஹரி: ஶரை: ॥ (17)

ஸூர்யாதி$_3$வ கரா கே$_4$ாரா ஊர்மய: ஸாக$_3$ராதி$_3$வ ।
பர்வதாதி$_3$வ நாகே$_3$ந்த்$_3$ரா த$_4$ாரௌக$_4$ா இவ சாம்பு$_3$த$_3$ாத் ॥ (18)

தத$_2$ா ஶார்ங்க$_3$விநிர்முக்தா: ஶரா நாராயணேரிதா: ।
நிர்த$_4$ாவந்தீஷவஸ்தூர்ணம் ஶதஶோऽத$_2$ ஸஹஸ்ரஶ: ॥ (19)

ஶரபே$_4$ண யத$_2$ா ஸிம்ஹா: ஸிம்ஹேந த்$_3$விரத$_3$ா யத$_2$ா ।
த்$_3$விரதே$_3$ந யத$_2$ா வ்யாக்$_4$ரா வ்யாக்$_4$ரேண த்$_3$வீபிநோ யத$_2$ா ॥ (20)

த்$_3$வீபிநேவ யத$_2$ா ஶ்வாந: ஶுநா மார்ஜாரகா யத$_2$ா ।
மார்ஜாரேண யத$_2$ா ஸர்பா: ஸர்பேண ச யத$_2$ாக$_2$வ: ॥ (21)

தத$_2$ா தே ராக்ஷஸா: ஸர்வே விஷ்ணுநா ப்ரப$_4$விஷ்ணுநா ।
த்$_3$ரவந்தி த்$_3$ராவிதாஶ்சாந்யே ஶாயிதாஶ்ச மஹீதலே ॥ (22)

ராக்ஷஸாநாம் ஸஹஸ்ராணி நிஹத்ய மது$_4$ஸூத$_3$ந: ।
வாரிஜம் பூரயாமாஸ தோயத$_3$ம் ஸுரராடி$_3$வ ॥ (23)

நாராயணஶரத்ரஸ்தம் ஶங்க$_2$நாத$_3$ஸுவிஹ்வலம் ।
யயௌ லங்காமபி$_4$முக$_2$ம் ப்ரப$_4$க்$_3$நம் ராக்ஷஸம் ப$_3$லம் ॥ (24)

ப்ரப$_4$க்$_3$நே ராக்ஷஸப$_3$லே நாராயணஶராஹதே ।
ஸுமாலீ ஶரவர்ஷேண நிவவார ரணே ஹரிம் ॥ (25)

ஸ து தம் ச$_2$ாத$_3$யாமாஸ நீஹார இவ ப$_4$ாஸ்கரம் ।
ராக்ஷஸா: ஸத்த்வஸம்பந்நா: புநர்தை$_4$ர்யம் ஸமாத$_3$து$_4$: ॥ (26)

அத$_2$ ஸோऽப்$_4$யபதத்$_3$ரோஷாத்$_3$ராக்ஷஸோ ப$_3$லத$_3$ர்பித: ।
மஹாநாத$_3$ம் ப்ரகுர்வாணோ ராக்ஷஸாஞ்ஜீவயந்நிவ ॥ (27)

உத்க்ஷிப்ய லம்ப$_3$ாப$_4$ரணம் து$_4$ந்வந் கரமிவ த்$_3$விப: ।
ரராஸ ராக்ஷஸோ ஹர்ஷாத் ஸதடி$_3$த்தோயதே$_3$ா யத$_2$ா ॥ (28)

Koviloor Digital Library

வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்ட மலைகள் தரையில் சரிந்து விழுவதைப் போல, போர்க்களத்தில் ஸ்ரீமந்நாராயணனின் திருக்கரங்களால் விடப்பட்ட பாணங்களால் தாக்கப்பட்ட அரக்கர்கள் தரையில் சாய்ந்து விழுந்தார்கள். (14)

மலைகளின் உச்சியிலிருந்து காவிக்கல் கரைந்து ஒழுகுவதைப் போல, விஷ்ணுவினுடைய சக்ராயுதத்தால் தாக்கப்பட்டு புண்ணாகிப் போன அரக்கர்களின் உடலிலிருந்து இரத்தம் பெருகி ஓடிற்று. (15)

சங்குகளின் அரசன் போன்ற பாஞ்சஜன்யத்தின் ஒலி, சார்ங்க வில்லின் நாணொலி, அரக்கர்களின் அட்டகாசக் குரல் – இவைகள் எல்லாம் விஷ்ணுவின் வீராவேசக் குரலில் மங்கிப் போய்விட்டன. (16)

பகவான் ஹரி நாராயணன், அரக்கர்களுடைய ஆடிக்கொண்டிருந்த தலைகள், அம்புகள், கொடிகள், விற்கள், தேர்கள், பதாகைகள், அம்புறாத்தூணிகள் முதலியவற்றை அம்புகளால் அறுத்துத் தள்ளினார். (17)

சூரியனுடைய வெம்மையான கிரணங்கள் போலவும், பெருங்கடலில் அயராது வீசும் அலைகள் போலவும், மலையிலிருந்து தலைதூக்கும் பெருநாகங்கள் போலவும், மேகத்திலிருந்து பொழியும் தூறல் கூட்டம் போலவும், சார்ங்கம் என்ற வில்லிலிருந்து நூறாயிரக்கணக்கான பாணங்கள், நாராயணனால் செலுத்தப்பட்டு வேகமாக வெளிப்போந்தன. (18,19)

சரபம் என்ற கொடிய காட்டு விலங்கைக் கண்டு சிங்கம், சிங்கத்தைக் கண்டு யானை, யானையைக் கண்டு புலி, புலியைக் கண்டு சிறுத்தை, சிறுத்தையைக் கண்டு நாய், நாயைக் கண்டு பூனை, பூனையைக் கண்டு பாம்பு, பாம்பைக் கண்டு எலி பயந்தோடுவதைப் போல, பேராற்றல் படைத்த பகவான் விஷ்ணுவின் தாக்குதலைத் தாங்கமுடியாத இராக்கதர்கள் ஓடியே போனார்கள்; ஓடிப்போனவர்களில் பலர் தரையில் சாய்ந்தார்கள். (20–22)

மேகங்களின் தலைவனான இந்திரன், மேகத்தை நீரால் நிரப்புவதைப் போல, மதுசூதனரான நாராயணன் ஆயிரக்கணக்கான அரக்கர்களைக் கொன்று, சங்கத்தை வெற்றி முழக்கத்தினால் நிரப்பினார். (23)

நாராயணனுடைய அம்புமாரியைத் தாங்கமாட்டாமல் அச்சங்கொண்டவர்களும், (பாஞ்சஜன்ய) சங்கின் ஒலியினால் மிகவும் கலவரம் அடைந்தவர்களுமான அரக்கப் படையினர், முறியடிக்கப்பட்டவர்களாக இலங்கையை நோக்கி ஓடினார்கள். (24)

போர்க்களத்தில், ஸ்ரீமந் நாராயணனுடைய அம்புகளால் தாக்கப்பட்டு அரக்கர்படை ஓடத் தொடங்கியதும், அம்புமாரி பொழிந்து விஷ்ணுவை முன்னேறவிடாமல் தடுத்து நிறுத்தினான், சுமாலி. (25)

பனிமூட்டம் சூரியனை மறைப்பதைப் போல, அவன் அவரை (அம்புகளால்) மூடினான். அதனால், வீரம் மிக்கவர்களான அரக்கர்கள் மறுபடியும் தைரியம் அடைந்தார்கள். (26)

பலத்தினால் கொழுப்படைந்திருந்த அந்த அரக்கன், உரத்த குரலில் கர்ஜனை செய்து அரக்கர்களுக்குப் புத்துயிர் அளிப்பதுபோல, அவர்மீது கோபத்துடன் தாக்குதல் நடத்தினான். (27)

ஒரு யானை, தும்பிக்கையை உயர்த்தி ஆட்டுவதைப் போல, மின்னல்களுடன் கூடிய மேகம் போன்று, அணிகலன்கள் ஒளிவீசும் தன் கையை மேலே உயரத் தூக்கி மகிழ்ச்சியுடன் ஆரவாரித்தான். (28)

Koviloor Digital Library

ஸுமாலேர்நர்த$_3$தஸ்தஸ்ய ஶிரோ ஜ்வலிதகுண்ட$_3$லம் ।
சிச்சே$_2$த$_3$ யந்துரஶ்வாஶ்ச ப்$_4$ராந்தாஸ்தஸ்ய து ராக்ஷஸ: ॥ (29)

தைரஶ்வைர்ப்$_4$ராம்யதே ப்$_4$ராந்தை: ஸுமாலீ ராக்ஷஸேஶ்வர: ।
இந்த்$_3$ரியாஶ்வை: பரிப்$_4$ராந்தைர்த்$_4$ருதிஹீநோ யதா$_2$ நர: ॥ (30)

ததோ விஷ்ணும் மஹாபா$_3$ஹும் ப்ராபதந்தம் ரணாஜிரே ।
ஹ்ருதே ஸுமாலேரஶ்வைஶ்ச ரதே$_2$ விஷ்ணுரதா$_2$ம் ப்ரதி ॥
மாலீ சாப்$_4$யத்$_3$ரவத்$_3$யுக்த: ப்ரக்$_3$ருஹ்ய ஸஶரம் த$_4$நு: ॥ (31)

மாலேர்த$_4$நுஶ்ச்யுதா பா$_3$ணா: கார்தஸ்வரவிபூ$_4$ஷிதா: ।
விவிஶுர்ஹரிமாஸாத்$_3$ய க்ரௌஞ்சம் பத்ரரதா$_2$ இவ ॥ (32)

அர்த்$_3$யமாந: ஶரை: ஸோऽத$_2$ மாலிமுக்தை: ஸஹஸ்ரஶ: ।
சுக்ஷுபே$_4$ ந ரணே விஷ்ணுர்ஜிதேந்த்$_3$ரிய இவாதி$_4$பி$_4$: ॥ (33)

அத$_2$ மௌர்வீஸ்வநம் ஶ்ருத்வா ப$_4$க$_3$வாந் பூ$_4$தபா$_4$வந: ।
மாலிநம் ப்ரதி பா$_3$ணௌகா$_4$ந் ஸஸர்ஜாரிநிஷூ$_2$த$_3$ந: ॥ (34)

தே மாலிதே$_3$ஹமாஸாத்$_3$ய வஜ்ரவித்$_3$யுத்ப்ரபா$_4$: ஶரா: ।
பிப$_3$ந்தி ருதி$_4$ரம் தஸ்ய நாகா$_3$ இவ ஸுதா$_4$ரஸம் ॥ (35)

மாலிநம் விமுக$_2$ம் க்ருத்வா ஶங்க$_2$சக்ரக$_3$தா$_3$த$_4$ர: ।
மாலிமௌலிம் த்$_4$வஜம் சாபம் வாஜிநஶ்சாப்யபாதயத் ॥ (36)

விரத$_2$ஸ்து க$_3$தா$_3$ம் க்$_3$ருஹ்ய மாலீ நக்தஞ்சரோத்தம: ।
ஆபுப்லுவே க$_3$தா$_3$பாணிர்கி$_3$ர்யக்$_3$ராதி$_3$வ கேஸரீ ॥
க$_3$த$_3$யா க$_3$ருடே$_3$ஶாநமீஶாநமிவ சாந்தக: ॥ (37)

லலாடதே$_3$ஶேऽப்$_4$யஹநத்$_3$வஜ்ரேணேந்த்$_3$ரோ யதா$_2$சலம் ।
க$_3$த$_3$யாபி$_4$ஹதஸ்தேந மாலிநா க$_3$ருடோ$_3$ ப்$_4$ருஶம் ॥ (38)

ரணாத் பராங்முக$_2$ம் தே$_3$வம் க்ருதவாந் வேத$_3$நாதுர: ।
பராங்முகே$_2$ க்ருதே தே$_3$வே மாலிநா க$_3$ருடே$_3$ந வை ॥ (39)

உத$_3$திஷ்ட$_2$ந்மஹாஞ்ஶப்$_3$தோ$_3$ ரக்ஷஸாமபி$_4$நர்த$_3$தாம் ।
ரக்ஷஸாம் ரவதாம் ராவம் ஶ்ருத்வா ஹரிஹயாநுஜ: ॥ (40)

திர்யகா$_3$ஸ்தா$_2$ய ஸங்க்ருத்$_3$த$_4$: பக்ஷீஶே ப$_4$க$_3$வாந் ஹரி: ।
பராங்முகே$_2$ऽப்யுத்ஸஸர்ஜ மாலேஶ்சக்ரம் ஜிகா$_4$ம்ஸயா ॥ (41)

தத் ஸூர்யமண்ட$_3$லாபா$_4$ஸம் ஸ்வபா$_4$ஸா பா$_4$ஸயந்நப$_4$: ।
காலசக்ரநிப$_4$ம் சக்ரம் மாலே: ஶீர்ஷமபாதயத் ॥ (42)

Koviloor Digital Library

பிரகாசமான குண்டலங்கள் அசைந்தாடும் சுமாலியினுடைய தேர்ப்பாகனின் தலையை, அவர் (விஷ்ணு) வெட்டித் தள்ளினார். அதனால், கட்டுப்பாடிழந்த இராக்கதனின் தேர்க்குதிரைகள் தறிகெட்டு ஓடத் தொடங்கின. (29)

மன உறுதி இல்லாத ஒரு மனிதன், புலனுகர் பொருள்களில் உழன்று தடுமாறுவதைப் போல அரக்க மன்னன் சுமாலி, தாறுமாறாகத் திரியத் தொடங்கிய குதிரைகள் வசப்பட்டு நிலைகெட்டுத் திரிந்தான். (30)

சுமாலியினுடைய தேர்க்குதிரைகள், விஷ்ணுவின் வாகனமான கருடனை நோக்கி தேரை இழுத்துச் சென்றன. அப்போது (சகோதரனான) மாலி, கையில் வில்லையும் அம்பையும் ஏந்திக்கொண்டு, போர்க்களத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் தோள்வலி மிக்கவரான விஷ்ணுவை நோக்கி எதிர்த்தோடினான். (31)

தங்க வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்த மாலியின் வில்லிலிருந்து விடுபட்ட பாணங்கள், கிரௌஞ்சமலையின் பொந்துகளில் பட்சிகள் புகுந்து கொள்வதைப் போல, மகாவிஷ்ணுவின் சரீரத்திற்குள் சென்று மறைந்தன. (32)

புலன்களை வசப்படுத்திய ஒருவன் மனோவியாதியால் துன்பப்படாததைப் போல, மாலியால் செலுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான அம்புகளால் தாக்கப்பட்டாலும் விஷ்ணு எவ்வித துன்பத்தையும் அடையவில்லை. (33)

ஐம்பெரும் பூத வடிவினரான எதிரிகளை மாய்க்கவல்ல பகவான், மாலியின் நாணொலியைக் கேட்டு, அவனை நோக்கி இடைவிடாது பாணங்களைச் செலுத்தினார். (34)

வஜ்ரத்தின் வலிமையும் மின்னலின் ஒளியையும் பெற்றிருந்த அந்த அம்புகள், மாலியின் உடலுக்குள் புகுந்து, கருடனால் கொண்டுவரப்பட்ட அமிழ்தத்தை சர்ப்பங்கள் பருகுவதைப் போல, அவன் ரத்தத்தைப் பருகின. (35)

சங்கு–சக்கரம் தரித்த மகாவிஷ்ணு, மாலியை ஒதுக்கிவிட்டு, அவனுடைய தலைப்பாகை, கொடி, வில் ஆகியவற்றை அழித்து, பின் குதிரைகளையும் கொன்று வீழ்த்தினார். (36)

ரதத்தை இழந்தபின் கதையை ஏற்று, மலையுச்சியிலிருந்து சிங்கம் பாய்ந்து வருவதைப் போல குதித்தோடி வந்தான், இராக்கதர்களில் சிறந்தவனான மாலி. (37)

(ஒரு புராணக் கதையின்படி) மகாதேவனின் சிரசில் யமதேவன் தாக்கியதைப் போலவும், ஒரு மலையை வஜ்ராயுதத்தால் இந்திரன் தாக்கியதைப் போலவும், பறவைகளின் தலைவனான கருடனின் முகத்தில், தன் கதையினால் பலமாகத் தாக்கினான், மாலி. (38)

மாலியின் கதாயுதத்தால் அடிபட்ட கருடன் வேதனையைத் தாங்கமாட்டாமல், தன் மேல் ஆரோகணித்திருந்த விஷ்ணுவுடன் போர்க்களத்திலிருந்து விலகிச் சென்றார். (39)

கருடனுடன் நாராயணனும் போர்க்களத்தை விட்டுச் சென்றதைக் கண்டு (அவர், மாலியுடன் போரிட இயலாமல் பின்வாங்கிச் செல்கிறார் என்று எண்ணிய) அரக்கர்கள், பெருங்குரல் எழுப்பி ஆரவாரம் செய்தார்கள். (40)

பறவைகளின் தலைவனின்மேல் வீற்றிருந்த விஷ்ணு, அரக்கர்களின் சிம்மநாதத்தைக் கேட்டு கோபங்கொண்டு, போர்க்களத்திற்கு எதிராக முகம் திரும்பியிருந்தாலும், மாலியைக் கொல்லும் நோக்கத்துடன், சுதர்சன சக்கரத்தை (அவன் மீது) விடுத்தார். (41)

சூரியமண்டலம் போல் பேரொளி வீசுவதும் காலசக்கரம் போல் எதிர்கொள்ள முடியாததுமான அந்தச் சக்கராயுதம், தன் பிரகாசத்தினால் வான்வெளியைப் பிரகாசப்படுத்திக் கொண்டு, (மிக வேகமாகச் சென்று) மாலியினுடைய தலையை வெட்டி வீழ்த்தியது. (42)

Koviloor Digital Library

தச்சி$_2$ரோ ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய சக்ரக்ருத்தம் விபீ$_4$ஷணம் ।
பபாத ருதி$_4$ரோத்$_3$க$_3$ாரி புரா ராஹுஶிரோ யதா$_2$ ॥ (43)

தத: ஶரை: ஶஸம்ஹ்ருஷ்டை: ஸர்வப்ராணஸமீரித: ।
ஸிம்ஹநாத$_3$ரவோந்முக்த: ஸாது$_4$ தே$_3$வேதி வாதி$_3$பி$_4$: ॥ (44)

மாலிநம் நிஹதம் த்$_3$ருஷ்ட்வா ஶமாலீ மால்யவாநபி ।
ஸப$_3$லௌ ஶோகஸந்தப்தௌ லங்காமேவ ப்ரதா$_4$விதௌ ॥ (45)

க$_3$ருட$_3$ஸ்து ஸமாஶ்வஸ்த: ஸம்நிவ்ருத்ய யதா$_2$ புரா ।
ராக்ஷஸாந் த்$_3$ராவயாமாஸ பக்ஷவாதேந கோபித: ॥ (46)

சக்ரக்ருத்தாஸ்யகமலா க$_3$தா$_3$ஸஞ்சூர்ணிதோரஸ: ।
லாங்க$_3$லக்$_3$லபிதக்$_3$ரீவா முஸலைர்பி$_4$ந்நமஸ்தகா: ॥ (47)

கேசிச்சைவாஸிநா சி$_2$ந்நாஸ்ததா$_2$ந்யே ஶரபீடி$_3$தா: ।
நிபேதுரம்ப$_3$ராத்தூர்ணம் ராக்ஷஸா: ஸாக$_3$ராம்ப$_4$ஸி ॥ (48)

நாராயணோ ப$_3$ாணவராஶநீபி$_4$ர்வித$_3$ாரயாமாஸ த$_4$நுர்விமுக்தை: ।
நக்தஞ்சராந் முக்தவிதூ$_4$தகேஶாந் யதா$_2$ஶநீபி$_4$: ஸதடி$_3$ந்மஹாப்$_4$ரா: ॥ (49)

பி$_2$ந்நாதபத்ரம் பதமாநமஸ்த்ரம் ஶரைரபத்$_4$வஸ்தவிநீதவேஷம் ।
விநி:ஸ்ருதாந்த்ரம் ப$_4$யலோலநேத்ரம் ப$_3$லம் ததுந்மத்ததரம் ப$_3$பூ$_4$வ ॥ (50)

ஸிம்ஹார்தி$_3$தாநாமிவ குஞ்ஜராணாம்
நிஶாசராணாம் ஸஹகுஞ்ஜராணாம் ।
ரவாஶ்ச வேக$_3$ாஶ்ச ஸமம் ப$_3$பூ$_4$வு:
புராணஸிம்ஹேந விமர்தி$_3$தாநாம் ॥ (51)

தே வார்யமாணா ஹரிப$_3$ாணஜாலை: ஸ்வப$_3$ாணஜாலாநி ஸமுத்ஸ்ருஜந்த: ।
தா$_4$வந்தி நக்தஞ்சரகாலமேகா$_4$ வாயுப்ரபி$_4$ந்நா இவ காலமேகா$_4$: ॥ (52)

சக்ரப்ரஹாரைர்விநிக்ருத்தஶீர்ஷா:
ஸஞ்சூர்ணிதாங்க$_3$ாஶ்ச க$_3$தா$_3$ப்ரஹாரை: ।
அஸிப்ரஹாரைர்த்$_3$விவிதா$_4$ விபி$_4$ந்நா:
பதந்தி ஶைலா இவ ராக்ஷஸேந்த்$_3$ரா: ॥ (53)

விலம்ப$_3$மாநைர்மணிஹாரகுண்ட$_3$லைர்நிஶாசரைர்நீலப$_3$லாஹகோபமை: ।
நிபாத்யமாநைர்த$_3$த்$_3$ருஶே நிரந்தரம் நிபாத்யமாநைரிவ நீலபர்வதை: ॥ (54)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஸப்தம: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

சக்கரத்தினால் வெட்டப்பட்ட அரக்கத்தலைவன் மாலியின் பயங்கரமான தோற்றமுடைய தலை, முன்னொரு காலத்தில் வெட்டப்பட்ட ராகுவின் தலைபோல் இரத்தத்தைப் பெருகவிட்டுக் கொண்டு தரையில் விழுந்தது. (43)

அப்போது மிகவும் மகிழ்ச்சியடைந்த தேவர்கள், தங்கள் சக்தி முழுவதையும் திரட்டி, ''ஐயனே! வாழ்க! வெல்க!'' என்று பேராரவாரம் செய்தார்கள். (44)

மாலி கொல்லப்பட்டதைக் கண்டதும் சுமாலியும் மால்யவானும், சோகம் மிகுந்தவர்களாக, படைகளுடன் இலங்கையை நோக்கி ஓடிச் சென்றார்கள். (45)

கருடனும் வலி நீங்கி அமைதி அடைந்தவராக, முன்னர் இருந்த இடத்திற்குத் திரும்பி வந்து, கோபத்துடன் சிறகுகளின் பெருங்காற்றினால் அரக்கர்களை ஓட்டித் துரத்தினார். (46)

தண்டிலிருந்து தாமரை வெட்டப்படுவதைப் போல (வெகு எளிதாக) அரக்கர்களின் தலைகள் சக்கரத்தினால் வெட்டப்பட்டன; கதையினால் மார்புகள் தூள்தூளாக்கப்பட்டன; கொழுமுனையினால் கழுத்துகள் கிழிக்கப்பட்டன; உலக்கைகளால் தலைகள் பிளக்கப்பட்டன; வாளினால் பலர் வெட்டி வீழ்த்தப்பட்டார்கள்; மற்றும் பலர், அம்புமாரியால் தாக்கப்பட்டார்கள். இவ்வாறு, அங்கங்கள் சிதைக்கப்பட்ட அரக்கர்கள், மேலேயிருந்து கடல்நீரில் விழுந்தார்கள். (47,48)

மின்னல்களுடன் கூடிய பெருமேகங்கள் இடிகளினால் பேரழிவை உண்டாக்குவதைப் போல, தன் வில்லிலிருந்து செலுத்தப்பட்ட வஜ்ராயுதத்திற்கு நிகரான உன்னத பாணங்களால் தலைவிரிகோலத்துடனிருந்த அரக்கர்களைத் துளைத்தெடுத்தார், நாராயணன். (49)

ஸ்ரீமந்நாராயணனின் அம்புகளால் அரக்கப்படை வீரர்களின் வேஷங்கள் கலைந்தன; குடைகள் தகர்க்கப்பட்டன; அஸ்திர–சஸ்திரங்கள் கைகளிலிருந்து நழுவி விழுந்தன; குடல்கள் வெளியே வந்தன; கண்கள், பயத்தால் கலங்கிப் போயின; படை முழுவதும் பித்துப்பிடித்தாற்போல் ஆயிற்று. (50)

சிங்கத்தினால் தாக்கப்பட்ட யானைகள் வேகமாக ஓடிக்கொண்டே அலறுவதைப் போலவும், முன்னர் நரசிம்மாவதார காலத்தில் ஹிரண்யகசிபு மாய்க்கப்பட்டபோது அரக்கர்கள் கதறியதைப் போலவும், இப்போதும் அரக்கர்களின் ஓட்டமும் அலறலும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன. (51)

நாராயணனின் அம்புப் பொழிவினால் தாக்கப்பட்ட அவர்கள், தத்தம் அம்புகளைக் கீழே போட்டுவிட்டு, பெருங்காற்றினால் சிதறடிக்கப்பட்ட மாரிக்கால மேகங்கள் போல, அரக்கர்களான கரிய மேகங்கள் சிதறி ஓடின. (52)

சக்கரத்தினால் வெட்டப்பட்ட தலைகளுடனும், கதைத் தாக்குதலால் சிதைக்கப்பட்ட அங்கங்களுடனும், கத்தி வீச்சினால் பிளக்கப்பட்ட உடல்களுடனும் இராக்கத வீரர்கள், வெட்டப்பட்ட மலைகள் போல் கீழே விழுந்தார்கள். (53)

கறுத்த மேகங்களைப் போன்ற அரக்கர்களின் கழுத்தில் நீலமணி மாலைகளும், செவிகளில் குண்டலங்களும் தொங்கிக் கொண்டிருந்தன. அவ்விடத்தில், சிறு இடைவெளிகூட இல்லாமல் அவர்களுடைய சடலங்கள் நிறைந்திருந்தன. அந்தக் காட்சி, நீலமணி மலைகளே தரையில் வீழ்ந்து கிடப்பதைப் போல் இருந்தது. (54)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஏழாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

அஷ்டம: ஸர்க3:

ஸுமால்யாதி3பராஜய:

ஹந்யமாநே ப3லே தஸ்மிந் பத்3மநாபே4ந ப்ருஷ்ட2த: ।
மால்யவாந் ஸம்நிவ்ருத்தோऽத2 வேலாமேத்ய இவார்ணவ: ॥ (1)

ஸம்ரக்தநயந: கோபாச்சலந்மௌலிர்நிஶாசர: ।
பத்3மநாப4மித3ம் ப்ராஹ வசநம் புருஷோத்தமம் ॥ (2)

நாராயண ந ஜாநீஷே க்ஷத்ரத4ர்மம் புராதநம் ।
அயுத்3த4மநஸோ பீ4தாநஸ்மாந் ஹம்ஸி யதே2தர: ॥ (3)

பராங்முக2வத4ம் பாபம் ய: கரோத்யஸுரேதர: ।
ஸ ஹந்தா ந க3த: ஸ்வர்க3ம் லப4தே புண்யகர்மணாம் ॥ (4)

யுத்3த4ஶ்ரத்3தா4த2வா தேऽஸ்தி ஶங்க2சக்ரக3தா3த4ர ।
அஹம் ஸ்தி2தோऽஸ்மி பஶ்யாமி ப3லம் த3ர்ஶய யத்தவ ॥ (5)

மால்யவந்தம் ஸ்தி2தம் த்3ருஷ்ட்வா மால்யவந்தமிவாசலம் ।
உவாச ராக்ஷஸேந்த்3ரம் தம் தே3வராஜாநுஜோ ப3லீ ॥ (6)

யுஷ்மத்தோ ப4யபீ4தாநாம் தே3வாநாம் வை மயாப4யம் ।
ராக்ஷஸோத்ஸாத3நம் த3த்தம் ததே3தத3நுபால்யதே ॥ (7)

ப்ராணைரபி ப்ரியம் கார்யம் தே3வாநாம் ஹி ஸதா3 மயா ।
ஸோऽஹம் வோ நிஹநிஷ்யாமி ரஸாதலக3தாநபி ॥ (8)

தே3வதே3வம் ப்3ருவாணம் தம் ரக்தாம்பு4ருஹலோசநம் ।
ஶக்த்யா பி3பே4த3 ஸங்க்ருத்3தோ4 ராக்ஷஸேந்த்3ரோ பு4ஜாந்தரே ॥ (9)

மால்யவத்3பு4ஜநிர்முக்தா ஶக்திர்க4ண்டாக்ருதஸ்வநா ।
ஹரேருரஸி ப3ப்4ராஜ மேக4ஸ்தே2வ ஶதஹ்ரதா3 ॥ (10)

ததஸ்தாமேவ சோத்க்ருஷ்ய ஶக்திம் ஶக்தித4ரப்ரிய: ।
மால்யவந்தம் ஸமுத்3தி3ஶ்ய சிக்ஷேபாம்பு3ருஹேக்ஷண: ॥ (11)

ஸ்கந்தோ3த்ஸ்ருஷ்டேவ ஸா ஶக்திர்கோ3விந்த3கரநி:ஸ்ருதா ।
காங்க்ஷந்தீ ராக்ஷஸம் ப்ராயாந்மாஹேந்த்3ரீவாஞ்ஜநாசலம் ॥ (12)

ஸா தஸ்யோரஸி விஸ்தீர்ணே ஹாரபா4ஸாவபா4ஸிதே ।
அபதத்3ராக்ஷஸேந்த்3ரஸ்ய கி3ரிகூட இவாஶநி: ॥ (13)

தயா பி4ந்நதநுத்ராண: ப்ராவிஶத்3விபுலம் தம: ।
மால்யவாந் புநராஶ்வஸ்தஸ்தஸ்தௌ2 கி3ரிரிவாசல: ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : எட்டு

சுமாலி முதலியோர் தோல்வி அடைதல்

(அகஸ்தியர் கூறுகிறார்—) புறங்காட்டி ஓடிக்கொண்டிருக்கும் அரக்கர் படையை பின்னாலிருந்து வெருட்ட ஆரம்பித்தார், மகாவிஷ்ணு. அப்போது, கரையைத் தொட்டுவிட்டுத் திரும்பும் அலையைப் போல, மால்யவான் திரும்பி வந்தான். (1)

அடக்கமுடியாத கோபத்தினால் அவனுடைய கண்கள் சிவந்துவிட்டன. தலையிலிருந்த மகுடம் ஆடிக்கொண்டிருந்தது. புருஷோத்தமரான பத்மநாபனிடம் அவன் (பின்வருமாறு) கூறினான்— (2)

''நாராயணா! உங்களுக்கு க்ஷத்திரிய தருமம் தெரியவில்லை என்று நினைக்கிறேன். போர் செய்வதைத் தவிர்த்து, அச்சத்துடன் ஓடிக்கொண்டிருக்கும் எங்கள் மீது, ஒரு சாமான்ய மனிதனைப் போல பின்னாலிருந்து தாக்குகிறீர்கள். (3)

இழிசெயல் புரியும் அசுரர்களைத் தவிர, போர்க்களத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருப்பவர்களைக் கொல்பவர், போரில் எதிர்நின்று போராடும் வீரனை வீழ்த்தும் அறக்கடமையைச் செய்தவர்கள் அடையும் தேவலோகத்தை அடையமாட்டார். (4)

சங்கு–சக்கரம்–கதை முதலியவைகளை அணிந்து கொண்டிருக்கும் தெய்வமே! இதோ, தங்கள் எதிரில் நான் நின்றுகொண்டிருக்கிறேன். உங்களுடைய பலத்தை என்னிடம் காட்டுங்கள், பார்த்துவிடுகிறேன்.'' (5)

மலையைப் போல் உறுதியாக நிற்கும் அரக்கமன்னன் மால்யவானைப் பார்த்து, இந்திரனின் இளவலும் ஆற்றல் மிக்கவருமான மகாவிஷ்ணு (பின்வருமாறு) கூறினார்— (6)

''உங்களைக் கண்டு திகில் கொண்டிருக்கும் தேவர்களுக்கு அபயம் அளித்து, உங்கள் எல்லோரையும் மாய்த்து ஒழிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன். அதைத்தான் இப்போது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன். தேவர்களுக்கு சுகம் கொடுக்கும் செயலை, என் உயிரைக் கொடுத்தேனும் நான் செய்யக்கடவன். அதனால் நீங்கள் ரஸாதலத்திற்குச் சென்று ஒளிந்து கொண்டாலும், உங்களைத் துரத்திக் கொண்டு வந்து உயிரைப் பறிப்பேன்.'' (7,8)

இவ்வாறு செந்தாமரைக்கண்ணரான மகாவிஷ்ணு சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அரக்கர் மன்னனான மால்யவான், சக்தி ஆயுதத்தை அவருடைய மார்பை நோக்கிச் செலுத்தினான். (9)

மால்யவானின் கையிலிருந்து விடப்பட்ட அது, மணியோசை எழுப்பிக் கொண்டவாறே சென்று பகவானின் மார்பில் புதைந்து, மேகத்தினிடையே ஒளிவீசும் மின்னல்போல் பிரகாசித்தது. சக்தியாயுதம் தரித்த கார்த்திகேயனிடம் பாசம் மிக்க கமலக்கண்ணரான அவர், அதே ஆயுதத்தைப் பிடுங்கி, மால்யவானை நோக்கிச் செலுத்தினார். (10,11)

கந்தப்பெருமானால் ஏவப்பட்ட சக்தியாயுதம் போல், கோவிந்தன் கையிலிருந்து விடுபட்ட அந்த சக்தி, அஞ்ஜனமலைமீது இந்திரனின் மகாவஜ்ரம் சென்று தாக்குவதைப் போல, அரக்கனை நோக்கிச் சென்று தாக்கியது. (12)

ஒரு மலைச்சிகரத்தில் இடி விழுவதைப் போல, மாலைகளால் பொலிவுற்ற அவனுடைய அகன்ற மார்பில் போய் விழுந்தது. அதனால், மால்யவானின் மார்புக்கவசம் பிளந்து போகவே, அவன் ஆழ்ந்த இருளில் மூழ்கினான் (மூர்ச்சை அடைந்தான்). பின்னர், தன்னைத் தேற்றிக் கொண்டு உறுதி குலையாத மலைபோல் எழுந்து நின்றான். (13,14)

Koviloor Digital Library

தத: கார்ஷ்ணாயஸம் ஶூலம் கண்டகைர்ப$_3$ஹுபி$_4$ர்வ்ருதம் ।
ப்ரக்$_3$ருஹ்யாப்$_4$யஹநத்$_3$தே$_3$வம் ஸ்தநயோரந்தரே த்$_3$ருட$_4$ம் ॥ (15)

ததை$_2$வ ரணரக்தஸ்து முஷ்டிநா வாஸவாநுஜம் ।
தாட$_3$யித்வா த$_4$நுர்மாத்ரமபக்ராந்தோ நிஶாசர: ॥ (16)

ததோऽம்ப$_3$ரே மஹாஞ்ஶப்$_3$த$_3$: ஸாது$_4$ ஸாத்$_4$விதி சோதி$_3$த: ।
ஆஹத்ய ராக்ஷஸோ விஷ்ணும் க$_3$ருட$_3$ம் சாப்யதாட$_3$யத் ॥ (17)

வைநதேயஸ்தத: க்ருத்$_3$த$_4$: பக்ஷவாதேந ராக்ஷஸம் ।
வ்யபோஹத்$_3$ப$_3$லவாந் வாயு: ஶுஷ்கபர்ணசயம் யதா$_2$ ॥ (18)

த்$_3$விஜேந்த்$_3$ரபக்ஷவாதேந த்$_3$ராவிதம் த்$_3$ருஶ்ய பூர்வஜம் ।
ஸுமாலீ ஸ்வப$_3$லை: ஸார்த$_4$ம் லங்காமபி$_4$முகோ$_2$ யயௌ ॥ (19)

பக்ஷவாதப$_3$லோத்$_3$தூ$_4$தோ மால்யவாநபி ராக்ஷஸ: ।
ஸ்வப$_3$லேந ஸமாக$_3$ம்ய யயௌ லங்காம் ஹ்ரியா வ்ருத: ॥ (20)

ஏவம் தே ராக்ஷஸாஸ்தேந ஹரிணா கமலேக்ஷண ।
ப$_3$ஹுஶ: ஸம்யுகே$_3$ ப$_4$க்$_3$நா ஹதப்ரவரநாயகா: ॥ (21)

அஶக்நுவந்தஸ்தே விஷ்ணும் ப்ரதியோத்$_3$து$_4$ம் ப$_4$யார்தி$_3$தா: ।
த்யக்த்வா லங்காம் க$_3$தா வஸ்தும் பாதாளம் ஸஹபத்நய: ॥ (22)

ஸுமாலிநம் ஸமாஸாத்$_3$ய ராக்ஷஸம் ரகு$_4$ஸத்தம ।
ஸ்தி$_2$தா: ப்ரக்$_2$யாதவீர்யாஸ்தே வம்ஶே ஸாலகடங்கடே ॥ (23)

யே த்வயா நிஹதாஸ்தே து பௌலஸ்த்யா நாம ராக்ஷஸா: ।
ஸுமாலீ மால்யவாந் மாலீ யே ச தேஷாம் புரஸ்ஸரா: ॥ (24)

ஸர்வே தேப்$_4$யோ மஹாபா$_4$கா$_3$ ராவணாத்$_3$ப$_3$லவத்தரா: ।
ந சாந்யோ ராக்ஷஸாந் ஹந்தா ஸுராரீந் தே$_3$வகண்டகாந் ॥ (25)

ருதே நாராயணம் தே$_3$வம் ஶங்க$_2$சக்ரக$_3$தா$_3$த$_4$ரம் ।
ப$_4$வாந்நாராயணோ தே$_3$வஶ்சதுர்பா$_3$ஹு: ஸநாதந: ॥ (26)

ராக்ஷஸாந் ஹந்துமுத்பந்நோ ஹ்யஜேய: ப்ரபு$_4$ரவ்யய: ।
நஷ்டத$_4$ர்மவ்யவஸ்தா$_2$தா காலே காலே ப்ரஜாகர: ॥
உத்பத்$_3$யதே த$_3$ஸ்யுவதே$_4$ ஶரணாக$_3$தவத்ஸல: ॥ (27)

ஏஷா மயா தவ நராதி$_4$ப ராக்ஷஸாநா–
முத்பத்திரத்$_3$ய கதி$_2$தா ஸகலா யதா$_2$வத் ।
பூ$_4$யோ நிபோ$_3$த$_4$ ரகு$_4$ஸத்தம ராவணஸ்ய
ஜந்மப்ரபா$_4$வமதுலம் ஸஸுதஸ்ய ஸர்வம் ॥ (28)

Koviloor Digital Library

கணக்கில்லாத முட்கள் நிறைந்த கரிய இரும்பினாலான சூலத்தை எடுத்து, விஷ்ணுவின் மார்பைக் குறிவைத்துப் பலமாகத் தாக்கினான். (15)

போர் செய்வதில் பெருவிருப்பம் கொண்ட அந்த அரக்கன், கைமுட்டியினால் அவரைக் குத்திவிட்டு, ஒரு வில்லளவு தூரம் பின்னால் சென்றான். (16)

அப்போது ஆகாயத்திலிருந்து, ''நன்று, நன்று'' என்ற உற்சாக ஒலி எழுந்தது. அந்த அரக்கன் விஷ்ணுவைத் தாக்கிய பின், கருடனையும் தாக்கினான். (17)

மிகவும் கோபங்கொண்ட கருடன், தன்னுடைய இறக்கைகளின் காற்று வீச்சினால், சருகாகிப் போன இலைக்குவியலைப் பெருங்காற்று சிதறடிப்பதைப் போல, (மால்யவானை) மேலே தூக்கி வீசினார். (18)

கருடனின் இறக்கைக் காற்றினால், தன் தமையன் தூக்கி எறியப்படுவதைக் கண்ட சுமாலி, தன் படைவீரர்களோடுகூட இலங்கையை நோக்கிச் சென்றான். (போர் செய்ய விரும்பாமல் பட்டணத்திற்குத் திரும்பிச் சென்றான்.) (19)

இறக்கைகளின் பெருங்காற்றினால் மேலே தூக்கி வீசப்பட்ட மால்யவானும், போர் செய்து தோல்வி அடைந்ததனால் வெட்கமடைந்தவனாக, தன் படைகளுடன் கூட இலங்கைக்குத் திரும்பிச் சென்றான். (20)

தாமரைக்கண்ணனே! இவ்வாறு பல தடவைகள் விஷ்ணுவினால் அரக்கத் தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். (21)

விஷ்ணுவை எதிர்த்துப் போரிடும் ஆற்றல் இல்லாததால் அச்சம் கொண்ட அரக்கர்கள், மனைவி–மக்களுடன் பாதாள லோகம் சென்று வசிக்கத் தொடங்கினார்கள். (22)

ரகுகுல திலகமே! ஸாலகடங்கடா பரம்பரையைச் சேர்ந்த மகாவீரர்களான அவர்கள், அரக்கன் சுமாலியினுடைய பாதுகாப்பில் வசிக்கத் தொடங்கினார்கள். (ஸாலகடங்கடா என்பது, மால்யவான் முதலியோரின் தந்தையின் அன்னையின் பெயர்.) (23)

இராமா! புலஸ்திய மரபைச் சேர்ந்த எந்த அரக்கர்களை நீ கொன்றாயோ, அவர்களைக் காட்டிலும் சுமாலி, மால்யவான், மாலி முதலியவர்கள் மிகவும் ஆற்றல் படைத்தவர்கள். (24)

பெரும்பேறு பெற்றவனே! அவர்கள் எல்லோரும் இராவணனைக் காட்டிலும் மிகவும் பலம் கொண்டவர்கள். தேவர்களுக்குப் பகைவர்களும், முள்ளைப் போல் துன்புறுத்திக் கொண்டிருந்தவர்களுமான மற்ற அரக்கர்களையும் சங்கு–சக்கரம் தாங்கும் தேவோத்தமரான ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறு யாராலும் கொல்ல முடியாது. (25)

(இராமா!) நீங்கள்தான் தொடக்கம் காண முடியாத நாராயணன்; தேவதேவர்; நாற்கரங்களை உடையவர்; எவராலும் வெல்ல முடியாத மிகப்பெரும் தலைவர்; அழிவற்றவர்; அரக்கர்களைக் கொல்வதற்காகத் தோன்றியுள்ளீர்கள். (26)

மக்களைப் படைப்பவர் தாங்கள்தான்; அறநெறிகள் கட்டுக்குலைந்து போகும் காலங்களில், தங்களிடம் அடைக்கலம்கோரி வருபவர்களைக் காப்பாற்றுவதற்காகவும், இழிகுலத்தோரை மாய்ப்பதற்காகவும் அவ்வப்போது அவதரிக்கிறீர்கள்! (27)

மாமன்னரே! அரக்கர்களின் தோற்றம் பற்றிய முழுச் செய்திகளையும் தங்களுக்குத் தெரிவித்துவிட்டேன். ரகுகுல மாணிக்கமே! இனி, இராவணன் மற்றும் அவனுடைய புதல்வர்களின் பிறப்பு, ஈடு–இணையற்ற பராக்கிரமம் பற்றிய செய்திகளைச் சொல்கிறேன், கேளுங்கள். (28)

Koviloor Digital Library

சிராத் ஸுமாலீ வ்யசரத்$_3$ரஸாதலம்
ஸ ராக்ஷஸோ விஷ்ணுப$_4$யார்தி$_3$தஸ்தத$_3$ா ।
புத்ரைஶ்ச பௌத்ரைஶ்ச ஸமந்விதோ ப$_3$லீ
ததஸ்து லங்காமவஸத்$_3$த$_4$நேஶ்வர: ॥ (29)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ அஷ்டம: ஸர்க$_3$: ॥

நவம: ஸர்க$_3$:

ராவணாத்$_3$யுத்பத்தி:

கஸ்யசித்த்வத$_2$ காலஸ்ய ஸுமாலீ நாம ராக்ஷஸ: ।
ரஸாதலாந்மர்த்யலோகம் ஸர்வம் வை விசசார ஹ ॥ (1)

நீலஜீமூதஸங்காஶஸ்தப்தகாஞ்சநகுண்ட$_3$ல: ।
கந்யாம் து$_3$ஹிதரம் க்$_3$ருஹ்ய விநா பத்$_3$மமிவ ஶ்ரியம் ॥ (2)

ராக்ஷஸேந்த்$_3$ர: ஸ து தத$_3$ா விசரந் வை மஹீதலம் ।
தத$_3$ாபஶ்யத் ஸ க$_3$ச்ச$_2$ந்தம் புஷ்பகேண த$_4$நேஶ்வரம் ॥
க$_3$ச்ச$_2$ந்தம் பிதரம் த்$_3$ரஷ்டும் புலஸ்த்யதநயம் விபு$_4$ம் ॥ (3)

தம் த்$_3$ருஷ்ட்வாமரஸங்காஶம் ஸ்வச்ச$_2$ந்த$_3$ம் தபநோபமம் ।
ரஸாதலம் ப்ரவிஷ்ட: ஸந் மர்த்யலோகாத் ஸவிஸ்மய: ॥ (4)

இத்யேவம் சிந்தயாமாஸ ராக்ஷஸாநாம் மஹாமதி: ।
கிம் க்ருதம் ஶ்ரேய இத்யேவம் வர்தே$_4$மஹி கத$_2$ம் வயம் ॥ (5)

அத$_2$ாப்$_3$ரவீத் ஸுதாம் ரக்ஷ: கைகஸீம் நாம நாமத: ।
புத்ரி ப்ரத$_3$ாநகாலோऽயம் யௌவநம் தேऽதிவர்ததே ॥
ப்ரத்யாக்$_2$யாநாச்ச பீ$_4$தைஸ்த்வம் ந வரை: ப்ரதிக்$_3$ருஹ்யஸே ॥ (6)

த்வத்க்ருதே ச வயம் ஸர்வே யந்த்ரிதா த$_4$ர்மபு$_3$த்$_3$த$_4$ய: ।
த்வம் ஹி ஸர்வகு$_3$ணோபேதா ஸ்ரீ: ஸாக்ஷாதி$_3$வ புத்ரிகே ॥ (7)

கந்யாபித்ருத்வம் து$_3$:க$_2$ம் ஹி ஸர்வேஷாம் மாநகாங்க்ஷிணாம் ।
ந ஜ்ஞாயதே ச க: கந்யாம் வரயேதி$_3$தி கந்யகே ॥ (8)

மாது: குலம் பித்ருகுலம் யத்ர சைவ ப்ரதீயதே ।
குலத்ரயம் ஸதா$_3$ கந்யா ஸம்ஶயே ஸ்த$_2$ாப்ய திஷ்ட$_2$தி ॥ (9)

ஸா த்வம் முநிவரம் ஶ்ரேஷ்ட$_2$ம் ப்ரஜாபதிகுலோத்$_3$ப$_4$வம் ।
ப$_4$ஜ விஶ்ரவஸம் புத்ரி பௌலஸ்த்யம் வரய ஸ்வயம் ॥ (10)

Koviloor Digital Library

பகவான் விஷ்ணுவிடம் இருந்த அச்சத்தினால் வெகு நீண்ட காலம், தன் புதல்வர்–பேரன்களுடன் ரஸாதலத்தில் வசித்து வந்தான், சுமாலி. இதனிடையில், நிதிகளின் தலைவனான குபேரன், இலங்கையைத் தன்வசப்படுத்திக் கொண்டு வாழத் தொடங்கினான். (29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஒன்பது

இராவணன் முதலியோர் பிறப்பு

சிறிது காலத்திற்குப் பின், கருமேக வண்ணங்கொண்டவனும் சுடர்விடும் தங்கத்தாலான குண்டலங்கள் அணிந்தவனுமான சுமாலி, செந்தாமரையில் தங்காத திருமகளைப் போன்ற அழகுபடைத்தத் தன் செல்வமகளை உடன் அழைத்துக் கொண்டு, ரஸாதலத்திலிருந்து புறப்பட்டு மண்ணுலகமெங்கும் சுற்றித் திரிந்தான். (1,2)

மண்ணுலகில் அவன் (சுமாலி) இவ்வாறு சுற்றி வந்து கொண்டிருந்தபோது, மிக்க மேன்மை பொருந்தியவனும் நவநிதிகளுக்கும் தலைவனுமான குபேரன், புலஸ்தியரின் புதல்வரும் தன்னுடைய தந்தையுமான விச்ரவஸைக் காண்பதற்காக, புஷ்பக விமானத்தில் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தான். (3)

அக்னிக்கு நிகரான ஒளியுடன் தேவர்களைப் போல் விளங்குபவனும் விருப்பப்படி சஞ்சரிப்பவனுமான அவனைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு, மக்கள் உலகிலிருந்து ரஸாதலத்திற்குச் சென்றான். (4)

அரக்கர்களாகிய நாம், என்ன காரியம் செய்தால் இவ்வளவு உன்னதத்தை அடையலாம்? எதைச் செய்தால் நமக்கு நலன் உண்டாகும்? என்று, பேரறிவு படைத்த அவன் (சுமாலி) சிந்திக்கத் தொடங்கினான். (5)

''மகளே! உன்னை (கன்னிகா)தானம் செய்து கொடுக்க வேண்டிய காலம், இது. உன் இளமையும் கழிந்து கொண்டிருக்கிறது. 'நாங்கள் மறுத்து விடுவோமோ?' என்ற பயத்தால், உன்னைப் பெண் கேட்டு எவரும் வரவில்லை. (6)

பெண்ணே! அறநெறிப்பட்ட நாங்கள் எல்லோரும் உன் விவாகம் குறித்து மிகவும் முயன்று கொண்டிருக்கிறோம். (உனக்கு ஏற்ற ஆண்மகன் கிடைக்கவேண்டுமே? என்று தேடிக் கொண்டிருக்கிறோம்.) ஏனென்றால், எல்லா நற்குணங்களும் நிரம்பிய திருமகளைப் போல் நீ விளங்குகிறாய். (7)

செல்வியே! கௌரவத்தை விரும்புகிறவர்களுக்கு ஒரு பெண்ணின் தகப்பன் என்ற நிலை மிகவும் பரிதாபகரமானது. ஏனென்றால், எப்படிப்பட்டவன் பெண்ணைக் கேட்டு வருவான்? – என்பதை முன்கூட்டியே நிர்ணயிக்க முடியாதல்லவா? (8)

ஒரு பெண், தன் தாயாரின் பரம்பரை, தந்தையின் பரம்பரை, தன் புகுந்த வீட்டின் பெருமை ஆகிய மூன்றையும் எப்போதும் கவலையில் ஆழ்த்தி வைக்கிறாள். (இவள் நற்பெயர் எடுக்கவேண்டுமே? என்ற கவலை மூன்று குலத்தினருக்கும் இருக்கிறது.) (9)

ஆகவே, மகளே! பிரஜாபதி குலத்தில் தோன்றியவரும் உயர்குணங்கள் நிரம்பியவரும் புலஸ்தியருடைய திருக்குமாரனுமான விச்ரவஸிடம் நீயாகவே சென்று, உன்னை மனைவியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டிக்கொள். (10)

Koviloor Digital Library

ஈத்3ருஶாஸ்தே ப4விஷ்யந்தி புத்ரா: புத்ரி ந ஸம்ஶய: ।
தேஜஸா பா4ஸ்கரஸமோ யாத்3ருஶோऽயம் த4நேஶ்வர: ॥ (11)

ஸா து தத்3வசநம் ஶ்ருத்வா கந்யகா பித்ருகௌ3ரவாத் ।
தத்ரோபாக3ம்ய ஸா தஸ்தௌ2 விஶ்ரவா யத்ர தப்யதே ॥ (12)

ஏதஸ்மிந்நந்தரே ராம புலஸ்த்யதநயோ த்3விஜ: ।
அக்3நிஹோத்ரமுபாதிஷ்ட2ச்சதுர்த்2 இவ பாவக: ॥ (13)

அவிசிந்த்ய து தாம் வேலாம் தா3ருணாம் பித்ருகௌ3ரவாத் ।
உபஸ்ருத்யாக்3ரதஸ்தஸ்ய சரணாதோ4முகீ2 ஸ்தி2தா ॥ (14)

விலிக2ந்தீ முஹுர்பூ4மிமங்கு3ஷ்டா2க்3ரேண பா4மிநீ ।
ஸ து தாம் ப்ரேக்ஷ்ய ஸுஶ்ரோணீம் பூர்ணசந்த்3ரநிபா4நநாம் ॥
அப்3ரவீத் பரமோதா3ரோ தீ3ப்யமாநாம் ஸ்வதேஜஸா ॥ (15)

ப4த்3ரே கஸ்யாஸி து3ஹிதா குதோ வா த்வமிஹாக3தா ।
கிம் கார்யம் கஸ்ய வா ஹேதோஸ்தத்த்வதோ ப்3ரூஹி ஶோப4நே ॥ (16)

ஏவமுக்தா து ஸா கந்யா க்ருதாஞ்ஜலிரதா2ப்3ரவீத் ।
ஆத்மப்ரபா4வேண முநே ஜ்ஞாதுமர்ஹஸி மே மதம் ॥ (17)

கிம் து மாம் வித்3தி4 ப்3ரஹ்மர்ஷே ஶாஸநாத் பிதுராக3தாம் ।
கைகஸீ நாம நாம்நாஹம் ஶேஷம் த்வம் ஜ்ஞாதுமர்ஹஸி ॥
ஸ து க3த்வா முநிர்த்4யாநம் வாக்யமேதது3வாச ஹ ॥ (18)

விஜ்ஞாதம் தே மயா ப4த்3ரே காரணம் யந்மநோக3தம் ।
ஸுதாபி4லாஷோ மத்தஸ்தே மத்தமாதங்க3கா3மிநி ॥ (19)

தா3ருணாயாம் து வேலாயாம் யஸ்மாத்த்வம் மாமுபஸ்தி2தா ।
ஶ்ருணு தஸ்மாத் ஸுதாந் ப4த்3ரே யாத்3ருஶாஞ்ஜநயிஷ்யஸி ॥ (20)

தா3ருணாந் தா3ருணாகாராந் தா3ருணாபி4ஜநப்ரியாந் ।
ப்ரஸவிஷ்யஸி ஸுஶ்ரோணி ராக்ஷஸாந் க்ரூரகர்மண: ॥ (21)

ஸா து தத்3வசநம் ஶ்ருத்வா ப்ரணிபத்யாப்3ரவீத்3வச: ।
ப4க3வந்நீத்3ருஶாந் புத்ராம்ஸ்த்வத்தோऽஹம் ப்3ரஹ்மவாதி3ந: ॥
நேச்சா2மி ஸுது3ராசாராந் ப்ரஸாத3ம் கர்துமர்ஹஸி ॥ (22)

கந்யயா த்வேவமுக்தஸ்து விஶ்ரவா முநிபுங்க3வ: ।
உவாச கைகஸீம் பூ4ய: பூர்ணேந்து3ரிவ ரோஹிணீம் ॥ (23)

பஶ்சிமோ யஸ்தவ ஸுதோ ப4விஷ்யதி ஶுபா4நநே ।
மம வம்ஶாநுரூப: ஸ த4ர்மாத்மா ச ப4விஷ்யதி ॥ (24)

Koviloor Digital Library

பெண்ணே! (நீ, உன் கண்களாலேயே பார்த்தாயே!) சூரியனைப் போல் ஒளிவீசும் நவநிதிகளுக்குத் தலைவனான குபேரனைப் போன்ற புதல்வர்கள் உனக்குப் பிறப்பார்கள் என்பதில் ஐயமில்லை.'' (11)

அதைக் கேட்ட கன்னிகையான கைகஸி, தந்தையின் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து, விச்ரவஸ் தவம் செய்து கொண்டிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள். (12)

இராமா! அந்தச் சமயத்தில், புலஸ்தியருடைய திருமகனாகிய அவர், பிரதோஷ கால அக்னிச் சடங்குகளை (மூன்று அக்னிகுண்டங்களிலும்) நிறைவேற்றிவிட்டு, நான்காவது அக்னிப் பிழம்பாக ஜொலித்துக் கொண்டிருந்தார். (13)

தந்தையிடம் வைத்திருந்த பெருமதிப்பினால், இது உடலுறவுக்கு ஒவ்வாத பயங்கரமான வேளை என்பதை மறந்து, அவரை நெருங்கி, அவர் எதிரில், அவர் பாதங்களைப் பார்த்தவாறே தலையைக் குனிந்து கொண்டு நின்றாள், கைகஸி. (14)

அந்த மங்கை, கால் கட்டைவிரலால் தரையில் கோடுகள் வரைந்து கொண்டிருந்தாள். வாளிப்பான உடற்கட்டும், தன் உள்ளொளியால் பிரகாசிப்பவளும், முழு நிலவைப் போன்ற முகமும் கொண்ட அவளைப் பார்த்து, நல்மனம் படைத்த அவர் (பின்வருமாறு) சொன்னார்— (15)

''நங்காய்! நீ எவருடைய பெண்? எங்கிருந்து நீ இங்கே வந்திருக்கிறாய்! திருவுடையாளே! இங்கே உனக்கு என்ன வேலை? எதன் பொருட்டு வந்திருக்கிறாய்? இவைகளுக்கெல்லாம் சரியான பதிலைக் கூறு.'' (16)

இதைக் கேட்ட அந்த மங்கை, கைகளைக் கூப்பிக்கொண்டு, ''முனிவரே! தங்களுடைய ஆன்மபலத்தினால், என் உள்ளக்கிடக்கையைத் தங்களால் அறியமுடியும். (17)

பிரும்மரிஷியே! ஆனாலும் சொல்கிறேன். தந்தையின் ஆணைப்படி நான் இங்கு வந்திருக்கிறேன். என் பெயர் கைகஸி. மற்றவைகளைத் தாங்கள் அறிவீர்கள்'' என்று கூறினாள். அந்த முனிவர், உண்முகமாகத் தியானம் செய்து (கைகஸியின் வருகைக்கான காரணத்தை உணர்ந்து) (பின்வருமாறு) கூறினார்— (18)

''சீலம் மிகுந்தவளே! உன் மனத்தில் உள்ள கருத்தை நான் அறிந்துகொண்டேன். யானைத்தலைவி போன்ற மென்னடையாளே! என் மூலமாக புதல்வர்களைப் பெற விரும்புகிறாய், நீ. மிகவும் பயங்கரமான (அறநூல்களால் தடுக்கப்பட்ட) வேளையில், நீ என்னிடம் வந்திருக்கிறாய். பெண்ணே! அதனால், எத்தகைய புதல்வர்களைப் பிறப்பிக்கப் போகிறாய் என்பதை அறிந்துகொள். (19,20)

பயங்கரமானவர்கள்; பயங்கரமான தோற்றமுடையவர்கள்; கொடூரமான செயல்கள் புரிபவர்களையே உறவாகக் கொண்டவர்கள்; குரூரமான செயல்களைப் புரியும் அரக்கர்களைப் பெற்றெடுக்கப் போகிறாய்.'' (21)

அவள், அவருடைய சொற்களைக் கேட்டவுடன், அவர் திருவடிகளில் வீழ்ந்து (பின்வருமாறு) கூறினாள்— ''பகவானே! ஆத்மஞானம் பெற்ற தங்களிடமிருந்து, இப்படிப்பட்ட கொடூரமான புதல்வர்களைப் பெறுவதற்கு நான் விரும்பவில்லை. தாங்கள், என் மீது கருணை காட்ட வேண்டும்.'' (22)

அந்தக் கன்னிகை இவ்வாறு சொல்லியவுடன் உத்தம முனிவராகிய விச்ரவஸ், பூர்ணசந்திரன் ரோகிணியைப் பார்த்து (அன்பு ததும்ப)க் கூறுவதைப் போல, கைகஸியிடம் கூறினார்— (23)

''அழகுச் செல்வியே! உன்னுடைய கடைசிப் புதல்வன், என் குலத்திற்கு ஏற்றபடி அறநெறி தவறாதவனாக இருப்பான் என்பது நிச்சயம்.'' (24)

Koviloor Digital Library

ஏவமுக்த்தா து ஸா கந்யா ராம காலேந கேநசித் ।
ஜநயாமாஸ பீ$_3$ப$_4$த்ஸம் ரக்ஷோரூபம் ஸுதா$_3$ருணம் ॥ (25)

த$_3$ஶக்$_3$ரீவம் மஹாத$_3$ம்ஷ்ட்ரம் நீலாஞ்ஜநசயோபமம் ।
தாம்ரோஷ்ட$_2$ம் விம்ஶதிபு$_4$ஜம் மஹாஸ்யம் தீ$_3$ப்தமூர்த$_4$ஜம் ॥ (26)

தஸ்மிஞ்ஜாதே து தத்காலே ஸஜ்வாலகப$_3$லா: ஶிவா: ।
க்ரவ்யாதா$_3$ஶ்சாபஸவ்யாநி மண்ட$_3$லாநி ப்ரசக்ரமு: ॥ (27)

வவர்ஷ ருதி$_4$ரம் தே$_3$வோ மேகா$_4$ஶ்ச க$_2$ரநிஸ்வநா: ।
ப்ரப$_3$பெள$_4$ ந ச ஸூர்யோ வை மஹோல்காஶ்சாபதந் பு$_4$வி ॥ (28)
சகம்பே ஜக$_3$தீ சைவ வவுர்வாதா: ஸுதா$_3$ருணா: ।
அக்ஷோப்$_4$ய: க்ஷுபி$_4$தஶ்சைவ ஸமுத்$_3$ர: ஸரிதாம் பதி: ॥ (29)

அத$_2$ நாமாகரோத்தஸ்ய பிதாமஹஸம: பிதா ।
த$_3$ஶக்$_3$ரீவ: ப்ரஸூதோऽயம் த$_3$ஶக்$_3$ரீவோ ப$_4$விஷ்யதி ॥ (30)

தஸ்ய த்வநந்தரம் ஜாத: கும்ப$_4$கர்ணோ மஹாப$_3$ல: ।
ப்ரமாணாத்$_3$யஸ்ய விபுலம் ப்ரமாணம் நேஹ வித்$_3$யதே ॥ (31)

தத: ஶூர்பணகா$_2$ நாம ஸம்ஜக்ஞே நிக்ருதாநநா ।
விபீ$_4$ஷணஶ்ச த$_4$ர்மாத்மா கைகஸ்யா: பஶ்சிம: ஸுத: ॥ (32)

தஸ்மிஞ்ஜாதே மஹாஸத்த்வே புஷ்பவர்ஷம் பபாத ஹ ।
நப:ஸ்தா$_2$நே து$_3$ந்து$_3$ப$_4$யோ தே$_3$வாநாம் ப்ரணத$_3$ம்ஸ்ததா$_3$ ॥
வாக்யம் சைவாந்தரிக்ஷே ச ஸாது$_4$ ஸாத்$_4$விதி தத்ததா$_2$ ॥ (33)

தெள து தத்ர மஹாரண்யே வவ்ருதா$_2$தே மஹௌஜஸௌ ।
தேஷாம் க்ரூரோ த$_3$ஶக்$_3$ரீவோ லோகோத்$_3$வேக$_3$கரோऽப$_4$வத் ॥ (34)

கும்ப$_4$கர்ண: ப்ரமத்தஸ்து மஹர்ஷீந் த$_4$ர்மவத்ஸலாந் ।
த்ரைலோக்யம் ப$_4$க்ஷயந்நித்யாஸந்துஷ்டோ விசசார ஹ ॥ (35)

விபீ$_4$ஷணஸ்து த$_4$ர்மாத்மா நித்யம் த$_4$ர்மே வ்யவஸ்தி$_2$த: ।
ஸ்வாத்$_4$யாயநியதாஹார உவாஸ விஜிதேந்த்$_3$ரிய: ॥ (36)

அத$_2$ வைஶ்ரவணோ தே$_3$வஸ்தத்ர காலேந கேநசித் ।
ஆக$_3$த: பிதரம் த்$_3$ரஷ்டும் புஷ்பகேண த$_4$நேஶ்வர: ॥ (37)

தம் த்$_3$ருஷ்ட்வா கைகஸீ தத்ர ஜ்வலந்தமிவ தேஜஸா ।
ஆக$_3$ம்ய ராக்ஷஸீ தத்ர த$_3$ஶக்$_3$ரீவமுவாச ஹ ॥ (38)

புத்ர வைஶ்ரவணம் பஶ்ய ப்$_4$ராதரம் தேஜஸா வ்ருதம் ।
ப்$_4$ராத்ருபா$_4$வே ஸமே சாபி பஶ்யாத்மாநம் த்வமீத்$_3$ருஶம் ॥ (39)

Koviloor Digital Library

இராமா! முனிவர் இவ்வாறு கூறிய சிறிதுகாலத்திற்குப் பின்னர், மிகவும் குரூர மனமும் கெடுமதியும் கொண்ட ஓர் அரக்கனைப் பெற்றெடுத்தாள், கைகஸி. அவனுக்குப் பத்துத்தலைகள் இருந்தன; பெரிய கோரைப் பற்கள்; கரிய மையைப் போன்ற உடல்நிறம்; செக்கச்சிவந்த உதடுகள்; இருபது கைகள்; மிகப்பெரிய வாய்; நெருப்புச் சுவாலை போன்ற கேசம். (25,26)

அவன் பிறந்தவுடன், நரிகள் வாய்வழியே நெருப்பைக் கக்கிக் கொண்டும், மாமிசம் உண்ணும் பறவைகள் (கழுகு முதலியன) இடப்புறமாகவும் வட்டமிட்டன. (27)

ஆகாயத்திலிருந்து (மழைக்குப் பதிலாக) செந்நீரைப் பொழிந்தான், இந்திரன்; மேகங்கள், பயங்கரமான ஒலிகளை எழுப்பின; சூரியன் ஒளி குறைந்தான்; பூமியில் எரிகொள்ளிகள் விழுந்தன. (28)

உலகம் நடுங்கியது; பயங்கரமான சூறைக்காற்று வீசியது; எவராலும் அடக்கமுடியாததும் நதிகளின் தலைவனுமான கடல் அடங்கிப் போய்விட்டது. (29)

பின்னர், நான்முகனுக்கு நிகரான தவவலிமை கொண்ட தந்தையான விச்ரவஸ் (அவனுக்குப் பெயர் சூட்டினார்.) ''இவன் பத்துத் தலைகளுடன் பிறந்திருப்பதால், பத்துத் தலையன் (தசக்ரீவன்) என்றே அழைக்கப்படுவான்'' என்று கூறினார். (30)

அவனுக்குப் பிறகு, மகாபலம் பொருந்திய கும்பகர்ணன் பிறந்தான். அவனுடைய மிகப்பெரிய சரீரத்திற்கு நிகரான உடலமைப்புக் கொண்டவன் பூவுலகில் இல்லவே இல்லை. (31)

பின்னர், அவலட்சணமான முகங்கொண்ட சூர்ப்பணகை பிறந்தாள். அறநெறியாளனான விபீஷணன், கைகஸியின் கடைசிப் புதல்வன். (32)

நல்லியல்புகள் நிரம்பப் பெற்ற அவன் (விபீஷணன்) பிறந்தவுடன், வானத்திலிருந்து மலர்மாரி பொழிந்தது; ஆகாயத்தில் தேவர்களின் துந்துபிகள் முழங்கின; வான்வெளியில், ''அப்பாடா!'' என்ற குரல் நிம்மதியின் வெளிப்பாடாகத் தோன்றியது. (33)

அவ்விருவரும் (தசக்ரீவன், கும்பகர்ணன்) மாபெருங்காட்டில், மிகவும் ஆற்றலுடன் வளர்ந்தார்கள். அவ்விருவரில் தசக்ரீவன், உலகத்திற்குப் பேரச்சத்தை விளைவிப்பவனாக ஆனான். (34)

கும்பகர்ணனோ மிகவும் மதம் பிடித்தவனாக இருந்தான். மூன்று உலகங்களிலுமிருந்த அறப்பற்றுடைய தவசிகளைத் தின்றும்கூட பசி அடங்காமல் சுற்றிச் சுற்றி வந்தான். (35)

அறத்தையே உயிராகக் கொண்ட விபீஷணன், எப்போதும் அறநெறியையே பின்பற்றி வந்தான். அறநூல்களைக் கற்றுணர்ந்து, அளவாக உணவு உட்கொண்டு, புலன்களை வென்றவனாக விளங்கினான். (36)

சிறிது காலத்திற்குப் பின்னர், நவநிதிகளின் தலைவனான வைச்ரவணன் (குபேரன்) தன் தந்தையைக் காண்பதற்காக புஷ்பக விமானத்தில் வந்து சேர்ந்தான். (37)

தன் ஆன்மவொளியினால் பிரகாசிக்கும் அவனைக் கண்டதும், அரக்கியான கைகஸி, தசக்ரீவனிடம் வந்து (பின்வருமாறு) கூறினாள்— (38)

''மகனே! உன் சகோதரனான வைச்ரவணன் பெருமையுடன் விளங்குவதைப் பார்! நீயும் அவனும் சகோதரர்கள். அவன், எவ்வளவு உயர்ந்த நிலையில் இருக்கிறான்! நீயோ, இப்படி இருக்கிறாய்! (39)

Koviloor Digital Library

த$_3$ஶக்$_3$ரீவ தத$_2$ா யத்நம் குருஷ்வாமிதவிக்ரம ।
யத$_2$ா த்வமஸி மே புத்ர ப$_4$வ வைஶ்ரவணோபம: ॥ (40)

மாதுஸ்தத்$_3$வசநம் ஶ்ருத்வா த$_3$ஶக்$_3$ரீவ: ப்ரதாபவாந் ।
அமர்ஷமதுலம் லேபே$_4$ ப்ரதிக்ஞாம் சாகரோத்தத$_3$ா ॥ (41)

ஸத்யம் தே ப்ரதிஜாநாமி ப்$_4$ராத்ருதுல்யோऽதி$_4$கோऽபி வா ।
ப$_4$விஷ்யாம்யோஜஸா சைவ ஸந்தாபம் த்யஜ ஹ்ருத்$_3$க$_3$தம் ॥ (42)

ததஸ்தேநைவ கோபேந த$_3$ஶக்$_3$ரீவ: ஸஹாநுஜ: ।
சிகீர்ஷுர்து$_3$ஷ்கரம் கர்ம தபஸே த்$_4$ருதமாநஸ: ॥ (43)

ப்ராப்ஸ்யாமி தபஸா காமமிதி க்ருத்வாத்$_4$யவஸ்ய ச ।
ஆக$_3$ச்ச$_2$த$_3$ாத்மஸித்$_3$த்$_4$யர்த$_2$ம் கோ$_3$கர்ணஸ்யாஶ்ரமம் ஶுப$_4$ம் ॥ (44)

ஸ ராக்ஷஸஸ்தத்ர ஸஹாநுஜஸ்தத$_3$ா
தபஶ்சகாராதுலமுக்$_3$ரவிக்ரம: ।
அதோஷயச்சாபி பிதாமஹம் விபு$_4$ம்
த$_3$தௌ ஸ துஷ்டஶ்ச வராஞ்ஜயாவஹாந் ॥ (45)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ நவம: ஸர்க$_3$: ॥

த$_3$ஶம: ஸர்க$_3$:

ராவணாதிவரப்ராப்தி:

அத$_2$ாப்$_3$ரவீந்முநிம் ராம: கத$_2$ம் தே ப்$_4$ராதரோ வநே ।
கீத்$_3$ருஶம் து ததா$_3$ ப்$_3$ரஹ்மந்ஸ்தபஸ்தேபுர்மஹாப$_3$லா: ॥ (1)

அக$_3$ஸ்த்யஸ்த்வப்$_3$ரவீத்தத்ர ராமம் ஸுப்ரீதமாநஸம் ।
தாம்ஸ்தாந் த$_4$ர்மவிதீ$_4$ம்ஸ்தத்ர ப்$_4$ராதரஸ்தே ஸமாவிஶந் ॥ (2)

கும்ப$_4$கர்ணஸ்ததோ யத்தோ நித்யம் த$_4$ர்மபதே$_2$ ஸ்தி$_2$த: ।
ததாப க்$_3$ரீஷ்மகாலே து பஞ்சாக்$_3$நீந் பரித: ஸ்தி$_2$த: ॥ (3)

மேக$_4$ாம்பு$_3$ஸிக்தோ வர்ஷாஸு வீராஸநமஸேவத ।
நித்யம் ச ஶிஶிரே காலே ஜலமத்$_4$யப்ரதிஶ்ரய: ॥ (4)

ஏவம் வர்ஷஸஹஸ்ராணி த$_3$ஶ தஸ்யாதிசக்ரமு: ।
த$_4$ர்மே ப்ரயதமாநஸ்ய ஸத்பதே$_2$ நிஷ்டி$_2$தஸ்ய ச ॥ (5)

விபீ$_4$ஷணஸ்து த$_4$ர்மாத்மா நித்யம் த$_4$ர்மபர: ஶுசி: ।
பஞ்ச வர்ஷஸஹஸ்ராணி பாதே$_3$நைகேந தஸ்தி$_2$வாந் ॥ (6)

Koviloor Digital Library

தசக்ரீவனே! எல்லையற்ற பராக்கிரமம் உடையவனே! என் செல்வமே! வைச்ரவணனுக்கு நிகரான மகோன்னத பெருமைகளைப் பெறுவதற்கான முயற்சிகளைச் செய்வாயாக.'' (40)

பேராற்றல் கொண்ட தசக்ரீவன், தாயாரின் சொற்களைக் கேட்டதும் மிகவும் பொறாமை கொண்டு, உடனே ஒரு சபதம் செய்தான். (41)

''தாயே! தாங்கள் மனத்துயரை விடுங்கள். நான் என்னுடைய ஆற்றலினால், வைச்ரவணனுக்கு நிகராக, ஏன்? அவனைக் காட்டிலும் மேலானவனாக ஆகிவிடுவேன் என்று உங்கள் முன் உறுதியாகச் சொல்கிறேன்.'' (42)

அதே ஆத்திரத்துடன், செயற்கரிய செயலைச் செய்யும் விருப்பத்துடன், தவம் செய்வதில் மனத்தை நிலைநிறுத்தினான். 'தவத்தினால் என் விருப்பங்களை எல்லாம் அடைவேன்!' என்று நிச்சயித்து, தன் விருப்பம் கைகூடுவதற்காக மங்களமான கோகர்ணம் என்ற தவச்சாலையை தம்பிகளுடன்கூடச் சென்றடைந்தான். (43,44)

தம்பிகளுடன்கூட அந்த அரக்கன், தளராத மனவுறுதியுடன் நிகரில்லாத தவத்தைச் செய்து, பிரும்மாவை மகிழ்வித்தான். அவர், அவனுக்கு 'எப்போதும் வெற்றி கிடைக்கும்' என்ற வரத்தை அருளினார். (45)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஒன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பத்து

இராவணன் முதலியோர் வரம் பெறுதல்

இவ்வாறு முனிவர் கூறியதைக் கேட்ட பிறகு இராமன், அகஸ்தியரைப் பார்த்து, 'பிரும்மன்! காட்டில் அந்தச் சகோதரர்கள் எவ்வாறு, எத்தகைய தவத்தைச் செய்தார்கள்?' என்று கேட்டார். (1)

அப்போது, நிறைந்த மனத்துடன் விளங்கிய இராமனைப் பார்த்து, அகஸ்தியர் கூறினார்— 'இராமா! அந்த மூன்று சகோதரர்களும், தனித்தனியே, தனக்கென ஒரு முறையை வகுத்துக் கொண்டு தவம் செய்தார்கள். (2)

கும்பகர்ணன் எப்போதும் அறவழியிலேயே சிறிதளவும் தவறாமல் நின்றான். (தவம் செய்வதற்கான அறநெறிகளின்படி தவம் செய்தான்.) கோடைகாலத்தில், ஐந்து அக்னிகளுக்கு நடுவில் நின்றுகொண்டு தவம் புரிந்தான். (தன்னைச் சுற்றி, நான்கு புறங்களிலும் நெருப்பு வளர்த்துக் கொண்டும், வானத்தில் வெம்மைக் கதிர்களை வீசும் சூரியனைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டும் செய்யப்படும் உக்கிரமான தவம், இது.) (3)

மழைக்காலத்தில் வெட்டவெளியில் வீராஸனத்தில் அமர்ந்து, கொட்டும் மழையில் நனைந்து கொண்டு தவம் செய்தான். அதேபோல், குளிர்காலத்தில் தண்ணீரில் நின்று கொண்டு தவம் செய்தான். (4)

கும்பகர்ணன் நல்வழியில் உறுதியுடன் நிற்பவனாய், அறத்தில் முழு மனத்தைச் செலுத்தியவனாய் பத்தாயிரம் ஆண்டுகள் தவம் புரிந்தான். (5)

அறத்தையே உயிராகக் கொண்ட விபீஷணன், எப்போதும் நேர்வழியில் செல்பவனாய், தூய மனத்துடன் ஒற்றைக்காலால் நின்றுகொண்டு, ஐயாயிரம் ஆண்டுகள் தவம் இயற்றினான். (6)

Koviloor Digital Library

ஸமாப்தே நியமே தஸ்ய நந்ருதுஶ்சாப்ஸரோக$_3$ணா: ।
பபாத புஷ்பவர்ஷம் ச க்ஷுபி$_4$தாஶ்சாபி தே$_3$வதா: ॥ (7)

பஞ்ச வர்ஷஸஹஸ்ராணி ஸூர்யம் சைவாந்வவர்தத ।
தஸ்தௌ$_2$ சோர்த்$_4$வஶிரோபா$_3$ஹு: ஸ்வாத்$_4$யாயத்$_4$ருதமாநஸ: ॥ (8)

ஏவம் விபீ$_4$ஷணஸ்யாபி ஸ்வர்க$_3$ஸ்த$_2$ஸ்யேவ நந்த$_3$நே ।
த$_3$ஶ வர்ஷஸஹஸ்ராணி க$_3$தாநி நியதாத்மந: ॥ (9)

த$_3$ஶ வர்ஷஸஹஸ்ராணி நிராஹாரோ த$_3$ஶாநந: ।
பூர்ணே வர்ஷஸஹஸ்ரே து ஶிரஶ்சாக்$_3$நௌ ஜுஹாவ ஸ: ॥ (10)

ஏவம் வர்ஷஸஹஸ்ராணி நவ தஸ்யாதிசக்ரமு: ।
ஶிராம்ஸி நவ சாப்யஸ்ய ப்ரவிஷ்டாநி ஹுதாஶநம் ॥ (11)

அத$_2$ வர்ஷஸஹஸ்ரே து த$_3$ஶமே த$_3$ஶமம் ஶிர: ।
சே$_2$த்துகாமே த$_3$ஶக்$_3$ரீவே ப்ராப்தஸ்தத்ர பிதாமஹ: ॥ (12)

பிதாமஹஸ்து ஸுப்ரீத: ஸார்த$_4$ம் தே$_3$வைருபஸ்தி$_2$த: ।
தவ தாவத்$_3$த$_3$ஶக்$_3$ரீவ ப்ரீதோऽஸ்மீத்யப$_4$யபா$_4$ஷத ॥ (13)

ஶீக்$_4$ரம் வரய த$_4$ர்மக்ஞ வரோ யஸ்தேऽபி$_4$காங்க்ஷித: ।
தம் தே காமம் கரோம்யத்$_3$ய ந வ்ருதா$_2$ தே பரிஶ்ரம: ॥ (14)

அதா$_2$ப்$_3$ரவீத்$_3$த$_3$ஶக்$_3$ரீவ: ப்ரஹ்ருஷ்டேநாந்தராத்மநா ।
ப்ரணம்ய ஶிரஸா தே$_3$வம் ஹர்ஷக$_3$த்$_3$க$_3$த$_3$யா கி$_3$ரா ॥ (15)

ப$_4$க$_3$வந் ப்ராணிநாம் நித்யம் நாந்யத்ர மரணாத்$_3$ப$_4$யம் ।
நாஸ்தி ம்ருத்யுஸம: ஶத்ருரமரத்வமஹம் வ்ருணே ॥ (16)

ஏவமுக்தஸ்ததா$_2$ ப்$_3$ரஹ்மா த$_3$ஶக்$_3$ரீவமுவாச ஹ ।
நாஸ்தி ஸர்வாமரத்வம் தே வரமந்யம் வ்ருணீஷ்வ மே ॥ (17)

ஏவமுக்தே ததா$_3$ ராம ப்$_3$ரஹ்மணா லோககர்த்ருணா ।
த$_3$ஶக்$_3$ரீவ உவாசேத$_3$ம் க்ருதாஞ்ஜலிரதா$_2$க்$_3$ரத: ॥ (18)

ஸுபர்ணநாக$_3$யக்ஷாணாம் தை$_3$த்யதா$_3$நவரக்ஷஸாம் ।
அவத்$_4$யோऽஹம் ப்ரஜாத்$_4$யக்ஷ தே$_3$வதாநாம் ச ஶாஶ்வத ॥ (19)

ந ஹி சிந்தா மமாந்யேஷு ப்ராணிஷ்வமரபூஜித ।
த்ருணபூ$_4$தா ஹி தே மந்யே ப்ராணிநோ மாநுஷாத$_3$ய: ॥ (20)

ஏவமுக்தஸ்து த$_4$ர்மாத்மா த$_3$ஶக்$_3$ரீவேண ரக்ஷஸா ।
உவாச வசநம் தே$_3$வ: ஸஹ தே$_3$வை: பிதாமஹ: ॥ (21)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_6_Back

Koviloor Digital Library

அவன் சங்கல்பித்தபடி தவம் செய்து முடித்ததும், அப்சர மகளிர் கூட்டம் (மகிழ்ச்சியால்) நடனம் ஆடிற்று; மேலேயிருந்து மலர்மாரி பொழிந்தது; தேவர்கள் போற்றித் துதித்தார்கள். (7)

பின்னர் விபீஷணன், தன்னுடைய இரு கைகளையும் முகத்தையும் உயரே தூக்கிக் கொண்டு, உண்முகமாய் மனத்தைச் செலுத்தி, நின்றபடியே சூரியனைக் குறித்து ஐயாயிரம் ஆண்டுகள் தவம் புரிந்தான். (8)

இவ்வாறாக, மனத்தைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, தேவலோகப் பூங்காவான நந்தனத்தில் வசிப்பதைப் போல, பத்தாயிரம் ஆண்டுகளைச் சுகமாகக் கழித்தான், விபீஷணன். (9)

தசக்ரீவன், உணவு உட்கொள்ளாமல், பதினாயிரம் ஆண்டுகள் தவம் செய்தான். ஒவ்வோர் ஆயிரம் ஆண்டு முடிந்ததும், தன்னுடைய ஒரு தலையைக் கொய்து அக்னியில் ஆகுதியாகக் கொடுத்தான். (10)

இவ்வாறாக ஒன்பது ஆயிரம் ஆண்டுகள் கழிந்தன. அவனுடைய தலைகளில் ஒன்பது, அக்னியை அடைந்தன. (11)

பத்தாவது ஆயிரம் ஆண்டு முடிந்ததும், அவன் தன்னுடைய பத்தாவது தலையை வெட்டுவதற்கு ஆயத்தமான நேரத்தில், பிரும்மதேவன் அங்கே வந்து சேர்ந்தார். (12)

தேவர்கள் புடைசூழ வந்திருந்த பிரும்மா, மன மகிழ்ச்சியுடன் இருந்தார். அப்போது, அவர், ''தசக்ரீவனே! நான் திருப்தி அடைந்திருக்கிறேன்'' என்று கூறினார். (13)

''அறம் அறிந்தவனே! உனக்கு விருப்பமான வரத்தை உடனே கேட்பாயாக. நான், உன் விருப்பத்தை உடனே நிறைவேற்றி வைக்கிறேன். இதுகாறும் நீ செய்த கடுமையான உழைப்பு (தவம்) வீணாகப் போகாது.'' (14)

பின்னர், நெஞ்சில் மகிழ்ச்சி பொங்க பிரும்மாவுக்குத் தலைவணங்கி, மனக்களிப்பினால் சொற்கள் தடுமாற, தசக்ரீவன் கூறினான்— (15)

''பெருந்தகையே! உயிர்ப்பிராணிகளுக்கு மரணத்தைத் தவிர வேறு எந்த பயமும் இல்லை. காலன் என்பதைத் தவிர வேறு எதிரி இல்லை. அதனால், இறவாமை என்ற வரத்தை நான் கோருகிறேன்.'' (16)

இவ்வாறு தசக்ரீவன் கூறியதைக் கேட்டு, ''எப்போதுமே மரணம் ஏற்படாது என்ற வரத்தைக் கொடுக்க இயலாது; வேறு ஒரு வரம் கேள்'' என்றார், பிரும்மா. (17)

உலகத்தைப் படைப்பவரான பிரும்மா இவ்வாறு கூறியதும், அவர் முன் கைகளைக் கூப்பிக்கொண்டு நின்று, தசக்ரீவன் (பின்வருமாறு) கூறினான்— (18)

''மக்கள் தலைவரே! முடிவற்றவரே! நான், கருடன்–நாகர்–யக்ஷர்–அசுரர்–தானவர்–அரக்கர்–தேவர்களால் கொல்லப்பட முடியாதவனாக வேண்டும். (19)

தேவர்களால் வணங்கப்படுபவரே! மற்ற உயிர்ப்பிராணிகளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. மனிதர் முதலிய உயிர்ப்பிராணிகளை நான் வெறும் புல்லாக மதிக்கிறேன்.'' (20)

அரக்கனான தசக்ரீவன் இவ்வாறு கூறியதும், அமரர் புடைசூழ நின்ற பிரும்மதேவர் (பின்வருமாறு) கூறினார்— (21)

Koviloor Digital Library

ப4விஷ்யத்யேவமேதத்தே வசோ ராக்ஷஸபுங்க3வ ।
ஏவமுக்த்வா து தம் ராம த3ஶக்3ரீவம் பிதாமஹ: ॥
ஶ்ருணு சாபி வரோ பூ4ய: ப்ரீதஸ்யேஹ ஶுபே4 மம ॥ (22)

ஹுதாநி யாநி ஶீர்ஷாணி பூர்வமக்3நௌ த்வயாநக4 ।
புநஸ்தாநி ப4விஷ்யந்தி ததை2வ தவ ராக்ஷஸ ॥ (23)

விதராமீஹ தே ஸௌம்ய வரம் சாந்யம் து3ராஸதம்3 ।
ச2ந்த3தஸ்தவ ரூபம் ச மநஸா யத்3யதே2ப்ஸிதம் ॥
ப4விஷ்யதி ந ஸந்தே3ஹோ மத்3வராத்தவ ராக்ஷஸ ॥ (24)

ஏவம் பிதாமஹோக்தஸ்ய த3ஶக்3ரீவஸ்ய ரக்ஷஸ: ।
அக்3நௌ ஹுதாநி ஶீர்ஷாணி புநஸ்தாந்யுதி3தாநி வை ॥ (25)

ஏவமுக்த்வா து தம் ராம த3ஶக்3ரீவம் பிதாமஹ: ।
விபீ4ஷணமதோ2வாச வாக்யம் லோகபிதாமஹ: ॥ (26)

விபீ4ஷண த்வயா வத்ஸ த4ர்மஸம்ஹிதபு3த்3தி4நா ।
பரிதுஷ்டோऽஸ்மி த4ர்மாத்மந் வரம் வரய ஸுவ்ரத ॥ (27)

விபீ4ஷணஸ்து த4ர்மாத்மா வசநம் ப்ராஹ ஸாஞ்ஜலி: ।
வ்ருத: ஸர்வகு3ணைர்நித்யம் சந்த்3ரமா ரஶ்மிபி4ர்யதா2 ॥ (28)

ப4க3வந் க்ருதக்ருத்யோऽஹம் யந்மே லோககு3ரு: ஸ்வயம் ।
ப்ரீதேந யதி3 தா3தவ்யோ வரோ மே ஶ்ருணு ஸுவ்ரத ॥ (29)

பரமாபத்3க3தஸ்யாபி த4ர்மே மம மதிர்ப4வேத் ।
அஶிக்ஷிதம் ச ப்3ரஹ்மாஸ்த்ரம் ப4க3வந் ப்ரதிபா4து மே ॥ (30)

யா யா மே ஜாயதே பு3த்3தி4ர்யேஷு யேஷ்வாஶ்ரமேஷு ச ।
ஸா ஸா ப4வது த4ர்மிஷ்டா2 தம் து த4ர்மம் ச பாலயே ॥ (31)

ஏஷ மே பரமோதா3ர வர: பரமகோ மத: ।
ந ஹி த4ர்மாபி4ரக்தாநாம் லோகே கிஞ்சந து3ர்லப4ம் ॥ (32)

புந: ப்ரஜாபதி: ப்ரீதோ விபீ4ஷணமுவாச ஹ ।
த4ர்மிஷ்ட2ஸ்த்வம் யதா2 வத்ஸ ததா2 சைதத்3ப4விஷ்யதி ॥ (33)

யஸ்மாத்3ராக்ஷஸயோநௌ தே ஜாதஸ்யாமித்ரநாஶந ।
நாத4ர்மே ஜாயதே பு3த்3தி4ரமரத்வம் த3தா3மி தே ॥ (34)

இத்யுக்த்வா கும்ப4கர்ணாய வரம் தா3துமுபஸ்தி2தம் ।
ப்ரஜாபதிம் ஸுரா: ஸர்வே வாக்யம் ப்ராஞ்ஜலயோऽப்3ருவந் ॥ (35)

ந தாவத் கும்ப4கர்ணாய ப்ரதா3தவ்யோ வரஸ்த்வயா ।
ஜாநீஷே ஹி யதா2 லோகாந்ஸ்த்ராஸயத்யேஷ து3ர்மதி: ॥ (36)

Koviloor Digital Library

''அரக்கரில் சிறந்தவனே! நீ என்ன கேட்டாயோ, அவ்வாறே நடக்கும்.'' (அகஸ்தியர் தொடர்கிறார்—) இராமனே! இவ்வாறு கூறிய பிரும்மா, ''மனமகிழ்ச்சியுடன் இருக்கும் நான், இன்னொரு மங்களமான வரத்தையும் கொடுக்கிறேன், கேள். (22)

குற்றமற்றவனே! நீ, அக்னியில் ஆகுதி செய்த உன் தலைகள், மீண்டும் முன்பு போலவே தோன்றப் போகின்றன. (23)

சீலம் மிக்கவனே! எவராலும் அடைவதற்கரிய இன்னொரு வரத்தையும் உனக்குக் கொடுக்கப் போகிறேன். உன் விருப்பத்திற்கேற்ற உருவம் எடுக்கும் சக்தியையும் நீ பெறுவாய். இதில் ஐயமில்லை.'' (24)

இவ்வாறு பிரும்மாவினால் கூறப்பட்டவுடன், முன்னர் அக்னியில் போடப்பட்ட அரக்கனின் தலைகள் மீண்டும் ஆங்காங்கே முளைத்தன. (25)

இராமனே! இவ்வாறு தசக்ரீவனிடம் பேசிவிட்டு, உலகப் படைப்பாளர் பிரும்மா, விபீஷணனிடம் கூறினார்— (26)

''வீடணனே! அறத்தை உயிராகக் கொண்டவனே! நல்ல விரதங்களைக் கடைப்பிடிப்பவனே! அறத்தோடு இணைந்த நோக்கத்துடன் நீ செய்த தவத்தினால் நான் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். குழந்தாய்! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்.'' (27)

குளிர்ந்த கிரணங்களோடு ஒளிவீசும் சந்திரனைப் போன்று, எப்போதும் நற்குணங்களுடன் விளங்கும் விபீஷணன், கைகளைக் கூப்பிக் கொண்டு கூறினான்— (28)

''அனைத்து உலகங்களுக்கும் தலைவரான தாங்கள் என்னிடம் பரிவு கொண்டிருக்கிறீர்கள் என்றால், அது நான் பெற்ற பெரும் பேறுதான். தங்கள் சொற்களாலேயே, நான் எல்லாவற்றையும் அடைந்தவனாகிவிட்டேன்! தாங்கள் உள்ளம் குளிர்ந்து எனக்கு வரம் அளிக்க விரும்பினால், சொல்கிறேன் கேளுங்கள். (29)

மிகமிகப் பெரிய கஷ்டம் வந்த காலத்திலும் என் மனம் அறத்திலிருந்து பிறழக் கூடாது. இதுவரை எனக்குக் கற்பிக்கப்படாத பிரும்மாஸ்திரம் (மந்திரம்) தானாகவே எனக்கு விளங்கவேண்டும். (30)

(பிரும்மசர்யம்–கிருஹஸ்தம்–வானப்பிரஸ்தம்–சந்யாஸம் என்ற நால்வகை வாழ்க்கைப் படிகளில்) எந்த ஆசிரமத்தைப் பற்றி நான் சிந்தித்தாலும், அது அறநெறிப்பட்டதாகவே இருக்க வேண்டும். அவ்வவற்றுக்கான அறநெறிகளைக் கடைப்பிடிப்பவனாக நான் இருக்க வேண்டும். இதுதான், நான் விரும்பும் மிகவும் உத்தமமான வரம். அறவழியில் சிறிதளவும் பிறழாது நடப்பவர்களுக்கு உலகத்தில் அடையமுடியாதது எதுவுமில்லை.'' (31,32)

மனமுவந்த பிரும்மா, விபீஷணனிடம் மறுபடியும் கூறினார்— ''குழந்தாய்! நீ, அறநெறியில் உறுதியாக நிற்பவன். ஆகவே நீ விரும்பிக் கேட்டபடியே நடக்கும். (33)

எதிரிகளை அழிப்பவனே! இராக்கதர் குலத்தில் தோன்றியவனாக இருந்தபோதிலும், உன் மனம் அநீதிக்குத் துணை போகாது. அத்துடன், உனக்கு இறவாமை என்ற வரத்தையும் தருகிறேன்.'' (34)

இவ்வாறு விபீஷணனிடம் மொழிந்துவிட்டு, கும்பகர்ணனிடம் சென்று வரம் கொடுக்க நின்றபோது, பிரும்மாவை நோக்கி கைகளைக் குவித்துக் கொண்டு, எல்லா தேவர்களும் பிரார்த்தனை செய்தார்கள். (35)

''கும்பகர்ணனுக்கு, தாங்கள் வரம் ஏதும் கொடுக்கக்கூடாது. கெடுமதியாளனான இவன், மக்களை எவ்வளவு கொடுமைப்படுத்துகிறான் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். (36)

Koviloor Digital Library

நந்த$_3$நேऽப்ஸரஸ: ஸப்த மஹேந்த்$_3$ராநுசரா த$_3$ஶ ।
அநேந ப$_4$க்ஷிதா ப்$_3$ரஹ்மந்ந்ருஷயோ மாநுஷாஸ்ததா$_2$ ॥ (37)

அலப்$_3$த$_4$வரபூர்வேண யத் க்ருதம் ராக்ஷஸேந து ।
ததே$_3$ஷ வரலப்$_3$த$_4$: ஸ்யாத்$_3$ப$_4$க்ஷயேத்$_3$பு$_4$வநத்ரயம் ॥ (38)

வரவ்யாஜேந மோஹோऽஸ்மை தீ$_3$யதாமமிதப்ரப$_4$ ।
லோகாநாம் ஸ்வஸ்தி சைவம் ஸ்யாத்$_3$ப$_4$வேத$_3$ஸ்ய ச ஸந்நதி: ॥ (39)

ஏவமுக்த: ஸுரைர்ப்$_3$ரஹ்மாசிந்தயத் பத்$_3$மஸம்ப$_4$வ: ।
சிந்திதா சோபதஸ்தே$_2$ऽஸ்ய பார்ஶ்வம் தே$_3$வீ ஸரஸ்வதீ ॥ (40)

ப்ராஞ்ஜலி: ஸா து பார்ஶ்வஸ்தா$_2$ வாக்யம் ப்ராஹ ஸரஸ்வதீ ।
இயமஸ்ம்யாக$_3$தா தே$_3$வ கிம் கார்யம் கரவாண்யஹம் ॥ (41)

ப்ரஜாபதிஸ்து தாம் ப்ராப்தாம் ப்ராஹ வாக்யம் ஸரஸ்வதீம் ।
வாணி த்வம் ராக்ஷஸேந்த்$_3$ராஸ்யே ப$_4$வ யா தே$_3$வதேப்ஸிதா ॥ (42)

ததே$_2$த்யுக்த்வா ப்ரவிஷ்டா ஸா ப்ரஜாபதிரதா$_2$ப்$_3$ரவீத் ।
கும்ப$_4$கர்ணம் மஹாபா$_3$ஹோ வரம் வரய யோ மத: ॥ (43)

கும்ப$_4$கர்ணஸ்து தத்$_3$வாக்யம் ஶ்ருத்வா வசநமப்$_3$ரவீத் ।
ஸ்வப்தும் வர்ஷாண்யநேகாநி தே$_3$வதே$_3$வ மமேப்ஸிதம் ॥ (44)

ஏவமஸ்த்விதி தம் சோக்த்வா ப்ராயாத்$_3$ப்$_3$ரஹ்மா ஸுரை: ஸமம் ।
தே$_3$வீ ஸரஸ்வதீ சைவ ராக்ஷஸம் தம் ஜஹௌ புந: ॥ (45)

ப்$_3$ரஹ்மணா ஸஹ தே$_3$வேஷு க$_3$தேஷு ச நப$_4$:ஸ்த$_2$லம் ।
விமுக்தோऽஸௌ ஸரஸ்வத்யா ஸ்வாம் ஸம்க்ஞாம் ச ததோ க$_3$த: ॥ (46)

கும்ப$_4$கர்ணஸ்து து$_3$ஷ்டாத்மா சிந்தயாமாஸ து$_3$:கி$_2$த: ।
ஈத்$_3$ருஶம் கிமித$_3$ம் வாக்யம் மமாத்$_3$ய வத$_3$நாச்ச்யுதம் ॥ (47)

அஹம் வ்யாமோஹிதோ தே$_3$வைரிதி மந்யே ததா$_3$க$_3$தை: ।
ஏவம் லப்$_3$த$_4$வரா: ஸர்வே ப்$_4$ராதரோ தீ$_3$ப்ததேஜஸ: ॥
ஶ்லேஷ்மாதகவநம் க$_3$த்வா தத்ர தே ந்யவஸந் ஸுக$_2$ம் ॥ (48)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த$_3$ஶம: ஸர்க$_3$: ॥

ஏகாத$_3$ஶ: ஸர்க$_3$:

ராவணலங்காப்ராப்தி:

ஸுமாலீ வரலப்$_3$தா$_4$ம்ஸ்து க்ஞாத்வா சைதாந்நிஶாசராந் ।
உத$_3$திஷ்ட$_2$த்$_3$ப$_4$யம் த்யக்த்வா ஸாநுக$_3$: ஸ ரஸாதலாத் ॥ (1)

Koviloor Digital Library

நந்தனவனத்திலிருந்த ஏழு அப்சரப் பெண்டிரையும், இந்திரனின் பணியாளர்கள் பதின்மரையும், ஏராளமான முனிவர்களையும் மற்றும் மானுடர்களையும் இவன் தின்று விழுங்கியிருக்கிறான். (37)

வரம் எதுவும் பெறுவதற்கு முன்னதாகவே இவ்வாறு கொடுமை செய்திருக்கிறான் என்றால், வரம் கிடைத்தவுடன் மூன்று உலகங்களையும் கபளீகரம் செய்துவிடுவான் அன்றோ! (38)

எல்லையற்ற தேசு படைத்தவரே! வரம் கொடுக்கும் வேளையில், இவனுக்கு மனமயக்கத்தைக் கொடுத்து விடுங்கள். அதனால், உலகங்களுக்கு மங்களம் உண்டாவதுடன், இவனுக்கும் ஒரு பாடம் கற்பிக்கப்பட்டதாக ஆகிவிடும்.'' (39)

இவ்வாறு, தேவர்களால் வேண்டிக்கொள்ளப்பட்ட தாமரையில் தோன்றிய பிரும்மா, சரஸ்வதிதேவியை மனத்தில் எண்ணினார். அடுத்த விநாடியே, கலைமகள் அவரருகே வந்து நின்றாள். அருகில் வந்து நின்ற கலைமகள், கைகளைக் கூப்பிக் கொண்டு, ''ஐயனே! இதோ நான் வந்திருக்கிறேன். என்ன செய்யவேண்டும்? என்று ஆணையிடுங்கள், செய்கிறேன்.'' (40,41)

சரஸ்வதி வந்திருப்பதை உணர்ந்துகொண்ட பிரும்மா, ''வாணி! தேவர்கள் விருப்பப்படி இராக்கதத் தலைவனான கும்பகர்ணன் முகத்தில் இருப்பாயாக.'' (42)

''அவ்வாறே செய்கிறேன்'' என்று கூறிவிட்டு அவள் (கலைமகள்), அவன் முகத்தில் (நாக்கில்) புகுந்துகொண்டாள். அப்போது, ''கும்பகர்ணனே!! பெருந்தோளனே! நீ விரும்பும் வரத்தைக் கேள்'' என்று பிரும்மா கூறினார். (43)

அதைக் கேட்ட கும்பகர்ணன், 'தேவதேவரே! நான், கணக்கில்லாத ஆண்டுகள் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும். இதுவே என் விருப்பம்'' என்றான். (44)

''அப்படியே ஆகட்டும்'' என்று சொல்லிவிட்டு, தேவர்களோடுகூட பிரும்மா புறப்பட்டுச் சென்றார். சரஸ்வதியும் அந்த அரக்கனை விட்டகன்றாள். (45)

தேவர்களோடுகூட பிரும்மா வானுலகு சென்ற பின், சரஸ்வதியின் பிடியிலிருந்து விடுபட்ட அவன் சுய நினைவை அடைந்தான். (46)

தீயவனான கும்பகர்ணன், 'என்ன, இது? இப்படிப்பட்ட சொற்கள் என் வாயிலிருந்து எவ்வாறு புறப்பட்டன?' என்று மிகவும் வருத்தத்தோடு சிந்தித்தான். 'இங்கே வந்திருந்த தேவர்களால் நான் மனமயக்கம் அடையச் செய்யப்பட்டேன் என்று எண்ணுகிறேன்.' (47)

இவ்வாறு மகாதேஜஸ்விகளான சகோதரர்கள் மூவரும் பிரும்மாவிடமிருந்து வரங்கள் பெற்று, தந்தையின் தவச்சாலையிருந்த ஶ்லேஷ்மாதக வனம் சென்று சுகமாக வசிக்கத் தொடங்கினார்கள். (48)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினொன்று

இராவணன் இலங்கையை அடைதல்

அரக்கர்கள் (இராவணன் முதலியோர்) பிரும்மாவிடமிருந்து வரம் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொண்ட சுமாலி, அச்சத்தைத் துறந்து ரஸாதலத்திலிருந்து வெளியே வந்தான். (1)

Koviloor Digital Library

மாரீசஸ்ச ப்ரஹஸ்தஸ்ச விரூபாக்ஷோ மஹோத$_3$ர: ।
உத$_3$திஷ்ட$_2$ந் ஸுஸம்ரப்$_3$த$_4$ா: ஸசிவாஸ்தஸ்ய ரக்ஷஸ: ॥ (2)

ஸுமாலீ ஸசிவை: ஸார்த$_4$ம் வ்ருதோ ராக்ஷஸபுங்க$_3$வை: ।
அபி$_4$க$_3$ம்ய த$_3$ஸக்$_3$ரீவம் பரிஷ்வஜ்யேத$_3$மப்$_3$ரவீத் ॥ (3)

தி$_3$ஷ்ட்யா தே வத்ஸ ஸம்ப்ராப்தஸ்சிந்திதோऽயம் மநோரத$_2$: ।
யஸ்த்வம் த்ரிபு$_4$வநஸ்ரேஷ்ட$_2$ால்லப்$_3$த$_4$வாந் வரமுத்தமம் ॥ (4)

யத்க்ருதே ச வயம் லங்காம் த்யக்த்வா யாதா ரஸாதலம் ।
தத்$_3$க$_3$தம் நோ மஹாபா$_3$ஹோ மஹத்$_3$விஷ்ணுக்ருதம் ப$_4$யம் ॥ (5)

அஸக்ருத்தத்$_3$ப$_4$யாத்$_3$பீ$_4$தா: பரித்யஜ்ய ஸ்வமாலயம் ।
வித்$_3$ருதா: ஸஹிதா: ஸர்வே ப்ரவிஷ்டா: ஸ்ம ரஸாதலம் ॥ (6)

அஸ்மதீ$_3$யா ச லங்கேயம் நக$_3$ரீ ராக்ஷஸோசிதா ।
நிவேஸிதா தவ ப்$_4$ராத்ரா த$_4$நாத்$_4$யக்ஷேண தீ$_4$மதா ॥ (7)

யதி$_3$ நாமாத்ர ஸக்யம் ஸ்யாத் ஸாம்நா த$_3$ாநேந வாநக$_4$ ।
தரஸா வா மஹாபா$_3$ஹோ ப்ரத்யாநேதும் க்ருதம் ப$_4$வேத் ॥ (8)

த்வம் து லங்கேஸ்வரஸ்தாத ப$_4$விஷ்யஸி ந ஸம்ஸய: ।
த்வயா ராக்ஷஸவம்ஸோऽயம் நிமக்$_3$நோऽபி ஸமுத்$_3$த்$_4$ருத: ॥
ஸர்வேஷாம் ந: ப்ரபு$_4$ஸ்சைவ ப$_4$விஷ்யஸி மஹாப$_3$ல ॥ (9)

அத$_2$ாப்$_3$ரவீத்$_3$த$_3$ஸக்$_3$ரீவோ மாதாமஹமுபஸ்தி$_2$தம் ।
வித்தேஸோ குருரஸ்மாகம் நார்ஹஸே வக்துமீத்$_3$ருஸம் ॥ (10)

ஸாம்நாபி ராக்ஷஸேந்த்$_3$ரேண ப்ரத்யாக்$_2$யாதோ க$_3$ரீயஸா ।
கிஞ்சிந்நாஹ தத$_3$ா ரக்ஷோ க்ஞாத்வா தஸ்ய சிகீர்ஷிதம் ॥ (11)

கஸ்யசித்த்வத$_2$ காலஸ்ய வஸந்தம் ராவணம் தத: ।
உக்தவந்தம் தத$_2$ா வாக்யம் த$_3$ஸக்$_3$ரீவம் நிஸாசர: ॥
ப்ரஹஸ்த: ப்ரஸ்ரிதம் வாக்யமித$_3$மாஹ ஸகாரணம் ॥ (12)

த$_3$ஸக்$_3$ரீவ மஹாபா$_3$ஹோ நார்ஹஸ்த்வம் வக்துமீத்$_3$ருஸம் ।
ஸௌப்$_4$ராத்ரம் நாஸ்தி ஸூராணாம் ஸ்ருணு சேத$_3$ம் வசோ மம ॥ (13)

அதி$_3$திஸ்ச தி$_3$திஸ்சைவ ப$_4$கி$_3$ந்யௌ ஸஹிதே ஹிதே ।
ப$_4$ார்யே பரமரூபிண்யௌ கஸ்யபஸ்ய ப்ரஜாபதே: ॥ (14)

அதி$_3$திர்ஜநயாமாஸ தே$_3$வாந்ஸ்த்ரிபு$_4$வநேஸ்வராந் ।
தி$_3$திஸ்த்வஜநயத் புத்ராந் கஸ்யபஸ்யாத்மஸம்ப$_4$வாந் ॥ (15)

தை$_3$த்யாநாம் கில த$_4$ர்மக்ஞ புரீயம் ஸவநார்ணவா ।
ஸபர்வதா மஹீ வீர தேऽப$_4$வந் ப்ரப$_4$விஷ்ணவ: ॥ (16)

Koviloor Digital Library

அந்த அரக்கனின் அமைச்சர்களான மாரீசன், பிரஹஸ்தன், விருபாக்ஷன், மகோதரன் ஆகிய நால்வரும் சினம் பொங்கியவர்களாக வெளியே வந்தார்கள். (2)

சிறந்த அரக்கர்கள் புடைசூழ, அமைச்சர்கள் உடன் வர, தசக்ரீவனைச் சென்றடைந்த சுமாலி, அவனைக் கட்டித் தழுவிக் கொண்டு (பின்வருமாறு) கூறினான்— (3)

''செல்வமே! மூன்று உலகங்களுக்கும் தலைவரான பிரும்மாவிடமிருந்து, மிக உயர்ந்த வரங்களைப் பெற்றிருக்கிறாய் என்பது பெரும் பேறாகும். வெகுகாலமாக நீ விரும்பிக் கொண்டிருந்த எண்ணம் இப்போது ஈடேறிவிட்டது. (4)

தோள்வலி மிக்கவனே! விஷ்ணுவிடம் ஏற்பட்ட பேரச்சத்தால் நாம் இலங்கையை விட்டு ரஸாதலம் செல்ல நேரிட்டது. இப்போது அந்த பயம் போயே போய்விட்டது. (5)

அவர், அடிக்கடி எங்களுடன் போர்தொடுத்துத் தொல்லை கொடுத்தார். அதைப் பொறுக்க முடியாமல் நாங்கள் எல்லோரும் தத்தம் வீடுகளைத் துறந்து கூண்டோடு இடம் பெயர்ந்து ரஸாதலம் செல்ல நேரிட்டது. (6)

புத்திமானும், உன் சகோதரனும், நிதிகளின் தலைவனுமான குபேரன் வசிக்கும் இலங்கை நகரம் நம்முடையதுதான். முதலில், அரக்கர்கள்தான் அங்கே வசித்துக் கொண்டிருந்தார்கள். (7)

மாசற்றவனே! சாம–தான–தண்டம் என்னும் உபாயங்களில் ஒன்றினால், நாம் இலங்கையைத் திரும்பப் பெறுவோமேயானால், நாம் வெற்றி பெற்றவர்களாவோம். (8)

அப்பனே! நீ, இலங்கையின் மன்னனாகப் போகிறாய் என்பதில் ஐயமில்லை. (எதிரிகளால்) அமுக்கப்பட்டு தவித்துக் கொண்டிருந்த அரக்கர் குலத்தை (நீ, கடுமையான தவம் செய்து, அரிய வரங்களைப் பெற்று) நிமிர்த்தியிருக்கிறாய். எங்கள் எல்லோருக்கும் நீயே அரசனாகப் போகிறாய்.'' (9)

தாய்வழிப் பாட்டன் இவ்வாறு கூறியதைக் கேட்ட தசக்ரீவன், ''செல்வத்திற்கு அதிபதியான குபேரன், நமக்கு மூத்த சகோதரர். ஆகவே, இவ்வாறு (அநீதியை) நீங்கள் கூறத்தகாது'' என்றான். (10)

சிறந்த அரக்கனான தசக்ரீவனால், மிக்க அமைதியுடன் இவ்வாறு கூறப்பட்ட எதிர்பாராத பதிலைக் கேட்டு, அவன் (குபேரனுடன் சண்டைக்குத் தயாராக இல்லை என்ற) மனநிலையைப் புரிந்துகொண்டு, மேற்கொண்டு எதுவும் பேசாமலிருந்து விட்டான், சுமாலி. (11)

இராவணன் மேலும் சிறிது காலம் அவ்விடத்திலேயே வசித்துக் கொண்டிருந்தான். அரக்கன் பிரஹஸ்தன், முன்னர் சுமாலி கூறிய அதே திட்டத்தை, வெகு அடக்கத்துடன் முன்னுதாரணம் காட்டி மீண்டும் தசக்ரீவனிடம் எடுத்துரைத்தான். (12)

''வலிமைமிக்க தசக்ரீவனே! (சகோதரரான குபேரனை விரட்டியடிப்பது சரியல்ல, என்று) நீ கூறுவது உனக்குத் தகாதது. வீரர்களுக்கு, சகோதரபாசம் என்பது இல்லை. இப்போது, நான் சொல்லப் போவதைக் கேள். (13)

பேரழகிகளான அதிதியும் திதியும் சகோதரிகள்; அவர்கள் இருவரும் கசியபப் பிரஜாபதியின் மனைவிகள். (14)

அதிதி, தேவர்களைப் பெற்றெடுத்தாள். அவர்கள்தான் தற்போது மூன்று உலகங்களுக்கும் தலைவர்களாக இருக்கிறார்கள். திதி என்பவள் அசுரர்களைப் பெற்றாள். தேவர்களும், அசுரர்களும் கசியபரின் சொந்தப் புதல்வர்கள். (15)

அறம் அறிந்த வீரனே! முதன்முதலில் இந்த நகரம், வனங்கள், கடல்கள், மலைகள் சூழ்ந்த இவ்வுலகம் மகாபராக்கிரமசாலிகளான தைத்யர்கள் (அசுரர்கள்) வசத்தில் இருந்தது. (16)

Koviloor Digital Library

நிஹத்ய தாம்ஸ்து ஸமரே விஷ்ணுநா ப்ரப₄விஷ்ணுநா ।
தே₃வாநாம் வஶமாநீதம் த்ரைலோக்யமித₃மவ்யயம் ॥ (17)

நைததே₃கோ ப₄வாநேவ கரிஷ்யதி விபர்யயம் ।
ஸுராஸுரைராசரிதம் தத் குருஷ்வ வசோ மம ॥ (18)

ஏவமுக்தோ த₃ஶக்₃ரீவ: ப்ரஹ்ருஷ்டேநாந்தராத்மநா ।
சிந்தயித்வா முஹூர்தம் வை பாட₄மித்யேவ ஸோऽப்₃ரவீத் ॥ (19)

ஸ து தேநைவ ஹர்ஷேண தஸ்மிந்நஹநி வீர்யவாந் ।
வநம் க₃தோ த₃ஶக்₃ரீவ: ஸஹ தை: க்ஷணதா₃சரை: ॥ (20)

த்ரிகூடஸ்த₂: ஸ து தத₃ா த₃ஶக்₃ரீவோ நிஶாசர: ।
ப்ரேஷயாமாஸ தௌ₃த்யேந ப்ரஹஸ்தம் வாக்யகோவித₃ம் ॥ (21)

ப்ரஹஸ்த ஶீக்₄ரம் க₃ச்ச₂ த்வம் ப்₃ரூஹி நைர்ருதபுங்க₃வம் ।
வசஸா மம வித்தேஶம் ஸாமபூர்வமித₃ம் வச: ॥ (22)

இயம் லங்காபுரீ ராஜந் ராக்ஷஸாநாம் மஹாத்மநாம் ।
த்வயா நிவேஶிதா ஸௌம்ய நைதத்₃யுக்தம் தவாநக₄ ॥ (23)

தத்₃ப₄வாந் யதி₃ நோ ஹ்யத்₃ய த₃த்₃யாத₃துலவிக்ரம ।
க்ருதா ப₄வேந்மம ப்ரீதிர்த₄ர்மஶ்சைவாநுபாலித: ॥ (24)

ஸ து க₃த்வா புரீம் லங்காம் த₄நதே₃ந ஸுரக்ஷிதாம் ।
அப்₃ரவீத் பரமோதா₃ரம் வித்தபாலமித₃ம் வச: ॥ (25)

ப்ரேஷிதோऽஹம் தவ ப்₄ராத்ரா த₃ஶக்₃ரீவேண ஸுவ்ரத ।
த்வத்ஸமீபம் மஹாபா₃ஹோ ஸர்வஶஸ்த்ரப்₄ருதாம் வர ॥ (26)

தச்ச்₂ரூயதாம் மஹாப்ராக்ஞ ஸர்வஶாஸ்த்ரவிஶாரத₃ ।
வசநம் மம வித்தேஶ யத்₃ப்₃ரவீதி த₃ஶாநந: ॥ (27)

இயம் கில புரீ ரம்யா ஸுமாலிப்ரமுகை₂: புரா ।
பு₄க்தபூர்வா விஶாலாக்ஷ ராக்ஷஸைர்பீ₄மவிக்ரமை: ॥ (28)

தேந விக்ஞாப்யதே ஸோऽயம் ஸாம்ப்ரதம் விஶ்ரவாத்மஜ ।
ததே₃ஷா தீ₃யதாம் தாத யாசதஸ்தஸ்ய ஸாமத: ॥ (29)

ப்ரஹஸ்தாத₃பி₄ஸம்ஶ்ருத்ய தே₃வோ வைஶ்ரவணோ வச: ।
ப்ரத்யுவாச ப்ரஹஸ்தம் தம் வாக்யம் வாக்யவிஶாரத₃: ॥ (30)

த₃த்தா மமேயம் பித்ரா து லங்கா ஶூந்யா நிஶாசரை: ।
நிவாஸிதா ச மே யக்ஷைர்தா₃நமாநாதி₃பி₄ர்கு₃ணை: ॥ (31)

Koviloor Digital Library

ஆனால், எல்லையில்லாத ஆற்றல் படைத்த மகாவிஷ்ணு, போரில் தைத்யர்களைக் கொன்று அழிவற்ற இந்த மூவுலக ஆட்சியைத் தேவர்களுக்கு அளித்தார். (17)

(மூத்த சகோதரனை விரட்டியடித்தல் என்ற) பொது நீதிக்குப் புறம்பான இந்தச் செயலை நீதான் புதிதாகச் செய்கிறாய் – என்று நினைத்துக் கொள்ளாதே. சுர–அசுரர்கள் கடைப்பிடித்த அதே வழியை நீயும் கடைப்பிடி. நான் சொல்கிறபடி செய்.'' (18)

இதைக் கேட்ட தசக்ரீவன் உள்ளூர மகிழ்ச்சி அடைந்தான். சிறிதுநேரம் யோசனை செய்துவிட்டு, ''சரி, அப்படியே செய்கிறேன்'' என்றான். (19)

அந்த மகிழ்ச்சி அடங்குவதற்குள்ளாக வீரனான அவன், அதே நாளில், அந்த அரக்கர்களுடன் இலங்கையை ஒட்டியிருந்த காட்டுக்குச் சென்றான். (20)

திரிகூட மலைக்குச் சென்று தங்கிய தசக்ரீவன், பேச்சில் வல்லவனான பிரஹஸ்தனை (குபேரனிடம்) தூதனாக அனுப்பினான். (21)

''பிரஹஸ்தனே! நீ உடனே சென்று யக்ஷர் தலைவனான குபேரனிடம், நான் கூறப்போவதை அமைதியான முறையில் எடுத்துச் சொல். (22)

மன்னரே! மாசற்றவரே! மகாபராக்கிரமசாலிகளான அரக்கர்களுக்குச் சொந்தமான இந்த இலங்கைப் பட்டணம் தங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. நல்லியல்பு உடையவரே! இது நியாயம் அல்ல. (23)

இணையில்லாத வீரம் படைத்தவரே! தாங்கள் இப்போது இந்தப் பட்டணத்தை எங்களுக்குத் திரும்பக் கொடுத்தால், அச்செயல் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாகும் என்பதுடன் தங்களால் நீதியும் கடைப்பிடிக்கப்பட்டதாகும்.'' (24)

அவன் (பிரஹஸ்தன்) குபேரனால் பாதுகாக்கப்படும் இலங்கைக்குச் சென்று, செல்வக் காப்பாளனான அவனிடம், வெகு சாந்தமாக(ப் பின்வருமாறு) கூறினான்— (25)

''உயர்ந்த விரதங்களை அனுஷ்டிப்பவரே! ஆயுதங்களைத் தரித்தவர்களுள் சிறந்தவரே! வலிமை மிக்கவரே! தங்கள் சகோதரன் தசக்ரீவனால் நான் அனுப்பப்பட்டு இங்கு வந்திருக்கிறேன். (26)

பேரறிவாளரே! அறநூல்களைக் கற்றறிந்தவரே! நவநிதிகளின் தலைவரே! பத்துத் தலையன் (தங்கள் சகோதரன்) கூறியனுப்பியதைச் சொல்கிறேன், கேளுங்கள். (27)

அகன்ற கண்களை உடையவரே! பயங்கரமான ஆற்றல் கொண்ட அரக்கர்களான சுமாலி முதலியோரால், இந்த அழகிய நகரம் முன்னர் அனுபவிக்கப்பட்டு வந்தது. (28)

விச்ரவஸின் புதல்வரே! அப்பனே! இப்போது இந்தப் பட்டணத்தை எங்களுக்குக் கொடுத்து விடுங்கள் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.'' (29)

சொற்சிறப்புடைய தேவனாகிய வைச்ரவணன், பிரஹஸ்தனுடைய சொற்களைக் கேட்டு, அவனுக்குப் பதில் சொன்னான்— (30)

''அரக்கர்களால் கைவிடப்பட்டுப் பாழடைந்துகிடந்த இந்த நகரம், என் தகப்பனாரால் எனக்குக் கொடுக்கப்பட்டது. பொருள் கொடுத்தும் ஆதரவு காட்டியும் யக்ஷர்களை இங்கு குடியேற்றி (நானும்) வசித்து வருகிறேன். (31)

Koviloor Digital Library

ப்$_3$ரூஹி க$_3$ச்ச$_2$ த$_3$ஶக்$_3$ரீவம் புரம் ராஜ்யம் ச யந்மம ।
தவாப்யேதந்மஹாபா$_3$ஹோ பு$_4$ங்க்ஷ்வ ராஜ்யமகண்டகம் ॥ (32)

அவிப$_4$க்தம் த்வயா ஸார்த$_4$ம் ராஜ்யம் யச்சாபி மே வஸு ।
ஏவமுக்த்வா த$_4$நாத்$_4$யக்ஷோ ஜகா$_3$ம பிதுரந்திகம் ॥ (33)

அபி$_4$வாத்$_3$ய கு$_3$ரும் ப்ராஹ ராவணஸ்ய யதீ$_3$ப்ஸிதம் ।
ஏஷ தாத த$_3$ஶக்$_3$ரீவோ தூ$_3$தம் ப்ரேஷிதவாந் மம ॥ (34)

தீ$_3$யதாம் நக$_3$ரீ லங்கா பூர்வம் ரக்ஷோக$_3$ணோஷிதா ।
மயாத்ர யத$_3$நுஷ்டே$_2$யம் தந்மமாசக்ஷ்வ ஸுவ்ரத ॥ (35)

ப்$_3$ரஹ்மர்ஷிஸ்த்வேவமுக்தோऽஸௌ விஶ்ரவா முநிபுங்க$_3$வ: ।
ப்ராஞ்ஜலிம் த$_4$நத$_3$ம் ப்ராஹ ஶ்ருணு புத்ர வசோ மம ॥ (36)

த$_3$ஶக்$_3$ரீவோ மஹாபா$_3$ஹுருக்தவாந் மம ஸந்நிதௌ$_4$ ।
மயா நிர்ப$_4$ர்த்ஸிதஶ்சாஸீத்$_3$ப$_3$ஹுஶோக்த: ஸுது$_3$ர்மதி: ॥ (37)

ஸ க்ரோதே$_4$ந மயா சோக்தோ த்$_4$வம்ஸஸே ச புந: புந: ।
ஶ்ரேயோऽபி$_4$யுக்தம் த$_4$ர்ம்யம் ச ஶ்ருணு புத்ர வசோ மம ॥ (38)

வரப்ரதா$_3$நாத் ஸம்மூடோ$_4$ மாந்யாமாந்யாந் ஸ து$_3$ர்மதி: ।
ந வேத்தி மம ஶாபாச்ச ப்ரக்ருதிம் தா$_3$ருணாம் க$_3$த: ॥ (39)

தஸ்மாத்$_3$க$_3$ச்ச$_2$ மஹாபா$_3$ஹோ கைலாஸம் த$_4$ரணீத$_4$ரம் ।
நிவேஶய நிவாஸார்த$_2$ம் த்யக்த்வா லங்காம் ஸஹாநுக$_3$: ॥ (40)

தத்ர மந்தா$_3$கிநீ ரம்யா நதீ$_3$நாமுத்தமா நதீ$_3$ ।
காஞ்சநை: ஸூர்யஸங்காஶை: பங்கஜை: ஸம்வ்ருதோத$_3$கா ॥
குமுதை$_3$ருத்பலைஶ்சைவ ததா$_2$ந்யைஶ்ச ஸுக$_3$ந்தி$_4$பி$_4$: ॥ (41)

தத்ர தே$_3$வா: ஸக$_3$ந்த$_4$ர்வா: ஸாப்ஸரோரக$_3$கிந்நரா: ।
விஹாரஶீலா: ஸததம் ரமந்தே ஸர்வதா$_3$ஶ்ரிதா: ॥ (42)

ந ஹி க்ஷமம் தவாநேந வைரம் த$_4$நத$_3$ ரக்ஷஸா ।
ஜாநீஷே ஹி யதா$_2$நேந லப்$_3$த$_4$: பரமகோ வர: ॥ (43)

ஏவமுக்தோ க்$_3$ருஹீத்வாஶு தத்$_3$வச: பித்ருகௌ$_3$ரவாத் ।
ஸதா$_3$ரபுத்ர: ஸாமாத்ய: ஸவாஹநத$_4$நோ க$_3$த: ॥ (44)

ப்ரஹஸ்தோऽத$_2$ த$_3$ஶக்$_3$ரீவம் க$_3$த்வா வசநமப்$_3$ரவீத் ।
ப்ரஹ்ருஷ்டாத்மா மஹாத்மாநம் ஸஹாமாத்யம் ஸஹாநுஜம் ॥ (45)

ஶூந்யா ஸா நக$_3$ரீ லங்கா த்யக்த்வைநாம் த$_4$நதோ$_3$ க$_3$த: ।
ப்ரவிஶ்ய தாம் ஸஹாஸ்மாபி$_4$: ஸ்வத$_4$ர்மம் ப்ரதிபாலய ॥ (46)

Koviloor Digital Library

தூதனே! நீ தசக்ரீவனிடம் சென்று, 'தோள்வலி மிக்கவனே! எவ்வித இன்னல்களும் இல்லாத என்னுடைய இந்த நாட்டை, நீயும் என்னுடன் சேர்ந்து அனுபவிக்கலாம்; இது, உனக்கும் உரியதுதான். (32)

என்னுடைய செல்வம், நாடு ஆகியவற்றைப் பிரிவினை செய்யாமல் என்னுடன்கூட அனுபவி' என்று கூறுவாயாக.'' இவ்வாறு தூதனிடம் கூறிவிட்டு, குபேரன் தன் தந்தையிடம் சென்றான். (33)

தந்தையை வணங்கி, இராவணனுடைய விருப்பத்தைத் தெரிவித்தான். ''தந்தையே! தசக்ரீவன் என்னிடம் ஒரு தூதனை அனுப்பினான். (34)

'முன்னர் அரக்கர்கள் வசத்திலிருந்த இலங்கையை எனக்குக் கொடுத்து விடுங்கள்' (என்று செய்தி அனுப்பியிருக்கிறான்.) நல்விரதங்களைக் கடைப்பிடிப்பவரே! இந்த விஷயத்தில் நான் என்ன செய்யவேண்டும்? என்பதைக் கூறுங்கள்.'' (35)

பிரும்மரிஷியான மாமுனிவர் விச்ரவஸ், எதிரே கைகளைக் கூப்பிக் கொண்டு நிற்கும் குபேரனைப் பார்த்து, ''பிள்ளாய்! நான் சொல்வதைக் கேள். (36)

வலிமை மிக்கவனான தசக்ரீவன் என்னிடமும் இதைக் கூறியிருக்கிறான். நான் அவனைக் கடிந்து கொண்டு பலவகையிலும் எடுத்துரைத்தும் அந்தக் கெடுமதியாளன் தன் எண்ணத்தை மாற்றிக் கொள்ளவில்லை. (37)

'நீ அழிந்துதான் போவாய்' என்று பல தடவை நான் கோபத்துடன் கூறினேன். (அப்படியும் அவன் பிடிவாதத்தை விடவில்லை.) மகனே! மங்களத்தைக் கொடுக்கக் கூடியதும் அறநெறிப்பட்டதுமான என் சொற்களை நீயாவது கேள். (38)

வரம் பெற்றுவிட்டதால் அகந்தை கொண்டுள்ள அந்தக் கெடுமதியாளன், செய்யத்தக்கது–தகாதது என்று பிரித்துப் பார்க்கும் அறிவை இழந்துவிட்டான். அத்துடன், என் சாபத்தின் காரணமாக பயங்கர இயல்பையும் பெற்றிருக்கிறான். (39)

ஆகவே, மாவீரனே! உன் உற்றார்–உறவினர்களோடுகூட இலங்கையை விட்டு, உலகத்திற்கே ஆதாரமான கைலாச மலைக்குச் சென்று, அங்கே வசிப்பாயாக. (40)

அங்கு, பொன்மயமானவைகளும் சூரியன் போல் ஒளிவீசுபவைகளுமான தாமரை, ஆம்பல், நீலோத்பலம் மற்றும் பலவகையான மணம் மிகுந்த மலர்கள் நிறைந்த நதிகளுள் புனிதமான அழகிய மந்தாகினி நதி ஓடுகிறது. (41)

அவ்விடத்திற்கு உல்லாசப்பிரியர்களான தேவர்கள், கந்தர்வர்கள், அரம்பையர், உரகர்கள், கின்னரர்கள் ஆகியோர் எப்போதும் வந்து களிப்புடன் ஆடிப்பாடி மகிழ்கிறார்கள். (42)

குபேரனே! இந்த அரக்கனை உன்னால் எதிர்த்து நிற்கமுடியாது. மிக உயர்ந்த வரத்தை அவன் பெற்றுள்ளான் என்பதை நீ அறிவாய்.'' (43)

தந்தை இவ்வாறு கூறியதும், அவருடைய சொற்களுக்கு மதிப்புக் கொடுத்து, குபேரன் விரைவிலேயே தன் மனைவி–மக்கள், உற்றார்–உறவினர், வாகனம்–செல்வங்களுடன் (இலங்கையிலிருந்து) வெளியேறினான். (44)

பிரஹஸ்தன் மிக்க மகிழ்ச்சியுடனே திரும்பிச் சென்று, அமைச்சர்களோடும் தம்பிகளோடும் வீற்றிருந்த மகாபலசாலியான தசக்ரீவனிடம் (பின்வருமாறு) கூறினான்— (45)

''குபேரன் இலங்கையைத் துறந்துவிட்டுச் சென்றுவிட்டான்! எங்களுடன்கூட அந்தப் பட்டணத்திற்குள் புகுந்து, சுதர்மத்தைக் காப்பாற்றுவாயாக!'' (46)

Koviloor Digital Library

ஏவமுக்தோ த$_3$ஶக்$_3$ரீவ: ப்ரஹஸ்தேந மஹாப$_3$ல: ।
விவேஶ நக$_3$ரீம் லங்காம் ப்$_4$ராத்ருபி$_4$: ஸப$_3$லாநுகை$_3$: ॥ (47)

த$_4$நதே$_3$ந பரித்யக்தாம் ஸுவிப$_4$க்தமஹாபத$_2$ாம் ।
ஆருரோஹ ஸ தே$_3$வாரி: ஸ்வர்க$_3$ம் தே$_3$வாதி$_4$போ யத$_2$ா ॥ (48)

ஸ சாபி$_4$ஷிக்த: க்ஷணத$_3$ாசரைஸ்தத$_3$ா நிவேஶயாமாஸ புரீம் த$_3$ஶாநந: ।
நிகாமபூர்ணா ச ப$_3$பூ$_4$வ ஸா புரீ நிஶாசரைர்நீலவலாஹகோபமை: ॥ (49)

த$_4$நேஶ்வரஸ்த்வத$_2$ பித்ருவாக்யகௌ$_3$ரவாந்–
ந்யவேஶயச்ச$_2$ஶிவிமலே கி$_3$ரௌ புரீம் ।
ஸ்வலங்க்ருதைர்ப$_4$வநவரைர்விபூ$_4$ஷிதாம்
புரந்த$_3$ரஸ்யேவ தத$_3$ாமராவதீம் ॥ (50)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகாத$_3$ஶ: ஸர்க$_3$: ॥

த்$_3$வாத$_3$ஶ: ஸர்க$_3$:

ராவணாதி$_3$விவாஹ:

ராக்ஷஸேந்த்$_3$ரோऽபி$_4$ஷிக்தஸ்து ப்$_4$ராத்ருப்$_4$யாம் ஸஹிதஸ்தத$_3$ா ।
தத: ப்ரத$_3$ாநம் ராக்ஷஸ்யா ப$_4$கி$_3$ந்யா: ஸமசிந்தயத் ॥ (1)

ஸ்வஸாரம் காலகேயாய தா$_3$நவேந்த்$_3$ராய ராக்ஷஸீம் ।
த$_3$தௌ$_3$ ஶூர்பணக$_2$ாம் நாம வித்$_3$யுஜ்ஜிஹ்வாய நாமத: ॥ (2)

அத$_2$ த$_3$த்த்வா ஸ்வயம் ரக்ஷோ ம்ருக$_3$யாமடதே ஸ்ம தத் ।
தத்ராபஶ்யத்ததோ ராம மயம் நாம தி$_3$தே: ஸுதம் ॥ (3)

கந்யாஸஹாயம் தம் த்$_3$ருஷ்ட்வா த$_3$ஶக்$_3$ரீவோ நிஶாசர: ।
அப்ருச்ச$_2$த் கோ ப$_4$வாநேகோ நிர்மாநுஷ்யம்ருகே$_3$ வநே ॥
அநயா ம்ருக$_3$ஶாப$_3$ாக்ஷ்யா கிமர்த$_2$ம் ஸஹ திஷ்ட$_2$ஸி ॥ (4)

மயஸ்த்வத$_2$ாப்$_3$ரவீத்$_3$ராம ப்ருச்ச$_2$ந்தம் தம் நிஶாசரம் ।
ஶ்ரூயதாம் ஸர்வமாக்$_2$யாஸ்யே யத$_2$ாவ்ருத்தமித$_3$ம் மம ॥ (5)

ஹேமா நாமாப்ஸரா தாத ஶ்ருதபூர்வா யதி$_3$ த்வயா ।
தை$_3$வதைர்மம ஸா த$_3$த்தா பௌலோமீவ ஶதக்ரதோ: ॥ (6)

தஸ்யாம் ஸக்தமநாஸ்தாத த$_3$ஶ வர்ஷஶதாந்யஹம் ।
ஸா ச தை$_3$வதகார்யேண க$_3$தா வர்ஷாஶ்சதுர்த$_3$ஶ ॥ (7)

Koviloor Digital Library

பிரஹஸ்தன் இவ்வாறு கூறியதும் மகாபலம் பொருந்திய தசக்ரீவன், சகோதரர்களுடனும் படைவீரர்களுடனும் குபேரனால் கைவிடப்பட்டதும், செம்மையாக வகுக்கப்பட்ட நெடுஞ்சாலைகளை உடையதுமான இலங்கைப் பட்டணத்திற்குள் நுழைந்து, தேவலோகத்தில் இந்திரன் போல அரியணை ஏறினான். (47,48)

அரக்கர்கள், தசக்ரீவனுக்கு முடிசூட்டினார்கள். அவன், அந்த நகரத்தை மேலும் அழகாக அமைத்தான். நாளடைவில், அந்தப் பட்டணம் கறுத்த மேகம் போன்ற வண்ணங்கொண்ட இராக்கதர்களால் நிரம்பியதாக ஆயிற்று. (49)

செல்வங்களுக்கு அதிபதியான குபேரன், தந்தையின் சொற்களுக்கு மதிப்புக் கொடுத்து, மாசுமருவற்ற நிலாபோல் ஒளிவீசும் கைலாசமலையில், தேவராஜன் இந்திரனுடைய அமராவதிக்கு நிகரான, அழகான பெருமாளிகைகள் நிறைந்த 'அளகாபுரி' என்ற நகரத்தை நிர்மாணித்து வசிக்கத் தொடங்கினான். (50)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
பதினொன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பன்னிரண்டு

இராவணன் முதலியோருக்குத் திருமணம்

(அகஸ்தியர், தொடர்ந்து சொல்கிறார்— இராமனே!) அரக்கர் மன்னனாக தசக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் ஆனவுடன், அவன் தன் சகோதரர்களோடுகூட இலங்கையில் வசிக்கத் தொடங்கினான். அப்போது, தன் தங்கையான அரக்கி சூர்ப்பணகைக்கு விவாகம் செய்து வைக்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. (1)

அந்த அரக்கன் (தசக்ரீவன்), தானவர் தலைவன் காலகேயனின் புதல்வனான வித்யுஜ்ஜிஹ்வனுக்கு, தன் சகோதரி சூர்ப்பணகையை மணம் செய்து கொடுத்தான். (2)

இராமனே! தங்கையின் திருமணம் முடிந்த பின்னர், ஒரு சமயம் தசக்ரீவன் வேட்டையாடுவதற்காகக் காட்டில் சுற்றித் திரிந்துகொண்டிருந்தான். அங்கே, திதியின் மைந்தனான மயனைப் பார்த்தான். (3)

ஒரு பெண்ணுடன் இருந்த அவனைக் கண்ட தசக்ரீவன், ''மனிதர்களோ விலங்குகளோ இல்லாத இந்தக் கானகத்தில் தனியாக இருக்கும் நீங்கள் யார்? மான்விழியாளாகிய இவளுடன் இங்கே எதற்காக வசித்துக் கொண்டிருக்கிறீர்?'' என்று அவர்களைக் கேட்டான். (4)

இராமா! இவ்வாறு கேட்ட அரக்கனை நோக்கி, ''என்னுடைய வரலாறு முழுவதையும் நடந்தவாறே சொல்கிறேன், கேள்'' என்று மயன் கூறினான். (5)

''அன்பனே! ஹேமா என்ற பெயர் கொண்ட அப்சரப் பெண்ணைப் பற்றி நீ முன்னரே கேள்விப்பட்டிருக்கலாம். புலோமன் என்ற தானவனின் பெண்ணாகிய சசீதேவி, இந்திரனுக்கு மணம் செய்து வைக்கப்பட்டதைப் போல, (விமரிசையாக) அவள் எனக்கு வழங்கப்பட்டாள். (6)

நான், அவளிடம் மிகவும் அன்புகொண்டு ஆயிரம் ஆண்டுகள் வாழ்க்கை நடத்தினேன். பதிநான்கு ஆண்டுகளுக்கு முன், தேவதைகளின் ஒரு பணியைச் செய்வதற்காக, அவள் தேவலோகம் சென்றுவிட்டாள். (7)

Koviloor Digital Library

தஸ்யா: க்ருதே ச ஹேமாயா: ஸர்வம் ஹேமமயம் புரம் ।
வஜ்ரவைதூ$_3$ர்யசித்ரம் ச மாயயா நிர்மிதம் மயா ॥
தத்ராஹமவஸம் தீ$_3$நஸ்தயா ஹீந: ஸுது$_3$:கி$_2$த: ॥ (8)

தஸ்மாத் புராத்$_3$து$_3$ஹிதரம் க்$_3$ருஹீத்வா வநமாக$_3$த: ।
இயம் மமாத்மஜா ராஜந்ஸ்தஸ்யா: குக்ஷௌ விவர்தி$_4$தா ॥ (9)

ப$_4$ர்தாரமநயா ஸார்த$_4$மஸ்யா: ப்ராப்தோऽஸ்மி மார்கி$_3$தும் ।
கந்யாபித்ருத்வம் து$_3$:க$_2$ம் ஹி ஸர்வேஷாம் மாநகாங்க்ஷிணாம் ॥
கந்யா ஹி த்$_3$வே குலே நித்யம் ஸம்ஶயே ஸ்த$_2$ாப்ய திஷ்ட$_2$தி ॥ (10)

புத்ரத்$_3$வயம் மமாப்யஸ்யாம் ப$_4$ார்யாயாம் ஸம்ப$_3$பூ$_4$வ ஹ ।
மாயாவீ ப்ரத$_2$மஸ்தாத து$_3$ந்து$_3$பி$_4$ஸ்தத$_3$நந்தர: ॥ (11)

ஏவம் தே ஸர்வமாக்$_2$யாதம் யத$_2$ா தத்த்வேந ப்ருச்ச$_2$த: ।
த்வாமித$_3$ாநீம் கத$_2$ம் தாத ஜாநீயாம் கோ ப$_4$வாநிதி ॥ (12)

ஏவமுக்தம் து தத்$_3$ரக்ஷோ விநீதமித$_3$மப்$_3$ரவீத் ।
அஹம் பௌலஸ்த்யதநயோ த$_3$ஶக்$_3$ரீவஶ்ச நாமத: ॥
முநேர்விஶ்ரவஸோ யஸ்து த்ருதீயோ ப்$_3$ரஹ்மணோऽப$_4$வத் ॥ (13)

ஏவமுக்தஸ்தத$_3$ா ராம ராக்ஷஸேந்த்$_3$ரேண த$_3$ாநவ: ।
மஹர்ஷேஸ்தநயம் க்ஞாத்வா மயோ ஹர்ஷமுபாக$_3$த: ॥
த$_3$ாதும் து$_3$ஹிதரம் தஸ்மை ரோசயாமாஸ யத்ர வை ॥ (14)

கரேண து கரம் தஸ்யா க்$_3$ராஹயித்வா மயஸ்தத$_3$ா ।
ப்ரஹஸந் ப்ராஹ தை$_3$த்யேந்த்$_3$ரோ ராக்ஷஸேந்த்$_3$ரமித$_3$ம் வச: ॥ (15)

இயம் மமாத்மஜா ராஜந் ஹேமயாப்ஸரஸா த்$_4$ருதா ।
கந்யா மந்தோ$_3$த$_3$ரீ நாம பத்ந்யர்தம் ப்ரதிக்$_3$ருஹ்யதாம் ॥ (16)

ப$_3$ாட$_4$மித்யேவ தம் ராம த$_3$ஶக்$_3$ரீவோऽப்$_4$யப$_4$ாஷத ।
ப்ரஜ்வால்ய தத்ர சைவாக்$_3$நிமகரோத் பாணிஸங்க்$_3$ரஹம் ॥ (17)

ஸ ஹி தஸ்ய மயோ ராம ஶாபாபி$_4$க்ஞஸ்தபோத$_4$நாத் ।
விதி$_3$த்வா தேந ஸா த$_3$த்தா தஸ்ய பைதாமஹம் குலம் ॥ (18)

அமோக$_4$ாம் தஸ்ய ஶக்திம் ச ப்ரத$_3$தௌ$_3$ பரமாத்$_3$பு$_4$தாம் ।
பரேண தபஸா லப்$_3$தா$_4$ம் ஜக்$_4$நிவாம்(ல்)லக்ஷ்மணம் யயா ॥ (19)

ஏவம் ஸ்வீக்ருதத$_3$ாரோ வை லங்காயா ஈஶ்வர: ப்ரபு$_4$: ।
க$_3$த்வா து நக$_3$ரீம் ப$_4$ார்யே ப்$_4$ராத்ருப்$_4$யாம் ஸமுபாஹரத் ॥ (20)

Koviloor Digital Library

நான், அவளுக்காக என்னுடைய அற்புத சக்தியைக் கொண்டு பொன்மயமான ஒரு பட்டணத்தை உருவாக்கினேன். அந்த நகரம் மரகதம், வைடூர்யம் முதலியன இழைக்கப்பட்டுப் பேரழகுடன் விளங்கியது. அந்த நகரத்தில், அவள் பிரிவாற்றாமையைத் தாங்கமாட்டாமல் நான் இதுவரை வசித்து வந்தேன். (8)

அந்தப் பட்டணத்திலிருந்து, பெண்ணையும் அழைத்துக் கொண்டு இந்தக் காட்டுக்கு வந்தேன். இவள், ஹேமாவின் வயிற்றில் பிறந்த பெண். இப்போது தக்க பருவத்தை அடைந்திருக்கிறாள். (9)

இவளுக்கு ஏற்ற ஒரு கணவனைத் தேடிக்கொண்டு, இவளுடன் இங்கு வந்திருக்கிறேன். ஒரு பெண்ணுக்குத் தகப்பனாக இருப்பது என்பது மிகவும் கஷ்டம். முக்கியமாக, சமுதாயத்தில் கௌரவத்தை நிலைநாட்டிக்கொள்ள விரும்புவனுக்கு ரொம்பவும் கஷ்டம். பெண் என்பவள் இரண்டு குலங்களின் பெருமையையும் காப்பாற்ற வேண்டியவளாக இருக்கிறாளல்லவா? (10)

அன்பனே! அந்த ஹேமா மூலமாக எனக்கு இரண்டு புதல்வர்கள் உண்டானார்கள். மூத்தவன் பெயர் மாயாவி; பின்னர் பிறந்தவன் துந்துபி. (11)

நீ என்னைக் கேட்டதற்கு, நான் சரியானபடி பதில் சொல்லிவிட்டேன். அது சரி, நீ யார் என்று நான் தெரிந்துகொள்ள வேண்டுமே? அதை எப்படித் தெரிந்து கொள்வது?'' (12)

இவ்வாறு கேட்கப்பட்டவுடன், அந்த அரக்கன் பணிவுடன் பதில் சொன்னான்— ''நான், புலஸ்தியருடைய புதல்வனான விச்ரவஸின் மைந்தன்; தசக்ரீவன் என்று பெயர். முனிவர் விச்ரவஸ், பிரும்மாவின் மூன்றாவது தலைமுறை.'' (13)

(அகஸ்தியர் கூறுகிறார்—) இராமா! இவ்வாறு அரக்கத் தலைவன் கூறியதும், 'ஒரு மாமுனிவரின் மைந்தன், இவன்!' என்பதை அறிந்து, மயன் மகிழ்ச்சி அடைந்தான். தன்னுடைய மகளை அவனுக்குக் கொடுக்கவும் விரும்பினான். (14)

பின்னர், தானவத் தலைவனான மயன், தன் மகளுடைய கையைப் பிடித்து, அரக்க மன்னன் கையில் கொடுத்து, இளநகை புரிந்தவண்ணம் கூறினான்— (15)

''மன்னரே! இவள் என்னுடைய மகள்; ஹேமா என்ற அப்சரசுக்குப் பிறந்தவள். மண்டோதரி என்ற பெயருடைய இந்தக் கன்னிகையை மனைவியாக ஏற்றுக்கொள்வீராக.'' (16)

இராமபிரானே! தசக்ரீவன், ''சரி'' என்று சம்மதம் தெரிவித்தான். அப்போதே, அக்னியை உண்டாக்கி (அக்னிசாட்சியாக) பாணிக்கிரஹணம் செய்து கொடுத்தான். (17)

ரகுநந்தனா! தவச்செல்வரான விச்ரவஸ், தசக்ரீவனுக்குக் கொடுத்த சாபம் மயனுக்குத் தெரியும். (இவன் குரூர இயல்புடையவன் என்பது தெரியும்.) என்றாலும், பிரும்மாவின் வழிவந்தவன் என்ற எண்ணத்தால் தன் மகளைக் கொடுத்தான். (அவனாகக் கொடுக்காவிட்டால், கொடுமைக்காரனான தசக்ரீவன், வேறு எவரும் இல்லாத காட்டில் ஓர் அழகிய இளம்பெண்ணைப் பார்த்துவிட்டு, அவளை அடையாமல் விடமாட்டான் – என்று, சில விரிவுரையாளர்கள் விளக்கம் கூறியுள்ளார்கள்.) (18)

அத்துடன், தன்னுடைய கடுமையான தவத்தால் பெறப்பட்ட, வீண்போகாத சிறப்பான ஓர் ஆற்றலையும் அவனுக்குக் கொடுத்தான். அந்தச் சிறப்பான சக்தியைக் கொண்டுதான் (இலங்கையில் போர் நடந்தபோது) இலக்குவனைக் காயப்படுத்தித் துன்புறச் செய்தான், தசக்ரீவன். (19)

இவ்வாறு, தான் ஒரு மனைவியை அடைந்து, இலங்கையின் நிகரற்ற தலைமைப் பொறுப்பை ஏற்று, சகோதரர்களுக்கும் தக்க பெண்களை மணமுடித்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான் (இராவணன்). (20)

Koviloor Digital Library

வைரோசநஸ்ய தௌ$_3$ஹித்ரீம் வஜ்ரஜ்வாலேதி நாமத: ।
தாம் ப$_4$ார்யாம் கும்ப$_4$கர்ணஸ்ய ராவண: ஸமகல்பயத் ॥ (21)
க$_3$ந்த$_4$ர்வராஜஸ்ய ஸுதாம் ஶைலூஷஸ்ய மஹாத்மந: ।
ஸரமாம் நாம த$_4$ர்மஜ்ஞாம் லேபே$_4$ ப$_4$ார்யாம் விபீ$_4$ஷண: ॥ (22)
தீரே து ஸரஸோ வை து ஸம்ஜஜ்ஞே மாநஸஸ்ய ஹி ।
ஸரஸ்தத$_3$ா மாநஸம் து வவ்ருதே$_4$ ஜலத$_3$ாக$_3$மே ॥ (23)
மாத்ரா து தஸ்யா: கந்யாயா: ஸ்நேஹேநாக்ரந்தி$_3$தம் வச: ।
ஸரோ மா வர்த$_4$யஸ்வேதி தத: ஸா ஸரமாப$_4$வத் ॥ (24)
ஏவம் தே க்ருதத$_3$ாரா வை ரேமிரே தத்ர ராக்ஷஸா: ।
ஸ்வாம் ஸ்வாம் ப$_4$ார்யாமுபாக$_3$ம்ய க$_3$ந்த$_4$ர்வா இவ நந்த$_3$நே ॥ (25)
ததோ மந்தே$_3$ாத$_3$ரீ புத்ரம் மேக$_4$நாத$_3$மஜீஜநத் ।
ஸ ஏஷ இந்த்$_3$ரஜிந்நாம யுஷ்மாபி$_4$ரபி$_4$தீ$_4$யதே ॥ (26)
ஜாதமாத்ரேண ஹி புரா தேந ராவணஸூநுநா ।
ருத$_3$தா ஸுமஹாந் முக்தோ நாதே$_3$ா ஜலத$_4$ரோபம: ॥
ஜடீ$_3$க்ருதா ச ஸா லங்கா தஸ்ய நாதே$_3$ந ராக$_4$வ ॥ (27)
பிதா தஸ்யாகரோந்நாம மேக$_4$நாத$_3$ இதி ஸ்வயம் ।
ஸோऽவர்த$_4$த தத$_3$ா ராம ராவணாந்த:புரே ஶுபே$_4$ ॥ (28)
ரக்ஷ்யமாணோ வரஸ்த்ரீபி$_4$ஶ்ச$_2$ந்ந: காஷ்டை$_2$ரிவாநல: ।
மாதாபித்ரோர்மஹாஹர்ஷம் ஜநயந் ராவணாத்மஜ: ॥ (29)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்$_3$வாத$_3$ஶ: ஸர்க$_3$: ॥

த்ரயோத$_3$ஶ: ஸர்க$_3$:

த$_4$நத$_3$தூ$_3$தஹநநம்

அத$_2$ லோகேஸ்வரோத்ஸ்ருஷ்டா தத்ர காலேந கேநசித் ।
நித்$_3$ரா ஸமப$_4$வத்தீவ்ரா கும்ப$_4$கர்ணஸ்ய ரூபிணீ ॥ (1)
ததோ ப்$_4$ராதரமாஸீநம் கும்ப$_4$கர்ணோऽப்$_3$ரவீத்$_3$வச: ।
நித்$_3$ரா மாம் ப$_3$ாத$_4$தே ராஜந் காரயஸ்வ மமாலயம் ॥ (2)
விநியுக்தாஸ்ததோ ராஜ்ஞா ஶில்பிநோ விஸ்வகர்மவத் ।
அகுர்வந் கும்ப$_4$கர்ணஸ்ய கைலாஸஸமமாலயம் ॥ (3)
விஸ்தீர்ணம் யோஜநம் ஶுப்$_4$ரம் ததோ த்$_3$விகு$_3$ணமாயதம் ।
த$_3$ர்ஶநீயம் நிராப$_3$ாத$_4$ம் கும்ப$_4$கர்ணஸ்ய சக்ரிரே ॥ (4)

Koviloor Digital Library

விரோசனனின் மைந்தன் பலிச்சக்கரவர்த்தியின் பெண்வழிப் பெயர்த்தியான வஜ்ரஜ்வாலா என்பவளை, கும்பகர்ணனுடைய மனைவியாக ஆக்கினான், இராவணன். (21)

மேன்மை பொருந்திய கந்தர்வ மன்னன் சைலூஷனுடைய புதல்வியும் அறம் அறிந்தவளுமான ஸரமா என்பவளை விபீஷணன், மனைவியாக அடைந்தான். (22)

அவள், மானஸரோவர் கரையில் பிறந்தாள். அப்போது மழைக்காலமானதால், பெருமழை பெய்து ஏரியின் நீர்மட்டம் ஏறிக்கொண்டே வந்தது. 'குழந்தையை மூழ்கடித்துவிடுமோ?' என்ற அச்சத்தில், 'இனிமேலும் பெருகி வளராதே' என்று **(ஸர: மா)** கெஞ்சிக் கூச்சலிட்டாள் (அவள் தாய்). அதனால், அவள் பெயர் ஸரமா என்று ஆயிற்று. (23,24)

இவ்வாறு, மனைவிகளை அடைந்த அரக்கர்கள் மூவரும், தேவலோகப் பூங்காவனத்தில் கந்தர்வ தம்பதிகள் போல, இலங்கையில் ஆனந்தமாகக் காலம் கழிக்கத் தொடங்கினார்கள். (25)

பின்னர் மண்டோதரி, மேகநாதன் என்ற மகவைப் பெற்றாள். அவன்தான், இந்திரஜித் என்ற பெயரால் உங்களால் அழைக்கப்பட்டான். (26)

இராவணன் மகனான அவன் பிறந்தவுடனேயே மேகங்களைப் போல மிகவும் சப்தத்துடன் அலறி அழுதான். இராமபிரானே! அந்தப் பேரொலியால் இலங்கை நகரமே செயலிழந்து ஜடமாக நின்றது! (27)

அவனுடைய தந்தை, அந்தக் குழந்தைக்கு 'மேகநாதன்' என்று பெயர் சூட்டினான். எல்லா வளமும் நிரம்பிய இராவணனுடைய அந்தப்புரத்தில், அந்தக் குழந்தை வளர்ந்தது. (28)

மரக்கட்டைகளால் மூடப்பட்ட அக்னியைப் போல, பொறுப்புள்ள பணிப்பெண்களால் காப்பாற்றப்பட்டு, பெற்றோர்களுக்குப் பெருமகிழ்ச்சியை அளித்து வந்தான், இராவண குமாரன். (29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
பன்னிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதின்மூன்று

குபேரனுடைய தூதன் கொல்லப்பட்டான்!

(அகஸ்தியர் கூறுகிறார்— இராமசந்திரனே!) சில காலம் சென்ற பின்னர், மூவுலகத் தலைவரான பிரும்மாவினால் அனுப்பப்பட்ட நித்ராதேவி (உறக்க தேவதை) கும்பகர்ணனுக்குள் புகுந்து, அவனைத் தீவிரமாக ஆட்கொண்டாள். (1)

அப்போது அரியணையில் அமர்ந்திருந்த அண்ணனைப் பார்த்து, ''மன்னரே! உறக்கம் என்னை மிகவும் படுத்துகிறது. நான் தூங்குவதற்கான இடத்தை ஏற்பாடு செய்து கொடுங்கள்'' என்று கும்பகர்ணன் சொன்னான். (2)

உடனே, விசுவகர்மாவுக்கு இணையான கட்டடக்கலை வல்லுநர்களை அழைத்து ஆணை பிறப்பித்தான். அவர்கள் கும்பகர்ணனுக்காக, கைலாசம் போன்ற மாளிகையைக் கட்டிக் கொடுத்தார்கள். (3)

இரண்டு யோஜனை நீளமும் ஒரு யோஜனை அகலமுள்ளதும், கண்கொண்டு காணத்தக்கதும், சுத்தமானதும், எவ்விதக் குறைகளற்றதுமான மாளிகையை கும்பகர்ணனுக்காகக் கட்டி முடித்தார்கள். (4)

Koviloor Digital Library

ஸ்பாடிகை: காஞ்சனைஸ்சித்ரை: ஸ்தம்பை$_4$: ஸர்வத்ர ஶோபி$_4$தம் ।
வைதூ$_3$ர்யக்ருதஸோபாநம் கிங்கிணீஜாலகம் தத$_2$ா ॥
த$_3$ாந்ததோரணவிந்யஸ்தம் வஜ்ரஸ்ப$_2$டிகவேதி$_3$கம் ॥ (5)

மநோஹரம் ஸர்வஸுக$_2$ம் காரயாமாஸ ராக்ஷஸ: ।
ஸர்வத்ர ஸுக$_2$த$_3$ம் நித்யம் மேரோ: புண்யாம் கு$_3$ஹாமிவ ॥ (6)

தத்ர நித்$_3$ராஸமாவிஷ்ட: கும்ப$_4$கர்ணோ மஹாப$_3$ல: ।
ப$_3$ஹூந்யப்$_3$த$_3$ஸஹஸ்ராணி ஶயாநோ ந ப்ரபு$_3$த்$_4$யதே ॥ (7)

நித்$_3$ராபி$_4$பூ$_4$தே து தத$_3$ா கும்ப$_4$கர்ணே த$_3$ஶாநந: ।
தே$_3$வர்ஷியக்ஷக$_3$ந்த$_4$ர்வாந் ஸஞ்ஜக்$_3$நே ஹி நிரங்குஶ: ॥ (8)

உத்$_3$யாநாநி ச சித்ராணி நந்த$_3$நாதீ$_3$நி யாநி ச ।
தாநி க$_3$த்வா ஸுஸங்க்ருத்$_3$தே$_4$ா பி$_4$நத்தி ஸ்ம த$_3$ஶாநந: ॥ (9)

நதீ$_3$ம் க$_3$ஜ இவ க்ரீட$_3$ந் வ்ருக்ஷாந் வாயுரிவ க்ஷிபந் ।
நக$_3$ாந் வஜ்ர இவோத்ஸ்ருஷ்டோ வித்$_4$வம்ஸயதி ராக்ஷஸ: ॥ (10)

தத$_2$ாவ்ருத்தம் து விஜ்ஞாய த$_3$ஶக்$_3$ரீவம் த$_4$நேஶ்வர: ।
குலாநுரூபம் த$_4$ர்மஜ்ஞோ வ்ருத்தம் ஸம்ஸ்ம்ருத்ய சாத்மந: ॥ (11)

ஸௌப்$_4$ராத்ரத$_3$ர்ஶநார்த$_2$ம் து தூ$_3$தம் வைஶ்ரவணஸ்தத$_3$ா ।
லங்காம் ஸம்ப்ரேஷயாமாஸ த$_3$ஶக்$_3$ரீவஸ்ய வை ஹிதம் ॥ (12)

ஸ க$_3$த்வா நக$_3$ரீம் லங்காமாஸஸாத$_3$ விபீ$_4$ஷணம் ।
மாநிதஸ்தேந த$_4$ர்மேண ப்ருஷ்டஶ்சாக$_3$மநம் ப்ரதி ॥ (13)

ப்ருஷ்ட்வா ச குஶலம் ராஜ்ஞோ ஜ்ஞாதீநாம் ச விபீ$_4$ஷண: ।
ஸப$_4$ாயாம் த$_3$ர்ஶயாமாஸ தமாஸீநம் த$_3$ஶாநநம் ॥ (14)

ஸ த்$_3$ருஷ்ட்வா தத்ர ராஜாநம் தீ$_3$ப்யமாநம் ஸ்வதேஜஸா ।
ஜயேதி வாசா ஸம்பூஜ்ய தூஷ்ணீம் ஸமபி$_4$வர்தத ॥ (15)

தம் தத்ரோத்தமபர்யங்கே வராஸ்தரணஶோபி$_4$தே ।
உபவிஷ்டம் த$_3$ஶக்$_3$ரீவம் தூ$_3$தோ வாக்யமத$_2$ாப்$_3$ரவீத் ॥ (16)

ராஜந் வத$_3$ாமி தே ஸர்வம் ப்$_4$ராதா தவ யத$_3$ப்$_3$ரவீத் ।
உப$_4$யோ: ஸத்$_3$ருஶம் வீர வ்ருத்தஸ்ய ச குலஸ்ய ச ॥ (17)

ஸாது$_4$ பர்யாப்தமேதாவத் க்ருதஶ்சாரித்ரஸங்க்$_3$ரஹ: ।
ஸாது$_4$த$_4$ர்மே வ்யவஸ்த$_2$ாநம் க்ரியதாம் யதி$_3$ ஶக்யதே ॥ (18)

த்$_3$ருஷ்டம் மே நந்த$_3$நம் ப$_4$க்$_3$நம்ருஷயோ நிஹதா: ஶ்ருதா: ।
தே$_3$வதாநாம் ஸமுத்$_2$யோக$_3$ஸ்த்வத்தோ ராஜந் மம ஶ்ருத: ॥ (19)

Koviloor Digital Library

எல்லா இடங்களிலும் பொன்னால் இழைக்கப்பட்ட கவினுறு படிகத்தூண்கள்; வைடூர்யத்தால் செய்யப்பட்ட படிக்கட்டுகள்; எல்லாப் பக்கங்களிலும் இனிய ஒலி எழுப்பும் மணிகள்; யானைத் தந்தத்தாலான நுழைவாயில்; வைர–ஸ்படிகங்களாலான மேடைகள் – இவ்வாறு மனத்தைக் கவர்வதாகவும், எல்லா சுகசாதனங்களும் நிரம்பியதாகவும், எப்போதும் சுகத்தைக் கொடுப்பதாகவும், புனிதமான மேருமலையின் குகை போலும் உள்ள மாளிகையைச் செய்வித்தான், அரக்கன் (இராவணன்). (5,6)

மகாபலசாலியான கும்பகர்ணன் அங்கே உறங்கத் தொடங்கினான். பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உறங்கிய பின்னரும், அவன் விழித்துக் கொள்ளவில்லை. (7)

கும்பகர்ணன் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த காலத்தில், தசக்ரீவனைக் கண்டித்து அறிவுரை கூறும் எவரும் இல்லாததால், தேவர்கள், முனிவர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள் ஆகியோரைக் கொன்று போட்டான். (கும்பகர்ணனுக்கு மட்டுமே இராவணனை எதிர்த்துப் பேசும் தைரியமும் உரிமையும் இருந்தன.) (8)

தேவர்களுடைய நந்தனம் போன்ற மனோகரமான பூங்காக்களுக்குச் சென்று, மிகவும் கோபம் கொண்டு, அவைகளை நாசம் செய்தான்; ஆறுகளில், யானைகளைப் போல் விளையாடிக் கலக்கினான்; பெருங்காற்றைப் போல், மரங்களை வேரோடு பெயர்த்து வீழ்த்தினான்; ஏவி விடப்பட்ட வஜ்ராயுதம் போல மலைகளைத் தகர்த்தான். (9,10)

மூர்க்கத்தனமான அவன் செயல்பாடுகளைக் கேள்விப்பட்ட குபேரன் அறம் தெரிந்தவனாதலால், தன்னுடைய குலத்தின் பெருமையை நினைத்துப் பார்த்து, தான் தமையன் என்ற கடமையை உணர்ந்து, பாசத்தை வெளிப்படுத்தும் வகையில், தசக்ரீவனுக்கு நன்மை செய்யும் எண்ணத்துடன் ஒரு தூதனை இலங்கைக்கு அனுப்பினான். (11,12)

அவன் இலங்கைப் பட்டணத்திற்குச் சென்று, முதலில் விபீஷணனைச் சந்தித்தான். முறைப்படி அவனை வரவேற்ற விபீஷணன், அவன் அங்கு வந்ததற்கான காரணத்தைக் கேட்டான். (13)

விபீஷணன், உற்றார்–உறவினர்களின் நலன் குறித்துக் கேட்டறிந்த பின்னர், அந்த தூதனை அழைத்துக் கொண்டு சென்று, அரியணையில் வீற்றிருந்த தசக்ரீவனுக்கு அறிமுகம் செய்வித்தான். (14)

தன் ஆற்றலினால் மாண்புறத் திகழும் மன்னனைக் கண்டதும், ''மன்னருக்கு வெற்றி உண்டாவதாகுக!'' என்று, சொற்களால் வாழ்த்திவிட்டு மௌனமாக நின்றான், தூதன். (15)

பின்னர், உயர்தர விரிப்புகளால் அழகாக விளங்கும் மிகச்சிறந்த ஆசனத்தில் வீற்றிருந்த தசக்ரீவனைப் பார்த்து, தூதன் சொல்லத் தொடங்கினான்— (16)

''மன்னரே! தங்கள் சகோதரர் குபேரன் சொல்லியனுப்பிய செய்தியை முழுமையாகச் சொல்கிறேன், கேளுங்கள். தங்கள் இருவருடைய பரம்பரையும் ஆசார அனுஷ்டானங்களும் ஒரே மாதிரியாக மேன்மையானவை. (17)

இதுவரை நீ செய்த கொடுமையான செயல்களே, மிக அதிகம்; இவை போதும். இனிமேலாவது அறவழியில் சென்று புண்ணியத்தைச் சம்பாதித்துக் கொள். முடியுமானால் அறவழிக்கு மாறி வந்து, நற்செயல்கள் புரிந்தால் உனக்கு நல்லது ஏற்படும். (18)

தேவலோகப் பூங்காவான நந்தனத்தை நீ பாழாக்கியிருப்பதை நானே கண்களால் பார்த்தேன். முனிவர்கள் உன்னால் கொல்லப்பட்டார்கள் என்றும் கேள்விப்படுகிறேன். (உன்னுடைய அக்கிரமச் செயல்களால் கொதித்துப் போயிருக்கும்) தேவர்கள், மன்னனே! உன்னைப் பழிவாங்கும் முயற்சிகளைத் தொடங்கி இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரிய வந்துள்ளது. (19)

Koviloor Digital Library

நிராக்ருதஶ்ச ப$_3$ஹுஶஸ்த்வயாஹம் ராக்ஷஸாதி$_4$ப ।
ஸாபராதே$_4$ऽபி பா$_3$லோ ஹி ரக்ஷிதவ்ய: ஸ்வபா$_3$ந்த$_4$வை: ॥ (20)

அஹம் து ஹிமவத்ப்ருஷ்ட$_2$ம் க$_3$தோ த$_4$ர்மமுபாஸிதும் ।
ரௌத்$_3$ரம் வ்ருத்தம் ஸமாஸ்தா$_2$ய நியதோ நியதேந்த்$_3$ரிய: ॥ (21)

தத்ர தே$_3$வோ மயா த்$_3$ருஷ்ட: ஸஹ தே$_3$வ்யோமயா ப்ரபு$_4$: ।
ஸவ்யம் சக்ஷுர்மயா தை$_3$வாத்தத்ர தே$_3$வ்யாம் நிபாதிதம் ॥ (22)

கா ந்வியம் ஸ்யாதி$_3$தி ஶுபா$_4$ ந க$_2$ல்வந்யேந ஹேதுநா ।
ரூபம் ஹ்யநுபமம் க்ருத்வா ருத்$_3$ராணீ தத்ர திஷ்ட$_2$தி ॥ (23)

தே$_3$வ்யா தி$_3$வ்யப்ரபா$_4$வேண த$_3$க்$_3$த$_4$ம் ஸவ்யம் மமேக்ஷணம் ।
ரேணுத்$_4$வஸ்தமிவ ஜ்யோதி: பிங்க$_3$ளத்வமுபாக$_3$தம் ॥ (24)

ததோऽஹமந்யத்$_3$விஸ்தீர்ணம் க$_3$த்வா தஸ்ய கி$_3$ரேஸ்தடம் ।
தூஷ்ணீம் வர்ஷஶதாந்யஷ்டௌ ஸமதா$_4$ரம் மஹாவ்ரதம் ॥ (25)

ஸமாப்தே நியமே தஸ்மிந்ஸ்தத்ர தே$_3$வோ மஹேஶ்வர: ।
ப்ரீத: ப்ரீதேந மநஸா ப்ராஹ வாக்யமித$_3$ம் ப்ரபு$_4$: ॥ (26)

ப்ரீதோऽஸ்மி தவ த$_4$ர்மஜ்ஞ தபஸா தேந ஸுவ்ரத ।
மயா சைதத்$_3$வ்ரதம் சீர்ணம் த்வயா சைவ த$_4$நாதி$_4$ப ॥ (27)

த்ருதீய: புருஷோ நாஸ்தி யஶ்சரேத்$_3$வ்ரதமீத்$_3$ருஶம் ।
வ்ரதம் ஸுது$_3$ஷ்கரம் ஹ்யேதந்மயா ஹ்யுத்பாதி$_3$தம் புரா ॥ (28)

தத்ஸகி$_2$த்வம் மயா ஸௌம்ய ரோசயஸ்வ த$_4$நேஶ்வர ।
தபஸா நிர்ஜிதஶ்சாஹம் ஸகா$_2$ மம ப$_4$வாநக$_4$ ॥ (29)

தே$_3$வ்யா த$_3$க்$_3$த$_4$ம் ப்ரபா$_4$வேண யச்ச ஸவ்யம் தவேக்ஷணம் ।
பைங்க$_3$ல்யம் யத$_3$வாப்தம் ஹி தே$_3$வ்யா ரூபநிரீக்ஷணாத் ॥
ஏகாக்ஷிபிங்க$_3$ளேத்யேவம் நாம ஸ்தா$_2$ஸ்யதி ஶாஶ்வதம் ॥ (30)

ஏவம் தேந ஸகி$_2$த்வம் ச ப்ராப்யாநுஜ்ஞாம் ச ஶங்கராத் ।
ஆக$_3$த்ய ச ஶ்ருதோऽயம் மே தவ பாபவிநிஶ்சய: ॥ (31)

தத$_3$த$_4$ர்மிஷ்ட$_2$ஸம்யோகா$_3$ந்நிவர்த குலதூ$_3$ஷணாத் ।
சிந்த்யதே ஹி வதோ$_4$பாய: ஸர்ஷிஸங்கை$_4$: ஸுரைஸ்தவ ॥ (32)

ஏவமுக்தோ த$_3$ஶக்$_3$ரீவ: க்ருத்$_3$த$_4$: ஸம்ரக்தலோசந: ।
ஹஸ்தௌ த$_3$ந்தாம்ஶ்ச ஸம்பீட்$_3$ய வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (33)

விஜ்ஞாதம் தே மயா தூ$_3$த வாக்யம் யஸ்ய ப்ரபா$_4$ஷஸே ।
நைவ த்வமஸி நைவாஸௌ ப்$_4$ராத்ரா யேநாஸி சோதி$_3$த: ॥ (34)

Koviloor Digital Library

அரக்கர் வேந்தனே! நானும், பல தடவை உன்னால் உதாசீனப்படுத்தப்பட்டிருக்கிறேன். இருந்தாலும், ஒரு பாலகன் தவறு செய்தால், உற்றார்–உறவினர் (அவன் குற்றத்தை மறந்து) அவனைக் காப்பாற்ற வேண்டும் (என்ற நீதிக்கு இணங்க, உனக்கு நல்லுரை கூறியிருக்கிறேன்). (20)

நான், பரமசிவனைக் குறித்து கடுமையான தவம் செய்வதற்காக, புலன்களை அடக்கி, கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு, அறவழியில் நிற்பதற்காக, இமயமலைச் சாரலுக்குச் சென்றேன். (21)

அங்கே, பார்வதியுடன்கூட பரமேசுவரன் என்னால் காணப்பட்டார். 'இவர்கள் யார்?' என்று தெரிந்துக் கொள்வதற்காக விதிவசத்தால் இடது கண்ணைத் திறந்து அவர்களைப் பார்த்தேன். எனக்கு வேறு எந்த எண்ணமும் இருக்கவில்லை. ஒப்புவமையில்லாத அழகிய உருவத்துடன், ரௌத்ராணி (ருத்ரனின் பத்னி) அங்கே காணப்பட்டாள். (22,23)

தேவியின் அபாரமான தெய்வீக ஆற்றலால், என்னுடைய இடது கண் எரிந்துபோய்விட்டது; வலதுகண், தூசிகளால் மறைக்கப்பட்டதைப் போல, செம்பட்டை நிறமாக மாறிவிட்டது. (24)

பின்னர், அந்த மலையின் இன்னொரு விசாலமான பகுதியில், மௌனத்தை ஏற்றுக் கொண்டு எண்ணூறு ஆண்டுகள் கடுமையான விரதத்தை மேற்கொண்டேன். (இது கேதார விரதம் என்று கூறப்படுகிறது). (25)

அந்த விரதம் பூரணமாக நிறைவேறியவுடன், ஈசுவரனான சங்கரன் எனக்குத் தரிசனம் கொடுத்தார். மனமகிழ்ந்த அவர், உவகை நிறைந்த மனத்துடன் (பின்வருமாறு) கூறினார்— (26)

'நற்பண்புகளை உடையவனே! அறம் அறிந்தவனே! உன்னுடைய தவத்தினால் நான் மகிழ்ச்சி அடைந்துள்ளேன். செல்வத் தலைவனே! இந்த விரதம் (முன்பு) என்னால் அனுஷ்டிக்கப்பட்டது; இப்போது உன்னாலும் கைக்கொள்ளப்பட்டது. (27)

இத்தகைய கடுமையான விரதத்தைச் செய்வதற்கு மூன்றாவது நபர் இல்லவேயில்லை! செயற்கரிய இந்த விரதத்தை, நான் வெகுகாலத்திற்கு முன் உலகில் வெளிப்படுத்தினேன். (28)

செல்வங்களுக்குத் தலைவனே! சீலம் மிக்கவனே! விருப்பப்பட்டால் நீ, என்னுடைய நண்பனாக இருக்கலாம். குற்றமற்றவனே! கடுமையான தவம் செய்து என்னை வென்றுவிட்டாய். (என் பேரருளுக்குப் பாத்திரமாகிவிட்டாய்.) எனவே, என்னுடைய நண்பனாக இரு. (29)

ஈசுவரியின் தெய்வீக ஆற்றலால் எரிக்கப்பட்ட இடது கண்ணோடு இருப்பதால், ஏகாக்ஷிபிங்கலன் (மஞ்சள் வண்ண ஒற்றைக் கண்ணன்) என்ற நிரந்தரமான பெயருடன் விளங்குவாயாக.' (30)

இவ்வாறு, மகாதேவருடன் நட்பைப் பெற்று, அவர் அனுமதியுடன் என் இருப்பிடத்திற்குத் திரும்பினேன். வந்ததும், உன்னுடைய பாவச் செயல்கள் பற்றிய செய்திகள் செவியில் விழுந்தன. (31)

ஆகவே, பரம்பரைக்கு இழிவைத் தரும் அதருமச் செயல்களை உடனே நிறுத்திவிடு. தேவர்களும் முனிவர்களும் உன்னை மாய்ப்பதற்கான வழிமுறைகளை ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.'' (32)

இதைக் கேட்ட தசக்ரீவன், கோபத்தால் கண்கள் சிவக்க, பற்களைக் கடித்து, கைகளைப் பிசைந்து, பின்வருமாறு கூறினான்— (33)

''தூதனே! நீ சொல்லிய செய்திகளின் உட்கருத்தை நான் புரிந்துகொண்டு விட்டேன். நீ, இனி உயிரோடு இருக்கத்தக்கவன் அல்லன்; உன் மூலம் செய்தி அனுப்பிய சகோதரனும், இனி இருக்கப் போவதில்லை! (34)

Koviloor Digital Library

ஹிதம் நைஷ மமைதத்$_3$தி$_4$ ப்$_3$ரவீதி த$_4$நரக்ஷக: ।
மஹேஸ்வரஸகி$_2$த்வம் து மூட$_4$ ஸ்ராவயஸே கில ॥ (35)

ந சேத$_3$ம் க்ஷமணீயம் மே யதே$_3$தத்$_3$ப$_4$ாஷிதம் த்வயா ।
யதே$_3$தாவந்மயா காலம் தூ$_3$த தஸ்ய து மர்ஷிதம் ॥
ந ஹந்தவ்யோ கு$_3$ருர்ஜ்யேஷ்டே$_2$ா மயாயமிதி மந்யதே ॥ (36)

தஸ்ய த்விதா$_3$நீம் ஸ்ருத்வா மே வாக்யமேஷா க்ருதா மதி: ।
த்ரீந்(ல்)லோகாநபி ஜேஷ்யாமி பா$_3$ஹுவீர்யமுபாஸ்ரித: ॥ (37)

ஏதந்முஹூர்தமேவாஹம் தஸ்யைகஸ்ய து வை க்ருதே ।
சதுரோ லோகபாலாம்ஸ்தாந்நயிஷ்யாமி யமக்ஷயம் ॥ (38)

ஏவமுக்த்வா து லங்கேஸோ தூ$_3$தம் க$_2$ட்$_3$கே$_3$ந ஜக்$_4$நிவாந் ।
த$_3$தௌ$_3$ ப$_4$க்ஷயிதும் ஹ்யேநம் ராக்ஷஸாநாம் து$_3$ராத்மநாம் ॥ (39)

தத: க்ருதஸ்வஸ்த்யயநோ ரத$_2$மாருஹ்ய ராவண: ।
த்ரைலோக்யவிஜயாகாங்க்ஷீ யயௌ யத்ர த$_4$நேஸ்வர: ॥ (40)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்ரயோத$_3$ஸ: ஸர்க$_3$: ॥

சதுர்த$_3$ஸ: ஸர்க$_3$:

யக்ஷரக்ஷோயுத்$_3$த$_4$ம்

ததஸ்து ஸசிவை: ஸார்த$_4$ம் ஷட்$_3$பி$_4$ர்நித்யம் ப$_3$லோத்$_3$த$_4$தை: ।
மஹோதரப்ரஹஸ்தாப்$_4$யாம் மாரீசஸுகஸாரணை: ॥ (1)

தூ$_4$ம்ராக்ஷேண ச வீரேண நித்யம் ஸமரக்$_3$ருத்$_4$நுநா ।
ஸம்வ்ருத: ப்ரயயௌ ஸ்ரீமாந் க்ரோத$_4$ால்லோகாந் த$_3$ஹந்நிவ ॥ (2)

புராணி ஸ நதீ$_3$: ஸைலாந் வநாந்யுபவநாநி ச ।
அதிக்ரம்ய முஹூர்தேந கைலாஸம் கி$_3$ரிமாக$_3$மத் ॥ (3)

ஸந்நிவிஷ்டம் கி$_3$ரௌ தஸ்மிந் ராக்ஷஸேந்த்$_3$ரம் நிஸம்ய து ।
யுத்$_3$தே$_4$ய்தர்த$_2$க்ருதோத்ஸாஹம் து$_3$ராத்மாநம் ஸமந்த்ரிணம் ॥ (4)

யக்ஷா ந ஸேகு: ஸம்ஸ்தா$_2$தும் ப்ரமுகே$_2$ தஸ்ய ரக்ஷஸ: ।
ராக்ஞோ ப்$_4$ராதேதி விக்ஞாய க$_3$தா யத்ர த$_4$நேஸ்வர: ॥ (5)

தே க$_3$த்வா ஸர்வமாசக்$_2$யுர்ப்$_4$ராதுஸ்தஸ்ய சிகீர்ஷிதம் ।
அநுக்ஞாதா யயுர்ஹ்ருஷ்டா யுத்$_3$த$_4$ாய த$_4$நதே$_3$ந தே ॥ (6)

ததோ ப$_3$லாநாம் ஸம்க்ஷோப$_4$: வ்யவர்த$_4$த மஹோத$_3$தே$_4$: ।
தஸ்ய நைர்ருதராஜஸ்ய ஸைலம் ஸஞ்சாலயந்நிவ ॥ (7)

Koviloor Digital Library

குபேரன், என் நலனுக்கு ஏற்ற செய்தியைச் சொல்லவில்லை. முட்டாளே! பரமேசுவரனின் நண்பன் என்று கூறினாய் அல்லவா? (35)

நீ சொன்ன இந்த மிரட்டல் சொற்களை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. 'மூத்தவனைக் கொல்லக்கூடாது' என்ற காரணத்தால், இதுநாள் வரை அவனைக் கொல்லாமல் விட்டு வைத்திருக்கிறேன். (36)

இப்போது, அவனுடைய சொற்களைக் கேட்டதும், என்னுடைய தோள்வலிமையால் மூன்று உலகங்களையும் வெற்றி கொள்ளவேண்டும் என்ற உறுதி மனத்தில் தோன்றியிருக்கிறது. (37)

நான்கு லோகபாலர்களில் (இந்திரன், யமன், வருணன், குபேரன்) ஒருவன் செய்த குற்றத்திற்காக, இந்த முகூர்த்தத்திலேயே அந்த நால்வரையும் யமன் வீட்டுக்கு அனுப்பப் போகிறேன்!'' (38)

இவ்வாறு கூறியபின் இலங்கேசன், தூதனைக் கத்தியால் வெட்டிக் கொன்று, அந்த உடலை கெடுமதியாளர்களான அரக்கர்கள் உண்பதற்காகக் கொடுத்துவிட்டான். (39)

பின்னர், குருமார்களால் வாழ்த்தப் பெற்று ரதத்தில் ஏறினான், இராவணன். மூன்று உலகங்களையும் வெற்றிகொள்ளும் பேராவலுடன், முதலில் குபேரன் இருக்குமிடத்திற்குச் சென்றான். (40)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
பதின்மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதிநான்கு

யக்ஷர்– அரக்கர் போர்

(அகஸ்தியர் சொல்கிறார்—) தங்களுடைய தோள்வலிமையால் எப்போதும் செருக்குடன் இருந்த மகோதரன், பிரஹஸ்தன், மாரீசன், சுகன், ஸாரணன் மற்றும் எப்போதும் போர் செய்வதில் பெருவிருப்பமுடைய வீரன் தூம்ராக்ஷன் ஆகிய ஆறு அமைச்சர்களுடன்கூட, கோபத்தினால் உலகத்தையே எரித்துவிடுபவன் போல வீரத்திருபொருந்திய தசக்ரீவன் சென்றான். (1,2)

பற்பல நகரங்களையும், காடுகள்–நதிகள்–மலைகளையும் வெகு விரைவாகக் கடந்து கைலாச மலையைச் சென்றடைந்தான். (3)

கெடுமதி படைத்த அரக்க மன்னன், போர் தொடுக்கும் தீர்மானத்துடன் தன் அமைச்சர்களோடுகூட கைலாச மலையில் வந்து தங்கியிருக்கிறான் என்பதைக் கேட்ட யக்ஷர்கள், அவனை எதிர்த்து நிற்க இயலாதவரானார்கள். அவன், தங்கள் மன்னரின் சகோதரன் என்பதை நினைத்துப் பார்த்து, (மன்னரிடம் தெரிவிப்பதற்காக) குபேரன் இருந்த இடத்திற்குச் சென்றார்கள். (4,5)

அவர்கள் சென்று, மன்னருடைய சகோதரனின் நோக்கத்தை எடுத்துரைத்தார்கள். குபேரனால் அனுமதி கொடுக்கப்பட்ட அவர்கள், மகிழ்ச்சியுடன் போர் செய்யப் புறப்பட்டார்கள். (6)

யக்ஷ மன்னருடைய படைகள், பெருங்கடல் போல் பெருகத் தொடங்கின. படைகளின் கடுகிய போக்குவரத்தினால் அந்த மலையே நடுக்கம் கண்டது. (7)

Koviloor Digital Library

ததோ யுத்3த4ம் ஸமப4வத்3யக்ஷராக்ஷஸஸங்குலம் ।
வ்யதி2தாஶ்சாப4வம்ஸ்தத்ர ஸசிவா ராக்ஷஸஸ்ய தே ॥ (8)

ஸ த்3ருஷ்ட்வா தாத்3ருஶம் ஸைந்யம் த3ஶக்3ரீவோ நிஶாசர: ।
ஹர்ஷநாத3ாந் ப3ஹூந் க்ருத்வா ஸக்ரோத4ாதப்4யத4ாவத ॥ (9)

யே து தே ராக்ஷஸேந்த்3ரஸ்ய ஸசிவா கே4ாரவிக்ரமா: ।
தேஷாம் ஸஹஸ்ரமேகைகோ யக்ஷாணாம் ஸமயோத4யத் ॥ (10)

ததோ க3த3ாபி4ர்முஸலைரஸிபி4: ஶக்திதோமரை: ।
ஹந்யமாநோ த3ஶக்3ரீவஸ்தத் ஸைந்யம் ஸமக3ாஹத ॥ (11)

ஸ நிருச்ச்2வாஸவத்தத்ர வத்4யமாநோ த3ஶாநந: ।
வர்ஷத்3பி4ரிவ ஜீமூதைர்த4ாராபி4ரவருத்4யத ॥ (12)

ந சகார வ்யத2ாம் சைவ யக்ஷஶஸ்த்ரை: ஸமாஹத: ।
மஹீத4ர இவாம்பே4ாதை3ர்த4ாராஶதஸமுக்ஷித: ॥ (13)

ஸ து3ராத்மா ஸமுத்3யம்ய காலத3ண்டே3ாபமாம் க3த3ாம் ।
ப்ரவிவேஶ தத: ஸைந்யம் நயந் யக்ஷாந் யமக்ஷயம் ॥ (14)

ஸ கக்ஷமிவ விஸ்தீர்ணம் ஶுஷ்கேந்த4நமிவாகுலம் ।
வாதேநாக்3நிரிவாதீ3ப்தோ யக்ஷஸைந்யம் த3த3ாஹ தத் ॥ (15)

தைஸ்து தத்ர மஹாமாத்யைர்மஹோத3ரஶுகாதி3பி4: ।
அல்பாவஶேஷாஸ்தே யக்ஷா: க்ருதா வாதைரிவாம்பு3த3ா: ॥ (16)

கேசித் ஸமாஹதா ப4க்3நா: பதிதா: ஸமரக்ஷிதௌ ।
ஓஷ்ட2ாம்ஶ்ச த3ஶநைஸ்தீக்ஷ்ணைரத3ஶந் குபிதா ரணே ॥ (17)

ஶ்ராந்தாஶ்சாந்யோந்யமாலிங்க்3ய ப்4ரஷ்டஶஸ்த்ரா ரணாஜிரே ।
ஸீத3ந்தி ச தத3ா யக்ஷா: கூலா இவ ஜலேந ஹ ॥ (18)

ஹதாநாம் க3ச்ச2தாம் ஸ்வர்க3ம் யுத்4யதாம் ப்ருதி2வீதலே ।
ப்ரேக்ஷதாம்ருஷிஸங்க4ாநாம் ந ப3பூ4வாந்தரம் தி3வி ॥ (19)

ப4க்3நாம்ஸ்து தாந் ஸமாலக்ஷ்ய யக்ஷேந்த்3ராம்ஸ்து மஹாப3லாந் ।
த4நாத்4யக்ஷோ மஹாப3ாஹு: ப்ரேஷயாமாஸ யக்ஷகாந் ॥ (20)

ஏதஸ்மிந்நந்தரே ராம விஸ்தீர்ணப3லவாஹந: ।
அக3மத் ஸுமஹாந் யக்ஷோ நாம்நா ஸம்யோத4கண்டக: ॥ (21)

தேந சக்ரேண மாரீசோ விஷ்ணுநேவ ரணே ஹத: ।
பதிதோ பூ4தலே ஶைலாத் க்ஷீணபுண்ய இவாம்ப3ராத் ॥ (22)

Koviloor Digital Library

பின்னர், யக்ஷர்களுக்கும் அரக்கர்களுக்குமிடையே பயங்கரமான போர் ஆரம்பமாயிற்று. அரக்க மன்னனுடைய அமைச்சர்கள் மிகவும் துன்பம் அடைந்தார்கள். (8)

தன்னுடைய படை தோல்வியடைவதைக் கண்ட அரக்கன் தசக்ரீவன், பல தடவைகள் சிம்மநாதம் எழுப்பி, (தன் வீரர்களை உற்சாகப்படுத்தி,) மிகவும் கோபத்துடன் எதிரிப்படையினுள்ளே புகுந்து ஓடினான். (9)

அரக்க மன்னனுடைய பயங்கர பராக்கிரமம் படைத்த அமைச்சர்கள் ஒவ்வொருவரும், தனித்தனியே ஆயிரம் யக்ஷர்களுடன் போர் செய்தார்கள். (10)

(யக்ஷர்களின்) கதைகள், உலக்கைகள், கத்திகள், வேல்கள் மற்றும் எறியாயுதங்கள் ஆகியவற்றால் தாக்கப்பட்ட போதிலும், எதிரிப்படையினுள் தசக்ரீவன் புகுந்து சென்றான். (11)

சூல்கொண்ட மேகங்கள் பெருமழையைப் பொழிவதைப் போல, எதிரிகளின் ஆயுதப் பொழிவினால் தாக்கப்பட்டு, மூச்சுவிடக்கூட நேரம் கிடைக்காமல் தசக்ரீவன் முன்னேறிச் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டான். (12)

மழைப் பொழிவினால் இடைவிடாது நீராட்டப்பட்டாலும் சற்றும் கலக்கமடையாத பெருமலையைப் போல், யக்ஷர்களின் சஸ்திரப் பொழிவினால் தாக்கப்பட்ட போதிலும் அவன் கலங்காமல் நின்றான். (13)

கெடுமதியாளனான அவன் (தசக்ரீவன்) காலதண்டம் போன்ற கதையைக் கையில் தாங்கி எதிரிகளின் படையில் புகுந்து, ஏராளமான யக்ஷர்களை யமன் உலகுக்கு அனுப்பி வைத்தான். (14)

பெருங்காற்றினால் வலிவுபெற்ற அக்னியைப் போன்ற அவன், விரவிக் கிடந்த துரும்புகள் போன்றும், சிதறிக்கிடந்த உலர்ந்த கட்டைகள் போன்றுமிருந்த யக்ஷர் படையை எரித்து ஒழித்தான். (15)

அமைச்சர்களான மகோதரன், சுகன் முதலியவர்களால், பெருங்காற்றினால் நாற்புறமும் சிதறடிக்கப்பட்ட மேகம் போல், யக்ஷர்கள் மாய்க்கப்பட்டதால் மிகச்சிலரே எஞ்சியிருந்தார்கள். படைக்கலங்களால் தாக்கப்பட்ட எத்தனையோ யக்ஷர்கள், போர்க்களத்திலேயே வீழ்ந்து கிடந்தார்கள். பற்களால் உதட்டைக் கடித்தவாறு கோபத்துடன் போர் செய்யும்போது இருந்த நிலையில் தரையில் சாய்ந்தார்கள். (16,17)

களைத்துப் போன யக்ஷ வீரர்கள், ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டார்கள். அவர்கள் கையிலிருந்த படைக்கலங்கள் நழுவி விழுந்தன. ஆற்றில் பெருவெள்ளம் பெருக்கெடுத்து வரும்போது கரைகள் சரிந்து விழுவதைப் போல, அவர்கள் சோர்ந்து விழுந்தார்கள். (18)

கொல்லப்பட்டு தேவலோகம் செல்பவர்கள், போர்க்களத்தில் போர் செய்பவர்கள், இந்தக் காட்சிகளைக் காண்பதற்காக வந்து கூடியிருந்த கணக்கிலடங்காத முனிவர்கள் ஆகியோரின் கூட்டங்களால், வானத்தில் இடைவெளியே இல்லாமறபோயிற்று! (19)

மகாவலிமை கொண்ட யக்ஷத் தலைவர்கள் தறிகெட்டு ஓடுவதைக் கண்ட யக்ஷ மன்னன், வேறு சில யக்ஷத் தலைவர்களைப் போர்முனைக்கு அனுப்பி வைத்தான். (20)

இராமனே! இதனிடையில் ஏராளமான படைவீரர்கள்–வாகனங்களுடன்கூட ஸம்யோதகண்டகன் என்ற பெயருள்ள பெருவீரனான யக்ஷன் அங்கு வந்தான். (21)

அவன், சக்ராயுதத்தால் எதிரியைத் தாக்கும் விஷ்ணுவைப் போல, போர்க்களத்தில் மாரீசனைத் தாக்கினான். அந்தத் தாக்குதலைத் தாங்கமாட்டாமல், புண்ணியப் பலனை முற்றிலும் அனுபவித்து முடித்துவிட்டவர்கள் தேவலோகத்திலிருந்து மண்ணுலகத்திற்குத் தள்ளி விடப்பட்டு வீழ்வதைப் போல, அந்த மலையிலிருந்து கீழே தரையில் வீழ்ந்தான். (22)

Koviloor Digital Library

ஸஸம்க்ஞஸ்து முஹூர்தேந ஸ விஶ்ரம்ய நிஶாசர: ।
தம் யக்ஷம் யோத4யாமாஸ ஸ ச ப4க்3ந: ப்ரது3த்3ருவே ॥ (23)

தத: காஞ்சநசித்ராங்க3ம் வைதூ3ர்யரஜஸோக்ஷிதம் ।
மர்யாத3ாம் ப்ரதிஹாராணாம் தோரணாந்தரமாவிஶத் ॥ (24)

தம் து ராஜந் த3ஶக்3ரீவம் ப்ரவிஶந்தம் நிஶாசரம் ।
ஸூர்யப4ாநுரிதி க்2யாதோ த்3வாரபாலோ ந்யவாரயத் ॥ (25)

ஸ வார்யமாணோ யக்ஷேண ப்ரவிவேஶ நிஶாசர: ।
யத3ா து வாரிதோ ராம ந வ்யதிஷ்ட2த் ஸ ராக்ஷஸ: ॥ (26)

ததஸ்தோரணமுத்பாட்ய தேந யக்ஷேண தாடி3த: ।
ருதி4ரம் ப்ரஸ்ரவந் ப4ாதி ஶைலோ த4ாதுஸ்ரவைரிவ ॥ (27)

ஸ ஶைலஶிக2ராபே4ண தோரணேந ஸமாஹத: ।
ஜக3ாம ந க்ஷதிம் வீரோ வரத3ாநாத் ஸ்வயம்பு4வ: ॥ (28)

தேநைவ தோரணேநாத2 யக்ஷஸ்தேநாபி4தாடி3த: ।
நாத்3ருஶ்யத தத3ா யக்ஷோ ப4ஸ்மீக்ருததநுஸ்தத3ா ॥ (29)

தத: ப்ரது3த்3ருவு: ஸர்வே த்3ருஷ்ட்வா ரக்ஷ:பராக்ரமம் ।
ததோ நதீ3ர்கு3ஹாஶ்சைவ விவிஶுர்ப4யபீடி3தா: ॥
த்யக்தப்ரஹரணா: ஶாந்தா விவர்ணவத3நாஸ்தத3ா ॥ (30)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 சதுர்த3ஶ: ஸர்க3: ॥

பஞ்சத3ஶ: ஸர்க3:

ராவணேந புஷ்பகஹரணம்

ததஸ்தாந்(ல்)லக்ஷ்ய வித்ரஸ்தாந் யக்ஷேந்த்3ராம்ஶ்ச ஸஹஸ்ரஶ: ।
த4நாத்4யக்ஷோ மஹாயக்ஷம் மாணிப4த்3ரமத2ாப்3ரவீத் ॥ (1)

ராவணம் ஜஹி யக்ஷேந்த்3ர து3ர்வ்ருத்தம் பாபசேதஸம் ।
ஶரணம் ப4வ வீராணாம் யக்ஷாணாம் யுத்3த4ஶாலிநாம் ॥ (2)

ஏவமுக்ததோ மஹாப3ாஹுர்மாணிப4த்3ர: ஸுது3ர்ஜய: ।
வ்ருதோ யக்ஷஸஹஸ்ரைஸ்து சதுர்பி4: ஸமயோத4யத் ॥ (3)

தே க3த3ாமுஸலப்ராஸை: ஶக்திதோமரமுத்3க3ரை: ।
அபி4க்4நந்தஸ்தத3ா யக்ஷா ராக்ஷஸாந் ஸமுபாத்3ரவந் ॥ (4)

குர்வந்தஸ்துமுலம் யுத்3த4ம் சரந்த: ஶ்யேநவல்லகு4 ।
ப3ாட4ம் ப்ரயச்ச2 நேச்ச2ாமி தீ3யதாமிதி ப4ாஷிண: ॥ (5)

Koviloor Digital Library

சிறிதுநேரம் சென்று தன்னுணர்வு பெற்று களைப்பாறிய பின் அரக்கன் மாரீசன், அதே யக்ஷனுடன் போர் புரிந்தான். அவன் வலிமை இழந்து (போர்க்களத்திலிருந்து) ஓடிப் போனான். (23)

பின்னர், அவன் (தசக்ரீவன்) பொன் வேலைப்பாடுகள் செய்யப்பட்டதும் வைடூர்யம்–வெள்ளி இழைக்கப்பட்டதுமான தோரணவாயிலைக் கடந்து, காவலர்களால் காக்கப்படும் எல்லையை மீறிச்சென்று உள்ளே புகுந்தான். (24)

மாமன்னர் இராமனே! அரக்கன் தசக்ரீவன் உள்ளே நுழைவதைக் கண்ட புகழ்பெற்ற வாயிற்காவலனாகிய சூரியபானு என்பவன் அவனைத் தடுத்து நிறுத்தினான். (25)

யக்ஷனால் தடுக்கப்பட்டாலும் அரக்கன் உள்ளே புகுந்தான். இராமா! தான் தடுக்கப்படுவதைப் பொருட்படுத்தாமல் உள்ளே நுழைந்த அரக்கனைக் கண்டு, அந்த யக்ஷன் ஒரு தூணைப் பிடுங்கி அவன்மேல் எறிந்தான். செந்நிற தாதுக்களைப் பொழியும் மலையைப் போல, இரத்தம் பெருகியோட அவன் நிலைகுலையாமல் நின்றான். (26,27)

ஒரு மலைச்சிகரம் போல் விளங்கிய பெரிய தூணினால் தாக்கப்பட்ட போதிலும், பிரும்மாவிடமிருந்து பெற்றிருந்த வரத்தின் மகிமையால், அந்த வீரன் (தசக்ரீவன்) எவ்விதத்திலும் பாதிக்கப்படவில்லை. அதே தூணினால், அந்த அரக்கனால் திருப்பித் தாக்கப்பட்ட அந்த யக்ஷன், உடல் சாம்பலாகிப் போய், பின்னால் கண்ணில்படவே இல்லை! (28,29)

பின்னர், அரக்கனின் எல்லையற்ற பேராற்றலைக் கண்ட யக்ஷ வீரர்கள் எல்லோரும் ஓடிப்போனார்கள். அச்சங்கொண்ட அவர்கள் ஆற்றில் வீழ்ந்தார்கள். குகைகளில் பதுங்கிக் கொண்டார்கள். படைக்கலங்களை உதறிவிட்டு, போர் செய்யும் எண்ணத்தைத் துறந்து, முகம் வெளிறிப் போனார்கள். (30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
பதிநான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினைந்து

இராவணன், புஷ்பக விமானத்தைக் கவர்ந்து சென்றான்!

ஆயிரக்கணக்கான யக்ஷ வீரர்கள் பயங்கொண்டு, போர்க்களத்திலிருந்து ஓடுவதைக் கண்ட குபேரன், பெருமைமிக்க மாணிபத்ரன் என்ற யக்ஷனை நோக்கிக் கூறினான்— (1)

''யக்ஷத் தலைவனே! தீயமதி கொண்டவனும் கெட்ட நடத்தை உடையவனுமான இராவணனைக் கொல்வாயாக. (ஓடி ஒளிந்தவர்களைத் தவிர மிகுந்திருக்கும்) போர்செய்ய விருப்பமுள்ள யக்ஷ வீரர்களுக்கு அடைக்கலம் கொடு. (அவர்களைக் காப்பாற்று.)'' (2)

இவ்வாறு தோள்வலிமிக்க மாணிபத்ரன் ஆணையிடப்பட்டவுடன், நான்காயிரம் யக்ஷவீரர்களுடன் சென்று போரிடத் தொடங்கினான். (3)

அவர்கள் (யக்ஷர்கள்) கதைகள், உலக்கைகள், ஈட்டி, வேல், எறியாயுதம், இரும்பாலான கதாயுதம் ஆகியவற்றால் அரக்கர்களைக் கடுமையாகத் தாக்கி ஓட்டி விரட்டினார்கள். (4)

ராஜாளியைப் போல் சிரமப்படாமல் கோரமாகப் போர் செய்துகொண்டு திரிந்து வந்தார்கள். முதல் அணியில் இடம் கிடைக்காதவன், ''எனக்கும் கொஞ்சம் சண்டை போட இடம் கொடு'' என்று கெஞ்சினான். ஒருவன், ''என் இடத்தை விட்டுவிட்டுப் பின்னால் போக மாட்டேன்'' என்றான். இன்னொருவன், ''என்னிடம் என் ஆயுதத்தைக் கொடு'' என்று கேட்டான். (5)

Koviloor Digital Library

ததோ தே3வா: ஸக3ந்த4ர்வா ருஷயோ: ப்3ரஹ்மவாதி3ந: ।
த்3ருஷ்ட்வா தத்துமுலம் யுத்3த4ம் பரம் விஸ்மயமாக3மந் ॥ (6)

யக்ஷாணாம் து ப்ரஹஸ்தேந ஸஹஸ்ரம் நிஹதம் ரணே ।
மஹோதா3ரேண சாநிந்த்3யம் ஸஹஸ்ரமபரம் ஹதம் ॥ (7)

க்ருத்3தே4ந ச தத்3ா ராஜந் மாரீசேந யுயுத்ஸுநா ।
நிமேஷாந்தரமாத்ரேண த்3வே ஸஹஸ்ரே நிபாதிதே ॥ (8)

க்வ ச யக்ஷார்ஜவம் யுத்3த4ம் க்வ ச மாயாப3லாஶ்ரயம் ।
ரக்ஷஸாம் புருஷவ்யாக்4ர தேந தே஽ப்4யதி4கா யுதி4 ॥ (9)

தூ4ம்ராக்ஷேண ஸமாக3ம்ய மாணிப4த்3ரோ மஹாரணே ।
முஸலேநோரஸி க்ரோத4ாத்தாடி3தோ ந ச கம்பித: ॥ (10)

ததோ க3த3ாம் ஸமாவித்4ய மாணிப4த்3ரேண ராக்ஷஸ: ।
தூ4ம்ராக்ஷஸ்தாடி3தோ மூர்த்4நி விஹ்வல: ஸ பபாத ஹ ॥ (11)

தூ4ம்ராக்ஷம் தாடி3தம் த்3ருஷ்ட்வா பதிதம் ஶோணிதோக்ஷிதம் ।
அப்4யத4ாவத ஸங்க்3ராமே மாணிப4த்3ரம் த3ஶாநந: ॥ (12)

தம் க்ருத்3த4மபி4த4ாவந்தம் மாணிப4த்3ரோ த3ஶாநநம் ।
ஶக்திபி4ஸ்தாட3யாமாஸ திஸ்ருபி4ர்யக்ஷபுங்க3வ: ॥ (13)

தாடி3தோ மாணிப4த்3ரஸ்ய முகுடே ப்ராஹரத்3ரணே ।
தஸ்ய தேந ப்ரஹாரேண முகுடம் பார்ஶ்வமாக3தம் ॥ (14)

தத: ஸம்யுத்4யமாநேந விஷ்டப்3தே4ா ந வ்யகம்பத ।
தத3ா ப்ரப்4ருதி யக்ஷோ஽ஸௌ பார்ஶ்வமௌலிரிதி ஸ்ம்ருத: ॥ (15)

தஸ்மிம்ஸ்து விமுகே2 யக்ஷே மாணிப4த்3ரே மஹாத்மநி ।
ஸந்நாத3: ஸுமஹாந் ராஜந்ஸ்தஸ்மிஞ்ஶைலே஽வ்யவர்தத ॥ (16)

ததோ தூ3ராத் ப்ரத3த்3ருஶே த4நாத்4யக்ஷோ க3த3ாத4ர: ।
ஶுக்ரப்ரோஷ்ட2பத3ாப்4யாம் ச ஶங்க2பத்3மஸமாவ்ருத: ॥ (17)

ஸ த்3ருஷ்ட்வா ப்4ராதரம் ஸங்க்2யே ஶாபாத்3விப்4ரஷ்டகௌ3ரவம் ।
உவாச வசநம் தீ4மாந் யுக்தம் பைதாமஹே குலே ॥ (18)

யந்மயா வார்யமாணஸ்த்வம் நாவக3ச்ச2ஸி து3ர்மதே ।
பஶ்சாத3ஸ்ய ப2லம் ப்ராப்ய ஜ்ஞாஸ்யஸே நிரயம் க3த: ॥ (19)

யோ ஹி மோஹாத்3விஷம் பீத்வா நாவக3ச்ச2தி து3ர்மதி: ।
ஸ தஸ்ய பரிணாமாந்தே ஜாநீதே கர்மண: ப2லம் ॥ (20)

Koviloor Digital Library

அப்போது, தேவ–கந்தர்வ–முனிவர்கள் கோரமான அந்தப் போரைப் பார்த்து, ஆச்சரியத்தில் மூழ்கிப் போனார்கள். (6)

பிரஹஸ்தன் ஆயிரம் யக்ஷர்களைக் கொன்றான்; மகோதரன் முன்னேறிச் சென்று மேலும் ஆயிரம் பேர்களை மாய்த்தான். (7)

இராமப்பிரபுவே! மிகவும் கோபத்தோடு போர்புரிந்த மாரீசனால், ஒரு நொடிப்பொழுதில் இரண்டாயிரம் பேர்கள் வீழ்த்தப்பட்டார்கள். (8)

புலிநிகர் ஆண்மையாளனே! நேர்மையாகப் போர்புரியும் யக்ஷர்கள் எங்கே? மறைந்திருந்து தாக்கும் மாய சக்தி படைத்த அரக்கர்கள் எங்கே? மாயைத் திறமையால் அரக்கர்கள் வலிமையை நிலைநாட்டினார்கள். (9)

போர்க்களத்தில், தூம்ராக்ஷன் மிகவும் கோபத்துடன் மாணிபத்ரனின் மார்பை உலக்கையால் தாக்கினான். என்றாலும், அவன் தளர்ந்து போகவில்லை. (10)

அப்போது, மாணிபத்ரன் கதாயுதத்தால் தூம்ராக்ஷனின் தலையில் தாக்கினான். அதனால், நிலைகுலைந்த அவன் கீழே விழுந்தான். (11)

அடிபட்டு கீழே விழுந்து இரத்தம் தோய்த்து கிடக்கும் தூம்ராக்ஷனைப் பார்த்ததும் தசக்ரீவன், மாணிபத்ரனை நோக்கி எதிர்த்து வந்தான். (12)

கோபம் நிரம்பிய தசக்ரீவன் தன்னைத் தாக்குவதற்காக ஓடிவருவதைக் கண்ட யக்ஷத் தலைவனான மாணிபத்ரன், அவன் மேல் மூன்று வேலாயுதங்களை வீசினான். அதனால் காயப்படுத்தப்பட்ட தசக்ரீவன், மாணிபத்ரனின் கிரீடத்தின் மீது ஓங்கியடித்தான். அவனுடைய பலமான தாக்குதலால் மாணிபத்ரனுடைய தலை ஒருபுறமாகச் சாய்ந்துவிட்டது. (13,14)

போர்புரிந்து கொண்டிருந்த அவன் செயலற்றுப் போனான்; ஆனால், கலங்கிப் போய்விடவில்லை. அது முதற்கொண்டு, அந்த யக்ஷனுக்கு 'சாய்ந்த தலையன்' (பார்ச்வமௌலி) என்ற பெயர் ஏற்பட்டது. (15)

இராமப்பிரபு! பெருவீரனான யக்ஷன் மாணிபத்ரன் போர்க்களத்திலிருந்து வெளியேறிச் சென்றான். உடனே, அரக்கர் பக்கத்திலிருந்து வெற்றி முழக்கம் மலையில் எதிரொலித்தது. அப்போது, செல்வங்களுக்கு அதிபதியும் கதையைத் தாங்கியவனுமான குபேரன், சுக்ரன் மற்றும் ப்ரோஷ்டபதன் என்ற அமைச்சர்களுடனும், சங்கநிதி–பதுமநிதிகளின் அபிமானி தேவதைகளுடனும் புடைசூழ தொலைவில் வந்து கொண்டிருந்தான். (16,17)

(தன்னுடைய தமையனார் தன்னை நோக்கி வருவதைப் பார்த்தவுடனேயே, தம்பியான தசக்ரீவன் அவரை வரவேற்று வணங்கியிருக்க வேண்டும். ஆனால், அவன் அவ்விதம் மரியாதை காட்டவில்லை.) விச்ரவஸ் முனிவரின் சாபத்தினால் கொடிய இயல்புகளைப் பெற்றுவிட்ட, நன்னெறிகளிலிருந்து நழுவிய தம்பியைப் போர்க்களத்தில் பார்த்த மேன்மைக் குணங்கள் நிறைந்த குபேரன், தான்தோன்றியான பிரும்மாவின் குலத்திற்கேற்ற நல்லுரைகளைக் கூறினான்— (18)

''தீய மதி படைத்தவனே! இழிசெயல்களைச் செய்யக்கூடாது என்று என்னால் தடுக்கப்பட்டதைப் பொருட்படுத்தாமல் இருக்கிறாய். ஆனால், எதிர்காலத்தில், நீ செய்துள்ள கொடிய செயல்களின் விளைவாக நரகத்தில் விழும்போது, என் அறிவுரைகளை எண்ணிப் பார்ப்பாய். (19)

குறைமதியாளனான ஒருவன், மனமயக்கத்தால் உண்மை தெரியாமல் விஷத்தைக் குடித்து விட்டானானால், அதன் விளைவை அனுபவிக்க நேரும்போது, அந்த உண்மையை அறிந்து கொள்வான். (20)

Koviloor Digital Library

தே3வதா நாபி4நந்த3ந்தி த4ர்மயுக்தேந கேநசித் ।
யேந த்வமீத்3ருஶம் பா4வம் நீத: ஸந்நாவபு3த்4யஸே ॥ (21)

மாதரம் பிதரம் யோ ஹி ஆசார்யம் சாவமந்யதே ।
ஸ பஶ்யதி ப2லம் தஸ்ய ப்ரேதராஜவஶம் க3த: ॥ (22)

அத்4ருவே ஹி ஶரீரே யோ ந கரோதி தபோऽர்ஜநம் ।
ஸ பஶ்சாத்தப்யதே மூடோ4 ம்ருதோ த்3ருஷ்ட்வாத்மநோ க3திம் ॥ (23)

த4ர்மாத்3ராஜ்யம் த4நம் ஸௌக்2யமத4ர்மாத்3து3:க2மேவ ச ।
தஸ்மாத்3த4ர்மம் ஸுகா2ர்தா2ய குர்யாத் பாபம் விஸர்ஜயேத் ॥ (24)

பாபஸ்ய ஹி ப2லம் து3:க2ம் தத்3போ4க்தவ்யமிஹாத்மநா ।
தஸ்மாதா3த்மாபகா4தார்த2ம் மூட4: பாபம் கரிஷ்யதி ॥ (25)

கஸ்யசிந்ந ஹி து3ர்பு3த்3தே4ஶ்ச2ந்த3தோ ஜாயதே மதி: ।
யாத்3ருஶம் குருதே கர்ம தாத்3ருஶம் ப2லமஶ்நுதே ॥ (26)

பு3த்3தி4ம் ரூபம் ப3லம் புத்ராந் வித்தம் தீ4ரத்வமேவ ச ।
ப்ராப்நுவந்தி நரா லோகே நிர்ஜிதம் புண்யகர்மபி4: ॥ (27)

ஏவம் நிரயகா3மீ த்வம் யஸ்ய தே மதிரீத்3ருஶீ ।
ந த்வாம் ஸமபி4பா4ஷிஷ்யேऽஸத்3வ்ருத்தேஷ்வேஷ நிர்ணய: ॥ (28)

ஏவமுக்தாஸ்ததஸ்தேந தஸ்யாமாத்யா: ஸமாஹதா: ।
மாரீசப்ரமுகா2: ஸர்வே விமுகா2 விப்ரது3த்3ருவு: ॥ (29)

ததஸ்தேந த3ஶக்3ரீவோ யக்ஷேந்த்3ரேண மஹாத்மநா ।
க3தா3யாபி4ஹதோ மூர்த்4நி ந ச ஸ்தா2நாத் ப்ரகம்பித: ॥ (30)

ததஸ்தௌ ராம நிக்4நந்தௌ ததா3ந்யோந்யம் மஹாம்ருதே4 ।
ந விஹ்வலௌ ந ச ஶ்ராந்தௌ ப3பூ4வதுரமர்ஷணௌ ॥ (31)

ஆக்3நேயமஸ்த்ரம் தஸ்மை ஸ முமோச த4நத3ஸ்ததா3 ।
ராக்ஷஸேந்த்3ரோ வாருணேந தத3ஸ்த்ரம் ப்ரத்யவாரயத் ॥ (32)

ததோ மாயாம் ப்ரவிஷ்டோऽஸௌ ராக்ஷஸீம் ராக்ஷஸேஶ்வர: ।
ரூபாணாம் ஶதஸாஹஸ்ரம் விநாஶாய சகார ச ॥ (33)

வ்யாக்4ரோ வராஹோ ஜீமூத: பர்வத: ஸாக3ரோ த்3ரும: ।
யக்ஷோ தை3த்யஸ்வரூபீ ச ஸோऽத்3ருஶ்யத த3ஶாநந: ॥ (34)

ப3ஹூநி ச கரோதி ஸ்ம த்3ருஶ்யந்தே ந த்வஸௌ தத: ।
ப்ரதிக்3ருஹ்ய ததோ ராம மஹத3ஸ்த்ரம் த3ஶாநந: ॥
ஜகா4ந மூர்த்4நி த4நத3ம் வ்யாவித்4ய மஹதீம் க3தா3ம் ॥ (35)

Koviloor Digital Library

உன்னுடைய கருத்துப்படி, 'இது அறச்செயல்' என்று நீ செய்துள்ள எந்தக் கர்மாவினாலும் தேவதைகள் மனம் மகிழவில்லை. அதனால், கொடிய இயல்பை நீ அடைந்தும்கூட, அதைப் பற்றி அறியாமல் இருக்கிறாய். தாய்–தந்தை–ஆசார்யர்களைக் கௌரவிக்காதவன், யமன் கைப்பிடியில் சிக்கிக்கொண்ட பின், அதன் விளைவை உணர்ந்து கொள்வான். (21,22)

உடல் நிலையற்றது; அது நல்லநிலையில் இருக்கும்போதே தவம் (நற்செயல்கள்) செய்து புண்ணியம் தேடிக் கொள்ளாத மதியீனன், இறந்தபின் தனக்கு ஏற்படும் துன்பநிலைகளை அனுபவிக்கும் போது மனம் வெதும்புகிறான். (23)

தருமத்திலிருந்துதான் (அறவழியைக் கடைப்பிடித்தால்தான்) அரசாட்சி, செல்வம், சுகம் முதலியன அடையப்படுகின்றன. அதருமத்திலிருந்து துன்பம்தான் அடையப்படும். ஆகவே, சுக–சௌக்கியங்களை அனுபவிப்பதற்காக அறம் புரியவேண்டும். பாவத்தை (அறம் அல்லாததை) விலக்கவேண்டும். (24)

பாவத்தின் பரிசு, துயரம். அதை (துயரத்தை) அவன் இங்கே அனுபவிக்கத்தான் வேண்டும். ஆதலால், அறிவுகெட்ட மனிதன், தன்னைத் தானே மாய்த்துக் கொள்வதற்காக (தற்கொலை செய்து கொள்வதற்காக) பாவம் செய்கிறான். (25)

கெட்ட எண்ணமுடைய எவருக்கும், நல்ல குணம் என்பது (நற்கர்மங்கள் செய்யாமலும் பெரியோர்களுக்குப் பணிவிடை செய்யாமலும்) தானாக உண்டாகி விடுவதில்லை. எத்தகைய செயல்களைச் செய்கிறானோ, அதற்கேற்ற பலன்களையே அனுபவிக்கிறான். (26)

நல்லறிவு, தோற்றம், வலிமை, மக்கட்செல்வம், பொருள், அஞ்சாமை ஆகியவற்றை உலகில் புண்ணியச் செயல்களைச் செய்து மக்கள் பெறுகிறார்கள். (27)

நரகத்தை அடையப் போகும் நீ, இவ்வாறு அக்கிரமச் செயல்களைத் தடையின்றி செய்யும் எண்ணத்துடன் செயல்படுகிறாய். நெறி தவறியவனோடு பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ளக் கூடாது என்பது அறவிதி. ஆதலால், இனி உன்னுடன் பேசப் போவதில்லை.'' (28)

பின்னர், இதே வார்த்தைகளை அங்கே கூடியிருந்த அமைச்சர்களிடமும் குபேரன் கூறினான். அதைக் கேட்டதும், மாரீசன் முதலியோர் போர் புரியவிரும்பாமல் வேகமாக வெளியே ஓடிச் சென்றுவிட்டார்கள். (29)

பிறகு, யக்ஷ மன்னனான மகாத்மா குபேரன், தசக்ரீவன் தலையில் கதையால் தாக்கினான். அவன் காயம் அடைந்தாலும்கூட, தன்னிலையில் ஆட்டம் காணவில்லை. (30)

இராமசந்திரனே! போர்க்களத்தில், அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் பலமாகத் தாக்கிக் கொண்டார்கள். ஆனால், கொஞ்சமும் கலங்கவில்லை; அயரவில்லை. பொறுமை இழந்து போனார்கள். (தோற்கடிப்பதில் காலதாமதம் ஆகிறதே? – என்ற காரணத்தால் அவசரப்பட்டார்கள்.) (31)

குபேரன், அவன் (தசக்ரீவன்) மேல் ஆக்னேயாஸ்திரத்தை விடுத்தான். அரக்கர்கோன், வாருணாஸ்திரத்தை ஏவி, அதைத் தடுத்து நிறுத்தினான். (32)

உடனே, அரக்கர் மன்னன், அரக்கத்தனமான மாயையை மேற்கொண்டு, அவனை அழிப்பதற்காக லட்சக்கணக்கான உருவங்களை எடுத்துக் கொண்டான். (33)

(அப்போது) புலி, பன்றி, மேகம், மலை, கடல், மரம், யக்ஷன், அசுரன் முதலிய பல வடிவங்களில் தசக்ரீவன் தோற்றமளித்தான். (34)

இவ்வாறு அவன் பல வடிவங்களை உண்டாக்கினான். ஆனால், அவன் மட்டும் கண்ணில் படவேயில்லை. இராமா! பின்னர், பத்துத்தலையன் பெரிய அஸ்திரத்தை எடுத்துக் கொண்டான். பெரிய கதையைச் சுழற்றி குபேரனின் தலையில் தாக்கினான். (35)

Koviloor Digital Library

ஏவம் ஸ தேநாபி$_4$ஹதோ விஹ்வல: ஶோணிதோக்ஷித: ।
க்ருத்தமூல இவாஶோகோ நிபபாத த$_4$நாதி$_4$ப: ॥ (36)

தத: பத்$_3$மாதி$_3$பி$_4$ஸ்தத்ர நிதி$_4$பி$_4$: ஸ தத$_3$ாவ்ருத: ।
த$_4$நதே$_3$ாச்ச$_2$வாஸிதஸ்தைஸ்து வநமாநீய நந்த$_3$நம் ॥ (37)

நிர்ஜித்ய ராக்ஷஸேந்த்$_3$ரஸ்தம் த$_4$நத$_3$ம் ஹ்ருஷ்டமாநஸ: ।
புஷ்பகம் தஸ்ய ஜக்$_3$ராஹ விமாநம் ஜயலக்ஷணம் ॥ (38)

காஞ்சநஸ்தம்ப$_4$ஸம்வீதம் வைதூ$_3$ர்யமணிதோரணம் ।
முக்தாஜாலப்ரதிச்ச$_2$ந்நம் ஸர்வகாமப$_2$லப்ரத$_3$ம் ॥ (39)

மநோஜவம் காமக$_3$மம் காமரூபம் விஹங்க$_3$மம் ।
மணிகாஞ்சநஸோபாநம் தப்தகாஞ்சநவேதி$_3$கம் ॥ (40)

தே$_3$வோபவாஹ்யமக்ஷய்யம் ஸதா$_3$ த்$_3$ருஷ்டிமந:ஸுக$_2$ம் ।
ப$_3$ஹ்வாஶ்சர்யம் ப$_4$க்திசித்ரம் ப்$_3$ரஹ்மணா பரிநிர்மிதம் ॥ (41)

நிர்மிதம் ஸர்வகாமைஸ்து மநோஹரமநுத்தமம் ।
ந து ஶீதம் ந சோஷ்ணம் ச ஸர்வர்துஸுக$_2$த$_3$ம் ஶுப$_4$ம் ॥ (42)

ஸ தம் ராஜா ஸமாருஹ்ய காமக$_3$ம் வீர்யநிர்ஜிதம் ।
ஜிதம் த்ரிபு$_4$வநம் மேநே த$_3$ர்போத்ஸேகாத் ஸுது$_3$ர்மதி: ॥
ஜித்வா வைஶ்ரவணம் தே$_3$வம் கைலாஸாத் ஸமவாதரத் ॥ (43)

ஸ்வதேஜஸா விபுலமவாப்ய தம் ஜயம்
ப்ரதாபவாந் விமலகிரீடஹாரவாந் ।
ரராஜ வை பரமவிமாநமாஸ்தி$_2$தோ
நிஶாசர: ஸத$_3$ஸி க$_3$தோ யத$_2$ாநல: ॥ (44)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ பஞ்சத$_3$ஶ: ஸர்க$_3$: ॥

ஷோட$_3$ஶ: ஸர்க$_3$:

ராவணநாமப்ராப்தி:

ஸ ஜித்வா த$_4$நத$_3$ம் ராம ப்$_4$ராதரம் ராக்ஷஸாதி$_4$ப: ।
மஹாஸேநப்ரஸூதிம் தத்$_3$யயௌ ஶரவணம் மஹத் ॥ (1)

அத$_2$ாபஶ்யத்$_3$த$_3$ஶக்$_3$ரீவோ ரௌக்மம் ஶரவணம் மஹத் ।
க$_3$ப$_4$ஸ்திஜாலஸம்வீதம் த்$_3$விதீயமிவ ப$_4$ாஸ்கரம் ॥ (2)

Koviloor Digital Library

செல்வத்திற்கு அதிபதியான குபேரன், இவ்வாறு பலமாகத் தாக்கப்பட்டதும் நிலைதடுமாறி, இரத்தத்தால் உடல் நனைய, வேருடன் வெட்டப்பட்ட அசோகமரம் போல் கீழே விழுந்தான். அப்போது, பதுமநிதி முதலிய நிதிகளின் அதிஷ்டான தேவதைகள் அவனைச் சூழ்ந்து கொண்டு, நந்தனப் பூங்காவுக்கு எடுத்துச் சென்று சுயநினைவு பெறச் செய்தார்கள். (36,37)

குபேரனை வென்றுவிட்ட அரக்க மன்னன் மனம் மகிழ்ந்தான். தன் வெற்றிக்கு நினைவுப் பரிசாக, அவனுடைய புஷ்பக விமானத்தைத் தன்வசமாக்கிக் கொண்டான். (38)

(அந்த புஷ்பக விமானமானது) தங்கத்தால் செய்யப்பட்ட தூண்களையும், வைடூர்யத்தால் இழைக்கப்பட்ட நுழைவாயில்களையும், எல்லாப் பக்கங்களிலும் முத்துச்சரங்களால் மறைப்புத் தட்டிகளையும் உடையது; எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றித் தருவது; (39)

மனோவேகம்; யஜமானனின் விருப்பப்படி எல்லா இடங்களுக்கும் செல்லும் தனிச்சிறப்பு; செலுத்துபவரின் தேவைக்கேற்றபடி குறுகவும் விரிவடையவும் கூடியது; பரந்த வான்வெளியில் பறந்து செல்லும் சக்தி கொண்டது; இரத்தினம், தங்கம் இழைக்கப்பட்ட படிக்கட்டுகள்; உருக்கி வார்த்த பொன்னாலான மேடைகள்; (40)

தேவதைகளையே சுமந்து செல்லக் கூடியது; எப்போதும் பார்வைக்கும் மனத்திற்கும் சுகம் அளிப்பது; பலவித அதிசயங்களைக் கொண்டது; சுவர்களில் பல்வகையான கண்கவர் ஓவியங்கள்; பிரும்மா(விசுவகர்மா)வினால் நன்கு சிந்தித்து உண்டாக்கப்பட்டது; (41)

மனம் விரும்பும் எல்லாப் பொருள்களும் நிறைந்தது; மனத்தைக் கொள்ளை கொள்வது; இணையில்லாதது; மிகவும் வெப்பமும் தட்பமும் இல்லாமல், எல்லாப் பருவ காலங்களிலும் உடலுக்கு சுகமான சூழலை அளிக்கக்கூடியது; மங்களமயமானது. (42)

தோள்வலிமையினால் வெற்றி கொள்ளப்பட்டதும், நினைத்தபடி செல்லக்கூடியதுமான அந்த விமானத்தில் ஏறியமர்ந்த இராக்கத மன்னன், செருக்கின் மிகுதியாலும் மிகவும் தீயமதி படைத்திருந்ததாலும் மூன்று உலகங்களையும் வென்றுவிட்டதாகவே எண்ணிக் கொண்டான். லோகபாலனான குபேரனை வென்ற பிறகு, கைலாசத்திலிருந்து (தசக்ரீவன்) கீழே இறங்கினான். (43)

பேராற்றல் கொண்ட அரக்கன், மாசில்லாத கிரீடம் மற்றும் மாலைகள் அணிந்து, தன்னுடைய நிகரற்ற வீரப்பொலிவினால் மகத்தான வெற்றியைப் பெற்று, மகிமை பொருந்திய அந்த விமானத்தில் ஏறியமர்ந்து, வேள்விக் குண்டத்தில் சுடரொளி வீசும் அக்னியைப் போல் பிரகாசமாக விளங்கினான். (44)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினாறு

இராவணன் என்ற பெயர் பெறுதல்

(அகஸ்தியர் சொல்கிறார்—) இராமனே! தன்னுடைய சகோதரன் குபேரனை வென்ற பின்னர், கார்த்திகேயன் தோன்றிய பெருமை மிக்க நாணற்காட்டை நோக்கிச் சென்றான், இராக்கத மன்னன். அவ்விடத்தை அடைந்ததும், பொன்னொளி வீசித் திகழும் விஸ்தாரமான நாணற்காட்டைக் கண்டான். அந்தக் காடு, ஒளிக்கதிர்களை வீசிக்கொண்டிருந்ததால் இன்னொரு சூரியனைப் போல் விளங்கிக் கொண்டிருந்தது. (1,2)

Koviloor Digital Library

ஸ பர்வதம் ஸமாருஹ்ய கஞ்சித்$_3$ரம்யவநாந்தரம் ।
அபஶ்யத் புஷ்பகம் தத்ர ராம விஷ்டம்பி$_4$தம் தத$_3$ா ॥ (3)

விஷ்டப்$_3$த$_4$ம் புஷ்பகம் த்$_3$ருஷ்ட்வா ஹ்யக$_3$மம் காமக$_3$ம் க்ருதம் ।
அசிந்தயத்$_3$ராக்ஷஸேந்த்$_3$ர: ஸசிவைஸ்தை: ஸமாவ்ருத: ॥ (4)

கிம்நிமித்தம் சேச்ச$_2$யா மே நேத$_3$ம் க$_3$ச்ச$_2$தி புஷ்பகம் ।
பர்வதஸ்யோபரிஸ்த$_2$ஸ்ய கர்மேத$_3$ம் கஸ்யசித்$_3$ப$_4$வேத் ॥ (5)

ததோऽப்$_3$ரவீத்தத$_3$ா ராம மாரீசோ பு$_3$த்$_3$தி$_4$கோவித$_3$: ।
நேத$_3$ம் நிஷ்காரணம் ராஜந் புஷ்பகம் யந்ந க$_3$ச்ச$_2$தி ॥ (6)

அத$_2$வா புஷ்பகமித$_3$ம் த$_4$நத$_3$ாந்நாந்யவாஹநம் ।
அதோ நி:ஸ்பந்த$_3$மப$_4$வத்$_3$த$_4$நாத்$_4$யக்ஷவிநாக்ருதம் ॥ (7)

இதி வாக்யாந்தரே தஸ்ய கராள: க்ருஷ்ணபிங்க$_3$ள: ।
வாமநோ விகடோ முண்டீ$_3$ நந்தீ$_3$ ஹ்ரஸ்வபு$_4$ஜோ ப$_3$லீ ॥ (8)

தத: பார்ஶ்வமுபாக$_3$ம்ய ப$_4$வஸ்யாநுசரோऽப்$_3$ரவீத் ।
நந்தீ$_3$ஶ்வரோ வசஶ்சேத$_3$ம் ராக்ஷஸேந்த்$_3$ரமஶங்கித: ॥ (9)

நிவர்தஸ்வ த$_3$ஶக்$_3$ரீவ ஶைலே க்ரீட$_3$தி ஶங்கர: ।
ஸுபர்ணநாக$_3$யக்ஷாணாம் தே$_3$வக$_3$ந்த$_4$ர்வரக்ஷஸாம் ॥ (10)

ஸர்வேஷாமேவ பூ$_4$தாநாமக$_3$ம்ய: பர்வத: க்ருத: ।
தந்நிவர்தஸ்வ து$_3$ர்பு$_3$த்$_3$தே$_4$ மா விநாஶமவாப்ஸ்யஸி ॥ (11)

இதி நந்தி$_3$வச: ஶ்ருத்வா க்ரோத$_4$ாத் கம்பிதகுண்ட$_3$ல: ।
ரோஷாத்து தாம்ரநயந: புஷ்பகாத$_3$வருஹ்ய ஸ: ॥ (12)

கோऽயம் ஶங்கர இத்யுக்த்வா ஶைலமூலமுபாக$_3$த: ।
ஸோऽபஶ்யந்நந்தி$_3$நம் தத்ர தே$_3$வஸ்யாதூ$_3$ரத: ஸ்தி$_2$தம் ॥
தீ$_3$ப்தம் ஶூலமவஷ்டப்$_4$ய த்$_3$விதீயமிவ ஶங்கரம் ॥ (13)

தம் த்$_3$ருஷ்ட்வா வாநரமுக$_2$மவக்ஞாய ஸ ராக்ஷஸ: ।
ப்ரஹாஸம் முமுசே தத்ர ஸதோய இவ தோயத$_3$: ॥ (14)

தம் க்ருத்$_3$தே$_4$ா ப$_4$க$_3$வாந்நந்தீ$_3$ ஶங்கரஸ்யாபரா தநு: ।
அப்$_3$ரவீத்தத்ர தத்$_3$ரக்ஷோ த$_3$ஶாநநமுபஸ்தி$_2$தம் ॥ (15)

யஸ்மாத்$_3$வாநரரூபம் மாமவக்ஞாய த$_3$ஶாநந ।
அஶநீபாதஸங்காஶமுபஹாஸம் ப்ரமுக்தவாந் ॥ (16)

தஸ்மாந்மத்$_3$ரூபஸம்பந்நா மத்$_3$வீர்யஸமதேஜஸ: ।
உத்பத்ஸ்யந்தி வத$_4$ார்த$_2$ம் ஹி குலஸ்ய தவ வாநரா: ॥ (17)

Koviloor Digital Library

அதனருகில் அழகான காட்டுப் பகுதிகளைக் கொண்ட ஒரு மலை இருந்தது. அதன் மேலே செல்ல முடியாமல் புஷ்பகம் நின்றுவிட்டதை அறிந்துகொண்டான், தசக்ரீவன். (3)

விருப்பப்படி செல்லக்கூடிய புஷ்பகம் சலனமற்று நிறுத்தி வைக்கப்பட்டதைக் கண்ட அரக்கர் மன்னன், அமைச்சர்களோடுகூட ஆலோசனை நடத்தினான். (4)

'என் விருப்பத்திற்கேற்றபடி செல்ல வேண்டிய புஷ்பகம் என்ன காரணத்தால் நகராமல் நின்றுவிட்டது? இது, மலையின் மேலே இருக்கும் யாரோ ஒருவருடைய வேலையாகத்தான் இருக்கவேண்டும்?' (5)

இராமனே! அறிவுபடைத்தவனான மாரீசன், ''மன்னரே! காரணமில்லாமல் புஷ்பகம் நின்றிருக்காது'' என்றான். (6)

''அல்லது, இந்த வாகனம் குபேரனை(யும் அவன் ஆட்களையும்) மட்டும் சுமந்து செல்லக்கூடிய நியமத்தோடு இருக்கக்கூடும். செல்வங்களின் தலைவன் இதில் இல்லாததால் அசைவற்று நின்றிருக்கக் கூடும்.'' (7)

இவ்வாறு, அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, பரமேசுவரனின் மெய்த்தொண்டரான நந்திபகவான் அவன் அருகே வந்தார். அவர் (நந்தி) பார்ப்பதற்கு அவலட்சணமாக இருந்தார். உடல் வண்ணம் கறுப்பாகவும் பழுப்பாகவும் இருந்தது. குள்ளம்; குட்டையான கால்கள்; பயங்கரத் தோற்றம்; மொட்டைத் தலை; குறுகிய கைகள்; வலிமை மிக்கவர். அவர் சிறிதும் தயங்காமல், அரக்கர் மன்னனிடம் (பின்வருமாறு) கூறினார்— (8,9)

''தசக்ரீவனே! திரும்பிச் செல்வாயாக. மலையின் மேல் சங்கரர் ஆனந்தமாகப் பொழுதுபோக்கிக் கொண்டிருக்கிறார். சுபர்ண–நாக–யக்ஷர்கள், தேவ–கந்தர்வ–அரக்கர்கள் மற்றுமுள்ள எல்லாப் பிராணிகளுக்கும் இதற்கு மேல் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, கெடுமதியாளனே! (தடையை மீறிச் செல்லாதே) திரும்பிப் போய்விடு. (என் சொற்களைக் கேட்டுத் திரும்பிச் சென்றால்) அழிவடையாமல் தப்பித்துக் கொள்வாய்.'' (10,11)

இவ்வாறு நந்தி கூறியதும், கோபத்தால் செவிக் குண்டலங்கள் நடுங்கிக் குலுங்க, செருக்கினால் கண்கள் சிவக்க புஷ்பகத்திலிருந்து இறங்கி, ''யார், இந்த சங்கரன்?'' என்று கேட்டபடியே, மலை அடிவாரத்தைச் சென்றடைந்தான். அங்கே, மகாதேவருக்கு அருகில், பேரொளி வீசும் சூலத்தைத் தாங்கிக் கொண்டு இரண்டாவது சங்கரரைப் போல், நந்தி நிற்பதைக் கண்டான். (12,13)

வானரம் போன்ற முகத்தோடிருந்த அவரைக் கண்டு அலட்சியப்படுத்தியவனாக, நீருண்ட மேகத்தின் கர்ஜனை போன்ற குரலில் ஏளனமாகச் சிரித்தான். (14)

சங்கரரின் இன்னொரு உருவம் போன்றிருந்த நந்தி பகவான், அவன் செய்கையினால் கோபங்கொண்டு, எதிரே நின்றிருந்த அரக்கன் தசாநநனைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினார்— (15)

''தசக்ரீவனே! வானரத் தோற்றத்திலிருக்கும் என்னை அவமதித்து, இடிமுழக்கம் போன்ற குரலில் ஏளனமாகச் சிரித்தாய், அல்லவா? அதனால், உன் குலத்தை அழிக்கும் பொருட்டு, எனக்கு இணையான பராக்கிரமமும் தோற்றமும் வீரமும் கொண்ட வானரர்கள் தோன்றப் போகிறார்கள். (16,17)

Koviloor Digital Library

நக$_2$த$_3$ம்ஷ்ட்ராயுத$_4$: க்ரூரா மந:ஸம்பாதரம்ஹஸ: ।
யுத்$_3$தே$_4$ந்மத்தா ப$_3$லோத்$_3$ரிக்தா: ஶைலா இவ விஸர்பிண: ॥ (18)

தே தவ ப்ரப$_3$லம் த$_3$ர்பமுத்ஸேத$_4$ம் ச ப்ருத$_2$க்$_3$வித$_4$ம் ।
வ்யபநேஷ்யந்தி ஸம்பூ$_4$ய ஸஹாமாத்யஸுதஸ்ய ச ॥ (19)

கிம் த்வித$_3$ாநீம் மயா ஶக்யம் ஹந்தும் த்வாம் ஹே நிஶாசர ।
ந ஹந்தவ்யோ ஹதஸ்த்வம் ஹி பூர்வமேவ ஸ்வகர்மபி$_4$: ॥ (20)

இத்யுதீ$_3$ரிதவாக்யே து தே$_3$வே தஸ்மிந் மஹாத்மநி ।
தே$_3$வது$_3$ந்து$_3$ப$_4$யோ நேது$_3$: புஷ்பவ்ருஷ்டிஶ்ச க$_2$ாச்ச்யுதா ॥ (21)

அசிந்தயித்வா ஸ தத$_3$ா நந்தி$_3$வாக்யம் மஹாப$_3$ல: ।
பர்வதம் து ஸமாஸாத்$_3$ய வாக்யமாஹ த$_3$ஶாநந: ॥ (22)

புஷ்பகஸ்ய க$_3$திஶ்சி$_2$ந்நா யத்க்ருதே மம க$_3$ச்ச$_2$த: ।
தமிமம் ஶைலமுந்மூலம் கரோமி தவ கே$_3$ாபதே ॥ (23)

கேந ப்ரப$_4$ாவேண ப$_4$வோ நித்யம் க்ரீட$_3$தி ராஜவத் ।
விக்ஞாதவ்யம் ந ஜாநீதே ப$_4$யஸ்த$_2$ாநமுபஸ்தி$_2$தம் ॥ (24)

ஏவமுக்த்வா ததோ ராம பு$_4$ஜாந் விக்ஷிப்ய பர்வதே ।
தோலயாமாஸ தம் ஶைலம் ஸ ஶைல: ஸமகம்பத ॥ (25)

சாலநாத் பர்வதஸ்யைவ க$_3$ணா தே$_3$வஸ்ய கம்பிதா: ।
சசால பார்வதீ சாபி தத$_3$ாஶ்லிஷ்டா மஹேஶ்வரம் ॥ (26)

ததோ ராம மஹாதே$_3$வோ தே$_3$வாநாம் ப்ரவரோ ஹர: ।
பாத$_3$ாங்கு$_3$ஷ்டே$_2$ந தம் ஶைலம் பீட$_3$யாமாஸ லீலயா ॥ (27)

பீடி$_3$தாஸ்து ததஸ்தஸ்ய ஶைலஸ்யாதே$_4$ாக$_3$தா பு$_4$ஜா: ।
விஸ்மிதாஶ்சாப$_4$வம்ஸ்தத்ர ஸசிவாஸ்தஸ்ய ரக்ஷஸ: ॥ (28)

ரக்ஷஸா தேந ரோஷாச்ச பு$_4$ஜாநாம் பீட$_3$நாத்தத$_3$ா ।
முக்தோ விராவ: ஸஹஸா த்ரைலோக்யம் யேந கம்பிதம் ॥ (29)

மேநிரே வஜ்ரநிஷ்பேஷம் தஸ்யாமாத்யா யுக$_3$க்ஷயே ।
தத$_3$ா வர்த்மஸு சலிதா தே$_3$வா இந்த்$_3$ரபுரோக$_3$மா: ॥ (30)

ஸமுத்$_3$ராஶ்சாபி ஸம்க்ஷுப்$_3$த$_4$ாஶ்சலிதாஶ்சாபி பர்வதா: ।
யக்ஷா வித்$_3$யாத$_4$ரா: ஸித்$_3$த$_4$ா: கிமேததி$_3$தி சாப்$_3$ருவந் ॥ (31)

அத$_2$ தே மந்த்ரிணஸ்தஸ்ய விக்ரோஶந்தமத$_2$ாப்$_3$ருவந் ।
தோஷயஸ்வ மஹாதே$_3$வம் நீலகண்ட$_2$முமாபதிம் ॥ (32)

Koviloor Digital Library

நகங்களையும் பற்களையுமே படைக்கலங்களாகக் கொண்டவர்கள்; கொடூரமாகத் தாக்க வல்லவர்கள்; மனோவேகம் கொண்டவர்கள்; போர்புரியத் துடித்துக் கொண்டிருப்பவர்கள்; திடுக்கிடச் செய்யும் பலம் உடையவர்கள்; நடமாடும் மலை போன்றவர்கள், அவர்கள். (18)

ஆழமாகப் பதிந்துள்ள உன் அகந்தையையும் பெருந்தோற்றத்தையும், அவர்கள் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து அமைச்சர்களோடும் புதல்வர்களோடும்கூட உன்னை ஒழித்துக் கட்டப் போகிறார்கள். (19)

அரக்கனே! உன்னை இப்போது இங்கேயே என்னால் அழிக்க முடியாதா, என்ன? உன் தீயசெயல்களால், முன்னரே நீ செத்துப் போய்விட்டாய்! வெறும் உடலுடன் நிற்கும் உன்னை மறுபடியும் கொல்வதால் என்ன பயன்?'' (20)

இவ்வாறு, மகாத்மாவான அவர் கூறிமுடித்ததும், வானத்தில் தேவர்கள் துந்துபி முழங்கினார்கள்; ஆகாயத்திலிருந்து மலர்மாரி பொழிந்தது. (21)

பேராற்றல் கொண்ட தசக்ரீவன், நந்தியினுடைய சொற்களை அலட்சியப்படுத்திவிட்டு, மலை அருகில் சென்று கூறினான்— (22)

''பசுபதியே! நான் பயணம் செய்து கொண்டிருக்கும்போது, எவர் காரணமாக புஷ்பகத்தின் போக்கு தடுக்கப்பட்டதோ, அந்த உங்களுடைய மலையான இதை வேரோடு தூக்கி எறியப் போகிறேன். (23)

எந்த மகிமையினால், சங்கரர் நாள்தோறும் மன்னரைப் போல் உல்லாசமாக விளையாடிக் கொண்டிருக்கிறார்? அவருக்கு அச்சம் தரும் நிலை, இப்போது ஏற்பட்டிருப்பதைக்கூட அவர் அறியவில்லையே?'' (24)

ரகுநந்தனா! தசக்ரீவன் இவ்வாறு கூறிவிட்டு, மலையின் அடித்தளத்தில் கைகளைச் செலுத்தி, அதை உடனே தூக்குவதற்கு முயன்றான். அதனால், அந்த மலை அசைந்தாடத் தொடங்கியது. (25)

மலை ஆடத் தொடங்கியதால், சிவகணங்கள் நடுங்கினார்கள்; பார்வதிதேவியும் உடல் குலுங்கி, அச்சத்துடன் மகாதேவரைத் தழுவிக் கொண்டாள். (26)

இராமசந்திரா! அப்போது தேவர்களில் உயர்ந்தவரும் பாவங்களைக் களைபவருமான மகாதேவர், விளையாட்டாக, கால் கட்டைவிரலால் மலையை அழுத்தினார். (27)

அதனால், மலையின் அடியில் அகப்பட்டுக் கொண்ட (தசக்ரீவனின்) கைகள் நசுங்கிப் போயின. இதைப் பார்த்த அரக்க அமைச்சர்கள் பெருவியப்பில் மூழ்கினார்கள். (28)

அந்த அவமானத்தால் ஏற்பட்ட கோபத்தாலும், கைகளின் வலியைத் தாங்க முடியாமலும், உடனே பெரும் அலறலை எழுப்பினான், அவன். அந்த அலறலின் ஒலியால் மூன்று உலகங்களும் நடுநடுங்கின. (29)

அவனுடைய அமைச்சர்கள், யுகத்தின் முடிவுகாலத்தில் ஏற்படும் இடித்தாக்குதல்கள் இப்போது ஏற்படுகின்றன என்று எண்ணினார்கள். அப்போது, இந்திரன் முதலான தேவர்கள் தாங்கள் சென்று கொண்டிருந்த வழியிலேயே ஆட்டம் கண்டார்கள். (30)

பெருங்கடல்கள் பொங்கத் தொடங்கின; மலைகள் அசைந்தாடின. யக்ஷ–வித்யாதர–சித்தர்கள், 'என்ன, ஆயிற்று?' என்று கவலையுடன் பேசிக் கொண்டார்கள். (31)

அப்போது, அலறிக் கொண்டிருக்கும் தசக்ரீவனைப் பார்த்து அவனுடைய அமைச்சர்கள், ''நீலகண்டரும் உமாதேவியின் கணவருமான மகாதேவரைப் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். (32)

Koviloor Digital Library

தம்ருதே ஶரணம் நாந்யம் பஶ்யாமோऽத்ர த$_3$ஶாநந ।
ஸ்துதிபி$_4$: ப்ரணதோ பூ$_4$த்வா தமேவ ஶரணம் வ்ரஜ ॥
க்ருபாளு: ஶங்கரஸ்துஷ்ட: ப்ரஸாத$_3$ம் தே விதா$_4$ஸ்யதி ॥ (33)

ஏவமுக்தஸ்ததா$_3$மாத்யைஸ்துஷ்டாவ வ்ருஷப$_4$த்$_4$வஜம் ।
ஸாமபி$_4$ர்விவிதை$_4$: ஸ்தோத்ரை: ப்ரணம்ய ஸ த$_3$ஶாநந: ॥ (34)

ஸம்வத்ஸரஸஹஸ்ரம் து ருத$_3$தோ ரக்ஷஸோ க$_3$தம் ।
தத: ப்ரீதோ மஹாதே$_3$வ: ஶைலாக்$_3$ரே விஷ்டி$_2$த: ப்ரபு$_4$: ॥ (35)

முக்த்வா சாஸ்ய பு$_4$ஜாந் ராம ப்ராஹ வாக்யம் த$_3$ஶாநநம் ।
ப்ரீதோऽஸ்மி தவ வீர்யஸ்ய ஶௌண்டீ$_3$ர்யாச்ச த$_3$ஶாநந ॥ (36)

ஶைலாக்ராந்தேந யோ முக்தஸ்த்வயா ராவ: ஸுதா$_3$ருண: ।
யஸ்மால்லோகத்ரயம் சைதத்$_3$ராவிதம் ப$_4$யமாக$_3$தம் ॥ (37)

தஸ்மாத்த்வம் ராவணோ நாம நாம்நா ராஜந் ப$_4$விஷ்யஸி ।
தே$_3$வதா மாநுஷா யக்ஷா யே சாந்யே ஜக$_3$தீதலே ॥ (38)

ஏவம் த்வாமபி$_4$தா$_4$ஸ்யந்தி ராவணம் லோகராவணம் ।
க$_3$ச்ச$_2$ பௌலஸ்த்ய விஸ்ரப்$_3$த$_4$ம் பதா$_2$ யேந த்வமிச்ச$_2$ஸி ॥ (39)

மயா சைவாப்$_4$யநுஜ்ஞாதோ ராக்ஷஸாதி$_4$ப க$_3$ம்யதாம் ।
ஏவமுக்தஸ்து லங்கேஶ: ஶம்பு$_4$நா ஸ்வயமப்$_3$ரவீத் ॥ (40)

ப்ரீதோ யதி$_3$ மஹாதே$_3$வ வரம் மே தே$_3$ஹி யாசத: ।
அவத்$_4$யத்வம் மயா ப்ராப்தம் தே$_3$வக$_3$ந்த$_4$ர்வதா$_3$நவை: ॥ (41)

ராக்ஷஸைர்கு$_3$ஹ்யகைர்நாகை$_3$ர்யே சாந்யே ப$_3$லவத்தரா: ।
மாநுஷாந்ந க$_3$ணே தே$_3$வ ஸ்வல்பாஸ்தே மம ஸம்மதா: ॥ (42)

தீ$_3$ர்க$_4$மாயுஶ்ச மே ப்ராப்தம் ப்$_3$ரஹ்மணஸ்த்ரிபுராந்தக ।
வாஞ்சி$_2$தம் சாயுஷ: ஶேஷம் ஶஸ்த்ரம் த்வம் ச ப்ரயச்ச$_2$ மே ॥ (43)

ஏவமுக்தஸ்ததஸ்தேந ராவணேந ஸ ஶங்கர: ।
த$_3$தௌ$_3$ க$_2$ட்$_2$க$_3$ம் மஹாதீ$_3$ப்தம் சந்த்$_3$ரஹாஸமிதி ஶ்ருதம் ॥
ஆயுஷஶ்சாவஶேஷம் ச த$_3$தௌ$_3$ பூ$_4$தபதிஸ்ததா$_3$ ॥ (44)

த$_3$த்த்வோவாச தத: ஶம்பு$_4$ர்நாவஜ்ஞேயமித$_3$ம் த்வயா ।
அவஜ்ஞாதம் யதி$_3$ ஹி தே மாமேவைஷ்யத்யஸம்ஶய: ॥ (45)

ஏவம் மஹேஶ்வரேணைவ க்ருதநாமா ஸ ராவண: ।
அபி$_4$வாத்$_3$ய மஹாதே$_3$வமாருரோஹாத$_2$ புஷ்பகம் ॥ (46)

Koviloor Digital Library

தசக்ரீவரே! இந்த விஷயத்தில், அவரைத் தவிர அடைக்கலம்புகத் தக்கவர் வேறு எவரும் இலர். ஆதலால், வணக்கத்துடன் அவரைப் போற்றித் துதித்து, அவரையே புகல் அடையுங்கள். கருணை மிக்கவரான சங்கரர் (உங்கள் துதிகளால்) மனமகிழ்ந்து உங்களுக்கு அருள்புரிவார்'' என்றார்கள். (33)

இவ்வாறு அமைச்சர்கள் கூறியதைக் கேட்ட பத்துத் தலையன், ரிஷபக்கொடி உடைய மகாதேவரை, ஸாமவேத மந்திரங்களாலும் பல்வகைத் தோத்திரங்களாலும் பணிவுடன் போற்றி மகிழ்வுறச் செய்தான். மலையின் அடியில் அழுந்தியிருந்த கைகளின் வலியால் அழுதபடியே ஓராயிரம் ஆண்டுகள் கழிந்தன. பின்னர், அவனது தோத்திரங்களால் திருப்தியடைந்த மகாதேவர், மலையுச்சியில் காட்சி தந்தார். (34,35)

இராமபிரானே! அவனுடைய கைகளை விடுவித்து, தசக்ரீவனை நோக்கி(ப் பின்வருமாறு) கூறினார்— ''தசக்ரீவனே! உன்னுடைய வீரத்தாலும் விடாமுயற்சியாலும் நான் திருப்தி அடைந்துள்ளேன். (36)

உன் கைகளை மலை அழுத்தியதால் பயங்கரமான கூச்சல் உன்னிடமிருந்து வெளிப்பட்டது. அதைக் கேட்டு மூன்று உலகப் பிராணிகளும் அச்சத்துடன் அலறினார்கள். அதனால், மன்னனே! நீ 'இராவணன்' (பிறரை அலறச் செய்கிறவன்) என்ற பெயரால் அழைக்கப்படுவாய். தேவதைகள்–மானுடர்கள்–யக்ஷர்களும், உலகத்திலுள்ள மற்றவர்களும், உலகத்தையே அலறடித்த உன்னை 'இராவணன்' என்றே அழைப்பார்கள். புலஸ்திய வம்சத்தோன்றலே! நீ விருப்பப்பட்ட வழியில் தடையில்லாமல் செல்வாயாக. (37–39)

அரக்கர் மன்னனே! நான் உனக்கு விடைகொடுக்கிறேன். நீ, செல்லலாம்.'' இவ்வாறு சம்புதேவர் கூறியதும், இலங்கைத் தலைவன் தானே பேசலுற்றான்— (40)

''நீங்கள் என் வழிபாட்டினால் உள்ளம் மகிழ்ந்திருக்கிறீர்கள் என்றால், நான் பணிவுடன் கேட்கும் ஒரு வரத்தையும் அருளவேண்டும். தேவ–கந்தர்வ–தானவ–அரக்க–குஹ்யக–நாகர்களாலும், வலிமை மிகுந்த மற்றவர்களாலும் எனக்கு மரணம் ஏற்படக்கூடாது என்ற வரத்தைப் பெற்றிருக்கிறேன். தெய்வமே! மானுடர்கள் துச்சமானவர்கள் என்பது என் கருத்து. அதனால், அவர்களிடமிருந்து எனக்கு மரணம் நேரிடக்கூடாது என்று, நான் வரம் கேட்கவில்லை. (41,42)

முப்புரங்களை எரித்தவரே! பிரும்மாவிடமிருந்து (வரத்தின் மூலம்) நீண்ட ஆயுளைப் பெற்றுள்ளேன். அது எவ்விதத்திலும் குறையாமல் அவ்வாறே இருக்கவேண்டும். (என்னுடைய தீய செயல்களின் பயனாக ஆயுளில் குறைவு ஏற்பட்டுவிடக் கூடாது.) மேலும், எனக்கு ஒரு சஸ்திரத்தையும் தந்தருளவேண்டும்.'' (43)

இராவணன் இவ்வாறு வேண்டிக்கொண்டதும், மிக்க ஒளிவீசுவதும் சந்திரஹாஸம் என்று பெயர் பெற்றதுமான ஒரு கத்தியை, சங்கரர் அவனுக்குக் கொடுத்தார். அத்துடன், பூதகணங்களுக்குத் தலைவரான அவர், நீண்ட ஆயுளில் கழிந்து போன நாள்களை விலக்கி, அதனால், அவன் ஆயுளை மேலும் நீட்டித்தார். (44)

கத்தியை அவனிடம் கொடுத்து, ''ஒருபோதும் நீ இதை அலட்சியப்படுத்தக்கூடாது. கௌரவக் குறைவு ஏற்படுமேயானால், இது என்னையே வந்தடைந்துவிடும் என்பது நிச்சயம்'' என்று சம்புதேவர் கூறினார். (45)

இவ்வாறு, பரமேசுவரனாலேயே 'இராவணன்' என்று பெயர் சூட்டப்பட்ட அவன், மகாதேவரை வணங்கிவிட்டு, புஷ்பக விமானத்தில் ஏறினான். (46)

Koviloor Digital Library

ததோ மஹீதலே ராம பரிசக்ராம ராவண: ।
க்ஷத்ரியாந் ஸுமஹாவீர்யாந் ப$_3$ாத$_4$மாந இதஸ்தத: ॥ (47)

கேசித்தேஜஸ்விந: ஶூரா: க்ஷத்ரியா யுத்$_3$த$_4$து$_3$ர்மத$_3$ா: ।
தச்ச$_2$ாஸநமகுர்வந்தோ விநேஶு: ஸபரிச்ச$_2$த$_3$ா: ॥ (48)

அபரே து$_3$ர்ஜயம் ரக்ஷோ ஜாநந்த: ப்ராக்ஞஸம்மதா: ।
ஜிதா: ஸ்ம இத்யப$_4$ாஷந்த ராக்ஷஸம் ப$_3$லத$_4$ர்பிதம் ॥ (49)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஷோட$_3$ஶ: ஸர்க$_3$: ॥

ஸப்த$_3$ஶ: ஸர்க$_3$:

வேத$_3$வதீஶாப:

அத$_2$ ராஜந் மஹாப$_3$ாஹுர்விசரந் ஸ மஹீதலே ।
ஹிமவத்ஸாநுமாஸாத்$_3$ய பரிசக்ராம ராவண: ॥ (1)

தத்ராபஶ்யத் ஸ வை கந்யாம் க்ருஷ்ணாஜிநஜடாத$_4$ராம் ।
ஆர்ஷேண விதி$_4$நா சைநாம் தீ$_3$ப்யந்தீம் தே$_3$வதாமிவ ॥ (2)

ஸ த்$_3$ருஷ்ட்வா ரூபஸம்பந்நாம் கந்யாம் தாம் ஸுமஹாவ்ரதாம் ।
காமமோஹபரீதாத்மா பப்ரச்ச$_2$ ப்ரஹஸந்நிவ ॥ (3)

கிமித$_3$ம் வர்தஸே ப$_4$த்$_3$ரே விருத்$_3$த$_4$ம் யௌவநஸ்ய தே ।
ந ஹி யுக்தா தவைதஸ்ய ரூபஸ்ய தபஸ: க்ரியா ॥ (4)

ரூபம் தேऽநுபமம் பீ$_4$ரு காமோந்மாத$_3$கரம் ந்ருணாம் ।
ந யுக்தம் தபஸி ஸ்த$_2$ாதும் நிர்க$_3$தோ ஹ்யேஷ நிர்ணய: ॥ (5)

கஸ்யாஸி கிமித$_3$ம் ப$_4$த்$_3$ரே கஶ்ச பர்தா வராநநே ।
யேந ஸம்பு$_4$ஜ்யஸே பீ$_4$ரு ஸ நர: புண்யப$_4$ாக்$_3$பு$_4$வி ॥
ப்ருச்ச$_2$த: ஶம்ஸ மே ஸர்வம் கஸ்ய ஹேதோ: பரிஶ்ரம: ॥ (6)

ஏவமுக்தா து ஸ கந்யா ராவணேந யஶஸ்விநீ ।
அப்$_3$ரவீத்$_3$விதி$_4$வத் க்ருத்வா தஸ்யாதித்$_2$யம் தபோத$_4$நா ॥ (7)

குஶத்$_4$வஜோ மம பிதா ப்$_3$ரஹ்மர்ஷிரமிதப்ரப$_4$: ।
ப்$_3$ருஹஸ்பதிஸுத: ஸ்ரீமாந் புத்$_3$த்$_4$யா துல்யோ ப்$_3$ருஹஸ்பதே: ॥ (8)

தஸ்யாஹம் குர்வதோ நித்யம் வேதா$_3$ப்$_4$யாஸம் மஹாத்மந: ।
ஸம்பூ$_4$தா வாங்மயீ கந்யா நாம்நா வேத$_3$வதீ ஸ்ம்ருதா ॥ (9)

Koviloor Digital Library

ரகுநந்தனா! இதன் பின்னர், மண்ணுலகில் மகாவீரம் பொருந்திய க்ஷத்திரியர்களுடன் போர் புரிந்துகொண்டு இங்குமங்கும் சுற்றி வந்தான். (47)

பராக்கிரமம் மிக்கவர்களும் போர் செய்வதில் பேரார்வம் கொண்டவர்களுமான சில க்ஷத்திரிய சூரர்கள், அவனுக்கு அடங்கி நடக்க மறுத்ததால் உற்றார்–உறவினருடன் அழிந்து போனார்கள். (48)

அறிவாளிகளான வேறு சிலர், அந்த அரக்கன் வெல்ல முடியாதவன் என்பதைத் தெரிந்துகொண்டு, வலிமைத் திமிரில் இருந்த அரக்கனிடம், 'நாங்கள் வெல்லப்பட்டோம்' என்று (தங்கள் இயலாமையை ஒப்புக்கொண்டு) உயிர் பிழைத்தார்கள். (49)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
பதினாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பதினேழு

வேதவதி கொடுத்த சாபம்

(அகஸ்தியர் கூறுகிறார்—) மன்னனே! பின்னர் தோள்வலிமை மிக்க அவன் பூவுலகில் நாற்புறமும் சுற்றி வந்தான். ஒருசமயம், இமயமலைப் பகுதியை அடைந்து திரிந்து கொண்டிருந்தான், இராவணன். (1)

அவ்விடத்தில், கருமான்தோல் உடுத்தி, தலைக்கூந்தலை ஜடாபாரமாகப் போட்டு, வேதவிதிப்படி தவம் செய்யும் ஒரு கன்னிகையைக் கண்டான். அவள் ஒரு தேவதையைப் போல் ஒளிவீசிக் கொண்டிருந்தாள். (2)

காமத்தில் மூழ்கிப் போன அவன், பேரழகு படைத்தவளும் கடுமையான நியமங்களோடு விரதம் அனுஷ்டிப்பவளுமான அந்த இளம்பெண்ணைப் பார்த்து, ஏளனமாக இளநகை புரிந்து கேட்டான்— (3)

''நல்லணங்கே! உன்னுடைய இளமைக்குப் பொருத்தமில்லாத, என்ன காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறாய்? உன்னுடைய அழகிய தோற்றத்திற்கு ஏற்காத செயல், இது. (4)

அஞ்சும் இயல்புடையாய்! உன்னுடைய அழகுத் தோற்றம் ஒப்புவமை இல்லாதது; ஆண்களின் நெஞ்சில் காம மயக்கத்தை உண்டாக்குவது. நீ, தவம் செய்வது உசிதமல்ல. இதுதான் என் அபிப்பிராயம். (5)

நங்காய்! நீ, யாருடைய புதல்வி? எதன் பொருட்டு நீ விரதத்தை மேற்கொண்டிருக்கிறாய்? அழகிய முகம் உடையவளே! உன்னுடைய கணவன் யார்? அஞ்சும் இயல்பினளே! உலகில் உன்னோடு கூடிக்குலாவும் ஆடவன் மிகவும் புண்ணியசாலி! அது சரி. எதை அடையும் பொருட்டு இவ்வளவு பெரிய முயற்சியை மேற்கொண்டிருக்கிறாய்? கேட்கிறேனே, நான்? எல்லாவற்றுக்கும் பதில் கூறு.'' (6)

இவ்வாறு, இராவணன் கேட்டு முடித்ததும் புகழ்பெற்ற தவச்செல்வியாகிய அம்மடந்தை, முறைப்படி அவனை உபசரித்துவிட்டுக் கூறினாள்— (7)

''பிருஹஸ்பதியின் மைந்தரும், எல்லையற்ற தவப்பொலிவு பெற்றவரும், பிரும்மரிஷியுமான குசத்வஜர் என்னுடைய தந்தையார். தவச்செல்வரான அவர் பிருஹஸ்பதிக்கு நிகரான பேரறிவாளர். தினந்தோறும் வேதம் ஓதும் அவருடைய அறிவுத்திறன் பெண்ணுருவம் கொண்டு வெளிப்பட்டாற்போலத் தோன்றியவள், நான். என் பெயர் வேதவதி. (8,9)

Koviloor Digital Library

ததோ தே$_3$வா: ஸக$_3$ந்த$_4$ர்வா யக்ஷராக்ஷஸபந்நகா$_3$: ।
தேऽபி க$_3$த்வா ஹி பிதரம் வரணம் ரோசயந்தி மே ॥ (10)

ந ச மாம் ஸ பிதா தேப்$_4$யோ த$_3$த்தவாந் ராக்ஷஸர்ஷப$_4$ ।
காரணம் தத்$_3$வதி$_3$ஷ்யாமி நிஶாசர நிஶாமய ॥ (11)

பிதுஸ்து மம ஜாமாதா விஷ்ணு: கில ஸுரேஶ்வர: ।
அபி$_4$ப்ரேதஸ்த்ரிலோகேஶஸ்தஸ்மாந்நாந்யஸ்ய மே பிதா ॥ (12)

தா$_3$துமிச்ச$_2$தி தஸ்மை து தச்ச்$_2$ருத்வா ப$_3$லத$_3$ர்பித: ।
ஶம்பு$_4$ர்நாம ததோ ராஜா தைத்$_3$யாநாம் குபிதோऽப$_4$வத் ॥
தேந ராத்ரௌ ஶயாநோ மே பிதா பாபேந ஹிம்ஸித: ॥ (13)

ததோ மே ஜநநீ தீ$_3$நா தச்ச$_2$ரீரம் பிதுர்மம ।
பரிஷ்வஜ்ய மஹாபா$_4$கா$_3$ ப்ரவிஷ்டா ஹவ்யவாஹநம் ॥ (14)

ததோ மநோரத$_2$ம் ஸத்யம் பிதுர்நாராயணம் ப்ரதி ।
கரோமீதி தமேவாஹம் ஹ்ருத$_3$யேந ஸமுத்$_3$வஹே ॥ (15)

இதி ப்ரதிக்ஞாமாருஹ்ய சராமி விபுலம் தப: ।
ஏதத்தே ஸர்வமாக்$_2$யாதம் மயா ராக்ஷஸபுங்க$_3$வ ॥ (16)

நாராயணோ மம பதிர்ந த்வந்ய: புருஷோத்தமாத் ।
ஆஶ்ரயே நியமம் கோ$_4$ரம் நாராயணபரீப்ஸயா ॥ (17)

விக்ஞாதஸ்த்வம் ஹி மே ராஜந் க$_3$ச்ச$_2$ பௌலஸ்த்யநந்த$_3$ந ।
ஜாநாமி தபஸா ஸர்வம் த்ரைலோக்யே யத்$_2$தி$_4$ வர்ததே ॥ (18)

ஸோऽப்$_3$ரவீத்$_3$ராவணோ பூ$_4$யஸ்தாம் கந்யாம் ஸுமஹாவ்ரதாம் ।
அவருஹ்ய விமாநாக்$_3$ராத் கந்த$_3$ர்பஶரபீடி$_3$த: ॥ (19)

அவலிப்தாஸி ஸுஶ்ரோணி யஸ்யாஸ்தே மதிரீத்$_3$ருஶீ ।
வ்ருத்$_3$தா$_4$நாம் ம்ருக$_3$ஶாபா$_3$க்ஷி ப்$_4$ராஜதே புண்யஸஞ்சய: ॥ (20)

த்வம் ஸர்வகுணஸம்பந்நா நார்ஹஸே வக்துமீத்$_3$ருஶம் ।
த்ரைலோக்யஸுந்த$_3$ரீ பீ$_4$ரு யௌவநம் தேऽதிவர்ததே ॥ (21)

அஹம் லங்காபதிர்ப$_4$த்$_3$ரே த$_3$ஶக்$_3$ரீவ இதி ஶ்ருத: ।
தஸ்ய மே ப$_4$வ பா$_4$ர்யா த்வம் பு$_4$ங்க்ஷ்வ போ$_4$கா$_3$ந்யதா$_2$ஸுக$_2$ம் ॥ (22)

கஶ்ச தாவத$_3$ஸௌ யம் த்வம் விஷ்ணுரித்யபி$_4$பா$_4$ஷஸே ।
வீர்யேண தபஸா சைவ போ$_4$கே$_3$ந ச ப$_3$லேந ச ॥
ந மயா ஸ ஸமோ ப$_4$த்$_3$ரே யம் த்வம் காமயஸேऽங்க$_3$நே ॥ (23)

இத்யுக்த்வதி தஸ்மிம்ஸ்து வேத$_3$வத்யத$_2$ ஸாப்$_3$ரவீத் ।
மா மைவமிதி ஸா கந்யா தமுவாச நிஶாசரம் ॥ (24)

Koviloor Digital Library

பின்னர், உரிய காலத்தில் தேவ–கந்தர்வ–யக்ஷ–ராக்ஷஸ–பன்னகர்கள் என் தந்தையிடம் சென்று, என்னை மணம் செய்து கொடுக்கும்படி கேட்டார்கள். (10)

அரக்கத் தலைவனே! என்னை அவர்களுக்குக் கொடுக்க என் தந்தை விரும்பவில்லை. இராச்சுற்றியே! அதன் காரணத்தைச் சொல்கிறேன், கேளுங்கள். (11)

'மூன்று உலகங்களுக்கும் தலைவரும் தேவர்களின் தலைவருமான பகவான் விஷ்ணுதான், என் மாப்பிள்ளையாக வேண்டும்' என்று அவர் விரும்பியதால், வேறு எவருக்கும் என்னைக் கொடுக்க விருப்பப்படவில்லை. (12)

'என்னை, விஷ்ணுவுக்கே கொடுக்க விரும்புகிறார்' என்பதைக் கேள்விப்பட்டு, வீரத்திமிர் கொண்ட தைத்ய மன்னன் சம்பு என்பவன் கோபங்கொண்டான். ஓர் இரவு நேரத்தில், என் தந்தை படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்தபோது, அந்தப் பாவியினால் கொல்லப்பட்டார். (13)

பிறகு, பெரும் பேறு பெற்றவளான என் தாயார், அவருடைய சரீரத்தைத் தழுவிக்கொண்டே தீயில் புகுந்தாள். (உடன்கட்டை ஏறினாள்.) (14)

என்னுடைய தந்தை, ஸ்ரீமந்நாராயணனை எவ்வாறு உறவு கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டாரோ, அதைச் சத்தியமாக நிறைவேற்றி வைக்கும் உறுதிபூண்டு, விஷ்ணுவையே நெஞ்சில் சுமந்துகொண்டு கடுமையாகத் தவம் செய்து வருகிறேன். அரக்கர் கோமானே! நான் என்னைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் கூறிவிட்டேன். (15,16)

நாராயணன்தான் என்னுடைய கணவர். புருஷோத்தமரான அவரைத் தவிர வேறு யாரும் எனக்குப் பதியாக முடியாது. நாராயணனை அடைவதற்காகவே கடுமையான நியமங்களைக் கடைப்பிடித்து வருகிறேன். (17)

மன்னரே! புலஸ்திய குலத் தோன்றலே! உங்களை நான் அறிந்துகொண்டு விட்டேன். என்னுடைய தவத்தின் மகிமையால், மூன்று உலகிலும் நடைபெறும் எல்லா விஷயங்களையும் நான் அறிவேன்.'' (18)

விமானத்தின் முன்புறத்திலிருந்து இறங்கிய இராவணன் மன்மத பாணங்களால் தாக்கப்பட்ட நெஞ்சினனாய், மிக உயர்ந்த விரதத்தைக் கைக்கொண்டிருக்கும் அந்தக் கன்னிகையை நோக்கி, மறுபடியும் கூறினான்— (19)

''பேரழகியே! நீ மிகவும் கர்வத்துடன் இருப்பாய் போலிருக்கிறது! அதனால்தான் உனக்கு இம்மாதிரியான எண்ணம் தோன்றியிருக்கிறது. மான்குட்டியின் கண்களைக் கொண்டவளே! கடுமையாகத் தவம் செய்து புண்ணியம் சேர்ப்பது வயோதிகர்களுக்கே உகந்தது. (உன்னைப் போன்ற இளமங்கையர்க்கு உகந்தது அல்ல.) (20)

நீ, எல்லா நற்குணங்களும் நிரம்பியவள். மூன்று உலகத்திலும் காண முடியாத பேரழகு கொண்டவள். ஆகவே, நீ இவ்வாறு பேசக்கூடாது. (தவம் செய்து இளம் பருவத்தை வீணாக்கிக் கொள்ளாதே.) கோழையானவளே! உன்னுடைய இளமைக் காலம் கடந்துகொண்டிருக்கிறது. நான், இலங்கேஸ்வரன்! சீலமுடையாய்! தசக்ரீவன் என்று எனக்குப் பெயர். பெருமை மிக்க எனக்கு மனைவியாகி, உன் விருப்பப்படி எல்லா சுகபோகங்களையும் அனுபவிப்பாயாக. (21,22)

விஷ்ணு என்ற யாரைப் பற்றியோ, நீ மேன்மையாகப் பேசுகிறாயே? யார், அவர்? நங்காய்! நீ விரும்பும் அவர் வீரம், தவம், சுகபோகம், பலம் ஆகிய எந்தவிதத்திலும் எனக்கு நிகரானவர் அல்லர்.'' (23)

இவ்வாறு அவன் சொல்லி முடித்தவுடன், அந்த அரக்கனைப் பார்த்து, ''இல்லை, இல்லை... இப்படியெல்லாம் பேசாதீர்கள்'' என்று அந்தக் கன்னிகை கூறினாள். (24)

Koviloor Digital Library

த்ரைலோக்யாதி$_4$பதிம் விஷ்ணும் ஸர்வலோகநமஸ்க்ருதம் ।
த்வத்$_3$ருதே ராக்ஷஸேந்த்$_3$ராந்ய: கோऽவமந்யேத பு$_3$த்$_3$தி$_4$மாந் ॥ (25)

ஏவமுக்தஸ்தயா தத்ர வேத$_3$வத்யா நிஶாசர: ।
மூர்த$_4$ஜேஷு தத$_3$ா கந்யாம் கராக்$_3$ரேண பராம்ருஶத் ॥ (26)

ததோ வேத$_3$வதீ க்ருத்$_3$த$_4$ா கேஶாந் ஹஸ்தேந ஸாச்சி$_2$நத் ।
அஸிர்பூ$_4$த்வா கரஸ்தஸ்யா: கேஶாம்ஶ்சி$_2$ந்நாம்ஸ்த$_3$தாகரோத் ॥ (27)

ஸ ஜ்வலந்தீவ ரோஷேண த$_3$ஹந்தீவ நிஶாசரம் ।
உவாசாக்$_3$நிம் ஸமாத$_4$ாய மரணாய க்ருதத்வரா ॥ (28)

த$_4$ர்ஷிதாயாஸ்த்வயாநார்ய ந மே ஜீவிதமிஷ்யதே ।
ரக்ஷஸ்தஸ்மாத் ப்ரவேக்ஷ்யாமி பஶ்யதஸ்தே ஹுதாஶநம் ॥ (29)

யஸ்மாத்து த$_4$ர்ஷிதா சாஹம் த்வயா பாபாத்மநா வநே ।
தஸ்மாத்தவ வத$_4$ார்த$_2$ம் ஹி ஸமுத்பத்ஸ்யே ஹ்யஹம் புந: ॥ (30)

ந ஹி ஶக்யம் ஸ்த்ரியா ஹந்தும் புருஷ: பாபநிஶ்சய: ।
ஶாபே த்வயி மயோத்ஸ்ருஷ்டே தபஸஶ்ச வ்யயோ ப$_4$வேத் ॥ (31)

யதி$_3$ த்வஸ்தி மயா கிஞ்சித் க்ருதம் த$_3$த்தம் ஹுதம் தத$_2$ா ।
தஸ்மாத்த்வயோநிஜா ஸாத்$_4$வீ ப$_4$வேயம் த$_4$ர்மிண: ஸுதா ॥ (32)

ஏவமுக்த்வா ப்ரவிஷ்டா ஸா ஜ்வலிதம் ஜாதவேத$_3$ஸம் ।
பபாத ச தி$_3$வோ தி$_3$வ்யா புஷ்பவ்ருஷ்டி: ஸமந்தத: ॥ (33)

ஸைஷா ஜநகராஜஸ்ய ப்ரஸூதா தநயா ப்ரபே$_4$ா ।
தவ ப$_4$ார்யா மஹாப$_3$ாஹோ விஷ்ணுஸ்த்வம் ஹி ஸநாதந: ॥ (34)

பூர்வம் க்ரோத$_4$ஹத: ஶத்ருர்யயாஸௌ நிஹதஸ்தயா ।
உபாஶ்ரயித்வா ஶைலாப$_4$ஸ்தவ வீர்யமமாநுஷம் ॥ (35)

ஏவமேஷா மஹாப$_4$ாக$_3$ா மர்த்யேஷூத்பத்ஸ்யதே புந: ।
க்ஷேத்ரே ஹலமுகே$_2$ாத்க்ருஷ்டே வேத்$_3$யாமக்$_3$நிஶிகே$_2$ாபமா ॥ (36)

ஏஷா வேத$_3$வதீ நாம பூர்வமாஸீத் க்ருதே யுகே$_3$ ।
த்ரேதாயுக$_3$மநுப்ராப்ய வத$_4$ார்த$_2$ம் தஸ்ய ரக்ஷஸ: ॥ (37)

உத்பந்நா மைதி$_2$லகுலே ஜநகஸ்ய மஹாத்மந: ।
ஸீதோத்பந்நா து ஸீதேதி மாநுஷை: புநருச்யதே ॥ (38)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தர காண்டே$_3$ ஸப்தத$_3$ஶ: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

''விஷ்ணு, எல்லா உலக மக்களாலும் வணங்கப்படுபவர்; மூன்று உலகங்களுக்கும் தலைவர்; அரக்கர் மன்னரான உங்களைத் தவிர, அறிவு படைத்த வேறு எவர்தான் அவரை இழிவாகப் பேசத் துணிவார்?'' (25)

வேதவதி இவ்வாறு கூறியதும், அந்த அரக்கன் தன் கையினால் அவள் தலைக்கூந்தலைப் பற்றினான். இதனால், வேதவதி மிகவும் சினங்கொண்டாள். தன்னுடைய கையினால் கூந்தலை வெட்டிவிட்டாள். அவளுடைய கை, கத்தியாக மாறி தலையிலிருந்து கூந்தலை மழித்து எறிந்தது. (26,27)

அவள், எல்லையில்லாத கோபத்தால் கொதிக்கத் தொடங்கினாள். அரக்கனை எரித்து விடுவதைப் போலப் பார்த்தாள். உடனே, தன் உயிரைப் போக்கிக் கொள்ள முடிவு செய்து அக்னியை உண்டாக்கினாள். (28)

''பண்பில்லாதவனே! நீ, என்னை அவமானப்படுத்திவிட்டாய். இனி, நான் உயிர் வாழ விரும்பவில்லை. அரக்கனே! உன் கண்முன்னாலேயே நான் நெருப்பில் விழுந்து உயிர்விடப் போகிறேன். (29)

பாவாத்மாவான நீ, இந்தக் காட்டில் என்னைச் சீர்குலைத்து விட்டாய். அதனால், உன்னைக் கொல்வதற்காக நான் மீண்டும் பிறவி எடுப்பேன். பாவம் செய்யத் துணிந்துவிட்ட ஓர் ஆடவனை, ஒரு பெண்ணினால் (சண்டை போட்டுக்) கொல்ல முடியாது. நான் உனக்கு சாபம் கொடுத்தால், என் தவப் பயன் குறைந்து போகும். (30,31)

நான் ஏதேனும் நற்கர்மங்கள், தானங்கள் (மனுஷ்ய யக்ஞம்), வேள்விகள் (தேவ யக்ஞம்) செய்திருந்தால், அவற்றின் விளைவாக, அடுத்த பிறவியில் ஒரு தாயின் வயிற்றில் பிறக்காத நற்பெண்ணாகத் தோன்றி, அறம் தவறாத ஒருவரின் பெண்ணாக ஆவேன்.'' (32)

இவ்வாறு கூறிவிட்டு, அவள், கொழுந்து விட்டெரியும் அக்னியில் புகுந்தாள். அப்போது, அவ்விடத்தின் எல்லாப் புறங்களிலிருந்தும் வானத்திலிருந்து மலர்மாரி பொழிந்தது. (33)

(அகஸ்தியர் கூறுகிறார்—) பிரபு! அவள்தான் ஜனக மன்னருடைய மகளாகத் தோன்றினாள். பெருந்தோளரே! அவளே, உங்கள் மனைவி; தாங்கள், மிகப்பழமையான (துவக்கம் காண முடியாத) மகாவிஷ்ணு! (34)

முன்னரே, அவள் கோபத்தால் மலை போன்ற இராவணன் கொல்லப்பட்டுவிட்டான். இப்போது தாங்கள், மானுடத்திற்கு மேலான தங்கள் பேராற்றலால் அவனை வீழ்த்தியிருக்கிறீர்கள். (35)

மகத்தான பேறுபெற்றவளாகிய இவள், மண்ணுலகில் (இராவண வதத்திற்காக) மறுபடியும் தோன்றினாள். வேள்விக் குண்டத்தில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அக்னியைப் போன்ற பொலிவுடைய இவள், வேள்விச்சாலை அமைக்க நிலத்தை உழுதபோது, ஏர்முனையில் தோன்றினாள். (36)

இவள், கிருதயுகத்தில் வேதவதியாக இருந்தாள். திரேதாயுகம் வந்ததும் அந்த அரக்கனை அழிப்பதற்காக மகாத்மா ஜனகருடைய மிதிலைப் பரம்பரையில் பிறந்தாள். கொழுமுனையில் (சீதா) தோன்றியதால், சீதா என்று மக்களால் அழைக்கப்பட்டாள். (37,38)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

அஷ்டாத$_3$ஶ: ஸர்க$_3$:

மருத்தவிஜய:

ப்ரவிஷ்டாயம் ஹுதாஶம் து வேத$_3$வத்யாம் ஸ ராவண: ।
புஷ்பகம் து ஸமாருஹ்ய பரிசக்ராம மேதி$_3$நீம் ॥ (1)

ததோ மருத்தம் ந்ருபதிம் யஜந்தம் ஸஹ தை$_3$வதை: ।
உஶீரபீ$_3$ஜமாஸாத்$_3$ய த$_3$த$_3$ர்ஶ ஸ து ராவண: ॥ (2)

ஸம்வர்தோ நாம ப்$_3$ரஹ்மர்ஷி: ஸாக்ஷாத்$_3$ப்$_4$ராதா ப்$_3$ருஹஸ்பதே: ।
யாஜயாமாஸ த$_4$ர்மக்ஞ: ஸர்வைர்தே$_3$வக$_3$ணைர்வ்ருத: ॥ (3)

த்$_3$ருஷ்ட்வா தே$_3$வாஸ்து தத்$_3$ரக்ஷோ வரதா$_3$நேந து$_3$ர்ஜயம் ।
திர்யக்$_3$யோநிம் ஸமாவிஷ்டாஸ்தஸ்ய த$_3$ர்ஶநபீ$_4$ரவ: ॥ (4)

இந்த்$_3$ரோ மயூர: ஸம்வ்ருத்தோ த$_4$ர்மராஜஸ்து வாயஸ: ।
க்ருகலாஸோ த$_4$நாத்$_4$யக்ஷோ ஹம்ஸஶ்ச வருணோऽப$_4$வத் ॥ (5)

அந்யேஷ்வபி க$_3$தேஷ்வேவம் தே$_3$வேஷ்வரிநிஷூத$_3$ந ।
ராவண: ப்ராவிஶத்$_3$யக்ஞம் ஸாரமேய இவாஶுசி: ॥ (6)

ஸ ச ராஜாநமாஸாத்$_3$ய ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ।
ப்ராஹ யுத்$_3$த$_4$ம் ப்ரயச்சே$_2$தி நிர்ஜிதோऽஸ்மீதி வா வத$_3$ ॥ (7)

ததோ மருத்தோ ந்ருபதி: கோ ப$_4$வாநித்யுவாச தம் ।
அபஹாஸம் ததோ முக்த்வா ராவணோ வாக்யமப்$_3$ரவீத் ॥ (8)

அகுதூஹலபா$_4$வேந ப்ரீதோऽஸ்மி தவ பார்தி$_2$வ ।
த$_4$நத$_3$ஸ்யாநுஜம் யோ மாம் நாவக$_3$ச்ச$_2$ஸி ராவணம் ॥ (9)

த்ரிஷு லோகேஷு கோऽந்யோऽஸ்தி யோ ந ஜாநாதி மே ப$_3$லம் ।
ப்$_4$ராதரம் யேந நிர்ஜித்ய விமாநமித$_3$மாஹ்ருதம் ॥ (10)

ததோ மருத்த: ஸ ந்ருபஸ்தம் ராவணமதா$_2$ப்$_3$ரவீத் ।
த$_4$ந்ய: க$_2$லு ப$_4$வாந் யேந ஜ்யேஷ்டோ$_2$ ப்$_4$ராதா ரணே ஜித: ॥ (11)

ந த்வயா ஸத்$_3$ருஶ: ஶ்லாக்$_4$யஸ்த்ரிஷு லோகேஷு வித்$_3$யதே ।
கம் த்வம் ப்ராக்கேவலம் த$_4$ர்மம் சரித்வா லப்$_3$த$_4$வாந் வரம் ॥ (12)

ஶ்ருதபூர்வம் ஹி ந மயா பா$_4$ஷஸே யாத்$_3$ருஶம் ஸ்வயம் ।
திஷ்டே$_2$தா$_3$நீம் ந மே ஜீவந் ப்ரதியாஸ்யஸி து$_3$ர்மதே ॥
அத்$_3$ய த்வாம் நிஶிதைர்பா$_3$ணை: ப்ரேஷயாமி யமக்ஷயம் ॥ (13)

தத: ஶராஸநம் க்$_3$ருஹ்ய ஸாயகாம்ஶ்ச நராதி$_4$ப: ।
ரணாய நிர்யயௌ க்ருத்$_3$த$_4$: ஸம்வர்தோ மார்க$_3$மாவ்ருணோத் ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : பதினெட்டு

மருத்தனை வென்றான், இராவணன்!

வேதவதி நெருப்பில் வீழ்ந்தவுடன், இராவணன் புஷ்பகத்தில் ஏறி உலகைச் சுற்றி வந்தான். அவ்வாறு பயணம் செய்து வரும்போது, உசீரபீஜம் என்ற நாட்டில், தேவர்களோடுகூட மருத்த மன்னன் வேள்வி செய்துகொண்டிருப்பதைப் பார்த்தான், இராவணன். (1,2)

அறம் அறிந்தவரும், பிருஹஸ்பதியின் நேர் சகோதரருமான ஸம்வர்த்தர் என்ற பிரும்மரிஷி, எல்லா தேவர் குழுக்களாலும் சூழப்பட்டவராக வேள்வியைச் செய்வித்துக் கொண்டிருந்தார். (அவர் தலைமைப் பொறுப்பில் இருந்து கொண்டு, மற்றவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்தார்.) (3)

தேவர்கள் அவனை (இராவணனை) அங்கே பார்த்ததும், பிரும்மதேவரிடமிருந்து அவன் பெற்றுள்ள வரத்தின்படி அவன் வெல்லமுடியாதவன் என்று உணர்ந்து, விலங்கினப் பிறவிகளில் புகுந்துகொண்டார்கள். (4)

இந்திரன் மயிலாகவும், யமதருமராஜன் காகமாகவும், குபேரன் ஓணானாகவும், வருணன் ஹம்ஸமாகவும் ஆனார்கள். (5)

எதிரிகளை மாய்ப்பவரே! (இராமனே!) இவ்வாறாக மற்ற தேவர்களும் (தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக) வெவ்வேறு உருவங்களை எடுத்துக்கொண்டவுடன், அசுத்தமான ஒரு நாய் போல, இராவணன் வேள்விச்சாலைக்குள் நுழைந்தான். (6)

இராவணன், மன்னன் மருத்தனிடம் சென்று, ''என்னுடன் யுத்தம் செய்ய வா. அல்லது தோற்றுப் போனதாக ஒப்புக்கொள்'' என்று கூறினான். (7)

அப்போது மருத்தன், ''தாங்கள் யார்?'' என்று கேட்டான். இராவணன், இகழ்ச்சியுடன் நகைத்துவிட்டு(ப் பின்வருமாறு) கூறினான்— (8)

''மன்னனே! நான், குபேரனுடைய தம்பி. என் தோற்றத்தைப் (படாடோபத்தைப்) பார்த்தும்கூட, உனக்கு வியப்பு ஏற்படவில்லை; அச்சமும் ஏற்படவில்லை! உன் இயல்பைக் கண்டு நான் திருப்தி அடைந்துள்ளேன். (9)

மூன்று உலகங்களிலும் என் பேராற்றலை அறியாதவராக எவரேனும் இருக்கமுடியுமா? என்னுடைய பலத்தினால் சகோதரன் குபேரனை வென்று, இந்த புஷ்பக விமானத்தைக் கைப்பற்றியிருக்கிறேன்.'' (10)

அப்போது அரசன் மருத்தன், இராவணனைப் பார்த்து, ''ஆகா! போரில் அண்ணனையே தோற்கடித்திருக்கிறீர்களே! தாங்கள் பெரும் பாக்கியசாலி! (11)

மூன்று உலகங்களிலும் தங்களைப் போல் புகழுக்கு உரியவர் வேறு யார்தான் இருக்க முடியும்? தாங்கள் மிக முற்பட்ட காலத்தில், அறநெறியையே கடைப்பிடித்து, தவம் செய்து வரம் பெற்றிருக்கிறீர்கள்! (12)

(மருத்தன் கோபத்துடன் மேலும் கூறுகிறான்—) நான், உன்னைப் பற்றி இதுவரை கேள்விப்பட்டிராத செய்திகளையெல்லாம் கூறுகிறாய்! (தைரியமிருந்தால்) போருக்கு ஆயத்தமாக நில். கெடுமதி படைத்தவனே! நீ, உயிருடன் திரும்பிப் போகப் போவதில்லை! இப்போது, உன்னைக் கூர்மையான பாணங்களால் யமன் வீட்டிற்கு அனுப்பப் போகிறேன்.'' (13)

இவ்வாறு சொல்லிவிட்டு, கையில் வில்லும் அம்பும் தாங்கி, போர் செய்யப் புறப்பட்டான், மருத்தன். ஆனால், மாமுனிவர் ஸம்வர்த்தர் அவனை வழிமறித்துத் தடுத்தார். (14)

Koviloor Digital Library

ஸோऽப்₃ரவீத் ஸ்நேஹஸம்யுக்தம் மருத்தம் தம் மஹாந்ருஷி: ।
ஶ்ரோதவ்யம் யதி₃ மத்₃வாக்யம் ஸம்ப்ரஹாரோ ந தே க்ஷம: ॥ (15)

மாஹேஶ்வரமித₃ம் ஸத்ரமஸமாப்தம் குலம் த₃ஹேத் ।
தீ₃க்ஷிதஸ்ய குதோ யுத்₃த₄ம் க்ரோதி₄த்வம் தீ₃க்ஷிதே குத: ॥
ஸம்ஶயஶ்ச ஜயே நித்யம் ராக்ஷஸஶ்ச ஸுது₃ர்ஜய: ॥ (16)

ஸ நிவ்ருத்தோ கு₃ரோர்வாக்யாந்மருத்த: ப்ருதி₂வீபதி: ।
விஸ்ருஜ்ய ஸஶரம் சாபம் ஸ்வஸ்தோ₂ மக₂முகோ₂ऽப₄வத் ॥ (17)

ததஸ்தம் நிர்ஜிதம் மத்வா கோ₄ஷயாமாஸ வை ஶுக: ।
ராவணோ ஜயதீத்யுச்சைர்ஹர்ஷாந்நாத₃ம் விமுக்தவாந் ॥ (18)

தாந் ப₄க்ஷயித்வா தத்ரஸ்தா₂ந் மஹர்ஷீந் யக்ஞமாக₃தாந் ।
வித்ருப்தோ ருதி₄ரைஸ்தேஷாம் புந: ஸம்ப்ரயயௌ மஹீம் ॥ (19)

ராவணே து க₃தே தே₃வா: ஸேந்த்₃ராஸ்ஸைவ தி₃வௌகஸ: ।
தத: ஸ்வாம் யோநிமாஸாத்₃ய தாநி ஸத்த்வாநி சாப்₃ருவந் ॥ (20)

ஹர்ஷாத்தத₃ாப்₃ரவீதி₃ந்த்₃ரோ மயூரம் நீலப₃ர்ஹிணம் ।
ப்ரீதோऽஸ்மி தவ த₄ர்மக்ஞ பு₄ஜங்கா₃த்₃தி₄ ந தே ப₄யம் ॥ (21)

இத₃ம் நேத்ரஸஹஸ்ரம் து யத்த்வத்₃ப₃ர்ஹே ப₄விஷ்யதி ।
வர்ஷமாணே மயி முத₃ம் ப்ராப்ஸ்யஸே ப்ரீதிலக்ஷணாம் ॥ (22)

ஏவமிந்த்₃ரோ வரம் ப்ராதா₃ந்மயூரஸ்ய ஸுரேஶ்வர: ।
நீலா: கில புரா ப₃ர்ஹா மயூராணாம் நராதி₄ப ॥ (23)

ஸுராதி₄பாத்₃வரம் ப்ராப்ய க₃தா: ஸர்வேऽபி ப₃ர்ஹிண: ।
த₄ர்மராஜோऽப்₃ரவீத்₃ராம ப்ராக்₃வம்ஶே வாயஸம் ஸ்தி₂தம் ॥ (24)

பக்ஷிம்ஸ்தவாஸ்மி ஸுப்ரீத: ப்ரீதஸ்ய வசநம் ஶ்ருணு ।
யதா₂ந்யைர்விவிதை₄ ரோகை₃: பீட்₃யந்தே ப்ராணிநோ மயா ॥
தே ந தே ப்ரப₄விஷ்யந்தி மயி ப்ரீதே ந ஸம்ஶய: ॥ (25)

ம்ருத்யுதஸ்தே ப₄யம் நாஸ்தி வராந்மம விஹங்க₃ம ।
யாவத்த்வாம் ந வதி₄ஷ்யந்தி நராஸ்தாவத்₃ப₄விஷ்யஸி ॥ (26)

ஏதே மத்₃விஷயஸ்தா₂ வை மாநவா: க்ஷுத்₃ப₄யார்தி₃தா: ।
த்வயி பு₄க்தே து த்ருப்தாஸ்தே ப₄விஷ்யந்தி ஸபா₃ந்த₄வா: ॥ (27)

வருணஸ்த்வப்₃ரவீத்₃த₄ம்ஸம் க₃ங்கா₃தோயவிஹாரிணம் ।
ஶ்ருயதாம் ப்ரீதிஸம்யுக்தம் வச: பத்ரரதே₂ஶ்வர ॥ (28)

Koviloor Digital Library

தவ ஆற்றல் மிக்க முனிவர், பாச உணர்வோடு மருத்தனைப் பார்த்து, ''நான் இப்போது சொல்லப் போகும் நல்லுரை கேட்டு, சிந்திக்கத்தக்கது என்று கருதினால், நான் சொல்வதைக் கேள். (இவனுடன்) போர் புரியும் வாய்ப்பு உன்னிடம் இல்லை. (15)

நீ தொடங்கியுள்ள மாகேஸ்வர மகாவேள்வி இன்னும் நிறைவடையவில்லை. வேள்வியை நிறைவு செய்யாவிட்டால், (யஜமானனின்) பரம்பரையே அழிந்துபோய்விடும். வேள்வி விரதம் ஏற்றிருப்பவன் போர் புரியலாகாது. விரதம் ஏற்றிருப்பவனுக்குக் கோபம் என்பது வரவே கூடாது. போரில், வெற்றி–தோல்வியைப் பற்றி நிச்சயமாகக் கூறமுடியாது. அத்துடன், இந்த அரக்கன் வெல்லுதற்கரியவன்.'' (16)

மன்னன் மருத்தன், ஆசார்யரின் சொற்களைக் கேட்டதும், போர் புரியாமல் திரும்பிவிட்டான். வில்–அம்புகளைக் களைந்துவிட்டு மனநிம்மதியுடன் வேள்வியில் மனத்தைச் செலுத்தினான். அவன் போர் செய்யாமல் திரும்பிப் போய்விட்டதால், தன் தோல்வியை அவன் ஒப்புக்கொண்டதாகக் கருதி, சுகன் (என்ற இராவண அமைச்சன்) 'இராவணன் வென்றார்' என்று வெற்றிக்குரல் எழுப்பினான். மிகவும் உற்சாகமான அவன் பேரொலியுடன் சிம்மநாதம் செய்தான். (17,18)

வேள்விக்காக வந்திருந்த மாமுனிவர்களையெல்லாம் புசித்துவிட்டு, அவர்களுடைய இரத்தத்தால் திருப்தி அடையாமல் ('இவ்வளவு போதும்' என்ற மனநிறைவு ஏற்படாததால்), தொடர்ந்து பூமியில் திரிய ஆரம்பித்தான், இராவணன். (19)

இராவணன் அங்கிருந்து சென்றதும், இந்திரனும் மற்ற தேவர்களும், தங்கள் சுய உருவத்தை அடைந்தார்கள். பின்னர், தாங்கள் ஏற்றுக்கொண்டிருந்த உயிர்ப்பிராணிகளைப் பார்த்துக் கூறினார்கள். (20)

அப்போது, நீலவண்ண இறகுகளை(பீலிகளை)யுடைய மயிலைப் பார்த்து, இந்திரன் கூறினான்— ''அறம் அறிந்தவனே! நான் உன்னிடம் மகிழ்ச்சி கொண்டிருக்கிறேன். (அதனால், உனக்கு ஒரு வரம் தருகிறேன்.) பாம்பிடமிருந்து உனக்கு பயம் ஏற்படாது. (பாம்பு உன்னைக் கடிக்காது.) எனக்கு ஆயிரம் கண்கள் இருக்கின்றன. இனி, இதுபோலவே, உன் தோகைகளில் கண் போன்ற அடையாளங்கள் தோன்றும். நான், மேகங்களைக் கொண்டு மழை பொழியும்போது, நீ மிகவும் மகிழ்ச்சி அடைந்து, அதை வெளிப்படுத்தும் வகையில், தோகைகளை விரித்து ஆடுவாய்.'' (21,22)

மன்னர் இராமனே! இவ்வாறு, அமரர்கோனாகிய இந்திரன், மயிலுக்கு வரம் கொடுத்தான். இதற்கு முன்னர் மயிலின் தோகைகள் வெறும் நீலவண்ணமாக மட்டுமே இருந்தன. (23)

தேவராஜனிடமிருந்து வரத்தைப் பெற்ற பின்னர், எல்லா மயில்களும் அவ்விடத்தை விட்டுச் சென்றன. இராமா! வேள்விச்சாலையின் கிழக்குப்புறத்தில் வேள்வியை நடத்தும் யஜமானனும் அவனுடைய மனைவியும் தங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்த கொட்டகையின் மேல் உட்கார்ந்திருந்த காக்கையைப் பார்த்து, தருமராஜன் கூறினார்— ''பறவையே! நான் உன்னிடம் வெகு திருப்தியுடன் இருக்கிறேன். மனம் மகிழ்ந்திருக்கும் நான் கூறுவதைக் கேள். மற்ற உயிர்ப்பிராணிகள், பலவகையான நோய்களால் என்னால் துன்புறுத்தப்படுகிறார்கள். நான் உன்னிடம் மனமகிழ்ந்திருப்பதனால், அத்தகைய நோய்கள் உன்னைத் தீண்டமாட்டா. (24,25)

பறவையே! என்னுடைய வரத்தின் பயனாக, காலனிடமிருந்து உனக்கு பயம் ஏற்படாது. (காலன் நாள் குறித்து வந்து, உன் உயிரைக் கவர்ந்து செல்ல மாட்டான்.) மனிதர்கள் (மற்றப் பிராணிகள்) உன்னைக் கொல்லாத வரையில், நீ உயிருடன் இருப்பாய். என் உலகத்தில் பசியினால் தவித்துக் கொண்டிருக்கும் யாதனாசரீரிகளான மானுடர்கள் (மண்ணுலகில் உள்ள அவர்களுடைய புதல்வர் முதலியோரால்) உனக்கு உணவு கொடுத்து உன் பசியைப் போக்கினால், அவர்களும் உற்றார்–சுற்றத்தார்களும் (பசிதீர்ந்தவர்களாகத்) திருப்தி அடைகிறார்கள்.'' (26,27)

பின்னர், கங்கை நீரில் நீராடி மகிழும் ஹம்ஸத்தைப் பார்த்து, ''பறவைகளில் சிறந்தவனே! நான் மனமகிழ்ந்து கூறும் சொற்களைக் கேட்பாயாக'' என்று வருணன் கூறினான். (28)

Koviloor Digital Library

வர்ணோ மநோஹர: ஸௌம்ய சந்த்$_3$ரமண்ட$_3$லஸந்நிப$_4$: ।
ப$_4$விஷ்யதி தவோத$_3$க்$_3$ர: ஶுத்$_3$த$_4$பே$_2$நஸமப்ரப$_4$: ॥ (29)

மச்ச$_2$ரீரம் ஸமாஸாத்$_3$ய காந்தோ நித்யம் ப$_4$விஷ்யஸி ।
ப்ராப்ஸ்யஸே சாதுலாம் ப்ரீதிமேதந்மே ப்ரீதிலக்ஷணம் ॥ (30)

ஹம்ஸாநாம் ஹி புரா ராம நீலவர்ண: ஸபாண்ட$_3$ர: ।
பக்ஷா நீலாக்$_3$ரஸம்வீதா: க்ரோட$_3$ா: ஶஷ்பாக்$_3$ரநிர்மலா: ॥ (31)

அத$_2$ாப்$_3$ரவீத்$_3$வைஶ்ரவண: க்ருகலாஸம் கி$_3$ரௌ ஸ்தி$_2$தம் ।
ஹைரண்யம் ஸம்ப்ரயச்ச$_2$ாமி வர்ணம் ப்ரீதஸ்தவாப்யஹம் ॥ (32)

ஸத்$_3$ரவ்யம் ச ஶிரோ நித்யம் ப$_4$விஷ்யதி தவாக்ஷயம் ।
ஏஷ காஞ்சநகோ வர்ணோ மத்ப்ரீத்யா தே ப$_4$விஷ்யதி ॥ (33)

ஏவம் த$_3$த்த்வா வராந்ஸ்தேப்$_4$யஸ்தஸ்மிந் யக்ஞோத்ஸவே ஸுரா: ।
நிவ்ருத்தா: ஸஹ ராக்ஞா தே புந: ஸ்வப$_4$வநம் க$_3$தா: ॥ (34)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ அஷ்டாத$_3$ஶ: ஸர்க$_3$: ॥

ஏகோநவிம்ஶ: ஸர்க$_3$:

அநரண்யஶாப:

அத$_2$ ஜித்வா மருத்தம் ஸ ப்ரயயௌ ராக்ஷஸாதி$_4$ப: ।
நக$_3$ராணி நரேந்த்$_3$ராணாம் யுத்$_3$த$_4$காங்க்ஷீ த$_3$ஶாநந: ॥ (1)

ஸமாஸாத்$_3$ய து ராஜேந்த்$_3$ராந் மஹேந்த்$_3$ரவருணோபமாந் ।
அப்$_3$ரவீத்$_3$ராக்ஷஸேந்த்$_3$ரஸ்து யுத்$_3$த$_4$ம் மே தீ$_3$யதாமிதி ॥ (2)

நிர்ஜிதா: ஸ்மேதி வா ப்$_3$ரூத ஏஷ மே ஹி ஸுநிஶ்சய: ।
அந்யத$_2$ா குர்வதாமேவம் மோக்ஷோ நைவோபபத்$_3$யதே ॥ (3)

ததஸ்த்வபீ$_4$ரவ: ப்ராக்ஞா: பார்தி$_2$வா த$_4$ர்மநிஶ்சயா: ।
மந்த்ரயித்வா ததோऽந்யோந்யம் ராஜாந: ஸுமஹாப$_3$லா: ॥
நிர்ஜிதா: ஸ்மேத்யப$_4$ாஷந்த க்ஞாத்வா வரப$_3$லம் ரிபோ: ॥ (4)

து$_3$ஷ்யந்த: ஸுரதே$_2$ா க$_3$ாதி$_4$ர்க$_3$யோ ராஜா புரூரவா: ।
ஏதே ஸர்வேऽப்$_3$ருவம்ஸ்தாத நிர்ஜிதா: ஸ்மேதி பார்தி$_2$வா: ॥ (5)

அத$_2$ாயோத்$_4$யாம் ஸமாஸாத்$_3$ய ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ।
ஸுகு$_3$ப்தாமநரண்யேந ஶக்ரேணேவாமராவதீம் ॥ (6)

ஸ தம் புருஷஶார்தூ$_3$லம் புரந்த$_3$ரஸமம் ப$_3$லே ।
ப்ராஹ ராஜாநமாஸாத்$_3$ய யுத்$_3$த$_4$ம் தே$_3$ஹீதி ராவண: ॥
நிர்ஜிதோऽஸ்மீதி வா ப்$_3$ரூஹி த்வமேவம் மம ஶாஸநம் ॥ (7)

Koviloor Digital Library

''நற்பண்பினாய்! உன்னுடைய உடல்வண்ணம் சந்திரனைப் போன்றதாக, மாசுகளற்ற நுரைபோல் தூய வெண்ணிறமாக ஒளிரப் போகிறது. நான், நீர் உடல் கொண்டவனாதலால், (நீர்நிலைகளில் விருப்புடன் இருப்பிடம் கொண்டு,) அளவற்ற என் மனமகிழ்ச்சியின் நிரந்தர ஞாபகார்த்தமாக, நீ எப்போதும் பொலிவுடன் இருப்பாய்.'' (29,30)

இராமசந்திரா! முற்காலத்தில், ஹம்ஸப் பறவைகள் (முழு வெண்மையாக இல்லாமல்) நீலம் கலந்த வெண்ணிறமாக இருந்தன; சிறகுகளின் முன்பகுதி நீளமாக இருந்தது; இருபுறமுமுள்ள அக்குள் போன்ற பகுதி, புதிதாகத் தோன்றிய அருகம்புல்லைப் போன்று பசுமையாக இருந்தது. (31)

பின்னர், மனமகிழ்ச்சியுடனிருந்த குபேரன் மலையிலிருந்த ஓணானைப் பார்த்து, ''உன்னிடம் நான் பிரீதியுடன் இருக்கிறேன். உன் உடல்வண்ணம் பொன்வண்ணமாகுக. (32)

உன் தலைப்பகுதி, எப்போதும் குறைவற்றதாய் தங்கமாகப் பேரொளி வீசும். நான் மனமுவந்து இந்தப் பொன்வண்ணத்தை உனக்கு அளிக்கிறேன்.'' (33)

அந்த வேள்விப் பெருவிழாவில், அவைகளுக்கு இவ்வாறு வரங்கள் கொடுத்துவிட்டு, தேவர்கள் தம் மன்னனோடுகூட தத்தம் இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்றார்கள். (34)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : பத்தொன்பது

அனரண்யன் கொடுத்த சாபம்

மருத்தனை வென்ற பின்னர், அரக்கர்கோனாகிய தசக்ரீவன், மற்ற மன்னர்களுடனும் போர் செய்ய விரும்பி, அவர்களது நகரங்களுக்கும் சென்றான். (1)

மகேந்திரன், வருணன் முதலியோருக்கு இணையான ஆற்றல் கொண்ட அரசர்களிடம் சென்று, ''என்னுடன் போர் செய்ய வாருங்கள்'' என்று அரக்க மன்னன் அழைத்தான். (2)

''அல்லது, 'நாங்கள் வெல்லப்பட்டோம்' என்று கூறி ஒப்புக்கொள்ளுங்கள். இதுதான் என்னுடைய தீர்மானம். இந்த இரண்டு வழிகளில் ஒன்றை ஏற்றுக்கொள்ளாமல் நீங்கள் தப்பிக்க முடியாது.'' (3)

அச்சமற்றவர்களும், அறநெறியில் நடப்பவர்களும், பேராற்றல் கொண்டவர்களும், அறிவாளிகளுமான மன்னர்கள் தங்களுக்குள் ஆலோசனை நடத்தி, எதிரி பெற்றுள்ள வரத்தின் மகிமையை உணர்ந்து, (அவனுடன் போர் செய்து வெற்றி பெறமுடியாது என்பதைப் புரிந்து கொண்டு), ''நாங்கள் வெல்லப்பட்டோம்!'' என்று தெரிவித்தார்கள். (4)

செல்வனே! துஷ்யந்தன், சுரதன், காதி, கயன், மன்னன் புரூரவஸ் ஆகிய மன்னர்கள், ''நாங்கள் வெற்றி கொள்ளப்பட்டோம்'' என்று கூறினார்கள். (5)

பின்னர், அரக்க மன்னன் இராவணன், இந்திரன் அமராவதி நகரத்தைப் பாதுகாத்து வருவதைப் போல, அனரண்யனால் பாதுகாக்கப்படும் அயோத்தியை அடைந்தான். (6)

இந்திரனுக்கு நிகரான ஆற்றல் கொண்ட ஆண்புலியான அந்த மன்னனைப் பார்த்து, ''என்னுடன் போர் புரிய வா'' என்று இராவணன் அழைப்பு விடுத்தான். ''அல்லது, நான் வெல்லப்பட்டேன் என்று கூறுவாயாக. இது, என் கட்டளை.'' (7)

Koviloor Digital Library

அயோத்$_4$யாதி$_4$பதிஸ்தஸ்ய ஶ்ருத்வா பாபாத்மநோ வச: ।
அநரண்யஸ்து ஸங்க்ருத்$_3$தோ$_4$ ராக்ஷஸேந்த்$_3$ரமதா$_2$ப்$_3$ரவீத் ॥ (8)

தீயதே த்$_3$வந்த்$_3$வயுத்$_3$த$_4$ம் தே ராக்ஷஸாதி$_4$பதே மயா ।
ஸந்திஷ்ட$_2$ க்ஷிப்ரமாயத்தோ ப$_4$வ சைவம் ப$_4$வாம்யஹம் ॥ (9)

அத$_2$ பூர்வம் ஶ்ருதார்தே$_2$ந நிர்ஜிதம் ஸுமஹத்$_3$ப$_3$லம் ।
நிஷ்க்ராமத்தந்நரேந்த்$_3$ரஸ்ய ப$_3$லம் ரக்ஷோவதோ$_4$த்$_3$யதம் ॥ (10)

நாகா$_3$நாம் த$_3$ஶஸாஹஸ்ரம் வாஜிநாம் நியுதம் ததா$_2$ ।
ரதா$_2$நாம் ப$_3$ஹுஸாஹஸ்ரம் பத்தீநாம் ச நரோத்தம ॥
மஹீம் ஸஞ்சா$_2$த்$_3$ய நிஷ்க்ராந்தம் ஸபதா$_3$திரத$_2$ம் ரணே ॥ (11)

தத: ப்ரவ்ருத்தம் ஸுமஹத்$_3$யுத்$_3$த$_4$ம் யுத்$_3$த$_4$விஶாரத$_3$ ।
அநரண்யஸ்ய ந்ருபதே ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய சாத்$_3$பு$_4$தம் ॥ (12)

தத்$_3$ராவணப$_3$லம் ப்ராப்ய ப$_3$லம் தஸ்ய மஹீபதே: ।
ப்ராணஶ்யத ததா$_3$ ஸர்வம் ஹவ்யம் ஹுதமிவாநலே ॥ (13)

யுத்$_3$த்$_4$வா ச ஸுசிரம் காலம் க்ருத்வா விக்ரமமுத்தமம் ।
ப்ரஜ்வலந்தம் ஸமாஸாத்$_3$ய க்ஷிப்ரமேவாவஶேஷிதம் ॥
ப்ராவிஶத் ஸங்குலம் தத்ர ஶலபா$_4$ இவ பாவகம் ॥ (14)

நஶ்யதி ஸ்ம ப$_3$லம் தத்ர ஹவ்யம் ஹுதமிவாநலே ।
ஸோऽபஶ்யத்தந்நரேந்த்$_3$ரஸ்து நஶ்யமாநம் மஹாப$_3$லம் ॥
மஹார்ணவம் ஸமாஸாத்$_3$ய வநாபக$_3$ஶதம் யதா$_2$ ॥ (15)

தத: ஶக்ரத$_4$நு:ப்ரக்$_2$யம் த$_4$நுர்விஸ்பா$_2$ரயந் ஸ்வயம் ।
ஆஸஸாத$_3$ நரேந்த்$_3$ரஸ்தம் ராவணம் க்ரோத$_4$மூர்சி$_2$த: ॥ (16)

அநரண்யேந தேऽமாத்யா மாரீசஶுகஸாரணா: ।
ப்ரஹஸ்தஸஹிதா ப$_4$க்$_3$நா வ்யத்$_3$ரவந்த ம்ருகா$_3$ இவ ॥ (17)

ததோ பா$_3$ணஶதாந்யஷ்டௌ பாதயாமாஸ மூர்த$_4$நி ।
தஸ்ய ராக்ஷஸராஜஸ்ய இக்ஷ்வாகுகுலநந்த$_3$ந: ॥ (18)

தஸ்ய பா$_3$ணா: பதந்தஸ்தே சக்ரிரே ந க்ஷதிம் க்வசித் ।
வாரிதா$_4$ரா இவாப்$_4$ரேப்$_4$ய: பதந்த்யோ கி$_3$ரிமூர்த$_4$நி ॥ (19)

ததோ ராக்ஷஸராஜேந க்ருத்$_3$தே$_4$ந ந்ருபதிஸ்ததா$_3$ ।
தலேநாபி$_4$ஹதோ மூர்த்$_4$நி ஸ ரதா$_2$ந்நிபபாத ஹ ॥ (20)

ஸ ராஜா பதிதோ பூ$_4$மௌ விஹ்வலாங்க$_3$: ப்ரவேபித: ।
வஜ்ரத$_3$க்$_3$த$_4$ இவாரண்யே ஸாலோ நிபதிதோ யதா$_2$ ॥ (21)

Koviloor Digital Library

அயோத்திக்கோமானாகிய அனரண்யன், அந்தப் பாவியின் சொற்களைக் கேட்டதும் மிகவும் கோபங்கொண்டு, அரக்கத் தலைவனிடம் கூறினார்— (8)

''அரக்கத் தலைவனே! நான், உன்னுடன் துவந்துவ யுத்தம் செய்யப் போகிறேன். உடனே நீ ஆயத்தம் செய்துகொள். நானும் ஆயத்தப்படுத்திக் கொள்கிறேன். (9)

மிகப்பெரிய படைகள் அவனால் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அனரண்யன் கேள்விப்பட்டிருந்தார். (அதனால், தன்னுடைய படையை ஆயத்தமாக வைத்திருந்தார்.) அனரண்யனுடைய பெரும் படை, அரக்கனைக் கொல்லும் பேரார்வத்துடன் வெளியே புறப்பட்டது. (10)

பதினாயிரம் யானைகள், ஒரு லட்சம் குதிரைப் படை, பல ஆயிரம் தேர்கள் மற்றும் காலாட்படையினர் முதலியோர் பூமியை மறைத்துக் கொண்டு வெளியே புறப்பட்டார்கள். புருஷோத்தமனே! காலாட்படையினரும் தேர்ப்படையினரும் முன்னதாகச் சென்று போர்க்களத்தை அடைந்தனர். (11)

போர்க்கலை நிபுணனே! மன்னன் அனரண்யனுடைய படையினருக்கும் அரக்க மன்னன் படையினருக்குமிடையே ஆச்சரியப்பட வைக்கும் கடுமையான பெரும் போர் தொடங்கியது. (12)

அனரண்யனுடைய படை முழுவதும், இராவண சேனையை எதிர்த்துப் போராடி, வேள்வித்தீயில் இடப்பட்ட ஆகுதிப் பொருள்கள் போல சாம்பலாகிப் போயிற்று. (13)

மன்னனுடைய படை, வெகுநேரம் போர் செய்து தன் பராக்கிரமத்தை வெளிப்படுத்தியது. ஆனால், இராவணப் படையினரின் தாக்குதலைத் தாங்க முடியாமல் நெருப்பில் வீழ்ந்து மடியும் விட்டிற்பூச்சிகளைப் போல, பெருங்குழப்பத்தில் சிக்கிக் கொண்டு (பெரும்பாலோர் அழிந்து போய்) மிகச்சிலரே எஞ்சியிருந்தார்கள். (14)

மன்னன், (வேள்வித்தீயில் சொரியப்பட்ட பொருள்கள் உடனேயே அழிந்து போவதைப் போல) தன்னுடைய மாபெரும் படை, கரைபுரண்டு வெள்ளமாகப் பாய்ந்து வரும் நூற்றுக்கணக்கான ஆறுகள் பெருங்கடலை நெருங்கியதும், அதிலேயே கலந்து தம்மை இழந்துவிடுவதைப் போல அழிந்து கொண்டிருப்பதைத் தன் கண்களால் பார்த்தார். (15)

கோபத்தால் மனம் துடித்த மன்னன், இந்திரனுடைய வில்லுக்கு ஒப்பான தன்னுடைய வில்லை வளைத்துக் கொண்டு இராவணனோடு போர்புரிய, தானே முன் வந்தார். (16)

இராவணனுடைய அமைச்சர்களான மாரீசன், சுகன், ஸாரணன், பிரஹஸ்தன் ஆகியோர் (சிங்கத்தைக் கண்ட) மான்கள் போல தலைதெறிக்க ஓடிப்போனார்கள். (17)

இக்ஷ்வாகு பரம்பரையின் பெருமைகளைக் காப்பவரான அவர், அப்போது அரக்க மன்னனின் நெற்றியில் எண்ணூறு பாணங்களைச் செலுத்தினார். (18)

ஆனால், இவ்வளவு பாணங்களும் மேகங்கள் பொழியும் மழைப்பொழிவினால் சற்றும் கலங்காத மலைச்சிகரம் போல், அவனிடம் எவ்விதத் தளர்ச்சியையும் உண்டாக்கவில்லை. (19)

அப்போது, கோபங்கொண்ட அரக்க மன்னன், தன் உள்ளங்கையினால் அயோத்தி மன்னனைத் தலையில் தாக்கினான். அவர், தேரிலிருந்து கீழே விழுந்தார். (20)

தரையில் விழுந்த அவர், உடல் நடுங்க, அங்கங்கள் பழுதுபட, காட்டில் ஒரு மரம் இடியினால் எரிக்கப்பட்டதைப் போல (உயிரற்ற நிலையில்) கிடந்தார். (21)

Koviloor Digital Library

தம் ப்ரஹஸ்யாப்$_3$ரவீத்$_3$ரக்ஷ இக்ஷ்வாகும் ப்ருதி$_2$வீபதிம் ।
கிமித$_3$ாநீம் ப$_2$லம் ப்ராப்தம் த்வயா மாம் ப்ரதியுத்$_4$யதா ॥ (22)

த்ரைலோக்யே நாஸ்தி யோ த்$_3$வந்த்$_3$வம் மம த$_3$த்$_3$யாந்நராதி$_4$ப ।
ஶங்கே ப்ரஸக்தோ பே$_4$ாகே$_3$ஷு ந ஶ்ருணோஷி ப$_3$லம் மம ॥ (23)

தஸ்யைவம் ப்$_3$ருவதோ ராஜா மந்த$_3$ாஸூர்வாக்யமப்$_3$ரவீத் ।
கிம் ஶக்யமிஹ கர்தும் வை காலோ ஹி து$_3$ரதிக்ரம: ॥ (24)

ந ஹ்யஹம் நிர்ஜிதோ ரக்ஷஸ்த்வயா சாத்மப்ரஶம்ஸிநா ।
காலேநைவ விபந்நோऽஹம் ஹேதுபூ$_4$தஸ்து மே ப$_4$வாந் ॥ (25)

கிம் த்வித$_3$ாநீம் மயா ஶக்யம் கர்தும் ப்ராணபரிக்ஷயே ।
ந ஹ்யஹம் விமுகே$_2$ா ரக்ஷோ யுத்$_4$யமாநஸ்த்வயா ஹத: ॥ (26)

இக்ஷ்வாகுபரிப$_4$ாவித்வாத்$_3$வசோ வக்ஷ்யாமி ராக்ஷஸ ।
யதி$_3$ த$_3$த்தம் யதி$_3$ ஹுதம் யதி$_3$ மே ஸுக்ருதம் தப: ॥
யதி$_3$ கு$_3$ப்தா: ப்ரஜா: ஸம்யக் தத$_3$ா ஸத்யம் வசோऽஸ்து மே ॥ (27)

உத்பத்ஸ்யதே குலே ஹ்யஸ்மிந்நிக்ஷ்வாகூணாம் மஹாத்மநாம் ।
ராமோ த$_3$ாஶரதி$_2$ர்நாம யஸ்தே ப்ராணாந் ஹரிஷ்யதி ॥ (28)

ததோ ஜலத$_4$ரோத$_3$க்$_3$ரஸ்தாடி$_3$தோ தே$_3$வது$_3$ந்து$_3$பி$_4$: ।
தஸ்மிந்நுத$_3$ாஹ்ருதே ஶாபே புஷ்பவ்ருஷ்டிஶ்ச க$_2$ாச்ச்யுதா ॥ (29)

தத: ஸ ராஜா ராஜேந்த்$_3$ர க$_3$த: ஸ்த$_2$ாநம் த்ரிவிஷ்டபம் ।
ஸ்வர்க$_3$தே ச ந்ருபே தஸ்மிந் ராக்ஷஸ: ஸோऽபஸர்பத ॥ (30)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகோநவிம்ஶ: ஸர்க$_3$: ॥

விம்ஶ: ஸர்க$_3$:

ராவணஸந்து$_4$க்ஷணம்

ததோ வித்ராஸயந் மர்த்யாந் ப்ருதி$_2$வ்யாம் ராக்ஷஸாதி$_4$ப: ।
ஆஸஸாத$_3$ க$_4$நே தஸ்மிந்நாரத$_3$ம் முநிபுங்க$_3$வம் ॥ (1)

தஸ்யாபி$_4$வாத$_3$நம் க்ருத்வா த$_3$ஶக்$_3$ரீவோ நிஶாசர: ।
அப்$_3$ரவீத் குஶலம் ப்ருஷ்ட்வா ஹேதுமாக$_3$மநஸ்ய ச ॥ (2)

நாரத$_3$ஸ்து மஹாதேஜா தே$_3$வர்ஷிரமிதப்ரப$_4$: ।
அப்$_3$ரவீந்மேக$_4$ப்ருஷ்ட$_2$ஸ்தே$_2$ா ராவணம் புஷ்பகே ஸ்தி$_2$தம் ॥ (3)

ராக்ஷஸாதி$_4$பதே ஸௌம்ய திஷ்ட$_2$ விஶ்ரவஸ: ஸுத ।
ப்ரீதோऽஸ்ம்யபி$_4$ஜநோபேத விக்ரமைரூர்ஜிதைஸ்தவ ॥ (4)

Koviloor Digital Library

அப்போது இக்ஷ்வாகு மன்னராகிய அவரைப் பார்த்து, ஏளனமாகப் புன்னகை செய்து, ''என்னை எதிர்த்துப் போரிட்டதால், என்ன பயனைக் கண்டாய்?'' என்று அரக்கன் கேட்டான். (22)

''வேந்தனே! மூன்று உலகத்திலும் என்னுடன் துவந்துவ யுத்தம் செய்யக் கூடியவர் எவருமிலர். ஒருக்கால், எப்போதும் சுகபோகங்களையே அனுபவித்துக் கொண்டிருந்த நீர், என் பலத்தைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லை போலும்!'' (23)

மன்னருடைய உயிர்மூச்சு மெல்ல அடங்கிக் கொண்டிருந்தது. அந்த நிலையில், ''இப்போது என்னால் என்ன செய்ய முடியும்? காலத்தை (விதியை) மீறி எதுவும் செய்ய முடியாது. (24)

அரக்கனே! தற்புகழ்ச்சி செய்து கொள்ளும் உன்னால் நான் வெல்லப்படவில்லை. உண்மையில், விதிதான் என்னை வென்றிருக்கிறது. நீ, இதற்கு ஒரு நிமித்த காரணம் மட்டுமே. (25)

உயிர் அடங்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் என்னால் என்ன செய்ய முடியும்? (ஆனால், எனக்கு நல்ல கதியே கிடைக்கும். ஏனென்றால்,) நான் புறமுதுகிட்டு ஓடிப் போகவில்லை; போர் செய்து கொண்டிருக்கும்போதே உன்னால் தாக்கப்பட்டேன். (எனவே, எனக்கு வீரசுவர்க்கம் கிடைக்கும்.) (26)

அரக்கனே! நீ, இக்ஷ்வாகு குலத்தைப் பற்றி இழிவாகப் பேசிவிட்டாய். அதனால், உனக்கு நான் சாபம் கொடுக்கப் போகிறேன். நான், தானங்கள், நித்யாக்னி ஹோமங்கள், நற்கர்மங்கள் செய்திருந்தால், குடிமக்களைக் கவனத்துடன் காப்பாற்றியிருந்தால், நான் கூறப்போகும் சொற்கள் (உனக்குக் கொடுக்கப் போகும் சாபம்) சத்தியமாக நிறைவேறும். (27)

மகாத்மாக்களான இக்ஷ்வாகு மன்னர்களின் இந்தப் பரம்பரையில், தசரதனின் புதல்வனாக இராமன் தோன்றுவான். அவன், உன் உயிரைப் பறிப்பான்.'' (28)

அரசன் இவ்வாறு சொல்லி முடித்தவுடன் மேகங்களின் இடியோசைபோல் (வானுலகத்தோர்) துந்துபிகளை முழக்கினார்கள்; மலர்மாரியும் வானத்திலிருந்து பொழிந்தது. (29)

மன்னர் திலகமே! அரசன் (அனரண்யன்) உயிர் பிரிந்து மேலுலகம் சென்றபின், அரக்கன் இராவணன் அவ்விடத்தை விட்டு அகன்றான். (30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபது

இராவணனைத் தூண்டிவிடுதல்

மண்ணுலகில் மனிதர்களையெல்லாம் நடுங்கச் செய்து கொண்டிருந்த அரக்க மன்னன், (ஒருசமயம்) முகிற்கூட்டத்தினிடையே வந்துகொண்டிருந்த மாமுனிவர் நாரதரைக் கண்டான். அரக்கன் தசக்ரீவன், அவரைப் பணிந்து வணங்கிய பின்னர், முறைப்படியான நலன் விசாரணை செய்துவிட்டு, அவர் அங்கே வந்திருப்பதன் காரணத்தைக் கேட்டான். (1,2)

எல்லையற்ற தவப்பேரொளியால் பிரகாசிப்பவரும் ஆன்மிக ஆற்றல் படைத்தவருமான தேவரிஷியான நாரதர் முகிற்கூட்டத்தில் இருந்தபடியே, புஷ்பக விமானத்தில் வீற்றிருந்த இராவணனைப் பார்த்துக் கூறினார்— (3)

''அரக்கர் பேரரசனே! நல்லவனே! விச்ரவஸின் குமாரனே! நற்குலத்தில் தோன்றியவனே! செவி கொடுத்துக் கேட்பாய். சந்தேகத்திற்கு இடமில்லாமல் உறுதி செய்யப்பட்டுவிட்ட உன் எல்லையற்ற ஆற்றலால் நான் மிகவும் மனம் மகிழ்ந்திருக்கிறேன். (4)

Koviloor Digital Library

விஷ்ணுநா தை$_3$த்யக$_4$ாதைஸ்ச க$_3$ந்த$_4$ர்வோரக$_3$த$_4$ர்ஷணை: ।
த்வயா ஸமம் விமர்தை$_3$ஸ்ச ப்$_4$ருஶம் ஹி பரிதோஷித: ॥ (5)

கிஞ்சித்$_3$வக்ஷ்யாமி தாவத்தே ஶ்ரோதவ்யம் ஶ்ரோஷ்யஸே யதி$_3$ ।
தந்மே நிக$_3$த$_3$தஸ்தாத ஸமாதி$_4$ம் ஶ்ரவணே குரு ॥ (6)

கிமயம் வத்$_4$யதே தாத த்வயாவத்$_4$யேந தை$_3$வதை: ।
ஹத ஏவ ஹ்யயம் லோகோ யதா$_3$ ம்ருத்யுவஶம் க$_3$த: ॥ (7)

தே$_3$வதா$_3$நவதை$_3$த்யாநாம் யக்ஷக$_3$ந்த$_4$ர்வரக்ஷஸாம் ।
அவத்$_4$யேந த்வயா லோக: க்லேஷ்டும் யுக்தோ ந மாநுஷ: ॥ (8)

நித்யம் ஶ்ரேயஸி ஸம்மூட$_4$ம் மஹத்$_3$பி$_4$ர்வ்யஸநைர்வ்ருதம் ।
ஹந்யாத் கஸ்தாத்$_3$ருஶம் லோகம் ஜராவ்யாதி$_4$ஶதைர்யுதம் ॥ (9)

தைஸ்தைரநிஷ்டோபக$_3$மைரஜஸ்ரம் யத்ர குத்ர க: ।
மதிமாந் மாநுஷே லோகே யுத்$_3$தே$_4$ந ப்ரணயீ ப$_4$வேத் ॥ (10)

க்ஷீயமாணம் தை$_3$வஹதம் க்ஷுத்பிபாஸாஜராதி$_3$பி$_4$: ।
விஷாத$_3$ஶோகஸம்மூட$_4$ம் லோகம் த்வம் க்ஷபயஸ்வ மா ॥ (11)

பஶ்ய தாவந்மஹாபா$_3$ஹோ ராக்ஷஸேஶ்வர மாநுஷம் ।
மூட$_4$மேவம் விசித்ரார்த$_2$ம் யஸ்ய ந க்ஞாயதே க$_3$தி: ॥ (12)

க்வசித்$_3$வாதி$_3$த்ரந்ருத்யாதி$_3$ ஸேவ்யதே முதி$_3$தைர்ஜநை: ।
ருத்$_3$யதே சாபரைரார்தைர்தா$_4$ராஶ்ருநயநாநநை: ॥ (13)

மாதாபித்ருஸுதஸ்நேஹைர்ப$_4$ார்யாப$_3$ந்து$_4$மநோரமை: ।
மோஹிதோऽயம் ஜநோ த்$_4$வஸ்த: க்லேஶம் ஸ்வம் நாவபு$_3$த்$_4$யதே ॥ (14)

அலமேநம் பரிக்லிஶ்ய லோகம் மோஹநிராக்ருதம் ।
ஜித ஏவ த்வயா ஸௌம்ய மர்த்யலோகோ ந ஸம்ஶய: ॥ (15)

அவஶ்யமேபி$_4$: ஸர்வைஶ்ச க$_3$ந்தவ்யம் யமஸாத$_3$நம் ।
தந்நிக்$_3$ருஹ்ணீஷ்வ பௌலஸ்த்ய யமம் பரபுரஞ்ஜய ॥
தஸ்மிஞ்ஜிதே ஜிதம் ஸர்வம் ப$_4$வத்யேவ ந ஸம்ஶய: ॥ (16)

ஏவமுக்தஸ்து லங்கேஶோ தீ$_3$ப்யமாநம் ஸ்வதேஜஸா ।
அப்$_3$ரவீந்நாரத$_3$ம் தத்ர ஸம்ப்ரஹஸ்யாபி$_4$வாத்$_3$ய ச ॥ (17)

Koviloor Digital Library

பராக்கிரமம் மிக்க அசுரர்களைக் கொன்று, தன் ஆற்றலை நிலைநாட்டிய விஷ்ணுவைப் போல், கந்தர்வர்களையும் பன்னகர்களையும் எதிர்த்துச் சென்று, அவர்களை அழித்து வீரத்தை நிலைநாட்டிய உன்னைக் கண்டு, நான் உவகை அடைகிறேன். மாண்புடையவனே! நான் உன்னிடம் சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். கேட்பதில் உனக்கு விருப்பமிருந்தால் சிறிதுநேரம் நின்று கேட்டுவிட்டுப் போகலாம். நான் சொல்லப் போவதை, ஒருமைப்பட்ட மனத்துடன் கூர்ந்து கேள். (5,6)

அன்பனே! தேவதைகளாலும்கூட உன்னைக் கொல்ல முடியாது. அப்படியிருக்கும்போது, இந்த மண்ணுலக மக்களைக் கொல்வதால் உனக்கு என்ன பெருமை ஏற்படப்போகிறது? (தேவதைகளைப் போல் அவர்கள் அமரர்கள் அல்லர்; என்றேனும் ஒரு நாள் இயற்கையாகவே, அவர்கள் உயிரைத் துறந்தே ஆகவேண்டும்.) எப்படியும் மனிதர்கள் யமன் வசப்பட்டவர்கள் தாமே? (7)

தேவ–தானவ–அசுர–யக்ஷ–கந்தர்வ–அரக்கர்கள் எவராலும் கொல்லப்பட முடியாத நீ, (கேவலம் அற்பர்களான) மனிதர்களுடன் சண்டை போட்டு வெற்றி அடைகிறாய் என்பது உன் வீரத்திற்குப் பெருமை சேர்ப்பது அல்ல. (8)

தினமும், சுகசௌக்கியத்திற்காக அலைந்து திரிந்து அறியாமையில் ஆழ்ந்திருப்பதும், மிகப்பெரிய ஆபத்துக்களால் சூழப்பட்டிருப்பதும், முதுமை மற்றும் நூற்றுக்கணக்கான நோய்களில் சிக்கியிருப்பதுமான இந்த உலக மக்களை, உன்னைப் போன்ற பேராற்றல் படைத்த வீரன் போரிட்டுக் கொல்வது என்பது நகைப்புக்குரிய செயலல்லவா! (9)

இந்த உலகில் எங்கே போனாலும் இடைவிடாது ஆபத்துக்கள்தாம் எதிர்ப்படுகின்றன. இந்த உண்மையைப் புரிந்துகொண்டுவிட்ட எந்த ஒரு புத்திசாலியாவது, மனிதர்களுடன் போர்புரிவதில் மனத்தைச் செலுத்துவானா? (அவர்களை எப்போதும் சூழ்ந்து நிற்கும் ஆபத்துக்களால், அவர்கள் நிச்சயம் அழியத்தானே போகிறார்கள்?) (10)

இந்த உலக மக்கள், பசி–தாகம்–முதுமை ஆகியவற்றால் தளர்ந்துகொண்டே போகிறார்கள். (உடைமை இழப்பு, நிறைவேறாத விருப்பம், எதிர்பாராத விபத்து ஆகியவற்றால் ஏற்படும்) மனத்துயர்களாலும் மனவலிமை குன்றியும் அறியாமையில் மூழ்கியிருக்கும் இந்த உலக மக்களை, நீ வேறு ஏன் துன்புறுத்த வேண்டும்? தோள்வலி மிக்கவனே! கேள். அரக்கர் தலைவனே! நல்லது–கெட்டது அறியாத, சுகபோகங்களை நாடி எங்கோ சுற்றித் திரிந்து கொண்டிருக்கிற, சரியான போக்கிடம் அறியாத மனிதர்களை விட்டுவிடு. (11,12)

பார்! சில இடங்களில் சில மனிதர்கள் மகிழ்ச்சியாக இசை–நாட்டியம் கேட்டும் பார்த்தும் பொழுதுபோக்குகிறார்கள். வேறு சிலரோ, துன்பம் தாங்காமல் கண்களிலிருந்து பெருகும் கண்ணீர்ப்பெருக்கு முகங்களில் ஓடி வழிய வாய்விட்டு அழுதுகொண்டிருக்கிறார்கள். தாய்–தந்தை–மக்களிடம் பாசம்; மனத்திற்குகந்த மனைவி–உற்றார்–உறவினர்கள்பால் அன்பு – இவைகளால் மனம் மயங்கி, உலக மக்கள் நிலைகுலைந்து போயிருக்கிறார்கள். தாங்கள் அறியாமையில் கட்டுண்டு கிடப்பதைக்கூட இவர்கள் அறியவில்லை. (13,14)

தெளிந்த அறிவிலிருந்து விலக்கப்பட்டு, அறியாமையில் மூழ்கியிருக்கும் மனித குலத்திற்கு, நீ மேலும் பல சங்கடங்களைக் கொடுப்பதால் என்ன பெருமை உனக்குக் கிடைக்கப் போகிறது? போதும், பிள்ளாய், மனிதர் வாழும் மண்ணுலகம் உன்னால் வெற்றி கொள்ளப்பட்டுவிட்டது என்பதில் ஐயமே இல்லை. (15)

புலஸ்திய குலத்தோன்றலே! எதிரிகளின் நகரங்களைக் கைப்பற்றுபவனே! இவர்களோடு (அமைச்சர்–படைவீரர்களோடு) யமன் உலகத்திற்குப் போ. யமனுடன் போரிட்டு, அவனை உன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால், அதுதான் உனக்குப் பெருமை. அவன் மட்டும் உன்னால் வெல்லப்பட்டுவிட்டால், மற்ற எல்லோருமே வெல்லப்பட்டு விட்டார்கள் என்று எடுத்துக் கொள்ளலாம். சந்தேகமே வேண்டாம்!'' (16)

தன்னுடைய ஆன்மப் பொலிவினால் ஒளிவீசிக் கொண்டிருந்த நாரத முனிவர், இவ்வாறு கூறி முடித்ததும், சற்றே இளநகை புரிந்து, வணங்கிவிட்டு இராவணன் கூறினான்— (17)

Koviloor Digital Library

மஹர்ஷே தே3வக3ந்த4ர்வவிஹார ஸமரப்ரிய ।
அஹம் ஸமுத்3யதோ க3ந்தும் விஜயார்த2ம் ரஸாதலம் ॥ (18)

ததோ லோகத்ரயம் ஜித்வா ஸ்தா2ப்ய நாகா3ந் ஸுராந் வஶே ।
ஸமுத்3ரமம்ருதார்த2ம் ச மதி2ஷ்யாமி ரஸாலயம் ॥
அதா2ப்3ரவீத்3த3ஶக்3ரீவம் நாரதோ3 ப4க3வாந்ருஷி: ॥ (19)

க்வ க2ல்விதா3நீம் மார்கே3ண த்வயா ஹ்யந்யேந க3ம்யதே ।
அயம் க2லு ஸுது3ர்க3ம்ய: ப்ரேதராஜபுரம் ப்ரதி ॥
மார்கோ3 க3ச்ச2தி து3ர்த4ர்ஷோ யமஸ்யாமித்ரகர்ஶந ॥ (20)

ஸ து ஶாரத3மேகா4ப4ம் ஹாஸம் முக்த்வா த3ஶாநந: ।
உவாச க்ருதமித்யேவ வசநம் சேத3மப்3ரவீத் ॥ (21)

தஸ்மாதே3வமஹம் ப்3ரஹ்மந் வைவஸ்வதவதே4ாத்3யத: ।
க3ச்சா2மி த3க்ஷிணாமாஶாம் யத்ர ஸூர்யாத்மஜோ ந்ருப: ॥ (22)

மயா ஹி ப4க3வந் க்ரோதா4த் ப்ரதிஜ்ஞாதம் ரணார்தி2நா ।
அவஜேஷ்யாமி சதுரோ லோகபாலாநிதி ப்ரபோ4 ॥ (23)

ததி3ஹ ப்ரஸ்தி2தோऽஹம் வை ப்ரேதராஜபுரம் ப்ரதி ।
ப்ராணிஸங்க்லேஶகர்தாரம் யோஜயிஷ்யாமி ம்ருத்யுநா ॥ (24)

ஏவமுக்த்வா தஶக்3ரீவோ முநிம் தமபி4வாத்3ய ச ।
ப்ரயயௌ த3க்ஷிணாமாஶாம் ப்ரஹ்ருஷ்ட: ஸஹ மந்த்ரிபி4: ॥ (25)

நாரத3ஸ்து மஹாதேஜா முஹூர்தம் த்4யாநமாஸ்தி2த: ।
சிந்தயாமாஸ விப்ரேந்த்3ரோ விதூ4ம இவ பாவக: ॥ (26)

யேந லோகாஸ்த்ரய: ஸேந்த்3ரா: க்லிஶ்யந்தே ஸசராசரா: ।
க்ஷீணே சாயுஷி த4ர்மேண ஸ காலோ ஜேஷ்யதே கத2ம் ॥ (27)

ஸ்வத3த்தக்ருதஸாக்ஷீ யோ த்3விதீய இவ பாவக: ।
லப்3த4ஸம்ஜ்ஞா விசேஷ்டந்தே லோகா யஸ்ய மஹாத்மந: ॥ (28)

யஸ்ய நித்யம் த்ரயோ லோகா வித்3ரவந்தி ப4யார்தி3தா: ।
தம் கத2ம் ராக்ஷஸேந்த்3ரோऽஸௌ ஸ்வயமேவ க3மிஷ்யதி ॥ (29)

யோ விதா4தா ச தா4தா ச ஸுக்ருதம் து3ஷ்க்ருதம் ததா2 ।
த்ரைலோக்யம் விஜிதம் யேந தம் கத2ம் விஜயிஷ்யதே ॥
அபரம் கிம் து க்ருத்வைவ விதா4நம் ஸம்விதா4ஸ்யதி ॥ (30)

Koviloor Digital Library

''மாமுனிவரே! தேவ–கந்தர்வ உலகங்களில் சுற்றி வருபவரே! போர்க்காட்சிகளைக் காண்பதில் ஆர்வம் உடையவரே! நான், எல்லா உலகங்களையும் வெற்றி கொள்ளும் நோக்கத்துடன் புறப்பட்டு, இதோ ரஸாதலம் போய்க் கொண்டிருக்கிறேன். (18)

மூன்று உலகங்களையும் வெல்லப் போகிறேன். நாகர்களையும் தேவர்களையும் வென்று என் ஆணைக்குள் கொண்டுவரப் போகிறேன். உயிரை நிலைநிறுத்தும் மூலிகைகள், சத்துக்கள் நிறைந்த பெருங்கடலை, அமிழ்தத்தைப் பெறுவதற்காகக் கடையப் போகிறேன்.'' இதைக் கேட்டதும் பகவான் நாரத முனிவர், தசக்ரீவனைப் பார்த்துக் கூறினார்— (19)

''என்ன இது? ரஸாதலத்திற்குச் செல்லும் நேர்ப்பாதையை விட்டுவிட்டு ஏன் வேறு வழியில் போகிறாய்? யமலோகம் வழியாகச் செல்லும் இந்தப் பாதை மிகவும் மோசமானது என்பது உனக்குத் தெரியாதா? எதிரிகளை அடக்குபவனே! இந்தப் பாதை, கடத்தற்கு மிகவும் அரியது.'' (20)

இதைக் கேட்ட தசக்ரீவன், சரத்கால வெண்ணிற மேகம் போல் நகைத்துவிட்டு, ''தங்கள் சொற்களை ஏற்கிறேன்'' என்று கூறிய பின்னர், மேலும் தொடர்ந்தான். (21)

''பிரும்மாவின் புதல்வரே! (தாங்கள் சரியானபடி எனக்கு அறிவுரை தந்துள்ளீர்கள்!) (ரஸாதலத்தைப் பின்னர் பார்த்துக் கொள்கிறேன்!) இப்போது, யமனைக் கொல்ல வேண்டும் என்ற துடிப்பு என்னுள் உண்டாகியிருக்கிறது. சூரிய குமாரனும் திசைக்காவலனுமான யமன் இருக்கும் தென்திசையை நோக்கி இப்போது செல்கிறேன்! (22)

ஐயனே! ஒரு சமயத்தில், போர்புரியத் துடித்துக் கொண்டிருந்த நான், (என்னுடன் போர்புரிவதற்குத் தகுதியுள்ள பகைவன் யாரும் கிடைக்காததால் மிகவும் கோபங்கொண்டு) 'நான்கு திசைக்காவலர்களையும் வென்று காட்டுவேன்' என்று சபதம் செய்தேன். ஆகவே, இப்போது அந்தச் சபதத்தை நிறைவேற்றும் பொருட்டு (தங்களால் நினைவூட்டப்பட்டவனாக) உயிர் துறந்தோர்க்குத் தலைவனாக இருக்கும் யமராஜாவின் நகரத்தை நோக்கி, இப்போதே புறப்பட்டுவிட்டேன்! உயிர்ப்பிராணிகளுக்குச் சித்ரவதை கொடுக்கும் அவனையே காலனிடம் ஒப்படைப்பேன்! (அவனும் சித்ரவதையை அனுபவித்துப் பார்க்கட்டும்!)'' (23,24)

இவ்வாறு தசக்ரீவன் கூறிவிட்டு, அந்த முனிவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, அமைச்சர்கள் உடன்வர மனமகிழ்ச்சியுடன் தென்திசையை நோக்கிச் சென்றான். (25)

புகை இல்லாமல் சுவாலை விட்டெரியும் நெருப்புப் போல் ஜொலிக்கும் சான்றோர்களில் முதன்மையானவரான நாரதர், சிறிதுநேரம் மனத்தை ஒருமுகப்படுத்தித் தியானத்தில் ஆழ்ந்து தனக்குள் சிந்தனை செலுத்தினார். (26)

ஆயுள் முடிந்தவுடன் எவரால் அசையும்–அசையாப் பொருள்களும், இந்திரன் உள்ளிட்ட மூன்றுலக மக்களும் அறநெறிகளுக்கிணங்க தண்டிக்கப்படுகிறார்களோ, அப்படிப்பட்ட (தனிப்பெரும் சக்தி பெற்ற) காலனை எவ்வாறு இவனால் வெல்ல முடியும்? (27)

எவர் உயிர்ப்பிராணிகளின் தானம்–கர்மங்களுக்குச் சாட்சியாக இருக்கிறாரோ, எவர் தன் பேரொளியால் இன்னொரு அக்னிதேவன் போல் விளங்குகிறாரோ, எந்த மகாத்மாவிடமிருந்து உயிர்ப்பைப் பெற்று எல்லா உயிர்ப்பிராணிகளும் பல்வகையான செயல்களில் ஈடுபடுகின்றனவோ, எவரிடமுள்ள பயத்தால் மூன்றுலக உயிரினங்களும் அவரிடமிருந்து அஞ்சி ஓடுகின்றனவோ, அப்படிப்பட்டவரிடம் இந்த அரக்க மன்னன், தானே நேரில் எவ்வாறு செல்லப் போகிறானோ? (28,29)

எவர் மூன்று உலகங்களையும் பாதுகாத்துப் பரிபாலித்து வருகிறாரோ; எவர் மனிதர்களின் பாவ–புண்ணியச் செயல்களுக்கு உரிய பலனை அளிக்கிறாரோ; எவர், மூன்று உலகப் பிராணிகளையும் வெற்றி கொண்டுள்ளாரோ (மீறமுடியாத தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறாரோ), அவரை இவன் எவ்வாறு வெல்லமுடியும்? இவன் எதிர்க்கப் போகும் அவரே, சகலப் பிராணிகளின் உயிரையும் (உரிய காலத்தில்) பறிக்கும் காலனாக இருக்கும்போது, இவன் (இராவணன்) வேறு எந்த உபாயத்தால், அவரை வெற்றி கொள்வான்? (30)

Koviloor Digital Library

கௌதூஹலஸமுத்பந்நோ யாஸ்யாமி யமஸாத$_3$நம் ।
விமர்த$_3$ம் த்$_3$ரஷ்டுமநயோர்யமராக்ஷஸயோ: ஸ்வயம் ॥ (31)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ விம்ஶ: ஸர்க$_3$: ॥

ஏகவிம்ஶ: ஸர்க$_3$:

யமராவணயுத்$_3$த$_4$ம்

ஏவம் ஸஞ்சிந்த்ய விப்ரேந்த்$_3$ரோ ஜகா$_3$ம லகு$_4$விக்ரம: ।
ஆக்$_2$யாதும் தத்$_3$யதா$_2$வ்ருத்தம் யமஸ்ய ஸத$_3$நம் ப்ரதி ॥ (1)

அபஶ்யத் ஸ யமம் தத்ர தே$_3$வமக்$_3$நிபுரஸ்க்ருதம் ।
விதா$_4$நமுபதிஷ்டா$_2$ந்தம் ப்ராணிநோ யஸ்ய யாத்$_3$ருஶம் ॥ (2)

ஸ து த்$_3$ருஷ்ட்வா யம: ப்ராப்தம் மஹர்ஷிம் தத்ர நாரத$_3$ம் ।
அப்$_3$ரவீத் ஸுக$_2$மாஸீநமர்க்$_4$யமாவேத்$_3$ய த$_4$ர்மத: ॥ (3)

கச்சித் க்ஷேமம் து தே$_3$வர்ஷே கச்சித்$_3$த$_4$ர்மோ ந நஶ்யதி ।
கிமாக$_3$மநக்ருத்யம் தே தே$_3$வக$_3$ந்த$_4$ர்வஸேவித ॥ (4)

அப்$_3$ரவீத்து ததா$_3$ வாக்யம் நாரதோ$_3$ ப$_4$க$_3$வாந்ருஷி: ।
ஶ்ரூயதாமபி$_4$தா$_4$ஸ்யாமி விதா$_4$நம் ச விதீ$_4$யதாம் ॥ (5)

ஏஷ நாம்நா த$_3$ஶக்$_3$ரீவ: பித்ருராஜ நிஶாசர: ।
உபயாதி வஶம் நேதும் விக்ரமைஸ்த்வாம் ஸுது$_3$ர்ஜயம் ॥ (6)

ஏதேந காரணேநாஹம் த்வரிதோ ஹ்யாக$_3$த: ப்ரபோ$_4$ ।
த$_3$ண்ட$_3$ப்ரஹரணஸ்யாத்$_3$ய தவ கிம் நு ப$_4$விஷ்யதி ॥ (7)

ஏதஸ்மிந்நந்தரே தூ$_3$ராத$_3$ம்ஶுமந்தமிவோதி$_3$தம் ।
த$_3$த$_3$ர்ஶ தீ$_3$ப்தமாயாந்தம் விமாநம் தஸ்ய ரக்ஷஸ: ॥ (8)

தம் தே$_3$ஶம் ப்ரபா$_4$யா தஸ்ய புஷ்பகஸ்ய மஹாப$_3$ல: ।
க்ருத்வா விதிமிரம் ஸர்வம் ஸமீபம் ஸோऽப்$_4$யவர்தத ॥ (9)

ஸோऽபஶ்யத் ஸுமஹாபா$_3$ஹுர்த$_3$ஶக்$_3$ரீவஸ்ததஸ்தத: ।
ப்ராணிந: ஸுக்ருதம் கர்ம பு$_4$ஞ்ஜநாம்ஶ்சைவ து$_3$ஷ்க்ருதம் ॥ (10)

அபஶ்யத் ஸைநிகாம்ஶ்சாஸ்ய யமஸ்யாநுசரை: ஸஹ ।
யமஸ்ய புருஷைருக்$_3$ரைர்கோ$_4$ரரூபைர்ப$_4$யாநகை: ॥ (11)

த$_3$த$_3$ர்ஶ வத்$_4$யமாநாம்ஶ்ச க்லிஶ்யமாநாம்ஶ்ச தே$_3$ஹிந: ।
க்ரோஶதஶ்ச மஹாநாத$_3$ம் தீவ்ரநிஷ்டநதத்பராந் ॥ (12)

Koviloor Digital Library

இப்போது என் மனத்தில் மிகவும் ஆர்வம் உண்டாகியிருக்கிறது. யமனுக்கும் அரக்கனுக்குமிடையே நடைபெறப் போகும் யுத்தத்தை நேரில் காண்பதற்காக யமலோகத்திற்கு நானும் போகிறேன்! (31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இருபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தொன்று

யமன்–இராவணன் பெரும்போர்!

இவ்வாறு ஆலோசனை செய்துவிட்டு, வேதவித்தகர்களில் முதன்மையானவரும் வெகு வேகமாக எந்த இடத்திற்கும் செல்லக் கூடியவருமான நாரதர், (தனக்கும் இராவணனுக்கும் இடையே) நடந்தவற்றை நடந்தவாறே தெரிவிக்கும் எண்ணத்துடன் யமன் இருப்பிடம் நோக்கிச் சென்றார். (1)

அவர், யமன் இருப்பிடத்தை அடைந்ததும், எதிரே அக்னிதேவர் அமர்ந்திருக்க, எந்தெந்தப் பிராணிகளுக்கு என்னென்ன கர்மாக்கள், அவைகளுக்கு என்னென்ன பலன்கள்? – என்று, விதிகளை வகுத்துக் கொண்டிருக்கும் யமனைப் பார்த்தார். (2)

மாமுனிவர் நாரதர் வந்திருப்பதைக் கண்ட யமன், முறைப்படி அர்க்யம் முதலியவற்றால் உபசரித்துவிட்டு, நல்ல ஆசனத்தில் அமரச் செய்து, பின்னர் சொன்னார்— (3)

''தேவ–கந்தர்வர்களால் வணங்கப்படும் தேவமுனிவரே! எல்லாம் நல்லமுறையில் தானே நடந்து வருகின்றன? நலம்தானே, தாங்கள்? எங்கேயும் அறநெறிகளுக்கு அழிவு ஏற்பட்டு விடவில்லையே? தாங்கள் இப்போது இங்கே வந்திருப்பதன் நோக்கம் என்ன?'' (4)

அப்போது, நாரத பகவான், ''ஒரு முக்கிய செய்தி சொல்லப் போகிறேன். அதைக் கேட்ட பின்னர், அதை எதிர்கொள்ள வேண்டிய வழிகளை வகுத்துக் கொள்'' என்று கூறினார். (5)

''உடலைத் துறந்த உயிர்களின் தலைவனே! தசக்ரீவன் என்ற பெயர் கொண்ட ஒரு இராக்கதன். எவராலும் வெல்ல முடியாத உங்களைத் தன் பேராற்றலால் வென்று, தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக இங்கே வந்துகொண்டிருக்கிறான். (6)

ஐயனே! இதைச் சொல்வதற்காகவே நான் விரைந்து இங்கே வந்தேன். ஆனால், (வாழ்நாள் முடிந்தவர்களின் உயிரைக் கவர்ந்து செல்லும்) காலதண்ட வடிவினரான உங்களை, அவனால் என்னதான் செய்யமுடியும்?'' (7)

இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போதே, ஒளிக்கதிர்களைக் கொண்ட சூரியன் உதிப்பதைப் போல், அரக்கனின் பிரகாசமான விமானம் தொலைவில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். பேராற்றல் கொண்ட இராவணனுடைய புஷ்பக விமானத்தின் பேரொளியால், அந்தப் பகுதியிலிருந்த இருள் முற்றிலுமாக விலகிச் சென்றது. அவன் நெருங்கி வந்தான். (8,9)

தோள்வலிமை படைத்த தசக்ரீவன் யமலோகத்திற்கு வந்ததும், உயிர்கள் எல்லாம் தத்தம் நற்செயல்–தீச்செயலுக்கு ஏற்ப, பலன்களை அனுபவித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். (10)

அங்கு, யமனுடைய பணியாளர்களையும் படைவீரர்களையும் கண்டான். யமவேதனைக் காட்சிகளையும் பார்த்தான். பயங்கரமான உருவம் படைத்தவர்களும் கொடுமையான இயல்புடையவர்களும் பயமுறுத்துபவர்களுமான யமதூதர்கள், உயிர்களை (யாதனாசரீரங்களை) அடித்துத் துவைத்து வதைத்துக் கொண்டிருப்பதையும், அவைகளைத் தாங்கமாட்டாமல் உயிர்கள் அழுது கூச்சலிடுவதையும் கண்டான். (11,12)

Koviloor Digital Library

க்ருமிபி$_4$ர்ப$_4$க்ஷயமாணாம்ஶ்ச ஸாரமேயைஶ்ச தா$_3$ருணை: ।
ஶ்ரோத்ராயாஸகரா வாசோ வத$_3$தஶ்ச ப$_4$யாவஹா: ॥ (13)

ஸந்தார்யமாணாந் வைதரணீம் ப$_3$ஹுஶ: ஶோணிதோத$_3$காம் ।
வாலுகாஸு ச தப்தாஸு தப்யமாநாந் முஹுர்முஹு: ॥ (14)

அஸிபத்ரவநே சைவ பி$_4$த்$_3$யமாநாநதா$_4$ர்மிகாந் ।
ரௌரவே க்ஷாரநத்$_3$யாம் ச க்ஷுரதா$_4$ராஸு சைவ ஹி ॥ (15)

பாநீயம் யாசமாநாம்ஶ்ச த்ருஷிதாந் க்ஷுதி$_4$தாநபி ।
ஶவபூ$_4$தாந் க்ருஶாந் தீ$_3$நாந் விவர்ணாந் முக்தமூர்த$_4$ஜாந் ॥ (16)

மலபங்கத$_4$ராந் தீ$_3$நாந் ரூக்ஷாம்ஶ்ச பரிதா$_4$வத: ।
த$_3$த$_3$ர்ஶ ராவணோ மார்கே$_3$ ஶதஶோऽத$_2$ ஸஹஸ்ரஶ: ॥ (17)

காம்ஶ்சிச்ச க்$_3$ருஹமுக்$_2$யேஷு கீ$_3$தவாதி$_3$த்ரநிஸ்வநை: ।
ப்ரமோத$_3$மாநாநத்$_3$ராக்ஷீத்$_3$ராவண: ஸுக்ருதை: ஸ்வகை: ॥ (18)

கோ$_3$ரஸம் கோ$_3$ப்ரதா$_3$தாரோ ஹ்யந்நம் சைவாந்நதா$_3$யிந: ।
க்$_3$ருஹாம்ஶ்ச க்$_3$ருஹதா$_3$தார: ஸ்வகர்மப$_2$லமஶ்நத: ॥ (19)

ஸுவர்ணமணிமுக்தாபி$_4$: ப்ரமதா$_3$பி$_4$ரலங்க்ருதாந் ।
தா$_4$ர்மிகாநபராம்ஸ்தத்ர தீ$_3$ப்யமாநாந் ஸ்வதேஜஸா ॥ (20)

த$_3$த$_3$ர்ஶ ஸுமஹாபா$_3$ஹூ ராவணோ ராக்ஷஸாதி$_4$ப: ।
ததஸ்தாந் பி$_4$த்$_3$யமாநாம்ஶ்ச கர்மபி$_4$ர்து$_3$ஷ்க்ருதை: ஸ்வகை: ॥
ராவணோ மோசயாமாஸ விக்ரமேண ப$_3$லாத்$_3$ப$_3$லீ ॥ (21)

ப்ராணிநோ மோசிதாஸ்தேந த$_3$ஶக்$_3$ரீவேண ரக்ஷஸா ।
ஸுக$_2$மாபுர்முஹூர்தம் தே ஹ்யதர்கிதமசிந்திதம் ॥ (22)

ப்ரேதேஷு முச்யமாநேஷு ராக்ஷஸேந ப$_3$லீயஸா ।
ப்ரேதகோ$_3$பா: ஸுஸங்க்ருத்$_3$தா$_4$ ராக்ஷஸேந்த்$_3$ரமபி$_4$த்$_3$ரவந் ॥ (23)

ததோ ஹலஹலாஶப்$_3$த$_3$: ஸர்வதி$_3$க்$_3$ப்$_4$ய: ஸமுத்தி$_2$த: ।
த$_4$ர்மராஜஸ்ய யோதா$_4$நாம் ஶூராணாம் ஸம்ப்ரதா$_4$வதாம் ॥ (24)

தே ப்ராஸை: பரிகை$_4$: ஶூலைர்முஸலை: ஶக்திதோமரை: ।
புஷ்பகம் ஸமவர்ஷந்த ஶூரா: ஶதஸஹஸ்ரஶ: ॥ (25)

தஸ்யாஸநாநி ப்ராஸாதா$_3$ந் வேதி$_3$காஸ்தோரணாநி ச ।
புஷ்பகஸ்ய ப$_3$ப$_4$ஞ்ஜுஸ்தே ஶீக்$_4$ரம் மது$_4$கரா இவ ॥ (26)

தே$_3$வநிஷ்டா$_2$நபூ$_4$தம் தத்$_3$விமாநம் புஷ்பகம் ம்ருதே$_4$ ।
ப$_4$ஜ்யமாநம் ததை$_2$வாஸீத$_3$க்ஷயம் ப்$_3$ரஹ்மதேஜஸா ॥ (27)

Koviloor Digital Library

பல பேர்களைப் புழுக்கள் அரித்துக் கொண்டிருந்தன; பல பேர்களைக் கொடிய நாய்கள் சுரண்டிக் கொண்டிருந்தன. அவர்கள் (பிரேதங்கள்) எல்லோரும் செவிகொண்டு கேட்போர்களையே நடுங்க வைக்கும் அவலக் குரல்களை எழுப்பிக் கொண்டிருந்தார்கள். (13)

செந்நீர் பாயும் வைதரணியைக் கடந்து அடிக்கடி செல்லும்படி பலர் கட்டாயப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள்; பலர், கொதிக்கும் மணலில் மறுபடியும் மறுபடியும் நடந்து செல்லும்படி வற்புறுத்தப்பட்டார்கள். (14)

பாவங்கள் செய்த சிலர், கத்தியைப் போல் கூர்மையான இலைகளைக் கொண்ட மரங்கள் உள்ள அஸிபத்ரக் காட்டில் அவ்விலைகளால் கிழிக்கப்பட்டுப் கொண்டிருந்தார்கள்; சிலர், ரௌரவ நரகத்தில் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தார்கள்; உப்புநீர் பெருகும் ஆறுகளில், பலர் அமிழ்த்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள்; கத்திமுனையில் ஓடும்படி பலர் விரட்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள்; பல உயிர்கள், பசி–தாகத்தினால் பரிதவித்துக் கொண்டிருந்தார்கள்; சிலர், 'ஒரு வாய் தண்ணீராவது கொடுங்களேன்' என்று கெஞ்சிக் கொண்டிருந்தார்கள்; சிலர், சடலங்களைப் போல பயங்கரமாகவும் மெலிந்தும் நிறம் மாறியும் தலைவிரி கோலத்துடனும் காணப்பட்டார்கள்; அழுக்குப் படிந்து, பரிதாபமான உடலுடன் பலர் நாற்றிசையிலும் ஓடிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறு நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான உயிர்கள், தண்டனைகளை அனுபவித்துக் கொண்டிருக்கும் காட்சிகளைப் போகும் வழியில் இராவணன் பார்த்தான். (15–17)

தாங்கள் செய்த புண்ணியங்களின் பலனாக, சிலர் விஸ்தாரமான இல்லங்களில், பாட்டு–நடனம் முதலான நுண்கலைகளைக் கண்டு ரசித்துக் கொண்டு, உல்லாசமாகப் பொழுதுபோக்கிக் கொண்டிருப்பதையும் இராவணன் பார்த்தான். தத்தம் கர்மாக்களுக்கு ஏற்றபடி சுக அனுபவத்துடன் அதாவது, கோதானம் செய்தவர்கள் பசும்பால் அருந்துவதையும்; அன்னதானம் செய்தவர்கள் பல்வகை உணவு வகைகளைப் பெற்று உண்டு மகிழ்வதையும்; வீடுதானம் செய்தவர்கள் பெரிய வீடுகளில் இருந்துகொண்டிருப்பதையும் கண்களால் கண்டான். (18,19)

மற்றும் சில அறநெறியாளர்கள் அழகு கொழிக்கும் உடல் பெற்றவர்களாக, பொன்–வைரம்–முத்து அணிகலன்கள் அணிந்து இளமைச் செருக்கினால் மதர்த்துத் திரியும் மங்கைகளுடன் இணைந்திருக்கக் கண்டான். பேராற்றல் கொண்ட அரக்க மன்னன் இராவணன், தாங்கள் செய்த தீயசெயல்களின் பயங்கரமான பயனை அனுபவித்துக் கொண்டிருந்தவர்களைத் தன்னுடைய பராக்கிரமத்தால் பலாத்காரமாக விடுவித்தான். (20,21)

இராவணனால் விடுவிக்கப்பட்ட அந்த உயிர்கள், எதிர்பாராத, எண்ணிப் பார்க்க முடியாத சுகத்தைச் சிறிது நேரத்திற்கு அனுபவித்தார்கள். பலம் மிகுந்த அரக்கனால், பிரேதங்கள் (துன்பமயமான நரகங்களிலிருந்து) விடுவிக்கப்பட்டதைக் கண்டு மிகவும் கோபங்கொண்ட பிரேத காவலர்கள், அரக்கனைத் தாக்கினார்கள். (22,23)

அப்போது, போர்புரியும் தருமராஜனின் படைவீரர்கள் எழுப்பிய வீராவேசக் குரல்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் எழுந்தன. ஈட்டிகள், குண்டாந்தடிகள், சூலங்கள், உலக்கைகள், வேல்கள், வல்லயங்கள் ஆகியவைகளை நூறு–ஆயிரக்கணக்கான வீரர்கள், புஷ்பகத்தின் மேல் பொழிந்தார்கள். (24,25)

கூட்டங்கூட்டமாகத் தாக்கும் தேனீக்களைப் போல அவர்கள் புஷ்பக விமானத்திற்குள் நுழைந்து, அதிலிருந்த இருக்கைகள், மாளிகைகள், மேடைகள், வாயில் தோரணங்கள் முதலியவற்றை விரைவாக அழித்தார்கள். தேவசக்திகளின் ஆதிக்கத்தில் இருந்த அந்த விமானம், போர்க்களத்தில் அடித்து நொறுக்கப்பட்டாலும், பிரும்மதேவரின் வரத்தின் பயனாக அப்போதைக்கப்போதே சீர்மையை அடைந்தது. ஏனென்றால், அது எவ்வளவு தாக்கப்பட்டாலும் ஒருபோதும் அழியக்கூடியது அல்ல. (26,27)

Koviloor Digital Library

அஸங்க்$_2$யா ஸுமஹத்யாஸீத்தஸ்ய ஸேநா மஹாத்மந: ।
ஶூராணாமுக்$_3$ரயாத்ரூணாம் ஸஹஸ்ராணி ஶதாநி ச ॥ (28)

ததோ வ்ருக்ஷைஶ்ச ஶைலைஶ்ச ப்ராஸாத$_3$ாநாம் ஶதைஸ்தத$_2$ா ।
ததஸ்தே ஸசிவாஸ்தஸ்ய யத$_2$ாகாமம் யத$_2$ாப$_3$லம் ॥
அயுத்$_4$யந்த மஹாவீரா: ஸ ச ராஜா த$_3$ஶாநந: ॥ (29)

தே து ஶோணிததி$_3$க்$_3$த$_4$ாங்க$_3$ா: ஸர்வஶஸ்த்ரஸமாஹதா: ।
அமாத்யா ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய சக்ருராயோத$_4$நம் மஹத் ॥ (30)

அந்யோந்யம் தே மஹாப$_4$ாக$_3$ா ஜக்$_4$நு: ப்ரஹரணைர்ப்$_4$ருஶம் ।
யமஸ்ய ச மஹாப$_3$ாஹோ ராவணஸ்ய ச மந்த்ரிண: ॥ (31)

அமாத்யாம்ஸ்தாம்ஸ்து ஸந்த்யஜ்ய யமயோத$_4$ா மஹாப$_3$லா: ।
தமேவ சாப்$_4$யத$_4$ாவந்த ஶூலவர்ஷைர்த$_3$ஶாநநம் ॥ (32)

தத: ஶோணிததி$_3$க்$_3$த$_4$ாங்க$_3$: ப்ரஹாரைர்ஜர்ஜரீக்ருத: ।
பு$_2$ல்லாஶோக இவாப$_4$ாதி புஷ்பகே ராக்ஷஸாதி$_4$ப: ॥ (33)

ஸ து ஶூலக$_3$த$_3$ாப்ராஸாஞ்ஶக்திதோமரஸாயகாந் ।
முஸலாநி ஶிலாவ்ருக்ஷாந் முமோசாஸ்த்ரப$_3$லாத்$_3$ப$_3$லீ ॥ (34)

தரூணாம் ச ஶிலாநாம் ச ஶஸ்த்ராணாம் சாதித$_3$ாருணம் ।
யமஸைந்யேஷு தத்$_3$வர்ஷம் பபாத த$_4$ரணீதலே ॥ (35)

தாம்ஸ்து ஸர்வாந் விநிர்பி$_4$த்$_3$ய தத$_3$ஸ்த்ரமபஹத்ய ச ।
ஜக்$_4$நுஸ்தே ராக்ஷஸம் கே$_4$ாரமேகம் ஶதஸஹஸ்ரஶ: ॥ (36)

பரிவார்ய ச தம் ஸர்வே ஶைலம் மேகே$_4$ாத்கரா இவ ।
பி$_4$ண்டி$_3$பாலைஶ்ச ஶூலைஶ்ச நிருச்ச்$_2$வாஸமபோத$_2$யந் ॥ (37)

விமுக்தகவச: க்ருத்$_3$த$_4$: ஸிக்த: ஶோணிதவிஸ்ரவை: ।
தத: ஸ புஷ்பகம் த்யக்த்வா ப்ருதி$_2$வ்யாமவதிஷ்ட$_2$த ॥ (38)

தத: ஸ கார்முகீ ப$_3$ாணீ ஸமரே சாபி$_4$வர்தத ।
லப்$_3$த$_4$ஸம்க்ஞோ முஹூர்தேந க்ருத்$_3$த$_4$ஸ்தஸ்த$_2$ௌ யத$_2$ாந்தக: ॥ (39)

தத: பாஶுபதம் தி$_3$வ்யமஸ்த்ரம் ஸந்த$_4$ாய கார்முகே ।
திஷ்ட$_2$ திஷ்டே$_2$தி தாநுக்த்வா தச்சாபம் விசகர்ஷ ஸ: ॥ (40)

ஆகர்ணாத் ஸ விக்ருஷ்யாத$_2$ சாபமிந்த்$_3$ராரிராஹவே ।
முமோச தம் ஶரம் க்ருத்$_3$த$_4$ஸ்த்ரிபுரே ஶங்கரோ யத$_2$ா ॥ (41)

தஸ்ய ரூபம் ஶரஸ்யாஸீத்$_3$விதூ$_4$மஜ்வாலமண்ட$_3$லம் ।
வநம் த$_3$ஹிஷ்யதோ க$_4$ர்மே த$_3$ாவாக்$_3$நிரிவ மூர்ச$_2$த: ॥ (42)

Koviloor Digital Library

மகாத்மாவான யமனுடைய படை எண்ணிக்கை கடந்ததாக இருந்தது. நூறாயிரக்கணக்கான வீரர்கள் முன்னேறிச் சென்று போர் செய்பவர்களாக இருந்தார்கள். (28)

அப்போது மரங்களாலும் மலைகளாலும், அங்கிருந்த நூற்றுக்கணக்கான மாளிகைகளைப் பெயர்த்தெடுத்தும், இராவணனும் அவனுடைய அமைச்சர்களும் தத்தம் விருப்பம்–சக்திக்கு ஏற்றபடி கடும்போர் புரிந்தார்கள். (29)

அரக்க மன்னனுடைய அமைச்சர்களின் உடல்கள் எல்லா வகையான படைக்கலங்களாலும் தாக்கப்பட்டு இரத்தத்தைப் பொழிந்தன. அப்படியும் அவர்கள் பெரும் போர் செய்தார்கள். (30)

ஆற்றல் மிக்க இராமனே! மகாவீரர்களான யமனுடைய படையினரும் இராவணன் அமைச்சர்களும் ஒருவரையொருவர் அஸ்திர–சஸ்திரங்களால் தாக்கியும் எதிர்த்தும் கடுமையாகப் போரிட்டார்கள். (31)

பின்னர், யமனுடைய பலம் மிகுந்த படைவீரர்கள், இராவணனுடைய அமைச்சர்களை விட்டுவிட்டு, அவன் மேல் ஏராளமான சூலங்களைப் பொழிந்து தாக்கினார்கள். (32)

படைக்கலங்களின் தாக்குதலால் உடல் தளர்ந்து, மேனியில் இரத்தம் வழிய, பூத்த மலர்களுடன் விளங்கும் அசோக மரத்தைப் போல், புஷ்பகத்திலிருந்த இராவணன் தோற்றமளித்தான். (33)

அப்போது ஆற்றல் மிக்க அவன், தன் அஸ்திர சக்தியினால் சூலங்கள், கதைகள், ஈட்டிகள், வேல்கள், வல்லயங்கள், அம்புகள், உலக்கைகள், பாறைகள், மரங்கள் ஆகியவற்றை எதிரிகளின் மேல் செலுத்தினான். (34)

மரங்கள், பாறைகள் மற்றும் பயங்கரமான சஸ்திரங்கள் ஆகியவற்றின் இடைவிடாத தாக்குதல், யமனுடைய படைகள் மீது நிகழ்ந்து, அவர்களைக் கீழே சாய்த்தது. (35)

அவர்களோ, அவனுடைய படைக்கலங்களை எல்லாம் முறித்துப் போட்டு, அவன் ஏவிய அஸ்திரங்களை விலக்கிவிட்டு, நூறாயிரக்கணக்காகக் கூடி பயங்கரமான அந்த அரக்க மன்னனையே குறிவைத்துத் தாக்கினார்கள். (36)

மேகங்கள், ஒரு மலைச்சிகரத்தைச் சூழ்ந்துகொண்டு மழையைப் பொழிவதைப் போல, அவர்கள் எல்லோரும் ஒருங்காகச் சேர்ந்து, கவண்கற்களாலும், சூலங்களாலும் மூச்சுவிடக்கூட நேரம் கொடுக்காமல் இடைவிடாது அவனைத் தாக்கினார்கள். (37)

அவன் கவசம் உடைந்து விழுந்தது; கோபம் பொங்கிக் கொண்டு வந்தது; உடல் முழுவதும் இரத்தப் பெருக்கு – இந்த நிலையில், அவன் புஷ்பகத்திலிருந்து இறங்கி தரையில் நின்றுகொண்டான். (38)

சிறிதுநேரத்தில் சுயஉணர்வு பெற்ற அவன், உற்சாகங்கொண்டு, கைகளில் வில்லும் அம்பும் ஏந்தி, சினம் பொங்கிய காலனைப் போல் போர்க்களத்தில் நின்றான். (39)

பாசுபதம் என்னும் தெய்விக அஸ்திரத்தை வில்லில் தொடுத்து, யமப் படையினரைப் பார்த்து, ''நில்லுங்கள், நில்லுங்கள்'' என்று கூவியபடியே வில்லை வளைத்தான். (40)

தேவராஜனின் பகைவனான அவன், செவி வரை நாண்கயிற்றை இழுத்து, முப்புரங்களை எரிக்கச் சென்ற சங்கரன் போல, மிகுந்த கோபத்துடன் அந்த அஸ்திரத்தை விடுவித்தான். (41)

அப்போது, அந்த பாசுபதாஸ்திரத்தின் தோற்றம், புகையும் அக்னியும் மண்டியதாக, கோடைக்காலத்தில் காட்டில் பற்றியெரியும் காட்டுத்தீயினுடையதைப் போல (படு நாசம் விளைவிப்பதாக) இருந்தது. (42)

Koviloor Digital Library

ஜ்வாலாமாலீ ஸ து ஶர: க்ரவ்யாத$_3$ானுக$_3$தோ ரணே ।
முக்தோ கு$_3$ல்மாந் த்$_3$ருமாம்ஶ்சாபி ப$_4$ஸ்ம க்ருத்வா ப்ரத$_4$ாவதி ॥ (43)

தே தஸ்ய தேஜஸா த$_3$க்$_3$த$_4$ா: ஸைந்யா வைவஸ்வதஸ்ய து ।
ரணே தஸ்மிந்நிபதிதா த$_3$ாவத$_3$க்$_3$த$_4$ா நக$_3$ா இவ ॥ (44)

ததஸ்து ஸசிவை: ஸார்த$_4$ம் ராக்ஷஸோ பீ$_4$மவிக்ரம: ।
நநாத$_3$ ஸுமஹாநாத$_3$ம் கம்பயந்நிவ மேதி$_3$நீம் ॥ (45)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகவிம்ஶ: ஸர்க$_3$: ॥

த்$_3$வாவிம்ஶ: ஸர்க$_3$:

யமஜய:

ஸ தஸ்ய து மஹாநாத$_3$ம் ஶ்ருத்வா வைவஸ்வத: ப்ரபு$_4$: ।
ஶத்ரும் விஜயிநம் மேநே ஸ்வப$_3$லஸ்ய ச ஸம்க்ஷயம் ॥ (1)

ஸ ஹி யோத$_4$ாந் ஹதாந் மத்வா க்ரோத$_4$ஸம்ரக்தலோசந: ।
அப்$_3$ரவீத்த்வரிதம் ஸூதம் ரதே$_2$ாऽயமுபநீயதாம் ॥ (2)

தஸ்ய ஸூதஸ்தத$_3$ா தி$_3$வ்யமுபஸ்த$_2$ாப்ய மஹாரத$_2$ம் ।
ஸ்தி$_2$த: ஸ ச மஹாதேஜா ஹ்யத்$_4$யாரோஹத தம் ரத$_2$ம் ॥ (3)

பாஶமுத்$_3$க$_3$ரஹஸ்தஶ்ச ம்ருத்யுஸ்தஸ்யாக்$_3$ரத: ஸ்தி$_2$த: ।
யேந ஸம்க்ஷிப்யதே ஸர்வம் த்ரைலோக்யமித$_3$மவ்யயம் ॥ (4)

காலத$_3$ண்ட$_3$ஸ்து பார்ஶ்வஸ்தே$_2$ா மூர்திமாநஸ்ய சாப$_4$வத் ।
யமப்ரஹரணம் தி$_3$வ்யம் தேஜஸா ஜ்வலத$_3$க்$_3$நிமத் ॥ (5)

தஸ்ய பார்ஶ்வேஷு நிஶ்சி$_2$த்$_3$ரா: காலபாஶா: ப்ரதிஷ்டி$_2$தா: ।
பாவகஸ்பர்ஶஸங்காஶா: ஸ்தி$_2$தோ மூர்தஶ்ச முத்$_3$க$_3$ர: ॥ (6)

ததோ லோகத்ரயம் க்ஷுப்$_3$த$_4$மகம்பந்த தி$_3$வௌகஸ: ।
காலம் த்$_3$ருஷ்ட்வா தத$_2$ா க்ருத்$_3$த$_4$ம் ஸர்வலோகப$_4$யாவஹம் ॥ (7)

தத: ப்ரசோத$_3$யந் ஸூதஸ்தாநஶ்வாந் ருசி$_4$ரப்ரப$_4$ாந் ।
ப்ரயயௌ பீ$_4$மஸந்நாதே$_3$ா யத்ர ரக்ஷ:பதி: ஸ்தி$_2$த: ॥ (8)

முஹூர்தேந யமம் தே து ஹயா ஹரிஹயோபமா: ।
ப்ராபயந் மநஸஸ்துல்யா யத்ர தத் ப்ரஸ்துதம் ரணம் ॥ (9)

த்$_3$ருஷ்ட்வா ததை$_2$வ விக்ருதம் ரத$_2$ம் ம்ருத்யுஸமந்விதம் ।
ஸசிவா ராக்ஷஸேந்த்$_3$ரஸ்ய ஸஹஸா விப்ரது$_3$த்$_3$ருவு: ॥ (10)

Koviloor Digital Library

அந்த பாணம் வில்லிலிருந்து விடப்பட்டதும் நெருப்பு வளையங்களைக் கக்கவிட்டுக் கொண்டு, புதர்களையும் மரங்களையும் எரித்துக் கொண்டு, வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது. அதைப் பின்தொடர்ந்து புலால் உண்ணும் உயிர்ப்பிராணிகள் சென்றன. (அஸ்திரத்தால் வீழ்த்தப்பட்ட சடலங்களை உண்பதற்காகப் பிணந்தின்னிகள் சென்றன.) (43)

அதனுடைய பராக்கிரமத்தினால் எரிக்கப்பட்ட யமனுடைய படைவீரர்கள், ஊழித்தீயால் எரிக்கப்பட்ட மரங்கள் போல் கீழே சாய்ந்தார்கள். (44)

பின்னர், எல்லையில்லாத பேராற்றல் கொண்ட அரக்கன், அமைச்சர்களோடுகூட, உலகையே ஆட்டுவதைப் போல, மிக பயங்கரமான வெற்றிப் பேரொலியை எழுப்பினான். (45)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இருபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்திரண்டு

யமனை வெற்றி கொள்ளுதல்

அந்தப் பேரொலியைக் கேட்டதும், சூரிய குமாரனான யமன், ''எதிரி, வெற்றி அடைந்துவிட்டான்; என்னுடைய படை தோற்றுவிட்டது'' என்று தெரிந்து கொண்டார். (1)

தன் வீரர்கள் கொல்லப்பட்டதைத் தெரிந்து கொண்டதும், கோபத்தினால் கண்கள் சிவக்க, தன் தேரோட்டியைப் பார்த்து, ''ரதத்தை உடனே கொண்டு வா'' என்று உத்தரவிட்டார். (2)

அந்தத் தேரோட்டி, தெய்விக சக்திபடைத்த விஸ்தாரமான ஒரு தேரை, அவர் முன்பாகக் கொண்டு வந்து நிறுத்திவிட்டு எதிரில் நின்றான். பராக்கிரமசாலியான அவர் தேரில் ஏறிக்கொண்டார். (3)

பாசத்தையும் உலக்கையையும் கையில் ஏந்திக்கொண்டு, அழிவில்லாத மூன்று உலகங்களையும் அழித்து ஒழித்து வரும் சாட்சாத் மிருத்யு தேவதை, அவர் எதிரில் நின்றது. (4)

யமனுடைய ஆயுதமான காலதண்டம், நெருப்புப் போல் ஒளியினால் பிரகாசித்துக் கொண்டு, தெய்விகப் பொலிவுடன் உருவம் ஏற்றுக்கொண்டு, அவர் அருகில் வந்து நின்றது. (5)

அவருடைய இருபுறங்களிலும், எப்போதும் அழிவில்லாத காலபாசமும், தொடக்கூட முடியாத அக்னிக்கு ஒப்பான உலக்கையும் உருவம் ஏற்றுவந்து நின்றன. (6)

எல்லா உலகப் பிராணிகளுக்கும் பேரச்சத்தை விளைவிக்கும் சாட்சாத் காலன் கோபம் கொண்டிருப்பதைப் பார்த்து, மூன்று உலகங்களிலும் குழப்பம் உண்டாயிற்று; எல்லா வானுலகத்தோரும் நடுங்கினார்கள். (7)

பின்னர், இரத்தம் போல் செவ்வண்ணமான குதிரைகளைத் தட்டிவிட்டான், தேர்ப்பாகன். தேர் பயங்கரமாக ஒலி எழுப்பிக் கொண்டு, அரக்கர் தலைவன் இருந்த இடத்தை நோக்கிச் சென்றது. (8)

இந்திரனுடைய குதிரைகளுக்கு நிகரான வீரமும், மனோவேகத்திற்கு நிகரான வேகமும் கொண்ட அந்தக் குதிரைகள், வெகுவிரைவில் யமனைப் போர்முனைக்கு கொண்டு சேர்த்தன. அரக்க மன்னனுடைய அமைச்சர்கள், கோரமான தோற்றம் கொண்டதும் மிருத்யு தேவதையுடன் வருவதுமான தேரைக் கண்டதுமே, அவ்விடத்திலிருந்து ஓடிப்போய் விட்டார்கள். (9,10)

Koviloor Digital Library

லகு$_4$ஸத்த்வதயா தே ஹி நஷ்டஸம்க்ஞா ப$_4$யார்தி$_3$தா: ।
நேஹ யோத்$_3$து$_4$ம் ஸமர்தா$_2$: ஸ்ம இத்யுக்த்வா ப்ரயயுர்தி$_3$ஶ: ॥ (11)

ஸ து தம் தாத்$_3$ருஶம் த்$_3$ருஷ்ட்வா ரத$_2$ம் லோகப$_4$யாவஹம் ।
நாக்ஷுப்$_4$யத த$_3$ஶக்$_3$ரீவோ ந சாபி ப$_4$யமாவிஶத் ॥ (12)

ஸ து ராவணமாஸாத்$_3$ய வ்யஸ்ருஜச்ச$_2$க்திதோமராந் ।
யமோ மர்மாணி ஸங்க்ருத்$_3$தோ$_4$ ராவணஸ்யோபக்ருந்தத ॥ (13)

மர்மஸு ச்சி$_2$த்$_3$யமாநேஷு ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
யயௌ ஸ்தப்$_3$தோ$_4$ ருஜம் கோ$_4$ராம் பி$_4$த்$_3$யமாந இவாசல: ॥ (14)

ராவணஸ்து தத: ஸ்வஸ்த$_2$: ஶரவர்ஷம் முமோச ஹ ।
தஸ்மிந் வைவஸ்வதரதே$_2$ தோயவர்ஷமிவாம்பு$_3$த$_3$: ॥ (15)

ததோ மஹாஶக்திஶதை: பாத்யமாநோ மஹோரஸி ।
நாஶக்நோத் ப்ரதிகர்தும் ஸ ராக்ஷஸ: ஶல்யபீடி$_3$த: ॥ (16)

ஏவம் நாநாப்ரஹரணைர்யமேநாமித்ரகர்ஶிநா ।
ஸப்தராத்ரம் க்ருத: ஸங்க்$_2$யே ந ப$_4$க்$_3$நோ விஜிதோऽபி வா ॥ (17)

ததா$_3$ஸீத்துமுலம் யுத்$_3$த$_4$ம் யமராக்ஷஸயோர்த்$_3$வயோ: ।
ஜயமாகாங்க்ஷதோர்வீர ஸமரேஷ்வநிவர்திநோ: ॥ (18)

ததோ தே$_3$வா: ஸக$_3$ந்த$_4$ர்வா: ஸித்$_3$தா$_4$ஶ்ச பரமர்ஷய: ।
ப்ரஜாபதிம் புரஸ்க்ருத்ய ஸமேதாஸ்தத்$_3$ரணாஜிரம் ॥ (19)

ஸம்வர்த இவ லோகாநாம் யுத்$_4$யதோரப$_4$வத்ததா$_3$ ।
ராக்ஷஸாநாம் ச முக்$_2$யஸ்ய ப்ரேதாநாமீஶ்வரஸ்ய ச ॥ (20)

ராக்ஷஸேந்த்$_3$ரோऽபி விஸ்பா$_2$ர்ய சாபமிந்த்$_3$ராஶநிப்ரப$_4$ம் ।
நிரந்தரமிவாகாஶம் குர்வந் பா$_3$ணாம்ஸ்ததோऽஸ்ருஜத் ॥ (21)

ம்ருத்யும் சதுர்பி$_4$ர்விஶிகை$_2$: ஸூதம் ஸப்தபி$_4$ரர்த$_3$யத் ।
யமம் ஶதஸஹஸ்ரேண ஶீக்$_4$ரம் மர்மஸ்வதாட$_3$யத் ॥ (22)

தத: க்ருத்$_3$த$_4$ஸ்ய வத$_3$நாத்$_3$யமஸ்ய ஸமஜாயத ।
ஜ்வாலாமாலீ ஸநிஶ்வாஸ: ஸதூ$_4$ம: கோபபாவக: ॥ (23)

ததா$_3$ஶ்சர்யமதோ$_2$ த்$_3$ருஷ்ட்வா தே$_3$வதா$_3$நவஸந்நிதௌ$_4$ ।
ப்ரஹர்ஷிதௌ ஸுஸம்ரப்$_3$தௌ$_4$ ம்ருத்யுகாலௌ ப$_3$பூ$_4$வது: ॥ (24)

ததோ ம்ருத்யு: க்ருத்$_3$த$_4$தரோ வைவஸ்வதமபா$_4$ஷத ।
முஞ்ச மாம் ஸமரே யாவத்$_3$த$_4$ந்மீமம் பாபராக்ஷஸம் ॥ (25)

Koviloor Digital Library

அவர்கள் குறைந்த வீரம் உடையவர்களாதலால், மிகவும் பயங்கொண்டு, உணர்வு தடுமாறி, ''நம்மால் இங்கே சண்டை போட முடியாது'' என்று கூறிக்கொண்டு, திக்குத் திசை தெரியாமல் ஓடிப்போனார்கள். (11)

பயங்கரமான தோற்றமுடைய, உலக மக்களுக்குப் பேரச்சத்தை விளைவிப்பதுமான, அந்த ரதத்தைக் கண்டு இராவணன் மனந்தளரவும் இல்லை; அச்சப்படவும் இல்லை. (12)

அவர்(யமன்), இராவணனை நெருங்கி வேல்களையும் வல்லயங்களையும் கொண்டு, மிகுந்த கோபத்துடன் அவன் உயிர்நிலைகளில் தாக்கினார். (13)

உயிர்நிலைகளில் அடிக்கப்பட்ட அரக்கத் தலைவன் இராவணன், மலை பிளந்தாற்போல, பயங்கரமான காயங்களுடன் அசைவற்று நின்றான். (14)

சிறிது நேரத்தில் உணர்வு பெற்ற அவன், யமனுடைய தேரின்மீது, மேகங்கள் மழையைப் பொழிவதைப் போல, அம்புமாரியைப் பொழிந்தான். (15)

பின்னர், அவனுடைய விசாலமான மார்பில், வரம்பில்லாத சக்திகொண்ட நூற்றுக்கணக்கான வேல்கள் வந்து விழுந்தன. அந்த வேல்களின் காயத்தால் துன்பப்பட்ட அவனால், எதிர்த்தாக்குதல் நடத்த முடியவில்லை. (16)

எதிரிகளை வாட்டியெடுக்கும் யமன், பலவகையான படைக்கலங்களைக் கொண்டு ஏழு இரவுகள் தொடர்ச்சியாகத் தாக்கினார். ஆனால், எவரும் தோல்வி அடையவுமில்லை; வெற்றி அடையவும் இல்லை. (17)

வீர இராமனே! அந்த இரண்டு போராளிகளும், போர்க்களத்திலிருந்து பின்வாங்குவதாக இல்லை. இருவரும், தத்தமக்கே வெற்றியை விரும்பினார்கள். அதனால், யமனுக்கும் அரக்கனுக்குமிடையே கடும் போர் தொடர்ந்தது. (18)

அப்போது, தேவ–கந்தர்வ–சித்த–முனிவர்கள், பிரும்மதேவனை முன்னிட்டுக் கொண்டு, போர்முனையில் ஒன்று கூடினார்கள். (19)

அரக்க மன்னனும் பிரேத மன்னரும் முழு முனைப்புடன் போரில் ஈடுபட்டிருந்ததால், உலகத்தில் பிரளயம் வந்துவிட்டது போன்ற நிலை ஏற்பட்டது. (20)

அரக்க மன்னன், வஜ்ராயுதம் போல் ஒளிவீசும் வில்லை வளைத்து, ஆகாயத்தில் இடைவெளியே இல்லாமல் அம்புகளைப் பொழிந்தான். (21)

மிருத்யு தேவனை நான்கு பாணங்களாலும், தேர்ப்பாகனை ஏழு பாணங்களாலும் தாக்கினான். வேகமாகச் செல்லும் நூறாயிரக்கணக்கான பாணங்களால், யமனின் உயிர்நிலைகளைத் தாக்கினான். (22)

அப்போது, சினங்கொண்ட யமனுடைய முகத்திலிருந்து கோபக்கனல் புறப்பட்டது. அது, நெருப்பு வளையங்களால் சூழப்பட்டு, மூச்சுக் காற்றினால் விசிறி விடப்பட்டு, புகைக்கூட்டத்தால் மூடப்பட்டதாக இருந்தது. (23)

மிகவும் கோபத்திலிருந்த மிருத்யு–கால தேவதைகள், தேவ–தானவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, இந்த அற்புதம் நிகழ்ந்ததைப் பார்த்து, வெகுவாக மகிழ்ந்து போனார்கள். (24)

அப்போது, மிருத்யு தேவதை மிகவும் கோபங்கொண்டு, சூரிய குமாரரான யமனைப் பார்த்து, ''போர்புரிய என்னை அனுமதியுங்கள். இந்த அரக்கப்பாவியை நான் தீர்த்துக் கட்டுகிறேன்'' என்றது. (25)

Koviloor Digital Library

நைஷா ரக்ஷோ ப$_4$வேத$_3$த்$_3$ய மர்யாத$_3$ா ஹி நிஸர்க$_3$த: ।
ஹிரண்யகஶிபு: ஶ்ரீமாந்நமுசி: ஶம்ப$_3$ரஸ்தத$_2$ா ॥ (26)

விஸந்தி$_4$ர்தூ$_4$மகேதுஶ்ச ப$_3$லிர்வைரோசநோऽபி ச ।
ஶம்பு$_4$ர்தை$_3$த்யமஹாராஜோ வ்ருத்ரோ ப$_3$ாணஸ்ததை$_2$வ ச ॥ (27)

ராஜர்ஷய: ஶஸ்த்ரவிதே$_3$ா க$_3$ந்த$_4$ர்வா: ஸமஹோரக$_3$ா: ।
ருஷய: பந்நக$_3$ா தை$_3$த்யா யக்ஷாஶ்சாப்யப்ஸரோக$_3$ணா: ॥ (28)

யுக$_3$ாந்தபரிவர்தே ச ப்ருதி$_2$வீ ஸமஹார்ணவா ।
க்ஷயம் நீதா மஹாராஜ ஸபர்வதஸரித்$_3$த்$_3$ருமா ॥ (29)

ஏதே சாந்யே ச ப$_3$ஹவோ ப$_3$லவந்தோ து$_3$ராஸத$_3$ா: ।
விநிபந்நா மயா த்$_3$ருஷ்டா: கிமுதாயம் நிஶாசர: ॥ (30)

முஞ்ச மாம் ஸாது$_4$த$_4$ர்மஜ்ஞ யாவதே$_3$நம் நிஹந்ம்யஹம் ।
ந ஹி கஶ்சிந்மயா த்$_3$ருஷ்டோ ப$_3$லவாநபி ஜீவதி ॥ (31)

ப$_3$லம் மம ந க$_2$ல்வேதந்மர்யாதை$_3$ஷா நிஸர்க$_3$த: ।
ஸ த்$_3$ருஷ்டோ ந மயா காலம் முஹூர்தமபி ஜீவதி ॥ (32)

தஸ்யைவம் வசநம் ஶ்ருத்வா த$_4$ர்மராஜ: ப்ரதாபவாந் ।
அப்$_3$ரவீத்தத்ர தம் ம்ருத்யும் த்வம் திஷ்டை$_2$நம் நிஹந்ம்யஹம் ॥ (33)

தத: ஸம்ரக்தநயந: க்ருத்$_3$தே$_4$ா வைவஸ்வத: ப்ரபு$_4$: ।
காலத$_3$ண்ட$_3$மமோக$_4$ம் து தோலயாமாஸ பாணிநா ॥ (34)

யஸ்ய பார்ஶ்வேஷு நிகி$_2$லா: காலபாஶா: ப்ரதிஷ்டி$_2$தா: ।
பாவகாஶநிஸங்காஶோ முத்$_3$க$_3$ரோ மூர்திமாந் ஸ்தி$_2$த: ॥ (35)

த$_3$ர்ஶநாதே$_3$வ ய: ப்ராணாந் ப்ராணிநாமபகர்ஷதி ।
கிம் புந: ஸ்ப்ருஶ்யமாநஸ்ய பாத்யமாநஸ்ய வா புந: ॥ (36)

ஸ ஜ்வாலாபரிவாரஸ்து நிர்த$_3$ஹந்நிவ ராக்ஷஸம் ।
தேந ஸ்ப்ருஷ்டோ ப$_3$லவதா மஹாப்ரஹரணோऽஸ்பு$_2$ரத் ॥ (37)

ததோ வித்$_3$த்$_3$ருவு: ஸர்வே தஸ்மாத்த்ரஸ்தா ரணாஜிரே ।
ஸுராஶ்ச க்ஷுபி$_4$தா: ஸர்வே த்$_3$ருஷ்ட்வா த$_3$ண்டோ$_3$த்$_3$யதம் யமம் ॥ (38)

தஸ்மிந் ப்ரஹர்துகாமே து யமே த$_3$ண்டே$_3$ந ராவணம் ।
யமம் பிதாமஹ: ஸாக்ஷாத்$_3$த$_3$ர்ஶயித்வேத$_3$மப்$_3$ரவீத் ॥ (39)

வைவஸ்வத மஹாப$_3$ாஹோ ந க$_2$ல்வமிதவிக்ரம ।
ந ஹந்தவ்யஸ்த்வயா தேந த$_3$ண்டே$_3$நைஷ நிஶாசர: ॥ (40)

வர: க$_2$லு மயைதஸ்மை த$_3$த்தஸ்த்ரித$_3$ஶபுங்க$_3$வ ।
ஸ த்வயா நாந்ருத: கார்யோ யந்மயா வ்யாஹ்ருதம் வச: ॥ (41)

Koviloor Digital Library

(மேலும் தொடர்கிறது மிருத்யு தேவதை) ''இயல்பாகவே, எனக்கு தனிப்பட்ட ஒரு சக்தி இருக்கிறது. சண்டைக்களத்தில் என்னை எதிர்த்து நின்று, இந்த அரக்கன் உயிருடன் திரும்பிப் போகப் போவதில்லை. தவ ஆற்றல் மிகுந்த இரண்யகசிபு, நமுசி, சம்பரன், விஸந்தி, தூமகேது, விரோசனின் புதல்வன் பலி, சம்பு என்ற அசுரன், மாமன்னன் விருத்திரன், பாணாசுரன் மற்றும் கணக்கிலடங்காத ராஜரிஷிகள், அறநூல் விற்பன்னர்கள், கந்தர்வ–நாக–ரிஷி–பன்னக–அசுர–யக்ஷ–அப்சரக் கூட்டங்கள், பெருங்கடல்கள், மலைகள், ஓடைகள், மரங்களுடன் கூடிய மண்ணுலகம் – இவையெல்லாம் ஊழிக்காலத்தில் என்னால் அழிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களும், இவர்களைத் தவிர வேறு பல பலசாலிகளும் வெல்லற்கரியவர்களும் அழிந்துபோனதை நான் பார்த்திருக்கிறேன். (26–30)

கேவலம், இந்த ஒற்றை அரக்கன் எம்மாத்திரம்? அறம் அறிந்தவரே! அருள்கூர்ந்து என்னை அனுமதியுங்கள். இவனை நான் கொன்றுவிட்டு வருகிறேன். எவ்வளவு பலசாலியாக இருந்தாலும், என் பார்வையில் பட்டுவிட்டவன் உயிரோடு இருக்கமாட்டான். (31)

என் பார்வையில் பட்டுவிட்ட இராவணன், ஒரு முகூர்த்த காலம் கூட உயிரோடு இருக்கமாட்டான். நான், என் பேராற்றலைப் பாராட்டிக் கூறவில்லை; இயற்கையாகவே என்னிடம் அமைந்துள்ள சிறப்பான ஆற்றல், இது.'' (32)

இந்தச் சொற்களைக் கேட்ட பேராற்றல் கொண்ட தருமராஜன், மிருத்யு தேவதையை நோக்கி, ''நீ இங்கேயே இரு; நானே இவனைக் கொல்கிறேன்'' என்றார். (33)

உடனே, சூரிய குமாரரும் பெருந்தலைவருமான அவர், கோபத்தால் கண்கள் சிவக்க, வீண்போகாத சக்திபடைத்த காலதண்டத்தைக் கையில் எடுத்தார். (34)

அந்தக் காலதண்டத்தின் பக்கவாட்டில் காலபாகங்கள் நிலைகொண்டிருந்தன; வஜ்ரம் போலும் அக்னி போலும் ஒளிவீசும் உலக்கை, ஒரு வடிவம் ஏற்று அருகில் நின்றது. (35)

அந்தக் காலதண்டத்தின் பார்வையில் பட்ட அளவிலேயே, பிராணிகளின் உயிர்களைக் கவர்ந்து செல்லும் தனித்தன்மை பெற்றது. பின்னே, அது ஒரு பிராணியைத் தொட்டாலோ, அல்லது ஒன்றின்மேல் வீழ்ந்தாலோ, அதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? (36)

நெருப்பு வளையங்களால் சூழப்பட்டிருந்த அந்தக் காலதண்டம், அந்த அரக்கனை எரித்துப் பொசுக்குவதற்கு ஆயத்தமாக இருந்தது. பேராற்றல் கொண்ட யமதருமன், அந்த ஆயுதத்தைக் கையில் தூக்கிக் கொண்டதும், அது பிரகாசமாக ஜொலித்தது. (37)

போர்க்களத்தில் இருந்த எல்லோரும் அதைப் பார்த்து, பேரச்சம் கொண்டு ஓட்டமாக ஓடிப்போனார்கள். கையில் காலதண்டத்துடன் நிற்கும் யமனைப் பார்த்து, எல்லா தேவர்களும் மிகவும் கலவரம் அடைந்தார்கள். (38)

இராவணன் மேல் அந்த ஆயுதத்தை ஏவிவிடும் தீர்மானத்துடன் யமன் இருந்தபோது, பிரும்மதேவன் நேரில் வந்து (பின்வருமாறு) கூறினார்— (39)

''விவஸ்வானின் புதல்வனே! தோள்வலிமை மிக்கவனே! எல்லையில்லாத ஆற்றல் கொண்டவனே! இந்த அரக்கன், காலதண்டத்தினால் உன்னால் கொல்லத்தக்கவன் அல்லன்; வேண்டாம், விட்டுவிடு. (40)

தேவர்களுள் சிறந்தவனே! நான், இவனுக்கு வரம் கொடுத்திருக்கிறேன், அல்லவா? நீ என்னுடைய சொற்களைப் பொய்யாக்கிவிடக் கூடாது. (41)

Koviloor Digital Library

யோ ஹி மாமந்ருதம் குர்யாத்$_3$தே$_3$வோ வா மாநுஷோऽபி வா ।
த்ரைலோக்யமந்ருதம் தேந க்ருதம் ஸ்யாந்நாத்ர ஸம்ஶய: ॥ (42)

க்ருத்$_3$தே$_4$ந விப்ரமுக்தோऽயம் நிர்விஶேஷம் ப்ரியாப்ரியே ।
ப்ரஜா: ஸம்ஹரதே ரௌத்$_3$ரோ லோகத்ரயப$_4$யாவஹ: ॥ (43)

அமோகோ$_4$ ஹ்யேஷ ஸர்வேஷாம் ப்ராணிநாமமிதப்ரப$_4$: ।
காலத$_3$ண்டோ$_3$ மயா ஸ்ருஷ்ட: பூர்வம் ம்ருத்யுபுரஸ்க்ருத: ॥ (44)

தந்ந க$_2$ல்வேஷ தே ஸௌம்ய பாத்யோ ராவணமூர்த$_4$நி ।
ந ஹ்யஸ்மிந் பதிதே கஶ்சிந்முஹூர்தமபி ஜீவதி ॥ (45)

யதி$_3$ ஹ்யஸ்மிந்நிபதிதே ந ம்ரியேதைஷ ராக்ஷஸ: ।
ம்ரியதே வா த$_3$ஶக்$_3$ரீவஸ்ததா$_3$ ஹ்யுப$_4$யதோऽந்ருதம் ॥ (46)

தந்நிவர்தய லங்கேஶாத்$_3$த$_3$ண்ட$_3$மேதம் ஸமுத்$_3$யதம் ।
ஸத்யம் ச மாம் குருஷ்வாத்$_3$ய லோகாம்ஸ்த்வம் யத்$_3$யவேக்ஷஸே ॥ (47)

ஏவமுக்தஸ்து த$_4$ர்மாத்மா ப்ரத்யுவாச யமஸ்ததா$_3$ ।
ஏஷ வ்யாவர்திதோ த$_3$ண்ட$_3$: ப்ரப$_4$விஷ்ணுர்ஹி நோ ப$_4$வாந் ॥ (48)

கிம் ந்விதா$_3$நீம் மயா ஶக்யம் கர்தும் ரணக$_3$தேந ஹி ।
ந மயா யத்$_3$யயம் ஶக்யோ ஹந்தும் வரபுரஸ்க்ருத: ॥ (49)

ஏஷ தஸ்மாத் ப்ரணஶ்யாமி த$_3$ர்ஶநாத$_3$த்$_3$ய ரக்ஷஸ: ।
இத்யுக்த்வா ஸரத$_2$: ஸாஶ்வஸ்தத்ரைவாந்தரதீ$_4$யத ॥ (50)

த$_3$ஶக்$_3$ரீவஸ்து தம் ஜித்வா நாம விஶ்ராவ்ய சாத்மந: ।
ஆருஹ்ய புஷ்பகம் பூ$_4$யோ நிஷ்க்ராந்தோ யமஸாத$_3$நாத் ॥ (51)

ஸ து வைவஸ்தோ தே$_3$வை: ஸஹ ப்$_3$ரஹ்மபுரோக$_3$மை: ।
ஜகா$_3$ம த்ரிதி$_3$வம் ஹ்ருஷ்டோ நாரத$_3$ஶ்ச மஹாமுநி: ॥ (52)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்$_3$வாவிம்ஶ: ஸர்க$_3$: ॥

த்ரயோவிம்ஶ: ஸர்க$_3$:

வருணஜய:

ததோ ஜித்வா த$_3$ஶக்$_3$ரீவோ யமம் த்ரித$_3$ஶபுங்க$_3$வம் ।
ராவணஸ்து ரணஶ்லாகீ$_4$ ஸ்வஸஹாயாந் த$_3$த$_3$ர்ஶ ஹ ॥ (1)

ததோ ருதி$_4$ரஸிக்தாங்க$_3$ம் ப்ரஹாரைர்ஜர்ஜரீக்ருதம் ।
ராவணம் ராக்ஷஸா த்$_3$ருஷ்ட்வா விஸ்மயம் ஸமுபாக$_3$மந் ॥ (2)

Koviloor Digital Library

எந்தவொரு தேவதையோ, மனிதனோ என் சொற்களைப் பொய்யாக்குகிறானோ, அவனுக்கு இந்த மூன்று உலக மக்களையுமே பொய்யர்களாக்கிய பெரும் பாவம் வந்தடையும் என்பது உறுதி. (42)

இந்தக் காலதண்டம், மூன்று உலகங்களுக்கும் மிகவும் அச்சத்தைக் கொடுக்கும் அளவுக்குப் பயங்கரமானது; கையிலிருந்து விடுபட்டவுடன், எதிரே இருப்பவர்களையெல்லாம் – நல்லவர், அல்லாதவர் என்ற வேற்றுமை உணராமல் – அழித்துவிடக் கூடியது. (43)

என்னால் உண்டாக்கப்பட்ட, எல்லையில்லாத ஆற்றல்கொண்ட காலதண்டம் ஒருக்காலும் வீண்போகாதது. இந்த ஆயுதத்தினால் தாக்கப்பட்டவர்கள் உயிரை இழக்கவே செய்வார்கள். (44)

ஆகவே, நல்லவனே! இராவணன் மேல் இதனை ஏவிவிடாதே. இதனால், தாக்கப்பட்டவன் (அவன் எவ்வளவு வரங்கள் பெற்றிருந்தாலும்) எவனும், ஒரு முகூர்த்த காலம்கூட உயிர் பிழைத்திருக்க மாட்டான். (45)

காலதண்டத்தினால் தாக்கப்பட்ட அரக்கன் உயிர் துறக்கலாம்; அல்லது உயிர் தப்பலாம். எதிரெதிரான இந்த இரண்டு நிலைகளுமே, என் சொற்களைப் பொய்யாக்குபவைதான். (46)

ஆகவே, இலங்கை மன்னனை நோக்கி ஏவுவதற்குக் குறிபார்த்துக் கொண்டிருக்கும் நீ, அந்த முயற்சியிலிருந்து திரும்பு. (முயற்சியைக் கைவிடு.) (உன் வெற்றியை மட்டுமே கருத்தில் கொள்ளாமல்) உலக மக்களின் பொது நன்மையில் பார்வையைச் செலுத்தி, இப்போது என்னைச் சத்தியவானாக ஆக்கு.'' (47)

பிரும்மா இவ்வாறு கூறியவுடன், அறம் தவறாதவரான யமன், ''இதோ, காலதண்டத்தை அடக்கி வைத்துவிட்டேன். தாங்கள்தான் எங்கள் எல்லோருக்கும் ஒப்பற்ற தனிப்பெரும் தலைவர். தங்கள் வார்த்தையை மீறலாகாது'' என்று பதில் கூறினார். (48)

''அத்துடன், வரங்களால் காப்பாற்றப்படும் இவனை, என்னால் கொல்ல முடியாது என்னும்போது, இப்போது இவனுடன் போர்புரிவதால் என்ன பயன்? (49)

அதனால், இத்துடன் இந்த அரக்கனின் பார்வையிலிருந்து நான் மறைந்து போகிறேன்'' – என்று சொல்லிவிட்டு, தேர்–குதிரைகளோடுகூட அவர் அப்போதே கண்ணுக்குப் புலப்படாமல் போனார், யமதருமன். (50)

தசக்ரீவன், அவரை (யமனை) வென்றுவிட்டதாகத் தன் பெயரைக் கூறி பறைசாற்றிக் கொண்டு, புஷ்பகத்தில் ஏறி யமலோகத்திலிருந்து வெளியே புறப்பட்டுச் சென்றான். (51)

பின்னர், சூரிய குமாரரான யமன், பிரும்மாவை முன்னிட்டுக் கொண்டு தேவர்களோடுகூட மனத்திருப்தியுடன் வானுலகம் சென்றார். மாமுனிவர் நாரதரும் சென்றார். (52)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இருபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து மூன்று

வருணனை வெற்றி கொள்ளுதல்

தேவப் பெருந்தகையான யமதருமராஜனை வென்ற பின்னர், போர் செய்வதில் குறைவில்லாத விருப்பங்கொண்ட இராவணன், தன் உதவியாளர்களைச் சென்று பார்த்தான். (1)

ஆயுதங்களின் தாக்குதலால் நைந்துபோய் இரத்தம் பூசிய உடலுடன் வந்து நிற்கும் இராவணனைக் கண்டு, அரக்கர்கள் ஆச்சரியம் அடைந்தார்கள். (2)

Koviloor Digital Library

ஜயேந வர்த$_4$யித்வா ச மாரீசப்ரமுகா$_2$ஸ்தத: ।
புஷ்பகம் பே$_4$ஜிரே ஸர்வே ஸாந்த்விதா ராவணேந து ॥ (3)

ததோ ரஸாதலம் க$_3$ச்ச$_2$ந் ப்ரவிஷ்ட: பயஸாம் நிதி$_4$ம் ।
தை$_3$த்யோரக$_3$க$_3$ணாத்$_4$யுஷ்டம் வருணேந ஸுரக்ஷிதம் ॥ (4)

ஸ து போ$_4$க$_3$வதீம் க$_3$த்வா புரீம் வாஸுகிபாலிதாம் ।
க்ருத்வா நாகா$_3$ந் வஶே ஹ்ருஷ்டோ யயௌ மணிமயீம் புரீம் ॥ (5)

நிவாதகவசாஸ்தத்ர தை$_3$த்யா லப்$_3$த$_4$வரா வஸந் ।
ராக்ஷஸஸ்தாந் ஸமாக$_3$ம்ய யுத்$_3$தா$_4$ய ஸமுபாஹ்வயந் ॥ (6)

தே து ஸர்வே ஸுவிக்ராந்தா தை$_3$தேயா ப$_3$லஶாலிந: ।
நாநாப்ரஹரணாஸ்தத்ர ப்ரஹ்ருஷ்டா யுத்$_3$த$_4$து$_3$ர்மதா$_3$: ॥ (7)

ஶூலைஸ்த்ரிஶூலை: குலிஶை: பட்டஸாஸிபரஶ்வதை$_4$: ।
அந்யோந்யம் பி$_3$பி$_4$து$_3$: க்ருத்$_3$தா$_4$ ராக்ஷஸா தா$_3$நவாஸ்ததா$_2$ ॥ (8)

தேஷாம் து யுத்$_4$யமாநாநாம் ஸாக்$_3$ர: ஸம்வத்ஸரோ க$_3$த: ।
ந சாந்யதரயோஸ்தத்ர விஜயோ வா க்ஷயோऽபி வா ॥ (9)

தத: பிதாமஹஸ்தத்ர த்ரைலோக்யக$_3$திரவ்யய: ।
ஆஜகா$_3$ம த்$_3$ருதம் தே$_3$வோ விமாநவரமாஸ்தி$_2$த: ॥ (10)

நிவாதகவசாநாம் து நிவார்ய ரணகர்ம தத் ।
வ்ருத்$_3$த$_4$: பிதாமஹோ வாக்யமுவாச விதி$_3$தார்த$_2$வத் ॥ (11)

ந ஹ்யயம் ராவணோ யுத்$_3$தே$_4$ ஶக்யோ ஜேதும் ஸுராஸுரை: ।
ந ப$_4$வந்த: க்ஷயம் நேதுமபி ஸாமரதா$_3$நவை: ॥ (12)

ராக்ஷஸஸ்ய ஸகி$_2$த்வம் ச ப$_4$வத்$_3$பி$_4$: ஸஹ ரோசதே ।
அவிப$_4$க்தாஶ்ச ஸர்வார்தா$_2$: ஸுஹ்ருதா$_3$ம் நாத்ர ஸம்ஶய: ॥ (13)

ததோऽக்$_3$நிஸாக்ஷிகம் ஸக்$_2$யம் க்ருதவாம்ஸ்தத்ர ராவண: ।
நிவாதகவசை: ஸார்த$_4$ம் ப்ரீதிமாநப$_4$வத்ததா$_3$ ॥ (14)

அர்சிதஸ்தைர்யதா$_2$ந்யாயம் ஸம்வத்ஸரமதோ$_2$ஷித: ।
ஸ்வபுராந்நிர்விஶேஷம் ச ப்ரியம் ப்ராப்தோ த$_3$ஶாநந: ॥ (15)

தத்ரோபதா$_4$ர்ய மாயாநாம் ஶதமேகம் ஸமாப்தவாந் ।
ஸலிலேந்த்$_3$ரபுராந்வேஷீ ப்$_4$ரமதி ஸ்ம ரஸாதலம் ॥ (16)

Koviloor Digital Library

மன்னனுக்கு வெற்றி வாழ்த்துக் கூறிய மாரீசன் முதலான அமைச்சர்கள், புஷ்பகத்தில் ஏறிக் கொண்டார்கள். இராவணன், அவர்களுக்கு ஆறுதல் கூறினான். (3)

பின்னர், ரஸாதலம் போக விரும்பிய அவன், அசுரர்கள்–உரகர்கள் வசிப்பதும், வருணதேவனால் கவனமாகப் பாதுகாக்கப்படுவதுமான பெருங்கடலுக்குள் புகுந்தான். (4)

வாசுகியினால் பரிபாலிக்கப்படும் போகவதி நகரத்திற்குள் சென்று, நாகர்களை வசப்படுத்திவிட்டு, மனக்களிப்புடன் மணிமய நகரத்தை அடைந்தான். (5)

பிரும்மாவிடம் வரம் பெற்ற 'நிவாதகவசர்கள்' என்ற அசுரர்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அரக்கன் (இராவணன்) அங்கே சென்று அவர்கள் எல்லோரையும் போருக்கு அழைத்தான். (6)

அந்த அசுரர்கள் எல்லோரும் மிகவும் பராக்கிரமசாலிகள்; உடல் வலிமை மிக்கவர்கள்; பல்வகையான ஆயுதங்களைக் கையாள்வதில் திறமை பெற்றவர்கள்; போர் செய்வதில் துடிப்பும் உற்சாகமும் கொண்டவர்கள். (7)

அப்போது அரக்கர்களும் அசுரர்களும், சூலங்கள், திரிசூலங்கள், வஜ்ராயுதங்கள், வல்லயங்கள், கத்திகள், கலப்பைகள் ஆகியவற்றால் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டு காயப்படுத்தினார்கள். (8)

இவ்வாறு, அவர்கள் ஓர் ஆண்டுக் காலத்திற்கும் மேலாகப் போர் செய்தும், எந்தப் பக்கத்தினரும் வெற்றியையோ தோல்வியையோ அடையவில்லை. (9)

மூன்றுலக மக்களின் புகலிடமும் அழிவற்றவருமான பிரும்மா, உன்னதமான தேரில் அவ்விடம் வந்து சேர்ந்தார். (10)

மிகத் தொன்மையான பிரும்மா, போர் செய்வதிலிருந்து நிவாதகவசர்களைத் தடுத்து நிறுத்தி, பொருள் நிறைந்த சொற்களைக் கூறினார்— (11)

''எல்லா தேவர்களும் அசுரர்களும் ஒன்றாகக் கூடி வந்து போரிட்டாலும், இந்த இராவணனைப் போரில் வெல்லமுடியாது. அதேபோல், தேவ–தானவர்கள் ஒன்றுகூடி வந்தாலும் உங்களை அழிக்க முடியாது. (12)

(ஏனென்றால், இரண்டு பக்கத்தினரும் தெய்வ வரங்கள் பெற்று, தோல்வி காணாத சிறப்பு நிலையில் இருக்கிறீர்கள்.) அதனால், அரக்கர்களுடன் நட்பு வைத்துக் கொள்வது சாலச் சிறந்தது என்று எனக்குத் தோன்றுகிறது. நண்பர்களுக்கிடையே வேற்றுமை உணர்வு அற்றுப்போவதால், இருவரும் சுகபோகங்களைச் சமமாகவே அனுபவிக்கிறார்கள். (வெற்றி–தோல்வி என்ற பிரச்சனை ஏற்படாது.) (13)

அப்போது அக்னிசாட்சியாக இராவணன், நிவாதகவசர்களோடு நட்புப்பூண்டான். அதனால், மிகவும் மகிழ்ச்சியையும் அடைந்தான். (14)

பின்னர், நிவாதகவசர்கள் முறைப்படி அவனைக் கௌரவித்து உபசரித்தார்கள். அவன் ஓர் ஆண்டுக்காலம் அங்கே தங்கியிருந்தான். அந்த நகரத்தில், தன் சொந்த இடத்தில் இருப்பதைப் போலவே, எல்லா சுகபோகங்களும் அவனுக்குக் கிடைத்தன. (15)

அவன், அவர்களிடமிருந்து நூறு வகையான மாயவித்தைகளைத் தெரிந்து கொண்டான். (நட்புக் காரணமாக அவர்கள் சொல்லிக் கொடுத்தார்கள் என்பது முன்னோர் விளக்கம்.) அதன்பின் அவன், வருணனுடைய பட்டணத்தைக் கண்டுபிடிப்பதற்காக ரஸாதலத்தில் சுற்றிச் சுற்றி வந்தான். (16)

Koviloor Digital Library

ததோऽஸ்மநக3ரம் நாம காலகேயைரதி4ஷ்டி2தம் ।
க3த்வா து காலகேயாம்ஸ்ச ஹத்வா தத்ர ப3லோத்கடாந் ॥ (17)

ஸூர்பணக்2யாஸ்ச ப4ர்தாரமஸிநா ப்ராச்சி2நத்தத3ா ।
ஸ்யாலம் ச ப3லவந்தம் ச வித்3யுஜ்ஜிஹ்வம் ப3லோத்கடம் ॥ (18)

ஜிஹ்வயா ஸம்லிஹந்தம் ச ராக்ஷஸம் ஸமரே தத2ா ।
தம் விஜித்ய முஹூர்தேந ஜக்4நே தைத்3த்யாம்ஸ்சது:ஸதம் ॥ (19)

தத: பாண்ட3ரமேக4ாப4ம் கைலாஸமிவ ப4ாஸ்வரம் ।
வருணஸ்யாலயம் தி3வ்யமபஸ்யத்3ராக்ஷஸாதி4ப: ॥ (20)

க்ஷரந்தீம் ச பயஸ்தத்ர ஸுரபி4ம் கா3மவஸ்தி2தாம் ।
யஸ்யா: பயோऽபி4நிஷ்யந்த3ாத் க்ஷீரோதோ3 நாம ஸாக3ர: ॥ (21)

த3த3ர்ஸ ராவணஸ்தத்ர கோ3வ்ருஷேந்த்3ரவராரணிம் ।
யஸ்மாச்சந்த்3ர: ப்ரப4வதி ஸீதரஸ்மிர்நிஸாகர: ॥ (22)

யம் ஸமாஸ்ரித்ய ஜீவந்தி பே2நபா: பரமர்ஷய: ।
அம்ருதம் யத்ர சோத்பந்நம் ஸ்வத4ா ச ஸ்வத4பே4ாஜிநாம் ॥ (23)

யாம் ப்3ருவந்தி நரா லோகே ஸுரபி4ம் நாம நாமத: ।
ப்ரத3க்ஷிணம் து தாம் க்ருத்வா ராவண: பரமாத்3பு4தாம் ॥
ப்ரவிவேஸ மஹாகோ4ரம் கு3ப்தம் ப3ஹுவிதை4ர்ப3லை: ॥ (24)

தோயத4ாராஸதாகீர்ணம் ஸாரத3ாப்4ரநிப4ம் தத3ா ।
நித்யப்ரஹ்ருஷ்டம் த3த்3ருஸே வருணஸ்ய க்3ருஹோத்தமம் ॥ (25)

ததோ ஹத்வா ப3லாத்4யக்ஷாந் ஸமரே தைஸ்ச தாடி3த: ।
அப்3ரவீச்ச ததோ யோத4ாந் ராஜா ஸீக்4ரம் நிவேத்3யதாம் ॥ (26)

யுத்3த4ார்தீ2 ராவண: ப்ராப்தஸ்தஸ்ய யுத்3த4ம் ப்ரதீ3யதாம் ।
வத3 வா ந ப4யம் தேऽஸ்தி நிர்ஜிதோऽஸ்மீதி ஸாஞ்ஜலி: ॥ (27)

ஏதஸ்மிந்நந்தரே க்ருத்3த4ா வருணஸ்ய மஹாத்மந: ।
புத்ரா: பௌத்ராஸ்ச நிஷ்க்ராமந் கௌ3ஸ்ச புஷ்கர ஏவ ச ॥ (28)

தே து வீர்யகு3ணோபேதா ப3லை: பரிவ்ருதா: ஸ்வகை: ।
யுங்க்த்வா ரத2ாந் காமக3மாநுத்3யத்3ப4ாஸ்கரவர்சஸ: ॥ (29)

ததோ யுத்3த4ம் ஸமப4வத்3தா3ருணம் ரோமஹர்ஷணம் ।
ஸலிலேந்த்3ரஸ்ய புத்ராணாம் ராவணஸ்ய ச தீ4மத: ॥ (30)

அமாத்யைஸ்ச மஹாவீர்யைர்த3ஸக்3ரீவஸ்ய ரக்ஷஸ: ।
வாருணம் தத்3ப3லம் க்ருத்ஸ்நம் க்ஷணேந விநிபாதிதம் ॥ (31)

Koviloor Digital Library

அவன் (இராவணன்), காலகேயர்கள் வசித்துக் கொண்டிருந்த அச்மநகரம் என்ற பட்டணத்தை அடைந்தான். ஆற்றல் மிக்கவர்களான காலகேயர்களைக் கொன்றொழித்தான். தன்னுடைய சகோதரி சூர்ப்பணகையின் கணவனும் பலம் மிகுந்தவனுமான வித்யுஜ்ஜிஹ்வன், போரில் இராவணனை ருசி பார்க்க விரும்பினான். (இராவணனை அழிக்கத் திட்டமிட்டான்.) வெகு எளிதாக அவனைக் கொன்றுவிட்டு, மேலும் நானூறு தைத்யர்களையும் மாய்த்தான், இராவணன். (17–19)

பின்னர், வெண்முகில் போன்று விளங்குவதும், கைலாசம் போல் ஒளிவீசுவதும், தெய்வத்தன்மை பொருந்தியதுமான வருணனுடைய இருப்பிடத்தைப் பார்த்தான், அரக்க மன்னன். (20)

அங்கு, பாலைச் சொரிந்துகொண்டிருக்கும் சுரபி என்னும் பசு நிற்பதைக் கண்டான். அந்தப் பசு சொரிந்துகொண்டிருக்கும் பாலினால் கடல் நிறைந்து 'பாற்கடல்' என்ற பெயரைப் பெற்றது. (21)

பரமேசுவரனுடைய வாகனமாகிய ரிஷபத்தின் தாய் சுரபிதேவியை இராவணன் கண்டான். சுரபியினுடைய பால்பொழிவினால் உண்டான பாற்கடலில்தான் குளிர்ந்த கதிர்களைக் கொண்ட சந்திரன் தோன்றினான். (22)

பாற்கடலின் கரையில், கடல்நுரையை மட்டுமே உணவாகக் கொண்டு தவம் புரியும் மாமுனிவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். பாற்கடலிலிருந்துதான் அமிழ்தம் தோன்றியது. ஸ்வதா என்ற மந்திரத்துடன் அளிக்கப்படும் பொருள்களை உண்ணும் பிதரர்களுக்கு உரிய ஸ்வதா தேவதையும் தோன்றியது. (23)

மிக ஆச்சரியமான தனிப்பெருமை கொண்டதும், மனித உலகில் சுரபி என்ற பெயரால் அழைக்கப்படுவதுமான அந்த கோமாதாவை வலம் வந்து வணங்கிவிட்டு, பலவகையான படைகளால் பாதுகாக்கப்படுவதும் மகாபயங்கரமானதுமான வருணனின் இருப்பிடத்திற்குள் நுழைந்தான். (24)

நூற்றுக்கணக்கான நீர்வீழ்ச்சிகள் கொண்டதும், சரத்கால மேகம் போல் பளீரென்று விளங்குவதும், எப்போதும் மகிழ்ச்சியில் திளைத்திருப்பதுமான வருணனுடைய மிகச்சிறந்த மாளிகையைக் கண்டான், இராவணன். (25)

பின்னர், படைத்தலைவர்களைக் கொன்றான். போரில், அவர்கள் அவனைத் தாக்கவும் செய்தார்கள். வருணனுடைய படைவீரர்களைப் பார்த்து, ''உங்கள் மன்னனிடம் சென்று, இராவணன் வந்து போருக்கு அழைக்கிறார்; அவருடன் போர் செய்யுங்கள்; அல்லது, கைகளைக் கூப்பிக் கொண்டு 'நான் தோற்றுப் போனேன்' என்றாவது கூறுங்கள். அப்படிக் கூறிவிட்டால், (அதை அவர் ஏற்றுக்கொண்டு போர் செய்யாமல் திரும்பிப் போய்விடுவார். அதனால்,) அவரிடமிருந்து ஆபத்து ஏற்படாமறபோகும்'' என்று கூறுங்கள். (26,27)

இதனிடையில், செய்தியைத் தெரிந்துக் கொண்ட வருணனுடைய புதல்வர்களும், பேரன்களும், கௌ என்றும் புஷ்கரன் என்றும் பெயர்கொண்ட படைத்தலைவர்கள் கோபத்தோடு வெளியே புறப்பட்டு வந்தார்கள். அவர்கள் எல்லோரும் வீரம் மிகுந்தவர்கள். உதயசூரியனுக்கு நிகரான தேசு படைத்தவர்கள். விருப்பப்படி செல்லும் இயல்புடைய தேர்களில் ஏறிக்கொண்டுத் தத்தம் படைவீரர்கள் சூழ, போர்க்களம் வந்தடைந்தார்கள். (28,29)

பின்னர், வருணனுடைய குமாரர்களுக்கும், புத்திமானான இராவணனுக்கும் இடையே, மயிர்க்கூச்சலை உண்டாக்கும் பயங்கரமான போர் தொடங்கியது. (30)

பராக்கிரமம் மிக்க தசக்ரீவனுடைய அமைச்சர்களால், வருணனுடைய படை முழுவதும் நொடிப்பொழுதில் நாசம் செய்யப்பட்டது. (31)

Koviloor Digital Library

ஸமீக்ஷ்ய ஸ்வப$_3$லம் ஸங்க்$_2$யே வருணஸ்ய ஸுதாஸ்தத$_3$ா ।
அர்தி$_3$தா: ஶரஜாலேந நிவ்ருத்தா ரணகர்மண: ॥ (32)

மஹீதலக$_3$தாஸ்தே து ராவணம் த்$_3$ருஶ்ய புஷ்பகே ।
ஆகாஶமாஶு விவிஶு: ஸ்யந்த$_3$நை: ஶீக்$_4$ரகா$_3$மிபி$_4$: ॥ (33)

மஹத$_3$ாஸீத்ததஸ்தேஷாம் துல்யஸ்த$_2$ாநமவாப்ய தத் ।
ஆகாஶயுத்$_3$த$_4$ம் துமுலம் தே$_3$வதா$_3$நவயோரிவ ॥ (34)

ததஸ்தே ராவணம் யுத்$_3$தே$_4$ ஶரை: பாவகஸந்நிபை$_4$: ।
விமுகீ$_2$க்ருத்ய ஸந்துஷ்டா விநேது$_3$ர்விவித$_4$ாந் ரவாந் ॥ (35)

ததோ மஹோத$_3$ர: க்ருத்$_3$தே$_4$ா ராஜாநம் த்$_3$ருஶ்ய த$_4$ர்ஷிதம் ।
த்யக்த்வா ம்ருத்யுப$_4$யம் வீரோ யுத்$_3$த$_4$காங்க்ஷீ வ்யலோகயத் ॥ (36)

தேந தே தா$_3$ருணா யுத்$_3$தே$_4$ காமகா$_3$: பவநோபமா: ।
மஹோத$_3$ரேண க$_3$த$_3$யா ஹதா வை ப்ரயயு: க்ஷிதிம் ॥ (37)

தேஷாம் வருணபுத்ராணாம் ஹத்வா யோத$_4$ாந் ஹயாஞ்ஶதாந் ।
முமோசாஶு மஹாநாத$_3$ம் விரத$_2$ாந் ப்ரேக்ஷ்ய தாந் ஸ்தி$_2$தாந் ॥ (38)

தே து தேஷாம் ரத$_2$ா: ஸாஶ்வா: ஸஹ ஸாரதி$_2$பி$_4$ர்ஹதை: ।
மஹோத$_3$ரேண நிஹதா: பதிதா: ப்ருதி$_2$வீதலே ॥ (39)

தே து த்யக்த்வா ரத$_2$ாந் புத்ரா வருணஸ்ய மஹாத்மந: ।
ஆகாஶே விஷ்டி$_2$தா: ஶூரா: ஸ்வப்ரப$_4$ாவாந்ந விவ்யது$_2$: ॥ (40)

த$_4$நூம்ஷி க்ருத்வா ஸஜ்ஜாநி விநிர்பி$_4$த்$_3$ய மஹோத$_3$ரம் ।
ராவணம் ஸமரே க்ருத்$_3$த$_4$ா: ஸஹிதா: ஸமபி$_4$த்$_3$ரவந் ॥ (41)

ஸாயகைஶ்சாபவிப்$_4$ரஷ்டைர்வஜ்ரகல்பை: ஸுதா$_3$ருணை: ।
தா$_3$ரயந்தி ஸ்ம ஸங்க்ருத்$_3$த$_4$ா மேக$_4$ா இவ மஹாகி$_3$ரிம் ॥ (42)

தத: க்ருத்$_3$தே$_4$ா த$_3$ஶக்$_3$ரீவ: காலாக்$_3$நிரிவ நிர்க$_3$த: ।
ஶரவர்ஷைர்மஹாகே$_4$ாரைஸ்தேஷாம் மர்மஸ்வதாட$_3$யத் ॥ (43)

ததஸ்தேநைவ ஸஹஸா ஸீத$_3$ந்தி ஸ்ம பதா$_3$தய: ।
முஸலாநி விசித்ராணி ததோ ப$_4$ல்லஶதாநி ச ॥ (44)

பட்டஸாம்ஶ்சைவ ஶக்தீஶ்ச ஶதக்$_4$நீஸ்தோமராம்ஸ்தத$_2$ா ।
பாதயாமாஸ து$_3$ர்த$_4$ர்ஷஸ்தேஷாமுபரி விஷ்டி$_2$த: ॥ (45)

அபவித்$_3$த$_4$ாஸ்து தே வீரா விநிஷ்பேது: பதா$_3$தய: ।
மஹாபங்கமிவாஸாத்$_3$ய குஞ்ஜரா: ஷஷ்டிஹாயநா: ॥ (46)

Koviloor Digital Library

வருணனுடைய குமாரர்கள், போரில் தங்கள் படையினரின் இந்த அவலநிலையைக் கண்டதாலும், அம்புக் கூட்டங்களால் துன்பப்பட்டுக் கொண்டிருந்ததாலும் சிறிதுநேரம் போர் செய்வதைத் தவிர்த்தார்கள். (32)

மண்ணுலகத்தில் மறைந்திருந்த அவர்கள், புஷ்பக விமானத்தில் இராவணன் இருப்பதைப் பார்த்துவிட்டு, வேகமாகச் செல்லும் தேர்களில் ஏறி ஆகாயத்தைச் சென்றடைந்தார்கள். (33)

இப்போது, இரு பக்கத்தினருக்கும் ஒரே மாதிரியான இடம் (ஆகாயம்) கிடைத்து விட்டதால், இராவணனுடன் பயங்கரமான போர் மூண்டது. ஆகாயத்தில் நிகழ்ந்த அந்த யுத்தம், தேவாசுரப் போர் போல கடுமையாக இருந்தது. (34)

அப்போது வருணனுடைய புதல்வர்கள், தீக்கொழுந்து போல் ஒளிவீசும் பாணங்களால் தாக்கி, இராவணனைப் போர்க்களத்திலிருந்து புறமுதுகிட்டு ஓடச்செய்து, மகிழ்ச்சி பொங்க பலவகையான குரல்களில் வெற்றி முழக்கம் செய்தார்கள். (35)

அப்போது மன்னன் இழிவுபடுத்தப்பட்டதைக் கண்ட அமைச்சர் மகோதரன், மிகவும் கோபங்கொண்டு மரணபயத்தைத் துறந்து போர்புரியும் எண்ணத்துடன் எதிரிகளை நோக்கினான். (36)

பயங்கரமானவர்களும் போரில் விருப்பமுடையவர்களும் காற்றினும் கடிது செல்லக்கூடியவர்களுமான வீரர்கள், மகோதரனின் கதையால் தாக்கப்பட்டு உயிரிழந்து தரையில் சாய்ந்தார்கள். (37)

வருண குமாரர்களுடன் வந்த போர் வீரர்களையும் நூற்றுக்கணக்கான குதிரைகளையும் கொன்றுவிட்டு, தேர்களை இழந்து தரையில் நின்றுகொண்டிருந்த அவர்களைப் பார்த்து, மகோதரன் பேரொலி எழுப்பினான். (38)

அவர்களுடைய தேர்கள், குதிரைகள், தேர்ப்பாகன்கள் எல்லாம் மகோதரனால் தாக்கப்பட்டு மண்ணுலகில் வீழ்ந்தன. (39)

மகாத்மாவான வருணனுடைய புதல்வர்கள் தேர்கள் இல்லாமல், தங்கள் இயல்பான தனிச்சிறப்பினால் ஆகாயத்தில் நின்றார்கள். அவர்கள் சிறிதளவுகூட துன்பம் அடையவில்லை. அவர்கள் விற்களில் நாண் ஏற்றி, அம்புமாரி பெய்து மகோதரனைச் சிதறவடித்தார்கள். கோபங்கொண்ட அவர்கள் ஒன்றுசேர்ந்து இராவணனைத் தாக்கினார்கள். (40,41)

ஒரு மாமலையின்மேல் மேகங்கள் நீரைப் பொழிவதைப் போல, வஜ்ராயுதம் போன்ற பயங்கரமான அம்புகளால், அவனைத் துளைத்தெடுத்தார்கள். (42)

அப்போது கோபங்கொண்ட தசக்ரீவன், ஊழிக்கால தீயைப் போல் வெளிப்போந்து, மிகவும் பயங்கரமான அம்புமாரியால் அவர்களின் உயிர்நிலைகளில் தாக்கினான். (43)

அந்தத் தாக்குதலினால் காலாட்படையினர் முதலியோர் நடுங்கிப் போனார்கள். விசித்திரமான உலக்கைகள், வளைந்த கணுக்களையுடைய பல்லம் என்ற நூற்றுக்கணக்கான அம்புகள், பட்டயம் என்னும் வகையைச் சேர்ந்த கத்திகள், வேல்கள், இரும்பு ஆணிகள் பொருத்தப்பட்ட சதக்னீ என்னும் இயந்திரங்கள், வல்லயங்கள் ஆகியவற்றை எதிர்கொள்ள முடியாதவனான அவன், மேலே விமானத்தில் இருந்தபடியே அவர்கள் மேல் அம்புகளைப் பொழிந்து தள்ளினான். (44,45)

(இராக்கதனின்) பல்வகை படைக்கலங்களால் தாக்கப்பட்டுக் காயமடைந்த காலாட்படையினர் முதலியோர், அறுபது ஆண்டுகள் நிரம்பிய யானைகள் சேற்றில் சிக்கிக் கொண்டாற்போல் தவித்தார்கள். (46)

Koviloor Digital Library

ஸீத$_3$மாநாந் ஸுதாந் த்$_3$ருஷ்ட்வா விஹ்வலாந் ஸுமஹௌஜஸ: ।
நநாத$_3$ ராவணோ ஹர்ஷாந்மஹாநம்பு$_3$த$_4$ரோ யதா$_2$ ॥ (47)

ததோ ரக்ஷோ மஹாநாத$_3$ாந் முக்த்வா ஹந்தி ஸ்ம வாருணாந் ।
நாநாப்ரஹரணோபேதைர்தா$_4$ராபாதைரிவாம்பு$_3$த$_3$: ॥ (48)

ததஸ்தே விமுகா$_2$: ஸர்வே பதிதா த$_4$ரணீதலே ।
ரணாத் ஸ்வபுருஷை: ஶீக்$_4$ரம் க்$_3$ருஹாண்யேவ ப்ரவேஶிதா: ॥ (49)

தாநப்$_3$ரவீத்ததோ ரக்ஷோ வருணாய நிவேத்$_3$யதாம் ।
ராவணம் த்வப்$_3$ரவீந்மந்த்ரீ ப்ரபா$_4$ஸோ நாம வாருண: ॥ (50)

க$_3$த: க$_2$லு மஹாராஜோ ப்$_3$ரஹ்மலோகம் ஜலேஶ்வர: ।
கா$_3$ந்த$_4$ர்வம் வருண: ஶ்ரோதும் யம் த்வமாஹ்வயஸே யுதி$_4$ ॥ (51)

தத் கிம் தவ வ்ருதா$_2$ வீர பரிஶ்ரம்ய க$_3$தே ந்ருபே ।
யே து ஸந்நிஹிதா வீரா: குமாராஸ்தே பராஜிதா: ॥ (52)

ராக்ஷஸேந்த்$_3$ரஸ்து தச்ச்$_2$ருத்வா நாம விஶ்ராவ்ய சாத்மந: ।
ஹர்ஷாந்நாத$_3$ம் விமுஞ்சந் வை நிஷ்க்ராந்தோ வருணாலயாத் ॥ (53)

ஆக$_3$தஸ்து பதா$_2$ யேந தேநைவ விநிவ்ருத்ய ஸ: ।
லங்காமபி$_4$முகோ$_2$ ரக்ஷோ நப$_4$:ஸ்த$_2$லக$_3$தோ யயௌ ॥ (54)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்ரயோவிம்ஶ: ஸர்க$_3$: ॥

சதுர்விம்ஶ: ஸர்க$_3$:

க$_2$ரஶூர்பணக$_2$ரத$_3$ண்ட$_3$காநிவாஸாதே$_3$ஶ:

நிவர்தமாந: ஸம்ஹ்ருஷ்டோ ராவண: ஸுது$_3$ராத்மவாந் ।
ஜஹ்ரே பதி$_2$ நரேந்த்$_3$ரர்ஷிதே$_3$வக$_3$ந்த$_4$ர்வகந்யகா: ॥ (1)

த$_3$ர்ஶநீயாம் ஹி யாம் ரக்ஷ: கந்யாம் ஸ்த்ரீம் வாத$_2$ பஶ்யதி ।
ஹத்வா ப$_3$ந்து$_4$ஜநம் தஸ்யா விமாநே தாம் ருரோத$_4$ ஹ ॥ (2)

ஏவம் பந்நக$_3$கந்யாஶ்ச ராக்ஷஸாஸுரமாநுஷீ: ।
யக்ஷதா$_3$நவகந்யாஶ்ச விமாநே ஸோऽத்$_4$யரோபயத் ॥ (3)

தாஶ்ச ஸர்வா: ஸமம் து$_3$:கா$_2$ந்முமுசுர்பா$_3$ஷ்பஜம் ஜலம் ।
துல்யமக்$_3$ந்யர்சிஷாம் தத்ர ஶோகாக்$_3$நிப$_4$யஸம்ப$_4$வம் ॥ (4)

தாபி$_4$: ஸர்வாநவத்$_3$யாபி$_4$ர்நதீ$_3$பி$_4$ரிவ ஸாக$_3$ர: ।
ஆபூரிதம் விமாநம் தத்$_3$ப$_4$யஶோகாஶிவாஶ்ருபி$_4$: ॥ (5)

Koviloor Digital Library

வருணனுடைய புதல்வர்கள் துன்பத்தைத் தாங்கமுடியாமல் குழப்பத்தில் இருப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்ட இராவணன், மாபெரும் மேகத்தின் கர்ஜனை போல் வெற்றி முழக்கம் செய்தான். அப்போது, பேரொலி எழுப்பிக் கொண்டு, மேகத்தின் மழைப்பொழிவைப்போல பலவகையான அஸ்திர–சஸ்திரங்களினால் வருணனுடைய புதல்வர்களைச் சேதமடையச் செய்தான். (47,48)

அதன் பின்னர், (வருணனுடைய புதல்வர்கள்) மேலும் போர்புரிய விரும்பாமல் போர்க்களத்திலிருந்து திரும்பி, (சோர்ந்து போய்) தரையில் விழுந்தார்கள். அவர்களை, அவர்களது பணியாளர்கள், தூக்கிச் சென்று அவரவர் வீடுகளில் சேர்ப்பித்தார்கள். (49)

அப்போது, அந்தப் பணியாளர்களைப் பார்த்து, ''இங்கே நடந்தவற்றை வருணனிடம் தெரிவியுங்கள்'' என்று அரக்கன் கூறினான். வருணனுடைய அமைச்சனான பிரபாஸன் என்பவன் பதில் கூறினான்— (50)

''போருக்கு வரும்படி நீங்கள் அழைக்கிற வருண மாமன்னர், இசை கேட்பதற்காகப் பிரும்மலோகம் சென்றிருக்கிறார். வீரரே! மன்னன் இல்லாதபோது நீங்கள் யாருடன் சண்டை போடப் போகிறீர்கள்? மன்னரின் வீர குமாரர்கள் எல்லோரும் இதோ, இங்கே உங்களால் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள்.'' (51,52)

அதைக் கேட்ட அரக்க மன்னன், ''நான் வெற்றி பெற்றேன்!'' என்று மகிழ்ச்சியோடு முழங்கிக் கொண்டு, வருணலோகத்திலிருந்து புறப்பட்டுச் சென்றான். (53)

வந்த வழியாகவே திரும்பி ஆகாயமார்க்கமாக இலங்கையை நோக்கிச் சென்றான், அரக்கன் (இராவணன்). (54)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இருபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்து நான்கு

சூர்ப்பணகை, கரன் ஆகியோரை தண்டகாரண்யம் செல்ல ஆணையிடுதல்

திரும்பி வரும்போது, கேடுகெட்டவனான இராவணன் பெருமகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தான். வரும் வழியில் பல மன்னர்கள்–முனிவர்கள்–தானவர்களின் கன்னிப் பெண்களைக் கவர்ந்து கொண்டான். (1)

அந்த அரக்கன், கவர்ச்சிகரமான ஒரு கன்னிப் பெண்ணையோ, பெண்மணியையோ பார்த்துவிட்டால் போதும்! – அவர்களுடைய உறவினர்களைக் கொன்றுவிட்டு, அவர்களை (கன்னிகைகளையும் விவாகமான பெண்களையும்) விமானத்தில் ஏற்றிக் கொண்டுவிடுவான். (2)

இவ்வாறு, நாக–அரக்க–அசுர–மானுட–யக்ஷ–தானவப் பெண்களை விமானத்தில் ஏறச் செய்தான். அவர்கள் எல்லோரும் துயரம் தாங்காமல், கண்களிலிருந்து வெம்மையான கண்ணீர்த் துளிகளைப் பெருக்கினார்கள். சோகம், பயம் காரணமாக வெளிப்பட்ட கண்ணீர்த்துளி ஒவ்வொன்றும் நெருப்புப் பொறி போல் இருந்தது. (3,4)

ஆறுகளின் நீரினால் கடல் நிரம்புவதைப் போல, அந்த அழகிகளின் கண்களிலிருந்து சோகம்–அச்சத்தினால் பெருகிய கண்ணீரால் அந்த விமானம் நிரம்பி வழிந்தது. (5)

Koviloor Digital Library

நாக$_3$க$_3$ந்த$_4$ர்வகந்யாஶ்ச மஹர்ஷிதநயாஶ்ச யா: ।
தை$_3$த்யதா$_3$நவகந்யாஶ்ச விமாநே ஶதஶோऽருத$_3$ந் ॥ (6)

தீ$_3$ர்க$_4$கேஶ்ய: ஸுசார்வங்க்$_3$ய: பூர்ணசந்த்$_3$ரநிபா$_4$நநா: ।
பீநஸ்தந்யஸ்ததா$_2$ வஜ்ரவேதி$_3$மத்$_4$யஸமப்ரபா$_4$: ॥ (7)

ரத$_2$கூப$_3$ரஸங்காஶை: ஶ்ரோணிதே$_3$ஶைர்மநோஹரா: ।
ஸ்த்ரிய: ஸுராங்க$_3$நாப்ரக்$_2$யா நிஷ்டப்தகநகப்ரபா$_4$: ॥
ஶோகது$_3$:க$_2$ப$_4$யத்ரஸ்தா விஹ்வலாஶ்ச ஸுமத்$_4$யமா: ॥ (8)

தாஸாம் நி:ஶ்வாஸவாதேந ஸர்வத: ஸம்ப்ரதீ$_3$பிதம் ।
அக்$_3$நிஹோத்ரமிவாபா$_4$தி ஸந்நிருத்$_3$தா$_4$க்$_3$நி புஷ்பகம் ॥ (9)

த$_3$ஶக்$_3$ரீவவஶம் ப்ராப்தாஸ்தாஸ்து ஶோகாகுலா: ஸ்த்ரிய: ।
தீ$_3$நவக்த்ரேக்ஷணா: ஶ்யாமா ம்ருக்$_3$ய: ஸிம்ஹவஶா இவ ॥ (10)

காசிச்சிந்தயதீ தத்ர கிம் நு மாம் ப$_4$க்ஷயிஷ்யதி ।
காசித்$_3$த$_3$த்$_4$யௌ ஸுது$_3$:கா$_2$ர்தா அபி மாம் மாரயேத$_3$யம் ॥ (11)

இதி மாத்ருபித்ரூந் ஸ்ம்ருத்வா ப$_4$ர்த்ரூந் ப்$_4$ராத்ரூம்ஸ்ததை$_2$வ ச ।
து$_3$:க$_2$ஶோகஸமாவிஷ்டா விலேபு: ஸஹிதா: ஸ்த்ரிய: ॥ (12)

கத$_2$ம் நு க$_2$லு மே புத்ரோ ப$_4$விஷ்யதி மயா விநா ।
மாதா கத$_2$ம் கத$_2$ம் ப்$_4$ராதா நிமக்$_3$நா: ஶோகஸாக$_3$ரே ॥ (13)

ஹா கத$_2$ம் நு கரிஷ்யாமி ப$_4$ர்துஸ்தஸ்மாத$_3$ஹம் விநா ।
ம்ருத்யோ ப்ரஸாத$_3$யாமி த்வாம் நய மாம் து$_3$:க$_2$பா$_4$கி$_3$நீம் ॥ (14)

கிம்நு தத்$_3$து$_3$ஷ்க்ருதம் கர்ம புரா தே$_3$ஹாந்தரே க்ருதம் ।
ஏவம் ஸ்ம து$_3$:கி$_2$தா: ஸர்வா: பதிதா: ஶோகஸாக$_3$ரே ॥
ந க$_2$ல்விதா$_3$நீம் பஶ்யாமோ து$_3$:க$_2$ஸ்யாஸ்யாந்தமாத்மந: ॥ (15)

அஹோ தி$_4$ங்மாநுஷம் லோகம் நாஸ்தி க$_2$ல்வத$_4$ம: பர: ।
யத்$_3$து$_3$ர்ப$_3$லா ப$_3$லவதா ப$_4$ர்தாரோ ராவணேந ந: ॥
ஸூர்யேணோத$_3$யதா காலே நக்ஷத்ராணீவ நாஶிதா: ॥ (16)

அஹோ ஸுப$_3$லவத்$_3$ரக்ஷோ வதே$_4$பாயேஷு யுஜ்யதே ।
அஹோ து$_3$ர்வ்ருத்தமாஸ்தா$_2$ய நாத்மாநம் வை ஜுகு$_3$ப்ஸதே ॥ (17)

ஸர்வதா$_2$ ஸத்$_3$ருஶஸ்தாவத்$_3$விக்ரமோऽஸ்ய து$_3$ராத்மந: ।
இத$_3$ம் த்வஸத்$_3$ருஶம் கர்ம பரதா$_3$ராபி$_4$மர்ஶநம் ॥ (18)

யஸ்மாதே$_3$ஷ பரக்யாஸு ரமதே ராக்ஷஸாத$_4$ம: ।
தஸ்மாத்$_3$வை ஸ்த்ரீக்ருதேநைவ ப்ராப்ஸ்யதே து$_3$ர்மதிர்வத$_4$ம் ॥ (19)

Koviloor Digital Library

நாக–கந்தர்வ–மகரிஷி–தைத்ய–தானவ கன்னிகைகள் நூற்றுக்கணக்கானோர் அந்த விமானத்தில் அழுதுகொண்டிருந்தார்கள். (6)

நீளமான கூந்தல்; வசீகரமான அங்கங்கள்; முழுநிலவு போன்ற முகம்; விம்மிப் புடைத்த மார்பகங்கள்; வைரம் இழைக்கப்பட்ட மேடை போல் விளங்கும் உடலின் நடுப்பகுதி; ரதத்தின் நுகத்தடி போன்ற புட்டம்; தேவ மடந்தையர் போன்ற கவின்மிகு தோற்றம்; உருக்கி வார்த்த தங்கத்தாலானது போல், கண்ணைக் கூச வைக்கும் பேரொளி – இவ்வாறு அந்தப் பெண்மணிகள் விளங்கினார்கள். (7,8)

இடையழகிகளான அவர்கள் எல்லோரும் கவலை, துயரம், அச்சம் ஆகியவைகளால் மிகவும் குழம்பிப் போயிருந்தார்கள். அவர்களுடைய வெப்பமான மூச்சுக்காற்றினால், புஷ்பக விமானத்தின் எல்லாப் பக்கங்களும் ஒளியூட்டப்பட்டதாக விளங்கின; அக்னிஹோத்ர குண்டம் இருக்கும் இடத்தைப் போல, அந்த விமானத்தின் உட்புறம் சூடாக இருந்தது. (9)

சிங்கத்திடம் அகப்பட்டுக் கொண்ட பெண் மான்கள் போல், இராவணனுடைய பிடியில் சிக்கிக் கொண்டு தவித்த அந்த இளம் பெண்களின் முகமும் கண்களும் மிகவும் பரிதாபமாக இருந்தன. (10)

''இந்த அரக்கன் என்னைப் புசித்து விடுவானோ?'' என்று ஒருத்தி கவலைப்பட்டாள்; இன்னொருத்தி, ''இவன் என்னைக் கொன்று விடுவானோ?'' என்று மிகவும் வருத்தத்துடன் எண்ணினாள் (11)

அந்தப் பெண்கள், தத்தம் தாய்–தந்தை–சகோதரன்–கணவன்மார்களை நினைவிற்கொண்டு வந்து துக்கத்திலும் சோகத்திலும் ஆழ்ந்து, ஒன்றாகக் கூடிப் புலம்பித் தள்ளினார்கள். (12)

''ஐயகோ! என்னுடைய சின்னப்பையன், நான் இல்லாமல் எப்படி இருப்பான்? என்னுடைய தாயார் எவ்வளவு தவிப்பாள்? சகோதரன் எவ்வாறு பொறுத்துக் கொள்வான்?'' என்றெல்லாம் புலம்பி, சோகக்கடலில் மூழ்கினார்கள். ''என்னுடைய கணவரைப் பிரிந்து நான் எவ்வாறு உயிர் வாழ்வேன்? காலதேவனே! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்; துயரத்தில் மூழ்கியிருக்கும் என்னை, உன் உலகுக்கு அழைத்துக் கொண்டு போ. (13,14)

முன்னொரு பிறவியில், வேறு உடலில் இருந்த நாம் என்னென்ன பாவங்கள் செய்தோமோ? அவற்றின் விளைவாக, நாம் எல்லோரும் இப்போது துயரக் கடலில் வீழ்ந்து கிடக்கிறோம். நம்முடைய துயரம் தீர்ந்துபோவதற்கான அறிகுறியே காணப்படவில்லை. (15)

என்ன, மானுட உலகம் இது? சொல்லவே நாணமாக இருக்கிறது. இதைக் காட்டிலும் மட்டமான உலகம் வேறு எதுவும் இருக்கமுடியாது! பாருங்களேன். சூரியன் தோன்றியதும் நட்சத்திரங்கள் தாமாகவே அழிந்து போய்விடுவதைப் போல, பலம் குறைந்த எங்கள் கணவர்களை, ஆற்றல் மிகுந்த இராவணன், அநாயாசமாகப் புறந்தள்ளிவிட்டு எங்களைக் கவர்ந்து செல்கிறானே! (16)

பேராற்றல் கொண்ட அரக்கன், பிறரை அழிப்பதிலேயே குறியாக இருக்கிறான்! அந்தோ! தீய செயல்களைச் செய்து கொண்டிருக்கும் இவன், தான் தரம் தாழ்ந்து போய்விட்டதை எண்ணிப் பார்க்கவில்லையே? (17)

இவன் கடுமையாகத் தவம் செய்து, அதன் பயனாக அளவில்லாத ஆற்றலைப் பெற்றிருக்கிறான் என்பது சரிதான். ஆனால், பிறர் மனைவிகளைப் பலாத்காரம் செய்வது என்பது, இவன் வீரத்திற்கு ஏற்றது அல்ல. இந்த அரக்கப்பதர், பிறருடைய மனைவிகளை அனுபவிப்பதிலேயே இன்பம் காண்கிறான். (இது, மன்னிக்க முடியாத பாவம்.) கெடுமதியாளனான இவன் அழிவு, ஒரு பெண்ணை முன்னிட்டே நிகழப் போகிறது.'' (18,19)

Koviloor Digital Library

ஸதீபி$_4$ர்வரநாரீபி$_4$ரேவம் வாக்யேப்$_4$யுதீ$_3$ரிதே ।
நேது$_3$ர்து$_3$ந்து$_3$ப$_4$ய: க$_2$ஸ்த$_2$ா: புஷ்பவ்ருஷ்டி: பபாத ச ॥ (20)

ஶப்த: ஸ்த்ரீபி$_4$: ஸ து ஸமம் ஹதௌஜா இவ நிஷ்ப்ரப$_4$: ।
பதிவ்ரதாபி$_4$: ஸாத்$_4$வீபி$_4$ர்ப$_3$பூ$_4$வ விமநா இவ ॥ (21)

ஏவம் விலபிதம் தாஸாம் ஶ்ருண்வந் ராக்ஷஸபுங்க$_3$வ: ।
ப்ரவிவேஶ புரீம் லங்காம் பூஜ்யமாநோ நிஶாசரை: ॥ (22)

ஏதஸ்மிந்நந்தரே கே$_4$ாரா ராக்ஷஸீ காமரூபிணீ ।
ஸஹஸா பதிதா பூ$_4$மௌ ப$_4$கி$_3$நீ ராவணஸ்வஸா ॥ (23)

தாம் ஸ்வஸாரம் ஸமுத்த$_2$ாப்ய ராவண: பரிஸாந்த்வயந் ।
அப்$_3$ரவீத் கிமித$_3$ம் ப$_4$த்$_3$ரே வக்துகாமாஸி மே த்$_3$ருதம் ॥ (24)

ஸா ப$_3$ாஷ்பபரிருத்$_3$த$_4$ாக்ஷீ ரக்தாக்ஷீ வாக்யமப்$_3$ரவீத் ।
க்ருதாஸ்மி வித$_4$வா ராஜந்ஸ்த்வயா ப$_3$லவதா ப$_3$லாத் ॥ (25)

ஏதே ராஜந்ஸ்த்வயா வீரா தை$_3$த்யா விநிஹதா ரணே ।
காலகேயா இதி க்$_2$யாதா: ஸஹஸ்ராணி சதுர்த$_3$ஶ ॥ (26)

ப்ராணேப்$_4$யோऽபி க$_3$ரீயாந் மே தத்ர ப$_4$ர்தா மஹாப$_3$ல: ।
ஸோऽபி த்வயா ஹதஸ்தாத ரிபுணா ப்$_4$ராத்ருக்$_3$ருத்$_4$நுநா ॥ (27)

த்வாயஸ்மி நிஹதா ராஜந் ஸ்வயமேவ ஹி ப$_3$ந்து$_4$நா ।
ராஜந் வைத$_4$வ்யஶப்$_3$த$_3$ம் ச போ$_4$க்ஷ்யாமி த்வத்க்ருதே ஹ்யஹம் ॥ (28)

நநு நாம த்வயா ரக்ஷ்யோ ஜாமாதா ஸமரேஷ்வபி ।
ஸ த்வயா நிஹதோ யுத்$_3$தே$_4$ ஸ்வயமேவ ந லஜ்ஜஸே ॥ (29)

ஏவமுக்தோ த$_3$ஶக்$_3$ரீவோ ப$_4$கி$_3$ந்யா க்ரோஶமாநயா ।
அப்$_3$ரவீத் ஸாந்த்வயித்வா தாம் ஸாமபூர்வமித$_3$ம் வச: ॥ (30)

அலம் வத்ஸே ருதி$_3$த்வா தே ந பே$_4$தவ்யம் ச ஸர்வஶ: ।
த$_3$ாநமாநப்ரஸாதை$_3$ஸ்த்வாம் தோஷயிஷ்யாமி யத்நத: ॥ (31)

யுத்$_3$த$_4$ப்ரமத்தோ வ்யாக்ஷிப்தோ ஜயகாங்க்ஷீ க்ஷிபஞ்ஶராந் ।
நாவக$_3$ச்ச$_2$ாமி யுத்$_3$தே$_4$ஷு ஸ்வாந் பராந் வாப்யஹம் ஶுபே$_4$ ॥ (32)

ஜாமாதரம் ந ஜாநே ஸ்ம ப்ரஹரந் யுத்$_3$த$_4$து$_3$ர்மத$_3$: ।
தேநாஸௌ நிஹத: ஸங்க்$_2$யே மயா ப$_4$ர்தா தவ ஸ்வஸ: ॥
அஸ்மிந் காலே து யத்ப்ராப்தம் தத்கரிஷ்யாமி தே ஹிதம் ॥ (33)

ப்$_4$ராதுரைஶ்வர்யயுக்தஸ்ய க$_2$ரஸ்ய வஸ பார்ஶ்வத: ।
சதுர்த$_3$ஶாநாம் ப்$_4$ராதா தே ஸஹஸ்ராணாம் ப$_4$விஷ்யதி ॥ (34)

Koviloor Digital Library

உத்தம கற்பரசிகளான அந்தப் பெண்மணிகள் இவ்வாறு (சாபம் கொடுக்கும் சொற்களைக்) கூறியவுடன், வான்வெளியில் துந்துபிகள் முழங்கின; மலர்மாரி பொழிந்தது. (20)

நற்குணங்கள் நிரம்பிய பதிவிரதைகளான அவர்கள் மேற்கண்டவாறு சாபமிட்டவுடன், அவனுடைய (இராவணனுடைய) சக்தி சட்டென்று குறைந்தாற்போலாயிற்று; அவன் மனம் சோர்வடைந்தாற்போலாயிற்று. (21)

பெண்களின் புலம்பலைக் கேட்டவாறே சென்ற அரக்க மன்னன், அரக்கர்களால் உற்சாகமாக வரவேற்கப்பட்டு, இலங்கைப் பட்டணத்திற்குள் பிரவேசித்தான். (22)

இதனிடையில், விருப்பம் போல் உருவம் எடுக்கக் கூடியவளும் பயங்கரமான அரக்கியுமான இராவணனின் இளைய சகோதரி (சூர்ப்பணகை), திடீரென்று வந்து அவன் எதிரில் தரையில் விழுந்தாள். (23)

அவன், சகோதரியைத் தூக்கி நிறுத்தி, ஆறுதல் அளிப்பது போல் கூறினான்— ''நங்காய்! ஏதேனும் செய்தியை என்னிடம் அவசரமாகச் சொல்ல விரும்புகிறாயா?'' (24)

அழுது அழுது அவளுடைய கண்கள் சிவந்துவிட்டிருந்தன; கண்ணீர்ப் பெருக்கினால் மங்கியிருந்த பார்வையுடன், ''மன்னரே! நீங்கள் பேராற்றல் உடையவர். அதனால்தானே முன்பின் ஆலோசிக்காமல் என்னைக் கைம்பெண் ஆக்கிவிட்டீர்கள்? (25)

மன்னரே! காலகேயர்கள் என்று பெயர்பெற்ற பதினான்காயிரம் தைத்யர்கள், போர்க்களத்தில் உங்களால் கொல்லப்பட்டார்கள், அல்லவா? (26)

அவர்களில் என் உயிரைக் காட்டிலும் மேலானவரும் மகாபலசாலியுமான என் கணவர், சகோதரன் என்று பெயர் கொண்ட எதிரியான உங்களால் கொல்லப்பட்டார். (27)

மன்னரே! சகோதர உறவு கொண்ட நீங்கள், அவரைக் கொன்றதன் மூலம் என்னையே கொன்றுவிட்டீர்கள். வேந்தரே! உங்கள் காரணமாக, கைம்பெண் என்ற பெயரை நான் சுமக்கப் போகிறேன். மருமகனான அவர், போர்க்களங்களிலும் உங்களால் காப்பாற்றப்பட வேண்டியவரல்லவா? ஆனால், நீங்களே அவரைக் கொன்றிருக்கிறீர்கள்? அதற்காக நீங்கள் வெட்கப்படவும் இல்லை?'' (28,29)

இவ்வாறு வேதனையுடன் அழுதபடியே, சொல்லிப் புலம்பிய சகோதரிக்கு ஆறுதல் கூறி, சாந்தமான குரலில் பின்வருமாறு கூறினான்— (30)

''மகளே! அழுது புலம்பியது போதும். இனி, அதனால் பயன் ஏதுமில்லை. 'என் கதி, என்ன ஆகுமோ?' என்று அச்சங்கொள்ள வேண்டாம். பொருள், அந்தஸ்து மற்றும் பல சலுகைகளைக் கொடுத்து, மிகவும் அக்கறையுடன் உன்னை மகிழ்வுறச் செய்வேன். (31)

அப்போது நான் போர்வெறியில் இருந்தேன்; ஆலோசித்து செயல்படும் நிலையில் இல்லை. வெற்றி அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு, அம்புகளைப் பெய்துகொண்டிருந்தேன். திருச்செல்வியே! போர் செய்து கொண்டிருக்கும்போது, எதிரில் இருப்பது யார்? – நம்முடையவனா, வேற்று மனிதனா? – என்ற உணர்வு தோன்றுவதில்லை. (32)

போர்வெறியில் படைக்கலங்களைச் செலுத்திக் கொண்டிருந்த எனக்கு, 'இவர்களில் என் சகோதரியின் கணவர் இருப்பாரே?' என்ற நினைவே எழவில்லை. அதனால்தான், என் சகோதரியின் கணவரும் போரில் என்னால் கொல்லப்பட்டுவிட்டார். இன்றைய நிலையில், உனக்கு என்ன உதவி செய்ய முடியுமோ, அதனைச் செய்கிறேன். (33)

நீ, குறைவில்லாத செல்வச் செழிப்பும் மேன்மையும் பெற்ற சகோதரன் கரனுடன் இருந்து வருவாயாக. அவன் பதிநான்காயிரம் அரக்கர்களுக்குத் தலைவனாக இருப்பான். (34)

Koviloor Digital Library

ப்ரபு$_4$: ப்ரயாணே த$_3$ாநே ச ராக்ஷஸாநாம் மஹாப$_3$ல: ।
தத்ர மாத்ருஷ்வஸேயஸ்தே ப்$_4$ராதாயம் வை க$_2$ர: ப்ரபு$_4$: ॥ (35)

ப$_4$விஷ்யதி தவாதே$_3$ஶம் ஸத$_3$ா குர்வந்நிஶாசர: ।
ஶீக்$_4$ரம் க$_3$ச்ச$_2$த்வயம் வீரோ த$_3$ண்ட$_3$காந் பரிரக்ஷிதும் ॥ (36)

தூ$_3$ஷணோ஽ஸ்ய ப$_3$லாத்$_4$யக்ஷோ ப$_4$விஷ்யதி மஹாப$_3$ல: ।
தத்ர தே வசநம் ஶூர: கரிஷ்யதி ஸத$_3$ா க$_2$ர: ॥ (37)

ரக்ஷஸாம் காமரூபாணாம் ப்ரபு$_4$ரேஷ ப$_4$விஷ்யதி ।
ஏவமுக்த்வா த$_3$ஶக்$_3$ரீவ: ஸைந்யமஸ்யாதி$_3$தே$_3$ஶ ஹ ॥
சதுர்த$_3$ஶ ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் வீர்யஶாலிநாம் ॥ (38)

ஸ தை: பரிவ்ருத: ஸர்வை ராக்ஷஸைர்கே$_4$ாரத$_3$ர்ஶநை: ।
அக$_3$ச்ச$_2$த க$_2$ர: ஶீக்$_4$ரம் த$_3$ண்ட$_3$காநகுதோப$_4$ய: ॥ (39)

ஸ தத்ர காரயாமாஸ ராஜ்யம் நிஹதகண்டகம் ।
ஸா ச ஶூர்பணக$_2$ா தத்ர ந்யவஸத்$_3$த$_3$ண்ட$_3$காவநே ॥ (40)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ சதுர்விம்ஶ: ஸர்க$_3$: ॥

பஞ்சவிம்ஶ: ஸர்க$_3$:

ஸ்வர்க$_3$ாபி$_4$ஷேணநம்

ஸ து த$_3$த்த்வா த$_3$ஶக்$_3$ரீவோ வநம் கே$_4$ாரம் க$_2$ரஸ்ய தத் ।
ப$_4$கி$_3$நீம் ச ஸமாஶ்வாஸ்ய ஹ்ருஷ்ட: ஸ்வஸ்த$_2$தரோ஽ப$_4$வத் ॥ (1)

ததோ நிகும்பி$_4$லா நாம லங்கோபவநமுத்தமம் ।
தத்$_3$ராக்ஷஸேந்த்$_3$ரோ ப$_3$லவாந் ப்ரவிவேஶ ஸஹாநுக$_3$: ॥ (2)

ததோ யூபஶதாகீர்ணம் ஸௌம்யசைத்யோபஶோபி$_4$தம் ।
த$_3$த$_3$ர்ஶ விஷ்டி$_2$தம் யக்ஞம் ஶ்ரியா ஸம்ப்ரஜ்வலந்நிவ ॥ (3)

தத: க்ருஷ்ணாஜிநத$_4$ரம் கமண்ட$_3$லுஶிக$_2$ாத்$_4$வஜம் ।
த$_3$த$_3$ர்ஶ ஸ்வஸுதம் தத்ர மேக$_4$நாத$_3$ம் ப$_4$யாவஹம் ॥ (4)

தம் ஸமாஸாத்$_3$ய லங்கேஶ: பரிஷ்வஜ்யாத$_2$ ப$_3$ாஹுபி$_4$: ।
அப்$_3$ரவீத் கிமித$_3$ம் வத்ஸ வர்தஸே ப்$_3$ரூஹி தத்த்வத: ॥ (5)

உஶநா த்வப்$_3$ரவீத்தத்ர யக்ஞஸம்பத்ஸம்ருத்$_3$த$_4$யே ।
ராவணம் ராக்ஷஸஶ்ரேஷ்ட$_2$ம் த்$_3$விஜஶ்ரேஷ்டே$_2$ா மஹாதபா: ॥ (6)

Koviloor Digital Library

அரக்கர்களை நடத்திச் செல்வதிலும் வெகுமானம் அளிப்பதிலும், பெரும்பலசாலியான அவனே தலைவனாக இருப்பான். சிற்றன்னையின் மைந்தனும் பிராதாவுமான கரன்தான் அவ்விடத்தில் பூரண அதிகாரத்தோடு விளங்குவான். (35)

அந்த இராக்கதன், எப்போதும் உன் கட்டளையை நிறைவேற்றி வைப்பான். அவன், என் ஆணைப்படி, தண்டகாரண்யத்தைக் காவல் மையமாகக் கொண்டு செயல்படும் பொருட்டு விரைவில் செல்லவிருக்கிறான். (36)

பெரும்பலசாலியான தூஷணன், இவனுடைய படைத்தலைவனாக நியமிக்கப்படுகிறான். அங்கே (தண்டக வனத்தில்) கரன், எப்போதும் உன் சொற்படி நடப்பான். (37)

விருப்பப்படி உருவம் எடுக்கக்கூடிய அரக்கர்களுக்குத் தலைவனாக இவன் விளங்கப் போகிறான்.'' இவ்வாறு சகோதரியிடம் கூறிவிட்டு, அவனுக்கு (கரனுடன் செல்ல) வேண்டிய மகாவீரம் பொருந்திய பதிநான்காயிரம் படைகளுக்கு உத்தரவிட்டான். (38)

பயங்கரமான தோற்றங்கொண்ட அரக்கர்கள் புடைசூழ, சிறிதும் அச்சமில்லாமல் தண்டகாரண்யத்திற்கு விரைந்து சென்றான், கரன். அங்கே எவ்வித இடையூறும் இல்லாமல் ஆட்சி செய்யத் தொடங்கினான். சூர்ப்பணகையும் தண்டகாரண்யத்தில் (கரனுடன்கூட) இருந்து வந்தாள். (39,40)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இருபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தைந்து
தேவலோகத்தின் மீது படையெடுத்தல்

இராவணன், பயங்கரமான காட்டை (காட்டுப் பகுதியின் ஆட்சிப் பொறுப்பை) கரனிடம் ஒப்புவித்தான். தங்கைக்கும் (சலுகைகளும் அதிகாரங்களும் கொடுத்ததன் மூலம்) ஆறுதலைத் தந்து, மனநிறைவடைந்து, மிகவும் நிம்மதி பெற்றான். (1)

பின்னர், பெரும் பலசாலியான அவன் பணியாளர்கள் பின்தொடர, இலங்கையின் (மேற்கிலுள்ள) புறநகர்ப் பகுதியான நிகும்பிலை என்னும் இடத்திற்குச் சென்றான். (2)

அங்கே வேள்விச்சாலையில், (பலி ஆடுகளைக் கட்டி வைப்பதற்கான) நூற்றுக்கணக்கான தூண்கள் விஸ்தாரமாக நடப்பட்டிருந்தன; தெய்வ வழிபாட்டிற்கான அழகான இடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தெய்விக ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அந்த வேள்விச்சாலையை அவன் பார்த்தான். (3)

அங்கே கருமான்தோல் அணிந்து, (பிரும்மசர்ய விரதத்திற்குரிய சின்னங்களான) கமண்டலு, சிகை, கொடி முதலியன தாங்கிக்கொண்டு, (அரக்க இயல்புக்கு மாறாக இருந்ததால்) பயங்கரமாகத் தோற்றமளிக்கும் தன் புத்திரன் மேகநாதனைக் கண்டான். இலங்கை வேந்தன், அவனை நெருங்கிச் சென்று கைகளால் கட்டியணைத்து, மார்புறத் தழுவி, ''மகனே! இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? உண்மையைக் கூறு'' என்று கேட்டான். (4,5)

(மேகநாதன், வேள்வி நியமங்களுக்கேற்ப மௌனமாக இருந்ததால்) பெருந்தவச்சீலரும் அந்தணோத்தமருமான குரு சுக்ராசார்யார், வேள்விப் பயனை முழுமையாகப் பெறுவதற்காக, அரக்கத் தலைவன் இராவணனுக்குத் தானே பதில் கூறினார். (நியமத்தை மீறி மேகநாதன் வாய்திறந்து பதில் சொல்லிவிட்டால், வேள்விப் பயன் குறைந்து போய்விடக் கூடும்.) (6)

Koviloor Digital Library

அஹமாக்$_2$யாமி தே ராஜஞ்ஶ்ரூயதாம் ஸர்வமேவ தத் ।
யக்ஞாஸ்தே ஸப்த புத்ரேண ப்ராப்தா: ஸுப$_3$ஹுவிஸ்தரா: ॥ (7)

அக்$_3$நிஷ்டோமோऽஶ்வமேத$_4$ஶ்ச யக்ஞோ ப$_3$ஹுஸுவர்ணக: ।
ராஜஸூயஸ்ததா$_2$ யக்ஞோ கோ$_3$மேதோ$_4$ வைஷ்ணவஸ்ததா$_2$ ॥ (8)

மாஹேஶ்வரே ப்ரவ்ருத்தே து யக்ஞே பும்பி$_4$: ஸுது$_3$ர்லபே$_4$ ।
வராம்ஸ்தே லப்$_3$த$_4$வாந் புத்ர: ஸாக்ஷாத் பஶுபதேரிஹ ॥ (9)

காமக$_3$ம் ஸ்யந்த$_3$நம் தி$_3$வ்யமந்தரிக்ஷசரம் த்$_4$ருவம் ।
மாயாம் ச தாமஸீம் நாம யயா ஸம்பத்$_3$யதே தம: ॥ (10)

ஏதயா கில ஸங்க்$_3$ராமே மாயயா ராக்ஷஸேஶ்வர ।
ப்ரயுக்தயா க$_3$தி: ஶக்யா ந ஹி க்ஞாதும் ஸுராஸுரை: ॥ (11)

அக்ஷயாவிஷுதீ$_4$ பா$_3$ணைஶ்சாபம் சாபி ஸுது$_3$ர்ஜயம் ।
அஸ்த்ரம் ச ப$_3$லவத்$_3$ராஜஞ்ஶத்ருவித்$_4$வம்ஸநம் ரணே ॥ (12)

ஏதாந் ஸர்வாந் வராந்(ல்)லப்$_3$த்$_4$வா புத்ரஸ்தேऽயம் த$_3$ஶாநந ।
அத்$_3$ய யக்ஞஸமாப்தௌ ச த்வாம் தி$_3$த்$_3$ருக்ஷு: ஸ்தி$_2$தோ ஹ்யஹம் ॥ (13)

ததோऽப்$_3$ரவீத்$_3$த$_3$ஶக்$_3$ரீவோ ந ஶோப$_4$நமித$_3$ம் க்ருதம் ।
பூஜிதா: ஶத்ரவோ யஸ்மாத்$_3$த்ரவ்யைரிந்த்$_3$ரபுரோக$_3$மா: ॥ (14)

ஏஹிதா$_3$நீம் க்ருதம் வித்$_3$தி$_4$ ஸுக்ருதம் தந்ந ஸம்ஶய: ।
ஆக$_3$ச்ச$_2$ ஸௌம்ய க$_3$ச்சா$_2$ம ஸ்வமேவ ப$_4$வநம் ப்ரதி ॥ (15)

ததோ க$_3$த்வா த$_3$ஶக்$_3$ரீவ: ஸபுத்ர: ஸவிபீ$_4$ஷண: ।
ஸ்த்ரியோऽவதாரயாமாஸ ஸர்வாஸ்தா பா$_3$ஷ்பக$_3$த்$_3$க$_3$தா$_3$: ॥ (16)

லக்ஷிண்யோ ரத்நபூ$_4$தாஶ்ச தே$_3$வதா$_3$நவரக்ஷஸாம் ।
தஸ்ய தாஸு மதிம் க்ஞாத்வா த$_4$ர்மாத்மா வாக்யமப்$_3$ரவீத் ॥ (17)

ஈத்$_3$ருஶைஸ்த்வம் ஸமாசாரைர்யஶோऽர்த$_2$குலநாஶநை: ।
த$_4$ர்ஷணம் ப்ராணிநாம் க்ஞாத்வா ஸ்வமதேந விசேஷ்டஸே ॥ (18)

க்ஞாதீம்ஸ்தாந் த$_4$ர்ஷயித்வேமாஸ்த்வயாநீதா வராங்க$_3$நா: ।
த்வாமதிக்ரம்ய மது$_4$நா ராஜந் கும்பீ$_4$நஸீ ஹ்ருதா ॥ (19)

ராவணஸ்த்வப்$_3$ரவீத்$_3$வாக்யம் நாவக$_3$ச்சா$_2$மி கிம் ந்வித$_3$ம் ।
கோऽயம் யஸ்து த்வயாக்$_2$யாதோ மது$_4$ரித்யேவ நாமத: ॥ (20)

விபீ$_4$ஷணஸ்து ஸங்க்ருத்$_3$தோ$_4$ ப்$_4$ராதரம் வாக்யமப்$_3$ரவீத் ।
ஶ்ரூயதாமஸ்ய பாபஸ்ய கர்மண: ப$_2$லமாக$_3$தம் ॥ (21)

Koviloor Digital Library

''மன்னரே! எல்லாவற்றையும் நானே கூறுகிறேன், கேளுங்கள். உங்கள் மைந்தனால் மகத்தான எழுவகை வேள்விகள் பெரிய அளவில் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. (7)

அக்னிஷ்டோமம், அசுவமேதம், பஹுஸுவர்ணகம், ராஜசூயம், கோமேதம் மற்றும் வைஷ்ணவம் ஆகிய வேள்விகள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. (8)

மனிதர்களால் செயற்கரியதான மாஹேச்வர வேள்வி செய்யத் தொடங்கியதும், சாட்சாத் மகாதேவன் இங்கே வந்து அநேக வரங்களை, உங்கள் மைந்தனுக்குக் கொடுத்தார். (9)

(மேலும்) ஆகாயத்தில் (யஜமானனின்) விருப்பம் போல் செல்லக்கூடிய தெய்விகத்தன்மை பொருந்திய ஒரு ரதத்தைப் பெற்றிருக்கிறான்; இருட்டை உண்டாக்கக்கூடிய தாமஸீ என்ற மாயவித்தையையும் பெற்றுள்ளான். (10)

அரக்கர் தலைவனே! போர்க்களத்தில் இந்த மாய சக்தியைப் பிரயோகித்தால், அதை உண்டாக்கியவன் இருக்குமிடத்தை தேவாசுரர்களாலும்கூட அறியவே முடியாது. (11)

வேந்தரே! எடுக்க எடுக்க அம்புகள் குறையாத அம்புறாத்தூணி, முறிக்க முடியாத வில், போரில் எதிரிகளை மாய்த்துக் குவிக்கும் அஸ்திரங்கள் – இவைகளையும் மேகநாதன் பெற்றுக் கொண்டுள்ளான். (12)

பத்துத் தலையரே! தங்களுடைய குமாரன் எவராலும் பெறுதற்கரிய வரங்களையும் மேன்மையான படைக்கலங்களையும் பெற்று, வேள்வியை முடிக்கும் தறுவாயில், தங்களைக் காணும் விருப்பத்துடன் நானும் இங்கே இருந்துகொண்டிருக்கிறேன்.'' (13)

இதைக் கேட்டதும் இராவணன், ''இங்கே நடைபெற்றது நல்லகாரியம் அல்ல. இந்திரன் முதலான நமது பகைவர்கள் (அவர்களது ஆற்றலை வளரச் செய்யும்) பொருள்களால் அவி அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு இருக்கிறார்கள்'' என்றான். (14)

''சரி. நடந்தது என்னவோ நல்லதுதான். அதில் ஐயமில்லை. போதும், வா. செல்வனே! நமது அரண்மனைக்குச் செல்வோம்.'' (15)

விபீஷணனுடனும் புதல்வனுடனும் சென்று, கண்களிலிருந்து நீர்வழிய பரிதாபமாகத் தோற்றமளித்த அந்த அபலைப் பெண்களை விமானத்திலிருந்து இறங்கச் செய்தான். (16)

அவர்கள் அனைவரும் பேரழகிகள்; தேவ–தானவ–அரக்கர் குலங்களின் இரத்தினம் போன்றவர்கள். அந்தப் பெண்களிடம் இராவணன் மோகம் கொண்டிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்ட தருமாத்மாவான விபீஷணன், (அவனை நோக்கி) பின்வருமாறு கூறினான்— (17)

''மாற்றான் மனைவிகளான இவர்களிடம் தகாத முறையில் வேட்கை கொள்வது, புகழ்–பொருள்–குலம் ஆகியவற்றை அழித்துவிடும். உறவினர்களை இவ்வாறு அவமானப்படுத்துவது நீதியல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள். அப்படியிருந்தும் உங்கள் இஷ்டப்படி (நியாய–அநியாயம் பார்க்காமல்) செயல்படுகிறீர்கள். (18)

உற்றார்–உறவினர்களை அடக்கிவிட்டு, மாதரசிகளான இவர்களைக் கவர்ந்து கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால், மன்னரே! (என்ன, பரிதாபம்!) உங்களை மீறிச்சென்று மது என்னும் அரக்கன் கும்பீநஸியைக் கவர்ந்து சென்றுவிட்டான்!'' (19)

இதைக் கேட்டதும் இராவணன் சொன்னான்— ''நீ என்ன சொல்லிக் கொண்டிருக்கிறாய் என்பதே எனக்கு விளங்கவில்லை. மது என்று ஏதோ பெயர் சொல்கிறாயே, அவன் யார்?'' (20)

விபீஷணன், மிகவும் கோபம் கொண்டு மூத்த சகோதரனைப் பார்த்துக் கூறினான்— ''கேளுங்கள், நீங்கள் செய்யும் இத்தகைய (பிற பெண்களைக் கவர்வது என்ற) பாவச் செயல்களின் பயன் கிடைத்துவிட்டது! (21)

Koviloor Digital Library

மாதாமஹஸ்ய யோऽஸ்மாகம் ஜ்யேஷ்டே2 ப்4ராதா ஸுமாலிந: ।
மால்யவாநிதி விக்2யாதோ வ்ருத்3த4: ப்ராக்ஞோ நிஶாசர: ॥ (22)

பிதா ஜ்யேஷ்டே2 ஜநந்யா நோ ஹ்யஸ்மாகம் சார்யகோऽப4வத் ।
தஸ்ய கும்பீ4நஸீ நாம து3ஹிதுர்து3ஹிதாப4வத் ॥ (23)

மாத்ருஷ்வஸுரதா2ஸ்மாகம் ஸா ச கந்யாநலோத்3ப4வா ।
ப4வத்யஸ்மாகமேவைஷா ப்4ராத்ரூணாம் த4ர்மத: ஸ்வஸா ॥ (24)

ஸா ஹ்ருதா மது4நா ராஜந் ராக்ஷஸேந ப3லீயஸா ।
யக்ஞப்ரவ்ருத்தே புத்ரே து மயி சாந்தர்ஜலோஷிதே ॥ (25)

கும்ப4கர்ணே மஹாராஜ நித்3ராமநுப4வத்யத2 ।
நிஹத்ய ராக்ஷஸஶ்ரேஷ்டா2நமாத்யாநிஹ ஸம்மதாந் ॥ (26)

த4ர்ஷயித்வா ஹ்ருதா ஸா து கு3ப்தாப்யந்த:புரே தவ ।
ஶ்ருத்வாபி தந்மஹாராஜ க்ஷாந்தமேவ ஹதோ ந ஸ: ॥ (27)

யஸ்மாத3வஶ்யம் தா3தவ்யா கந்யா ப4ர்த்ரே ஹி ப்4ராத்ருபி4: ।
ததே3தத் கர்மணோ ஹ்யஸ்ய ப2லம் பாபஸ்ய து3ர்மதே ॥
அஸ்மிந்நேவாபி4ஸம்ப்ராப்தம் லோகே விதி3தமஸ்து தே ॥ (28)

விபீ4ஷணவச: ஶ்ருத்வா ராக்ஷஸேந்த்3ர: ஸ ராவண: ।
தௌ3ராத்ம்யேநாத்மநோத்3தூ4தஸ்தப்தாம்பா4 இவ ஸாக3ர: ॥
ததோऽப்3ரவீத்3த3ஶக்3ரீவ: க்ருத்3த4: ஸம்ரக்தலோசந: ॥ (29)

கல்ப்யதாம் மே ரத2: ஶீக்4ரம் ஶூரா: ஸஜ்ஜீப4வந்து ந: ।
ப்4ராதா மே கும்ப4கர்ணஶ்ச யே ச முக்2யா நிஶாசரா: ॥
வாஹநாந்யதி4ரோஹந்து நாநாப்ரஹரணாயுதா4: ॥ (30)

அத்3ய தம் ஸமரே ஹத்வா மது4ம் ராவணநிர்ப4யம் ।
ஸுரலோகம் க3மிஷ்யாமி யுத்3தா4காங்க்ஷீ ஸுஹ்ருத்3வ்ருத: ॥ (31)

அக்ஷௌஹிணீஸஹஸ்ராணி சத்வார்யக்3ர்யாணி ரக்ஷஸாம் ।
நாநாப்ரஹரணாந்யாஶு நிர்யயுர்யுத்3த4காங்க்ஷிணாம் ॥ (32)

இந்த்3ரஜித்த்வக்3ரத: ஸைந்யாத் ஸைநிகாந் பரிக்3ருஹ்ய ச ।
ஜகா3ம ராவணோ மத்4யே கும்ப4கர்ணஶ்ச ப்ருஷ்ட2த: ॥
விபீ4ஷணஶ்ச த4ர்மாத்மா லங்காயாம் த4ர்மமாசரந் ॥ (33)

ஶேஷா: ஸர்வே மஹாபா4கா3 யயுர்மது4புரம் ப்ரதி ।
க2ரைருஷ்ட்ரைர்ஹயைர்தீ3ப்தை: ஶிம்ஶுமாரைர்மஹோரகை3: ॥ (34)

ராக்ஷஸா: ப்ரயயு: ஸர்வே க்ருத்வாகாஶம் நிரந்தரம் ।
தை3த்யாஶ்ச ஶதஶஸ்தத்ர க்ருதவைராஶ்ச தை3வதை: ॥
ராவணம் ப்ரேக்ஷ்ய க3ச்ச2ந்தமந்வக3ச்ச2ந் ஹி ப்ருஷ்ட2த: ॥ (35)

Koviloor Digital Library

நம்முடைய தாய்வழிப் பாட்டனாரின் மூத்த சகோதரர் மால்யவான் என்பவர் மிகவும் புகழ் பெற்றவர்; அறிவாளி; வயது முதிர்ந்த அரக்கர். அவர் நம்முடைய அன்னை கேகஸியின் பெரியப்பா. இந்த முறையில், அவர் நமக்கும் பாட்டனார் ஆகிறார். அவருடைய மகள் அநலா என்பவள், நமக்கு சித்தி (தாயாரின் சகோதரி) என்ற உறவினர். அவருடைய மகள்தான் கும்பீநஸி. (22,23)

நம்முடைய சித்தி அநலாவின் பெண் கும்பீநஸி, அறமுறைப்படி சகோதரர்கள் நம் எல்லோருக்கும் சகோதரி ஆகிறாள். (24)

மன்னரே! உங்கள் புதல்வன் நீண்ட காலம் வேள்வியில் ஈடுபட்டிருந்தான். நான், தண்ணீருக்குள் மூழ்கியிருந்தபடி தவம் செய்து கொண்டிருந்தேன். கும்பகர்ணன், சுகமான உறக்கத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் பேராற்றல் கொண்ட மது, கூடியிருந்த அரக்க வீரர்களைக் கொன்று, மற்றவர்களைப் பயமுறுத்திவிட்டு, தங்கள் அந்தப்புரத்தில் மறைவாக இருந்த அவளைப் பலாத்காரமாகக் கவர்ந்து சென்றுவிட்டான்! அதைக்கேட்ட பின்னரும் மற்ற அரக்கர்கள் அவனை மன்னித்துவிட்டார்களே தவிர, போர் செய்து அவனை மாய்க்கவில்லை. (25–27)

விவாகத்திற்குரிய பருவத்தை அடைந்துவிட்ட ஒரு பெண்ணை, தகுதியான கணவனுக்கு விவாகம் செய்து கொடுக்க வேண்டியது முதன்மையான கடமை. சகோதரர்களாகிய நாம் அதைச் செய்யவில்லை. கெடுமதி கொண்டவரே! அதற்குமாறாக, இவ்வித அநியாயச் செயல்களில் ஈடுபட்டதால், அதன் பயன் இவ்வாறு இந்த உலகிலேயே கிடைத்திருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.'' (28)

விபீஷணனின் சொற்களைக் கேட்ட இராவணன், அவனுடைய (மது என்ற அரக்கனுடைய) அக்கிரமச் செயல்களை நினைத்துக் கொதித்தான். கொதிக்கும் தண்ணீரைக் கொண்ட பெருங்கடல் போல் உஷ்ணமடைந்தான். கோபத்தால் கண்கள் சிவந்தன. ஏவலாளர்களிடம் கூறினான்— (29)

''என்னுடைய ரதத்தைக் கொண்டு வாருங்கள். நம்முடைய வீரர்கள் உடனே போருக்கு ஆயத்தமாக ஆயுதங்களை எடுத்துக் கொள்ளட்டும். சகோதரன் கும்பகர்ணனும் மற்றுமுள்ள முக்கியமான அரக்கர்களும் பல்வகையான படைக்கலங்களை எடுத்துக் கொண்டு வாகனங்களில் ஏறிக் கொள்ளட்டும். இராவணனிடம் பயம் இல்லாத மதுவைப் போரில் கொன்றுவிடப் போகிறேன். போரில் பெருவிருப்பமுடைய நான், நண்பர்களோடு (படைவீரர்களோடு)கூட தேவலோகம் நோக்கிச் செல்லப் போகிறேன்.'' (30,31)

போர் செய்வதில் பெருவிருப்பம் உடைய மாவீரர்களான நான்காயிரம் அக்குரோணிப் படையினர், பலவகையான அஸ்திர–சஸ்திரங்களை எடுத்துக்கொண்டு விரைவாக, இலங்கைக்கு வெளியே வந்தார்கள். படைவீரர்களில் ஒரு பகுதியினரைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு, முன்னணியில் சென்றான், இந்திரஜித். நடுவில் இராவணனும், பிற்பகுதியில் கும்பகர்ணனும் சென்றார்கள். அறநெறியாளனான விபீஷணன் இலங்கையில் தங்கி, அறக்கடன்களைச் செய்து கொண்டிருந்தான். (32,33)

(மாவீரர்களான மற்ற எல்லா அரக்கர்களும்) கழுதைகள், ஒட்டகங்கள், குதிரைகள், ஒளிவீசும் சிம்சுமாரங்கள் மற்றும் பெரிய பெரிய சர்ப்பங்கள் ஆகியவற்றில் ஏறிக்கொண்டு, மதுவினுடைய நகரத்தை நோக்கிச் சென்றார்கள். (34)

எல்லா அரக்கர்களும் ஆகாயத்தை அடைத்துக் கொண்டு சென்றார்கள். அசுரர்களுக்குத் தேவர்களிடம் தீராத பகைமை இருந்து வந்தது. அதனால், தேவலோகத்தின் மேல் படையெடுக்கச் செல்லும் இராவணனைப் பார்த்ததும் நூற்றுக்கணக்கான அசுரர்கள், அவனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். (35)

Koviloor Digital Library

ஸ து க$_3$த்வா மது$_4$புரம் ப்ரவிஶ்ய ச த$_3$ஶாநந: ।
ந த$_3$த$_3$ர்ஶ மது$_4$ம் தத்ர ப$_4$கி$_3$நீம் தத்ர த்$_3$ருஷ்டவாந் ॥ (36)

ஸா ச ப்ரஹ்வாஞ்ஜலிர்பூ$_4$த்வா ஶிரஸா சரணௌ க$_3$தா ।
தஸ்ய ராக்ஷஸராஜஸ்ய த்ரஸ்தா கும்பீ$_4$நஸீ ததா$_3$ ॥ (37)

தாம் ஸமுத்தா$_2$பயாமாஸ ந பே$_4$தவ்யமிதி ப்$_3$ருவந் ।
ராவணோ ராக்ஷஸஶ்ரேஷ்ட$_2$: கிம் சாபி கரவாணி தே ॥ (38)

ஸாப்$_3$ரவீத்$_3$யதி$_3$ மே ராஜந் ப்ரஸந்நஸ்த்வம் மஹாபு$_4$ஜ ।
ப$_4$ர்தாரம் ந மமேஹாத்$_3$ய ஹந்துமர்ஹஸி மாநத$_3$ ॥ (39)

ந ஹீத்$_3$ருஶம் ப$_4$யம் கிஞ்சித் குலஸ்த்ரீணாமிஹோச்யதே ।
ப$_4$யாநாமபி ஸர்வேஷாம் வைத$_4$வ்யம் வ்யஸநம் மஹத் ॥ (40)

ஸத்யவாக்$_3$ப$_4$வ ராஜேந்த்$_3$ர மாமவேக்ஷஸ்வ யாசதீம் ।
த்வயாப்யுக்தம் மஹாராஜ ந பே$_4$தவ்யமிதி ஸ்வயம் ॥ (41)

ராவணஸ்த்வப்$_3$ரீத்$_3$த்$_4$ருஷ்ட: ஸ்வஸாரம் தத்ர ஸம்ஸ்தி$_2$தாம் ।
க்வ சாஸௌ தவ ப$_4$ர்தா வை மம ஶீக்$_3$ரம் நிவேத்$_3$யதாம் ॥ (42)

ஸஹ தேந க$_3$மிஷ்யாமி ஸுரலோகம் ஜயாய ஹி ।
தவ காருண்யஸௌஹார்தா$_3$ந்நிவ்ருத்தோऽஸ்மி மதே$_4$ார்வதா$_4$த் ॥ (43)

இத்யுக்தா ஸா ஸமுத்தா$_2$ப்ய ப்ரஸுப்தம் தம் நிஶாசரம் ।
அப்$_3$ரவீத் ஸம்ப்ரஹ்ருஷ்டேவ ராக்ஷஸீ ஸா பதிம் வச: ॥ (44)

ஏஷ ப்ராப்தோ த$_3$ஶக்$_3$ரீவோ மம ப்$_4$ராதா மஹாப$_3$ல: ।
ஸுரலோகஜயாகாங்க்ஷீ ஸாஹாய்யே த்வாம் வ்ருணோதி ச ॥ (45)

தத$_3$ஸ்ய த்வம் ஸஹாயார்த$_2$ம் ஸப$_3$ந்து$_4$ர்க$_3$ச்ச$_2$ ராக்ஷஸ ।
ஸ்நிக்$_3$த$_4$ஸ்ய ப$_4$ஜமாநஸ்ய யுக்தமர்தா$_2$ய கல்பிதும் ॥ (46)

தஸ்யாஸ்தத்$_3$வசநம் ஶ்ருத்வா ததே$_2$த்யாஹ மது$_4$ர்வச: ॥ (47)

த$_3$த$_3$ர்ஶ ராக்ஷஸஶ்ரேஷ்ட$_2$ம் யதா$_2$ந்யாய்யமுபேத்ய ஸ: ।
பூஜயாமாஸ த$_4$ர்மேண ராவணம் ராக்ஷஸாதி$_4$பம் ॥ (48)

ப்ராப்ய பூஜாம் த$_3$ஶக்$_3$ரீவோ மது$_4$வேஶ்மநி வீர்யவாந் ।
தத்ர சைகாம் நிஶாமுஷ்ய க$_3$மநாயோபசக்ரமே ॥ (49)

தத: கைலாஸமாஸாத்$_3$ய ஶைலம் வைஶ்ரவணாலயம் ।
ராக்ஷஸேந்த்$_3$ரோ மஹேந்த்$_3$ராப$_4$: ஸேநாமுபநிவேஶயத் ॥ (50)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ பஞ்சவிம்ஶ: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

இராவணன், மதுபுரத்தை அடைந்து உள்ளே சென்றான். அங்கே மதுவைக் காணவில்லை; சகோதரி மட்டும் காணப்பட்டாள். (36)

அரக்க மன்னனைக் கண்டு மிகவும் அச்சங்கொண்ட கும்பீநஸி, மிகவும் வணக்கத்துடன் கைகூப்பிக் கொண்டு, அவன் பாதங்களில் தன் தலையை வைத்து வணங்கினாள். (37)

'பயப்படாதே' என்று சொல்லியவண்ணம் அவளைத் தூக்கி நிறுத்தினான், இராவணன். அரக்கர்களுள் சிறந்தவனான இராவணன், ''நான் உனக்கு எவ்வகையில் உதவி புரிய வேண்டும்!'' என்று கேட்டான். (38)

''மன்னரே! தோள்வலி மிக்கவரே! பிறரைக் கௌரவிப்பவரே! என்னிடம் உங்களுக்கு அன்பு இருப்பது உண்மையானால், என்னுடைய கணவரை நீங்கள் இப்போது கொல்லக்கூடாது. (39)

நல்ல குலத்தில் பிறந்த பெண்களுக்கு எல்லாவற்றைக் காட்டிலும் கைம்பெண் நிலை மிகவும் சோகத்தைத் தரக்கூடியது. (40)

மன்னர் மன்னரே! மன்றாடிக் கேட்டுக் கொண்டிருக்கும் என்னைப் பாருங்கள். நீங்கள், என்னைப் பார்த்து, 'பயப்படாதே' என்று சொன்னீர்களே, அதைச் சத்தியவாக்காகச் செய்யுங்கள்.'' (41)

மனமகிழ்ச்சியடைந்த இராவணன், தன் எதிரே நிற்கும் சகோதரியைப் பார்த்து, ''உன்னுடைய கணவர் எங்கே இருக்கிறார்? என்பதை உடனே சொல்'' என்றான். (42)

நான், அவரையும் அழைத்துக் கொண்டு, தேவலோகத்தை வென்று, (அதைக்) கைப்பற்றிக் கொள்வதற்காகச் செல்வேன். உன்னிடம் ஏற்பட்டுள்ள இரக்கத்தினாலும் பாசத்தினாலும் மதுவைக் கொல்வது என்ற எண்ணத்தை விட்டுவிட்டேன்.'' (43)

இராவணன், இவ்வாறு கூறியதைக் கேட்டதும் கும்பீநஸி மிகவும் களிப்புற்றாள். உறங்கிக் கொண்டிருந்த தன் கணவனை எழுப்பி, (பின்வருமாறு) சொன்னாள்— (44)

''பேராற்றல் கொண்ட என் சகோதரர் இராவணன் இங்கே வந்திருக்கிறார். தேவலோகத்தை ஜெயிக்க விரும்பும் அவர், உங்கள் உதவியைக் கோருகிறார். (45)

அரக்கரே! தாங்கள் உற்றார்–உறவினர்களோடுகூட அவருக்குத் துணையாகச் செல்லுங்கள். அவர் என் பொருட்டு, தங்களிடம் அன்பும் கௌரவமும் வைத்துள்ளார்''. (46)

அவளுடைய சொற்களைக் கேட்ட மது, ''சரி, அப்படியே ஆகட்டும்!'' என்றான். (47)

பின்னர், அவன் முறைப்படி, தானே இராவணனைக் காணச் சென்றான். அரக்க மன்னனான இராவணனை அறநெறிக்குகந்த முறையில் வரவேற்றான். (48)

முறையான வரவேற்பைப் பெற்றுக் கொண்ட இராவணன், மதுவினுடைய அரண்மனையில் ஓர் இரவைக் கழித்துவிட்டு, பயணத்தைத் தொடர்வதற்கு ஆயத்தமானான். (49)

தேவேந்திரனுக்கு நிகரான பராக்கிரமம் கொண்ட அரக்க மன்னன், கைலாச மலைப்பகுதியை அடைந்து, குபேரன் வசிக்குமிடம் சென்று, அங்கே தன் படைகளின் பாசறையை அமைத்தான். (50)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இருபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஷட்$_3$விம்ஶ: ஸர்க$_3$:

நளகூப$_3$ரஶாப:

ஸ து தத்ர த$_3$ஶக்$_3$ரீவ: ஸஹ ஸைந்யேந வீர்யவாந் ।
அஸ்தம் ப்ராப்தே தி$_3$நகரே நிவாஸம் ஸமரோசயத் ॥ (1)

உதி$_3$தே விமலே சந்த்$_3$ரே துல்யபர்வதவர்சஸி ।
ப்ரஸுப்தம் ஸுமஹத் ஸைந்யம் நாநாப்ரஹரணாயுத$_4$ம் ॥ (2)

ராவணஸ்து மஹாவீர்யோ நிஷண்ண: ஶைலமூர்த$_4$நி ।
ஸ த$_3$த$_3$ர்ஶ கு$_3$ணாந்ஸ்தத்ர சந்த்$_3$ரபாத$_3$ஸுஶோபி$_4$தாந் ॥ (3)

கர்ணிகாரவநைர்தீ$_3$ப்தை: கத$_3$ம்ப$_3$க$_3$ஹநைஸ்தத$_2$ா ।
பத்$_3$மிநீபி$_4$ஶ்ச பு$_2$ல்லாபி$_4$ர்மந்தா$_3$கிந்யா ஜலைரபி ॥ (4)

சம்பகாஶோகபுந்நாக$_3$மந்தா$_3$ரதருபி$_4$ஸ்தத$_2$ா ।
சூதபாடலலோத்$_4$ரைஶ்ச ப்ரியங்க்$_3$வர்ஜுநகேதகை: ॥ (5)

தக$_3$ரைர்நாரிகேலைஶ்ச ப்ரியாலபநஸைஸ்தத$_2$ா ।
ஆரக்$_3$வதை$_4$ஸ்தமாலைஶ்ச ப்ரியாலப$_3$குளைரபி ॥
ஏதைரந்யைஶ்ச தருபி$_4$ருத்$_3$ப$_4$ாஸிதவநாந்தரே ॥ (6)

கிந்நரா மத$_3$நேநார்தா ரக்தா மது$_4$ரகண்டி$_2$ந: ।
ஸமம் ஸம்ப்ரஜகு$_3$ர்யத்ர மநஸ்துஷ்டிவிவர்த$_4$நம் ॥ (7)

வித்$_3$யாத$_4$ரா மத$_3$க்ஷீப$_3$ா மத$_3$ரக்தாந்தலோசநா: ।
யோஷித்$_3$பி$_4$: ஸஹ ஸங்க்ராந்தாஶ்சிக்ரீடு$_3$ர்ஜஹ்ருஷுஶ்ச வை ॥ (8)

க$_4$ண்டாநாமிவ ஸந்நாத$_3$: ஶுஶ்ருவே மது$_4$ரஸ்வர: ।
அப்ஸரோக$_3$ணஸங்க$_4$ாநாம் க$_3$ாயதாம் த$_4$நதா$_3$லயே ॥ (9)

புஷ்பவர்ஷாணி முஞ்சந்தோ நக$_3$ா: பவநதாடி$_3$தா: ।
ஶைலம் தம் வாஸயந்தீவ மது$_4$மாத$_4$வக$_3$ந்தி$_4$ந: ॥ (10)

மது$_4$புஷ்பரஜ:ப்ருக்தம் க$_3$ந்த$_4$மாதா$_3$ய புஷ்கலம் ।
ப்ரவவௌ வர்த$_4$யந் காமம் ராவணஸ்ய ஸுகே$_2$ாऽநில: ॥ (11)

கே$_3$யாத் புஷ்பஸம்ருத்$_3$த்$_4$யா ச ஶைத்யாத்$_3$வாயோர்கி$_3$ரேர்கு$_3$ணாத் ।
ப்ரவ்ருத்தாயாம் ரஜந்யாம் ச சந்த்$_3$ரஸ்யோத$_3$யநேந ச ॥ (12)

ராவண: ஸுமஹாவீர்ய: காமஸ்ய வஶமாக$_3$த: ।
விநிஶ்வஸ்ய விநிஶ்வஸ்ய ஶஶிநம் ஸமவைக்ஷத ॥ (13)

ஏதஸ்மிந்நந்தரே தத்ர தி$_3$வ்யாப$_4$ரணபூ$_4$ஷிதா ।
ஸர்வாப்ஸரோவரா ரம்ப$_4$ா தி$_3$வ்யபுஷ்பவிபூ$_4$ஷிதா ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : இருபத்தாறு

நளகூபரன் சாபம் கொடுத்தல்

சூரியன் மேற்கு மலையில் வீழ்ந்து மறைந்ததும், கைலாச பர்வதத்திலேயே படைகளைத் தங்கச் செய்து, அன்றிரவைக் கழிப்பது என்று இராவணன் தீர்மானித்தான். (1)

கைலாச மலை போலவே வெண்மையாக விளங்கிய சந்திரன் உதயமானான். பலவகையான அஸ்திர–சஸ்திரங்களை வைத்திருந்த அந்த மாபெரும் படை, ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கியது. (2)

ஆனால், பேராற்றல் கொண்ட இராவணன் மலைச்சிகரத்தின்மேல் மௌனமாக இருந்து கொண்டு, சந்திர ஒளியில் பேரழகுடன் விளங்கும் மலைப்பகுதிகளைக் கண்டு அனுபவித்துக் கொண்டிருந்தான். (3)

ஒருபுறத்தில் சரக்கொன்றை மண்டிக் கிடந்தது; வேறொரு புறத்தில் அடர்த்தியாகக் கதம்பம் காணப்பட்டது; மந்தாகினி நதியின் நீர் நிரம்பிய தடாகங்களில் தாமரைகள் பூத்துக் குலுங்கின; சண்பகம், அசோகம், புன்னாகம், மந்தாரம் முதலான மரங்களும் மா, பாதிரி, லோத்ரம், பிரியங்கு, மருதம், தாழை, தகரம், தென்னை, பிரியாலம், பலா, ஆரக்வதம், தமாலம், மகிழம் முதலிய மரங்களும் மற்றும் பலவகையான மரங்களும் தத்தம் மலர்களால் அவ்விடத்தை மிகவும் கவர்ச்சிகரமாக ஆக்கிக் கொண்டிருந்தன. (4–6)

இனிய குரல் படைத்த கின்னரர்கள் மன்மதனால் ஆட்கொள்ளப்பட்டவர்களாக, காமத்தை வெளிப்படுத்தும் பாடல்களைத் தம்முடைய காமினிகளுடன் சேர்ந்து இசைத்தது, கேட்போரின் மனமகிழ்ச்சியை வளர்ப்பதாக இருந்தது. (7)

வித்யாதரர்கள் காமப் பித்தர்களாகிவிட்டிருந்ததால், அவர்களுடைய கண் இமைகளில் செம்மை படர்ந்திருந்தது. அவர்கள் இளம்பெண்களோடு உல்லாசமாக விளையாடிக் கொண்டு ஆனந்தத்தில் மூழ்கியிருந்தார்கள். (8)

குபேரனின் மாளிகையில் பாடிக்கொண்டிருந்த அப்சரப் பெண்களின் இனிமையான குரல், கண்டாமணியின் நாதம் போல் செவியில் விழுந்தது. (9)

எல்லாக் காலமும் வசந்தகாலம் போல் விளங்கியதால், மரங்கள் கொத்துக் கொத்தாகப் பூத்துக் குலுங்கின. வேகமாகக் காற்று வீசும்போது மலர்கள் உதிர்ந்து, அந்த மலையையே மணமிக்கதாகச் செய்து கொண்டிருந்தன. (10)

பல்வகையான மலர்களின் இனிய மகரந்த ரசமும் துகள்களும் கலந்து, மிகவும் மணத்தைச் சுமந்துகொண்டு, மெல்ல மெல்ல உடலைத் தழுவிச் செல்லும் நறுமணக் காற்று, இராவணனுடைய காமவேட்கையை வளரச் செய்தது. (11)

இசையின் இனிய கவர்ச்சி, பலவிதமான மலர்களின் குவியல்கள், தென்றல் காற்றின் தழுவுதல், மலைச்சிகரங்களின் வசீகரம், (காமவேதனையைத் தூண்டிவிடும்) இரவுப்பொழுது, சந்திரோதயம் – இவைகளால், காமவசப்பட்ட மாவீரனான இராவணன், அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டு, (மனத்தவிப்புடன்) சந்திரனைப் பார்த்துப் பார்த்து உருகினான். (12,13)

இவ்வாறிருக்கையில், அப்சரப் பெண்டிர் அனைவரிலும் மிக அழகான, முழு நிலவு போன்ற முகத்தோடு கூடிய, தெய்விகமான ஆடை–அணிகலன்கள் அணிந்து சோபையுடன் விளங்கிய ரம்பை என்பவள் அங்கே தென்பட்டாள். (14)

Koviloor Digital Library

தி$_3$வ்யசந்த$_3$நலிப்தாங்கீ$_3$ மந்த$_3$ாரக்ருதமூர்த$_4$ஜா ।
தி$_3$வ்யோத்ஸவக்ருதாரம்ப$_4$ா பூர்ணசந்த்$_3$ரநிப$_4$ாநநா ॥ (15)

சக்ஷுர்மநோஹரம் பீநம் மேக$_2$லாத$_3$ாமபூ$_4$ஷிதம் ।
ஸமுத்$_3$வஹந்தீ ஜக$_4$நம் ரதிப்ராப்$_4$ருதமுத்தமம் ॥ (16)

க்ருதைர்விஶேஷகைரார்த்$_3$ரை: ஷட$_3$ர்துகுஸுமோத்$_3$ப$_4$வை: ।
ப$_3$ப$_4$ாவந்யதமேவ ஸ்ரீ: காந்திஸ்ரீத்$_3$யுதிகீர்திபி$_4$: ॥ (17)

நீலம் ஸதோயமேக$_4$ாப$_4$ம் வஸ்த்ரம் ஸமவகு$_3$ண்டி$_2$தா ।
யஸ்யா வக்த்ரம் ஶஶிநிப$_4$ம் ப்$_4$ருவெள சாபநிபே$_4$ ஶுபே$_4$ ॥ (18)

ஊரூ கரிகராகாரெள கரெள பல்லவகோமலெள ।
ஸைந்யமத்$_4$யேந க$_3$ச்ச$_2$ந்தீ ராவணேநோபவீக்ஷிதா ॥ (19)

தாம் ஸமுத்த$_2$ாய க$_3$ச்ச$_2$ந்தீம் காமப$_3$ாணவஶம் க$_3$த: ।
கரே க்$_3$ருஹீத்வா லஜ்ஜந்தீம் ஸ்மயமாநோऽப்$_4$யப$_4$ாஷத ॥ (20)

க்வ க$_3$ச்ச$_2$ஸி வராரோஹே காம் ஸித்$_3$தி$_4$ம் ப$_4$ஜஸே ஸ்வயம் ।
கஸ்யாப்$_4$யுத$_3$யகாலோऽயம் யஸ்த்வாம் ஸமுபபே$_4$ாக்ஷ்யதே ॥ (21)

த்வத$_3$ாநநரஸஸ்யாத்$_3$ய பத்$_3$மோத்பலஸுக$_3$ந்தி$_4$ந: ।
ஸுத$_4$ாம்ருதரஸஸ்யேவ கோऽத்$_3$ய த்ருப்திம் க$_3$மிஷ்யதி ॥ (22)

ஸ்வர்ணகும்ப$_4$நிபெ$_4$ள பீநெள ஶுபெ$_4$ள பீ$_4$ரு நிரந்தரெள ।
கஸ்யோரஸ்ஸ்தலஸம்ஸ்பர்ஶம் த$_3$ாஸ்யதஸ்தே குசாவிமெள ॥ (23)

ஸுவர்ணசக்ரப்ரதிமம் ஸ்வர்ணத$_3$ாமாசிதம் ப்ருது$_2$ ।
அத்$_4$யாரோஹதி கஸ்தேऽத்$_3$ய ஜக$_4$நம் ஸ்வர்க$_3$ரூபிணம் ॥ (24)

மத்$_3$விஶிஷ்ட: புமாந் கோऽத்$_3$ய ஶக்ரோ விஷ்ணுரத$_2$ாऽஶ்விநெள ।
மாமதீத்ய ஹி யம் ச த்வம் யாஸி பீ$_4$ரு ந ஶோப$_4$நம் ॥ (25)

விஶ்ரம த்வம் ப்ருது$_2$ஶ்ரோணி ஶிலாதலமித$_3$ம் ஶுப$_4$ம் ।
த்ரைலோக்யே ய: ப்ரபு$_4$ஶ்சைவ மத$_3$ந்யோ நைவ வித்$_3$யதே ॥ (26)

ததே$_3$வம் ப்ராஞ்ஜலி: ப்ரஹ்வோ யாசதே த்வாம் த$_3$ஶாநந: ।
ப$_4$ர்துர்ப$_4$ர்தா வித$_4$ாதா ச த்ரைலோக்யஸ்ய ப$_4$ஜஸ்வ மாம் ॥ (27)

ஏவமுக்தாப்$_3$ரவீத்$_3$ரம்ப$_4$ா வேபமாநா க்ருதாஞ்ஜலி: ।
ப்ரஸீத$_3$ நார்ஹஸே வக்துமீத்$_3$ருஶம் த்வம் ஹி மே கு$_3$ரு: ॥ (28)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_12_Back

Koviloor Digital Library

அவள், உடல் அங்கங்களில் தேவலோக சந்தனங்கள் பூசியிருந்தாள். கூந்தலில், தேவலோக மலர்களைச் சூடியிருந்தாள். தான் விரும்பும் ஆடவனுடன் கூடி மகிழும் இனிய நிகழ்வுக்காகப் போய்க் கொண்டிருந்தாள். மனங்கவரும் கண்களுடன், உயர்ந்து விளங்கிய புட்டப் பகுதியில் மேகலையும் மலர்மாலைகளும் அணிந்து இன்பக்கேளிக்கைக்குத் தன் காணிக்கையைச் செலுத்திக் கொண்டிருந்தாள். (15,16)

கன்னம் முதலான உடற்பகுதிகளில், ஹரிசந்தனக் குழம்பினால் கண்கவர் சித்திரங்கள் வரையப்பட்டிருந்தன; ஆறு பருவ காலங்களிலும் தோன்றும் பலவகையான புத்தம்புதிய மலர்களாலான மாலைகளை அணிந்திருந்தாள். தன்னுடைய உருவ ஒளி, செழிப்பு, உடல்வண்ணம் மற்றும் பெரும் புகழினால் இன்னொரு திருமகளைப் போல் விளங்கினாள். அவளுடைய முகம், முழு நிலவைப் போல் பிரகாசமாக இருந்தது; வில் போன்ற புருவங்கள்; நீருண்ட கார்முகில் போன்ற நீலவண்ண ஆடையால் தன் உடலை மூடியிருந்தாள். (17,18)

அவளுடைய தொடைகள், யானையின் துதிக்கை போல் இருந்தன; (கொடி போன்ற உடலில்) கைகள், இளந்தளிர்கள் போன்று மிருதுவாக இருந்தன. உறங்கிக் கொண்டிருந்த படைவீரர்களைக் கடந்து அவள் சென்று கொண்டிருந்தபோது, இராவணன் அவளைப் பார்த்துவிட்டான். (19)

அவளைக் கண்டவுடனேயே காமதேவனுடைய கணைகளுக்கு இரையாகிப் போன அவன், வேறு எங்கோ சென்று கொண்டிருந்த அவளைத் தடுத்து, கையைப் பிடித்து நிறுத்தி, வெட்கத்தால் தவிக்கும் அவளைப் பார்த்துப் புன்முறுவல் செய்து கூறினான்— (20)

''மாதர் குல மாணிக்கமே! எங்கே போய்க் கொண்டிருக்கிறாய்? எவருடைய காமவேட்கையைத் தணிப்பதற்காக நீயே அவ்விடம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாய்? உன்னைக் கூடிக்களிக்கும் பெரும் பாக்கிய நேரம், எவனுக்குத் தோன்றியிருக்கிறது? (21)

உன்னுடைய முகத்தில் தாமரை, ஆம்பல் மலர்களின் நறுமணம் வீசுகிறது; உதடுகளில் அமுத தாரை பொழிகிறது. இன்று, இந்த அமுதத் துளிகளைச் சுவைத்து மனநிறைவு அடையப் போகிறவன், யார்? (22)

அச்சங்கொண்டிருப்பவளே! தங்கக்குடம் போன்றவைகளும், ஒன்றோடொன்று உரசினாற்போல் இடைவெளி இல்லாமல் புடைத்து விளங்குபவைகளுமான உன் மார்பகங்கள், எவனுடைய மார்புடன் இணையப் போகின்றன? (23)

பொன் அணிகளால் இழைக்கப்பட்டதும், பொற்சக்கரம் போல் விசாலமாக, நிமிர்ந்து விளங்குவதுமான உன் இடையின் பிற்பகுதிகள் என்னும் சுவர்க்கலோகத்தை அடைந்து, குறைவிலாத இன்பத்தை அனுபவிக்கப் போகிறவன், யார்? இப்போது, என்னைக் காட்டிலும் மேலானவர் – இந்திரன், உபேந்திரன், அசுவிநீதேவர்கள் உட்பட – வேறு யார் இருக்கிறார்கள்? நங்காய்! (எல்லையற்ற பெருமை வாய்ந்த) என்னைக் கண்டுகொள்ளாமல், வேறு எங்கோ போய்க் கொண்டிருக்கிறாயே? இது, உனக்குத் தகுந்ததல்ல. (24,25)

பின்பகுதி பெருத்த இடையினளே! சுகமான இந்தப் பாறையின்மீது அமர்ந்து, சற்று களைப்பாறு. மூவுலகங்களுக்கும் தலைவனாக, என்னைக் காட்டிலும் வேறொருவன் காணப்படவேயில்லை. பத்துத் தலைகள் கொண்ட இராவணனாகிய நான் – மூன்று உலகங்களுக்கும் தலைவன்; பிராணிகளின் விதியை நிர்ணயிப்பவன். ஆனால் – இப்போது கைகூப்பி உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், என்னை ஏற்றுக்கொள்.'' (26,27)

இதைக் கேட்ட ரம்பை, உடல் நடுங்க கைகளைக் கூப்பிக் கொண்டு, ''தாங்கள் என் ஆசார்யரை (மாமனாரை)ப் போல் வணக்கத்திற்குரியவர். தங்கள் வாயிலிருந்து இத்தகைய சொற்கள் வரக்கூடாது. கருணை காட்டுங்கள்'' என்று வேண்டினாள். (28)

Koviloor Digital Library

அந்யேப்$_4$யோ ஹி த்வயா ரக்ஷ்யா ப்ராப்நுயாம் த$_4$ர்ஷணம் யதி$_3$ ।
தத்$_3$த$_4$ர்மத: ஸ்நுஷா தேऽஹம் தத்த்வமேவ ப்$_3$ரவீமி தே ॥ (29)

அத$_2$ாப்$_3$ரவீத்$_3$த$_3$ஶக்$_3$ரீவஶ்சரணாதே$_4$ாமுகீம் ஸ்தி$_2$தாம் ।
ரோமஹர்ஷமநுப்ராப்தாம் த்$_3$ருஷ்டமாத்ரேண தாம் தத$_3$ா ॥ (30)

ஸுதஸ்ய யதி$_3$ மே ப$_4$ார்யா ததஸ்த்வம் ஹி ஸ்நுஷா ப$_4$வே: ।
ப$_3$ாட$_4$மித்யேவ ஸா ரம்ப$_4$ா ப்ராஹ ராவணமுத்தரம் ॥ (31)

த$_4$ர்மதஸ்தே ஸுதஸ்யாஹம் ப$_4$ார்யா ராக்ஷஸபுங்க$_3$வ ।
புத்ர: ப்ரியதர: ப்ராணைர்ப்$_4$ராதுர்வைஶ்ரவணஸ்ய தே ॥ (32)

விக்$_2$யாதஸ்த்ரிஷு லோகேஷு நளகூப$_3$ர இத்யயம் ।
த$_4$ர்மதோ யோ ப$_4$வேத்$_3$விப்ர: க்ஷத்ரியோ வீர்யதோ ப$_4$வேத் ॥ (33)

க்ரோத$_4$ாத்$_3$யஶ்ச ப$_4$வேத$_3$க்$_3$நி: க்ஷாந்த்யா ச வஸுத$_4$ாஸம: ।
தஸ்யாஸ்மி க்ருதஸங்கேதா லோகபாலஸுதஸ்ய வை ॥ (34)

தமுத்$_3$தி$_3$ஶ்ய து மே ஸர்வம் விபூ$_4$ஷணமித$_3$ம் க்ருதம் ।
தத$_2$ா தஸ்ய ஹி நாந்யஸ்ய ப$_4$ாவோ மாம் ப்ரதி திஷ்ட$_2$தி ॥ (35)
தேந ஸத்யேந மாம் ராஜந் மோக்துமர்ஹஸ்யரிந்த$_3$ம ।
ஸ ஹி திஷ்ட$_2$தி த$_4$ர்மாத்மா மாம் ப்ரதீக்ஷந் ஸமுத்ஸுக: ॥ (36)

தத்ர விக்$_4$நம் ஸுதஸ்யேஹ கர்தும் நார்ஹஸி முஞ்ச மாம் ।
ஸத்$_3$பி$_4$ராசரிதம் மார்க$_3$ம் க$_3$ச்ச$_2$ ராக்ஷஸபுங்க$_3$வ ॥
மாநநீயோ மம த்வம் ஹி பாலநீயா தத$_2$ாஸ்மி தே ॥ (37)

ஏவமுக்தோ த$_3$ஶக்$_3$ரீவ: ப்ரத்யுவாச விநீதவத் ।
ஸ்நுஷாஸ்மி யத$_3$வோசஸ்த்வமேகபத்நீஷ்வயம் க்ரம: ॥ (38)

தே$_3$வலோகஸ்தி$_2$திரியம் ஸுராணாம் ஶாஶ்வதீ மதா ।
பதிரப்ஸரஸாம் நாஸ்தி ந சைகஸ்த்ரீபரிக்$_3$ரஹ: ॥ (39)

ஏவமுக்த்வா ஸ தாம் ரக்ஷோ நிவேஶ்ய ச ஶிலாதலே ।
காமபே$_4$ாக$_3$ாபி$_4$ஸம்ஸக்தோ மைது$_2$நாயோபசக்ரமே ॥ (40)

ஸா விமுக்தா ததோ ரம்ப$_4$ா ப்$_4$ரஷ்டமால்யவிபூ$_4$ஷணா ।
க$_3$ஜேந்த்$_3$ராக்ரீட$_3$மதிதா நதீ$_3$வாகுலதாம் க$_3$தா ॥ (41)

லுலிதாகுலகேஶாந்தா கரவேபிதபல்லவா ।
பவநேநாவதூ$_4$தேவ லதா குஸுமஶாலிநீ ॥ (42)

ஸா வேபமாநா லஜ்ஜந்தீ பீ$_4$தா கரக்ருதாஞ்ஜலி: ।
நளகூப$_3$ரமாஸாத்$_3$ய பாத$_3$யோர்நிபபாத ஹ ॥ (43)

Koviloor Digital Library

''இவ்வாறு வேறு ஆடவர் என்னைப் பயமுறுத்தினால், அவரிடமிருந்து என்னைக் காப்பாற்ற வேண்டியவர், தாங்கள். (தாங்களே என்னைப் பலவந்தப்படுத்தினால், யாரிடம் சென்று முறையிடுவேன்?) அறநெறிகளின்படி பார்த்தால், நான் தங்கள் மருமகள். ஆமாம், உண்மையைத்தான் சொல்கிறேன்.'' (29)

தலையைக் குனிந்து கால்களையே பார்த்துக் கொண்டிருந்தவளும், இராவணனுடைய பார்வை பட்ட மாத்திரத்தில் அச்சத்தால் உரோமச் சிலிர்ப்பை அடைந்திருந்தவளுமான, அவளைப் பார்த்து இராவணன் சொன்னான்— (30)

''என்னுடைய மகனுக்கு நீ மனைவியானால், எனக்கு மருமகள்தான்.'' ''அது சரியே'' என்று சொல்லிவிட்டு ரம்பை, இராவணனுக்குப் பதில் கூறினாள்— (31)

''அரக்கர் மாணிக்கமே! அறநூல்களில் கூறப்பட்டுள்ள விதிகளின்படி பார்த்தால், நான் தங்கள் புதல்வனின் மனைவிதான்! தங்கள் சகோதரர் குபேரனுடைய மைந்தர் எனக்கு, என் உயிரைக் காட்டிலும் அன்புக்குரியவர். அவர், நளகூபரன் என்ற பெயரால் மூன்று உலகங்களிலும் பெயர் பெற்றவர்; அறநெறிகளைக் கடைப்பிடிப்பதில் அந்தணர் போன்றவர்; வீரத்தில் க்ஷத்திரியனுக்கு நிகரானவர். (32,33)

அவர் கோபம் கொண்டால் அக்னியைப் போல் பொசுக்கிவிடுவார். பொறுமையிலோ பூதேவிக்கு இணையானவர்! திசைக்காவலரின் திருக்குமாரரான அவரை, நான் இன்று சந்திப்பதாகத் தகவல் கொடுத்திருக்கிறேன். அவருக்காகவே நான் இவ்வளவு அலங்காரங்கள் செய்து கொண்டிருக்கிறேன். அவருக்கு என்னிடம் நிறைய அன்பு உண்டு. அதேபோல், எனக்கும் அவரிடம் மட்டுமே அன்பு இருக்கிறது. வேறு எவரிடமும் இல்லை. (34,35)

மன்னரே! எதிரிகளை அடக்குபவரே! இந்த காரணங்களால் தாங்கள் அருள்கூர்ந்து, என்னை என் வழியில் செல்ல அனுமதிக்க வேண்டும். (இந்தத் தடையிலிருந்து விடுவிக்க வேண்டும்.) தருமாத்மாவான அவர், என்னை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார். (36)

அவர் விருப்பத்திற்குத் தடங்கலான ஒரு செயலைத் தாங்கள் செய்யக்கூடாது. அரக்கர் வேந்தே! என்னை விட்டுவிடுங்கள். சான்றோர்களின் வழியைப் பின்பற்றுங்கள். தாங்கள் என்னால் வணங்கத்தக்கவர். நான், தங்களால் காப்பாற்றத்தக்கவள்.'' (37)

இதைக் கேட்ட இராவணன், அடக்கமுடையவன் போல் பதில் கூறினான்— ''நான் உங்கள் மருமகள் என்று சொன்னாயே, அந்த உறவுமுறை யாருக்குப் பொருந்தும்? ஒரே ஒரு கணவனோடு வாழ்கின்ற பெண்களுக்கு இந்த உறவுமுறை செல்லுபடியாகும். (38)

ஆனால், தேவலோக சட்டதிட்டங்களின்படி, அப்சரப் பெண்களுக்கு ஒரு கணவன் என்ற கட்டுப்பாடு இல்லை; ஓர் ஆடவனுக்கே உரிய மனைவி என்ற நியமமும் இல்லை. இந்த நிலை வெகுநீண்டகாலமாக (தேவலோகத்தில்) இருந்து வருகிறது.'' (39)

இவ்வாறு கூறிவிட்டு, காமவேட்கையைத் தீர்த்துக் கொள்ள தவியாய்த் தவித்துக் கொண்டிருந்த அந்த அரக்கன், அவளை அந்தப் பாறையில் அமர்த்தி, அவள் உடலை ஆக்கிரமித்துக் கொண்டான். பின்னர், அவனால் விடுவிக்கப்பட்ட அவள் மலர்மாலைகள் கசங்கி, அணிகலன்கள் உடைந்து, யானைக் கூட்டத் தலைவனால் விளையாடிக் கலக்கி சேறாக்கி விடப்பட்ட ஆற்றைப் போல் அலங்கோலமாகக் காணப்பட்டாள். (40,41)

காற்றினால் தாக்கப்பட்டு மலர்கள் உதிர்ந்து விழுந்துவிட்ட கொடியைப் போல, கூந்தல் முடிச்சு அவிழ்ந்து போனதால், கூந்தலின் நுனிப்பகுதி காற்றில் அசைந்தாடியது; இளந்தளிர் போன்றிருந்த கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. அவள் வெட்கமும் அச்சமும் மேலிட்டவளாய் நடுங்கிக் கொண்டு, கைகளைக் கூப்பியவாறே நளகூபரனை நெருங்கி, அவன் பாதங்களில் விழுந்தாள். (42,43)

Koviloor Digital Library

தத3வஸ்த2ாம் ச தாம் த்3ருஷ்ட்வா மஹாத்மா நளகூப3ர: ।
அப்3ரவீத் கிமித3ம் ப4த்3ரே பாத3யோ: பதிதாஸி மே ॥ (44)

ஸா வை நி:ஶ்வஸமாநா து வேபமாநா க்ருதாஞ்ஜலி: ।
தஸ்மை ஸர்வம் யத2ாதத்த்வமாக்2யாதுமுபசக்ரமே ॥ (45)

ஏஷ தே3வ த3ஶக்3ரீவ: ப்ராப்தோ க3ந்தும் த்ரிவிஷ்டபம் ।
தேந ஸைந்யஸஹாயேந நிஶேயம் பரிணாமிதா ॥ (46)

ஆயாந்தீ தேந த்3ருஷ்டாஸ்மி த்வத்ஸகாஶமரிந்த3ம ।
க்3ருஹீதா தேந ப்ருஷ்டாஸ்மி கஸ்ய த்வமிதி ரக்ஷஸா ॥ (47)

மயா து ஸர்வம் யத் ஸத்யம் தஸ்மை ஸர்வம் நிவேதி3தம் ।
காமமோஹாபி4பூ4தாத்மா நாஶ்ரௌஷீத்தத்3வசோ மம ॥ (48)

யாச்யமாநோ மயா தே3வ ஸ்நுஷா தே஽ஹமிதி ப்ரபே4ா ।
தத் ஸர்வம் ப்ருஷ்ட2த: க்ருத்வா ப3லாத்தேநாஸ்மி த4ர்ஷிதா ॥ (49)

ஏவம் த்வமபராத4ம் மே க்ஷந்துமர்ஹஸி ஸுவ்ரத ।
ந ஹி துல்யப3லம் ஸௌம்ய ஸ்த்ரியாஶ்ச புருஷஸ்ய ச ॥ (50)

ஏதச்ச்2ருத்வா து ஸங்க்ருத்3த4ஸ்தத3ா வைஶ்ரவணாத்மஜ: ।
த4ர்ஷணாம் தாம் பராம் ஶ்ருத்வா த்4யாநம் ஸம்ப்ரவிவேஶ ஹ ॥ (51)

தஸ்ய தத் கர்ம விஜ்ஞாய தத3ா வைஶ்ரவணாத்மஜ: ।
முஹூர்தாத் க்ரோத4தாம்ராக்ஷஸ்தோயம் ஜக்3ராஹ பாணிநா ॥ (52)

க்3ருஹீத்வா ஸலிலம் ஸர்வமுபஸ்ப்ருஶ்ய யத2ாவிதி4 ।
உத்ஸஸர்ஜ யத2ாஶாபம் ராக்ஷஸேந்த்3ராய தா3ருணம் ॥ (53)

அகாமா தேந யஸ்மாத்த்வம் ப3லாத்3ப4த்3ரே ப்ரத4ர்ஷிதா ।
தஸ்மாத் ஸ யுவதீமந்யாம் நாகாமாமுபயாஸ்யதி ॥ (54)

யத3ா ஹ்யகாமாம் காமார்தோ த4ர்ஷயிஷ்யதி யோஷிதம் ।
மூர்த4ா து ஸப்தத4ா தஸ்ய ஶகலீப4விதா தத3ா ॥ (55)

தஸ்மிந்நுத3ாஹ்ருதே ஶாபே ஜ்வலிதாக்3நிஸமப்ரபே4 ।
தே3வது3ந்து3ப4யோ நேது3: புஷ்பவ்ருஷ்டிஶ்ச க2ாச்ச்யுதா ॥ (56)

பிதாமஹமுக2ாஶ்சைவ ஸர்வே தே3வா: ப்ரஹர்ஷிதா: ।
ஜ்ஞாத்வா லோககதி3ம் ஸர்வாம் தஸ்ய ம்ருத்யும் ச ரக்ஷஸ: ॥
ருஷய: பிதரஶ்சைவ ப்ரீதிமாபுரநுத்தமாம் ॥ (57)

ஶ்ருத்வா து ஸ த3ஶக்3ரீவஸ்தம் ஶாபம் ரோமஹர்ஷணம் ।
நாரீஷு மைது2நே ப4ாவம் நாகாமாஸ்வப்4யரோசயத் ॥ (58)

Koviloor Digital Library

விசாலமனம் படைத்த நளகூபரன், அந்த நிலையில் அவளைப் பார்த்து, ''பெண்ணே! என்ன இது? ஏன், என் கால்களில் விழுகிறாய்?'' என்று கேட்டான். (44)

அவள், பெருமூச்சுவிட்டுக் கொண்டும் நடுங்கிக் கொண்டும் கைகளைக் கூப்பியவண்ணம், நடந்த நிகழ்ச்சியை நடந்தவாறே சொல்லத் தொடங்கினாள்— (45)

''ஐயனே! தேவலோகத்தை வெற்றி கொள்வதற்காக இராவணன் போய்க்கொண்டிருக்கிறான். அவனுடைய பெருஞ்சேனை இன்று இரவு இங்கே தங்கிற்று. (46)

பகைவரை அடக்குபவரே! நான் தங்களிடம் வந்து கொண்டிருந்தபோது அவன் என்னைப் பார்த்துவிட்டான். அந்த அரக்கன், என் கையைப் பற்றிக்கொண்டு, 'நீ, யாரைச் சார்ந்தவள்?' என்று கேட்டான். (47)

நான், உண்மை எல்லாவற்றையும் அவனிடம் கூறினேன். ஆனால், காம மயக்கத்திலிருந்த அவன், என் வார்த்தைகளைச் செவியில் போட்டுக் கொள்ளவில்லை. (48)

ஐயனே! 'நான் தங்கள் மருமகள்' என்று கூறிக் கெஞ்சினேன். அவன் என் வேண்டுகோளைப் புறந்தள்ளிவிட்டு, என்னைப் பலாத்காரம் செய்தான். (49)

நல்விரதங்களை அனுஷ்டிப்பவரே! என்னுடைய இந்த குற்றத்தைத் தாங்கள் மன்னித்தருள வேண்டும். பண்பாளரே! ஆண்களுக்குச் சமமான உடல்பலம் பெண்களுக்கு இல்லையல்லவா? (நான் அபலை ஆனதால், அவனை எதிர்த்து நிற்கமுடியவில்லை.)'' (50)

குபேரனுடைய குமாரன், இதைக் கேட்டு மிகவும் கோபம் கொண்டான். அவளுக்கு மகத்தான அநீதி இழைக்கப்பட்டதைக் கேட்டுத் தியானத்தில் ஆழ்ந்தான். (51)

(தியானத்தில்) குபேரனுடைய குமாரன், இராவணனுடைய பலாத்காரச் செயலை அறிந்துகொண்டான். உடனே, அவன் கண்கள் கோபத்தால் சிவந்தன. தாமதிக்காமல், கையில் தண்ணீரை எடுத்துக் கொண்டான். (52)

முறைப்படி உடல் அங்கங்களைத் தண்ணீரால் துடைத்துக் கொண்டு (சரீரத்தை சுத்தி செய்து கொண்டு) கையில் நீரை வைத்துக் கொண்டு, அரக்க மன்னனுக்குப் பயங்கரமான சாபத்தைக் கொடுத்தான். (53)

''நங்காய்! விருப்பம் இல்லாத உன்னை அவன் பலாத்காரம் செய்திருக்கிறான். ஆகவே, இனி அவனை விரும்பாத எந்தப் பெண்ணிடமும், அவன் இன்பம் அடையமுடியாது. (54)

விருப்பமில்லாத ஒரு பெண்ணை அவன் பலாத்காரம் செய்வானேயானால், அவனுடைய தலை ஏழு துண்டுகளாகப் போகக் கடவது.'' (55)

நளகூபரனுடைய முகத்திலிருந்து கொழுந்து விட்டெரியும் அக்னிக்கு நிகரான சாபம் வெளிப்பட்டதும், தேவர்கள் பேரிகைகளை முழக்கினார்கள்; வானத்திலிருந்து மலர்மாரி பொழிந்தது. (56)

எல்லா தேவர்களும் பிரும்மாவினால் மகிழ்விக்கப்பட்டார்கள். (நளகூபரனுடைய சாபம் நிச்சயமாகப் பலிக்கும் என்று கூறி, அவர்களுக்குத் தெம்பு ஊட்டினார்.) இனி, உலகில் நடக்கப்போகும் சம்பவங்களைத் (தம் தவ வலிமையால்) தெரிந்துகொண்ட முனிவர்களும் பித்ரு தேவதைகளும் நிகரில்லாத ஆனந்தத்தை அடைந்தார்கள். (57)

உரோமச்சிலிர்ப்பை உண்டாக்கும் பயங்கரமான சாபத்தைக் கேட்ட பின்னர், தன்னை விரும்பாத பெண்களிடம் பலாத்காரமாக உறவு கொள்வதை அறவே தவிர்த்தான், இராவணன். (58)

Koviloor Digital Library

தேந நீதா: ஸ்த்ரிய: ப்ரீதிமாபு: ஸர்வா: பதிவ்ரதா: ।
நளகூப$_3$ரநிர்முக்தம் ஶாபம் ஶ்ருத்வா மந:ப்ரியம் ॥ (59)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஷட்$_3$விம்ஶ: ஸர்க$_3$: ॥

ஸப்தவிம்ஶ: ஸர்க$_3$:

ஸுமாலிவத$_4$:

கைலாஸம் லங்க$_4$யித்வாத$_2$ த$_3$ஶக்$_3$ரீவ: ஸ ராவண: ।
ஆஸஸாத$_3$ மஹாதேஜா இந்த்$_3$ரலோகம் நிஶாசர: ॥ (1)

தஸ்ய ராக்ஷஸஸைந்யஸ்ய ஸமந்தாது$_3$பயாஸ்யத: ।
தே$_3$வலோகம் யயௌ ஶப்$_3$தோ$_3$ மத்$_2$யமாநார்ணவோபம: ॥ (2)

ஶ்ருத்வா து ராவணம் ப்ராப்தமிந்த்$_3$ரஶ்சலித ஆஸநாத் ।
அப்$_3$ரவீத்தத்ர தாந் தே$_3$வாந் ஸர்வாநேவ ஸமாக$_3$தாந் ॥ (3)

ஆதி$_3$த்யாந் ஸவஸூந் ருத்$_3$ராந் விஶ்வாந் ஸாத்$_4$யாந் மருத்$_3$க$_3$ணாந் ।
ஸஜ்ஜீப$_4$வத யுத்$_3$த$_4$ார்த$_2$ம் ராவணஸ்ய து$_3$ராத்மந: ॥ (4)

ஏவமுக்தாஸ்து ஶக்ரேண தே$_3$வா: ஶக்ரஸமா யுதி$_4$ ।
ஸந்நஹ்ய ஸுமஹாஸத்த்வா யுத்$_3$த$_4$ஶ்ரத்$_3$த$_4$ாஸமந்விதா: ॥ (5)

ஸ து தீந: பரித்ரஸ்தோ மஹேந்த்$_3$ரோ ராவணம் ப்ரதி ।
விஷ்ணோ: ஸமீபமாக$_3$ம்ய வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (6)

விஷ்ணோ கத$_2$ம் கரிஷ்யாமி மஹாவீர்யபராக்ரம: ।
அஹோऽதி ப$_3$லவத்$_3$ ரக்ஷோ யுத்$_3$த$_4$ார்த$_2$மபி$_4$வர்ததே ॥ (7)

வரப்ரதா$_3$நாத்$_3$ப$_3$லவாந்ந க$_2$ல்வந்யேந ஹேதுநா ।
தத்து ஸத்யம் வச: கார்யம் யது$_3$க்தம் பத்$_3$மயோநிநா ॥ (8)

தத்$_3$யதா$_2$ நமுசிர்வ்ருத்ரோ ப$_3$லிர்நரகஶம்ப$_3$ரௌ ।
த்வத்$_3$ப$_3$லம் ஸமவஷ்டப்$_4$ய மயா த$_3$க்$_3$த$_4$ாஸ்தத$_2$ா குரு ॥ (9)

ந ஹ்யந்யோ தே$_3$வ தே$_3$வேஶ த்வாம்ருதே மது$_4$ஸூத$_3$ந ।
க$_3$தி: பராயணம் சாஸ்தி த்ரைலோக்யே ஸசராசரே ॥ (10)

த்வம் ஹி நாராயண: ஶ்ரீமாந் பத்$_3$மநாப$_4$: ஸநாதந: ।
த்வயேமே ஸ்தா$_2$பிதா லோகா: ஶக்ரஶ்சாஹம் ஸுரேஶ்வர: ॥ (11)

த்வயா ஸ்ருஷ்டமித$_3$ம் ஸர்வம் த்ரைலோக்யம் ஸசராசரம் ।
த்வாமேவ ப$_4$க$_3$வந் ஸர்வே ப்ரவிஶந்தி யுக$_3$க்ஷயே ॥ (12)

Koviloor Digital Library

மனத்திற்கு மகிழ்ச்சியைத் தரும் நளகூபரனுடைய சாபத்தை அறிந்து, இராவணனால் கொண்டு வரப்பட்ட கற்புக்கரசிகளான பெண்கள் மிகவும் நிம்மதியை அடைந்தார்கள். (59)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இருபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தேழு

சுமாலி மாய்ந்தான்!

பேராற்றல் கொண்ட இராவணன், கைலாச மலையைக் கடந்து, படைவீரர்கள் மற்றும் வாகனங்களுடன் இந்திரலோகத்தைச் சென்றடைந்தான். (1)

நாற்புறமும் சூழ்ந்துகொண்டு அரக்கர்படை சென்றபோது, பெருங்கடலைக் கடைவதுபோல் பேரொலி எழுந்தது. 'இராவணன் வந்துகொண்டிருக்கிறான்' என்பதைக் கேட்டதும், இருக்கையிலிருந்து வெகுண்டெழுந்தான், இந்திரன். அங்கு வந்து கூடியிருந்த தேவர்களைப் பார்த்துக் கூறினான். (2,3)

அவன், ஆதித்யர்கள், வசுக்கள், ருத்ரர்கள், விசுவேதேவர்கள், ஸாத்யர்கள், மருத்கணங்கள் ஆகியோரைப் பார்த்து, ''கெடுமதியாளனான இராவணனுடன் போர் புரிவதற்காக எல்லோரும் ஆயத்தமாகுங்கள்'' என்று கட்டளையிட்டான். (4)

இந்திரன் இவ்வாறு கூறியதும், போர் செய்வதில் அவனுக்கு நிகரான ஆற்றல் கொண்ட தேவர்கள், கவசம் முதலியன அணிந்து போர் செய்வதில் ஆர்வத்தைக் காட்டினார்கள். (5)

இராவணனிடம் அச்சங்கொண்டு மனம் நடுங்கிய மகேந்திரன், மகாவிஷ்ணுவிடம் வந்து (பின்வருமாறு) விண்ணப்பித்துக் கொண்டான்— (6)

''விஷ்ணுவே! மிகவும் ஆற்றல் படைத்தவனான இராவணன் என்னுடன் போர் செய்வதற்காக வந்து கொண்டிருக்கிறானே? நான் எவ்வாறு அவனை எதிர்கொள்வேன்? (7)

பிரும்மதேவரிடமிருந்து பெற்ற வரத்தினால், இவன் மிகவும் பலம் பெற்றிருக்கிறான்; தாமரையில் தோன்றிய பிரும்மாவின் சொற்களை மதித்து, அதை மெய்யாக்கிக் காட்டுவது, நமது கடமை – என்ற ஒரு காரணத்தாலேயே, நான் இவனைக் கொல்ல முடியாமலிருக்கிறது. வேறு, எந்தக் காரணத்தாலும் அல்ல. (8)

முன்னர், தங்கள் பேரருளை முழுமையாகப் பெற்று, நமுசி, விருத்திராசுரன், பலி, நரகாசுரன், சம்பரன் முதலிய அசுரர்களை, நான் எவ்வாறு பொசுக்கித் தள்ளினேனோ, அவ்வாறே இப்போதும் நடக்கும்வண்ணம் ஏதாவது உபாயம் செய்யுங்கள். மதுசூதனரே! தேவதேவரே! சராசரங்கள் அடங்கிய இந்த மூன்று உலகத்திலும், தேவர்களுக்குப் புகலிடம் அளிக்கக்கூடியவர், ஆதரவு காட்டிக் காப்பாற்றக் கூடியவர் தங்களைத் தவிர வேறு எவரும் இலர். (9,10)

தாங்கள்தான் பரம்பொருளான நாராயணன்; அனைத்து செல்வச் செழுமையும் நிறைந்தவர்; தோற்றம் தெரியாத பழமையானவர்; மூன்று உலகங்களும் தங்களிடம் நிலைபெற்றுள்ளன; என்னையும் தேவர்களின் தலைவன் இந்திரனாக ஆக்கியிருக்கிறீர்கள். (11)

அசையும் பொருள், அசையாப் பொருள் உள்ளடங்கிய இந்த மூன்று உலகங்கள் எல்லாமும் தங்களாலேயே படைக்கப்பட்டன; பகவானே! யுகத்தின் முடிவில் அனைத்து உயிர்களும், பொருள்களும் தங்களிடமே புகுந்து கொள்கின்றன. (12)

Koviloor Digital Library

தத$_3$ாசக்ஷ்வ யத$_2$ா தத்த்வம் தே$_3$வதே$_3$வ மம ஸ்வயம் ।
அபி சக்ரஸஹாயஸ்த்வம் யோத்ஸ்யஸே ராவணம் ப்ரபே$_4$ா ॥ (13)

ஏவமுக்த: ஸ ஶக்ரேண தே$_3$வோ நாராயண: ப்ரபு$_4$: ।
அப்$_3$ரவீந்ந பரித்ராஸ: கார்யஸ்தே ஶ்ரூயதாம் ச மே ॥ (14)

ந தாவதே$_3$ஷ து$_3$ஷ்டாத்மா ஶக்யோ ஜேதும் ஸுராஸுரை: ।
ஹந்தும் சாபி ஸமாஸாத்$_3$ய வரத$_3$ாநேந து$_3$ர்ஜய: ॥ (15)

ஸர்வத$_2$ா து மஹத் கர்ம கரிஷ்யதி ப$_3$லோத்கட: ।
ராக்ஷஸ: புத்ரஸஹிதோ த்$_3$ருஷ்டமேதந்நிஸர்க$_3$த: ॥ (16)

யத்து மாம் த்வமப$_4$ாஷிஷ்ட$_2$ா யுத்$_4$யஸ்வேதி ஸுரேஶ்வர ।
நாஹம் தம் ப்ரதியோத்ஸ்யாமி ராவணம் ராக்ஷஸம் யுதி$_4$ ॥ (17)

நாஹத்வா ஸமரே ஶத்ரும் விஷ்ணு: ப்ரதிநிவர்ததே ।
து$_3$ர்லப$_4$ஶ்சைவ காமோऽத்$_3$ய வரகு$_3$ப்தாத்$_3$தி$_4$ ராவணாத் ॥ (18)

ப்ரதிஜாநே ச தே$_3$வேந்த்$_3$ர த்வத்ஸமீபே ஶதக்ரதோ ।
ப$_4$விதாஸ்மி யத$_2$ாஸ்யாஹம் ரக்ஷஸோ ம்ருத்யுகாரணம் ॥ (19)

அஹமேவ நிஹந்தாஸ்மி ராவணம் ஸபுர:ஸரம் ।
தே$_3$வதா நந்த$_3$யிஷ்யாமி க்ஞாத்வா காலமுபாக$_3$தம் ॥ (20)

ஏதத்தே கதி$_2$தம் தத்த்வம் தே$_3$வராஜ ஶசீபதே ।
யுத்$_4$யஸ்வ விக$_3$தத்ராஸ: ஸர்வை: ஸார்த$_4$ம் மஹாப$_3$ல ॥ (21)

ததோ ருத்$_3$ரா: ஸஹாதி$_3$த்யா வஸவோ மருதோऽஶ்விநௌ ।
ஸந்நத்$_3$த$_4$ா நிர்யயுஸ்தூர்ணம் ராக்ஷஸாநபி$_4$த: புராத் ॥ (22)

ஏதஸ்மிந்நந்தரே நாத$_3$: ஶுஶ்ருவே ரஜநீக்ஷயே ।
தஸ்ய ராவணஸைந்யஸ்ய ப்ரயுத்$_3$த$_4$ஸ்ய ஸமந்தத: ॥ (23)

தே ப்ரபுத்$_3$த$_4$ா மஹாவீர்யா ஹ்யந்யோந்யமபி$_4$வீக்ஷ்ய வை ।
ஸங்க்$_3$ராமமேவாபி$_4$முக$_2$ா ஹ்யப்$_4$யவர்தந்த ஹ்ருஷ்டவத் ॥ (24)

ததோ தை$_3$வதஸைந்யாநாம் ஸம்க்ஷோப$_4$: ஸமஜாயத ।
தத$_3$க்ஷயம் மஹாஸைந்யம் த்$_3$ருஷ்ட்வா ஸமரமூர்த$_4$நி ॥ (25)

ததோ யுத்$_3$த$_4$ம் ஸமப$_4$வத்$_3$தே$_3$வத$_3$ாநவரக்ஷஸாம் ।
கே$_4$ாரம் துமுலநிர்ஹ்ராத$_3$ம் நாநாப்ரஹரணோத்$_3$யதம் ॥ (26)

ஏதஸ்மிந்நந்தரே ஶூரா ராக்ஷஸா கே$_4$ாரத$_3$ர்ஶநா: ।
யுத்$_3$த$_4$ார்த$_2$ம் ஸமவர்தந்த ஸசிவா ராவணஸ்ய தே ॥ (27)

Koviloor Digital Library

தேவதேவரே! ஒப்பற்ற தலைவரே! தாங்கள் சக்ராயுதத்தைத் கையில் தாங்கி, இராவணனுடன் போர்புரிய முன்வருவீர்களா? – என்பதைத் தெளிவாகக் கூறவேண்டும்.'' (13)

இந்திரன் இவ்வாறு கூறியவுடன், பரம்பொருளான ஸ்ரீமந்நாராயணன், ''நீ பயப்படக் கூடாது; நான், இப்போது சொல்லப் போவதைக் கேள்'' என்றார். (14)

''தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடி வந்து எதிர்த்தாலும், இந்தத் தீயவனை இப்போது வெல்லவும் முடியாது; கொல்லவும் முடியாது. வரங்களைப் பெற்றிருப்பதால், எவராலும் வெற்றிகொள்ள முடியாதவனாக ஆகியிருக்கிறான். (15)

தன் புதல்வனோடு வந்திருக்கும் இந்த அரக்கன், தன் பலத் திமிரினால் பெரிய நாசக்காரச் செயல்களைச் செய்யப் போகிறான் – என்பதை, என் இயல்பான ஞானதிருஷ்டியினால் தெரிந்து கொண்டிருக்கிறேன். (16)

தேவர் தலைவனே! 'இவனுடன் நீங்களே போர் செய்யுங்கள்' என்று சொன்னாய் அல்லவா? தற்சமயம், அரக்கன் இராவணனை நான் போர்க்களத்தில் எதிர்கொள்ள மாட்டேன். (17)

விஷ்ணுவாகிய நான், போர்க்களத்தில் எதிரியைக் கொல்லாமல் திரும்ப மாட்டேன். ஆனால், வரங்களால் நன்றாகக் காப்பாற்றப்படும் இராவணன் விஷயத்தில், என்னுடைய அந்தக் கொள்கை நிறைவேறுவது மிகவும் கடினம். (18)

ஆனால், தேவேந்திரனே! ஆயிரம் அசுவமேத வேள்விகள் செய்தவனே! சபதம் செய்து, உனக்குச் சொல்கிறேன். இந்த அரக்கனின் அழிவுக்கு, நானே காரணமாக இருப்பேன்! (19)

இவனுடைய முடிவுக்கான காலம் வந்ததும், அதை (நான்) அறிந்து கொண்டு, உற்றார்–உறவினரோடு கூடிநிற்கும் இராவணனை, நானே கொன்றுவிடுவேன்; தேவதைகளை மகிழ்விப்பேன். (20)

தேவமன்னனே! இந்திராணியின் பதியே! பேராற்றல் கொண்டவனே! இப்போது, அச்சத்தைத் துறந்து எல்லோருடனும்கூடச் சென்று, நீயே போர் செய்வாய்.'' (21)

பின்னர், ருத்ரர்கள், ஆதித்யர்கள், வசுக்கள், மருத்துக்கள், அசுவினீ குமாரர்கள் முதலியோர், போர் செய்வதற்கு ஆயத்தமாக ஆயுதங்கள் முதலியன எடுத்துக் கொண்டு, அமராவதி நகரத்திலிருந்து வெளியே புறப்பட்டார்கள். (22)

இதனிடையில் இரவு கழிந்ததும், கடுமையாகப் போர் செய்வதற்குத் தவித்துக் கொண்டிருந்த இராவணனின் படைவீரர்களுடைய பேராரவாரம் நாற்றிசையிலிருந்தும் கேட்கத் தொடங்கியது. (23)

போர் செய்யத் துடித்துக் கொண்டிருப்பவர்களும் மிகவும் வீரமுடையவர்களுமான அவர்கள், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து, முகமலர்ச்சியுடன் போர்க்களத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தார்கள். (24)

போர்க்களத்தில் அளவிலடங்காத மாபெரும் அரக்கப் படையைப் பார்த்ததும், தேவர் படையினருக்கு அச்சம் உண்டாயிற்று. (25)

பின்னர், தேவ–தானவ–அரக்கர்களிடையே கோரமான, கலவரமான சப்தங்களுடன் கூடிய போர் துவங்கியது. (26)

இதனிடையில், வீரர்களும் பயங்கரத் தோற்றமுடையவர்களுமான இராவணனுடைய அமைச்சர்கள் போர் செய்வதற்காக வந்து சேர்ந்தார்கள். (27)

Koviloor Digital Library

மாரீசஶ்ச ப்ரஹஸ்தஶ்ச மஹாபார்ஶ்வமஹோத$_3$ரௌ ।
அகம்பநோ நிகும்ப$_4$ஶ்ச ஶுக: ஸாரண ஏவ ச ॥ (28)

ஸம்ஹ்லாதோ$_3$ தூ$_4$மகேதுஶ்ச மஹாத$_2$ம்ஷ்ட்ரோ க$_4$டோத$_3$ர: ।
ஜம்பு$_3$மாலீ மஹாஹ்ராதோ$_3$ விரூபாக்ஷஶ்ச ராக்ஷஸ: ॥ (29)

ஸுப்தக்$_4$நோ யக்ஞகோபஶ்ச து$_3$ர்முகோ$_2$ தூ$_3$ஷண: க$_2$ர: ।
த்ரிஶிரா: கரவீராக்ஷ: ஸூர்யஶத்ருஶ்ச ராக்ஷஸ: ॥ (30)

மஹாகாயோऽதிகாயஶ்ச தே$_3$வாந்தகநராந்தகௌ ।
ஏதை: ஸர்வை: பரிவ்ருதோ மஹாவீர்யோ மஹாப$_3$ல: ॥
ராவணஸ்யார்யக: ஸைந்யம் ஸுமாலீ ப்ரவிவேஶ ஹ ॥ (31)

ஸதை$_3$வதக$_3$ணாந் ஸர்வாந்நாநாப்ரஹரணை: ஶிதை: ।
வ்யத்$_4$வம்ஸயத் ஸுஸங்க்ருத்$_3$தோ$_4$ வாயுர்ஜலசராநிவ ॥ (32)

தத்$_3$தை$_3$வதப$_3$லம் ராம ஹந்யமாநம் நிஶாசரை: ।
ப்ரணுந்நம் ஸர்வதோ தி$_3$க்$_3$ப்$_4$ய: ஸிம்ஹநுந்நா ம்ருகா$_3$ இவ ॥ (33)

ஏதஸ்மிந்நந்தரே ஶூரோ வஸூநாமஷ்டமோ வஸு: ।
ஸாவித்ர இதி விக்$_2$யாத: ப்ரவிவேஶ ரணாஜிரம் ॥ (34)

ஸைந்யை: பரிவ்ருதோ ஹ்ருஷ்டோ நாநாப்ரஹரணோத்$_3$யதை: ।
த்ராஸயஞ்ஶத்ருஸைந்யாநி ஸிம்ஹ: க்ஷுத்$_3$ரம்ருகா$_3$நிவ ॥ (35)

ததா$_2$தி$_3$த்யௌ மஹாவீர்யௌ த்வஷ்டா பூஷா ச தம்ஶிதௌ ।
நிர்ப$_4$யௌ ஸஹ ஸைந்யேந ததா$_3$ ப்ராவிஶதம் ரணே ॥ (36)

ததோ யுத்$_3$த$_4$ம் ஸமப$_4$வத் ஸுராணாம் ஸஹ ராக்ஷஸை: ।
க்ருத்$_3$தா$_4$நாம் ரக்ஷஸாம் கீர்திம் ஸமரேஷ்வநிவர்திநாம் ॥ (37)

ததஸ்தே ராக்ஷஸா: ஸர்வே விபு$_3$தா$_4$ந் ஸமரே ஸ்தி$_2$தாந் ।
நாநாப்ரஹரணைர்கோ$_4$ரைர்ஜக்$_4$நு: ஶதஸஹஸ்ரஶ: ॥ (38)

தே$_3$வாஶ்ச ராக்ஷஸாந் கோ$_4$ராந் மஹாப$_3$லபராக்ரமாந் ।
ஸமரே விமலை: ஶஸ்த்ரைருபநிந்யுர்யமக்ஷயம் ॥ (39)

ஏதஸ்மிந்நந்தரே ராம ஸுமாலீ நாம ராக்ஷஸ: ।
நாநாப்ரஹரணை: க்ருத்$_3$த$_4$ஸ்தத்ஸைந்யம் ஸோऽப்$_4$யவர்தத ॥ (40)

ஸ தை$_3$வதப$_3$லம் ஸர்வம் நாநாப்ரஹரணை: ஶிதை: ।
வ்யத்$_4$வம்ஸயத ஸங்க்ருத்$_3$தோ$_4$ வாயுர்ஜலத$_4$ரம் யதா$_2$ ॥ (41)

தே மஹாபா$_3$ணவர்ஷைஶ்ச ஶூலப்ராஸை: ஸுதா$_3$ருணை: ।
ஹந்யமாநா: ஸுரா: ஸர்வே ந வ்யதிஷ்ட$_2$ந்த ஸம்ஹதா: ॥ (42)

Koviloor Digital Library

மாரீசன், பிரஹஸ்தன், மகாபார்சுவன், மகோதரன், அகம்பனன், நிகும்பன், சுகன், ஸாரணன், ஸம்ஹ்ராதன், தூமகேது, மகாதம்ஷ்ட்ரன், கடோதரன், ஜம்புமாலி, மகாஹ்ராதன், விரூபாக்ஷன், சுப்தக்னன், யக்ஞகோபன், துர்முகன், தூஷணன், கரன், திரிசிரஸ், கரவீராட்சன், சூர்யசத்ரு, மஹாகாயன், அதிகாயன், தேவாந்தகன், நராந்தகன் முதலான மகாபராக்கிரமம் பொருந்திய அரக்கர்களுடன் கூட, இராவணனின் தாய்வழிப் பாட்டனாகிய சுமாலி, தேவர்களின் படைக்குள் அட்டகாசமாக நுழைந்தான். (28–31)

அவன் (மிகவும் கோபத்துடன்) கூர்மையான பலவகை படைக்கலங்களால், முகிற்கூட்டத்தைக் காற்று சிதறடிப்பதைப் போல, தேவக்கூட்டங்களைச் சிதறியோடச் செய்தான். (32)

இராமசந்திரா! அரக்கர்களால் பேரழிவுக்கு ஆட்பட்ட தேவர்படை, சிங்கத்தினால் தாக்கப்பட்ட மான்கள் போல, எல்லாத் திசைகளிலும் தலைதெறிக்க ஓடிப்போயிற்று. (33)

இந்த சந்தர்ப்பத்தில், வசுக்களில் எட்டாவதான சாவித்ரன் என்ற பெயர் கொண்ட வசு, பல்வகை ஆயுதங்களைக் கையிலேந்திய படைவீரர்களால் சூழப்பட்டு, மகிழ்ச்சி பொங்க, சிறுபிராணிகளை சிங்கம் நசுக்குவதைப் போல எதிரிப்படையை அழித்துக் கொண்டு யுத்தகளத்தில் புகுந்தான். (34,35)

அப்போது, அதிதியின் புதல்வர்களான த்வஷ்டா, பூஷா என்னும் மாவீரர்கள், சிறிதும் அச்சம் கொள்ளாமல், தத்தம் படைகளுடன்கூட போர்க்களத்தில் புகுந்தார்கள். (36)

பின்னர், போரிலிருந்து பின்வாங்காத சிறப்புடைய அரக்கர்களுக்கும், அதைக் கண்டு எரிச்சலடைந்த தேவர்களுக்குமிடையே பெரும்போர் நிகழத் தொடங்கியது. (37)

அப்போது, போர்க்களத்திலிருந்த நூறாயிரக்கணக்கான தேவர்களைப் பயங்கரமான பல்வகை அஸ்திரங்களால் அரக்கர்கள் கொன்றொழித்தார்கள். (38)

அவ்வாறே, தேவர்களும் மகாபராக்கிரமசாலிகளான பயங்கரமான அரக்கர்களைக் குறிதவறாத ஆயுதங்களால் தாக்கி, யமன் வீட்டிற்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். (39)

இராமா! அப்போது கோபத்துடன் சுமாலி என்ற அரக்கன், பலவகையான படைக்கலங்களைக் கையிலேந்திக் கொண்டு அரக்கர் படையில் சேர்ந்து கொண்டான். (40)

மிகவும் கோபத்தோடிருந்த அவன், தேவர்களுடைய படைகளனைத்தையும், கூர்மையான பலவகை ஆயுதங்களால் தாக்கி, மேகக்கூட்டத்தைக் காற்று விரட்டி அடிப்பதைப் போல் கலைந்தோடச் செய்தான். (41)

மாபெரும் பாணங்களின் பொழிவினாலும், சூலங்கள் மற்றும் பயங்கரமான ஈட்டிகளாலும் தாக்கப்பட்ட தேவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி (எதிர்த்து) நிற்க முடியவில்லை. (42)

Koviloor Digital Library

ததோ வித்3ராவ்யமாணேஷு தை3வதேஷு ஸுமாலிநா ।
வஸுர்நாமஷ்டம: க்ருத்3த4: ஸாவித்ரோ வை வ்யவஸ்தி2த: ॥ (43)

ஸம்வ்ருத: ஸ்வைரத2நீகை: ப்ரஹரந்தம் நிஶாசரம் ।
விக்ரமேண மஹாதேஜா வாரயாமாஸ ஸம்யுகே3 ॥ (44)

ததஸ்தயோர்மஹாயுத்3த4மபூ4வத்3ரோமஹர்ஷணம் ।
ஸுமாலிநோ வஸோஶ்சைவ ஸமரேஷ்வநிவர்திநோ: ॥ (45)

ததஸ்தஸ்ய மஹாபா3ணைர்வஸுநா ஸுமஹாத்மநா ।
நிஹத: பந்நக3ரத2: க்ஷணேந விநிபாதித: ॥ (46)

ஹத்வா து ஸம்யுகே3 தஸ்ய ரத2ம் பா3ணஶதைஶ்சிதம் ।
க3தா3ம் தஸ்ய வதா4ர்தா2ய வஸுர்ஜக்3ராஹ பாணிநா ॥ (47)

தத: ப்ரக்3ருஹ்ய தீ3ப்தாக்3ராம் காலத3ண்டோ3பமாம் க3தா3ம் ।
தாம் மூர்த்4நி பாதயாமாஸ ஸாவித்ரோ வை ஸுமாலிந: ॥ (48)

ஸா தஸ்யோபரி சோல்காபா4 பதந்தீவ ப3பௌ4 க3தா3 ।
இந்த்3ரப்ரமுக்தா க3ர்ஜந்தீ கி3ராவிவ மஹாஶநி: ॥ (49)

தஸ்ய நைவாஸ்தி2 ந ஶிரோ ந மாம்ஸம் த3த்3ருஶே ததா3 ।
க3த3யா ப4ஸ்மதாம் நீதம் நிஹதஸ்ய ரணாஜிரே ॥ (50)

தம் த்3ருஷ்ட்வா நிஹதம் ஸங்க்2யே ராக்ஷஸாஸ்தே ஸமந்தத: ।
வ்யத்3ரவந் ஸஹிதா: ஸர்வே க்ரோஶமாநா: பரஸ்பரம் ॥
வித்3ராவ்யமாணா வஸுநா ராக்ஷஸா நாவதஸ்தி2ரே ॥ (51)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகியே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 ஸப்தவிம்ஶ: ஸர்க3: ॥

அஷ்டாவிம்ஶ: ஸர்க3:

ஜயந்தாபவாஹநம்

ஸுமாலிநம் ஹதம் த்3ருஷ்ட்வா வஸுநா ப4ஸ்மஸாத்க்ருதம் ।
ஸ்வஸைந்யம் வித்3ருதம் சாபி லக்ஷயித்வார்தி3தம் ஸுரை: ॥ (1)

தத: ஸ ப3லவாந் க்ருத்3தே4ா ராவணஸ்ய ஸுதஸ்ததா3 ।
நிவர்த்ய ராக்ஷஸாந் ஸர்வாந் மேக4நாதோ3 வ்யவஸ்தி2த: ॥ (2)

ஸுரதே2நாக்3நிவர்ணேந காமகே3ந மஹாரத2: ।
அபி4து3த்3ராவ ஸேநாம் தாம் வநாந்யக்3நிரிவ ஜ்வலந் ॥ (3)

தத: ப்ரவிஶதஸ்தஸ்ய விவித4ாயுத4த4ாரிண: ।
விது3த்3ருவுர்தி3ஶ: ஸர்வா த3ர்ஶநாதே3வ தே3வதா: ॥ (4)

Koviloor Digital Library

சுமாலியினால் தேவர்கள் விரட்டி அடிக்கப்படுவதைக் கண்டு, வசுக்களில் எட்டாவதான சாவித்ரன் மிகவும் கோபம் கொண்டு எதிர்த்துப் போரிட முன்வந்தான். (43)

பேராற்றல் பொருந்திய அவன் (சாவித்ரன்), போரிட்டுக் கொண்டிருக்கும் அந்த அரக்கனுக்கெதிரில், தன்னுடைய தேர்ப்படை புடைசூழ வந்து, தன் வீரத்தினால் அவனைத் தடுத்து நிறுத்தினான். (44)

பின்னர், போர்க்களத்தில் பின்வாங்காத சுமாலிக்கும் வசுவுக்குமிடையே, மயிர்க்கூச்சலை உண்டாக்கும்படியான பயங்கரப் போர் நிகழ்ந்தது. (45)

அப்போது அளவு கடந்த ஆற்றல் படைத்த வசுவினுடைய உறுதியான அம்புகளால், சர்ப்பங்களால் இழுக்கப்படும் தேரிலிருந்த சுமாலி வெகுவிரைவில் தாக்கிச் சாய்க்கப்பட்டான். போர்க்களத்தில், நூற்றுக்கணக்கான பாணங்களால் அவனுடைய தேரைச் சிதைத்துவிட்டு, வசு (சாவித்ரன்), அவனைக் கொல்வதற்காக ஒரு கதையைக் கையில் எடுத்துக் கொண்டான். (46,47)

காலதண்டம் போன்றிருந்ததும், தலைப்புப்பகுதியில் நெருப்பைப் போன்று விளங்குவதுமான அந்தக் கதையை, சுமாலியின் நெற்றியை நோக்கிச் செலுத்தினான், சாவித்ரன். (48)

இந்திரனால் விடப்பட்ட வஜ்ராயுதம், மலைச்சிகரத்தின் மீது பேரொலியுடன் வீழ்வதைப்போல, அந்தக் கதை எரியும் கொள்ளிக்கட்டை போல் அவன் (சுமாலியின்) மேல் விழுந்தது. (49)

(கொள்ளிக்கட்டை போன்ற கதையினால் தாக்கப்பட்ட பின், அவன் உடலிலிருந்த) எலும்பு, தலை, சதை முதலிய எதுவுமே காணப்படவில்லை. போரில், கதையால் கொல்லப்பட்ட அவன், வெறும் சாம்பலாக்கப்பட்டுவிட்டான். (50)

போரில், அவன் கொல்லப்பட்டதை, அங்குக் கூடியிருந்த அரக்கர்கள் பார்த்தார்கள். ஒவ்வொருவரும் அலறிக் கொண்டு, எல்லோரும் கூட்டமாக ஓடிச் சென்றார்கள். வசுவினால் துரத்தப்பட்ட அரக்கர்களால் அங்கே நிற்க முடியவில்லை. (51)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இருபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : இருபத்தெட்டு

ஜயந்தனை மறைத்து வைத்தல்

வசுவினால் சுமாலி கொல்லப்பட்டு சாம்பலாக்கப்பட்டதையும், தங்களுடைய சேனை தேவர்களால் தாக்கப்பட்டு மிரண்டு ஓடுவதையும் கண்டு, இராவணனுடைய புதல்வனான மேகநாதன் எல்லா அரக்கர்களையும் திரும்ப அழைத்து, தானே போர்முனையில் வந்து நின்றான். (1,2)

காடுகளில் காட்டுத்தீ வேகமாகப் பரவுவதைப் போல ஒளிவீசுவதும், விருப்பப்படி எங்கும் செல்லக்கூடியதும், மங்களகரமானதுமான பெரிய தேரில் ஏறிச்சென்று, அவன் தேவர்கள் படையை எதிர்த்தான். (3)

பலவகையான படைக்கலங்களை எடுத்துக் கொண்டு, தங்கள் படைக்குள் புகுந்துவரும் மேகநாதனைக் கண்டதுமே, எல்லா தேவர்களும் நாற்றிசையிலும் ஓடத் தொடங்கினார்கள். (4)

Koviloor Digital Library

ந ப$_3$பூ$_4$வ தத$_3$ா கஶ்சித்$_3$யுயுத்ஸோரஸ்ய ஸம்முகே$_2$ ।
ஸர்வாநாவித்$_4$ய வித்ரஸ்தாம்ஸ்தத: ஶக்ரோऽப்$_3$ரவீத் ஶூராந் ॥ (5)

ந பே$_4$தவ்யம் ந க$_3$ந்தவ்யம் நிவர்தத்$_4$வம் ரணே ஶூரா: ।
ஏஷ க$_3$ச்ச$_2$தி புத்ரோ மே யுத்$_3$த$_4$ார்த$_2$மபராஜித: ॥ (6)

தத: ஶக்ரஸுதோ தே$_3$வோ ஜயந்த இதி விஶ்ருத: ।
ரதே$_2$நாத்$_3$பு$_4$தகல்பேந ஸங்க்$_3$ராமே ஸோऽப்$_4$யவர்தத ॥ (7)

ததஸ்தே த்ரித$_3$ஶா: ஸர்வே பரிவார்ய ஶசீஸுதம் ।
ராவணஸ்ய ஸுதம் யுத்$_3$தே$_4$ ஸமாஸாத்$_3$ய ப்ரஜக்$_4$நிரே ॥ (8)

தேஷாம் யுத்$_3$த$_4$ம் ஸமப$_4$வத் ஸத்$_3$ருஶம் தே$_3$வரக்ஷஸாம் ।
மஹேந்த்$_3$ரஸ்ய ச புத்ரஸ்ய ராக்ஷஸேந்த்$_3$ரஸுதஸ்ய ச ॥ (9)

ததோ மாதலிபுத்ரே து கோ$_3$முகே$_2$ ராக்ஷஸாத்மஜ: ।
ஸாரதௌ$_2$ பாதயாமாஸ ஶராந் கநகபூ$_4$ஷணாந் ॥ (10)

ஶசீஸுதஶ்சாபி தத$_2$ா ஜயந்தஸ்தஸ்ய ஸாரதி$_2$ம் ।
தம் சாபி ராவணி: க்ருத்$_3$த$_4$: ஸமந்தாத் ப்ரத்யவித்$_4$யத ॥ (11)

ஸ ஹி க்ரோத$_4$ஸமாவிஷ்டோ ப$_3$லீ விஸ்ப$_2$ாரிதேக்ஷண: ।
ராவணி: ஶக்ரதநயம் ஶரவர்ஷைரவாகிரத் ॥ (12)

ததோ நாநாப்ரஹரணாஞ்ஶிதத$_4$ாராந் ஸஹஸ்ரஶ: ।
பாதயாமாஸ ஸங்க்ருத்$_3$த$_4$: ஸுரஸைந்யேஷு ராவணி: ॥ (13)

ஶதக்$_4$நீமுஸலப்ராஸக$_3$த$_3$ாக$_2$ட்$_3$க$_3$பரஶ்வத$_4$ாந் ।
மஹாந்தி கி$_3$ரிஶ்ருங்க$_3$ாணி பாதயாமாஸ ராவணி: ॥ (14)

தத: ப்ரவ்யதி$_2$தா லோகா: ஸஞ்ஜஜ்ஞே ச தமோ மஹத் ।
தஸ்ய ராவணபுத்ரஸ்ய ஶத்ருஸைந்யாநி நிக்$_4$நத: ॥ (15)

ததஸ்தத்$_3$தை$_3$வதப$_3$லம் ஸமந்தாத்தம் ஶசீஸுதம் ।
ப$_3$ஹுப்ரகாரமஸ்வஸ்த$_2$மப$_4$வச்ச$_2$ரபீடி$_3$தம் ॥ (16)

நாப்$_4$யஜாநந்த சாந்யோந்யம் ரக்ஷோ வா தே$_3$வதாத$_2$ வா ।
தத்ர தத்ர விபர்யஸ்தம் ஸமந்தாத் பரித$_4$ாவதி ॥ (17)

தே$_3$வா தே$_3$வாந்நிஜக்$_4$நுஸ்தே ராக்ஷஸா ராக்ஷஸாம்ஸ்தத$_2$ா ।
ஸம்மூட$_4$ாஸ்தமஸாச்ச$_2$ந்நா வ்யத்$_3$ரவந்நபரே தத$_3$ா ॥ (18)

ஏதஸ்மிந்நந்தரே வீரே: புலோமா நாம வீர்யவாந் ।
தை$_3$த்யேந்த்$_3$ரஸ்தேந ஸங்க்$_3$ருஹ்ய ஶசீபுத்ரோऽபவாஹித: ॥ (19)

Koviloor Digital Library

போர்புரிவதில் பெருவிருப்பம் கொண்டு வந்து நிற்கும் அவன் எதிரில் எவராலும் நிற்கமுடியவில்லை. அஞ்சி, நடுங்கி ஓடும் தேவர்கள் அனைவரையும் அழைத்து, இந்திரன் (பின்வருமாறு) கூறினான்— (5)

''தேவர்களே! நீங்கள் பயப்பட வேண்டாம்; ஓடிப்போக வேண்டாம்; போர் செய்வதற்காகத் திரும்பி வாருங்கள். போர்களில் தோல்வியைக் கண்டிராத என் புதல்வன் ஜயந்தன், போர்க்களத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறான்.'' (6)

அப்போது, இந்திரனுடைய மைந்தனான ஜயந்தன், மிகவும் அற்புதமாக அலங்கரிக்கப்பட்ட ஒரு தேரில் ஏறிக்கொண்டு போர் செய்வதற்காக வந்தான். (7)

உடனே, தேவர்கள் எல்லோரும் இந்திராணியின் மைந்தனான ஜயந்தனைச் சூழ்ந்து கொண்டு, இராவணனின் புதல்வனோடு போர் தொடுத்தார்கள். (8)

ஒரு பக்கம் மகேந்திரனுடைய புத்திரன்; மறுபக்கம் அரக்க மன்னனுடைய மைந்தன். எனவே, அந்த உயர்ந்த நிலைக்கு ஏற்ற வகையில், தேவ–அரக்கர்களிடையே போர் நிகழ்ந்தது. (9)

அரக்க மன்னனின் குமாரனான மேகநாதன், பொன்னால் அணிசெய்யப்பட்ட பாணங்களை, (எதிராளியின்) தேரோட்டியான மாதலி மைந்தன் கோமுகனின் மீது செலுத்தினான். (10)

இந்திராணியின் மைந்தனான ஜயந்தன், மேகநாதனின் தேரோட்டியைக் காயப்படுத்தினான். அதனால், கோபம் கொண்ட இராவணனின் புதல்வன் ஜயந்தனைப் படுகாயப்படுத்தினான். (11)

கோபத்தால் நிரம்பி வழிந்தவனும் பலசாலியுமான இராவணன் மைந்தன், கண்களை விஸ்தாரமாகச் செய்துகொண்டு, இந்திரன் புதல்வனை அம்புமாரியால் மறைத்தான். (12)

பின்னர், மிகவும் கோபங்கொண்ட மேகநாதன், கூர்மையான முனைகளைக் கொண்ட பலவகையான ஆயுதங்களை, ஆயிரக்கணக்கில் தேவர்படையின் மீது செலுத்தித் தாக்கினான். (13)

சதக்னீ, உலக்கை, ஈட்டி, கதை, கத்தி, கோடரி போன்ற ஆயுதங்களையும், பெரிய மலைச்சிகரங்களையும் பகைவர் மீது வீசி எறிந்தான், இராவணன் மைந்தன். (14)

இராவணனின் புதல்வன் எதிரிப்படைகளை வெகு மூர்க்கமாகத் தாக்கிக் கொண்டிருந்தான். அவனுடைய மாயையினால், அங்கே கனமான இருள் சூழ்ந்தது. உலக மக்கள் எல்லோரும் மிகவும் துன்பத்திற்கு ஆளானார்கள். (15)

அப்போது ஜயந்தனைச் சூழ்ந்து நின்ற தேவர்படை முழுவதும், அம்புகளால் தாக்கப்பட்டு பலவகையான துன்பங்களை அனுபவித்தது. (16)

(எங்கும் இருள் சூழ்ந்திருந்ததால்) இவன் அரக்கனா? அல்லது தேவனா? என்று ஒருவரையொருவர் அறிய முடியவில்லை. (இரு படையினரும்) ஆங்காங்கே சிதறியடித்துக் கொண்டு நாற்புறங்களிலும் ஓட்டமாக ஓடிச் சென்றார்கள். (17)

இருளினால் மூடப்பட்டு ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொள்ள முடியாததால், தேவர்கள் தேவர்களையும், அரக்கர்கள் அரக்கர்களையும் கொன்றார்கள். அந்தக் கலவரத்தைப் பயன்படுத்திக் கொண்டு சிலர் போர்க்களத்திலிருந்து ஓடிப்போனார்கள். (18)

இதனிடையில், பலம் மிக்க அரக்கர் தலைவனான புலோமா என்பவன் இந்திராணியின் புதல்வனான ஜயந்தனைப் பிறரால் கண்டுபிடிக்க முடியாத இடத்திற்குத் தூக்கிச் சென்றான். (19)

Koviloor Digital Library

ஸங்க்$_3$ருஹ்ய தம் து தெ$_3$ளஹித்ரம் ப்ரவிஷ்ட: ஸாக$_3$ரம் தத$_3$ா ।
ஆர்யக: ஸ ஹி தஸ்யாஸீத் புலோமா யேந ஸா ஶசீ ॥ (20)

க்ஞாத்வா ப்ரணாஶம் து தத$_3$ா ஜயந்தஸ்யாத$_2$ தே$_3$வதா: ।
அப்ரஹ்ருஷ்டாஸ்தத: ஸர்வா வ்யதி$_2$தா: ஸம்ப்ரது$_3$த்$_3$ருவு: ॥ (21)

ராவணிஸ்த்வத$_2$ ஸங்க்ருத்$_3$தோ$_4$ ப$_3$லை: பரிவ்ருத: ஸ்வகை: ।
அப்$_4$யத$_4$ாவத தே$_3$வாம்ஸ்தாந் முமோச ச மஹாஸ்வநம் ॥ (22)

த்$_3$ருஷ்ட்வா ப்ரணாஶம் புத்ரஸ்ய தை$_3$வதேஷு ச வித்$_3$ருதம் ।
மாதலிம் சாஹ தே$_3$வேஶோ ரத$_2$: ஸமுபநீயதாம் ॥ (23)

ஸ து தி$_3$வ்யோ மஹாபீ$_4$ம: ஸஜ்ஜ ஏவ மஹாரத$_2$: ।
உபஸ்தி$_2$தோ மாதலிநா வாஹ்யமாநோ மஹாஜவ: ॥ (24)

ததோ மேக$_4$ா ரதே$_2$ தஸ்மிந்ஸ்தடி$_3$த்$_3$வந்தோ மஹாப$_3$லா: ।
அக்$_3$ரதோ வாயுசபலா நேது$_3$: பரமநி:ஸ்வநா: ॥ (25)

நாநாவாத்$_3$யாநி வாத்$_3$யந்த க$_3$ந்த$_4$ர்வாஶ்ச ஸமாஹிதா: ।
நந்ருதுஶ்சாப்ஸர:ஸங்க$_4$ா நிர்யாதே த்ரித$_3$ஶேஶ்வரே ॥ (26)

ருத்$_3$ரைர்வஸுபி$_4$ராதி$_3$த்யை: ஸாத்$_4$யைஶ்ச ஸமருத்$_3$க$_3$ணை: ।
வ்ருதோ நாநாப்ரஹரணைர்நிர்யயெள த்ரித$_3$ஶாதி$_4$ப: ॥ (27)

நிர்க$_3$ச்ச$_2$தஸ்து ஶக்ரஸ்ய பருஷம் பவநோ வவெள ।
ப$_4$ாஸ்கரோ நிஷ்ப்ரப$_4$ஶ்சாஸீந்மஹோல்காஶ்ச ப்ரபேதி$_3$ரே ॥ (28)

ஏதஸ்மிந்நந்தரே வீரோ த$_3$ஶக்$_3$ரீவ: ப்ரதாபவாந் ।
ஆருரோஹ ரத$_2$ம் தி$_3$வ்யம் நிர்மிதம் விஶ்வகர்மணா ॥ (29)

பந்நகை$_3$ஸ்து மஹாபே$_4$ாகை$_3$ர்வேஷ்டிதம் ரோமஹர்ஷணை: ।
தேஷாம் நி:ஶ்வாஸவாதேந ப்ரதீ$_3$ப்தமிவ ஸம்யுகே$_3$ ॥ (30)

தை$_3$த்யைர்நிஶாசரைஶ்சைவ ஸ ரத$_2$: பரிவாரித: ।
ஸமராபி$_4$முகே$_2$ா தை$_3$த்யோ மஹேந்த்$_3$ரம் ஸோऽப்$_4$யவர்தத ॥ (31)

புத்ரம் தம் வாரயித்வா து ஸ்வயமேவ வ்யவஸ்தி$_2$த: ।
ஸோऽபி யுத்$_3$த$_4$ாத்$_3$விநிஷ்க்ரம்ய ராவணி: ஸமுபாவிஶத் ॥ (32)

ததோ யுத்$_3$த$_4$ம் ப்ரவ்ருத்தம் து ஸுராணாம் ராக்ஷஸை: ஸஹ ।
ஶஸ்த்ராணி வர்ஷதாம் கே$_4$ாரம் மேக$_4$நாமிவ ஸம்யுகே$_3$ ॥ (33)

கும்ப$_4$கர்ணஸ்து து$_3$ஷ்டாத்மா நாநாப்ரஹரணோத்$_3$யத: ।
நாக்ஞாயத தத$_3$ா யுத்$_3$தே$_4$ ஸஹ கேநாப்யயுத்$_4$யத ॥ (34)

த$_3$ந்தைர்பு$_4$ஜாப்$_4$யாம் பத்$_3$ப்$_4$யாம் ச ஶக்திதோமரஸாயகை: ।
யேந கேநைவ ஸம்ரப்$_3$த$_4$ஸ்தாட$_3$யாமாஸ வை ஸுராந் ॥ (35)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_13_Back

Koviloor Digital Library

அவன், இந்திராணியின் தந்தை என்பதால் ஜயந்தனுக்குத் தாய்வழிப்பாட்டன். அவன், தன் பேரனை எடுத்துச் சென்று கடலுக்குள் புகுந்துகொண்டான். (20)

ஜயந்தன், கண்ணில்படாமல் போகவே (அவனை அரக்கர்கள் மாய்த்துவிட்டார்கள் என்று நெஞ்சம் கலங்கி) மனம் உடைந்த தேவப்படையினர் எல்லோரும் நாற்றிசையிலும் ஓடிச் சென்றார்கள். (21)

தன் படைவீரர்களால் சூழப்பட்டிருந்த மேகநாதன், மிகவும் கோபம் கொண்டு, தேவர்களைத் தாக்குவதற்காக அவர்களை நோக்கி ஓடினான்; பெருங்குரல் எழுப்பினான். (22)

தன்னுடைய மகன் காணாமற்போனதையும், தேவப்படையினர் ஓடிப்போவதையும் பார்த்த தேவர் மன்னன் இந்திரன், மாதலியைப் பார்த்து, ''தேரைக் கொண்டு வா'' என்று கட்டளையிட்டான். (23)

உடனே அவன், மிகப்பெரியதும் தெய்விக ஆற்றல் உடையதும் நன்கு அலங்கரிக்கப் பட்டதுமான ஒரு தேரைக் கொண்டுவந்து நிறுத்தினான். அவனால் ஓட்டப்படும் அது, வெகுவேகமாக செல்லக்கூடியது. (24)

அப்போது, மின்னற்கொடிகளுடன் கூடிய மேகங்கள், தேரின் முன்புறத்தில் காற்றினால் அலைக்கழிக்கப்பட்டுப் பெருஞ்சத்தத்தை எழுப்பின. தேவர்கோன், போர் செய்வதற்காக வெளியே புறப்பட்டபோது கந்தர்வர்கள் ஒன்றாகக்கூடி பலவகையான இசைக்கருவிகளை மீட்டினார்கள்; அப்சரஸ் கூட்டத்தினர் நாட்டியமாடினார்கள். (25,26)

அமரர்வேந்தனாகிய இந்திரன், ருத்ரர்கள், வசுக்கள், ஆதித்யர்கள், சாத்யர்கள், மருத்கணங்கள் முதலியோர் பல்வகை ஆயுதங்களை ஏந்திக் கொண்டுப் புடைசூழ்ந்து வர வெளியே வந்தான். இந்திரன் வெளியே புறப்பட்டதும் பயங்கரமான காற்று வீசியது; சூரியன் ஒளியிழந்தான்; மாபெரும் எரிகொள்ளிகள் விழுந்தன. (27,28)

இதனிடையில் பேராற்றல் படைத்த வீரனான இராவணன், விசுவகர்மாவினால் நிர்மாணிக்கப்பட்ட திவ்யமான தேரில் ஏறிக்கொண்டான். (29)

அந்தத் தேரில், உரோமத்தைக் குத்திட்டு நிற்கும்படியான பேருருவம் கொண்ட சர்ப்பங்கள் பூட்டப்பட்டிருந்தன. அவைகளின் மூச்சுக்காற்றால், அந்தப் போர்க்களமே பற்றியெரிவது போலிருந்தது. (30)

அரக்கர்களும் அசுரர்களும் அந்தத் தேரைப் புடைசூழ்ந்து நின்றார்கள். போர்க்களத்தை நோக்கிச் சென்ற அந்த அரக்கன், இந்திரனின் எதிரில் போய் நின்றான். (31)

இராவணன், தன் மைந்தனைத் தடுத்து நிறுத்திவிட்டு, தானே போர் செய்ய ஆயத்தமானான்; மேகநாதன், போர்முனையிலிருந்து திரும்பி வந்து தன் தேரில் அமர்ந்து கொண்டுவிட்டான். (32)

பின்னர், தேவர்களுக்கும் அரக்கர்களுக்குமிடையே பெரும்போர் தொடங்கியது. வானத்திலிருந்து மேகங்கள் படைக்கலங்களைப் பொழிவதைப் போல, அந்தப் போர்க்களத்தில் அஸ்திர மழை பொழிந்தது. (33)

போர்க்களத்தில், கெடுமதியாளனான கும்பகர்ணன் பல்வகைப் படைக்கலங்களைக் கொண்டு, இன்னார்–இனையர் என்பது புரியாமல் எல்லோருடனும் போர்புரிந்து கொண்டிருந்தான். (34)

அவன், தன் பற்களாலும் புஜங்களாலும் கால்களாலும் மற்றும் நீண்ட வேல், கைவேல், அம்புகள் முதலியவற்றாலும் – கையில் எது அகப்பட்டதோ, அந்த ஆயுதத்தினால் – தேவர்களைத் தாக்கிக் கொண்டிருந்தான். (35)

Koviloor Digital Library

ததோ ருத்$_3$ரைர்மஹாகே$_4$ாரை: ஸங்க$_3$ம்யாத$_2$ நிஶாசர: ।
ப்ரயுத்$_3$த$_4$ஸ்தைஶ்ச ஸங்க்$_3$ராமே க்ஷத: ஶஸ்த்ரைர்நிரந்தரம் ॥ (36)

ப$_3$பெ$_4$ள ஶஸ்த்ராசிததநு: கும்ப$_4$கர்ண: க்ஷரந்நஸ்ருக் ।
வித்$_3$யுத்ஸ்தநிதநிர்கே$_4$ாஷோ த$_4$ாராவாநிவ தோயத$_3$: ॥ (37)

ததஸ்தத்$_3$ராக்ஷஸம் ஸைந்யம் ப்ரயுத்$_3$த$_4$ம் ஸமருத்$_3$க$_3$ணை: ।
ரணே வித்$_3$ராவிதம் ஸர்வம் நாநாப்ரஹரணை: ஶிதை: ॥ (38)

கேசித்$_3$விநிஹதா: க்ருத்தாஶ்சேஷ்டந்தி ஸ்ம மஹீதலே ।
வாஹநேஷ்வவஸக்தாஶ்ச ஸ்தி$_2$தா ஏவாபரே ரணே ॥ (39)

ரத$_2$ந்நாக$_3$ாந் க$_2$ராநுஷ்ட்ராந் பந்நக$_3$ாம்ஸ்துரக$_3$ாந் ரணே ।
ஶிம்ஶுமாராந் வராஹாம்ஶ்ச பிஶாசவத$_3$நாம்ஸ்தத$_2$ா ॥ (40)

தாந் ஸமாலிங்க்$_3$ய ப$_3$ாஹுப்$_4$யாம் விஷ்டப்$_3$த$_4$ா: கேசிது$_3$ச்ச்$_2$ரிதா: ।
தே$_3$வைஸ்து ஶஸ்த்ரஸம்பி$_4$ந்நா மம்ரிரே ச நிஶாசரா: ॥ (41)

சித்ரகர்ம இவாப$_4$ாதி ஸ தேஷாம் ரணஸம்ப்லவ: ।
நிஹதாநாம் ப்ரமத்தாநாம் ராக்ஷஸாநாம் மஹீதலே ॥ (42)

ஶோணிதோத$_3$கநிஷ்யந்த$_3$கங்கக்$_3$ருத்$_4$ரஸமாகுலா ।
ப்ரவ்ருத்தா ஸம்யுக$_3$முகே$_2$ ஶஸ்த்ரக்$_3$ராஹவதீ நதீ$_3$ ॥ (43)

ஏதஸ்மிந்நந்தரே க்ருத்$_3$தே$_4$ா த$_3$ஶக்$_3$ரீவ: ப்ரதாபவாந் ।
நிரீக்ஷ்ய தத்$_3$ப$_3$லம் க்ருத்ஸ்நம் தை$_3$வதைர்விநிபாதிதம் ॥ (44)

ஸ தம் ப்ரதி விக$_3$ாஹ்யாஶு ப்ரவ்ருத்$_3$த$_4$ம் ஸைந்யஸாக$_3$ரம் ।
த்ரித$_3$ஶாந் ஸமரே நிக்$_4$நஞ்ஶக்ரமேவாப்$_4$யவர்தத ॥ (45)

ஆக$_3$ாச்ச$_2$க்ரோ மஹச்சாபம் விஸ்ப$_2$ார்ய ஸுமஹாஸ்வநம் ।
யஸ்ய விஸ்ப$_2$ாரகே$_4$ாஷேண ஸ்வநந்தி ஸ்ம தி$_3$ஶோ த$_3$ஶ ॥ (46)

தத்$_3$விக்ருஷ்ய மஹச்சாபமிந்த்$_3$ரோ ராவணமூர்த$_4$நி ।
நிபாதயாமாஸ ஶராந் பாவகாதி$_3$த்யவர்சஸ: ॥ (47)

ததை$_2$வ ச மஹாப$_3$ாஹுர்த$_3$ஶக்$_3$ரீவோ வ்யவஸ்தி$_2$த: ।
ஶக்ரம் கார்முகவிப்$_4$ரஷ்டை: ஶரவர்ஷைரவாகிரத் ॥ (48)

ப்ரயுத்$_4$யதோரத$_2$ தயோர்ப$_3$ாணவர்ஷை: ஸமந்தத: ।
ந க்ஞாயதே தத$_3$ா கிஞ்சித் ஸர்வம் ஹி தமஸாவ்ருதம் ॥ (49)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ அஷ்டாவிம்ஶ: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

அந்த அரக்கன் மிகவும் பயங்கரமானவர்களான ருத்ரர்களுடன் மோதினான். அவர்கள், அவனைத் திருப்பித் தாக்கி, அவன் உடலில் காயம் ஏற்படாத சிறு இடம்கூட இல்லாமல் செய்துவிட்டார்கள். (36)

கும்பகர்ணனுடைய உடல் முழுவதும் படைக்கலங்களால் தாக்கப்பட்டு, செந்நீரைப் பெருக்கிக் கொண்டிருந்தது. அப்போது அவன், மின்னல்–இடியுடன் நீரைப் பொழியும் மேகத்தைப் போல் காணப்பட்டான். (37)

ருத்ரர்களும் மருத்கணங்களும் ஒன்று சேர்ந்து அரக்கப் படையை எதிர்த்துப் போரிட்டார்கள். பல்வகையான கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்ட அரக்கப்படை போர்க்களத்திலிருந்து வெளியே ஓடிச்சென்றது. (38)

ஏராளமான அரக்கர்கள் கொல்லப்பட்டார்கள்; வெட்டப்பட்ட பலர் தரையில் விழுந்து புரண்டார்கள்; பல அரக்கர்கள், உயிர்போன நிலையிலும் தத்தம் வாகனங்களிலேயே விழுந்து கிடந்தார்கள். (39)

சில அரக்கர்கள், தேர்–யானை–கழுதை–ஒட்டகம்–நாகம்–குதிரை–முதலை–பன்றி மற்றும் பிசாசு முகம் கொண்ட வாகனங்களை இரு கைகளாலும் அணைத்துக் கொண்டு, செயலற்றுப் படுத்துக் கொண்டிருந்தார்கள். உணர்வு பெற்ற சிலர் எழுந்து நின்றதும், தேவர்களின் ஆயுதங்களால் தாக்கப்பட்டு உயிர் துறந்தார்கள். (40,41)

அரக்கர்கள் எல்லோரும் கொல்லப்பட்டு, உயிர் துறந்து தரையில் கிடந்த காட்சி, ஏதோ ஒரு மாயாஜாலம் போல் வியப்பை விளைவித்தது. (42)

போர்க்களத்தில், படைக்கலங்கள் என்ற முதலைகளுடன் கூடிய இரத்த ஆறு ஓடிற்று. அதன் கரைகளில் காக்கை–கழுகுகள் பறந்துக் கொண்டிருந்தன. (43)

இதனிடையில், பராக்கிரமசாலியான இராவணன் அரக்கர் படை முழுவதும் தேவர்களால் அழிக்கப்பட்டதைக் கண்டு, மிகவும் கோபங்கொண்டு, பெருங்கடல் போல் விசாலமாக நின்றுகொண்டிருந்த தேவர் படையினுள் புகுந்து சென்று, எதிர்ப்பட்ட தேவர்களைக் கொன்றுவிட்டு, இந்திரனுக்கு எதிரில் வந்து நின்றான். (44,45)

இந்திரன், தன்னுடைய மிகப்பெரிய வில்லைப் பேரொலி எழுப்பும்வண்ணம் நாணை வளைத்துக் கொண்டு வந்தான். அந்த நாண் ஒலியினால் பத்துத் திசைகளும் எதிரொலித்தன. (46)

போர்க்களத்தில், அந்த மாபெரும் வில்லை வளைத்து, அக்னி–சூரியர்களுக்கு நிகரான பலம் வாய்ந்த அம்புகளைச் செலுத்தினான். (47)

அவ்வாறே, தோள்வலி மிக்கவனான இராவணன் உறுதியாக நின்றுகொண்டு, தன் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புகளால் இந்திரனை மூடி மறைத்தான். (48)

சரமாரியாக அவர்கள் இருவரும் போர் செய்தார்கள்; நாற்புறமும் எந்தப் பொருளும் கண்ணுக்குப் புலப்படாதவண்ணம் பேரிருள் சூழ்ந்தது. (49)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இருபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஏகோநவிம்ஶ: ஸர்க$_3$:

வாஸவக்$_3$ரஹணம்

ததஸ்தமஸி ஸம்ஜாதே ஸர்வே தே தே$_3$வராக்ஷஸா: ।
அயுத்$_4$யந்த ப$_3$லோந்மத்தா: ஸூத$_3$யந்த: பரஸ்பரம் ॥ (1)

ததஸ்து தே$_3$வஸைந்யேந ராக்ஷஸாநாம் ப்$_3$ருஹத்$_3$ப$_3$லம் ।
த$_3$ஶாம்ஶம் ஸ்தா$_2$பிதம் யுத்$_3$தே$_4$ ஶேஷம் நீதம் யமக்ஷயம் ॥ (2)

தஸ்மிம்ஸ்து தாமஸே யுத்$_3$தே$_4$ ஸர்வே தே தே$_3$வராக்ஷஸா: ।
அந்யோந்யம் நாப்$_4$யஜாநந்த யுத்$_4$யமாநா: பரஸ்பரம் ॥ (3)

இந்த்$_3$ரஶ்ச ராவணஶ்சைவ ராவணிஶ்ச மஹாப$_3$ல: ।
தஸ்மிம்ஸ்தமோஜாலவ்ருதே மோஹமீயுர்ந தே த்ரய: ॥ (4)

ஸ து த்$_3$ருஷ்ட்வா ப$_3$லம் ஸர்வம் நிஹதம் ராவண: க்ஷணாத் ।
க்ரோத$_4$மப்$_4$யாக$_3$மத்தீவ்ரம் மஹாநாத$_3$ம் ச முக்தவாந் ॥ (5)

க்ரோதா$_4$த் ஸூதம் ச து$_3$ர்த$_4$ர்ஷ: ஸ்யந்த$_3$நஸ்த$_2$முவாச ஹ ।
பரஸைந்யஸ்ய மத்$_4$யேந யாவத$_3$ந்தோ நயஸ்வ மாம் ॥ (6)

அத்$_3$யைதாம்ஸ்த்ரித$_3$ஶாந் ஸர்வாந் விக்ரமை: ஸமரே ஸ்வயம் ।
நாநாஶஸ்த்ரைர்மஹாகோ$_4$ரைர்நயாமி யமஸாத$_3$நம் ॥ (7)

அஹமிந்த்$_3$ரம் வதி$_4$ஷ்யாமி த$_4$நத$_3$ம் வருணம் யமம் ।
த்ரித$_3$ஶாந் விநிஹத்யாத$_2$ ஸ்வயம் ஸ்தா$_2$ஸ்யாம்யதோ$_2$பரி ॥ (8)

விஷாதோ$_3$ ந ச கர்தவ்ய: ஶீக்$_4$ரம் வாஹய மே ரத$_2$ம் ।
த்$_3$வி: க$_2$லு த்வாம் ப்$_3$ரவீம்யத்$_3$ய யாவத$_3$ந்தோ நயஸ்வ மாம் ॥ (9)

அயம் ஸ நந்த$_3$நோத்$_3$தே$_3$ஶோ யத்ர வர்தாமஹே வயம் ।
நய மாமத்$_3$ய தத்ர த்வமுத$_3$யோ யத்ர பர்வத: ॥ (10)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா துரங்கா$_3$ந் ஸ மநோஜவாந் ।
ஆதி$_3$தே$_3$ஶாத$_2$ ஶத்ரூணாம் மத்$_4$யேநைவ ச ஸாரதி$_2$: ॥ (11)

தஸ்ய தம் நிஶ்சயம் க்ஞாத்வா ஶக்ரோ தே$_3$வேஶ்வரஸ்ததா$_3$ ।
ரத$_2$ஸ்த$_2$: ஸமரஸ்தா$_2$ம்ஸ்தாந் தே$_3$வாந் வாக்யமதா$_2$ப்$_3$ரவீத் ॥ (12)

ஸுரா: ஶ்ருணுத மத்$_3$வாக்யம் யத்தாவந்மம ரோசதே ।
ஜீவந்நேவ த$_3$ஶக்$_3$ரீவ: ஸாது$_4$ ரக்ஷோ நிக்$_3$ருஹ்யதாம் ॥ (13)

ஏஷ ஹ்யதிப$_3$ல: ஸைந்யே ரதே$_2$ந பவநௌஜஸா ।
க$_3$மிஷ்யதி ப்ரவ்ருத்$_3$தோ$_4$ர்மி: ஸமுத்$_3$ர இவ பர்வணி ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : இருபத்தொன்பது

இந்திரன் பிடிபட்டான்!

அங்கு பேரிருள் சூழ்ந்ததும், தேவ–அரக்கர்கள் எல்லோரும் தத்தம் ஆற்றலினால் செருக்குற்றவர்களாக ஒருவரையொருவர் வெட்டி வீழ்த்திக் கொண்டு போர் புரிந்தார்கள். (1)

அப்போது, அரக்கர்களின் மாபெரும் படையில் பத்தில் ஒரு பங்கு மட்டுமே மிகுந்திருந்தது; மீதி அனைவரும் யமலோகத்திற்கு அனுப்பப்பட்டார்கள். இருள் அடர்ந்த அந்தப் போர்க்களத்தில், தேவர்களும் அரக்கர்களும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொள்ள முடியாமல், தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டார்கள். (2,3)

இந்திரன், இராவணன், பெரும் பலசாலியான மேகநாதன் ஆகிய மூவர் மட்டும், அடர்த்தியான பேரிருளால் மனம் மயங்காமல் இருந்தார்கள். (4)

தன்னுடைய சேனை முழுவதும் நொடிப்பொழுதில் அழிக்கப்பட்டதைக் கண்டு, மிகவும் கோபமடைந்த இராவணன் பேரொலி எழுப்பினான். (5)

வெல்லற்கரியவனான அவன், கோபத்துடன் தன் தேர்ப்பாகனைப் பார்த்து, ''எதிரிப்படையின் எதிர்ப்புற எல்லை வரை, படைகளின் நடுவிலேயே தேரைச் செலுத்திச் செல்வாயாக'' என்றான். (6)

''என்னுடைய போர்த்திறத்தினால், எல்லா தேவர்களையும் மிகவும் பயங்கரமான பல்வகை ஆயுதங்களால், யமன் வீட்டிற்கு நானே அனுப்பி வைக்கிறேன். (7)

இந்திரன், குபேரன், வருணன், யமன் ஆகிய தேவர்களை ஒரேயடியாக அழித்து, நான் அவர்கள் மேல் நிற்பேன்! (தரையில் புரளும் அவர்கள் உடல் மேல் வெற்றிவீரனாக நிற்பேன்.) (8)

நீ, கவலைப்படாதே; என்னுடைய தேரை விரைவாகச் செலுத்து. கண்டிப்பாக, மறுபடியும் சொல்கிறேன். எதிரிப்படையின் எதிர்ப்புற எல்லை வரை தேரைச் செலுத்து. (9)

இப்போது நாம் இருக்கும் இடம், நந்தனவனம். (இவ்விடம் தேவர்கள் படையின் துவக்கம்.) இப்போது, என்னை உதயகிரி வரை அழைத்துச் செல்வாயாக. (அவ்வளவு தொலைவுக்கு தேவர் படை பரவியிருந்தது!) (10)

அவனுடைய உத்தரவைக் கேட்ட தேர்ப்பாகன், மனோவேகம் கொண்ட குதிரைகளை எதிரிப்படையினூடே செலுத்திக் கொண்டு போனான். (11)

இராவணனின் உறுதியான அந்த எண்ணத்தைப் புரிந்துகொண்ட இந்திரன், தேரிலிருந்தபடியே போர்க்களத்திலிருந்த தேவர்களைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினான்— (12)

''தேவர்களே! நான் சொல்லப் போவதைக் கேளுங்கள். இப்போது எனக்கு எது நல்லது என்றுபடுகிறதோ, அதைச் சொல்கிறேன். பத்துத் தலையனான இந்த அரக்கனை, உயிரோடு நாம் கைப்பற்றி விடவேண்டும். (13)

இவன் எல்லையில்லாத ஆற்றலுடையவன்; வாயுவேகம் கொண்ட தேரில் நமது படையின் நடுவில் வழி ஏற்படுத்திக் கொண்டு, பர்வ நாட்களில் உயரமாக எழும்பி ஆர்ப்பரித்துச் செல்லும் கடல் அலைபோல் முன்னேறிக் கொண்டிருக்கிறான். (14)

Koviloor Digital Library

ந ஹ்யேஷ ஹந்தும் ஶக்யோऽத்$_3$ய வரத$_3$ாநாத் ஸுநிர்ப$_4$ய: ।
தத்$_3$க்$_3$ரஹீஷ்யாமஹே ரக்ஷோ யத்தா ப$_4$வத ஸம்யுகே$_3$ ॥ (15)

யத$_2$ா ப$_3$லௌ நிருத்$_3$தே$_4$ ச த்ரைலோக்யம் பு$_4$ஜ்யதே மயா ।
ஏவமேதஸ்ய பாபஸ்ய நிரோதே$_4$ா மம ரோசதே ॥ (16)

ததோऽந்யம் தே$_3$ஶமாஸ்த$_2$ாய ஶக்ர: ஸந்த்யஜ்ய ராவணம் ।
அயுத்$_4$யத மஹாராஜ ராக்ஷஸாம்ஸ்த்ராஸயந் ரணே ॥ (17)

உத்தரேண த$_3$ஶக்$_3$ரீவ: ப்ரவிவேஶாநிவர்தக: ।
த$_3$க்ஷிணேந து பார்ஶ்வேந ப்ரவிவேஶ ஶதக்ரது: ॥ (18)

தத: ஸ யோஜநஶதம் ப்ரவிஷ்டோ ராக்ஷஸாதி$_4$ப: ।
தே$_3$வதாநாம் ப$_3$லம் ஸர்வம் ஶரவர்ஷைரவாகிரத் ॥ (19)

தத: ஶக்ரோ நிரீக்ஷ்யாத$_2$ ப்ரநஷ்டம் து ஸ்வகம் ப$_3$லம் ।
ந்யவர்தயத$_3$ஸம்ப்$_4$ராந்த: ஸமாவ்ருத்ய த$_3$ஶாநநம் ॥ (20)

ஏதஸ்மிந்நந்தரே நாதே$_3$ா முக்தோ த$_3$ாநவராக்ஷஸை: ।
ஹா ஹதா: ஸ்ம இதி க்$_3$ரஸ்தம் த்$_3$ருஷ்ட்வா ஶக்ரேண ராவணம் ॥ (21)

ததோ ரத$_2$ம் ஸமாஸ்த$_2$ாய ராவணி: க்ரோத$_4$மூர்சி$_2$த: ।
தத்ஸைந்யமதிஸங்க்ருத்$_3$த$_4$: ப்ரவிவேஶ ஸுத$_3$ாருணம் ॥ (22)

தாம் ப்ரவிஶ்ய மஹாமாயாம் ப்ராப்தாம் பஶுபதே: புரா ।
ப்ரவிவேஶ ஸுஸம்ரப்$_3$த$_4$ஸ்தத்ஸைந்யம் ஸமபி$_4$த்$_3$ரவத் ॥ (23)

ஸ ஸர்வா தே$_3$வதாஸ்த்யக்த்வா ஶக்ரமேவாப்$_4$யத$_4$ாவத ।
மஹேந்த்$_3$ரஶ்ச மஹாதேஜா நாபஶ்யச்ச ஸுதம் ரிபோ: ॥ (24)

விமுக்தகவசஸ்தத்ர வத்$_4$யமாநோऽபி ராவணி: ।
த்ரித$_3$ஶை: ஸுமஹாவீரைர்ந சகார ச கிஞ்சந ॥ (25)

ஸ மாதலிம் ஸமாயாந்தம் தாட$_3$யித்வா ஶரோத்தமை: ।
மஹேந்த்$_3$ரம் ப$_3$ாணவர்ஷேண பூ$_4$ய ஏவாப்$_4$யவாகிரத் ॥ (26)

ததஸ்த்யக்த்வா ரத$_2$ம் ஶக்ரோ விஸஸர்ஜ ச ஸாரதி$_2$ம் ।
ஐராவதம் ஸமாருஹ்ய ம்ருக$_3$யாமாஸ ராவணிம் ॥ (27)

ஸ தத்ர மாயாப$_3$லவாநத்$_3$ருஶ்யோऽத$_2$ாந்தரிக்ஷக$_3$: ।
இந்த்$_3$ரம் மாயாபரிக்ஷிப்தம் க்ருத்வா ஸம்ப்ராத்$_3$ரவச்ச$_2$ரை: ॥ (28)

ஸ தம் யத$_2$ா பரிஶ்ராந்தமிந்த்$_3$ரம் ஜக்$_3$நேऽத$_2$ ராவணி: ।
ததை$_3$நம் மாயயா ப$_3$த்$_3$த்$_4$வா ஸ்வஸைந்யமபி$_4$தோऽநயத் ॥ (29)

Koviloor Digital Library

பிரும்மாவிடமிருந்து பெற்றுள்ள வரத்தினால், இவன் அச்சமில்லாமல் இருக்கிறான். இவனை, இப்போது கொல்ல முடியாது. போர்க்களத்தில், நீங்கள் கவனமாக இருந்து, இவனைக் கைப்பற்ற முயலுங்கள். (15)

பலிச் சக்கரவர்த்தியின் பலம் அடக்கப்பட்ட பின்னரே, நான் மூவுலகத்தையும் அனுபவித்து வருகிறேன். (அவனைக் கொல்லவில்லை.) அதேபோல இந்தப் பாவியைத் தடுத்து நிறுத்துவதே முக்கியம் என்று எனக்குத் தோன்றுகிறது. (இவனைக் கைது செய்யாவிட்டால் தேவர்கள் நிம்மதியாக வாழ முடியாது.) (16)

மாமன்னனே! (இராமா!) உடனே இந்திரன், இராவணனை விட்டுவிட்டு வேறிடம் சென்று, அரக்கர்களை அஞ்சி நடுங்கச் செய்துகொண்டு போர் செய்யத் தொடங்கினான். (17)

போரில் பின்வாங்காத இராவணன், வடக்குப் பக்கத்திலிருந்து போர்க்களத்திற்குள் புகுந்தான். இந்திரன், தெற்குப் பகுதியிலிருந்து நுழைந்தான். (18)

தேவர் படைக்குள் நூறு யோஜனை தூரம் சென்றுவிட்ட அரக்கர்கோன், தேவசேனை முழுவதையும் அம்புமாரியால் மூடி மறைத்தான். (19)

தன்னுடைய படைவீரர்கள் அழிந்துபோவதைக் கண்ட இந்திரன், சிறிதும் மனங்கலங்காமல் இராவணனை நாற்புறமும் சூழ்ந்துகொண்டு போரைக் கைவிடச் செய்தான். (20)

இதனிடையில், அசுர–அரக்கர்கள், இந்திரனால் இராவணன் பிடிக்கப்பட்டதைக் கண்டு, (மனம் உடைந்து) ''அடாடா..... செத்தோம், நாம்.....'' என்று அலறினார்கள். (21)

அப்போது கோபம் தலைக்கு ஏறிய மேகநாதன், தேரில் அவ்விடம் வந்து, பயங்கரமான அந்தப் படைக்குள் மிகவும் கோபங்கொண்டு நுழைந்தான். (22)

படையின் இடையே புகுந்த அவன், முன்னர் பரமேசுவரனிடமிருந்து பெற்ற மாயக்கலையைப் பயன்படுத்தி, தன்னை மறைத்துக் கொண்டு, கட்டுக்கடங்காத சினத்தோடு எதிரிப்படையைத் தாக்கினான். (23)

அவன், மற்ற எல்லா தேவர்களையும் ஒதுக்கிவிட்டு, இந்திரனை நோக்கியே ஓடினான். பேராற்றல் பொருந்திய மகேந்திரனின் கண்களுக்கு, எதிரியின் மைந்தன் (மேகநாதன்) புலப்படவில்லை. (24)

மாவீரர்களான தேவதைகளால் தாக்கப்பட்டு, தன் கவசத்தைப் பறிகொடுத்தபோதிலும், மேகநாதன் சிறிதும் அச்சம் கொள்ளவில்லை. (25)

அவன், (இந்திரனுடைய தேர்ப்பாகனான) மாதலி தேரை ஓட்டிக்கொண்டு, தன்னை நோக்கி வருவதைப் பார்த்து, குறிதவறாத அம்புகளால் அவனைப் புடைத்து, சரமாரியால் மறுபடியும் இந்திரனை மூடி மறைத்தான். (26)

உடனே, தேரையும் பாகனையும் துறந்த இந்திரன், ஐராவதத்தின்மேல் ஏறிக்கொண்டு இராவண மைந்தனைத் தேட ஆரம்பித்தான். (27)

மாய சக்தியினால், மிகவும் பலம் பெற்றிருந்த மேகநாதன், கண்ணுக்குப் புலப்படாதவனாக ஆகாயத்தில் இருந்துகொண்டு, இந்திரனை மாயையால் சூழச்செய்து, பின் அம்புகளைச் செலுத்தி மிகவும் துன்புறுத்தினான். (28)

'இந்திரன் மிகவும் களைப்படைந்திருக்கிறான்' என்பதை நன்றாகத் தெரிந்துகொண்ட இராவண மைந்தன், அவனை மாயையால் கட்டி, தன் படையிருந்த பகுதிக்குள் கொண்டு வந்தான். (29)

Koviloor Digital Library

தம் து த்$_3$ருஷ்ட்வா ப$_3$லாத்தேந நீயமாநம் மஹாரணாத் ।
மஹேந்த்$_3$ரமமரா: ஸர்வே கிம் நு ஸ்யாதி$_3$த்யசிந்தயந் ॥ (30)

த்$_3$ருஶ்யதே ந ஸ மாயாவீ ஶக்ரஜித் ஸமிதிஞ்ஜய: ।
வித்$_3$யாவாநபி யேநேந்த்$_3$ரோ மாயயா நீயதே ப$_3$லாத் ॥ (31)

ஏதஸ்மிந்நந்தரே க்ருத்$_3$தா$_4$: ஸர்வே ஸுரக$_3$ணாஸ்ததா$_3$ ।
ராவணம் விமுகீ$_2$க்ருத்ய ஶரவர்ஷைரவாகிரந் ॥ (32)

ராவணஸ்து ஸமாஸாத்$_3$ய ஆதி$_3$த்யாம்ஶ்ச வஸூம்ஸ்ததா$_2$ ।
ந ஶஶாக ஸ ஸங்க்$_3$ராமே யோத்$_3$து$_4$ம் ஶத்ருபி$_4$ரர்தி$_3$த: ॥ (33)

ஸ தம் த்$_3$ருஷ்ட்வா பரிம்லாநம் ப்ரஹாரைர்ஜர்ஜரீக்ருதம் ।
ராவணி: பிதரம் யுத்$_3$தே$_4$ऽத$_3$ர்ஶநஸ்தே$_2$ऽப்$_3$ரவீதி$_3$த$_3$ம் ॥ (34)

ஆக$_3$ச்ச$_2$ தாத க$_3$ச்சா$_2$மோ ரணகர்ம நிவர்ததாம் ।
ஜிதம் நோ விதி$_3$தம் தேऽஸ்து ஸ்வஸ்தோ$_2$ ப$_4$வ க$_3$தஜ்வர: ॥ (35)

அயம் ஹி ஸுரஸைந்யஸ்ய த்ரைலோக்யஸ்ய ச ய: ப்ரபு$_4$: ।
ஸ க்$_3$ருஹீதோ தை$_3$வப$_3$லாத்$_3$ப$_4$க்$_3$நத$_3$ர்பா: ஸுரா: க்ருதா: ॥ (36)

யதே$_2$ஷ்டம் பு$_4$ங்க்ஷ்வ லோகாம்ஸ்த்ரீந்நிக்$_3$ருஹ்யாராதிமோஜஸா ।
வ்ருதா$_2$ கிம் தே ஶ்ரமேணேஹ யுத்$_3$த$_4$மத்$_3$ய து நிஷ்ப$_2$லம் ॥ (37)

ததஸ்தே தை$_3$வதக$_3$ணா நிவ்ருத்தா ரணகர்மண: ।
தச்ச்$_2$ருத்வா ராவணேர்வாக்யம் ஶக்ரஹீநா: ஸுரா க$_3$தா: ॥ (38)

அத$_2$ ரணவிக$_3$த: ஸ உத்தமௌஜா:
த்ரித$_3$ஶரிபு: ப்ரதி$_2$தோ நிஶாசரேந்த்$_3$ர: ।
ஸ்வஸுதவசநமாத்$_3$ருத: ப்ரியம் தத்
ஸமநுநிஶம்ய ஜகா$_3$த$_3$ சைவ ஸூநும் ॥ (39)

அதிப$_3$லஸத்$_3$ருஶை: பராக்ரமைஸ்த்வம் மம குலவம்ஶவிவர்த$_4$ந: ப்ரபோ$_4$ ।
யத$_3$யமதுல்யப$_3$லஸ்த்வயாத்$_3$ய வை த்ரித$_3$ஶபதிஸ்த்ரித$_3$ஶாஶ்ச நிர்ஜிதா: ॥ (40)

நய ரத$_2$மதி$_4$ரோப்ய வாஸவம் நக$_3$ரமிதோ வ்ரஜ ஸேநயா வ்ருதஸ்த்வம் ।
அஹமபி தவ ப்ருஷ்ட$_2$தோ த்$_3$ருதம் ஸஹ ஸசிவைரநுயாமி ஹ்ருஷ்டவத் ॥ (41)

அத$_2$ ஸ ப$_3$லவ்ருத: ஸவாஹநஸ்த்ரித$_3$ஶபதிம் பரிக்$_3$ருஹ்ய ராவணி: ।
ஸ்வப$_4$வநமதி$_4$க$_3$ம்ய வீர்யவாந் க்ருதஸமராந் விஸஸர்ஜ ராக்ஷஸாந் ॥ (42)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகோநத்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

போர்க்களத்திலிருந்து இந்திரன் பலாத்காரமாகக் கொண்டு செல்லப்படுவதைக் கண்ட தேவர்கள், ''இப்போது நாம் என்ன செய்வது?'' என்று திகைத்து நின்றார்கள். (30)

போரில், வெற்றி பெறுபவனும் இந்திரனின் பகைவனுமான அந்த மாயாவி, கண்ணுக்குப் புலப்படவில்லை; ஆனால், மாயையின் சக்தியினால் பலாத்காரமாக இந்திரன் இழுத்துச் செல்லப்படுவது கண்ணுக்குத் தெரிகிறதே! (31)

இவ்வாறு சிந்தித்த தேவர்கள், மிகவும் சினங்கொண்டு இராவணனை எதிர்த்து நின்று அம்புப் பொழிவினால் அவனை மூடி மறைத்தார்கள். ஆதித்யர்களும் வசுக்களும் ஒன்றுகூடி இராவணனை எதிர்த்தார்கள். போர்முனையில் எதிரிகளால் தாக்கப்பட்ட அவன், அவர்களுடைய எதிர்ப்பைத் தாங்க முடியாமல் திணறினான். (32,33)

இராவணனுடைய சரீரம் முழுவதும் எதிரிகளின் படைக்கலங்களால் தாக்கப்பட்டு நலிவடைந்திருந்தது; (மனம்) வாடிப்போயிருந்தது. இந்த நிலையில் அவனைக் கண்ட மேகநாதன், பிறரால் காணப்படாத மாய நிலையிலும், தந்தையிடம் பின்வருமாறு கூறினான்— (34)

''தந்தையே! வாருங்கள், நாம் திரும்பிச் செல்வோம். போர் செய்வதை இத்துடன் நிறுத்திக் கொள்வோம். நாம் (இந்திரனைக் கைப்பற்றி அழைத்துச் செல்வதால்) வெற்றி பெற்றுவிட்டோம். கவலையை உதறித் தள்ளிவிட்டு மன அமைதியுடன் இருங்கள். (35)

தேவர் படைக்கும் மற்றும் மூன்று உலகங்களுக்கும் தலைவனான இவன் (இந்திரன்) நம்மால் பிடிபட்டுவிட்டான். தெய்வத்தின் அருளால் (நாம் பெற்றுள்ள வரங்கள் காரணமாக) தேவர்களின் கொட்டம் அடக்கப்பட்டுவிட்டது. (36)

உங்களுடைய எதிரிகளைப் பராக்கிரமத்தினால் வென்று மூன்று உலக போகங்களையும் விருப்பப்படி அனுபவியுங்கள். இங்கே, இனி நமக்கு வேலையில்லை. (தலைவனே கைதியாகிவிட்ட நிலையில்) இப்போது தொடர்ந்து போர்புரிவதில் பொருளில்லை.'' (37)

பின்னர், தேவதைக் கூட்டங்கள் போர் செய்வதை நிறுத்தினார்கள். இராவணன் தன் புதல்வன் கூறியதைக் கேட்டு, தெளிந்த மனம் உடையவனானான். (38)

போரிலிருந்து விலகிய அந்த வலிவுமிக்க தேவர்களின் எதிரியான புகழ்பெற்ற அரக்க மன்னன், தன் மகனின் சொல்லை அக்கரையுடன் கேட்டு, தன் மைந்தனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினான்— (39)

''அளவுகடந்த உடல்வலிமையும் பராக்கிரமமும் பெற்ற தேவர்களின் தலைவனும் மற்றும் தேவர்களும், நிகரில்லாத ஆற்றல் படைத்த உன்னால் வெற்றி கொள்ளப்பட்டிருக்கிறார்கள்! உன்னால், என் பரம்பரையின் பெருமை வளர்ந்தோங்கிவிட்டது. (40)

படைகள் சூழப்பெற்று, இந்திரனைத் தேரில் ஏற்றிக் கொண்டு நகரத்திற்குச் செல்வாயாக. நானும் உன்னைத் தொடர்ந்து அமைச்சர்களுடன்கூடப் பின்னால் வருகிறேன்.'' (41)

பின்னர், படைவீரர்கள் சூழ்ந்துவர தேருடன் தேவர்கோனைக் கைப்பற்றிய மாவீரனான இராவண மைந்தன், தன் இல்லம் நோக்கிச் சென்று, தனக்குத் துணையாகப் போர்க்களத்தில் போர் செய்த அரக்கர்களுக்கு விடைகொடுத்து அனுப்பி வைத்தான். (42)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இருபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

த்ரிம்ஶ: ஸர்க$_3$:

இந்த்$_3$ரபராஜயகாரணகத$_2$நம்

ஜிதே மஹேந்த்$_3$ரேऽதிப$_3$லே ராவணஸ்ய ஸுதேந வை ।
ப்ரஜாபதிம் புரஸ்க்ருத்ய யயுர்லங்காம் ஸுராஸ்தத$_3$ா ॥ (1)

தத்ர ராவணமாஸாத்$_3$ய புத்ரப்$_4$ராத்ருபி$_4$ராவ்ருதம் ।
அப்$_3$ரவீத்$_3$க$_3$க$_3$நே திஷ்ட$_2$ந் ஸாமபூர்வம் ப்ரஜாபதி: ॥ (2)

வத்ஸ ராவண துஷ்டோऽஸ்மி புத்ரஸ்ய தவ ஸம்யுகே$_3$ ।
அஹோऽஸ்ய விக்ரமௌத$_3$ார்யம் தவ துல்யோऽதி$_4$கோऽபி வா ॥ (3)

ஜிதம் ஹி ப$_4$வதா ஸர்வம் த்ரைலோக்யம் ஸ்வேந தேஜஸா ।
க்ருதா ப்ரதிக்ஞா ஸப$_2$லா ப்ரீதோऽஸ்மி ஸ்வஸுதேந வை ॥ (4)

அயம் ச புத்ரோऽதிப$_3$லஸ்தவ ராவண வீர்யவாந் ।
ஜக$_3$தீந்த்$_3$ரஜிதித்$_3$யேவ பரிக்$_2$யாதோ ப$_4$விஷ்யதி ॥ (5)

ப$_3$லவாந் து$_3$ர்ஜயஶ்சைவ ப$_4$விஷ்யத்யேவ ராக்ஷஸ: ।
யம் ஸமாஶ்ரித்ய தே ராஜந் ஸ்த$_2$ாபிதாஸ்த்ரித$_3$ஶா வஶே ॥ (6)

தந்முச்யதாம் மஹாப$_3$ாஹோ மஹேந்த்$_3$ர: பாகஶாஸந: ।
கிம் சாஸ்ய மோக்ஷணார்த$_2$ாய ப்ரயச்ச$_2$ந்து தி$_3$வௌகஸ: ॥ (7)

அத$_2$ாப்$_3$ரவீந்மஹாதேஜா இந்த்$_3$ரஜித் ஸமிதிஞ்ஜய: ।
அமரத்வமஹம் தே$_3$வ வ்ருணே யத்$_3$யேஷ முச்யதே ॥ (8)

சதுஷ்பத$_3$ாம் கே$_2$சராணாமந்யேஷாம் ச மஹௌஜஸாம் ।
வ்ருக்ஷகு$_3$ல்மக்ஷுபலதாத்ருணோபலமஹீப்$_4$ருதாம் ॥ (9)

ஸர்வேऽபி ஜந்தவோऽந்யோந்யம் பே$_4$தவ்யே ஸதி பி$_3$ப்$_4$யதி ।
அதோऽத்ர லோகே ஸர்வேஷாம் ஸர்வஸ்மாச்ச ப$_4$வேத்$_3$ப$_4$யம் ॥ (10)

ததோऽப்$_3$ரவீந்மஹாதேஜா மேக$_4$நாத$_3$ம் ப்ரஜாபதி: ।
நாஸ்தி ஸர்வாமரத்வம் ஹி கஸ்யசித் ப்ராணிநோ பு$_4$வி ॥
சதுஷ்பத$_3$: பக்ஷிணஶ்ச பூ$_4$தாநாம் வா மஹௌஜஸாம் ॥ (11)

ஶ்ருத்வா பிதாமஹேநோக்தமிந்த்$_3$ரஜித் ப்ரபு$_4$ணாவ்யயம் ।
அத$_2$ாப்$_3$ரவீத் ஸ தத்ரஸ்த$_2$ம் மேக$_4$நாதே$_3$ா மஹாப$_3$ல: ॥ (12)

ஶ்ரூயதாம் வா ப$_4$வேத் ஸித்$_3$தி$_4$: ஶதக்ரதுவிமோக்ஷணே ।
மமேஷ்டம் நித்யஶோ ஹவ்யைர்மந்த்ரை: ஸம்பூஜ்ய பாவகம் ॥
ஸங்க்$_3$ராமமவதர்தும் ச ஶத்ருநிர்ஜயகாங்க்ஷிண: ॥ (13)

அஶ்வயுக்தோ ரதே$_2$ா மஹ்யமுத்திஷ்டே$_2$த்து விப$_4$ாவஸோ: ।
தத்ஸ்த$_2$ஸ்யாமரதா ஸ்யாந்மே ஏஷ மே நிஶ்சயோ வர: ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : முப்பது

இந்திரன் தோற்றதற்கான காரணம்

இராவணனுடைய புதல்வன் மேகநாதன், பேராற்றல் கொண்ட இந்திரனை வெற்றிகொண்டு, தன்னுடைய பட்டணத்திற்கு அழைத்துச் சென்றதும், தேவதைகள் எல்லோரும் பிரும்மதேவரை முன்னிட்டுக் கொண்டு இலங்கையை அடைந்தார்கள். (1)

பிரும்மதேவர், ஆகாயத்தில் நின்றபடியே புதல்வர்களும் சகோதரர்களும் சூழ வீற்றிருக்கும் இராவணன் அருகில் சென்று இனிய சொற்களைக் கூறலானார்— (2)

''அன்புச் செல்வனே! இராவணா! போர்க்களத்தில், உன் புத்திரனுடைய வீரத்தைக் கண்டு, நான் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். உனக்கு நிகரான, ஏன், உனக்கும் மேம்பட்ட வீரத்தைப் பெற்றிருக்கிறான், அவன்! உன் குமாரனுடைய பேராற்றல் துணை செய்ய உன்னுடைய பராக்கிரமத்தினால், மூன்று உலகங்களையும் நீ வென்றுவிட்டாய்! நீ செய்த சபதத்தை நிறைவேற்றிவிட்டாய். நான் உன்னிடம் மகிழ்வுடன் இருக்கிறேன். (3,4)

இராவணா! உன்னுடைய இந்தப் புதல்வன் மேகநாதன் அளவற்ற ஆற்றலுடையவன். இனி, இந்திரஜித் (இந்திரனை வென்றவன்) என்ற பெயரால் உலகில் புகழடையப் போகிறான். (5)

மன்னனே! எவனுடைய உதவியைக் கொண்டு, தேவர்கள் எல்லோரையும் உன் கைப்பிடியில் அடக்கி வைத்துக்கொண்டாயோ, அப்படிப்பட்ட இந்த அரக்கன் (இந்திரஜித்) மிகுந்த பலசாலியாகவும், எவராலும் வெல்ல முடியாதவனாகவும் ஆகப்போகிறான். (6)

தோள்வலி மிக்கவனே! அமரர் உலக ஆட்சியாளனான மகேந்திரனை விடுவிப்பாய். இவனை விடுதலை செய்வதற்குப் பிரதி உபகாரமாக தேவர்கள் என்ன கொடுக்கவேண்டும்? (என்று எதிர்ப்பார்க்கிறாய்.)'' (7)

(உடனே,) எதிரிகளை வெற்றிகொள்ளும் மாவீரனான இந்திரஜித், ''ஐயனே! இவரை விடுவிக்க வேண்டுமானால், எனக்கு சாகாவரம் தந்தருள வேண்டும்'' என்று கூறினான். (8)

''இவ்வுலகில், நாற்கால் பிராணிகள், வானத்தில் பறக்கும் பிராணிகள், மற்றுமுள்ள பலம் மிக்க (மனிதப்) பிராணிகள், மரங்கள், புதர்கள், செடி–கொடிகள், பாறைகள், மலைகள் ஆகிய எல்லா ஜந்துக்களுமே ஒன்றைக்கண்டு மற்றொன்று மனத்திற்குள் அஞ்சுகின்றன. அதனால், இந்த உலகில் எல்லோருக்கும் எல்லாவற்றைக் கண்டும் அச்சம் இருக்கிறது. (அதனால்தான், நான் சாகாவரம் கேட்கிறேன்!)'' (9,10)

மகிமைமிக்க பிரும்மா, அப்போது மேகநாதனை நோக்கி, ''இவ்வுலகில், எப்போதும் நிரந்தரமான வாழ்வு என்பது நாற்கால் பிராணி, பறவைகள், ஆற்றல்மிக்க பூதங்கள் என்ற எந்தப் பிராணிக்கும் இல்லவேயில்லை'' என்று கூறினார். (11)

அழிவற்ற தனிப்பெரும் தலைவரான பிரும்மா கூறியதைக் கேட்ட பேராற்றல் பொருந்திய இந்திரஜித் என்கிற மேகநாதன் சொன்னான்— (12)

''(உலகில் அழிவில்லாத நிரந்தரமான உயிர்வாழ்க்கை அடையப்பட முடியாதது என்கிறீர்கள். சரி, போகட்டும். என்னுடைய வேறொரு நிபந்தனையை இப்போது கேளுங்கள்.) நான், என் எதிரியை வெற்றி கொள்ள விரும்பி, போர்க்களத்தில் இறங்குவதற்கு முன், மந்திரங்கள் கூறி, அக்னிதேவருக்கு ஆகுதிகள் கொடுப்பேன். அப்போது, அந்த அக்னியிலிருந்து (வேள்விக் குண்டத்திலிருந்து) குதிரைகள் பூட்டிய ஒரு தேர் எழும்பி வரவேண்டும். நான் அந்தத் தேரில் இருக்கும் வரை, எவராலும் என் உயிரைப் பறிக்க முடியாதிருக்க வேண்டும். இதுவே நான் உறுதியாகக் கேட்கும் வரம். (13,14)

Koviloor Digital Library

தஸ்மிந் யத்3யஸமாப்தே ச ஜப்யஹோமே விப4வஸௌ ।
யுத்4யேயம் தே3வ ஸங்க்3ராமே தத3ா மே ஸ்யாத்3விநாஶநம் ॥ (15)

ஸர்வோ ஹி தபஸா தே3வ வ்ருணோத்யமரதாம் புமாந் ।
விக்ரமேண மயா த்வேதத3மரத்வம் ப்ரவர்திதம் ॥ (16)

ஏவமஸ்த்விதி தம் சாஹ தே3வ: பிதாமஹ: ।
முக்தஶ்சேந்த்3ரஜிதா ஶக்ரோ க3தாஶ்ச த்ரிதி3வம் ஸுரா: ॥ (17)

ஏதஸ்மிந்நந்தரே ராம தீ3நோ ப்4ரஷ்டாம்ப3ரத்3யுதி: ।
இந்த்3ரஶ்சிந்தாபரீதாத்மா த்4யாநதத்பரதாம் க3த: ॥ (18)

தம் து த்3ருஷ்ட்வா தத2ாபூ4தம் ப்ராஹ தே3வ: ப்ரஜாபதி: ।
ஶதக்ரதோ கிமு புரா கரோதி ஸ்ம ஸுது3ஷ்கரம் ॥ (19)

அமரேந்த்3ர மயா ப3ஹ்வ்ய: ப்ரஜா: ஸ்ருஷ்டாஸ்தத3ா ப்ரபே4ா ।
ஏகவர்ணா: ஸமாப4ாஷா ஏகரூபாஶ்ச ஸர்வஶ: ॥ (20)

தாஸாம் நாஸ்தி விஶேஷோ ஹி த3ர்ஶநே லக்ஷணேऽபி வா ।
ததோऽஹமேகாக்3ரமநாஸ்தா: ப்ரஜா: பர்யசிந்தயம் ॥ (21)

ஸோऽஹம் தாஸாம் விஶேஷார்த2ம் ஸ்த்ரியமேகாம் விநிர்மமே ।
யத்3யத் ப்ரஜாநாம் ப்ரத்யங்க3ம் விஶிஷ்டம் தத்தது3த்3த்4ருதம் ॥ (22)

ததோ மயா ரூபகு3ணைரஹல்யா ஸ்த்ரீ விநிர்மிதா ।
ஹலம் நாமேஹ வைரூப்யம் ஹல்யம் தத்ப்ரப4வம் ப4வேத் ॥ (23)

யஸ்மாந்ந வித்3யதே ஹல்யம் தேநாஹல்யேதி விஶ்ருதா ।
அஹல்யேதி மயா ஶக்ர தஸ்யா நாம ப்ரவர்திதம் ॥ (24)

நிர்மிதாயாம் ச தே3வேந்த்3ர தஸ்யாம் நார்யாம் ஸுரர்ஷப4 ।
ப4விஷ்யதீதி கஸ்யைஷா மம சிந்தா ததோऽப4வத் ॥ (25)

த்வம் து ஶக்ர தத3ா நாரீம் ஜாநீஷே மநஸா ப்ரபே4ா ।
ஸ்த2ாநாதி4கதயா பத்நீ மமைஷேதி புரந்த3ர ॥ (26)

ஸா மயா ந்யாஸபூ4தா து கௌ3தமஸ்ய மஹாத்மந: ।
ந்யஸ்தா ப3ஹூநி வர்ஷாணி தேந நிர்யாதிதா ச ஹ ॥ (27)

ததஸ்தஸ்ய பரிக்ஞாய மஹாஸ்தை2ர்யம் மஹாமுநே: ।
க்ஞாத்வா தபஸி ஸித்3தி4ம் ச பத்ந்யர்த2ம் ஸ்பர்ஶிதா தத3ா ॥ (28)

ஸ தயா ஸஹ த4ர்மாத்மா ரமதே ஸ்ம மஹாமுநி: ।
ஆஸந்நிராஶா தே3வாஸ்து கௌ3தமே த3த்தயா தயா ॥ (29)

Koviloor Digital Library

போரில் வெற்றி பெறுவதற்காக சங்கல்பித்துக் கொண்டு நான் தொடங்கும் ஜபம்–ஹோமங்கள் முடிவுறாத நிலையில், நான் போர் செய்தே ஆக வேண்டும் என்ற இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டால், அப்போது எனக்கு அழிவு ஏற்படலாம். (15)

ஐயனே! எல்லா மனிதர்களும் தவம் செய்து அமரநிலை வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள். ஆனால் நானோ, என் பராக்கிரமத்தினால் அமரநிலையைக் கேட்கிறேன்.'' (16)

பிரும்மதேவர், ''சரி, அப்படியே ஆகட்டும்'' என்று கூறினார். இந்திரஜித்தினால் விடுவிக்கப்பட்ட இந்திரனோடுகூட தேவர்கள் தேவலோகம் சென்றார்கள். (17)

இராமா! (அரக்கர்களால் கைப்பற்றப்பட்ட இந்த நிகழ்ச்சியின் காரணமாக) இந்திரனுடைய வானுலகத்தவர்களின் இயற்கையான உடல் ஒளி மங்கிப்போயிற்று. இந்திரன் மிகவும் கவலை கொண்டு தியானத்தில் ஆழ்ந்துவிட்டான். (தன் தோல்விக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முனைந்தான்.) (18)

அந்தப் பரிதாப நிலையில், அவனைப் பார்த்த பிரும்மதேவர், ''இந்திரனே! முன்னர், செய்யத்தகாத ஒரு செயலைச் செய்தாயே? (அதன் விளைவுதான், இது!)'' என்றார். (19)

தேவேந்திரனே! நான், முன்னர் ஏராளமான மனிதர்களைத் தோற்றுவித்தேன். அவர்கள் எல்லோரும் ஒரே வண்ணமாக, ஒரே மொழி பேசுபவர்களாக, ஒரே மாதிரி தோற்றமும் வயதும் உடையவர்களாக இருந்தார்கள். (20)

அவர்கள் தோற்றத்திலோ, வண்ணத்திலோ எவ்வித வேற்றுமையும் காணப்படவில்லை. அதனால், மக்களின் இந்த நிலையைக் குறித்து, நான் ஒரே மனத்துடன் ஆலோசிக்கத் தொடங்கினேன். (21)

அதனால், மக்களின் ஒவ்வொரு உறுப்பிலுமிருந்த சிறப்பு இயல்புகளையெடுத்து, அவர்களிடமிருந்து மாறுபட்ட தோற்றமுடைய ஒரு பெண்ணை உண்டாக்கினேன். (22)

அப்போது, உருவத்திலும் குணத்திலும் குற்றமில்லாத ஒரு பெண் உருவாக்கப்பட்டாள். அவள் பெயர் அஹல்யா. ஹலம் என்றால் அழகின்மை. அதனால் உலகில் இகழ்ச்சி ஏற்படுகிறது. (23)

எவளிடம் அழகின்மை காணப்படவில்லையோ, அவள் அஹல்யா (குற்றமில்லாத, பேரழகு பெற்றவள்) என்ற பெயரைப் பெற்றாள். இந்திரனே! அவளுக்கு அஹல்யா என்று நான் பெயர் சூட்டினேன். (24)

தேவேந்திரனே! தேவர் தலைவனே! அவளைத் தோற்றுவித்த பிறகு, ''இவள், யாருக்கு மனைவியாக ஆவாள்?'' என்ற கவலை எனக்கு ஏற்பட்டது. (25)

இந்திரனே! புரந்தரனே! உன்னுடைய பதவி, அதிகாரம் காரணமாக (அகந்தை கொண்டிருந்த நீ), என் அனுமதி இல்லாமலேயே, ''இவள், எனக்குத்தான் மனைவி ஆவாள்'' என்று உறுதியாக எண்ணம் கொண்டாய். (26)

நான், கௌதம முனிவரிடம் ஓர் அடைக்கலப் பொருளாக அவளை ஒப்படைத்தேன். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட அவள், பல ஆண்டுகளுக்குப் பிறகு என்னிடம் திருப்பித் தரப்பட்டாள். (27)

நான், அவருடைய புலனடக்கத்தையும் தவப்பயனைப் பெற்றுவிட்ட பெருமையையும் அறிந்து, அவளை அவருக்கே மனைவியாகக் கொடுத்தேன். (28)

அறநெறியாளரான அந்த மாமுனிவர் அவளுடன் இன்பமாக வாழத் தொடங்கினார். நான், கௌதமருக்கே அவளைத் தந்துவிட்டபடியால் தேவர்கள் ஏமாற்றமடைந்தார்கள். (29)

Koviloor Digital Library

ஸங்க்ருத்$_3$த$_4$ஸ்த்வம் ஹி த$_4$ர்மாத்மந் க$_3$த்வா தஸ்யாஶ்ரமம் முநே: ।
த்$_3$ருஷ்டவாம்ஶ்ச தத$_3$ா தாம் ஸ்த்ரீம் தீ$_3$ப்தாமக்$_3$நிஶிகா$_2$மிவ ॥ (30)

ஸா த்வயா த$_4$ர்ஷிதா ஶக்ர காமார்தேந ஸமந்யுநா ।
த்$_3$ருஷ்டஸ்த்வம் ச தத$_3$ா தேந ஹ்யாஶ்ரமே பரமர்ஷிணா ॥ (31)

தத: க்ருத்$_3$தே$_4$ந தேநாஸி ஶப்த: பரமதேஜஸா ।
க$_3$தோ஽ஸி யேந தே$_3$வேந்த்$_3$ர த$_3$ஶாப$_4$ாக$_3$விபர்யயம் ॥ (32)

யஸ்மாந்மே த$_4$ர்ஷிதா பத்நீ த்வயா வாஸவ நிர்ப$_4$யம் ।
தஸ்மாத்த்வம் ஸமரே ராஜஞ்ஶத்ருஹஸ்தம் க$_3$மிஷ்யஸி ॥ (33)

அயம் து ப$_4$ாவோ துர்பு$_3$த்$_3$தே$_4$ யஸ்த்வயேஹ ப்ரவர்தித: ।
மாநுஷேஷ்வபி லோகேஷு ப$_4$விஷ்யதி ந ஸம்ஶய: ॥ (34)

தத்ரார்த$_4$ம் தஸ்ய ய: கர்தா த்வய்யர்த$_4$ம் நிபதிஷ்யதி ।
ந ச தே ஸ்த$_2$ாவரம் ஸ்த$_2$ாநம் ப$_4$விஷ்யதி ந ஸம்ஶய: ॥ (35)

யஶ்ச யஶ்ச ஸுரேந்த்$_3$ர: ஸ்யாத்$_3$த்$_4$ருவ: ஸ ந ப$_4$விஷ்யதி ।
ஏஷ ஶாபோ மயா முக்த இத்யஸௌ த்வாம் தத$_3$ாப்$_3$ரவீத் ॥ (36)

தாம் து ப$_4$ார்யாம் ஸுநிர்ப$_4$ர்த்ஸ்ய ஸோ஽ப்$_3$ரவீத் ஸுமஹாதபா: ।
து$_3$ர்விநீதே விநித்$_4$வம்ஸ மமாஶ்ரமஸமீபத: ॥ (37)

ரூபயௌவநஸம்பந்நா யஸ்மாத்த்வமநவஸ்தி$_2$தா ।
தஸ்மாத்$_3$ரூபவதீ லோகே ந த்வமேகா ப$_4$விஷ்யஸி ॥ (38)

ரூபம் ச தே ப்ரஜா: ஸர்வா க$_3$மிஷ்யந்தி ந ஸம்ஶய: ।
யத்ததே$_3$கம் ஸமாஶ்ரித்ய விப்$_4$ரமோऽயமுபஸ்தி$_2$த: ॥ (39)

தத$_3$ாப்ரப்$_4$ருதி பூ$_4$யிஷ்ட$_2$ம் ப்ரஜா ரூபஸமந்விதா: ।
ஸா தம் ப்ரஸாத$_3$யாமாஸ மஹர்ஷிம் கௌ$_3$தமம் தத$_3$ா ॥ (40)

அக்ஞாநாத்$_3$த$_4$ர்ஷிதா நாத$_2$ த்வத்$_3$ரூபேண தி$_3$வௌகஸா ।
ந காமகாராத்$_3$விப்ரர்ஷே ப்ரஸாத$_3$ம் கர்துமர்ஹஸி ॥ (41)

அஹல்யயா த்வேவமுக்த: ப்ரத்யுவாச ஸ கௌ$_3$தம: ।
உத்பத்ஸ்யதி மஹாதேஜா இக்ஷ்வாகூணாம் மஹாரத$_2$: ॥ (42)

ராமோ நாம ஶ்ருதோ லோகே வநம் சாப்யுபயாஸ்யதி ।
ப்$_3$ராஹ்மணார்தே$_2$ மஹாப$_3$ாஹுர்விஷ்ணுர்மாநுஷவிக்$_3$ரஹ: ॥ (43)

தம் த்$_3$ரக்ஷ்யஸி யத$_3$ா ப$_4$த்$_3$ரே தத: பூதா ப$_4$விஷ்யஸி ।
ஸ ஹி பாவயிதும் ஶக்தஸ்த்வயா யத்$_3$து$_3$ஷ்க்ருதம் க்ருதம் ॥ (44)

Koviloor Digital Library

அறம் அறிந்தவனே! மிகவும் கோபங்கொண்ட நீ, அந்த முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்றாய். அங்கே, செந்தழல் போல் ஒளிவீசும் அந்தப் பெண்ணைப் பார்த்தாய். (30)

காமம், கோபம் ஆகிய இரண்டாலும் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நீ, அவளைப் பலாத்காரம் செய்தாய். அப்படி அந்த ஆசிரமத்தில் நீ (அஹல்யாவுடன் கூடி) இருக்கும்போதே, மாமுனிவர் உன்னைப் பார்த்துவிட்டார். (31)

தவ ஆற்றல் மிக்க அவர் கோபங்கொண்டு உனக்குச் சாபம் கொடுத்தார். அதன் விளைவாகவே, உனக்கு இந்த (அவமானகரமான) நிலை ஏற்பட்டது. (32)

'இந்திரனே! அறம் பிறழ்ந்து செல்வதைக் கண்டு அஞ்சாமல், என் மனைவியை நீ பலாத்காரம் செய்திருக்கிறாய். அதனால் போரில், நீ எதிரியின் வசம் சிக்கிக் கொள்ளப் போகிறாய். (33)

கெடுமதி படைத்தவனே! பிற பெண்களைப் பலாத்காரம் செய்யும் தீய ஒழுக்கத்தை, மன்னனாகிய நீயே தொடக்கி வைத்திருக்கிறாய். இந்தத் தீய ஒழுக்கம் மனிதர்களிடையேயும் பரவப் போகிறது என்பதில் சந்தேகமில்லை. (34)

எவனொருவன் இந்தத் தீயவழியை மேற்கொண்டாலும், அந்தப் பாவத்தின் அரைப் பங்கு உன்னை வந்தடையும். அத்துடன் இப்போது நீ இருக்கும் பதவியில் நிலைத்து நிற்கப் போவதில்லை. (35)

எவரெவர் இந்திரப் பதவிக்கு வந்தாலும், அவர் அந்தப் பதவியில் நீடித்து இருக்க மாட்டார். இந்த என்னுடைய சாபம், இந்திரன் என்ற பதவிக்கு மட்டுமே பொருந்தும்' என்று, அப்போது அவர் உன்னிடம் கூறினார். (36)

மாபெரும் தவசியாகிய அவர், தன் மனைவியையும் அதட்டி, மிரட்டி, ''அடக்கமில்லாதவளே! என் ஆசிரமத்தின் அருகிலேயே எவர் கண்ணிலும்படாமல் இருப்பாய். (37)

அழகான தோற்றமும் இளமையும் உடைய நீ, அவைகளைக் காப்பாற்றிக் கொள்ளவில்லை. இனி உலகில், நீ ஒருத்தி மட்டும் பேரழகு கொண்டவளாக இருக்கப் போவதில்லை. (உலகில் அழகு படைத்த பெண்கள் பலர் தோன்றுவார்கள்.) (38)

(வேறு எவரிடமும் காணமுடியாத) உன்னுடைய பேரழகைக் கண்டு, அவனுக்கு மனமயக்கம் ஏற்பட்டது. அதனால், உன் பேரழகு மற்ற மக்களையும் சென்றடையப் போகிறது. (39)

அது முதற்கொண்டு ஏராளமான மக்கள் பேரழகுடன் விளங்கத் தொடங்கினார்கள். அவள் (அஹல்யை), மாமுனிவர் கௌதமரை மிகவும் கெஞ்சி வேண்டினாள்— (40)

'அந்தணோத்தமரே! பிரும்மரிஷியே! தேவராஜன், தங்கள் உருவத்தை ஏற்றுக்கொண்டு வந்து என்னைக் களங்கப்படுத்திவிட்டான். நான், மனமொப்பி இந்தச் செயலைச் செய்யவில்லை. உண்மையை அறியாததால் இவ்வாறு நிகழ்ந்துவிட்டது; காமத்தினால் அல்ல. தாங்கள் அருள்கூர்ந்து என்னை மன்னிக்கவேண்டும்.' (41)

இவ்வாறு அஹல்யா வேண்டிக் கொண்டதும், கௌதமர் பதில் சொன்னார்— 'வேதவித்தகர்களான அந்தணர்களைக் காப்பாற்றுவதற்காக, பகவான் மகாவிஷ்ணு மனித உருவம் ஏற்று, இக்ஷ்வாகு பரம்பரையில் பேராற்றலுடைய மாவீரனாகத் தோன்றப் போகிறார். இராமன் என்ற பெயரால் உலகில் பெரும்புகழ் அடையப்போகும் அவர், காட்டுக்கு வருவார். (42,43)

பண்புடையாளே! அவரை எப்போது நீ தரிசிக்கிறாயோ, அப்போது நீ புனிதம் அடைவாய். உன்னால் செய்யப்பட்ட பெரும் பாவத்தைத் துடைத்து, உன்னைத் தூய்மையாக்க வல்லவர், அவர்தான். (44)

Koviloor Digital Library

தஸ்யாதித்$_2$யம் ச க்ருத்வா வை மத்ஸமீபம் க$_2$மிஷ்யஸி ।
வத்ஸ்யஸி த்வம் மயா ஸார்த$_4$ம் தத$_3$ா ஹி வரவர்ணிநி ॥ (45)

ஏவமுக்த்வா ஸ விப்ரர்ஷிராஜகா$_3$ம ஸ்வமாஶ்ரமம் ।
தபஶ்சசார ஸுமஹத் ஸா பத்நீ ப்$_3$ரஹ்மவாதி$_3$ந: ॥ (46)

ஶாபோத்ஸர்கா$_3$த்$_3$தி$_4$ தஸ்யேத$_3$ம் முநே: ஸர்வமுபஸ்தி$_2$தம் ।
தத்ஸ்மர த்வம் மஹாபா$_3$ஹோ து$_3$ஷ்க்ருதம் யத்த்வயா க்ருதம் ॥ (47)

தேந த்வம் க்$_3$ரஹணம் ஶத்ரோர்யாதோ நாந்யேந வாஸவ ।
ஶீக்$_4$ரம் வை யஜ யஜ்ஞம் த்வம் வைஷ்ணவம் ஸுஸமாஹித: ॥ (48)

பாவிதஸ்தேந யஜ்ஞேந யாஸ்யஸே த்ரிதி$_3$வம் தத: ।
புத்ரஶ்ச தவ தே$_3$வேந்த்$_3$ர ந விநஷ்டோ மஹாரணே ॥
நீத: ஸந்நிஹிதஶ்சைவ ஆர்யகேண மஹோத$_3$தெ$_4$ள ॥ (49)

ஏதச்ச்$_2$ருத்வா மஹேந்த்$_3$ரஸ்து யஜ்ஞமிஷ்ட்வா ச வைஷ்ணவம் ।
புநஸ்த்ரிதி$_3$வமாக்ராமத$_3$ந்வஶாஸச்ச தே$_3$வராட் ॥ (50)

ஏததி$_3$ந்த்$_3$ரஜிதோ நாம ப$_3$லம் யத் கீர்திதம் மயா ।
நிர்ஜிதஸ்தேந தே$_3$வேந்த்$_3$ர: ப்ராணிநோऽந்யே து கிம் புந: ॥ (51)

ஆஶ்சர்யமிதி ராமஶ்ச லக்ஷ்மணஶ்சாப்$_3$ரவீத்தத$_3$ா ।
அக$_3$ஸ்த்யவசநம் ஶ்ருத்வா வாநரா ராக்ஷஸாஸ்தத$_3$ா ॥ (52)

விபீ$_4$ஷணஸ்து ராமஸ்ய பார்ஶ்வஸ்தோ$_2$ா வாக்யமப்$_3$ரவீத் ।
ஆஶ்சர்யம் ஸ்மாரிதோऽஸ்ம்யத்$_3$ய யத்தத்$_3$த்$_3$ருஷ்டம் புராதநம் ॥ (53)

அக$_3$ஸ்த்யம் த்வப்$_3$ரவீத்$_3$ராம: ஸத்யமேதச்ச்$_2$ருதம் ச மே ।
ஏவம் ராம ஸமுத்$_3$பூ$_4$தோ ராவணோ லோககண்டக: ॥
ஸபுத்ரோ யேந ஸங்க்$_3$ராமே ஜித: ஶக்ர: ஸுரேஶ்வர: ॥ (54)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

ஏகத்ரிம்ஶ: ஸர்க$_3$:

ராவணஶிவாராத$_4$நம்

ததோ ராமோ மஹாதேஜா விஸ்மயாத் புநரேவ ஹி ।
உவாச ப்ரணதோ வாக்யமக$_3$ஸ்த்யம்ருஷிஸத்தமம் ॥ (1)

ப$_4$க$_3$வந் ராக்ஷஸ: க்ரூரோ யத$_3$ாப்ரப்$_4$ருதி மேதி$_3$நீம் ।
பர்யடத் கிம் தத$_3$ா லோகா: ஶூந்யா ஆஸந் த்$_3$விஜோத்தம ॥ (2)

Koviloor Digital Library

அவரை வரவேற்று உபசரித்த பின், நீ மீண்டும் என்னிடம் வருவாய். சீலம் மிக்கவளே! பின்னர், என்னுடன் கூடவே வாழப் போகிறாய்.' (45)

பிரும்மரிஷியான அவர் இவ்வாறு கூறிவிட்டுத் தன் ஆசிரமத்திற்குள் சென்றுவிட்டார். வேதவித்தகரான அவருடைய மனைவி (அஹல்யை) மிகக்கடுமையான தவம் செய்தாள். (46)

அந்த முனிவரின் சாபத்தால்தான், இவைகள் எல்லாம் நிகழ்ந்தன. தோள்வலி மிக்கவனே! நீ செய்த படுபாதகச் செயலை நினைத்துப் பார். (47)

இந்திரனே! அதனால் (சாபத்தின் விளைவாகத்)தான், நீ எதிரியின் வசப்பட்டாய். மனத்தை நிலைப்படுத்தி, விரைவில் வைஷ்ணவ (விஷ்ணு சம்பந்தமான) வேள்வியைச் செய்வாயாக. (48)

அந்த வேள்வியினால் புனிதமாக்கப்பட்ட பின், நீ தேவலோகத்தைப் பெறுவாய். தேவேந்திரனே! போரில், உன் மகன் அழிந்து போகவில்லை. அவன், (தாய்வழிப்) பாட்டனால், கடலுக்குள் கொண்டு வைக்கப்பட்டிருக்கிறான்.'' (49)

இதைக் கேட்ட மகேந்திரன், வைஷ்ணவ வேள்வியைச் செய்து, மீண்டும் தேவலோகத்தை அடைந்து ஆட்சி செய்யத் தொடங்கினான். (50)

(இராமனே!) இந்திரனையே வெற்றிகொண்ட மேகநாதனின் ஆற்றலைப் பற்றி உன்னிடம் கூறினேன். மகா வல்லமை பொருந்திய தேவேந்திரனையே அவன் வென்றான் என்னும்போது, மற்றப் பிராணிகளைப் பற்றி என்ன சொல்ல? (51)

அகஸ்தியருடைய சொற்களைக் கேட்டு, வானரர்களும் அரக்கர்களும் இராமனும் இலக்குவனும், ''இந்த வரலாறு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது'' என்று வியப்புடன் கூறினார்கள். (52)

அப்போது, இராமன் அருகிலிருந்த விபீஷணன், ''முன்னர் ஒரு காலத்தில், நான் கண்ணால் பார்த்த நிகழ்ச்சிகளை, மாமுனிவர் நினைவுபடுத்தி விட்டார்!'' என்றான். (53)

இராமன், அகஸ்தியரைப் பார்த்துக் கூறினார்— ''தாங்கள் கூறியது முற்றிலும் உண்மையே. இந்த விவரங்களை நான் முன்னர் கேள்விப்பட்டிருக்கிறேன்.'' அகஸ்தியர் சொன்னார்— ''இராமனே! இவ்வாறு போரில், தேவராஜனான இந்திரனையும் வெற்றிக்கொள்ளும் மைந்தனின் ஒத்துழைப்பைப் பெற்ற இராவணன், உலகத்தைத் துன்புறுத்தும் முள்ளாக ஆனான்.'' (54)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
முப்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தொன்று

இராவணன், சிவனை ஆராதித்தல்

பின்னர், மாவீரரான இராமன், மிகவும் வியப்படைந்து, தலைசிறந்த முனிவரான அகஸ்தியரைப் பார்த்து வணக்கத்துடன், மறுபடியும் கேட்டார்— (1)

''ஐயனே! அந்தணோத்தமரே! கொடியவனான இராவணன், மண்ணுலகம் முழுவதிலும் சுற்றித்திரிந்து வெற்றி பெற்றுக் கொண்டிருந்த காலத்தில், மக்கள் எல்லோரும் (அவனை எதிர்த்துப் போராடும்) ஆற்றல் இல்லாதவர்களாகவா இருந்தார்கள்? (2)

Koviloor Digital Library

ராஜா வா ராஜமாத்ரோ வா கிம் தத$_3$ா நாத்ர கஶ்சந ।
த$_4$ர்ஷணம் யேந ந ப்ராப்தோ ராவணோ ராக்ஷஸேஶ்வர: ॥ (3)

உதாஹோ ஹதவீர்யாஸ்தே ப$_3$பூ$_4$வு: ப்ரு$_2$திவீக்ஷித: ।
ப$_3$ஹிஷ்க்ருதா வராஸ்த்ரைஶ்ச ப$_3$ஹவோ நிர்ஜிதா ந்ருபா: ॥ (4)

ராக$_4$வஸ்ய வச: ஶ்ருத்வா ஹ்யக$_3$ஸ்த்யோ ப$_4$க$_3$வாந்ருஷி: ।
உவாச ராமம் ப்ரஹஸந் பிதாமஹ இவேஶ்வரம் ॥ (5)

இத்யேவம் ப$_3$ாத$_4$மாநஸ்து பார்தி$_2$வாந் பார்தி$_2$வர்ஷப$_4$ ।
சசார ராவணோ ராம ப்ருதி$_2$வீம் ப்ருதி$_2$வீபதே ॥ (6)

ததோ மாஹிஷ்மதீம் நாம புரீம் ஸ்வர்க$_3$புரீப்ரப$_4$ாம் ।
ஸம்ப்ராப்தோ யத்ர ஸாந்நித்$_4$யம் ஸத$_3$ாஸீத்$_3$வஸுரேதஸ: ॥ (7)

துல்ய ஆஸீந்ந்ருபஸ்தஸ்ய ப்ரப$_4$ாவாத்$_3$வஸுரேதஸ: ।
அர்ஜுநோ நாம யத்ராக்$_3$நி: ஶரகுண்டே$_3$ஶய: ஸத$_3$ா ॥ (8)

யமேவ தி$_3$வஸம் ஸோऽத$_2$ ஹைஹயாதி$_4$பதிர்ப$_3$லீ ।
அர்ஜுநோ நர்மத$_3$ாம் ரந்தும் க$_3$த: ஸ்த்ரீபி$_4$: ஸஹேஸ்வர: ॥ (9)

தமேவ தி$_3$வஸம் ஸோऽத$_2$ ராவணஸ்தத்ர ஆக$_3$த: ।
ராவணோ ராக்ஷஸேந்த்$_3$ரஸ்து தஸ்யாமாத்யாநப்ருச்ச$_2$த ॥ (10)

க்வார்ஜுநோ ந்ருபதி: ஶீக்$_4$ரம் ஸம்யக$_3$ாக்$_2$யாதுமர்ஹத$_2$ ।
ராவணோऽஹமநுப்ராப்தோ யுத்$_3$தே$_4$ப்ஸுர்ந்ருவரேண ஹ ॥ (11)

மமாக$_3$மநமப்யக்$_3$ரே யுஷ்மாபி$_4$: ஸம்நிவேத்$_3$யதாம் ।
இத்யேவம் ராவணோக்தாஸ்தே அமாத்யா: ஸுவிபஶ்சித: ॥
அப்$_3$ருவந் ராக்ஷஸபதிமஸாந்நித்$_4$யம் மஹீபதே: ॥ (12)

ஶ்ருத்வா விஶ்ரவஸ: புத்ர: பௌராணாமர்ஜுநம் க$_3$தம் ।
அபஸ்ருத்யாக$_3$தோ விந்த்$_4$யம் ஹிமவத்ஸந்நிப$_4$ம் கி$_3$ரிம் ॥ (13)

ஸ தமப்$_4$ரமிவாவிஷ்டமுத்$_3$ப்$_4$ராந்தமிவ மேதி$_3$நீம் ।
அபஶ்யத்$_3$ராவணோ விந்த்$_4$யமாலிக$_2$ந்தமிவாம்ப$_3$ரம் ॥
ஸஹஸ்ரஶிக$_2$ரோபேதம் ஸிம்ஹாத்$_4$யுஷிதகந்த$_3$ரம் ॥ (14)

ப்ரபாதபதிதைஸ்தோயை: ஸாட்டஹாஸமிவாம்பு$_3$தி$_4$ம் ।
தே$_3$வத$_3$ாநவக$_3$ந்த$_4$ர்வை: ஸாப்ஸரோக$_3$ணகிந்நரை: ॥ (15)

ஸஸ்த்ரீபி$_4$: க்ரீடே$_3$மாநைஶ்ச ஸ்வர்க$_3$பூ$_4$தம் மஹோச்ச்$_2$ரயம் ।
நதீ$_3$பி$_4$: ஸ்யந்த$_3$மாநாபி$_4$: ஸ்ப$_2$ாடிகப்ரதிமம் ஜலம் ॥ (16)

ப$_2$ணாபி$_4$ஶ்சலஜிஹ்வாபி$_4$ரநந்தமிவ விஷ்டி$_2$தம் ।
உத்க்ராமந்தம் த$_3$ரீமந்தம் ஹிமவத்ஸம்நிப$_4$ம் கி$_3$ரிம் ॥ (17)

Koviloor Digital Library

அந்த வேளையில், இவன் கொட்டத்தை அடக்கக்கூடிய பராக்கிரமமுடைய க்ஷத்திரிய மன்னன் அல்லது ஆட்சியிலிருந்த வேறு தலைவர்கள் எவரும் இல்லாமல் போய்விட்டார்களா? அல்லது, அப்போதிருந்த எல்லா மன்னர்களும் ஆற்றல் அற்றவர்களாகவும், சஸ்திரப் பயிற்சி இல்லாதவர்களாகவும் இருந்ததால், ஏராளமான மன்னர்கள் இராவணனால் தோற்கடிக்கப் பட்டார்களா?'' (3,4)

இராமபிரானுடைய இந்தச் சொற்களைக் கேட்ட மாமுனிவரான அகஸ்தியர், சற்றே புன்னகைத்து, பிரும்மா, பரமேசுவரனிடம் உரையாடுவதைப் போல, இராமனுக்குப் பதில் கூறத் தொடங்கினார்— (5)

''மாமன்னனே! அரசர் திலகமே! இராமனே! இவ்வாறு எல்லா மன்னர்களையும் தாக்கி, துன்புறுத்தி, தோற்கடித்துக் கொண்டு, இம்மண்ணுலகில் சுற்றி வந்தான், இராவணன். (6)

சுற்றித் திரிந்து வந்தபோது, தேவலோகத் தலைநகரான அமராவதிக்கு நிகராக சோபையுடன் விளங்கும் மாகிஷ்மதி நகரத்தை அடைந்தான். அங்கே, அக்னிதேவர் நித்யவாசம் புரிந்து கொண்டிருந்தார். (நகரைச் சுற்றிலும் அரண் சுவர் போல அக்னி இருந்து கொண்டிருந்தது.) (7)

அக்னிதேவரின் மகிமையால், அங்கு ஆண்டுகொண்டிருந்த மன்னன் அர்ஜுனன் என்பவன், அக்னிக்கு நிகரான தேஜசுடன் விளங்கினான். அம்புகளால் நிரப்பப்பட்ட அக்னிகுண்டத்தில், அக்னிதேவர் எப்போதும் இருந்துகொண்டிருந்தார். (எதிரிகள் வந்தால், அவர்களை எதிர்த்துப் போராடும் ஆயத்த நிலையில் மன்னன் இருந்தான் என்பது கருத்து.) (8)

இராவணன், அந்த நகரத்தை அடைந்த அதே நாளில், ஹைஹயநாட்டு மன்னனும் பலசாலியுமான அர்ஜுனன், தன் மனைவிகளுடன் நர்மதை நதியில் நீர்விளையாட்டு கொண்டாடுவதற்காக அவ்விடம் சென்றிருந்தான். (9)

அதே நாளில் மாஹிஷ்மதி நகரத்திற்கு வந்த இராவணன் (மன்னன் அங்கு இல்லாததைக் கண்டு) அமைச்சர்களிடம் கேட்டான்— ''மன்னன் அர்ஜுனன் எங்கே? என்பதை, உடனே உண்மையாகக் கூறுங்கள். நான் இராவணன். புகழ்பெற்ற உங்கள் அரசருடன் போர்புரிய வந்திருக்கிறேன். (10,11)

நீங்கள் இப்போதே சென்று நான் வந்திருக்கும் செய்தியை மன்னனிடம் கூறுங்கள்.'' இவ்வாறு, இராவணன் கூறியதைக் கேட்ட அறிவுமிக்க அமைச்சர்கள், ''மன்னன் அர்ஜுனன் அந்தச் சமயம் (இப்போது) தலைநகரில் இல்லை'' என்று அரக்க மன்னனிடம் தெரிவித்தார்கள். (12)

அமைச்சர்கள் (மற்றும் நகர மக்களும்) இவ்வாறு கூறியதும், விச்ரவஸின் குமாரனான இராவணன், அங்கிருந்து திரும்பி, இமயமலை போன்று மிகப்பெரிய தோற்றம் கொண்ட விந்தியமலையைச் சென்றடைந்தான். அதன் முகடுகள், மேகங்களைத் தொட்டுக் கொண்டிருந்தன; பூமியைப் பிளந்து கொண்டு மேலே எழும்பி வந்ததைப் போல் தோற்றமளித்த விந்தியமலையின் ஆயிரக்கணக்கான சிகரங்கள் வானத்தை உரசிக் கொண்டிருந்தன; அதன் குகைகளில் சிங்கங்கள் வசித்துக் கொண்டிருந்தன. (13,14)

மிக உயரமான அதன் சிகரங்களிலிருந்து பெருகி ஓடிய அருவிகள், ஒரு பெருங்கடலைப் போல் ஆரவாரித்தன; தேவ–தானவ–கந்தர்வர்கள், அப்சரக் கூட்டங்கள்–கின்னரர்கள் முதலியோர் பெண்மணிகளுடன் கேளிக்கை விளையாட்டில் ஈடுபட்டிருந்ததால், மிக உயரமான சிகரங்களைக் கொண்ட அந்த இடம் தேவலோகம் போல் சோபையுடன் விளங்கிற்று; படிகம் போல தூயதான தண்ணீர் பெருக்கெடுத்தோடிய நதிகள், எப்போதும் சலித்துக் கொண்டிருக்கும் நாக்குகளையுடைய படங்களைக் கொண்ட அனந்தன் என்ற சர்ப்பம் போல், அந்த மலை தோற்றமளித்தது. மேலே எழும்பி வானுலகுக்குச் செல்வது போலிருந்த அந்த மலையில் பற்பல குகைகளும் இருந்ததால், இமயமலை போலவே காணப்பட்டது. (15–17)

Koviloor Digital Library

பஶ்யமாநஸ்ததோ விந்த்$_4$யம் ராவணோ நர்மத$_3$ாம் யயௌ ।
சலோபலஜலாம் புண்யாம் பஶ்சிமோதத$_3$தி$_4$க$_3$ாமிநீம் ॥ (18)

மஹிஷை: ஸ்ருமரை: ஸிம்ஹை: ஶார்தூ$_3$லர்க்ஷக$_3$ஜோத்தமை: ।
உஷ்ணாபி$_4$தப்தைஸ்த்ருஷிதை: ஸங்க்ஷோபி$_4$தஜலாஶயாம் ॥ (19)

சக்ரவாகை: ஸகாரண்டை$_3$: ஸஹம்ஸஜலகுக்குடை: ।
ஸாரஸைஶ்ச ஸதா$_3$ மத்தை: ஸூகூஜத்$_3$பி$_4$: ஸமாவ்ருதம் ॥ (20)

பு$_2$ல்லத்ருமக்ருதோத்தம்ஸாம் சக்ரவாகயுக$_3$ஸ்தநீம் ।
விஸ்தீர்ணபுலிநஶ்ரோணீம் ஹம்ஸாவளிஸூமேக$_2$லாம் ॥ (21)

புஷ்பரேண்வநுலிப்தாங்கீ$_3$ம் ஜலபே$_2$நாமலாம்ஶுகாம் ।
ஜலாவகா$_3$ஹஸம்ஸ்பர்ஶாம் பு$_2$ல்லோத்பலஶுபே$_4$க்ஷணாம் ॥ (22)

புஷ்பகாத$_3$வருஹ்யாஶு நர்மத$_3$ாம் ஸரிதாம் வராம் ।
இஷ்டாமிவ வராம் நாரீமவகா$_3$ஹ்ய த$_3$ஶாநந: ॥ (23)

ஸ தஸ்யா: புலிநே ரம்யே நாநாமுநிநிஷேவிதே ।
உபோபவிஷ்டை: ஸசிவை: ஸார்த$_4$ம் ராக்ஷஸபுங்க$_3$வ: ॥ (24)

ப்ரக்$_2$யாய நர்மத$_3$ாம் ஸோऽத$_2$ க$_3$ங்கே$_3$யமிதி ராவண: ।
நர்மத$_3$ாத$_3$ர்ஶஜம் ஹர்ஷமாப்தவாந் ராக்ஷஸாதி$_4$ப: ॥ (25)

தத: ஸலீலம் ப்ரஹஸந் ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
உவாச ஸசிவாம்ஸ்தத்ர ப்ரஹஸ்தஶுகஸாரணாந் ॥ (26)

ஏஷ ரஶ்மிஸஹஸ்ரேண ஜக$_3$த்க்ருத்வேவ காஞ்சநம் ।
தீக்ஷ்ணதாபகர: ஸூர்யோ நப$_4$ஸோऽர்த$_4$ம் ஸமாஶ்ரித: ॥
மாமாஸீநம் விதி$_3$த்வேஹ சந்த்$_3$ராயதி தி$_3$வாகர: ॥ (27)

நர்மத$_3$ாஜலஶீதஶ்ச ஸுக$_3$ந்தி$_4$: ஶ்ரமநாஶந: ।
மத்$_3$ப$_4$யாத$_3$நிலோऽப்யத்ர வாத்யேஷ ஸுஸமாஹித: ॥ (28)

இயம் சாபி ஸரிச்ச்$_2$ரேஷ்ட$_2$ா நர்மதா$_3$ நர்மவர்தி$_4$நீ ।
நக்ரமீநவிஹங்கோ$_3$ர்மி: ஸப$_4$யேவாங்க$_3$நா ஸ்தி$_2$தா ॥ (29)

தத்$_3$ப$_4$வந்த: க்ஷதா: ஶஸ்த்ரைர்ந்ருபைரிந்த்$_3$ரஸமைர்யுதி$_4$ ।
சந்த$_3$நஸ்ய ரஸேநேவ ருதி$_4$ரேண ஸமுக்ஷிதா: ॥ (30)

தே யூயமவகா$_3$ஹத்$_4$வம் நர்மத$_3$ாம் ஶர்மத$_3$ாம் ஶுப$_4$ாம் ।
மஹாபத்$_3$மமுகா$_2$ மத்தா க$_3$ங்கா$_3$மிவ மஹாக$_3$ஜா: ॥ (31)

அஸ்யாம் ஸ்நாத்வா மஹாநத்$_3$யாம் பாப்மாநம் விப்ரமோக்ஷ்யத$_2$ ।
அஹமப்யத்$_3$ய புலிநே ஶரதி$_3$ந்து$_3$ஸமப்ரபே$_4$ ॥
புஷ்போபஹாரம் ஶநகை: கரிஷ்யாமி கபர்தி$_3$ந: ॥ (32)

Koviloor Digital Library

விந்தியமலையின் பேரழகை ரசித்துக் கொண்டே மிகப் புண்ணிய நதியான நர்மதையை அடைந்தான் (இராவணன்). புனிதமான அந்த ஆறு, பாறைகளில் முட்டி மோதிக்கொண்டு செல்லும் நீர்ப்பெருக்குடன், மேற்குக் கடலை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. (18)

சூரியனின் வெம்மையால் தாக்கப்பட்டு, தாகத்தால் தவித்துக் கொண்டிருந்த எருமைகள், மான்கள், சிங்கங்கள், புலிகள், கரடிகள், யானைகள் முதலியன ஆற்றின் ஓட்டத்தைத் தடைப்படுத்திக் கொண்டிருந்தன. (19)

எப்போதும் மதங்கொண்டு அகவும் சக்ரவாகம், காரண்டம், ஹம்ஸம், நீர்க்கோழி, ஸாரஸம் முதலிய பறவைகள் நிரம்பி இருந்தன. (20)

ஆறுகளில் மிகச்சிறந்தான நர்மதை நதி, அன்புக்குரிய ஓர் இளம்பெண்போல் காணப்பட்டது. கரைகளில் வளர்ந்திருந்த அலர்ந்த மலர்களைக் கொண்ட மரங்களே, அந்தப் பெண்ணின் அணிகலன்கள்; இரட்டையாகக் காணப்பட்ட சக்ரவாகப் பறவைகளே, அவளுடைய மார்பகங்கள்; பரந்து விரிந்து உயர்ந்து குவிந்திருந்த மணற்திட்டுக்கள், அவளுடைய பின்பக்கம்; அன்னப்பறவைகளின் வரிசை, அவள் இடுப்பில் விளங்கும் முத்துமேகலை; மலர்களின் மகரந்தம், அவள்மேல் படித்திருக்கும் வாசமும் வண்ணமுமுடைய உடற்பூச்சு; வெண்மையான நுரைக்கூட்டம், அவள் தூய வெண்மையான சேலை அணிந்திருந்ததைப் போலிருந்தது; நீரில் தலைமூழ்கிக் குளிப்பதே, அவளைத் தொடுவதனால் உண்டாகும் ஆனந்தம்; மலர்ந்த தாமரைகள், அவளுடைய அழகிய பெரிய கண்கள். அரக்கத் தலைவனான இராவணன் புஷ்பக விமானத்திலிருந்து இறங்கி, நர்மதையில் தலைமூழ்கி நீராடினான். பின்னர், அநேக முனிவர்கள் வசிப்பதும், மனங்கவர்வதுமான மணற்பாங்கான கரையில், தன் அமைச்சர்களுடன் அமர்ந்து கொண்டான். (21–24)

அரக்கர் தலைவனான இராவணன், ''ஆகா! இது கங்கையேதான்!'' என்று போற்றிப் புகழ்ந்து, நர்மதையில் நீராடியதால் ஏற்பட்ட பேரானந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான். (25)

அரக்கர் அதிபதியான இராவணன், வேடிக்கையாகப் புன்முறுவலித்து, அங்கிருந்த பிரஹஸ்த–சுக–ஸாரணர்களாகிய அமைச்சர்களைப் பார்த்துக் கூறினான்— (26)

''வானத்தின் நடுப்பகுதிக்கு வந்திருக்கும் ஆயிரக்கணக்கான கதிர்களைக் கொண்ட சூரியன் மிகவும் வெம்மையைக் கக்குகிறான். ஆனால், நான் இங்கே இருப்பதை அறிந்து, இவ்விடத்தில் மட்டும் சந்திரனைப் போல் குளிர்ச்சியைத் தருகிறான். (27)

வாயுதேவன், என்னிடமுள்ள பயத்தால் மிகவும் கவனமாக நர்மதையின் குளிர்ச்சி மற்றும் மணம் ஆகியவற்றைச் சுமந்துவந்து, நம் களைப்பைப் போக்குகிறான். (28)

நதிகளில் சிறந்த நர்மதை ஆறு, மனங்குளிரக் குதித்து விளையாடி நீராட அழைக்கிறது. அதன் அலைகளில் முதலைகள்–மீன்கள்–நீர்ப்பறவைகள் விளையாடிக் கொண்டிருக்கின்றன. அதனால், ஆறு இந்த இடத்தில் அச்சங்கொண்ட பெண்ணைப் போல், நின்றுவிட்டாற்போல் இருக்கிறது. (மெல்ல நகர்ந்து செல்கிறது என்றபடி.) (29)

போர்க்களத்தில், நீங்களனைவரும் இந்திரனுக்கு நிகரான பகையரசர்களின் படைக்கலங்களால் மிகவும் காயப்படுத்தப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் மேனியில் சந்தனம் பூசினாற்போல் இரத்தம் வடிந்துகொண்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் எல்லோரும், மகாபத்மம் முதலான திசைக்களிறுகள் மதங்கொண்டு கங்கையில் அட்டகாசமாக நீராடுவதைப் போல, உடலுக்குச் சுகத்தைக் கொடுக்கக் கூடியதும் தூயதுமான நர்மதையில் தலைமூழ்கி நீராடுவீர்களாக. (30,31)

இந்த மகாநதியில் நீராடினால் உங்கள் பாவங்களிலிருந்து விடுபடுவீர்கள். நானும், சரத்கால பௌர்ணமி நிலவு போல் பிரகாசிக்கும் நர்மதையின் மணற்பாங்கான கரையில் பக்தியுடன் பரமேசுவரனுக்கு மலர்களை அர்ப்பணம் செய்கிறேன்.'' (32)

Koviloor Digital Library

ராவணேனைவமுக்தாஸ்து ப்ரஹஸ்தஶுகஸாரணா: ।
ஸமஹோத$_3$ரதூ$_4$ம்ராக்ஷா நர்மத$_3$ாம் விஜக$_3$ாஹிரே ॥ (33)

ராக்ஷஸேந்த்$_3$ரக$_3$ஜைஸ்தைஸ்து க்ஷோபி$_4$தா நர்மத$_3$ா நதீ$_3$ ।
வாமநாஞ்ஜநபத்$_3$மாத்$_3$யைர்க$_3$ங்க$_3$ா இவ மஹாக$_3$ஜை: ॥ (34)

ததஸ்தே ராக்ஷஸா: ஸ்நாத்வா நர்மத$_3$ாயாம் மஹாப$_3$லா: ।
உத்தீர்ய புஷ்பாண்யாஜஹ்ருர்ப$_3$ல்யர்த$_2$ம் ராவணஸ்ய து ॥ (35)

நர்மத$_3$ாபுலிநே ஹ்ருத்$_3$யே ஶுப்$_4$ராப்$_4$ரஸத்$_3$ருஶப்ரபே$_4$ ।
ராக்ஷஸைஸ்து முஹூர்தேந க்ருத: புஷ்பமயோ கி$_3$ரி: ॥ (36)

புஷ்பேஷூபஹ்ருதேஷ்வேவம் ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
அவதீர்ணோ நதீ$_3$ம் ஸ்நாதும் க$_3$ங்க$_3$ாமிவ மஹாக$_3$ஜ: ॥ (37)

தத்ர ஸ்நாத்வா ச விதி$_4$வஜ்ஜப்த்வா ஜப்யமநுத்தமம் ।
நர்மத$_3$ாஸலிலாத்தஸ்மாது$_3$த்ததார ஸ ராவண: ॥ (38)

தத்ர க்லிந்நாம்ப$_3$ரம் த்யக்த்வா ஶுக்லவஸ்த்ரஸமாவ்ருதம் ।
ராவணம் ப்ராஞ்ஜலிம் யாந்தமந்வயு: ஸர்வராக்ஷஸா: ॥
தத்$_3$க$_3$தீவஶமாபந்நா மூர்திமந்த இவாசலா: ॥ (39)

யத்ர யத்ர ச யாதி ஸ்ம ராவணோ ராக்ஷஸேஶ்வர: ।
ஜாம்பூ$_3$நத$_3$மயம் லிங்க$_3$ம் தத்ர தத்ர ஸ்ம நீயதே ॥ (40)

வாலுகாவேதி$_3$மத்$_4$யே து தல்லிங்க$_3$ம் ஸ்த$_2$ாப்ய ராவண: ।
அர்சயாமாஸ க$_3$ந்தை$_4$ஶ்ச புஷ்பைஶ்சாம்ருதக$_3$ந்தி$_4$பி$_4$: ॥ (41)

தத: ஸதாமார்திஹரம் பரம் வரம்
வரப்ரத$_3$ம் சந்த்$_3$ரமயூக$_2$பூ$_4$ஷணம் ।
ஸமர்சயித்வா ஸ நிஶாசரோ ஜகௌ$_3$
ப்ரஸார்ய ஹஸ்தாந் ப்ரநநர்த சாக்$_3$ரத: ॥ (42)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகத்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

த்$_3$வாத்ரிம்ஶ: ஸர்க$_3$:

ராவணக்$_3$ரஹணம்

நர்மத$_3$ாபுலிநே யத்ர ராக்ஷஸேந்த்$_3$ர: ஸுதா$_3$ருண: ।
புஷ்போபஹாரம் குருதே தஸ்மாத்$_3$தே$_3$ஶாத$_3$தூ$_3$ரத: ॥ (1)

அர்ஜுநோ ஜயதாம் ஶ்ரேஷ்டே$_2$ா மாஹிஷ்மத்யா: பதி: ப்ரபு$_4$: ।
க்ரீட$_3$தே ஸஹ நாரீபி$_4$ர்நர்மத$_3$ாதோயமாஶ்ரித: ॥ (2)

Koviloor Digital Library

இவ்வாறு இராவணன் கூறியதும், பிரஹஸ்தன்–சுகன்–ஸாரணன்–மகோதரன்–தூம்ராட்சன் முதலியோர் நர்மதையில் தலைமூழ்கி நீராடினார்கள். (33)

அரக்க மன்னனின் படைத்தலைவர்களான அவர்கள், வாமனம்–அஞ்ஜனம்–பத்மம் முதலிய மிகப்பெரிய திசைக்களிறுகள், கங்கையில் மூழ்கிக் கலக்குவதைப் போல நர்மதையில் இறங்கிக் குதித்து நீராடி, அதனை வேதனைப்படுத்தினார்கள். (34)

நர்மதையில் அட்டகாசமாக நீராடிவிட்டுக் கரையேறிய அரக்கர்கள், இராவணன் இறைவழிபாடு செய்வதற்காக மலர்களைப் பறித்துக் கொண்டு வந்தார்கள். (35)

வெண்முகில் போன்று விளங்குவதும் இதயத்தைக் கொள்ளை கொள்வதுமான அந்த மணற்மேட்டில், ஒரு முகூர்த்த காலத்திற்குள், மலை அளவுக்கு மலர்களைக் கொண்டுவந்து குவித்துவிட்டார்கள், அந்த இராக்கதர்கள். (36)

இவ்விதம் மலர்கள் சேகரிக்கப்பட்டவுடன், ஒரு மாபெரும் யானை குளிப்பதற்காகக் கங்கையில் கம்பீரமாக இறங்குவதைப் போல, அரக்கத் தலைவனான இராவணன் நீராடுவதற்காக நர்மதையில் இறங்கினான். (37)

முறைப்படி (சங்கல்பம் முதலியன செய்துவிட்டு) நீராடிய பின்னர், மிகச்சிறந்த மந்திரங்களை ஜபம் செய்துவிட்டு, நர்மதை ஆற்றிலிருந்து மேலே கரைக்கு வந்தான். (38)

பின்னர், ஈரத்துணிகளைக் களைந்துவிட்டு வெண்மையான ஆடையை அணிந்து கொண்டான். மகாதேவன் வழிபாட்டுக்காக இரு கைகளையும் கூப்பிக் கொண்டு செல்லும் அவனை, உயிர்பெற்ற மலைகள் அவன் நடையினால் இழுக்கப்பட்டுப் பின்தொடர்வதைப் போல, எல்லா அரக்கர்களும் அவனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். (39)

அரக்க மன்னனாகிய இராவணன் எங்கே சென்றாலும், பொன்மயமான ஒரு சிவலிங்கமூர்த்தி, அங்கே எடுத்துச் செல்லப்படும். (40)

மணல் மேடையில் அந்த லிங்கத் திருமேனியை நிலைநிறுத்தி, நறுமணப் பொருள்களாலும் அமுதம் போல் மணம் வீசும் மலர்களாலும் அர்ச்சனை செய்தான். (41)

எந்த ஈசுவரன், சான்றோர்களின் துன்பங்களைப் போக்குகிறாரோ, எவருடைய நெற்றியில் பிறைநிலா விளங்குகிறதோ, அந்த சங்கரலிங்கத்தை நன்றாகப் பூசித்த பின்னர், அந்த அரக்கன், அதன் எதிரில் பாடவும், கைகளை விரித்து நடனமாடவும் தொடங்கினான். (42)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
முப்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்திரண்டு

இராவணன் பிடிபட்டான்!

நர்மதையின் மணற்பாங்கான கரையில், எந்த இடத்தில் கொடியவனான அரக்க மன்னன் இராவணன் மகாதேவனுக்கு மலர் வழிபாடு செய்து கொண்டிருந்தானோ, அந்த இடத்திற்கு அண்மையிலேயே வெற்றி வீரர்களில் தலையாயவனும் மாகிஷ்மதி நகரத்தின் ஆற்றல்மிக்க அரசனுமான அர்ஜுனன், தன் மனைவிகளோடுகூட நர்மதையில் நீர்விளையாட்டில் ஈடுபட்டிருந்தான். (1,2)

Koviloor Digital Library

தாஸாம் மத்$_4$யக$_3$தோ ராஜா ரராஜ ச ததா$_3$ர்ஜுந: ।
கரேணூநாம் ஸஹஸ்ரஸ்ய மத்$_4$யஸ்த$_2$ இவ குஞ்ஜர: ॥ (3)

ஜிக்ஞாஸு: ஸ து பா$_3$ஹூநாம் ஸஹஸ்ரஸ்யோத்தமம் ப$_3$லம் ।
ருரோத$_4$ நர்மதா$_3$வேக$_3$ம் பா$_3$ஹுபி$_4$ர்ப$_3$ஹுபி$_4$ர்வ்ருத: ॥ (4)

கார்தவீர்யபு$_4$ஜாஸக்தம் தஜ்ஜலம் ப்ராப்ய நிர்மலம் ।
கூலோபஹாரம் குர்வாணம் ப்ரதிஸ்ரோத: ப்ரதா$_4$வதி ॥ (5)

ஸமீநநக்ரமகர: ஸபுஷ்பகுஶஸம்ஸ்தர: ।
ஸ நர்மதா$_3$ம்ப$_4$ஸோ வேக$_3$: ப்ராவ்ருட்கால இவாப$_3$பௌ$_4$ ॥ (6)

ஸ வேக$_3$: கார்தவீர்யேண ஸம்ப்ரேஷித இவாம்ப$_4$ஸ: ।
புஷ்போபஹாரம் ஸகலம் ராவணஸ்ய ஜஹார ஹ ॥ (7)

ராவணோऽர்த$_4$ஸமாப்தம் தமுத்ஸ்ருஜ்ய நியமம் ததா$_3$ ।
நர்மதா$_3$ம் பஶ்யதே காந்தாம் ப்ரதிகூலாம் யதா$_2$ ப்ரியாம் ॥ (8)

பஶ்சிமேந து தம் த்$_3$ருஷ்ட்வா ஸாக$_3$ரோத்$_3$கா$_3$ரஸந்நிப$_4$ம் ।
வர்த$_4$ந்தமம்ப$_4$ஸோ வேக$_3$ம் பூர்வாமாஶாம் ப்ரவிஶ்ய து ॥ (9)

ததோऽநுப்$_4$ராந்தஶகுநாம் ஸ்வபா$_4$வோபரமே ஸ்தி$_2$தாம் ।
நிர்விகாராங்க$_3$நாபா$_4$ஸாமபஶ்யத்$_3$ராவணோ நதீ$_3$ம் ॥ (10)

ஸவ்யேதரகராங்கு$_3$ல்யா ஹ்யஶப்$_3$தா$_3$ஸ்யோ த$_3$ஶாநந: ।
வேக$_3$ப்ரப$_4$வமந்வேஷ்டும் ஸோऽதி$_3$ஶச்சு$_2$கஸாரணௌ ॥ (11)

தௌ து ராவணஸந்தி$_3$ஷ்டௌ ப்$_4$ராதரௌ ஶுகஸாரணௌ ।
வ்யோமாந்தரக$_3$தௌ வீரௌ ப்ரஸ்தி$_2$தௌ பஶ்சிமாமுகௌ$_2$ ॥ (12)

அர்த$_4$யோஜநமாத்ரம் து க$_3$த்வா தௌ ரஜநீசரௌ ।
பஶ்யேதாம் புருஷம் தோயே க்ரீட$_3$ந்தம் ஸஹயோஷிதம் ॥ (13)

ப்$_3$ருஹத்ஸாலப்ரதீகாஶம் தோயவ்யாகுலமூர்த$_4$ஜம் ।
மத$_3$ரக்தாந்தநயநம் மத$_3$வ்யாகுலதேஜஸம் ॥ (14)

நதீ$_3$ம் பா$_3$ஹுஸஹஸ்ரேண ருந்த$_4$ந்தமரிமர்த$_3$நம் ।
கி$_3$ரிம் பாத$_3$ஸஹஸ்ரேண ருந்த$_4$ந்தமிவ மேதி$_3$நீம் ॥ (15)

பா$_3$லாநாம் வரநாரீணாம் ஸஹஸ்ரேண ஸமாவ்ருதம் ।
ஸமதா$_3$நாம் கரேணூநாம் ஸஹஸ்ரேணேவ குஞ்ஜரம் ॥ (16)

தமத்$_3$பு$_4$ததரம் த்$_3$ருஷ்ட்வா ராக்ஷஸௌ ஶுகஸாரணௌ ।
ஸம்நிவ்ருத்தாவுபாக$_3$ம்ய ராவணம் தமதோ$_2$சது: ॥ (17)

Koviloor Digital Library

ஆயிரக்கணக்கான பெண்யானைகளிடையே ஓர் ஆண்யானை போல, காரிகைகள் கூட்டத்தினிடையே மன்னன் அர்ஜுனன் பெருமையுடன் விளங்கினான். (3)

அவனுக்கு ஆயிரம் கைகள் இருந்தன. அவற்றின் பலத்தைப் பரிசோதித்துப் பார்க்க விரும்பிய அவன், தன்னுடைய ஏராளமான கைகளினால் நர்மதையின் நீரோட்டத்தைத் தடுத்து நிறுத்தினான். (4)

கார்த்தவீர்ய அர்ஜுனனின் கைகளால் தடுக்கப்பட்ட நர்மதையின் தூய நீர்வெள்ளம், (கரையைத் தாண்டிப் பெருகி) மலர் வழிபாடு செய்து கொண்டிருந்த இராவணன் வரை சென்று, அங்கிருந்து எதிர்திசையில் ஓட ஆரம்பித்தது. (5)

நர்மதையின் வெள்ளம், மீன், முதலை, மகரமீன், மலர்கள், தருப்பை, ஆசனம் முதலியவற்றை அடித்துக் கொண்டு பெருகியவாறிருந்தது. அந்த ஆற்றில் மாரிக்காலம் போல் வெள்ளம் புரண்டது. (6)

கார்த்தவீர்யனே அனுப்பி வைத்தாற்போன்ற நீர்ப்பெருக்கு, இராவணன் அர்ச்சித்த மலர்கள் எல்லாவற்றையும் இழுத்துக் கொண்டு போயிற்று. (7)

இராவணனுடைய இறைவழிபாடு, அப்போது அரைப்பகுதிதான் நிறைவேறியிருந்தது. அவன், அந்த அளவில் வழிபாட்டை நிறுத்திவிட்டு, மனத்திற்கிசைந்த மனைவியாக இருந்தவள், எதிர்பாராதவிதமாகக் கணவனுக்கு எதிரியாகிவிட்டதைப் போல் காட்சிதரும் நர்மதையைப் பார்த்தான். (8)

மேற்கிலிருந்து வந்து, கிழக்குத் திசையில் பெருகி ஓடும் வெள்ளத்தைப் பார்த்ததும், ''கடல் பொங்குகிறதோ?'' என்று எண்ணத் தோன்றியது. (நர்மதை, கிழக்கிலிருந்து மேற்கே செல்லும் நதி. கடல் பொங்கி, கடல் நீர் ஆற்றில் புகுந்து நீரோட்டத்தைத் திசைமாற்றிவிட்டதோ? – என்ற ஐயம் உண்டாயிற்று.) (9)

இந்த மாற்றத்தைக் கண்டு, கரையோர மரங்களிலிருந்த பறவைகள் கலக்கம் அடையவில்லை. ஏனென்றால், மழைக்கால வெள்ளத்தின்போது காணப்படும் மாசுகள்கூட இல்லாமல், அந்த ஆறு, தன்னுடைய இயற்கையான போக்கில் நின்றது. நெஞ்சில் குற்றம் குறையில்லாத ஒரு மங்கையைப் போல் நிர்மலமாக அந்த ஆறு விளங்குவதைப் பார்த்தான், இராவணன். (10)

சத்தமின்றி வலது கை விரல்களைச் சொடுக்கி, ஆற்று வெள்ளத்தின் காரணத்தைக் கண்டு வரும்படி சுக–ஸாரணர்களை ஏவினான், இராவணன். (11)

சகோதரர்களான சுக–ஸாரணர்கள், இராவணனால் கட்டளை இடப்பட்டவுடன், வான்வழியே மேற்குத் திசை நோக்கிப் புறப்பட்டார்கள். (12)

அரையோஜனை தூரம் சென்றதும் அந்த அரக்கர்கள், ஓர் ஆடவன் சில பெண்களுடன் நீர்விளையாட்டில் ஈடுபட்டிருந்ததைக் கண்டார்கள். (13)

பெரிய ஆச்சாமரம் போன்ற உருவம்; தண்ணீரில் நனைந்த கேசம்; கண்களின் ஓரங்களில் போதை வெறியால் ஏற்பட்ட செவ்வரி; காமவேட்கையால் குழம்பிய அறிவு; எதிரிகளை அடக்கும் பேராற்றலுடைய அவன், ஆயிரம் கைகளால் ஆற்றின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்தியிருந்தான்; ஆயிரம் பாதங்களால் மண்ணுலகைத் தாங்கி நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கும் மாமலை போன்ற உறுதி; மதங்கொண்ட ஆயிரக்கணக்கான பெண்யானைகளால் சூழப்பட்ட மாபெரும் ஆண்யானையைப் போல், ஆயிரக்கணக்கான உயர்குல இளம்பெண்களால் சூழப்பட்டிருந்தான்; காண்பதற்கரிய இந்தக் காட்சியைக் கண்ட சுக–ஸாரணர்கள், திரும்பி வந்து இராவணனிடம் கூறினார்கள்— (14–17)

Koviloor Digital Library

ப்3ருஹத்ஸாலப்ரதீகாஶ: கோऽப்யஸௌ ராக்ஷஸேஶ்வர ।
நர்மதா3ம் ரோத4வத்3ருத்3த்4வா க்ரீடா3பயதி யோஷித: ॥ (18)

தேந பா3ஹுஸஹஸ்ரேண ஸம்நிருத்3த4ஜலா நதீ3 ।
ஸாக3ரோத்3கா3ரஸங்காஶாநுத்3கா3ராந் ஸ்ருஜதே முஹு: ॥ (19)

இத்யேவம் பா4ஷமாணௌ தௌ நிஶம்ய ஶுகஸாரணௌ ।
ராவணோऽர்ஜுந இத்யுக்த்வா ப்ரயயௌ யுத்3த4லாலஸ: ॥ (20)

அர்ஜுநாபி4முகே2 தஸ்மிந் ராவணே ராக்ஷஸாதி4பே ।
சண்ட3: ப்ரவாதி பவந: ஸநாத3: ஸரஜாஸ்தத3ா ॥ (21)

ஸக்ருதே3வ க்ருதோ ராவ: ஸரக்த: ப்ரேஷிதோ க4நை: ।
மஹோத3ரமஹாபார்ஶ்வதூ4ம்ராக்ஷஶுகஸாரணை: ॥
ஸம்வ்ருதோ ராக்ஷஸேந்த்3ரஸ்து தத்ராக3ாத்3யத்ர சார்ஜுந: ॥ (22)

அதீ3ர்கே4ணைவ காலேந ஸ தத3ா ராக்ஷஸோ ப3லீ ।
தம் நர்மதா3ஹ்ரத3ம் பீ4மமாஜகா3மாஞ்ஜநப்ரப4: ॥ (23)

ஸ தத்ர ஸ்த்ரீபரிவ்ருதம் வாஸிதாபி4ரிவ த்3விபம் ।
நரேந்த்3ரம் பஶ்யதே ராஜா ராக்ஷஸாநாம் தத3ார்ஜுநம் ॥ (24)

ஸ ரோஷாத்3ரக்தநயநோ ராக்ஷஸேந்த்3ரோ ப3லோத்3த4த: ।
இத்யேவமர்ஜுநாமாத்யாநாஹ க3ம்பீ4ரயா கி3ரா ॥ (25)

அமாத்யா: க்ஷிப்ரமாக்2யாத ஹைஹயஸ்ய ந்ருபஸ்ய வை ।
யுத்3தா4ர்தீ2 ஸமநுப்ராப்தோ ராவணோ நாம ராக்ஷஸ: ॥ (26)

ராவணஸ்ய வச: ஶ்ருத்வா மந்த்ரிணோऽத2ார்ஜுநஸ்ய தே ।
உத்தஸ்து2: ஸாயுதா4ஸ்த்ராஶ்ச ராவணம் வாக்யமப்3ருவந் ॥ (27)

யுத்3த4ஸ்ய காலோ விஜ்ஞாத: ஸாது4 பே4ா: ஸாது4 ராவண ।
ய: க்ஷீப3ம் ஸ்த்ரீவ்ருதம் சைவ யோத்3து4முத்ஸஹதே ந்ருபம் ॥ (28)

ஸ்த்ரீஸமக்ஷம் கத2ம் யத்தத்3யோத்3து4முத்ஸஹஸேऽர்ஜுநம் ।
வாஸிதாமத்4யக3ம் மத்தம் ஶார்தூ3ல இவ குஞ்ஜரம் ॥ (29)

க்ஷமஸ்வாத்3ய த3ஶக்3ரீவ சோஷ்யதாம் ஶர்வரீ த்வயா ।
யுத்3தே4 ஶ்ரத்3தா4 ச யத்3யஸ்தி ஶ்வஸ்தாத ஸமரேऽர்ஜுநம் ॥ (30)

யதி3 வாऽபி த்வரா துப்4யம் யுத்3த4த்ருஷ்ணாஸமாவ்ருதா ।
நிஹத்யாஸ்மாம்ஸ்ததோ யுத்3த4மர்ஜுநேநோபயாஸ்யஸி ॥ (31)

ததஸ்தே ராவணாமாத்யைரமாத்யா: பார்தி2வஸ்ய து ।
ஸூதி3தாஶ்சாபி தே யுத்3தே4 ப4க்ஷிதாஶ்ச பு3பு4க்ஷிதை: ॥ (32)

Koviloor Digital Library

''அரக்கவேந்தே! பெரிய ஆச்சாமரம் போல் விளங்கும் யாரோ ஒருவன் ஆற்றின் நடுவில் அணைகட்டினாற்போல, தன் கைகளால் ஆற்றின் ஓட்டத்தைத் தடுத்து, பல மங்கையர்களுடன் நீரில் விளையாடிக் கொண்டிருக்கிறான். (18)

அவனுடைய ஆயிரம் கைகளால் ஆற்றின் ஓட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதனால்தான், கடல் பொங்கி, கடல்நீர் ஆற்றில் புகுந்து எதிர்த்து ஓடி, அடிக்கடி வெள்ளப்பெருக்கை ஏற்படுத்துவது போல் தோன்றுகிறது.'' (19)

இவ்வாறு சுக–ஸாரணர்கள் கூறியதைக் கேட்ட இராவணன், ''ஓ! அவன் அர்ஜுனன்தான்!'' என்று கூறிவிட்டு, போர்வெறியுடன்கூட அந்தத் திசையை நோக்கிச் சென்றான். (20)

அரக்க மன்னன், (கார்த்தவீர்ய) அர்ஜுனனை நோக்கிச் சென்ற போது, (அவன் சென்ற வேகத்தில்) தூசிப் படலத்தை இரைச்சலுடன் எழுப்பிக் கொண்டு சுழற்காற்று வீசியது. (21)

மேகங்கள் ஒரே ஒரு தடவை இடியோசை எழுப்பி, ரத்தமாரியைப் பொழிந்தன. இராவணன், மகோதரன்–மகாபார்சுவன்–தூம்ராட்சன்–சுகன்–ஸாரணர்களால் சூழப்பட்டு, அர்ஜுனன் இருந்த இடத்தை நோக்கி விரைந்து சென்றான். (22)

கண் மை போல் கரிய நிறம் படைத்த பலம் மிகுந்த அந்த அரக்கன், சிறிது நேரத்திலேயே, அர்ஜுனன் நீராடிக் கொண்டிருந்த ஆற்றுமடுவை அடைந்தான். (23)

பெண்யானைகளால் சூழப்பட்ட ஆண்யானை போல் (இளமங்கைகள் சூழ) விளங்கும் மன்னன் அர்ஜுனனை, அரக்கர்வேந்தன் அங்கே கண்டான். (24)

அவனைக் கண்டதுமே ஆத்திரங்கொண்ட இராவணனின் கண்கள் செந்நிறம் அடைந்தன. தன்னுடைய ஆற்றலின் செருக்கால், அர்ஜுனனின் அமைச்சர்களைப் பார்த்து (பின்வருமாறு) மிடுக்கோடு கூறினான்— (25)

''அமைச்சர்களே! நீங்கள் விரைந்து சென்று, ஹைஹய மன்னனிடம், இராவணன் என்ற திருநாமம் கொண்ட அரக்கனாகிய நான், போர் புரிவதற்காக வந்திருக்கிறேன் என்று சொல்லுங்கள்.'' (26)

இராவணனுடைய சொற்களைக் கேட்ட அந்த அமைச்சர்கள், கைகளில் படைக்கலங்களை ஏந்திக்கொண்டு, (பின்வருமாறு) பதில் கூறினார்கள்— (27)

''இராவணா! போர் புரிவதற்கான காலத்தை நீர் தேர்ந்தெடுத்தது ரொம்ப அழகாக இருக்கிறது, ஐயா! எங்கள் மன்னர், காமக்கேளிக்கைகளில் விருப்பங்கொண்டு பெண்கள் புடைசூழ நிற்கும் இந்த வேளையில் போர் செய்ய அழைக்கிறீரே! பெண்யானைகளுக்கிடையில் காமவசப்பட்டு நிற்கும் ஆண்யானையுடன் போர் செய்ய விரும்பும் புலி போல, பெண்களுக்கு எதிரில் அர்ஜுனனோடு போர்புரியத் துணிந்துவிட்டீரே! (28,29)

செல்லப்பையனே! பத்துத் தலையனே! இன்று இரவு முடியும் வரை காத்திருப்பீர். பின்னரும் உமக்குப் போர் செய்வதில் வேகம் இருந்தால், நாளைக் காலையில் மறக்களத்தில் அர்ஜுனனைச் சந்திக்கலாம். (30)

போர் வேட்கையில் தவித்துக் கொண்டிருக்கும் நீர், காலம் கடத்த விரும்பாவிட்டால், முதலில் எங்களுடன் போர்புரியும். பின்னர், அர்ஜுனனுடன் போர் செய்யலாம்.'' (31)

பின்னர், பசியோடிருந்த இராவணனுடைய அமைச்சர்கள், ஹைஹய அரசரின் அமைச்சர்களைக் கொன்று தின்னத் தொடங்கினார்கள். (32)

Koviloor Digital Library

ததோ ஹலஹலாஶப்$_3$தோ$_3$ நர்மதா$_3$தீர ஆப$_3$பௌ$_4$ ।
அர்ஜுநஸ்யாநுயாத்ரூணாம் ராவணஸ்ய ச மந்த்ரிணாம் ॥ (33)

இஷுபி$_4$ஸ்தோமரை: ஶூலைஸ்த்ரிஶூலைர்வஜ்ரகர்ஷணை: ।
ஸராவணாநர்த$_3$யந்த: ஸமந்தாத் ஸமபி$_4$த்$_3$ருதா: ॥ (34)

ஹைஹயாதி$_4$பயோதா$_4$நாம் வேக$_3$ ஆஸீத் ஸுதா$_3$ருண: ।
ஸநக்ரமீநமகரஸமுத்$_3$ரஸ்யேவ நிஸ்வந: ॥ (35)

ராவணஸ்ய து தேऽமாத்யா: ப்ரஹஸ்தஶுகஸாரணா: ।
கார்தவீர்யப$_3$லம் க்ருத்$_3$தா$_4$ நிர்த$_3$ஹந்தி ஸ்ம தேஜஸா ॥ (36)

அர்ஜுநாய து தத் கர்ம ராவணஸ்ய ஸமந்த்ரிண: ।
க்ரீட$_3$மாநாய கதி$_2$தம் புருஷைர்ப$_4$யவிஹ்வலை: ॥ (37)

ஶ்ருத்வா ந பே$_4$தவ்யமிதி ஸ்த்ரீஜநம் ஸ தத$_3$ார்ஜுந: ।
உத்ததார ஜலாத்தஸ்மாத்$_3$க$_3$ங்க$_3$ாதோயாதி$_3$வாஞ்ஜந: ॥ (38)

க்ரோத$_4$தூ$_3$ஷிதநேத்ரஸ்து ஸ ததோऽர்ஜுநபாவக: ।
ப்ரஜஜ்வால மஹாகே$_4$ாரோ யுக$_3$ாந்த இவ பாவக: ॥ (39)

ஸ தூர்ணதரமாத$_3$ாய வரஹேமாங்க$_3$தோ$_3$ க$_3$தா$_3$ம் ।
அபி$_4$து$_3$த்$_3$ராவ ரக்ஷாம்ஸி தமாம்ஸீவ தி$_3$வாகர: ॥ (40)

ப$_3$ாஹுவிக்ஷேபகரணாம் ஸமுத்$_3$யம்ய மஹாக$_3$தா$_3$ம் ।
க$_3$ாருட$_3$ம் வேக$_3$மாஸ்தா$_2$ய சாபபாதைவ ஸோऽர்ஜுந: ॥ (41)

தஸ்ய மார்க$_3$ம் ஸமாருத்$_4$ய விந்த்$_4$யோऽர்கஸ்யேவ பர்வத: ।
ஸ்தி$_2$தோ விந்த்$_4$ய இவாகம்ப்ய: ப்ரஹஸ்தோ முஸலாயுத$_4$: ॥ (42)

ததோऽஸ்ய முஸலம் கே$_4$ாரம் லோஹப$_3$த்$_3$த$_4$ம் மதே$_3$ாத்$_3$த$_4$த: ।
ப்ரஹஸ்த: ப்ரேஷயந் க்ருத்$_3$தே$_4$ா ரராஸ ச யதா$_2$ம்பு$_3$த$_3$: ॥ (43)

தஸ்யாக்$_3$ரே முஸலஸ்யாக்$_3$நிரஶோகாபீட$_3$ஸம்நிப$_4$: ।
ப்ரஹஸ்தகரமுக்தஸ்ய ப$_3$பூ$_4$வ ப்ரத$_3$ஹந்நிவ ॥ (44)

அதா$_2$யாந்தம் து முஸலம் கார்தவீர்யஸ்தத$_3$ார்ஜுந: ।
நிபுணம் வஞ்சயாமாஸ ஸக$_3$தோ$_3$ க$_3$தவிக்லப: ॥ (45)

ததஸ்தமபி$_4$து$_3$த்$_3$ராவ ப்ரஹஸ்தம் ஹைஹயாதி$_4$ப: ।
ப்$_4$ராமயாணோ க$_3$தா$_3$ம் கு$_3$ர்வீம் பஞ்சபா$_3$ஹுஶதோச்ச்$_2$ரயாம் ॥ (46)

ததோ ஹதோऽதிவேகே$_3$ந ப்ரஹஸ்தோ க$_3$த$_3$யா ததா$_3$ ।
நிபபாத ஸ்தி$_2$த: ஶைலோ வஜ்ரிவஜ்ரஹதோ யதா$_2$ ॥ (47)

Koviloor Digital Library

அதனால், அர்ஜுனனுடன் வந்தவர்களும் இராவணனுடைய அமைச்சர்களும் எழுப்பிய பேரிரைச்சல் நர்மதையின் கரையில் எழுந்தது. (33)

அர்ஜுனனுடைய போர் வீரர்கள், அம்பு, வல்லயம், ஈட்டி, முத்தலை சூலம், வஜ்ரம், கர்ஷணம் என்ற ஆயுதம் முதலியவற்றால், இராவணனையும் அவனுடன் வந்தவர்களையும் நாற்புறமும் தாக்கித் துன்புறுத்தினார்கள். (34)

ஹைஹய மன்னருடைய போர்வீரர்களின் தாக்குதல், முதலை–மீன்–மகர மீன் வாழும் பெருங்கடலின் பேரோசை போல் மிகவும் பயங்கரமாக இருந்தது. (35)

இராவணனுடைய மந்திரிகளான பிரஹஸ்தன்–சுகன்–ஸாரணன் ஆகியோர் மிகவும் கோபம் கொண்டு, தம் ஆற்றலால் கார்த்தவீர்யனுடைய வீரர்களைக் கொல்லத் தொடங்கினார்கள். (36)

இராவணனும் அவனுடைய அமைச்சர்களும், தம் நாட்டுப் போர்வீரர்களைத் தாக்கிக் கொல்லும் செய்தியை (காமகேளிக்கையில் ஈடுபட்டிருந்த) அர்ஜுனனுக்கு, வாயிற்காப்பாளர்கள் தெரிவித்தார்கள். (37)

அதைக் கேட்டதும், ''பயப்படாதீர்கள்'' என்று பெண்களிடம் கூறிவிட்டு, அவர்கள் எல்லோருடனும் கங்கையிலிருந்து (பெண்யானைகள் புடைசூழ) ஒரு திசைக்களிறு எழுந்துவருவதைப் போல புதுப்பொலிவுடன் கரையேறினான், அர்ஜுனன். (38)

கோபத்தினால் அவன் கண்கள் சிவந்தன. அர்ஜுனன் என்னும் மாபெரும் தீ, ஊழிக்காலத் தீயைப் போல பயங்கரமாக ஜொலித்தது. (39)

தங்கத்தாலான அழகிய தோள்வளை அணியும் அர்ஜுனன், விரைவில் ஒரு கதையைக் கையில் எடுத்துக் கொண்டு, சூரியன் இருளை நொடிப்பொழுதில் விரட்டி விடுவதைப் போல, அரக்கர்களை விரட்டித் துரத்தினான். (40)

கைகளால் நன்றாகச் சுழற்றிய மாபெரும் கதாயுதத்தை உயரே தூக்கிப்பிடித்து, கருட பகவானின் வேகத்துடன் அவர்களைத் தாக்கினான், அர்ஜுனன். (41)

ஆனால், முன்னொரு காலத்தில் சூரியனின் பயணத்தைத் தடுத்து நிறுத்திய விந்தியமலை போல், சிறிதும் கலங்காமல் உறுதியாக நின்ற பிரஹஸ்தன், உலக்கை ஆயுதத்தால் அர்ஜுனனை வழிமறித்து நிறுத்திவிட்டான். (42)

வெறிகொண்ட பிரஹஸ்தன், இரும்புப் பூண் கட்டப்பட்டிருந்த பயங்கரமான உலக்கையை வீசியெறிந்துவிட்டு, மேக கர்ஜனை செய்தான். (43)

பிரஹஸ்தன் கையிலிருந்து விடுபட்ட அந்த உலக்கையின் தலைப்பகுதி, அசோகமலர் போல் செக்கச்செவேலென்று சிவந்து, இலக்கினைத் தீயால் பொசுக்கிவிடுவதைப் போல் விளங்கியது. (44)

தன்னை நோக்கி வந்துகொண்டிருந்த உலக்கையை, ஆழங்காண முடியாத ஆற்றல் கொண்ட அர்ஜுனன், சாமர்த்தியமாக செயல்பட்டு பயனற்றுப் போகச் செய்தான். (கதையால் தாக்கித் தூளாக்கினான்.) (45)

பின்னர், ஹைஹய மன்னன் ஐநூறு கைகளால் தூக்கும் மாபெரும் கதையைத் தூக்கிச் சுழற்றியபடியே, பிரஹஸ்தனை நோக்கி ஓடினான். (46)

வேகமாக வந்த கதையினால் தாக்கப்பட்ட பிரஹஸ்தன், இந்திரனுடைய வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்ட மலை போல் சிதறிப் போய் தரையில் வீழ்ந்தான். (47)

Koviloor Digital Library

ப்ரஹஸ்தம் பதிதம் த்$_3$ருஷ்ட்வா மாரீசஶுகஸாரணா: ।
ஸமஹோத$_3$ரதூ$_4$ம்ராக்ஷா ஹ்யபஸ்ருஷ்டா ரணாஜிராத் ॥ (48)

அபக்ராந்தேஷ்வமாத்யேஷு ப்ரஹஸ்தே விநிபாதிதே ।
ராவணோऽப்$_4$யத்$_3$ரவத்தூர்ணமர்ஜுநம் ந்ருபஸத்தமம் ॥ (49)

ஸஹஸ்ரபா$_3$ஹோஸ்தத்$_3$யுத்$_3$த$_4$ம் விம்ஶத்பா$_3$ஹோஶ்ச தா$_3$ருணம் ।
ந்ருபராக்ஷஸயோஸ்தத்ர சாரப்$_3$த$_4$ம் ரோமஹர்ஷணம் ॥ (50)

ஸாக$_3$ராவிவ ஸம்ரப்$_3$தெ$_4$ள சலந்மூலாவிவாசலௌ ।
தேஜோயுக்தாவிவாதி$_3$த்யௌ ப்ரத$_3$ஹந்தாவிவாநலௌ ॥ (51)

ப$_3$லோத்$_3$த$_4$தௌ யதா$_2$ நாகெ$_3$ள வாஸிதார்தே$_2$ யதா$_2$ வ்ருஷௌ ।
மேகா$_4$விவ விநர்த$_3$ந்தௌ ஸிம்ஹாவிவ ப$_3$லோத்கடௌ ॥ (52)

ருத்$_3$ரகாலாவிவ க்ருத்$_3$தெ$_4$ள ததா$_2$ தௌ ராக்ஷஸார்ஜுநௌ ।
பரஸ்பரம் க$_3$தா$_3$ப்$_4$யாம் தௌ தாட$_3$யாமாஸதுர்ப்$_4$ருஶம் ॥ (53)

வஜ்ரப்ரஹாராநசலா யதா$_2$ கோ$_4$ராந் விஷேஹிரே ।
க$_3$தா$_3$ப்ரஹாராம்ஸ்தௌ தத்ர ஸேஹாதே நரராக்ஷஸௌ ॥ (54)

யதா$_2$ஶநிரவேப்$_4$யஸ்து ஜாயதேऽத$_2$ ப்ரதிஶ்ருதி: ।
ததா$_2$ தயோர்க$_3$தா$_3$போதை$_2$ர்தி$_3$ஶ: ஸர்வா: ப்ரதிஶ்ருதா: ॥ (55)

அர்ஜுநஸ்ய க$_3$தா$_3$ ஸா து பாத்யமாநாஹிதோரஸி ।
காஞ்சநாப$_4$ம் நப$_4$ஶ்சக்ரே வித்$_3$யுத்ஸௌதா$_3$மிநீ யதா$_2$ ॥ (56)

ததை$_2$வ ராவணேநாபி பாத்யமாநா முஹுர்முஹு: ।
அர்ஜுநோரஸி நிர்பா$_4$தி க$_3$தோ$_3$ல்கேவ மஹாகி$_3$ரௌ ॥ (57)

நார்ஜுந: கே$_2$த$_3$மாயாதி ந ராக்ஷஸக$_3$ணேஶ்வர: ।
இத$_3$மாஸீத்தயோர்யுத்$_3$த$_4$ம் யதா$_2$ பூர்வம் ப$_3$லீந்த்$_3$ரயோ: ॥ (58)

ஶ்ருங்கை$_3$ர்மஹர்ஷபெ$_4$ள யத்$_3$வத்$_3$த$_3$ந்தாக்$_3$ரைரிவ குஞ்ஜரௌ ।
பரஸ்பரம் தௌ நிக்$_4$நந்தௌ நரராக்ஷஸஸத்தமௌ ॥ (59)

ததோऽர்ஜுநேந க்ருத்$_3$தே$_4$ந ஸர்வப்ராணேந ஸா க$_3$தா$_3$ ।
ஸ்தநயோரந்தரே முக்தா ராவணஸ்ய மஹோரஸி ॥ (60)

வரதா$_3$நக்ருதத்ராணே ஸா க$_3$தா$_3$ ராவணோரஸி ।
து$_3$ர்ப$_3$லேவ யதா$_2$வேக$_3$ம் த்$_3$விதா$_4$ பூ$_4$த்வாபதத் க்ஷிதௌ ॥ (61)

ஸ த்வர்ஜுநப்ரமுக்தேந க$_3$தா$_3$பாதேந ராவண: ।
அபாஸர்பத்$_3$த$_4$நுர்மாத்ரம் நிஷஸாத$_3$ ச நிஷ்டநந் ॥ (62)

Koviloor Digital Library

பிரஹஸ்தன் தரையில் வீழ்ந்துவிட்டதைக் கண்ட மாரீச–சுக–ஸாரண–மகோதர–தூம்ராட்சர்கள் போர்க்களத்திலிருந்து ஓடிப்போய்விட்டார்கள். (48)

பிரஹஸ்தன் தரையில் சாய்ந்ததையும், அமைச்சர்கள் ஓடிப்போய்விட்டதையும் கண்ட இராவணன் விரைந்து வந்து, சிறந்த அரசனான அர்ஜுனனை எதிர்த்தான். பின்னர், ஆயிரம் கைகளைக் கொண்ட மன்னனுக்கும், இருபது கைகள் கொண்ட அரக்கனுக்கும் இடையே, உரோமச் சிலிர்ப்பை உண்டாக்கும் கடுமையான போர் துவங்கியது. (49,50)

கொந்தளிக்கும் இரண்டு கடல்கள்; ஆட்டங்கண்ட அடித்தளமுடைய இரு மலைகள்; ஒளி உமிழும் இரண்டு சூரியன்கள்; சுட்டுப் பொசுக்கும் இரு நெருப்புகள்; ஆற்றல்மிகு இரு யானைகள்; ஒரு பசுவை அடைவதற்காகப் போட்டியிடும் இரு காளைகள்; உரக்கக் கர்ஜிக்கும் இரு மேகங்கள்; வலிமைத் திமிர் கொண்ட இரு சிங்கங்கள்; கோபங்கொண்ட ருத்ரன், காலதேவன் போன்றவர்கள் – இப்படிப்பட்ட அரக்க–அர்ஜுனர்களாகிய அவ்விருவரும் கைகளில் கதையைத் தாங்கி, ஒருவரையொருவர் பலமாகத் தாக்கிக் கொண்டார்கள். (51–53)

முன்னொரு காலத்தில், வஜ்ராயுதத்தின் பயங்கரமான தாக்குதலை மலைகள் பொறுத்துக் கொண்டதைப் போல, அந்த மனிதனும் அரக்கனும் கதையின் தாக்குதலைச் சகித்துக் கொண்டார்கள். (54)

இடியின் ஓசை எல்லாத் திசைகளிலும் எதிரொலிப்பதைப் போல, அவ்விருவருடைய கதைகள் தாக்கிக் கொண்டதால் ஏற்பட்ட பேரொலி எல்லாத் திசைகளிலும் எதிரொலித்தது. (55)

மின்னல், பிரகாசமாக ஒளி வீசி ஆகாயத்தையே பொன்னிறமாக ஆக்கிவிடுவதைப் போல, இராவணனுடைய மார்பில் அர்ஜுனனுடைய கதை தாக்கி, அவன் மார்பையே பொன்னைப் போல் ஒளிவீசச் செய்தது. (56)

அவ்வாறே, இராவணனால் பல தடவைகள் அர்ஜுனன் தாக்கப்பட்டான். அந்தக் காட்சி, ஒரு மாபெரும் மலைமேல் வானத்திலிருந்து எரிகொள்ளி வீழ்வதைப் போலிருந்தது. (57)

இவ்வளவு பயங்கரமாகப் போர் புரிந்தும்கூட அர்ஜுனன் களைப்படையவில்லை; இராவணனும் சோர்ந்து போகவில்லை. முன்னர், இந்திரன்–பலிச்சக்கரவர்த்திகளுக்கிடையே நடந்த போரில், வெற்றி–தோல்வியை நிர்ணயிக்க முடியாமல் சம பலமாக இருந்ததைப் போலவே, இவர்கள் போரும் இருந்தது. (58)

இரண்டு காளைகள் தத்தம் கொம்புகளாலும், இரண்டு யானைகள் தத்தம் தும்பிக்கையினாலும் தாக்கிக் கொள்வதைப் போல, வீரர்களான மனிதனும் அரக்கனும் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள். (59)

அப்போது, கோபங்கொண்ட அர்ஜுனன் மூச்சை அடக்கிக் கொண்டு, இராவணனுடைய மார்பின்மேல் கதையை வீசினான். (60)

'பிரும்மாவிடமிருந்து பெற்ற வரம்' என்ற கவசத்தினால் காப்பாற்றப்படும் இராவணனின் மார்பில் விழுந்த அந்த கதை, அதன் சக்தியை இழந்து இரண்டு துண்டுகளாகித் தரையில் விழுந்தது. (61)

என்றாலும், அர்ஜுனனால் விடப்பட்ட கதையின் தாக்குதலைத் தாங்கமுடியாமல், இராவணன் ஒரு வில்லளவு தூரம் பின்வாங்கி, துன்பக்குரல் எழுப்பியவாறு கீழே உட்கார்ந்துவிட்டான். (62)

Koviloor Digital Library

ஸ விஹ்வலம் தத$_3$ாலக்ஷ்ய த$_3$ஶக்$_3$ரீவம் ததோऽர்ஜுந: ।
ஸஹஸோத்பத்ய ஜக்$_3$ராஹ க$_3$ருத்மாநிவ பந்நக$_3$ம் ॥ (63)

ஸ தம் ப$_3$ாஹுஸஹஸ்ரேண ப$_3$லாத்$_3$க்$_3$ருஹ்ய த$_3$ஶாநநம் ।
ப$_3$ப$_3$ந்த$_4$ ப$_3$லவாந் ராஜா ப$_3$லிம் நாராயணோ யதா$_2$ ॥ (64)

ப$_3$த்$_4$யமாநே த$_3$ஶக்$_3$ரீவே ஸித்$_3$த$_4$சாரணதே$_3$வதா: ।
ஸாத்$_4$வீதி வாதி$_3$ந: புஷ்பை: கிரந்த்யர்ஜுநமூர்த$_4$நி ॥ (65)

வ்யாக்$_4$ரோ ம்ருக$_3$மிவாத$_3$ாய ம்ருக$_3$ராடி$_3$வ த$_3$ந்திநம் ।
நநாத$_3$ ஹைஹயோ ராஜா ஹர்ஷாத$_3$ம்பு$_3$த$_3$வந்முஹு: ॥ (66)

ப்ரஹஸ்தஸ்து ஸமாஶ்வஸ்தோ த்$_3$ருஷ்ட்வா ப$_3$த்$_3$த$_4$ம் த$_3$ஶாநநம் ।
ஸஹ தை ராக்ஷஸை: க்ருத்$_3$த$_4$ஶ்சாபி$_4$து$_3$த்$_3$ராவ பார்தி$_2$வம் ॥ (67)

நக்தம்சராணாம் வேக$_3$ஸ்து தேஷாமாபததாம் ப$_3$பௌ$_4$ ।
உத்$_3$பூ$_4$த ஆதபாபாயே பயோத$_3$ாநாமிவாம்பு$_3$தௌ$_4$ ॥ (68)

முஞ்ச முஞ்சேதி ப$_4$ாஷந்தஸ்திஷ்ட$_2$ திஷ்டே$_2$தி சாஸக்ருத் ।
முஸலாநி ஶூலாநி ஹ்யுத்ஸஸர்ஜுஸ்தத$_3$ார்ஜுநே ॥ (69)

அப்ராப்தாந்யேவ தாந்யாஶு அஸம்ப்$_4$ராந்தஸ்தத$_3$ார்ஜுந: ।
ஆயுத$_4$ாந்யமராரீணாம் ஜக்$_3$ராஹாரிநிஷூத$_3$ந: ॥ (70)

ததஸ்தைரேவ ரக்ஷாம்ஸி து$_3$ர்த$_4$ரை: ப்ரவராயுதை$_4$: ।
பி$_4$த்த்வா வித்$_3$ராவயாமாஸ வாயுரம்பு$_3$த$_4$ாநிவ ॥ (71)

ராக்ஷஸாம்ஸ்த்ராஸயித்வா து கார்தவீர்யோऽர்ஜுநஸ்தத$_3$ா ।
ராவணம் க்$_3$ருஹ்ய நக$_3$ரம் ப்ரவிவேஶ ஸுஹ்ருத்$_3$வ்ருத: ॥ (72)

ஸ கீர்யமாண: குஸுமாக்ஷதோத்கரைர்–
த்$_3$விஜை: ஸபௌரை: புருஹூதஸந்நிப$_4$: ।
தத$_3$ார்ஜுந: ஸம்ப்ரவிவேஶ தாம் புரீம்
ப$_3$லிம் நிக்$_3$ருஹ்யேவ ஸஹஸ்ரலோசந: ॥ (73)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்$_3$வாத்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

த்ரயஸ்த்ரிம்ஶ: ஸர்க$_3$:

ராவணவிப்ரமோக்ஷ:

ராவணக்$_3$ரஹணம் தத்து வாயுக்$_3$ரஹணஸம்நிப$_4$ம் ।
தத: புலஸ்த்ய: ஶுஶ்ராவ கதி$_2$தம் தி$_3$வி தை$_3$வதை: ॥ (1)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_15_Back

Koviloor Digital Library

இராவணன் மிகவும் தளர்ச்சியுடன் இருப்பதைக் கண்ட அர்ஜுனன், கருடன் வேகமாக வந்து ஒரு பாம்பை தூக்கிச் செல்வதைப் போல, உடனே சென்று இராவணனைக் கைப்பற்றினான். (63)

அர்ஜுனன் ஆயிரம் கைகளாலும் இராவணனை இறுக்கமாகக் கட்டினான் – பலிச்சக்கரவர்த்தியை பகவான் நாராயணன் கட்டிப் போட்டதைப் போல. (64)

இராவணன் கட்டிப்போடப்பட்டதும், மனமகிழ்ந்த சித்த–சாரண–தேவதைகள், ''ஆகா! உன் செயல் மகத்தானது!'' என்று கூறியபடியே மலர்மாரி பொழிந்தார்கள். (65)

ஒரு மானை அடித்துப் போட்டு, கவ்விக்கொண்டு வரும் புலியைப் போலும், ஒரு யானையை வென்று வசப்படுத்திய சிங்கம் போலும் மகிழ்ச்சியடைந்த ஹைஹய மன்னன் இடியோசை போல் பேரொலி எழுப்பினான். (66)

இராவணன் பிடிபட்டுவிட்டதைக் கண்ட பிரஹஸ்தனுக்கு மூர்ச்சையே வந்துவிட்டது. அங்கிருந்த அரக்கர்களுடன்கூட, அர்ஜுனனுடன் போர் புரிந்து இராவணனை விடுவிப்பதற்காக, அவனை நோக்கி ஓடினான். (67)

மழைக்காலம் வந்தவுடன், கடலின் மேல் கருமுகில்கள் பெருகுவதைப் போல, அர்ஜுனனை எதிர்த்துச் சென்ற அரக்கர்களுடைய பலம் பெருகியது. (68)

''அவரை விட்டுவிடு, விட்டுவிடு; நில்லு, நில்லு'' என்று பல தடவைகள் கூவிக்கொண்டே, உலக்கைகளையும் சூலங்களையும் அர்ஜுனன் மேல் எறிந்தான், பிரஹஸ்தன். (69)

எதிரிகளை வென்று வீழ்த்தும் அர்ஜுனன் சிறிதும் மனக்கலக்கமடையாமல், தேவ விரோதிகளான அவர்கள் எய்திய அஸ்திரங்களையெல்லாம் அவை தன்னை நெருங்கித் தாக்குவதற்கு முன்னதாகவே, தன் கைகளால் பற்றினான். (70)

பின்னர், சூறைக்காற்று மேகக்கூட்டத்தைத் தாக்கித் துண்டுகளாக்கி ஓடச் செய்வதைப் போல, அரக்கர்களால் விடப்பட்ட அடக்கமுடியாத வலிமைகொண்ட சிறந்த ஆயுதங்களால் அவர்களைத் தாக்கி, காயப்படுத்தித் துரத்தி அடித்தான், அர்ஜுனன். (71)

அரக்கர்களைத் துரத்திவிட்டு இராவணனைக் கைப்பற்றி, நண்பர்கள் புடைசூழ நகரத்திற்குள் பிரவேசித்தான், கார்த்தவீர்யன்! (72)

இந்திரன் போல் பிரகாசித்த அவன் மேல், அந்தணர்களும் நகர மக்களும் அட்சதை–மலர்கள் தூவி வரவேற்றார்கள். பலிச்சக்கரவர்த்தியை அடக்கி, கைது செய்து கொண்டு சென்ற இந்திரன் போல், (இராவணனைக் கைது செய்து கொண்டு வந்த) அர்ஜுனன் வெற்றித்திரு பொலிந்தவனாக நகரத்திற்குள் அடியெடுத்து வைத்தான். (73)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
முப்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து மூன்று

இராவணன் விடுதலை

இராவணனைக் கைப்பற்றுவது என்பது வாயுவை வசப்படுத்துவது போல் இயலாத காரியம். (ஆனால், இராவணன், அர்ஜுனனின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டான்! – என்பது, மிகவும் ஆச்சரியமானது.) தேவலோகத்தில் தேவர்கள் இந்த அதிசயம் பற்றி பேசிக்கொண்டது புலஸ்தியர் செவிகளில் விழுந்தது. (1)

Koviloor Digital Library

தத: புத்ரக்ருதஸ்நேஹாத் கம்ப்யமாநோ மஹாத்$_4$ருதி: ।
மாஹிஷ்மதீபதிம் த்$_3$ரஷ்டுமாஜகா$_3$ம மஹாமுநி: ॥ (2)

ஸ வாயுமார்க$_3$மாஸ்தா$_2$ய வாயுதுல்யக$_3$திர்த்$_3$விஜ: ।
புரீம் மாஹிஷ்மதீம் ப்ராப்தோ மந:ஸம்பாதவிக்ரம: ॥ (3)

ஸோऽமராவதிஸங்காஶாம் ஹ்ருஷ்டபுஷ்டஜநாகுலாம் ।
ப்ரவிவேஶ புரீம் ப்$_3$ரஹ்மா இந்த்$_3$ரஸ்யேவாமராவதீம் ॥ (4)

பாத$_3$சாரமிவாதி$_3$த்யம் நிஷ்பதந்தம் ஸுது$_3$ர்த்$_3$ருஶம் ।
ததஸ்தே ப்ரத்யபி$_4$க்ஞாய ஸார்ஜுநாய ந்யவேத$_3$யந் ॥ (5)

புலஸ்த்ய இதி விக்ஞாய வசநாத்$_3$தை$_4$ஹயாதி$_4$ப: ।
ஶிரஸ்யஞ்ஜலிமாதா$_4$ய ப்ரத்யுத்$_3$க$_3$ச்ச$_2$த்தபஸ்விநம் ॥ (6)

புரோஹிதோऽஸ்ய க்$_3$ருஹ்யார்க்$_4$யம் மது$_4$பர்கம் ததை$_2$வ ச ।
புரஸ்தாத் ப்ரயயௌ ராக்ஞ: ஶக்ரஸ்யேவ ப்$_3$ருஹஸ்பதி: ॥ (7)

ததஸ்தம்ருஷிமாயாந்தமுத்$_3$யந்தமிவ பா$_4$ஸ்கரம் ।
அர்ஜுநோ த்$_3$ருஶ்ய ஸம்ப்$_4$ராந்தோ வவந்தே$_3$ந்த்$_3$ர இவேஶ்வரம் ॥ (8)

ஸ தஸ்ய மது$_4$பர்கம் கா$_3$ம் பாத்$_3$யமர்க்$_4$யம் நிவேத்$_3$ய ச ।
புலஸ்த்யமாஹ ராஜேந்த்$_3$ரோ ஹர்ஷக$_3$த்$_3$க$_3$த$_3$யா கி$_3$ரா ॥ (9)

அத்$_3$யேயமமராவத்யா துல்யா மாஹிஷ்மதீ க்ருதா ।
அத்$_3$யாஹம் து த்$_3$விஜேந்த்$_3$ர த்வாம் யஸ்மாத் பஶ்யாமி து$_3$ர்த்$_3$ருஶம் ॥ (10)

அத்$_3$ய மே குஶலம் தே$_3$வ அத்$_3$ய மே குஶலம் வ்ரதம் ।
அத்$_3$ய மே ஸப$_2$லம் ஜந்ம அத்$_3$ய மே ஸப$_2$லம் தப: ॥
யஸ்மாத்$_3$தே$_3$வக$_3$ணைர்வந்த்$_3$யௌ வந்தே$_3$ऽஹம் சரணௌ தவ ॥ (11)

இத$_3$ம் ராஜ்யமிமே புத்ரா இமே தா$_3$ரா இமே வயம் ।
ப்$_3$ரஹ்மந் கிம் குர்மி கிம் கார்யமாக்ஞாபயது நோ ப$_4$வாந் ॥ (12)

தம் த$_4$ர்மேऽக்$_3$நிஷு புத்ரேஷு ஶிவம் ப்ருஷ்ட்வா ச பார்தி$_2$வம் ।
புலஸ்த்யோவாச ராஜாநம் ஹைஹயாநாம் ததா$_2$ர்ஜுநம் ॥ (13)

நரேந்த்$_3$ராம்பு$_3$ஜபத்ராக்ஷ பூர்ணசந்த்$_3$ரநிபா$_4$நந ।
அதுலம் தே ப$_3$லம் யேந த$_3$ஶக்$_3$ரீவஸ்த்வயா ஜித: ॥ (14)

ப$_4$யாத்$_3$யஸ்யோபதிஷ்டே$_2$தாம் நிஷ்பந்தௌ$_3$ ஸாக$_3$ராநிலௌ ।
ஸோऽயம் ம்ருதே$_4$ த்வயா ப$_3$த்$_3$த$_4$: பௌத்ரோ மே ரணது$_3$ர்ஜய: ॥ (15)

புத்ரகஸ்ய யஶ: பீதம் நாம விஶ்ராவிதம் த்வயா ।
மத்$_3$வாக்யாத்$_3$யாச்யமாநோऽத்$_3$ய முஞ்ச வத்ஸம் த$_3$ஶாநநம் ॥ (16)

Koviloor Digital Library

மாமுனிவர், கலங்காத மனம் உடையவர்தான் என்றாலும் தன் பேரனிடமிருந்த பேரன்பினால் நெஞ்சம் நடுங்கினார். மாகிஷ்மதியின் மன்னனைக் காண்பதற்காக மாமுனிவர், மண்ணுலகம் வந்து சேர்ந்தார். வாயுவுக்கு நிகராகச் செல்லக்கூடிய அவர், ஆகாயமார்க்கமாக மனோவேகத்துடன் மாகிஷ்மதி நகரத்தை வந்தடைந்தார். (2,3)

அமராவதிப் பட்டணத்தைப் போல் பொலிவுடன் விளங்குவதும், மனமகிழ்ச்சியும் உடல்வலிமையும் கொண்ட மக்கள் நிறைந்ததுமான அந்த மாகிஷ்மதி நகரத்திற்குள், தேவலோகத் தலைநகரான அமராவதிக்குள் இந்திரன் செல்வதைப்போல, இவர் பிரவேசித்தார். (4)

சூரியன் தன் பாதங்களால் நடந்துவருவதைப் போல் ஆகாயத்திலிருந்து இறங்கி வந்தவரும், ஆன்மப் பேரொளியால் பிறர் கண்களைக் கூசச் செய்பவருமான அவரை, அர்ஜுனனுடைய ஏவலாளர்கள் அடையாளம் கண்டு கொண்டு, அவனிடம் சென்று தெரிவித்தார்கள். (5)

ஹைஹய மன்னன், பெரும் தவசியான புலஸ்தியர் வந்திருப்பதை அறிந்து கொண்டதும், அவரை வரவேற்பதற்காகத் தலைமேல் இரு கைகளையும் கூப்பியவண்ணம் அவரை நோக்கிச் சென்றான். வந்திருக்கும் ஓர் ஆன்மீகச் சான்றோரை வரவேற்பதற்காக இந்திரன் செல்லும்போது, புரோகிதரான பிருஹஸ்பதி உபசாரப் பொருள்களுடன் முன்னதாகச் செல்வதைப் போல, புலஸ்தியரை வரவேற்கச் சென்ற அர்ஜுனனுக்கு முன்னால், அவனுடைய புரோகிதர் அர்க்யம்–மதுபர்க்கம் ஆகிய உபசாரப் பொருள்களை எடுத்துக்கொண்டு சென்றார். (6,7)

உதயமாகிக் கொண்டிருக்கும் சூரியனைப் போல் தேசுடன் விளங்கிய முனிவரைக் கண்டு, அர்ஜுனன் திகைத்துப் போனான். பின்னர், பிரும்மதேவனை இந்திரன் வணங்குவதைப் போல, அவன் பணிவுடன் அவரது திருவடியில் வீழ்ந்து வணங்கினான். (8)

அர்ஜுனன், புலஸ்தியருக்கு பாத்யம், அர்க்யம், மதுபர்க்கம், பசு ஆகியவற்றைச் சமர்ப்பித்துவிட்டு, ஆனந்தப் பெருக்கினால் தழுதழுத்த குரலில் பேசினான்— ''அந்தணோத்தமரே! தங்களைத் தரிசிப்பது கிடைத்தற்கரிய பேறு. இன்று நான் தங்கள் தரிசனப்பேற்றை அடைந்தேன்! அதனால், இந்த மாகிஷ்மதி நகரம் அமராவதிக்கு நிகராகிவிட்டது. (9,10)

ஐயனே! இப்போதுதான் எனக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது; என்னுடைய விரத அனுஷ்டானங்கள் நற்பலனைத் தந்துள்ளன; என் பிறவி பயனுள்ளதாகிவிட்டது; என்னுடைய தவம் தக்க பலனைத் தந்துள்ளது – காரணம், தேவர்கள் எல்லோரும் வணங்கும் தங்கள் திருவடிகளை, இன்று நானும் வணங்கும் பேறு பெற்றேனே! (11)

அந்தணப் பெருந்தகையே! இந்த ராஜ்யம், என்னுடைய புதல்வர்கள், என்னுடைய மனைவிகள், என்னைச் சார்ந்த உற்றார்–உறவினருடன் நான் ஆகிய அனைவரும் தங்கள் கட்டளையை எதிர்நோக்கி நிற்கிறோம்; என்ன பணி செய்யவேண்டும்? என்று ஆணையிடுங்கள்.'' (12)

அப்போது புலஸ்தியர், அர்ஜுனனுடைய நித்திய வேள்விகள், அறச்செயல்கள், புதல்வர்களின் நலன் பற்றி விசாரித்துவிட்டு, ஹைஹய மன்னனிடம் பின்வருமாறு கூறினார்— (13)

''மன்னனே! தாமரை இதழ் போன்ற கண் படைத்தவனே! முழுநிலா போன்ற திருமுகம் உடையவனே! பத்துத்தலை இராவணனையே நீ ஜெயித்திருக்கிறாய் என்பதால், உன் பலத்திற்கு அளவேயில்லை என்பது தெரிகிறது. (14)

எவனிடமுள்ள அச்சத்தினால் பெருங்கடலும் வாயுவும்கூட ஆட்டம்–பாட்டத்தை நிறுத்திவிட்டு, அவன் ஆணைக்காகக் கைகட்டிக் காத்திருக்கின்றனவோ, போர்க்களத்தில் எவராலும் வெல்ல முடியாத அப்படிப்பட்ட என்னுடைய பேரனைப் போர்க்களத்தில் கட்டிப்போட்டு, நீ கொண்டு வந்துவிட்டாய்! இதனால், என்னுடைய இந்த செல்லக் குழந்தையின் புகழுக்குக் குறை ஏற்பட்டுவிட்டது; உன்னைத்தான் எல்லோரும் புகழ்கிறார்கள். கண்ணா! இப்போது, நான் உன்னை யாசித்துக் கேட்கிறேன். இராவணனை விட்டுவிடு.'' (15,16)

Koviloor Digital Library

புலஸ்த்யாக்ஞாம் ப்ரக்3ருஹ்யோசே ந கிஞ்சந வசோ஽ர்ஜுந: ।
முமோச வை பார்தி2வேந்த்3ரோ ராக்ஷஸேந்த்3ரம் ப்ரஹ்ருஷ்டவத் ॥ (17)

ஸ தம் ப்ரமுச்ய த்ரித3ஶாரிமர்ஜுந:
ப்ரபூஜ்ய தி3வ்யாப4ரணஸ்ரக3ம்ப3ரை: ।
அஹிம்ஸகம் ஸக்2யமுபேத்ய ஸாக்3நிகம்
ப்ரணம்ய தம் ப்3ரஹ்மஸுதம் க்3ருஹம் யயௌ ॥ (18)

புலஸ்த்யேநாபி ஸந்த்யக்தோ ராக்ஷஸேந்த்3ர: ப்ரதாபவாந் ।
பரிஷ்வக்த: க்ருதாதித்2யோ லஜ்ஜமாநோ விநிர்ஜித: ॥ (19)

பிதாமஹஸுதஶ்சாபி புலஸ்த்யோ முநிபுங்க3வ: ।
மோசயித்வா த3ஶக்3ரீவம் ப்3ரஹ்மலோகம் ஜக3ாம ஹ ॥ (20)

ஏவம் ஸ ராவண: ப்ராப்த: கார்தவீர்யாத் ப்ரத4ர்ஷணம் ।
புலஸ்த்யவசநாச்சாபி புநர்முக்தோ மஹாப3ல: ॥ (21)

ஏவம் ப3லிப்4யோ ப3லிந: ஸந்தி ராக4வநந்த3ந ।
நாவக்ஞா ஹி பரே கார்யா ய இச்சே2த் ப்ரியமாத்மந: ॥ (22)

தத: ஸ ராஜா பிஶிதாஶநாநாம் ஸஹஸ்ரபா3ஹோருபலப்4ய மைத்ரீம் ।
புநர்நருபாணாம் கத3நம் சகார சசார ஸர்வாம் ப்ருதி2வீம் ச த3ர்பாத் ॥ (23)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 த்ரயஸ்த்ரிம்ஶ: ஸர்க3: ॥

சதுஸ்த்ரிம்ஶ: ஸர்க3:

வாலிராவணஸக்2யம்

அர்ஜுநேந விமுக்தஸ்து ராவணோ ராக்ஷஸாதி4ப: ।
சசார ப்ருதி2வீம் ஸர்வாமநிர்விண்ணஸ்தத2ா க்ருத: ॥ (1)

ராக்ஷஸம் வா மநுஷ்யம் வா ஶ்ருணுதே யம் ப3லாதி4கம் ।
ராவணஸ்தம் ஸமாஸாத்3ய யுத்3தே4 ஹ்வயதி த3ர்பித: ॥ (2)

தத: கத3ாசித் கிஷ்கிந்த4ாம் நக3ரீம் வாலிபாலிதாம் ।
க3த்வா ஹ்வயதி யுத்3த4ாய வாலிநம் ஹேமமாலிநம் ॥ (3)

ததஸ்து வாநராமாத்யஸ்தாரஸ்தாராபிதா ப்ரபு4: ।
உவாச வாநரோ வாக்யம் யுத்3த4ப்ரேப்ஸுமுபாக3தம் ॥ (4)

ராக்ஷஸேந்த்3ர க3தோ வாலீ யஸ்தே ப்ரதிப3லோ ப4வேத் ।
கோ஽ந்ய: ப்ரமுக2த: ஸ்த2ாதும் தவ ஶக்த: ப்லவங்க3ம: ॥ (5)

சதுர்ப்4யோ஽பி ஸமுத்3ரேப்4ய: ஸந்த்4யாமந்வாஸ்ய ராவண ।
இமம் முஹூர்தமாயாதி வாலீ திஷ்ட2 முஹூர்தகம் ॥ (6)

Koviloor Digital Library

புலஸ்தியருடைய இந்தக் கட்டளையை, மறுபேச்சுப் பேசாமல், அர்ஜுனன் ஏற்றுக்கொண்டான். மாமன்னனாகிய அவன் மகிழ்ச்சியுடன் அரக்க மன்னன் இராவணனை விடுவித்தான். (17)

தேவர் பகைவனான இராவணனை விடுவித்து, மிகச்சிறந்த அணிகலன்கள், மாலைகள், ஆடைகள் அளித்துக் கௌரவித்தான். பின்னர், அக்னிசாட்சியாக – நம்முடைய நட்பு, ஒருவருக்கொருவர் துன்பம் கொடுப்பதற்குப் பயன்படுவதாக அமைந்துவிடக் கூடாது என்ற நிபந்தனையுடன் – நட்புறவு செய்து கொண்டான். பின், பிரும்மகுமாரரான புலஸ்தியரிடம் விடைபெற்றுக் கொண்டு, தன் இருப்பிடம் சென்றான். (18)

இவ்வாறு, அர்ஜுனனால் விடுதலை செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்ட இராவணனை மார்புறத் தழுவிக் கொண்டார், புலஸ்தியர். ஆனால், தோல்வியைத் தழுவிய இராவணன் வெட்கப்பட்டான். (19)

பிரும்மாவின் புதல்வரும் முனிபுங்கவருமான புலஸ்தியர் இராவணனை விடுவித்துவிட்டு, பிரும்மலோகம் சென்றார். இவ்வாறு, கார்த்தவீர்யனால் தோற்கடிக்கப்பட்ட பலவானான இராவணன், புலஸ்தியருடைய தலையீட்டின்பேரில் விடுதலை செய்யப்பட்டான். (20,21)

ரகுநந்தனா! உலகில், வல்லவனுக்கு வல்லவன் உண்டு. அதனால், தனக்கு நன்மையை விரும்புகிறவன், மற்ற எவரையும் அவமதிக்கக்கூடாது. (22)

ஆயிரம் கைகள் படைத்த கார்த்தவீர்யனுடன் நட்புறவு பெற்ற அரக்கர்கோமான், மறுபடியும் செருக்கடைந்து, உலகெங்கும் சுற்றி வந்து மன்னர்களை அழிக்கத் தொடங்கினான். (23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
முப்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்து நான்கு

வாலி–இராவணன் நட்பு

அர்ஜுனனிடமிருந்து விடுதலைப் பெற்ற அரக்கர்கோன் இராவணன் சிறிதளவும் அதைரியப்படாமல் மண்ணுலகம் முழுவதையும் சுற்றி வந்தான். (1)

அரக்கனோ, மனிதனோ – மிகவும் பலசாலி என்று கேள்விப்பட்டால் போதும், உடனே, அவனிடம் சென்று அவனைப் போருக்கு அழைப்பான், செருக்குக் கொண்ட இராவணன். (2)

இவ்வாறு இருக்கும்போது, ஒரு சமயம் வாலியினால் பரிபாலிக்கப்படும் கிஷ்கிந்தைக்குச் சென்று, தங்கமாலை அணிந்த வாலியைப் போருக்கு அழைத்தான். (3)

போர் செய்வதற்கென்று வந்துள்ள இராவணனைப் பார்த்து, வாலியின் அமைச்சரான தாரன், அவனுடைய தந்தை சுஷேணன், இளையராஜா அங்கதன் மற்றும் சுக்ரீவன் முதலியோர் கூறினார்கள்— (4)

''அரக்கர் தலைவனே! நீ, சண்டைபோட விரும்புகிற உன்னை எதிர்த்து நிற்கக்கூடிய வாலி, வெளியே போயிருக்கிறார். வானரர்களில் வேறு யார்தான் உன் எதிரில் நிற்கமுடியும்? (5)

இராவணா! நான்கு சமுத்திரங்களிலும் சந்த்யாவந்தனம் செய்துவிட்டு, அவர், அநேகமாக இப்போது திரும்பி வந்துகொண்டிருப்பார். நீ, இரண்டு நாழிகைப்பொழுது தங்கினால், அவரைப் பார்க்கலாம். (6)

Koviloor Digital Library

ஏதாநஸ்தி$_2$சயாந் பஶ்ய ய ஏதே ஶங்க$_2$பாண்ட$_3$ரா: ।
யுத்$_3$த$_4$ார்தி$_2$நாமிமே ராஜந் வாநராதி$_2$பதேஜஸா ॥ (7)

யத்$_3$வாம்ருதரஸ: பீதஸ்த்வயா ராவண ராக்ஷஸ ।
தத$_3$ா வாலிநமாஸாத்$_3$ய தத$_3$ந்தம் தவ ஜீவிதம் ॥ (8)

பஶ்யேத$_3$ாநீம் ஜக$_3$ச்சித்ரமிமம் விஶ்ரவஸ: ஸுத ।
இத$_3$ம் முஹூர்தம் திஷ்ட$_2$ஸ்வ து$_3$ர்லப$_4$ம் தே ப$_4$விஷ்யதி ॥ (9)

அத$_2$வா த்வரஸே மர்தும் க$_3$ச்ச$_2$ த$_3$க்ஷிணஸாக$_3$ரம் ।
வாலிநம் த்$_3$ரக்ஷ்யஸே தத்ர பூ$_4$மிஷ்ட$_2$மிவ பாவகம் ॥ (10)

ஸ து தாரம் விநிர்ப$_4$ர்த்ஸ்ய ராவணோ லோகராவண: ।
புஷ்பகம் தத் ஸமாருஹ்ய ப்ரயயௌ த$_3$க்ஷிணார்ணவம் ॥ (11)

தத்ர ஹேமகி$_3$ரிப்ரக்$_2$யம் தருணார்கநிப$_4$ாநநம் ।
ராவணோ வாலிநம் த்$_3$ருஷ்ட்வா ஸந்த்$_3$யோபாஸநதத்பரம் ॥ (12)

புஷ்பகாத$_3$வருஹ்யாத$_2$ ராவணோऽஞ்ஜநஸந்நிப$_4$: ।
க்$_3$ரஹீதும் வாலிநம் தூர்ணம் நி:ஶப்$_3$த$_3$பத$_3$மாவ்ரஜத் ॥ (13)

யத்$_3$ருச்ச$_2$யா தத$_3$ா த்$_3$ருஷ்டோ வாலிநாபி ஸ ராவண: ।
பாபாபி$_4$ப்ராயகம் த்$_3$ருஷ்ட்வா சகார ந து ஸம்ப்$_4$ரமம் ॥ (14)

ஶஶமாலக்ஷ்ய ஸிம்ஹோ வா பந்நக$_3$ம் க$_3$ருடோ$_3$ா யத$_2$ா ।
ந சிந்தயதி தம் வாலீ ராவணம் பாபநிஶ்சயம் ॥ (15)

ஜிக்$_4$ருக்ஷமாணமாயாந்தம் ராவணம் பாபசேதஸம் ।
கக்ஷாவலம்பி$_3$நம் க்ருத்வா க$_3$மிஷ்யே த்ரீந் மஹார்ணவாந் ॥ (16)

த்$_3$ரக்ஷ்யந்த்யரிம் மமாங்கஸ்த$_2$ம் ஸ்ரம்ஸதூ$_3$ருகராம்ப$_3$ரம் ।
லம்ப$_3$மாநம் த$_3$ஶக்$_3$ரீவம் க$_3$ருட$_3$ஸ்யேவ பந்நக$_3$ம் ॥ (17)

இத்யேவம் மதிமாஸ்த$_2$ாய வாலீ மௌநமுபாஶ்ரித: ।
ஜபந் வை நைக$_3$மாந் மந்த்ராம்ஸ்தஸ்தௌ$_2$ பர்வதராடி$_3$வ ॥ (18)

தாவந்யோந்யம் ஜிக்$_4$ருக்ஷந்தௌ ஹரிராக்ஷஸபார்தி$_2$வௌ ।
ப்ரயத்நவந்தௌ தத் கர்ம ஈஹதுர்ப$_3$லத$_3$ர்பிதௌ ॥ (19)

ஹஸ்தக்$_3$ராஹம் து தம் மத்வா பாத$_3$ஶப்$_3$தே$_3$ந ராவணம் ।
பராங்முகோ$_2$ऽபி ஜக்$_3$ராஹ வாலீ ஸர்பமிவாண்ட$_3$ஜ: ॥ (20)

க்$_3$ரஹீதுகாமம் தம் க்$_3$ருஹ்ய ரக்ஷஸாமீஶ்வரம் ஹரி: ।
க$_2$முத்பபாத வேகே$_3$ந க்ருத்வா கக்ஷாவலம்பி$_3$நம் ॥ (21)

Koviloor Digital Library

இங்கே, சங்குகளைப் போல் வெண்மையான எலும்புக் குவியல்களைப் பார். மன்னனே! வாலியுடன் போர்புரியும் விருப்பத்துடன் வந்தவர்கள், அவருடைய பராக்கிரமத்தினால் தோற்றுப்போய் மரணம் அடைந்தார்கள். (7)

அரக்கன் இராவணனே! நீ, தேவாமிர்தத்தைப் பருகியவனாக இருந்தாலும் சரி, வாலியை சந்திக்கும் வரையில்தான் உன் உயிர் இருக்கும். அவரைச் சந்திக்கும் அந்தத் தருணம்தான், உன் வாழ்க்கையின் கடைசி நொடியாக இருக்கும். (8)

விச்ரவஸின் புதல்வனே! உலகிலேயே மிகவும் ஆச்சரியமான நிலையில் உள்ளவர், வாலி. சற்றுப் பொறுத்திருந்து, அவரைப் பார்த்துவிடு. அவரைப் பார்த்த பின், உன் உயிர் உன்னிடம் இருப்பது அரிது. (9)

அல்லது, வெகு விரைவிலேயே உயிரை விடுவதற்கு நீ விரும்பினால், உடனே தெற்குக் கடற்கரைக்குச் செல். அங்கே, பூமியின்மேல் உருவம் ஏற்றுக்கொண்டு நிற்கும் அக்னியைப் போல் விளங்கும் வாலியைக் காண்பாய்.'' (10)

உலகத்தையே நடுங்கச் செய்யும் இராவணன், அமைச்சர் தாரனைப் பயமுறுத்திவிட்டு, புஷ்பகத்தில் ஏறி தெற்குக் கடற்கரையை அடைந்தான். (11)

அங்கே, பொன்மலையைப் போன்றிருப்பவனும், உதிக்கின்ற சூரியன் போல் பிரகாசிப்பவனும், சந்த்யோபாசனையில் மனத்தைச் செலுத்தியிருந்தவனுமான வாலியைக் கண்டு, மை போல் கருமையான உடல் படைத்த இராவணன் புஷ்பக விமானத்திலிருந்து இறங்கி, வாலியைக் கட்டிப்பிடிப்பதற்காக, கால் ஓசை எழுப்பாமல் வேகமாக அவனை நோக்கிச் சென்றான். (12,13)

தற்செயலாக வாலி, இராவணனைப் பார்த்துவிட்டான். அவனுடைய தீய எண்ணத்தைப் புரிந்துக் கொண்டுவிட்டபோதிலும், வாலி சிறிதளவும் கலவரம் அடையவில்லை. (14)

தீயநோக்கத்துடன் வந்திருந்த இராவணனைப் பார்த்த பின்னரும், முயல்குட்டியைக் கண்ட சிங்கம்போலும், பாம்பைக் கண்ட கருடன்போலும் கொஞ்சமும் கவலைப்படவில்லை. (15)

'என்னைக் கட்டிப்பிடிக்கும் கெட்ட எண்ணத்துடன் வரும் இராவணனைப் பிடித்து, அக்குளில் வைத்து அமுக்கிக் கொண்டு, மற்ற மூன்று கடல்களுக்கும் சென்று, சந்த்யாகால வழிபாடுகளை முடித்துக் கொள்வேன். (16)

என்னிடம் சிக்கிக் கொண்ட பகைவனான இராவணனுடைய தொடைகள், கை–கால்கள், ஆடைகள் எல்லாம் தொங்கிக் கொண்டிருக்கும் காட்சி, கருடன் கொத்திச் செல்லும் ஒரு சர்ப்பம் தொங்கிக் கொண்டிருப்பது போல் இருப்பதை எல்லோரும் பார்ப்பார்கள்.' (17)

இவ்வாறு, மனத்தில் நிச்சயித்துக் கொண்டு, மௌனமாக வைதிக மந்திரங்களை ஜபித்துக் கொண்டு, மலையரசனைப் போல் கலங்காமல் நின்றான், வாலி. (18)

பேராற்றலால் செருக்குக் கொண்ட வானர மன்னனும் அரக்க மன்னனும் பரஸ்பரம் கட்டிப் பிணைப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார்கள். அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டார்கள். (19)

இராவணனின் மிக மெல்லிய அடிவைப்பு ஒலியால், அவன் கைகளை அகலமாக விரித்து வைத்துக் கொண்டு, தன்னைப் பிடிக்க வருவதை உணர்ந்து கொண்ட வாலி, எதிர்முகமாகப் பார்த்துக் கொண்டிருந்தபோதிலும், கருடன் ஒரு பாம்பை லபக்கென்று கொத்திச் செல்வதைப் போல, அவனைக் கைப்பற்றினான். (20)

தன்னைப் பிடிக்க வந்த அரக்க மன்னனை, தானே கைப்பற்றிய வாலி, அவனை அக்குளில் வைத்து அமுக்கித் தொங்கவிட்டுக் கொண்டு, மிகுந்த வேகத்துடன் ஆகாயத்தை நோக்கிப் பறந்தான். (21)

Koviloor Digital Library

தம் சாபீட3யமாநம் து விதுத3ந்தம் நகை2ர்முஹு: ।
ஜஹார ராவணம் வாலீ பவநஸ்தோயத3ம் யதா2 ॥ (22)

அத2 தே ராக்ஷஸாமாத்யா ஹ்ரியமாணம் த3ஶாநநம் ।
முமோக்ஷயிஷவோ வாலிம் ரவமாணா அபி4த்3ருதா: ॥ (23)

அந்வீயமாநஸ்தைர்வாலீ ப்ராஜதேऽம்ப3ரமத்4யக3: ।
அந்வீயமாநோ மேகெ4ளகை4ரம்ப3ரஸ்த2 இவாம்ஶுமாந் ॥ (24)

தேऽஶக்நுவந்த: ஸம்ப்ராப்தும் வாலிநம் ராக்ஷஸோத்தமா: ।
தஸ்ய பா3ஹூருவேகே3ந பரிஶ்ராந்தா வ்யவஸ்தி2தா: ॥ (25)

வாலிமார்கா3த3பாக்ராமந் பர்வதேந்த்3ரா ஹி க3ச்ச2த: ।
கிம் புநர்ஜீவிதப்ரேப்ஸுர்பி3ப்4ரத்3வை மாம்ஸஶோணிதம் ॥ (26)

அபக்ஷிக3ணஸம்பாதாந் வாநரேந்த்3ரோ மஹாஜவ: ।
க்ரமஶ: ஸாக3ராந் ஸர்வாந் ஸந்த்4யாகாலமவந்த3த ॥ (27)

ஸபூ4ஜ்யமாநோ பூ4தைஸ்து கே2சரை: கே2சரோத்தம: ।
பஶ்சிமம் ஸாக3ரம் வாலீ ஹ்யாஜகா3ம ஸராவண: ॥ (28)

தஸ்மிந் ஸந்த்4யாமுபாஸித்வா ஸ்நாத்வா ஜப்த்வா ச வாநர: ।
உத்தரம் ஸாக3ரம் ப்ராயாத்3வஹமாநோ த3ஶாநநம் ॥ (29)

ப3ஹுயோஜநஸாஹஸ்ரம் வஹமாநோ மஹாஹரி: ।
வாயுவச்ச மநோவச்ச ஜகா3ம ஸஹ ஶத்ருணா ॥ (30)

உத்தரே ஸாக3ரே ஸந்த்4யாமுபாஸித்வா த3ஶாநநம் ।
வஹமாநோऽக3மத்3வாலீ பூர்வம் வை ஸ மஹோத3தி4ம் ॥ (31)

தத்ராபி ஸந்த்4யாமந்வாஸ்ய வாஸவி: ஸ ஹரீஶ்வர: ।
கிஷ்கிந்தா4மபி4தோ க்3ருஹ்ய ராவணம் புநராக3மத் ॥ (32)

சதுர்ஷ்வபி ஸமுத்3ரேஷு ஸந்த்4யாமந்வாஸ்ய வாநர: ।
ராவணோத்3வஹநஶ்ராந்த: கிஷ்கிந்தோ4பவநேऽபதத் ॥ (33)

ராவணம் து முமோசாத2 ஸ்வகக்ஷாத் கபிஸத்தம: ।
குதஸ்த்வமிதி சோவாச ப்ரஹஸந் ராவணம் முஹு: ॥ (34)

விஸ்மயம் து மஹத்3க3த்வா ஶ்ரமலோலநிரீக்ஷண: ।
ராக்ஷஸேந்த்3ரரோ ஹரீந்த்3ரம் தமித3ம் வசநமப்3ரவீத் ॥ (35)

வாநரேந்த்3ர மஹேந்த்3ராப4 ராக்ஷஸேந்த்3ரோऽஸ்மி ராவண: ।
யுத்3தே4ப்ஸுரிஹ ஸம்ப்ராப்த: ஸ சாத்3யாஸாதி3தஸ்த்வயா ॥ (36)

Koviloor Digital Library

அக்குளில் அகப்பட்டுக் கொண்ட இராவணன், நகங்களால் வாலியைப் பலதடவை கீறித் துன்புறுத்தினான். ஆனால், மேகக்கூட்டத்தைக் காற்று அடித்துச் செல்வதைப் போல, இராவணனைச் சுமந்து கொண்டே பறந்துச் சென்றான், வாலி. (22)

இவ்வாறு, இராவணன் கவர்ந்து செல்லப்படுவதைக் கண்ட அவனுடைய அமைச்சர்கள், அவனை விடுவிப்பதற்காக பேராரவாரம் செய்து கொண்டே பின்தொடர்ந்து சென்றார்கள். (23)

அரக்கர்கள் பின்தொடர வானத்தில் பறந்து கொண்டிருந்த வாலி, மேகக்கூட்டங்கள் பின்தொடர ஆகாயத்தில் பிரகாசிக்கும் சூரியனைப் போல் பேரொளியுடன் விளங்கினான். (24)

அந்த அரக்கத் தலைவர்கள், எவ்வளவோ முயன்றும் வாலியின் அருகில்கூட செல்ல முடியவில்லை. அவனுடைய புஜங்கள்–தொடைகள் வேகத்தால் ஏற்பட்ட காற்றினால் தாக்கப்பட்டு களைப்படைந்து நின்றுவிட்டார்கள். (25)

வாலி செல்லும் வழியிலிருந்த மாபெரும் மலைகள், அவனுக்கு வழிவிட்டு விலகிப் போயின என்னும்போது, இரத்தம்–சதையுடன் கூடியவைகளும், இன்னும் நெடுநாள் உயிர் பிழைத்திருக்க ஆசை கொண்டுள்ளவைகளுமான ஜந்துக்களைப் பற்றி என்ன சொல்ல! (26)

வானரத்தலைவன் வாலி, பறவைகளைக் காட்டிலும் மிக வேகமாகப் பறந்து சென்று, மூன்று கடற்கரையிலும் சந்த்யாகால வழிபாடுகளைச் செய்து முடித்தான். (27)

ஆகாயத்தில் பறக்கும் வாலியை, ஆகாயத்திலேயே சஞ்சரிக்கும் பூதங்கள் போற்றிப் பாராட்டினார்கள். இவ்வாறு, இராவணனை அக்குளில் அழுத்தி வைத்துக் கொண்டு மேற்குக் கடற்கரைக்கு வந்தான், வாலி. (28)

அங்கே (மேற்குக்கடலில்) நீராடி, ஜபம் செய்து, சந்த்யாகால வழிபாடுகளை முடித்துக் கொண்டு, இராவணனைச் சுமந்து கொண்டு வடக்குக் கடற்கரைக்குச் சென்றான், வாலி. (29)

வாயு–மனோவேகம் கொண்ட மாபெரும் வானரமான வாலி, பல்லாயிரம் யோஜனை தூரத்தை எதிரியுடன்கூட (இராவணனைச் சுமந்தபடியே) கடந்து சென்று வடக்குக் கடற்கரையை அடைந்தான். (30)

வாலி, வடக்குக் கடற்கரையில் சந்த்யாகால வழிபாடுகளைச் செய்துவிட்டு, இராவணனைச் சுமந்து கொண்டு கிழக்குக் கடற்கரையைச் சென்றடைந்தான். (31)

அங்கேயும், சந்த்யாகால வழிபாடுகளை முடித்துக் கொண்டு, இந்திரனின் அம்சமாகத் தோன்றிய வாலி, இராவணனை இறுகக் கட்டிக் கொண்டபடியே, கிஷ்கிந்தை அருகே வந்தான். (32)

நான்கு பெருங்கடல்களிலும் சந்த்யை செய்து முடித்த வானரன், இராவணனைச் சுமந்து வந்த களைப்பால் கிஷ்கிந்தையை ஒட்டியிருந்த பூங்காவில் வந்து இறங்கினான். (33)

அக்குளிலிருந்து இராவணனை விடுவித்த வானரத் தலைவன் வாலி, இராவணனைப் பார்த்து இளக்காரமாகப் புன்சிரிப்புச் சிரித்து, ''யாரப்பா, நீ? எங்கிருந்து வந்திருக்கிறாய்?'' என்று கேட்டான். (34)

வாலியின் செய்கையால் பேராச்சர்யத்தில் திளைத்த இராவணன் களைப்பினால் கண்கள் சுழல, வானர வேந்தனைப் பார்த்துக் கூறினான்— (35)

''வானரத் தலைவனே! தேவேந்திரன் போல் பராக்கிரமம் உடையவனே! நான், அரக்கர் தலைவன் இராவணன். உன்னோடு போர்புரியும் விருப்பத்தோடு இங்கு வந்தேன். அச்செயல், உன்னால் இப்போது நிறைவேற்றப்பட்டுவிட்டது! (36)

Koviloor Digital Library

அஹோ ப$_3$லமஹோ வீர்யமஹோ க$_3$ாம்பீ$_4$ர்யமேவ ச ।
யேநாஹம் பஶுவத்$_3$க்$_3$ருஹ்ய ப்$_4$ராமிதஶ்சதுரோऽர்ணவாந் ॥ (37)

ஏவமஶ்ராந்தவத்$_3$வீர ஶீக்$_4$ரமேவம் மஹார்ணவாந் ।
மாம் சைவோத்$_3$வஹமாநஸ்து கோऽந்யோ வீர: க்ரமிஷ்யதி ॥ (38)

த்ரயாணாமேவ பூ$_4$தாநாம் க$_3$திரேஷா ப்லவங்க$_3$ம ।
மநோऽநிலஸுபர்ணாநாம் தவ சாத்ர ந ஸம்ஶய: ॥ (39)

ஸோऽஹம் த்$_3$ருஷ்டப$_3$லஸ்துப்$_4$யமிச்ச$_2$ாமி ஹரிபுங்க$_3$வ ।
த்வயா ஸஹ சிரம் ஸக்$_2$யம் ஸுஸ்நிக்$_3$த$_4$ம் பாவகாக்$_3$ரத: ॥ (40)

த$_3$ாரா: புத்ரா: புரம் ராஷ்ட்ரம் பே$_4$ாக$_3$ாச்ச$_2$ாத$_3$நபே$_4$ாஜநம் ।
ஸர்வமேவாவிப$_4$க்தம் நௌ ப$_4$விஷ்யதி ஹரீஶ்வர ॥ (41)

தத: ப்ரஜ்வாலயித்வாக்$_3$நிம் தாவுபௌ$_4$ ஹரிராக்ஷஸௌ ।
ப்$_4$ராத்ருத்வமுபஸம்பந்நௌ பரிஷ்வஜ்ய பரஸ்பரம் ॥ (42)

அந்யோந்யம் லம்பி$_4$தகரௌ ததஸ்தௌ ஹரிராக்ஷஸௌ ।
கிஷ்கிந்த$_4$ாம் விஶதுர்ஹ்ருஷ்டௌ ஸிம்ஹௌ கி$_3$ரிகு$_3$ஹாமிவ ॥ (43)

ஸ தத்ர மாஸமுஷித: ஸுக்$_3$ரீவ இவ ராவண: ।
அமாத்யைராக$_3$தைர்நீதஸ்த்ரைலோக்யோத்ஸாத$_3$நார்தி$_2$பி$_4$: ॥ (44)

ஏவமேதத் புரா வ்ருத்தம் வாலிநா ராவண: ப்ரபே$_4$ா ।
த$_4$ர்ஷிதஶ்ச க்ருதஶ்சாபி ப்$_4$ராதா பாவகஸந்நிதௌ$_4$ ॥ (45)

ப$_3$லமப்ரதிமம் ராம வாலிநோऽப$_4$வது$_3$த்தமம் ।
ஸோऽபி த்வயா விநிர்த$_3$க்$_3$தே$_4$ா ஶலபே$_4$ா வஹ்நிநா யத$_2$ா ॥ (46)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ சதுஸ்த்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

பஞ்சத்ரிம்ஶ: ஸர்க$_3$:

ஹநூமது$_3$த்பத்தி:

அப்ருச்ச$_2$த தத$_3$ா ராமோ த$_3$க்ஷிணாஶாஶ்ரயம் முநிம் ।
ப்ராஞ்ஜலிர்விநயோபேத இத$_3$ம் வசநமர்த$_2$வத் ॥ (1)

அதுலம் ப$_3$லமேதத்$_3$வை வாலிநோ ராவணஸ்ய ச ।
ந த்வேதாப்$_4$யாம் ஹநுமதா ஸமம் த்விதி மதிர்மம ॥ (2)

ஶௌர்யம் த$_3$ாக்ஷ்யம் ப$_3$லம் தை$_4$ர்யம் ப்ராக்ஞதா நயஸாத$_4$நம் ।
விக்ரமஶ்ச ப்ரப$_4$ாவஶ்ச ஹநூமதி க்ருதாலயா: ॥ (3)

Koviloor Digital Library

அடாடா! என்ன வலிமை! என்ன வீரம்! என்ன மிடுக்கு! ஏதோ ஒரு விலங்கைக் கட்டியிழுத்துச் செல்வதைப் போல, நான்கு திசைகளிலுள்ள கடல்களுக்கு என்னைத் திரிய வைத்தாய்! (37)

வீரனே! என்னையும் சுமந்து கொண்டு சிறிதளவுகூட களைப்பில்லாமல், நான்கு கடல்களுக்கும் சென்றுவரக் கூடியவன், உன்னைத் தவிர வேறு யார்தான் இருக்கமுடியும்? (38)

(இராவணன் தொடர்கிறான்—) வானரனே! இவ்வளவு வேகம், உலகில் மூன்று இடங்களில்தான் உண்டு – மனம், காற்று, கருடன். இப்போது, சந்தேகத்திற்கிடமில்லாமல் உன்னிடமும் மகாவேகம் இருக்கிறது என்பது விளங்கிவிட்டது! (39)

வானரோத்தமனே! உன்னுடைய அளவற்ற வலிமையை நான் அனுபவித்து உணர்ந்துவிட்டேன். அதனால், அக்னிசாட்சியாக நீண்ட நெடுங்காலம் நெருக்கமாக நிலைத்திருக்கக் கூடிய நட்புறவைப் பெற விரும்புகிறேன். வானரத் தலைவனே! மனைவி–மக்கள், நகரம், நாடு, போகம், ஆடை, உணவு ஆகிய எல்லாவற்றிலும் நமக்குப் பொதுவான உரிமை இருக்கும்.' (40,41)

பின்னர், அக்னி வளர்த்து வானர–அரக்கர்களான அவ்விருவரும் சகோதர உறவை ஏற்று, ஒருவரையொருவர் மார்புறத் தழுவிக் கொண்டார்கள். (42)

வானர–அரக்கர்களான அவ்விருவரும், கைகளைப் பற்றிக்கொண்டு மனமகிழ்ச்சியுடன், குகைக்குள் செல்லும் இரு சிங்கங்களைப் போல கிஷ்கிந்தைக்குள் நுழைந்தார்கள். (43)

(வானர) மன்னரின் தம்பியான சுக்ரீவனைப் போல மிக்க மரியாதையுடன் உபசரிக்கப்பட்ட இராவணன், அங்கு ஒரு மாத காலம் தங்கியிருந்தான். பின்னர், மூன்று உலகங்களையும் பிடுங்கி எறிய விரும்பும் அவனுடைய அமைச்சர்கள் வந்து, அவனை அழைத்துச் சென்றார்கள். (44)

ஐயனே! (இராகவா!) வாலியினால் இராவணனின் கர்வம் அடக்கப்பட்டு, பின்னர், அக்னிசாட்சியாக, சகோதரனாக ஏற்றுக் கொள்ளப்பட்டான் – என்ற இந்த நிகழ்ச்சி வெகுகாலத்திற்கு முன் நிகழ்ந்தது. (45)

இராமா! வாலியிடம் எல்லையில்லாத, நிகரற்ற வலிமை இருந்தது. அது, உன்னால் விட்டிற்பூச்சியை அக்னி எரிப்பதைப் போல வெகு எளிதாகப் பொசுக்கப்பட்டுவிட்டது. (46)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
முப்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தைந்து

அனுமான் பிறப்பு

பின்னர், இராமன் அகஸ்திய முனிவரைப் பார்த்துக் கைகளைக் கூப்பிக் கொண்டு, மிகப் பணிவுடன், பொருள் பொதிந்த ஒரு கேள்வியைக் கேட்டார்— (1)

"முனிவரே! வாலி–இராவணன் ஆகிய இருவருடைய வலிமை நிகரில்லாதது என்பதில் சந்தேகமில்லைதான். ஆனால், இருவருடைய வலிமையும் அனுமானுக்கு நிகரானது அல்ல என்பது என் கருத்து. (2)

சூரத்தன்மை, செயல்திறன், உடல்வலிமை, மனவுறுதி, அறிவுக்கூர்மை, நீதி, பராக்கிரமம், பிறர் இயல்பாகவே மரியாதை காட்டும் அமைப்பு – இவையனைத்தும் அனுமானிடம் குடிகொண்டிருந்தன. (3)

Koviloor Digital Library

த்$_3$ருஷ்ட்வைவ ஸாக$_3$ரம் வீக்ஷ்ய ஸீத$_3$ந்தீம் கபிவாஹிநீம் ।
ஸமாஶ்வாஸ்ய மஹாபா$_3$ஹுர்யோஜநாநாம் ஶதம் ப்லுத: ॥ (4)

த$_4$ர்ஷயித்வா புரீம் லங்காம் ராவணாந்த:புரம் தத$_3$ா ।
த்$_3$ருஷ்ட்வா ஸம்ப$_4$ாஷிதா சாபி ஸீதா ஹ்யாஶ்வாஸிதா தத$_2$ா ॥ (5)

ஸேநாக்$_3$ரக$_3$ா மந்த்ரிஸுதா: கிங்கரா ராவணாத்மஜ: ।
ஏதே ஹநுமதா தத்ர ஹ்யேகேந விநிபாதிதா: ॥ (6)

பூ$_4$யோ ப$_3$ந்த$_4$ாத்$_3$விமுக்தேந ப$_4$ாஷயித்வா த$_3$ஶாநநம் ।
லங்கா ப$_4$ஸ்மீக்ருதா யேந பாவகேநேவ மேதி$_3$நீ ॥ (7)

ந காலஸ்ய ந ஶக்ரஸ்ய ந விஷ்ணோர்வித்தபஸ்ய ச ।
கர்மாணி தாநி ஶ்ரூயந்தே யாநி யுத்$_3$தே$_4$ ஹநூமத: ॥ (8)

ஏதஸ்ய பா$_3$ஹுவீர்யேண லங்கா ஸீதா ச லக்ஷ்மண: ।
ப்ராப்தா மயா ஜயஶ்சைவ ராஜ்யம் மித்ராணி பா$_3$ந்த$_4$வா: ॥ (9)

ஹநூமாந் யதி$_3$ நோ ந ஸ்யாத்$_3$வாநராதி$_4$பதே: ஸக$_2$ா ।
ப்ரவ்ருத்திமபி கோ வேத்தும் ஜாநக்யா: ஶக்திமாந் ப$_4$வேத் ॥ (10)

கிமர்த$_2$ம் வால்யநேநைவ ஸுக்$_3$ரீவப்ரியகாம்யயா ।
தத$_3$ா வைரே ஸமுத்பந்நே ந த$_3$க்$_3$தே$_4$ா வீருதே$_4$ா யத$_2$ா ॥ (11)

ந ஹி வேதி$_3$தவாந் மந்யே ஹநூமாநாத்மநோ ப$_3$லம் ।
யத்$_3$த்$_3$ருஷ்டவாஞ்ஜீவிதேஷ்டம் க்லிஶ்யந்தம் வாநராதி$_4$பம் ॥ (12)

ஏதந்மே ப$_4$க$_3$வந் ஸர்வம் ஹநூமதி மஹாமதௌ ।
விஸ்தரேண யத$_2$ாதத்த்வம் கத$_2$யாமரபூஜித ॥ (13)

ராக$_4$வஸ்ய வச: ஶ்ருத்வா ஹேதுயுக்தம்ருஷிஸ்தத$_3$ா ।
ஹநூமத: ஸமக்ஷம் தமித$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (14)

ஸத்யமேதத்$_3$ரகு$_4$ஶ்ரேஷ்ட$_2$ யத்$_3$ப்$_3$ரவீஷி ஹநூமத: ।
ந ப$_3$லே வித்$_3$யதே துல்யோ ந க$_3$தௌ ந மதௌ பர: ॥ (15)

அமோக$_4$ஶாபை: ஶாபஸ்து த$_3$த்தோऽஸ்ய ருஷிபி$_4$: புரா ।
ந வேத்தா ஹி ப$_3$லம் யேந ப$_3$லீ ஸந்நரிமர்த$_3$ந: ॥ (16)

பா$_3$ல்யேऽப்யேதேந யத் கர்ம க்ருதம் ராம மஹாப$_3$ல ।
தந்ந வர்ணயிதும் ஶக்யமிதி பா$_3$லதயாஸ்ய தே ॥ (17)

யதி$_3$ வாஸ்தி ஹ்யபி$_4$ப்ராயஸ்தச்ச்$_2$ரோதும் தவ ராக$_4$வ ।
ஸமாத$_4$ாய மதிம் ராம நிஶாமய வத$_3$ாம்யஹம் ॥ (18)

Koviloor Digital Library

(சீதையைத் தேடிச் செல்லும்போது, வழியில்) பெருங்கடலைப் பார்த்தவுடனேயே வானரர்கள் திகைத்து நின்றுவிட்டார்கள். அவர்களுக்குத் தைரியமூட்டி, நூறு யோஜனை விஸ்தீரணமுள்ள பெருங்கடலைத் தாவிக் கடந்தான், தோள்வலி மிக்க அனுமான். (4)

இலங்கைப் பட்டணத்தை (நெருப்புக்கு இரையாக்கியதன் மூலம்) வென்றான்; இராவணனுடைய அந்தப்புரத்திற்குள் சென்றான்; சீதையைப் பார்த்தும் பேசவும் செய்தான்; அவளுக்கு ஆறுதல் கூறினான். படைத்தலைவர்கள், மந்திரி குமாரர்கள், கிங்கரர்கள், இராவணனுடைய புதல்வன் அட்சகுமாரன் முதலியோரை, தான் ஒருவனாகவே போரிட்டு வீழ்த்தினான். (5,6)

பின்னர், நாகபாசத்திலிருந்து தானாகவே விடுதலை பெற்ற அவன், இராவணனை நடுக்கமுறச் செய்தான். மண்ணுலகமே நெருப்புப் பற்றிக் கொண்டு எரிவதைப் போல, அவன் வைத்தத் தீயினால் இலங்கை சாம்பலாக்கப்பட்டது. (7)

போர்க்களத்தில், அனுமானின் செயற்கரியச் செயல்களாக எந்த வீரசாகசங்களைக் கேட்கிறோமோ, அம்மாதிரியான வீரச்செயல்களைக் காலதேவனோ, இந்திரனோ, விஷ்ணுவோ, வருணனோகூடச் செய்யவில்லை! (8)

இவனுடைய தோள்வலிமையால், (சரணாகதி காலத்தில் வாக்களித்தபடி விபீஷணனுக்குக் கொடுப்பதற்காக) இலங்கை, சீதை, லட்சுமணன், வெற்றி, கோசல ராஜ்யம் மற்றும் நண்பர்கள்– உறவினர்கள் என்னால் அடையப்பட்டார்கள். (9)

வானரத் தலைவன் சுக்ரீவனுக்கு நண்பன் (அமைச்சன்) என்ற முறையில் (அனுமான்) நமக்குக் கிடைக்காமற்போயிருந்தால், சீதையின் இருப்பிடத்தை அறிந்து சொல்லும் ஆற்றல், வேறு யாருக்கு உண்டு? (10)

வாலிக்கும் சுக்ரீவனுக்குமிடையே பகை உண்டானபோது, சுக்ரீவனுக்கு நன்மை செய்யும் நோக்கத்துடன், காட்டுத் தீ மரத்தை எரிப்பது போல, அனுமான் வாலியை எரிக்காததற்குக் காரணம் விளங்கவில்லை. (11)

அந்தக் காலகட்டத்தில், அனுமானுக்குத் தன் வலிமையைப் பற்றித் தெரிந்திருக்கவில்லை என்று எண்ணுகிறேன். அதனால்தான், தன் உயிரைக் காட்டிலும் மேலாக மதித்த சுக்ரீவன் கஷ்டப்படுவதைப் பார்த்தும், வாலி விஷயத்தில் எதுவும் செய்யமுடியாதவனாக இருந்தான் (என்று எண்ணுகிறேன்). (12)

அமரர்களால் வணங்கப்படுவரே! ஐயனே! அனுமானைப் பற்றிய இந்த எல்லா விஷயங்கள் குறித்தும், உள்ளது உள்ளபடி விரிவாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.'' (13)

இராமபிரானுடைய யுக்திவாதங்களோடு கூடிய பேச்சைக் கேட்டு, அனுமான் எதிரிலேயே, பின்வருமாறு கூறத் தொடங்கினார், அகஸ்திய முனிவர். (14)

ரகு குலோத்தமனே! அனுமானைப் பற்றி நீ கூறியதெல்லாம் உண்மையே. வலிமை, அறிவு, வேகம்(செயல்திறன்) – இவைகளில் அவனுக்கு நிகரானவர் காணப்படவில்லை. (15)

எதிரிகளை அடக்கும் பேராற்றல் கொண்டவனாக இருந்தும் எந்த முனிவர்களுடைய சாபங்கள் வீணாகப் போகாதோ, அவர்கள், 'இவன் தன் வலிமையை அறியாமற்போகக் கடவது' என்று, வெகுகாலத்திற்கு முன்பே, சாபம் கொடுத்துவிட்டார்கள். (16)

பேராற்றல் படைத்த இராமனே! இவன் குழந்தையாக இருந்த காலத்திலேயே குழந்தைத்தனமாக செய்த அரும்பெரும் செயல்களை விளக்கிக் கூறவே முடியாது. (17)

இராகவா! அதைக் கேட்பதில் உனக்கு விருப்பம் இருந்தால் மனத்தைச் செலுத்தி, நான் சொல்லப் போவதைக் கேட்பாயாக. (18)

Koviloor Digital Library

ஸூர்யத$_3$த்தவர: ஸ்வர்ண: ஸுமேருர்நாம பர்வத: ।
யத்ர ராஜ்யம் ப்ரஶாஸ்த்யஸ்ய கேஸரீ நாம வை பிதா ॥ (19)

தஸ்ய ப$_4$ார்யா ப$_3$பூ$_4$வேஷ்டா ஹ்யஞ்ஜநேதி பரிஶ்ருதா ।
ஜநயாமாஸ தஸ்யாம் வை வாயுராத்மஜமுத்தமம் ॥ (20)

ஶாலிஶூகநிப$_4$ாப$_4$ாஸம் ப்ராஸூதாமும் தத$_3$ாஞ்ஜநா ।
ப$_2$லாந்யாஹர்துகாமா வை நிஷ்க்ராந்தா க$_3$ஹநேசரா ॥ (21)

ஏஷ மாதுர்வியோக$_3$ாச்ச க்ஷுத$_4$யா ச ப்$_4$ருஶார்தி$_3$த: ।
ருரோத$_3$ ஶிஶூரத்யர்த$_2$ம் ஶிஶூ: ஶரவணே யத$_2$ா ॥ (22)

ததே$_3$ாத்$_3$யந்தம் விவஸ்வந்தம் ஜபாபுஷ்போத்கரோபமம் ।
த$_3$த$_3$ர்ஶ ப$_2$லலோப$_4$ாச்ச ஹ்யுத்பபாத ரவிம் ப்ரதி ॥ (23)

ப$_3$ாலார்காபி$_4$முகே$_2$ா ப$_3$ாலோ ப$_3$ாலார்க இவ மூர்திமாந் ।
க்$_3$ரஹீதுகாமோ ப$_3$ாலார்கம் ப்லவதேऽம்ப$_3$ரமத்$_4$யக$_3$: ॥ (24)

ஏதஸ்மிந் ப்லவமாநே து ஶிஶூப$_4$ாவே ஹநூமதி ।
தே$_3$வத$_3$ாநவயக்ஷாணாம் விஸ்மய: ஸுமஹாநபூ$_4$த் ॥ (25)

நாப்யேவம் வேக$_3$வாந் வாயுர்க$_3$ருடே$_3$ா வா மநஸ்தத$_2$ா ।
யத$_2$ாயம் வாயுபுத்ரஸ்து க்ரமதேऽம்ப$_3$ரமுத்தமம் ॥ (26)

யதி$_3$ தாவச்சி$_2$ஶோரஸ்ய த்வீத்$_3$ருஶோ க$_3$திவிக்ரம: ।
யௌவநம் ப$_3$லமாஸாத்$_3$ய கத$_2$ம்வேகே$_3$ா ப$_4$விஷ்யதி ॥ (27)

தமநுப்லவதே வாயு: ப்லவந்தம் புத்ரமாத்மந: ।
ஸூர்யத$_3$ாஹப$_4$யாத்$_3$ரக்ஷம்ஸ்துஷாரசயஶீதல: ॥ (28)

ப$_3$ஹுயோஜநஸாஹஸ்ரம் க்ராமந்நேஷ க$_3$தோऽம்ப$_3$ரம் ।
பிதுர்ப$_3$லாச்ச ப$_3$ால்யாச்ச ப$_4$ாஸ்கராப்$_4$யாஶமாக$_3$த: ॥ (29)

ஶிஶூரேஷ த்வதே$_3$ாஷக்ஞ இதி மத்வா தி$_3$நேஶ்வர: ।
கார்யம் சாஸ்மிந் ஸமாயத்தமித்யேவம் ந த$_3$த$_3$ாஹ ஸ: ॥ (30)

யமேவ தி$_3$வஸம் ஹ்யேஷ க்$_3$ரஹீதும் ப$_4$ாஸ்கரம் ப்லுத: ।
தமேவ தி$_3$வஸம் ராஹுர்ஜிக்$_4$ருக்ஷதி தி$_3$வாகரம் ॥ (31)

அநேந ஸ பராம்ருஷ்டோ ராம ஸூர்யரதே$_2$ாபரி ।
அபக்ராந்தஸ்ததஸ்த்ரஸ்தோ ராஹுஶ்சந்த்$_3$ரார்கமர்த$_3$ந: ॥ (32)

ஸ இந்த்$_3$ரப$_4$வநம் க$_3$த்வா ஸரோஷ: ஸிம்ஹிகாஸுத: ।
அப்$_3$ரவீத்$_3$ப்$_4$ருகுடிம் க்ருத்வா தே$_3$வம் தே$_3$வக$_3$ணைர்வ்ருதம் ॥ (33)

Koviloor Digital Library

சூரியதேவனால் கொடுக்கப்பட்ட வரத்தின் பயனாக பொன்மயமான சுமேரு என்ற மலையை, இவனுடைய தந்தை கேசரி என்பவன் ஆண்டு வந்தான். (19)

அவனுக்கு மிகவும் பிரியமான பத்தினி அஞ்ஜனா என்பவள் வயிற்றிலிருந்து, உத்தமமான ஒரு மகவை வாயுதேவன் பிறப்பித்தான். (20)

அஞ்ஜனா தேவி, இவனைப் பெற்றெடுத்தபோது, இவன் உடல் நிறம் நெற்பயிரின் முனை போல் செவ்வண்ணமாக இருந்தது. ஒரு நாள், பழங்கள் சேகரித்துக் கொண்டு வருவதற்காக, இல்லத்திலிருந்து புறப்பட்டு அடர்த்தியான காட்டுக்குச் சென்றாள், அவள். (21)

தாயாரைக் காணாததாலும், பசியைத் தாங்க முடியாததாலும், முன்னர் சரவணப்பொய்கையில் பாலமுருகன் அழுததைப் போல, இந்தக் குழந்தையும் மிகவும் அழுதது. (22)

அப்போது, செக்கச்சிவந்த செம்பரத்தம்பூப் போல் காணப்பட்ட உதயசூரியனைக் கண்டு, 'இது ஒரு மிகப்பெரிய பழம் போல் இருக்கிறதே!' என்று எண்ணி, அதைக் கைப்பற்றும் எண்ணத்துடன் சூரியனை நோக்கித் தாவியது. (23)

உதித்துக் கொண்டிருக்கும் இளஞ்சூரியனை நோக்கி, இளஞ்சூரியனே உருவெடுத்து வந்தாற்போல ஒரு குழந்தை, அந்த இளஞ்சூரியனைப் பிடிக்கும் ஆவலுடன் வானத்தில் தாவிச் சென்றது. (24)

அனுமான், குழந்தைத்தனமாக இவ்வாறு தாவிச் செல்வதைக் கண்டு தேவ–தானவ–யக்ஷர்கள் மிகவும் பேராச்சரியம் அடைந்தார்கள். (25)

இந்த வாயுகுமாரன் வானத்தைக் கடந்து செல்லும், மகத்தான வேகம் வாயு, கருடன், மனம் – இவைகளுக்குக்கூட இல்லை. (26)

குழந்தைப் பருவத்திலேயே இவ்வளவு வேகமாகச் செல்லும் ஆற்றல் கொண்டிருப்பவன், யௌவனத்தை அடைந்ததும் எவ்வளவு வேகத்தை அடைவான்! (27)

தன்னுடைய புதல்வன் சூரியனை நோக்கிச் செல்வதைக் கண்ட வாயு, வெம்மைக் கிரணங்களால் மகன் எரிந்து போகாமல் இருப்பதற்காக, அவனைக் காப்பாற்றும் பொருட்டு, பனிக்குவியலின் குளிர்ச்சியைச் சுமந்துகொண்டு, அவனைப் பின்தொடர்ந்து பறந்தான். (28)

இவ்வாறு, தந்தையின் உறுதுணையாலும் குழந்தைத்தனத்தாலும், பல ஆயிரம் யோஜனை தூரம் ஆகாயத்தின் உயரே சென்று, சூரியதேவனின் சமீபத்தை அடைந்தான். (29)

'இவன், சிறு குழந்தை; நல்லது–கெட்டது அறியமாட்டான்; எதிர்காலத்தில், இவனைக் கொண்டு தேவர்களுக்குப் பல நன்மைகள் ஏற்படவிருக்கின்றன' என்று சிந்தித்த சூரியபகவான், இவனை எரிக்காமல் விட்டார். (30)

என்றைய தினம், இவன் சூரியனைப் பற்றுவதற்காகப் பாய்ந்து சென்றானோ, அந்த நாள், சூரியன் ராகுவினால் கவ்வப்பட வேண்டிய நாளாக இருந்தது. (31)

சூரியனுடைய தேரைத் தொடத் தொடங்கியிருந்த ராகுவின் மேல் (குழந்தை) அனுமானின் கை பட்டவுடன், சூரிய–சந்திரர்களைக்கூட அடக்கி வைக்கும் அவன், மிகவும் பயந்துபோய் அங்கிருந்தே ஓடிப் போய்விட்டான். (32)

சிம்ஹிகையின் புதல்வனான ராகு, மிகவும் ஆத்திரத்துடன் இந்திரன் மாளிகைக்குச் சென்று, தேவர்களால் சூழப்பட்டிருந்த இந்திரனைப் பார்த்து, புருவங்களை நெறித்துக் கூறினான்— (33)

Koviloor Digital Library

பு$_3$பு$_4$க்ஷாபநயம் த$_3$த்த்வா சந்த்$_3$ரார்கௌ மம வாஸவ ।
கிமித$_3$ம் தத்த்வயா த$_3$த்தமந்யஸ்ய ப$_3$லவ்ருத்ரஹந் ॥ (34)

அத்$_3$யாஹம் பர்வகாலே து ஜிக்$_4$ருக்ஷு: ஸூர்யமாக$_3$த: ।
அத$_2$ாந்யோ ராஹுராஸாத்$_3$ய ஜக்$_3$ராஹ ஸஹஸா ரவிம் ॥ (35)

ஸ ராஹோர்வசநம் ஶ்ருத்வா வாஸவ: ஸம்ப்$_4$ரமாந்வித: ।
உத்பபாதாஸநம் ஹித்வா சோத்$_3$வஹந் காஞ்சநீம் ஸ்ரஜம் ॥ (36)

தத: கைலாஸகூடாப$_4$ம் சதுர்த$_3$ந்தம் மத$_3$ஸ்ரவம் ।
ஶ்ருங்க$_3$ாரத$_4$ாரிணம் ப்ராம்ஶும் ஸ்வர்ணக$_4$ண்டாட்டஹாஸிநம் ॥ (37)

இந்த்$_3$ர: கரீந்த்$_3$ரமாருஹ்ய ராஹும் க்ருத்வா புர:ஸரம் ।
ப்ராயாத்$_3$யத்ராப$_4$வத் ஸூர்ய: ஸஹாநேந ஹநூமதா ॥ (38)

அத$_2$ாதிரப$_4$ஸேநாக$_3$ாத்$_3$ராஹுருத்ஸ்ருஜ்ய வாஸவம் ।
அநேந ச ஸ வை த்$_3$ருஷ்ட: ப்ரத$_4$ாவஞ்ஶைலகூடவத் ॥ (39)

தத: ஸூர்யம் ஸமுத்ஸ்ருஜ்ய ராஹும் ப$_2$லமவேக்ஷ்ய ச ।
உத்பபாத புநர்வ்யோம க்$_3$ரஹீதும் ஸிம்ஹிகாஸுதம் ॥ (40)

உத்ஸ்ருஜ்யார்கமிமம் ராம ப்ரத$_4$ாவந்தம் ப்லவங்க$_3$மம் ।
அவேக்ஷ்யைவம் பராவ்ருத்ய முக$_2$ஶேஷ: பராங்முக$_2$: ॥ (41)

இந்த்$_3$ரமாஶம்ஸமாநஸ்து த்ராதாரம் ஸிம்ஹிகாஸுத: ।
இந்த்$_3$ர இந்த்$_3$ரேதி ஸந்த்ராஸாந்முஹுர்முஹுரப$_4$ாஷத ॥ (42)

ராஹோர்விக்ரோஶமாநஸ்ய ப்ராகே$_3$வாலக்ஷிதம் ஸ்வரம் ।
ஶ்ருத்வேந்த்$_3$ரோவாச மா பை$_4$ஷீரஹமேநம் நிஷூத$_3$யே ॥ (43)

ஐராவதம் ததோ த்$_3$ருஷ்ட்வா மஹத்ததி$_3$த$_3$மித்யபி ।
ப$_2$லம் மத்வா ஹஸ்திராஜமபி$_4$து$_3$த்$_3$ராவ மாருதி: ॥ (44)

தத$_2$ாஸ்ய த$_4$ாவதோ ரூபமைராவதஜிக்$_4$ருக்ஷயா ।
முஹூர்தமப$_4$வத்$_3$கே$_4$ாரமிந்த்$_3$ராக்$_3$ந்யோரிவ ப$_4$ாஸ்வரம் ॥ (45)

ஏவமாத$_4$ாவமாநம் து நாதிக்ருத்$_3$த$_4$: ஶசீபதி: ।
ஹஸ்தாந்தாத$_3$திமுக்தேந குலிஶேநாப்$_4$யதாட$_3$யத் ॥ (46)

ததோ கி$_3$ரௌ பபாதைஷ இந்த்$_3$ரவஜ்ராபி$_4$தாடி$_3$த: ।
பதமாநஸ்ய சைதஸ்ய வாமோ ஹநுரப$_4$ஜ்யத ॥ (47)

தஸ்மிம்ஸ்து பதிதே பா$_3$லே வஜ்ரதாட$_3$நவிஹ்வலே ।
சுக்ரோதே$_4$ந்த்$_3$ராய பவந: ப்ரஜாநாமஹிதாய ஸ: ॥ (48)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_16_Back

Koviloor Digital Library

''வலிமைமிக்க விருத்திராசுரனைக் கொன்றவரே! என் பசியைத் தீர்த்துக் கொள்வதற்காக சூரிய–சந்திரர்களை எனக்கு அளித்தீர்கள். ஆனால், இப்போது வேறொருவனுக்கும் கொடுத்திருக்கிறீர்கள். இது, என்ன நியாயம்? (34)

இன்று அமாவாஸ்யை நாள். சூரியனைக் கைப்பற்றுவதற்காக நான் அங்கே சென்றேன். இதனிடையில் வேறொரு ராகு வந்து வெகுவேகமாக அவரைக் கைப்பற்றிக் கொண்டான்.'' (35)

இந்திரன், ராகுவின் பேச்சைக் கேட்டு மிகவும் கலவரமடைந்தான். பொன்மாலை அணிந்திருந்த அவன் சிம்மாசனத்திலிருந்து விருட்டென்று எழுந்தான். (36)

கைலாச சிகரம் போல் ஒளிர்வதும், நான்கு தந்தங்களை உடையதும், மதநீரை பெருக்கிக் கொண்டிருப்பதும், கண்கவர் அலங்காரம் செய்யப்பட்டிருப்பதும், உயரமானதும், பொன்மயமான மணிகளின் ஓசையால் அட்டகாசம் செய்து கொண்டிருப்பதுமான சிறந்த யானை ஐராவதத்தில் ஏறிக்கொண்ட இந்திரன், ராகு முன்னே செல்ல, (குழந்தை) அனுமானும் சூரியதேவனும் இருந்த இடத்தை நோக்கிச் சென்றான். (37,38)

ஆனால், இந்திரனை விட்டுவிட்டு மிக வேகமாக முன்னே சென்றுவிட்டான், ராகு. அப்போது, மலைச்சிகரம் போல் பேருடல் கொண்ட ராகு ஓடி வருவதை அனுமான் பார்த்தான். (39)

அப்போது, ராகு என்ற பழத்தைக் கைப்பற்றுவதற்காக, சூரியனை விட்டுவிட்டு, மறுபடியும் ஆகாயத்தில் தாவினான், (குழந்தை) அனுமான். (40)

இராமசந்திரா! சூரியனை விட்டுவிட்டுத் தன்னை நோக்கி ஓடிவரும் வானரனைக் கண்டு, உடலின் முகப்பகுதி மட்டும் உடைய ராகு, எதிர்த்திசையில் திரும்பி ஓடினான். (41)

சிம்ஹிகையின் புதல்வன், இந்த இக்கட்டிலிருந்து இந்திரன்தான் தன்னைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையில், 'இந்திரா... இந்திரா...' என்று கூவி அழைத்தான். (42)

ராகுவினுடைய முதல் அழைப்பிலேயே அவனைப் புரிந்துக் கொண்ட இந்திரன், ''பயப்படாதே. நான், இவனை (சூரியனைக் கைப்பற்றியவனை)க் கொன்று போடுகிறேன்'' என்று சொன்னான். (43)

இதனிடையில், ஐராவதத்தைப் பார்த்த அனுமான், 'இதுவும் ஒரு மாபெரும் பழம்போல் இருக்கிறதே!' என்று எண்ணி, அதைக் கைப்பற்றுவதற்காக அதை நோக்கி ஓடினான். (44)

ஐராவதத்தைப் பிடிக்கும் நோக்கத்துடன் ஓடிக்கொண்டிருந்த அனுமானின் தோற்றம், அப்போது, இந்திரனுடைய மற்றும் அக்னியினுடைய தோற்றம் போல் பிரகாசமாகவும் பயங்கரமாகவும் விளங்கிற்று. (45)

இந்திராணியின் கணவனான இந்திரன், வேகமாக ஓடிவரும் குழந்தையிடம் அதிகமாகக் கோபம் கொள்ளவில்லை. அதனால், விரல்நுனிகளால் வஜ்ராயுதத்தை விடுத்து, அவனைத் தாக்கினான். (தன் முழு வலிமையையும் காட்டாமல், இலேசாக அடித்தான் – குழந்தை என்பதால்.) (46)

இந்திரனுடைய வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்ட அவன், ஒரு மலைமேல் விழுந்தான். விழுந்தவுடன், அவனுடைய இடது கன்னம் பிளவுபட்டது. (47)

தன்னுடைய புதல்வன் வஜ்ரத்தினால் தாக்கப்பட்டு கீழே விழுந்ததால் பரபரப்படைந்த வாயுவுக்கு, இந்திரன்மேல் மிகவும் கோபம் உண்டாயிற்று. அந்தக் கோபம், எல்லா உயிர்களுக்கும் துன்பம் விளைவிப்பதாக ஆயிற்று. (48)

Koviloor Digital Library

ப்ரசாரம் ஸ து ஸங்க்$_3$ருஹ்ய ப்ரஜாஸ்வந்தர்க$_3$த: ப்ரபு$_4$: ।
கு$_3$ஹாம் ப்ரவிஷ்ட: ஸ்வஸுதம் ஶிஶுமாதா$_3$ய மாருத: ॥ (49)

விண்மூத்ராஶயமாவ்ருத்ய ப்ரஜாநாம் பரமார்திக்ருத் ।
ருரோத$_4$ ஸர்வபூ$_4$தாநி யதா$_2$ வர்ஷாணி வாஸவ: ॥ (50)

வாயுப்ரகோபாத்$_3$பூ$_4$தாநி நிருச்ச்$_2$வாஸாநி ஸர்வத: ।
ஸந்தி$_4$பி$_4$ர்பி$_4$த்$_3$யமாநைஶ்ச காஷ்ட$_2$பூ$_4$தாநி ஜஜ்ஞிரே ॥ (51)

நி:ஸ்வாத்$_4$யாயவஷட்காரம் நிஷ்க்ரியம் த$_4$ர்மவர்ஜிதம் ।
வாயுப்ரகோபாத் த்ரைலோக்யம் நிரயஸ்த$_2$மிவாப$_4$வத் ॥ (52)

தத: ப்ரஜா: ஸக$_3$ந்த$_4$ர்வா: ஸதே$_3$வாஸுரமாநுஷா: ।
ப்ரஜாபதிம் ஸமாதா$_4$வந் து$_3$:கி$_2$தாஶ்ச ஸுகே$_2$ச்ச$_2$யா ॥ (53)

ஊசு: ப்ராஞ்ஜலயோ தே$_3$வா மஹோத$_3$ரநிபோ$_4$த$_3$ரா: ।
த்வயா து ப$_4$க$_3$வந் ஸ்ருஷ்டா: ப்ரஜாநாத$_2$ சதுர்விதா$_4$: ॥ (54)

த்வயா த$_3$த்தோऽயமஸ்மாகமாயுஷ: பவந: பதி: ।
ஸோऽஸ்மாந் ப்ராணேஶ்வரோ பூ$_4$த்வா கஸ்மாதே$_3$ஷோऽத்$_3$ய ஸத்தம ॥ (55)

ருரோத$_4$ து$_3$:க$_2$ம் ஜநயந்நந்த:புர இவ ஸ்த்ரிய: ।
தஸ்மாத்த்வாம் ஶரணம் ப்ராப்தா வாயுநோபஹதா வயம் ॥
வாயுஸம்ரோத$_4$ஜம் து$_3$:க$_2$மித$_3$ம் நோ நுத$_3$ து$_3$:க$_2$ஹந் ॥ (56)

ஏதத் ப்ரஜாநாம் ஶ்ருத்வா து ப்ரஜாநாத$_2$: ப்ரஜாபதி: ।
காரணாதி$_3$தி சோக்த்வாஸௌ ப்ரஜா: புநரபா$_4$ஷத ॥ (57)

யஸ்மிம்ஶ்ச காரணே வாயுஶ்சுக்ரோத$_4$ ச ருரோத$_4$ ச ।
ப்ரஜா: ஶ்ருணுத்$_4$வம் தத் ஸர்வம் ஶ்ரோதவ்யம் சாத்மந: க்ஷமம் ॥ (58)

புத்ரஸ்தஸ்யாமரேஶேந இந்த்$_3$ரேணாத்$_3$ய நிபாதித: ।
ராஹோர்வசநமாஸ்தா$_2$ய தத: ஸ குபிதோऽநில: ॥ (59)

அஶரீர: ஶரீரேஷு வாயுஶ்சரதி பாலயந் ।
ஶரீரம் ஹி விநா வாயும் ஸமதாம் யாதி தா$_3$ருபி$_4$: ॥ (60)

வாயு: ப்ராண: ஸுக$_2$ம் வாயுர்வாயு: ஸர்வமித$_3$ம் ஜக$_3$த் ।
வாயுநா ஸம்பரித்யக்தம் ந ஸுக$_2$ம் விந்த$_3$தே ஜக$_3$த் ॥ (61)

அத்$_3$யைவ ச பரித்யக்தம் வாயுநா ஜக$_3$தா$_3$யுஷா ।
அத்$_3$யைவ தே நிருச்ச்$_2$வாஸா: காஷ்ட$_2$குட்$_3$யோபமா: ஸ்தி$_2$தா: ॥ (62)

தத்$_3$யாமஸ்தத்ர யத்ராஸ்தே மாருதோ ருக்ப்ரதோ$_3$ ஹி ந: ।
மா விநாஶம் க$_3$மிஷ்யாம அப்ரஸாத்$_3$யாதி$_3$தே: ஸுதா: ॥ (63)

Koviloor Digital Library

லோகபாலகனான வாயு, உயிர்ப்பிராணிகளின் சுவாசமாக சஞ்சரிப்பதை அடக்கிவிட்டு, தன் குழந்தையை எடுத்துக் கொண்டு, ஒரு மலைக்குகையினுள் புகுந்து கொண்டான். (49)

இந்திரன், மழையைத் தடுத்து நிறுத்தி மக்களுக்குத் துன்பத்தைத் தருவதைப்போல, வாயு, உயிர்களின் மலத்துவாரங்களை அடைத்துத் துன்புறுத்தினான். அதனால், எல்லா உயிர்ப்பிராணிகளும் வாய்விட்டுக் கதறி அழுதன. (50)

வாயுதேவனுக்கு ஏற்பட்ட கோபத்தால், எல்லாப் பிராணிகளின் சுவாசமும் நின்றுபோயிற்று. மூட்டுகளில் நெகிழ்ச்சி அற்றுப்போனதால், அவை இயங்க முடியாமல் போயிற்று. பிராணிகள், வெறும் கட்டைபோல் அசைவற்றுக் கிடந்தன. (51)

வாயு பகவானின் கோபத்தின் விளைவாக, (உயிர்ப்பிராணிகள் தங்கள் இயல்புகளை இழந்ததால்) மூன்று உலகங்களிலும் வேதபாராயணம் நடைபெறவில்லை; வேள்விகள் செய்யப்படவில்லை; அறச்செயல்கள் எதுவும் நடைபெறவில்லை. எல்லோரும், நரகத்தில் விழுந்துவிட்டதைப் போல் துன்பத்தில் ஆழ்ந்து கிடந்தார்கள். (52)

அப்போது துயரத்திலிருந்த உயிர்ப் பிராணிகள், கந்தர்வ–தேவ–அசுர–மானுடர்கள், சுகம் பெற விரும்பி, பிரும்மதேவரிடம் முறையிடுவதற்காக ஓடிச்சென்றார்கள். (53)

மகோதரம் என்ற வயிற்றுநோயினால் பீடிக்கப்பட்டவர்கள் போல பெருத்த வயிறுடன் தவித்துக் கொண்டிருந்த தேவர்கள் கைகளைக் கூப்பிக்கொண்டு, ''பகவானே! தாங்கள் நான்குவிதமான உயிர்ப்பிராணிகளைப் படைத்தீர்கள். நாங்கள் உயிரோடு இருப்பதற்காக வாயுவை, அந்தப் பொறுப்பில் நியமித்தீர்கள். அவர், நாங்கள் மூச்சுவிடுவதற்கே ஆதாரமானவர். ஆனால், இப்போது ஏனோ அவர், அந்தப்புரப் பெண்ணைப் போல எங்கள் உடல்களுக்குள்ளேயே பதுங்கியிருக்கிறார். (மூச்சு உள்வாங்கி–வெளிவிடுதல் இல்லாமல் போய்விட்டது.) வாயுவினால் துன்பத்தில் ஆழ்ந்துள்ள நாங்கள், தங்களைச் சரண் அடைந்துள்ளோம். துக்கத்தைப் போக்குபவரே! வாயு சஞ்சாரம் இல்லாததால் ஏற்பட்டுள்ள கஷ்டத்தைத் தாங்கள் நீக்க வேண்டும்'' என்று சொல்லி அழுதார்கள். (54–56)

உயிர்ப்பிராணிகளின் கோரிக்கையைக் கேட்ட, உயிர்களின் தலைவரும் போஷகருமான பிரஜாபதி, ''இதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு, மேலும் பேசத் தொடங்கினார்— (57)

''வாயுதேவன் மிகக் கோபப்பட்டுத் தடைசெய்த காரணத்தை, பிராணிகளே! நீங்கள் கேளுங்கள். அந்த விபரங்களை நீங்கள் கேட்டே ஆகவேண்டும். (58)

தேவர்கோன் இந்திரன், ராகுவினுடைய சொல்லைக் கேட்டு, வாயு குமாரனைத் தாக்கி வீழ்த்தியதால்தான், வாயுதேவன் கோபம் கொண்டிருக்கிறான். (59)

உடலற்றவனான வாயு, உடல்களுக்குள் புகுந்துக் கொண்டு பரிபாலித்து வருகிறான். வாயு சஞ்சாரமில்லாத உடல் வெறுங்கட்டையைப் போல் ஆகிவிடுகிறது. (60)

வாயுதான் உயிர்களுக்குப் பிராணன்; சுகத்தைக் கொடுக்கிறது; உலகம் முழுவதும் வாயுதான். வாயுவினால் புறக்கணிக்கப்பட்ட உலகம் சுகத்தை அடைவதில்லை. வாயுதான் உலகத்தின் உயிர்மூச்சு. இப்போது வாயுவினால் புறக்கணிக்கப்பட்டுள்ள உயிர்ப்பிராணிகள் அனைத்தும் உயிரற்றவைகளாக வெறுங்கட்டை போலும், சுவர் போலும் ஆகியிருக்கின்றன. (61,62)

அதிதியின் புதல்வர்களே! துன்பத்தைத் தந்து கொண்டிருக்கும் வாயு ஒளிந்துக் கொண்டிருக்கும் இடத்திற்கு நாம் செல்வோம். வாயுவைச் சமாதானப்படுத்தினாலொழிய, உலகத்தின் அழிவைத் தடுக்க முடியாது.'' (63)

Koviloor Digital Library

தத: ப்ரஜாபி$_4$: ஸஹித: ப்ரஜாபதி:
ஸதேவக$_3$ந்த$_4$ர்வபு$_4$ஜங்க$_3$கு$_3$ஹ்யகை: ।
ஜக$_3$ாம தத்ராஸ்யதி யத்ர மாருத:
ஸூதம் ஸுரேந்த்$_3$ராபி$_4$ஹதம் ப்ரக்$_3$ருஹ்ய ஸ: ॥ (64)

ததோऽர்கவைஶ்வாநரகாஞ்சநப்ரப$_4$ம்
ஸூதம் ததே$_3$ாத்ஸங்க$_3$க$_3$தம் ஸத$_3$ாக$_3$தே: ।
சதுர்முகே$_2$ா வீக்ஷ்ய க்ருபாமத$_2$ாகரோத்
ஸதே$_3$வக$_3$ந்த$_4$ர்வருஷியக்ஷராக்ஷஸை: ॥ (65)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ பஞ்சத்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

ஷட்த்ரிம்ஶ: ஸர்க$_3$:

ஹநுமத்$_3$வரப்ராப்த்யாதி$_3$

தத: பிதாமஹம் த்$_3$ருஷ்ட்வா வாயு: புத்ரவத$_4$ார்தி$_3$த: ।
ஶிஶுகம் தம் ஸமாத$_3$ாய உத்தஸ்தெ$_2$ள த$_4$ாதுரக்$_3$ரத: ॥ (1)

சலத்குண்ட$_3$லமௌளிஸ்ரக்தபநீயவிபூ$_4$ஷண: ।
பாத$_3$யோர்ந்யபதத்$_3$வாயுஸ்த்ரிருபஸ்த$_2$ாய வேத$_4$ஸே ॥ (2)

தம் து வேத$_3$வித$_3$ா தேந லம்ப$_3$ாப$_4$ரணஶோபி$_4$நா ।
வாயுமுத்த$_2$ாப்ய ஹஸ்தேந ஶிஶும் தம் பரிம்ருஷ்டவாந் ॥ (3)

ஸப்ருஷ்டமாத்ரஸ்தத: ஸோऽத$_2$ ஸலீலம் பத்$_3$மயோநிநா ।
ஜலஸிக்தம் யத$_2$ா ஸஸ்யம் புநர்ஜீவிதமாப்தவாந் ॥ (4)

ப்ராணவந்தமிமம் த்$_3$ருஷ்ட்வா ப்ராணோ க$_3$ந்த$_4$வஹோ முத$_3$ா ।
சசார ஸர்வபூ$_4$தேஷு ஸந்நிருத்$_3$த$_4$ம் யத$_2$ா புரா ॥ (5)

மருத்$_3$ரோத$_4$ாத்$_3$விநிர்முக்தாஸ்தா: ப்ரஜா முதி$_3$தா ப$_4$வந் ।
ஶீதவாதவிநிர்முக்தா: பத்$_3$மிந்ய இவ ஸாம்பு$_3$ஜா: ॥ (6)

ததஸ்த்ரியுக்$_3$மஸ்த்ரிககுத் த்ரித$_4$ாமா த்ரித$_3$ஶார்சித: ।
உவாச தே$_3$வதா ப்$_3$ரஹ்மா மாருதப்ரியகாம்யயா ॥ (7)

பே$_4$ா மஹேந்த்$_3$ரேஶவருணப்ரஜேஶ்வரத$_4$நேஶ்வரா: ।
ஜாநதாமபி வ: ஸர்வம் வக்ஷ்யாமி ஶ்ரூயதாம் ஹிதம் ॥ (8)

அநேந ஶிஶுநா கார்யம் கர்தவ்யம் வோ ப$_4$விஷ்யதி ।
தத்$_3$த$_3$த்$_4$வம் வராந் ஸர்வே மாருதஸ்யாஸ்ய துஷ்டயே ॥ (9)

Koviloor Digital Library

பின்னர், தேவ–கந்தர்வ–நாக–குஹ்யகர் முதலிய பிரஜைகளுடன், இந்திரனால் தாக்கப்பட்ட குழந்தையுடன் வாயுதேவன் மறைந்திருந்த இடத்திற்கு, பிரும்மதேவர் சென்றார். (64)

தேவ–கந்தர்வ–முனி–யக்ஷ–ராக்ஷஸர்களுடன் நான்முக பிரும்மா அவ்விடம் சென்று, சூரியன் போலும், அக்னி போலும், தங்கம் போலும் பிரகாசிக்கும் குழந்தையை (அனுமனை) மடிமேல் வைத்துக் கொண்டிருக்கும் வாயுவைக் கண்டார். அந்த நிலையில் குழந்தையைப் பார்த்ததும், பிரும்மாவின் இதயத்தில் இரக்கம் பிறந்தது. (65)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
முப்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தாறு

அனுமானுக்கு வரம் கொடுத்தல்

புதல்வன் இறந்துபோனதால் துக்கத்திலிருந்த வாயுதேவன், பிரும்மாவைக் கண்டதும் குழந்தையை எடுத்துக் கொண்டு, அவர் எதிரில் போய் நின்றான். (1)

அவருடைய செவிகளில் குண்டலங்கள் அசைந்து கொண்டிருந்தன; தலையில் மகுடம்; கழுத்தில் மாலைகள் மற்றும் பொன் அணிகலன்கள் அழகு செய்தன. வாயுதேவன், பிரும்மாவின் திருவடிகளில் மூன்று முறை சேவித்து எழுந்தான். (2)

வேதவித்தகரான அவர், அணிகலன்களால் அழகுற விளங்கும் நீண்ட கைகளால் வாயுவைத் தூக்கி நிறுத்தினார். அந்தக் குழந்தையைத் தன் கையால் தடவிக் கொடுத்தார். (3)

தாமரைத் தோன்றியான அவர் மென்மையாகத் தொட்டவுடனேயே, காய்ந்து போன பயிர் தண்ணீர் வார்த்தவுடன் பசுமை பெறுவதைப் போல, அந்தக் குழந்தை மீண்டும் உயிர் பெற்றது. (4)

குழந்தை உயிர் பெற்றுவிட்டதைக் கண்ட வாயு மனமகிழ்ந்து, எல்லா உயிர்ப் பிராணிகளினுள்ளும் அடக்கி வைக்கப்பட்டிருந்த உயிர்மூச்சை விடுவித்து, உள்ளும் புறமும் இயக்கச் செய்தான் (சுவாசிக்கச் செய்தான்). (5)

உள்ளே அடைபட்டுக்கிடந்த வாயு விடுபட்டவுடன், குளிர்காற்றின் தாக்குதலிலிருந்து விடுபட்டு மலர்ந்த தாமரைகள் நிறைந்த நீர்நிலை போல் உயிர்ப்பிராணிகள் மிகவும் மகிழ்ச்சியை அடைந்தன. (6)

அப்போது, மூன்று இரட்டைகள் (ஆறுவித மகிமைகள் – செல்வச்செழிப்பு, அறம், புகழ், மேன்மை, அறிவு, வைராக்கியம்) பொருந்தியவரும், மூன்று முக்கிய தேவதைகளின் (பிரும்மா, விஷ்ணு, சிவன்) வடிவானவரும், மூன்று உலகங்களையும் இருப்பிடமாகக் கொண்டுள்ளவரும், மூன்றுவித வளர்ச்சி நிலைகளையுடைய (குழவிப்பருவம், இளமை, வாலிபம்) தேவர்களால் வணங்கப்படுபவருமான பிரும்மா, வாயுதேவனுக்கு நலனைச் செய்யும் நோக்கத்துடன் தேவர்களைப் பார்த்துக் கூறினார்— (7)

''இந்திரன், பரமசிவன், வருணன், யமன், குபேரன் ஆகியவர்களே! உங்களுக்கு எல்லாம் தெரியும்தான். என்றாலும், எல்லா விஷயங்களையும் நான் சொல்கிறேன், கேளுங்கள். (8)

இந்தக் குழந்தையின் மூலம் எதிர்காலத்தில் பல நன்மைகள் ஏற்படப் போகின்றன. ஆகவே, நீங்கள் எல்லோரும் வாயுவின் திருப்திக்காக இவனுக்கு வரம் கொடுங்கள்.'' (9)

Koviloor Digital Library

தத: ஸஹஸ்ரநயந: ப்ரீதியுக்த: ஶுபா$_{4}$நந: ।
குஶேஶயமயீம் மாலாமுத்க்ஷிப்யேத$_{3}$ம் வசோऽப்$_{3}$ரவீத் ॥ (10)

மத்கரோத்ஸ்ருஷ்டவஜ்ரேண ஹநுரஸ்ய யதா$_{2}$ ஹத: ।
நாம்நா வை கபிஶார்தூ$_{3}$லோ ப$_{4}$விதா ஹநுமாநிதி ॥ (11)

அஹமஸ்ய ப்ரதா$_{3}$ஸ்யாமி பரமம் வரமத்$_{3}$பு$_{4}$தம் ।
இத: ப்ரப்$_{4}$ருதி வஜ்ரஸ்ய மமாவத்$_{4}$யோ ப$_{4}$விஷ்யதி ॥ (12)

மார்தண்ட$_{3}$ஸ்த்வப்$_{3}$ரவீத்தத்ர ப$_{4}$க$_{3}$வாம்ஸ்திமிராபஹ: ।
தேஜஸோऽஸ்ய மதீ$_{3}$யஸ்ய த$_{3}$தா$_{3}$மி ஶதிகாம் கலாம் ॥ (13)

யதா$_{3}$ து ஶாஸ்த்ராண்யத்$_{4}$யேதும் ஶக்திரஸ்ய ப$_{4}$விஷ்யதி ।
ததா$_{3}$ஸ்ய ஶாஸ்த்ரம் தா$_{3}$ஸ்யாமி யேந வாக்$_{3}$மீ ப$_{4}$விஷ்யதி ॥
ந சாஸ்ய ப$_{4}$விதா கஶ்சித் ஸத்$_{3}$ருஶ: ஶாஸ்த்ரத$_{3}$ர்ஶநே ॥ (14)

வருணஶ்ச வரம் ப்ராதா$_{3}$ந்நாஸ்ய ம்ருத்யுர்ப$_{4}$விஷ்யதி ।
வர்ஷாயுதஶதேநாபி மத்பாஶாது$_{3}$த$_{3}$காத$_{3}$பி ॥ (15)

யமோ த$_{3}$ண்டா$_{3}$த$_{3}$வத்$_{4}$யத்வமரோகி$_{3}$த்வம் ச நித்யஶ: ॥ (16)

வரம் த$_{3}$தா$_{3}$மி ஸந்துஷ்ட அவிஷாத$_{3}$ம் ச ஸம்யுகே$_{3}$ ।
க$_{3}$தே$_{3}$யம் மாமிகா சைநம் ஸம்யுகே$_{3}$ ந வதி$_{4}$ஷ்யதி ॥
இத்யேவம் த$_{4}$நத$_{3}$: ப்ராஹ ததா$_{3}$ ஹ்யேகாக்ஷிபிங்க$_{3}$ள: ॥ (17)

மத்தோ மதா$_{3}$யுதா$_{4}$நாம் ச ந வத்$_{4}$யோऽயம் ப$_{4}$விஷ்யதி ।
இத்யேவம் ஶங்கரேணாபி த$_{3}$த்தோऽஸ்ய பரமோ வர: ॥ (18)

ஸர்வேஷாம் ப்$_{3}$ரஹ்மத$_{3}$ண்டா$_{3}$நாமவத்$_{4}$யோऽயம் ப$_{4}$விஷ்யதி ।
தீ$_{3}$ர்கா$_{4}$யுஶ்ச மஹாத்மா ச இதி ப்$_{3}$ரஹ்மாப்$_{3}$ரவீத்$_{3}$வச: ॥ (19)

விஶ்வகர்மா ச த்$_{3}$ருஷ்ட்வைநம் பா$_{3}$லஸூர்யோபமம் ஶிஶும் ।
ஶில்பிநாம் ப்ரவர: ப்ராதா$_{3}$த்$_{3}$வரமஸ்ய மஹாமதி: ॥ (20)

மத்க்ருதாநி ச ஶஸ்த்ராணி யாநி தி$_{3}$வ்யாநி ஸம்யுகே$_{3}$ ।
தைரவத்$_{4}$யத்வமாபந்நஶ்சிரஜீவீ ப$_{4}$விஷ்யதி ॥ (21)

தத: ஸுராணாம் து வரைர்த்$_{3}$ருஷ்ட்வா ஹ்யேதமலங்க்ருதம் ।
சதுர்முக$_{2}$ஸ்துஷ்டமநா வாயுமாஹ ஜக$_{3}$த்$_{3}$கு$_{3}$ரு: ॥ (22)

அமித்ராணாம் ப$_{4}$யகரோ மித்ராணாமப$_{4}$யங்கர: ।
அஜேயோ ப$_{4}$விதா புத்ரஸ்தவ மாருத மாருதி: ॥ (23)

காமரூப: காமசாரீ காமக$_{3}$: ப்லவதாம் வர: ।
ப$_{4}$வத்யவ்யாஹதக$_{3}$தி: கீர்திமாம்ஶ்ச ப$_{4}$விஷ்யதி ॥ (24)

Koviloor Digital Library

அப்போது, ஆயிரம் கண்ணுடையவனும் அழகிய திருமுகம் பெற்றவனுமான இந்திரன், உள்ளம் மகிழ்ந்து, ஒரு தாமரை மாலையை அணிவித்துவிட்டுப் பின்வருமாறு கூறினான்— (10)

'''என்னுடைய கையினால் விடப்பட்ட வஜ்ராயுதத்தால், இவனுடைய ஹனு (முகவாய்க்கட்டை) சேதப்படுத்தப்பட்டதால், இந்த வானரப்புலி இனிமேல் 'அனுமான்' என்று பெயர் பெறுவான். (11)

இவனுக்கு, மிகவுயர்ந்த, அற்புதமான வரம் ஒன்றையும் தருகிறேன். இனிமேல் என்னுடைய வஜ்ராயுதத்தால் இவன் உயிரிழக்க மாட்டான்.'' (12)

இருளைப் போக்கும் சூரிய பகவான், ''என்னுடைய ஒளியில் நூற்றில் ஒரு பங்கை இவனுக்கு அளிக்கிறேன்'' என்று கூறினார். (13)

''இவன் அறநூல்களைப் படிக்கும் வளர்ச்சி பெற்றவுடன், நான் இவனுக்கு சாஸ்திர அறிவைக் கொடுக்கிறேன். அதனால், இவன் சிறந்த பேச்சுத்திறன் உடையவனாக விளங்குவான். சாஸ்திர ஞானத்தில் இவனுக்கு நிகராக வேறு யாரும் இருக்கமாட்டார்கள்.'' (14)

பின்னர், வருணன் பின்வரும் வரத்தைக் கொடுத்தான். ''பத்து லட்சம் ஆண்டுகள் வாழ்ந்த பிறகும், என்னுடைய பாசத்தினாலோ தண்ணீரினாலோ இவனுக்கு மரணம் நேராது.'' (15)

யமன், ''தன் தண்டத்தின் தாக்குதலால் உயிர்போகாது'' என்றும், ''எப்போதும் நோயற்றவனாக இருப்பான்'' என்றும் வரத்தைக் கொடுத்தான். (16)

பிங்கல வர்ணமான ஒரு கண்ணை உடைய குபேரன், ''நான் மனமகிழ்ச்சியுடன் இந்த வரத்தைக் கொடுக்கிறேன். போர் செய்யும்போது இவனுக்கு ஒருக்காலும் சோகம் ஏற்படாது; போரில், என்னுடைய கதை இவனை வதைக்காது'' என்று வரம் கொடுத்தான். (17)

''என்னாலோ, என் ஆயுதங்களாலோ இவன் கொல்லப்படமாட்டான்'' என்ற மிக உயர்ந்த வரத்தை பரமேசுவரன் அருளினார். (18)

''எல்லாவிதமான பிரும்மாஸ்திரங்களாலும் இவன் கொல்லப்படமாட்டான்; அத்துடன், பேருள்ளம் கொண்டவனாகவும் நீண்ட காலம் வாழ்பவனாகவும் இருப்பான்'' என்று பிரும்மா கூறினார். (19)

பாலசூரியன் போல் செவ்வண்ணத்துடன் விளங்கும் குழந்தையைப் பார்த்து, சிற்பிகளுள் தலைசிறந்தவனான பேரறிஞன் விசுவகர்மா, பின்வரும் வரத்தை அளித்தான். (20)

''போர்க்களத்தில், என்னால் உருவாக்கப்பட்ட தெய்விக ஆற்றல் கொண்ட சஸ்திரங்களால் இவன் கொல்லப்பட மாட்டான்; நெடுங்காலம் வாழ்வான்.'' (21)

தேவர்கள் குழந்தைக்கு ஏராளமான வரங்கள் கொடுத்ததும், உலகநாயகரான நான்முகன் மனமகிழ்ந்து வாயுதேவனைப் பார்த்துக் கூறினார்— (22)

''வாயுவே! உன்னுடைய புதல்வன், நண்பரல்லாதவர்களுக்கு அச்சம் தருபவனாகவும், நண்பர்களின் அச்சத்தைப் போக்குபவனாகவும், போரில் எவராலும் வெல்ல முடியாதவனாகவும் இருப்பான்; (23)

விருப்பம் போல் உருவம் எடுத்து, விரும்பும் இடங்களுக்கு விருப்பமான வேகத்தில் செல்லக் கூடியவனாகவும் இருப்பான்; இவனை யாரும் தடுத்து நிறுத்த முடியாது; இவன் பெரும் புகழையும் அடையப் போகிறான். (24)

Koviloor Digital Library

ராவணோத்ஸாத$_3$நார்த$_2$நி ராமப்ரியகராணி ச ।
ரோமஹர்ஷகராண்யேஷ கர்தா கர்மாணி ஸம்யுகே$_3$ ॥ (25)

ஏவமுக்த்வா தமாமந்த்ர்ய மாருதம் த்வமரை: ஸஹ ।
யத$_2$ாக$_3$தம் யயு: ஸர்வே பிதாமஹபுரோக$_3$மா: ॥ (26)

ஸோऽபி க$_3$ந்த$_4$வஹ: புத்ரம் ப்ரக்$_3$ருஹ்ய க்$_3$ருஹமாநயத் ।
அஞ்ஜநாயாஸ்தமாசக்$_2$யௌ வரத$_3$த்தம் விநிர்க$_3$த: ॥ (27)

ப்ராப்ய ராம வராநேஷ வரத$_3$ாநஸமந்வித: ।
ப$_3$லேநாத்மநி ஸம்ஸ்தே$_2$ந ஸோऽபூர்யத யத$_2$ார்ணவ: ॥ (28)

தரஸா பூர்யமாணோऽபி தத$_3$ா வாநரபுங்க$_3$வ: ।
ஆஶ்ரமேஷு மஹர்ஷீணாமபராத்$_4$யதி நிர்ப$_4$ய: ॥ (29)

ஸ்ருக்$_3$ப$_4$ாண்ட$_3$ாந்யக்$_3$நிஹோத்ரம் ச வல்கலாஜிநஸஞ்சயாந் ।
ப$_4$க்$_3$நவிச்சி$_2$ந்நவித்$_4$வஸ்தாந் ஸம்ஶாந்தாநாம் கரோத்யயம் ॥ (30)

ஏவம்வித$_4$ாநி கர்மாணி ப்ராவர்தத மஹாப$_3$ல: ।
ஸர்வேஷாம் ப்$_3$ரஹ்மத$_3$ண்ட$_3$ாநாமவத்$_4$ய: ஶம்பு$_4$நா க்ருத: ॥
ஜாநந்த ருஷயஸ்தம் வை க்ஷமந்தே தஸ்ய ஶக்தித: ॥ (31)

யத$_2$ா கேஸரிணா த்வேஷ வாயுநா ஸோऽஞ்ஜநாஸுத: ।
ப்ரதிஷித்$_3$தே$_4$ऽபி மர்யாத$_3$ாம் லங்க$_4$யத்யேவ வாநர: ॥ (32)

ததோ மஹர்ஷய: க்ருத்$_3$த$_4$ா ப்$_4$ருக்$_3$வங்கி$_3$ரஸவம்ஶஜா: ।
ஶேபுரேநம் ரகு$_4$ஶ்ரேஷ்ட$_2$ நாதிக்ருத்$_3$த$_4$ாதிமந்யவ: ॥ (33)

ப$_3$ாத$_4$ஸே யத் ஸமாஶ்ரித்ய ப$_3$லமஸ்மாந் ப்லவங்க$_3$ம ।
தத்$_3$தீ$_3$ர்க$_4$காலம் வேத்தாஸி நாஸ்மாகம் ஶாபமோஹித: ॥
யத$_3$ா தே ஸ்மார்யதே கீர்திஸ்தத$_3$ா தே வர்த$_4$தே ப$_3$லம் ॥ (34)

தத: ஸ ஹ்ருததேஜௌஜா மஹர்ஷிவசநௌஜஸா ।
ஏஷோऽஶ்ரமாணி தாந்யேவ ம்ருது$_3$ப$_4$ாவம் க$_3$தோऽசரத் ॥ (35)

அத$_2$ர்க்ஷரஜஸோ நாம வாலிஸுக்$_3$ரீவயோ: பிதா ।
ஸர்வவாநரராஜாஸீத்தேஜஸா ப$_4$ாஸ்கரப்ரப$_4$: ॥ (36)

ஸ ச ராஜ்யம் சிரம் க்ருத்வா வாநராணாம் ஹரீஶ்வர: ।
ஸ ச ருக்ஷரஜா நாம காலத$_4$ர்மேண ஸங்க$_3$த: ॥ (37)

தஸ்மிந்நஸ்தமிதே சாத$_2$ மந்த்ரிபி$_4$ர்மந்த்ரகோவிதை$_3$: ।
பித்ர்யே பதே$_3$ க்ருதோ வாலீ ஸுக்$_3$ரீவோ வாலிந: பதே$_3$ ॥ (38)

ஸுக்$_3$ரீவேண ஸமம் த்வஸ்ய அத்$_3$வைத$_2$ம் சி$_2$த்$_3$ரவர்ஜிதம் ।
ஆப$_3$ால்யம் ஸக்$_2$யமப$_4$வத$_3$நிலஸ்யாக்$_3$நிநா யத$_2$ா ॥ (39)

Koviloor Digital Library

இவன், போர்க்களத்தில் இராவணனை மாய்ப்பதற்காக, இராமபிரானுக்குத் திருப்தியை விளைவிக்கக் கூடியவையும், உரோமச் சிலிர்ப்பை உண்டாக்கக் கூடியவையுமான அற்புதச் செயல்கள் பலவற்றைச் செய்யப் போகிறான்.'' (25)

இவ்வாறு கூறிவிட்டு, வாயுதேவனிடம் அனுமதி பெற்று, பிரும்மா முதலிய எல்லா தேவதைகளும் வந்தவாறே திரும்பிச் சென்றார்கள். (26)

வாயுதேவனும் புதல்வனை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான். அஞ்ஜனையிடம், புதல்வன் பெற்ற வரங்களைப் பற்றிக் கூறிவிட்டுப் போய்விட்டான். (27)

இராமா! இவன் பலவித வரங்களைப் பெற்றும், தன்னிடம் இயல்பாக அமைந்திருந்த வலிமையினாலும் நிறைவையடைந்து, பூரணமாக விளங்கும் கடல்போல் காணப்பட்டான். (28)

அப்போது, ஆற்றல் நிரம்பிய வானரோத்தமன், முனிவர்களின் குடில்களுக்குள் அச்சமில்லாமல் புகுந்துத் தொல்லை கொடுக்கத் தொடங்கினான். அமைதியான உள்ளம் கொண்ட மகாத்மாக்களின் குடில்களிலிருந்த ஸ்ருக்–ஸ்ருவம் (என்னும் வேள்விக் கரண்டிகள்), அக்னிஹோத்ரம், மரவுரி–மான்தோல் குவியல்கள் ஆகியவற்றைச் சேதப்படுத்தி உடைத்து அழித்தான். (29,30)

மகாபலசாலியான அவன், இம்மாதிரியான தொல்லைகளைச் செய்து கொண்டேயிருந்தான். 'எல்லா வகையான பிராமண சாபங்களாலும் இவனுக்கு அழிவு ஏற்படாது' என்று பிரும்மா வரம் கொடுத்திருப்பதை அறிந்திருந்ததால், அவனுடைய எல்லையற்ற சக்தியைத் தெரிந்துக் கொண்ட முனிவர்கள், அவனுடைய குற்றங்களைப் பொறுத்துக் கொண்டிருந்தார்கள். (31)

கேசரியும் வாயுதேவனும் அஞ்ஜனை குமாரனான இவனுக்கு (முனிவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்று) நல்லுரை கூறித் தடுக்க முயன்ற போதிலும், இவன் அவர்கள் சொல்லை ஒருபோதும் மதித்ததேயில்லை. (32)

பிருகு, அங்கிரஸ் முனிவர்களின் பரம்பரையில் தோன்றிய மாமுனிவர்கள் கோபம் அடைந்தார்கள். என்றாலும், மிகுந்த கோபத்தையும் துக்கத்தையும் வெளிக்காட்டாமல், (தங்கள் மன வருத்தத்தைத் தெரிவிக்கும் வகையில், எளிய) சாபம் கொடுத்தார்கள்— (33)

''வானரனே! தேவதைகள் கொடுத்த வரம் மற்றும் இயல்பான உடல் வலிமையின் காரணமாக, எங்களுக்குத் தொல்லை கொடுக்கிறாயல்லவா? எங்கள் சாபத்தினால் அறிவு மயங்கி, நீண்ட காலத்திற்கு உன் சக்தியை மறந்திருப்பாய். பின், வேறொருவர் உன் பெருமைகளைப் பிரகடனப்படுத்தி நினைவூட்டும்போது, உன்னுடைய ஆற்றல் பெருகும்.'' (34)

மாமுனிவர்கள் இவ்வாறு கூறியதன் விளைவாக, அறிவும் ஆற்றலும் அடங்கிப்போன இவன், முனிவர்களின் ஆசிரமங்களில் அமைதியுடன் சென்றுவரத் தொடங்கினான். (35)

வாலி–சுக்ரீவர்களின் தந்தை ரிக்ஷரஜஸ் எல்லா வானரர்களுக்கும் மன்னனாக இருந்தான். அவன், தேஜஸில் சூரியனுக்கு நிகரானவன். (36)

வானரோத்தமனான அவன், நீண்ட காலம் வானர மன்னனாக அரசு செலுத்தினான். பின்னர், அந்த ரிக்ஷரஜஸ் காலதர்மத்தை (மரணத்தை) அடைந்தான். (37)

அவன் மறைந்ததும், அரசு நிர்வாகத்தில் கைதேர்ந்தவர்களான அமைச்சர்களால், தந்தையின் இடத்தில் (அரசனாக) வாலி நியமிக்கப்பட்டான்; சுக்ரீவன், வாலியின் இடத்தை (இளவரசுப் பதவியை) அடைந்தான். (38)

அக்னிக்கும் வாயுவுக்குமிடையே இயற்கையாகவே நட்புறவு அமைந்திருப்பதைப் போல, சுக்ரீவன், ஹனுமான் ஆகியோரிடையே, குழந்தைப்பருவம் முதற்கொண்டே சிநேகபாவம் இருந்து வந்தது; மனவேற்றுமை என்பது சிறிதளவும் இல்லாதிருந்தது. (39)

Koviloor Digital Library

ஏஷ ஶாபவஶாதே$_3$வ ந வேத$_3$ ப$_3$லமாத்மந: ।
வாலிஸுக்$_3$ரீவயோர்வைரம் யதா$_3$ ராம ஸமுத்தி$_2$தம் ॥ (40)

ந ஹ்யேஷ ராம ஸுக்$_3$ரீவோ ப்$_4$ராம்யமாணோऽபி வாலிநா ।
தே$_3$வ ஜாநாதி ந ஹ்யேஷ ப$_3$லமாத்மநி மாருதி: ॥ (41)

ருஷிஶாபாஹ்ருதப$_3$லஸ்ததை$_3$ஷ கபிஸத்தம: ।
ஸிம்ஹ: பஞ்ஜரருத்$_3$தோ$_4$ வா ஆஸ்தி$_2$த: ஸஹிதோ ரணே ॥ (42)

பராக்ரமோத்ஸாஹமதிப்ரதாப ஸௌஶீல்யமாது$_4$ர்யநயாநயைஶ்ச ।
கா$_3$ம்பீ$_4$ர்யசாதுர்யஸுவீர்யதை$_4$ர்யைர்ஹநூமத: கோऽப்$_4$யதி$_4$கோऽஸ்தி லோகே ॥ (43)

அஸௌ புநர்வ்யாகரணம் க்$_3$ரஹீஷ்யந்
ஸூர்யோந்முக$_2$: ப்ருஷ்ட$_2$க$_3$ம: கபீந்த்$_3$ர: ।
உத்$_3$யத்$_3$கி$_3$ரேரஸ்தகி$_3$ரிம் ஜகா$_3$ம
க்$_3$ரந்த$_2$ம் மஹத்$_3$தா$_4$ரயநப்ரமேய: ॥ (44)

ஸஸூத்ரவ்ருத்த்யர்த$_2$பத$_3$ம் மஹார்த$_2$ம்
ஸஸங்க்$_3$ரஹம் ஸாத்$_4$யதி வை கபீந்த்$_3$ர: ।
ந ஹ்யஸ்ய கஶ்சித் ஸத்$_3$ருஶோऽஸ்தி ஶாஸ்த்ரே
வைஶாரதே$_3$ ச$_2$ந்த$_3$க$_3$தௌ ததை$_2$வ ॥ (45)

ஸர்வாஸு வித்$_3$யாஸு தபோவிதா$_4$நே
ப்ரஸ்பர்த$_4$தே யோ ஹி கு$_3$ரும் ஸுராணாம் ।
ஸோऽயம் நவவ்யாகரணார்த$_2$வேத்தா
ப்$_3$ரஹ்மா ப$_4$விஷ்யத்யபி தே ப்ரஸாதா$_3$த் ॥ (46)

ப்ரவீவிவிக்ஷோரிவ ஸாக$_3$ரஸ்ய லோகாந் தி$_3$த$_4$க்ஷோரிவ பாவகஸ்ய ।
யுக$_3$க்ஷயே ஹ்யேவ யதா$_2$ந்தகஸ்ய ஹநூமத: ஸ்தா$_2$ஸ்யதி க: புரஸ்தாத் ॥ (47)

ஏஷேவ சாந்யே ச மஹாகபீந்த்$_3$ரா: ஸுக்$_3$ரீவமைந்த$_3$த்$_3$விவிதா$_3$: ஸநீலா: ।
ஸதாரதாரேயநலா: ஸரம்ப$_4$ாஸ்த்வத்காரணாத்$_3$ராம ஸுரைர்ஹி ஸ்ருஷ்டா: ॥ (48)

ததே$_3$தத் கதி$_2$தம் ஸர்வம் யந்மாம் த்வம் பரிப்ருச்ச$_2$ஸி ।
ஹநூமதா பா$_3$லபா$_4$வே கர்மைதத் கதி$_2$தம் மயா ॥ (49)

ஶ்ருத்வாக$_3$ஸ்த்யஸ்ய கதி$_2$தம் ராம: ஸௌமித்ரிரேவ ச ।
விஸ்மயம் பரமம் ஜக்$_3$முர்வாநரா ராக்ஷஸை: ஸஹ ॥ (50)

அக$_3$ஸ்த்யஸ்த்வப்$_3$ரவீத்$_3$ராமம் ஸர்வமேதச்ச்$_2$ருதம் த்வயா ।
த்$_3$ருஷ்ட: ஸம்பா$_4$ஷிதஶ்சாஸி ராம க$_3$ச்ச$_2$ாமஹே வயம் ॥ (51)

ஶ்ருத்வைதத்$_3$ராக$_4$வோ வாக்யமக$_3$ஸ்த்யஸ்யோக்$_3$ரதேஜஸ: ।
ப்ராஞ்ஜலி: ப்ரணதஶ்சாபி மஹர்ஷிமித$_3$மப்$_3$ரவீத் ॥ (52)

Koviloor Digital Library

இராமா! பின்னர், வாலி–சுக்ரீவர்களுக்கிடையே பகைமை தோன்றியபோது, சாபத்தின் காரணமாக, இவன் (அனுமான்), தன் பேராற்றலை அறிந்து கொள்ளவில்லை. (40)

ரகுவீரனே! சுக்ரீவன், வாலியினால் துரத்தப்பட்டு சுற்றி அலைந்தபோது, அவனுக்கு அனுமானின் பேராற்றல் நினைவுக்கு வரவில்லை; அனுமானுக்கும் தன் ஆற்றலைப் பற்றிய ஞாபகமும் இல்லை. (41)

வானரோத்தமனான அனுமான், முனிவர்களின் சாபத்தால் தன் ஆற்றலை அறியாமல் போனதால், வாலி–சுக்ரீவர்களிடையே சண்டை நிகழ்ந்தபோது, கூண்டில் அடைக்கப்பட்ட சிங்கம் போல் செயலிழந்து நின்றான். (42)

பராக்கிரமம், ஆர்வம், அறிவு, பிரதாபம், நற்பண்பு, வாக்கில் இனிமை, அரசு நிர்வாகம், பெருமிதம், திறமை, மனவுறுதி, ஆபத்தில் கலங்காத திண்மை – இவைகள், இவ்வுலகில், அனுமானைக் காட்டிலும் வேறு எவரிடம் அதிகமாக இருக்கிறது? (43)

நிகரற்ற வலிமை கொண்ட இவன், இலக்கணத்தை மறுபடியும் கற்றறிய வேண்டும் என்ற விருப்பத்துடன், சூரியனுக்கு எதிரில் அவரைப் பார்த்துக் கொண்டு பின்பக்கமாகவே, உதயகிரியிலிருந்து அஸ்தமனகிரி வரை நூலைக் கையில் ஏந்தியவண்ணம் சென்றான். (44)

இவன், ஸூத்ரம்–வ்ருத்தி–வார்த்திகம்–மகாபாஷ்யம்–ஸங்க்ரஹம் ஆகிய எல்லாவற்றையும் நன்றாகக் கற்றறிந்துள்ளான். மற்ற அறநூல்கள், சந்தஸ் சாஸ்திரம் ஆகியவற்றிலும் இவனுக்கு நிகரான புலமை பெற்றவர் எவருமிலர். (45)

எல்லாக் கலைஞானத்திலும் தவத்தை அனுஷ்டிப்பதிலும் தேவகுருவான பிருஹஸ்பதியுடன் போட்டி போடுகிறான். (அவருக்கு நிகரானவன்.) நவவியாகரணப் பொருளறிந்த இவன், உன் அருளினால், பிரும்மாவைப் போல் மரியாதைக்கு உரியவனாக ஆவான். (46)

ஊழிக்காலத்தில், உலகம் முழுவதையும் தண்ணீரில் மூழ்கச் செய்வதற்காகக் கரைகடந்து பாயும் பெருங்கடல், உலகத்தையே எரிப்பதற்காக எழுந்துள்ள அக்னி, உயிர்ப்பிராணிகளின் உயிரைப் பறிப்பதற்கு முனைந்துள்ள காலதேவன் – இவர்களுக்கு நிகரான அனுமானை எதிர்த்து, எவன்தான் நிற்கமுடியும்? (47)

இராமனே! இவனும், இவனைப் போன்று மகாவீரம் படைத்த வானரர்களான சுக்ரீவன், மைந்தன், த்விவிதன், நீலன், தாரன், அங்கதன், நளன், ரம்பன் ஆகியோரும் உனக்கு உதவி செய்வதற்காகவே, தேவர்களால் படைக்கப்பட்டார்கள். (48)

நீங்கள், என்னைக் கேட்ட எல்லா விஷயங்களையும் கூறிவிட்டேன். அனுமானுடைய பாலபருவத்தில் நடந்த நிகழ்ச்சிகளையும் கூறினேன். (49)

இலக்குவனும், இராமனும், மற்றுமுள்ள வானர அரக்கர்களும் அகஸ்தியர் சொல்லிய விவரங்களைக் கேட்டு மிகவும் ஆச்சரியமடைந்தார்கள். (50)

பின்னர், அகஸ்தியர், ''இராமபிரானே! உங்களுக்கு, முன்னர் நடந்த சம்பவங்களை விரிவாகக் கூறிவிட்டேன். முனிவர்களாகிய எங்களுக்கு உங்கள் தரிசனமும், உங்களுடன் உரையாடும் நல்வாய்ப்பும் கிடைத்தன. நாங்கள் இப்போது புறப்பட்டுச் செல்கிறோம்'' என்றார். (51)

ஆன்மப் பேரொளி மிக்க அகஸ்தியர், இவ்வாறு கூறியதைக் கேட்ட இராமன், கைகளைக் கூப்பிக் கொண்டு, விநயத்துடன் மாமுனிவரிடம் பின்வருமாறு கூறினார்— (52)

Koviloor Digital Library

அத்$_3$ய மே தே$_3$வதா ஹ்ருஷ்டா: பிதர: ப்ரபிதாமஹா: ।
யுஷ்மாகம் த$_3$ர்ஶநாதே$_3$வ நித்யம் துஷ்டா: ஸபா$_3$ந்த$_4$வா: ॥ (53)

விஜ்ஞாப்யம் து மமைதத்$_3$தி$_4$ தத்$_3$வதா$_3$ம்யாக$_3$தஸ்ப்ருஹ: ।
தத்$_3$ப$_4$வத்$_3$பி$_4$ர்மம க்ருதே கர்தவ்யமநுகம்பயா ॥ (54)

பௌரஜாநபதா$_3$ந் ஸ்தா$_2$ப்ய ஸ்வகார்யேஷ்வஹமாக$_3$த: ।
க்ரதூநேவ கரிஷ்யாமி ப்ரபா$_4$வாத்$_3$ப$_4$வதாம் ஸதாம் ॥ (55)

ஸத$_3$ஸ்யா மம யக்ஞேஷு ப$_4$வந்தோ நித்யமேவ தத் ।
ப$_4$விஷ்யத$_2$ மஹாவீர்யா மமாநுக்$_3$ரஹகாங்க்ஷிண: ॥ (56)

அஹம் யுஷ்மாந் ஸமாஶ்ரித்ய தபோநிர்தூ$_4$தகல்மஷாந் ।
அநுக்$_3$ருஹீத: பித்ருபி$_4$ர்ப$_4$விஷ்யாமி ஸுநிர்வ்ருத: ॥ (57)

ததா$_3$க$_3$ந்தவ்யமநிஶம் ப$_4$வத்$_3$பி$_4$ரிஹ ஸங்க$_3$தை: ।
அக$_3$ஸ்த்யாத்$_3$யாஸ்து தச்ச்$_2$ருத்வா ருஷய: ஸம்ஶிதவ்ரதா: ॥
ஏவமஸ்த்விதி தம் சோக்த்வா ப்ரயாதுமுபசக்ரமு: ॥ (58)

ஏவமுக்த்வா க$_3$தா: ஸர்வே ருஷயஸ்தே யதா$_2$க$_3$தம் ॥ (59)

ராக$_4$வஶ்ச தமேவார்த$_2$ம் சிந்தயாமாஸ விஸ்மித: ।
ததோऽஸ்தம் பா$_4$ஸ்கரே யாதே விஸ்ருஜ்ய ந்ருபவாநராந் ॥ (60)

ஸந்த்$_4$யாமுபாஸ்ய விதி$_4$வத்ததா$_3$ நரவரோத்தம: ।
ப்ரவ்ருத்தாயாம் ரஜந்யாம் து ஸோऽந்த:புரசரோऽப$_4$வத் ॥ (61)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஷட்த்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

ஸப்தத்ரிம்ஶ: ஸர்க$_3$:

பௌரோபஸ்தா$_2$நம்

அபி$_4$ஷிக்தே து காகுத்ஸ்தே$_2$ த$_4$ர்மேண விதி$_3$தாத்மநி ।
வ்யதீதா யா நிஶா பூர்வா பௌராணாம் ஹர்ஷவர்த$_4$நீ ॥ (1)

தஸ்யாம் ரஜந்யாம் வ்யுஷ்டாயாம் ப்ராதர்ந்ருபதிபோ$_3$த$_4$கா: ।
வந்தி$_3$ந: ஸமுபாதிஷ்ட$_2$ந் ஸௌம்யா ந்ருபதிவேஶ்மநி ॥ (2)

தே ரக்தகண்டி$_2$ந: ஸர்வே கிந்நரா இவ ஶிக்ஷிதா: ।
துஷ்டுவுர்ந்ருபதிம் வீரம் யதா$_2$வத் ஸம்ப்ரஹர்ஷிண: ॥ (3)

வீர ஸௌம்ய ப்ரபு$_3$த்$_4$யஸ்வ கௌஸல்யாப்ரீதிவர்த$_4$ந ।
ஜக$_3$த்$_3$தி$_4$ ஸர்வம் ஸ்வபிதி த்வயி ஸுப்தே நராதி$_4$ப ॥ (4)

Koviloor Digital Library

''மாமுனிவரே! இன்றுதான் தெய்வங்களும் பிதரர்களும் பாட்டன்மார்களும் என்னிடம் தனியே பிரீதி கொண்டுள்ளார்கள். தங்களைப் போன்ற மகாத்மாக்களின் தரிசனத்தினாலேயே, நாங்களும் உறவினர்களும் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம். (53)

என் மனத்தில் ஓர் ஆசை தோன்றியிருக்கிறது. அதைத் தங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். என்னிடம் அருள்கூர்ந்து தாங்கள் அதை நிறைவேற்றித் தரவேண்டும். (54)

புறநகர் மக்களையும் நகர மக்களையும் அவரவர் கடமைகளில் நிலைநிறுத்திவிட்டு, தங்களைப் போன்ற சான்றோர்களின் அருளால் பல வேள்விகளைச் செய்யவேண்டும். (55)

அந்த வேள்விகளில், தங்களைப் போன்ற தவவலிமை பெற்ற மேலோர்கள், எனக்கு அருள்புரிவதற்காக எப்போதும் சபையோர்களாக இருக்கவேண்டும். (56)

தாங்கள், தவம் செய்து மாசற்றவர்களாக விளங்குகிறீர்கள். உங்களை அண்டி நின்று, எப்போதும் மகிழ்ச்சி கொண்டவனாகவும், முன்னோர்களால் ஆசீர்வதிக்கப்பட்டவனாகவும் ஆவேன். (57)

வேள்வியின் தொடக்க காலத்தில், நீங்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி, எப்போதும் இங்கே வந்துகொண்டிருக்க வேண்டும்.'' கடுமையான நியமங்களைக் கடைப்பிடிக்கும் அகஸ்தியர் முதலிய மாமுனிவர்கள், 'அப்படியே ஆகட்டும்' என்று கூறிவிட்டு புறப்படத் தொடங்கினார்கள். (58)

இவ்வாறு சொல்லிவிட்டு முனிவர்கள் எல்லோரும் வந்தவாறே திரும்பிச் சென்றார்கள். (59)

இராமப்பிரபு, அகஸ்தியர் சொல்லிய வரலாறுகளை எண்ணிப் பார்த்து ஆச்சரியம் அடைந்தார். சூரியன் மறைந்ததும் கூடியிருந்த அரசர்களையும் வானரர்களையும் அனுப்பிவிட்டு, புருஷோத்தமரான இராமன் முறைப்படி அந்திக்கடன்களைச் செய்தார். இரவு வந்ததும் அந்தப்புரத்திற்குள் நுழைந்தார். (60,61)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
முப்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தேழு

அரசவையில் இராமன்!

காகுத்த குலத்தில் தோன்றிய ஆத்மஞானியான இராமபிரானுக்கு, முறைப்படி முடிசூட்டு விழா நடந்து முடிந்ததும், நகர மக்களுக்கு மகிழ்ச்சியை அதிகரிக்கும் அந்த முதலாவது இரவு நல்லவிதமாகக் கழிந்தது. (1)

இரவு கழிந்து வைகறைப்பொழுது வந்ததும், மாமன்னர் இராமபிரானைத் துயிலெழச் செய்வதற்காகத் துதிபாடகர்கள் அரண்மனையில் கூடினார்கள். (2)

அவர்கள் எல்லோரும் இனிமையான குரல்வளம் படைத்தவர்கள்; தேவலோகப் பாடகர்களான கின்னரர் போல் முதன்மையான இசைவல்லுநர்கள். அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் வீரரான மன்னரை, வழக்கமான முறையில் இசையால் ஆனந்தம் கொள்ளச் செய்தார்கள். (3)

''வீரரே! ஆணழகரே! கௌசல்யையின் ஆனந்தத்தை வளர்ப்பவரே! அருள்கூர்ந்து கண்விழிப்பீராக. மன்னரே! தாங்கள் உறங்கினால் இந்த உலகமே உறக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறது. (4)

Koviloor Digital Library

விக்ரமஸ்தே யத$_2$ா விஷ்ணோ ரூபம் சைவாஶ்விநோரிவ ।
பு$_3$த்$_3$த்$_4$யா ப்$_3$ருஹஸ்பதேஸ்துல்ய: ப்ரஜாபதிஸமோ ஹ்யஸி ॥ (5)

க்ஷமா தே ப்ருதி$_2$வீதுல்யா தேஜஸா ப$_4$ாஸ்கரோபம: ।
வேக$_3$ஸ்தே வாயுநா துல்யோ க$_3$ாம்பீ$_4$ர்யமுத$_3$தே$_4$ரிவ ॥ (6)

அப்ரகம்ப்யோ யத$_2$ா ஸ்த$_2$ாணுஶ்சந்த்$_3$ரே ஸௌம்யத்வமீத்$_3$ருஶம் ।
நேத்$_3$ருஶா: பார்தி$_2$வா: பூர்வம் ப$_4$விதாரோ நராதி$_4$ப ॥ (7)

யத$_2$ா த்வமதிது$_3$ர்த$_4$ர்ஷோ த$_4$ர்மநித்ய: ப்ரஜாஹித: ।
ந த்வாம் ஜஹாதி கீர்திஶ்ச லக்ஷ்மீஶ்ச புருஷர்ஷப$_4$ ॥ (8)

ஶ்ரீஶ்ச த$_4$ர்மஶ்ச காகுத்ஸ்த$_2$ த்வயி நித்யம் ப்ரதிஷ்டி$_2$தௌ ।
ஏதாஶ்சாந்யாஶ்ச மது$_4$ரா வந்தி$_3$பி$_4$: பரிகீர்திதா: ॥ (9)

ஸூதாஶ்ச ஸம்ஸ்தவைர்தி$_3$வ்யைர்பே$_3$ாத$_4$யந்தி ஸ்ம ராக$_4$வம் ।
ஸ்துதிபி$_4$: ஸ்தூயமாநாபி$_4$: ப்ரத்யபு$_3$த்$_4$யத ராக$_4$வ: ॥ (10)

ஸ தத்$_3$விஹாய ஶயநம் பாண்ட$_3$ராச்ச$_2$ாத$_3$நாஸ்த்ருதம் ।
உத்தஸ்தௌ$_2$ நாக$_3$ஶயநாத்$_3$த$_4$ரிர்நாராயணோ யத$_2$ா ॥ (11)

ஸமுத்தி$_2$தம் மஹாத்மாநம் ப்ரஹ்வா: ப்ராஞ்ஜலயோ நரா: ।
ஸலிலம் ப$_4$ாஜநை: ஶுப்$_4$ரைருபதஸ்து$_2$: ஸஹஸ்ரஶ: ॥ (12)

க்ருதோத$_3$க: ஶுசிர்பூ$_4$த்வா காலே ஹுதஹுதாஶந: ।
தே$_3$வாக$_3$ாரம் ஜக$_3$ாமாஶு புண்யமிக்ஷ்வாகுஸேவிதம் ॥ (13)

தத்ர தே$_3$வாந் பித்ரூந் விப்ராநர்சயித்வா யத$_2$ாவிதி$_4$ ।
ப$_3$ாஹ்யகக்ஷ்யாந்தரம் ராமோ நிர்ஜக$_3$ாம ஜநைர்வ்ருத: ॥ (14)

உபதஸ்து$_2$ர்மஹாத்மாநோ மந்த்ரிண: ஸபுரோஹிதா: ।
வஸிஷ்ட$_2$ப்ரமுக$_2$ா: ஸர்வே தீ$_3$ப்யமாநா இவாக்$_3$நய: ॥ (15)

க்ஷத்ரியாஶ்ச மஹாத்மாநோ நாநாஜநபதே$_3$ஶ்வரா: ।
ராமஸ்யோபாவிஶந் பார்ஶ்வே ஶக்ரஸ்யேவ யத$_2$ாமரா: ॥ (16)

ப$_4$ரதோ லக்ஷ்மணஶ்சாத்ர ஶத்ருக்$_4$நஶ்ச மஹாயஶா: ।
உபாஸாஞ்சக்ரிரே ஹ்ருஷ்டா வேத$_3$ாஸ்த்ரய இவாத்$_4$வரம் ॥ (17)

யாதா: ப்ராஞ்ஜலயோ பூ$_4$த்வா கிங்கரா முதி$_3$தாநநா: ।
முதி$_3$தா நாம பார்ஶ்வஸ்த$_2$ா ப$_3$ஹவ: ஸமுபாவிஶந் ॥ (18)

வாநராஶ்ச மஹாவீர்யா விம்ஶதி: காமரூபிண: ।
ஸுக்$_3$ரீவப்ரமுக$_2$ா ராமமுபாஸந்தே மஹௌஜஸ: ॥ (19)

Koviloor Digital Library

தங்களுடைய பராக்கிரமம் விஷ்ணுவைப் போன்றது; அசுவினீதேவர்களைப் போல் பேரழகு; அறிவில் தேவகுரு பிருகஸ்பதிக்கு நிகர்; குடிமக்களைக் காப்பதில் பிரும்மதேவன். (5)

பொறுமையில் பூமி; பிரகாசத்தில் சூரியன்; வேகத்தில் வாயு; பெருமிதத் தோற்றத்தில் பெருங்கடல் போன்றவர். (6)

மாமன்னரே! போர்க்களத்தில் பரமசிவன் போல் சலிக்காமல் தூண் போல் உறுதியாக நிற்பவர், தாங்கள்; தங்களிடமுள்ள குளிர்ச்சியான பேரழகு, சந்திரனிடம் மட்டுமே இருக்கிறது; தங்களைப் போன்ற மிகச்சிறந்த மன்னர், இதற்கு முன் இருந்ததில்லை; இனி இருக்கப் போவதும் இல்லை. (7)

ஆண்களில் சிறந்தவரே! போரில் தாங்கள் வெல்லமுடியாதவர்; எப்போதும் அறநெறியில் நிற்பவர்; மக்களின் நலனில் அக்கறைக் கொண்டவர். அதனால், புகழும் செல்வச் செழிப்பும் தங்களைவிட்டுப் போவதேயில்லை. காகுத்தரே! செந்திருவும் அறக்கடவுளும் தங்களிடம் நிரந்தரமாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.'' இவ்வாறு, பிற குணநலன்களையும் துதிபாடகர்கள் இசையில் எடுத்துக் கூறினார்கள். (8,9)

பாணர்கள், அற்புதமான பாடல்களால் இராகவனைக் கண்மலரச் செய்தார்கள். பாடப்பட்ட துதிகளைக் கேட்டவண்ணம் இராமபிரான் கண்விழித்துக் கொண்டார். (10)

ஸ்ரீஹரியான நாராயணன் பாம்பணையிலிருந்து எழுந்திருப்பதைப் போல வெண்மையான விரிப்பு போடப்பட்டிருந்த படுக்கையிலிருந்து இராமன் எழுந்து நின்றார். (11)

மாமன்னர் படுக்கையிலிருந்து எழுந்துவிட்டதைக் கண்ட ஆயிரக்கணக்கான பணியாளர்கள், பாத்திரங்களில் தூய்மையான தண்ணீரை வைத்துக் கொண்டு, வணக்கத்துடன் காத்து நின்றார்கள். (12)

நீராடி உடல் தூய்மை பெற்று, உரிய காலத்தில் மூன்று அக்னிகளிலும் ஆகுதி கொடுத்துவிட்டு (அக்னிஹோத்ரம் செய்துவிட்டு), இக்ஷ்வாகு பரம்பரையினர் வணங்கும் புனிதமான தேவாலயத்திற்கு விரைவாக எழுந்தருளினார். (13)

அங்கே தேவதைகளையும் முன்னோர்களையும் வேதவித்தகர்களையும் அவரவர்க்குரிய முறைப்படி பூசித்துவிட்டு, ஏராளமான பணியாளர்கள் புடைசூழ வெளி மண்டபத்திற்குச் சென்றார். (14)

அங்கே, கொழுந்து விட்டெரியும் நெருப்பைப் போல் ஜொலிக்கும் வசிஷ்டர் முதலான புரோகிதர்கள், அறிவாற்றல் மிக்க அமைச்சர்கள் கூடியிருந்தார்கள். (15)

பின்னர், தேவேந்திரன் அருகில் தேவர்கள் சூழ்ந்து அமர்வதைப் போல, பேராற்றல் கொண்ட க்ஷத்திரியர்களும், பல நிலைகளிலிருந்த மக்கட்தலைவர்களும் இராமன் அருகில் வந்து அமர்ந்து கொண்டார்கள். (16)

மூன்று வேதங்களும் வேள்விச் சாலையில் சிறப்பாக விளங்குவதைப் போல, புகழ்மிக்க பரதன், இலக்குவன், சத்ருக்னன் ஆகிய மூவரும், முகமலர்ச்சியுடன் இராமனின் ஆணையை எதிர்பார்த்து நின்றார்கள். (17)

அப்போது, எப்போதும் மலர்ச்சியான முகம் கொண்ட முதிதா என்ற பெயர்கொண்ட பல பணியாளர்கள் அந்த அவைக்கு வந்து, இராமபிரானின் அருகில் அமர்ந்து கொண்டார்கள். (18)

பின்னர், எல்லையற்ற பராக்கிரமமும் ஆன்ம ஒளியும் பெற்றவர்களும் விருப்பம்போல் உருவம் எடுக்கக் கூடியவர்களுமான சுக்ரீவன் முதலான இருபது வானரத் தலைவர்கள் இராமனிடம் வந்தமர்ந்தார்கள். (19)

Koviloor Digital Library

விபீ$_4$ஷணஸ்ச ரக்ஷோபி$_4$ஸ்சதுர்பி$_4$: பரிவாரித: ।
உபாஸதே மஹாத்மாநம் த$_4$நேஶமிவ கு$_3$ஹ்யகா: ॥ (20)

தத$_2$ா நிக$_3$மவ்ருத்$_3$த$_4$ாஸ்ச குலீநா யே ச மாநவா: ।
ஶிரஸாவந்த்$_3$ய ராஜாநமுபாஸந்தே விசக்ஷணா: ॥ (21)

தத$_2$ா பரிவ்ருதோ ராஜா ஶ்ரீமத்$_3$பி$_4$ர்ருஷிபி$_4$ர்வ்ருத: ।
ராஜபி$_4$ஸ்ச மஹாவீர்யைர்வாநரைஸ்ச ஸராக்ஷஸை: ॥ (22)

யத$_2$ா தே$_3$வேஸ்வரோ நித்யம்ருஷிபி$_4$: ஸமுபாஸ்யதே ।
அதி$_4$கஸ்தேந ரூபேண ஸஹஸ்ராக்ஷாத்$_3$விரோசதே ॥ (23)

தேஷாம் ஸமுபவிஷ்டாநாம் தாஸ்தா: ஸுமது$_4$ரா: கத$_2$ா: ।
கத்$_2$யந்தே த$_4$ர்மஸம்யுக்தா: புராணக்ஞைர்மஹாத்மபி$_4$: ॥ (24)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஸப்தத்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

அஷ்டாத்ரிம்ஶ: ஸர்க$_3$:

ஜநகாதி$_3$ப்ரதிப்ரயாணம்

ஏவமாஸ்தே மஹாபா$_3$ஹுரஹந்யஹநி ராக$_4$வ: ।
ப்ரஶாஸத் ஸர்வகார்யாணி பௌரஜாநபதே$_3$ஷு ச ॥ (1)

தத: கதிபயாஹ:ஸு வைதே$_3$ஹம் மிதி$_2$லாதி$_4$பம் ।
ராக$_4$வ: ப்ராஞ்ஜலிர்பூ$_4$த்வா வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (2)

ப$_4$வாந் ஹி க$_3$திரவ்யக்$_3$ரா ப$_4$வதா பாலிதா வயம் ।
ப$_4$வதஸ்தேஜஸோக்$_3$ரேண ராவணோ நிஹதோ மயா ॥ (3)

இக்ஷ்வாகூணாம் ச ஸர்வேஷாம் மைதி$_2$லாநாம் ச ஸர்வஶ: ।
அதுலா: ப்ரீதயோ ராஜந் ஸம்ப$_3$ந்த$_4$கபுரோக$_3$மா: ॥ (4)

தத்$_3$ப$_4$வாந் ஸ்வபுரீம் யாது ரத்நாந்யாத$_3$ாய பார்தி$_2$வ ।
ப$_4$ரதஸ்ச ஸஹாயார்த$_2$ம் ப்ருஷ்ட$_2$தஸ்தேऽநுயாஸ்யதி ॥ (5)

ஸ ததே$_2$தி ந்ருப: க்ருத்வா ராக$_4$வம் வாக்யமப்$_3$ரவீத் ।
ப்ரீதோऽஸ்மி ப$_4$வதோ ராஜந் த$_3$ர்ஶநேந நயேந ச ॥ (6)

யாந்யேதாநி து ரத்நாநி மத$_3$ர்த$_2$ம் ஸஞ்சிதாநி வை ।
து$_3$ஹித்ரே தாநி வை ராஜந் ஸர்வாண்யேவ த$_3$த$_3$ாமி ச ॥ (7)

ஏவமுக்த்வா து காகுத்ஸ்த$_2$ம் ஜநகோ ஹ்ருஷ்டமாநஸ: ।
ப்ரயயௌ மிதி$_2$லாம் ஶ்ரீமாந்ஸ்தமநுக்ஞாய ராக$_4$வம் ॥ (8)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_17_Back

Koviloor Digital Library

குஹ்யகர்கள் குபேரனிடம் பணிந்து நிற்பதைப் போல, நான்கு அரக்கர்கள் சூழ்ந்து நிற்க, விபீஷணன் பணிவுடன் வந்தமர்ந்தான். (20)

நற்குலத்தில் பிறந்தவர்களும் அறநெறி நூல்களை ஐயந்திரிபற கற்றுத் தேர்ந்தவர்களுமான பேரறிஞர்கள், தலைதாழ்த்தி (அயோத்தி) மன்னரை வணங்கிவிட்டு அமர்ந்தார்கள். (21)

தேவேந்திரன் எப்போதும் மாமுனிவர்களால் சூழப்பட்டிருப்பதைப் போல, தவச்செல்வர்களான மிகவுயர்ந்த முனிவர்களாலும், பேராற்றல் கொண்ட மன்னர்கள்–வானரர்கள்–அரக்கர்களாலும் சூழப்பெற்று, சபாமண்டபத்தில் வீற்றிருந்த ராஜாராமன், இந்திரனைக் காட்டிலும் அதிகமாகப் பிரகாசித்தார்! (22,23)

எல்லா மக்களும் சௌகரியமாக, தத்தமக்குரிய இடங்களில் உட்கார்ந்து கொண்டதும் புராணங்களைக் கற்றறிந்த பெரியோர்கள் தரும விளக்கமான இனிய கதைகளை எடுத்துக் கூறத் தொடங்கினார்கள். (24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
முப்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தெட்டு

ஜனகன் முதலியோர் விடைபெற்றுச் செல்லுதல்

இவ்வாறாக, தோள்வலி மிக்கவரான இராமன் நாள்தோறும் அரசவையில் வீற்றிருந்து, நகர மக்களையும் நகர்ப்புற மக்களையும் சந்தித்து ஆட்சி செலுத்தி வந்தார். (1)

சில நாள்கள் கழிந்தபின்னர், மிதிலை மன்னர் ஜனகரைப் பார்த்து கைகூப்பிக் கொண்டு இராமன் கூறினார்— (2)

''மன்னரே! தாங்கள்தான் எங்களுக்கு உறுதியான புகலிடம். தாங்கள் (தங்கள் புதல்விகளை எங்களுக்குக் கொடுத்து), தங்கள் பேரன்பைக் காட்டியிருக்கிறீர்கள். தங்களுடைய தவ ஆற்றல் துணைநின்றதால்தான், நான் இராவணனை வதம் செய்ய முடிந்தது. (3)

வேந்தரே! இக்ஷ்வாகு குலத்தினருக்கும், மிதிலை அரச பரம்பரையினருக்குமிடையே பெண்களைக் கொடுப்பது–ஏற்பது என்ற உறவினால் வளர்ந்து வரும் நெருக்கமான அன்புக்கு இணையே இல்லை. (4)

மண்ணாளும் மாமன்னரே! நாங்கள் காணிக்கையாகத் தரும் ஏராளமான இரத்தினங்களை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டு, தாங்கள் தங்கள் நாட்டுக்குச் செல்லலாம். பரதன், தங்களுக்குத் துணையாக (வழியனுப்பி வைக்கும் மரியாதை நிமித்தமாக)த் தங்களைத் தொடர்ந்து வருவான்.'' (5)

ஜனகர், 'சரி' என்று கூறிவிட்டு, ''மன்னரே! நான் தங்களைத் தரிசித்ததாலும், தங்கள் ஆட்சி நிர்வாகத்தைக் கண்டும் திருப்தி அடைந்திருக்கிறேன். (6)

தாங்கள் எனக்குக் கொடுப்பதற்காகக் குவித்து வைத்துள்ள அரிய செல்வங்களை, சீதை முதலிய என் பெண்களுக்கு அன்புப் பரிசாகக் கொடுக்கிறேன்.'' (7)

இவ்வாறு கூறிவிட்டு, இராமபிரானின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் ஜனக மன்னன் மிதிலைக்குப் புறப்பட்டுச் சென்றார். (8)

Koviloor Digital Library

தத: ப்ரயாதே ஜநகே கேகயம் மாதுலம் ப்ரபு$_4$: ।
ராக$_4$வ: ப்ராஞ்ஜலிர்பூ$_4$த்வா வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (9)

இத$_3$ம் ராஜ்யமஹம் சைவ ப$_4$ரதஸ்ச ஸலக்ஷ்மண: ।
ஆயத்தாஸ்த்வம் ஹி நோ ராஜந் க$_3$திஸ்ச புருஷர்ஷப$_4$ ॥ (10)

ராஜாபி வ்ருத்$_3$த$_4$: ஸந்தாபம் த்வத$_3$ர்த$_2$முபயாஸ்யதி ।
தஸ்மாத்$_3$க$_3$மநமத்$_3$யைவ ரோசதே தவ பார்தி$_2$வ ॥ (11)

லக்ஷ்மணேநாநுயாத்ரேண ப்ருஷ்ட$_2$தோऽநுக$_3$மிஷ்யதே ।
த$_4$நமாத$_3$ாய விபுலம் ரத்நாநி விவித$_4$ாநி ச ॥ (12)

யுத$_4$ாஜித்து ததே$_2$த்யாஹ க$_3$மநம் ப்ரதி ராக$_4$வம் ।
ரத்நாநி ச த$_4$நம் சைவ த்வய்யேவாக்ஷய்யமஸ்த்விதி ॥ (13)

ப்ரத$_3$க்ஷிணம் ஸ ராஜாநம் க்ருத்வா கேகயவர்த$_4$ந: ।
ராமேண ஹி க்ருத: பூர்வமபி$_4$வாத்$_3$ய ப்ரத$_3$க்ஷிணம் ॥ (14)

லக்ஷ்மணேந ஸஹாயேந ப்ரயாத: கேகயேஸ்வர: ।
ஹதேऽஸுரே யத$_2$ா வ்ருத்ரே விஷ்ணுநா ஸஹ வாஸவ: ॥ (15)

தம் விஸ்ருஜ்ய ததோ ராமோ வயஸ்யமகுதோப$_4$யம் ।
ப்ரதர்த$_3$நம் காஸிபதிம் பரிஷ்வஜ்யேத$_3$மப்$_3$ரவீத் ॥ (16)

த$_3$ர்ஸிதா ப$_4$வதா ப்ரீதிர்த$_3$ர்ஸிதம் ஸௌஹ்ருத$_3$ம் பரம் ।
உத்$_3$யோக$_3$ஸ்ச க்ருதோ ராஜந் ப$_4$ரதேந த்வயா ஸஹ ॥ (17)

தத்$_3$ப$_4$வாநத்$_3$ய காஸேய புரீம் வாராணஸீம் வ்ரஜ ।
ரமணீயாம் த்வயா கு$_3$ப்தாம் ஸுப்ரகாஸாம் ஸுதோரணாம் ॥ (18)

ஏதாவது$_3$க்த்வா சோத்த$_2$ாய காகுத்ஸ்த$_2$: பரமாஸநாத் ।
பர்யஷ்வஜத த$_4$ர்மாத்மா நிரந்தரமுரோக$_3$தம் ॥ (19)

விஸர்ஜயாமாஸ தத$_3$ா கௌஸல்யாநந்த$_3$வர்த$_4$ந: ।
ராக$_4$வேணாப்$_4$யநுக்ஞாத: காஸீஸோऽப்யகுதோப$_4$ய: ॥
வாராணஸீம் யயௌ தூர்ணம் ராக$_4$வேண விஸர்ஜித: ॥ (20)

விஸ்ருஜ்ய தம் காஸிபதிம் த்ரிஸதம் ப்ருதி$_2$வீபதீந் ।
ப்ரஹஸந் ராக$_4$வோ வாக்யமுவாச மது$_4$ராக்ஷரம் ॥ (21)

ப$_4$வதாம் ப்ரீதிரவ்யக்$_3$ரா தேஜஸா பரிரக்ஷிதா ।
த$_4$ர்மஸ்ச நியதோ நித்யம் ஸத்யம் ச ப$_4$வதாம் ஸத$_3$ா ॥ (22)

யுஷ்மாகம் சாநுப$_4$ாவேந தேஜஸா ச மஹாத்மநாம் ।
ஹதோ து$_3$ராத்மா து$_3$ர்பு$_3$த்$_3$தீ$_4$ ராவணோ ராக்ஷஸாத$_4$ம: ॥ (23)

Koviloor Digital Library

ஜனகர் புறப்பட்டுச் சென்றதும், கேகய மன்னனும் தன்னுடைய மாமனுமான யுதாஜித்தைப் பார்த்து, கைகளைக் கூப்பிக் கொண்டு வினயத்துடன் இராமன் கூறினார்— (9)

''மன்னரே! புருஷோத்தமரே! இந்த நாடு, நான் மற்றும் பரத–லட்சுமண–சத்ருக்னர்கள் எல்லோரும் தங்கள் வசத்தில் இருப்பவர்கள். தாங்கள்தான் எங்களுக்குப் புகலிடம். (10)

கேகய மன்னர், வயோதிகர். அவர், தங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர். அதனால், தாங்கள் இப்போதே புறப்பட்டுச் செல்வது நல்லது என்று எனக்குத் தோன்றுகிறது. (11)

தங்களுக்கு ஏராளமான செல்வத்தையும் இரத்தினங்களையும் காணிக்கையாக வழங்குகிறோம். அவைகளை ஏற்றுக்கொண்டு செல்லுங்கள். லட்சுமணன், தங்களுடன் வருவான்.'' (12)

''சரி'' என்று புறப்படுவதற்கு இசைவு தெரிவித்த யுதாஜித், இராகவனை நோக்கி, ''இந்தச் செல்வங்களும் இரத்தினங்களும் என்றென்றும் அழியாமல் உன்னிடமே இருக்கட்டும்'' என்றான். (13)

இராமன் முன்னதாகவே, தன் மாமனான யுதாஜித்தை வலம்வந்து ஆசிகள் பெற்றார். பின்னர், புறப்படும் சமயத்தில் (இராமன், ஒரு நாட்டின் தலைவரானதால்) கேகய மன்னன், அவரை வலம் வந்து மரியாதை செலுத்தினான். (14)

பின்னர், யுதாஜித் இலக்குவனுடன்கூட தன் நாட்டை நோக்கிப் புறப்பட்டான் – விருத்திராசுரனை மாய்த்த பின், விஷ்ணுவுடன்கூட தேவேந்திரன் அமராவதி நகரத்திற்குப் புறப்பட்டுச் சென்றதைப் போல. (15)

மாமனுக்கு விடைகொடுத்து அனுப்பியபின், இராமன் பயம் என்பதையே அறியாத நண்பன் காசி மன்னன் பிரதர்தனனை மார்புறத் தழுவிக் கொண்டு கூறினார்— (16)

''மன்னரே! தாங்கள் என் பட்டாபிஷேக காரியங்களில் பரதனுக்கு மிகவும் அனுகூலமாக இருந்து பேருதவி செய்து, தங்கள் பேரன்பையும் நட்பையும் வெளிக்காட்டினீர்கள். (17)

காசி மன்னரே! உறுதியான மதிற்சுவர்கள், கோட்டை வாயில்கள் கொண்டதும், தங்களால் நன்றாகப் பாதுகாக்கப்படுவதுமான வாராணசி பட்டணத்திற்கு எழுந்தருளுங்கள்.'' (18)

(இவ்வாறு கூறிவிட்டு) அறத்தின் நாயகனான இராமன், சிம்மாசனத்திலிருந்து எழுந்து வந்து பிரதர்தனனை மார்புற இறுகத் தழுவிக் கொண்டார். (19)

கௌசல்யையின் ஆனந்தத்தை வளர்க்கும் இராமன், காசி மன்னருக்கு விடைகொடுத்தார். பயம் என்பதறியாத காசி மன்னன், இராமனிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, உடனே வாராணசிக்குப் புறப்பட்டுச் சென்றார். (20)

இராகவன், காசி மன்னனை அனுப்பிவிட்டு, அங்கிருந்த முந்நூறு மன்னர்களைப் பார்த்து இலேசாக நகைத்து இனிய குரலில் பேசினார்— (21)

''உங்களுக்கெல்லாம் என்மேல் உள்ள அசைக்க முடியாத அன்பை உங்கள் வீரத்தினால் காப்பாற்றி வருகிறீர்கள். உங்கள் எல்லோரிடமும் சத்தியமும் தருமமும் நித்திய நிரந்தரமாகக் குடிகொண்டுள்ளன. (22)

தீய எண்ணங்கொண்டவனும் அரக்கப்பதரும் கொடியவனுமான இராவணன், உங்களுடைய பிரபாவத்தினாலும் வீரத்தாலும் என்னால் மாய்க்கப்பட்டான். (23)

Koviloor Digital Library

ஹேதுமாத்ரமஹம் தத்ர ப$_4$வதாம் தேஜஸா ஹத: ।
ராவண: ஸக$_3$ணோ யுத்$_3$தே$_4$ ஸபுத்ராமாத்யபா$_3$ந்த$_4$வ: ॥ (24)

ப$_4$வந்தஶ்ச ஸமாநீதா ப$_4$ரதேந மஹாத்மநா ।
ஶ்ருத்வா ஜநகராஜஸ்ய காநநாத்தநயாம் ஹ்ருதாம் ॥ (25)

உத்$_3$யுக்தாநாம் ச ஸர்வேஷாம் பார்தி$_2$வாநாம் மஹாத்மநாம் ।
காலோ வ்யதீத: ஸுமஹாந் க$_3$மநம் ரோசயாம்யத: ॥ (26)

ப்ரத்யூசுஸ்தம் ச ராஜாநோ ஹர்ஷேண மஹதா வ்ருதா: ।
தி$_3$ஷ்ட்யா த்வம் விஜயீ ராம ஸ்வராஜ்யேऽபி ப்ரதிஷ்டி$_2$த: ॥
தி$_3$ஷ்ட்யா ப்ரத்யாஹ்ருதா ஸீதா தி$_3$ஷ்ட்யா ஶத்ரு: பராஜித: ॥ (27)

ஏஷ ந: பரம: காம ஏஷா ந: ப்ரீதிருத்தமா ।
யத்த்வாம் விஜயிநம் ராம பஶ்யாமோ ஹதஶாத்ரவம் ॥ (28)

ஏதத்த்வய்யுபபந்நம் ச யத$_3$ஸ்மாம்ஸ்த்வம் ப்ரஶம்ஸஸே ।
ப்ரஶம்ஸார்ஹ ந ஜாநீம: ப்ரஶம்ஸாம் வக்துமீத்ருஶீம் ॥ (29)

ஆப்ருச்ச$_2$ாமோ க$_3$மிஷ்யாமோ ஹ்ருதி$_3$ஸ்தே$_2$ா ந: ஸதா$_3$ ப$_4$வாந் ।
வர்தாமஹே மஹாபா$_3$ஹோ ப்ரீத்யாத்ர மஹதா வ்ருதா: ॥ (30)

ப$_4$வேச்ச தே மஹாராஜ ப்ரீதிரஸ்மாஸு நித்யதா$_3$ ।
பா$_3$ட$_4$மித்யேவ ராஜாநோ ஹர்ஷேண பரமாந்விதா: ॥ (31)

ஊசு: ப்ராஞ்ஜலய: ஸர்வே ராக$_4$வம் க$_3$மநோத்ஸுகா: ।
பூஜிதாஶ்சைவ ராமேண ஜக்$_3$முர்தே$_3$ஶாந் ஸ்வகாந் ஸ்வகாந் ॥ (32)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ அஷ்டாத்ரிம்ஶ: ஸர்க$_3$: ॥

ஏகோநசத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

வாநரப்ரீணநம்

தே ப்ரயாதா மஹாத்மாந: பார்தி$_2$வாஸ்தே ப்ரஹ்ருஷ்டவத் ।
க$_3$ஜவாஜிஸஹஸ்ரௌகை$_4$: கம்பயந்தோ வஸுந்த$_4$ராம் ॥ (1)

அக்ஷௌஹிண்யோ ஹி தத்ராஸந் ராக$_4$வார்தே$_2$ ஸமுத்$_3$யதா: ।
ப$_4$ரதஸ்யாக்ஞயாநேகா: ப்ரஹ்ருஷ்டா ப$_3$லவாஹநா: ॥ (2)

ஊசுஸ்தே ச மஹீபாலா ப$_3$லத$_3$ர்பஸமந்விதா: ।
ந ராம ராவணம் யுத்$_3$தே$_4$ பஶ்யாம: புரத: ஸ்தி$_2$தம் ॥ (3)

Koviloor Digital Library

இராவணனுடன் நடந்த போரில் நான் ஒரு நிமித்தகாரணமாக மட்டுமே இருந்தேன். உண்மையில், புதல்வர்–அமைச்சர்–உற்றார்–உறவினர்களோடும் போர் வீரர்களோடும் (இராவணன்) கொல்லப்பட்டதற்குக் காரணம் தங்கள் தவவலிமைதான். (24)

காட்டில், ஜனகன் புதல்வி சீதை கவர்ந்து செல்லப்பட்டாள் என்ற செய்தி கிடைத்ததும், பரதன் உங்களையெல்லாம் அழைத்து, இங்கு ஒன்றுகூட்டினான். (25)

வீர மனம் கொண்ட அரசர்களாகிய நீங்கள் எல்லோரும் அரக்கர்களைத் தாக்குவதற்குத் துடித்துக் கொண்டிருந்தீர்கள். அந்த நாள்முதல் இங்கேயே வெகுகாலம் இருந்துவிட்டீர்கள். அதனால், இப்போது உங்களையெல்லாம், உங்கள் நாட்டிற்குத் திருப்பி அனுப்புவதுதான் நியாயமானது என்று எனக்குத் தோன்றுகிறது.'' (26)

பேரானந்தத்துடன், அந்த அரசர்கள் பதில் கூறினார்கள்— ''தெய்வத்தின் அருளால் தாங்கள் வெற்றி பெற்றீர்கள்; தன்னுடைய நாட்டில் முடிசூட்டப்பட்டீர்கள்! இராமப்பிரபோ! இறையருளால் சீதை மீட்கப்பட்டாள்; பகைவன் தோற்கடிக்கப்பட்டான். (27)

இராமபிரானே! எதிரிகளையெல்லாம் வீழ்த்தி வெற்றித் திருமகனாகத் தங்களைப் பார்க்கிறோமே! இதுதான் எங்கள் பெரிய விருப்பம்; எங்கள் பெருமகிழ்ச்சிக்கு முக்கிய காரணம். புகழத்தக்க இராமசந்திரனே! தாங்கள் எங்களைப் புகழ்கிறீர்களே, அது தங்களுக்கே உரிய மேலான இயல்பு. இப்படியெல்லாம் புகழ்ந்து பேசும் திறன் எங்களுக்கு இல்லை. (28,29)

நாங்கள் புறப்பட்டுச் செல்வதற்குத் தங்களிடம் அனுமதி கோருகிறோம். எங்கள் இதயத்தில், தாங்கள் எப்போதும் இருக்கிறீர்கள். பெருந்தோளரே! தங்கள் பேரன்புக்குப் பாத்திரமானவர்களாக நாங்கள் இருந்து வருவோம். (30)

மாமன்னரே! தங்களுக்கு எப்போதும் எங்களிடம் அன்பு இருந்து கொண்டிருக்க வேண்டும்.'' அப்போது, பெருமகிழ்ச்சியுடனிருந்த அவர்களைப் பார்த்து, ''சரி, அவ்வாறே ஆகட்டும்'' என்று இராமன் கூறினார். (31)

புறப்பட்டுச் செல்வதில் ஆர்வம் கொண்டிருந்த அவர்கள் எல்லோரும் கைகளைக் கூப்பிக் கொண்டு அனுமதி கோரினார்கள். இராமனால் நன்றாகக் கௌரவிக்கப்பட்ட அவர்கள் தத்தம் நாடுகளுக்குச் சென்றார்கள். (32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
முப்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : முப்பத்தொன்பது

வானரர் மகிழ்ச்சி

பெருவீரர்களான மன்னர்கள், ஆயிரக்கணக்கான யானைகள், குதிரைகள், காலாட்படைகள் ஆகியவற்றுடன்கூட, பூமியை நடுங்கச் செய்து கொண்டு மகிழ்ச்சியுடன் புறப்பட்டுச் சென்றார்கள். (1)

பரதனுடைய ஆணைப்படி, இராமபிரானுக்குப் போரில் உதவி செய்வதற்காக அநேக அக்ஷௌஹிணி சேனைகளுடன் மகிழ்ச்சியோடு அவர்கள் வந்திருந்தார்கள். அந்தக் குறுநில மன்னர்கள், வீரமும் செருக்கும் நிரம்பியவர்களாய் பேசிக் கொண்டார்கள்— ''இராமா! இராவணனுடன் எதிரெதிரே நின்று நீ போர் செய்வதை நாங்கள் பார்க்கவில்லை'' என்று. (2,3)

Koviloor Digital Library

ப$_4$ரதேந வயம் பஶ்சாத் ஸமாநீதா நிரர்த$_2$கம் ।
ஹதா ஹி ராக்ஷஸா: க்ஷிப்ரம் பார்தி$_2$வை: ஸ்யுர்ந ஸம்ஶய: ॥ (4)

ராமஸ்ய ப$_3$ாஹுவீர்யேண ரக்ஷிதா லக்ஷ்மணஸ்ய ச ।
ஸுக$_2$ம் பாரே ஸமுத்$_3$ரஸ்ய யுத்$_4$யேம விக$_3$தஜ்வரா: ॥ (5)

ஏதாஶ்சாந்யாஶ்ச ராஜாந: கத$_2$ாஸ்தத்ர ஸஹஸ்ரஶ: ।
கத$_2$யந்த: ஸ்வராஜ்யாநி ஜக்$_3$முர்ஹர்ஷஸமந்விதா: ॥ (6)

ஸ்வாநி ராஜ்யாநி முக்$_2$யாநி ருத்$_3$த$_4$ாநி முதி$_3$தாநி ச ।
ஸம்ருத்$_3$த$_4$த$_4$நத$_4$ாந்யாநி பூர்ணாநி வஸுமந்தி ச ॥ (7)

யத$_2$ாபுராணி தே க$_3$த்வா ரத்நாநி விவித$_4$ாந்யத$_2$ ।
ராமஸ்ய ப்ரியகாமார்த$_2$முபஹாராந்ந்ருபா த$_3$து$_3$: ॥ (8)

அஶ்வாந் யாநாநி ரத்நாநி ஹஸ்திநஶ்ச மதே$_3$ாத்கடாந் ।
சந்த$_3$நாநி ச முக்$_2$யாநி தி$_3$வ்யாந்யாப$_4$ரணாநி ச ॥ (9)

மணிமுக்தாப்ரவாலாம்ஸ்து த$_3$ாஸ்யோ ரூபஸமந்விதா: ।
அஜாவிகம் ச விவித$_4$ம் ரத$_2$ாம்ஶ்ச விவித$_4$ாந் த$_3$து$_3$: ॥ (10)

ப$_4$ரதோ லக்ஷ்மணஶ்சைவ ஶத்ருக்$_4$நஶ்ச மஹாப$_3$லா: ।
ஆத$_3$ாய தாநி ரத்நாநி ஸ்வாம் புரீம் புநராக$_3$தா: ॥ (11)

ஆக$_3$ம்ய ச புரீம் ரம்யாமயோத்$_4$யாம் புருஷர்ஷப$_4$ா: ।
தாநி ரத்நாநி சித்ராணி ராமாய ஸமுபாஹரந் ॥ (12)

ப்ரதிக்$_3$ருஹ்ய ச தத் ஸர்வம் ராம: ப்ரீதிஸமந்வித: ।
ஸுக்$_3$ரீவாய த$_3$தெ$_3$ள ராக்ஞே மஹாத்மா க்ருதகர்மணே ॥ (13)

விபீ$_4$ஷணாய ச த$_3$தெ$_3$ள தத$_2$ாந்யேப்$_4$யோऽபி ராக$_4$வ: ।
ராக்ஷஸேப்$_4$ய: கபிப்$_4$யஶ்ச யைர்வ்ருதோ ஜயமாப்தவாந் ॥ (14)

தே ஸர்வே ராமத$_3$த்தாநி ரத்நாநி கபிராக்ஷஸா: ।
ஶிரோபி$_4$ர்த$_4$ாரயாமாஸுர்ப$_3$ாஹுபி$_4$ஶ்ச மஹாப$_3$லா: ॥ (15)

ஹநூமந்தம் ச ந்ருபதிரிக்ஷ்வாகூணாம் மஹாரத$_2$: ।
அங்க$_3$த$_3$ம் ச மஹாப$_3$ாஹுமங்கமாரோப்ய வீர்யவாந் ॥ (16)

ராம: கமலபத்ராக்ஷ: ஸுக்$_3$ரீவமித$_3$மப்$_3$ரவீத் ।
அங்க$_3$த$_3$ஸ்தே ஸுபுத்ரோऽயம் மந்த்ரீ சாப்யநிலாத்மஜ: ॥ (17)

ஸுக்$_3$ரீவ மந்த்ரிதே யுக்தெள மமாபி ச ஹிதே ரதெள ।
அர்ஹதோ விவித$_4$ாம் பூஜாம் த்வத்க்ருதே வை ஹரீஶ்வர ॥ (18)

இத்யுக்த்வா வ்யவமுச்யாங்க$_3$ாத்$_3$பூ$_4$ஷணாநி மஹாயஶா: ।
ஸ ப$_3$ப$_3$ந்த$_4$ மஹார்ஹாணி தத$_3$ாங்க$_3$த$_3$ஹநூமதோ: ॥ (19)

Koviloor Digital Library

''போர் முடிந்த பிறகு பரதன் நம்மை அழைத்திருக்கிறார். நாம் வந்தது வீண்தான். நாம் முன்னாலேயே போர்க்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தால் அரக்கர்களை வெகுவிரைவில் கொன்றிருப்போம் என்பதில் சந்தேகமில்லை. (4)

இராம–லட்சுமணர்களின் தோள்வலிமையால் காப்பாற்றப்படும் நாம், பெருங்கடலின் அக்கரையில் கொஞ்சமும் கவலையின்றி மிக எளிதாகப் போர் செய்திருப்போம்.'' (5)

இவ்வாறும் இதுபோன்று ஆயிரக்கணக்கான எண்ணங்களைப் பரிமாறிக் கொண்டு, சிற்றரசர்கள் மிகுந்த குதூகலத்துடன் தத்தம் நாடுகளுக்குச் சென்றார்கள். (6)

அவர்களுடைய நாடுகள் செழிப்பு–சுகம்–ஆனந்தம் நிரம்பியவையாகவும், செல்வம்–பயிர்வகைகள் நிறைந்தவையாகவும், ஏராளமான இரத்தினம் போன்ற மணிகளுடனும் விளங்கின. (7)

அவர்கள் தத்தம் நாடுகளின் தலைநகரங்களுக்குச் சென்றதும், இராமபிரானின் அன்பைப் பெறுவதற்காக, பலவகையான இரத்தினங்களையும் காணிக்கைப் பொருள்களையும் அனுப்பி வைத்தார்கள். (8)

குதிரைகள், வாகனங்கள், இரத்தினங்கள், மதங்கொண்ட யானைகள், உயர்வகை சந்தனம், பெறற்கரிய அணிகலன்கள், வைரங்கள், முத்துக்கள், பவழங்கள், அழகு மிகுந்த பணிப்பெண்கள், பல்வகை ஆடுகள், பலவித அமைப்புக் கொண்ட தேர்கள் ஆகியவற்றைக் காணிக்கையாக அனுப்பினார்கள், குறுநில மன்னர்கள். (9,10)

பேராற்றல் கொண்ட பரத–லட்சுமண–சத்ருக்னர்கள், குறுநில மன்னர்களிடமிருந்து அந்தச் செல்வங்களைப் பெற்றுக்கொண்டு, மனங்கவரும் அயோத்திக்குத் திரும்பிவந்து, கிடைத்தற்கரிய அந்தப் பொருள்களை இராமனிடம் சமர்ப்பித்தார்கள். (11,12)

மனத்திருப்தியுடன் அவைகளை ஏற்றுக்கொண்ட இராமன், தனக்குப் பேருதவி செய்த வீரமன்னன் சுக்ரீவன் மற்றும் விபீஷணனுக்கும் மற்றவர்களுக்கும் அவற்றைப் பிரித்துக் கொடுத்தார். எந்த அரக்கர்–வானரர் துணைகொண்டு போரில் வெற்றி அடைந்தாரோ, அவர்களுக்கும் பரிசுப் பொருள்கள் வழங்கினார். (13,14)

மகாவலிமை கொண்ட அரக்க–வானரர்கள், இராமனால் கொடுக்கப்பட்ட பொருள்களை வணக்கத்துடன் பெற்றுக் கொண்டு, அவைகளை மதிக்கும் வகையில் தம் தலைமேல் வைத்துக் கொண்டார்கள். கைகளில் வைத்துப் போற்றினார்கள். (15)

இக்ஷ்வாகு பரம்பரையின் நெற்றித் திலகமும் மகாபலசாலியும் தேர்வீரருமான இராமன், அனுமானையும் அங்கதனையும் தன் மடிமீது ஏற்றி வைத்துக் கொண்டார். தாமரைக்கண்ணரான இராமன், சுக்ரீவனைப் பார்த்து, ''அங்கதன், உன்னுடைய புதல்வன்; அனுமான், உன்னுடைய அமைச்சன். எப்போதும் என் நலனை நாடும் செயல்களில் ஈடுபட்டு, எனக்கு அமைச்சர் போலவும் ஆலோசனை கூறியிருக்கிறார்கள். இவர்கள், பல்வகை கௌரவத்திற்கு – குறிப்பாக, உன்னைச் சார்ந்த இவர்கள் எனக்கு உதவியிருக்கிறார்கள் என்பதாலும் எமது பாராட்டுக்கு – உரியவர்கள்'' என்று சொல்லி, தான் அணிந்திருந்த விலையுயர்ந்த பல அணிகலன்களைக் கழற்றி, அங்கதனுக்கும் அனுமானுக்கும் சூட்டினார். (16–19)

Koviloor Digital Library

ஆப$_4$ஷ்ய ச மஹாவீர்யாந் ராக$_4$வோ யூத$_2$பர்ஷப$_4$ாந் ।
நீலம் நலம் கேஸரிணம் குமுத$_3$ம் க$_3$ந்த$_4$மாத$_3$நம் ॥ (20)

ஸுஷேணம் பநஸம் வீரம் மைந்த$_3$ம் த்$_3$விவித$_3$மேவ ச ।
ஜாம்ப$_3$வந்தம் க$_3$வாக்ஷம் ச விநதம் தூ$_4$ம்ரமேவ ச ॥ (21)

வலீமுக$_2$ம் ப்ரஜங்க$_4$ம் ச ஸந்நாத$_3$ம் ச மஹாப$_3$லம் ।
த$_3$ரீமுக$_2$ம் த$_3$தி$_4$முக$_2$மிந்த்$_3$ரஜாநும் ச யூத$_2$பம் ॥ (22)

மது$_4$ரம் ஶ்லக்ஷ்ணயா வாசா நேத்ராப்$_4$யாமாபிப$_3$ந்நிவ ।
ஸுஹ்ருதே$_3$ா மே ப$_4$வந்தஶ்ச ஶரீரம் ப்$_4$ராதரஸ்தத$_2$ா ॥ (23)

யுஷ்மாபி$_4$ருத்$_3$த்$_4$ருதஶ்சாஹம் வ்யஸநாத் காநநௌகஸ: ।
த$_4$ந்யோ ராஜா ச ஸுக்$_3$ரீவோ ப$_4$வத்$_3$பி$_4$: ஸுஹ்ருத$_3$ாம் வரை: ॥ (24)

ஏவமுக்த்வா த$_3$தௌ$_3$ தேப்$_4$யோ பூ$_4$ஷணாநி யதா$_2$ர்ஹத: ।
வஜ்ராணி ச மஹார்ஹாணி ஸஸ்வஜே ச நரர்ஷப$_4$: ॥ (25)

தே பிப$_3$ந்த: ஸுக$_3$ந்தீ$_4$நி மதூ$_4$நி மது$_4$பிங்க$_3$ளா: ।
மாம்ஸாநி ச ஸும்ருஷ்டாநி மூலாநி ச ப$_2$லாநி ச ॥ (26)

ஏவம் தேஷாம் நிவஸதாம் மாஸ: ஸாக்$_3$ரோ யயௌ தத$_3$ா ।
முஹூர்தமிவ தே ஸர்வே ராஜப$_4$க்த்யா ச மேநிரே ॥ (27)

ராமோऽபி ரேமே தை: ஸார்த$_4$ம் வாநரை: காமரூபிபி$_4$: ।
ராக்ஷஸைஶ்ச மஹாவீர்யைர்ருக்ஷைஶ்சைவ மஹாப$_3$லை: ॥ (28)

ஏவம் தேஷாம் யயௌ மாஸோ த்$_3$விதீய: ஶைஶிர: ஸுக$_2$ம் ।
வாநராணாம் ப்ரஹ்ருஷ்டாநாம் ராக்ஷஸாநாம் ச ஸர்வஶ: ॥ (29)

இக்ஷ்வாகுநக$_3$ரே ரம்யே பராம் ப்ரீதிமுபாஸதாம் ।
ராமஸ்ய ப்ரீதிகரணை: காலஸ்தேஷாம் ஸுக$_2$ம் யயௌ ॥ (30)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகோநசத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

சத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

ஹநூமத்ப்ரார்த$_2$நா

தத$_2$ா ஸ்ம தேஷாம் வஸதாம் ருக்ஷவாநரரக்ஷஸாம் ।
ராக$_4$வஸ்து மஹாதேஜா: ஸுக்$_3$ரீவமித$_3$மப்$_3$ரவீத் ॥ (1)

க$_3$ம்யதாம் ஸௌம்ய கிஷ்கிந்த$_4$ாம் து$_3$ராத$_4$ர்ஷாம் ஸுராஸுரை: ।
பாலயஸ்வ ஸஹாமாத்யோ ராஜ்யம் நிஹதகண்டகம் ॥ (2)

அங்க$_3$த$_3$ம் ச மஹாபா$_3$ஹோ ப்ரீத்யா பரமயா யுத: ।
பஶ்ய த்வம் ஹநுமந்தம் ச நளம் ச ஸுமஹாப$_3$லம் (3)

Koviloor Digital Library

பின்னர் இராமன், மகாபராக்கிரமசாலிகளான வானரத் தலைவர்கள் நீலன், நலன், கேசரி, குமுதன், கந்தமாதனன், சுஷேணன், பனஸன், வீரனான மைந்தன், த்விவிதன், ஜாம்பவான், கவாக்ஷன், விநதன், தூம்ரன், வலீமுகன், பிரஜங்கன், மகாவல்லமை பொருந்திய ஸந்நாதன், தரீமுகன், ததிமுகன், இந்திரஜானு ஆகியவர்களை அழைத்து, கண்களால் அவர்களைப் பருகிவிடுவதைப் போல் பாசத்துடன் பார்த்து, தோழமை நிறைந்த இனிய மொழிகளால் (பின்வருமாறு) கூறினார்— ''வானரர்களே! நீங்கள் எனக்கு நண்பர்கள், என்னுடைய உடல், என்னுடைய சகோதரர்கள். (20–23)

நீங்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு சங்கடமான நிலையிலிருந்து என்னைத் தூக்கி விட்டிருக்கிறீர்கள். ஆழ்ந்த நட்புக்கொண்ட உங்களையெல்லாம் படைத்தலைவர்களாகப் பெற்ற சுக்ரீவன் பெறும்பேறு பெற்றவன்.'' (24)

தலைசிறந்த மன்னரான இராமன் இவ்வாறு கூறியபின், அவரவர் தகுதிக்கு ஏற்றபடி அணிகலன்களையும் விலைமதிக்க முடியாத நவரத்தினங்களையும் வழங்கி மார்புறத் தழுவிக் கொண்டார். (25)

தேன் வண்ணங்கொண்ட அவர்கள், மணமிக்க மதுவகைகளையும், அரசபோகம் போன்ற உணவு வகைகள் மற்றும் கிழங்கு–பழங்களையும் உண்டு களித்தார்கள். (26)

இவ்வாறு பேரின்ப நிலையில், ஒரு மாதத்திற்கும் மேலாக அவர்கள் அங்கே தங்கியிருந்தும், இராமபிரானிடம் கொண்டிருந்த எல்லையற்ற பக்தியால் அந்த நீண்ட காலம், ஒரு முகூர்த்த காலத்தைப் போல் விரைவாகக் கழிந்தது. (27)

இராமனும், மனம் போல் உருவம் எடுக்கவல்ல வானரர்கள், மாவீரர்களான அரக்கர்கள், மிக்க வலிமை படைத்த கரடிகள் ஆகியோர்களுடன்கூட ஆனந்தமாகப் பொழுதைக் கழித்தார். (28)

இவ்வாறு, சிசிர ருதுவின் இரண்டாவது மாதமும் கோலாகலமாகக் கழிந்தது. இக்ஷ்வாகு மன்னர்களின் அந்த அழகிய தலைநகரில் வானரர்களும் அரக்கர்களும் பேரன்பும் மகிழ்ச்சியும் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இராமபிரானுடைய அன்பான உபசாரங்களால் அந்த நாட்கள் இனிமையாகக் கழிந்து கொண்டிருந்தன. (29,30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
முப்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பது

அனுமான் வேண்டுகோள்

இவ்வாறாக கரடி–அரக்க–வானரர்கள் சுகமாக இருந்து கொண்டிருந்தபோது, பேராற்றல் படைத்த இராமன், சுக்ரீவனை அழைத்துக் கூறினார்— (1)

''அன்பனே! தேவாசுரர்களாலும் கைப்பற்ற முடியாத கிஷ்கிந்தைக்குச் செல்வாயாக. ஆபத்துக்கள் இல்லாத அந்த நாட்டை, அமைச்சர்களின் ஒத்துழைப்புடன் பரிபாலித்து வருவாயாக. (2)

பெருந்தோளனே! அங்கதன், அனுமான், மிகவும் பலம்பொருந்திய நளன் ஆகியோரை மிகவும் அன்புடன் நடத்தவேண்டும். (3)

Koviloor Digital Library

ஸுஷேணம் ஶ்வஶுரம் வீரம் தாரம் ச ப$_3$லிநாம் வரம் ।
குமுத$_3$ம் சைவ து$_3$ர்த$_4$ர்ஷம் நீலம் சைவ மஹாப$_3$லம் ॥ (4)

வீரம் ஶதப$_3$லிம் சைவ மைந்த$_3$ம் த்$_3$விவித$_3$மேவ ச ।
க$_3$ஜம் க$_3$வாக்ஷம் க$_3$வயம் ஶரப$_4$ம் ச மஹாப$_3$லம் ॥ (5)

பஶ்ய ப்ரீதிஸமாயுக்தோ க$_3$ந்த$_4$மாத$_3$நமேவ ச ।
ருஷப$_4$ம் ச ஸுவிக்ராந்தம் ஜாம்ப$_3$வந்தம் மஹாப$_3$லம் ॥ (6)

யே சேமே ஸுமஹாத்மாநோ மத$_3$ர்தே$_2$ த்யக்தஜீவிதா: ।
பஶ்ய த்வம் ப்ரீதிஸம்யுக்தோ மா சைஷாம் விப்ரியம் க்ருதா$_2$: ॥ (7)

ஏவமுக்த்வா து ஸுக்$_3$ரீவமாஶ்லிஷ்ய ச புந: புந: ।
விபீ$_4$ஷணமுவாசாத$_2$ ராமோ மது$_4$ரயா கி$_3$ரா ॥ (8)

லங்காம் ப்ரஶாதி$_4$ த$_4$ர்மேண த$_4$ர்மஜ்ஞஸ்த்வம் மதோ மம ।
புரஸ்ய ராக்ஷஸாநாம் ச ப்$_4$ராதுர்வைஶ்ரவணஸ்ய ச ॥ (9)

மா ச பு$_3$த்$_3$தி$_4$மத$_4$ர்மே த்வம் குர்யா ராஜந் கத$_2$ஞ்சந ।
பு$_3$த்$_3$தி$_4$மந்தோ ஹி ராஜாநோ த்$_4$ருவமஶ்நந்தி மேதி$_3$நீம் ॥ (10)

அஹம் ச நித்யஶோ ராஜந் ஸுக்$_3$ரீவஸஹிதஸ்த்வயா ।
ஸ்மர்தவ்ய: பரயா ப்ரீத்யா க$_3$ச்ச$_2$ த்வம் விக$_3$தஜ்வர: ॥ (11)

ராமஸ்ய பா$_4$ஷிதம் ஶ்ருத்வா ருக்ஷவாநரராக்ஷஸா: ।
ஸா$_4$து ஸாத்$_4$விதி காகுத்ஸ்த$_2$ம் ப்ரஶஶம்ஸு: புந: புந: ॥ (12)

தவ பு$_3$த்$_3$தி$_4$ர்மஹாபா$_3$ஹோ வீர்யமத்$_3$பு$_4$தமேவ ச ।
மாது$_4$ர்யம் பரமம் ராம ஸ்வயம்போ$_4$ரிவ நித்யதா$_3$ ॥ (13)

தேஷாமேவம் ப்$_3$ருவாணாநாம் வாநராணாம் ச ரக்ஷஸாம் ।
ஹநூமாந் ப்ரணதோ பூ$_4$த்வா ராக$_4$வம் வாக்யமப்$_3$ரவீத் ॥ (14)

ஸ்நேஹோ மே பரமோ ராஜந்ஸ்த்வயி திஷ்ட$_2$து நித்யதா$_3$ ।
ப$_4$க்திஶ்ச நியதா வீர பா$_4$வோ நாந்யத்ர க$_3$ச்ச$_2$து ॥ (15)

யாவத்$_3$ராமகதா$_2$ வீர சரிஷ்யதி மஹீதலே ।
தாவச்ச$_2$ரீரே வத்ஸ்யந்தி ப்ராணா மம ந ஸம்ஶய: ॥ (16)

யச்சைதச்சரிதம் தி$_3$வ்யம் கதா$_2$ம் தே ரகு$_4$நந்த$_3$ந ।
தந்மமாப்ஸரஸோ நாம ஶ்ராவயேயுர்நரர்ஷப$_4$ ॥ (17)

தச்ச்$_2$ருத்வாஹம் ததோ வீர தவ சர்யாம்ருதம் ப்ரபோ$_4$ ।
உத்கண்டா$_2$ம் தாம் ஹரிஷ்யாமி மேக$_4$லேகா$_2$மிவாநில: ॥ (18)

ஏவம் ப்$_3$ருவாணம் ராமஸ்து ஹநூமந்தம் வராஸநாத் ।
உத்தா$_2$ய ஸஸ்வஜே ஸ்நேஹாத்$_3$வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (19)

Koviloor Digital Library

வீரரான உன்னுடைய மாமனார் சுஷேணன், ஆற்றல்மிக்கவர்களுள் முதன்மையான தாரன், வெற்றிகொள்ள முடியாத குமுதன், வலிமைமிக்க நீலன், வீரனான சதபலி, மைந்தன், த்விவிதன், கஜன், கவாக்ஷன், கவயன், மகாபலசாலியான சரபன், மிகவும் பராக்கிரமம் படைத்த ரிஷபன், அளவிடமுடியாத பலம் கொண்ட ஜாம்பவான் மற்றும் கந்தமாதனன் ஆகியோருடன் அன்புடன் பழக வேண்டும். (4–6)

பேராற்றல் கொண்ட இவர்களும் வேறு பலரும், என் பொருட்டு உயிரை விடுவதற்குத் துணிந்து போரிட்டார்கள். எனவே, இவர்கள் எல்லோருடனும் ஆழ்ந்த அன்புடன் பழக வேண்டும். இவர்கள் மனத்திற்குப் பிடிக்காததை நீ ஒருபோதும் செய்யக்கூடாது.'' (7)

இவ்வாறு கூறிவிட்டு, சுக்ரீவனை பலமுறை மார்புறத் தழுவிக் கொண்டார். பின்னர், விபீஷணனைப் பார்த்து இனிய குரலில் கூறினார்— (8)

''நீ, அறநெறி அறிந்தவன் என்பது என் கருத்து. இலங்கைப் பட்டண மக்களும், உன்னுடைய சகோதரன் குபேரனும் அவ்வாறே எண்ணுகிறார்கள். ஆகவே, அறநெறியில் நின்று இலங்கையில் ஆட்சி புரிவாயாக. (9)

மன்னனே! ஒருக்காலும் உன் மனத்தை அதருமத்தின்பால் செலுத்தாதே. நல்லறிஞர்களான (நன்னெறியில் நடக்கின்ற) மன்னர்கள், தங்கள் நாட்டை வெகுகாலம் அனுபவிக்கிறார்கள். (அரசபதவியின் சுகங்களை அடைகிறார்கள்.) (10)

வேந்தனே! என்னையும் சுக்ரீவனையும் நீ எப்போதும் மனத்தில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இப்போது, கவலை ஏதும் இல்லாமல் உன் நாட்டிற்குச் செல்வாயாக.'' (11)

இராமபிரானுடைய சொற்களைக் கேட்ட கரடி–வானர–அரக்கர்கள், ''ஆமாம்... ரொம்ப சரி'' என்று காகுத்தனை வெகுவாகப் போற்றினார்கள். (12)

''இராமமூர்த்தியே! பெருந்தோளரே! தான்தோன்றியான பிரும்மாவைப் போல், இனிய இயல்பு தங்களிடம் நிரந்தரமாகக் குடிகொண்டிருக்கிறது. தங்கள் தெள்ளிய அறிவும் வீரமும் மிகவும் ஆச்சரியமானவை.'' (13)

இவ்வாறு, வானரர்களும் அரக்கர்களும் தத்தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருந்தபோது, அனுமான் மிக்க பணிவுடன் இராமனைப் பார்த்துக் கூறினார்— (14)

''வேந்தரே! தங்களிடம் எனக்குள்ள ஆழ்ந்த நட்பு குறையாமல் என்றென்றும் இருக்க வேண்டும். வீரரே! தங்களிடம் கொண்டுள்ள பக்தி எப்போதும் இருக்கவேண்டும். என்னுடைய மனம் வேறொன்றை நாடிச் செல்லக்கூடாது. (15)

மாவீரரே! இந்த மண்ணுலகில் எதுநாள் வரை 'இராமகதை' பேசப்படுகிறதோ, அந்த நாள்வரை என்னுடைய சரீரத்தில் உயிர் இருந்துகொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை! (16)

ரகுநந்தனரே! தங்களுடைய புனிதமான சரிதத்தை அப்சரப் பெண்டிர் இசைக்க, நான் கேட்க வேண்டும். (17)

மாவீரரே! அமுதம் போன்ற தங்கள் சரிதத்தைக் கேட்டு, மேகக் கூட்டங்களைப் பெருங்காற்று சிதறியடிப்பது போல, என் மனத்தவிப்பைப் போக்குவேன்.'' (18)

இவ்வாறு, அனுமான் கூறிக்கொண்டிருக்கும்போதே சிம்மாசனத்திலிருந்து இராமன் எழுந்து வந்து, மிகவும் அன்புடன் அவரைத் தழுவிக் கொண்டு பின்வருமாறு கூறினார்— (19)

Koviloor Digital Library

ஏவமேதத் கபிஶ்ரேஷ்ட$_2$ ப$_4$விதா நாத்ர ஸம்ஶய: ।
சரிஷ்யதி கத$_2$ா யாவதே$_3$ஷா லோகே ச மாமிகா ॥ (20)

தாவத்தே ப$_4$விதா கீர்தி: ஶரீரேऽப்யஸவஸ்தத$_2$ா ।
லோகா ஹி யாவத்ஸ்த$_2$ாஸ்யந்தி தாவத்ஸ்த$_2$ாஸ்யதி மே கத$_2$ா ॥ (21)

ஏகைகஸ்யோபகாரஸ்ய ப்ராணாந் த$_3$ாஸ்யாமி தே கபே ।
ஶேஷஸ்யேஹோபகாராணாம் ப$_4$வாம ருணிநோ வயம் ॥ (22)

மத$_3$ங்கே$_3$ ஜீர்ணதாம் யாது யத்த்வயோபக்ருதம் கபே ।
நர: ப்ரத்யுபகாராணாமாபத்ஸ்வாயாதி பாத்ரதாம் ॥ (23)

ததோऽஸ்ய ஹாரம் சந்த்$_3$ராப$_4$ம் முச்ய கண்ட$_2$ாத் ஸ ராக$_4$வ: ।
வைதூ$_3$ர்யதரளம் கண்டே$_2$ ப$_3$ப$_3$ந்த$_4$ ச ஹநூமத: ॥ (24)

தேநோரஸி நிப$_3$த்$_3$தே$_4$ந ஹாரேண மஹதா கபி: ।
ரராஜ ஹேமஶைலேந்த்$_3$ரஶ்சந்த்$_3$ரேணாக்ராந்தமஸ்தக: ॥ (25)

ஶ்ருத்வா து ராக$_4$வஸ்யைதது$_3$த்த$_2$ாயோத்த$_2$ாய வாநரா: ।
ப்ரணம்ய ஶிரஸா பாதெ$_3$ள நிர்ஜக்$_3$முஸ்தே மஹாப$_3$லா: ॥ (26)

ஸுக்$_3$ரீவ: ஸ ச ராமேண நிரந்தரமுரோக$_3$த: ।
விபீ$_4$ஷணஶ்ச த$_4$ர்மாத்மா ஸர்வே தே ப$_3$ாஷ்பவிக்லவா: ॥ (27)

ஸர்வே ச தே ப$_3$ாஷ்பகலா: ஸாஶ்ருநேத்ரா விசேதஸ: ।
ஸம்மூட$_4$ா இவ து$_3$:கே$_2$ந த்யஜந்தோ ராக$_4$வம் தத$_3$ா ॥ (28)

க்ருதப்ரஸாத$_3$ாஸ்தேநைவம் ராக$_4$வேண மஹாத்மநா ।
ஜக்$_3$மு: ஸ்வம் ஸ்வம் க்$_3$ருஹம் ஸர்வே தே$_3$ஹீ தே$_3$ஹமிவ த்யஜந் ॥ (29)

ததஸ்து தே ராக்ஷஸருக்ஷவாநரா: ப்ரணம்ய ராமம் ரகு$_4$வம்ஶவர்த$_4$நம் ।
வியோக$_3$ஜாஶ்ருப்ரதிபூர்ணலோசநா: ப்ரதிப்ரயாதாஸ்து யத$_2$ா நிவாஸிந: ॥ (30)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ சத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

ANDAVAR LIBRARY. KOVILOOR
30629

ஏகசத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

புஷ்பகபுநரப்$_4$யநுக்ஞா

விஸ்ருஜ்ய ச மஹாப$_3$ாஹுர்ருக்ஷவாநரராக்ஷஸாந் ।
ப்$_4$ராத்ருபி$_4$: ஸஹிதோ ராம: ப்ரமுமோத$_3$ ஸுக$_2$ம் ஸுகீ$_2$ ॥ (1)

அத$_2$ாபராஹ்ணஸமயே ப்$_4$ராத்ருபி$_4$: ஸஹ ராக$_4$வ: ।
ஶுஶ்ராவ மது$_4$ராம் வாணீமந்தரிக்ஷாத் ப்ரப$_4$ாஷிதாம் ॥ (2)

Koviloor Digital Library

''வானரோத்தமனே! நீ கூறியபடியே தான் எதிர்காலத்தில் நடக்கப் போகிறது என்பதில் சந்தேகமில்லை. என்னுடைய கதை உலகத்தில் நிலவும் காலம் வரை உன் புகழும் நிலைத்து நிற்கும். உன் உடலில் உயிர் இருந்து கொண்டிருக்கும். இந்த உலகங்கள் எல்லாம் எவ்வளவு காலம் அழியாமல் இருக்குமோ, அவ்வளவு காலம் வரையில் என் கதைகள் நிச்சயமாக மக்களால் பேசப்படும். (20,21)

வானரனே! நீ செய்த உதவிகளில் ஒரே ஒன்றுக்காகவேகூட நான் என் உயிரைத் தியாகம் செய்வேன். அப்படிச் செய்தாலும், மற்ற உபகாரங்களுக்காக நான் உன்னிடம் கடன்பட்டவனாகவே இருப்பேன். (22)

வானரத்திலகமே! நீ எனக்குச் செய்த உதவிகள் எல்லாம் என்னுள்ளேயே ஜீரணமாகிப் போகட்டும். உன் உதவிகளுக்கு நன்றி செலுத்தும் வகையில் நான் உனக்கு உதவி செய்யும் நிலை ஏற்பட வேண்டாம். (நான், கடன்பட்டவனாகவே இருந்துவிடுகிறேன்.) ஏனென்றால், ஒருவன் செய்த உதவிக்குப் பதில் உதவி செய்யும் வாய்ப்பு, அவனுக்குக் கஷ்டம் வந்தால்தான் ஏற்படும். (உனக்குக் கஷ்டமும் வரவேண்டாம்; கஷ்டம் வந்து, அதைப் போக்குவதற்காக நான் உதவி செய்யவும் வேண்டாம்.)'' (23)

பின்னர், இராமன் தன்னுடைய கழுத்திலிருந்து, நடுப்பதக்கமாக வைடூர்யம் பதிக்கப்பட்டதும், சந்திரனைப் போல ஒளிவீசுவதுமான ஒரு மாலையைக் கழற்றி, அனுமானின் கழுத்தில் அணிவித்தார். மிகவுயர்ந்த அந்த மாலை, அனுமானுடைய மார்பில் பொன்மயமான சுமேரு மலையில் முழு நிலா உதயமானாற்போல் விளங்கி, அவரை மேலும் பிரகாசிக்கச் செய்தது. (24,25)

இராமன் விடைகொடுத்து விட்டதைக் கேட்ட வானரர்கள் ஒவ்வொருவராக எழுந்து வந்து அவர் திருவடிகளில் சேவித்தபின் வெளியே சென்றார்கள். தருமாத்மா விபீஷணனையும் சுக்ரீவனையும் இராமபிரான் நீண்டநேரம் மார்புற இறுகத் தழுவிக் கொண்டார். அவர்கள் எல்லோருக்கும் பிரிவைத் தாங்க முடியாமல் கண்களில் கண்ணீர் பெருகியது. (26,27)

இராமனை விட்டுப் பிரிய வேண்டிய தருணம் வந்துவிட்டதால், அவர்கள் எல்லோரும் கண்ணீர் பெருக்கினார்கள்; உணர்வு மழுங்கிப் போனார்கள்; என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார்கள். (28)

மகாத்மா இராமன், அவர்கள் எல்லோருக்கும் ஆறுதல் கூறினார். பின்னர், சரீரத்தைவிட்டு உயிர் தனித்துச் செல்வதைப் போல, அவரைவிட்டுத் தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள். அந்த அரக்க–கரடி–வானரர்கள், ரகுகுலத்தின் புகழை வளர்க்கும் இராமனின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, பிரிவாற்றாமையால் துளிர்த்த கண்ணீருடன் தத்தம் இடங்களுக்குத் திரும்பிச் சென்றார்கள். (29,30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நாற்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தொன்று

புஷ்பகத்தைத் திருப்பி அனுப்புவது

பெருந்தோளரான இராமன், கரடி–வானர–அரக்கர்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, சகோதரர்களோடுகூட மிகவும் சுகமாகவும் ஆனந்தமாகவும் இருந்து வந்தார். (1)

பின்னர், ஒருசமயம் பிற்பகல் பொழுதில் சகோதரர்களோடு இருந்த இராமன், ஆகாயத்திலிருந்து வந்த இனிய சொற்களைக் கேட்டார். (2)

Koviloor Digital Library

ஸௌம்ய ராம நிரீக்ஷஸ்வ ஸௌம்யேந வத3நேந மாம் ।
குபே3ரப4வநாத் ப்ராப்தம் வித்3தி4 மாம் புஷ்பகம் ப்ரபே4ா ॥ (3)

தவ ஶாஸநமாஜ்ஞாய க3தோऽஸ்மி த4நத3ம் ப்ரதி ।
உபஸ்த2ாதும் நரஶ்ரேஷ்ட2 ஸ ச மாம் ப்ரத்யப4ாஷத ॥ (4)

நிர்ஜிதஸ்த்வம் நரேந்த்3ரேண ராக4வேண மஹாத்மநா ।
நிஹத்ய யுதி4 து3ர்த4ர்ஷம் ராவணம் ராக்ஷஸேஶ்வரம் ॥ (5)

மமாபி பரமா ப்ரீதிர்ஹதே தஸ்மிந் து3ராத்மநி ।
ராவணே ஸக3ணே சைவ ஸபுத்ரே ஸஹபா3ந்த4வே ॥ (6)

ஸ த்வம் ராமேண லங்காயாம் நிர்ஜித: பரமாத்மநா ।
வஹ ஸௌம்ய தமேவ த்வமஹமாஜ்ஞாபயாமி தே ॥ (7)

பரமோ ஹ்யேஷ மே காமோ யத்த்வம் ராக4வநந்த3நம் ।
வஹேர்லோகஸ்ய ஸம்யாநம் க3ச்ச2ஸ்வ விக3தஜ்வர: ॥ (8)

ஸோऽஹம் ஶாஸநமாஜ்ஞாய த4நத3ஸ்ய மஹாத்மந: ।
த்வத்ஸகாஶமநுப்ராப்தோ நிர்விஶங்க: ப்ரதீச்ச2 மாம் ॥ (9)

அத்4ருஷ்ய: ஸர்வபூ4தாநாம் ஸர்வேஷாம் த4நத3ாஜ்ஞயா ।
சராம்யஹம் ப்ரபா4வேண தவாஜ்ஞாம் பரிபாலயந் ॥ (10)

ஏவமுக்தஸ்தத3ா ராம: புஷ்பகேண மஹாப3ல: ।
உவாச புஷ்பகம் த்3ருஷ்ட்வா விமாநம் புநராக3தம் ॥ (11)

யத்3யேவம் ஸ்வாக3தம் தேऽஸ்து விமாநவர புஷ்பக ।
ஆநுகூல்யாத்3த4நேஶஸ்ய வ்ருத்ததோ3ஷோ ந நோ ப4வேத் ॥ (12)

லாஜைஶ்சைவ தத2ா புஷ்பைர்தூ4பைஶ்சைவ ஸுக3ந்தி4பி4: ।
பூஜயித்வா மஹாபா3ஹூ ராக4வ: புஷ்பகம் தத3ா ॥ (13)

க3ம்யதாமிதி சோவாச ஆக3ச்ச2 த்வம் ஸ்மரே யத3ா ।
ஸித்3த4ாநாம் ச க3தௌ ஸௌம்ய மா விஷாதே3ந யோஜய ॥
ப்ரதிக4ாதஶ்ச தே மா பூ4த்3யதே2ஷ்டம் க3ச்ச2தோ தி3ஶ: ॥ (14)

ஏவமஸ்த்விதி ராமேண பூஜயித்வா விஸர்ஜிதம் ।
அபி4ப்ரேதாம் தி3ஶம் தஸ்மாத் ப்ராயாத்தத் புஷ்பகம் தத3ா ॥ (15)

ஏவமந்தர்ஹிதே தஸ்மிந் புஷ்பகே ஸுக்ருதாத்மநி ।
ப4ரத: ப்ராஞ்ஜலிர்வாக்யமுவாச ரகு4நந்த3நம் ॥ (16)

விபு3த4ாத்மநி த்3ருஶ்யந்தே த்வயி வீர ப்ரஶாஸதி ।
அமாநுஷாணாம் ஸத்த்வாநாம் வ்யாஹ்ருதாநி முஹுர்முஹு: ॥ (17)

Koviloor Digital Library

''எம்பெருமானே! கண்மணி இராமனே! அருள் நிறைந்த பார்வையால் என்னைப் பாருங்கள். குபேரனிடமிருந்து பெறப்பட்ட புஷ்பக விமானம், நான். (3)

தங்கள் ஆணைப்படி, குபேரனுக்குச் சேவை செய்வதற்காக அவர் இருப்பிடம் சென்றேன். அவர் என்னிடம் (பின்வருமாறு) கூறினார்— (4)

'மாவீரரும் திறமைமிக்க மன்னருமான இராமன், போரில் வெற்றிகொள்ள முடியாத அரக்கத் தலைவன் இராவணனைக் கொன்று, (போரில் வெற்றிபெற்றவர் என்ற முறையில்) உன்னைத் தன்வசம் ஆக்கிக் கொண்டுள்ளார். (5)

தீயவனான இராவணன், தன்னுடைய புதல்வர்கள்–உறவினர்கள்–உற்றார்களுடன் மாய்க்கப்பட்டதில் எனக்கும் மகிழ்ச்சிதான். (6)

செல்வனே! பரமாத்மாவான இராமன், இலங்கையோடு உன்னையும் சேர்த்துத்தான் வென்றிருக்கிறார். நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். நீ திரும்பிச் சென்று, அவருக்கு வாகனமாக இருப்பாயாக. (7)

ரகு குலத்திற்குப் பெருமை சேர்க்கும் இராமனை, உலகுக்கெல்லாம் புகலிடமான அவரை நீ சுமக்க வேண்டும் என்பதே என்னுடைய ஆசை. அதனால், கவலைப்படாமல் அவரிடமே செல்வாயாக.' (8)

வள்ளன்மை படைத்த செல்வச்சீமான் குபேரனின் ஆணைப்படியே தங்களிடம் வந்திருக்கிறேன். தயக்கப்படாமல் தாங்கள் என்னை ஏற்றுக்கொள்ள வேண்டும். (9)

எந்த உயிர்ப்பிராணியாலும் என்னை வெல்ல முடியாது. குபேரனின் கட்டளைப்படி, தங்களுடைய உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து, என்னுடைய மகிமையினால் எல்லா உலகங்களுக்கும் சென்று வருவேன்.'' (10)

வலிமைமிக்க இராமன், புஷ்பகம் கூறியதைக் கேட்டார். திரும்பி, தன்னிடமே வந்திருக்கும் அந்த விமானத்தைப் பார்த்துக் கூறினார்— (11)

''விமானங்களுள் மிகச்சிறந்த புஷ்பகமே! நீ தெரிவித்த விபரங்கள் உண்மை என்பதால், உன்னை வரவேற்று ஏற்றுக்கொள்கிறேன். குபேரனுக்கும் அனுகூலம் என்பதால், அவர் உன்னைத் திருப்பி அனுப்பியது குற்றமாகமாட்டாது.'' (12)

தோள்வலிமிக்க இராமன், பொரி–மலர்கள்–நறுமணப் புகை முதலியவற்றால் புஷ்பகத்தை வழிபட்டார். (13)

''அன்பனே! சித்தர்கள் பாதையான ஆகாயத்திற்குச் செல்வாயாக. நான், உன்னை மனத்தால் அழைக்கும்போது வந்தால் போதும். (என்னைப் பிரிந்திருக்க வேண்டியிருக்கிறதே? என்று) துயரங்கொள்ளாதே. உன் இஷ்டப்படி எல்லாத் திசைகளிலும் செல்லலாம். உனக்கு எதிர்ப்புத் தோன்றாது. (உன்னை யாரும் தடுத்து நிறுத்த மாட்டார்கள்.)'' (14)

''சரி, அவ்வாறே ஆகட்டும்'' என்று கூறி, புஷ்பகம் இராமனுடைய ஆணையை ஏற்றது. இராமனால் கௌரவிக்கப்பட்டு விடைகொடுக்கப்பட்ட புஷ்பகம், தான் விரும்பிய திசையில் பறந்து சென்றது. (15)

பெரும் புண்ணியசாலியான புஷ்பகம், கண்பார்வையிலிருந்து மறைந்ததும், இராமனுக்கு எதிரில் கைகூப்பியவாறு நின்றுகொண்டு பரதன் கூறினான்— (16)

''மாவீரரே! தெய்வ வடிவினரான தாங்கள் ஆட்சிபுரியும் காலத்தில், மனிதரல்லாத பிற ஜடப்பொருள்கூட பேச்சுப் பேசுகின்றன. (17)

Koviloor Digital Library

அநாமயஶ்ச ஸத்த்வாநாம் ஸாக்$_3$ரோ மாஸோ க$_3$தோ ஹ்யயம் ।
ஜீர்ணாநாமபி ஸத்த்வாநாம் ம்ருத்யுர்நாயாதி ராக$_4$வ ॥
அரோக$_3$ப்ரஸவா நார்யோ வபுஷ்மந்தோ ஹி மாநவா: ॥ (18)

ஹர்ஷஶ்சாப்$_4$யதி$_4$கோ ராஜஞ்ஜநஸ்ய புரவாஸிந: ।
காலே வர்ஷதி பர்ஜந்ய: பாதயந்நம்ருதம் பய: ॥ (19)

வாதாஶ்சாபி ப்ரவாந்த்யேதே ஸ்பர்ஶயுக்தா: ஸுக$_2$ா: ஶிவா: ।
ஈத்$_3$ருஶோ நஶ்சிரம் ராஜா ப$_4$வேதி$_3$தி நரேஶ்வர ॥
கத$_2$யந்தி புரே ராஜந் பௌரஜாநபத$_3$ாஸ்தத$_2$ா ॥ (20)

ஏதா வாச: ஸுமது$_4$ரா ப$_4$ரதேந ஸமீரிதா: ।
ஶ்ருத்வா ராமோ முத$_3$ா யுக்தோ ப$_3$பூ$_4$வ ந்ருபஸத்தம: ॥ (21)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகசத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

த்$_3$விசத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

ராமஸீதாவிஹார:

ஸ விஸ்ருஜ்ய ததோ ராம: புஷ்பகம் ஹேமபூ$_4$ஷிதம் ।
ப்ரவிவேஶ மஹாப$_3$ாஹுரஶோகவநிகாம் தத$_3$ா ॥ (1)

சந்த$_3$நாக$_3$ருசூதைஶ்ச துங்க$_3$காலேயகைரபி ।
தே$_3$வத$_3$ாருவநைஶ்சாபி ஸமந்தாது$_3$பஶோபி$_4$தாம் ॥ (2)

சம்பகாஶோகபுந்நாக$_3$மதூ$_4$கபநஸாஸநை: ।
ஶோபி$_4$தாம் பாரிஜாதைஶ்ச விதூ$_4$மஜ்வலநப்ரபை$_4$: ॥ (3)

லோத்$_4$ரநீபார்ஜுநைர்நாகை$_3$: ஸப்தபர்ணாதிமுக்தகை: ।
மந்த$_3$ாரகத$_3$லீகு$_3$ல்மலதாஜாலஸமாவ்ருதாம் ॥ (4)

ப்ரியங்கு$_3$பி$_4$: கத$_3$ம்பை$_3$ஶ்ச தத$_2$ா ச ப$_3$குலைரபி ।
ஜம்பூ$_3$பி$_4$ர்தா$_3$டி$_3$மைஶ்சைவ கோவித$_3$ாரைஶ்ச ஶோபி$_4$தாம் ॥ (5)

ஸர்வத$_3$ா குஸுமை: ரம்யை: ப$_2$லவத்$_3$பி$_4$ர்மநோரமை: ।
தி$_3$வ்யக$_3$ந்த$_4$ரஸோபேதைஸ்தருணாங்குரபல்லவை: ॥ (6)

ததை$_2$வ தருபி$_4$ர்தி$_3$வ்யை: ஶில்பிபி$_4$: பரிகல்பிதை: ।
சாருபல்லவபுஷ்பாட்$_4$யைர்மத்தப்$_4$ரமரஸங்குலை: ॥ (7)

கோகிலைர்ப்$_4$ருங்க$_3$ராஜைஶ்ச நாநாவர்ணைஶ்ச பக்ஷிபி$_4$: ।
ஶோபி$_4$தாம் ஶதஶஶ்சித்ராம் சூதவ்ருக்ஷாவதம்ஸகை: ॥ (8)

ஶாதகும்ப$_4$நிப$_4$ா: கேசித் கேசித$_3$க்$_3$நிஶிகே$_2$ாபமா: ।
நீலாஞ்ஜநநிப$_4$ாஶ்சாந்யே ப$_4$ாந்தி தத்ரத்யபாத$_3$பா: ॥ (9)

Koviloor Digital Library

எம்பெருமானே! தாங்கள் முடிசூட்டிக் கொண்டு ஒரு மாதத்திற்குமேல் ஆகிவிட்டது. எந்த மக்களுக்கும் நோய் என்பது வரவில்லை; உடல் தளர்ந்து வயோதிகம் வந்துவிட்டவர்கூட மரணம் அடைவதில்லை; கருவுற்ற பெண்கள், எவ்விதத் துன்பமும் இல்லாமல் சுகமாகப் பிரசவிக்கிறார்கள்; எல்லா மக்களும் தேகபுஷ்டியுடன் இருக்கிறார்கள். (18)

வேந்தரே! நகர மாந்தர்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். மேகங்கள், உரிய காலத்தில் அமுதம் போன்ற நீரைப் பொழிகின்றன. (19)

உடலைத் தொட்டுச் செல்லும் காற்று குளிர்ச்சியாகவும் சுகமாகவும் இருக்கிறது. (இவற்றுக்கெல்லாம் காரணமான நல்லாட்சி புரியும்) இம்மாதிரியான மன்னர் நீண்டகாலம் அரசு செலுத்த வேண்டும் என்று, நகர மக்களும் புறநகர் மக்களும் பேசிக் கொள்கிறார்கள்.'' (20)

இவ்வாறு மிகவும் இனிமையாக பரதன் கூறியதைக் கேட்ட இராமன், மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நாற்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்திரண்டு

பூங்காவில் சீதா–ராமர்கள்

பொன்னால் அலங்கரிக்கப்பட்ட புஷ்பக விமானத்திற்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு, (அந்தப்புரத்தின் உள்ளே அமைந்திருந்த பூம்பொழிலான) அசோகவனத்திற்குள் நுழைந்தார், இராமன். (1)

சந்தனம், அகரு, மா, புன்னாகம், செஞ்சந்தனம், தேவதாரு முதலிய மரங்கள் கூட்டங்கூட்டமாகக் காணப்பட்டன. (2)

சம்பகம், அசோகம், புன்னை, மகிழம், பலா, அஸனம் மற்றும் புகையில்லாமல் எரியும் நெருப்பைப் போல் பிரகாசிக்கும் பாரிஜாதம் முதலிய அழகு செய்கின்றவையும்; (3)

லோத்ரம், கடம்பு, மருதம், நாககேஸரம், ஏழிலைப் பாலை, அதிமுக்தம், மந்தாரை, வாழை மற்றும் பல்வகையான புதர்களும் கொடிகளும் மண்டியவையும்; (4)

பிரியங்கு, கதம்பம், மகிழம், நாவல், மாதுளை, கோவிதாரம் முதலியன விளங்குவதும்; (5)

எப்போதும் மலர்–பழங்கள் அளிப்பனவும்; சுவைமிக்க, மணம் மிகுந்த, புதிய இளந்தளிர்களை உடைய மரங்கள் நிறைந்ததும்; (6)

தாவரக்கலை வல்லுநர்களான தோட்டக் கலைஞர்களால் உருவாக்கப்பட்டதும்; அழகிய இளந்தளிர் மலர்கள் உடையவையுமான மரங்களைச் சுற்றி மதங்கொண்ட வண்டுகள் சுற்றி வருவதும்; (7)

குயில்கள், பிருங்கராஜம் முதலிய பல்வண்ணமுடைய நூற்றுக்கணக்கான பறவைகள் மாமரங்களின் கிளை நுனிகளில் உட்கார்ந்து கொண்டும், அற்புதமான ஒலிகளை எழுப்பிக் கொண்டிருப்பதுமான (பூம்பொழிலுக்குள் பிரவேசித்தார், ரகுநந்தனன்.) (8)

அங்கிருந்த மரங்களில் சில பொன்னிறமாகவும், சில நெருப்புக் கொழுந்து போன்ற நிறத்திலும் மற்றும் சில மரங்கள் கண்மை போல் கருப்பாகவும் விளங்கின. (9)

Koviloor Digital Library

ஸுரபீ4ணி ச புஷ்பாணி மால்யாநி விவிதா4நி ச ।
தீ3ர்கி4கா விவிதா4காரா: பூர்ணா: பரமவாரிணா ॥ (10)

மாணிக்யவ்ருதஸோபாநா: ஸ்ப2டிகாந்தரகுட்டிமா: ।
பு2ல்லபத்3மோத்பலவநாஶ்சக்ரவாகோபஶோபி4தா: ॥ (11)

தா3த்யூஹஶுகஸங்கு4ஷ்டா ஹம்ஸஸாரஸநாதி3தா: ।
தருபி4: புஷ்பவத்3பி4ஶ்ச தீரஜைருபஶோபி4தா: ॥ (12)

ப்ராகாரைர்விவிதா4காரை: ஶோபி4தாஶ்ச ஶிலாதலை: ।
தத்ரைவ ச வநோத்3தே3ஶே வைதூ3ர்யமணிஸந்நிபை4: ॥
ஶாத்3வலை: பரமோபேதாம் புஷ்பிதத்3ருமகாநநாம் ॥ (13)

தத்ர ஸங்க4ர்ஷஜாதாநாம் வ்ருக்ஷாணாம் புஷ்பஶாலிநாம் ।
ப்ரஸ்தரா: புஷ்பஶப3லா நப4ஸ்தாராக3ணைரிவ ॥ (14)

நந்த3நம் ஹி யதே2ந்த்3ரஸ்ய ப்3ராஹ்மம் சைத்ரரத2ம் யதா2 ।
ததா2பூ4தம் ஹி ராமஸ்ய காநநம் ஸந்நிவேஶநம் ॥ (15)

ப3ஹ்வாஸநக்3ருஹோபேதாம் லதாக்3ருஹஸமாவ்ருதாம் ।
அஶோகவநிகாம் ஸ்பீ2தாம் ப்ரவிஶ்ய ரகு4நந்த3ந: ॥ (16)

ஆஸநே ச ஶுபா4காரே புஷ்பப்ரகரபூ4ஷிதே ।
குதா2ஸ்தரணஸம்வீதே ராம: ஸந்நிஷஸாத3 ஹ ॥ (17)

ஸீதாமாதா3ய ஹஸ்தேந மது4 மைரேயகம் ஶுசி ।
பாயயாமாஸ காகுத்ஸ்த2: ஶசீமிவ புரந்த3ர: ॥ (18)

மாம்ஸாநி ச ஸும்ருஷ்டாநி ப2லாநி விவிதா4நி ச ।
ராமஸ்யாப்4யவஹாரார்த2ம் கிங்கராஸ்தூர்ணமாஹரந் ॥ (19)

உபாந்ருத்யம்ஶ்ச ராஜாநம் ந்ருத்தகீ3தவிஶாரதா3: ।
பா3லாஶ்ச ரூபவத்யஶ்ச ஸ்த்ரிய: பாநவஶாநுகா3: ॥
உபாந்ருத்யந்த காகுத்ஸ்த2ம் ந்ருத்யகீ3தவிஶாரதா3: ॥ (20)

மநோऽபி4ராமா ராமாஸ்தா ராமோ ரமயதாம் வர: ।
ரமயாமாஸ த4ர்மாத்மா நித்யம் பரமபூ4ஷித: ॥ (21)

ஸ தயா ஸீதயா ஸார்த4மாஸீநோ விரராஜ ஹ ।
அருந்த4த்யா ஸஹாஸீநோ வஸிஷ்ட2 இவ தேஜஸா ॥ (22)

ஏவம் ராமோ முதா3 யுக்த: ஸீதாம் ஸுரஸுதோபமாம் ।
ரமயாமாஸ வைதே3ஹீமஹந்யஹநி தே3வவத் ॥ (23)

Koviloor Digital Library

அங்கே, அநேக வகையான மணமுள்ள மலர்களும், மலர்க்கொத்துக்களும் காணப்பட்டன. தூய நீர் நிறைந்த பல வடிவமைப்புக் கொண்ட சிறு நீர்நிலைகளும் இருந்தன. (10)

அந்த நீர்நிலைகளின் படிக்கட்டுகள் மாணிக்கத்தினால் கட்டப்பட்டிருந்தன; குளத்தில் இறங்கி நீராடுவதற்கு வசதியாக, தரையில் சிறிதுதூரத்திற்குப் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன; அந்த நீர்நிலைகளில் மலர்ந்த தாமரைகளும் ஆம்பல் மலர்களும் நிறைந்திருந்தன; சக்ரவாகப் பட்சிகள் அவ்விடத்தின் அழகைப் பெருக்கிக் கொண்டிருந்தன; (11)

குயில்களும் கிளிகளும் அங்கே இனிய குரல் எழுப்பிக் கொண்டிருந்தன; அன்னம், ஸாரஸம் போன்ற பறவைகள் கூவிக்கொண்டிருந்தன; கரையோரங்களில் வளர்ந்திருந்த மரங்களில் மலர்கள் பூத்துக் குலுங்கி அழகாக விளங்கின; (12)

பல வடிவங்களில் மதிற்சுவர்கள், கல்மேடைகள் இருந்தன; புல்தரைகளில், வைடூர்யம் போல் பசுமையாகப் பிரகாசிக்கும் புற்கள் மண்டியிருந்தன; காடு போல் அடர்ந்த மரங்களில் மலர்கள் பூத்திருந்தன. (13)

அங்கிருந்த மரங்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு, கொத்துக் கொத்தாக மலர்ந்து கருமையான தரையில் உதிர்ந்திருந்த காட்சி, ஆகாயத்தில் தாரகைகள் விளங்குவதைப் போல் கண்கவர்வதாக இருந்தது. (14)

இந்திரனுடைய நந்தனம் போலும், குபேரனுக்காகப் பிரும்மா அமைத்துக் கொடுத்த சைத்ரரதம் போலும், அழகிய கட்டடங்களுடன்கூட இராமனுடைய உல்லாசப் பூங்கா விளங்கிற்று. (15)

அநேக இருக்கைகள் கொண்ட மண்டபங்கள், கொடிகளால் சூழப்பட்ட இடங்களுடன் விளங்கிய செழுமையான அந்த அசோகவனத்தில் நுழைந்து, அழகான வடிவம் கொண்டதும் மலர்கள் தூவப்பெற்றதும் விரிப்பு போடப்பட்டிருந்ததுமான ஓர் ஆசனத்தில் இராமன் அமர்ந்து கொண்டார். (16,17)

தேவேந்திரன், தன் கையால் இந்திராணிக்கு அமுதத்தை எடுத்துக் கொடுப்பதைப் போல, இராமன், தன் கையால் சீதைக்கு இனிய பானங்களை எடுத்துக் கொடுத்தார். (18)

அப்போது, இராமன் உண்பதற்காக அரச போகத்திற்குரிய உயர்வகை உணவுகளையும், பல்வகைப் பழங்களையும் (பணியாளர்கள்) வெகுவிரைவில் கொண்டு வந்தார்கள். (19)

பானங்களை அருந்தி மதங்கொண்ட நிலையிலிருந்த அழகிய, இசை–நடன வல்லுநர்களான இளமங்கையர் ஆடிப்பாடி அரசனை மகிழ்வித்தார்கள். பிறருடைய மனத்திற்கு ஆனந்தத்தைக் கொடுப்பவர்களுள் தலைசிறந்தவரான இராமன், எப்போதும் நல்லாடை–அணிகலன்களுடன் விளங்கும் அந்தப் பெண்களுக்கு பரிசுகள் வழங்கி ஆனந்தப்படுத்தினார். (20,21)

சீதாப்பிராட்டியாருடன் வீற்றிருந்த இராமன், அருந்ததியுடன்கூட வீற்றிருக்கும் வசிஷ்டரைப் போல் ஒளியுடன் பிரகாசித்தார். (22)

இவ்வாறாக, இராமன் நாள்தோறும் அமரலோக தேவனைப் போல் மகிழ்ச்சியில் திளைத்து, தேவமகள் போன்ற ஜனககுமாரியையும் மகிழ்ச்சியில் ஆழ்த்திக் கொண்டிருந்தார். (23)

Koviloor Digital Library

தத$_2$ா தயோர்விஹரதோ: ஸீதாராக$_4$வயோஶ்சிரம் ।
அத்யக்ராமச்சு$_2$ப$_4$: கால: ஶிஶிரோ பே$_4$ாக$_3$த$_3$: ஸத$_3$ா ॥
ப்ராப்தயோர்விவித$_4$ாந் பே$_4$ாக$_3$ாநதீத: ஶிஶிராக$_3$ம: ॥ (24)

பூர்வாஹ்ணே த$_4$ர்மகார்யாணி க்ருத்வா த$_4$ர்மேண த$_4$ர்மவித் ।
ஶேஷம் தி$_3$வஸப$_4$ாக$_3$ார்த$_4$மந்த:புரக$_3$தோ஽ப$_4$வத் ॥ (25)

ஸீதாபி தே$_3$வகார்யாணி க்ருத்வா பௌர்வாஹ்ணிகாநி வை ।
ஶ்வஶ்ரூணாமகரோத் பூஜாம் ஸர்வாஸாமவிஶேஷத: ॥ (26)

அப்$_4$யக$_3$ச்ச$_2$த்ததோ ராமம் விசித்ராப$_4$ரணாம்ப$_3$ரா ।
த்ரிவிஷ்டபே ஸஹஸ்ராக்ஷமுபவிஷ்டம் யத$_2$ா ஶசீ ॥ (27)

த்$_3$ருஷ்ட்வா து ராக$_4$வ: பத்நீம் கல்யாணேந ஸமந்விதாம் ।
ப்ரஹர்ஷமதுலம் லேபே$_4$ ஸாது$_4$ ஸாத்$_4$விதி சாப்$_3$ரவீத் ॥ (28)

அப்$_3$ரவீச்ச வராரோஹாம் ஸீதாம் ஸுரஸுதோபமாம் ।
அபத்யலாபே$_4$ா வைதே$_3$ஹீ த்வயி மே ஸமுபஸ்தி$_2$த: ॥
கிமிச்ச$_2$ஸி வராரோஹே காம: கிம் க்ரியதாம் தவ ॥ (29)

ஸ்மிதம் க்ருத்வா து வைதே$_3$ஹீ ராமம் வாக்யமத$_2$ாப்$_3$ரவீத் ।
தபோவநாநி புண்யாநி த்$_3$ரஷ்டுமிச்ச$_2$ாமி ராக$_4$வ ॥ (30)

க$_3$ங்க$_3$ாதீரோபவிஷ்டாநாம்ருஷீணாமுக்$_3$ரதேஜஸாம் ।
ப$_2$லமூலாஶிநாம் தே$_3$வ பாத$_3$மூலேஷு வர்திதும் ॥ (31)

ஏஷ மே பரம: காமோ யந்மூலப$_2$லபே$_4$ாஜிநாம் ।
அப்யேகராத்ரம் காகுத்ஸ்த$_2$ நிவஸேயம் தபோவநே ॥ (32)

ததே$_2$தி ச ப்ரதிக்ஞாதம் ராமேணாக்லிஷ்டகர்மணா ।
விஸ்ரப்$_3$த$_4$ா ப$_4$வ வைதே$_3$ஹி ஶ்வோ க$_3$மிஷ்யஸ்யஸம்ஶயம் ॥ (33)

ஏவமுக்த்வா து காகுத்ஸ்தே$_2$ா மைதி$_2$லீம் ஜநகாத்மஜாம் ।
மத்$_4$யகக்ஷ்யாந்தரம் ராமோ நிர்ஜக$_3$ாம ஸுஹ்ருத்$_3$வ்ருத: ॥ (34)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்$_3$விசத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

த்ரிசத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

ப$_4$த்$_3$ரவாக்யஶ்ரவணம்

தத்ரோபவிஷ்டம் ராஜாநமுபாஸந்தே விசக்ஷணா: ।
கத$_2$ாநாம் ப$_3$ஹுரூபாணாம் ஹாஸ்யகாரா: ஸமந்தத: ॥ (1)

விஜயோ மது$_4$மத்தஶ்ச காஶ்யப: பிங்க$_3$ள: குல: ।
ஸுராஜி: காளியோ ப$_4$த்$_3$ரோ த$_3$ந்தவக்த்ர: ஸுமாக$_3$த$_4$: ॥ (2)

Koviloor Digital Library

இவ்வாறு, சீதையும் இராகவனும் இன்பத்தில் திளைத்துக் கொண்டிருக்க, இன்பம் அளிக்கும் (மனத்திற்கு) விருப்பமான, அழகான இளவேனீர் காலம் கழிந்தது. (24)

அறம் அறிந்தவரான இராமன், பகலின் முற்பகுதியில் அறக்கடமைகளை ஆற்றிவிட்டு, பின்பாதியை அந்தப்புரத்தில் கழித்தார். (25)

சீதையும், பகல்வேளையின் முற்பகுதியில் தெய்வ வழிபாடுகளைச் செய்துவிட்டு, மாமியார்கள் எல்லோருக்கும் சமமான முறையில் பணிவிடை செய்து போற்றினாள். (26)

பின்னர், அவள் கண்கவர் அணிகலன்களை அணிந்து கொண்டு, தேவலோகத்தில் வீற்றிருக்கும் இந்திரன் அருகே இந்திராணிதேவி செல்வதைப் போல, இராமன் அருகே சென்றாள். (27)

அப்படி ஒரு நாளில், தன் மனைவி கருவுற்றிருக்கும் மங்கல அடையாளங்களைக் கண்ட இராமன், ''ஓ! அப்படியா!'' என்று, எல்லையில்லா உவகையுடன் சொன்னார். (28)

தேவமகள் போன்று சிறந்த லட்சணங்களைக் கொண்ட சீதையைப் பார்த்து, ''தேவி! உன் வயிற்றிலிருந்து சந்ததியைப் பெறும் நற்காலம் இப்போது வந்திருக்கிறது. சுந்தரி! உனக்கு என்ன வேண்டும், சொல். நான், உன் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறேன்.'' (29)

இதைக் கேட்டதும், சற்றே புன்னகைத்து சீதை கூறினாள்— ''ரகு குலப் பெருந்தகையே! முனிவர்கள் வாழும் புனிதம் நிறைந்த தபோவனங்களை ஒரு தடவை பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். கங்கைக் கரையில் இருந்து கொண்டு கனி–கிழங்குகளைப் புசித்து, கடுந்தவமியற்றும் ஆன்ம ஒளிமிக்க முனிவர்களுடன் இருக்க விழைகிறேன். கனி–கிழங்குகளை உண்டு வாழும் மகாத்மாக்களின் தபோவனத்தில் ஓர் இரவாவது தங்க வேண்டும் என்பது என் ஆசை.'' (30–32)

அரும்பெரும் செயல்களையும் எளிதாகச் செய்து முடிக்கும் இராமன், ''கவலைப்படாதே, அவ்வாறே செய்யலாம்; நாளைக் காலையில், நீ, நிச்சயமாகக் காட்டுக்குப் போவாய்'' என்று வைதேகிக்கு வாக்குறுதி அளித்தார். (33)

இவ்வாறு மைதிலியிடம் கூறிவிட்டு, காகுத்தராமன் எழுந்து, நடுக்கட்டைத் தாண்டி, நண்பர்கள் புடைசூழச் சென்றார். (34)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நாற்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து மூன்று

பத்ரன் கூறியது

நிகழ்வுகளைப் பலவிதமாகப் புனைந்து நகைச்சுவையுடன் கூறுவதில் வல்லவர்களான விஜயன், மதுமத்தன், காசியபன், பிங்கலன், குலன், சுராஜி, காளியன், பத்ரன், தந்தவக்த்ரன், சுமாகதன் முதலியவர்கள் ஆசனத்தில் அமர்ந்திருந்த இராமனைச் சுற்றிலும் அமர்ந்து கொண்டார்கள். (1,2)

Koviloor Digital Library

ஏதே கத$_2$ா ப$_3$ஹுவித$_4$ா: பரிஹாஸஸமந்விதா: ।
கத$_2$யந்தி ஸ்ம ஸம்ஹ்ருஷ்டா ராக$_4$வஸ்ய மஹாத்மந: ॥ (3)

தத: கத$_2$ாயாம் கஸ்யாம்சித்$_3$ராக$_4$வ: ஸமப$_4$ாஷத ।
கா: கத$_2$ா நக$_3$ரே ப$_4$த்$_3$ர வர்தந்தே விஷயேஷு ச ॥ (4)

மாமாஶ்ரிதாநி காந்யாஹு: பௌரஜாநபத$_3$ா ஜநா: ।
கிம் ச ஸீதாம் ஸமாஶ்ரித்ய ப$_4$ரதம் கிம் ச லக்ஷ்மணம் ॥ (5)

கிம் நு ஶத்ருக்$_4$நமுத்$_3$தி$_3$ஶ்ய கைகேயீம் கிம் நு மாதரம் ।
வக்தவ்யதாம் ச ராஜாநோ நவே ராஜ்யே வ்ரஜந்தி ச ॥ (6)

ஏவமுக்தே து ராமேண ப$_4$த்$_3$ர: ப்ராஞ்ஜலிரப்$_3$ரவீத் ।
ஸ்தி$_2$தா: கத$_2$ா: ஶுப$_4$ா ராஜந் வர்தந்தே புரவாஸிநாம் ॥ (7)

அமும் து விஜயம் ஸௌம்ய த$_3$ஶக்$_3$ரீவவத$_4$ார்ஜிதம் ।
பூ$_4$யிஷ்ட$_2$ம் ஸ்வபுரே பௌரை: கத்$_2$யந்தே புருஷர்ஷப$_4$ ॥ (8)

ஏவமுக்தஸ்து ப$_4$த்$_3$ரேண ராக$_4$வோ வாக்யமப்$_3$ரவீத் ।
கத$_2$யஸ்வ யத$_2$ாதத்த்வம் ஸர்வம் நிரவஶேஷத: ॥ (9)

ஶுப$_4$ாஶுப$_4$ாநி வாக்யாநி யாந்யாஹு: புரவாஸிந: ।
ஶ்ருத்வேத$_3$ாநீம் ஶுப$_4$ம் குர்யாம் ந குர்யாமஶுப$_4$ாநி ச ॥ (10)

கத$_2$யஸ்வ ச விஸ்ரப்$_3$தே$_4$ா நிர்ப$_4$யம் விக$_3$தஜ்வர: ।
கத$_2$யந்தி யத$_2$ா பௌரா: பாபா ஜநபதே$_3$ஷு ச ॥ (11)

ராக$_4$வேணைவமுக்தஸ்து ப$_4$த்$_3$ர: ஸுருசிரம் வச: ।
ப்ரத்யுவாச மஹாப$_3$ாஹும் ப்ராஞ்ஜலி: ஸுஸமாஹித: ॥ (12)

ஶ்ருணு ராஜந் யத$_2$ா பௌரா: கத$_2$யந்தி ஶுப$_4$ாஶுப$_4$ம் ।
சத்வராபணரத்$_2$யாஸு வநேஷூபவநேஷு ச ॥ (13)

து$_3$ஷ்கரம் க்ருதவாந் ராம: ஸமுத்$_3$ரே ஸேதுப$_3$ந்த$_4$நம் ।
அஶ்ருதம் பூர்வகை: கைஶ்சித்$_3$தே$_3$வைரபி ஸத$_3$ாநவை: ॥ (14)

ராவணஶ்ச து$_3$ராத$_4$ர்ஷோ ஹத: ஸப$_3$லவாஹந: ।
வாநராஶ்ச வஶம் நீதா ருக்ஷாஶ்ச ஸஹ ராக்ஷஸை: ॥ (15)

ஹத்வா ச ராவணம் ஸங்க்$_2$யே ஸீதாமாஹ்ருத்ய ராக$_4$வ: ।
அமர்ஷம் ப்ருஷ்ட$_2$த: க்ருத்வா ஸ்வவேஶ்ம புநராநயத் ॥ (16)

கீத்$_3$ருஶம் ஹ்ருத$_3$யே தஸ்ய ஸீதாஸம்பே$_4$ாக$_3$ஜம் ஸுக$_2$ம் ।
அங்கமாரோப்ய து புரா ராவணேந ப$_3$லாத்$_3$த்$_4$ருதாம் ॥ (17)

லங்காமபி புரா நீதாமஶோகவநிகாம் க$_3$தாம் ।
ரக்ஷஸாம் வஶமாபந்நாம் கத$_2$ம் ராமோ ந குத்ஸ்யதி ॥ (18)

Koviloor Digital Library

இவர்கள் எல்லோரும் மனம் நிறைந்தவர்களாக, மகாத்மா இராமன் எதிரில் பலவகையான விநோதச் செய்திகளை நகைச்சுவையுடன் விளக்கிக் கொண்டிருந்தார்கள். (3)

ஒரு செய்தி விளக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது, இராமன் இடைமறித்து, ''பத்ரா! நாட்டிலும் நகரத்திலும் பரவலாக இப்போது பேசப்படும் விஷயம் என்ன?'' என்று கேட்டார். (4)

''பட்டணத்திலும் புறநகர்ப் பகுதிகளிலும் என்னைப் பற்றியும், சீதை–பரதன்–லட்சுமணன்–சத்ருக்னன் மற்றும் தாயார் கைகேயியைப் பற்றியும் மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்? அதைக் கூறு. ஏனென்றால், அறம் நழுவிய மன்னர்கள் காட்டிலும் நாட்டிலும் இகழ்ச்சியை அடைகிறார்கள்.'' (5,6)

இவ்வாறு, இராமன் கூறியதும், பத்ரன் எழுந்து கைகூப்பிக் கொண்டு, ''மன்னரே! நகர மக்கள் தங்களைப் பற்றி உயர்வாகப் பேசி வருகிறார்கள்'' என்று கூறினான். (7)

''எம்பெருமானே! புருஷோத்தமரே! இராவணனைக் கொன்று, தாங்கள் பெற்ற வெற்றியைக் குறித்து, நகர மக்கள் விஸ்தாரமாகப் பேசி வருகிறார்கள்.'' (8)

பத்ரன் இவ்வாறு கூறியதும், ''முழுமையான விபரங்களையும் உள்ளது உள்ளபடியே கூறுவாயாக. நகரமக்கள் கூறும் நற்கருத்துக்களை ஏற்று, அந்த நற்செயல்களைத் தொடர்ந்து செய்வேன். நல்லவை அல்ல என்று மக்கள் கருதும் செயல்களை இனி செய்யாதிருப்பேன்'' என்று இராமன் கூறினார். (9,10)

''சஞ்சலப்படாமல், பயப்படாமல், கவலையை விட்டு நகர–நகர்ப்புற குடிமக்கள் என்னைப் பற்றி என்ன குற்றம் குறை கூறுகிறார்கள்? என்பதைச் சொல்வாயாக.'' (11)

இவ்வாறு, தெளிவாக இராமன் கேட்டவுடன், பத்ரன் மனத்தை ஒருமுகப்படுத்தி, கைகளைக் கூப்பிக் கொண்டு, பெருந்தோளரான இராமனிடம் (பின்வருமாறு) கூறினான்— (12)

''வேந்தரே! கேளுங்கள், நகரமக்கள் நாற்சந்திகளிலும் கடைத்தெருக்களிலும் சாலைகளிலும் தோட்டம்–துரவுகளிலும் தங்களைப் பற்றிப் பேசும் புகழ்ச்சியும் இகழ்ச்சியுமான சொற்களைக் கூறுகிறேன், கேளுங்கள். (13)

'பெருங்கடலில், இராமன் பாலம் கட்டினாரே, ஆகா! எவ்வளவு அரிய பெரிய செயல்! இதற்கு முன் தேவ–தானவர்களாலும்கூட இப்படிப்பட்ட மகத்தான செயல் செய்யப்பட்டதாக கேள்விப்பட்டதுகூட இல்லை! (14)

எதிர்த்து வெற்றி கொள்ள முடியாத இராவணன், படைவீரர்கள்–வாகனங்களுடன் கொல்லப்பட்டான். அரக்க–வானர–கரடிகள், இராமன் வசப்பட்டார்கள். (15)

இராகவன் போரில் இராவணனை வென்று, சீதையைக் கொண்டு வந்து – அவளை, இராவணன் தொட்டுத் தூக்கினான் என்பதை மனத்தில் கொள்ளாமல் – தன் மாளிகைக்கு மீண்டும் அழைத்து வந்தார். (இது, குற்றமல்லவா?) (16)

முன்னர், இராவணன் பலவந்தமாகக் கைப்பற்றித் தன் மடியில் வைத்துக் கொண்ட சீதையுடன் உறவு கொள்வதில், அவருக்கு எப்படித்தான் ஆனந்தம் ஏற்படுமோ? (17)

அவளை இலங்கைக்குக் கொண்டு சென்றான், இராவணன். பின், உல்லாசப் பூங்காவான அசோகவனத்தில் வெகு நாட்கள் வைத்திருந்தான். இவ்வாறு, அரக்கர் பிடியில் சிக்கியிருந்த அவளிடம், இராமன் வெறுப்புக் காட்டவில்லையே? (18)

Koviloor Digital Library

அஸ்மாகமபி த$_3$ாரேஷு ஸஹநீயம் ப$_4$விஷ்யதி ।
யத$_2$ா ஹி குருதே ராஜா ப்ரஜா தமநுவர்ததே ॥ (19)

ஏவம் ப$_3$ஹுவித$_4$ா வாசோ வத$_3$ந்தி புரவாஸிந: ।
நக$_3$ரேஷு ச ஸர்வேஷு ராஜஞ்ஜநபதே$_3$ஷு ச ॥ (20)

தஸ்யைவம் ப$_4$ாஷிதம் ஶ்ருத்வா ராக$_4$வ: பரமார்தவத் ।
உவாச ஸுஹ்ருத$_3$: ஸர்வாந் கத$_2$மேதத்$_3$ப்$_3$ரவீத$_2$ மாம் ॥ (21)

ஸர்வே து ஶிரஸா பூ$_4$மாவபி$_4$வாத்$_3$ய ப்ரணம்ய ச ।
ப்ரத்யூசு ராக$_4$வம் தீ$_3$நமேவமேதந்ந ஸம்ஶய: ॥ (22)

ஶ்ருத்வா து வாக்யம் காகுத்ஸ்த$_2$: ஸர்வேஷாம் ஸமுதீ$_3$ரிதம் ।
விஸர்ஜயாமாஸ ததா வயஸ்யாந் ஶத்ருஸூதந: ॥ (23)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்ரிசத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

சதுஶ்சத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

லக்ஷ்மணாத்$_3$யாநயநம்

விஸ்ருஜ்ய து ஸுஹ்ருத்$_3$வர்க$_3$ம் பு$_3$த்$_3$த்$_4$யா நிஶ்சித்ய ராக$_4$வ: ।
ஸமீபே த்$_3$வா:ஸ்த$_2$மாஸீநமித$_3$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (1)

ஶீக்$_4$ரமாநய ஸௌமித்ரிம் லக்ஷ்மணம் ஶுப$_4$லக்ஷணம் ।
ப$_4$ரதம் ச மஹாபா$_4$க$_3$ம் ஶத்ருக்$_4$நமபராஜிதம் ॥ (2)

ராமஸ்ய வசநம் ஶ்ருத்வா த்$_3$வா:ஸ்தே$_2$ா மூர்த்$_4$நி க்ருதாஞ்ஜலி: ।
லக்ஷ்மணஸ்ய க்$_3$ருஹம் க$_3$த்வா ப்ரவிவேஶாநிவாரித: ॥ (3)

உவாச ஸுமஹாத்மாநம் வர்த$_4$யித்வா க்ருதாஞ்ஜலி: ।
த்$_3$ரஷ்டுமிச்ச$_2$தி ராஜா த்வாம் க$_3$ம்யதாம் தத்ர மா சிரம் ॥ (4)

ப$_3$ாட$_4$மித்யேவ ஸௌமித்ரி: ஶ்ருத்வா ராக$_4$வஶாஸநம் ।
ப்ராத்$_3$ரவத்$_3$ரத$_2$மாருஹ்ய ராக$_4$வஸ்ய நிவேஶநம் ॥ (5)

ப்ரயாந்தம் லக்ஷ்மணம் த்$_3$ருஷ்ட்வா த்$_3$வா:ஸ்தே$_2$ா ப$_4$ரதமந்திகாத் ।
உவாச ப$_4$ரதம் தத்ர வர்த$_4$யித்வா க்ருதாஞ்ஜலி: ॥ (6)

விநயாவநதோ பூ$_4$த்வா ராஜா த்வாம் த்$_3$ரஷ்டுமிச்ச$_2$தி ।
ப$_4$ரதஸ்து வச: ஶ்ருத்வா த்$_3$வா:ஸ்த$_2$ாத்$_3$ராமஸமீரிதம் ॥
உத்பபாதாஸநாத்தூர்ணம் பத்$_3$ப்$_4$யாமேவ யயௌ ப$_3$லீ ॥ (7)

Koviloor Digital Library

இனிமேல், எங்கள் மனைவிகளுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால், நாங்களும் பொறுத்துக் கொள்ள வேண்டியதுதான். ஏனென்றால், மன்னர் எவ்வாறோ அவ்வாறே மக்கள்!' (19)

வேந்தரே! பட்டணத்து மக்கள், நகர்ப்புற மக்கள் எல்லோரும் இவ்வாறெல்லாம் பலவிதமாகப் பேசிக் கொள்கிறார்கள்.'' (20)

பத்ரன் கூறியதைக் கேட்ட இராமன், மிகவும் துக்கமடைந்து, நண்பர்களைப் பார்த்து, ''இது சரியா, இல்லையா? என்று எனக்குக் கூறுங்கள்'' என்றார். (21)

எல்லோரும் தரையில் விழுந்து வணங்கி, தாழ்ந்த குரலில், ''பத்ரன் கூறியது சரியே; சந்தேகத்திற்கு இடமேயில்லை'' என்றார்கள். (22)

எதிரிகளை மாய்க்கும் இராமன், அவர்கள் எல்லோரும் கூறியதைக் கேட்ட பின்னர், நண்பர்களுக்கு விடைகொடுத்து அனுப்பினார். (23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நாற்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்து நான்கு

இலக்குவன் முதலியோரை அழைப்பித்தல்

நண்பர்களை அனுப்பிவிட்டு, இராமன் (பத்ரன் கூறிய செய்திகளை நன்றாக ஆலோசித்து) ஒரு முடிவுக்கு வந்து, அருகிலிருந்த வாயிற்காப்போனிடம் கூறினார்— (1)

''சுமித்திரையின் குமாரனும் அங்கலட்சணம் பொருந்தியவனுமான லட்சுமணனையும், பெரும்பேறு பெற்றவனான பரதனையும், பிறரால் வெல்ல முடியாத சத்ருக்னனையும் உடனே அழைத்து வா.'' (2)

இராமனுடைய சொற்களைக் கேட்டபின் தலைகுனிந்து வணங்கிக் கும்பிட்டுவிட்டு, இலக்குவனுடைய வீட்டிற்குச் சென்று எவ்விதத் தடையுமின்றி உள்ளே நுழைந்தான். (3)

பேரறிஞனான லட்சுமணனைக் கண்டவுடன் கைகுவித்து வாழ்த்துக் கூறி, ''மன்னர் தங்களைப் பார்க்க விரும்புகிறார்; வாருங்கள், உடனே செல்லலாம்'' என்றான். (4)

இராகவனின் ஆணையைக் கேட்ட லட்சுமணன், ''சரி'' என்று சொல்லிவிட்டு, இராமனுடைய மாளிகை நோக்கித் தேரில் பறந்து சென்றான். (5)

லட்சுமணன் புறப்பட்டுச் சென்றபின் வாயிற்காப்போன், பரதனிடம் சென்று கைகூப்பி வாழ்த்துக் கூறிவிட்டுப் புகன்றான். (6)

வணக்கத்துடன், ''அரசர் தங்களைக் காண விரும்புகிறார்'' என்றான். வாயிற்காப்போனின் சொற்களைக் கேட்ட பலசாலியான பரதன், ஆசனத்திலிருந்து உடனே குதித்தெழுந்து காலால் நடந்தே சென்றான். (7)

Koviloor Digital Library

த்$_3$ருஷ்ட்வா ப்ரயாந்தம் ப$_4$ரதம் த்வரமாண: க்ருதாஞ்ஜலி: ।
ஶத்ருக்$_4$நப$_4$வநம் க$_3$த்வா ததோ வாக்யமுவாச ஹ ॥ (8)

ஏஹ்யாக$_3$ச்ச$_2$ ரகு$_4$ஶ்ரேஷ்ட$_2$ ராஜா த்வாம் த்$_3$ரஷ்டுமிச்ச$_2$தி ।
க$_3$தோ ஹி லக்ஷ்மண: பூர்வம் ப$_4$ரதஶ்ச மஹாயஶா: ॥ (9)

ஶ்ருத்வா து வசநம் தஸ்ய ஶத்ருக்$_4$ந: பரமாஸநாத் ।
ஶிரஸா வந்த்$_3$ய த$_4$ரணீம் ப்ரயயௌ யத்ர ராக$_4$வ: ॥ (10)

த்$_3$வா:ஸ்த$_2$ஸ்த்வாக$_3$ம்ய ராமாய ஸர்வாநேவ க்ருதாஞ்ஜலி: ।
நிவேத$_3$யாமாஸ தத$_3$ா ப்$_4$ராத்ரூந் ஸ்வாந் ஸமுபஸ்தி$_2$தாந் ॥ (11)

குமாராநாக$_3$தாஞ்ஶ்ருத்வா சிந்தாவ்யாகுலிதேந்த்$_3$ரிய: ।
அவாங்முகே$_2$ா தீ$_3$நமநா த்$_3$வா:ஸ்த$_2$ம் வசநமப்$_3$ரவீத் ॥ (12)

ப்ரவேஶய குமாராம்ஸ்த்வம் மத்ஸமீபம் த்வராந்வித: ।
ஏதேஷு ஜீவிதம் மஹ்யமேதே ப்ராணா: ப்ரியா மம ॥ (13)

ஆஜ்ஞப்தாஸ்து நரேந்த்$_3$ரேண குமாரா: ஶுக்ரதேஜஸ: ।
ப்ரஹ்வா: ப்ராஞ்ஜலயோ பூ$_4$த்வா விவிஶுஸ்தே ஸமாஹிதா: ॥ (14)

தே து த்$_3$ருஷ்ட்வா முக$_2$ம் தஸ்ய ஸக்$_3$ரஹம் ஶஶிநம் யத$_2$ா ।
ஸந்த்$_4$யாக$_3$தமிவாதி$_3$த்யம் ப்ரப$_4$யா பரிவர்ஜிதம் ॥ (15)

ப$_3$ாஷ்பபூர்ணே ச நயநே த்$_3$ருஷ்ட்வா ராமஸ்ய தீ$_4$மத: ।
ஹதஶோப$_4$ம் யத$_2$ா பத்$_3$மம் முக$_2$ம் வீக்ஷ்ய ச தஸ்ய தே ॥ (16)

ததோऽபி$_4$வாத்$_3$ய த்வரிதா: பாதௌ$_3$ ராமஸ்ய மூர்த$_4$பி$_4$: ।
தஸ்து$_2$: ஸமாஹிதா: ஸர்வே ராமஸ்த்வஶ்ரூண்யவர்தயத் ॥ (17)

தாந் பரிஷ்வஜ்ய ப$_3$ாஹுப்$_4$யாமுத்த$_2$ாப்ய ச மஹாப$_3$ல: ।
ஆஸநேஷ்வாஸதேத்யுக்த்வா ததோ வாக்யம் ஜக$_3$ாத$_3$ ஹ ॥ (18)

ப$_4$வந்தோ மம ஸர்வஸ்வம் ப$_4$வந்தோ ஜீவிதம் மம ।
ப$_4$வத்$_3$பி$_4$ஶ்ச க்ருதம் ராஜ்யம் பாலயாமி நரேஶ்வரா: ॥ (19)

ப$_4$வந்த: க்ருதஶாஸ்த்ரார்த$_2$ா பு$_3$த்$_3$த்$_4$யா ச பரிநிஷ்டி$_2$தா: ।
ஸம்பூ$_4$ய ச மத$_3$ர்தே$_2$ாऽயமந்வேஷ்டவ்யோ நரேஶ்வரா: ॥ (20)

தத$_2$ா வத$_3$தி காகுத்ஸ்தே$_2$ ஹ்யவத$_4$ாநபராயணா: ।
உத்$_3$விக்$_3$நமநஸ: ஸர்வே கிம் து ராஜாபி$_4$த$_4$ாஸ்யதி ॥ (21)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ சதுஶ்சத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

பரதன் புறப்பட்டுச் செல்வதைக் கண்ட வாயிற்காப்போன், விரைவாக சத்ருக்னன் இல்லம் சென்று, அவனைப் பார்த்துக் கைகூப்பி, ''ரகுகுலத் திலகமே! அரசர் தங்களைக் காண விரும்புகிறார். உடனே வாருங்கள்'' என்று தெரிவித்தான். ''லட்சுமணரும் பரதரும் முன்னமேயே சென்று விட்டார்கள்'' என்றும் கூறினான். (8,9)

அவன் சொல்லியவற்றைக் கேட்ட சத்ருக்னன் சிம்மாசனத்திலிருந்து உடனே எழுந்து, (இராமனை மனத்தில் தியானித்து) தரையில் விழுந்து வணங்கிவிட்டு இராமன் இருப்பிடத்திற்குச் சென்றான். (10)

இதனிடையில், வாயிற்காப்போன், இராமனிடம் வந்து கைகளைக் கூப்பிக்கொண்டு, சகோதரர்கள் வந்துவிட்டதை விண்ணப்பித்துக் கொண்டான். (11)

சகோதரர்கள் வந்திருப்பதைக் கேட்டு, கவலையால் கலங்கிய மனத்துடன் தலைகுனிந்து, மெல்லிய குரலில் வாயிற்காப்போனிடம் இராமன் கூறினார்— (12)

''அவர்களை உடனே உள்ளே அனுப்பு. என் வாழ்க்கை அவர்களிடம்தான் இருக்கிறது. அவர்கள், என் உயிர்; எனக்குப் பிரியமானவர்கள்.'' (13)

பேரொளி பொருந்திய சகோதரர்கள், மன்னரால் உத்தரவிடப்பட்டதும் வணக்கத்துடன் கைகளைக் கூப்பிக் கொண்டு, ('மன்னர் அழைத்ததன் காரணம் என்னவோ?' என்று) ஆவல் கொண்ட மனத்தினராக மண்டபத்திற்குள் பிரவேசித்தார்கள். (14)

தீய கோள்களால் சூழப்பட்ட சந்திரன் போலும், ஒளியிழந்த அந்திவேளை சூரியன் போலவும், அவர் முகம் காணப்பட்டது. (15)

பேரறிவாளரான அவர் கண்களில் கண்ணீர் நிரம்பியிருந்தது; வாடிப்போன தாமரை போல் இராமனின் முகம் சோபை இழந்திருந்ததைக் கண்டார்கள். (16)

அந்த மூவரும் இராமனுடைய திருவடிகளில் தலையை வைத்து வணங்கினார்கள். ஒருமைப்பட்ட மனத்துடன் அவர் எதிரே நின்றார்கள். அப்போதும், இராமனின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. (17)

இரு கைகளாலும் அவர்களைக் கட்டியணைத்து, திகைப்பினால் மங்கியிருந்த அவர்கள் உணர்வைத் தட்டியெழுப்பி, ''ஆசனத்தில் உட்காருங்கள்'' என்று கூறி, (அவர்கள் உட்கார்ந்ததும்) இராமன் பேசத் தொடங்கினார்— (18)

''அரசகுமாரர்களே! நீங்கள்தான் எனக்கு எல்லாச் செல்வமும்; நீங்கள்தான் என்னுடைய வாழ்க்கைக்கு ஆதாரம். உங்களால் கொடுக்கப்பட்ட ராஜ்யத்தில்தான் நான் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறேன். (19)

அரசகுமாரர்களே! நீங்கள் எல்லோரும் நீதி நூல்களைக் கற்றறிந்திருக்கிறீர்கள்; அந்த நூல்களில் கூறப்பட்டுள்ள நீதிகளைக் கடைப்பிடிக்கிறீர்கள். உங்கள் தெள்ளிய அறிவும் உறுதியாக இருக்கிறது. இப்போது, நான் கூறப்போகும் ஒரு பணியை நீங்கள் நிறைவேற்றி வைக்க வேண்டும்.'' (20)

இவ்வாறு, இராமன் கூறியதைக் கேட்டதும் அவர்கள் எச்சரிக்கை அடைந்து, தவிக்கும் உள்ளத்துடன், 'மன்னர் என்ன சொல்லப் போகிறார்?' என்று மனம் பதறினார்கள். (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நாற்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

பஞ்சசத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

ஸீதாஸமுத்ஸர்க$_3$ரதே$_3$ஶ:

தேஷாம் ஸமுபவிஷ்டாநாம் ஸர்வேஷாம் தீ$_3$நசேதஸாம் ।
உவாச வாக்யம் காகுத்ஸ்தோ$_2$ முகே$_2$ந பரிஶுஷ்யதா ॥ (1)

ஸர்வே ஶ்ருணுத ப$_4$த்$_3$ரம் வோ மா குருத்$_4$வம் மநோऽந்யதா$_2$ ।
பௌராணாம் மம ஸீதாயாம் யாத்$_3$ருஶீ வர்ததே கதா$_2$ ॥ (2)

பௌராபவாத$_3$: ஸுமஹாம்ஸ்ததா$_2$ ஜநபத$_3$ஸ்ய ச ।
வர்ததே மயி பீ$_3$ப$_4$த்ஸா ஸா மே மர்மாணி க்ருந்ததி ॥ (3)

அஹம் கில குலே ஜாத இக்ஷ்வாகூணாம் மஹாத்மநாம் ।
ஸீதாபி ஸத்குலே ஜாதா ஜநகாநாம் மஹாத்மநாம் ॥ (4)

ஜாநாஸி த்வம் யதா$_2$ ஸௌம்ய த$_3$ண்ட$_3$கே விஜநே வநே ।
ராவணேந ஹ்ருதா ஸீதா ஸ ச வித்$_4$வம்ஸிதோ மயா ॥ (5)

தத்ர மே பு$_3$த்$_3$தி$_4$ருத்பந்நா ஜநகஸ்ய ஸுதாம் ப்ரதி ।
அத்ரோஷிதாமிமாம் ஸீதாமாநயேயம் கத$_2$ம் புரீம் ॥ (6)

ப்ரத்யயார்த$_2$ம் தத: ஸீதா விவேஶ ஜ்வலநம் ததா$_3$ ।
ப்ரத்யக்ஷம் தவ ஸௌமித்ரே தே$_3$வாநாம் ஹவ்யவாஹந: ॥
அபாபாம் மைதி$_2$லீமாஹ வாயுஶ்சாகாஶகோ$_3$சர: ॥ (7)

சந்த்$_3$ராதி$_3$த்யௌ ச ஶம்ஸேதே ஸுராணாம் ஸந்நிதௌ$_4$ புரா ।
ருஷீணாம் சைவ ஸர்வேஷாமபாபாம் ஜநகாத்மஜாம் ॥ (8)

ஏவம் ஶுத்$_3$த$_4$ஸமாசாரா தே$_3$வக$_3$ந்த$_4$ர்வஸந்நிதௌ$_4$ ।
லங்காத்$_3$வீபே மஹேந்த்$_3$ரேண மம ஹஸ்தே நிவேஶிதா ॥ (9)

அந்தராத்மா ச மே வேத்தி ஸீதாம் ஶுத்$_3$தா$_4$ம் யஶஸ்விநீம் ।
ததோ க்$_3$ருஹீத்வா வைதே$_3$ஹீமயோத்$_4$யாமஹமாக$_3$த: ॥ (10)

அயம் து மே மஹாந் வாத$_3$: ஶோகஶ்ச ஹ்ருதி$_3$ வர்ததே ।
பௌராபவாத$_3$: ஸுமஹாந்ஸ்ததா$_2$ ஜநபத$_3$ஸ்ய ச ॥ (11)

அகீர்திர்யஸ்ய கீ$_3$யேத லோகே பூ$_4$தஸ்ய கஸ்யசித் ।
பதத்யேவாத$_4$மாந்(ல்)லோகாந் யாவச்ச$_2$ப்$_3$த$_3$: ப்ரகீர்த்யதே ॥ (12)

அகீர்திர்நிந்த்$_3$யதே தே$_3$வை: கீர்திர்லோகேஷு பூஜ்யதே ।
கீர்த்யர்த$_2$ம் து ஸமாரம்ப$_4$: ஸர்வேஷாம் ஸுமஹாத்மநாம் ॥ (13)

அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் யுஷ்மாந் வா புருஷர்ஷபா$_4$: ।
அபவாத$_3$ப$_4$யாத்$_3$பீ$_4$த: கிம் புநர்ஜநகாத்மஜாம் ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : நாற்பத்தைந்து

'சீதையை வனத்தில் விட்டுவிட்டு வா!'

பரிதவிக்கும் உள்ளத்துடன் அமர்ந்திருக்கும் அவர்களை நோக்கி, வற்றிப் போன முகத்துடன் இராமன் சொல்ல ஆரம்பித்தார்— (1)

''நலமே விளைக! எல்லோரும் கேளுங்கள். சிந்தனையை அலையவிடாமல் கேளுங்கள். நகர மக்கள் என்னையும் சீதையையும் பற்றி என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை சொல்லப் போகிறேன். (2)

நகர மக்களும், புறநகர் மக்களும் சீதையின்மேல் பெரிய பழியைச் சுமத்தியிருக்கிறார்கள். என்னிடம் வெறுப்புக் கொண்டுள்ளார்கள். அதனால், என் உயிர்நிலைகள் பலமாகத் தாக்கப்பட்டிருக்கின்றன. (3)

நான், மாட்சிமை பொருந்திய இக்ஷ்வாகு குலத்தில் பிறந்தவன்; சீதையும், மேன்மை தங்கிய உயர்குடியான ஜனக பரம்பரையில் தோன்றியவள். (4)

(இலக்குவனைப் பார்த்து,) அன்பனே! மக்களே இல்லாத தண்டகாரண்யத்தில், இராவணனால் சீதை கவர்ந்து செல்லப்பட்டாள் என்பதை நீ அறிவாய். அவனை, நான் கொன்று பழிதீர்த்துக் கொண்டேன். (5)

இலங்கையில் இருந்தபோதே, 'இந்த அரக்கர் நாட்டில் வெகு நாட்கள் தங்கியிருந்த சீதையை, நான் எவ்வாறு அயோத்தி நகருக்கு மீண்டும் அழைத்துச் செல்லமுடியும்?' என்று சீதை விஷயமாக எனக்கு ஒரு தயக்கம் ஏற்பட்டது. (6)

எல்லோருக்கும் நம்பிக்கை ஏற்படுவதற்காக சீதை அக்னிப்பிரவேசம் செய்தாள். லட்சுமணா! உன் எதிரில், தேவர்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, 'சீதை குற்றமற்றவள்' என்று அக்னி பகவான் கூறினார். ஆகாயத்திலிருந்து வாயுதேவனும் அவ்வாறே கூறினார். (7)

தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் மற்ற எல்லோருக்கும் எதிரில், 'ஜனகன் புதல்வி குற்றமற்றவள்' என்று சந்திர–சூரியர்கள் தெரிவித்தார்கள். (8)

தூய நடத்தையுடைய அவளை, தேவ–கந்தர்வர்கள் எதிரில், இலங்கையில் தேவேந்திரன் என் கையில் ஒப்படைத்தான். (9)

என் நெஞ்சமும், புகழ்மிக்க சீதை குற்றமற்றவள் என்று அறிந்துகொண்டது. அதனால்தான் சீதையை ஏற்றுக்கொண்டு நான் அயோத்திக்கு வந்தேன். (10)

ஆனால், நகர–நகர்ப்புற மக்கள் என்மேல் சுமத்தியிருக்கும் பெரும் பழி என்னைத் துயரத்தில் ஆழ்த்தியிருக்கிறது. (11)

யாரோ ஒருவனுக்கு இகழ்ச்சி ஏற்பட்டு, அது உலக மக்களால் பேசப்படுமானால், கீழேயுள்ள நரகம் முதலான உலகங்களுக்கு அவன் தள்ளப்படுகிறான். அந்த இகழ்ச்சி உள்ள காலம் வரை, அவன் கீழ் உலகங்களிலேயே துன்பப்பட்டுக் கொண்டிருப்பான். (12)

தேவர்கள், அபகீர்த்தி பெற்றவனை நிந்திக்கிறார்கள்; புகழ்பெற்றவன் எல்லா உலகங்களிலும் மதிக்கப்படுகிறான். மிக உயர்ந்த நிலையிலுள்ள சான்றோர்கள்கூட, நிலையான புகழைப் பெறுவதற்காக நற்செயல்களைச் செய்கிறார்கள். (13)

ஆணேறுகளே! என்மீது சுமத்தப்பட்டுள்ள அபவாதத்திற்குப் பயந்து என் உயிரையும் உங்களையும்கூடத் தியாகம் செய்துவிடுவேன் என்னும்போது, சீதையைத் தியாகம் செய்வது என்பது கஷ்டமான காரியமா, என்ன? (14)

Koviloor Digital Library

தஸ்மாத்$_3$ப$_4$வந்த: பஶ்யந்து பதிதம் ஶோகஸாக$_3$ரே ।
ந ஹி பஶ்யாம்யஹம் பூ$_4$தம் கிஞ்சித்$_3$து$_3$:க$_2$மதோऽதி$_4$கம் ॥ (15)

ஶ்வஸ்த்வம் ப்ரபா$_4$தே ஸௌமித்ரே ஸுமந்த்ராதி$_4$ஷ்டி$_2$தம் ரத$_2$ம் ।
ஆருஹ்ய ஸீதாமாரோப்ய விஷயாந்தே ஸமுத்ஸ்ருஜ ॥ (16)

க$_3$ங்கா$_3$யாஸ்து பரே பாரே வால்மீகேஸ்து மஹாத்மந: ।
ஆஶ்ரமோ தி$_3$வ்யஸங்காஶஸ்தமஸாதீரமாஶ்ரித: ॥ (17)

தத்ரைநாம் விஜநே தே$_3$ஶே விஸ்ருஜ்ய ரகு$_4$நந்த$_3$ந ।
ஶீக்$_4$ரமாக$_3$ச்ச$_2$ ப$_4$த்$_3$ரம் தே குருஷ்வ வசநம் மம ॥
ந சாஸ்மிந் ப்ரதிவக்தவ்ய: ஸீதாம் ப்ரதி கத$_2$ஞ்சந ॥ (18)

தஸ்மாத்த்வம் க$_3$ச்ச$_2$ ஸௌமித்ரே நாத்ர கார்யா விசாரணா ।
அப்ரீதிர்ஹி பரா மஹ்யம் த்வய்யேதத் ப்ரதிவாரிதே ॥ (19)

ஶாபிதா ஹி மயா யூயம் பு$_4$ஜாப்$_4$யாம் ஜீவிதேந ச ।
யே மாம் வாக்யாந்தரே ப்$_3$ரூயுரநுநேதும் கத$_2$ஞ்சந ॥ (20)

அஹிதா நாம தே நித்யம் மத$_3$பீ$_4$ஷ்டவிகா$_4$தநாத் ।
மாநயந்து ப$_4$வந்தோ மாம் யதி$_3$ மச்சா$_2$ஸநே ஸ்தி$_2$தா: ॥ (21)

இதோऽத்$_3$ய நீயதாம் ஸீதா குருஷ்வ வசநம் மம ।
பூர்வமுக்தோऽஹமநயா க$_3$ங்கா$_3$தீரேऽஹமாஶ்ரமாந் ॥
பஶ்யேயமிதி தஸ்யாஶ்ச காம: ஸம்வர்த்யதாமயம் ॥ (22)

ஏவமுக்த்வா து காகுத்ஸ்தோ$_2$ பா$_3$ஷ்பேண பிஹிதாநந: ।
ப்ரவிவேஶ ஸ த$_4$ர்மாத்மா ப்$_4$ராத்ருபி$_4$: பரிவாரித: ॥
ஶோகஸம்லக்$_3$நஹ்ருத$_3$யோ நிஶஶ்வாஸ யதா$_2$ த்$_3$விப: ॥ (23)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ பஞ்சசத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

ஷட்சத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

ஸீதாக$_3$ங்கா$_3$தீரநயநம்

ததோ ரஜந்யாம் வ்யுஷ்டாயாம் லக்ஷ்மணோ தீ$_3$நசேதந: ।
ஸுமந்த்ரமப்$_3$ரவீத்$_3$வாக்யம் முகே$_2$ந பரிஶுஷ்யதா ॥ (1)

ஸாரதே$_2$ துரகா$_3$ஞ்ஶீக்$_4$ரம் யோஜயஸ்வ ரதோ$_2$த்தமே ।
ஸ்வாஸ்தீர்ணம் ராஜப$_4$வநாத் ஸீதாயாஶ்சாஸநம் குரு ॥ (2)

ஸீதா ஹி ராஜவசநாத$_3$ஶ்ரமம் புண்யகர்மணாம் ।
மயா நேயா மஹர்ஷீணாம் ஶீக்$_4$ரமாநீயதாம் ரத$_2$: ॥ (3)

Koviloor Digital Library

சோகக் கடலில் வீழ்ந்திருக்கும் என் நிலையைப் பாருங்கள். அதைக் காட்டிலும் அதிகமான துக்கத்தை வேறு எந்தப் பிராணியும் அனுபவித்து, நான் பார்த்ததில்லை. (15)

லட்சுமணா! நாளைக் காலையில், சுமந்திரர் வசத்தில் இருக்கும் தேரில் சீதையை ஏற்றிக் கொண்டு, இந்த நாட்டின் எல்லைக்கு வெளியே விட்டுவிடு. (16)

கங்கையின் அக்கரையில் தமஸா நதியை ஒட்டினாற்போல், வால்மீகி முனிவரின் புனிதமான ஆசிரமம் இருக்கிறது. (17)

ரகுநந்தனா! மக்கள் நடமாட்டமில்லாத அந்த இடத்தில் இவளை விட்டுவிட்டு, விரைவில் திரும்பி வா. வாழ்க, நீ. என் சொற்படி நடப்பாயாக. சீதையைப் பற்றிய இந்த விஷயத்தில் யாரும் எதிர்த்துப் பேசவேண்டாம். (18)

லட்சுமணா! நீ இப்போது போகலாம். இனி, இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசிக்க வேண்டாம். நீ இந்தச் செயலைத் தடுத்து நிறுத்த முயன்றால் எனக்கு மனக்கஷ்டம் ஏற்படும். (19)

என்னுடைய தோள்கள்(வீரத்தின்) மீதும் வாழ்க்கையின் மீதும் ஆணையிட்டுக் கூறுகிறேன். என் காலில் விழுந்து பணிந்து வேண்டி நான் கூறியதை மாற்ற விரும்புபவன், என் விருப்பத்தைத் தகர்த்த குற்றத்தால், எப்போதும் என் நலனில் அக்கறை இல்லாதவனாகவே கருதப்படுவான். ஆகவே, நீங்கள் எல்லோரும் என் கட்டுப்பாட்டில் உள்ளவர்களாக இருந்தால், நான் கூறியதை ஏற்றுச் செயல்படுங்கள். (20,21)

ஆகவே, இப்போது சீதையை அழைத்துச் சென்று, என் கட்டளையை நிறைவேற்றுவாயாக. மேலும், 'கங்கைக் கரையிலுள்ள முனிவர் ஆசிரமங்களைப் பார்க்க நான் விரும்புகிறேன்' என்று பிராட்டி, என்னிடம் கூறிய விருப்பமும் நிறைவேற்றப்பட்டதாகும்.'' (22)

இவ்வாறு கூறிவிட்டு, கண்ணீர் நிரம்பிய கண்களுடன் சகோதரர்கள் புடைசூழ, துயரத்தில் மூழ்கிய நெஞ்சத்துடன், யானை போல் நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டு, தன் மாளிகைக்குள் காகுத்தன் பிரவேசித்தார். (23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நாற்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தாறு

கங்கைக் கரைக்கு சீதையை அழைத்துச் செல்வது

இரவு கழிந்ததும், மனவேதனையுடனிருந்த இலக்குவன், வற்றிப்போன முகத்துடன் சுமந்திரரைப் பார்த்துக் கூறினான்— (1)

''தேரோட்டியே! சிறந்ததான ஒரு தேரில் குதிரைகளை இணைப்பீர்களாக. அரண்மனையிலிருந்து அழகான சிறந்த விரிப்புகளைக் கொண்டு வந்து, பிராட்டியாருக்கு சுகமான இருக்கை அமைப்பீர்களாக. (2)

புண்ணிய கர்மாக்களைச் செய்துக் கொண்டிருக்கும் மாமுனிவர்களின் ஆசிரமத்திற்கு சீதையை அழைத்துச் செல்லப் போகிறேன். இது மன்னரின் உத்தரவு. விரைவில் தேரைக் கொண்டு வாருங்கள்.'' (3)

Koviloor Digital Library

ஸுமந்த்ரஸ்து ததே$_2$த்யுக்த்வா யுக்தம் பரமவாஜிபி$_4$: ।
ரத$_2$ம் ஸுருசிரப்ரக்$_2$யம் ஸ்வாஸ்தீர்ணம் ஸுக$_2$ஶய்யயா ॥ (4)

ஆநீயோவாச ஸௌமித்ரிம் மித்ராணாம் மாநவர்த$_4$நம் ।
ரதே$_2$ऽயம் ஸமநுப்ராப்தோ யத் கார்யம் க்ரியதாம் ப்ரபோ$_4$ ॥ (5)

ஏவமுக்த: ஸுமந்த்ரேண ராஜவேஶ்மநி லக்ஷ்மண: ।
ப்ரவிஶ்ய ஸீதாமாஸாத்$_3$ய வ்யாஜஹார நரர்ஷப$_4$: ॥ (6)

த்வயா கிலைஷ ந்ருபதிர்வரம் வை யாசித: ப்ரபு$_4$: ।
ந்ருபேண ச ப்ரதிக்ஞாதமாக்ஞப்தஶ்சாஶ்ரமம் ப்ரதி ॥
க$_3$ங்கா$_3$தீரே மயா தே$_3$வி ருஷீணாமாஶ்ரமாஞ்ஶுபா$_4$ந் ॥ (7)

ஶீக்$_4$ரம் க$_3$த்வா து வைதே$_3$ஹி ஶாஸநாத் பார்தி$_2$வஸ்ய ந: ।
அரண்யே முநிபி$_4$ர்ஜுஷ்டே அவநேயா ப$_4$விஷ்யஸி ॥ (8)

ஏவமுக்த்தா து வைதே$_3$ஹீ லக்ஷ்மணேந மஹாத்மநா ।
ப்ரஹர்ஷமதுலம் லேபே$_4$ க$_3$மநம் சாப்யரோசயத் ॥ (9)

வாஸாம்ஸி ச மஹார்ஹாணி ரத்நாநி விவிதா$_4$நி ச ।
க்$_3$ருஹீத்வா தாநி வைதே$_3$ஹீ க$_3$மநாயோபசக்ரமே ॥ (10)

இமாநி முநிபத்நீநாம் தா$_3$ஸ்யாம்யாப$_4$ரணாந்யஹம் ।
வஸ்த்ராணி ச மஹார்ஹாணி த$_4$நாநி விவிதா$_4$நி ச ॥ (11)

ஸௌமித்ரிஸ்து ததே$_2$த்யுக்த்வா ரத$_2$மாரோப்ய மைதி$_2$லீம் ।
ப்ரயயௌ ஶீக்$_4$ரதுரகௌ$_3$ ராமஸ்யாக்ஞாமநுஸ்மரந் ॥ (12)

அப்$_3$ரவீச்ச ததா$_3$ ஸீதா லக்ஷ்மணம் லக்ஷ்மிவர்த$_4$நம் ।
அஶுபா$_4$நி ப$_3$ஹூந்யேவ பஶ்யாமி ரகு$_4$நந்த$_3$ந ॥ (13)

நயநம் மே ஸ்பு$_2$ரத்யத்$_3$ய கா$_3$த்ரோத்கம்பஶ்ச ஜாயதே ।
ஹ்ருத$_3$யம் சைவ ஸௌமித்ரே அஸ்வஸ்த$_2$மிவ லக்ஷயே ॥ (14)

ஔத்ஸுக்யம் பரமம் சாபி அத்$_4$ருதிஶ்ச பரா மம ।
ஶூந்யாமேவ ச பஶ்யாமி ப்ருதி$_2$வீம் ப்ருது$_2$லோசந ॥ (15)

அபி ஸ்வஸ்தி ப$_4$வேத்தஸ்ய ப்$_4$ராதுஸ்தே ப்$_4$ராத்ருவத்ஸல ।
ஶ்வஶ்ரூணாம் சைவ மே வீர ஸர்வாஸாமவிஶேஷத: ॥ (16)

புரே ஜநபதே$_3$ சைவ குஶலம் ப்ராணிநாமபி ।
இத்யஞ்ஜலிக்ருதா ஸீதா தே$_3$வதா அப்$_4$யயாசத ॥ (17)

லக்ஷ்மணோऽர்த$_2$ம் து தம் ஶ்ருத்வா ஶிரஸாவந்த்$_3$ய மைதி$_2$லீம் ।
ஶிவமித்யப்$_3$ரவீத்$_3$த்$_4$ருஷ்டோ ஹ்ருத$_3$யேந விஶுஷ்யதா ॥ (18)

Koviloor Digital Library

''சரி'' என்று பதில் கூறிய சுமந்திரர், உயர்சாதிக் குதிரைகள் பூட்டப்பட்டதும், சுகமான ஆசனத்தின்மீது அழகான சிறந்த விரிப்புகளுடன் அழகாக விளங்குவதுமான தேரைக் கொண்டு வந்து, நண்பர்களின் கௌரவத்தைப் போற்றுபவனான இலக்குவனைப் பார்த்து, ''ஐயனே! தேர் வந்துவிட்டது. அடுத்ததாக என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டார். (4,5)

இவ்வாறு சுமந்திரர் கூறியவுடன், புருஷோத்தமனான இலக்குவன் அரசரின் அந்தப்புரத்திற்குள் சென்று சீதையிடம் கூறினான்— (6)

''தேவி! பெருந்தலைவரான மன்னரிடம் தாங்கள் ஒரு வரம் வேண்டினீர்கள். அதை அவர் ஏற்றுக்கொண்டார். அதன்படி, கங்கைக் கரையிலுள்ள முனிவர்களின் மங்களமான ஆசிரம வளாகத்திற்குப் போக வேண்டும்; நமக்கு அரசர் கொடுத்துள்ள ஆணைப்படி, முனிவர்கள் வாழும் காட்டுக்கு, இப்போதே நான், தங்களை அழைத்துச் செல்லப் போகிறேன்.'' (7,8)

மாவீரம் படைத்த இலக்குவன் இவ்வாறு கூறியதைக் கேட்டதும் வைதேகி மிகவும் குதூகலமடைந்து, அங்கு செல்வதற்கு ஆயத்தமானாள். (9)

விலையுயர்ந்த உடைகளையும், பலவகையான இரத்தினங்களையும் எடுத்துக் கொண்டு புறப்படத் தொடங்கினாள், சீதை. (10)

''இவைகளையும், மற்றும் அணிகலன்களையும், விலையுயர்ந்த ஆடைகளையும், பல்வகைச் செல்வங்களையும் முனிவர்களுடைய பத்தினிகளுக்கு வழங்கப் போகிறேன்'' என்றாள். (11)

''சரி'' என்று பதில் கூறிய லட்சுமணன், இராமனுடைய ஆணையை நினைவிற்கொண்டு, விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டிய தேரில் சீதையை அமர்த்தினான். (12)

அப்போது, நற்குணச் செல்வம் நிரம்பிய இலக்குவனைப் பார்த்து, ''ரகுநந்தனரே! தீய நிமித்தங்கள் பலவற்றை நான் காண்கிறேன்'' என்றாள். (13)

''என்னுடைய வலதுகண் துடிக்கிறது; உடல் நடுங்குகிறது. இலக்குவனே! என்னுடைய நெஞ்சம் அமைதியில்லாமல் தத்தளிக்கிறது. (14)

மனம் பதைபதைக்கிறது; சஞ்சலத்தின் கடைசி எல்லைக்கே போய் நிற்கிறது. இலட்சுமணா! உலகம், எதுவுமேயில்லாத வெற்றிடமாகத் தோற்றமளிக்கிறது. (15)

சகோதரர்களிடம் அன்புடையவரே! தங்கள் சகோதரர்கள் சுகமாக இருக்கவேண்டும்; வீரரே! என்னுடைய மாமியார்கள் எல்லோரும் சௌக்கியமாக இருக்கவேண்டும். அவ்வாறே பட்டணத்திலும், புறநகர்ப் பகுதிகளிலுமுள்ள எல்லா உயிர்ப்பிராணிகளும் நன்றாக இருக்கவேண்டும்.'' இவ்வாறு கைகளைக் கூப்பிக் கொண்டு, தேவதைகளை வேண்டிக் கொண்டாள், சீதை. (16,17)

சீதையின் பிரார்த்தனையைக் கேட்ட இலக்குவன் தலைகுனிந்து அவளை வணங்கி, வெம்பித் துடிக்கும் உள்ளத்துடன், வெளியில் (போலியான) புன்னகைபூத்த முகத்துடன், ''அவ்வாறே ஆகட்டும்'' என்றான். (18)

Koviloor Digital Library

ததோ வாஸமுபாக$_3$ம்ய கோ$_3$மதீதீர ஆஶ்ரமே ।
ப்ரபா$_4$தே புநருத்தா$_2$ய ஸௌமித்ரி: ஸூதமப்$_3$ரவீத் ॥ (19)

யோஜயஸ்வ ரத$_2$ம் ஶீக்$_4$ரமத்$_3$ய பா$_4$கீ$_3$ரதீ$_2$ஜலம் ।
ஶிரஸா தா$_4$ரயிஷ்யாமி த்ர்யம்ப$_3$க: பர்வதே யதா$_2$ ॥ (20)

ஸோऽஶ்வாந் ரஜ்ஜ்வாத$_2$ சதுரோ ரதே$_2$ யுங்க்த்வா மநோஜவாந் ।
ஆரோஹஸ்வேதி வைதே$_3$ஹீம் ஸூத: ப்ராஞ்ஜலிரப்$_3$ரவீத் ॥
ஸா து ஸூதஸ்ய வசநாதா$_3$ருரோஹ ரதோ$_2$த்தமம் ॥ (21)

ஸீதா ஸௌமித்ரிணா ஸார்த$_2$ம் ஸுமந்த்ரேண ச தீ$_4$மதா ।
ஆஸஸாத$_3$ விஶாலாக்ஷீ க$_3$ங்கா$_3$ம் பாபவிநாஶிநீம் ॥ (22)

அதா$_2$ர்த$_4$தி$_3$வஸம் க$_3$த்வா பா$_4$கீ$_3$ரத்$_2$யா ஜலாஶயம் ।
நிரீக்ஷ்ய லக்ஷ்மணோ தீ$_3$ந: ப்ரருரோத$_3$ மஹாஸ்வந: ॥ (23)

ஸீதா து பரமாயத்தா த்$_3$ருஷ்ட்வா லக்ஷ்மணமாதுரம் ।
உவாச வாக்யம் த$_4$ர்மஜ்ஞா கிமித$_3$ம் ருத்$_3$யதே த்வயா ॥ (24)

ஜாஹ்நவீதீரமாஸாத்$_3$ய சிராபி$_4$லஷிதம் மம ।
ஹர்ஷகாலே கிமர்த$_2$ம் மாம் விஷாத$_3$யஸி லக்ஷ்மண ॥ (25)

நித்யம் த்வம் ராமபார்ஶ்வேஷு வர்தஸே புருஷர்ஷப$_4$ ।
கச்சித்$_3$விநாக்ருதஸ்தேந த்$_3$விராத்ரம் ஶோகமாக$_3$த: ॥ (26)

மமாபி த$_3$யிதோ ராமோ ஜீவிதாத$_3$பி லக்ஷ்மண ।
ந சாஹமேவம் ஶோசாமி மைவம் த்வம் பா$_3$லிஶோ ப$_4$வ ॥ (27)

தாரயஸ்வ ச மாம் க$_3$ங்கா$_3$ம் த$_3$ர்ஶயஸ்வ ச தாபஸாந் ।
ததோ முநிப்$_4$யோ தா$_3$ஸ்யாமி வாஸாம்ஸ்யாப$_4$ரணாநி ச ॥ (28)

தத: க்ருத்வா மஹர்ஷீணாம் யதா$_2$வத$_3$பி$_4$வாத$_3$நம் ।
தத்ர சைகாம் நிஶாமுஷ்ய யாஸ்யாமஸ்தாம் புரீம் புந: ॥ (29)

மமாபி பத்$_3$மபத்ராக்ஷம் ஸிம்ஹோரஸ்கம் க்ருஶோத$_3$ரம் ।
த்வரதே ஹி மநோ த்$_3$ரஷ்டும் ராமம் ரமயதாம் வரம் ॥ (30)

தஸ்யாஸ்தத்$_3$வசநம் ஶ்ருத்வா ப்ரம்ருஜ்ய நயநே ஶுபே$_4$ ।
நாவிகாநாஹ்வயாமாஸ லக்ஷ்மண: பரவீரஹா ॥ (31)

இயம் ச ஸஜ்ஜா நௌஶ்சேதி தா$_3$ஶா: ப்ராஞ்ஜலயோऽப்$_3$ருவந் ।
திதீர்ஷுர்லக்ஷ்மணோ க$_3$ங்கா$_3$ம் ஶுபா$_4$ம் நாவமுபாருஹத் ॥
க$_3$ங்கா$_3$ம் ஸந்தாரயாமாஸ லக்ஷ்மணஸ்தாம் ஸமாஹித: ॥ (32)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகியே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஷட்சத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

அன்றிரவு கௌதமி நதிக்கரையிலிருந்த ஆசிரமத்தில் தங்கிவிட்டு, பொழுது விடிந்ததும் கண்விழித்து, தேரோட்டியை நோக்கி இலக்குவன் கூறினான்— (19)

''தேரோட்டியே! சீக்கிரமாகத் தேரை ஆயத்தப்படுத்துங்கள். முன்னர் கைலாய மலையில் பரமசிவன், தன் தலையில் ஏற்ற கங்கை தீர்த்தத்தை, நான் இப்போது கண்டு வணங்கப் போகிறேன். (20)

கடிவாளம் பூண்டவைகளும் மனோவேகம் கொண்டவைகளுமான நான்கு குதிரைகளை ரதத்தில் இணைத்து, கைகளைக் கூப்பிக்கொண்டு, ''தேரில் ஏறிக்கொள்ளுங்கள்'' என்று வணக்கத்துடன் சீதையிடம் கூறினார், தேரோட்டி. அவள், தேரோட்டியின் சொற்களைக் கேட்டவுடன் தேரில் ஏறிக்கொண்டாள். (21)

லட்சுமணனுடனும், அறிவாளியான சுமந்திரருடனும் பாவங்களைப் போக்கும் கங்கைக் கரையை சீதை அடைந்தாள். (22)

நண்பகல் வேளையில், வெள்ளம் பெருகும் கங்கைக் கரையை அடைந்ததும் அதைக் கண்ட இலக்குவன், பரிதாபமான பெருங்குரலில் வாய்விட்டுக் கதறினான். (23)

இலக்குவன் துக்கத்தினால் அழுவதைப் பார்த்ததும், அறம் அறிந்த சீதை, ''லட்சுமணரே! வெகுநாட்களாக நான் ஆசைப்பட்ட கங்கைக் கரைக்கு வந்ததும், நீங்கள் ஏன் இப்போது அழுகிறீர்கள்? மகிழ்ச்சியோடு நான் இருக்க வேண்டிய இந்த சமயத்தில் ஏன் என்னை வருந்தச் செய்கிறீர்கள்?'' என்று கேட்டாள். (24,25)

''புருஷோத்தமரே! நீங்கள் எப்போதும் இராமபிரானுடன்தானே இருக்கிறீர்கள்? ஏதோ ஒரு சந்தர்ப்பவசத்தால் இரண்டு நாட்கள் அவர் அருகில் இருக்க முடியாமல் போனதற்காகவா துயரப்படுகிறீர்கள்? (26)

லட்சுமணா! எனக்கும், என் உயிரைக் காட்டிலும் இராமன் மிகவும் அன்புக்குரியவர்தான். நான், உங்களைப் போல் துக்கப்பட்டு அழவில்லையே! இவ்வாறு பாலகனைப் போல தாங்கள் நடந்து கொள்ளாதீர்கள். என்னை, கங்கையின் அக்கரைக்கு அழைத்துச் சென்று தவசிகளைக் காட்டுங்கள். நான் கொண்டு வந்திருக்கும் ஆடைகளையும் அணிகலன்களையும், அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். (27,28)

முனிவர்களை முறைப்படி வணங்கி, ஓர் இரவு தங்கிவிட்டு, அயோத்தி நகரத்திற்கு மீண்டும் திரும்பிச் செல்வோம். (29)

மனத்தைக் களிப்படையச் செய்பவர்களுள் முதல்வரான தாமரை போன்ற கண்களும், சிங்கம் நிகர் தோள்களும், உள்ளடங்கிய வயிறும் உடைய இராமனைக் காண்பதற்கு என் மனமும் துடிக்கிறது.'' (30)

அவளுடைய பேச்சைக் கேட்ட லட்சுமணன் தன் அழகான கண்களைத் துடைத்துக் கொண்டான். பின், எதிரிகளை அழிக்கும் அவன், படகோட்டிகளைக் கூப்பிட்டான். (31)

படகோட்டிகள், ''படகு ஆயத்தமாக இருக்கிறது'' என்று, வணக்கத்துடன் கைகூப்பிக் கொண்டு சொன்னார்கள். புனிதமான கங்கையைக் கடந்து செல்வதற்காக லட்சுமணன் படகில் ஏறிக்கொண்டான். மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டு அவளையும் (சீதையையும் படகில் ஏறச்செய்து) கங்கையைக் கடந்து அக்கரை சேர்ப்பித்தான். (32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நாற்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஸப்தசத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

ராமஶாஸநகத$_2$நம்

அத$_2$ நாவம் ஸுவிஸ்தீர்ணாம் நைஷாதீ$_3$ம் ராக$_4$வாநுஜ: ।
ஆருரோஹ ஸமாயுக்தாம் பூர்வமாரோப்ய மைதி$_2$லீம் ॥ (1)
ஸுமந்த்ரம் சைவ ஸரத$_2$ம் ஸ்தீ$_2$யதாமிதி லக்ஷ்மண: ।
உவாச ஶோகஸந்தப்த: ப்ரயாஹீதி ச நாவிகம் ॥ (2)

ததஸ்தீரமுபாக$_3$ம்ய ப$_4$ாகீ$_3$ரத்$_2$யா: ஸ லக்ஷ்மண: ।
உவாச மைதி$_2$லீம் வாக்யம் ப்ராஞ்ஜலிர்ப$_3$ாஷ்பஸம்ப்லுத: ॥ (3)

ஹ்ருத்$_3$க$_3$தம் மே மஹச்ச$_2$ல்யம் யஸ்மாத$_3$ார்யேண தீ$_4$மதா ।
அஸ்மிந்நிமித்தே வைதே$_3$ஹி லோகஸ்ய வசநீக்ருத: ॥ (4)

ஶ்ரேயோ ஹி மரணம் மேऽத்$_3$ய ம்ருத்யுர்வா யத்பரம் ப$_4$வேத் ।
ந சாஸ்மிந்நீத்$_3$ருஶே கார்யே நியோஜ்யோ லோகநிந்தி$_3$தே ॥ (5)

ப்ரஸீத$_3$ ச ந மே பாபம் கர்துமர்ஹஸி ஶோப$_4$நே ।
இத்யஞ்ஜலிக்ருதோ பூ$_4$மௌ நிபபாத ஸ லக்ஷ்மண: ॥ (6)

ருத$_3$ந்தம் ப்ராஞ்ஜலிம் த்$_3$ருஷ்ட்வா காங்க்ஷந்தம் ம்ருத்யுமாத்மந: ।
மைதி$_2$லீ ப்$_4$ருஶஸம்விக்$_3$நா லக்ஷ்மணம் வாக்யமப்$_3$ரவித் ॥ (7)

கிமித$_3$ம் நாவக$_3$ச்ச$_2$ாமி ப்$_3$ரூஹி தத்த்வேந லக்ஷ்மண ।
பஶ்யாமி த்வாம் ந ச ஸ்வஸ்த$_2$மபி க்ஷேமம் மஹீபதே: ॥ (8)
ஶாபிதோऽஸி நரேந்த்$_3$ரேண யத்த்வம் ஸந்தாபமாக$_3$த: ।
தத்$_3$ப்$_3$ரூயா: ஸந்நிதௌ$_2$ மஹ்யமஹமாஜ்ஞாபயாமி தே ॥ (9)

வைதே$_3$ஹ்யா சோத்$_3$யமாநஸ்து லக்ஷ்மணோ தீ$_3$நசேதந: ।
அவாங்முகோ$_2$ ப$_3$ாஷ்பகலம் வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (10)

ஶ்ருத்வா பரிஷதோ$_3$ மத்$_4$யே ஹ்யபவாத$_3$ம் ஸுதா$_3$ருணம் ।
புரே ஜநபதே$_3$ சைவ த்வத்க்ருதே ஜநகாத்மஜே ॥
ராம: ஸந்தப்தஹ்ருத$_3$யோ மாம் நிவேத்$_3$ய க்$_3$ருஹம் க$_3$த: ॥ (11)

ந தாநி வசநீயாநி மயா தே$_3$வி தவாக்$_3$ரத: ।
யாநி ராஜ்ஞா ஹ்ருதி$_3$ ந்யஸ்தாந்யமர்ஷாத் ப்ருஷ்ட$_2$த: க்ருத: ॥ (12)

ஸா த்வம் த்யக்த்தா ந்ருபதிநா நிர்தோ$_3$ஷா மம ஸந்நிதௌ$_4$ ।
பௌராபவாத$_3$பீ$_4$தேந க்$_3$ராஹ்யம் தே$_3$வி ந தேऽந்யதா$_2$ ॥ (13)

ஆஶ்ரமாந்தேஷு ச மயா த்யக்தவ்யா த்வம் ப$_4$விஷ்யஸி ।
ராஜ்ஞ: ஶாஸநமாஜ்ஞாய தவேத$_3$ம் கில தௌ$_3$ர்ஹ்ருத$_3$ம் ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : நாற்பத்தேழு

சீதையிடம் இராமனின் ஆணையைக் கூறுதல்

வேடுவர்களுடைய அந்தப் படகு மிகவும் அகலமாகவும், இருக்கை முதலிய சாதனங்கள் உடையதாகவும் இருந்தது. படகில், முதலில் சீதையை ஏற்றிவிட்டு, பின்னர் இலக்குவன் ஏறிக்கொண்டான். (1)

''தேருடன் இங்கேயே இருங்கள்'' என்று சுமந்திரரிடம் கூறிவிட்டு, துக்கத்தால் வெம்மைப்பட்ட மனத்துடன், ''போகலாம்'' என்று படகோட்டியிடம் கூறினான். (2)

கங்கையின் அக்கரையை அடைந்தவுடன், கண்ணீர் பொங்கிய கண்களுடன், கைகளைக் கூப்பிக்கொண்டு, மைதிலியைப் பார்த்து லட்சுமணன் கூறினான்— (3)

''வைதேகிப் பிராட்டியே! மன்னர் என்னிடம் ஒப்படைத்த இந்தப் பணி, என்னை முள்ளாகக் குத்துகிறது. இந்தச் செயலினால், உலகத்தில் எனக்கும் (மன்னருக்கும்) பெரும் பழி ஏற்படப் போகிறது. (4)

இந்த நிலையில், இப்போது எனக்கு மரணம் அல்லது மரணத்திற்கு நிகரான துன்பம் ஏற்பட்டால், அதுவே எனக்கு நலம் பயப்பதாகும். மக்களால் தூற்றப்படப்போகும் இந்தக் காரியத்தைச் செய்யும்படி என்னை நியமித்திருக்கக் கூடாது. (5)

தேவி! தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். என்னைக் குறை கூறக்கூடாது'' என்று, கூப்பிய கைகளுடன் கூறிவிட்டு தரையில் சாய்ந்தான், லட்சுமணன். (6)

கைகளைக் கூப்பியவண்ணம் அழுதுகொண்டும், தனக்கு மரணத்தை விரும்பிக் கொண்டும் அல்லல்படும் லட்சுமணனைப் பார்த்து மிகவும் மனம் தவித்த சீதை கூறினாள்— (7)

''லட்சுமணா! இது என்ன? எனக்கு ஒன்றும் புரியவில்லையே? மன்னர் சௌக்கியமாகத்தானே இருக்கிறார்? உன் மனம் அமைதியாக இல்லை என்பதைப் பார்க்கிறேன். (8)

மன்னரின் மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். உனக்கு இத்தகைய மனவேதனை எதன் காரணமாக ஏற்பட்டது? என்ற உண்மையைக் கூறு. நான் உனக்கு உத்தரவு போடுகிறேன்.'' (9)

மனவேதனையுடனிருந்த லட்சுமணன், வைதேகியினால் இவ்வாறு தூண்டிவிடப்பட்டவுடன், கண்களில் நீர் வழிய, தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு பின்வருமாறு கூறினான்— (10)

''ஜனகரின் புதல்வியே! நகரத்திலும் புறநகர்ப்பகுதிகளிலும் தங்களைப் பற்றி பேசப்படும் பயங்கரமான அபவாதத்தை, அரசவையில் நண்பர்கள் கூறக்கேட்ட இராமன் மனம் வெந்து போனார். எல்லா விஷயத்தையும் என்னிடம் கூறிவிட்டு தன் இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டார். எந்த பழிச்சொற்களைக் கேட்டு, துக்கம் தாங்க முடியாமல் தன் இதயத்திலேயே புதைத்து வைத்துக் கொண்டாரோ, அந்தச் சொற்களைத் தங்களிடம் நான் கூறமுடியாது. அதனால் நான், அதைப் பற்றி விரிவாகப் பேச விரும்பவில்லை. (11,12)

குற்றமற்றவரான தாங்கள், நான் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, மன்னரால் திரஸ்கரிக்கப்பட்டீர்கள். (மன்னர், தங்களைத் துறந்து பேசிய சொற்களை, நான் செவிகளால் கேட்டேன்.) ஊரார் சொல்லுக்கு அஞ்சியே, இந்தத் தியாகம் செய்யப்பட்டது; வேறு எந்தக் காரணத்திற்காகவும் அல்ல. (தாங்கள் குற்றமற்றவர் என்பது இராமனுக்கும் தெரியும்.) (13)

அரசரின் ஆணைப்படியும், தங்கள் விருப்பத்தின்படியும், (கருவுற்றிருக்கும் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவது கணவரின் கடமை என்பதாலும்,) தங்களை முனிவர்களின் ஆசிரமங்களுக்கு அருகில் விட்டுவிடப் போகிறேன். (14)

Koviloor Digital Library

ததே$_3$தஜ்ஜாஹ்நவீதீரே ப்$_3$ரஹ்மர்ஷீணாம் தபோவநம் ।
புண்யம் ச ரமணீயம் ச மா விஷாத$_3$ம் க்ருதா$_2$: ஶுபே$_4$ ॥ (15)

ராஜ்ஞோ த$_3$ஶரத$_2$ஸ்யேஷ்ட: பிதுர்மே முநிபுங்க$_3$வ: ।
ஸகா$_2$ பரமகோ விப்ரோ வால்மீகி: ஸுமஹாயஶா: ॥ (16)

பாத$_3$ச்ச$_2$ாயாமுபாக$_3$ம்ய ஸுக$_2$மஸ்ய மஹாத்மந: ।
உபவாஸபரைகாக்$_3$ரா வஸ த்வம் ஜநகாத்மஜே ॥ (17)

பதிவ்ரதாத்வமாஸ்தா$_2$ய ராமம் க்ருத்வா ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ।
ஶ்ரேயஸ்தே பரமம் தே$_3$வி ததா$_2$ க்ருத்வா ப$_4$விஷ்யதி ॥ (18)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஸப்தசத்வாரிம்ஶ: ஸர்க$_3$: ॥

அஷ்டசத்வாரிம்ஶ: ஸர்க$_3$:

ஸீதாபரித்யாக$_3$:

லக்ஷ்மணஸ்ய வச: ஶ்ருத்வா தா$_3$ருணம் ஜநகாத்மஜா ।
பரம் விஷாத$_3$மாக$_3$ம்ய வைதே$_3$ஹீ நிபபாத ஹ ॥ (1)

ஸா முஹூர்தமிவாஸம்ஜ்ஞா பா$_3$ஷ்பபர்யாகுலேக்ஷணா ।
லக்ஷ்மணம் தீ$_3$நயா வாசா உவாச ஜநகாத்மஜா ॥ (2)

மாமிகேயம் தநுர்நூநம் ஸ்ருஷ்டா து$_3$:கா$_2$ய லக்ஷ்மண ।
தா$_4$த்ரா யஸ்யாஸ்ததா$_2$ மேऽத்$_3$ய து$_3$:க$_2$மூர்தி: ப்ரத்$_3$ருஶ்யதே ॥ (3)

கிம் நு பாபம் க்ருதம் பூர்வம் கோ வா தா$_3$ரைர்வியோஜித: ।
யாஹம் ஶுத்$_3$த$_4$ஸமாசாரா த்யக்தா ந்ருபதிநா ஸதீ ॥ (4)

புராஹமாஶ்ரமே வாஸம் ராமபாதா$_3$நுவர்திநீ ।
அநுருத்$_4$யாபி ஸௌமித்ரே து$_3$:கே$_2$ ச பரிவர்திநீ ॥ (5)

ஸா கத$_2$ம் ஹ்யாஶ்ரமே ஸௌம்ய வத்ஸ்யாமி விஜநீக்ருதா ।
ஆக்$_2$யாஸ்யாமி ச கஸ்யாஹம் து$_3$:க$_2$ம் து$_3$:க$_2$பராயணா ॥ (6)

கிம் நு வக்ஷ்யாமி முநிஷு கர்ம வாஸத் க்ருதம் ச கிம் ।
கஸ்மிஶ்சித் காரணே த்யக்தா ராக$_4$வேண மஹாத்மநா ॥ (7)

ந க$_2$ல்வத்$_3$யைவ ஸௌமித்ரே ஜீவிதம் ஜாஹ்நவீஜலே ।
த்யஜேயம் ராஜவம்ஶஸ்து ப$_4$ர்துர்மே பரிஹாஸ்யதே ॥ (8)

யதா$_2$ஜ்ஞாம் குரு ஸௌமித்ரே த்யஜ மாம் து$_3$:க$_2$பா$_4$கி$_3$நீம் ।
நிதே$_3$ஶே ஸ்தீ$_2$யதாம் ராஜ்ஞ: ஶ்ருணு சேத$_3$ம் வசோ மம ॥ (9)

Koviloor Digital Library

தேவி! கங்கைக் கரையில் அமைந்துள்ள பிரும்மரிஷிகளின் இந்தத் தபோவனம் மிகவும் புனிதமானது; அழகானது. தாங்கள் வருத்தப்பட வேண்டாம். (15)

என்னுடைய தந்தையான மன்னர் தசரதருக்கு மிக நெருங்கிய நண்பரும், கருணை உள்ளவரும், பெரும் புகழ்கொண்டவருமான அந்தணர் வால்மீகி இங்கே இருக்கிறார். (16)

மகாத்மாவான அவரைத் தஞ்சமடைந்து, ஆகார நியமம் மற்றும் ஒருமுனைநோக்குடன் சௌக்கியமாக வசிப்பீர்களாக. (17)

தேவி! இராமனையே எப்போதும் மனத்தில் வைத்துக் கொண்டு, கற்புநெறியைக் கைக்கொண்டு இருந்து வந்தால், தங்களுக்கு மேன்மை ஏற்படும்.'' (18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நாற்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தெட்டு

சீதையைத் துறத்தல்

இலக்குவன் கூறிய பயங்கரமான செய்தியைக் கேட்ட ஜனகரின் புதல்வி மிகவும் துக்கமடைந்து கீழே சாய்ந்தாள். (1)

அவள் சிறிது நேரம் உணர்விழந்து கிடந்தாள். பின்னர், கண்ணீர் ததும்பும் கண்களுடன் லட்சுமணனைப் பார்த்துப் பரிதாபமான குரலில் கூறினாள்— (2)

''லட்சுமணா! என்னுடைய இந்த உடலை, துக்கங்களை அனுபவிப்பதற்காகவே பிரும்மா படைத்திருக்கிறார் போலும்! உலகத்தின் துக்கமெல்லாம் உருவம் ஏற்று என்முன் வந்து நிற்பது போல் காணப்படுகிறது. (3)

கற்புடையவளும் தூய நற்பழக்க–வழக்கம் உடையவளுமான நான், மன்னனால் துறக்கப்பட்டேன் – என்றால், நான் முன் பிறவிகளில் என்ன பாவத்தைச் செய்தேனோ? எவரை மனைவியிடமிருந்து பிரித்து வைத்தேனோ? (4)

சுமித்திரையின் புதல்வரே! முன்னர், நான் (காட்டுக்குச் செல்வதிலிருந்து) தடுக்கப்பட்டாலும், இராமனை அடியொற்றிச் செல்லும் நான் (இராமனுடன் கூடவே இருக்கவேண்டும் என்ற காரணத்தால்) முனிவர் ஆசிரமங்களில் வசிப்பதைக் கஷ்டமாக இருந்தாலும் ஏற்றுக் கொண்டேன். (5)

ஆனால், நல்லிதயம் கொண்டவரே! உற்றார்–உறவினரிடமிருந்து பிரிக்கப்பட்ட நான் முனிவர் ஆசிரமங்களில் எவ்வாறு வசிப்பேன்? எனக்குத் துக்கம் ஏற்பட்டால், எவரிடம் சொல்லி ஆறுதல் அடைவேன்? (6)

'மகாத்மாவான இராகவன் எந்தக் காரணத்தால் உன்னைத் தியாகம் செய்தார்?' என்று முனிவர்கள் கேட்கும்போது, நான் எந்தக் குற்றத்தைச் செய்ததாகக் கூறுவேன்? (7)

லட்சுமணா! கங்கையில் மூழ்கி இப்போதே என் வாழ்க்கைக்கு முடிவு கட்டுவேன். அவ்வாறு நான் உயிரைவிட்டால், என் கணவரின் வம்சபரம்பரை தடைபட்டுப் போகும். (8)

லட்சுமணா! துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் என்னை அரசரின் ஆணைப்படி, துறந்து செல்வீராக. மன்னரின் கட்டளையை நிறைவேற்றுவதில் உறுதியாக இருங்கள். இப்போது, நான் சொல்லப் போவதையும் கேளுங்கள். (9)

Koviloor Digital Library

ஶ்வஶ்ருணாமவிஶேஷேண ப்ராஞ்ஜலிப்ரக்$_3$ரஹேண ச ।
ஶிரஸா வந்த்$_3$ய சரணௌ குஶலம் ப்$_3$ரூஹி பார்தி$_2$வம் ॥ (10)

ஶிரஸாபி$_4$நதோ ப்$_3$ரூயா: ஸர்வாஸாமேவ லக்ஷ்மண ।
வக்தவ்யஶ்சாபி ந்ருபதிர்த$_4$ர்மேஷு ஸுஸமாஹித: ॥ (11)

ஜாநாஸி ச யதா$_2$ ஶுத்$_3$தா$_4$ ஸீதா தத்த்வேந ராக$_4$வ ।
ப$_4$க்த்யா ச பரயா யுக்தா ஹிதா ச தவ நித்யஶ: ॥ (12)

அஹம் த்யக்தா த்வயா வீர அயஶோபீ$_4$ருணா ஜநே ।
யச்ச தே வசநீயம் ஸ்யாத$_3$பவாத$_3$ஸமுத்தி$_2$தம் ॥
மயா ஹி பரிஹர்தவ்யம் த்வம் ஹி மே பரமா க$_3$தி: ॥ (13)

வக்தவ்யஶ்சைவ ந்ருபதிர்த$_4$ர்மேண ஸுஸமாஹித: ।
யதா$_2$ ப்$_4$ராத்ருஷு வர்தேதா$_2$ஸ்ததா$_2$ பௌரேஷு நித்யதா$_3$ ॥
பரமோ ஹ்யேஷ த$_4$ர்மஸ்தே தஸ்மாத் கீர்திரநுத்தமா ॥ (14)

யத்து பௌரஜநோ ராஜந் த$_4$ர்மேண ஸமவாப்நுயாத் ।
அஹம் து நாநுஶோசாமி ஸ்வஶரீரம் நரர்ஷப$_4$ ॥ (15)

யதா$_2$பவாத$_3$ம் பௌராணாம் ததை$_2$வ ரகு$_4$நந்த$_3$ந ।
பதிர்ஹி தே$_3$வதா நார்யா: பதிர்ப$_3$ந்து$_4$: பதிர்கு$_3$ரு: ॥
ப்ராணைரபி ப்ரியம் தஸ்மாத்$_3$ப$_4$ர்து: கார்யம் விஶேஷத: ॥ (16)

இதி மத்$_3$வசநாத்$_3$ராமோ வக்தவ்யோ மம ஸங்க்$_3$ரஹ: ।
நிரீக்ஷ்ய மாத்$_3$ய க$_3$ச்ச$_2$ த்வம்ருதுகாலாதிவர்திநீம் ॥ (17)

ஏவம் ப்$_3$ருவத்யாம் ஸீதாயாம் லக்ஷ்மணோ தீ$_3$நசேதந: ।
ஶிரஸாவந்த்$_3$ய த$_4$ரணீம் வ்யாஹர்தும் ந ஶஶாக ஹ ॥ (18)

ப்ரத$_3$க்ஷிணம் ச தாம் க்ருத்வா ருத$_3$ந்நேவ மஹாஸ்வந: ।
த்$_4$யாத்வா முஹூர்தம் தாமாஹ கிம் மாம் வக்ஷ்யஸி ஶோப$_4$நே ॥ (19)

த்$_3$ருஷ்டபூர்வம் ந தே ரூபம் பாதௌ$_3$ த்$_3$ருஷ்டௌ தவாநகே$_4$ ।
கத$_2$மத்ர ஹி பஶ்யாமி ராமேண ரஹிதாம் வநே ॥ (20)

இத்யுக்த்வா தாம் நமஸ்க்ருத்ய புநர்நாவமுபாருஹத் ।
ஆருஹ்ய ச புநர்நாவம் நாவிகம் சாப்$_4$யசோத$_3$யத் ॥ (21)

ஸ க$_3$த்வா சோத்தரம் தீரம் ஶோகப$_4$ாரஸமந்வித: ।
ஸம்மூட$_4$ இவ து$_3$:கே$_2$ந ரத$_2$மத்$_4$யாருஹத்த்$_3$ருதம் ॥ (22)

முஹுர்முஹு: பராவ்ருத்ய த்$_3$ருஷ்ட்வா ஸீதாமநாத$_2$வத் ।
சேஷ்டந்தீம் பரதீரஸ்தா$_2$ம் லக்ஷ்மண: ப்ரயயாவத$_2$ ॥ (23)

Koviloor Digital Library

என்னுடைய மாமியார்கள் அனைவரின் முன்னிலையிலும் கைகுவித்து, திருவடிகளைப் பற்றி, என் சார்பில் வணக்கம் கூறுங்கள். மன்னருடைய திருவடிகளில் தலைவைத்து வணங்கி, நான் அவரை நலன் விசாரித்ததாகச் சொல்லுங்கள். (10)

அந்தப்புரத்திலுள்ள வந்தனைக்குரிய எல்லா மாதர்களுக்கும் தலைவணங்கி, நான் அவர்கள் நலன் பற்றி விசாரித்ததாகக் கூறுங்கள். மிக்க கவனத்துடன் அறத்தைப் பேணுபவரான மன்னரிடம் பின்வருமாறு தெரிவியுங்கள்— (11)

'ரகு நாயகரே! சீதை தூய்மையானவள்; பிரேமபக்தியுடன் கூடியவள்; எப்போதும் தங்கள் க்ஷேமத்தையே கோருபவள் என்பதைத் தாங்கள் நிச்சயமாக அறிவீர்கள்; (12)

வீரரே! மக்களிடம் தங்களைப் பற்றி எந்த பழிச்சொல் பரவி வருகிறதோ, அதனால், அபகீர்த்தி ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தினால் என்னைத் துறந்தீர்கள். அப்படி ஓர் இகழ்ச்சி தங்களுக்கு ஏற்பட்டால், அதைப் போக்குவது எனது கடமை. ஏனென்றால், தாங்கள்தான் எனக்குப் புகலிடம். (13)

அறநெறியில் நின்றொழுகும் மன்னரிடம், ''தாங்கள் எவ்வாறு தங்கள் சகோதரர்களிடம் பழகுகிறீர்களோ, அவ்வாறே குடிமக்களிடமும் நடக்க வேண்டும். மிக உயர்ந்த இந்த நெறியைப் பின்பற்றினால் நிகரற்ற புகழ் தங்களுக்குக் கிடைக்கும். (14)

நகர மக்களைத் தருமமுறைப்படி பரிபாலித்தால் புண்ணியம் கிடைக்கும். ஆண்மைமிக்கவரே! நான், என் சரீரத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. (இனி, நான் எவ்வாறு வாழ்க்கையைக் கழிப்பேன்? என்று சோர்ந்து போய்விடவில்லை.) (15)

ரகு நந்தனரே! மக்களின் பழிச்சொல்லிலிருந்து எவ்வாறு தப்பிப் பிழைக்க முடியுமோ, அவ்வாறே செய்யுங்கள். பெண்களுக்குக் கணவரே தெய்வம்; கணவரே உறவு; கணவரே ஆசார்யன்; உயிரைக் காட்டிலும் மேலானவர். ஆகையால், அவருக்குப் பிரியமான காரியத்தைச் செய்ய வேண்டும்.' இவ்வாறு, நான் செய்தி சொல்லியனுப்பியதாக இராமனிடம் கூறுங்கள். ருதுகாலம் கடந்து நிற்கும் (கருத்தரித்திருக்கும்) என்னை, இப்போது நன்றாகப் பார்த்துவிட்டுச் செல்லுங்கள்.'' (16,17)

துயரத்தில் ஆழ்ந்திருந்த லட்சுமணன் இவ்வாறு சீதை கூறியதைக் கேட்டபின், தரையில் தலைவைத்து வணங்கினான். அவனால் எதுவும் பேச முடியவில்லை. (18)

உரத்த குரலில் அழுதவாறே அவளை வலம் வந்து சிறிதுநேரம் மனத்திற்குள் ஆலோசனை செய்து, ''அன்னையே! தாங்கள் இவ்வாறு எப்படிக் கூறுகிறீர்கள்?'' என்று கேட்டான். (19)

''மாசற்றவரே! நான், தங்கள் சரீரத்தை முழுமையாகப் பார்த்ததில்லை. இரு திருவடிகளை மட்டுமே தரிசித்திருக்கிறேன். இப்போது இந்தக் காட்டில், இராமபிரான் இல்லாத நேரத்தில், தங்களை எவ்வாறு பார்ப்பேன்?'' (20)

இவ்வாறு கூறிவிட்டு, அவளை வணங்கியபின், மீண்டும் படகில் ஏறிக்கொண்டான். படகில் ஏறிக்கொண்டபின், ''படகைச் செலுத்து'' என்று படகோட்டிக்கு ஆணையிட்டான். (21)

சோகச் சுமையைத் தாங்கிக் கொண்டு, கங்கையின் வடகரையை அடைந்து, துக்கத்தினால் உணர்விழந்தவன் போன்ற நிலையிலேயே வேகமாகத் தேரில் ஏறிக்கொண்டான். (22)

கங்கையின் எதிர்க்கரையில், ஓர் அநாதையைப் போல் தரையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் சீதையைப் பல தடவை திரும்பிப் பார்த்தபடியே, இலக்குவன் போய்க் கொண்டிருந்தான். (23)

Koviloor Digital Library

தூ3ரஸ்த2ம் ரத2மாலோக்ய லக்ஷ்மணம் ச முஹுர்முஹு: ।
நிரீக்ஷமாணாம் தூத்3விக்3நாம் ஸீதாம் ஶோக: ஸமாவிஶத் ॥ (24)

ஸா து3:க2ப4ராராவநதா யஶஸ்விநீ
யஶோத4நா நாத2மபஶ்யதீ ஸதீ ।
ருரோத3 ஸா ப3ர்ஹிணநாதி3தே வநே
மஹாஸ்வநம் து3:க2பராயணா ஸதீ ॥ (25)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 அஷ்டசத்வாரிம்ஶ: ஸர்க3: ॥

ஏகோநபஞ்சாஶ: ஸர்க3:

வால்மீக்யாஶ்ரமப்ரவேஶ:

ஸீதாம் ருத3ந்தீம் த்3ருஷ்ட்வா தாம் தத்ர வை முநிதா3ரகா: ।
ப்ராத்3ரவந் யத்ர ப4க3வாநாஸ்தே வால்மீகிருக்3ரதீ4: ॥ (1)

அபி4வாத்3ய முநே: பாதௌ3 முநிபுத்ரா மஹர்ஷயே ।
ஸர்வம் நிவேத3யாமாஸுஸ்தஸ்யாஸ்து ருதி3தஸ்வநம் ॥ (2)

அத்3ருஷ்டபூர்வா ப4க3வந் கஸ்யாப்யேஷா மஹாத்மந: ।
பத்நீ ஶ்ரீரிவ ஸம்மோஹாத்3விரௌதி விக்ருதாநநா ॥ (3)

ப4க3வந் ஸாது4 பஶ்யேஸ்த்வம் தே3வதாமிவ க2ாச்ச்யுதாம் ।
நத்3யாஸ்து தீரே ப4க3வந் வரஸ்த்ரீ காபி து3:கி2தா ॥ (4)

த்3ருஷ்டாஸ்மாபி4: ப்ரருதி3தா த்3ருட4ம் ஶோகபராயணா ।
அநர்ஹா து3:க2ஶோகாப்4யாமேகா தீ3நா ஹ்யநாத2வத் ॥ (5)

ந ஹ்யேநாம் மாநுஷீம் வித்3ம: ஸத்க்ரியாஸ்யா: ப்ரயுஜ்யதாம் ।
ஆஶ்ரமஸ்யாவிதூ3ரே ச த்வாமியம் ஶரணம் க3தா ॥
த்ராதாரமிச்ச2தே ஸாத்4வீ ப4க3வம்ஸ்த்ராதுமர்ஹஸி ॥ (6)

தேஷாம் து வசநம் ஶ்ருத்வா பு3த்3த்4யா நிஶ்சித்ய த4ர்மவித் ।
தபஸா லப்3த4சக்ஷுஷ்மாந் ப்ராத்3ரவத்3யத்ர மைதி2லீ ॥ (7)

தம் ப்ரயாந்தமபி4ப்ரேத்ய ஶிஷ்யா ஹ்யேநம் மஹாமதிம் ।
தம் து தே3ஶமபி4ப்ரேத்ய கிஞ்சித் பத்3ப்4யாம் மஹாமதி: ॥ (8)

அர்க்4யமாதா3ய ருசிரம் ஜாஹ்நவீதீரமாக3மத் ।
த3த3ர்ஶ ராக4வஸ்யேஷ்டாம் ஸீதாம் பத்நீமநாத2வத் ॥ (9)

தாம் ஸீதாம் ஶோகபா4ரார்தாம் வால்மீகிர்முநிபுங்க3வ: ।
உவாச மது4ராம் வாணீம் ஹ்லாத3யந்நிவ தேஜஸா ॥ (10)

Koviloor Digital Library

மெல்ல மெல்ல, தேரும் லட்சுமணனும் தொலைவில் சென்று கொண்டிருப்பதைப் பார்த்துப் பார்த்து சீதை மனம் வெதும்பினாள்; அவளைச் சோகம் ஆட்கொண்டது. (24)

இப்போது அவளைக் காப்பாற்றுவார் யாரும் இல்லை. புகழ் பெற்றவள்; புகழையே செல்வமாக உடையவள்; சோகம் தாங்கமாட்டாமல் குறுகிப் போனவள்; கற்புக்கரசி. மயில்களின் அகவல் ஒலிக்கும் அந்தக் காட்டில் உரத்த குரலில் அழத்தொடங்கினாள். (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நாற்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நாற்பத்தொன்பது

வால்மீகியின் ஆசிரமத்திற்குச் செல்வது

அவ்விடத்திலிருந்த முனிகுமாரர்கள், சீதை அழுதுகொண்டிருப்பதைப் பார்த்ததும், கடுமையான நியமங்களுடன் தவம் செய்யும் முனிவரான வால்மீகி இருந்த இடத்திற்கு ஓடிச் சென்றார்கள். மாமுனிவரின் பாதங்களில் வணங்கிய முனிகுமாரர்கள், குரலெழுப்பி அவள் (சீதை) அழுவதையெல்லாம் அவரிடம் எடுத்துரைத்தார்கள்— (1,2)

''ஐயனே! இதற்கு முன் இவ்விடத்தில் நாம் பார்த்திராத ஒரு பெண்மணி – செந்திருவைப் போன்றவர்; மாட்சிமை மிக்க யாரோ ஒருவருடைய பத்தினி – மனமயக்கத்தினால் வாடிய முகத்துடன் அழுதுகொண்டிருக்கிறார். (3)

பகவானே! யாரோ ஓர் உத்தமப் பெண்மணி துயரத்துடன் காணப்படுகிறார். தேவலோகத்திலிருந்து நழுவி விழுந்த தேவதையைப் போல் விளங்கும் அவரை, தாங்கள் வந்து பார்க்க வேண்டும். (4)

அவர் உரத்த குரலில் அழுதுகொண்டிருக்கிறார்; ஆழ்ந்தத் துயரத்தில் மூழ்கியிருக்கிறார்; உடற்கஷ்டம், மனக்கவலை ஆகியவற்றை அனுபவிக்கத்தக்கவர் அல்லர்; தன்னந்தனியாக இருக்கிறார்; ஆதரவற்றவர்போல் பரிதாபமாகக் காணப்படுகிறார். அவரை, நாங்கள் எங்கள் கண்களால் பார்த்தோம். (5)

இவரை ஒரு மானுடப் பெண்ணாக நாங்கள் கருதவில்லை. தாங்கள், அவருக்கு நல்ல முறையில் உபசாரம் செய்யவேண்டும். இந்த ஆசிரமத்திற்கு அருகிலேயே அவர் காணப்படுவதால், அவர் தங்களையே சரண் அடைந்திருக்கிறார். குணசாலியான அவர், தன்னைக் காப்பாற்றக் கூடிய ஒருவரைத் தேடிக் கொண்டிருக்கிறார். பகவானே! தாங்கள் அவரைக் காப்பாற்ற வேண்டும்.'' (6)

அவர்கள் கூறியதைக் கேட்டதும், அறநெறி அறிந்தவரான அவர் தவத்தினால் பெறப்பட்ட ஞானதிருஷ்டியால் நிகழ்ந்தவற்றை அறிந்து, மனத்திற்குள் ஒரு முடிவுக்கு வந்து, மைதிலி இருந்த இடத்திற்கு வெகுவேகமாகச் சென்றார். (7)

மகாபுத்திமானாகிய அவர் புறப்பட்டுச் செல்வதைக் கண்ட சீடர்களும், அவரைப் பின்தொடர்ந்தார்கள். அர்க்ய தீர்த்தம் எடுத்துக் கொண்டு, சிறிதுதூரம் காலால் நடந்து கண்ணுக்கினிய கங்கைக் கரையில் அந்த இடத்தை அடைந்தார். அங்கே, இராமசந்திர மூர்த்தியின் அன்புக்குரிய மனைவி, ஓர் அநாதையைப் போல் இருப்பதைக் கண்டார். (8,9)

சோகச் சுமையினால் வருந்திக் கொண்டிருக்கும் சீதையை நோக்கி, தன் தவப்பொலிவினால் மனமகிழ்ச்சியை உண்டாக்குபவர் போல, இனிமையான குரலில் வால்மீகி கூறினார்— (10)

Koviloor Digital Library

ஸ்நுஷா த$_3$ஶரத$_2$ஸ்ய த்வம் ராமஸ்ய மஹஷீ ப்ரியா ।
ஜநகஸ்ய ஸுதா ராக்ஞ: ஸ்வாக$_3$தம் தே பதிவ்ரதே ॥ (11)

ஆயாந்தீ சாஸி விக்ஞாதா மயா த$_4$ர்மஸமாதி$_4$நா ।
காரணம் சைவ ஸர்வம் மே ஹ்ருத$_3$யேநோபலக்ஷிதம் ॥ (12)

தவ சைவ மஹாப$_4$ாகே$_3$ விதி$_3$தம் மம தத்த்வத: ।
ஸர்வம் ச விதி$_3$தம் மஹ்யம் த்ரைலோக்யே யத்$_3$தி$_4$ வர்ததே ॥ (13)

அபாபாம் வேத்$_3$மி ஸீதே த்வாம் தபோலப்$_3$தே$_4$ந சக்ஷுஷா ।
விஸ்ரப்$_3$த$_4$ா ப$_4$வ வைதே$_3$ஹி ஸாம்ப்ரதம் மயி வர்தஸே ॥ (14)

ஆஶ்ரமஸ்யாவிதூ$_3$ரே மே தாபஸ்யஸ்தபஸி ஸ்தி$_2$தா: ।
தாஸ்த்வாம் வத்ஸே யத$_2$ா வத்ஸம் பாலயிஷ்யந்தி நித்யஶ: ॥ (15)

இத$_3$மர்க்$_4$யம் ப்ரதீச்ச$_2$ த்வம் விஸ்ரப்$_3$த$_4$ா விக$_3$தஜ்வரா ।
யத$_2$ா ஸ்வக்$_3$ருஹமப்$_4$யேத்ய விஷாத$_3$ம் சைவ மா க்ருத$_2$ா: ॥ (16)

ஶ்ருத்வா து ப$_4$ாஷிதம் ஸீதா முநே: பரமமத்$_3$பு$_4$தம் ।
ஶிரஸாவந்த்$_3$ய சரணௌ ததே$_2$த்யாஹ க்ருதாஞ்ஜலி: ॥
தம் ப்ரயாந்தம் முநிம் ஸீதா ப்ராஞ்ஜலி: ப்ருஷ்ட$_2$தோऽந்வகா$_3$த் ॥ (17)

தம் த்$_3$ருஷ்ட்வா முநிமாயாந்தம் வைதே$_3$ஹ்யா முநிபத்நய: ।
உபாஜக்$_3$முர்முத$_3$ா யுக்தா வசநம் சேத$_3$மப்$_3$ருவந் ॥ (18)

ஸ்வாக$_3$தம் தே முநிஶ்ரேஷ்ட$_2$ சிரஸ்யாக$_3$மநம் ச தே ।
அபி$_4$வாத$_3$யாமஸ்த்வாம் ஸர்வா உச்யதாம் கிம் ச குர்மஹே ॥ (19)

தாஸாம் தத்$_3$வசநம் ஶ்ருத்வா வால்மீகிரித$_3$மப்$_3$ரவீத் ।
ஸீதேயம் ஸமநுப்ராப்தா பத்நீ ராமஸ்ய தீ$_4$மத: ॥ (20)

ஸ்நுஷா த$_3$ஶரத$_2$ஸ்யைஷா ஜநகஸ்ய ஸுதா ஸதீ ।
அபாபா பதிநா த்யக்தா பரிபால்யா மயா ஸத$_3$ா ॥ (21)

இமாம் ப$_4$வத்ய: பஶ்யந்து ஸ்நேஹேந பரமேண ஹி ।
கௌ$_3$ரவாந்மம வாக்யாச்ச பூஜ்யா வோऽஸ்து விஶேஷத: ॥ (22)

முஹுர்முஹுஶ்ச வைதே$_3$ஹீம் ப்ரணித$_4$ாய மஹாயஶா: ।
ஸ்வமாஶ்ரமம் ஶிஷ்யவ்ருத: புநராயாந்மஹாதபா: ॥ (23)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகோநபஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

''கற்புக்கரசியே! நீ, தசரதனுடைய மருமகள்; இராமனுடைய அன்புக்குரிய பட்டத்தரசி; மன்னர் ஜனகருடைய புதல்வி. உனக்கு வரவேற்புக் கூறுகிறேன். (11)

ஒன்றிய மனத்துடன் தியான சமாதியில் இருந்த நான், நீ வந்திருப்பதைத் தெரிந்து கொண்டேன்; அதற்கான காரணத்தையும் என் உள்ளம் அறிந்து கொண்டது. (12)

பெரும்பேறு பெற்றவளே! உன்னைப் பற்றிய செய்திகளை உண்மையாக நான் அறிவேன். இம்மூன்று உலகிலும் நடப்பது அனைத்தையும் நான் அறிவேன். (13)

சீதே! தவத்தினால் பெறப்பட்ட ஞானதிருஷ்டியால், நீ பாவமற்றவள் என்பதை நான் அறிந்திருக்கிறேன். வைதேகி! இப்போது நீ பாதுகாப்புடன் இருக்கிறாய். அதனால், கவலையைவிடு. (14)

குழந்தாய்! என்னுடைய ஆசிரமத்திற்கு அருகிலேயே தவஞ்செய்யும் தவப்பெண்டிர் இருக்கிறார்கள். அவர்கள், தம் குழந்தையைப் போல உன்னை அன்புடன் பராமரிப்பார்கள். (15)

கவலையை விடு; அச்சத்தை அகற்று. இந்த அர்க்யத்தை ஏற்றுக்கொள். தன் வீட்டுக்கே வந்திருப்பதாக எண்ணிக் கொள். வருத்தப்படாதே.'' (16)

மிகவும் கனிவுடன் முனிவர் பேசியதைக் கேட்ட சீதை, அவர் திருவடிகளில் தலைகுனிந்து வணங்கி, கைகளைக் கூப்பிக் கொண்டு, ''அவ்வாறே செய்கிறேன்'' என்றாள். உடனே புறப்படத் தொடங்கிய முனிவரைக் கூப்பிய கைகளுடன் சீதை பின்தொடர்ந்து சென்றாள். (17)

வைதேகியுடன் கூட முனிவர் வால்மீகி வந்து கொண்டிருப்பதைப் பார்த்த ரிஷி பத்தினிகள் மகிழ்ச்சியுடன் அவரை வரவேற்று(ப் பின்வருமாறு) கூறினார்கள்— (18)

''உத்தம முனிவரே! தங்கள் வரவு நல்வரவாகுக. தாங்கள் இங்கு வந்து வெகுகாலமாகிவிட்டது. நாங்கள் எல்லோரும் தங்களை வணங்குகிறோம். நாங்கள், தங்களுக்கு என்ன சேவை செய்யவேண்டும்? என்பதைக் கூறுங்கள்.'' (19)

அவர்கள் பேசியதைக் கேட்ட வால்மீகி, ''புத்திமானான இராமனுடைய பத்தினி சீதை இதோ வந்திருக்கிறாள். இவள், தசரதனுடைய மருமகள்; ஜனகருடைய புதல்வி; கற்புக்கரசி; குற்றமற்றவள்; கணவனால் கைவிடப்பட்டவள்; எப்போதும் என்னால் காப்பாற்றத்தக்கவள்'' என்று கூறினார். (20,21)

''இவளிடம் நீங்கள் எல்லோரும் மிகவும் நேசப்பார்வை செலுத்தவேண்டும். நான் சொன்னேன் என்பதாலும், இவளுடைய சுய கௌரவத்தாலும், உங்களுடைய சிறப்பான மரியாதைக்கு உரியவள்.'' (22)

வைதேகியை முனிபத்தினிகளிடம் ஒப்படைத்து, ''கவனமாக இருங்கள்'' என்று வற்புறுத்திக் கூறிவிட்டு, பெரும் புகழ்கொண்டவரும் பெரும் தவசியுமான வால்மீகி, தன் சீடர்களால் சூழப்பெற்று, தன் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தார். (23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நாற்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

பஞ்சாஶ: ஸர்க$_3$:

ஸுமந்த்ரரஹஸ்ய கதநம்

த்$_3$ருஷ்ட்வா து மைதி$_2$லீம் ஸீதாமாஶ்ரமே ஸம்ப்ரவேஶிதாம் ।
ஸந்தாபமக$_3$மத்$_3$கோ$_4$ரம் லக்ஷ்மணோ தீ$_3$நசேதந: ॥ (1)

அப்$_3$ரவீச்ச மஹாதேஜா: ஸுமந்த்ரம் மந்த்ரஸாரதி$_2$ம் ।
ஸீதாஸந்தாபஜம் து$_3$:க$_2$ம் பஶ்ய ராமஸ்ய ஸாரதே$_2$ ॥ (2)

ததோ து$_3$:க$_2$தரம் கிம் நு ராக$_4$வஸ்ய ப$_4$விஷ்யதி ।
பத்நீம் ஶுத்$_3$த$_4$ஸமாசாராம் விஸ்ருஜ்ய ஜநகாத்மஜாம் ॥ (3)

வ்யக்தம் தை$_3$வாத$_3$ஹம் மந்யே ராக$_4$வஸ்ய விநாப$_4$வம் ।
வைதே$_3$ஹ்யா ஸாரதே$_2$ நித்யம் தை$_3$வம் ஹி து$_3$ரதிக்ரமம் ॥ (4)

யோ ஹி தே$_3$வாந் ஸக$_3$ந்த$_4$ர்வாநஸுராந் ஸஹ ராக்ஷஸை: ।
நிஹந்யாத்$_3$ராக$_4$வ: க்ருத்$_3$த$_4$: ஸ தை$_3$வமநுவர்ததே ॥ (5)

புரா ராம: பிதுர்வாக்யாத்$_3$த$_3$ண்ட$_3$கே விஜநே வநே ।
உஷித்வா நவ வர்ஷாணி பஞ்ச சைவ மஹாவநே ।
ததோ து$_3$:க$_2$தரம் பூ$_4$ய: ஸீதயா விப்ரவாஸநம் ॥ (6)

பௌராணாம் வசநம் ஶ்ருத்வா ந்ருஶம்ஸம் ப்ரதிபா$_4$தி மே ।
கோ நு த$_4$ர்மாஶ்ரய: ஸூத கர்மண்யஸ்மிந் யஶோஹரே ॥
மைதி$_2$லீம் ப்ரதி ஸம்ப்ராப்த: பௌரைர்ஹீநார்த$_2$வாதி$_3$பி$_4$: ॥ (7)

ஏதா வாசோ ப$_3$ஹுவிதா$_4$: ஶ்ருத்வா லக்ஷ்மணபா$_4$ஷிதா: ।
ஸுமந்த்ர: ஶ்ரத்$_3$த$_4$யா ப்ராக்ஞோ வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (8)

ந ஸந்தாபஸ்த்வயா கார்ய: ஸௌமித்ரே மைதி$_2$லீம் ப்ரதி ।
த்$_3$ருஷ்டமேதத் புரா விப்ரை: பிதுஸ்தே லக்ஷ்மணாக்$_3$ரத: ॥ (9)

ப$_4$விஷ்யதி த்$_3$ருட$_4$ம் ராமோ து$_3$:க$_2$ப்ராயோऽபி ஸௌக்$_2$யபா$_4$க் ।
ப்ராப்ஸ்யதே ச மஹாபா$_3$ஹுர்விப்ரயோக$_3$ம் ப்ரியைர்த்$_4$ருவம் ॥ (10)

த்வாம் சைவ மைதி$_2$லீம் சைவ ஶத்ருக்$_4$நப$_4$ரதாவுபௌ$_4$ ।
ஸந்த்யஜிஷ்யதி த$_4$ர்மாத்மா காலேந மஹதா மஹாந் ॥ (11)

இத$_3$ம் த்வயி ந வக்தவ்யம் ஸௌமித்ரே ப$_4$ரதேऽபி வா ।
ராக்ஞோ வோ வ்யாஹ்ருதம் வாக்யம் துர்வாஸா யது$_3$வாச ஹ ॥ (12)

மஹாஜநஸமீபே ச மம சைவ நரர்ஷப$_4$ ।
ருஷிணா வ்யாஹ்ருதம் வாக்யம் வஸிஷ்ட$_2$ஸ்ய ச ஸந்நிதௌ$_4$ ॥ (13)

Koviloor Digital Library

ஸர்க்கம் : ஐம்பது

சுமந்திரர் ரகசியத்தை வெளிப்படுத்துதல்

மிதிலைச் செல்வி சீதை, ரிஷி பத்தினிகளுடன் ஆசிரமத்திற்குச் சென்றுவிட்டதைப் பார்த்துக் கொண்டிருந்த லட்சுமணன், பரிதவிக்கும் உள்ளத்துடன் பயங்கரமான மனக்கொதிப்பை அடைந்தான். (1)

மகாதேஜஸ்வியான லட்சுமணன், மந்திராலோசனைகளில் கலந்து கொள்ளும் சுமந்திரரைப் பார்த்து, ''தேரோட்டியே! இனி, சீதையைப் பிரிந்ததனால் உண்டான துயரத்தை இராமபிரான் அனுபவிக்கப் போவதைக் காண்பீர்கள்'' என்றான். (2)

ஜனகன் புதல்வியும் தூய ஒழுக்கமுடைய மனைவியுமான சீதையைத் துறப்பது என்பதைக் காட்டிலும், எந்த மிகப்பெரிய வேதனை இராமனுக்கு ஏற்படப் போகிறது? (3)

தேரோட்டியே! இராகவன் சீதையைத் துறந்ததற்குக் காரணம், விதி என்றே நான் எண்ணுகிறேன். ஒருபோதும் விதியை மீறிச்செல்ல முடியாது. (4)

கோபங்கொண்ட எந்த இராகவன், தேவ–கந்தர்வ–அசுர–அரக்கர்களைக் கொல்லும் ஆற்றல் படைத்தவரோ, அதே இராகவன் விதியை அனுசரித்துச் செல்கிறார்! (அவராலும் விதியை மீறிச் செல்ல முடியவில்லை.) (5)

முன்னர் தந்தையின் சொற்படி, மனித சஞ்சாரமில்லாத தண்டகாரண்யத்தில் பதிநான்கு ஆண்டுகள் கழித்தார். (அரசமாளிகையில் சகல சுகபோகங்களுடன் வாழ வேண்டிய அவருக்கு இத்தகைய கஷ்டத்தை அனுபவிக்க நேரிட்டது.) சீதையை நாட்டிலிருந்து வெளியேற்றுவது என்பது அதைவிட (வனவாசத்தைவிட) மிகப்பெரும் துயரத்தைத் தருவது. (6)

ஆனால், நகரமக்களின் பேச்சைக் கேட்டு, இவ்வாறு செய்வது (சீதையைத் துறப்பது) கொஞ்சங்கூட கருணையற்ற செயல் என்று எனக்குத் தோன்றுகிறது. தேரோட்டியே! சீதையின்மேல், நியாயமில்லாத பழிச்சொற்களைக் கூறும் நகரமக்களுக்கு அஞ்சி, புகழை அழிக்கும் இந்தக் காரியத்தைச் செய்து, இராமன் எந்த அறநெறியைப் பின்பற்றினார்?'' (7)

இவ்வாறாக, பலவிதமாக லட்சுமணன் கூறிய சொற்களைக் கேட்ட அறிவாளியான சுமந்திரர் மிகவும் அடக்கத்துடன் பின்வரும் மொழிகளைப் புகன்றார்— (8)

''சுமித்திரைச் செல்வனே! சீதையைக் குறித்து நீங்கள் மனவேதனை அடைய வேண்டாம். லட்சுமணா! ஏனென்றால், (இராமனுடைய பாக்கியக் குறைவினால், சீதையைப் பிரிந்திருக்க நேரிடும் – என்று) உங்கள் தந்தையிடம் வேதவிற்பன்னர்கள் கூறியதைத் தெரிந்து கொண்டிருக்கிறேன். (9)

'துன்பத்தை அனுபவிக்க நேரிட்டாலும் இராமன் நிச்சயமாக சௌக்கியமாகவே இருப்பான். பெருந்தோளனான அவன், நிச்சயமாக அன்புக்குரியவர்களைப் பிரிய நேரிடும். (10)

உன்னையும் (தசரதரையும்) மைதிலியையும் பரத–சத்ருக்னர்களையும், நீண்ட காலத்திற்குப் பின்னர், தருமாத்மாவான இராமன் துறந்து விடுவான்.' (11)

லட்சுமணா! இந்தச் செய்தியை உன்னிடமோ, பரதனிடமோ சொல்லக்கூடாது – என்று, துர்வாச முனிவர் கூறிய ரகசியத்தை, மன்னர் என்னிடம் கூறினார். (12)

ஆண்மை மிக்கவரே! மேன்மக்கள் கூடியிருந்த இடத்தில், நானும் வசிஷ்டரும் கேட்டுக் கொண்டிருக்கும்போது துர்வாச முனிவரால் இவ்வாறு கூறப்பட்டது. (13)

Koviloor Digital Library

ருஷேஸ்து வசநம் ஶ்ருத்வா மாமாஹ புருஷர்ஷப$_4$: ।
ஸூத ந க்வசிதே$_3$வம் தே வக்தவ்யம் ஜநஸந்நிதௌ$_4$ ॥ (14)

தஸ்யாஹம் லோகபாலஸ்ய வாக்யம் தத் ஸுஸமாஹித: ।
நைவ ஜாத்வந்ருதம் கார்யமிதி மே ஸௌம்ய தர்ஶநம் ॥ (15)
ஸர்வதை$_2$வ ந வக்தவ்யம் மயா ஸௌம்ய தவாக்$_3$ரத: ।
யதி$_3$ தே ஶ்ரவணே ஶ்ரத்$_3$தா$_4$ ஶ்ரூயதாம் ரகு$_4$நந்த$_3$ந ॥ (16)
யத்$_3$யப்யஹம் நரேந்த்$_3$ரேண ரஹஸ்யம் ஶ்ராவித: புரா ।
ததா$_2$ப்யுதா$_3$ஹரிஷ்யாமி தை$_3$வம் ஹி து$_3$ரதிக்ரமம் ॥ (17)
யேநேத$_3$மீத்$_3$ருஶம் ப்ராப்தம் து$_3$:க$_2$ம் ஶோகஸமந்விதம் ।
ந த்வயா ப$_4$ரதே வாக்யம் ஶத்ருக்$_4$நஸ்யாபி ஸந்நிதௌ$_4$ ॥ (18)
தச்ச்$_2$ருத்வா பா$_4$ஷிதம் தஸ்ய க$_3$ம்பீ$_4$ரார்த$_2$பத$_3$ம் மஹத் ।
தத்$_2$யம் ப்$_3$ரூஹீதி ஸௌமித்ரி: ஸூதம் வாக்யமதா$_2$ப்$_3$ரவீத் ॥ (19)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ பஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

ஏகபஞ்சாஶ: ஸர்க$_3$:

து$_3$ர்வாஸோவாக்யகத$_2$நம்

ததா$_2$ ஸஞ்சோதி$_3$த: ஸூதோ லக்ஷ்மணேந மஹாத்மநா ।
தத்$_3$வாக்யம்ருஷிணா ப்ரோக்தம் வ்யாஹர்துமுபசக்ரமே ॥ (1)
புரா நாம்நா ஹி து$_3$ர்வாஸா அத்ரே: புத்ரோ மஹாமுநி: ।
வஸிஷ்ட$_2$ஸ்யாஶ்ரமே புண்யே வார்ஷிக்யம் ஸமுவாஸ ஹ ॥ (2)
தமாஶ்ரமம் மஹாதேஜா: பிதா தே ஸுமஹாயஶா: ।
புரோஹிதம் மஹாத்மாநம் தி$_3$த்$_3$ருக்ஷுரக$_3$மத் ஸ்வயம் ॥ (3)
ஸ த்$_3$ருஷ்ட்வா ஸூர்யஸங்காஶம் ஜ்வலந்தமிவ தேஜஸா ।
உபவிஷ்டம் வஸிஷ்ட$_2$ஸ்ய ஸவ்யபார்ஶ்வே மஹாமுநிம் ॥
தௌ முநீ தாபஸஶ்ரேஷ்டௌ$_2$ விநீதோ ஹ்யபி$_4$வாத$_3$யத் ॥ (4)
ஸ தாப்$_4$யாம் பூஜிதோ ராஜா ஸ்வாக$_3$தேநாஸநேந ச ।
பாத்$_3$யேந ப$_2$லமூலைஶ்ச உவாஸ முநிபி$_4$: ஸஹ ॥ (5)
தேஷாம் தத்ரோபவிஷ்டாநாம் தாஸ்தா: ஸுமது$_4$ரா: கதா$_2$: ।
ப$_3$பூ$_4$வு: பரமர்ஷீணாம் மத்$_4$யாதி$_3$த்யக$_3$தேऽஹநி ॥ (6)
தத: கதா$_2$யாம் கஸ்யாம்சித் ப்ராஞ்ஜலி: ப்ரக்$_3$ரஹோ ந்ருப: ।
உவாச தம் மஹாத்மாநமத்ரே: புத்ரம் தபோத$_4$நம் ॥ (7)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_20_Back

Koviloor Digital Library

துர்வாச முனிவரின் சொற்களைக் கேட்ட பின்னர், மன்னர் (தசரதர்) 'தேரோட்டியே! மக்களிடம் இந்தச் செய்தியை ஒருபோதும் நீ கூறக்கூடாது' என்று ஆணையிட்டார். (14)

ஐயனே! 'உலகைக் காக்கும் மன்னரின் சொற்களை ஒருபோதும் பொய்யாக்கிவிடக் கூடாது' என்பதில் நான் மிகக் கவனமாக இருந்து வருகிறேன். (15)

ரகு நந்தனரே! இந்த ரகசியத்தை நான் ஒருக்காலும் உங்களிடம் கூறக்கூடாதுதான். கேட்பதில் விருப்பமிருந்தால், கேளுங்கள். (16)

முன்பு ஒரு சமயத்தில், 'இந்த ரகசியத்தை மற்றவர்களுக்குத் தெரிவிக்கக்கூடாது' என்று அரசர் ஆணையிட்டிருந்தாலும், இப்போது உங்களுக்கு நான் அந்தச் செய்தியைக் கூறப்போகிறேன். விதியை மீறிச்செல்ல முடியாது. அதனால்தான் இத்தகைய துன்பமும் வருத்தமும் வந்திருக்கின்றன. இந்த விஷயத்தை பரத–சத்ருக்னர்களிடம் நீங்கள் சொல்லக்கூடாது.'' (17,18)

தெளிவும் மிகவும் பொருளுள்ளதுமான அந்த உரையைக் கேட்ட இலக்குவன், ''உண்மையைக் கூறுங்கள்'' என்று தேரோட்டியிடம் கூறினான். (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஐம்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தொன்று

சுமந்திரர், துர்வாசர் சொல்லியதைக் கூறுதல்

மகாத்மாவான லட்சுமணனால் தூண்டப்பட்ட தேரோட்டி, துர்வாச முனிவரால் கூறப்பட்ட செய்தியைச் சொல்ல ஆரம்பித்தார்— (1)

அத்ரியின் புதல்வரும் துர்வாசர் என்று பெயர் கொண்டவருமான மாமுனிவர், முன்னொரு காலத்தில், புனிதமான வசிஷ்டருடைய ஆசிரமத்தில், மாரிக்காலத்தில் அனுஷ்டிக்க வேண்டிய சாதுர்மாஸ்ய விரதத்தை மேற்கொண்டார். (2)

பேராற்றலுடையவரும் பெரும் புகழ்கொண்டவருமான உங்கள் தந்தை (தசரதர்), அரச புரோகிதரும் மகாத்மாவுமான வசிஷ்டரைக் காண்பதற்காக, தானே அந்த ஆசிரமத்திற்குச் சென்றார். (3)

வசிஷ்டரையும், அவருடைய இடது பக்கத்தில் சூரியனுக்கு நிகராக ஒளிவீசிக் கொண்டும் ஆன்மப் பொலிவினால் பிரகாசித்துக் கொண்டும் வீற்றிருக்கும் மாமுனிவர் துர்வாசரையும் பார்த்து, அவ்விரு தவச்செல்வர்களுக்கும் பணிவுடன் வணக்கம் செலுத்தினார். (4)

அவ்விருவரும் அரசனுக்கு நல்வரவு கூறி, ஆசனம் அளித்து, பாத்யம் கொடுத்து, பழம்–கிழங்குகள் வழங்கி உபசரித்தார்கள். அவர், அந்த முனிவர்கள் அருகில் அமர்ந்து கொண்டார். (5)

அவ்விடத்தில் அமர்ந்திருந்த அந்த ரிஷிகள் ஒவ்வொருவரும் இனிய பேச்சுக்களைப் பேசிக் கொண்டிருக்கும்போதே நண்பகல் வேளை கடந்துவிட்டது. (6)

இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போது, ஒரு சந்தர்ப்பத்தில், மன்னர் வணக்கத்துடன் கைகளைக் கூப்பிக் கொண்டு, மகாத்மா அத்ரியின் குமாரரும் தவச்செல்வருமான துர்வாசரைப் பார்த்துக் கேட்டார்— (7)

Koviloor Digital Library

ப$_4$க$_3$வந் கிம்ப்ரமாணேந மம வம்ஶோ ப$_4$விஷ்யதி ।
கிமாயுஶ்ச ஹி மே ராம: புத்ராஶ்சாந்யே கிமாயுஷ: ॥ (8)

ராமஸ்ய ச ஸுதா யே ஸ்யுஸ்தேஷாமாயு: கியத்$_3$ப$_4$வேத் ।
காம்யயா ப$_4$க$_3$வந் ப்$_3$ரூஹி வம்ஶஸ்யாஸ்ய க$_3$திம் மம ॥ (9)

தச்ச்$_2$ருத்வா வ்யாஹ்ருதம் வாக்யம் ராஜ்ஞோ த$_3$ஶரத$_2$ஸ்ய ச ।
து$_3$ர்வாஸா: ஸுமஹாதேஜா வ்யாஹர்துமுபசக்ரமே ॥ (10)

ஶ்ருணு ராஜந் புராவ்ருத்தம் தத$_3$ா தை$_3$வாஸுரே யுதி$_4$ ।
தை$_3$த்யா: ஸுரைர்ப$_4$ர்த்ஸ்யமாநா ப்$_4$ருகு$_3$பத்நீம் ஸமாஶ்ரிதா: ॥
தயா த$_3$த்தாப$_4$யாஸ்தத்ர ந்யவஸந்நப$_4$யாஸ்தத$_3$ா ॥ (11)

தயா பரிக்$_3$ருஹீதாம்ஸ்தாந் த்$_3$ருஷ்ட்வா க்ருத்$_3$த$_4$: ஸுரேஶ்வர: ।
சக்ரேண ஶிதத$_4$ாரேண ப்$_4$ருகு$_3$பத்ந்யா: ஶிரோऽஹரத் ॥ (12)

ததஸ்தாம் நிஹதாம் த்$_3$ருஷ்ட்வா பத்நீம் ப்$_4$ருகு$_3$குலோத்$_3$வஹ: ।
ஶஶாப ஸஹஸா க்ருத்$_3$தே$_4$ா விஷ்ணும் ரிபுகுலார்த$_3$நம் ॥ (13)

யஸ்மாத$_3$வத்$_4$யாம் மே பத்நீமவதீ$_4$: க்ரோத$_4$மூர்சி$_2$த: ।
தஸ்மாத்த்வம் மாநுஷே லோகே ஜநிஷ்யஸி ஜநார்த$_3$ந ॥
தத்ர பத்நீவியோக$_3$ம் த்வம் ப்ராப்ஸ்யஸே ப$_3$ஹுவார்ஷிகம் ॥ (14)

ஶாபாபி$_4$ஹதசேதா: ஸ ஸ்வாத்மநா ப$_4$ாவிதோऽப$_4$வத் ।
அர்சயாமாஸ தம் தே$_3$வம் ப்$_4$ருகு$_3$: ஶாபேந பீடி$_3$த: ॥ (15)

தபஸாராதி$_4$தோ தே$_3$வோ ஹ்யப்$_3$ரவீத்$_3$ப$_4$க்தவத்ஸல: ।
லோகாநாம் ஸம்ப்ரியார்த$_2$ம் து தம் ஶாபம் க்$_3$ராஹ்யமுக்தவாந் ॥ (16)

இதி ஶப்தோ மஹாதேஜா ப்$_4$ருகு$_3$ணா பூர்வஜந்மநி ।
இஹாக$_3$தோ ஹி புத்ரத்வம் தவ பார்தி$_2$வஸத்தம ॥ (17)

ராம இத்யபி$_4$விக்$_2$யாதஸ்த்ரிஷு லோகேஷு மாநத$_3$ ।
தத்ப$_2$லம் ப்ராப்ஸ்யதே சாபி ப்$_4$ருகு$_3$ஶாபக்ருதம் மஹத் ॥ (18)

அயோத்$_4$யாயா: பதீ ராமோ தீ$_3$ர்க$_4$காலம் ப$_4$விஷ்யதி ।
தத்ர பத்நீவியோக$_3$ம் ச தீ$_3$ர்க$_4$காலம் க$_3$மிஷ்யதி ॥
ஸுகி$_2$நஶ்ச ஸம்ருத்$_3$த$_4$ாஶ்ச ப$_4$விஷ்யந்த்யஸ்ய யேऽநுக$_3$ா: ॥ (19)

த$_3$ஶ வர்ஷஸஹஸ்ராணி த$_3$ஶ வர்ஷஶதாநி ச ।
ராமோ ராஜ்யமுபாஸித்வா ப்$_3$ரஹ்மலோகம் க$_3$மிஷ்யதி ॥ (20)

ஸம்ருத்$_3$தை$_4$ஶ்சாஶ்வமேதை$_4$ஶ்ச இஷ்ட்வா பரமது$_3$ர்ஜய: ।
ராஜவம்ஶாம்ஶ்ச ப$_3$ஹுஶோ ப$_3$ஹூந் ஸம்ஸ்தா$_2$பயிஷ்யதி ॥ (21)

Koviloor Digital Library

''பகவானே! என்னுடைய குலம் எவ்வளவு காலம் வரை நீடிக்கும்? என்னுடைய இராமனுக்கு எவ்வளவு ஆயுள்? மற்ற புதல்வர்களுக்கும் ஆயுள் எவ்வளவு? (8)

இராமனுக்குத் தோன்றும் குமாரர்களுக்கு எவ்வளவு வயது? என்னுடைய குலத்தின் தொடர்ச்சியைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவலால் கேட்கிறேன்.'' (9)

மன்னர் தசரதர் கூறியதைக் கேட்ட மகாதேஜஸ்வியான துர்வாசர் சொல்லத் தொடங்கினார்— (10)

''மன்னரே! கேளுங்கள். மிகப்பழைய காலத்தில் நடந்த நிகழ்ச்சி. தேவர்களுக்கும் அசுரர்களுக்குமிடையே நடந்த போரில், தேவர்களால் தாக்கப்பட்ட அசுரர்கள், பிருகு முனிவரின் பத்தினியைச் சரண் அடைந்தார்கள். அவர், அவர்களுக்கு அபயமளித்தார். அவ்விடத்தில் அச்சமில்லாமல் அவர்கள் வாழ்ந்துக் கொண்டிருந்தார்கள். (11)

அவர், அசுரர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததைக் கண்டு கோபங்கொண்டு, தேவர்களுக்குத் தலைவரான பகவான் விஷ்ணு, கூரிய முனைகளையுடைய சக்ராயுதத்தால் அவரை வெட்டினார். (12)

தன்னுடைய மனைவி கொல்லப்பட்டதைக் கண்ட பிருகு முனிவர், உடனே கோபம் கொண்டு, எதிரிகளின் குலத்தை நாசம் செய்யும் விஷ்ணுவுக்குச் சாபம் கொடுத்தார். (13)

'ஜனார்தனரே! கொல்லத்தகாத என் மனைவியைப் பெருங்கோபத்திற்கு ஆட்பட்டுக் கொன்றுவிட்டீர்கள். அதனால், நீங்கள் மானுட உலகில் பிறக்கக்கடவீர். அங்கு, மனைவியைப் பல ஆண்டுகள் பிரிந்து வாழும் துயரத்தை அனுபவிக்கப் போகிறீர்கள்.' (14)

ஆனால், சாபம் கொடுத்த பிறகு, தன்னுடைய 'சாபம் பலிக்காமல் போய்விடுமோ?' என்று பரிதவித்த பிருகு முனிவர், தான் கொடுத்த சாபம் பலிக்க வேண்டும் என்பதற்காக அந்த மகாவிஷ்ணுவையே வழிபட்டார். (15)

தவத்தினால் ஆராதிக்கப்பட்டவரும் அடியார்களிடம் அன்பு கொண்டவருமான மகாவிஷ்ணு, 'எல்லா உலக மக்களுக்கும் மனமகிழ்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காக, உங்கள் சாபத்தை ஏற்றுக் கொள்கிறேன்' என்றார். (16)

அரசருக்கு அரசே! பிறருக்கு மரியாதை கொடுப்பவரே! (மகாவிஷ்ணு) எல்லையில்லாத் தவ ஆற்றல் பெற்ற பிருகு முனிவரால் முன்னொரு பிறவியில் சபிக்கப்பட்டவர், மூன்று உலகங்களிலும் பெரும்புகழ் கொண்ட இராமன் என்ற பெயரைத் தாங்கி, இப்போது உங்கள் புதல்வராக வந்திருக்கிறார். பிருகுவினுடைய சாபத்தின் பயனை (மனைவியைப் பிரிந்து வாழும் கொடுமையை) அடையப் போகிறார். (17,18)

அயோத்தியின் மன்னராக இராமன் நீண்டகாலம் ஆட்சி செய்யப் போகிறார். அப்போது பத்தினியின் பிரிவில் நீண்டகாலம் கழிந்துவிடும். இவரை (இராமனை) அண்டி வாழ்பவர்கள் சௌக்கியமாகவும் செல்வச் செழிப்புள்ளவர்களாகவும் இருப்பார்கள். (19)

ஆயிரம், பத்து வருடங்கள்; ஆயிரம், நூறு வருடங்கள் (பதினோராயிரம் வருடங்கள்) இராமன் ஆட்சி செய்து விட்டு, பிரும்மலோகம் (வைகுண்டம்) செல்லப்போகிறார். (இராமன், பரப்பிரும்மம், அவருடைய உலகம் – பிரும்மலோகம்.) (20)

எவராலும் வெல்ல முடியாத இராமன், ஏராளமாகப் பொருட்செலவு செய்து, அநேக அசுவமேத யாகங்களைச் செய்யப் போகிறார்; கணக்கில்லாத அரச பரம்பரையையும் நிலைநிறுத்தப் போகிறார். (21)

Koviloor Digital Library

த்$_3$வௌ புத்ரௌ து ப$_4$விஷ்யேதே ஸீதாயாம் ராக$_4$வஸ்ய து ।
அந்யத்ர ந த்வயோத்$_4$யாயாம் ஸத்யமேதந்ந ஸம்ஶய: ॥ (22)

ஸீதாயாஶ்ச தத: புத்ராவாபி$_4$ஷேக்ஷ்யதி ராக$_4$வ: ।
ஸ ஸர்வமகி$_2$லம் ராக்ஞோ வம்ஶஸ்யாஹ க$_3$தாக$_3$தம் ॥ (23)

ஆக்$_2$யாய ஸுமஹாதேஜாஸ்தூஷ்ணீமாஸீந்மஹாமுநி: ।
தூஷ்ணீம்பூ$_4$தே தத$_3$ா தஸ்மிந் ராஜா த$_3$ஶரதே$_2$ா முநௌ ॥
அபி$_4$வாத்$_3$ய மஹாத்மாநௌ புநராயாத் புரோத்தமம் ॥ (24)

ஏதத்$_3$வசோ மயா தத்ர முநிநா வ்யாஹ்ருதம் புரா ।
ஶ்ருதம் ஹ்ருதி$_3$ ச நிக்ஷிப்தம் நாந்யத$_2$ா தத்$_3$ப$_4$விஷ்யதி ॥ (25)

ஏவம் க$_3$தே ந ஸந்தாபம் கர்துமர்ஹஸி ராக$_4$வ ।
ஸீதார்தே$_2$ ராக$_4$வார்தே$_2$ வா த்$_3$ருடே$_4$ா ப$_4$வ நரோத்தம ॥ (26)

ஶ்ருத்வா து வ்யாஹ்ருதம் வாக்யம் ஸூதஸ்ய பரமாத்$_3$பு$_4$தம் ।
ப்ரஹர்ஷமதுலம் லேபே$_4$ ஸாது$_4$ ஸாத்$_4$விதி சாப்$_3$ரவீத் ॥ (27)

தத: ஸம்வத$_3$தோரேவம் ஸூதலக்ஷ்மணயோ: பதி$_2$ ।
அஸ்தமர்கே க$_3$தே வாஸம் கேஶிந்யாம் தாவதே$_2$ாஷது: ॥ (28)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகபஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

த்$_3$விபஞ்சாஶ: ஸர்க$_3$:

ராமஸமாத$_4$ரநம்

தத்ர தாம் ரஜநீமுஷ்ய கேஶிந்யாம் ரகு$_4$நந்த$_3$ந: ।
ப்ரப$_4$ாதே புநருத்த$_2$ாய லக்ஷ்மண: ப்ரயயௌ தத$_3$ா ॥ (1)

ததோऽர்த$_4$தி$_3$வஸே ப்ராப்தே ப்ரவிவேஶ மஹாரத$_2$: ।
அயோத்$_4$யாம் ரத்நஸம்பூர்ணாம் ஹ்ருஷ்டபுஷ்டஜநாவ்ருதாம் ॥ (2)

ஸௌமித்ரிஸ்து பரம் தை$_3$ந்யம் ஜக$_3$ாம ஸுமஹாமதி: ।
ராமபாதௌ$_3$ ஸமாஸாத்$_3$ய வக்ஷ்யாமி கிமஹம் க$_3$த: ॥ (3)

தஸ்யைவம் சிந்தயாநஸ்ய ப$_4$வநம் ஶஶிஸந்நிப$_4$ம் ।
ராமஸ்ய பரமோத$_3$ாரம் புரஸ்தாத் ஸமத்$_3$ருஶ்யத ॥ (4)

ராக்ஞஸ்து ப$_4$வநத்$_3$வாரி ஸோऽவதீர்ய நரோத்தம: ।
அவாங்முகே$_2$ா தீ$_3$நமநா: ப்ரவிவேஶாநிவாரித: ॥ (5)

ஸ த்$_3$ருஷ்ட்வா ராக$_4$வம் தீ$_3$நமாஸீநம் பரமாஸநே ।
நேத்ராப்$_4$யாமஶ்ருபூர்ணாப்$_4$யாம் த$_3$த$_3$ர்ஶாக்$_3$ரஜமக்$_3$ரத: ॥ (6)

Koviloor Digital Library

இராமன், சீதை மூலமாக இரண்டு புத்திரர்களை அடையப் போகிறார். சீதையினுடைய குமாரர்களுக்கு அயோத்தியில் (வேறு இடத்தில் அல்ல) பட்டம் சூட்டப் போகிறார். இது சத்தியம். சந்தேகமில்லை.'' இவ்வாறாக, மன்னரது சென்றுவிட்ட (கடந்தகால), வரப்போகிற பரம்பரையைப் பற்றிய முழுத் தகவல்களையும் முனிவர் கூறி முடித்தார். (22,23)

இவ்வாறு கூறிவிட்டு, ஆன்மவொளியினால் பிரகாசிக்கும் முனிவர் பேச்சை நிறுத்தி, மௌனம் அடைந்தார். முனிவர்கள் பேச்சை நிறுத்திக் கொண்டதும், மகாத்மாக்களான அவர்களை வணங்கிவிட்டு, அரசர் (தசரதர்) தன் நகரத்திற்குத் திரும்பினார். (24)

முன்னர் ஒரு காலத்தில், முனிவரால் கூறப்பட்ட இந்த விபரங்களை நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். எவரிடமும் கூறாமல், என் இதயத்திற்குள்ளேயே வைத்திருந்தேன். ஏனென்றால், (அரசருடைய ஆணை) மீறப்பட்டதாக ஆகக் கூடாது. (25)

ரகு குலத்தோன்றலே! எனவே, சீதைக்கும் இராமனுக்கும் நேர்ந்துவிட்ட துன்பங்கள் குறித்து, நீங்கள் மனவேதனைப்பட வேண்டாம்.'' (26)

தேரோட்டியின் ஆச்சரியமான உரையைக் கேட்ட லட்சுமணன், இணையில்லாத மகிழ்ச்சி அடைந்தான். ''ஆகா! அப்படியா! நல்லது!'' என்று பதில் கூறினான். (27)

பிரயாணம் செய்து கொண்டிருக்கும் சுமந்திரருக்கும் லட்சுமணனுக்கும் இடையே இவ்வாறு உரையாடல் நடந்து கொண்டிருந்தபோது சூரியன் மறையத் தொடங்கினான். அவர்கள் கேசினீ நதிக்கரையில் இரவைக் கழித்தார்கள். (28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஐம்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்திரண்டு

லட்சுமணன், இராமனுக்கு ஆறுதல் கூறுதல்

ரகு நந்தனனான லட்சுமணன், கேசினீ நதிக்கரையில் அன்றிரவைக் கழித்துவிட்டு, பொழுது விடிந்ததும் விழித்தெழுந்து அங்கிருந்து செல்லத் தொடங்கினான். (1)

நண்பகல் வேளையில், விசாலமான அந்த ரதம் பல்வகைச் செல்வங்களைக் கொண்டதும், மனமகிழ்ச்சியும் உடல்வலிமையும் கொண்ட மக்கள் நிரம்பியதுமான அயோத்திக்குள் பிரவேசித்தது. (2)

பேரறிஞனான லட்சுமணன் அப்போது மிகவும் பரிதாபத்தை அடைந்தான். 'இராமனுடைய திருவடிகளை வணங்குவதற்காக அவரை அணுகியதும், நான் அவருக்கு என்ன சொல்வேன்?' என்று மனம் கலங்கினான். (3)

அவன் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கும் போது முழுநிலா போல் ஒளிவீசுவதும் விசாலமானதுமான இராமனுடைய மாளிகை எதிரில் தென்பட்டது. (4)

அரசமாளிகையின் வாயிலில் புருஷோத்தமனான இலக்குவன் தேரிலிருந்து இறங்கி, மனத்துயரத்தால் குனிந்த தலையுடன், எவராலும் தடுக்கப்படாமல் உள்ளே சென்றான். (5)

எதிரில் மிகவும் துயரத்துடன் ஒரு சிம்மாசனத்தில் இராமன் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. (6)

Koviloor Digital Library

ஜக்$_3$ராஹ சரணௌ தஸ்ய லக்ஷ்மணோ தீ$_3$நசேதந: ।
உவாச தீ$_3$நயா வாசா ப்ராஞ்ஜலி: ஸுஸமாஹித: ॥ (7)

ஆர்யஸ்யாக்ஞாம் புரஸ்க்ருத்ய விஸ்ருஜ்ய ஜநகாத்மஜாம் ।
க$_3$ங்கா$_3$தீரே யதோ$_2$த்$_3$தி$_3$ஷ்டே வால்மீகேராஶ்ரமே ஶுசௌ ॥ (8)

தத்ர தாம் ச ஶுபா$_4$சாராமாஶ்ரமாந்தே யஶஸ்விநீம் ।
புநரப்யாக$_3$தோ வீர பாத$_3$மூலமுபாஸிதும் ॥ (9)

மா ஶுச: புருஷவ்யாக்$_4$ர காலஸ்ய க$_3$திரீத்$_3$ருஶீ ।
த்வத்$_3$விதா$_4$ ந ஹி ஶோசந்தி பு$_3$த்$_3$தி$_4$மந்தோ மநஸ்விந: ॥ (10)

ஸர்வே க்ஷயாந்தா நிசயா: பதநாந்தா: ஸமுச்ச்$_2$ரயா: ।
ஸம்யோகா$_3$ விப்ரயோகா$_3$ந்தா மரணாந்தம் ச ஜீவிதம் ॥ (11)

தஸ்மாத் புத்ரேஷு தா$_3$ரேஷு மித்ரேஷு ச த$_4$நேஷு ச ।
நாதிப்ரஸங்க$_3$: கர்தவ்யோ விப்ரயோகோ$_3$ ஹி தைர்த்$_4$ருவம் ॥ (12)

ஶக்தஸ்த்வமாத்மநாத்மாநம் விநேதும் மநஸைவ ஹி ।
லோகாந் ஸர்வாம்ஶ்ச காகுத்ஸ்த$_2$ கிம் புந: ஶோகமாத்மந: ॥ (13)

நேத்$_3$ருஶேஷு விமுஹ்யந்தி த்வத்$_3$விதா$_4$: புருஷர்ஷபா$_4$: ।
அபவாத$_3$: ஸ கில தே புநரேஷ்யதி ராக$_4$வ ॥ (14)

யத$_3$ர்த$_2$ம் மைதி$_2$லீ த்யக்தா அபவாத$_3$ப$_4$யாந்ந்ருப ।
ஸோ஽பவாத$_3$: புரே ராஜந் ப$_4$விஷ்யதி ந ஸம்ஶய: ॥ (15)

ஸ த்வம் புருஷஶார்தூ$_3$ல தை$_4$ர்யேண ஸுஸமாஹித: ।
த்யஜைநாம் து$_3$ர்ப$_3$லாம் பு$_3$த்$_3$தி$_4$ம் ஸந்தாபம் மா குருஷ்வ ஹ ॥ (16)

ஏவமுக்த: ஸ காகுத்ஸ்தோ$_2$ லக்ஷ்மணேந மஹாத்மநா ।
உவாச பரயா ப்ரீத்யா ஸௌமித்ரிம் மித்ரவத்ஸல: ॥ (17)

ஏவமேதந்நரஶ்ரேஷ்ட$_2$ யதா$_2$ வத$_3$ஸி லக்ஷ்மண ।
பரிதோஷஶ்ச மே வீர மம கார்யாநுஶாஸநே ॥ (18)

நிர்வ்ருதிஶ்சாக$_3$தா ஸௌம்ய ஸந்தாபஶ்ச நிராக்ருத: ।
ப$_4$வத்$_3$வாக்யை: ஸுருசிரைரநுநீதோ஽ஸ்மி லக்ஷ்மண ॥ (19)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்$_3$விபஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

த்ரிபஞ்சாஶ: ஸர்க$_3$:

ந்ருக$_3$ஶாபகத$_2$நம்

லக்ஷ்மணஸ்ய து தத்$_3$வாக்யம் நிஶம்ய பரமாத்$_3$பு$_4$தம் ।
ஸுப்ரீதஶ்சாப$_4$வத்$_3$ராமோ வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (1)

Koviloor Digital Library

நொந்துபோன உள்ளத்துடனிருந்த லட்சுமணன், அவருடைய பாதங்களில் பணிந்தான். மனத்தை ஒருமுகப்படுத்தி, கைகளைக் கூப்பிக் கொண்டு தடுமாறும் சொற்களைப் புகன்றான். (7)

''மன்னரின் ஆணைப்படி, ஜனக குமாரியும் புகழ்பெற்றவரும் நல்ல பழக்க–வழக்கங்கள் உடையவருமான சீதையை, கங்கைக் கரையில், வால்மீகியின் புனிதமான ஆசிரமத்திற்கு அருகில், மன்னர் குறிப்பிட்ட இடத்தில் விட்டுவிட்டு, மீண்டும் தங்கள் திருவடிகளுக்குப் பணி செய்வதற்காகத் திரும்பி வந்திருக்கிறேன். (8,9)

ஆண்புலியே! தாங்கள் வருத்தமடைய வேண்டாம். காலத்தின் போக்கு இவ்வாறாக இருக்கிறது. தங்களைப் போன்ற துணிச்சலுள்ள அறிவாளிகள் எதைக் குறித்தும் வருந்துவதில்லை. உலகில் நாம் சேர்த்துக் குவித்து வைப்பவைகள் முடிவில் அழிந்து போகின்றன; மேல் உச்சியின் முடிவு, கீழே விழுவது; சேர்க்கையின் முடிவு, பிரிவு; வாழ்க்கையின் முடிவு, மரணம். (10,11)

அதனால், புதல்வர்–மனைவி–நண்பர்–செல்வம் முதலியவற்றில் அதிகப் பற்றுதல் வைக்கக்கூடாது. ஏனென்றால், அவைகளைப் பிரிவது என்பது நிச்சயம். (12)

காகுத்தரே! தாங்கள் ஆத்மாவினால் தன் ஆத்மாவையும், மனத்தால் மனத்தையும், எல்லா உலகங்களையும் அடக்கிவிடும் ஆற்றல் படைத்தவர். அப்படியிருக்கும்போது, தன்னைப் பற்றியுள்ள சோகத்தை அடக்கி வைத்துக் கொள்வது ஒரு பொருட்டா, என்ன? (13)

தங்களைப் போன்ற ஆண்காளைகள், இம்மாதிரியான தருணங்களில் மனமயக்கம் அடைவதில்லை. தாங்கள் துக்கத்தை வெளிப்படுத்திக் காட்டினால், அந்தப் பழிச்சொல் மீண்டும் தங்களையே வந்து சேரும். (14)

மன்னரே! எந்தப் பழிச்சொல்லுக்குப் பயந்து தாங்கள் சீதாப்பிராட்டியாரைத் தியாகம் செய்தீர்களோ, அதே அபவாதம் நகர மக்களால் பேசப்படும் என்பதில் சந்தேகமில்லை. (15)

அதனால், மனிதருள் புலி போன்றவரே! தாங்கள் தைரியமாக மனத்தை ஒருநிலைப்படுத்தி, மனத்தளர்ச்சியை உண்டாக்கும் சோகத்தைக் கைவிடுங்கள். தாங்கள் மனவேதனைப்பட வேண்டாம்.'' (16)

மகாத்மாவான லட்சுமணன் இவ்வாறு கூறியதும், அன்பர்களிடம் நேசம் பாராட்டும் இராமன் மிகவும் பிரீதியுடன் லட்சுமணனைப் பார்த்துக் கூறினார்— (17)

''புருஷோத்தமனே! லட்சுமணா! நீ கூறியதனைத்தும் உண்மைதான். நீ என் ஆணையை நிறைவேற்றிவிட்டாய். அதனால், நான் மிகவும் சந்தோஷமடைகிறேன். (18)

அன்பனே! துக்கத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டேன்; மனவேதனையைத் துரத்திவிட்டேன். உன்னுடைய இனிய சொற்களால் எனக்கு அமைதி கிடைத்துவிட்டது.'' (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஐம்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து மூன்று

நிருகன் பெற்ற சாபம்

லட்சுமணனுடைய யுக்திபூர்வமான சொற்களைக் கேட்ட இராமன் மிகவும் மகிழ்ந்து பின்வருமாறு கூறினார்— (1)

Koviloor Digital Library

து$_3$ர்லப$_4$ஸ்த்வீத்$_3$ருஶோ ப$_3$ந்து$_4$ரஸ்மிந் காலே விஶேஷத: ।
யாத்$_3$ருஶஸ்த்வம் மஹாபு$_3$த்$_3$தே$_4$ மம ஸௌம்ய மநோऽநுக$_3$: ॥ (2)

யச்ச மே ஹ்ருத$_3$யே கிஞ்சித்$_3$வர்ததே ஶுப$_4$லக்ஷண ।
தந்நிஶாமய ச ஶ்ருத்வா குருஷ்வ வசநம் மம ॥ (3)

சத்வாரோ தி$_3$வஸா: ஸௌம்ய கார்யம் பௌரஜநஸ்ய வை ।
அகுர்வாணஸ்ய ஸௌமித்ரே தந்மே மர்மாணி க்ருந்ததி ॥ (4)

ஆஹூயந்தாம் ப்ரக்ருதய: புரோதா$_4$ மந்த்ரிணஸ்ததா$_2$ ।
கார்யார்தி$_2$நஶ்ச புருஷா: ஸ்த்ரியோ வா புருஷர்ஷப$_4$ ॥ (5)

பௌரகார்யாணி யோ ராஜா ந கரோதி தி$_3$நே தி$_3$நே ।
ஸம்வ்ருதே நரகே கோ$_4$ரே பதிதோ நாத்ர ஸம்ஶய: ॥ (6)

ஶ்ரூயதே ஹி புரா ராஜா ந்ருகோ$_3$ நாம மஹாயஶா: ।
ப$_3$பூ$_4$வ ப்ருதி$_2$வீபாலோ ப்$_3$ரஹ்மண்ய: ஸத்யவாக் ஶுசி: ॥ (7)

ஸ கதா$_3$சித்$_3$க$_3$வாம் கோடீ: ஸவத்ஸா: ஸ்வர்ணபூ$_4$ஷிதா: ।
ந்ருதே$_3$வோ பூ$_4$மிதே$_3$வேப்$_4$ய: புஷ்கரேஷு த$_3$தௌ$_3$ ந்ருப: ॥ (8)

தத: ஸங்கா$_3$த்$_3$க$_3$தா தே$_4$நு: ஸவத்ஸா ஸ்பர்ஶிதாநக$_4$ ।
ப்$_3$ராஹ்மணஸ்யாஹிதாக்$_3$நேஶ்ச த$_3$ரித்$_3$ரஸ்யோஞ்சவர்திந: ॥ (9)

ஸ நஷ்டாம் கா$_3$ம் க்ஷுதா$_4$ர்தோ வை அந்விஷ்யந்ஸ்தத்ர தத்ர ச ।
நாபஶ்யத் ஸர்வராஜ்யேஷு ஸம்வத்ஸரக$_3$ணாந் ப$_3$ஹூந் ॥ (10)

தத: கநக$_2$லம் க$_3$த்வா ஜீர்ணவத்ஸாம் நிராமயாம் ।
த$_3$த$_3$ர்ஶ தாம் ஸ்வகாம் தே$_4$நும் ப்$_3$ராஹ்மணஸ்ய நிவேஶநே ॥ (11)

அத$_2$ தாம் நாமதே$_4$யேந ஸ்வகேநோவாச ஸ த்$_3$விஜ: ।
ஆக$_3$ச்ச$_2$ ஶப$_3$லேத்யேவம் ஸா து ஶுஶ்ராவ கௌ$_3$: ஸ்வரம் ॥ (12)

தஸ்ய து ஸ்வரமாக்ஞாய க்ஷுதா$_4$ர்தஸ்ய த்$_3$விஜஸ்ய வை ।
அந்வகா$_3$த் ப்ருஷ்ட$_2$த: ஸா கௌ$_3$ர்க$_3$ச்ச$_2$ந்தம் பாவகோபமம் ॥ (13)

யோऽபி பாலயதே விப்ர: ஸோऽபி கா$_3$மந்வகா$_3$த்$_3$த்$_3$ருதம் ।
க$_3$த்வா தம்ருஷிமாசஷ்ட மம கௌ$_3$ரிதி ஸத்வரம் ॥
ஸ்பர்ஶிதா ராஜஸிம்ஹேந மம த$_3$த்தா ந்ருகே$_3$ண ஹ ॥ (14)

தயோர்ப்$_3$ராஹ்மணயோர்வாதோ$_3$ மஹாநாஸீத்$_3$விபஶ்சிதோ: ।
விவத$_3$ந்தௌ ததோऽந்யோந்யம் தா$_3$தாரமபி$_4$ஜக்$_3$மது: ॥ (15)

தௌ ராஜப$_4$வநத்$_3$வாரி அப்ராப்ய ந்ருக$_3$த$_3$ர்ஶநம் ।
அஹோராத்ராண்யநேகாநி வஸந்தௌ க்ரோத$_4$மீயது: ॥ (16)

Koviloor Digital Library

''மகாபுத்திமானே! அன்பனே! உன்னைப் போன்ற ஒரு சகோதரன் கிடைப்பது, இக்காலத்தில் மிகவும் அரிது. நீ என் எண்ணங்களுக்கு ஏற்ப நடந்து கொள்கிறாய். (2)

நற்குணங்கள் பொருந்தியவனே! இப்போது, என் உள்ளத்தில் உள்ள எண்ணங்களைச் சொல்லப் போகிறேன். கேட்டு, அதன்படி செய்வாயாக. (3)

லட்சுமணா! நான், கடந்த நான்கு நாட்களாக அரசக் கடமைகளைச் செய்யவில்லை. இந்த விஷயம் என் உயிர்நிலைகளைப் பிளக்கிறது. (4)

ஆண்தகையே! குடிமக்கள், புரோகிதர் மற்றும் அமைச்சர்களையும் முறையீடு செய்ய விரும்பும் ஆண்–பெண்களையும் அழைப்பாயாக. (5)

ஒவ்வொரு நாளும் மக்களுடைய முறையீடுகளைக் கேட்டு உரிய நடவடிக்கை எடுக்காத மன்னன், பயங்கரமானதும் காற்றுப்புகாததுமான நரகத்தில் வீழ்கிறான் என்பதில் ஐயமில்லை. (6)

முன்னர் ஒரு காலத்தில், நிருகன் (ந்ருகன்) என்ற பெயர்கொண்ட புகழ்மிக்க மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவன் அந்தணர்களிடம் பக்திபூண்டவன்; சத்தியம் தவறாதவன்; தூய நடவடிக்கை உடையவன். (7)

அந்த மன்னன், ஒரு சமயம் புஷ்கரத் தலத்திற்குச் சென்று கன்றோடு கூடியவைகளும் சுவர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டவைகளுமான ஒரு கோடி பசுக்களை வேதவித்தகர்களுக்குத் தானம் செய்தான். (8)

மாசற்றவனே! மிகவும் ஏழையான ஓர் அந்தணர் நெல்வயலில் சிதறிக் கிடக்கும் தான்யமணிகளைப் பொறுக்கி எடுத்து வந்து ஜீவனம் செய்பவர்; தினமும் அக்னிஹோத்ரம் செய்பவர். அவருடைய பசு கன்றோடுகூட அவ்விடம் (அரசன் பசுக்களைத் தானம் செய்யும் இடத்திற்கு) வந்தது. (அது வேறு ஒருவருக்குச் சொந்தமான பசு என்பதை அறியாத அரசன்) அதையும் முறைப்படி தானம் செய்து கொடுத்துவிட்டான். (9)

பசியினால் வருந்திய அந்தணர், தன்னுடைய பசுவை எல்லா நாடுகளிலும் பல ஆண்டுகள் தேடி அலைந்தும், அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. (10)

அவ்வாறு தேடிச் செல்கையில், கனகலம் என்னும் ஊரில் ஓர் அந்தணருடைய வீட்டில் தன் பசுவும் கன்றும் இருப்பதைப் பார்த்தார். பசு, கொழுகொழுவென்றிருந்தது; கன்று, வளர்ச்சி அடைந்திருந்தது. (11)

அப்போது அந்த அந்தணர், அந்தப் பசு மாட்டுக்குத் தான் வைத்த சபலா என்ற பெயரை உரக்கக் கூவி, 'வா, வா' என்று அழைத்ததை, அது கேட்டது. (12)

பசியினால் வருந்திக் கொண்டிருக்கும் அந்த அந்தணருடைய பரிச்சயமான குரலைக் கேட்டதும், அக்னியைப் போல் ஒளிரும் அவரைப் பின்தொடர்ந்து செல்லத் தொடங்கியது. அந்தப் பசுமாட்டை அப்போது போஷித்து வந்த அந்தணரும் வேகமாக அதைப் பின்தொடர்ந்து சென்றார். அருகில் சென்றதும் அந்தப் பிரும்மரிஷியைப் பார்த்து 'இது என்னுடைய பசு; மாமன்னர் நிருகனால் தானம் செய்து கொடுக்கப்பட்டது' என்றார். (13,14)

கற்றறிந்த அந்தணர்களாகிய அவ்விருவரிடையே அந்தப் பசுவைக் குறித்து பெரும் சச்சரவு ஏற்பட்டது. அவ்விருவரும் வாய்ச்சண்டை போட்டுக் கொண்டு தானம் கொடுத்த மன்னனிடம் சென்றார்கள். (15)

அவர்கள் அரசமாளிகை வரை சென்று இராப்பகலாக பல நாள்கள் காத்திருந்தும், அரசனைச் சந்திக்க முடியாமல் போனதால் கோபமடைந்தார்கள். (16)

Koviloor Digital Library

ஊசதுஶ்ச மஹாத்மாநௌ தாவுபௌ$_4$ த்$_3$விஜஸத்தமௌ ।
க்ருத்$_3$தௌ$_4$ பரமஸந்தப்தௌ வாக்யம் கோ$_4$ராபி$_4$ஸம்ஹிதம் ॥ (17)

அர்தி$_2$நாம் கார்யஸித்$_3$த்$_4$யர்த$_2$ம் யஸ்மாத்த்வம் நைஷி த$_3$ர்ஶநம் ।
அத்$_3$ருஶ்ய: ஸர்வபூ$_4$தாநாம் க்ருகலாஸோ ப$_4$விஷ்யஸி ॥ (18)

ப$_3$ஹுவர்ஷஸஹஸ்ராணி ப$_3$ஹுவர்ஷஶதாநி ச ।
ஶ்வப்$_4$ரேஸ்மிந் க்ருகலாஸோ வை தீ$_3$ர்க$_4$காலம் வஸிஷ்யஸி ॥ (19)

உத்பத்ஸ்யதே ஹி லோகேஸ்மிந் யதூ$_3$நாம் கீர்திவர்த$_4$ந: ।
வாஸுதே$_3$வ இதி க்$_2$யாதோ லோகே புருஷவிக்$_3$ரஹ: ॥ (20)

ஸ தே மோக்ஷயிதா ராஜந்ஸ்தஸ்மாச்ச$_2$ாபாத்$_3$ப$_4$விஷ்யதி ।
க்ருதா ச தேந காலேந நிஷ்க்ருதிஸ்தே ப$_4$விஷ்யதி ॥ (21)

ப$_4$ாராவதரணார்த$_2$ம் ஹி நரநாராயணாவுபௌ$_4$ ।
உத்பத்ஸ்யேதே மஹாவீர்யௌ கலௌ யுக$_3$ உபஸ்தி$_2$தே ॥ (22)

ஏவம் தௌ ஶாபமுத்ஸ்ருஜ்ய ப்$_3$ராஹ்மணௌ விக$_3$தஜ்வரௌ ।
தாம் க$_3$ாம் ஹி து$_3$ர்ப$_3$லாம் வ்ருத்$_3$த$_4$ாம் த$_3$த$_3$துர்ப்$_3$ராஹ்மணாய வை ॥ (23)

ஏவம் ஸ ராஜா தம் ஶாபமுபபு$_4$ங்க்தே ஸுதா$_3$ருணம் ।
கார்யார்தி$_2$நாம் விமர்தோ$_3$ ஹி ராக்ஞாம் தோ$_3$ஷாய கல்பதே ॥ (24)

தச்சீ$_2$க்$_4$ரம் த$_3$ர்ஶநம் மஹ்யமபி$_4$வர்தந்து கார்யிண: ।
ஸுக்ருதஸ்ய ஹி கார்யஸ்ய ப$_2$லம் நாவைதி பார்தி$_2$வ: ॥
தஸ்மாத்$_3$க$_3$ச்ச$_2$ ப்ரதீக்ஷஸ்வ ஸௌமித்ரே கார்யவாஞ்ஜந: ॥ (25)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்ரிபஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

சதுஷ்பஞ்சாஶ: ஸர்க$_3$:

ந்ருக$_3$ஶ்வப்$_4$ரப்ரவேஶ:

ராமஸ்ய ப$_4$ாஷிதம் ஶ்ருத்வா லக்ஷ்மண: பரமார்த$_2$வித் ।
உவாச ப்ராஞ்ஜலிர்வாக்யம் ராக$_4$வம் தீ$_3$ப்ததேஜஸம் ॥ (1)

அல்பாபராதே$_4$ காகுத்ஸ்த$_2$ த்$_3$விஜாப்$_4$யாம் ஶாப ஈத்$_3$ருஶ: ।
மஹாந்ந்ருக$_3$ஸ்ய ராஜர்ஷேர்யமத$_3$ண்ட$_3$ இவாபர: ॥ (2)

ஶ்ருத்வா து பாபஸம்யுக்தமாத்மாநம் புருஷர்ஷப$_4$ ।
கிமுவாச ந்ருகே$_3$ா ராஜா த்$_3$விஜௌ க்ரோத$_4$ ஸமந்விதௌ ॥ (3)

Koviloor Digital Library

மகாத்மாக்களான அவ்விருவரும் கோபமும் மனவேதனையும் கொண்டு பயங்கரமான சாபத்தைக் கொடுத்தார்கள்— (17)

'வழக்கைக் கூறி, நியாயத்தைப் பெறுவதற்காக வந்திருப்பவர்கள், உன்னைப் பார்க்கக்கூட முடியாமல் போனதால், எந்தப் பிராணியாலும் கண்டுகொள்ள முடியாத பச்சோந்தியாகப் போகக் கடவாய். (18)

நீ, பல ஆயிரம் வருடங்கள், பல நூறு வருடங்கள் உன் பொந்திலேயே பச்சோந்தியாக வசிப்பாயாக. (19)

பகவான் விஷ்ணு, யது குலத்தின் கீர்த்தியை வளர்க்கும் வாசுதேவன் என்ற பெயருடையவராக மனித உருவம் ஏற்று, இம்மண்ணுலகில் தோன்றப் போகிறார். (20)

மன்னரே! அவர் உன்னைச் சாபத்திலிருந்து விடுவிப்பார். எனவே, அதுவரை நீ அவ்வாறே (பச்சோந்தியாகவே) இருப்பாய். இதுவே, நீ செய்த தவறுக்கு உரிய பிராயச்சித்தமாகும். (21)

கலியுகம் பிறந்ததும், மக்கட்சுமையைக் குறைப்பதற்காக, மாவீரர்களான நர–நாராயணர்கள் தோன்றுவார்கள்.' (22)

இவ்வாறு, சாபம் கொடுத்த பின் அவர்கள் அமைதி அடைந்தார்கள். மெலிந்து போயிருந்த அந்தக் கிழப் பசுவை வேறு ஓர் அந்தணருக்குக் கொடுத்துவிட்டார்கள். (23)

பயங்கரமான அந்த சாபத்தை நிருகன் இன்னும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார். நியாயம் கேட்டு வரும் குடிமக்களைச் சந்திக்காமல் காத்திருக்கச் செய்வது மன்னனுக்குப் பாவத்தைத் தருவதாகும். (24)

அதனால், மனு கொடுக்கக் காத்திருக்கும் மக்களை என் முன் கொண்டு வருவாயாக. மக்களைப் பரிபாலித்தல் என்ற புண்ணிய கர்மாவைச் செய்வதனால் ஏற்படும் நற்பயன் வேந்தனை நிச்சயமாக வந்தடையும். ஆகவே, நீ வெளியே சென்று, என்னைக் காண்பதற்காக யாரேனும் வந்திருக்கிறார்களா? என்று பார்.'' (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஐம்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்து நான்கு

பொந்துக்குள் நிருகன்!

எந்த விஷயத்தையும், எளிதில் புரிந்து கொள்ளும் ஆற்றலுடைய லட்சுமணன், இராமன் கூறியதைக் கேட்டதும், சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அவரைப் பார்த்துப் பின்வருமாறு கேட்டான்— (1)

''காகுத்தரே! ராஜரிஷியான நிருகன் செய்த சிறிய குற்றத்திற்கு, யமதண்டம் போன்ற கொடுமையான சாபத்தை அந்தணர்கள் கொடுத்துவிட்டார்கள். (2)

புருஷோத்தமரே! தனக்கு சாபம் என்ற பாவம் வந்துவிட்டதைத் தெரிந்து கொண்ட வேந்தன், கோபத்தோடிருந்த அந்தணர்களிடம் என்ன கூறினார்?'' (3)

Koviloor Digital Library

லக்ஷ்மணேநைவமுக்தஸ்து ராக$_4$வ: புநரப்$_3$ரவீத் ।
ஶ்ருணு ஸௌம்ய யத$_2$ாபூர்வம் ஸ ராஜா ஶாபவிக்ஷத: ॥ (4)

அத$_2$ாத்$_4$வநி க$_3$தௌ விப்ரௌ விக்ஞாய ஸ ந்ருக$_3$ஸ்தத$_3$ா ।
ஆஹூய மந்த்ரிண: ஸர்வாந்நைக$_3$மாந் ஸபுரோத$_4$ஸ: ॥ (5)

தாநுவாச ந்ருகே$_3$ா ராஜா ஸர்வாம்ஶ்ச ப்ரக்ருதீஸ்தத$_2$ா ।
து$_3$:கே$_2$ந ஸுஸமாவிஷ்ட: ஶ்ரூயதாம் மே ஸமாஹிதை: ॥ (6)

நாரத$_3$: பர்வதஶ்சைவ மம தத்த்வா மஹத்$_3$ப$_4$யம் ।
க$_3$தௌ த்ரிபு$_4$வநம் ப$_4$த்$_3$ரௌ வாயுபூ$_4$தாவநிந்தி$_3$தௌ ॥ (7)

குமாரோऽயம் வஸுர்நாம ஸ தே$_3$வோऽத்$_3$யாபி$_4$ஷிச்யதாம் ।
ஶ்வப்$_4$ரம் ச யத் ஸுக$_2$ஸ்பர்ஶம் க்ரியதாம் ஶில்பிபி$_4$ர்மம ॥ (8)

யத்ராஹம் ஸம்க்ஷயிஷ்யாமி ஶாபம் ப்$_3$ராஹ்மணநி:ஸ்ருதம் ।
வர்ஷக்$_4$நமேகம் ஶ்வப்$_4$ரம் து ஹிமக்$_4$நமபரம் தத$_2$ா ॥
க்$_3$ரீஷ்மக்$_4$நம் து ஸுக$_2$ஸ்பர்ஶமேகம் குர்வந்து ஶில்பிந: ॥ (9)

ப$_2$லவந்தஶ்ச யே வ்ருக்ஷா: புஷ்பவத்யஶ்ச யா லதா: ।
விரோப்யந்தாம் ப$_3$ஹுவித$_4$ாஶ்ச$_2$ாயாவந்தஶ்ச கு$_3$ல்மிந: ॥
க்ரியதாம் ரமணீயம் ச ஶ்வப்$_4$ராணாம் ஸர்வதோதி$_3$ஶம் ॥ (10)

ஸுக$_2$மத்ர வஸிஷ்யாமி யாவத்காலஸ்ய பர்யய: ।
புஷ்பாணி ச ஸுக$_3$ந்தீ$_4$நி க்ரியந்தாம் தேஷு நித்யஶ: ॥
பரிவார்ய யத$_2$ா மே ஸ்யுரத்$_4$யர்த$_4$ம் யோஜநம் தத$_2$ா ॥ (11)

ஏவம் க்ருத்வா வித$_4$ாநம் ஸ ஸந்தி$_3$தே$_3$ஶ வஸும் தத$_3$ா ।
த$_4$ர்மநித்ய: ப்ரஜா: புத்ர க்ஷத்ரத$_4$ர்மேண பாலய ॥ (12)

ப்ரத்யக்ஷம் தே யத$_2$ா ஶாபோ த்$_3$விஜாப்$_4$யாம் மயி பாதித: ।
நரஶ்ரேஷ்ட$_2$ ஸரோஷாப்$_4$யாமபராதே$_4$ऽபி தாத்$_3$ருஶே ॥ (13)

மா க்ருத$_2$ாஸ்தநுஸந்தாபம் மத்க்ருதேऽபி நரர்ஷப$_4$ ।
க்ருதாந்த: குஶல: புத்ர யேநாஸ்மி வ்யஸநீ க்ருத: ॥ (14)

ப்ராப்தவ்யாந்யேவ ப்ராப்நோதி க$_3$ந்தவ்யாந்யேவ க$_3$ச்ச$_2$தி ।
லப்$_3$த$_4$வ்யாந்யேவ லப$_4$தே து$_3$:க$_2$ாநி ச ஸுக$_2$ாநி ச ॥ (15)

பூர்வே ஜாத்யந்தரே வத்ஸ மயா பாபம் மஹத் க்ருதம் ।
தஸ்மாத் ப்ராப்தம் மயா புத்ர மா விஷாத$_3$ம் குருஷ்வ ஹ ॥ (16)

ஏவமுக்த்வா ந்ருக$_3$ஸ்தத்ர ஸுதம் ராஜா மஹாயஶா: ।
ஶ்வப்$_4$ரம் ஜக$_3$ாம ஸுக்ருதம் வாஸாய புருஷர்ஷப$_4$ ॥ (17)

Koviloor Digital Library

லட்சுமணன் இவ்வாறு கேட்டவுடன் இராமன் தொடர்ந்து பேசினார்— ''அன்பனே! சாபத்தால் பீடிக்கப்பட்ட மன்னன் என்ன செய்தான்? என்பதைச் சொல்கிறேன், கேள். (4)

அவ்விரு அந்தணர்களும் அரண்மனையிலிருந்து புறப்பட்டு வெளியே எங்கோ ஒரு சாலையில் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்துக் கொண்ட மன்னன், மிகவும் துக்கத்துடன் (அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து மன்னிப்புக் கோருவது சாத்தியமில்லை என்பதால்) அமைச்சர்கள், எல்லாக் குடிமக்கள், புரோகிதர்கள், மற்றுமுள்ள சமூகத்தாரையும் அழைப்பித்து, 'நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்' என்றான். (5,6)

'நாரதர், பர்வதர் என்ற இரண்டு தேவரிஷிகள் பிறர் நலனையே நாடுபவர்கள்; அப்பழுக்கற்றவர்கள். என்னிடம் வந்து, அந்த இரு அந்தணர்களும் எனக்கு இட்ட சாபத்தைக் கூறி, என்னைப் பேரச்சத்தில் ஆழ்த்திவிட்டு, வாயுவேகமாகப் பிரும்மலோகம் சென்று விட்டார்கள். (7)

வசு என்று பெயர் கொண்ட இந்த அரசகுமாரனுக்குப் பட்டம் சூட்டுங்கள். கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு, நான் வசிப்பதற்கு ஏற்ற, மென்மையான பொந்து செய்யச் சொல்லுங்கள். (8)

மழையினால் எனக்குக் கஷ்டம் வராத வகையில் ஒரு பொந்து; பனியிலிருந்து பாதுகாப்புத் தரக்கூடிய வகையில் ஒரு பொந்து; கோடை காலத்தில் வெம்மை உள்ளே புகாத வகையில் ஒரு பொந்து – இவ்வாறு மூன்று பொந்துகள் அமைக்கச் சொல்லுங்கள். நான் அவற்றில் வசித்துக் கொண்டு, அந்தணர்களின் சாபத்தை அனுபவித்துத் தீர்ப்பேன். (9)

கனிகள் கொடுக்கும் மரங்கள்; மலர்கள் கொடுக்கும் கொடிகள்; நல்ல நிழல் கொடுக்கும் புல்பூண்டுப் புதர்கள் – இவைகளைப் பொந்துகளின் எல்லாப் பக்கங்களிலும் உண்டாக்குங்கள். (10)

பொந்துகளைச் சுற்றிலும் ஒன்றரை யோசனை தூரத்திற்கு, இவ்வாறு வளம் கொழிக்கச் செய்யுங்கள். மணமிக்க மலர்களை நாள்தோறும், பொந்துகளில் குவித்து வையுங்கள். சாப விடுதலை காலம் வரையில் நான் அங்கேயே வசிப்பேன்.' (11)

இவ்வாறு, தனக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்த பின்னர், அரசகுமாரன் வசுவை சிம்மாசனத்தில் அமர்த்தி, அவனுக்கு நல்லுரை வழங்கினான். 'செல்வனே! நீ எப்போதும் அறநெறியிலேயே இருந்து கொண்டு, க்ஷத்திரிய தருமத்திற்கு ஏற்றபடி குடிமக்களைப் பரிபாலிக்க வேண்டும். (12)

புருஷோத்தமனே! நான் செய்த குற்றம் சிறியதுதான் என்றாலும், கோபங்கொண்ட அவர்கள் கொடுத்த சாபத்தின் விளைவை, நீ கண்ணால் பார்த்துக் கொண்டிருக்கிறாய். (13)

ஆண்டகையே! என் பொருட்டு நீ வருத்தப்பட வேண்டாம். முன்னர் செய்த வினைகளின் பயன் இப்போது கிடைத்திருக்கிறது. (14)

எவைகள் அடையப்பட வேண்டுமோ, அவைகளை மனிதன் அடைகிறான்; இழக்கப்பட வேண்டியவைகள் தாமே போகின்றன; சுகமோ, துக்கமோ எதுயெதை அடைய வேண்டுமோ, அதனை மனிதன் அடைகிறான். (15)

குழந்தாய், முன்னொரு பிறவியில் நான் மிகவும் பாவம் செய்திருக்கிறேன். அதனால், இந்த சாபத்திற்கு ஆளாகியிருக்கிறேன். நீ வருத்தப்பட வேண்டாம்.' (16)

இவ்வாறு புதல்வனிடம் கூறிவிட்டு பெரும் புகழ் கொண்ட மன்னன் நிருகன், தான் வசிப்பதற்காகக் கட்டப்பட்டிருந்த பொந்திற்குள் புகுந்து கொண்டான். (17)

Koviloor Digital Library

ஏவம் ப்ரவிஶ்யைவ ந்ருபஸ்தத$_3$ாநீம்
ஶ்வப்$_4$ரம் மஹாரத்நவிபூ$_4$ஷிதம் தத் ।
ஸம்பாத$_3$யாமாஸ தத$_3$ா மஹாத்மா
ஶாபம் த்$_3$விஜாப்$_4$யாம் ஹி ருஷா விமுக்தம் ॥ (18)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ சதுஷ்பஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

பஞ்சபஞ்சாஶ: ஸர்க$_3$:

நிமிவஸிஷ்ட$_2$ஶாப:

ஏஷ தே ந்ருக$_3$ஶாபஸ்ய விஸ்தரோऽபி$_4$ஹிதோ மயா ।
யத்$_3$யஸ்தி ஶ்ரவணே ஶ்ரத்$_3$த$_4$ா ஶ்ருணுஷ்வேஹாபராம் கத$_2$ாம் ॥ (1)

ஏவமுக்தஸ்து ராமேண ஸௌமித்ரி: புநரப்$_3$ரவீத் ।
த்ருப்திராஶ்சர்யபூ$_4$தாநாம் கத$_2$ாநாம் நாஸ்தி மே ந்ருப ॥ (2)

லக்ஷ்மணேநைவமுக்தஸ்து ராம இக்ஷ்வாகுநந்த$_3$ந: ।
கத$_2$ாம் பரமத$_4$ர்மிஷ்ட$_2$ாம் வ்யாஹர்துமுபசக்ரமே ॥ (3)

ஆஸீத்$_3$ராஜா நிமிர்நாம இக்ஷ்வாகூணாம் மஹாத்மநாம் ।
புத்ரோ த்$_3$வாத$_3$ஶமோ வீர்யே த$_4$ர்மே ச பரிநிஷ்டி$_2$த: ॥ (4)

ஸ ராஜா வீர்யஸம்பந்ந: புரம் தே$_3$வபுரோபமம் ।
நிவேஶயாமாஸ தத$_3$ா அப்$_4$யாஶே கௌ$_3$தமஸ்ய து ॥ (5)

புரஸ்ய ஸுக்ருதம் நாம வைஜயந்தமிதி ஶ்ருதம் ।
நிவேஶம் யத்ர ராஜர்ஷிர்நிமிஶ்சக்ரே மஹாயஶா: ॥ (6)

தஸ்ய பு$_3$த்$_3$தி$_4$: ஸமுத்பந்நா நிவேஶ்ய ஸுமஹாபுரம் ।
யஜேயம் தீ$_3$ர்க$_4$ஸத்ரேண பிது: ப்ரஹ்லாத$_3$யந் மந: ॥ (7)

தத: பிதரமாமந்த்ர்ய இக்ஷ்வாகும் ஹி மநோ: ஸுதம் ।
வஸிஷ்ட$_2$ம் வரயாமாஸ பூர்வம் ப்$_3$ரஹ்மர்ஷிஸத்தமம் ॥ (8)

அநந்தரம் ஸ ராஜர்ஷிர்நிமிரிக்ஷ்வாகுநந்த$_3$ந: ।
அத்ரிமங்கி$_3$ரஸம் சைவ ப்$_4$ருகு$_3$ம் சைவ தபோத$_4$நம் ॥ (9)

தமுவாச வஸிஷ்ட$_2$ஸ்து நிமிம் ராஜர்ஷிஸத்தமம் ।
வ்ருதோऽஹம் பூர்வமிந்த்$_3$ரேண அந்தரம் ப்ரதிபாலய ॥ (10)

அநந்தரம் மஹாவிப்ரோ கௌ$_3$தம: ப்ரத்யபூரயத் ।
வஸிஷ்டே$_2$ऽபி மஹாதேஜா இந்த்$_3$ரயஜ்ஞமத$_2$ாகரோத் ॥ (11)

நிமிஸ்து ராஜா விப்ராம்ஸ்தாந் ஸமாநீய நராதி$_4$ப: ।
அயஜத்$_3$தி$_4$மவத்பார்ஶ்வே ஸ்வபுரஸ்ய ஸமீபத: ॥ (12)

Koviloor Digital Library

இரத்தினங்களால் அழகு செய்யப்பட்ட அந்தப் பொந்திற்குள் புகுந்து கொண்ட மகாத்மாவான மன்னன் நிருகன், கோபங்கொண்ட அந்தணர்களால் கொடுக்கப்பட்ட சாபத்தை அனுபவிக்கத் தொடங்கினான்.'' (18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஐம்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தைந்து

நிமியும் வசிஷ்டரும் சாபம் கொடுத்தல்

(இராமன் கூறினார்— ''லட்சுமணா!) நிருகனுக்கு ஏற்பட்ட சாபத்தைப் பற்றிய வரலாற்றை விரிவாகக் கூறினேன். மேலும், வரலாறுகளைக் கேட்பதில் உனக்கு ஆர்வம் இருந்தால், நான் இன்னொரு கதையைச் சொல்கிறேன், கேள்.'' (1)

இவ்வாறு, இராமன் கூறியதும், ''மிகவும் ஆச்சரியமான கதைகளைக் கேட்பதில் எனக்கு அலுப்பு உண்டாவதேயில்லை!'' என்று லட்சுமணன் பதில் கூறினான். (2)

லட்சுமணன் இவ்வாறு கூறியதும், இக்ஷ்வாகு பரம்பரையினருக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும் இராமன், அறநெறியிலிருந்து சிறிதும் வழுவாத சான்றோர்களின் வரலாறுகளைக் கூறத் தொடங்கினார்— (3)

''மகாத்மா இக்ஷ்வாகுவுக்கு பன்னிரண்டாவது மகனாக நிமி என்பவர் பிறந்தார். அவர் வீரத்திலும் தருமத்திலும் உறுதியாக நிற்பவர். (4)

அந்த மன்னர், கௌதம முனிவருடைய ஆசிரமத்திற்கு அருகில், தேவலோக நகரம் போன்ற சிறந்த ஒரு நகரத்தை நிர்மாணித்தார். பெரும்புகழ் கொண்ட ராஜரிஷியான நிமி வாசம் செய்த நகரம், தேவலோக நகரத்திற்கு இணையாக இருந்ததால், வைஜயந்தம் என்ற அதே பெயர் வைக்கப்பட்டுப் புகழ்பெற்றது. (5,6)

அந்த நகரத்தில் வசிக்கத் தொடங்கியதும், 'என் தந்தைக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஸத்ரயாகத்தைச் செய்யவேண்டும்' என்ற எண்ணம் உண்டாயிற்று. (7)

மனுவினுடைய புதல்வரும் தன்னுடைய தந்தையுமான இக்ஷ்வாகுவுடன் கலந்து ஆலோசித்து மேன்மைமிக்க பிரும்மரிஷியான வசிஷ்டரை வேள்வியின் தலைமைப் புரோகிதராக இருக்க வேண்டிக் கொண்டார். (8)

பின்னர், இக்ஷ்வாகு குல மாணிக்கமான ராஜரிஷி நிமி, அத்ரி, அங்கீரசர் மற்றும் தவச்செல்வரான பிருகு முனிவருக்கும் அழைப்பு விடுத்தார். (9)

அரச மாமுனிவரான நிமியிடம், 'இந்திரன் ஒரு யாகத்தை நடத்திக் கொடுக்கும்படி முன்னரே கேட்டுக் கொண்டிருக்கிறான். நான் அதை நிறைவேற்றிவிட்டு வரும்வரையில் எனக்காகக் காத்திருப்பாயாக' என்று வசிஷ்டர் கூறினார். (10)

பின்னர், தலைசிறந்த வேதவிற்பன்னரான கௌதமர், அரசருடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்தார். (யாகத்தை நடத்திக் கொடுத்தார்.) மகாதேஜஸ்வியான வசிஷ்டர், இந்திரனுடைய வேள்வியை நிறைவேற்றிக் கொடுத்தார். (11)

நிமி, அங்கிருந்த மற்ற வேதியர்களை அழைத்து, இமயமலையின் அடிவாரத்தில், தன்னுடைய தலைநகரத்திற்கு அருகில் வேள்வியைத் தொடங்கினார். (12)

Koviloor Digital Library

பஞ்ச வர்ஷஸஹஸ்ராணி ராஜா தீ$_3$க்ஷாமுபாக$_3$மத் ॥ (13)

இந்த்$_3$ரயக்ஞாவஸாநே து வஸிஷ்டே$_2$ா ப$_4$க$_3$வாந்ருஷி: ।
ஸகாஶமாக$_3$தோ ராக்ஞோ ஹௌத்ரம் கர்துமநிந்தி$_3$த: ॥
தத$_3$ந்தரமத$_2$ாபஶ்யத்$_3$கெ$_3$ௌதமேநாபி$_4$பூரிதம் ॥ (14)

கோபேந மஹதாவிஷ்டோ வஸிஷ்டே$_2$ா ப்$_3$ரஹ்மண: ஸுத: ।
ஸ ராக்ஞோ த$_3$ர்ஶநாகாங்க்ஷீ முஹூர்தம் ஸமுபாவிஶத் ॥
தஸ்மிந்நஹநி ராஜர்ஷிர்நித்$_3$ரயாபஹ்ருதோ ப்$_4$ருஶம் ॥ (15)

ததோ மந்யுர்வஸிஷ்ட$_2$ஸ்ய ப்ராது$_3$ராஸீந்மஹாத்மந: ।
அத$_3$ர்ஶநேந ராஜர்ஷேர்வ்யாஹர்துமுபசக்ரமே ॥ (16)

யஸ்மாத்த்வமந்யம் வ்ருதவாந் மாமவக்ஞாய பார்தி$_2$வ ।
சேதநேந விநாபூ$_4$தோ தே$_3$ஹஸ்தவ ப$_4$விஷ்யதி ॥ (17)

தத: ப்ரபு$_3$த்$_3$தே$_4$ா ராஜர்ஷி: ஶ்ருத்வா ஶாபமுத$_3$ாஹ்ருதம் ।
ப்$_3$ரஹ்மயோநிமதே$_2$ாவாச ஸம்ரம்ப$_4$ாத் க்ரோத$_4$மூர்சி$_2$த: ॥ (18)

அஜாநத: ஶயாநஸ்ய க்ரோதே$_4$ந கலுஷீக்ருத: ।
முக்தவாந் மயி ஶாபாக்$_3$நிம் யமத$_3$ண்ட$_3$மிவாபரம் ॥ (19)

தஸ்மாத்தவாபி ப்$_3$ரஹ்மர்ஷே சேதநேந விநாக்ருத: ।
தே$_3$ஹ: ஸுருசிரப்ரக்$_2$யோ ப$_4$விஷ்யதி ந ஸம்ஶய: ॥ (20)

இதி ரோஷவஶாது$_3$பெ$_4$ௌ ததா$_3$நீ–
மந்யோந்யம் ஶபிதௌ ந்ருபத்$_3$விஜேந்த்$_3$ரௌ ।
ஸஹஸைவ ப$_3$பூ$_4$வதுர்விதே$_3$ஹௌ
தத்துல்யாதி$_4$க$_3$தப்ரப$_4$ாவவந்தௌ ॥ (21)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ பஞ்சபஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

ஷட்பஞ்சாஶ: ஸர்க$_3$:

மைத்ராவருணித்வப்ராப்தி:

ராமஸ்ய ப$_4$ாஷிதம் ஶ்ருத்வா லக்ஷ்மண: பரவீரஹா ।
உவாச ப்ராஞ்சலிர்வாக்யம் ராக$_4$வம் தீ$_3$ப்ததேஜஸம் ॥ (1)

நிக்ஷிப்ததே$_3$ஹௌ காகுத்ஸ்த$_2$ கத$_2$ம் தௌ த்$_3$விஜபார்தி$_2$வௌ ।
புநர்தே$_3$ஹேந ஸம்யோக$_3$ம் ஜக்$_3$மதுர்தே$_3$வஸம்மதௌ ॥ (2)

லக்ஷ்மணேநைவமுக்தஸ்து ராமஶ்சேக்ஷ்வாகுநந்த$_3$ந: ।
ப்ரத்யுவாச மஹாதேஜா லக்ஷ்மணம் புருஷர்ஷப$_4$: ॥ (3)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_21_Back

Koviloor Digital Library

ஐயாயிரம் ஆண்டுகள் அந்த யாகத்தைச் செய்வதாக சங்கல்பித்து யாகதீக்ஷையை மன்னர் ஏற்றார். (13)

இந்திரனுடைய யாகம் நிறைவடைந்ததும், குற்றமற்றவரான பகவான் வசிஷ்டர், நிமி அரசர் (முன்னரே) சங்கல்பித்த ஸத்ர யாகத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக வந்தார். ஆனால், கௌதமரால் அந்த யாகம் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டதை அறிந்து கொண்டார். (14)

பிரும்மாவின் புதல்வரான வசிஷ்டருக்கு அடக்க முடியாத கோபம் உண்டாயிற்று. அரசரை நேரில் சந்தித்துப் பேசுவதற்காக நீண்ட நேரம் அவர் காத்திருந்தார். ஆனால், அன்றைய தினம் ராஜரிஷியான நிமி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். (15)

மன்னரை சந்திக்க முடியாமல் போனதால் வசிஷ்டருக்கு அளவுகடந்த கோபம் உண்டாயிற்று. அவர், நிமியைக் குறியாக வைத்து பேசத் தொடங்கினார்— (16)

'மன்னனே! என்னை அலட்சியப்படுத்திவிட்டு, வேறொருவரைக் கொண்டு யாகத்தை நிறைவேற்றி விட்டாய். அதனால், உன் உடல் உணர்வற்றதாக ஆகப்போகிறது. (சவம் போல் ஆகப் போகிறாய்.)' (17)

பின்னர், கண்விழித்துக் கொண்ட மன்னர் சாபம் கொடுக்கப்பட்டதைத் தெரிந்து கொண்டார். உடனே கோபத்தால் மதி கலங்கி, பிரும்மபுத்திரரை நோக்கிக் கூறினார்— (18)

'தாங்கள் வந்திருப்பது எனக்குத் தெரியாது. அதனால் படுத்துக் கிடந்தேன். கோபத்தினால் மனம் குழம்பி, என்மேல் மற்றொரு யமதண்டம் போன்ற பயங்கரமான சாபம் என்ற நெருப்பை அள்ளிக் கொட்டியிருக்கிறீர்கள். (19)

ஆகவே, பிரும்மரிஷியே! எப்போதும் மனங்கவரும் காந்தியுடன் விளங்கும் உங்கள் சரீரமும் உணர்விழந்து விழப்போகிறது. இதில் ஐயமில்லை.' (20)

இவ்வாறு கோபத்தினால் வசப்பட்ட மன்னரும் வேதவிற்பன்னரும் ஒருவருக்கொருவர் சாபம் கொடுத்து, உடனே உடலைத் துறந்து, பிரும்மத்திற்கு நிகரான பெருநிலையை அடைந்தார்கள்.'' (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஐம்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தாறு

மைத்ராவருணி ஆதல்

எதிராளிகளை அழிப்பவனான லட்சுமணன், இராமன் கூறியதைக் கேட்டதும் வீரப்பொலிவுடன் விளங்கும் அவரைப் பார்த்துக் கைகளைக் கூப்பியவண்ணம் கூறினான்— (1)

''காகுத்தரே! அந்த வேதோத்தமரும் மன்னரும் தேவர்களுக்கு நிகரானவர்கள். (பரஸ்பர சாபத்தினால்) உடலைத் துறந்த அவர்கள், மறுபடியும் எவ்வாறு புதிய உடலைப் பெற்றார்கள்? (2)

இலக்குவன் இவ்வாறு கேட்டவுடன் மகாதேஜஸ்வியான இராமன், (பின்வருமாறு) பதில் கூறினார்— (3)

Koviloor Digital Library

தௌ பரஸ்பரஶாபேந தே3ஹாவுத்ஸ்ருஜ்ய த4ார்மிகௌ ।
அபூ4தாம் ந்ருபவிப்ரர்ஷீ வாயுபூ4தௌ தபோத4நௌ ॥ (4)

அஶரீர: ஶரீரஸ்ய க்ருதேऽந்யஸ்ய மஹாமுநி: ।
வஸிஷ்ட2: ஸுமஹாதேஜா ஜகா3ம பிதுரந்திகம் ॥ (5)

ஸோऽபி4வாத்3ய தத: பாதௌ3 தே3வதே3வஸ்ய த4ர்மவித் ।
பிதாமஹமதே2ாவாச வாயுபூ4த இத3ம் வச: ॥ (6)

ப4க3வந்நிமிஶாபேந விதே3ஹத்வமுபாக3மம் ।
லோகநாத2 மஹாதே3வ அண்டஜ3ோऽபி த்வமப்3ஜஜ: ॥ (7)

ஸர்வேஷாம் தே3ஹஹீநாநாம் மஹத்3து3:க2ம் ப4விஷ்யதி ।
லுப்யந்தே ஸர்வகார்யாணி ஹீநதே3ஹஸ்ய வை ப்ரபே4ா ॥ (8)

தே3ஹஸ்யாந்யஸ்ய ஸத்3ப4ாவே ப்ரஸாத3ம் கர்துமர்ஹஸி ।
தமுவாச ததோ ப்3ரஹ்மா ஸ்வயம்பூ4ரமிதப்ரப4: ॥ (9)

மித்ராவருணஜம் தேஜ: ப்ரவிஶ த்வம் மஹாயஶ: ।
அயோநிஜஸ்த்வம் ப4விதா தத்ராபி த்3விஜஸத்தம ॥
த4ர்மேண மஹதா யுக்த: புநரேஷ்யஸி மே வஶம் ॥ (10)

ஏவமுக்தஸ்து தே3வேந சாபி4வாத்3ய ப்ரத3க்ஷிணம் ।
க்ருத்வா பிதாமஹம் தூர்ணம் ப்ரயயௌ வருணாலயம் ॥ (11)

தமேவ காலம் மித்ரோऽபி வருணத்வமகாரயத் ।
க்ஷீரோதே3ந ஸஹோபேத: பூஜ்யமாந: ஸுரோத்தமை: ॥ (12)

ஏதஸ்மிந்நேவ காலே து உர்வஶீ பரமாப்ஸரா: ।
யத்3ருச்ச2யா ஸமுத்3ரேஶமாயயௌ ஸகி2பி4ர்வ்ருதா ॥ (13)

தாம் த்3ருஷ்ட்வா ரூபஸம்பந்நாம் க்ரீட3ந்தீம் வருணாலயே ।
ஆவிஶத் பரமோ ஹர்ஷோ வருணம் சோர்வஶீக்ருதே ॥ (14)

ஸ தாம் பத்3மபலாஶாக்ஷீம் பூர்ணசந்த்3ரநிப4ாநநாம் ।
வருணோ வரயாமாஸ மைது2நாயாப்ஸரோவராம் ॥ (15)

ப்ரத்யுவாச தத: ஸா து வருணம் ப்ராஞ்ஜலி: ஸ்தி2தா ।
மித்ரேணாஹம் வ்ருதா ஸாக்ஷாத் பூர்மேவ ஸுரேஶ்வர ॥ (16)

வருணஸ்த்வப்3ரவீத்3வாக்யம் கந்த3ர்பஶரபீடி3த: ।
இத3ம் தேஜ: ஸமுத்ஸ்ரக்ஷ்யே கும்பே4ऽஸ்மிந் தே3வநிர்மிதே ॥ (17)

ஏவமுத்ஸ்ருஜ்ய ஸுஶ்ரோணி த்வய்யஹம் வரவர்ணிநி ।
க்ருதகாமோ ப4விஷ்யாமி யதி3 நேச்ச2ஸி ஸங்க3மம் ॥ (18)

Koviloor Digital Library

''தவச்செல்வர்களும் தருமாத்மாக்களும் ராஜரிஷி–பிரும்மரிஷியுமான அவ்விருவரும் ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொண்ட சாபத்தால், உடலை இழந்து வாயுரூபமாக மாறினார்கள். (4)

ஆன்மப் பொலிவு மிக்கவரான மாமுனிவர் வசிஷ்டர் உடல் அற்றவராகப் போனதும், வேறொரு உடலை அடைவதற்காகத் தன் தந்தையான பிரும்மாவிடம் சென்றார். (5)

தேவதேவனான பிரும்மாவின் திருவடிகளில் வணங்கி, அறம் அறிந்தவரும் தற்போது வாயுரூபத்திலிருந்தவருமான வசிஷ்டர், (பின்வருமாறு) கூறினார்— (6)

'உலகத் தலைவரே! மகாதேவரே! முட்டை வடிவமான பிரும்மாண்டத்திலிருந்து தோன்றினாலும், தாங்கள் மகாவிஷ்ணுவின் உந்திக்கமலத்திலிருந்து தோன்றியவர் என்பது பிரசித்தம். பகவானே! நிமியினுடைய சாபத்தால், நான் இப்போது சரீரத்தை இழந்து நிற்கிறேன். (7)

சரீரம் இல்லாத எல்லாப் பிராணிகளுக்கும் பெரிய கஷ்டங்கள் உண்டாகின்றன. ஐயனே! உடல் இல்லாதவனுடைய எல்லாச் செயல்களும் பயன் தராமல் போகின்றன. (8)

அதனால், நான் வேறொரு சரீரத்தை அடையும்படி தாங்கள் அருள்புரிய வேண்டும்.' எல்லையற்ற ஆற்றல் படைத்தவரும் தான்தோன்றியுமான பிரும்மா, அவரைப் பார்த்துக் கூறினார்— (9)

'புகழ்மிக்க அந்தணோத்தமரே! மித்திரன், வருணன் (என்கிற தேவதைகளால்) விடப்பட்ட வீர்யத்தில் புகுந்துகொள். அப்படிப் புகுந்து கொண்டு வேறு ஒரு பிறவி எடுத்தாலும், நீ 'கருப்பையிலிருந்து தோன்றாதவன்' என்றே கருதப்படுவாய். பின்னர், பெரும் தருமத்தை அறிந்தவனாக நீ, என்னையே மறுபடியும் வந்தடைவாய்!' (10)

பிரும்மா, இவ்வாறு கூறியதைக் கேட்ட அவர், நான்முகனை வலம் வந்து வணங்கிவிட்டு வேகமாக வருணன் இருப்பிடத்திற்குச் சென்றார். (11)

அந்தக் காலகட்டத்தில் மித்திரன் (என்ற தேவதையும்) வருணனுடைய அதிகாரத்தைப் பெற்று, வருணனோடுகூட இருந்துகொண்டு தேவோத்தமர்களால் பூஜிக்கப்பட்டு வந்தார். (12)

அந்தச் சமயத்தில், மிகச்சிறந்த அப்சரப் பெண்ணான ஊர்வசி, தன் தோழிகள் புடைசூழ வருணன் இருந்த இடத்திற்கு வந்தாள். (13)

மிக்க அழகுடன் கூடியவளும், கடலில் நீராடித் திளைத்துக் கொண்டிருந்தவளுமான ஊர்வசியைக் கண்டதும் வருணன், மனம் கிறங்கிப் போனார். (14)

மலர்ந்த தாமரை போன்ற கண்களை உடையவளும், முழுநிலா போன்று மனங்கவரும் முகமுடையவளுமான அவளைச் சிற்றின்ப உறவுக்கு அழைத்தார். (15)

அவள் கைகளைக் கூப்பிக் கொண்டு, கெஞ்சும் குரலில், 'தேவர் தலைவரே! மித்திரன் என்னை முன்னதாகவே விரும்பி அழைத்திருக்கிறார்' என்று பதில் கூறினாள். (16)

காமதேவனின் மலரம்புகளால் பீடிக்கப்பட்ட வருணன், 'தேவர்களால் வனையப்பட்ட இந்தக் குடத்தில் என் வீர்யத்தை விட்டுவிடுகிறேன். அழகானவளே! நீ என்னுடன் உறவுகொள்ள விரும்பாமல் போனாலும், என் வீர்யத்தை வெளியேற்றி விடுவதால், நான் ஆசை நிறைவேறியவனாக ஆவேன்' என்று கூறினார். (17,18)

Koviloor Digital Library

தஸ்ய தல்லோகபாலஸ்ய வருணஸ்ய ஸுப$_4$ாஷிதம் ।
உர்வஸீ பரமப்ரீதா ஶ்ருத்வா வாக்யமுவாச ஹ ॥ (19)

காமமேதத்$_3$ப$_4$வத்வேவம் ஹ்ருத$_3$யம் மே த்வயி ஸ்தி$_2$தம் ।
ப$_4$ாவஶ்சாப்$_4$யதி$_4$கஸ்துப்$_4$யம் தே$_3$ஹோ மித்ரஸ்ய து ப்ரபே$_4$ா ॥ (20)

உர்வஶ்யா ஏவமுக்தஸ்து ரேதஸ்தந்மஹதத்$_3$பு$_4$தம் ।
ஜ்வலத$_3$க்$_3$நிஶிகா$_2$ப்ரக்$_2$யம் தஸ்மிந் கும்பே$_4$ ஹ்யவாஸ்ருஜத் ॥ (21)

உர்வஸீ த்வக$_3$மத்தத்ர மித்ரோ வை யத்ர தே$_3$வதா ।
தாம் து மித்ர: ஸுஸம்க்ருத்$_3$த$_4$ உர்வஸீமித$_3$மப்$_3$ரவீத் ॥ (22)

மயா நிமந்த்ரிதா பூர்வம் கஸ்மாத்த்வமவஸர்ஜிதா ।
பதிமந்யம் வ்ருதவதீ தஸ்மாத்த்வம் து$_3$ஷ்டசாரிணீ ॥ (23)

அநேந து$_3$ஷ்க்ருதேந த்வம் மத்க்ரோத$_4$கலுஷீக்ருதா ।
மநுஷ்யலோகமாஸ்தா$_2$ய கஞ்சித் காலம் நிவத்ஸ்யஸி ॥ (24)

பு$_3$த$_4$ஸ்ய புத்ரோ ராஜர்ஷி: காஶீராஜ: புரூரவா: ।
தமப்$_4$யா க$_3$ச்ச$_2$ து$_3$ர்பு$_3$த்$_3$தே$_4$ ஸ தே ப$_4$ர்தா ப$_4$விஷ்யதி ॥ (25)

தத: ஸா ஶாபதோ$_3$ஷேண புரூரவஸமப்$_4$யகா$_3$த் ।
ப்ரதிஷ்டா$_2$நே புரூரவம் பு$_3$த$_4$ஸ்யாத்மஜமௌரஸம் ॥ (26)

தஸ்ய ஜக்ஞே தத: ஶ்ரீமாநாயு: புத்ரோ மஹாப$_3$ல: ।
நஹுஷோ யத்ர புத்ரஸ்து ப$_3$பூ$_4$வேந்த்$_3$ரஸமத்$_3$யுதி: ॥ (27)

வஜ்ரமுத்ஸ்ருஜ்ய வ்ருத்ராய ஶ்ராந்தேऽத$_2$ த்ரித$_3$ஶேஶ்வரே ।
ஶதம் வர்ஷஸஹஸ்ராணி யேநேந்த்$_3$ரத்வம் ப்ரஶாஸிதம் ॥ (28)

ஸா தேந ஶாபேந ஜகா$_3$ம பூ$_4$மிம்
ததோ$_3$ர்வஶீ சாருத$_3$தீ ஸுநேத்ரா ।
ப$_3$ஹூநி வர்ஷாண்யவஸச்ச ஸுப்$_4$ரூ:
ஶாபக்ஷயாதி$_3$ந்த்$_3$ரஸதோ$_3$ யயௌ ச ॥ (29)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஷட்பஞ்சாஶ: ஸர்க$_3$: ॥

ஸப்தபஞ்சாஶ: ஸர்க$_3$:

நிமிநிமீஷீகரணம்

தாம் ஶ்ருத்வா தி$_3$வ்யஸங்காஶாம் கதா$_2$மத்$_3$பு$_4$ததா$_3$ர்ஶநாம் ।
லக்ஷ்மண: பரமப்ரீதோ ராக$_4$வம் வாக்யமப்$_3$ரவீத் ॥ (1)

Koviloor Digital Library

திசைக்காவலரான வருணனால் இவ்வாறு உகந்த முறையில் சொல்லப்பட்டதைக் கேட்ட ஊர்வசி, பின்வருமாறு கூறினாள்— (19)

'ஐயனே! தங்கள் விருப்பம் போலவே செய்வீராக. என் மனம் தங்களைத்தான் நாடி நிற்கிறது; எனக்குத் தங்களிடமே அதிக வேட்கை இருக்கிறது. ஆனால், இந்த உடல் தற்சமயம் மித்திரனின் ஆதிக்கத்தில் இருக்கிறது. (என்ன செய்வேன்?)' (20)

இவ்வாறு, ஊர்வசி கூறியதும், மிகவும் பிரமிப்பூட்டுவதும் கொழுந்து விட்டெரியும் நெருப்புப் போன்றதுமான தன் வீர்யத்தை, அந்தக் குடத்தில் விட்டுவிட்டார். (21)

பின்னர், அந்த இடத்திலிருந்து புறப்பட்டு மித்திர தேவதை இருந்த இடத்திற்குச் சென்றாள், ஊர்வசி. அவளைக் கண்டதும் மிகவும் கோபம் கொண்ட மித்திரன், அவளை நோக்கிப் பின்வருமாறு கூறினார்— (22)

'நான் உன்னை முன்னரே அழைத்திருந்தேன். என்னை அலட்சியப்படுத்திவிட்டு, வேறொருவருடைய அழைப்புக்கு இணங்கி விட்டாய்? நடத்தை கெட்டவளே! இந்தப் பாவச் செயலினால் எனக்குக் கோபம் உண்டாகி, அதனால் நீ மாசுபடுத்தப்பட்டு விட்டாய். (அதற்குத் தண்டனையாக) நீ மனித உலகத்தில் பிறந்து சிறிது காலம் அங்கே வசிக்கப் போகிறாய். (23,24)

கெடுமதி படைத்தவளே! புதனுடைய புதல்வன், ராஜரிஷியான காசி மன்னன் புரூரவஸ். இப்போதே நீ அவனிடம் போ. அவன் உன் கணவனாக இருப்பான்.' (25)

பின்னர், அந்த சாபத்தின் விளைவாக, புதனுடைய சொந்தப் புதல்வனாகிய புரூரவஸிடம் அவள் சென்றாள். (26)

ஊர்வசியின் வயிற்றிலிருந்து, புரூரவஸின் புதல்வனாக மகாபலம் பொருந்திய ஆயு என்பவன் பிறந்தான். அவனுடைய குமாரன், இந்திரனை நிகர்த்த ஆற்றல் கொண்ட நகுஷன். (27)

விருத்திராசுரன் மேல் வஜ்ராயுதத்தை ஏவிக் கொன்றதும், பிரும்மஹத்தி தோஷம் பற்றிக் கொள்ளும் என்ற அச்சத்தால், தேவலோகத்திலிருந்து இந்திரன் வெளியே சென்று மறைந்து வாழ்ந்த காலத்தில், ஒரு லட்சம் ஆண்டுகள் இந்த நகுஷன்தான், இந்திரப் பதவி வகித்து ஆட்சி செலுத்தினான். (28)

அழகான பல்வரிசையும், கவர்ச்சி மிக்க கண்களையும் கொண்ட ஊர்வசி, மித்திரனின் சாபத்தின்படி மண்ணுலகத்திற்கு வந்து அநேக ஆண்டுகள் வசித்து வந்தாள். பின்னர், சாபத்தின் காலம் முடிந்ததும், மீண்டும் இந்திர சபையை அடைந்தாள்.'' (29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஐம்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தேழு

நிமி, பிராணிகளின் கண்ணிமைப்பில் இடம் பெறுதல்

தெய்விகமானதும் மிகவும் ஆச்சரியத்தை விளைவிப்பதுமான, அந்த வரலாற்றைக் கேட்ட இலக்குவன் மிகவும் மனமகிழ்ந்து இராமனைப் பார்த்துக் கூறினான்— (1)

Koviloor Digital Library

நிக்ஷிப்ததே$_3$ஹௌ காகுத்ஸ்த$_2$ கத$_2$ம் தௌ த்$_3$விஜபார்தி$_2$வௌ ।
புநர்தே$_3$ஹேந ஸம்யோக$_3$ம் ஜக்$_3$மதுர்தே$_3$வஸம்மதௌ ॥ (2)

தஸ்ய தத்$_3$ப$_4$ாஷிதம் ஶ்ருத்வா ராம: ஸத்யபராக்ரம: ।
தாம் கத$_2$ாம் கத$_2$யாமாஸ வஸிஷ்ட$_2$ஸ்ய மஹாத்மந: ॥ (3)

யஸ்து கும்பே$_4$ா ரகு$_4$ஶ்ரேஷ்ட$_2$ தேஜ:பூர்ணோ மஹாத்மநோ: ।
தஸ்மிந்ஸ்தேஜோமயௌ விப்ரௌ ஸம்பூ$_4$தாவ்ருஷிஸத்தமௌ ॥ (4)

பூர்வம் ஸமப$_4$வத்தத்ர ஹ்யக$_3$ஸ்த்யோ ப$_4$க$_3$வாந்ருஷி: ।
நாஹம் ஸுதஸ்தவேத்யுக்த்வா மித்ரம் தஸ்மாத$_3$பாக்ரமத் ॥ (5)

தத்$_3$தி$_4$ தேஜஸ்து மித்ரஸ்ய உர்வஶ்யா: பூர்வமாஹிதம் ।
தஸ்மிந் ஸமப$_4$வத் கும்பே$_4$ தத்தேஜோ யத்ர வாருணம் ॥ (6)

கஸ்யசித்த்வத$_2$ காலஸ்ய மித்ராவருணஸம்ப$_4$வ: ।
வஸிஷ்ட$_2$ஸ்தேஜஸா யுக்தோ ஜஜ்ஞே சேக்ஷ்வாகுதை$_3$வதம் ॥ (7)

தமிக்ஷ்வாகுர்மஹாதேஜா ஜாதமாத்ரமநிந்தி$_3$தம் ।
வவ்ரே புரோஹிதம் ஸௌம்ய வம்ஶஸ்யாஸ்ய ப$_4$வாய ந: ॥ (8)

ஏவம் த்வபூர்வதே$_3$ஹஸ்ய வஸிஷ்ட$_2$ஸ்ய மஹாத்மந: ।
கதி$_2$தோ நிர்க$_3$ம: ஸௌம்ய நிமே: ஶ்ருணு யத$_2$ா ப$_4$வேத் ॥ (9)

த்$_3$ருஷ்ட்வா விதே$_3$ஹம் ராஜாநம்ருஷய: ஸர்வ ஏவ தே ।
தம் ததோ யோஜயாமாஸுர்யாக$_3$தீ$_3$க்ஷாம் மநீஷிண: ॥ (10)

தம் ச தே$_3$ஹம் நரேந்த்$_3$ரஸ்ய ரக்ஷந்தி ஸ்ம த்$_3$விஜோத்தமா: ।
க$_3$ந்தை$_4$ர்மால்யைஶ்ச வஸ்த்ரைஶ்ச பௌரப்$_4$ருத்யஸமந்விதா: ॥ (11)

ததோ யஜ்ஞே ஸமாப்தே து ப்$_4$ருகு$_3$ஸ்தத்ரேத$_3$மப்$_3$ரவீத் ।
ஆநயிஷ்யாமி தே சேதஸ்துஷ்டோऽஸ்மி தவ பார்தி$_2$வ ॥ (12)

ஸுப்ரீதாஶ்ச ஸுரா: ஸர்வே நிமேஶ்சேதஸ்தத$_2$ாப்$_3$ருவந் ।
வரம் வரய ராஜர்ஷே க்வ தே சேதோ நிருப்யதாம் ॥ (13)

ஏவமுக்த: ஸுரை: ஸர்வைர்நிமேஶ்சேதஸ்தத$_3$ாப்$_3$ரவீத் ।
நேத்ரேஷு ஸர்வபூ$_4$தாநாம் வஸேயம் ஸுரஸத்தமா: ॥ (14)

ப$_3$ாட$_4$மித்யேவ விபு$_3$த$_4$ா நிமேஶ்சேதஸ்தத$_3$ாப்$_3$ருவந் ।
நேத்ரேஷு ஸர்வபூ$_4$தாநாம் வாயுபூ$_4$தஶ்சரிஷ்யஸி ॥ (15)

த்வத்க்ருதே ச நிமிஷ்யந்தி சக்ஷூம்ஷி ப்ருதி$_2$வீபதே ।
வாயுபூ$_4$தேந சரதா விஶ்ரமார்த$_2$ம் முஹுர்முஹு: ॥ (16)

Koviloor Digital Library

''காகுத்தரே! தேவர்களுக்கு நிகரான அந்த அந்தணரும் அரசரும் உடலை இழந்தபின், எவ்வாறு மீண்டும் உடலைப் பெற்றார்கள்?'' (2)

தோல்வி காணாத பராக்கிரமத்தையுடைய இராமன், அவன் கூறியதைக் கேட்டு, மகாத்மாவான வசிஷ்டருடைய வரலாற்றைக் கூறத் தொடங்கினார்— (3)

''ரகுகுலத் திலகமே! மகாத்மாக்களான மித்திரனும் வருணனும் ஒரு கும்பத்தில் (குடத்தில்) தங்கள் வீர்யத்தைப் பெய்தார்கள். அதிலிருந்து ஒளிமிக்க இரு அந்தணர்கள் தோன்றினார்கள். அவர்கள், முனிவர்களுள் மிகச்சிறந்தவர்களாக விளங்கினார்கள். (4)

முதலில், அந்தக் குடத்திலிருந்து அகஸ்தியர் தோன்றினார். 'நான் உங்களுடைய புதல்வன் இல்லை' என்று, மித்திரனிடம் கூறிவிட்டு, அவர் அங்கிருந்து சென்றுவிட்டார். (5)

ஊர்வசியிடம் ஏற்பட்ட காமமயக்கத்தால் மித்திரனிடமிருந்து நழுவிய வீர்யம், முன்னதாக அந்தக் குடத்தில் இருந்தது. பின்னர், வருணனுடைய வீர்யமும் அந்தக் குடத்தில் கலந்தது. (6)

சிறிது காலத்திற்குப் பின்னர், மித்திரன்–வருணனுடைய அந்த வீர்யக் கலவையிலிருந்து வசிஷ்டர் தோன்றினார். அவர், இக்ஷ்வாகு குலத்தின் போற்றத்தக்க ராஜகுருவாக விளங்கினார். (7)

லட்சுமணா! அவர் அவ்வாறு தோன்றியவுடனேயே, மன்னர் இக்ஷ்வாகு அவரிடம் சென்று, இகழ்ச்சிக்கு உள்ளாகாத அவரை, 'எங்கள் குலத்தின் நல்வாழ்வின் பொருட்டு, தாங்கள் எங்கள் குலத்தின் ஆசார்யராக இருக்கவேண்டும்' என்று வேண்டிக் கொண்டார். (8)

செல்வனே! புதிய உடலைப் பெற்ற வசிஷ்டரின் தோற்றத்தைப் பற்றி உனக்குக் கூறினேன். இனி, நிமியினுடைய வரலாற்றைக் கூறுகிறேன், கேள். (9)

நிமி, சரீரத்திலிருந்து பிரிந்தவனாக ஆகிவிட்டதைக் கண்ட பேரறிஞர்களான முனிவர்கள் (வேத வித்தகர்கள்) எல்லோரும், அந்த சரீரத்திற்கு யாகதீக்ஷை செய்து வைத்தார்கள். (10)

அந்தணோத்தமர்களான அவர்கள், நகர மக்கள் மற்றும் பணியாளர்கள் உதவியுடன் அந்த உடலுக்கு ஆடை, மாலை சார்த்தி நறுமணம் பூசிக் காப்பாற்றி வந்தார்கள். (11)

காலக்கிரமத்தில் வேள்வி நிறைவடைந்ததும், பிருகு முனிவர், (நிமியினுடைய உயிர்த் தத்துவத்தை நோக்கி), 'மன்னனே! வேள்வி நல்லபடியாக நிறைவேறியதால், நான் உன்னிடம் மகிழ்வுடன் இருக்கிறேன். நீ விரும்பினால், உன்னை உயிர்ப்பித்துத் திரும்பவும் கொண்டு வருவேன்' என்று கூறினார். (12)

எல்லா தேவதைகளும் மனமகிழ்ந்து நிமியின் உயிர்க்கருவிடம், 'ராஜரிஷியே! உன்னுடைய உயிருணர்வை எங்கே நிலைநாட்டலாம்? என்று கூறுவாயாக' என்று கேட்டார்கள். (13)

இவ்வாறு, எல்லா தேவதைகளாலும் கூறப்பட்ட நிமியினுடைய ஜீவன், 'தேவோத்தமர்களே! நான் எல்லாப் பிராணிகளுடைய கண்ணிமைப்பில் இருக்க விரும்புகிறேன்' என்றது. (14)

'சரி, அவ்வாறே ஆகட்டும். எல்லா உயிர்ப்பிராணிகளின் கண்களிலும் வாயுருபமாக இயங்குவாயாக' என்று தேவதைகள் கூறினார்கள். (15)

'மண்ணாளும் வேந்தே! வாயு வடிவத்தில் இயங்கும் உங்கள் சேர்க்கையால் களைப்படைந்து போகும் கண்கள், களைப்பைப் போக்கிக் கொள்வதற்காக அவ்வப்போது இமைகளால் கண்களை மூடிக்கொள்ளும்.' (16)

Koviloor Digital Library

ஏவமுக்த்வா து விபு3தா4: ஸர்வே ஜக்3முர்யதா2க3தம் ।
ருஷயோऽபி மஹாத்மாநோ நிமேர்தே3ஹம் ஸமாஹரந் ॥ (17)

அரணிம் தத்ர நிக்ஷிப்ய மத2நம் சக்ருரோஜஸா ।
மந்த்ரஹோமைர்மஹாத்மாந: புத்ரஹேதோர்நிமேஸ்தத3ா ॥ (18)

அரண்யாம் மத்2யமாநாயாம் ப்ராது3ர்பூ4தோ மஹாதபா: ।
மத2நாந்மிதி2ரித்யாஹுர்ஜநநாஜ்ஜநகோऽப4வத் ॥ (19)

யஸ்மாத்3விதே3ஹாத் ஸம்பூ4தோ வைதே3ஹஸ்து தத: ஸ்ம்ருத: ।
ஏவம் விதே3ஹராஜஶ்ச ஜநக: பூர்வகோऽப4வத் ॥
மிதி2ர்நாம மஹாதேஜாஸ்தேநாயம் மைதி2லோऽப4வத் ॥ (20)

இதி ஸர்வமஶேஷதோ மயா
கதி2தம் ஸம்ப4வகாரணம் து ஸௌம்ய ।
ந்ருபபுங்க3வ ஶாபஜம் த்3விஜஸ்ய
த்3விஜஶாபாச்ச யத3த்3பு4தம் ந்ருபஸ்ய ॥ (21)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 ஸப்தபஞ்சாஶ: ஸர்க3: ॥

அஷ்டபஞ்சாஶ: ஸர்க3:

யயாதிஶாப:

ஏவம் ப்3ருவதி ராமே து லக்ஷ்மண: பரவீரஹா ।
ப்ரத்யுவாச மஹாத்மாநம் ஜ்வலந்தமிவ தேஜஸா ॥ (1)

மஹத3த்3பு4தமாஶ்சர்யம் விதே3ஹஸ்ய புராதநம் ।
நிர்வ்ருத்தம் ராஜஶார்தூ3ல வஸிஷ்ட2ஸ்ய நிமே: ஸஹ ॥ (2)

நிமிஸ்து க்ஷத்ரிய: ஶூரோ விஶேஷேண ச தீ3க்ஷித: ।
ந க்ஷமாம் க்ருதவாந் ராஜா வஸிஷ்ட2ஸ்ய மஹாத்மந: ॥ (3)

ஏவமுக்தஸ்து தேநாயம் ஸ்ரீமாந் க்ஷத்ரியபுங்க3வ: ।
உவாச லக்ஷ்மணம் வாக்யம் ஸர்வஶாஸ்த்ரவிஶாரத3ம் ॥ (4)

ராமோ ரமயதாம் ஶ்ரேஷ்டே2ா ப்4ராதரம் தீ3ப்ததேஜஸம் ।
ந ஸர்வத்ர க்ஷமா வீர புருஷேஷு ப்ரத்3ருஶ்யதே ॥ (5)

ஸௌமித்ரே து3:ஸஹோ ரோஷோ யதா2 க்ஷாந்தோ யயாதிநா ।
ஸத்த்வாநுக3ம் புரஸ்க்ருத்ய தம் நிபோ3த4 ஸமாஹித: ॥ (6)

Koviloor Digital Library

இவ்வாறு, கூறிவிட்டு தேவதைகள் எல்லோரும் வந்தவாறே திரும்பிப் போனார்கள். மகாத்மாக்களான முனிவர்கள் நிமியின் சரீரத்தை (பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து) எடுத்துக் கொண்டு வந்தார்கள். (17)

நிமியினுடைய அந்த உடலிலிருந்து, இன்னொரு சரீரம் உயிர்ப்புடன் தோன்ற வேண்டும் என்ற நோக்கத்துடன், அந்த உடலில் அரணிக்கட்டையை நிலைநிறுத்தி, புத்திரோத்பத்திக்கு உரிய ஹோம மந்திரங்களைக் கூறியவண்ணம் வேகமாகக் கடைந்தார்கள். (18)

அரணிக்கட்டையால் கடைந்தபோது, அதிலிருந்து மகாதேஜஸ்வியான ஒருவர் தோன்றினார். கடைந்ததன் விளைவாக வெளிப்பட்டதால் மிதி என்றும், அதிசயமான முறையில் ஜனித்ததால் ஜனகர் என்றும் பெயர் பெற்றார். (19)

உணர்வற்ற தேகத்திலிருந்து தோன்றியதால், விதேகர் என்றும் பெயர் பெற்றார். இவ்வாறு, மகாதேஜஸ்வியான மிதி, விதேக மன்னரான ஜனகருக்குக் குலமுதல்வர் ஆகிறார். அதனால், அந்த வம்சம், 'மைதில வம்சம்' என்று கூறப்படுகிறது. (20)

இனியவனே! அரசர்களுள் சிறந்தவரான நிமியின் சாபத்தால் அந்தணரான வசிஷ்டருக்கும், அந்த அந்தணருடைய சாபத்தால் மன்னனுக்கும், மிகவும் வியப்பைத் தரும் வகையில் ஏற்பட்ட பிறப்பைப் பற்றியும் விரிவாகக் கூறிவிட்டேன்.'' (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஐம்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தெட்டு

யயாதிக்குக் கிடைத்த சாபம்

இவ்வாறு, இராமன் சொல்லி முடித்தவுடன், எதிரிகளை மாய்க்கும் லட்சுமணன், ஆன்மப்பொலிவினால் அழல் போல் விளங்கும் மகாத்மாவான இராமனைப் பார்த்துக் கூறினான்— (1)

''மா வலி படைத்த மன்னரே! விதேகருடைய மிகப் பழமையான சரித்திரம் அற்புதமாகவும் ஆச்சரியமாகவும் இருக்கிறது. அவ்வாறே, வசிஷ்டர், நிமியினுடைய வரலாறும் பிரமிப்பை உண்டாக்குகிறது. (2)

நிமி, ஒரு க்ஷத்திரியன்; மாவீரன்; மேலும், யாகதீக்ஷை ஏற்றுக் கொண்டவன். (யாகதீக்ஷை ஏற்றவர், கோபம் கொள்ளக்கூடாது என்பது விதி. மன்னன், மறையவரை இகழக்கூடாது என்பதும் விதி.) அரசகுலத்தைச் சேர்ந்த அவர், மகாத்மாவான வசிஷ்டரிடம் நடந்து கொண்ட முறை சரியானது அல்ல என்று நினைக்கிறேன்.'' (3)

க்ஷத்திரியர்களுள் தலைசிறந்தவரும், கண்களால் பார்த்த அளவிலேயே பிறர் மனத்தில் களிப்பை உண்டாக்குபவர்களில் முதன்மையானவரும், வீரத்திரு பொருந்தியவருமான இராமன், எல்லா அறநூல்களையும் கற்றறிந்த நிபுணனாகிய இலக்குவன் கூறியதைக் கேட்டதும், குணக்குன்றென ஒளிவீசும் சகோதரனை நோக்கி, பதில் கூறத் தொடங்கினார்— ''வீரனே! எல்லா மக்களிடத்திலும் அவ்வாறான பொறுமை காணப்படுவதில்லை. (4,5)

லட்சுமணா! யயாதி மன்னர், சத்துவ குணத்தை மேற்கொண்டு, பொறுக்கவியலாத கோபத்தை அடக்கிக் கொண்டார். அந்த வரலாற்றைச் சொல்கிறேன், கவனமாகக் கேள். (6)

Koviloor Digital Library

நஹுஷஸ்ய ஸுதோ ராஜா யயாதி: பௌரவர்த$_4$ந: ।
தஸ்ய ப$_4$ார்யாத்$_3$வயம் ஸௌம்ய ரூபேணாப்ரதிமம் பு$_4$வி ॥ (7)

ஏகா து தஸ்ய ராஜர்ஷேர்நாஹுஷஸ்ய புரஸ்க்ருதா ।
ஶர்மிஷ்ட$_2$ா நாம தை$_3$தேயீ து$_3$ஹிதா வ்ருஷபர்வண: ॥ (8)

அந்யா துஶநஸ: பத்நீ யயாதே: புருஷர்ஷப$_4$ ।
ந து ஸா த$_3$யிதா ராக்ஞோ தே$_3$வயாநீ ஸுமத்$_4$யமா ॥ (9)

தயோ: புத்ரௌ து ஸம்பூ$_4$தௌ ரூபவந்தௌ ஸமாஹிதௌ ।
ஶர்மிஷ்ட$_2$ாஜநயத் பூரும் தே$_3$வயாநீ யது$_3$ம் தத$_3$ா ॥ (10)

பூருஸ்து த$_3$யிதோ ராக்ஞோ கு$_3$ணைர்மாத்ருக்ருதேந ச ।
ததோ து$_3$:க$_2$ஸமாவிஷ்டோ யது$_3$ர்மாதரமப்$_3$ரவீத் ॥ (11)

ப$_4$ார்க$_3$வஸ்ய குலே ஜாதா தே$_3$வஸ்யாக்லிஷ்டகர்மண: ।
ஸஹஸே ஹ்ருத்$_3$க$_3$தம் து$_3$:கமவமாநம் ச து$_3$:ஸஹம் ॥ (12)

ஆவாம் ச ஸஹிதௌ தே$_3$வி ப்ரவிஶாவ ஹுதாஶநம் ।
ராஜா து ரமதாம் ஸார்த$_4$ம் தை$_3$த்யபுத்ர்யா ப$_3$ஹுக்ஷபா: ॥ (13)

யதி$_3$ வா ஸஹநீயம் தே மாமநுக்ஞாதுமர்ஹஸி ।
க்ஷம த்வம் ந க்ஷமிஷ்யேऽஹம் மரிஷ்யாமி ந ஸம்ஶய: ॥ (14)

புத்ரஸ்ய ப$_4$ாஷிதம் ஶ்ருத்வா பரமார்தஸ்ய ரோத$_3$த: ।
தே$_3$வயாநீ து ஸங்க்ருத்$_3$த$_4$ா ஸஸ்மார பிதரம் தத$_3$ா ॥ (15)

இங்கி$_3$தம் தத$_3$பி$_4$க்ஞாய து$_3$ஹிதுர்ப$_4$ார்க$_3$வஸ்தத$_3$ா ।
ஆக$_3$தஸ்த்வரிதம் தத்ர தே$_3$வயாநீ து யத்ர ஸா ॥ (16)

த்$_3$ருஷ்ட்வா சாப்ரக்ருதிஸ்த$_2$ாம் தாமப்ரஹ்ருஷ்டாமசேதநாம் ।
பிதா து$_3$ஹிதரம் வாக்யம் கிமேததி$_3$தி சாப்$_3$ரவீத் ॥ (17)

ப்ருச்ச$_2$ந்தமஸக்ருத்தம் வை ப$_4$ார்க$_3$வம் தீப்ததேஜஸம் ।
தே$_3$வயாநீ து ஸங்க்ருத்$_3$த$_4$ா பிதரம் வாக்யமப்$_3$ரவீத் ॥ (18)

அஹமக்$_3$நிம் விஷம் தீக்ஷ்ணமபோ வா முநிஸத்தம ।
ப$_4$க்ஷயிஷ்யே ப்ரவேக்ஷ்யாமி ந து ஶக்ஷ்யாமி ஜீவிதும் ॥ (19)

ந மாம் த்வமவஜாநீஷே து$_3$:கி$_2$தாமவமாநிதாம் ।
வ்ருக்ஷஸ்யாவக்ஞயா ப்$_3$ரஹ்மந் சி$_2$த்$_3$யந்தே வ்ருக்ஷஜீவிந: ॥ (20)

அவக்ஞயா ச ராஜர்ஷி: பரிபூ$_4$ய ச ப$_4$ார்க$_3$வ ।
மய்யவக்ஞாம் ப்ரயுங்க்தே ஹி ந ச மாம் ப$_3$ஹு மந்யதே ॥ (21)

Koviloor Digital Library

நகுஷனுடைய புதல்வன் யயாதி என்ற மன்னர், குடிமக்களின் மேன்மையைப் பேணுபவர். அவருக்கு இரண்டு மனைவிகள். அவர்களுக்கு இணையான அழகுள்ளவர் மண்ணுலகில் இல்லவே இல்லை. நாடாளும் முனிவர் போன்ற மன்னன் யயாதியின் ஒரு மனைவியின் பெயர் சர்மிஷ்டை. அவள், அரசனின் அன்புக்குப் பாத்திரமானவள்; அசுர குலத்தைச் சேர்ந்தவள்; விருஷபர்வனின் புதல்வி. (7,8)

யயாதியின் மற்றொரு மனைவியான தேவயானி, சுக்ராசார்யாரின் குமாரத்தி. அவள் பேரழகிதான் என்றாலும் கணவனின் அன்புக்குரியவளாக இல்லை. (9)

அவர்கள் இருவருக்கும் அழகும் நற்குணங்களுமுடைய ஒவ்வொரு புத்திரர்கள் தோன்றினார்கள். புரு என்பவனை சர்மிஷ்டையும், யது என்பவனை தேவயானியும் பெற்றெடுத்தார்கள். (10)

புரு, தன் அன்னையின் காரணமாகவும் தன்னுடைய நற்குணங்களாலும் மன்னரின் அன்புக்கு உரியவனாக இருந்தான். யது, அந்த அளவு அன்பைப் பெறாததால் துயரமடைந்து பெற்றெடுத்த அன்னையிடம் (பின்வருமாறு) கூறினான்— (11)

‘தாயே! தாங்கள், அரிய செயல்களையும் எளிதில் செய்து முடிக்கக் கூடியவரும், தேவதைகளுக்கு நிகரானவருமான பிருகுவினுடைய குலத்தில் (சுக்ராசார்யாரின் புதல்வியாகத்) தோன்றியவர். ஆனாலும் இங்கே, மனத்தை வாட்டும் துயரத்தையும், பொறுத்துக் கொள்ள முடியாத அவமானத்தையும் சகித்துக் கொண்டிருக்கிறீர்கள். (12)

அதனால், நாம் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து நெருப்பில் வீழ்ந்து மாய்ந்து போவோம். அந்த அசுரகுலப் பெண்ணுடன் மன்னன் வெகுகாலம் இன்பத்தை அனுபவிக்கட்டும். (13)

நீங்கள் இந்தக் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்க முடியுமானால், இப்படியே இருங்கள். ஆனால், நான் உயிரைப் போக்கிக் கொள்வதற்கு அனுமதி கொடுங்கள். நீங்கள் (இங்கு நடப்பதைச்) சகித்துக் கொண்டிருங்கள்; என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. நான் இறக்கப் போவது, நிச்சயம்.’ (14)

மிகவும் மனம் பதைத்து, அழுதுகொண்டு தன் புதல்வன் யது கூறியதைக் கேட்ட தேவயானிக்கு மிகவும் கோபமுண்டாயிற்று. உடனே, தன் தந்தை சுக்ராசார்யாரை நினைவுகூர்ந்தாள். சுக்ராசார்யார், தன் புதல்வி தன்னை நினைப்பதை உணர்ந்து, வெகு விரைவில் தேவயானி இருந்த இடத்தை வந்தடைந்தார். (15,16)

தன் இயல்புகளை இழந்து, வாட்டம் அடைந்து, உணர்விழந்தவள் போலிருந்த தன் புதல்வியைக் கண்டு, ‘குழந்தாய்! ஏன் இப்படி இருக்கிறாய்?’ என்று அவர் கேட்டார். (17)

ஒளிவீசும் அழல் போன்றவரும், பிருகு குலத்தோன்றலுமான தன் தந்தை இவ்வாறு வற்புறுத்திக் கேட்டதும், மிகவும் சீற்றத்துடன் தேவயானி சொன்னாள்— (18)

‘முனிவரேறே! கொழுந்துவிட்டெரியும் நெருப்பில் அல்லது ஆழங்காண முடியாத நீர்ப்பிரவாகத்தில் நான் விழப் போகிறேன்; அல்லது, விஷத்தைக் குடிப்பேன். இனிமேலும், இவ்விடத்தில் இழிவான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்க முடியாது. (19)

நான், இங்கே துக்கப்பட்டுக் கொண்டிருப்பதையும் அவமதிக்கப்படுவதையும் நீங்கள் அறியமாட்டீர்கள். வேதவித்தகரே! மரத்தைச் சிதைப்பதால், அதிலுள்ள மலர்களும் இலைகளும் நாசமடைகின்றன. (20)

பிருகு குலத்தோன்றலே! ஆட்சிபுரியும் முனிவர் போன்ற யயாதி மன்னர், உங்களிடம் மதிப்பு வைக்காததால், என்னை அலட்சியப்படுத்துகிறார். எனக்கு உரிய கௌரவத்தைக் கொடுப்பதில்லை.’ (21)

Koviloor Digital Library

தஸ்யாஸ்தத்3வசநம் ஶ்ருத்வா கோபேநாபி4பரிப்லுத: ।
வ்யாஹர்துமுபசக்ராம ப4ார்க3வோ நஹுஷாத்மஜம் ॥ (22)

யஸ்மாந்மாமவஜாநீஷே நாஹுஷ த்வம் து3ராத்மவாந் ।
ஜரயா பரயா ஜீர்ண: ஶைதி2ல்யமுபயாஸ்யஸி ॥ (23)

ஏவமுக்த்வா து3ஹிதரம் ஸமாஶ்வாஸ்ய ச ப4ார்க3வ: ।
புநர்ஜக3ாம ப்3ரஹ்மர்ஷிர்ப4வநம் ஸ்வம் மஹாயஶா: ॥ (24)

ஸ ஏவமுக்த்வா த்3விஜபுங்க3வாக்3ர்ய:
ஸுதாம் ஸமாஶ்வாஸ்ய ச தே3வயாநீம் ।
புநர்யயௌ ஸூர்யஸமாநதேஜா
த3த்த்வா ச ஶாபம் நஹுஷாத்மஜாய ॥ (25)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 அஷ்டபஞ்சாஶ: ஸர்க3: ॥

ஏகோநஷஷ்டிதம: ஸர்க3:

புருராஜ்யாபி4ஷேக:

ஶ்ருத்வா தூஶநஸம் க்ருத்தம் ததார்தோ நஹுஷாத்மஜ: ।
ஜராம் பரமிகாம் ப்ராப்ய யதும் வசநமப்ரவீத் ॥ (1)

யதோ த்வமஸி தர்மக்ஞோ மதர்தம் ப்ரதிக்ருஹ்யதாம் ।
ஜராம் பரமிகாம் புத்ர போகை ரம்ஸ்யே மஹாயஶ: ॥ (2)

ந தாவத் க்ருதக்ருத்யோऽஸ்மி விஷயேஷு நரர்ஷப4 ।
அநுபூ4ய தத2ா காமம் தத: ப்ராப்ஸ்யாம்யஹம் ஜராம் ॥ (3)

யது3ஸ்தத்3வசநம் ஶ்ருத்வா ப்ரத்யுவாச நரர்ஷப4ம் ।
புத்ரஸ்தே த3யித: பூரு: ப்ரதிக்3ருஹ்ணாது வை ஜராம் ॥ (4)

ப3ஹிஷ்க்ருதோऽஹமர்தே2ஷு ஸந்நிகர்ஷாச்ச பார்தி2வ ।
ப்ரதிக்3ருஹ்ணாது வை ராஜந் க: ஸஹாஶ்நாதி பே4ாஜநம் ॥ (5)

தஸ்ய தத்3வசநம் ஶ்ருத்வா ராஜா பூருமத2ாப்3ரவீத் ।
இயம் ஜரா மஹாபா3ஹோ மத3ர்த2ம் ப்ரதிக்3ருஹ்யதாம் ॥ (6)

நாஹுஷேணைவமுக்தஸ்து பூரு: ப்ராஞ்ஜலிரப்3ரவீத் ।
த4ந்யோऽஸ்ம்யநுக்3ருஹீதோऽஸ்மி ஶாஸநேऽஸ்மி தவ ஸ்தி2த: ॥ (7)

பூரோர்வசநமாக்ஞாய நாஹுஷ: பரயா முத3ா ।
ப்ரஹர்ஷமதுலம் லேபே4 ஜராம் ஸங்க்ராமயச்ச தாம் ॥ (8)

Koviloor Digital Library

அவளுடைய சொற்களைக் கேட்ட அவர், கோபத்தில் மூழ்கியவராய், நகுஷனுடைய குமாரர் யயாதியை நோக்கிக் கூறினார்— (22)

'யயாதி! நீ தீய எண்ணங்கொண்டவன். அதனால், என்னை மதிக்கவில்லை. எனவே, நீ மிகவும் வயோதிகத்தை அடைந்து, உடல் தளர்ந்து நலிவடையப் போகிறாய்.' (23)

இவ்வாறு, சாபம் கொடுத்துவிட்டு, புதல்விக்கு சமாதானம் கூறிய பின்னர், பிரும்மரிஷியும் புகழ்மிக்கவருமான சுக்ராசார்யார் தன் இருப்பிடத்திற்குச் சென்றார். (24)

அந்தணர்களில் முதன்மையாளரான அவர் மேற்கண்டவாறு கூறிவிட்டு, மகள் தேவயானியை சமாதானப்படுத்தினார். சூரியனுக்கு நிகரான பேரொளி வீசும் அவர், நகுஷ குமாரனுக்குச் சாபம் கொடுத்துவிட்டுத் திரும்பிச் சென்றார். (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஐம்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : ஐம்பத்தொன்பது

புருவுக்கு முடிசூட்டுதல்

கோபம் கொண்ட சுக்ராசார்யார் சாபம் கொடுத்ததைக் கேட்ட யயாதிக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது. தனக்கு ஏற்பட்டுள்ள முதுமையைப் பிறருக்குக் கொடுத்து, அவருடைய இளமையைப் பெற்றுக் கொள்ளும் தனித்தன்மை வாய்ந்த சாபம். ஆதலால், (இன்னும் சிறிதுகாலம் இளமையாகவே தான் இருக்க விரும்பி) மைந்தன் யதுவை அழைத்துக் கூறினார்— (1)

'யதுச் செல்வமே! நீ தருமம் அறிந்தவன். (பண்டமாற்று முறையைப் போல்) எனக்கு ஏற்பட்டுள்ள இந்த முதுமையை ஏற்று, உன் இளமையை எனக்குக் கொடு. புகழ் மிக்கவனே! நான் இன்னும் சிறிதுகாலம் சுகபோகங்களை அனுபவித்து, என் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்கிறேன். (2)

மனிதக் காளையே! இதுவரை அனுபவித்த புலனின்பங்களால் என் ஆசை தீரவில்லை. என் விருப்பம் போல் புலனுகர் இன்பங்களைத் தடையின்றி அனுபவித்துவிட்டுப் பின்னர், (புலனின்பம் பெற இயலாத) முதுமையை உன்னிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். (3)

இதைக் கேட்ட யது, மன்னரைப் பார்த்துக் கூறினான்— 'உங்கள் அன்புக்குரிய குமாரன் புரு உங்கள் முதுமையை ஏற்கட்டுமே! மன்னரே! தாங்கள் எனக்கு எந்த சுக சௌக்கியங்களையும் கொடுத்ததில்லை; மடியில் வைத்துக் கொண்டு சீராட்டியதும் இல்லை. எவர்களை அருகில் அமர்த்திக் கொண்டு உணவு உண்டு களிக்கின்றீர்களோ, அவர்கள்தான் உங்கள் முதுமையை ஏற்றுக் கொள்ளட்டுமே!' (4,5)

யதுவினுடைய இந்தப் பதிலைக் கேட்டபிறகு, புருவை அழைத்து மன்னர் சொன்னார்— 'பெருந்தோளனே! எனக்கு வந்துள்ள இந்த முதுமையை, என் நலத்தின் பொருட்டு, நீ ஏற்றுக்கொள்ளேன்.' (6)

யயாதியின் சொற்களைக் கேட்ட புரு, கைகளைக் கூப்பிக் கொண்டு, 'ஆகா! என்ன பேறுபெற்றேன்! என்ன அருள் பெற்றேன்!... தந்தையே! தங்கள் கட்டளைப்படி நடக்கச் சித்தமாக இருக்கிறேன்...' என்று களிப்புடன் கூறினான். புருவினுடைய பதிலைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த யயாதி, தன்னுடைய முதுமையை அவனுக்கு மாற்றிக் கொடுத்தார். (7,8)

Koviloor Digital Library

தத: ஸ ராஜா தருண: ப்ராப்ய யக்ஞாந் ஸஹஸ்ரஶ: ।
ப$_3$ஹூவர்ஷஸஹஸ்ராணி பாலயாமாஸ மேதி$_3$நீம் ॥ (9)

அத$_2$ தீ$_3$ர்க$_4$ஸ்ய காலஸ்ய ராஜா பூருமத$_2$ாப்$_3$ரவீத் ।
ஆநயஸ்வ ஜராம் புத்ர ந்யாஸம் நிர்யாதயஸ்வ மே ॥ (10)

ந்யாஸபூ$_4$தா மயா புத்ர த்வயி ஸங்க்ராமிதா ஜரா ।
தஸ்மாத் ப்ரதிக்$_3$ருஹீஷ்யாமி தாம் ஜராம் மா வ்யத$_2$ாம் க்ருத$_2$ா: ॥ (11)

ப்ரீதஶ்சாஸ்மி மஹாபா$_3$ஹோ ஶாஸநஸ்ய ப்ரதிக்$_3$ரஹாத் ।
த்வாம் சாஹமபி$_4$ஷேக்ஷ்யாமி ப்ரீதியுக்தோ நராதி$_4$பம் ॥ (12)

ஏவமுக்த்வா ஸுதம் பூரும் யயாதிர்நஹுஷாத்மஜ: ।
தே$_3$வயாநீஸுதம் க்ருத்$_3$தே$_4$ா ராஜா வாக்யமுவாச ஹ ॥ (13)

ராக்ஷஸஸ்த்வம் மயா ஜாத: புத்ரரூபோ து$_3$ராஸத$_3$: ।
ப்ரதிஹம்ஸி மமாக்ஞாம் யத் ப்ரஜார்தே$_2$ விப$_2$லோ ப$_4$வ ॥ (14)

பிதரம் கு$_3$ருபூ$_4$தம் மாம் யஸ்மாத்த்வமவமந்யஸே ।
ராக்ஷஸாந் யாதுத$_4$ாநாம்ஸ்த்வம் ஜநயிஷ்யஸி தா$_3$ருணாந் ॥ (15)

ந து ஸோமகுலோத்பந்நே வம்ஶே ஸ்த$_2$ாஸ்யதி து$_3$ர்மதே: ।
வம்ஶோऽபி ப$_4$வதஸ்துல்யோ து$_3$ர்விநீதோ ப$_4$விஷ்யதி ॥ (16)

தமேவ முக்த்வா ராஜர்ஷி: பூரும் ராஜ்யவிவர்த$_4$நம் ।
அபி$_4$ஷேகேண ஸம்பூஜ்ய ஆஶ்ரமம் ப்ரவிவேஶ ஹ ॥ (17)

தத: காலேந மஹதா தி$_3$ஷ்டாந்தமுபஜக்$_3$மிவாந் ।
த்ரிதி$_3$வம் ஸங்க$_3$தோ ராஜா யயாதிர்நஹுஷாத்மஜ: ॥ (18)

பூருஶ்சகார தத்$_3$ராஜ்யம் த$_4$ர்மேண மஹதா வ்ருத: ।
ப்ரதிஷ்ட$_2$ாநே புரவரே காஶிராஜ்யே மஹாயஶா: ॥ (19)

யது$_3$ஸ்து ஜநயாமாஸ யாதுத$_4$ாநாந் ஸஹஸ்ரஶ: ।
புரே க்ரௌஞ்சவநே து$_3$ர்கே$_3$ ராஜவம்ஶப$_3$ஹிஷ்க்ருத: ॥ (20)

ஏஷ துஶநஸா முக்த: ஶாபோத்ஸர்கே$_3$ா யயாதிநா ।
த$_4$ாரித: க்ஷாத்ரத$_4$ர்மேண யந்நிமிஶ்ச ந சக்ஷமே ॥ (21)

ஏதத்தே ஸர்வமாக்$_2$யாதம் த$_3$ர்ஶநம் ஸர்வகாரிணாம் ।
அநுவர்தாமஹே ஸௌம்ய தோ$_3$ஷோ ந ஸ்யாத்$_3$யத$_2$ா ந்ருகே$_3$ ॥ (22)

Koviloor Digital Library

உடனே வாலிபப் பருவத்தைப் பெற்ற யயாதி, ஆயிரக்கணக்கான வேள்விகளைச் செய்வித்தார். பல ஆயிரம் ஆண்டுகள் உலகத்தைப் பரிபாலித்தார். (9)

மிக நீண்ட காலம் கடந்த பின்னர் மன்னர் யயாதி, புருவைப் பார்த்து, ''மகனே! உன்னிடம் அடகுப் பொருளாக வைக்கப்பட்டுள்ள என் வயோதிகத்தை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடு'' என்று கூறினார். (10)

என் கண்மணியே! என்னுடைய முதுமை, அடகுப் பொருளாகத்தான் உன்னிடம் மாற்றிக் கொடுக்கப்பட்டது. அதை, நான் இப்போது திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். நீ வருத்தப்பட வேண்டாம். (11)

பெருந்தோளனே! நீ என் சொற்படி நடந்ததால் எனக்கு மிகவும் திருப்தியாக இருக்கிறது. நான் மிகவும் மனநிறைவோடு, உன்னை இந்த நாட்டின் மன்னனாக முடிசூட்டப் போகிறேன்.' (12)

தன்னுடைய புதல்வன் புருவிடம் இவ்வாறு கூறிவிட்டு, நகுஷ மைந்தரான யயாதி, தேவயானியின் புதல்வனான யதுவை நோக்கி, கோபத்துடன் கூறினார்— (13)

'யதுவே! யாராலும் வெல்ல முடியாத மைந்தனைப் பெற விரும்பிய நான், அரக்கனான உன்னை மகனாகப் பெற்றேன். நீ, என் ஆணையை எதிர்த்து நடந்தாய். ஆகவே, உன் சந்ததியினருக்கு அரசு உரிமை கிடைக்காமல் போகட்டும். (14)

நான் உன்னுடைய தந்தை; உன்னுடைய குரு. அப்படியிருந்தும் என் சொற்களை நீ மதிக்கவில்லை என்பதால், கொடுங்கோலர்களான அரக்கர்களையும் பூதங்களையும் புத்திரர்களாகப் பெற்றுக் கொள்ளப் போகிறாய். (15)

கெட்ட புத்தியுடைய உன்னிடம் தோன்றுபவர்கள், சந்திரவம்ச பரம்பரையினராகக் கருதப்பட மாட்டார்கள். உன் சந்ததியினரும் உன்னைப் போலவே பணிவில்லாதவர்களாகவே இருப்பார்கள்.' (16)

ராஜரிஷியான யயாதி, யதுவிடம் இவ்வாறு கூறிவிட்டு, நாட்டை மேன்மைப்படுத்தும் புருவுக்குப் பட்டம் சூட்டிவிட்டு, வானப்பிரஸ்த ஆசிரமத்தை மேற்கொண்டார். (காட்டில் வாழத் தொடங்கினார்.) (17)

வெகுகாலத்திற்குப் பின்னர், வினைப்பயன்களை எல்லாம் அனுபவித்துத் தீர்த்த பிறகு, நகுஷ மைந்தரான யயாதி தேவலோகம் சென்றார். (18)

பெரும்புகழ் கொண்ட புரு, அறம் தவறாது அரசு செலுத்தினார். காசி ராஜ்யத்தின் தலைநகரான பிரதிஷ்டானபுரியில் இருந்துகொண்டு, அவர் நாட்டை நிர்வகித்தார். (19)

அரச பரம்பரையிலிருந்து வெளியேற்றப்பட்ட யது, நகரங்களிலும் உட்புக முடியாத கிரௌஞ்ச வனத்திலும் ஆயிரக்கணக்கான பிசாசுகளைத் தோற்றுவித்தான். (20)

மன்னன் யயாதி, சுக்ராசார்யாரால் கொடுக்கப்பட்ட சாபத்தை க்ஷத்திரிய குல அறநெறிகளுக்கிணங்க பொறுமையுடன் ஏற்று அனுபவித்துத் தீர்த்தார். ஆனால், மன்னன் நிமி, வசிஷ்டரின் சாபத்தைப் பொறுத்துக் கொள்ளவில்லை. (தானும் கோபங்கொண்டு முனிவருக்குச் சாபம் கொடுத்தார்.) (21)

இனியவனே! எல்லா விஷயங்களையும் பற்றியும் கூறிவிட்டேன். எல்லா அறச்செயல்களையும் அனுஷ்டிக்கும் மேன்மக்கள் சென்ற வழியிலேயே நாம் செல்கிறோம். அதனால், நிருக மன்னனுக்கு ஏற்பட்டதைப் போன்ற பாவம் நமக்கு ஏற்படாது.'' (22)

Koviloor Digital Library

இதி கதயதி ராமே சந்த்$_3$ரதுல்யாநநே ச
ப்ரவிரலதரதாரம் வ்யோம ஜஜ்ஞே தத$_3$ாநீம் ।
அருணகிரணரக்தா தி$_3$க்$_3$ப$_3$பெ$_4$ள சைவ பூர்வா
குஸுமரஸவிமுக்தம் வஸ்த்ரமாகுண்டி$_2$தேவ ॥ (23)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகோநஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

ப்ரக்ஷிப்தேஷு ப்ரத$_2$ம: ஸர்க$_3$:

ஸாரமேயாவஸ்த$_2$ரநம்

தத: ப்ரப$_4$ாதே விமலே க்ருத்வா பௌர்வாஹ்ணிகீம் க்ரியாம் ।
த$_4$ர்மாஸநக$_3$தோ ராஜா ராமோ ராஜீவலோசந: ॥ (1)

ராஜத$_4$ர்மாநவேக்ஷந் வை ப்$_3$ரஹ்மணைர்நைக$_3$மை: ஸஹ ।
புரோத$_4$ஸா வஸிஷ்டே$_2$ந ருஷிணா கஶ்யபேந ச ॥ (2)

மந்த்ரிபி$_4$ர்வ்யவஹாரஜ்ஞைஸ்தத$_2$ாந்யைர்த$_4$ர்மபாரகை$_3$: ।
நீதிஜ்ஞைரத$_2$ ஸப்$_4$யைஶ்ச ராஜபி$_4$: ஸா ஸப$_4$ாவ்ருதா ॥ (3)

ஸப$_4$ா யத$_2$ா மஹேந்த்$_3$ரஸ்ய யமஸ்ய வருணஸ்ய ச ।
ஶுஶுபே$_4$ ராஜஸிம்ஹஸ்ய ராமஸ்யாக்லிஷ்டகர்மண: ॥ (4)

அத$_2$ ராமோऽப்$_3$ரவீத்தத்ர லக்ஷ்மணம் ஶுப$_4$லக்ஷணம் ।
நிர்க$_3$ச்ச$_2$ த்வம் மஹாபா$_3$ஹோ ஸுமித்ராநந்த$_3$வர்த$_4$ந ॥ (5)

கார்யார்தி$_2$நஶ்ச ஸௌமித்ரே வ்யாஹர்தும் த்வமுபாக்ரம ।
ராமஸ்ய ப$_4$ாஷிதம் ஶ்ருத்வா லக்ஷ்மண: ஶுப$_4$லக்ஷண: ॥ (6)

த்$_3$வாரதே$_3$ஶமுபாக$_3$ம்ய கார்யிணஶ்சாஹ்வயத் ஸ்வயம் ।
ந கஶ்சித$_3$ப்$_3$ரவீத்தத்ர மம கார்யமிஹாத்$_3$ய வை ॥ (7)

நாத$_4$யோ வ்யாத$_4$யஶ்சைவ ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி ।
பக்வஸஸ்யா வஸுமதீ ஸர்வௌஷதி$_4$ஸமந்விதா ॥ (8)

ந ப$_3$ாலோ ம்ரியதே தத்ர ந யுவா ந ச மத்$_4$யம: ।
த$_4$ர்மேண ஶாஸிதம் ஸர்வம் ந ச ப$_3$ாத$_4$ா விதீ$_4$யதே ॥ (9)

த்$_3$ருஶ்யதே ந ச கார்யார்தீ$_2$ ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி ।
லக்ஷ்மண: ப்ராஞ்ஜலிர்பூ$_4$த்வா ராமாயைவம் ந்யவேத$_3$யத் ॥ (10)

அத$_2$ ராம: ப்ரஸந்நாத்மா ஸௌமித்ரிமித$_3$மப்$_3$ரவீத் ।
பூ$_4$ய ஏவ து க$_3$ச்ச$_2$ த்வம் கார்யிண: ப்ரவிசாரய ॥ (11)

Koviloor Digital Library

முழுநிலவைப் போன்று மனங்கவரும் முகம் படைத்த இராமன், இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் இரவு கழிந்து, வானத்தில் ஓரிரு தாரகைகள் மட்டுமே மிஞ்சியிருந்தன. கீழ்த்திசையில் செவ்வண்ணம் படரத் தொடங்கியது. அந்தக் காட்சி, ஆகாயம் மலர்களின் செந்நிறக்குழம்பில் தோய்ந்த அருணன் என்ற செவ்வண்ண ஆடையால், தன் உடலை மறைத்துக் கொள்வது போலிருந்தது. (23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
ஐம்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

இடைச்செருகல் ஸர்க்கம் : ஒன்று

இராமனிடம் முறையீடு செய்ய ஒரு நாயின் வருகை

தெள்ளிய ஓர் அதிகாலையில், காலை வேளைக்கு உரிய வைதிக கர்மாக்களை முடித்துக் கொண்டு, வேதவித்தகர்களான அந்தணர்களும், அரச புரோகிதர் வசிஷ்டரும், கசியப முனிவரும் புடைசூழ வழக்காடு மன்றத்திற்கு வந்த இராமன் அரசு அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு, மக்களின் கோரிக்கைகளைக் கேட்டு நீதி வழங்குவதற்கென போடப்பட்டிருந்த நீதிபதியின் ஆசனத்தில் அமர்ந்தார். (1,2)

அந்த மன்றத்தில், நாட்டு நடப்புகளை அறிந்த அமைச்சர்கள், அறநூல்களைச் செம்மையாகக் கற்றறிந்த விற்பன்னர்கள், நீதிநூல் வல்லுநர்கள், சிற்றரசர்கள் மற்றும் சபையோர்கள் குழுமியிருந்தார்கள். (3)

மகேந்திரன்–யமன்–வருணனுடைய சபையைப் போல, அரிய செயல்களையும் எளிதில் செய்து முடிக்கும் ராஜசிம்மமான இராமனுடைய அந்த மன்றம் சிறப்பாக விளங்கியது. (4)

நற்பண்புகளை வெளியிடும் இலட்சணங்களைக் கொண்ட இலக்குவனைப் பார்த்து, ''லட்சுமணா! பெருந்தோளனே! நீ வெளியே சென்று, கோரிக்கைகளோடு வந்திருப்பவர்களை வரிசையாக உள்ளே அனுப்பு'' என்றார். மங்களமான அங்க லட்சணங்களையுடைய இலக்குவன், வாயிற்புறத்திற்கு வந்து, மன்னரைச் சந்தித்து முறையீடு செய்ய வந்திருப்பவர்களை, தானே கூவி அழைத்தான். ''எனக்கு அரசரிடம் ஒரு வேலை இருக்கிறது'' என்று கூறி எவரும் முன்வரவில்லை. (5–7)

இராமனின் ஆட்சியில், எவருக்கும் உடல்நோயோ, மனக்கவலையோ தோன்றவில்லை. விளைநிலத்தில் செழுமையான தானியங்களும் மரம்–செடிகளும் மண்டியிருந்தன. (8)

அப்போது, ஒரு சிறுவன், வாலிபன், நடுவயதுக்காரன்கூட மரணமடையவில்லை. (மிகவும் முதிர்ந்த வயதில், இயற்கையான மரணம் அடைந்தார்களே தவிர, எவரும் அற்பாயுளில் இறக்கவில்லை.) அறநெறிப்படியே ஆட்சி செய்யப்பட்டதால், மக்களுக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படாதிருந்தது. (9)

இராமன் அரசு செலுத்திய காலத்தில், அரசிடம் கோரிக்கையுடன் எவரும் வந்ததில்லை. லட்சுமணன் நீதிமன்றத்திற்குள் வந்து, ''முறையீட்டாளர்கள் யாரும் இல்லை'' என்று, கைகளைக் கூப்பியவண்ணம் தெரிவித்தான். (10)

மனமகிழ்ந்த இராமன், இலக்குவனைப் பார்த்து, ''மறுபடியும் வெளியே சென்று, மனுதாரர்கள் யாரேனும் வந்திருக்கிறார்களா? என்று தேடிப்பார்'' என்றார். (11)

Koviloor Digital Library

ஸம்யக்ப்ரணீதயா நீத்யா நாத$_4$ர்மோ வித்$_3$யதே க்வசித் ।
தஸ்மாத்$_3$ராஜப$_4$யாத் ஸர்வே ரக்ஷந்தீவ பரஸ்பரம் ॥ (12)

ப$_3$ராணா இவ மயா முக்தா இஹ ரக்ஷந்தி மே ப்ரஜா: ।
தத$_2$ாபி த்வம் மஹாப$_3$ாஹோ ப்ரஜா ரக்ஷஸ்வ தத்பர: ॥ (13)

ஏவமுக்தஸ்து ஸௌமித்ரிர்நிர்ஜக$_3$ாம ந்ருபாலயாத் ।
அபஶ்யத்$_3$த்$_3$வாரதே$_3$ஶே வை ஶ்வாநம் தாவத$_3$வஸ்தி$_2$தம் ॥ (14)

தமேவ வீக்ஷமாணம் வை விக்ரோஶந்தம் முஹுர்முஹு: ।
த்$_3$ருஷ்ட்வாத$_2$ லக்ஷ்மணஸ்தம் வை பப்ரச்ச$_2$ாத$_2$ ஸ வீர்யவாந் ॥ (15)

கிம் தே கார்யம் மஹாப$_4$াக$_3$ ப்$_3$ரூஹி விஸ்ரப்$_3$த$_4$மாநஸ: ।
லக்ஷ்மணஸ்ய வச: ஶ்ருத்வா ஸாரமேயோऽப்$_4$யப$_4$ாஷத ॥ (16)

ஸர்வபூ$_4$தஶரண்யாய ராமாயாக்லிஷ்டகர்மணே ।
ப$_4$யேஷ்வப$_4$யத$_3$ாத்ரே ச தஸ்மை வக்தும் ஸமுத்ஸஹே ॥ (17)

ஏதச்ச்$_2$ருத்வா து வசநம் ஸாரமேயஸ்ய லக்ஷ்மண: ।
ராக$_4$வாய தத$_3$ாக்$_2$யாதும் ப்ரவிவேஶாலயம் ஶுப$_4$ம் ॥ (18)

நிவேத்$_3$ய ராமஸ்ய புநர்நிர்ஜக$_3$ாம ந்ருபாலயாத் ।
வக்தவ்யம் யதி$_3$ தே கிஞ்சித்தத்த்வம் ப்$_3$ரூஹி ந்ருபாய வை ॥ (19)

லக்ஷ்மணஸ்ய வச: ஶ்ருத்வா ஸாரமேயோऽப்$_4$யப$_4$ாஷத ।
தே$_3$வாக$_3$ாரே ந்ருபாக$_3$ாரே த்$_3$விஜவேஶ்மஸு வை தத$_2$ா ॥ (20)

வஹ்நி: ஶதக்ரதுஶ்சைவ ஸூர்யோ வாயுஶ்ச திஷ்ட$_2$தி ।
நாத்ர யோக்$_3$யாஸ்து ஸௌமித்ரே யோநீநாமத$_4$மா வயம் ॥ (21)

ப்ரவேஷ்டும் நாத்ர ஶக்ஷ்யாமோ த$_4$ர்மோ விக்$_3$ரஹவாந்ந்ருப: ।
ஸத்யவாதீ$_3$ ரணபடு: ஸர்வபூ$_4$தஹிதே ரத: ॥ (22)

ஷாட்$_3$கு$_3$ண்யஸ்ய பத$_3$ம் வேத்தி நீதிகர்தா ஸ ராக$_4$வ: ।
ஸர்வக்ஞ: ஸர்வத$_3$ர்ஶீ ச ராமோ ரமயதாம் வர: ॥ (23)

ஸ ஸோம: ஸ ச ம்ருத்யுஶ்ச ஸ யமோ த$_4$நத$_3$ஸ்தத$_2$ா ।
வஹ்நி: ஶதக்ரதுஶ்சைவ ஸூர்யோ வை வருணஸ்தத$_2$ா ॥ (24)

தஸ்ய த்வம் ப்$_3$ரூஹி ஸௌமித்ரே ப்ரஜாபால: ஸ ராக$_4$வ: ।
அநாக்ஞப்தஸ்து ஸௌமித்ரே ப்ரவேஷ்டும் நேச்ச$_2$யாம்யஹம் ॥ (25)

ஆந்ருஶம்ஸ்யாந்மஹாப$_4$ாக$_3$: ப்ரவிவேஶ மஹாத்$_3$யுதி: ।
ந்ருபாலயம் ப்ரவிஶ்யாத$_2$ லக்ஷ்மணோ வாக்யமப்$_3$ரவீத் ॥ (26)

ஶ்ரூயதாம் மம விக்ஞாப்யம் கௌஸல்யாநந்த$_3$வர்த$_4$ந ।
யந்மயோக்தம் மஹாப$_3$ாஹோ தவ ஶாஸநஜம் விபோ$_4$ ॥ (27)

Koviloor Digital Library

உயர்ந்த அறநெறிகளின்படி ஆட்சி செய்யப்படுவதால், அதருமத்திற்கு அங்கு இடமே இல்லை. ''நெறி தவறினால், அரச தண்டனை கிடைக்கும்'' என்ற அச்சத்தால், மக்கள் ஒருவருக்கொருவர் தருமநெறிப்படியே பழகினார்கள். (12)

''அரசப் பணியாளர்கள், என்னால் விடப்பட்ட அம்பைப் போல குறி தவறாது மக்களைக் காப்பாற்றுகிறார்கள். என்றாலும், பெருந்தோளனே! நீயும் விழிப்புடனிருந்து மக்களைப் பரிபாலிக்க வேண்டும்.'' (13)

இவ்வாறு, இராமன் கூறியவுடன், இலக்குவன் அரசமாளிகையிலிருந்து வெளியே வந்தான். வாயிற்புறத்தில், அப்போது வந்திருந்த ஒரு நாயைக் கண்டான். (14)

அந்த நாய், அவனை நோக்கியவண்ணம் இடைவிடாது அழுதது. மாவீரனான இலக்குவன் அதைப் பார்த்துக் கேட்டான்— (15)

''நல்விலங்கே! உனக்கு என்ன காரியம் ஆகவேண்டும்? என்பதை, பயப்படாமல் கூறு.'' லட்சுமணனுடைய சொற்களைக் கேட்ட நாய் பின்வருமாறு பதில் கூறியது— (16)

''எல்லா உயிர்ப்பிராணிகளுக்கும் அடைக்கலம் அளிப்பவரும், எந்தச் செயலையும் எளிதில் முடிப்பவரும், ஆபத்துக் காலத்தில் தஞ்சம் அளிப்பவருமான இராமபிரானிடம்தான், எனக்கு ஆகவேண்டிய காரியத்தைக் கூறுவேன்.'' (17)

நாயினுடைய இந்த உரையைக் கேட்ட இலக்குவன், இராமனிடம் தெரிவிப்பதற்காக அழகான அந்த மன்றத்திற்குள் நுழைந்தான். (18)

இராமனிடம் அதைத் தெரிவித்துவிட்டு, அரச மாளிகையிலிருந்து மறுபடியும் வெளியே வந்தான். ''நீ உள்ளே சென்று, கூற விரும்புபவைகளை மன்னரிடமே தெரிவிக்கலாம்.'' (19)

இலக்குவனுடைய சொற்களைக் கேட்ட, அந்த நாய் பதில் கூறிற்று— ''லட்சுமணா! தேவாலயங்கள், அரசமாளிகைகள், வேதோத்தமர்கள் ஆகியவர்களின் வாழ்விடங்களில் அக்னி–இந்திரன்–சூரியன்–வாயு முதலிய தேவதைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதனால், இழிந்த பிறவிகளான நாங்கள் அந்த இடங்களுக்கு உள்ளே போகக்கூடாது. (20,21)

நாங்கள், இந்த அரசமாளிகைக்குள் நுழையமாட்டோம். ஏனென்றால், மன்னர் அறக்கடவுளே உருவெடுத்து வந்தாற்போன்றவர்; சத்தியமே பேசுபவர்; போர்க்கலையில் வல்லவர்; எல்லா உயிர்ப்பிராணிகளின் நலனிலும் அக்கறை உடையவர். (22)

இராமபிரான், ஆட்சியாளர்கள் அறிந்துக் கொள்ள வேண்டிய (வலியவர்களுடன் நல்லுறவு, எதிர்அணியைப் பிரிப்பது முதலான) அறுவகை தந்திரங்களையும் அறிந்தவர்; எல்லோருக்கும் நீதி வழங்குபவர்; எல்லாம் அறிந்தவர்; எல்லோராலும் அணுகத்தக்கவர். (23)

அவரேதான், சந்திரன்; மிருத்யு; யமன்; குபேரன்; அக்னி; இந்திரன்; சூரியன்; வருணன். (24)

சுமித்திரையின் புதல்வரே! மக்களைக் காக்கும் மன்னர் இராகவனிடம் சென்று கூறுங்கள். அவருடைய அனுமதியில்லாமல் இந்த மாளிகைக்குள் நுழைய நான் விரும்பவில்லை.'' (25)

மாவீரனும் அறிவாளியுமான இலக்குவன், (அந்த நாயிடம் ஏற்பட்ட) இரக்கத்தால், அரண்மனைக்குள் சென்று (இராமனிடம்) புகன்றான்— (26)

''கௌசல்யை மைந்தரே! நான் சொல்வதைக் கேட்க வேண்டும். தங்கள் ஆணைப்படி நான் வெளியே சென்று மனுதாரர்களை அழைத்தேன். (27)

Koviloor Digital Library

ஶ்வா வை தே திஷ்ட$_2$தே த்$_3$வாரி கார்யார்தீ$_2$ ஸமுபாக$_3$த: ।
லக்ஷ்மணஸ்ய வச: ஶ்ருத்வா ராமோ வசநமப்$_3$ரவீத் ॥
ஸம்ப்ரவேஶய வை க்ஷிப்ரம் கார்யார்தீ$_2$ யோऽத்ர திஷ்ட$_2$தி ॥ (28)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ப்ரக்ஷிப்தேஷு ப்ரத$_2$ம: ஸர்க$_3$: ॥

ப்ரக்ஷிப்தேஷு த்$_3$விதீய: ஸர்க$_3$:

ராமஸ்ய த$_4$ர்மநிர்ணய:

ஶ்ருத்வா ராமஸ்ய வசநம் லக்ஷ்மணஸ்த்வரிதஸ்ததா$_3$ ।
ஶ்வாநமாஹூய மதிமாந் ராக$_4$வாய ந்யவேத$_3$யத் ॥ (1)

த்$_3$ருஷ்ட்வா ஸமாக$_3$தம் ஶ்வாநம் ராமோ வசநமப்$_3$ரவீத் ।
விவக்ஷிதார்த$_2$ம் மே ப்$_3$ரூஹி ஸாரமேய ந தே ப$_4$யம் ॥ (2)

அதா$_2$பஶ்யத தத்ரஸ்த$_2$ம் ராமம் ஶ்வா பி$_4$ந்நமஸ்தக: ।
ராஜா ஸுப்தேஷு ஜாக$_3$ர்தி ராஜா பாலயதி ப்ரஜா: ॥ (3)

ராஜா கர்தா ச கோ$_3$ப்தா ச ஸர்வஸ்ய ஜக$_3$த: பிதா ।
ராஜா காலோ யுக$_3$ம் சைவ ராஜா ஸர்வமித$_3$ம் ஜக$_3$த் ॥ (4)

நீத்யா ஸுநீதயா ராஜா த$_4$ர்மம் ரக்ஷதி ரக்ஷிதா ।
யதா$_3$ ந பாலயேத்$_3$ராஜா க்ஷிப்ரம் நஶ்யந்தி வை ப்ரஜா: ॥ (5)

தா$_4$ரணாத்$_3$த$_4$ர்மமித்யாஹுர்த$_4$ர்மேண வித்$_4$ருதா: ப்ரஜா: ।
யஸ்மாத்$_3$தா$_4$ரயதே ஸர்வம் த்ரைலோக்யம் ஸசராசரம் ॥ (6)

தா$_4$ரணாத்$_3$தி$_4$ த்$_3$விஷாம் சைவ த$_4$ர்மேணாரஞ்ஜயந் ப்ரஜா: ।
தஸ்மாத்$_3$தா$_4$ரணமித்யுக்தம் ஸ த$_4$ர்ம இதி நிஶ்சய: ॥ (7)

ஏஷ ராஜந் பரோ த$_4$ர்ம: ப$_2$லவாந் ப்ரேத்ய ராக$_4$வ ।
ந ஹி த$_4$ர்மாத்$_3$ப$_4$வேத் கிஞ்சித்$_3$து$_3$ஷ்ப்ராபமிதி மே மதி: ॥ (8)

தா$_3$நம் த$_3$யா ஸதாம் பூஜா வ்யவஹாரேஷு சார்ஜவம் ।
ஏஷ ராம பரோ த$_4$ர்மோ ரக்ஷணாத் ப்ரேத்ய சேஹ ச ॥ (9)

த்வம் ப்ரமாணம் ப்ரமாணாநாமஸி ராக$_4$வ ஸுவ்ரத ।
விதி$_3$தஶ்சைவ தே த$_4$ர்ம: ஸத்$_3$பி$_4$ராசரிதஸ்து வை ॥ (10)

த$_4$ர்மாணாம் த்வம் பரம் தா$_4$ம கு$_3$ணாநாம் ஸாக$_3$ரோபம: ।
அஜ்ஞாநாச்ச மயா ராஜந்நுக்தஸ்த்வம் ராஜஸத்தம ॥ (11)

Koviloor Digital Library

தங்களிடம் ஒரு கோரிக்கையுடன் ஒரு நாய் வந்து காத்துக் கொண்டிருக்கிறது.'' இலக்குவனுடைய சொற்களைக் கேட்ட இராமன், ''என்னிடம் ஒரு கோரிக்கையை முன் வைத்து வந்திருக்கும் அதை உள்ளே அனுப்பு'' என்றார். (28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இடைச்செருகலில் முதலாவது ஸர்க்கம் முற்றிற்று.

இடைச்செருகல் ஸர்க்கம் : இரண்டு

இராமன் அளித்த தீர்ப்பு

இராமன் கூறியதைக் கேட்ட அறிவாளியான லட்சுமணன் வேகமாகச் சென்று, நாயை உள்ளே அழைத்து வந்து, இராமனிடம் தெரிவித்தான். (1)

நாய் வந்திருப்பதைப் பார்த்த இராமன், ''நீ கூறவிரும்புவதை இங்கே சொல்லுவாய். இங்கே நீ பயப்படத் தேவையில்லை'' என்றார். உடைபட்ட தலையுடனிருந்த அந்த நாய், மன்றத்தில் அமர்ந்திருந்த இராமனைப் பார்த்து, அவரை நோக்கிக் கூறிற்று— (2,3)

''மன்னர்தான் எல்லாவற்றையும் செய்கிறார்; காப்பாற்றுகிறார்; எல்லாப் பிராணிகளுக்கும் தந்தை போன்றவர்; மன்னர்தான் காலம்; யுகம்; அவரே இந்த உலகம் முழுமையும். (4)

மன்னர், எல்லோருக்கும் பாதுகாவலர்; பட்சபாதமில்லாத நியாயமுறையைப் பின்பற்றி எல்லோரையும் காப்பாற்றுகிறார். மன்னர் காப்பாற்றாவிட்டால், மக்கள் விரைவில் அழிந்து போவார்கள். (5)

உலகம் முழுவதையும் தருமம் தாங்கிக் கொண்டிருப்பதால்தான் (தாரணாத்), அதை தருமம் என்கிறார்கள். தருமம்தான் எல்லா மக்களையும் தாங்கிக் கொண்டிருக்கிறது. அதுவே, சராசரப் பிராணிகள் நிறைந்த மூன்று உலகங்களையும் தாங்கிக் கொண்டிருக்கிறது. (6)

தருமத்தை அடிப்படையாகக் கொண்டு, விரோதிகளையும் (மனிதநேய முறையில்) காப்பாற்றிக் கொண்டிருக்கிறார். மக்களை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொண்டிருக்கிறார். மன்னரின் ஆட்சிமுறையை 'தாரணம்' என்கிறார்கள். அதுவே தருமம் என்பது நிச்சயம். (7)

மன்னரே! மக்களைக் காப்பாற்றுதல் என்ற தருமம், மன்னனுக்கு, மேலுலகத்தில் நல்ல பலனைக் கொடுக்கக்கூடியது. தருமத்தினால் அடையப்பட முடியாதது எதுவுமேயில்லை என்பது என் கருத்து. (8)

தானம், தயை, சான்றோர்களைக் கௌரவித்தல் (அவர்கள் அறிவுரையைக் கேட்டு நடத்தல்), நடவடிக்கைகளில் நேர்மை – இவைதான் உயர்ந்த தருமம். இராமபிரானே! இந்த அறநெறிகளைக் கடைப்பிடித்தால், வாழுங்காலத்தில் இவ்வுலகிலும் மரணத்திற்குப் பின் மேலுலகிலும் சௌக்கியத்தை அடையலாம். (9)

இராகவனே! தாங்கள், தருமத்தை அளக்கும் அளவுகோல்களுக்கெல்லாம் மேலான அளவுகோலாக இருப்பவர். (தங்கள் சொல்தான், தருமத்தின் மிக உயர்ந்த நிலை.) நல்ல நியமங்களைக் கடைப்பிடிப்பவரே! மேலோர்கள் அனுஷ்டிக்கும் அறநெறிகளைத் தாங்கள் அறிவீர்கள். (10)

மன்னர் மன்னரே! தருமங்களின் கருவூலம், தாங்கள்; நற்குணங்களின் கடல் போன்றவர். என்னுடைய அறியாமையால், தருமத்தைப் பற்றி சில விளக்கங்களை நான் கூறிவிட்டேன். (11)

Koviloor Digital Library

ப்ரஸாத$_3$யாமி ஶிரஸா ந த்வம் க்ரோத்$_3$து$_4$மிஹார்ஹஸி ।
ஶுநகஸ்ய வச: ஶ்ருத்வா ராக$_4$வோ வாக்யமப்$_3$ரவீத் ॥ (12)

கிம் தே கார்யம் கரோம்யத்$_3$ய ப்$_3$ரூஹி விஸ்ரப்$_3$த$_4$ மா சிரம் ।
ராமஸ்ய வசநம் ஶ்ருத்வா ஸாரமேயோऽப்$_3$ரவீதி$_3$த$_3$ம் ॥ (13)

த$_4$ர்மேண ராஷ்ட்ரம் விந்தே$_3$த த$_4$ர்மேணைவாநுபாலயேத் ।
த$_4$ர்மாச்ச$_2$ரண்யதாம் யாதி ராஜா ஸர்வப$_4$யாபஹ: ॥ (14)

இத$_3$ம் விக்ஞாய யத் க்ருத்யம் ஶ்ரூயதாம் மம ராக$_4$வ ।
பி$_4$க்ஷு: ஸர்வார்த$_2$ஸித்$_3$தி$_4$ஶ்ச ப்$_3$ராஹ்மணாவஸதே$_2$ऽவஸத் ॥ (15)

தேந த$_3$த்த: ப்ரஹாரோ மே நிஷ்காரணமநாக$_3$ஸ: ।
ஏதச்ச்$_2$ருத்வா து ராமேண த்$_3$வா:ஸ்த$_2$: ஸம்ப்ரேஷிதஸ்தத$_3$ா ॥ (16)

ஆநீதஶ்ச த்$_3$விஜஸ்தேந ஸர்வஸித்$_3$த$_4$ார்த$_2$கோவித$_3$: ।
அத$_2$ த்$_3$விஜவரஸ்தத்ர ராமம் த்$_3$ருஷ்ட்வா மஹாத்$_3$யுதி: ॥ (17)
கிம் தே கார்யம் மயா ராம தத்$_3$ப்$_3$ரூஹி த்வம் மயாநக$_4$ ।
ஏவமுக்தஸ்து விப்ரேண ராமோ வசநமப்$_3$ரவீத் ॥ (18)

த்வயா த$_3$த்த: ப்ரஹாரோऽயம் ஸாரமேயஸ்ய வை த்$_3$விஜ ।
கிம் தவாபக்ருதம் விப்ர த$_3$ண்டே$_3$நாபி$_4$ஹதோ யத: ॥ (19)

க்ரோத$_4$: ப்ராணஹர: ஶத்ரு: க்ரோதே$_4$ா மித்ரமுகே$_2$ா ரிபு: ।
க்ரோதே$_4$ா ஹ்யஸிர்மஹாதீக்ஷ்ண: ஸர்வம் க்ரோதே$_4$ாऽபகர்ஷதி ॥ (20)

தபதே யஜதே சைவ யச்ச த$_3$ாநம் ப்ரயச்ச$_2$தி ।
க்ரோதே$_4$ந வை ஸம்ஹரதி தஸ்மாத் க்ரோத$_4$ம் விஸர்ஜயேத் ॥ (21)

இந்த்$_3$ரியாணாம் ப்ரது$_3$ஷ்டாநாம் ஹயாநாமிவ த$_4$ாவதாம் ।
குர்வீத த்$_4$ருத்யா ஸாரத்$_2$யம் ஸம்ஹ்ருத்யேந்த்$_3$ரியகே$_3$ாசரம் ॥ (22)

மநஸா கர்மணா வாசா சக்ஷுஷா ச ஸமாசரேத் ।
ஶ்ரேயோ லோகஸ்ய சரதோ ந த்$_3$வேஷ்டி ந ச லிப்யதே ॥ (23)
ந தத் குர்யாத$_3$ஸிஸ்தீக்ஷ்ண: ஸர்போ வா வ்யாஹத: பத$_3$ா ।
அரிர்வா நித்யஸங்க்ருத்$_3$தே$_4$ா யத$_2$ாத்மா து$_3$ரநுஷ்டி$_2$த: ॥ (24)

விநீதவிநயஸ்யாபி ப்ரக்ருதிர்ந விதீ$_4$யதே ।
ப்ரக்ருதிம் கூ$_3$ஹமாநஸ்ய நிஶ்சயே ப்ரக்ருதிர்த்$_4$ருவம் ॥ (25)

ஏவமுக்த: ஸ விப்ரோ வை ராமேணாக்லிஷ்டகர்மணா ।
த்$_3$விஜ: ஸர்வார்த$_2$ஸித்$_3$தி$_4$ஸ்து அப்ரவீத்$_3$ராமஸந்நிதெ$_4$ள ॥ (26)

Koviloor Digital Library

நான் தலைவணங்கி தங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் இதுகாரணமாக என்னிடம் கோபம் கொள்ளலாகாது.'' நாயினுடைய உரையைக் கேட்ட இராமன், பின்வருமாறு கூறினார்— (12)

''உனக்கு இங்கே ஆகவேண்டிய காரியம் என்ன என்பதைப் பயப்படாமல், உடனே கூறு; நான் செய்து கொடுக்கிறேன்.'' இவ்வாறு இராமன் கூறியதைக் கேட்ட நாய் சொல்லிற்று— (13)

''மன்னன், தருமநெறிப்படியே ஓர் ஆட்சியைப் பெறவேண்டும்; தருமநெறிப்படியே ஆட்சி செலுத்த வேண்டும்; தருமத்தினால்தான், அரசன் எல்லோருக்கும் அடைக்கலம் கொடுக்கும் ஆற்றலைப் பெறுகிறான்; மன்னன்தான், எல்லோருடைய அச்சத்தையும் போக்குபவன். (14)

இதை மனத்தில் நினைவுபடுத்திக் கொண்டு, எனக்கு ஆகவேண்டிய காரியத்தைக் கேளுங்கள். இராகவனே! சர்வார்த்தஸித்தன் என்ற பிரும்மசாரி அந்தணர் குடியிருப்பில் வசித்துக் கொண்டிருக்கிறார். அவர், நான் எவ்விதக் குற்றமும் செய்யாதபோதிலும், என்னை இன்று அடித்துவிட்டார்.'' இதைக் கேட்ட இராமன், ஒரு வாயிற்காப்பாளனை உடனே அனுப்பினார். அவன், சர்வார்த்தஸித்தன் என்ற பல்கலை வித்தகரான அந்தணரை அழைத்து வந்தான். பேரொளிவீசும் அந்த உத்தம அந்தணர் மன்றத்திற்குள் வந்து, இராமனைப் பார்த்து, ''மாசற்றவரே! என்னால் உங்களுக்கு என்ன காரியம் ஆகவேண்டும்?'' என்று கேட்டார். இவ்வாறு அந்தணர் கேட்டவுடன், இராமன் பின்வருமாறு கூறினார்— (15–18)

''அந்தணரே! நீங்கள் இந்த நாயைத் தடியால் அடித்து மண்டையைப் பிளந்திருக்கிறீர்கள். இவ்வளவு கடுமையான தண்டனையைப் பெறுவதற்கு, அது என்ன குற்றம் செய்தது? (19)

கோபம் என்பது உயிரைப் பறிக்கும் விரோதி; நண்பனைப் போலிருந்து (நம்மை) அழிக்கும் எதிரி; கோபம் என்பது மிகவும் கூர்மையான கத்தியைப் போன்றது; மற்ற எல்லா நற்குணங்களையும் கோபம் அழித்துவிடுகிறது. (20)

மனிதன் செய்யும் தவம், வேள்வி, தானம் ஆகியவற்றின் புண்ணியங்களைக் கோபம் அபகரித்துவிடுகிறது. ஆகவே, கோபத்தை விட்டுவிட வேண்டும். (21)

கட்டுக்கு அடங்காத குதிரைபோல், புலனுகர் பொருள்களை நோக்கி ஓடிச்செல்லும் புலன்களைப் புலனுகர் பொருள்களிலிருந்து திருப்பி, தேரோட்டி குதிரையின் கடிவாளத்தைப் பிடித்திழுப்பதைப் போல, மன உறுதியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். (22)

ஒருவன், தன்னைச் சுற்றியுள்ள மக்களிடம் மனம்–செயல்–சொல்–பார்வை ஆகியவற்றால் நல்லதையே செய்யவேண்டும். இவ்வாறு, மக்களிடம் வெறுப்பின்றிப் பழகுபவன் பாவத்தை அடைவதில்லை. (23)

கட்டுப்பாட்டுக்குள் அடங்காத துஷ்டத்தனமான மனமானது, கூர்மையான கத்தி, காலைச் சுற்றிக் கொண்ட பாம்பு அல்லது எப்போதும் ஆத்திரத்துடனிருக்கும் பகைவன் ஆகியவைகளைக் காட்டிலும் அதிகமான தீமையைச் செய்கிறது. (24)

ஒருவன் அடக்கம் சம்பந்தமான எவ்வளவு உபதேசங்களைப் படித்திருந்தாலும், அவனுடைய இயல்பான துர்க்குணம் அவனை விட்டுச் செல்வதில்லை. ஒருவன் தன் செயல்களில் எவ்வளவுதான் முயன்று, தன் தீய நோக்கத்தை மறைக்க முயன்றாலும், அது தானாகவே வெளிப்பட்டுவிடும்.'' (25)

அரியசெயல்களை எளிதில் முடிக்கும் இராமன் இவ்வாறு கூறியதும், சர்வார்த்தஸித்தன் என்ற அந்த அந்தணர், இராமனிடம் பின்வருமாறு கூறினார்— (26)

Koviloor Digital Library

மயா த$_3$த்த: ப்ரஹாரோऽயம் க்ரோதே$_4$நாவிஷ்டசேதஸா ।
பி$_4$க்ஷார்த$_2$மடமாநேந காலே விக$_3$தபை$_4$க்ஷகே ॥ (27)

ரத்$_2$யாஸ்தி$_2$த: ஸ்வயம் ஶ்வா வை க$_3$ச்ச$_2$ க$_3$ச்சே$_2$தி ப$_4$ாஷித: ।
அத$_2$ ஸ்வைரேண க$_3$ச்ச$_2$ம்ஸ்து ரத்$_2$யாந்தே விஷமம் ஸ்தி$_2$த: ॥ (28)

க்ரோதே$_4$ து க்ஷுத$_4$யாவிஷ்டஸ்தத$_3$ா த$_3$த்தோऽஸ்ய ராக$_4$வ ।
ப்ரஹாரோ ராஜராஜேந்த்$_3$ர ஶாதி$_4$ மாமபராதி$_4$நம் ॥ (29)

த்வயா ஶஸ்தஸ்ய ராஜேந்த்$_3$ர நாஸ்தி மே நரகாத்$_3$ப$_4$யம் ।
அத$_2$ ராமேண ஸம்ப்ருஷ்டா: ஸர்வ ஏவ ஸப$_4$ாஸத$_3$: ॥ (30)

கிம் கார்யமஸ்ய வை ப்$_3$ரூத த$_3$ண்டே$_3$ா வை கோऽஸ்ய பாத்யதாம் ।
ஸம்யக்ப்ரணிஹிதே த$_3$ண்டே$_3$ ப்ரஜா ப$_4$வதி ரக்ஷிதா ॥ (31)

ப்$_4$ருக்$_3$வங்கி$_3$ரஸகுத்ஸாத்$_3$யா வஸிஷ்ட$_2$ஶ்ச ஸகாஶ்யப: ।
த$_4$ர்மபாலகமுக்$_2$யாஶ்ச ஸசிவா நைக$_3$மாஸ்தத$_2$ா ॥ (32)

ஏதே சாந்யே ச ப$_3$ஹவ: பண்டி$_3$தாஸ்தத்ர ஸங்க$_3$தா: ।
அவத்$_4$யோ ப்$_3$ராஹ்மணோ த$_3$ண்டை$_3$ரிதி ஶாஸ்த்ரவிதே$_3$ா விது$_3$: ॥ (33)

ப்$_3$ருவதே ராக$_4$வம் ஸர்வே ராஜத$_4$ர்மேஷு நிஷ்டி$_2$தா: ।
அத$_2$ தே முநய: ஸர்வே ராமமேவாப்$_3$ருவம்ஸ்தத$_3$ா ॥ (34)

ராஜா ஶாஸ்தா ஹி ஸர்வஸ்ய த்வம் விஶேஷேண ராக$_4$வ ।
த்ரைலோக்யஸ்ய ப$_4$வாஞ்ச$_2$ாஸ்தா தே$_3$வோ விஷ்ணு: ஸநாதந: ॥ (35)

ஏவமுக்தே து தை: ஸர்வை: ஶ்வா வை வசநமப்$_3$ரவீத் ।
யதி$_3$ துஷ்டோऽஸி மே ராம யதி$_3$ தே$_3$யோ வரோ மம ॥ (36)

ப்ரதிக்ஞாதம் த்வயா வீர கிம் கரோமீதி விஶ்ருதம் ।
ப்ரயச்ச$_2$ ப்$_3$ராஹ்மணஸ்யாஸ்ய கௌலபத்யம் த$_4$ராத$_4$ர ॥ (37)

கௌலஞ்சரே மஹாராஜ கௌலபத்யம் ப்ரதீ$_3$யதாம் ।
ஏதச்ச்$_2$ருத்வா து ராமேண கௌலபத்யேऽபி$_4$ஷேசித: ॥ (38)

ப்ரயயௌ ப்$_3$ராஹ்மணோ ஹ்ருஷ்டோ க$_3$ஜஸ்கந்தே$_4$ந ஸோऽர்சித: ।
அத$_2$ தே ராமஸசிவா: ஸ்மயமாநா வசோऽப்$_3$ருவந் ॥ (39)

வரோऽயம் த$_3$த்த ஏதஸ்ய நாயம் ஶாபோ மஹாத்$_3$யுதே ।
ஏவமுக்தஸ்து ஸசிவை ராமோ வசநமப்$_3$ரவீத் ॥ (40)

ந யூயம் நீதிதத்த்வக்ஞா: ஶ்வா வை ஜாநாதி காரணம் ।
அத$_2$ ப்ருஷ்டஸ்து ராமேண ஸாரமேயோऽப்$_3$ரவீதி$_3$த$_3$ம் ॥ (41)

Koviloor Digital Library

''நான் கோபத்தினால், தடிகொண்டு இந்த நாயைத் தாக்கினேன். இல்லங்களில் பிட்சை கேட்டுச் செல்லும் காலம் கடந்துவிட்டிருந்தது. அதனால், வேகமாகச் சென்று ஒவ்வொரு வீட்டிலும் உணவு யாசித்துக் கொண்டிருந்தேன். எனக்கு இடைஞ்சலாக இந்த நாய் தெருவில் சுற்றிக் கொண்டிருந்தது. 'ஓரமாகப் போ' என்று விரட்டினேன். ஆனால், அது தன் இஷ்டப்படி சாலையின் நடுவில் இடையூறாக நின்றது. (27,28)

பசியினால் தவித்துக் கொண்டிருந்த என்னை கோபம் ஆட்கொண்டது. அதனால், இந்த நாயைத் தடியினால் அடித்தேன். மன்னர் மன்னரே! நான் குற்றவாளி. எனக்குத் தண்டனை கொடுங்கள். தங்களால் தண்டிக்கப்பட்டுவிட்டால் (பின்னால் அனுபவிக்க வேண்டிய) நரகவாசம் இல்லாமறபோகும்.'' இதைக் கேட்டவுடன், சபையோர்கள் எல்லோரையும் பார்த்து இராமன் வினவினார். (29,30)

''இந்த விஷயத்தில் நாம் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும்? என்பதை நீங்கள் கூறுங்கள். இவருக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்? ஒருவர் செய்த குற்றத்திற்கு உரிய தண்டனை கொடுக்கப்பட்டுவிட்டால், அவர் (நரக வாசத்திலிருந்து) காப்பாற்றப்படுகிறார்.'' (31)

அந்த சபையில் பிருகு, ஆங்கிரஸ், குத்ஸர், வசிஷ்டர், காசியபர் மற்றும் தருமத்தைப் பரிபாலிக்கும் முக்கியஸ்தர்கள், அமைச்சர்கள், பெருங்குடிமக்கள் ஆகியோரும் மற்றும் பல கற்றறிந்த மேலோர்களும் கூடியிருந்தார்கள். அரசநீதியில் வல்லுநர்களான அவர்கள், 'அந்தணருக்கு உடல்துன்பத்தைக் கொடுக்கக்கூடிய தண்டனையைக் கொடுக்கக்கூடாது' என்பதை அறிந்தவர்கள். ஆதலால், அப்போது, எல்லா முனிவர்களும் இராமனிடம் பின்வருமாறு கூறினார்கள்— (32–34)

''ரகுநந்தனரே! மன்னர், எல்லோரையும் அடக்கி ஆள்பவர். குறிப்பாக, தாங்கள் சனாதனரான விஷ்ணு பகவான்; மூவுலகையும் ஆள்பவர்.'' (35)

அவர்கள் எல்லோரும் இவ்வாறு கூறியதைக் கேட்ட நாய் சொல்லிற்று— ''இராமனே! தாங்கள் என்னிடம் கனிவுள்ளவராக இருந்தால், நான் கேட்கும் வரத்தைக் கொடுக்க வேண்டும். (36)

மன்னரே! 'என்னால் ஆகவேண்டிய காரியத்தைக் கூறு; செய்து தருகிறேன்' என்று, முதலிலேயே, வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள். (அதன்படி, இப்போது நான் சொல்வதைக் கேட்டு, நிறைவேற்றுங்கள்.) இவரை ஒரு மடத்தின் தலைவராக ஆக்கிவிடுங்கள். (37)

மாமன்னரே! காலஞ்சரத்திலுள்ள மடத்தின் தலைமைப் பதவியை இவருக்குக் கொடுத்துவிடுங்கள்.'' இதைக் கேட்ட இராமன், அந்த அந்தணரை மடாதிபதியாகப் பட்டம் சூட்டினார். (38)

மடாதிபதி ஆனவுடன், மரியாதையாக யானையின்மேல் அமர்ந்து, மனக்களிப்புடன் அந்தணர் சென்றார். பின்னர், இராமனுடைய அமைச்சர்கள் சற்றே புன்முறுவலித்துக் கூறினார்கள்— (39)

''பேரறிவாளரான இராமப்பிரபுவே! இவருக்குக் கொடுக்கப்பட்டிருப்பது ஒரு வெகுமானம்; தண்டனை அல்ல!'' இவ்வாறு அமைச்சர்கள் கூறியதும் இராமன் பதில் சொன்னார்— (40)

''நீங்கள் நீதியின் நுட்பங்களை அறிந்தவர்கள் அல்லர். (அதனால்தான், தண்டனைக்குரிய ஒரு குற்றத்தைச் செய்தவருக்கு, அடியார்கள் பணிந்து வணங்கும் உயர்பதவியைக் கொடுத்ததைத் தவறாகக் கருதுகிறீர்கள்.) இந்த நாய்க்கு, அதன் காரணம் தெரியும்!'' பின்னர், இராமனுடைய ஆணைப்படி நாய் சொல்லிற்று— (41)

Koviloor Digital Library

அஹம் குலபதிஸ்தத்ர ஆஸம் ஶிஷ்டாந்நபோ4ஜந: ।
தே3வத்3விஜாதிபூஜாயாம் தா3ஸீதா3ஸேஷு ராக4வ ॥ (42)

ஸம்விபா4கீ3 ஶுப4ரதிர்தே3வத்3ரவ்யஸ்ய ரக்ஷிதா ।
விநீத: ஶீலஸம்பந்ந: ஸர்வஸத்த்வஹிதே ரத: ॥ (43)

ஸோऽஹம் ப்ராப்த இமாம் கோ4ராமவஸ்தா2மத4மாம் க3திம் ।
ஏவம் க்ரோதா4ந்விதோ விப்ரஸ்த்யக்ததர்4மாஹிதே ரத: ॥ (44)

க்ருத்3தோ4 ந்ருஶம்ஸ: பருஷ அவித்3வாம்ஶ்சாப்யதா4ர்மிக: ।
குலாநி பாதயத்யேவ ஸப்த ஸப்த ச ராக4வ ॥ (45)

தஸ்மாத் ஸர்வாஸ்வவஸ்தா2ஸு கௌலபத்யம் ந காரயேத் ।
யமிச்சே2ந்நரகம் நேதும் ஸபுத்ரபஶுபா3ந்த4வம் ॥ (46)

தே3வேஷ்வதி4ஷ்டி2தம் குர்யாத்3கோ3ஷு ச ப்3ராஹ்மணேஷு ச ।
ப்3ரஹ்மஸ்வம் தே3வதாத்3ரவ்யம் ஸ்த்ரீணாம் பா3லத4நம் ச யத் ॥ (47)

த3த்தம் ஹரதி யோ பூ4ய இஷ்டை: ஸஹ விநஶ்யதி ।
ப்3ராஹ்மணத்3ரவ்யமாத3த்தே தே3வாநாம் சைவ ராக4வ ॥ (48)

ஸத்3ய: பததி கோ4ரே வை நரகேऽவீசிஸம்க்ஞிதே ।
மநஸாபி ஹி தே3வஸ்வம் ப்3ரஹ்மஸ்வம் ச ஹரேத்து ய: ॥ (49)

நிரயாந்நிரயம் சைவ பதத்யேவ நராத4ம: ।
தச்ச்2ருத்வா வசநம் ராமோ விஸ்மயோத்பு2ல்லலோசந: ॥ (50)

ஶ்வாபயக3ச்ச2ந்மஹாதேஜா யத ஏவாக3தஸ்தத: ।
மநஸ்வீ பூர்வஜாத்யா ஸ ஜாதிமாத்ரோபதூ3ஷித: ॥
வாராணஸ்யாம் மஹாபா4க3: ப்ராயம் சோபவிவேஶ ஹ ॥ (51)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 ப்ரக்ஷிப்தேஷு த்3விதீய: ஸர்க3: ॥

ஷஷ்டிதம: ஸர்க3:

பா4ர்க3வச்யவநாத்3யாக3மநம்

தயோ: ஸம்வத3தோரேவம் ராமலக்ஷ்மணயோஸ்ததா3 ।
வாஸந்திகீ நிஶா ப்ராப்தா ந ஶீதா ந ச க4ர்மதா3 ॥ (1)

தத: ப்ரபா4தே விமலே க்ருதபௌர்வாஹ்ணிகக்ரிய: ।
அபி4சக்ராம காகுத்ஸ்தோ2 த3ர்ஶநம் பௌரகார்யவித் ॥ (2)

Koviloor Digital Library

''நான் முற்பிறவியில் அந்த இடத்தில் மடாதிபதியாக இருந்தேன்; வேள்வியில் மிகுந்த அன்னத்தையே உணவாகக் கொண்டேன்; தேவதைகள், வேதவிற்பன்னர்கள் வழிபாட்டில் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தேன்; ஏவலர்களுக்கும் பெண் பணியாளர்களுக்கும் உரிய சன்மானத்தைப் பங்கிட்டுக் கொடுத்தேன்; நற்செயல்களைச் செய்து வந்தேன்; தெய்வ சொத்துக்களைப் பாதுகாத்து வந்தேன்; அடக்கமும் நல்லொழுக்கமும் கொண்டு எல்லா உயிர்ப்பிராணிகளின் நலனுக்காகவும் உழைத்து வந்தேன். (42,43)

அப்படியிருந்த நானே, இவ்வளவு பயங்கரமான கீழ்நிலையை அடைந்தேன். (ஆனால்,) இந்த அந்தணரோ மிகவும் கோபக்காரர்; தருமத்தைக் கைவிட்டவர்; பிறருக்குத் துன்பம் தருவதில் நோக்கமுடையவர்; சினத்தை அடக்க முடியாதவர்; கொடியவர்; இழியவர்; தெள்ளறிவு இல்லாதவர்; அறம் தவறி நடப்பவர். இவர், மடாதிபதியாக அதிகாரம் பெற்று, தன்னுடைய முன்–பின் ஏழு–ஏழு தலைமுறையினரையும் தன்னோடு சேர்த்துக் கொண்டு நரகத்தில் விழப்போகிறார். (44,45)

அதனால், எந்த நிலையிலும் மடத்துத் தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளக் கூடாது. எவனை, புத்திரர்–செல்வம்–உற்றார்–உறவினருடன் நரகத்தில் தள்ளிவிட விருப்பமோ, அவனை, தேவதை–பசு–அந்தணர்களுக்குத் தலைவராக நியமித்துவிட்டால் போதும். (46)

அந்தணர்களின் செல்வம், தேவதைகளின் சொத்து, பெண்கள்–பாலகர்களின் சொத்து – இவற்றை அபகரிப்பது, தானம் செய்து கொடுத்ததைத் திரும்ப எடுத்துக் கொள்வது போன்றவற்றைச் செய்பவன், தன் உற்றார்–உறவினரோடு அழிந்து போகிறான். இராமனே! அந்தணர் மற்றும் தேவதைகளின் சொத்துக்களைப் பறிப்பவன், நிச்சயமாக, அவீசி என்னும் பயங்கர நரகத்தில் வீழ்கிறான். (47,48)

அந்தணர், தேவதை ஆகியோரின் சொத்துக்களைக் கவர்வேன் என்று மனத்தால் நினைப்பவன், ஒரு நரகத்திலிருந்து இன்னொரு நரகம் என்று போய்க்கொண்டே இருப்பான்.'' (49)

இதைக் கேட்ட இராமனின் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ச்சி அடைந்தன. ஞானம் படைத்த அந்த நாய், தான் வந்தவிடத்திற்கே திரும்பிச் சென்றது. (50)

முன் பிறவியில், அந்த நாய் தெள்ளறிவு பெற்ற ஞானியாக இருந்தது. ஆனால், இந்தப் பிறவியில் நாயாகத் தோன்றியதால் இழிநிலையை அடைந்தது. பின், (இராம தரிசனத்தால்) பெரும் புண்ணியத்தைப் பெற்ற அந்த நாய், வாராணசி நகரம் சென்று, (உணவு–நீர் அருந்தாமல்) பிராயோபவேச முறையில் உயிரைத் துறந்தது. (51)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
இடைச்செருகலில் இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபது

சியவனர் முதலான முனிவர் வருகை

இராம–லட்சுமணர்கள் இவ்வாறெல்லாம் சீரிய உரையாடலில் ஈடுபட்டுக் கொண்டு, அரசு அலுவல்களையும் செவ்வனே நடத்திக் கொண்டிருந்தார்கள். காலப்போக்கில் அதிக வெம்மையும், அதிகக் குளிரும் இல்லாத வசந்தகால இரவு வந்தது. (1)

இரவுப்பொழுது கழிந்து நிர்மலமான வைகறைப் பொழுது வந்ததும், காலை வேளைக்குரிய வைதிகச் சடங்குகளை முடித்துக் கொண்டு, குடிமக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் கருத்துடைய இராமன், மக்கள் பார்வையில் படும்படியாக வெளியே வந்தார். (2)

Koviloor Digital Library

தத: ஸுமந்த்ரஸ்த்வாக$_3$ம்ய ராக$_4$வம் வாக்யமப்$_3$ரவீத் ।
ஏதே ப்ரதிஹதா ராஜந் த்$_3$வாரி திஷ்ட$_2$ந்தி தாபஸா: ॥ (3)

ப$_4$ார்க$_3$வம் ச்யவநம் சைவ புரஸ்க்ருத்ய மஹர்ஷய: ।
த$_3$ர்ஶநம் தே மஹாராஜ சோத$_3$யந்தி க்ருதத்வரா: ॥ (4)

ப்ரீயமாணா நரவ்யாக்$_4$ர யமுநாதீரவாஸிந: ।
தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ராம: ப்ரோவாச த$_4$ர்மவித் ॥
ப்ரவேஶ்யந்தாம் மஹாப$_4$ாக$_3$ா ப$_4$ார்க$_3$வப்ரமுக$_2$ா த்$_3$விஜா: ॥ (5)

ராக்ஞஸ்த்வாக்ஞாம் புரஸ்க்ருத்ய த்$_3$வா:ஸ்தே$_2$ா மூர்த்$_4$நி க்ருதாஞ்ஜலி: ।
ப்ரவேஶயாமாஸ தத$_3$ா தாபஸாந் ஸுது$_3$ராஸத$_3$ாந் ॥ (6)

ஶதம் ஸமதி$_4$கம் தத்ர தீ$_3$ப்யமாநம் ஸ்வதேஜஸா ।
ப்ரவிஷ்டம் ராஜப$_4$வநம் தாபஸாநாம் மஹாத்மநாம் ॥ (7)

தே த்$_3$விஜா: பூர்ணகலஶை: ஸர்வதீர்த$_2$ாம்பு$_3$ஸத்க்ருதை: ।
க்$_3$ருஹீத்வா ப$_2$லமூலம் ச ராமஸ்யாப்$_4$யாஹரந் ப$_3$ஹு ॥ (8)

ப்ரதிக்$_3$ருஹ்ய து தத் ஸர்வம் ராம: ப்ரீதிபுரஸ்க்ருத: ।
தீர்தே$_2$ாத$_3$காநி ஸர்வாணி ப$_2$லாநி விவித$_4$ாநி ச ॥
உவாச ச மஹாப$_3$ாஹு: ஸர்வாநேவ மஹாமுநீந் ॥ (9)

இமாந்யாஸநமுக்$_2$யாநி யத$_2$ார்ஹமுபவிஶ்யதாம் ।
ராமஸ்ய ப$_4$ாஷிதம் ஶ்ருத்வா ஸர்வ ஏவ மஹர்ஷய: ॥
ப்$_3$ருஸீஷு ருசிராக்$_2$யாஸு நிஷேது$_3$: காஞ்சநீஷு தே ॥ (10)

உபவிஷ்டாந்ருஷீம்ஸ்தத்ர த்$_3$ருஷ்ட்வா பரபுரஞ்ஜய: ।
ப்ரயத: ப்ராஞ்ஜலிர்பூ$_4$த்வா ராக$_4$வோ வாக்யமப்$_3$ரவீத் ॥ (11)

கிமாக$_3$மநகார்யம் வ: கிம் கரோமி ஸமாஹித: ।
ஆக்ஞாப்யோऽஹம் மஹர்ஷீணாம் ஸர்வகாமகர: ஸுக$_2$ம் ॥ (12)

இத$_3$ம் ராஜ்யம் ச ஸகலம் ஜீவிதம் ச ஹ்ருதி$_3$ ஸ்தி$_2$தம் ।
ஸர்வமேதத்$_3$த்$_3$விஜார்த$_2$ம் மே ஸத்யமேதத்$_3$ப்$_3$ரவீமி வ: ॥ (13)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ஸாது$_4$காரோ மஹாநபூ$_4$த் ।
ருஷீணாமுக்$_3$ரதபஸாம் யமுநாதீரவாஸிநாம் ॥ (14)

ஊசுஶ்ச தே மஹாத்மாநோ ஹர்ஷேண மஹதா வ்ருதா: ।
உபபந்நம் நரஶ்ரேஷ்ட$_2$ தவைவ பு$_4$வி நாந்யத: ॥ (15)

ப$_3$ஹவ: பார்தி$_2$வா ராஜந்நதிக்ராந்தா மஹாப$_3$லா: ।
கார்யஸ்ய கௌ$_3$ரவம் மத்வா ப்ரதிக்ஞாம் நாப்$_4$யரோசயந் ॥ (16)

Koviloor Digital Library

அப்போது, சுமந்திரர் அங்கே வந்து இராமனைப் பார்த்துக் கூறினார்— ''பிருகு முனிவரின் புதல்வர், சியவனரை முன்னிட்டுக் கொண்டு ஏராளமான முனிவர்களுடன் வந்து வாசலில் காத்துக் கொண்டிருக்கிறார். காவலர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அவர்கள், உடனே தங்களைத் தரிசிக்க வேண்டுமென்று தங்களிடம் தெரிவிக்கும்படி எங்களைத் தூண்டுகிறார்கள். (3,4)

புலிநிகர் ஆண்தகையே! யமுனையின் கரையில் வசிக்கும் அவர்கள், தங்களிடம் ஆழ்ந்த அன்பு கொண்டவர்கள்.'' அறம் அறிந்த இராமன், அவர் கூறியதைக் கேட்டதும், (பின்வருமாறு) பதில் கூறினார்— ''பெரும் புண்ணியசாலிகளான பார்க்கவர் முதலிய அந்தணர்களை உள்ளே அனுப்புக.'' (5)

அரசரின் கட்டளைக்குப் பணிந்து, வாயிற்காப்போன் இரு கைகளையும் தலைக்கு மேல் கூப்பிக் கொண்டு, நிகரற்ற ஆன்மப் பொலிவுடன் விளங்கும் அந்தத் தவசிகளை மாளிகைக்குள் செல்ல அனுமதித்தான். (6)

தவ ஆற்றலால் வெகுவாகப் பிரகாசிக்கும் மகாத்மாக்களான நூற்றுக்கணக்கான தவசிகள் அரசமாளிகைக்குள் நுழைந்தார்கள். (7)

எல்லாப் புண்ணிய தீர்த்தங்களின் நீரினால் நிரம்பிய கலசங்களுடனும், பல்வகை பழம்–கிழங்குகளுடனும் காணிக்கைப் பொருள்களை அவர்கள் கொண்டு வந்திருந்தார்கள். (8)

அவர்கள் கொணர்ந்த புண்ணிய தீர்த்தங்கள், பல்வகைப் பழங்கள் ஆகிய எல்லாவற்றையும் மனமகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்ட பெருந்தோளரான இராமன், அந்த முனிவர்களைப் பார்த்துக் கூறினார்— (9)

''இங்கேயுள்ள உயர்ந்த ஆசனங்களில், முறைப்படி அமர்ந்து கொள்ளுங்கள்.'' இராமனுடைய வேண்டுகோளைக் கேட்ட மாமுனிவர்கள், பொன்னாலான அழகிய இருக்கைகளில் அமர்ந்து கொண்டார்கள். (10)

எதிரிகளின் நகரங்களை வெற்றி கொள்ளும் இராமன், முனிவர்கள் எல்லோரும் சுகமாக அமர்ந்து கொண்டதும், வணக்கத்துடன் கைகளைக் கூப்பிக் கொண்டு கூறினார்— (11)

''தாங்கள் எல்லோரும் எதற்காக வந்திருக்கிறீர்கள்? தங்கள் விருப்பத்தை நான் மனதார நிறைவேற்றி வைப்பேன். நான் தங்களால் ஆணையிடத்தக்கவன். முனிவர்களின் விருப்பத்தை மகிழ்ச்சியோடு நிறைவேற்றி வைப்பேன். (12)

இந்தப் பேரரசு, என் உயிர், மற்றுமுள்ள செல்வச் செழுமைகள் அனைத்தும் அந்தணர்களுக்காகவே இருக்கின்றன – என்பதை, உண்மையாகக் கூறுகிறேன்.'' (13)

அவர் இவ்வாறு கூறியதைக் கேட்டவுடன் யமுனைக் கரையில் கடுமையாகத் தவம் செய்து கொண்டு வசிக்கும் மாமுனிவர்களான அவர்கள் எல்லோரும் இராமனை மிகவும் ஆதரித்துப் பாராட்டினார்கள். (14)

மகாத்மாக்களான முனிவர்கள் பேரானந்தத்துடன், ''மானுட மாணிக்கமே! இவ்வுலகில், இவ்வாறு தங்களால் மட்டுமே கூற இயலும்; வேறு எவராலும் இப்படிப் பேச முடியாது!'' என்றார்கள். (15)

''மன்னரே! நாங்கள், வீரம் மிகுந்த பல அரசர்களிடம் சென்று முறையிட்டோம். ஆனால், அந்தச் செயலை நிறைவேற்றுவதிலிருந்த பெருங்கஷ்டத்தை உணர்ந்த அவர்கள், எங்கள் வேண்டுகோளை நிறைவேற்றித் தருவதாக வாக்குக் கொடுக்கவில்லை. (16)

Koviloor Digital Library

த்வயா புநர்ப்$_3$ராஹ்மணகௌ$_3$ரவாதி$_3$யம்
க்ருதா ப்ரதிக்ஞா ஹ்யநவேக்ஷ்ய காரணம் ।
ததஶ்ச கர்தா ஹ்யஸி நாத்ர ஸம்ஶயோ
மஹாப$_4$யாத்த்ராதும்ருஷீம்ஸ்த்வமர்ஹஸி ॥ (17)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே உத்தரகாண்டே$_3$ ஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

ஏகஷஷ்டிதம: ஸர்க$_3$:

லவணத்ராணப்ரார்த$_2$நா

ப்$_3$ருவத்$_3$பி$_4$ரேவம்ருஷிபி$_4$: காகுத்ஸ்தோ$_2$ வாக்யமப்$_3$ரவீத் ।
கிம் கார்யம் ப்$_3$ரூத முநயோ ப$_4$யம் தாவத$_3$பைது வ: ॥ (1)

ததா$_2$ ப்$_3$ருவதி காகுத்ஸ்தே$_2$ பா$_4$ர்க$_3$வோ வாக்யமப்$_3$ரவீத் ।
ப$_4$யாநாம் ஶ்ருணு யந்மூலம் தே$_3$ஶஸ்ய ச நரேஶ்வர ॥ (2)

பூர்வம் க்ருதயுகே$_3$ ராஜந் தை$_3$தேய: ஸுமஹாப$_3$ல: ।
லோமபுத்ரோऽப$_4$வஜ்ஜ்யேஷ்டோ$_2$ மது$_4$ர்நாம மஹாஸுர: ॥ (3)

ப்$_3$ரஹ்மண்யஶ்ச ஶரண்யஶ்ச பு$_3$த்$_3$த்$_4$யா ச பரிநிஷ்டி$_2$த: ।
ஸுரைஶ்ச பரமோதா$_3$ரை: ப்ரீதிஸ்தஸ்யாதுலாப$_4$வத் ॥ (4)

ஸ மது$_4$ர்வீர்யஸம்பந்நோ த$_4$ர்மே ச ஸுஸமாஹித: ।
ப$_3$ஹுவர்ஷஸஹஸ்ராணி ருத்$_3$ரப்ரீத்யாகரோத்தப: ॥ (5)

ருத்$_3$ர: ப்ரீதோऽப$_4$வத்தஸ்மை வரம் தா$_3$தும் யயௌ ச ஸ: ।
ப$_3$ஹுமாநாச்ச ருத்$_3$ரேண த$_3$த்தஸ்தஸ்யாத்$_3$பு$_4$தோ வர: ॥ (6)

ஶூலம் ஶூலாத்$_3$விநிஷ்க்ருஷ்ய மஹாவீர்யம் மஹாப்ரப$_4$ம் ।
த$_3$தௌ$_3$ மஹாத்மா ஸுப்ரீதோ வாக்யம் சைதது$_3$வாச ஹ ॥ (7)

த்வயாயமதுலோ த$_4$ர்மோ மத்ப்ரஸாத$_3$கர: க்ருத: ।
ப்ரீத்யா பரமயா யுக்தோ த$_3$தா$_3$ம்யாயுத$_4$முத்தமம் ॥ (8)

யாவத் ஸுரைஶ்ச விப்ரைஶ்ச ந விருத்$_4$யேர்மஹாஸுர ।
தாவச்சூ$_2$லம் தவேத$_3$ம் ஸ்யாத$_3$ந்யதா$_2$ நாஶமேஷ்யதி ॥ (9)

யஶ்ச த்வாமபி$_4$யுஞ்ஜீத யுத்$_3$தா$_4$ய விக$_3$தஜ்வர: ।
தம் ஶூலோ ப$_4$ஸ்மஸாத்க்ருத்வா புநரேஷ்யதி தே கரம் ॥ (10)

ஏவம் ருத்$_3$ராத்$_3$வரம் லப்$_3$த்$_4$வா பூ$_4$ய ஏவ மஹாஸுர: ।
ப்ரணிபத்ய மஹாதே$_3$வம் வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (11)

Koviloor Digital Library

ஆனால், நாங்கள் இங்கே வந்திருப்பதன் காரணத்தை இதுவரை கூறவில்லை. அப்படியிருந்தும், காரணத்தைத் தெரிந்து கொள்ளாமலே 'நான் நிறைவேற்றித் தருகிறேன்' என்று அந்தணர்களிடம் வைத்துள்ள மரியாதையால் வாக்குக் கொடுத்துவிட்டீர்கள். தாங்கள், நிச்சயமாக எங்கள் வேண்டுகோளை நிறைவேற்றி வைப்பீர்கள் என்பதில் ஐயமில்லை. தங்களால்தான் மிகப்பெரும் அச்சத்திலிருந்து முனிவர்களைக் காப்பாற்ற முடியும்.'' (17)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
அறுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தொன்று

'லவணனிடமிருந்து காப்பாற்றுங்கள்!'

இவ்வாறு, முனிவர்கள் கூறியதைக் கேட்ட காகுத்தன், ''முனிவர்களே! தங்களுக்கு என்னால் என்ன காரியம் ஆகவேண்டும்? எந்தக் காரியத்தைச் செய்தால் உங்கள் அச்சம் நீங்கும், சொல்லுங்கள்'' என்று கூறினார். (1)

இராமன் இவ்வாறு கூறியதும், ''எங்களுக்கும் நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள பயத்திற்கான மூலகாரணத்தைக் கேளுங்கள்'' என்று பார்க்கவர் எனப்படும் சியவனர் பதில் கூறினார். (2)

''மன்னரே! முன்னர் கிருதயுகத்தில், லோலா என்பவளின் மூத்த புதல்வனாக மிகவும் பலம் பொருந்திய மது என்னும் அசுரன் இருந்தான். அந்தணர்களிடம் பக்தி கொண்டவன்; புகலிடம் நாடி வந்தவர்களுக்கு அடைக்கலம் தருபவன்; விசாலமனம் கொண்ட தேவர்களுடன் நிகரில்லாத ஆழ்ந்த நட்புறவு கொண்டிருந்தான். (3,4)

மது என்ற அவன், பேராற்றல் பொருந்தியவனாக இருந்தான்; அறநெறியை உறுதியாகக் கைப்பற்றி நடந்தான். அவன், ருத்ர பகவானைத் திருப்தி செய்விக்கும் பொருட்டு பல்லாயிரம் ஆண்டுகள் தவம் செய்தான். (5)

ருத்ரன் மனமகிழ்ந்து, அவனுக்கு வரம் கொடுப்பதற்காக அவன் இருப்பிடம் சென்றார். அவன் மிகச்சிறப்பாக வழிபட்டதால், ருத்ரன் அற்புதமான வரம் அருளினார். (6)

மகாத்மாவான ருத்ரன் மிகவும் மனமகிழ்ந்து, மிகவும் சக்தி வாய்ந்ததும் பேரொளி உடையதுமான தன்னுடைய சூலத்திலிருந்து, ஒரு சூலத்தை வெளிப்படுத்தி, அவனிடம் கொடுத்துவிட்டுப் பின்வருமாறு கூறினார்— (7)

'என்னை மகிழ்விக்கும் பொருட்டு, ஈடு–இணையில்லாத இப்பெரும் அறச்செயலை (நீண்ட கால தவத்தை), நீ செய்திருக்கிறாய். மிகவும் திருப்தியடைந்துள்ள நான், மிகச்சிறந்த இந்த ஆயுதத்தை உனக்குத் தந்துள்ளேன். (8)

அசுரப் பெருந்தகையே! அந்தணர்களிடமும் தேவதைகளிடமும் நீ விரோதம் கொள்ளாத வரையில், இந்தச் சூலம் உன்னிடம் இருக்கும். மாறுபட்டு நடப்பாயேயானால், இது உன்னிடமிருந்து காணாமல் போய்விடும். (9)

உன்னுடன் போர் செய்வதற்காக அச்சமின்றி, எவரேனும் உன் எதிரில் வந்தால், இது அவரை எரித்துவிட்டுத் திரும்பவும் உன்னிடம் வந்து சேரும்.' (10)

இவ்வாறு, ருத்ரனிடமிருந்து வரம் பெற்ற மகாசுரன், மகாதேவரான அவரை வணங்கி, பின்வருமாறு கூறினான்— (11)

Koviloor Digital Library

ப$_4$க$_3$வந் மம வம்ஶஸ்ய ஶூலமேதத$_3$நுத்தமம் ।
ப$_4$வேத்து ஸததம் தே$_3$வ ஸுராணாமீஶ்வரோ ஹ்யஸி ॥ (12)

தம் ப்$_3$ருவாணம் மது$_4$ம் தே$_3$வ: ஸர்வபூ$_4$தபதி: ஶிவ: ।
ப்ரத்யுவாச மஹாதேஜா நைததே$_3$வம் ப$_4$விஷ்யதி ॥ (13)

மா பூ$_4$த்தே விப$_2$லா வாணீ மத்ப்ரஸாத$_3$க்ருதா ஶுபா$_4$ ।
ப$_4$வத: புத்ரமேகம் து ஶூலமேதத்$_3$ப$_4$ஜிஷ்யதே ॥ (14)

யாவத் கரஸ்த$_2$: ஶூலோऽயம் ப$_4$விஷ்யதி ஸுதஸ்ய தே ।
அவத்$_4$ய: ஸர்வபூ$_4$தாநாம் ஶூலஹஸ்தோ ப$_4$விஷ்யதி ॥ (15)

ஏவம் மது$_4$ர்வரம் லப்$_3$த்$_4$வா தே$_3$வாத் ஸுமஹத$_3$த்$_3$பு$_4$தம் ।
ப$_4$வநம் ஸோऽஸுரஶ்ரேஷ்ட$_2$: காரயாமாஸ ஸுப்ரப$_4$ம் ॥ (16)

தஸ்ய பத்நீ மஹாபா$_4$கா$_3$ ப்ரியா கும்பீ$_4$நஸீதி யா ।
விஶ்வாவஸோரபத்யம் ஸா ஹ்யநலாயாம் மஹாப்ரபா$_4$ ॥ (17)

தஸ்யா: புத்ரோ மஹாவீர்யோ லவணோ நாம தா$_3$ருண: ।
பா$_3$ல்யாத் ப்ரப்$_4$ருதி து$_3$ஷ்டாத்மா பாபாந்யேவ ஸமாசரத் ॥ (18)

தம் புத்ரம் து$_3$ர்விநீதம் து த்$_3$ருஷ்ட்வா க்ரோத$_4$ஸமந்வித: ।
மது$_4$: ஸ ஶோகமாபேதே$_3$ ந சைநம் கிஞ்சித$_3$ப்$_3$ரவீத் ॥ (19)

ஸ விஹாய த்விமம் லோகம் ப்ரவிஷ்டோ வருணாலயம் ।
ஶூலம் நிவேஶ்ய லவணே வரம் தஸ்மை ந்யவேத$_3$யத் ॥ (20)

ஸ ப்ரபா$_4$வேண ஶூலஸ்ய தௌ$_3$ராத்ம்யேநாத்மநஸ்ததா$_2$ ।
ஸந்தாபயதி லோகாம்ஸ்த்ரீந் விஶேஷேண ச தாபஸாந் ॥ (21)

ஏவம்ப்ரபா$_4$வோ லவண: ஶூலம் சைவ ததா$_2$வித$_4$ம் ।
ஶ்ருத்வா ப்ரமாணம் காகுத்ஸ்த$_2$ த்வம் ஹி ந: பரமா க$_3$தி: ॥ (22)

ப$_3$ஹவ: பார்தி$_2$வா ராம ப$_4$யார்தைர்ருஷிபி$_4$: புரா ।
அப$_4$யம் யாசிதா வீர த்ராதாரம் ந ச வித்$_3$மஹே ॥ (23)

தே வயம் ராவணம் ஶ்ருத்வா ஹதம் ஸப$_3$லவாஹநம் ।
த்ராதாரம் வித்$_3$மஹே தாத நாந்யம் பு$_4$வி நராதி$_4$பம் ॥
தத் பரித்ராதுமிச்சா$_2$மோ லவணாத்$_3$ப$_4$யபீடி$_3$தாந் ॥ (24)

இதி ராம நிவேதி$_3$தம் து தே ப$_4$யஜம் காரணமுத்தி$_2$தம் ச யத் ।
விநிவாரயிதும் ப$_4$வாந் க்ஷம: குரு தம் காமமஹீநவிக்ரம ॥ (25)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_23_Back

Koviloor Digital Library

'ஈசுவரரே! தாங்கள் தேவதைகளுக்கெல்லாம் தலைவர். ஒப்புயர்வற்ற இந்தச் சூலம் என் பரம்பரையினரிடம் எப்போதும் இருக்கும்படி அருள்புரிய வேண்டும்.' (12)

எல்லா உயிர்ப்பிராணிகளுக்கும் தலைவரானவரும், எல்லையற்ற ஆற்றல் படைத்தவருமான மகாதேவர், 'இது, அவ்வாறு நடைபெறக் கூடியதல்ல' என்று பதில் கூறினார். (13)

(மேலும் கூறினார்—) 'என்னை மனமகிழச் செய்த உன் முகத்திலிருந்து வெளிவந்த சொல் வீணாகப் போகக்கூடாது. (அதனால், ஒரு சலுகை தருகிறேன்.) உன்னுடைய புதல்வர்களில் ஒருவனிடம் இந்தச் சூலம் இருக்கும். (14)

இந்தச் சூலம், உன் புதல்வனின் கையில் இருக்கும் வரையில், எந்தப் பிராணியாலும் அவனைக் கொல்ல முடியாது.' (15)

மகாதேவரிடமிருந்து மிகவும் ஆச்சரியமான இந்த வரத்தைப் பெற்ற மது என்னும் அசுரன், எழில்மிகு மாளிகை ஒன்றைக் கட்டிக் கொண்டான். (16)

அவனுடைய மனைவியான கும்பீநஸீ என்பவள் மிகவும் பாக்கியசாலி; அழகு மிக்கவள். அவள் விசுவாவசுவிற்கும் அநலாவிற்கும் பிறந்த புதல்வி. (17)

அவளுடைய புதல்வன், கொடுமனம் கொண்ட லவணன் என்னும் மகாவீரன். பிறவியிலிருந்தே துஷ்டனாக இருந்த அவன் பாவச் செயல்களையே செய்து வந்தான். (18)

கட்டுக்கடங்காத புதல்வனைக் கண்டு மதுவுக்குக் கோபம் வந்தது; வருத்தம் ஏற்பட்டது. ஆனால், அவன் அதைப் பற்றி மகனிடம் ஏதும் சொல்லவில்லை. (19)

லவணனிடம் சூலத்தைக் கொடுத்து, வரம் பற்றிய செய்தியைக் கூறிவிட்டு, இவ்வுலகிலிருந்து நீங்கி கடலுக்குள் சென்றுவிட்டான், மது. (20)

லவணன், சூலத்தின் அபார மகிமையினாலும் தன்னுடைய கெட்ட குணங்களாலும் மூன்று உலக மக்களையும் – குறிப்பாக, தவச்செல்வர்களைத் – துன்புறுத்தத் தொடங்கினான். (21)

எல்லையற்ற பராக்கிரமத்தையும் தீயகுணங்களையும் பெற்றவன், லவணன். அத்துடன், அவனுடைய சூலத்தின் மகிமையோ சொல்லத்தரமன்று. காகுத்தரே! தாங்கள், இந்த விபரங்களைக் கேட்டு, செய்யத்தக்கது எதுவோ அதைச் செய்யவேண்டும். தாங்கள்தான் எங்களுக்கு உயரிய புகலிடம். (22)

இராமனே! அச்சத்தினால் வருந்திய பல முனிவர்கள், அநேக அரசர்களிடம் சென்று அபயம் வேண்டினார்கள். ஆனால், வீரரே! எங்களைக் காப்பாற்றும் எவரையும் இதுவரை காணவில்லை. (23)

தன் படைவீரர்களுடனும் வாகனங்களுடனும் இராவணன் தங்களால் கொல்லப்பட்டான் என்பதைக் கேட்டதும், இவ்வுலகில், தங்களைத் தவிர வேறு எந்த மன்னராலும் எங்களைக் காப்பாற்ற முடியாது என்பதைத் தெரிந்து கொண்டோம். ஐயனே! லவணனைக் கண்டு பயந்து கொண்டிருக்கும் எங்களைத் தாங்கள்தான் காப்பாற்ற வேண்டும். (24)

அளவுகடந்த பலபராக்கிரமம் படைத்த இராமனே! எங்கள் பயத்திற்கான காரணத்தைத் தங்களிடம் கூறிவிட்டோம். எங்கள் அச்சத்தைப் போக்குவதற்குத் தங்களால் இயலும். எனவே, அதற்கான நடவடிக்கையை எடுப்பீர்களாக.'' (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
அறுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

த்$_3$விஷஷ்டிதம: ஸர்க$_3$:

ஶத்ருக்$_4$நப்ரேணம்

ததோ$_2$க்தே தாந்ருஷீந் ராம: ப்ரத்யுவாச க்ருதாஞ்ஜலி: ।
கிமாஹார: கிமாசாரோ லவண: க்வ ச வர்ததே ॥ (1)

ராக$_4$வஸ்ய வச: ஶ்ருத்வா ருஷய: ஸர்வ ஏவ தே ।
ததோ நிவேத$_3$யாமாஸுர்லவணோ வவ்ருதே$_4$ யதா$_2$ ॥ (2)

ஆஹார: ஸர்வஸத்த்வாநி விஶேஷேண ச தாபஸா: ।
ஆசாரோ ரௌத்$_3$ரதா நித்யம் வாஸோ மது$_4$வநே ததா$_2$ ॥ (3)

ஹத்வா ப$_3$ஹூஸஹஸ்ராணி ஸிம்ஹவ்யாக்$_4$ரம்ருக$_3$த்$_3$விபாந் ।
மாநுஷாம்ஶ்சைவ குருதே நித்யமாஹாரமாஹ்நிகம் ॥ (4)

ததோऽந்தராணி ஸத்த்வாநி கா$_2$த$_3$தே ஸ மஹாப$_3$ல: ।
ஸம்ஹாரே ஸமநுப்ராப்தே வ்யாதி$_3$தாஸ்ய இவாந்தக: ॥ (5)

தச்ச்$_2$ருத்வா ராக$_4$வோ வாக்யமுவாச ஸ மஹாமுநீந் ।
கா$_4$தயிஷ்யாமி தத்$_3$ரக்ஷோ ஹ்யபக$_3$ச்ச$_2$து வோ ப$_4$யம் ॥ (6)

ப்ரதிஜ்ஞாய ததா$_2$ தேஷாம் முநீநாமுக்$_3$ரதேஜஸாம் ।
ஸ ப்$_4$ராத்ரூந் ஸஹிதாந் ஸர்வாநுவாச ரகு$_4$நந்த$_3$ந: ॥ (7)

கோ ஹந்தா லவணம் வீர: கஸ்யாம்ஶ: ஸ விதீ$_4$யதாம் ।
ப$_4$ரதஸ்ய மஹாபா$_3$ஹோ: ஶத்ருக்$_4$நஸ்ய ச தீ$_4$மத: ॥ (8)

ராக$_4$வேணைவமுக்தஸ்து ப$_4$ரதோ வாக்யமப்$_3$ரவீத் ।
அஹமேதம் வதி$_4$ஷ்யாமி மமாம்ஶ: ஸ விதீ$_4$யதாம் ॥ (9)

ப$_4$ரதஸ்ய வச: ஶ்ருத்வா தை$_4$ர்யஶௌர்யஸமந்விதம் ।
லக்ஷ்மணாவரஜஸ்தஸ்தௌ$_2$ ஹித்வா ஸௌவர்ணமாஸநம் ॥ (10)

ஶத்ருக்$_4$நஸ்த்வப்$_3$ரவீத்$_3$வாக்யம் ப்ரணிபத்ய நராதி$_4$பம் ।
க்ருதகர்மா மஹாபா$_3$ஹுர்மத்$_4$யமோ ரகு$_4$நந்த$_3$ந: ॥ (11)

ஆர்யேண ஹி புரா ஶூந்யா த்வயோத்$_4$யா பரிபாலிதா ।
ஸந்தாபம் ஹ்ருத$_3$யே க்ருத்வா ஆர்யஸ்யாக$_3$மநம் ப்ரதி ॥ (12)

து$_3$:கா$_2$நி ச ப$_3$ஹுநீஹ ஹ்யநுபூ$_4$தாநி பார்தி$_2$வ ।
ஶயாநோ து$_3$:க$_2$ஶய்யாஸு நந்தி$_3$க்$_3$ராமேऽவஸத் புரா ॥ (13)

ப$_2$லமூலாஶநோ பூ$_4$த்வா ஜடீ சீரத$_4$ரஸ்ததா$_2$ ।
அநுபூ$_4$யேத்$_3$ருஶம் து$_3$:க$_2$மேஷ ராக$_4$வநந்த$_3$ந: ॥ (14)

ப்ரேஷ்யே மயி ஸ்தி$_2$தே ராஜந்ந பூ$_4$ய: க்லேஶமாப்நுயாத் ।
ததா$_2$ ப்$_3$ருவதி ஶத்ருக்$_4$நே ராக$_4$வ: புநரப்$_3$ரவீத் ॥ (15)

Koviloor Digital Library

ஸர்க்கம் : அறுபத்திரண்டு

சத்ருக்னனுக்கு ஆணையிடுதல்

இவ்வாறு, முனிவர்கள் கூறியதும், இராமன் கைகளைக் கூப்பிக்கொண்டு, ''லவணன் எங்கே இருக்கிறான்? அவனுடைய நடவடிக்கைகள் எப்படிப்பட்டவை? அவன் எதனை உண்கிறான்?'' என்று விநயத்தோடு கேட்டார். (1)

இராமனுடைய சொற்களைக் கேட்ட அந்த முனிவர்கள் எல்லோரும், லவணன் முரட்டுத்தனமாக வளர்ந்த விதத்தைக் கூறத் தொடங்கினார்கள்— (2)

''அவனுடைய உணவு, எல்லா உயிர்ப்பிராணிகளும்! முக்கியமாக, தவச்செல்வர்கள்! அவனுடைய நடவடிக்கைகள் பயங்கரமானவை. அவன் எப்போதும் மதுவனத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறான். (3)

அவன், நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான சிங்கம்–புலி–மான்–யானை மற்றும் மனிதர்களைக் கொன்று புசித்து வருகிறான். (4)

ஊழிக்காலம் வந்ததும் வாயைப் பிளந்து வைத்துக் கொண்டு எல்லா உயிர்களையும் உள்ளே தள்ளி வதைக்கும் யமனைப் போல, மகாபலம் பொருந்திய அவன் மற்ற உயிர்ப்பிராணிகளை இலகுவாக விழுங்கி விடுகிறான்.'' (5)

இதனைக் கேட்ட இராமன், மாமுனிவர்களைப் பார்த்து, ''அந்த அரக்கனை நான் கொல்கிறேன்; நீங்கள் பயப்படாமலிருங்கள்'' என்று பதில் கூறினார். (6)

எல்லையற்ற தவ ஆற்றல் பெற்ற அந்த முனிவர்களுக்கு உறுதிமொழி கூறிவிட்டு, தன் சகோதரர்களையும் மற்ற எல்லோரையும் பார்த்து இராமன் கூறினார்— (7)

''லவணனைக் கொல்வதற்கு தோள்வலிமிக்க பரதனை அனுப்பலாமா? அல்லது, அறிவிற்சிறந்த சத்ருக்னனை அனுப்பலாமா?'' (8)

இராமன், இவ்வாறு சொல்லி முடித்ததும், ''இவனை நானே கொல்கிறேன். என்னிடம் பொறுப்பை ஒப்படையுங்கள்'' என்று பரதன் கூறினான். மனஉறுதியையும் வீரத்தையும் வெளிப்படுத்தும் பரதனுடைய சொற்களைக் கேட்ட, (இலக்குவனின் தம்பியான) சத்ருக்னன், பொன்மயமான இருக்கையை விட்டு எழுந்து நின்றான். (9,10)

மன்னரை வணங்கிவிட்டு, சத்ருக்னன் கூறினான். பெருந்தோளனும் ரகுநந்தனருமான நடுசகோதரர் பரதன், தன் கடமையைச் செய்து முடித்துவிட்டார். முன்னர், தாங்கள் அயோத்தியை வெற்றிடமாகச் செய்துவிட்டு, (தாங்கள் கானகம் சென்றபோது) தாங்கள் திரும்பி வரும் காலம் வரை துயரத்தை மனத்திலிருத்தி நாட்டைப் பரிபாலித்தார். (11,12)

மன்னரே! அவர் பலவிதமான கஷ்டங்களை அனுபவித்துவிட்டார். முன்னர் நந்திக்கிராமத்தில், உடலுக்குத் துன்பம் தரும் படுக்கைகளில் படுத்துக் கொண்டு கஷ்டம் அனுபவித்திருக்கிறார். (13)

கனி–கிழங்குகளைப் புசித்துக் கொண்டு, ஜடை தரித்து, மான்தோல் ஆடை அணிந்து, ரகுநந்தனரான அவர் துக்கத்தை அனுபவித்திருக்கிறார். (14)

வேந்தரே! நான் இருக்கும்போது, அவர் மறுபடியும் (லவணனுடன் போர் என்ற) இன்னல்களை அனுபவிக்க வேண்டுமா?'' இவ்வாறு சத்ருக்னன் கூறிமுடித்ததும், இராமன் மறுபடியும் சொன்னார்— (15)

Koviloor Digital Library

ஏவம் ப$_4$வது காகுத்ஸ்த$_2$ க்ரியதாம் மம ஶாஸநம் ।
ராஜ்யே த்வாமபி$_4$ஷேக்ஷ்யாமி மதோ$_4$ஸ்து நக$_3$ரே ஶுபே$_4$ ॥ (16)

நிவேஶய மஹாபா$_3$ஹோ ப$_4$ரதம் யத்$_3$யவேக்ஷஸே ।
ஶூரஸ்த்வம் க்ருதவித்$_3$யஶ்ச ஸமர்த$_2$ஶ்ச நிவேஶநே ॥ (17)

யோ ஹி ஶத்ரும் ஸமுத்பாட்ய பார்தி$_2$வஸ்ய புந: க்ஷயே ।
ந வித$_4$த்தே ந்ருபம் தத்ர நரகம் ஸ ஹி க$_3$ச்ச$_2$தி ॥ (18)

ஸ த்வம் ஹத்வா மது$_4$ஸூதம் லவணம் பாபநிஶ்சயம் ।
ராஜ்யம் ப்ரஶாதி$_4$ த$_4$ர்மேண வாக்யம் மே யத்$_3$யவேக்ஷஸே ॥ (19)

உத்தரம் ச ந வக்தவ்யம் ஶூர வாக்யாந்தரே மம ।
பா$_3$லேந பூர்வஜஸ்யாக்ஞா கர்தவ்யா நாத்ர ஸம்ஶய: ॥ (20)

அபி$_4$ஷேகம் ச காகுத்ஸ்த$_2$ ப்ரதீச்ச$_2$ஸ்வ மயோத்$_3$யதம் ।
வஸிஷ்ட$_2$ப்ரமுகை$_2$ர்விப்ரைர்விதி$_4$மந்த்ரபுரஸ்க்ருதம் ॥ (21)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்$_3$விஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

த்ரிஷஷ்டிதம: ஸர்க$_3$:

லவணவதோ$_4$பாயகத$_2$நம்

ஏவமுக்தஸ்து ராமேண பராம் வ்ரீடா$_3$முபாக$_3$மத் ।
ஶத்ருக்$_4$நோ வீர்யஸம்பந்நோ மந்த$_3$ம் மந்த$_3$முவாச ஹ ॥ (1)

அத$_4$ர்மம் வித்$_3$ம காகுத்ஸ்த$_2$ ஹ்யஸ்மிந்நர்தே$_2$ நரேஶ்வர ।
கத$_2$ம் திஷ்ட$_2$த்ஸு ஜ்யேஷ்டே$_2$ஷு கநீயாநபி$_4$ஷிச்யதே ॥ (2)

அவஶ்யம் கரணீயம் ச ஶாஸநம் புருஷர்ஷப$_4$ ।
தவ சைவ மஹாபா$_4$க$_3$ ஶாஸநம் து$_3$ரதிக்ரமம் ॥ (3)

த்வத்தோ மயா ஶ்ருதம் வீர ஶ்ருதிப்$_4$யஶ்ச மயா ஶ்ருதம் ।
நோத்தரம் ஹி மயா வாச்யம் மத்$_4$யமே ப்ரதிஜாநதி ॥ (4)

வ்யாஹ்ருதம் து$_3$ர்வசோ கோ$_4$ரம் ஹந்தாஸ்மி லவணம் ம்ருதே$_4$ ।
தஸ்யேயம் மே து$_3$ருக்தஸ்ய து$_3$ர்க$_3$தி: புருஷர்ஷப$_4$ ॥ (5)

உத்தரம் ஹி ந வக்தவ்யம் ஜ்யேஷ்டே$_2$நாபி$_4$ஹிதம் புந: ।
அத$_4$ர்மஸஹிதம் சைவ பரலோகவிவர்ஜிதம் ॥ (6)

ஸோ஽ஹம் த்$_3$விதீயம் காகுத்ஸ்த$_2$ ந வக்ஷ்யாமி தவோத்தரம் ।
மா த்$_3$விதீயேந த$_3$ண்டோ$_3$ வை நிபதேந்மயி மாநத$_3$ ॥ (7)

Koviloor Digital Library

''காகுத்தனே! (சத்ருக்னா!) நல்லது. நீ சொன்னபடியே ஆகட்டும். நீயே, என் கட்டளையை நிறைவேற்றுவாயாக. அழகான மது நகரத்தில் அரசபதவி அளித்து உனக்கு முடிசூட்டுகிறேன். பரதனுக்குக் கஷ்டம் கொடுக்கலாகாது என்று நீ கருதினால், அவன் இங்கேயே இருக்கட்டும். நீ மகாசூரன்; கல்வி கற்றவன்; புதிய நகரத்தை நிர்மாணிக்க உன்னால் முடியும். (16,17)

எவனொருவன் எதிரி மன்னனைத் தூக்கியெறிந்துவிட்டு, அந்த இடத்தில் வேறோர் அரசனை நிலைநிறுத்தவில்லையோ, அவன் நரகத்தை அடைகிறான். (18)

பாவச் செயல்களைச் செய்துவரும் மதுவின் புதல்வனான லவணனைக் கொன்று, அறநெறிப்படி ஆட்சி செலுத்துவாயாக. என் சொற்படி நடக்க நீ விரும்பினாயேயானால், சூரனே! இடைமறித்துப் பேசாமல் நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டு இரு. சிறியவர்கள், நிச்சயமாக மூத்தவர்களின் ஆணைப்படி நடக்க வேண்டும். (19,20)

என் ஆணைப்படி, வசிஷ்டர் முதலிய வேதவித்தகர்கள், அறநூல் முறைப்படி மந்திரங்களைக் கூறி, உனக்கு அபிஷேகம் செய்து வைப்பதை ஏற்றுக்கொள்.'' (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
அறுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து மூன்று

லவணனை வெல்லும் உபாயம்

இவ்வாறு, இராமன் கூறியதும், வீரம் நிறைந்த சத்ருக்னன் மனவேதனை அடைந்து தயங்கித் தயங்கிப் பதில் சொன்னான்— (1)

''மன்னரே! காகுத்தரே! (எனக்கு முடிசூட்டுதல் என்ற) இந்த விஷயம் அறநெறி பிறழ்ந்தது என்று நான் கருதுகிறேன். மூத்தவர்கள் இருக்கும்போது, இளையவனுக்குப் பட்டம் சூட்டுவது என்பது எப்படி நியாயமாகும்? (2)

புருஷோத்தமரே! தங்கள் கட்டளைக்குப் பணிந்து நடக்க வேண்டும்தான். பெருந்தகையாளரே! தங்கள் ஆணையை எவராலும் மீறமுடியாது. (3)

தாங்கள், எனக்கு நல்லுரை சொல்லியிருக்கிறீர்கள்; வேத–தரும சாஸ்திர நூல்களைக் கற்றும் (நற்குணங்கள் பற்றி) அறிந்திருக்கிறேன். நடுசகோதரன் (பரதன், 'லவணனை நானே அழிக்கிறேன்' என்று) உறுதியாகக் கூறிய பிறகு, நான் வாயைத் திறந்து பதில் கூறியிருக்கக் கூடாது. (4)

என்னுடைய வாயிலிருந்து, ''நானே சென்று லவணனைக் கொல்கிறேன்'' என்ற பதற்றமான சொல் வெளிவந்திருக்கக் கூடாது. அப்படி அநாகரிகமாகக் கூறியதால்தான், இப்படிப்பட்ட (பட்டம் சூட்டிக்கொள்ளுதல் என்ற) பரிதாபநிலை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. (5)

மூத்த சகோதரர் பரதன் (தானே லவணனைக் கொல்வதாகக்) கூறியபிறகு, நான் அதை மறுத்துப் பதில் சொல்லியிருக்கக்கூடாதுதான். தங்கள் ஆணைக்கு உட்படாவிட்டால், அது அறம் தவறிய செயலாகும். ஆணையை ஏற்று நடந்தால் மூத்தவன் இருக்க, இளையவன் பட்டம் சூட்டிக்கொண்ட குற்றம் ஏற்பட்டு உயர்ந்த பரலோகத்தை இழந்தவன் ஆவேன். (6)

காகுத்தரே! பிறரை மதிப்பவரே! தங்கள் ஆணை எதுவோ, அதன்படி நடப்பேனே தவிர, அதற்குமாறாகப் பதில் சொல்லமாட்டேன். அவ்விதம் மறுத்துச் சொன்னால், (இப்போது கிடைத்திருப்பதைவிட) இன்னும் கடுமையான தண்டனை கிடைக்கக்கூடும்! (7)

Koviloor Digital Library

காமகாரோ ஹ்யஹம் ராஜந்ஸ்தவாஸ்மி புருஷர்ஷப$_4$ ।
அத$_4$ர்மம் ஜஹி காகுத்ஸ்த$_2$ மத்க்ருதே ரகு$_4$நந்த$_3$ந ॥ (8)

ஏவமுக்தே து ஶௌரேண ஶத்ருக்$_4$நேந மஹாத்மநா ।
உவாச ராம: ஸம்ஹ்ருஷ்டோ ப$_4$ரதம் லக்ஷ்மணம் தத$_2$ா ॥ (9)

ஸம்ப$_4$ராநபி$_4$ஷேகஸ்ய ஆநயத்$_4$வம் ஸமாஹிதா: ।
அத்$_3$யைவ புருஷவ்யாக்$_3$ரமபி$_4$ஷேக்ஷ்யாமி ராக$_4$வம் ॥ (10)

புரோஹிதம் ச காகுத்ஸ்த$_2$ நைக$_3$மாந்ருத்விஜஸ்தத$_2$ா ।
மந்த்ரிணஶ்சைவ தாந் ஸர்வாநாநயத்$_4$வம் மமாக்ஞயா ॥ (11)

ராக்ஞ: ஶாஸநமாக்ஞாய தத$_2$ாகுர்வந் மஹாரத$_2$ா: ।
அபி$_4$ஷேகஸமாரம்ப$_4$ம் புரஸ்க்ருத்ய புரோத$_4$ஸம் ॥
ப்ரவிஷ்டா ராஜப$_4$வநம் ராஜாநோ ப்$_3$ராஹ்மணாஸ்தத$_2$ா ॥ (12)

தத$_2$ாபி$_4$ஷேகோ வவ்ருதே$_4$ ஶத்ருக்$_4$நஸ்ய மஹாத்மந: ।
ஸம்ப்ரஹர்ஷகர: ஸ்ரீமாந் ராக$_4$வஸ்ய புரஸ்ய ச ॥ (13)

அபி$_4$ஷிக்தஸ்து ஶத்ருக்$_4$நோ ப$_3$பௌ$_4$ சாதி$_3$த்யஸந்நிப$_4$: ।
அபி$_4$ஷிக்த: புரா: ஸ்கந்த$_3$: ஸேந்த்$_3$ரைரிவ மருத்$_3$க$_3$ணை: ॥ (14)

அபி$_4$ஷிக்தே து ஶத்ருக்$_4$நே ராமேணாக்லிஷ்டகர்மணா ।
பௌரா: ப்ரமுதி$_3$தாஶ்சாஸந் ப்$_3$ராஹ்மணாஶ்ச ப$_3$ஹுஶ்ருதா: ॥ (15)

கௌஸல்யா ச ஸுமித்ரா ச மங்க$_3$ளம் கேகயீ தத$_2$ா ।
சக்ருஸ்தா ராஜப$_4$வநே யாஶ்சாந்யா ராஜயோஷித: ॥ (16)

ருஷயஶ்ச மஹாத்மாநோ யமுநாதீரவாஸிந: ।
ஹதம் லவணமாஶம்ஸு: ஶத்ருக்$_4$நஸ்யாபி$_4$ஷேசநாத் ॥ (17)

ததோऽபி$_4$ஷிக்தம் ஶத்ருக்$_4$நமங்கமாரோப்ய ராக$_4$வ: ।
உவாச மது$_4$ராம் வாணீம் தேஜஸ்தஸ்யாபி$_4$பூரயந் ॥ (18)

அயம் ஶரஸ்த்வமோக$_4$ஸ்தே தி$_3$வ்ய: பரபுரஞ்ஜய: ।
அநேந லவணம் ஸௌம்ய ஹந்தாஸி ரகு$_4$நந்த$_3$ந ॥ (19)

ஸ்ருஷ்ட: ஶரோऽயம் காகுத்ஸ்த$_2$ யத$_3$ா ஶேதே மஹார்ணவே ।
ஸ்வயம்பூ$_4$ரஜிதோ தே$_3$வோ யம் நாபஶ்யந் ஸுராஸுரா: ॥ (20)

அத்$_3$ருஶ்ய: ஸர்வபூ$_4$தாநாம் தேநாயம் து ஶரோத்தம: ।
ஸ்ருஷ்ட: க்ரோத$_4$ாபி$_4$பூ$_4$தேந விநாஶார்த$_2$ம் து$_3$ராத்மநோ: ॥ (21)

மது$_4$கைடப$_4$யோர்வீர விக$_4$ாதே ஸர்வரக்ஷஸாம் ।
ஸ்ரஷ்டுகாமேந லோகாந்ஸ்த்ரீந்ஸ்தௌ சாநேந ஹதௌ யுதி$_4$ ॥ (22)

தௌ ஹத்வா ஜநபே$_4$ாக$_3$ார்த$_2$ம் கைடப$_4$ம் து மது$_4$ம் தத$_2$ா ।
அநேந ஶரமுக்$_2$யேந ததோ லோகாந்ஶ்சகார ஸ: ॥ (23)

Koviloor Digital Library

வேந்தரே! புருஷோத்தமரே! நான், தங்கள் விருப்பப்படியே நடந்து கொள்வேன். காகுத்தரே! அதனால், எனக்கு ஏற்படும் பாவத்தைத் தாங்களே அழித்துவிடுங்கள்.'' (8)

மாவீரனும் மகாத்மாவுமான சத்ருக்னன் இவ்வாறு கூறியதும், மகிழ்ச்சியடைந்த இராமன், பரத–லட்சுமணர்களைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினார்— (9)

''நீங்கள் எல்லோரும் உடனே சென்று பட்டாபிஷேகத்திற்குத் தேவையான பொருள்களைக் கவனமாகச் சேகரித்துக் கொண்டு வாருங்கள். ரகுகுலத் தோன்றலும் ஆண்புலி நிகர் வீரனுமான சத்ருக்னனுக்கு, இப்போதே பட்டாபிஷேகம் செய்விக்கிறேன். (10)

காகுத்தனே! புரோகிதர், வேதவித்தகர்கள், ரித்விக்குகள், அமைச்சர்கள் ஆகிய எல்லோரையும் என் கட்டளைப்படி அழைத்து வாருங்கள்.'' (11)

மகாரதர்களான பணியாளர்கள், மன்னரின் ஆணைப்படியே செய்தார்கள். புரோகிதரை முன்னிட்டுக் கொண்டு முடிசூட்டுதலுக்கான பொருள்களை எடுத்துக் கொண்டு, சிற்றரசர்களும் அந்தணர்களும் அரசமாளிகைக்குள் சென்றார்கள். பின்னர், திருவுடைநாயகன் இராமனுக்கும் நகரவாசிகளுக்கும் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும் நிகழ்ச்சி – மகாத்மாவான சத்ருக்னனுக்குப் பட்டாபிஷேகம் – இனிதே நடந்தேறியது. (12,13)

முன்னர் ஒரு காலத்தில், இந்திரனாலும் மருத்கணங்களாலும் தேவசேனாதிபதியாகக் கந்தவேள் பட்டம் சூட்டப்பட்டதைப் போல், மிக அரிய செயலையும் எளிதில் முடிக்கவல்ல இராமனால் முடிசூட்டப்பட்ட சத்ருக்னன், சூரியனைப் போல் சுடரொளி வீசினான். சத்ருக்னனுக்கு முடிசூட்டப்பட்டதைக் கண்டு, நகர மக்களும், ஏராளமாகக் கல்வி கற்ற அந்தணர்களும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். (14,15)

அப்போது, கௌசல்யை, சுமித்திரை, கைகேயி முதலியோரும், அந்தப்புரத்திலிருந்த மற்றப் பெண்மணிகளும் சத்ருக்னனுக்கு மங்களச் சடங்குகளை (திருஷ்டி கழித்தலை)ச் செய்தார்கள். (16)

யமுனைக்கரையில் வசிக்கும் மகாத்மாக்களான முனிவர்கள், சத்ருக்னன் முடிசூட்டப்பட்டதும், 'லவணன் ஒழிந்தே போனான்!' என்று உறுதியாக நம்பினார்கள். பட்டாபிஷேகம் முடிந்தவுடன், அவன் ஆண்மைப்பொலிவை நிறைவு செய்யுமாப்போலே சத்ருக்னனை மடியில் வைத்துக் கொண்டு, (பின்வரும்) இனிய சொற்களைக் கூறினார், இராமன். (17,18)

''எதிரியின் பட்டணத்தைக் கைப்பற்றுபவனே! ரகுகுல மாணிக்கமே! நான் கொடுக்கும் இந்த அம்பு தெய்விகமானது; வீண் போகாதது. இந்த அம்பினால், நீ லவணனைக் கொல்லப் போகிறாய். (19)

காகுத்தனே! தான்தோன்றியும், எவராலும் வெல்ல முடியாதவரும், தேவர்களாலும் அசுரர்களாலும் காண முடியாதவரும், பாற்கடலில் படுத்துக் கொண்டிருக்கும் தேவாதிதேவருமான மகாவிஷ்ணுவால் இந்த அம்பு சிருஷ்டிக்கப்பட்டது. (20)

மிக்க மகிமை பொருந்திய இந்த அம்பு எந்த உயிர்ப்பிராணியாலும் காணமுடியாதது. துராத்மாக்களிடம் மிகவும் கோபம் கொண்டு, அவர்களை அழிப்பதற்காக இது உண்டாக்கப்பட்டது. (21)

வீரனே! மகாவிஷ்ணு, மூன்று உலகங்களையும் படைக்க விரும்பினார். ஆனால், அப்போதிருந்த மது–கைடபர்கள் இடையூறு செய்ததால், போர் செய்து, இந்த அம்பைக் கொண்டு அவர்களைக் கொன்றொழித்தார். (22)

பேராற்றல் பொருந்திய இந்த அம்பினால் மதுவையும் கைடபனையும் கொன்று, ஜீவர்கள் தத்தம் கர்மவினைப் பயன்களை அனுபவிப்பதற்காக உலகங்களைப் படைத்தார். (23)

Koviloor Digital Library

நாயம் மயா ஶர: பூர்வம் ராவணஸ்ய வத$_4$ார்தி$_2$நா ।
முக்த: ஶத்ருக்$_4$ந பூ$_4$தாநாம் மஹாந்ஸ்த்ராஸோ ப$_4$வேதி$_3$தி ॥ (24)

யச்ச தஸ்ய மஹச்சூ$_2$லம் த்ர்யம்ப$_3$கேண மஹாத்மநா ।
த$_3$த்தம் ஶத்ருவிநாஶாய மதே$_4$ராயுத$_4$முத்தமம் ॥ (25)

ஸ தம் நிக்ஷிப்ய ப$_4$வநே பூஜ்யமாநம் புந: புந: ।
தி$_3$ஶ: ஸர்வா: ஸமாஸாத்$_3$ய ப்ராப்நோத்யாஹாரமுத்தமம் ॥ (26)

யத$_3$ா து யுத்$_3$த$_4$மாகாங்க்ஷந் கஶ்சிதே$_3$நம் ஸமாஹ்வயேத் ।
தத$_3$ா ஶூலம் க்$_3$ருஹீத்வா தம் ப$_4$ஸ்ம ரக்ஷ: கரோதி ஹி ॥ (27)

ஸ த்வம் புருஷஶார்தூ$_3$ல தமாயுத$_4$விநாக்ருதம் ।
அப்ரவிஷ்டம் புரம் பூர்வம் த்வாரி திஷ்ட த்ருதாயுத: ॥ (28)

அப்ரவிஷ்டம் ச ப$_4$வநம் யுத்$_3$த$_4$ாய புருஷர்ஷப$_4$ ।
ஆஹ்வயேத$_2$ா மஹாப$_3$ாஹோ ததோ ஹந்தாஸி ராக்ஷஸம் ॥ (29)

அந்யத$_2$ா க்ரியமாணே து அவத்$_4$ய: ஸ ப$_4$விஷ்யதி ।
யதி$_3$ த்வேவம் க்ருதம் வீர விநாஶமுபயாஸ்யதி ॥ (30)

ஏதத்தே ஸர்வமாக்$_2$யாதம் ஶூலஸ்ய ச விபர்யய: ।
ஸ்ரீமத: ஶிதிகண்ட$_2$ஸ்ய க்ருத்யம் ஹி து$_3$ரதிக்ரமம் ॥ (31)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்ரிஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

சது:ஷஷ்டிதம: ஸர்க$_3$:

ஶத்ருக்$_4$நப்ரஸ்த$_2$நம்

ஏவமுக்த்வா ச காகுத்ஸ்த$_2$ம் ப்ரஶஸ்ய ச புந: புந: ।
புநரேவாபரம் வாக்யமுவாச ரகு$_4$நந்த$_3$ந: ॥ (1)

இமாந்யஶ்வஸஹஸ்ராணி சத்வாரி புருஷர்ஷப$_4$ ।
ரத$_2$ாநாம் த்$_3$வே ஸஹஸ்ரே ச க$_3$ஜாநாம் ஶதமுத்தமம் ॥ (2)

அந்தராபணவீத்$_2$யஶ்ச நாநாபண்யோபஶோபி$_4$தா: ।
அநுக$_3$ச்ச$_2$ந்து காகுத்ஸ்த$_2$ம் ததை$_2$வ நடநர்தகா: ॥ (3)

ஹிரண்யஸ்ய ஸுவர்ணஸ்ய நியுதம் புருஷர்ஷப$_4$ ।
ஆத$_3$ாய க$_3$ச்ச$_2$ ஶத்ருக்$_4$ந பர்யாப்தத$_4$நவாஹந: ॥ (4)

ப$_3$லம் ச ஸுப்$_4$ருதம் வீர ஹ்ருஷ்டபுஷ்டமநுத்$_3$த$_4$தம் ।
ஸம்ப$_4$ாஷாஸம்ப்ரத$_3$ாநேந ரஞ்ஜயஸ்வ நரோத்தம ॥ (5)

Koviloor Digital Library

சத்ருக்னா! முன்னர், இராவணனைக் கொல்வதற்காகப் போர் செய்தபோது, இந்த அம்பினுடைய மகாபயங்கரத்தைத் தெரிந்து கொண்டிருந்த நான், இதைப் பிரயோகிக்கவில்லை. (24)

தன்னிகரற்ற தெய்வமான பரமேசுவரனால், மகிமை பொருந்திய ஒரு சூலம் எதிரிகளை அழிப்பதற்காக மதுவுக்குக் கொடுக்கப்பட்டது. அவன், அதனைத் தன் மாளிகையில் வைத்து சிறப்பாக வழிபாடு செய்து வருகிறான். (அந்தச் சூலம் தன்னிடம் இருக்கும் தைரியத்தால்,) அவன் எல்லாப் பக்கங்களிலும் சுற்றித் திரிந்து, தனக்குத் தேவையான அளவிறந்த உணவை அடைந்துவிடுகிறான். (25,26)

எவரேனும் இந்த அரக்கனைப் போருக்கு அழைத்தால், சூலத்தைக் கையிலேந்திச் சென்று, அவனைச் சாம்பலாக்கி விடுகிறான். (27)

புலிநிகர் வீரனே! அந்தச் சூலாயுதம் அவன் கையில் இல்லாத நேரத்தில், அவன் நகரத்திற்குள் நுழைய முடியாத வேளையில், நகர வாயிலில் ஆயுதம் ஏந்தியவனாக, நீ காத்துக் கொண்டிரு. (28)

காளை போன்ற ஆண்மையனே! அவன், தன் மாளிகைக்குள் செல்வதற்கு முன்னதாக, அவனைப் போருக்கு அழைப்பாய். (அப்போது, அவன் கையில் சூலம் இல்லாததால்,) நீ, அந்த அரக்கனைக் கொன்று போடுவாய். (29)

(இது அல்லாது) வேறு மாதிரியாக அவனுடன் போர்புரிய முயன்றால், அவன் வெல்லப்பட முடியாதவனாகி விடுவான். நான் சொன்னபடி செய்தால் அவன் அழிந்து போவான். (30)

தேவாதிதேவனான மகாதேவரால் கொடுக்கப்பட்ட சூலத்தை யாரும் எதிர்த்து நிற்க முடியாது. இந்த விவரங்களை முழுவதுமாக உனக்குச் சொல்லிவிட்டேன்.'' (31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
அறுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்து நான்கு

சத்ருக்னன் புறப்படுதல்

இவ்வாறு, சத்ருக்னனுக்குத் திட்டவட்டமாகக் கூறிய பின்னரும், ரகுநந்தனரான இராமன், மேலும் ஒரு செய்தியைக் கூறினார்— (1)

''புருஷோத்தமனே! நான்காயிரம் குதிரைகள், இரண்டாயிரம் தேர்கள், நூறு யானைகள் ஆகியவையும் மற்றும் போகும் வழியில் தேவைப்படும் வஸ்துக்களை விற்பனை செய்யும் வியாபாரிகளும் உன்னுடன் வருவார்கள். அத்துடன் பொழுதுபோக்குக்காக நாட்டியமாடும் ஆண்–பெண் கலைஞர்களும் பின்தொடர்ந்து வருவார்கள். (2,3)

புருஷோத்தமனே! பத்து லட்சம் பொற்காசுகளை எடுத்துக் கொள். மற்றும் தேவையான பிற பொருள்களையும் வாகனங்களையும் உன்னுடன் கொண்டு செல்வாயாக. (4)

நம்முடைய படைவீரர்கள் நன்றாகப் போஷிக்கப்பட்டுள்ளார்கள். உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்தவர்கள். அவர்களுடன் இனிமையாகப் பேசியும், பொருள் கொடுத்தும் அவர்கள் எப்போதும் மனத்திருப்தியுடன் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். (5)

ந ஹ்யர்த$_2$ாஸ்தத்ர திஷ்ட$_2$ந்தி ந த$_3$ாரா ந ச ப$_3$ாந்த$_4$வா: ।
ஸுப்ரீதோ ப்$_4$ருத்யவர்க$_3$ஶ்ச யத்ர திஷ்ட$_2$தி ராக$_4$வ ॥ (6)

ததோ ஹ்ருஷ்டஜநாகீர்ணாம் ப்ரஸ்த$_2$ாப்ய மஹதீம் சமூம் ।
ஏக ஏவ த$_4$நுஷ்பாணிர்க$_3$ச்ச$_2$ த்வம் மது$_4$நோ வநம் ॥ (7)

யத$_2$ா த்வாம் ந ப்ரஜாநாதி க$_3$ச்ச$_2$ந்தம் யுத்$_3$த$_4$காங்க்ஷிணம் ।
லவணஸ்து மதே$_4$ா: புத்ரஸ்தத$_2$ா க$_3$ச்சே$_2$ரஶங்கிதம் ॥ (8)

ந தஸ்ய ம்ருத்யுரந்யோऽஸ்தி கஶ்சித்$_3$தி$_4$ புருஷர்ஷப$_4$ ।
த$_3$ர்ஶநம் யோऽபி$_4$க$_3$ச்சே$_2$த ஸ வத்$_4$யோ லவணேந ஹி ॥ (9)

ஸ க்$_3$ரீஷ்ம அபயாதே து வர்ஷராத்ர உபாக$_3$தே ।
ஹந்யாஸ்த்வம் லவணம் ஸௌம்ய ஸ ஹி காலோऽஸ்ய து$_3$ர்மதே: ॥ (10)

மஹர்ஷீம்ஸ்து புரஸ்க்ருத்ய ப்ரயாந்து தவ ஸைநிகா: ।
யத$_2$ா க்$_3$ரீஷ்மாவஶேஷேண தரேயுர்ஜாஹ்நவீஜலம் ॥ (11)

தத்ர ஸ்த$_2$ாப்ய ப$_3$லம் ஸர்வம் நதீ$_3$தீரே ஸமாஹித: ।
அக்$_3$ரதோ த$_4$நுஷா ஸார்த$_4$ம் க$_3$ச்ச$_2$ த்வம் லகு$_4$விக்ரம: ॥ (12)

ஏவமுக்தஸ்து ராமேண ஶத்ருக்$_4$நஸ்தாந் மஹாப$_3$லாந் ।
ஸேநாமுக்$_2$யாந் ஸமாநீய ததோ வாக்யமுவாச ஹ ॥ (13)

ஏதே வோ க$_3$ணிதா வாஸா யத்ர தத்ர நிவத்ஸ்யத$_2$ ।
ஸ்த$_2$ாதவ்யம் சாவிரோதே$_4$ந யத$_2$ா ப$_3$ாத$_4$ா ந கஸ்யசித் ॥ (14)

தத$_2$ா தாந்ஸ்து ஸமாக்ஞாப்ய ப்ரஸ்த$_2$ாப்ய ச மஹத்$_3$ப$_3$லம் ।
கௌஸல்யாம் ச ஸுமித்ராம் ச கைகேயீம் சாப்$_4$யவாத$_3$யத் ॥ (15)

ராமம் ப்ரத$_3$க்ஷிணீக்ருத்ய ஶிரஸாபி$_4$ப்ரணம்ய ச ।
ராமேண சாப்$_4$யநுக்ஞாத: ஶத்ருக்$_4$ந: ஶத்ருதாபந: ॥ (16)

லக்ஷ்மணம் ப$_4$ரதம் சைவ ப்ரணிபத்ய க்ருதாஞ்ஜலி: ।
புரோஹிதம் வஸிஷ்ட$_2$ம் ச ஶத்ருக்$_4$ந: ப்ரயதாத்மவாந் ॥
ப்ரத$_3$க்ஷிணமதே$_2$ா க்ருத்வா நிர்ஜக$_3$ாம மஹாப$_3$ல: ॥ (17)

ப்ரஸ்த$_2$ாப்ய ஸேநாமத$_2$ ஸோऽக்$_3$ரதஸ்தத$_3$ா
க$_3$ஜேந்த்$_3$ரவாஜிப்ரவரௌக$_4$ஸங்குலாம் ।
உவாஸ மாஸம் து நரேந்த்$_3$ரபார்ஶ்வதஸ்–
த்வத$_2$ ப்ரயாதோ ரகு$_4$வம்ஶவர்த$_4$ந: ॥ (18)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ சது:ஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

ரகுகுலத் தோன்றலே! நெருக்கடி ஏற்படும் காலத்தில், தலைவனை விட்டு விலகாமல் மனநிறைவுடன் துணைநிற்கும் ஏவலர்களுக்கு (படைவீரர்களுக்கு) இணையாக, பொருள்–மனைவி–உறவினர்கள் எவரையும் சொல்ல முடியாது. (ஆகவே, படைவீரர்களுக்கு அதிருப்தி ஏற்படாதவாறு நடந்து கொள்ள வேண்டும்.) (6)

நிறைந்த மனத்துடன் இருக்கும் இந்தப் பெரும்படையை முன்னதாக மதுவனத்திற்கு அனுப்பிவிட்டு, கையில் வில்லேந்திய தனியொருவனாக நீ பின்னால் செல்லவேண்டும். மதுவினுடைய புதல்வன் லவணனுக்கு, நீ போர்புரியும் விருப்பத்துடன் வருகிறாய் என்பது தெரியாதபடி செல்லவேண்டும். (7,8)

மாவீரனே! நான் சொல்லிய உபாயத்தைத் தவிர, அவன் மரணத்திற்கு வேறு வழியே இல்லை. கையில் சூலத்துடன் அவன் இருக்கும்போது அவனுடன் போரிட முயல்பவன் நிச்சயமாக லவணனால் கொல்லப்படுவான். (9)

தம்பி! கோடைக்காலம் முடிந்து, மாரிக்காலம் வந்தவுடன் நீ லவணனைக் கொல்வாய். ஏனென்றால், அவனைக் கொல்வதற்கு ஏற்ற காலம் அதுதான். (10)

உன்னுடைய படைவீரர்கள், முனிவர்களை முன்னிட்டுக் கொண்டு பயணத்தைத் தொடங்கட்டும். கோடைக்காலம் முடிவுக்கு வரும் வேளையில், அவர்கள் கங்கையைக் கடந்துவிடுவார்கள். (11)

கங்கைக் கரையில் படையை நிறுத்திவிட்டு, பேராற்றல் மிக்க நீ மட்டும், கையில் வில்லேந்தியவனாக முன்னே செல்வாயாக.'' (12)

இவ்வாறு இராமன் சொல்லி முடித்ததும், படைவீரர்களையும் படைத்தலைவர்களையும் அழைத்து, சத்ருக்னன் கூறினான்— (13)

''போகும் வழியில் படைவீரர்கள் தங்க வேண்டிய இடங்கள் நிச்சயிக்கப்பட்டுள்ளன. நீங்கள் அங்கேதான் தங்க வேண்டும். யாருக்கும் கஷ்டம் நேராத வகையில், மன எரிச்சல் கொள்ளாமல் தங்க வேண்டும்.'' (14)

பின்னர், அந்த மாபெரும் படைக்கு அனுமதி கொடுத்துப் புறப்படச் செய்துவிட்டு, கௌசல்யை–சுமித்திரை–கைகேயியிக்கு நமஸ்காரம் செய்தான், சத்ருக்னன். (15)

இராமனை வலம் வந்து தலைவணங்கி, அவரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு, எதிரிகளை வாட்டி வதைக்கும் சத்ருக்னன், இலக்குவனையும் பரதனையும் கைகூப்பி வணங்கினான். விநயமுடைய சத்ருக்னன், புரோகிதர் வசிஷ்டரை வலம் வந்து வணங்கிவிட்டு வெளியே புறப்பட்டுச் சென்றான். (16,17)

வீரம் மிகுந்த யானைகள்–குதிரைகளைக் கொண்ட மாபெரும் படையை முன்னதாக அனுப்பி வைத்த சத்ருக்னன், இராமனுடன்கூட ஒரு மாத காலம் இருந்துவிட்டுப் பின்னர் புறப்பட்டுச் சென்றான். (18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
அறுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

பஞ்சஷஷ்டிதம: ஸர்க$_3$:

கல்மாஷபாத$_3$ (ஸௌத$_3$ாஸ) கத$_2$ா

ப்ரஸ்த$_2$ாப்ய து ப$_3$லம் ஸர்வம் மாஸமாத்ரோஷித: பதி$_2$ ।
ஏக ஏவாஶு ஶத்ருக்$_4$னோ ஜக$_3$ாம த்வரிதம் தத$_3$ா ॥ (1)

த்$_3$விராத்ரமந்தரே ஶூர உஷ்ய ராக$_4$வநந்த$_3$ந: ।
வால்மீகேராஶ்ரமம் புண்யமக$_3$ச்ச$_2$த்$_3$வாஸமுத்தமம் ॥ (2)

ஸோऽபி$_4$வாத்$_3$ய மஹாத்மாநம் வால்மீகிம் முநிஸத்தமம் ।
க்ருதாஞ்ஜலிரதே$_2$ா பூ$_4$த்வா வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (3)

ப$_4$க$_3$வந் வஸ்துமிச்ச$_2$ாமி கு$_3$ரோ: க்ருத்யாதி$_3$ஹாக$_3$த: ।
ஶ்வ: ப்ரப$_4$ாதே க$_3$மிஷ்யாமி ப்ரதீசீம் வாருணீம் தி$_3$ஶம் ॥ (4)

ஶத்ருக்$_4$நஸ்ய வச: ஶ்ருத்வா ப்ரஹஸ்ய முநிபுங்க$_3$வ: ।
ப்ரத்யுவாச மஹாத்மாநம் ஸ்வாக$_3$தம் தே மஹாயஶ: ॥ (5)

ஸ்வமாஶ்ரமமித$_3$ம் ஸௌம்ய ராக$_4$வாணாம் குலஸ்ய ஹி ।
ஆஸநம் பாத்$_3$யமர்க்$_4$யம் ச நிர்விஶங்க: ப்ரதீச்ச$_2$ மே ॥ (6)

ப்ரதிக்$_3$ருஹ்ய தத$_3$ா பூஜாம் ப$_2$லமூலம் ச போ$_4$ஜநம் ।
ப$_4$க்ஷயாமாஸ காகுத்ஸ்த$_2$ஸ்த்ருப்திம் ச பரமாம் க$_3$த: ॥ (7)

ஸ பு$_4$க்த்வா ப$_2$லமூலம் ச மஹர்ஷிம் தமுவாச ஹ ।
பூர்வா யக்ஞவிபூ$_4$தீயம் கஸ்யாஶ்ரமஸமீபத: ॥ (8)

தத்தஸ்ய ப$_4$ாஷிதம் ஶ்ருத்வா வால்மீகீர்வாக்யமப்$_3$ரவீத் ।
ஶத்ருக்$_4$ந ஶ்ருணு யஸ்யேத$_3$ம் ப$_3$பூ$_4$வாயதநம் புரா ॥ (9)

யுஷ்மாகம் பூர்வகோ ராஜா ஸுத$_3$ாஸஸ்தஸ்ய பூ$_4$பதே: ।
புத்ரோ வீரஸஹோ நாம வீர்யவாநதித$_4$ார்மிக: ॥ (10)

ஸ ப$_3$ால ஏவ ஸௌத$_3$ாஸோ ம்ருக$_3$யாமுபசக்ரமே ।
சஞ்சூர்யமாணம் த$_3$த்$_3$ருஶே ஸ ஶூரோ ராக்ஷஸத்$_3$வயம் ॥ (11)

ஶார்தூ$_3$லரூபிணௌ கோ$_4$ரௌ ம்ருக$_3$ாந் ப$_3$ஹுஸஹஸ்ரஶ: ।
ப$_4$க்ஷமாணாவஸந்துஷ்டௌ பர்யாப்திம் நைவ ஜக்$_3$மது: ॥ (12)

ஸ து தௌ ராக்ஷஸௌ த்$_3$ருஷ்ட்வா நிர்ம்ருக$_3$ம் ச வநம் க்ருதம் ।
க்ரோதே$_4$ந மஹதாவிஷ்டோ ஜக$_4$ாநைகம் மஹேஷுணா ॥ (13)

விநிபாத்ய தமேகம் து ஸௌத$_3$ாஸ: புருஷர்ஷப$_4$: ।
விஜ்வரோ விக$_3$தாமர்ஷோ ஹதம் ரக்ஷோ ஹ்யுதை$_3$க்ஷத ॥ (14)

நிரீக்ஷமாணம் தம் த்$_3$ருஷ்ட்வா ஸஹாயம் தஸ்ய ரக்ஷஸ: ।
ஸந்தாபமகரோத்$_3$கோ$_4$ரம் ஸௌத$_3$ாஸம் சேத$_3$மப்$_3$ரவீத் ॥ (15)

Koviloor Digital Library

ஸர்க்கம் : அறுபத்தைந்து

கல்மாஷபாதன் வரலாறு

தன்னுடைய படையை முன்னதாகவே அனுப்பிவிட்டு, ஒரு மாத காலம் அயோத்தியில் தங்கியிருந்துவிட்டு, பின் தனியொருவனாக மதுவனம் நோக்கி வேகமாகச் சென்றான், சத்ருக்னன். (1)

ரகுகுலப் பெருந்தகையான சத்ருக்னன் வழியில் இரண்டு இரவுகளைக் கழித்துவிட்டு, மூன்றாவது நாளில் புனித வாசஸ்தலமான வால்மீகியின் ஆசிரமத்தை அடைந்தான். (2)

ஆத்மானந்தரும் சிறந்த மாமுனிவருமான வால்மீகியை வணங்கி, இரு கரங்களையும் கூப்பிக் கொண்டு பின்வருமாறு கூறினான்— ''ஐயனே! என்னுடைய தமையனாரின் உத்தரவை நிறைவேற்றுவதற்காகப் போய்க் கொண்டிருக்கிறேன். இன்றிரவு இங்கே தங்கிவிட்டு, நாளைய தினம் பொழுதுவிடிந்ததும் வருண பகவானின் திசையான மேற்கு நோக்கிச் செல்வேன்.'' (3,4)

சத்ருக்னனின் சொற்களைக் கேட்டு சற்றே புன்சிரிப்புடன் அவனைப் பார்த்து, ''உன் வரவு நல்வரவாகுக'' என்று கூறினார். ''செல்வனே! இந்த ஆசிரமம், ரகுகுலத்தினருக்குச் சொந்த வீடு போன்றதல்லவா! அதனால், கொஞ்சமும் தயங்காமல் ஆசனம், பாத்யம், அர்க்யம் முதலிய உபசாரங்களை ஏற்றுக்கொள்.'' (5,6)

பின்னர், முனிவர் அளித்த முறைப்படியான உபசாரங்களையும், கனி–கிழங்கு ஆகிய உணவையும் ஏற்று, காகுத்தனான சத்ருக்னன் மிகவும் திருப்தி அடைந்தான். (7)

கனி–கிழங்குகளைப் புசித்த பின்னர், மாமுனிவரைப் பார்த்து, ''முனிவரே! அருகிலேயே வேள்விகள் நடந்ததற்கான தடயங்கள் காணப்படுகின்றனவே? எந்த மன்னர் இங்கு வேள்விகளைச் செய்திருக்கிறார்?'' என்று சத்ருக்னன் கேட்டான். (8)

அவன் சொற்களைக் கேட்ட வால்மீகி, ''சத்ருக்னனே! முன்னர், இந்த இடம் யாருடைய இருப்பிடமாக இருந்தது என்பதைக் கேள்'' என்று சொன்னார். (9)

''உங்களுடைய முன்னோர்களில் சுதாஸன் என்ற பெயருடைய ஒருவர் இருந்தார். அவருடைய புதல்வனின் பெயர், வீரஸஹன். அவன் வீரம் மிக்கவனாகவும் மிகவும் அறச்செயல் புரிபவனாகவும் இருந்தான். (10)

சுதாஸனின் மைந்தன், சிறு பருவத்தில் வேட்டையாடுவதற்காகக் காட்டுக்குச் சென்றான். அங்கே இரண்டு அரக்கர்கள் சுற்றித் திரிந்து கொண்டிருப்பதைக் கண்டான். (11)

(அந்த அரக்கர்கள்) பயங்கரமான புலியின் உருவத்தை ஏற்று, ஆயிரக்கணக்கான விலங்குகளைப் பிடித்துப் புசித்த பின்னரும் பசி அடங்காததால் மனம் திருப்தியடையாமல் இருந்தார்கள். (12)

காட்டில் விலங்குகளே இல்லாமல் செய்துவிட்ட அவர்களைக் கண்ட சுதாஸனின் புதல்வன் மிகவும் கோபங்கொண்டு, வலிமைமிக்க ஓர் அம்பினால் அவ்விருவரில் ஒருவனைக் கொன்றான். (13)

புருஷோத்தமனான வீரஸஹன், அரக்கரில் ஒருவனை வீழ்த்திவிட்டு மனக்கலக்கம் நீங்கி, கோபம் அடங்கி வீழ்ந்து கிடந்த அரக்கனைப் பார்த்தான். (14)

மாய்க்கப்பட்ட அரக்கனின் தோழன், இறந்து கிடந்த தன் நண்பனின் சடலத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த சுதாஸ மைந்தனிடம் பயங்கரமாக கோபம் கொண்டு (பின்வருமாறு) கூறினான்— (15)

Koviloor Digital Library

யஸ்மாத$_3$நபராத$_4$ம் த்வம் ஸஹாயம் மம ஜக்$_4$நிவாந் ।
தஸ்மாத்தவாபி பாபிஷ்ட$_2$ ப்ரத$_3$ாஸ்யாமி ப்ரதிக்ரியாம் ॥ (16)

ஏவமுக்த்வா து தத்$_3$ரக்ஷஸ்தத்ரைவாந்தரதீ$_4$யத ।
காலபர்யாயயோகே$_3$ந ராஜா மித்ரஸஹோऽப$_4$வத் ॥ (17)

ராஜா து யஜதே யக்ஞமஸ்யாஶ்ரமஸமீபத: ।
அஶ்வமேத$_4$ம் மஹாயக்ஞம் தம் வஸிஷ்டோ$_2$ऽப்$_4$யபாலயத் ॥ (18)

தத்ர யக்ஞோ மஹாநாஸீத்$_3$ப$_3$ஹுவர்ஷக$_3$ணாயுத: ।
ஸம்ருத்$_3$த$_4$: பரயா லக்ஷ்ம்யா தே$_3$வயக்ஞஸமோऽப$_4$வத் ॥ (19)

அத$_2$ாவஸாநே யக்ஞஸ்ய பூர்வவைரமநுஸ்மரந் ।
வஸிஷ்ட$_2$ரூபீ ராஜாநமிதி ஹோவாச ராக்ஷஸ: ॥ (20)

அஸ்ய யக்ஞஸ்ய ஜாதோऽந்த: ஸாமிஷம் போ$_4$ஜநம் மம ।
தீ$_3$யதாமிஹ ஶீக்$_4$ரம் வை நாத்ர கார்யா விசாரணா ॥ (21)

தச்ச்$_2$ருத்வா வ்யாஹ்ருதம் வாக்யம் ரக்ஷஸா ப்$_3$ரஹ்மரூபிணா ।
ப$_4$க்ஷ்யஸம்ஸ்காரகுஶலமுவாச ப்ருதி$_2$வீபதி: ॥ (22)

ஹவிஷ்யம் ஸாமிஷம் ஸ்வாது$_3$ யத$_2$ா ப$_4$வதி போ$_4$ஜநம் ।
தத$_2$ா குருஷ்வ ஶீக்$_4$ரம் வை பரிதுஷ்யேத்$_3$யத$_2$ா கு$_3$ரு: ॥ (23)

ஶாஸநாத் பார்தி$_2$வேந்த்$_3$ரஸ்ய ஸூத$_3$: ஸம்ப்$_4$ராந்தமாநஸ: ।
ஸ ராக்ஷஸ: புநஸ்தத்ர ஸூத$_3$வேஷமத$_2$ாகரோத் ॥ (24)

ஸ மாநுஷமதே$_2$ா மாம்ஸம் பார்தி$_2$வாய ந்யவேத$_3$யத் ।
இத$_3$ம் ஸ்வாது$_3$ ஹவிஷ்யம் ச ஸாமிஷம் சாந்நமாஹ்ருதம் ॥ (25)

ஸ போ$_4$ஜநம் வஸிஷ்ட$_2$ாய பத்ந்யா ஸார்த$_4$முபாஹரத் ।
மத$_3$யந்த்யா நரவ்யாக்$_4$ர ஸாமிஷம் ரக்ஷஸாஹ்ருதம் ॥ (26)

க்ஞாத்வா தத$_3$ாமிஷம் விப்ரோ மாநுஷம் ப$_4$ாஜநம் க$_3$தம் ।
க்ரோதே$_4$ந மஹதாவிஷ்டோ வ்யாஹர்துமுபசக்ரமே ॥ (27)

யஸ்மாத்த்வம் போ$_4$ஜநம் ராஜந் மமைதத்$_3$த$_3$ாதுமிச்ச$_2$ஸி ।
தஸ்மாத்$_3$போ$_4$ஜநமேதத்தே ப$_4$விஷ்யதி ந ஸம்ஶய: ॥ (28)

தத: க்ருத்$_3$த$_4$ஸ்து ஸௌத$_3$ாஸஸ்தோயம் ஜக்$_3$ராஹ பாணிநா ।
வஸிஷ்ட$_2$ம் ஶப்துமாரேபே$_4$ ப$_4$ார்யா சைநமவாரயத் ॥ (29)

ராஜந் ப்ரபு$_4$ர்யதோऽஸ்மாகம் வஸிஷ்டோ$_2$ ப$_4$க$_3$வாந்ருஷி: ।
ப்ரதிஶப்தும் ந ஶக்தஸ்த்வம் தே$_3$வதுல்யம் புரோத$_4$ஸம் ॥ (30)

தத: க்ரோத$_4$மயம் தோயம் தேஜோப$_3$லஸமந்விதம் ।
வ்யஸர்ஜயத த$_4$ர்மாத்மா தத: பாதௌ$_3$ ஸிஷேச ச ॥ (31)

Koviloor Digital Library

'மகாபாவியே! எந்தக் குற்றமும் செய்யாத என் நண்பனைக் கொன்றுவிட்டாய். அதற்காக, நான் உன்னைப் பழிதீர்த்துக் கொள்வேன்.' (16)

இவ்வாறு கூறிவிட்டு, அந்த அரக்கன் அப்போதே மறைந்து போனான். வெகுகாலத்திற்குப் பின், மித்ரஸஹன் அரசபதவியை அடைந்தான். (17)

இந்த ஆசிரமத்தின் அருகில் மன்னன் (மித்ரஸஹன்) வேள்விகளைச் செய்து வந்தான். ஒரு சமயம், வசிஷ்டர் தலைமையில் அசுவமேத யாகம் செய்தான். (18)

அந்த வேள்வி, மிகப் பல ஆண்டுக்காலம் நடைபெற்றது. தேவர்கள் வேள்வி செய்வதைப் போல மிகக் கோலாகலமாகவும் செல்வச் செழிப்புடனும் நடைபெற்றது. (19)

(உயிர் தப்பி தன்னை மறைத்துக் கொண்ட) அரக்கன், பழைய விரோதத்தை நினைவில் கொண்டு, வேள்வி நிறைவடையும் வேளையில் வசிஷ்டரைப் போல் உருவம் ஏற்று மன்னனிடம் வந்து (பின்வருமாறு) கூறினான்— (20)

'மன்னனே! இப்போது இந்த வேள்வி நிறைவடையப் போகிறது. எனக்குப் புலாலுணவை உடனே அளிப்பாயாக. (இது சரியா, தவறா என்பது பற்றி) ஆலோசனை செய்யத் தேவையில்லை.' (21)

அந்தண வடிவிலிருந்த அரக்கனின் சொற்களைக் கேட்ட மன்னன், கைதேர்ந்த சமையற்கலைஞர்களிடம் சொன்னான்— (22)

'சுவை மிகுந்த புலால் உணவை உடனே பக்குவம் செய்யுங்கள். ருசியான அந்த உணவைப் புசித்து, என் ஆசார்யர் மனம் மகிழவேண்டும்.' (23)

மன்னனுடைய கட்டளையைக் கேட்டு சமையற்காரர்கள் மிகவும் குழம்பிப் போனார்கள். (வசிஷ்டரைப் போன்ற உத்தம அந்தணர், எவ்வாறு புலால் உணவை அங்கீகரிப்பார்? என்று கலங்கினார்கள்.) அந்த அரக்கன், தானே சமையற்காரனாகவும் உருமாற்றம் செய்து கொண்டான். (24)

அவன், மனித மாமிசம் கலந்த உணவை எடுத்து வந்து, மன்னரிடம் தெரிவித்தான். 'சுவையான புலால் உணவு கொண்டு வந்திருக்கிறேன்.' (25)

மன்னனே! (சத்ருக்னனே!) மனைவியான மதயந்தியுடன் வந்த மன்னன், அரக்கன் கொண்டு வந்த புலாலுணவை வசிஷ்டர் எதிரில் வைத்தான். (26)

தட்டில், மனித மாமிசம் கலந்த உணவு வைக்கப்பட்டிருப்பதை உணர்ந்து கொண்ட அந்தணர், அளவுகடந்த கோபத்துடன் சொல்லத் தொடங்கினார்— (27)

'மன்னனே! இந்த உணவை நான் உண்பதற்காகக் கொடுத்திருக்கிறாய், அல்லவா? (அதனால்,) இதுவே உன் உணவாகப் போகிறது. (மனிதரை அடித்துத் தின்னும் அரக்கனாகப் போகக் கடவாய்.) இது நிச்சயம்.' (28)

அப்போது கோபம் கொண்ட ஸௌதாஸன், (வசிஷ்டரைச் சபிப்பதற்காகக்) கையில் தண்ணீர் எடுத்துக் கொண்டான். உடனே, அவன் மனைவி அவனைத் தடுத்தாள். (29)

'மன்னரே! வசிஷ்ட பகவான், மாமுனிவர்; நம்மடைய ஆசார்யர்; தேவதைகளுக்கு நிகரான புரோகிதர். தங்களால் அவருக்கு எதிர்ச்சாபம் அளிக்க முடியாது.' (30)

பின்னர், சினத்தின் காரணமாகக் கையில் ஏந்தப்பட்டதும், ஆன்மபலம் நிறைந்ததுமான, அந்த நீரைத் தரையில் கொட்டி, கால்களை நனைத்தான். (31)

Koviloor Digital Library

தேநாஸ்ய ராக்ஞஸ்தௌ பாதௌ$_3$ தத$_3$ா கல்மாஷதாம் க$_3$தௌ ।
தத$_3$ாப்ரப்$_4$ருதி ராஜாஸௌ ஸௌத$_3$ாஸ: ஸுமஹாயஶா: ॥
கல்மாஷபாத$_3$: ஸம்வ்ருத்த: க்$_2$யாதஶ்சைவ தத$_2$ா ந்ருப: ॥ (32)

ஸ ராஜா ஸஹ பத்ந்யா வை ப்ரணிபத்ய முஹுர்முஹு: ।
புநர்வஸிஷ்ட$_2$ம் ப்ரோவாச யது$_3$க்தம் ப்$_3$ரஹ்மரூபிணா ॥ (33)

தச்ச்$_2$ருத்வா பார்தி$_2$வேந்த்$_3$ரஸ்ய ரக்ஷஸாதி$_4$க்ருதம் ச தத் ।
புந: ப்ரோவாச ராஜாநம் வஸிஷ்ட$_2$: புருஷர்ஷப$_4$ம் ॥ (34)

மயா ரோஷபரீதேந யதி$_3$த$_3$ம் வ்யாஹ்ருதம் வச: ।
நைதச்ச$_2$க்யம் வ்ருத$_2$ா கர்தும் ப்ரத$_3$ாஸ்யாமி ச தே வரம் ॥ (35)

காலோ த்$_3$வாத$_3$ஶவர்ஷாணி ஶாபஸ்யாந்தோ ப$_4$விஷ்யதி ।
மத்ப்ரஸாத$_3$ாச்ச ராஜேந்த்$_3$ர வ்யதீதம் ந ஸ்மரிஷ்யஸி ॥ (36)

ஏவம் ஸ ராஜா தம் ஶாபமுபபு$_4$ஜ்யாரிஸூத$_3$ந: ।
ப்ரதிலேபே$_4$ புநா ராஜ்யம் ப்ரஜாஶ்சைவாந்வபாலயத் ॥ (37)

தஸ்ய கல்மாஷபாத$_3$ஸ்ய யக்ஞஸ்யாயதநம் ஶுப$_4$ம் ।
ஆஶ்ரமஸ்ய ஸமீபேऽஸ்ய யந்மாம் ப்ருச்ச$_2$ஸி ராக$_4$வ ॥ (38)

தஸ்ய தாம் பார்தி$_2$வேந்த்$_3$ரஸ்ய கத$_2$ாம் ஶ்ருத்வா ஸுத$_3$ாருணாம் ।
விவேஶ பர்ணஶாலாயாம் மஹர்ஷிமபி$_4$வாத்$_3$ய ச ॥ (39)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ பஞ்சஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

ஷட்ஷஷ்டிதம: ஸர்க$_3$:

குஶலவஜநநம்

யாமேவ ராத்ரிம் ஶத்ருக்$_4$ந: பர்ணஶாலாமுபாவிஶத் ।
தாமேவ ராத்ரிம் ஸீதாபி ப்ரஸூதா த$_3$ாரகத்$_3$வயம் ॥ (1)

ததோऽர்த$_4$ராத்ரஸமயே ப$_3$ாலகா முநித$_3$ாரகா: ।
வால்மீகே: ப்ரியமாசக்$_2$யு: ஸீதாயா: ப்ரஸவம் ஶுப$_4$ம் ॥ (2)

ப$_4$க$_3$வந் ராமபத்நீ ஸா ப்ரஸூதா த$_3$ாரகத்$_3$வயம் ।
ததோ ரக்ஷாம் மஹாதேஜ: குரு பூ$_4$தவிநாஶிநீம் ॥ (3)

தேஷாம் தத்$_3$வசநம் ஶ்ருத்வா மஹர்ஷி: ஸமுபாக$_3$மத் ।
ப$_3$ாலசந்த்$_3$ரப்ரதீகாஶௌ தே$_3$வபுத்ரௌ மஹௌஜஸௌ ॥ (4)

ஜக$_3$ாம தத்ர ஹ்ருஷ்டாத்மா த$_3$த$_3$ர்ஶ ச குமாரகௌ ।
பூ$_4$தக்$_4$நீம் சாகரோத்தாப்$_4$யாம் ரக்ஷாம் ரக்ஷோவிநாஶிநீம் ॥ (5)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_24_Back

Koviloor Digital Library

அதனால், அந்த மன்னனுடைய கால்கள் நிறம் மாறி (வெண்மையும் கருமையும் கலந்து)விட்டன. பெரும்புகழ் பெற்ற ஸௌதாஸன், அது முதற்கொண்டு 'கல்மாஷபாதன்' (வண்ணக் கலவையான பாதங்கள் உடையவன்) என்றே அழைக்கப்பட்டான். (32)

மன்னன், மனைவியுடன் அவர் பாதங்களில் பல தடவை விழுந்து வணங்கி, அந்தண வடிவத்தில் வந்தவனால் சொல்லப்பட்டதை வசிஷ்டரிடம் தெரிவித்தான். (33)

அரக்கனால் அவ்வாறு செய்யப்பட்டதைக் கேட்டறிந்த வசிஷ்டர், ஆண்மைமிகு காளை போன்ற மன்னரிடம் கூறினார்— (34)

'கோபத்துடன் நான் சொன்ன வார்த்தைகள் வீணாக்கப்பட முடியாதவை. (ஆனால், அதற்கு மாற்றாக) ஒரு வரம் தருகிறேன். (35)

அரசனே! இந்த சாபம், பன்னிரண்டு ஆண்டுக் காலத்துடன் முடிவுக்கு வரும். அத்துடன், என் அருளால், இப்போது நடந்துள்ள இந்த நிகழ்ச்சிகள் உன் நினைவில் தங்கமாட்டா.' (36)

இவ்வாறு, அந்த மன்னன், சாபத்தின் விளைவை அனுபவித்துவிட்டு, பின்னர், ராஜ்யத்தை அடைந்து குடிமக்களைக் காப்பாற்றி வந்தான். (37)

சத்ருக்னா! அந்தக் கல்மாஷபாதனுடைய மங்களமான வேள்விச்சாலை, இந்த ஆசிரமத்தின் அருகில்தான் இருந்தது?'' (38)

பெருமை வாய்ந்த மாமன்னரின் உடலை உறைய வைக்கும் கதையைக் கேட்டுவிட்டு, மாமுனிவரை வணங்கியபின், சத்ருக்னன் குடிலுக்குள் நுழைந்தான். (39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
அறுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தாறு

குச–லவர்கள் பிறப்பு

பர்ணசாலைக்குள் சத்ருக்னன் நுழைந்த அன்றிரவே, சீதை இரண்டு ஆண்மகவுகளைப் பெற்றாள். (1)

நள்ளிரவு வேளையில், முனி குமாரர்கள் அவரிடம் வந்து, கஷ்டமில்லாமல் சீதைக்குப் புத்திரப்பேறு உண்டாகியிருக்கும் நற்செய்தியைத் தெரிவித்தார்கள். (2)

''ஐயனே! இராமசந்திரமூர்த்தியின் மனைவி (சீதா) இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்திருக்கிறார். அந்தக் குழந்தைகளுக்கு, துர்தேவதைகளின் பாதிப்பு ஏற்படாமலிருக்கப் பாதுகாப்புச் சடங்குகளைச் செய்யுங்கள்.'' (3)

அவர்கள் கூறியதைக் கேட்ட முனிவர், சீதை இருந்த இடத்திற்குச் சென்று பார்த்தார். இரண்டு குழந்தைகளும் இளம் நிலவைப் போல் தண்ணொளி வீசுபவர்களாகவும், தேவகுமாரர்கள் போல திவ்விய ஒளி படைத்தவர்களாகவும் விளங்குவதைக் கண்டார். (4)

மனமகிழ்ச்சியுடன் அவ்விடம் சென்ற அவர், தீய சக்திகளிடமிருந்தும் அரக்கர்களிடமிருந்தும் துன்பம் நேராதபடி, அக்குழந்தைகளுக்கு உரிய மந்திரங்களால் பாதுகாப்புச் செய்தார். (5)

Koviloor Digital Library

குஶமுஷ்டிமுபாத$_3$ாய லவம் சைவ து ஸ த்$_3$விஜ: ।
வால்மீகி: ப்ரத$_3$தெ$_3$ள தாப்$_4$யாம் ரக்ஷாம் பூ$_4$தவிநாஶிநீம் ॥ (6)

யஸ்தயோ: பூர்வஜோ ஜாத: ஸ குஶைர்மந்த்ரஸத்க்ருதை: ।
நிர்மார்ஜநீயஸ்து தத$_3$ா குஶ இத்யஸ்ய நாம தத் ॥ (7)

யஶ்சாபரோ ப$_4$வேத்தாப்$_4$யாம் லவேந ஸ ஸமாஹித: ।
நிர்மார்ஜநீயோ வ்ருத்$_3$த$_4$ாபி$_4$ர்லவ இத்யேவ நாமத: ॥ (8)

ஏவம் குஶலவௌ நாம்நா தாவுபெ$_4$ள யமஜாதகெள ।
மத்க்ருதாப்$_4$யாம் ச நாமப்$_4$யாம் க்$_2$யாதியுக்தௌ ப$_4$விஷ்யத: ॥ (9)

தாம் ரக்ஷாம் ஜக்$_3$ருஹுஸ்தாஶ்ச முநிஹஸ்தாத் ஸமாஹிதா: ।
அகுர்வம்ஶ்ச ததோ ரக்ஷாம் தயோர்விக$_3$தகல்மஷா: ॥ (10)

தத$_2$ா தாம் க்ரியமாணாம் ச வ்ருத்$_3$த$_4$ாபி$_4$ர்கோ$_3$த்ரநாம ச ।
ஸங்கீர்தநம் ச ராமஸ்ய ஸீதாயா: ப்ரஸவௌ ஶுபெ$_4$ள ॥ (11)

அர்த$_4$ராத்ரே து ஶத்ருக்$_4$ந: ஶுஶ்ராவ ஸுமஹத் ப்ரியம் ।
பர்ணஶாலாம் ததோ க$_3$த்வா மாதர்தி$_3$ஷ்ட்யேதி சாப்$_3$ரவீத் ॥ (12)

தத$_2$ா தஸ்ய ப்ரஹ்ருஷ்டஸ்ய ஶத்ருக்$_4$நஸ்ய மஹாத்மந: ।
வ்யதீதா வார்ஷிகீ ராத்ரி: ஶ்ராவணீ லகு$_4$விக்ரமா ॥ (13)

ப்ரப$_4$ாதே ஸுமஹாவீர்ய: க்ருத்வா பௌர்வாஹ்ணிகீம் க்ரியாம் ।
முநிம் ப்ராஞ்ஜலிராமந்த்ர்ய யயௌ பஶ்சாந்முக$_2$: புந: ॥ (14)

ஸ க$_3$த்வா யமுநாதீரம் ஸப்தராத்ரோஷித: பதி$_2$ ।
ருஷீணாம் புண்யகீர்தீநாமாஶ்ரமே வாஸமப்$_4$யயாத் ॥ (15)

ஸ தத்ர முநிபி$_4$: ஸார்த$_4$ம் ப$_4$ார்க$_3$வப்ரமுகை$_2$ர்நருப: ।
கத$_2$ாபி$_4$ரபி$_4$ரூபாபி$_4$ர்வாஸம் சக்ரே மஹாயஶா: ॥ (16)

ஸ காஞ்சநாத்$_3$யைர்முநிபி$_4$: ஸமேதோ ரகு$_4$ப்ரவீரோ ரஜநீம் தத$_3$ாநீம் ।
கத$_2$ாப்ரகாரைர்ப$_3$ஹுபி$_4$ர்மஹாத்மா விராமயாமாஸ நரேந்த்$_3$ரஸூநு: ॥ (17)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஷட்ஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

ஸப்தஷஷ்டிதம: ஸர்க$_3$:

மாந்த$_4$ாத்ருவத$_4$:

அத$_2$ ராத்ர்யாம் ப்ரவ்ருத்தாயாம் ஶத்ருக்$_4$நோ ப்$_4$ருகு$_3$நந்த$_3$நம் ।
பப்ரச்ச$_2$ ச்யவநம் விப்ரம் லவணஸ்ய யத$_2$ா ப$_3$லம் ॥ (1)

ஶூலஸ்ய ச ப$_3$லம் ப்$_3$ரஹ்மந் கே ச பூர்வம் விநாஶிதா: ।
அநேந ஶூலமுக்$_2$யேந த்$_3$வந்த்$_3$வயுத்$_3$த$_4$முபாக$_3$தா: ॥ (2)

Koviloor Digital Library

வால்மீகி முனிவர், தீய சக்திகளை நெருங்கவிடாமல் தடுக்கும் சக்தி படைத்த, குசம், லவம் என்கிற புற்களைக் கொண்டுவந்து, ஒரு கைப்பிடி அளவு அவர்கள் (குழந்தைகள்) பாதுகாப்புக்காகக் கொடுத்தார். (6)

''மூத்தவனாகப் பிறந்தவனுக்கு மந்திரங்களால் சக்தி ஊட்டப்பட்ட குசங்களால் தடவிக் கொடுக்கப்பட்டு சுத்திகர்மாவும், பின்னர் இளையவனாகப் பிறந்தவனுக்கு லவத்தினால் சுத்திகர்மாவும் வயோதிக மாதர்களால் செய்யப்படவேண்டும். இவ்வாறு, குச–லவத்தினால் தூய்மை செய்விக்கப்படுகிற அவர்கள், அந்தந்தப் பெயரையே பெறுவார்கள். (7,8)

இரட்டையாகப் பிறந்த இவர்கள், குசன்–லவன் என்று என்னால் இடப்பட்ட பெயர்களால் பெருங்கீர்த்தியை அடையப் போகிறார்கள்.'' (9)

பாவங்கள் நீங்கிய பரிசுத்தர்களான வயோதிக மாதரசிகள், முனிவர் கையிலிருந்து குச–லவத்தைப் பெற்றுக் கொண்டு, குழந்தைகளுக்கு அவர் கூறியவண்ணமே பாதுகாப்புச் சடங்குகளைச் செய்தார்கள். (10)

உடல் ரட்சைக்கான சடங்குகளைச் செய்யும்போது, இராம–சீதைகளின் பெயர்களையும் கோத்திரத்தையும் உச்சரித்தார்கள். அந்த நடுநிசியில், செவிக்கினிய சொற்களைக் கேட்ட சத்ருக்னன், குழந்தைப்பேறு நிகழ்ந்திருந்த குடிலுக்குள் சென்று, (சீதையைப் பார்த்து) ''அன்னையே! இது மிகவும் மகத்தான பேறு!'' என்று கூறினான். (11,12)

இவ்வாறு, மகாத்மாவான சத்ருக்னன் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்துக் கொண்டிருக்கும்போதே, மாரிக்கால அந்த இரவு கழிந்தது. (13)

எல்லையற்ற ஆற்றலுடைய அவன், பொழுது விடிந்ததும் காலை வேளைக்குரிய வைதிகச் சடங்குகளை முடித்துக் கொண்டு, முனிவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, மேற்கு நோக்கிப் பயணத்தைத் தொடங்கினான். (14)

போகும் வழியில் ஏழு இரவுகளைக் கழித்துவிட்டு, யமுனைக் கரையை அடைந்து, நற்புகழ் கொண்ட முனிவர்களின் ஆசிரமத்தில் வசிக்கத் தொடங்கினான். (15)

பெரும்புகழ் கொண்ட மன்னன் சத்ருக்னன், சியவனர் முதலான முனிவர்களுடன் இனிமையான நல்ல கதைகளைப் பேசிக்கொண்டு வசித்து வந்தான். (16)

இவ்வாறாக, சியவனர் முதலான முனிவர்களுடன் ரகுகுல வீரன், தசரதன் மைந்தன், மகாத்மா சத்ருக்னன் இரவு வேளைகளை, முனிவர்கள் கூறும் புண்ணியக் கதைகளைக் கேட்டுக் கொண்டு நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தான். (17)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
அறுபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தேழு

மன்னன் மாந்தாதா வதம்

ஒரு நாள் இரவு வேளையில், பிருகு முனிவரின் புதல்வரான சியவனரைப் பார்த்து, ''மறைநெறியாளரே! லவணனுடைய ஆற்றல் எவ்வளவு? அவனிடமுள்ள சூலத்தினால், இதுவரை எவ்வளவு பேர்கள் அழிக்கப்பட்டிருக்கிறார்கள்? சக்தி மிகுந்த அந்தச் சூலாயுதத்துடன், எவ்வளவு பேர் துவந்துவ யுத்தம் செய்துள்ளார்கள்?'' என்று சத்ருக்னன் கேட்டான். (1,2)

Koviloor Digital Library

தஸ்ய தத்3வசநம் ஶ்ருத்வா ஶத்ருக்4நஸ்ய மஹாத்மந: ।
ப்ரத்யுவாச மஹாதேஜாஶ்ச்2யவநோ ரகு4நந்த3நம் ॥ (3)

அஸங்க்2யேயாநி கர்மாணி யாந்யஸ்ய ரகு4நந்த3ந ।
இக்ஷ்வாகுவம்ஶப்ரப4வே யத்3வ்ருத்தம் தச்ச்2ருணுஷ்வ மே ॥ (4)

அயோத்4யாயாம் புரா ராஜா யுவநாஶ்வஸுதோ ப3லீ ।
மாந்த4ாதேதி ஸ விக்2யாதஸ்த்ரிஷு லோகேஷு வீர்யவாந் ॥ (5)

ஸ க்ருத்வா ப்ருதி2வீம் க்ருத்ஸ்நாம் ஶாஸநே ப்ருதி2வீபதி: ।
ஸுரலோகமிதோ ஜேதுமுத்3யோக3மகரோந்ந்ருப: ॥ (6)

இந்த்3ரஸ்ய ச ப4யம் தீவ்ரம் ஸுராணாம் ச மஹாத்மநாம் ।
மாந்த4ாதரி க்ருதோத்3யோகே3 தே3வலோகஜிகீ3ஷயா ॥ (7)

அர்த4ாஸநேந ஶக்ரஸ்ய ராஜ்யார்தே4ந ச பார்தி2வ: ।
வந்த்3யமாந: ஸுரக3ணை: ப்ரதிஜ்ஞாமத்4யரோஹத ॥ (8)

தஸ்ய பாபமபி4ப்ராயம் விதி3த்வா பாகஶாஸந: ।
ஸாந்த்வபூர்வமித3ம் வாக்யமுவாச யுவநாஶ்வஜம் ॥ (9)

ராஜா த்வம் மாநுஷே லோகே ந தாவத் புருஷர்ஷப4 ।
அக்ருத்வா ப்ருதி2வீம் வஶ்யாம் தே3வராஜ்யமிஹேச்ச2ஸி ॥ (10)

யதி3 வீர ஸமக்3ரா தே மேதி3நீ நிகி2லா வஶே ।
தே3வராஜ்யம் குருஷ்வேஹ ஸப்4ருத்யப3லவாஹந: ॥ (11)

இந்த்3ரமேவம் ப்3ருவாணம் தம் மாந்த4ாதா வாக்யமப்3ரவீத் ।
க்வ மே ஶக்ர ப்ரதிஹதம் ஶாஸநம் ப்ருதி2வீதலே ॥ (12)

தமுவாச ஸஹஸ்ராக்ஷோ லவணோ நாம ராக்ஷஸ: ।
மது4புத்ரோ மது4வநே நாஜ்ஞாம் தே குருதேऽநக4 ॥ (13)

தச்ச்2ருத்வா விப்ரியம் கோ4ரம் ஸஹஸ்ராக்ஷேண பா4ஷிதம் ।
வ்ரீடி3தோऽவாங்முகோ2 ராஜா வ்யாஹர்தும் ந ஶஶாக ஹ ॥ (14)

ஆமந்த்ர்ய து ஸஹஸ்ராக்ஷம் ஹ்ரியா கிஞ்சித3வாங்முக2: ।
புநரேவாக3மச்ச்2ரீமாநிமம் லோகம் நரேஶ்வர: ॥ (15)

ஸ க்ருத்வா ஹ்ருத3யேऽமர்ஷம் ஸப்4ருத்யப3லவாஹந: ।
ஆஜகா3ம மதே4ா: புத்ரம் வஶே கர்துமரிந்த3ம: ॥ (16)

ஸ காங்க்ஷமாணோ லவணம் யுத்3த4ாய புருஷர்ஷப4: ।
தூ3தம் ஸம்ப்ரேஷயாமாஸ ஸகாஶம் லவணஸ்ய ஹி ॥ (17)

ஸ க3த்வா விப்ரியாண்யாஹ ப3ஹூநி மது4ந: ஸுதம் ।
வத3ந்தமேவம் தம் தூ3தம் ப4க்ஷயாமாஸ ராக்ஷஸ: ॥ (18)

Koviloor Digital Library

மகாத்மாவும் ரகுகுலத்தை மகிழ்விப்பவனுமான சத்ருக்னனின் சொற்களைக் கேட்டதும், மகாதேஜஸ்வியான சியவனர் பதில் கூறினார்— (3)

''ரகுநந்தனா! லவணாசுரனின் செயல்கள் கணக்கிலடங்காதவை. என்றாலும், இக்ஷ்வாகு குலத்தில் தோன்றிய ஒரு மன்னன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியைக் கூறுகிறேன், கேள். (4)

அயோத்தியில், பேராற்றல் பொருந்திய யுவநாச்வன் என்ற மன்னன் இருந்தான். அவனுடைய புதல்வன், மூன்று உலகிலும் புகழ் பெற்ற மாவீரன் மாந்தாதா என்பவன் ஆட்சி புரிந்து கொண்டிருந்தான். (5)

மண்ணுலகையே ஆண்டு வந்த அவன், தேவலோகத்தை வெல்லும் பொருட்டு, அதற்கான முயற்சியில் ஈடுபட்டான். (6)

தேவலோகத்தை வெற்றி கொள்வதற்காக மாந்தாதா செய்துவரும் ஏற்பாடுகளைக் கண்டு, பெருவீரர்களான தேவர்களுக்கும் இந்திரனுக்கும் மிகவும் பயம் உண்டாயிற்று. (7)

'இந்திரனுடைய சிம்மாசனத்தில் பாதியையும், அவனுடைய ராஜ்யத்தில் பாதியையும் வென்று, தேவர்களை என் துதி பாடவைப்பேன்!' என்று சூளுரைத்துவிட்டு, தேவலோகம் சென்றான், மாந்தாதா. (8)

அவனுடைய தீய எண்ணத்தைப் புரிந்து கொண்ட இந்திரன், யுவநாச்வனுடைய புதல்வனான மாந்தாதாவிடம் சமாதானமாகப் பேசினான்— (9)

'புருஷோத்தமனே! பூமண்டலம் முழுவதற்கும்கூட நீ மன்னனாக ஆட்சி புரியவில்லை. அப்படியிருக்கும்போது (பூமண்டலத்தைக்கூட உன் வசத்திற்குள் கொண்டு வராதபோது) தேவலோகத்தை ஆள விரும்புவது எப்படிப் பொருந்தும்? (10)

வீரனே! மண்ணுலகம் முழுவதையும் உன் ஆட்சியின்கீழ் கொண்டுவந்து விட்டு, பின்னர், ஏவலாளர்–படை–வாகனங்களுடன் வந்து தேவராஜ்யத்தில் ஆட்சி புரிவாய்.' (11)

இந்திரன் இவ்வாறு கூறியவுடன், 'தேவேந்திரனே! மண்ணுலகில் என்னுடைய ஆணை மதிக்கப்படாத இடத்தைக் கூறுவாய்' என்றான், மாந்தாதா. (12)

ஆயிரம் கண்படைத்த இந்திரன் பதில் கூறினான்— 'மதுவினுடைய மைந்தனான லவணன் வாழ்ந்து கொண்டிருக்கும் மதுவனத்தில் உன் ஆணை செல்லுபடியாவதில்லை!' (13)

கேட்கப் பொறுக்காத, பயங்கரமான செய்தியை இந்திரன் கூறக்கேட்ட மாந்தாதா மனம் புண்பட்டு, தலைகுனிந்து, எதுவும் பேச முடியாமல் நின்றான். (14)

வெட்கத்தினால் தலைகுனிந்து, இந்திரனிடம் விடைபெற்றுக் கொண்டு, மீண்டும் இவ்வுலகத்திற்கே வந்து சேர்ந்தான், மன்னன் மாந்தாதா. (15)

பொறுக்க முடியாத பொறாமையால் இதயத்தை நிரப்பிக் கொண்டு, பணியாளர்–படைகள்–வாகனங்களுடன், மதுவின் புதல்வனைத் தோற்கடிப்பதற்காக, எதிரியை அடக்கும் வீரனான மாந்தாதா வந்து சேர்ந்தான். (16)

மாவீரனான அவன், லவணனுடன் போர் செய்ய விரும்பி, லவணனிடம் ஒரு தூதனை அனுப்பி வைத்தான். மதுவின் புத்திரனிடம் சென்று, சொல்லத்தகாத பல வார்த்தைகளை அவன் கூறிக் கொண்டிருக்கும்போதே, அந்த அரக்கன் (லவணன்) அந்தத் தூதனை வாயில் போட்டு விழுங்கிவிட்டான். (17,18)

Koviloor Digital Library

சிராயமாணே தூ$_3$தே து ராஜா க்ரோத$_4$ஸமந்வித: ।
அர்த$_3$யாமாஸ தத்$_3$ரக்ஷ: ஶரவ்ருஷ்ட்யா ஸமந்தத: ॥ (19)

தத: ப்ரஹஸ்ய தத்$_3$ரக்ஷ: ஶூலம் ஜக்$_3$ராஹ பாணிநா ।
வத$_4$ாய ஸாநுப$_3$ந்த$_4$ஸ்ய முமோசாயுத$_4$முத்தமம் ॥ (20)

தச்சூ$_2$லம் தீ$_3$ப்யமாநம் து ஸப்$_4$ருத்யப$_3$லவாஹநம் ।
ப$_4$ஸ்மீக்ருத்வா ந்ருபம் பூ$_4$யோ லவணஸ்யாக$_3$மத் கரம் ॥ (21)

ஏவம் ஸ ராஜா ஸுமஹாந் ஹத: ஸப$_3$லவாஹந: ।
ஶூலஸ்ய து ப$_3$லம் ஸௌம்ய அப்ரமேயமநுத்தமம் ॥ (22)

ஶ்வ: ப்ரப$_4$ாதே து லவணம் வதி$_4$ஷ்யஸி ந ஸம்ஶய: ।
அக்$_3$ருஹீதாயுத$_4$ம் க்ஷிப்ரம் த்$_4$ருவோ ஹி விஜயஸ்தவ ॥ (23)

லோகாநாம் ஸ்வஸ்தி சைவ ஸ்யாத் க்ருதே கர்மணி ச த்வயா ।
ஏதத்தே ஸர்வமாக்$_2$யாதம் லவணஸ்ய து$_3$ராத்மந: ॥ (24)

ஶூலஸ்ய ச ப$_3$லம் கே$_4$ாரமப்ரமேயம் நரர்ஷப$_4$ ।
விநாஶஶ்சைவ மாந்த$_4$ாதுர்யத்தேநாபூ$_4$ச்ச பார்தி$_2$வ ॥ (25)

த்வம் ஶ்வ: ப்ரப$_4$ாதே லவணம் மஹாத்மந்
வதி$_4$ஷ்யஸே நாத்ர து ஸம்ஶயோ மே ।
ஶூலம் விநா நிர்க$_3$தமாமிஷார்தே$_2$
த்$_4$ருவோ ஜயஸ்தே ப$_4$விதா நரேந்த்$_3$ர ॥ (26)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஸப்தஷஷ்டிதம: ஸர்க$_3$: ॥

அஷ்டஷஷ்டிதம: ஸர்க$_3$:

லவணஶத்ருக்$_4$நவிவாத$_3$:

கத$_2$ாம் கத$_2$யதாம் தேஷாம் ஜயம் சாகாங்க்ஷதாம் ஶுப$_4$ம் ।
வ்யதீதா ரஜநீ ஶீக்$_4$ரம் ஶத்ருக்$_4$நஸ்ய மஹாத்மந: ॥ (1)

தத: ப்ரப$_4$ாதே விமலே தஸ்மிந் காலே ஸ ராக்ஷஸ: ।
நிர்க$_3$தஸ்து புராத்$_3$தீ$_4$ரோ ப$_4$க்ஷ்யாஹாரப்ரசோதி$_3$த: ॥ (2)

ஏதஸ்மிந்நந்தரே வீர: ஶத்ருக்$_4$நோ யமுநாம் நதீ$_3$ம் ।
தீர்த்வா மது$_4$புரத்$_3$வாரி த$_4$நுஷ்பாணிரதிஷ்ட$_2$த ॥ (3)

ததோऽர்த$_4$தி$_3$வஸே ப்ராப்தே க்ரூரகர்மா ஸ ராக்ஷஸ: ।
ஆக$_3$ச்ச$_2$த்$_3$ப$_3$ஹுஸாஹஸ்ரம் ப்ராணிநாம் ப$_4$ாரமுத்$_3$வஹந் ॥ (4)

Koviloor Digital Library

வெகுநேரமாகியும் தூதன் திரும்பிவராததால், (இது, லவணனுடைய வேலையாகத்தான் இருக்கும் என்று உணர்ந்து) மாந்தாதா மிகவும் கோபம் கொண்டான். அதனால், அம்புமாரி பெய்து நாற்புறமும் அரக்கனைத் துன்புறுத்தினான். (19)

அந்த அரக்கன், சற்றே நகைத்து, (தெய்விக சக்தி வாய்ந்த அந்தச்) சூலத்தைக் கையில் ஏந்தினான். அளவிட முடியாத ஆற்றல் படைத்த அந்த ஆயுதத்தை, உடன் வந்தவர்களோடு மாந்தாதாவைக் கொல்வதற்காக, அவன்மேல் வீசி எறிந்தான். (20)

பேரொளி வீசிக்கொண்டு சென்ற அந்தச் சூலம், பணியாளர்–படைவீரர்–வாகனங்கள் உட்பட அவனையும் பொசுக்கிவிட்டு, லவணனுடைய கையை மீண்டும் வந்தடைந்தது. (21)

பண்பாளனே! மாபெரும் வீரனான அந்த அரசன், படைவீரர்–வாகனங்களோடு, இவ்வாறு அழித்தொழிக்கப்பட்டான். அந்தச் சூலம் இணையில்லாத பலம் பொருந்தியது; மிகவும் உயர்ந்தது. (22)

நாளைக் காலையில் லவணனை வதைக்கப் போகிறாய் என்பது நிச்சயம். அவன் கையில் சூலாயுதம் இல்லாத தருணத்தில், நீ அவனைத் தாக்கினால் வெற்றி அடைவாய் என்பதில் ஐயமில்லை. (23)

நீ, இந்தக் காரியத்தைச் செய்து முடித்தால் எல்லா உலகங்களுக்கும் நன்மை உண்டாகும். தீயவனான லவணனைப் பற்றிய எல்லாச் செய்திகளையும் சொல்லிவிட்டேன். (24)

பேராண்மை மிக்கவனே! லவணனிடமுள்ள சூலத்தின் ஆற்றல் மிகவும் பயங்கரமானது; உவமையில்லாதது. அதன் சக்தியால் மாந்தாதா மாண்டு போனான். மன்னனே! அந்த நிலை உனக்கு ஏற்படக்கூடாது. (25)

பெருந்தகையே! நாளைக் காலையில், புலாலுணவைச் சேகரிப்பதற்காகக் கையில் சூலம் இல்லாமல், அவன் வெளியே வரும்போது, அவனைக் கொல்லப் போகிறாய் என்பதில் சந்தேகமில்லை. உனக்கே வெற்றி கிடைக்கப் போகிறது!'' (26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
அறுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தெட்டு

லவண–சத்ருக்னரிடையே வாக்குவாதம்

மகாத்மாவான சத்ருக்னன் இவ்வாறாகப் பழைய வரலாறுகளைக் கேட்டு, (லவணனுடன் நடைபெறவுள்ள போரில்,) வெற்றியை விரும்பி சிந்தித்துக் கொண்டிருக்கும்போதே சடுதியில் இரவுப்பொழுது கழிந்தது. (1)

நிர்மலமான வைகறைப் பொழுது விடிந்தது. உண்பதற்கு வேண்டிய உணவைச் சேகரிப்பதற்காக, அந்தக் காலை நேரத்தில், அரக்கன் லவணன் நகரத்திலிருந்து வெளியே வந்தான். (2)

இதனிடையில், யமுனை நதியைக் கடந்த வீரன் சத்ருக்னன், கையில் வில்லுடன் நகர வாயிலில் நின்று கொண்டான். (3)

கொடுஞ்செயல் புரியும் அந்த அரக்கன், பல்லாயிரக்கணக்கான உயிர்ப்பிராணிகளைக் கொன்று, அவற்றைச் சுமந்தவண்ணம் நண்பகல் வேளையில் வந்துகொண்டிருந்தான். (4)

Koviloor Digital Library

ததோ த3த3ர்ஶ ஶத்ருக்4நம் ஸ்தி2தம் த்3வாரி த்4ருதாயுத4ம் ।
தமுவாச ததோ ரக்ஷ: கிமநேந கரிஷ்யஸி ॥ (5)

ஈத்3ருஶாநாம் ஸஹஸ்ராணி ஸாயுத4ாநாம் நராத4ம ।
ப4க்ஷிதாநி மயா ரோஷாத் காலமாகாங்க்ஷஸே நு கிம் ॥ (6)

ஆஹாரஶ்சாஸ்ய ஸம்பூர்ணோ மமாயம் புருஷாத4ம ।
ஸ்வயம் ப்ரவிஷ்டோऽத்3ய முக2ம் கத2மாஸாத்3ய து3ர்மதே ॥ (7)

தஸ்யைவம் ப4ாஷமாணஸ்ய ஹஸதஶ்ச முஹுர்முஹு: ।
ஶத்ருக்4நோ வீர்யஸம்பந்நோ ரோஷாத3ஶ்ருண்யவாஸ்ருஜத் ॥ (8)

தஸ்ய ரோஷாபி4பூ4தஸ்ய ஶத்ருக்4நஸ்ய மஹாத்மந: ।
தேஜோமயா மரீச்யஸ்து ஸர்வகா3த்ரைர்விநிஷ்பதந் ॥ (9)

உவாச ச ஸுஸங்க்ருத்3த4: ஶத்ருக்4நஸ்தம் நிஶாசரம் ।
யோத்3து4மிச்ச2ாமி து3ர்பு3த்3தே4 த்3வந்த்3வயுத்3த4ம் த்வயா ஸஹ ॥ (10)

புத்ரோ த3ஶரத2ஸ்யாஹம் ப்4ராதா ராமஸ்ய தீ4மத: ।
ஶத்ருக்4நோ நித்யஶத்ருக்4நோ வத4ாகாங்க்ஷீ தவாக3த: ॥ (11)

தஸ்ய மே யுத்3த4காமஸ்ய த்3வந்த்3வயுத்3த4ம் ப்ரதீ3யதாம் ।
ஶத்ருஸ்த்வம் ஸர்வஜீவாநாம் ந மே ஜீவந் க3மிஷ்யஸி ॥ (12)

தஸ்மிந்ஸ்தத2ா ப்3ருவாணே து ராக்ஷஸ: ப்ரஹஸந்நிவ ।
ப்ரத்யுவாச நரஶ்ரேஷ்ட2ம் தி3ஷ்ட்யா ப்ராப்தோऽஸி து3ர்மதே ॥ (13)

மம மாத்ருஷ்வஸுர்ப்4ராதா ராவணோ ராக்ஷஸாதி4ப: ।
ஹதோ ராமேண து3ர்பு3த்3தே4 ஸ்த்ரீஹேதோ: புருஷாத4ம ॥ (14)

தச்ச ஸர்வம் மயா க்ஷாந்தம் ராவணஸ்ய குலக்ஷயம் ।
அவஜ்ஞாம் புரத: க்ருத்வா மயா யூயம் விஶேஷத: ॥ (15)

நிஹதாஶ்ச ஹி மே ஸர்வே பரிபூ4தாஸ்த்ருணம் யதா2 ।
பூ4தாஶ்சைவ ப4விஷ்யாஶ்ச யூயம் ச புருஷாத4மா: ॥ (16)

தஸ்ய தே யுத்3த4காமஸ்ய யுத்3த4ம் தா3ஸ்யாமி து3ர்மதே ।
திஷ்ட2 த்வம் ச முஹூர்தம் து யாவதா3யுத4மாநயே ॥ (17)

ஈப்ஸிதம் யாத்3ருஶம் துப்4யம் ஸஜ்ஜயே யாவதா3யுத4ம் ।
தமுவாசாத2 ஶத்ருக்4ந: க்வ மே ஜீவந் க3மிஷ்யஸி ॥ (18)

ஶத்ருர்யத்3ருச்ச2யா த்3ருஷ்டோ ந மோக்தவ்ய: க்ருதாத்மநா ।
யோ ஹி விக்லவயா பு3த்3த்4யா ப்ரஸரம் ஶத்ரவே த3தௌ3 ॥
ஸ ஹதோ மந்த3பு3த்3தி4த்வாத்3யதா2 காபுருஷஸ்ததா2 ॥ (19)

Koviloor Digital Library

கையில் ஆயுதத்துடன், நகரத்தின் நுழைவாயிலில் சத்ருக்னன் நிற்பதைக் கண்டான். அவனைப் பார்த்து, ''இதை (ஆயுதத்தை) வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்?'' என்று (இளக்காரமாகக்) கேட்டான், அரக்கன். (5)

''மானுடப்பதரே! படைக்கலம் தாங்கி எதிர்த்து வந்த ஆயிரக்கணக்கானவர்களைக் கோபம் கொண்ட நான் வாயில் போட்டு விழுங்கியிருக்கிறேன்! (பாவம், நீ!) நீயும் மரணத்தை அடைய விரும்புகிறாய் போலும்! ஆண்கோழையே! இப்போது நான் கொண்டு வந்திருக்கும் உணவே எனக்குப் போதும். கெடுமதியாளனே! நீயாக வந்து என் வாயில் விழுந்திருக்கிறாய்! உன்னை என்ன செய்வது?'' (6,7)

இவ்வாறு, இடையிடையே சிரித்தவண்ணம் அவன் பேசியதைக் கேட்டவுடன், எல்லையில்லாத கோபத்தால், மாவீரனான சத்ருக்னன் கண்களிலிருந்து நீர்த்திவலைகளை வெளிப்படுத்தினான். பேராற்றலுடைய சத்ருக்னன் கோபத்தால் கொதித்துக் கொண்டிருக்கும்போது, அவன் உடலின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஒளிக்கதிர்கள் வீசத் தொடங்கின. (8,9)

மிகவும் கோபங்கொண்ட சத்ருக்னன், அரக்கனைப் பார்த்து, ''கேடுகெட்டவனே! உன்னுடன் துவந்துவ யுத்தம் செய்ய விரும்புகிறேன்'' என்றான். (10)

''நான், தசரதனின் மைந்தன்; பேரறிவாளரான இராமனின் சகோதரன்; என் பெயர், சத்ருக்னன்; எப்போதும் எதிரிகளை மாய்ப்பவன். உன்னைக் கொல்லும் பொருட்டு இங்கு வந்திருக்கிறேன். உன்னுடன் போர் செய்ய விரும்பி அழைக்கும் என்னுடன் போர் செய்ய வருவாய். எல்லா உயிர்ப்பிராணிகளுக்கும் பகைவனான நீ, என் கண்ணில் பட்ட பின்னர் உயிருடன் செல்லமாட்டாய்!'' (11,12)

இவ்வாறு, அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே, பரிகாசமான நகைப்புத் தோன்ற, மானுடப் பெருந்தகையான சத்ருக்னனைப் பார்த்து, ''கெடுமதி படைத்தவனே! என் அதிருஷ்டம், நீ என்னிடம் மாட்டிக் கொண்டிருக்கிறாய்!'' என்று பதில் சொன்னான், லவணன். (13)

(மேலும் கூறினான்—) ''என்னுடைய சித்தி (தாயாரின் சகோதரி)யின் புதல்வன், அரக்க மன்னன், என் சகோதரன் இராவணன். ஏ, அறிவுகெட்டவனே! (கேவலம்) ஒரு பெண்ணுக்காக இராமனால் கொல்லப்பட்டான். அத்துடன், இராவணனுடைய குலம் முழுவதும் அழிக்கப்பட்டது. எங்களை எவ்வளவோ அவமதித்தீர்கள். அப்படியிருந்தும் உங்கள் விஷயத்தில் பொறுமையைக் கடைப்பிடித்துப் பழி வாங்காமலிருந்தேன். (14,15)

முன்னர், என்னை எதிர்த்து வந்த மானுடப்பதர்கள், வெறும் புல்லுக்குச் சமமாக நசுக்கப் பட்டார்கள்; எதிர்காலத்தில் வருபவர்களையும் கொன்றொழிப்பேன். ஏன், இப்போது நிகழ்காலத்தில் வந்திருக்கும் உன்னையும் வதைக்கத்தான் போகிறேன்! (யார், இந்த இராமன்? வெறும் புல்லுக்குச் சமமானவன். இவனுடன் போர் செய்வது, நமக்கு அவமானம் என்பதால் பொறுமையாக இருந்தேன் – என்றும் பொருள் கூறலாம்.) (16)

ஆகவே, போர் செய்ய விரும்பும் உன்னுடன் போர் புரியத்தான் போகிறேன். சிறிதுநேரம் பொறுத்துக் கொள். நான், என் ஆயுதத்தை எடுத்துக் கொண்டு வருகிறேன். (17)

உன்னைக் கொல்வதற்கு எத்தகைய ஆயுதம் தேவையோ, அதை எடுத்துக் கொண்டு வருகிறேன்.'' ''நான் இங்கே நிற்கும்போது, நீ உயிருடன் எங்கே செல்வாய்?'' என்று சத்ருக்னன் சொன்னான். (18)

''எதிர்பாராதவிதமாகக் கண்ணில் தென்பட்டுவிட்ட எதிரியை, அறிவாளியான வீரன் விட்டுவிட மாட்டான். மனத்தடுமாற்றம் அடைந்து எதிரியைப் போகவிடும் அறிவு குறைந்த கோழை, தானே அழிந்து போகிறான். (19)

Koviloor Digital Library

தஸ்மாத் ஸுத்₃ருஷ்டம் குரு ஜீவலோகம்
ஶரை: ஶிதைஸ்த்வாம் விவிதை₄ர்நயாமி ।
யமஸ்ய கே₃ஹாபி₄முக₂ம் ஹி பாபம்
ரிபும் த்ரிலோகஸ்ய ச ராக₄வஸ்ய ॥ (20)

இத்யார்ஷே ஸ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
உத்தரகாண்டே₃ அஷ்டஷஷ்டிதம: ஸர்க₃: ॥

ஏகோநஸப்ததிதம: ஸர்க₃:

லவணவத₄:

தச்ச்₂ருத்வா ப₄ாஷிதம் தஸ்ய ஶத்ருக்₄நஸ்ய மஹாத்மந: ।
க்ரோத₄மாஹாரயத்தீவ்ரம் திஷ்ட₂ திஷ்டே₂தி சாப்₃ரவீத் ॥ (1)

பாணௌ பாணிம் விநிஷ்பிஷ்ய த₃ந்தாந் கடகடாய்ய ச ।
லவணோ ரகு₄ஶார்தூ₃லமாஹ்வயாமாஸ சாஸக்ருத் ॥ (2)

தமாஹ்வயந்தம் ஸௌமித்ரிர்லவணம் கோ₄ரத₃ர்ஶநம் ।
ஶத்ருக்₄நோ தே₃வஶத்ருக்₄ந இத₃ம் வசநமப்₃ரவீத் ॥ (3)

ந ஶத்ருக்₄நஸ்தத₂ா ஜாதோ யத₂ாந்யே நிர்ஜிதாஸ்த்வயா ।
தத₃த்₃ய ப₃ாணாபி₄ஹதோ வ்ரஜ த்வம் யமஸாத₃நம் ॥ (4)

ருஷயோऽப்யத்₃ய பாபாத்மந் மயா த்வாம் நிஹதம் ரணே ।
பஶ்யந்து விப்ரா வித்₃வாம்ஸஸ்த்ரித₃ஶா இவ ராவணம் ॥ (5)

த்வயி மத்₃ப₃ாணநிர்த₃க்₃தே₄ பதிதேऽத்₃ய நிஶாசர ।
புரே ஜநபதே₃ சாபி க்ஷேமமேவ ப₄விஷ்யதி ॥ (6)

அத்₃ய மத்₃ப₃ாஹுநிஷ்க்ராந்த: ஶரோ வஜ்ரநிப₄ாநந: ।
ப்ரவேக்ஷ்யதே தே ஹ்ருத₃யம் பத்₃மமம்ஶுரிவார்கஜ: ॥ (7)

ஏவமுக்தோ மஹாவ்ருக்ஷம் லவண: க்ரோத₄மூர்சி₂த: ।
ஶத்ருக்₄நோரஸி சிக்ஷேப ஸ ச தம் ஶதத₄ாச்சி₂நத் ॥ (8)

தத்₃த்₃ருஷ்ட்வா விபு₂லம் கர்ம ராக்ஷஸ: புநரேவ து ।
பாத₃பாந் ஸுப₃ஹூந் க்₃ருஹ்ய ஶத்ருக்₄நாயாஸ்ருஜத்₃ப₃லீ ॥ (9)

ஶத்ருக்₄நஶ்சாபி தேஜஸ்வீ வ்ருக்ஷாநாபததோ ப₃ஹூந் ।
த்ரிபி₄ஶ்சதுர்பி₄ரேகைகம் சிச்சே₂த₃ நதபர்வபி₄: ॥ (10)

ததோ ப₃ாணமயம் வர்ஷம் வ்யஸ்ருஜத்₃ராக்ஷஸோரஸி ।
ஶத்ருக்₄நோ வீர்யஸம்பந்நோ விவ்யதே₂ ந ஸ ராக்ஷஸ: ॥ (11)

Koviloor Digital Library

ஆகவே, இந்த உலகை (கடைசித் தடவையாக) நன்றாகப் பார்த்துக் கொள். மூன்று உலகங்களுக்கும் இராமனுக்கும் பகைவனும் பாவியுமான உன்னைக் கூர்மையான பல்வகை அம்புகளால் தாக்கி, யமனுடைய வீட்டை நோக்கி அனுப்பப் போகிறேன்!'' (20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
அறுபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : அறுபத்தொன்பது

லவணன் மாய்ந்தான்!

மாவீரனான சத்ருக்னனுடைய சொற்களைக் கேட்ட அரக்கன் லவணன், எல்லையில்லாத கோபம் அடைந்து, ''இரு, இரு. கொஞ்சம் பொறு'' என்று சொன்னான். (1)

கைகளை முறுக்கிக் கொண்டும் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டும், ரகுகுலப் புலியான சத்ருக்னனைப் போருக்கு அழைத்தான், லவணன். (2)

காணச் சகிக்காத தோற்றம் கொண்ட லவணன் போருக்கு அழைப்பதைக் கேட்டு, தேவவிரோதிகளை அழிப்பவனான சத்ருக்னன் (பின்வருமாறு) கூறினான்— (3)

''மற்ற எதிர்ப்பாளர்கள் உன்னால் தோற்கடிக்கப்பட்ட அந்தக் காலத்தில், சத்ருக்னன் பிறந்திருக்கவில்லை! அதனால், இப்போது என் பாணங்களால் தாக்கப்பட்டு, யமன் வீட்டிற்குச் செல்லும் வழியே செல்வாய்! (4)

மாபாவியே! இராமனால் இராவணன் வதம் செய்யப்பட்டதைக் கண்டு, தேவதைகள் மகிழ்ச்சி அடைந்தார்கள். இப்போது, நான் உன்னைக் கொல்லப் போவதைப் பேரறிஞர்களான மறையவர்களும் முனிவர்களும் கண்ணால் காணப்போகிறார்கள். (5)

அரக்கப்பதரே! என் பாணத்தால் சுட்டெரிக்கப்பட்டு நீ வீழ்ச்சி அடைந்ததும், இந்த நகரத்திற்கும் நகர்ப்புற கிராமங்களுக்கும் நன்மையே ஏற்படப் போகிறது. (6)

இப்போது என் கையிலிருந்து விடுபடப்போகும் வஜ்ராயுதம் போல் பேரொளி படைத்த அம்பு, சூரியகிரணம் எவ்வளவு எளிதாகத் தாமரைக்குள் செல்லுமோ, அவ்வளவு எளிதாக உன் மார்பில் புகுந்துவிடப் போகிறது!'' (7)

இவ்வாறு சத்ருக்னன் கூறிமுடித்தவுடன் கோபத்தால் கொந்தளித்துக் கொண்டிருந்த லவணன், ஒரு மாபெரும் மரத்தை, சத்ருக்னனின் மார்பை நோக்கி வீசினான். ஆனால், அவன் அதைத் துண்டுதுண்டாக்கிவிட்டான். (8)

பலம் மிகுந்த அவன் தன்னுடைய செயல் பயனற்றுப் போனதைக் கண்டு, ஏராளமான மரங்களைப் பிடுங்கி மீண்டும் சத்ருக்னன்மேல் வீசியெறிந்தான். (9)

ஆற்றல் மிக்க சத்ருக்னன், ஏராளமான மரங்கள் தன்னை நோக்கி வருவதைக் கண்டு, வளைந்த கணுக்களையுடைய அம்புகளை மும்மூன்றாகவும் நான்குநான்காகவும் செலுத்தி, ஒவ்வொரு மரத்தையும் வெட்டி வீழ்த்தினான். (10)

பின்னர், அரக்கனுடைய மார்பின்மேல் அம்புமாரியைப் பொழிந்தான், வீரனான சத்ருக்னன். ஆனால், அரக்கனோ சிறிதளவுகூட துன்பத்தை அடையவில்லை. (11)

Koviloor Digital Library

தத: ப்ரஹஸ்ய லவணோ வ்ருக்ஷமுத்$_3$யம்ய வீர்யவாந் ।
ஶிரஸ்யப்$_4$யஹநச்சூ$_2$ரம் ஸ்ரஸ்தாங்க$_3$: ஸ முமோஹ வை ॥ (12)

தஸ்மிந்நிபதிதே வீரே ஹாஹாகாரோ மஹாநபூ$_4$த் ।
ருஷீணாம் தே$_3$வஸங்க$_4$நாம் க$_3$ந்த$_4$ர்வாப்ஸரஸாம் தத$_2$ா ॥ (13)

தமவக்ஞாய து ஹதம் ஶத்ருக்$_4$நம் பு$_4$வி பாதிதம் ।
ரக்ஷோ லப்$_3$த$_4$ாந்தரமபி ந விவேஶ ஸ்வமாலயம் ॥ (14)

நாபி ஶூலம் ப்ரஜக்$_3$ராஹ தம் த்$_3$ருஷ்ட்வா பு$_4$வி பாதிதம் ।
ததோ ஹத இதி க்ஞாத்வா தாந் ப$_4$க்ஷாந் ஸ முத$_3$ாவஹத் ॥ (15)

முஹூர்தால்லப்$_3$த$_4$ஸம்க்ஞஸ்து புநஸ்தஸ்தௌ த்$_4$ருதாயுத$_4$: ।
ஶத்ருக்$_4$நோ வை புரத்$_3$வாரி ருஷிபி$_4$: ஸம்ப்ரபூஜித: ॥ (16)

ததோ தி$_3$வ்யமமோக$_4$ம் தம் ஜக்$_3$ராஹ ஶரமுத்தமம் ।
ஜ்வலந்தம் தேஜஸா கோ$_4$ரம் பூரயந்தம் தி$_3$ஶோ த$_3$ஶ ॥ (17)

வஜ்ராநநம் வஜ்ரவேக$_3$ம் மேருமந்த$_3$ரஸம்நிப$_4$ம் ।
நதம் பர்வஸு ஸர்வேஷு ஸம்யுகே$_3$ஷ்வபராஜிதம் ॥ (18)

அஸ்ருக்சந்த$_3$நதி$_3$க்$_3$த$_4$ாங்க$_3$ம் சாருபத்ரம் பதத்ரிணம் ।
த$_3$ாநவேந்த்$_3$ராசலேந்த்$_3$ராணாமஸுராணாம் ச த$_3$ாரணம் ॥ (19)

தம் தீ$_3$ப்தமிவ காலாக்$_3$நிம் யுக$_3$ாந்தே ஸமுபஸ்தி$_2$தே ।
த்$_3$ருஷ்ட்வா ஸர்வாணி பூ$_4$தாநி பரித்ராஸமுபாக$_3$மந் ॥ (20)

ஸதே$_3$வாஸுரக$_3$ந்த$_4$ர்வம் முநிபி$_4$: ஸாப்ஸரோக$_3$ணம் ।
ஜக$_3$த்$_3$தி$_4$ ஸர்வமஸ்வஸ்த$_2$ம் பிதாமஹமுபஸ்தி$_2$தம் ॥ (21)

ஊசுஶ்ச தே$_3$வா தே$_3$வேஶம் வரத$_3$ம் ப்ரபிதாமஹம் ।
கச்சில்லோகக்ஷயோ தே$_3$வ ஸம்ப்ராப்தோ வா யுக$_3$க்ஷய: ॥ (22)

நேத்$_3$ருஶம் த்$_3$ருஷ்டபூர்வம் ச ந ஶ்ருதம் ப்ரபிதாமஹ ।
தே$_3$வாநாம் ப$_4$யஸம்மோஹோ லோகாநாம் ஸம்க்ஷயம் ப்ரதி ॥ (23)

தேஷாம் தத்$_3$வசநம் ஶ்ருத்வா ப்$_3$ரஹ்மா லோகபிதாமஹ: ।
ப$_4$யகாரணமாசஷ்ட லோகாநாமப$_4$யங்கர: ॥ (24)

உவாச மது$_4$ராம் வாணீம் ஶ்ருணுத்$_4$வம் ஸர்வதே$_3$வதா: ।
வத$_4$ாய லவணஸ்யாஜௌ ஶர: ஶத்ருக்$_4$நத$_4$ாரித: ॥ (25)

தேஜஸா தஸ்ய ஸம்மூட$_4$ா: ஸர்வே ஸ்ம ஸுரஸத்தமா: ।
ஏஷ பூர்வஸ்ய தே$_3$வஸ்ய லோககர்து: ஸநாதந: ॥
ஶரஸ்தேஜோமயோ வத்ஸ தேந வோ ப$_4$யமாக$_3$தம் ॥ (26)

Koviloor Digital Library

அப்போது மெல்ல நகைத்தவண்ணம், மாவீரனான லவணன் ஒரு மரத்தைப் பிடுங்கி, சத்ருக்னன் தலைமேல் வீசினான். அந்தத் தாக்குதலால் அவன் உடல் நடுங்கியது; மயக்கமும் அடைந்தான். (12)

அவன் கீழே விழுவதைக் கண்ட முனிவர்கள், தேவர்கள், கந்தர்வர்கள், அப்சரசுகள் ஆகியோர், ''அடாடா! என்ன இப்படி?'' என்று உரத்தகுரலில் அங்கலாய்த்தார்கள். (13)

தரையில் விழுந்த சத்ருக்னன் மாண்டுவிட்டான் என்று எண்ணிய அரக்கன், அப்போது வாய்ப்புக் கிடைத்தும், தன் இருப்பிடம் செல்லவில்லை. (14)

அவன் தரையில் விழுந்து கிடந்ததைப் பார்த்ததும், அவன் மாய்ந்துவிட்டான் என்று நினைத்துக் கொண்ட லவணன், தெய்விக ஆற்றல் படைத்த சூலத்தைக் கையில் பற்றிக் கொள்ளவில்லை. ''அவன் இறந்துவிட்டான்; இனி, என்ன கவலை?'' என்று எண்ணி, ஓர் இடத்தில் வைத்திருந்த உணவுப்பொருள்களைக் கையில் எடுத்துக் கொண்டான். (15)

சிறிதுநேரம் கழித்து உணர்வு பெற்ற சத்ருக்னன், முனிவர்களின் வாழ்த்துக்களுடன் நகரத்தின் நுழைவாயிலில் கையில் ஆயுதம் ஏந்தியவனாக வந்து நின்றான். (16)

வீண் போகாததும், பத்துத் திசைகளையும் பயங்கரமான ஒளிப்பிழம்பினால் பிரகாசிக்கச் செய்வதும், தெய்விக ஆற்றல் படைத்ததுமான மிகச்சிறந்த ஒரு பாணத்தை எடுத்தான். (17)

அதன் தோற்றமும் வேகமும் வஜ்ராயுதத்தைப் போலிருந்தன; மேரு–மந்தர மலைகள் போல் பிரகாசமாக இருந்தது; கணுக்களில் வளைந்திருந்தது; எந்த வகையான போர்களிலும் வெற்றி கொள்ள முடியாததாக இருந்தது. (18)

முழுவதும் இரத்தமே சந்தனமாகப் பூசப்பட்டிருந்தது; அழகிய சிறகு பொருத்தப்பட்டிருந்தது; அரக்கர்கள், மாபெரும் மலைகள், அசுரர்கள் ஆகியோரைப் பிளந்து வீழ்த்துவது போலிருந்தது. பிரளயகால காலாக்னியைப் போல் ஒளியைக் கக்கியது. அதைப் பார்த்த உயிர்ப்பிராணிகள் எல்லாம் நடுநடுங்கின. (19,20)

தேவர்–அசுரர்–கந்தர்வர்–முனிவர்–அப்சரசுகள் மற்றும் உலகமனைத்தும் அச்சங்கொண்டு பிரும்மாவிடம் போய்ச் சேர்ந்தார்கள். (21)

தேவர்களின் தலைவரும் வரம் அளிப்பவருமான பிரும்மாவைப் பார்த்து, ''உலகத்திற்கு அழிவு வந்துவிட்டதா? அல்லது ஊழிக்காலம் வந்துவிட்டதா? ஐயனே! நான்முகனே! இதற்கு முன்னர் தேவர்களுக்கு அச்சத்தையும் மனக்குழப்பத்தையும், மக்களுக்கு அழிவையும் கொடுக்கக்கூடிய இதை (பாணத்தை) நாங்கள் பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை.'' (22,23)

அவர்கள் கூறியவைகளைக் கேட்டு, உலகங்களுக்கு அபயம் அளிப்பவரும், லோக பிதாமகருமான பிரும்மா, அப்போது ஏற்பட்ட பயத்திற்குக் காரணத்தை இயம்பினார். (24)

பிரும்மா, (பின்வரும்) ஆறுதலான சொற்களைக் கூறினார்— ''தேவதைகளே! கேளுங்கள். போர்க்களத்தில் லவணனைக் கொல்வதற்காக, சத்ருக்னன் ஒரு பாணத்தை ஏந்திக்கொண்டு நிற்கிறான். (25)

அந்த அம்பினுடைய பேரொளியினால் அமரர்கள் அனைவரும் மயங்கிப் போயிருக்கிறார்கள். அன்புக்குரியவர்களே! ஒளிப்பிழம்பாக விளங்கும் இந்த அம்பு, முன்னர், சனாதனப் பெருந்தெய்வமும் உலகைப் படைப்பவருமான (உலகைக் காப்பாற்றுபவருமான) விஷ்ணுவிடம் இருந்தது. (26)

Koviloor Digital Library

ஏஷ வை கைடப$_4$ஸ்யார்தே$_2$ மது$_4$நஶ்ச மஹாஶர: ।
ஸ்ருஷ்டோ மஹாத்மநா யேந வத$_4$ார்தே$_2$ தை$_3$த்யயோஸ்தயோ: ॥ (27)

ஏக ஏவ ப்ரஜாநாதி விஷ்ணுஸ்தேஜோமயம் ஶரம் ।
ஏஷா ஏவ தநு: பூர்வா விஷ்ணோஸ்தஸ்ய மஹாத்மந: ॥ (28)

இதோ க$_3$ச்ச$_2$த பஶ்யத்$_4$வம் வத்$_4$யமாநம் மஹாத்மநா ।
ராமாநுஜேந வீரேண லவணம் ராக்ஷஸோத்தமம் ॥ (29)

தஸ்ய தே தே$_3$வதே$_3$வஸ்ய நிஶாம்ய வசநம் ஸுரா: ।
ஆஜக்$_3$முர்யத்ர யுத்$_4$யேதே ஶத்ருக்$_4$நலவணாவுபௌ$_4$ ॥ (30)

தம் ஶரம் தி$_3$வ்யஸங்காஶம் ஶத்ருக்$_4$நகரத$_4$ாரிதம் ।
த$_3$த்$_3$ருஶு: ஸர்வபூ$_4$தாநி யுகா$_3$ந்தாக்$_3$நிமிவோத்தி$_2$தம் ॥ (31)

ஆகாஶமாவ்ருதம் த்$_3$ருஷ்ட்வா தே$_3$வைர்ஹி ரகு$_4$நந்த$_3$ந: ।
ஸிம்ஹநாத$_3$ம் ப்$_4$ருஶம் க்ருத்வா த$_3$த$_3$ர்ஶ வலணம் புந: ॥ (32)

ஆஹூதஶ்ச புநஸ்தேந ஶத்ருக்$_4$நேந மஹாத்மநா ।
லவண: க்ரோத$_4$ஸம்யுக்தோ யுத்$_3$த$_4$ாய ஸமுபஸ்தி$_2$த: ॥ (33)

ஆ கர்ணாத் ஸ விக்ருஷ்யாத$_2$ தத்$_3$த$_4$நுர்த$_4$ந்விநாம் வர: ।
தம் முமோச மஹாப$_3$ாணம் லவணஸ்ய மஹோரஸி ॥ (34)

உரஸ்தஸ்ய விதா$_3$ர்யாஶு ப்ரவிவேஶ ரஸாதலம் ।
க$_3$த்வா ரஸாதலம் தி$_3$வ்ய: ஶரோ விபு$_3$த$_4$பூஜித: ॥
புநரேவாக$_3$மத்தூர்ணமிக்ஷ்வாகுகுலநந்த$_3$நம் ॥ (35)

ஶத்ருக்$_4$நஶரநிர்பி$_4$ந்நோ லவண: ஸ நிஶாசர: ।
பபாத ஸஹஸா பூ$_4$மௌ வஜ்ராஹத இவாசல: ॥ (36)

தச்ச ஶூலம் மஹத்தேந ஹதே லவணராக்ஷஸே ।
பஶ்யதாம் ஸர்வதே$_3$வாநாம் ருத்$_3$ரஸ்ய வஶமந்வகா$_3$த் ॥ (37)

ஏகேஷுபாதேந ப$_4$யம் நிபாத்ய லோகத்ரயஸ்யாபி ரகு$_4$ப்ரவீர: ।
விநிர்ப$_3$ப$_4$ாவுத்தமசாபப$_3$ாணஸ்தம: ப்ரணுத்$_3$யேவ ஸஹஸ்ரரஶ்மி: ॥ (38)

ததோ ஹி தே$_3$வா ருஷிபந்நகா$_3$ஶ்ச
ப்ரபூஜிரே ஹ்யப்ஸரஸஶ்ச ஸர்வா: ।
தி$_3$ஷ்ட்யா ஜயோ தா$_3$ஶரதே$_2$ரவாப்தஸ்–
த்யக்த்வா ப$_4$யம் ஸர்ப இவ ப்ரஶாந்த: ॥ (39)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகோநஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

இந்த மாபெரும் அம்பு, மது–கைடபன் என்ற இரண்டு அசுரர்களை மாய்ப்பதற்காக, பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணனால் சிருஷ்டிக்கப்பட்டது. (27)

ஒளிப்பிழம்பாகச் சுடர்விடும் இந்த பாணத்தை விஷ்ணு மட்டுமே அறிவார். ஏனென்றால், இந்த பாணம் சாட்சாத் விஷ்ணுவின் மூலவடிவமாகவே விளங்கியது. (28)

நீங்களனைவரும் இப்போது இங்கிருந்து சென்று, இராமசந்திரமூர்த்தியின் தம்பியும் மாபெரும் வீரனுமான சத்ருக்னனால் அரக்கத் தலைவன் லவணன் கொல்லப்படுவதைக் கண்ணால் கண்டு மகிழுங்கள்.'' (29)

தேவர்களுக்கும் தேவனான பிரும்மா சொல்லியதைக் கேட்ட அமரர்கள், லவண–சத்ருக்னர்கள் போர் செய்யும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். (30)

ஊழிக்கால அக்னியைப் போல் நெடிதுயர்ந்து நிற்பதும், தெய்விகப் பொலிவுடன் திகழ்வதும், சத்ருக்னனின் கையில் திகழ்வதுமான அந்த அம்பினை, எல்லா உயிர்ப்பிராணிகளும் கண்ணால் பார்த்தன. (31)

ரகுநந்தனனான சத்ருக்னன், ஆகாயம் தேவர்களால் சூழப்பட்டிருப்பதைக் கண்டான். உடனே, உரத்த குரலில் சிம்மநாதம் செய்து, லவணனை மீண்டும் பார்த்தான். (32)

மாவீரனான சத்ருக்னன், மீண்டும் போர் செய்ய அறைகூவல் விடுவதைக் கண்ட லவணன் மிகவும் கோபத்தோடுகூட போர் செய்ய ஆயத்தமானான். (33)

வில்லாளிகளில் முதன்மையானவனான சத்ருக்னன், செவிவரை நாண்கயிற்றை இழுத்து, மகாசக்தி படைத்த அந்த அம்பினை, லவணனுடைய விசாலமான மார்பைக் குறிவைத்துச் செலுத்தினான். (34)

அந்த அம்பு, லவணனுடைய மார்பைப் பிளந்து கொண்டு ரஸாதலத்தைச் சென்றடைந்தது. தேவர்களால் வணங்கப்படும் அந்த பாணம் ரஸாதலம் சென்று, பின் மறுபடியும் சத்ருக்னனை வந்தடைந்தது. (35)

சத்ருக்னனுடைய அம்பினால் தூள்தூளாக்கப்பட்ட அரக்கன் லவணன், வஜ்ராயுதத்தால் தாக்கப்பட்ட மாமலைபோல், உடனே பூமியில் விழுந்தான். (36)

அரக்கன் லவணன் மாய்க்கப்பட்டவுடன் (அவன் மாளிகையிலிருந்த) மேன்மைமிகு சூலம், எல்லா தேவர்களும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, ருத்ர பகவானைச் சென்றடைந்தது. (37)

மிகச்சிறந்த வில்லையும் பாணத்தையும் உடைய ரகுகுல மாவீரன் சத்ருக்னன், ஒரே பாணத்தால் மூன்று உலக மக்களின் அச்சத்தைப் போக்கி, இருளைப் போக்கிவிட்டு சுடரொளி வீசும் சூரியனைப் போல் பிரகாசித்தான். (38)

சர்ப்பத்தின் உயிர் பறிக்கப்பட்டதும், அது வாழ்ந்த இடத்தில் மக்கள் அச்சமில்லாமல் நடமாடுவார்கள். அதேபோல், நற்பேற்றின் காரணமாக சத்ருக்னனுக்கு வெற்றி கிடைத்துள்ளது. (சர்ப்பம் போல் அச்சம் விளைவித்துக் கொண்டிருந்த லவணன் மாய்க்கப்பட்டுவிட்டதால், இனி, பயமில்லாமல் உலகெங்கும் சுற்றி வரலாம்.) இவ்வாறு மகிழ்ச்சியடைந்த தேவர்கள், முனிவர்கள், பன்னகர்கள், அப்சரசுகள் ஆகிய எல்லோரும் சத்ருக்னனை வாழ்த்திப் போற்றினார்கள். (39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
அறுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஸப்ததிதம: ஸர்க$_3$:

மது$_4$ராபுரீ ப்ரவேஶ:

ஹதே து லவணே தே$_3$வா: ஸேந்த்$_3$ரா: ஸாக்$_3$நிபுரோக$_3$மா: ।
ஊசு: ஸுமது$_4$ராம் வாணீம் ஶத்ருக்$_4$நம் ஶத்ருதாபநம் ॥ (1)

தி$_3$ஷ்ட்யா தே விஜயோ வத்ஸ தி$_3$ஷ்ட்யா லவணராக்ஷஸ: ।
ஹத: புருஷஶார்தூ$_3$ல வரம் வரய ஸுவ்ரத ॥ (2)

வரத$_3$ாஸ்து மஹாப$_3$ாஹோ ஸர்வ ஏவ ஸமாக$_3$தா: ।
விஜயாகாங்க்ஷிணஸ்துப்$_4$யமமோக$_4$ம் த$_3$ர்ஶநம் ஹி ந: ॥ (3)

தே$_3$வாநாம் ப$_4$ாஷிதம் ஶ்ருத்வா ஶூரோ மூர்த்$_4$நி க்ருதாஞ்ஜலி: ।
ப்ரத்யுவாச மஹாப$_3$ாஹு: ஶத்ருக்$_4$ந: ப்ரயதாத்மவாந் ॥ (4)

இயம் மது$_4$புரீ ரம்யா மது$_4$ரா தே$_3$வநிர்மிதா ।
நிவேஶம் ப்ராப்நுயாச்சீ$_2$க்$_4$ரமேஷ மேऽஸ்து வர: பர: ॥ (5)

தம் தே$_3$வா: ப்ரீதமநஸோ ப$_3$ாட$_4$மித்யேவ ராக$_4$வம் ।
ப$_4$விஷ்யதி புரீ ரம்யா ஶூரஸேநா ந ஸம்ஶய: ॥ (6)

தே ததே$_2$ாக்த்வா மஹாத்மாநோ தி$_3$வமாருருஹுஸ்தத$_3$ா ।
ஶத்ருக்$_4$நோऽபி மஹாதேஜாஸ்தாம் ஸேநாம் ஸமுபாநயத் ॥ (7)

ஸா ஸேநா ஶீக்$_4$ரமாக$_3$ச்ச$_2$ச்$_2$ருத்வா ஶத்ருக்$_4$நஶாஸநம் ।
நிவேஶநம் ச ஶத்ருக்$_4$ந: ஶ்ராவணேந ஸமாரப$_4$த் ॥ (8)

ஸா புரா தி$_3$வ்யஸங்காஶா வர்ஷே த்$_3$வாத$_3$ஶமே ஶுபே$_4$ ।
நிவிஷ்டா ஶூரஸேநாநாம் விஷயஶ்சாகுதோப$_4$ய: ॥ (9)

க்ஷேத்ராணி ஸஸ்யயுக்தாநி காலே வர்ஷதி வாஸவ: ।
அரோக$_3$வீரபுருஷா ஶத்ருக்$_4$நபு$_4$ஜபாலிதா ॥ (10)

அர்த$_4$சந்த்$_3$ரப்ரதீகாஶா யமுநாதீரஶோபி$_4$தா ।
ஶோபி$_4$தா க்$_3$ருஹமுக்$_2$யைஶ்ச சத்வராபணவீதி$_2$கை: ॥ (11)

சாதுர்வர்ண்யஸமாயுக்தா நாநாவாணிஜ்யஶோபி$_4$தா ।
யச்ச தேந புரா ஶுப்$_4$ரம் லவணேந க்ருதம் மஹத் ॥ (12)

தச்சே$_2$ாப$_4$யதி ஶத்ருக்$_4$நோ நாநாவர்ணோபஶோபி$_4$தம் ।
ஆராமைஶ்ச விஹாரைஶ்ச ஶோப$_4$மாநாம் ஸமந்தத: ॥ (13)

ஶோபி$_4$தாம் ஶோப$_4$நீயைஶ்ச தத$_2$ாந்யைர்தே$_3$வமாநுஷை: ।
தாம் புரீம் தி$_3$வ்யஸங்காஶாம் நாநாபண்யோபஶோபி$_4$தாம் ॥
நாநாதே$_3$ஶாக$_3$தைஶ்சாபி வணிக்$_3$பி$_4$ருபஶோபி$_4$தாம் ॥ (14)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_25_Back

Koviloor Digital Library

ஸர்க்கம் : எழுபது

மதுராபுரியில் பிரவேசித்தல்

லவணன் மாய்க்கப்பட்டபின், அக்னி பகவானை முன்னிட்டுக் கொண்டு இந்திரன் முதலான தேவர்கள், எதிரிகளை வாட்டி வதைக்கும் சத்ருக்னனிடம் (பின்வரும்) இனிய சொற்களைக் கூறினார்கள்— ''ஆண்புலியே! பேரன்புக்கு உரியவனே! தெய்வத்தின் அருளால் உனக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. தெய்வத்தின் அருளால் அரக்கன் லவணன் கொல்லப்பட்டான். நல்விரதங்களை அனுஷ்டிப்பவனே! நீ விரும்பும் வரத்தைக் கேள். (1,2)

தோள்வலி மிக்கவனே! நாங்கள் எல்லோரும் உனக்கு வரம் கொடுப்பதற்காகவே வந்திருக்கிறோம். நீ, இந்தப் போரில் வெற்றியடைய வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். (அதேபோல், உனக்கு வெற்றி கிடைத்துவிட்டது!) நாங்கள் இங்கே வருகை புரிந்திருப்பது வெற்று தரிசனமாகப் போய்விடக்கூடாது. (ஏதாவது, பயனைக் கொடுத்தே ஆகவேண்டும்.)'' (3)

புலன்களை வசப்படுத்தியிருந்த சூரனான சத்ருக்னன், தேவர்கள் கூறியதைக் கேட்டதும், தலைக்கு மேலே கைகளைக் கூப்பிக் கொண்டு பதில் கூறினான்— ''இந்த மதுராபுரி நகரம் தேவதச்சனால் நிர்மாணிக்கப்பட்டது. உடனடியாக நான் இதில் குடியேற வேண்டும் (இந்தப் பட்டணத்தைத் தலைநகராகக் கொண்டு நான் ஆட்சி செலுத்த வேண்டும்) என்பதே, நான் வேண்டும் வரம்.'' (4,5)

உள்ளம் மகிழ்ந்த தேவர்கள், ரகுகுல திலகமான சத்ருக்னனைப் பார்த்து, ''அவ்வாறே ஆகுக. சூரர்களான படைவீரர்களைக் கொண்ட உனக்கு, இந்த அழகிய நகரம் தலைநகரமாக விளங்கட்டும்'' என்று கூறினார்கள். (6)

இவ்வாறு கூறிவிட்டு, மகாத்மாக்களான தேவர்கள் வானுலகம் சென்றார்கள். மிக்க பராக்கிரமசாலியான சத்ருக்னன் (கங்கைக் கரையில் தங்கியிருந்த) தன் படைவீரர்களை அழைத்துவரச் செய்தான். சத்ருக்னனுடைய ஆணையைக் கேட்ட அந்த மாபெரும் சேனை, விரைவில் அவ்விடம் வந்து சேர்ந்தது. சத்ருக்னன், சிராவண மாதத்தில் அந்த நகரத்தில் புகுந்து வசிக்கத் தொடங்கினான். அந்த நகரத்தில், சூரர்களான படைவீரர்கள் முழுமையாகப் பன்னிரண்டு ஆண்டுகள் தங்கியிருந்தார்கள். தேவபட்டணம் போல் விளங்கிய அந்த நகரத்தில், எல்லா சுகசாதனங்களும் அமைந்திருந்தன. பயம் என்ற பேச்சுக்கே இடமில்லை. (7–9)

இந்திரன், தேவையான காலங்களில் மழை பொழிவித்தான். அதனால், பயிர் நிலங்கள் பச்சைப்பசேலென்று விளங்கின. சத்ருக்னனுடைய தோள்வலிமையினால் பாதுகாக்கப்பட்ட அந்த நகரத்தில் நோய்–நொடிகள் இல்லை; மக்கள், வீரர்களாகத் திகழ்ந்தார்கள். (10)

முன்னொரு காலத்தில், லவணனால் யமுனைக் கரையை ஒட்டினாற்போல் பிறைநிலா வடிவத்தில் அமைக்கப்பட்ட அந்த நகரத்தில், கணக்கற்ற மாளிகைகளும் நாற்சந்திகளும் வணிகர் வீதிகளும் சந்துகளும் இருந்தன. அங்கு, நான்கு வர்ணத்தைச் சார்ந்த மக்கள் வாழ்ந்துக் கொண்டிருந்தார்கள். பற்பல வியாபார நிலையங்கள் செல்வச்செழிப்பைச் சுட்டிக்காட்டின. (11,12)

பற்பல வண்ண ஓவியங்களால், சத்ருக்னன் அந்த நகரை மேலும் அழகுபடுத்தினான். நாற்புறங்களிலும் பூங்காக்களையும், உல்லாசமாக விளையாடித் திரிவதற்கான இடங்களையும் ஏற்படுத்தினான். (13)

தேவ–மானுடர் சம்பந்தப்பட்ட மற்றும் பல அழகியப் பொருள்கள் அந்த நகரின் பொலிவை மிகைப்படுத்தின. தெய்விக அழகு கொண்ட அந்தப் பட்டணத்தில் கொள்முதல்–விற்பனைப் பொருள்கள் ஏராளமாக இருந்தன. பற்பல நாடுகளிலிருந்து வந்த வணிகர்களால், அந்த நகரம் மிகவும் ஏற்றத்துடன் விளங்கியது. (14)

Koviloor Digital Library

தாம் ஸம்ருத்3த4ாம் ஸம்ருத்3த4ார்த2: ஶத்ருக்4நோ ப4ரதாநுஜ: ।
நிரீக்ஷ்ய பரமப்ரீத: பரம் ஹர்ஷமுபாக3மத் ॥ (15)

தஸ்ய பு3த்3தி4: ஸமுத்பந்நா நிவேஶ்ய மது4ராம் புரீம் ।
ராமபாதெ3ள நிரீக்ஷேऽஹம் வர்ஷே த்3வாத3ஶ ஆக3தே ॥ (16)

தத: ஸ தாமமரபுரோபமாம் புரீம் நிவேஶ்ய வை விவித4ஜநாபி4ஸம்வ்ருதாம் ।
நராதி4போ ரகு4பதிபாத3த3ர்ஶநே த3தே4 மதிம் ரகு4குலவம்ஶவர்த4ந: ॥ (17)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 ஸப்ததிதம: ஸர்க3: ॥

ஏகஸப்ததிதம: ஸர்க3:

ஶத்ருக்4நஸ்ய அயோத்4யாகமநம்

ததோ த்3வாத3ஶமே வர்ஷே ஶத்ருக்4நோ ராமபாலிதாம் ।
அயோத்4யாம் சகமே க3ந்துமல்பப்4ருத்யப3லாநுக3: ॥ (1)

ததோ மந்த்ரிபுரோக3ாம்ஶ்ச ப3லமுக்2யாந்நிவர்த்ய ச ।
ஜக3ாம ஹயமுக்2யைஶ்ச ரத2ாநாம் ச ஶதேந ஸ: ॥ (2)

ஸ க3த்வா க3ணிதாந் வாஸாந் ஸப்தாஷ்டௌ ரகு4நந்த3ந: ।
வால்மீக்யாஶ்ரமமாக3த்ய வாஸம் சக்ரே மஹாயஶா: ॥ (3)

ஸோऽபி4வாத்3ய தத: பாதெ3ள வால்மீகே: புருஷர்ஷப4: ।
பாத்3யமர்க்4யம் தத2ாதித்2யம் ஜக்3ராஹ முநிஹஸ்தத: ॥ (4)

ப3ஹுரூபா: ஸுமது4ரா: கத2ாஸ்தத்ர ஸஹஸ்ரஶ: ।
கத2யாமாஸ ஸ முநி: ஶத்ருக்4நாய மஹாத்மநே ॥ (5)

உவாச ச முநிர்வாக்யம் லவணஸ்ய வத4ாஶ்ரிதம் ।
ஸுது3ஷ்கரம் க்ருதம் கர்ம லவணம் நிக்4நதா த்வயா ॥ (6)

ப3ஹவ: பார்தி2வா: ஸௌம்ய ஹதா: ஸப3லவாஹநா: ।
லவணேந மஹாப3ாஹோ யுத்4யமாநா மஹாப3லா: ॥ (7)

ஸ த்வயா நிஹத: பாபோ லீலயா புருஷர்ஷப4 ।
ஜக3தஶ்ச ப4யம் தத்ர ப்ரஶாந்தம் தவ தேஜஸா ॥ (8)

ராவணஸ்ய வதோ4ா கோ4ரோ யத்நேந மஹதா க்ருத: ।
இத3ம் து ஸுமஹத் கர்ம த்வயா க்ருதமயத்நத: ॥ (9)

ப்ரீதிஶ்சாஸ்மிந் பரா ஜாதா தே3வாநாம் லவணே ஹதே ।
பூ4தாநாம் சைவ ஸர்வேஷாம் ஜக3தஶ்ச ப்ரியம் க்ருதம் ॥ (10)

Koviloor Digital Library

தன்னுடைய குறிக்கோள் நிறைவேற்றப்பட்டதனால் அகமகிழ்ந்த பரதன் தம்பியான சத்ருக்னன், செல்வச் செழுமையுடன் சீரும் சிறப்புமாக ஒளிவீசும் நகரத்தை ஆட்சி புரிவது கண்டு பேரானந்தம் அடைந்தான். (15)

மதுராபுரியில் வசிக்கத் தொடங்கி பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவடைந்தவுடன், 'அயோத்தி சென்று இராமசந்திரமூர்த்தியின் தாமரைத் திருவடிகளை வணங்கவேண்டும்' என்ற எண்ணம் தோன்றிற்று. (16)

பலவகையான மக்கள் நிரம்பியதும், தேவபட்டணம் போல் சோபிப்பதுமான அந்த நகரத்தை மேம்படுத்திய மன்னன் சத்ருக்னன், ரகுகுல மாணிக்கமான இராமபிரானை நேரில் கண்டு வணங்குவதில் மனத்தைச் செலுத்தினான். (17)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எழுபதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தொன்று

சத்ருக்னன் அயோத்திக்குப் புறப்படுதல்

(மதுராபுரியில்) சத்ருக்னன் பன்னிரண்டு ஆண்டுகள் இருந்த பின்னர், இராமனால் பரிபாலிக்கப்படும் அயோத்திக்குச் செல்வதற்காகக் குறைந்த அளவு ஏவலாளர்–படைவீரர்களுடன் புறப்பட்டான். (1)

அமைச்சர்கள் மற்றும் படைத்தலைவர்களை நகரப் பாதுகாப்பிற்கு அனுப்பிவிட்டு, சிறந்த குதிரைகள் பூட்டிய நூறு தேர்களுடன் மட்டும் சென்றான். (2)

பயணம் செல்லும் வழியில், ஏழெட்டு இடங்களில் படைகளுடன் தங்கிய சத்ருக்னன், வால்மீகி முனிவரின் ஆசிரமத்தை அடைந்து, அங்கே சில நாள்கள் வசித்தான். (3)

ஆணேறு போன்ற அவன், ஆசிரமத்திற்குள் சென்றதும் வால்மீகியின் பாதங்களில் பணிந்தான். அவர் அளித்த பாத்யம், அர்க்யம் முதலிய விருந்துபசாரங்களை ஏற்றுக் கொண்டான். (4)

பெருமனம் படைத்த சத்ருக்னனுக்குச் சுவைமிக்க ஆயிரக்கணக்கான கதைகளைப் பல வடிவங்களில் எடுத்துக் கூறினார், மாமுனிவர் வால்மீகி. (5)

லவணனை வதம் செய்தது பற்றிக் கூறுகையில், "லவணனை மாய்ப்பது என்பது அரும்பெரும் செயல். அதை நீ செய்திருக்கிறாய்!" என்று பாராட்டினார். (6)

"செல்வனே! தோள்வலி மிக்கவனே! பெரும்பலசாலிகளான அநேக மன்னர்கள், படை–வாகனங்களோடுகூட லவணனால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். (7)

புருஷோத்தமனே! மாபாவியான அவன் வெகு எளிதாக உன்னால் கொல்லப்பட்டான்! அவன் காரணமாக, உலகத்தைக் கவ்வியிருந்த பயம் நீங்கிப் போய்விட்டது. (8)

செயற்கரிய இராவணனுடைய வதம், பயங்கரமான பல நிகழ்வுகளுக்குப் பின், பெருமுயற்சி எடுத்து நடைபெற்றது. ஆனால், (லவண வதம் என்ற) இந்த மாபெரும் செயல், உன்னால் எளிதில் நிறைவேற்றப்பட்டது. (9)

லவணன் மாய்ந்ததில் தேவதைகளுக்கு மிகவும் மனமகிழ்ச்சி உண்டாயிற்று. எல்லா உலகங்களிலுமுள்ள எல்லா உயிர்ப்பிராணிகளுக்கும் நன்மையும் செய்ததாயிற்று. (10)

Koviloor Digital Library

தச்ச யுத்3த4ம் மயா த்3ருஷ்டம் யத2ாவத் புருஷர்ஷப4 ।
ஸப4யாம் வாஸவஸ்யாத2 உபவிஷ்டேந ராக4வ ॥ (11)

மமாபி பரமா ப்ரீதிர்ஹ்ருதி3 ஶத்ருக்4ந வர்ததே ।
உபாக்4ராஸ்யாமி தே மூர்த்4நி ஸ்நேஹஸ்யைஷா பரா க3தி: ॥ (12)

இத்யுக்த்வா மூர்த்4நி ஶத்ருக்4நமுபாக்4ராய மஹாமுநி: ।
ஆதித்2யமகரோத்தஸ்ய யே ச தஸ்ய பத3ாநுக3ா: ॥ (13)

ஸ பு4க்த்வாந்நரஶ்ரேஷ்டே2ா கீ3தமாது4ர்யமுத்தமம் ।
ஶுஶ்ராவ ராமசரிதம் தஸ்மிந் காலே யத2ாக்ரமம் ॥ (14)

தந்த்ரீலயஸமாயுக்தம் த்ரிஸ்த2ாநகரணாந்விதம் ।
ஸம்ஸ்க்ருதம் லக்ஷணோபேதம் ஸமதாலஸமந்விதம் ॥
ஶுஶ்ராவ ராமசரிதம் தஸ்மிந் காலே புரா க்ருதம் ॥ (15)

தாந்யக்ஷராணி ஸத்யாநி யத2ாவ்ருத்தாநி பூர்வஶ: ।
ஶ்ருத்வா புருஷஶார்தூ3லோ விஸம்க்ஞோ ப3ாஷ்பலோசந: ॥ (16)

ஸ முஹூர்தமிவாஸம்க்ஞோ விநிஶ்வஸ்ய முஹுர்முஹு: ।
தஸ்மிந் கீ3தே யத2ாவ்ருத்தம் வர்தமாநமிவாஶ்ருணோத் ॥ (17)

பத3ாநுக3ாஶ்ச யே ராக்ஞஸ்தாம் ஶ்ருத்வா கீ3திஸம்பத3ம் ।
அவாங்முக2ாஶ்ச தீ3நாஶ்ச ஆஶ்சர்யமிதி சாப்3ருவந் ॥ (18)

பரஸ்பரம் ச யே தத்ர ஸைநிகா: ஸம்ப3ப4ாஷிரே ।
கிமித3ம் க்வ ச வர்தாம: கிமேதத் ஸ்வப்நத3ர்ஶநம் ॥
அர்தே2ா யோ ந: புரா த்3ருஷ்டஸ்தமாஶ்ரமபதே3 புந: ॥ (19)

ஶ்ருணும: கிமித3ம் ஸ்வப்நோ கீ3தப3ந்த4ம் ஶ்ரிதோ ப4வேத் ।
விஸ்மயம் தே பரம் க3த்வா ஶத்ருக்4நமித3மப்3ருவந் ॥ (20)

ஸாது4 ப்ருச்ச2 நரஶ்ரேஷ்ட2 வால்மீகிம் முநிபுங்க3வம் ।
ஶத்ருக்4நஸ்த்வப்3ரவீத் ஸர்வாந் கௌதூஹலஸமந்விதாந் ॥ (21)

ஸைநிகாநக்ஷமோऽஸ்மாகம் பரிப்ரஷ்டுமிஹேத்3ருஶ: ।
ஆஶ்சர்யாணி ப3ஹூநீஹ ப4வந்த்யஸ்யாஶ்ரமே முநே: ॥
ந து கௌதூஹலாத்3யுக்தமந்வேஷ்டும் தம் மஹாமுநிம் ॥ (22)

ஏவம் தத்3வாக்யமுக்த்வா ச ஸைநிகாந் ரகு4நந்த3ந: ।
அபி4வாத்3ய மஹர்ஷிம் தம் ஸ்வம் நிவேஶம் யயௌ தத3ா ॥ (23)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 ஏகஸப்ததிதம: ஸர்க3: ॥

Koviloor Digital Library

மனிதருள் மாணிக்கமே! நீயும் லவணனும் செய்யும் போரைக் காண்பதற்காக, இந்திரனுடைய சபாமண்டபமே இடம் பெயர்ந்து போர்முனைக்கு வந்திருந்தது. அப்போது, அந்த அவைக்களத்திலிருந்த நான் போர்க்களக் காட்சிகளைக் கண்களாலேயே கண்டேன். (11)

சத்ருக்னா! உன் செயலால் நானும் மிகவும் திருப்தி அடைந்துள்ளேன். அதனால், (அருகில் வா!) உன் சிரசை நான் முகர்கிறேன். இப்படிச் செய்வது, ஆழமான அன்பின் உயர்ந்த அடையாளமாகும்.'' (12)

இவ்வாறு கூறிய மாமுனிவர், அவனை உச்சிமுகர்ந்து, அவனுக்கும் அவனுடன் வந்திருந்தவர்களுக்கும் விருந்துபசாரம் செய்தார். (13)

உணவு அருந்திய பின்னர், ஓய்வான அந்த நேரத்திற்கு ஏற்ற செவிக்கினிய இசையும் சுவையும் பொருந்திய இராமனுடைய வரலாற்றைக் கேட்டு மகிழ்ந்தான், சத்ருக்னன். (14)

அப்போது அவன் கேட்ட இராமகாதை, செய்யுள் இலக்கியமாக முன்னரே இயற்றப்பட்டிருந்தது. இராமகாதை என்ற குரலிசை வீணை ஒலியோடு ஒத்து வந்தது. குரலிசையில் சொற்கள் எழவேண்டிய இருதயம், கழுத்து மற்றும் தலைப்பகுதியிலிருந்து, மந்தரம்–மத்யமம்–தாரம் முதலான ஸ்வர பேதங்களுடன் தெளிவான உச்சரிப்புடன் சொற்கள் வெளிப்பட்டன. நன்கு செம்மைப்பட்ட மொழியில் இலக்கணம், சந்தஸ், இலக்கிய விதி, இசை விதி ஆகியவற்றிற்கேற்ப அமைக்கப்பட்டு, உரிய தாளங்களுடன் பாடப்பட்டது. (15)

அந்தக் காவியத்தின் ஒவ்வொரு சொல்லும் முன்னர் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நிகழ்ந்தவாறே எடுத்துரைத்தது. (அதனால் மனம் நெகிழ்ந்த) ஆண்புலியான சத்ருக்னன், தன் நினைவிழந்து ஆனந்தக்கண்ணீர் பெருக்கினான். அவன், சிறிதுநேரம் உணர்விழந்து அடிக்கடி பெருமூச்சுவிட்டான். கடந்த கால நிகழ்ச்சிகளை விவரிக்கும் குரலிசையாக இருந்தாலும், நிகழ்காலத்தில் நடப்பது போலவே, அவனுக்குத் தோன்றிற்று. (16,17)

அவனுடன்கூட வந்திருந்தவர்களும், இசையாக வழங்கும் விதத்தில் அமைக்கப்பட்டிருந்த அதைக் கேட்டுப் பேச்சிழந்து போனார்கள்; மனம் உருகினார்கள். ''என்ன ஆச்சரியமான படைப்பு!'' என்று போற்றினார்கள். (18)

சத்ருக்னனுடன் வந்திருந்த படைவீரர்கள், ''என்ன, இது! நாம் எங்கே இருக்கிறோம்? இது வெறும் கனவுக் காட்சியா? நாம் முன்னர் ஒரு சமயம் கண்ணால் பார்த்த நிகழ்ச்சிகளை, அப்போது நடந்த அதே மாதிரியே, இப்போது இந்த ஆசிரமத்தில் இசைவடிவில் கேட்டுக் கொண்டிருக்கிறோமே!'' என்று, தமக்குள் பேசிக்கொண்டார்கள். (19)

''நாம், என்ன, இந்த இசைக்காவியத்தைக் கனவிலா கேட்டுக் கொண்டிருக்கிறோம்?'' என்று மிகவும் வியப்படைந்து, சத்ருக்னனிடம் சென்று கூறினார்கள்— (20)

''மன்னரே! தாங்கள் இந்த விஷயம் பற்றி முனிவரிடம் விசாரியுங்கள்.'' மிகவும் உற்சாகத்துடனிருந்த அவர்கள் அனைவரையும் பார்த்து, ''முனிவருடைய ஆசிரமத்தில், இம்மாதிரி பிரமிப்பூட்டும் பல நிகழ்ச்சிகள் நடைபெறும். விஷயத்தை முற்றிலுமாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற பேராவலினால், அதைப் பற்றியெல்லாம் முனிவரை விசாரிப்பது முறையாகாது'' என்று கூறினான். (21,22)

இவ்வாறு, படைவீரர்களுக்குப் பதில் கூறிவிட்டு, முனிவரை வணங்கிய பின்னர், தன் இருப்பிடத்திற்குள் நுழைந்தான், காகுத்த சத்ருக்னன். (23)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எழுபத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

த்$_3$விஸப்ததிதம: ஸர்க$_3$:

ஶத்ருக்$_4$நராமஸமாக$_3$ம:

தம் ஶயாநம் நரவ்யாக்$_4$ரம் நித்$_3$ரா நாப்$_4$யாக$_3$மத்ததா$_3$ ।
சிந்தயந்தமநேகார்த$_2$ம் ராமகீ$_3$தமநுத்தமம் ॥ (1)

தஸ்ய ஶப்$_3$த$_3$ம் ஸுமது$_4$ரம் தந்த்ரீலயஸமந்விதம் ।
ஶ்ருத்வா ராத்ரிர்ஜகா$_3$மாஶு ஶத்ருக்$_4$நஸ்ய மஹாத்மந: ॥ (2)

தஸ்யாம் நிஶாயாம் வ்யுஷ்டாயாம் க்ருத்வா பௌர்வாஹ்ணிகம் க்ரமம் ।
உவாச ப்ராஞ்ஜலிர்வாக்யம் ஶத்ருக்$_4$நோ முநிபுங்க$_3$வம் ॥ (3)

ப$_4$க$_3$வந் த்$_3$ரஷ்டுமிச்சா$_2$மி ராக$_4$வம் ரகு$_4$நந்த$_3$நம் ।
த்வயாநுஜ்ஞாதமிச்சா$_2$மி ஸஹைபி$_4$: ஸம்ஶிதவ்ரதை: ॥ (4)

இத்யேவம்வாதி$_3$நம் தம் து ஶத்ருக்$_4$நம் ஶத்ருதாபநம் ।
வால்மீகி: ஸம்பரிஷ்வஜ்ய விஸஸர்ஜ ச ராக$_4$வம் ॥ (5)

ஸோऽபி$_4$வாத்$_3$ய முநிஶ்ரேஷ்ட$_2$ம் ரத$_2$மாருஹ்ய ஸுப்ரப$_4$ம் ।
அயோத்$_4$யாமக$_3$மத்தூர்ணம் ராக$_4$வோத்ஸுகத$_3$ர்ஶந: ॥ (6)

ஸ ப்ரவிஷ்ட: புரீம் ரம்யாம் ஶ்ரீமாநிக்ஷ்வாகுநந்த$_3$ந: ।
ப்ரவிவேஶ மஹாபா$_3$ஹுர்யத்ர ராமோ மஹாத்$_3$யுதி: ॥ (7)

ஸ ராமம் மந்த்ரிமத்$_4$யஸ்த$_2$ம் பூர்ணசந்த்$_3$ரநிபா$_4$நநம் ।
பஶ்யந்நமரமத்$_4$யஸ்த$_2$ம் ஸஹஸ்ரநயநம் யதா$_2$ ॥ (8)

அபி$_4$வாத்$_3$ய மஹாத்மாநம் ஜ்வலந்தமிவ தேஜஸா ।
உவாச ப்ராஞ்ஜலிர்வாக்யம் ராமம் ஸத்யபராக்ரமம் ॥ (9)

யதா$_2$ஜ்ஞப்தம் மஹாராஜ ஸர்வம் தத் க்ருதவாநஹம் ।
ஹத: ஸ லவண: பாப: புரீ சாஸ்ய நிவேஶிதா ॥ (10)

த்$_3$வாத$_3$ஶைதாநி வர்ஷாணி த்வாம் விநா ரகு$_4$நந்த$_3$ந ।
நோத்ஸஹேயமஹம் வஸ்தும் த்வயா விரஹிதோ ந்ருப ॥ (11)

ஸ மே ப்ரஸாத$_3$ம் காகுத்ஸ்த$_2$ குருஷ்வாமிதவிக்ரம ।
மாத்ருஹீநோ யதா$_2$ வத்ஸோ ந சிரம் ப்ரவஸாம்யஹம் ॥ (12)

ஏவம் ப்$_3$ருவாணம் ஶத்ருக்$_4$நம் பரிஷ்வஜ்யேத$_3$மப்$_3$ரவீத் ।
மா விஷாத$_3$ம் க்ருதா$_2$: ஶூர நைதத் க்ஷத்ரியசேஷ்டிதம் ॥ (13)

நாவஸீத$_3$ந்தி ராஜாநோ விப்ரவாஸேஷு ராக$_4$வ ।
ப்ரஜா ந: பரிபால்யா ஹி க்ஷத்ரத$_4$ர்மேண ராக$_4$வ ॥ (14)

காலே காலே ச மாம் வீர ஹ்யயோத்$_4$யாமவலோகிதும் ।
ஆக$_3$ச்ச$_2$ த்வம் நரஶ்ரேஷ்ட$_2$ க$_3$ந்தாஸி ச புரம் தவ ॥ (15)

Koviloor Digital Library

ஸர்க்கம் : எழுபத்திரண்டு

சத்ருக்னன், இராமனைச் சந்தித்தல்

மானுடப்புலியான சத்ருக்னன் படுக்கையில் படுத்திருந்தாலும், பல்பொருள் உடையதும் மிக உயர்ந்ததுமான இராம கீதத்தில் மனத்தைச் செலுத்தியிருந்ததால் உறக்கம் வரவில்லை. (1)

வீணையின் நாதத்தோடு சேர்ந்து, இராமனுடைய வரலாறு இசைக்கப்படுவதைக் கேட்டுப் பரவசநிலையில் இருந்த சத்ருக்னனுக்கு இரவுப்பொழுது விரைவாகக் கழிந்தது. (2)

அந்த இரவு கழிந்ததும், காலையில் செய்ய வேண்டிய வைதிகக் கடமைகளை உரியமுறையில் செய்து முடித்துவிட்டு, சத்ருக்னன் மாமுனிவரிடம் வந்து கைகளைக் கூப்பிக் கொண்டு சொன்னான்— ''அருள் அரசே! ரகு குலத்தின் ஆனந்தத்திற்குக் காரணமானவரும் ரகுகுலத் தோன்றலுமான இராமபிரானை, தங்கள் அனுமதி பெற்று, இங்குள்ள தீவிர தவசிகளை உடன் அழைத்துச் சென்று தரிசிக்க விரும்புகிறேன்.'' (3,4)

பகைவர்களை வாட்டியெடுக்கும் சத்ருக்னன், இவ்வாறு பேசியதைக் கேட்ட வால்மீகி முனிவர், அன்புடன் அவனை மார்புறத் தழுவி விடைகொடுத்தனுப்பினார். (5)

இராமபிரானைத் தரிசிக்கத் துடித்துக் கொண்டிருந்த அவன், தலைசிறந்த முனிவரை வணங்கி விடைபெற்று, அழகான ஒரு தேரில் ஏறி வேகமாக அயோத்தியை அடைந்தான். (6)

கவின்மிகு நகரத்தை அடைந்த சத்ருக்னன், பேரொளி பொருந்திய இராமன் இருந்த மண்டபத்திற்குள் பிரவேசித்தான். (7)

முழுநிலவுபோல் தண்ணொளி வீசும் திருமுகம் படைத்தவரும், அமைச்சரவையில் நடுநாயகமாக வீற்றிருந்தவருமான இராமன், தேவர்கள் புடைசூழ கோலாகலமாக வீற்றிருக்கும் இந்திரன்போல் விளங்குவதைக் கண்டான். (8)

எல்லை காணமுடியாத தன்னுடைய பேராற்றலினால் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் மாமன்னரை வணங்கிவிட்டு, சத்திய பராக்கிரமமுடைய இராமன் எதிரில் கைகூப்பிக் கொண்டு (பின்வருமாறு) கூறினான்— (9)

''புவியாளும் வேந்தர் பெருமானே! எவ்வாறு நான் நடந்துக் கொள்ளவேண்டும் என்று தாங்கள் ஆணையிட்டீர்களோ, அவ்வாறே நான் செய்து முடித்துவிட்டேன். பாவியான லவணன் கொல்லப்பட்டுவிட்டான்; மதுராபுரியும் வசப்படுத்திக் கொள்ளப்பட்டது. மன்னரே! ரகுநந்தனரே! தங்களைத் தரிசிக்காமல் எப்படியோ ஒருவாறாகப் பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. இனியும் தங்கள் பிரிவாற்றாமையை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. (10,11)

எல்லை காணமுடியா பராக்கிரமம் உடையவரே! காகுத்தரே! கன்றுக்குட்டி, தன் தாயைவிட்டு வெகுநேரம் பிரிந்திருக்க முடியாததைப் போல, தங்களைப் பிரிந்து என்னால் வாழமுடியாது. (அதனால், 'சரி, இங்கேயே இரு' என்று உத்தரவிட்டு,) எனக்கு அருள்புரிய வேண்டும்.'' (12)

இவ்வாறு கூறிய சத்ருக்னனை, இராமன் மார்புறக் கட்டித் தழுவி, ''வீரனே! கவலைப்படாதே. இவ்வாறு பேசுவது க்ஷத்திரியர்களுக்கு உகந்தது அல்ல'' என்று கூறினார். (13)

ரகுகுல மாணிக்கமே! வெளிநாடுகளில் வசிப்பதற்கு க்ஷத்திரியர்கள் வருத்தப்படக்கூடாது. வேந்தர் குல அறநெறிப்படி, மக்கள் பரிபாலிக்கப்பட வேண்டுமல்லவா? (14)

வீரனே! அவ்வப்போது அயோத்திக்கு வந்து, நீ என்னைச் சந்திக்கலாம். இப்போது, உன் தலைநகருக்கே நீ செல்வாயாக. (15)

Koviloor Digital Library

மமாபி த்வம் ஸுத$_3$யித: ப்ராணைரபி ந ஸம்ஶய: ।
அவஶ்யம் கரணீயம் ச ராஜ்யஸ்ய பரிபாலநம் ॥ (16)

தஸ்மாத்த்வம் வத்ஸ காகுத்ஸ்த$_2$ ஸப்தராத்ரமிஹாவஸ ।
ஊர்த்$_4$வம் க$_3$ந்தாஸி மது$_4$ராம் ஸப்$_4$ருத்யப$_3$லவாஹந: ॥ (17)

ராமஸ்யைதத்$_3$வச: ஶ்ருத்வா த$_4$ர்மயுக்தம் மநோக$_3$தம் ।
ஶத்ருக்$_4$நோ தீ$_3$நயா வாசா பா$_3$ட$_4$மித்யேவ சாப்$_3$ரவீத் ॥ (18)

ஸப்தராத்ரம் ச காகுத்ஸ்தோ$_2$ ராக$_4$வஸ்ய யதா$_2$க்ஞயா ।
உஷ்ய தத்ர மஹேஷ்வாஸோ க$_3$மநாயோபசக்ரமே ॥ (19)

ஆமந்த்ர்ய து மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம் ।
ப$_4$ரதம் லக்ஷ்மணம் சைவ மஹாரத$_2$முபாருஹத் ॥ (20)

தூ$_3$ரமாப்$_4$யாமநுக$_3$தோ லக்ஷ்மணேந மஹாத்மநா ।
ப$_4$ரதேந ச ஶத்ருக்$_4$நோ ஜகா$_3$மாஶு புரம் தத: ॥ (21)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்$_3$விஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

த்ரிஸப்ததிதம: ஸர்க$_3$:

ப்$_3$ராஹ்மணபரிதே$_3$வநம்

ப்ரஸ்தா$_2$ப்ய து ஸ ஶத்ருக்$_4$நம் ப்$_4$ராத்ருப்$_4$யாம் ஸஹ ராக$_4$வ: ।
ப்ரமுமோத$_3$ ஸுகீ$_2$ ராஜ்யம் த$_4$ர்மேண பரிபாலயந் ॥ (1)

தத: கதிபயாஹஸ்ஸு வ்ருத்$_3$தோ$_4$ ஜாநபதோ$_3$ த்$_3$விஜ: ।
ம்ருதம் பா$_3$லமுபாதா$_3$ய ராஜத்$_3$வராமுபாக$_3$மத் ॥ (2)

ருத$_3$ந் ப$_3$ஹுவிதா$_4$ வாச: ஸ்நேஹது$_3$:க$_2$ஸமந்வித: ।
அஸக்ருத் புத்ர புத்ரேதி வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (3)

கிம் நு மே து$_3$ஷ்க்ருதம் கர்ம புரா தே$_3$ஹாந்தரே க்ருதம் ।
யத$_3$ஹம் புத்ரமேகம் த்வாம் பஶ்யாமி நித$_4$நம் க$_3$தம் ॥ (4)

அப்ராப்தயௌவநம் பா$_3$லம் பஞ்சவர்ஷஸஹஸ்ரகம் ।
அகாலே காலமாபந்நம் மம து$_3$:கா$_2$ய புத்ரக ॥ (5)

அல்பைரஹோபி$_4$ர்நித$_4$நம் க$_3$மிஷ்யாமி ந ஸம்ஶய: ।
அஹம் ச ஜநநீ சைவ தவ ஶோகேந புத்ரக ॥ (6)

ந ஸ்மராம்யந்ருதம் ஹ்யுக்தம் ந ச ஹிம்ஸாம் ஸ்மராம்யஹம் ।
ஸர்வேஷாம் ப்ராணிநாம் பாபம் க்ருதம் நைவ ஸ்மராம்யஹம் ॥ (7)

Koviloor Digital Library

(நீ என்னிடம் பேரன்பு கொண்டிருப்பதால் இப்படிப் பேசினாய் – என்பது சரி.) எனக்கும், என் உயிரைக் காட்டிலும் உன்மேல் அதிக அன்பு இருக்கிறது. (நீ, இங்கேயே தங்கிவிடு என்று சொல்லிவிடலாம்தான்.) ஆனால், நாட்டைப் பரிபாலிப்பது என்பது கட்டாயமாகச் செய்ய வேண்டிய கடமை. (16)

என் செல்வமே! காகுத்தனே! ஏழு இரவுகள் நீ இங்கே தங்குவாயாக. அதன் பின்னர், பணியாளர்–படைவீரர்–வாகனங்களோடு மதுராபுரிக்குச் செல்வாயாக.'' (17)

அறநெறிக்கு இணக்கமாக இருந்ததோடு, ஒப்புக்கொள்ளத்தக்கதாகவும் இருந்த இராமனுடைய சொற்களைக் கேட்டு, மெல்லிய குரலில், 'சரி, அப்படியே' என்று பதில் சொன்னான். (18)

இராமனுடைய ஆணைப்படி ஏழு நாட்கள் அங்கே தங்கிவிட்டு, பெரும் வில்லாளியான சத்ருக்னன், தன் பட்டணத்திற்குச் செல்வதற்கு ஆயத்தமானான். (19)

மாட்சிமை மிக்க இராமனிடமும் பரத–லட்சுமணர்களிடமும் விடைபெற்றுக் கொண்டு, மாபெரும் தேரில் ஏறி அமர்ந்து கொண்டான். (20)

அவனை வழியனுப்பி வைப்பதற்காக, பாசம் மிகுந்த பரத–லட்சுமணர்கள் சிறிதுதொலைவு அவனுடன் நடந்து சென்றார்கள். பின்னர், சத்ருக்னன் தேரில் ஏறி, விரைவில் தன் தலைநகரை அடைந்தான். (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எழுபத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து மூன்று

அந்தணர் அரற்றுதல்

சத்ருக்னனை அவனுடைய நாட்டின் தலைநகரத்திற்கு அனுப்பி வைத்த பின்னர், மற்ற சகோதரர்களான பரத–லட்சுமணர்களோடுகூட, அறநெறிப்படி நாட்டை ஆண்டு கொண்டு, மகிழ்ச்சியோடு வசிக்கத் தொடங்கினார், இராமன். (1)

சில நாட்கள் கழிந்தபிறகு, அயோத்தி நகர்ப்புறத்தில் வசிக்கும் ஓர் அந்தணர், இறந்துவிட்ட தன் மகனின் சடலத்தை எடுத்துக் கொண்டு, அரண்மனையின் நுழைவாயிலுக்கு வந்தார். (2)

பாசத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்தும் பலவிதமான சொற்களைக் கூறி அழுதுகொண்டு, 'குழந்தாய்!... என் செல்வமே!' என்று புலம்பியபடி (பின்வருமாறு) அரற்றினார்— (3)

''ஐயகோ!... போன ஜன்மத்தில் நான் என்ன பாவம் செய்தேனோ? இப்போது உயிரிழந்து கிடக்கும் என் ஒரே மகனைக் கண்களால் பார்த்துக் கொண்டிருக்கிறேன். (4)

நீ, இன்னும் சிறுகுழந்தைதான்; யௌவனப் பருவத்தைக்கூட அடையவில்லை. நீ பிறந்து ஐயாயிரம் நாட்களே ஆகின்றன. (பதிநான்கு வயதுகூட நிறையவில்லை.) என் கண்மணியே! என்னைத் துக்கத்தில் ஆழ்த்திவிட்டு, இந்தப் பிஞ்சு வயதில் காலன் வசப்பட்டாயே? (5)

என் செல்வமே! உன் பிரிவாகிற துக்கத்தைத் தாங்க முடியாமல், நானும் உன் அன்னையும் இன்னும் சில நாட்களிலேயே உயிரை விட்டுவிடப் போகிறோம். நான் ஒரு தடவையாவது பொய் பேசியதாக என் நினைவுக்கு வரவில்லை. பிறருக்குத் துன்பம் கொடுத்ததாகவும் நினைவில்லை. எந்த ஓர் உயிர்ப் பிராணிக்கும் கெடுதல் செய்ததாக நினைவே இல்லை. (6,7)

Koviloor Digital Library

கேநாத்$_3$ய து$_3$ஷ்க்ருதேநாயம் ப$_3$ால ஏவ மமாத்மஜ: ।
அக்ருத்வா பித்ருகார்யாணி க$_3$தோ வைவஸ்வதக்ஷயம் ॥ (8)

நேத்$_3$ருஶம் த்$_3$ருஷ்டபூர்வம் மே ஶ்ருதம் வா கே$_4$ாரத$_3$ர்ஶநம் ।
ம்ருத்யுரப்ராப்தகாலாநாம் ராமஸ்ய விஷயே யதா$_2$ ॥ (9)

ராமஸ்ய து$_3$ஷ்க்ருதம் கிஞ்சிந்மஹத$_3$ஸ்தி ந ஸம்ஶய: ।
யதா$_2$ ஹி விஷயஸ்தா$_2$நாம் ப$_3$ாலாநாம் ம்ருத்யுராக$_3$த: ॥ (10)

ந ஹ்யந்யவிஷயஸ்தா$_2$நாம் ப$_3$ாலாநாம் ம்ருத்யுதோ ப$_4$யம் ।
த்வம் ராஜஞ்ஜீவயஸ்வைநம் ப$_3$ாலம் ம்ருத்யுவஶம் க$_3$தம் ॥ (11)

ராஜத்$_3$வாரி மரிஷ்யாமி பத்ந்யா ஸார்த$_4$மநாத$_2$வத் ।
ப்$_3$ரஹ்மஹத்யாம் ததோ ராம ஸமுபேத்ய ஸுகீ$_2$ ப$_4$வ ॥ (12)

ப்$_4$ராத்ருபி$_4$: ஸஹிதோ ராஜந் தீ$_3$ர்க$_4$மாயுரவாப்ஸ்யஸி ।
உஷிதா: ஸ்ம ஸுக$_2$ம் ராஜ்யே தவாஸ்மிந் ஸுமஹாப$_3$ல ॥ (13)

இத$_3$ம் து பதிதம் ஹ்யஸ்மாத்தவ ராம வஶே ஸ்தி$_2$தா: ।
காலஸ்ய வஶமாபந்நா: ஸ்வல்பம் ஹி ந ஹி ந: ஸுக$_2$ம் ॥ (14)

ஸம்ப்ரத்யநாதே$_2$ா விஷய இக்ஷ்வாகூணாம் மஹாத்மநாம் ।
ராமம் நாத$_2$மிஹாஸாத்$_3$ய ப$_3$ாலாந்தகரணம் த்$_4$ருவம் ॥ (15)

ராஜதே$_3$ாஷைர்விபத்$_3$யந்தே ப்ரஜா ஹ்யவிதி$_4$பாலிதா: ।
அஸத்$_3$வ்ருத்தே து ந்ருபதாவகாலே ம்ரியதே ஜந: ॥ (16)

யத்$_3$வா புரேஷ்வயுக்தாநி ஜநா ஜநபதே$_3$ஷு ச ।
குர்வதே ந ச ரக்ஷாஸ்தி தத$_3$ா காலக்ருதம் ப$_4$யம் ॥ (17)

ஸுவ்யக்தம் ராஜதே$_3$ாஷோ ஹி ப$_4$விஷ்யதி ந ஸம்ஶய: ।
புரே ஜநபதே$_3$ சாபி ததோ ப$_3$ாலவதே$_4$ா ஹ்யயம் ॥ (18)

ஏவம் ப$_3$ஹுவிதை$_4$ர்வாக்யைருபருத்$_4$ய முஹுர்முஹு: ।
ராஜாநம் து$_3$:க$_2$ஸந்தப்த: ஸுதம் தமுபகூ$_3$ஹதே ॥ (19)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்ரிஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

சது:ஸப்ததிதம: ஸர்க$_3$:

நாரத$_3$ாகமநம்

ததா து கருணம் தஸ்ய த்$_3$விஜஸ்ய பரிதே$_3$வநம் ।
ஶுஶ்ராவ ராக$_4$வ: ஸர்வம் து$_3$:க$_2$ஶோகஸமந்விதம் ॥ (1)

Koviloor Digital Library

என்னுடைய புதல்வனான இந்தச் சிறுவன், எந்த ஒரு பாவத்தின் காரணமாக, பெற்றோர்க்குச் செய்ய வேண்டிய ஈமக்கடன்களைச் செய்யாமல், யமன் வீட்டிற்குப் போய்விட்டான்? (8)

இளமையிலேயே மரணம் என்ற கோரக்காட்சியை, இராமன் ஆட்சிபுரியும் நாட்டில், இதுவரை பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை. நிச்சயமாக, இராமன் மிகப்பெரிய அநியாயம் செய்திருக்கிறான். அதனால்தான் அவன் நாட்டில், சிறுவர் மரணம் அடைவது (என்ற பாவச்செயல்) தொடங்கியிருக்கிறது. (9,10)

மற்ற நாடுகளில் வசிக்கும் சிறுவர்களுக்கு மரணபயம் இல்லை. (ஏனென்றால், அந்த மன்னர்கள் நீதி தவறாமல் ஆட்சி புரிகிறார்கள்.) மன்னனே! (இராமனே!) காலன் வசப்பட்டுவிட்ட இந்தக் குழந்தையை உயிர்ப்பிப்பாயாக. (11)

(இல்லையென்றால்,) ஆதரவற்றவர்கள் போல், இந்த அரண்மனை வாயிலிலேயே என் மனைவியோடுகூட உயிரை விடப்போகிறேன். இராமா! பிரும்மஹத்தி தோஷம் உன்னைப் பற்றிக் கொள்ளப் போகிறது. அந்த பாவத்தை அனுபவித்துக் கொண்டு பரமசௌக்கியமாக இரு! (பிரும்மஹத்தி பாவம் பற்றிக் கொண்ட பின், உன்னால் சௌக்கியமாக இருக்க முடியுமா, என்ன?) (12)

மகாபராக்கிரமசாலியே! உன்னுடைய நாட்டில் இத்தனை காலம் நாங்கள் சுகமாக வசித்துக் கொண்டிருந்து விட்டோம். (அதனால்,) வேந்தனே! நீயும் உன் சகோதரர்களும் நெடிது காலம் வாழ்வீர்களாக. உன்னுடைய ஆட்சியின் கீழிருந்த எங்களுக்கு மகனின் மரணம் என்ற பெருந்துக்கம் திடீரென ஏற்பட்டுள்ளது. இப்போது, நாங்களும் உயிரை விடப்போகிறோம். அட! உன் நாட்டில் எங்களுக்குத் தினையளவு சுகம் கூடக் கிடைக்கவில்லை. (13,14)

மகாத்மாக்களான இக்ஷ்வாகு வம்சத்தவர்களின் இந்த ராஜ்யம், அநாதையாகப் போய்விட்டது! இராமன், இந்த நாட்டுக்கு அரசனாகிவிட்டானல்லவா? இனிமேல், நிச்சயமாக, சிறுவர்கள் மரணமடையவே செய்வார்கள்! மன்னன், முறைப்படி மக்களைப் பரிபாலிக்காமல் போனால், அந்தப் பாவத்தின் விளைவாக, குடிமக்களுக்கு இத்தகைய ஆபத்துக்கள் ஏற்படத்தான் செய்யும். மன்னன் நெறிதவறினால், மக்கள் இளவயதிலேயே மரணம் அடைவார்கள். (15,16)

அல்லது, நகரத்திலும் நகரத்தின் புறப்பகுதிகளிலும் வசிக்கும் மக்கள், முறைதவறி பாவச் செயல்களில் ஈடுபடும்போது, அதைத் தடுத்து நிறுத்த அதிகாரப் பொறுப்புள்ளவர்கள் இல்லாமல் போனால், இளவயதிலேயே மரணம் என்ற அச்சம் ஏற்படக்கூடும். இப்போது, முதன்முறையாக ஒரு பாலகனுக்கு மரணம் நேர்ந்திருக்கிறது – என்பதிலிருந்தே, நகரத்திலோ அல்லது நாட்டின் வேறு ஒரு பகுதியிலோ, அரசன் தவறு செய்திருக்கிறான் என்பது தெளிவாகிவிட்டது.'' (17,18)

அரசமாளிகையின் நுழைவாயிலில் நின்று, இவ்வாறாக புலம்பியபடி பற்பல சொற்களால் தன் மனவேதனையை வெளிக்காட்டி, தன் மகனைக் கட்டியணைத்து மார்புறத் தழுவிக் கொண்டார் (அந்த அந்தணர்). (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எழுபத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்து நான்கு

நாரதர் வந்தார்!

அந்த அந்தணரின் துயரமும் கவலையும் பரிதவிப்பும் நிரம்பிய புலம்பலை, இராமன் கேட்டார். (1)

Koviloor Digital Library

ஸ து$_3$:கே$_2$ந ச ஸந்தப்தோ மந்த்ரிணஸ்தாநுபாஹ்வயத் ।
வஸிஷ்ட$_2$ம் வாமதே$_3$வம் ச ப்$_4$ராதரௌ ஸஹநைக$_3$மாந் ॥ (2)

ததோ த்$_3$விஜா வஸிஷ்டே$_2$ந ஸார்த$_4$மஷ்டௌ ப்ரவேஶிதா: ।
ராஜாநம் தே$_3$வஸங்காஶம் வர்த$_4$ஸ்வேதி ததோऽப்$_3$ருவந் ॥ (3)

மார்கண்டே$_3$யோऽத$_2$ மௌத்$_3$க$_3$ல்யோ வாமதே$_3$வஶ்ச காஶ்யப: ।
காத்யாயநோऽத$_2$ ஜாப$_3$லிர்கௌ$_3$தமோ நாரத$_3$ஸ்தத$_2$ா ॥ (4)

ஏதே த்$_3$விஜர்ஷப$_4$ா: ஸர்வ ஆஸநேஷூபவேஶிதா: ।
மஹர்ஷீந் ஸமநுப்ராப்தாநபி$_4$வாத்$_3$ய க்ருதாஞ்ஜலி: ॥ (5)

மந்த்ரிணோ நைக$_3$மாம்ஶ்சைவ யத$_2$ார்ஹமநுகூலத: ।
தேஷாம் ஸமுபவிஷ்டாநாம் ஸர்வேஷாம் தீ$_3$ப்ததேஜஸாம் ॥
ராக$_4$வ: ஸர்வமாசஷ்டே த்$_3$விஜோऽயமுபரோத$_4$தே ॥ (6)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ராக்ஞோ தீ$_3$நஸ்ய நாரத$_3$: ।
ப்ரத்யுவாச ஶுப$_4$ம் வாக்யம்ருஷீணாம் ஸந்நிதௌ$_4$ ந்ருபம் ॥ (7)

ஶ்ருணு ராஜந் யத$_2$ாகாலே ப்ராப்தோ ப$_3$ாலஸ்ய ஸம்க்ஷய: ।
ஶ்ருத்வா கர்தவ்யதாம் ராஜந் குருஷ்வ ரகு$_4$நந்த$_3$ந ॥ (8)

புரா க்ருதயுகே$_3$ ராஜந் ப்$_3$ராஹ்மணா வை தபஸ்விந: ।
அப்$_3$ராஹ்மணஸ்தத$_3$ா ராஜந்ந தபஸ்வீ கத$_2$ஞ்சந ॥ (9)

தஸ்மிந் யுகே$_3$ ப்ரஜ்வலிதே ப்$_3$ரஹ்மபூ$_4$தே த்வநாவ்ருதே ।
அம்ருத்யவஸ்தத$_3$ா ஸர்வே ஜஜ்ஞிரே தீ$_3$ர்க$_4$த$_3$ர்ஶிந: ॥ (10)

ததஸ்த்ரேதாயுக$_3$ம் நாம மாநவாநாம் வபுஷ்மதாம் ।
க்ஷத்ரியாஸ்தத்ர ஜாயந்தே பூர்வேண தபஸாந்விதா: ॥ (11)

வீர்யேண தபஸா சைவ தேऽதி$_4$கா: பூர்வஜந்மநி ।
மாநவா யே மஹாத்மாநஸ்தத்ர த்ரேதாயுகே$_3$ யுகே$_3$ ॥ (12)

ப்$_3$ரஹ்மக்ஷத்ரம் ச தத் ஸர்வம் யத்பூர்வமவரம் ச யத் ।
யுக$_3$யோருப$_4$யோராஸீத் ஸமவீர்யஸமந்விதம் ॥ (13)

அபஶ்யம்ஸ்து ந தே ஸர்வே விஶேஷமதி$_4$கம் தத: ।
ஸ்த$_2$ாபநம் சக்ரிரே தத்ர சாதுர்வர்ண்யஸ்ய ஸம்மதம் ॥ (14)

தஸ்மிந் யுகே$_3$ ப்ரஜ்வலிதே த$_4$ர்மபூ$_4$தே ஹ்யநாவ்ருதே ।
அத$_4$ர்ம: பாத$_3$மேகம் து பாதயத் ப்ருதி$_2$வீதலே ॥
அத$_4$ர்மேண ஹி ஸம்யுக்தஸ்தேஜோ மந்த$_3$ம் ப$_4$விஷ்யதி ॥ (15)

ஆமிஷம் யச்ச பூர்வேஷாம் ராஜஸம் ச மலம் ப்$_4$ருஶம் ।
அந்ருதம் நாம தத்$_3$பூ$_4$தம் பாதே$_3$ந ப்ருதி$_2$வீதலே ॥ (16)

Koviloor Digital Library

அவர் துக்கத்தினால் துடித்துப் போனார். அமைச்சர்களையும், வசிஷ்ட–வாமதேவர்களையும் சகோதரர்களையும் ஊர்ப் பிரமுகர்களையும் அழைப்பித்தார். (2)

வசிஷ்டரோடுகூட எட்டு வேதவித்தகர்கள் வந்தார்கள். தேவரைப் போல் ஒளிவீசும் மன்னனை நோக்கி, 'வாழ்க!' என்று வாழ்த்தினார்கள். மார்க்கண்டேயர், மௌத்கல்யர், வாமதேவர், காசியபர், காத்யாயனர், ஜாபாலி, கௌதமர் மற்றும் நாரதர் ஆகிய எண்மர் வந்திருந்தார்கள். (3,4)

வேதோத்தமர்களான இவர்கள் எல்லோரும் ஆசனத்தில் அமர்த்தப்பட்டார்கள். வந்திருந்த அந்த முனிவர்களைக் கைகூப்பி வணங்கிய இராமன், தானும் ஓர் இருக்கையில் அமர்ந்து கொண்டார். அமைச்சர்களையும் பிரமுகர்களையும் உரியமுறையில் வரவேற்றார். அறிவாற்றல் மிக்க அவர்கள் எல்லோரும் தத்தம் இருக்கையில் உட்கார்ந்து கொண்டதும், இராமன், எல்லாவற்றையும் விவரமாக எடுத்துரைத்து, ''ஓர் அந்தணர் அரச மாளிகையின் நுழைவாயிலில் புலம்பிக் கொண்டு நிற்கிறார்'' என்று கூறினார். (5,6)

மிகவும் பரிதவிப்புடன் மன்னர் கூறியதைக் கேட்ட நாரதர், முனிவர்கள் முன்னிலையில் தெளிவாகப் பதில் கூறினார்— (7)

''பார்வேந்தே! உரியகாலத்திற்கு முன்னதாகவே இந்தப் பையனுக்கு ஏன் மரணம் ஏற்பட்டது? என்பதைக் கூறுகிறேன். ரகுநந்தனா! அதைக் கேட்டபின் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அதன்படி செய்யுங்கள். முன்னர் கிருதயுகத்தில், அந்தணர்கள் மட்டுமே தபஸ்விகளாக இருந்தார்கள். மன்னரே! அந்தணர் அல்லாதார் எவ்வித தவமும் செய்வதில்லை. (8,9)

அந்த யுகம், தவம் செய்பவர்களின் ஆன்ம ஒளியால் பிரகாசித்துக் கொண்டிருந்தது. வேதவித்தகர்கள் மதிக்கப்பட்டார்கள். அக்காலத்தில், அறநெறி அறியாதவர் எவருமே இல்லை. அதனால், அந்த யுகத்திலிருந்த மக்கள், இளவயது மரணம் இல்லாமலும், முக்காலமும் அறிந்தவர்களாகவும் இருந்தார்கள். (10)

அதற்குப் பின்னர், உடல் வலிமை கொண்டவர்களான க்ஷத்திரியர்களுக்குப் பெருமை சேர்க்கும் திரேதாயுகம் வந்தது. அந்த யுகத்தில், முன் யுகத்தைப் போல் தவம் செய்யும் சீரிய நோக்குடன் கூடிய க்ஷத்திரியர்கள் தோன்றினார்கள். (11)

ஆனால், திரேதாயுக மக்களில், மகாத்மா என்று கருதப்பட்டவர்களைக் காட்டிலும், அதற்கு முன் யுகத்திலிருந்தவர்கள் தவத்திலும் பராக்கிரமத்திலும் சிறந்து விளங்கினார்கள். (12)

எனவே, இரண்டு யுகங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, முதலாவது யுகத்தில் அந்தணர்கள் மதிப்பு மிக்கவர்களாகவும், க்ஷத்திரியர்கள் சற்றுக் கீழ்நிலையிலும் இருந்தாலும், திரேதாயுகத்தில் க்ஷத்திரியர்கள் மேல்நிலைக்கு உயர்ந்து, அந்தணர்களுக்கு நிகராக விளங்கினார்கள். அந்தச் சமயத்தில் அறநூல் ஆசிரியர்கள் (மனு முதலியோர்) அந்தணர்–க்ஷத்திரியர்களிடையே ஏற்றத்தாழ்வு அல்லது தனிச்சிறப்பு எதனையும் காணாததால், எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில், மக்கட்சமுதாயத்தை நான்கு வர்ணங்களாகப் பாகுபாடு செய்து உறுதிப்படுத்தினார்கள். (13,14)

கிருதயுகத்தில் தருமம் மட்டுமே பிரதானமாக இருந்து வந்தது. (அதனால், பாவம் தோன்றுவதற்கு வாய்ப்பே இல்லாமல் இருந்தது.) ஆனால், இப்போது அதருமத்தின் ஒரு பாதம் மண்ணுலகில் பதிந்துள்ளது. மக்களின் மனத்தில் மாசுபடியத் தொடங்கிவிட்டதால், அவர்களுடைய சான்றாண்மை மெல்ல மெல்ல குறையத் தொடங்கும். (15)

சத்திய(கிருத)யுக மக்களால் ராஜஸ குணத்தை வளர்க்கக் கூடிய புலனின்ப நுகர்ச்சிக்கான எந்தப் பொருள்கள் வெறும் கழிவுப் பொருள்கள் என்று ஒதுக்கப்பட்டனவோ, அவைகள், (இந்த யுகத்தில்) 'அசத்தியம்' என்ற பெயரைப் பெற்று, மண்ணுலகில் ஒரு பாதத்தை ஊன்றியிருக்கின்றன. (16)

Koviloor Digital Library

அந்ருதம் பாதயித்வா து பாத3மேகமத4ர்மத: ।
தத: ப்ராது3ஷ்க்ருதம் பூர்வமாயுஷ: பரிநிஷ்டி2தம் ॥ (17)

பாதிதே த்வந்ருதே தஸ்மிந்நத4ர்மே ச மஹீதலே ।
ஶுப4ாந்யேவாசரல்லோக: ஸத்யத4ர்மபராயணா: ॥ (18)

த்ரேதாயுகே3 ச வர்தந்தே ப்3ராஹ்மணா: க்ஷத்ரியாஶ்ச யே ।
தபோऽதப்யந்த தே ஸர்வே ஶுஶ்ருஷாமபரே ஜநா: ॥ (19)

ஸ த4ர்ம: பரமஸ்தேஷாம் வைஶ்யஶூத்ரம் ஸமாக3மத் ।
பூஜாம் ச ஸர்வவர்ணாநாம் ஶூத்3ராஶ்சக்ருர்விஶேஷத: ॥ (20)

ஏதஸ்மிந்நந்தரே தேஷாமத4ர்மே சாந்ருதே ச ஹ ।
தத: பூர்வே ப்4ருஶம் ஹ்ராஸமக3மந்ந்ருபஸத்தம ॥ (21)

தத: பாத3மத4ர்ம: ஸ த்3விதீயமவதாரயத் ।
ததோ த்3வாபரஸம்க்ஞஸ்ய யுக3ஸ்ய ஸமஜாயத ॥ (22)

தஸ்மிந் த்3வாபரஸம்க்ஞே து வர்தமாநே யுக3க்ஷயே ।
அத4ர்மஶ்சாந்ருதம் சைவ வவ்ருதே4 புருஷர்ஷப4 ॥ (23)

தஸ்மிந் த்3வாபரஸங்க்2யாதே தபோ வைஶ்யாந் ஸமாவிஶத் ।
த்ரிப்4யோ யுகே3ப்4யஸ்த்ரீந் வர்ணாந் க்ரமாத்3வை தப ஆவிஶத் ॥ (24)

த்ரிப்4யோ யுகே3ப்4யஸ்த்ரீந் வர்ணாந் த4ர்மஶ்ச பரிநிஷ்டி2த: ।
ந ஶூத்3ரோ லப4தே த4ர்மம் யுக3தஸ்து நரர்ஷப4 ॥ (25)

ஹீநவர்ணோ ந்ருபஶ்ரேஷ்ட2 தப்யதே ஸுமஹத்தப: ।
ப4விஷ்யச்சூ2த்3ரயோந்யாம் வை தபஶ்சர்யா கலௌ யுகே3 ॥ (26)

அத4ர்ம: பரமோ ராஜந் த்3வாபரே ஶூத்3ரஜந்மந: ।
ஸ வை விஷயபர்யந்தே தவ ராஜந் மஹாதபா: ॥
அத்3ய தப்யதி து3ர்பு3த்3தி4ஸ்தேந ப3ாலவதே4ா ஹ்யயம் ॥ (27)

யோ ஹ்யத4ர்மமகார்யம் வா விஷயே பார்தி2வஸ்ய து ।
கரோதி சாஶ்ரீமூலம் தத் புரே வா து3ர்மதிர்நர: ॥
க்ஷிப்ரம் ச நரகம் யாதி ஸ ச ராஜா ந ஸம்ஶய: ॥ (28)

அதீ4தஸ்ய ச தப்தஸ்ய கர்மண: ஸுக்ருதஸ்ய ச ।
ஷஷ்ட2ம் பஜ4தி ப4ாக3ம் து ப்ரஜா த4ர்மேண பாலயந் ॥ (29)

ஷட்3ப4ாக3ஸ்ய ந பே4ாக்தாஸௌ ரக்ஷதே ந ப்ரஜா: கத2ம் ।
ஸ த்வம் புருஷஶார்தூ3ல மார்க3ஸ்வ விஷயம் ஸ்வகம் ॥
து3ஷ்க்ருதம் யத்ர பஶ்யேத2ாஸ்தத்ர யத்நம் ஸமாசர ॥ (30)

Koviloor Digital Library

இவ்வாறாக அதருமமானது அசத்தியம் என்ற ஒரு பாதத்தைப் பதித்து, இந்த யுகத்தில் மக்களின் ஆயுளை எல்லைப்படுத்திவிட்டது. அதனால், அதருமத்தின் 'பொய்' என்ற பாதம் பூவுலகில் பதிந்துவிட்டபடியால், (பொய்யின் தீய விளைவுகளிலிருந்து தப்பித்துக் கொள்ள விரும்பிய) சான்றோர்கள் சத்தியத்தையும் அறநெறியையும் கடைப்பிடிக்க உறுதிபூண்டு நற்கர்மங்களையே செய்து வருகிறார்கள். (17,18)

திரேதாயுகத்தில், அந்தணர்களும் க்ஷத்திரியர்களும் தவம் செய்து வருகிறார்கள். (தவம் செய்யும் உரிமையைப் பெற்றுள்ளார்கள்.) மற்றவர்கள், இவர்களுக்குச் சேவை செய்து வருகிறார்கள். வணிக–வேளாள வர்ணத்தவர்களுக்கு, மற்ற இரு வர்ணத்தைச் சேர்ந்த மக்களுக்குச் சேவை செய்வது என்பது சுதர்மமாக (இயல்பான வாழ்க்கை நெறியாக) வந்தமைந்தது. குறிப்பாக, மற்ற மூன்று வர்ணத்தவர்களுக்கும் வாழ்க்கையில் இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கும் சிறப்புப் பணியைப் பெற்றார்கள், வேளாளர்கள். (19,20)

மாட்சிமை மிக்க மன்னரே! இதனிடையில், திரேதாயுகம் முடிவடையும் காலம் நெருங்கி வரும்போது, வணிக–வேளாளர்களை அதருமத்தின் ஒரு பகுதியான பொய் (அசத்தியம்) வசப்படுத்திக் கொள்கிறது. அதன் விளைவாக, முதல் இரு வர்ணத்தைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். (விவசாயம், பசுப்பராமரிப்பு இல்லாமல் போவதால், உணவு இல்லாமலும் வைதிகச் சடங்குகளை நிறைவேற்ற முடியாமலும் முதல் இரு வர்ணத்தவர்கள் தவித்துப் போவார்கள்.) பின்னர், அதருமம் தன்னுடைய இரண்டாவது பாதத்தை மண்ணுலகில் பதிக்கிறது. அதனால், அந்த யுகத்திற்குத் துவாபரம் (இரண்டாவது பாதம்) என்ற பெயர் உண்டாயிற்று. (21,22)

ஆண்மைக் காளையே! துவாபரம் என்று பெயர் பெற்ற அந்த யுகத்தில், அதருமத்தின் இரண்டு பாதங்களும் நிலைபெற்றுவிட்டதால், அறநெறி பிறழ்தல், பொய் என்னும் இரண்டும் பெருகத் தொடங்குகின்றன. துவாபர யுகத்தில், வைசியர்களும் தவம் செய்யும் உரிமையைப் பெறுகிறார்கள். இவ்விதம் மூன்று யுகங்களில், வரிசைக்கிரமமாக, முதல் மூன்று வர்ணத்தவர்களும் தவம் செய்யும் அதிகாரத்தை அடைந்தார்கள். (23,24)

மக்கட்தலைவனே! மூன்று யுகங்களிலும், மூன்று வர்ண மக்களின் ஆதரவில், தவம் என்னும் அறநெறி நிலைத்து நின்றது. ஆனால், இந்த மூன்று யுகங்களிலும், தவம் என்னும் அறநெறியைக் கைக்கொள்ளும் உரிமையை வேளாளர்கள் அடையவில்லை. (25)

வேந்தர் வேந்தே! தாழ்ந்த குடியில் பிறந்த மனிதர்களும், கடுமையான தவநெறியை மேற்கொள்ளும் (கெட்ட) காலம் வரப்போகிறது. கலியுகம் வந்ததும், வேளாளர் குடியில் தோன்றுபவர்களும் (அவர்களுக்கு உரியது அல்லாத) தவநெறியில் ஈடுபடுவார்கள். (26)

மன்னரே! துவாபரயுகத்தில், வேளாள மக்களுக்குத் தவநெறி அறநெறியாக விதிக்கப்படவில்லை. (இப்போது நடக்கும் திரேதாயுகத்தில் முதல் இரு வர்ணத்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் தவம் செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.) உன்னுடைய நாட்டின் எல்லைக்குள் யாரோ ஒரு கெடுமதி படைத்த வேளாளன் கடுந்தவமியற்றி வருகிறான். அதனால்தான் சிறுபாலகனுக்கு மரணம் ஏற்பட்டிருக்கிறது. (27)

அறநெறி வழுவிய செயலைச் செய்கிறவன் அல்லது தான் செய்யக்கூடாத செயலைச் செய்கிறவன், எந்த நாட்டில் வாழ்கிறானோ, அந்த நாட்டின் மன்னனுடைய செல்வச்செழுமை, பெருமை அழிந்து போகின்றன. அந்த மன்னன் விரைவில் நரகத்தில் வீழ்கிறான் என்பதில் ஐயமில்லை. எந்த மன்னன் அறநெறி பிறழாது மக்களைப் பரிபாலித்து வருகிறானோ, அவன் குடிமக்களின் வேதாத்யயனம், தவம் மற்றும் நற்செயல்களின் பயனில் ஆறில் ஒரு பங்கைப் பெறுகிறான். (28,29)

குடிமக்களின் புண்ணியத்தில் ஆறில் ஒரு பங்கைப் பெறுகிற மன்னன், அவர்களைக் காப்பாற்ற வேண்டாமா? ஆண்வேங்கையே! உன் ராஜ்யத்தில், செய்யக்கூடாத செயல் எங்கே செய்யப்படுகிறது? என்பதைத் தேடிக் கண்டுபிடி. (30)

Koviloor Digital Library

ஏவம் சேத்$_3$த$_4$ர்மவ்ருத்$_3$தி$_4$ஶ்ச ந்ருணாம் சாயுர்விவர்த$_4$நம் ।
ப$_4$விஷ்யதி நரஶ்ரேஷ்ட$_2$ ப$_3$ாலஸ்யாஸ்ய ச ஜீவிதம் ॥ (31)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ சது:ஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

பஞ்சஸப்ததிதம: ஸர்க$_3$:

ஶம்பூ$_3$கதப:

நாரத$_3$ஸ்ய து தத்$_3$வாக்யம் ஶ்ருத்வாம்ருதமயம் தத$_3$ா ।
ப்ரஹர்ஷமதுலம் லேபே$_4$ லக்ஷ்மணம் சேத$_3$மப்$_3$ரவீத் ॥ (1)

க$_3$ச்ச$_2$ ஸௌம்ய த்$_3$விஜஶ்ரேஷ்ட$_2$ம் ஸமாஶ்வாஸய ஸுவ்ரதம் ।
ப$_3$ாலஸ்ய து ஶரீரம் தத்தைலத்$_3$ரோண்யாம் நித$_4$ாபய ॥ (2)

க$_3$ந்தை$_4$ஶ்ச பரமோத$_3$ாரைஸ்தைலைஶ்சாபி ஸுக$_3$ந்தி$_4$பி$_4$: ।
யத$_2$ா ந க்ஷீயதே ப$_3$ாலஸ்தத$_2$ா ஸௌம்ய விதீ$_4$யதாம் ॥ (3)

யத$_2$ா ஶரீரோ ப$_3$ாலஸ்ய கு$_3$ப்த: ஸஞ்ஶிஷ்டகர்மண: ।
விபத்தி: பரிபே$_4$தோ$_3$ வா ந ப$_4$வேச்ச தத$_2$ா குரு ॥ (4)

ஏவமாதி$_3$ஶ்ய காகுத்ஸ்தோ$_2$ லக்ஷ்மணம் ஶுப$_4$லக்ஷணம் ।
மநஸா புஷ்பகம் த$_3$த்$_4$யாவாக$_3$ச்சே$_2$தி மஹாயஶா: ॥ (5)

இங்கி$_3$தம் ஸ து விக்ஞாய புஷ்பகோ ஹேமபூ$_4$ஷித: ।
ஆஜகா$_3$ம முஹூர்தேந ஸமீபம் ராக$_4$வஸ்ய வை ॥ (6)

ஸோऽப்$_3$ரவீத் ப்ரணதோ பூ$_4$த்வா அயமஸ்மி நராதி$_4$ப ।
வஶ்யஸ்தவ மஹாபா$_3$ஹோ கிங்கர: ஸமுபஸ்தி$_2$த: ॥ (7)

பா$_4$ஷிதம் ருசிரம் ஶ்ருத்வா புஷ்பகஸ்ய நராதி$_4$ப: ।
அபி$_4$வாத்$_3$ய மஹர்ஷீம்ஸ்தாந் விமாநம் ஸோऽத்$_4$யரோஹத ॥ (8)

த$_4$நுர்க்$_3$ருஹீத்வா தூணீ ச க$_2$ட்$_3$க$_3$ம் ச ருசிரப்ரப$_4$ம் ।
நிக்ஷிப்ய நக$_3$ரே வீரௌ ஸௌமித்ரிப$_4$ரதாவுபௌ$_4$ ॥ (9)

ப்ராயாத் ப்ரதீசீம் ஹரிதம் விசிந்வம்ஶ்ச ததஸ்தத: ।
உத்தராமக$_3$மச்ச$_2$ரீமாந் தி$_3$ஶம் ஹிமவதா வ்ருதாம் ॥ (10)

அபஶ்யமாநஸ்தத்ராபி ஸ்வல்பமப்யத$_2$ து$_3$ஷ்க்ருதம் ।
பூர்வாமபி தி$_3$ஶம் ஸர்வாமத$_2$ாபஶ்யந்நராதி$_4$ப: ॥ (11)

ப்ரவிஶுத்$_3$த$_4$ஸமாசாராமாத$_3$ர்ஶதலநிர்மலாம் ।
புஷ்பகஸ்தோ$_2$ மஹாபா$_3$ஹுஸ்தத$_3$ா பஶ்யந்நராதி$_4$ப: ॥ (12)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_26_Back

Koviloor Digital Library

ஆண்தகையே! இவ்விதம் (தவற்றைக் கண்டுபிடித்து, தவறு செய்தவனைத் தண்டித்தால்) உன் நாட்டில் அறம் பெருகும்; மக்கள் நீண்டகாலம் வாழ்வார்கள்; இந்தப் பாலகனும் மீண்டும் உயிர் பெறுவான்.'' (31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எழுபத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தைந்து

உரிமையில்லாதவன் செய்த தவம்

நாரதர் கூறிய அமுதமொழிகளைக் கேட்ட இராமன், மிகவும் மகிழ்ச்சியடைந்து (அருகிலிருந்த) இலக்குவனைப் பார்த்துக் கூறினார்— (1)

''செல்வமே! விரைவாகச் சென்று, நல்விரதங்களைக் கடைப்பிடிக்கும் அந்தணோத்தமருக்கு ஆறுதல் கூறு. அத்துடன், மிகவும் மணமுள்ள எண்ணெய்கள் நிறைந்த கொப்பரையில், சிறுவனின் உடலுக்கு எவ்வித நலிவும் ஏற்படாத வகையில் அமிழ்த்தி வைக்கும்படி ஏற்பாடு செய். (2,3)

நற்கர்மங்களைச் செய்யும் இந்தச் சிறுவனின் உடல், கரைந்து போகாமலும் பின்னப்படாமலும் பாதுகாக்கப்படும் விதமான ஏற்பாடுகளைச் செய்.'' (4)

கவின்மிகு அங்கங்களையுடைய இலக்குவனிடம் இவ்வாறு கூறிய காகுத்த இராமன், 'புஷ்பகமே! உடனே வா' என்று மனத்திற்குள் நினைத்தார். (5)

இராமபிரானுடைய எண்ணத்தை அறிந்து கொண்ட புஷ்பக விமானத்தின் அதிதேவதை, பொன் அணிகலன்கள் பூண்டு, வெகுவிரைவில் அவரிடம் வந்து சேர்ந்தது. (6)

''மன்னரே! அடியேன் வந்திருக்கிறேன். தோள்வலி மிக்கவரே! தங்கள் ஆணைப்படி நடக்கும் பணியாளன் வந்திருக்கிறேன்'' என்று தலைவணங்கிக் கூறியது. (7)

புஷ்பகத்தின் இனிய சொற்களைக் கேட்ட மாமன்னர், மாமுனிவர்களை வணங்கி விடைபெற்று, விமானத்தில் ஏறிக்கொண்டார். (8)

இலக்குவனிடமும் பரதனிடமும் நகரப் பாதுகாவலை ஒப்படைத்துவிட்டு, வில், அம்புறாத்தூணி, மினுமினுக்கும் கத்தி முதலியவைகளை எடுத்துக் கொண்டு, (குற்றவாளியை) இங்குமங்கும் தேடிக்கொண்டு மேற்குத் திசை நோக்கிச் சென்றார். பின்னர், இமயமலை சூழ்ந்து நிற்கும் வடதிசைக்குச் சென்றார். (9,10)

அவ்விரு திசைகளிலும் நெறிதவறிய செயல் எதுவும் காணப்படாமற்போகவே, கிழக்குத் திசையில் ஆராயத் தொடங்கினார். (11)

புஷ்பக விமானத்தில் அமர்ந்து கொண்டு குற்றவாளியைத் தேடிக் கொண்டிருந்த தோள்வலிமிக்க மன்னர், அங்கும் அறம் தவறிய செயல் எதுவும் செய்யப்படவில்லை என்பதையும், அந்தப் பகுதி முழுவதும் கண்ணாடிபோல் மாசுமருவற்று விளங்குவதையும் கண்டார். (12)

Koviloor Digital Library

த$_3$க்ஷிணாம் தி$_3$ஶமாக்ராமத்ததோ ராஜர்ஷிநந்த$_3$ந: ।
ஶைவலஸ்யோத்தரே பார்ஶ்வே த$_3$த$_3$ர்ஶ ஸுமஹத் ஸர: ॥ (13)

தஸ்மிந் ஸரஸி தப்யந்தம் தாபஸம் ஸுமஹத்தப: ।
த$_3$த$_3$ர்ஶ ராக$_4$வ: ஶ்ரீமாந்(ல்)லம்ப$_3$மாநமதோ$_4$முக$_2$ம் ॥ (14)

ராக$_4$வஸ்தமுபாக$_3$ம்ய தப்யந்தம் தப உத்தமம் ।
உவாச ஸ தத$_3$ா வாக்யம் த$_4$ந்யஸ்த்வமஸி ஸுவ்ரத ॥ (15)

கஸ்யாம் யோந்யாம் தபோவ்ருத்$_3$த$_4$ வர்தஸே த்$_3$ருட$_4$விக்ரம: ।
கௌதூஹலாத்த்வாம் ப்ருச்ச$_2$ாமி ராமோ த$_3$ாஶரதி$_2$ர்ஹ்யஹம் ॥ (16)

கோऽர்தே$_2$ா மநீஷிதஸ்துப்$_4$யம் ஸ்வர்க$_3$லாப$_4$: பரோऽத$_2$ வா ।
வராஶ்ரயோ யத$_3$ர்த$_2$ம் த்வம் தபஸ்யஸி ஸுது$_3$ஷ்கரம் ॥ (17)

யமாஶ்ரித்ய தபஸ்தப்தம் ஶ்ரோதுமிச்ச$_2$ாமி தாபஸ ।
ப்$_3$ராஹ்மணோ வாஸி ப$_4$த்$_3$ரம் தே க்ஷத்ரியோ வாஸி து$_3$ர்ஜய: ॥
வைஶ்யஸ்த்ருதீயவர்ணோ வா ஶூத்$_3$ரோ வா ஸத்யவாக்$_3$ப$_4$வ ॥ (18)

இத்யேவமுக்த: ஸ நராதி$_4$பேந ஹ்யவாக்ஶிரா த$_3$ாஶரத$_2$ாய தஸ்மை ।
உவாச ஜாதிம் ந்ருபபுங்க$_3$வாய யத்காரணம் சைவ தப:ப்ரயத்ந: ॥ (19)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ பஞ்சஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

ஷட்ஸப்ததிதம: ஸர்க$_3$:

ஶம்பூ$_3$கவத$_4$:

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ராமஸ்யாக்லிஷ்டகர்மண: ।
அவாக்ஶிராஸ்தத$_2$ா பூ$_4$த்வா வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (1)

ஶூத்$_3$ரயோந்யாம் ப்ரஸூதோऽஸ்மி ஶம்பூ$_3$கோ நாம நாமத: ।
தே$_3$வத்வம் ப்ரார்த$_2$யே ராம ஸஶரீரோ மஹாயஶ: ॥ (2)

ந மித்$_2$யாஹம் வதே$_3$ ராம தே$_3$வலோகஜிகீ$_3$ஷயா ।
ஶூத்$_3$ரம் மாம் வித்$_3$தி$_4$ காகுத்ஸ்த$_2$ தப உக்$_3$ரம் ஸமாஸ்தி$_2$தம் ॥ (3)

ப$_4$ாஷதஸ்தஸ்ய ஶூத்$_3$ரஸ்ய க$_2$ட்$_3$க$_3$ம் ஸுருசிரப்ரப$_4$ம் ।
நிஷ்க்ருஷ்ய கோஶாத்$_3$விமலம் ஶிரஶ்சிச்சே$_2$த$_3$ ராக$_4$வ: ॥ (4)

தஸ்மிஞ்ஶூத்$_3$ரே ஹதே தே$_3$வா: ஸேந்த்$_3$ரா: ஸாக்$_3$நிபுரோக$_3$மா: ।
ஸாது$_4$ ஸாத்$_4$விதி காகுத்ஸ்த$_2$ம் ப்ரஶஶம்ஸுர்முஹுர்முஹு: ॥ (5)

புஷ்பவ்ருஷ்டிர்மஹத்யாஸீத்$_3$தி$_3$வ்யாநாம் ஸுஸுக$_3$ந்தி$_4$நாம் ।
புஷ்பாணாம் வாயுமுக்தாநாம் ஸர்வத: ப்ரபபாத ஹ ॥ (6)

Koviloor Digital Library

முனிவரைப் போன்று தெள்ளிய மதி படைத்த மன்னராகிய அவர், தெற்குத் திசைக்குச் சென்றார். அங்கே, (விந்தியமலைக்கு அருகேயிருந்த) சைவல மலையின் வடக்கில் மிகப்பெரிய ஒரு நீர்நிலையைக் கண்டார். அந்த ஏரியின் கரையில், தலைகீழாகத் தொங்கிக் கொண்டு, மிகக்கடுமையான தவத்தைச் செய்துவரும் ஒரு தவசியைப் பார்த்தார், இராமன். (13,14)

மிக உயர்வான தவத்தைச் செய்துவரும் அவர் அருகில் சென்று, ''கடுமையான நியமங்களை அனுஷ்டிப்பவரே! தாங்கள் பெரும் பாக்கியசாலி!'' என்று இராமன் கூறினார். (15)

''தவமுதிர்ச்சி பெற்றவரே! கொள்கையில் தளராத உறுதி பெற்றவரே! தங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற வேட்கையால் கேட்கிறேன். தாங்கள் எந்த சாதியில் பிறந்தவர்? (என்னைக் கேட்பதற்கு நீ யார்? என்று தாங்கள் எண்ணக்கூடும். அதனால், முதலில் என்னை அறிமுகம் செய்து கொள்கிறேன்.) நான், தசரதகுமாரன் இராமன். (16)

தாங்கள் எந்தப் பயனை அடைய விரும்புகிறீர்கள்? தவம் செய்து, இஷ்டதேவதையை மகிழ்வித்து, எந்த வரத்தை அடைய விரும்புகிறீர்கள்? தேவலோகமா? அல்லது வேறொரு பயனையா? பிறரால் செய்ய முடியாத மிகக் கடுமையான இவ்வித தவத்தைச் செய்து, தாங்கள் அடைய விரும்பும் பயன் எதுவோ? (17)

தவசியே! தாங்கள் வேறு எந்த உயர்பயனை அடையும் நோக்கத்துடன், இந்தத் தவத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள் என்று செவியால் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். தாங்கள் அந்தணர் என்றால், என் வணக்கம். அல்லது, வெற்றிகொள்ள முடியாத க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவரா? அல்லது, மூன்றாவது வர்ணமாகிய வணிகர் இனத்தையோ, வேளாளர் சாதியையோ சேர்ந்தவரா? உண்மையைக் கூறுங்கள்.'' (18)

இவ்வாறு மாமன்னர் இராமனால் கேட்கப்பட்ட, தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்த தவசி, தன் சாதியையும் தவத்தின் நோக்கத்தையும் அவரிடம் தெரிவித்தார். (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எழுபத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தாறு

சம்பூக வதம்

செயற்கரிய செயல்களையும் எளிதாகச் செய்து முடிக்கும் இராமனுடைய சொற்களைக் கேட்டு, தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தவர், பின்வருமாறு பதில் கூறினார்— (1)

''பெரும்புகழ் படைத்த இராமனே! நான், நான்காவது வர்ணத்தில் (வேளாளர் வகுப்பில்) பிறந்தவன். இந்த உடலுடனேயே தேவலோகம் சென்று, தேவத்தன்மை அடைந்துவிட விரும்பி, கடுமையான இந்தத் தவத்தை மேற்கொண்டிருக்கிறேன். காகுத்த இராமனே! நான் பொய்யாகக் கூறவில்லை. நான்காம் வர்ணத்தைச் சேர்ந்த நான், தேவலோகத்தை அடைய விரும்பியே, கடுமையான இந்தத் தவத்தை மேற்கொண்டேன்.'' (2,3)

அந்த வேளாளன் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போதே, தகதகவென்று மின்னலடிக்கும் கத்தியை, உறையிலிருந்து பிடுங்கி எடுத்து, அவருடைய தலையை இராமன் வெட்டி வீழ்த்தினார். அந்த வேளாளன் கொல்லப்பட்டதும், இந்திரன்–அக்னி முதலான தேவதைகள், ''நல்ல காரியம் செய்தாய்!'' என்று இராமபிரானை மிகவும் புகழ்ந்து பேசினார்கள். (4,5)

விண்ணுலகத்திலிருந்து நறுமணம் மிக்க மலர்மாரி பொழிந்தது. அந்தப் பிரதேசத்திலிருந்த மரங்களின் மணம் மிகுந்த மலர்களை எல்லாப் பக்கங்களிலுமிருந்தும் காற்றுக்கடவுள் திரட்டிக் கொண்டு வந்து, அவர்மேல் கொட்டிற்று. (6)

Koviloor Digital Library

ஸுப்ரீதாஸ்சாப்$_3$ருவந் ராமம் தே$_3$வா: ஸத்யபராக்ரமம் ।
ஸுரகார்யமித$_3$ம் ஸௌம்ய ஸுக்ருதம் தே மஹாமதே ॥ (7)

க்$_3$ருஹாண ச வரம் ஸௌம்ய யத்த்வமிச்ச$_2$ஸ்யரிந்த$_3$ம ।
ஸ்வர்க$_3$ப$_4$ாங் நஹி ஶூத்$_3$ரோऽயம் த்வத்க்ருதே ரகு$_4$நந்த$_3$ந ॥ (8)

தே$_3$வாநாம் ப$_4$ாஷிதம் ஶ்ருத்வா ராக$_4$வ: ஸுஸமாஹித: ।
உவாச ப்ராஞ்ஜலிர்வாக்யம் ஸஹஸ்ராக்ஷம் புரந்த$_3$ரம் ॥ (9)

யதி$_3$ தே$_3$வா: ப்ரஸந்நா மே த்$_3$விஜபுத்ர: ஸ ஜீவது ।
தி$_3$ஶந்து வரமேதந்ம ஈப்ஸிதம் பரமம் மம ॥ (10)

மமாபசாராத்$_3$யாதோऽஸௌ ப்$_3$ராஹ்மணஸ்யைகபுத்ரக: ।
அப்ராப்தகால: காலேந நீதோ வைவஸ்வதக்ஷயம் ॥ (11)

தம் ஜீவயத ப$_4$த்$_3$ரம் வோ நாந்ருதம் கர்துமர்ஹத$_2$ ।
த்$_3$விஜஸ்ய ஸம்ஶ்ருதோऽர்தோ$_2$ மே ஜீவயிஷ்யாமி தே ஸுதம் ॥ (12)

ராக$_4$வஸ்ய து தத்$_3$வாக்யம் ஶ்ருத்வா விபு$_3$த$_4$ஸத்தமா: ।
ப்ரத்யூசூ ராக$_4$வம் ப்ரீதா தே$_3$வா: ப்ரீதிஸமந்விதம் ॥ (13)

நிர்வ்ருதோ ப$_4$வ காகுத்ஸ்த$_2$ ஸோऽஸ்மிந்நஹநி ப$_3$ாலக: ।
ஜீவிதம் ப்ராப்தவாந் பூ$_4$ய: ஸமேதஸ்சாபி ப$_3$ந்து$_4$பி$_4$: ॥ (14)

யஸ்மிந் முஹூர்தே காகுத்ஸ்த$_2$ ஶூத்$_3$ரோऽயம் விநிபாதித: ।
தஸ்மிந் முஹூர்தே ப$_3$ாலோऽஸௌ ஜீவேந ஸமயுஜ்யத ॥ (15)

ஸ்வஸ்தி ப்ராப்நுஹி ப$_4$த்$_3$ரம் தே ஸாது$_4$ யாம நரர்ஷப$_4$ ।
அக$_3$ஸ்த்யஸ்யாஶ்ரமபத$_3$ம் த்$_3$ரஷ்டுமிச்ச$_2$ாம ராக$_4$வ ॥ (16)

தஸ்ய தீ$_3$க்ஷா ஸமாப்தா ஹி ப்$_3$ரஹ்மர்ஷே: ஸுமஹாத்$_3$யுதே: ।
த்$_3$வாத$_3$ஶம் ஹி க$_3$தம் வர்ஷம் ஜலஶய்யாம் ஸமாஸத: ॥ (17)

காகுத்ஸ்த$_2$ தத்$_3$க$_3$மிஷ்யாமோ முநிம் ஸமபி$_4$நந்தி$_3$தும் ।
த்வம் சாப்யாக$_3$ச்ச$_2$ ப$_4$த்$_3$ரம் தே த்$_3$ரஷ்டும் தம்ருஷிஸத்தமம் ॥ (18)

ஸ ததே$_2$தி ப்ரதிக்ஞாய தே$_3$வாநாம் ரகு$_4$நந்த$_3$ந: ।
ஆருரோஹ விமாநம் தம் புஷ்பகம் ஹேமபூ$_4$ஷிதம் ॥ (19)

ததோ தே$_3$வா: ப்ரயாதாஸ்தே விமாநைர்ப$_3$ஹுவிஸ்தரை: ।
ராமோऽப்யநுஜகா$_3$மாஶு கும்ப$_4$யோநேஸ்தபோவநம் ॥ (20)

த்$_3$ருஷ்ட்வா து தே$_3$வாந் ஸம்ப்ராப்தாநக$_3$ஸ்த்யஸ்தபஸாம் நிதி$_4$: ।
அர்சயாமாஸ த$_4$ர்மாத்மா ஸர்வாம்ஸ்தாநவிஶேஷத: ॥ (21)

ப்ரதிக்$_3$ருஹ்ய தத: பூஜாம் ஸம்பூஜ்ய மஹாமுநிம் ।
ஜக்$_3$முஸ்தே த்ரித$_3$ஶா ஹ்ருஷ்டா நாகப்ருஷ்ட$_2$ம் ஸஹாநுகை$_3$: ॥ (22)

Koviloor Digital Library

சத்திய பராக்கிரமம் படைத்த இராமனைப் பார்த்து, மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்த தேவர்கள், ''பேரறிவாளியே! செல்வனே! நீ, தேவர்களுக்கு உகப்பான இந்த நல்ல பணியைச் செய்திருக்கிறாய்!'' என்று கூறினார்கள். (7)

''ரகுநந்தனா! எதிரிகளை அடக்குபவனே! நீ விரும்பும் வரத்தைப் பெற்றுக் கொள்வாயாக. தவம் முற்றுப்பெறாத நிலையில் இந்த வேளாளனை, நீ வெட்டிக் கொன்றுவிட்டதால், இவன் தேவலோகத்தை அடையமாட்டான்.'' (8)

தன்னிலை தவறாத மனக்கட்டுப்பாடுடைய இராமன், தேவதைகளின் சொற்களைக் கேட்டு, இந்திரனை நோக்கிக் கைகூப்பிக் கொண்டு வணக்கத்துடன் கூறினார்— (9)

''தேவதைகள் என் செயலால் திருப்தி அடைந்திருப்பார்களேயானால், அந்த அந்தணரின் மகன் உயிர் பிழைக்கட்டும். இந்த வரம்தான், நான் விரும்பும் மிக உயர்ந்த வரம். (10)

என்னுடைய குற்றத்தால் (தவம் செய்த நான்காம் வருணத்தானை முன்னரே கண்டுபிடித்துத் தண்டனை கொடுக்கத் தவறியதால்,) அந்தணரின் ஒரே மகன், இளம்வயதிலேயே காலனுடைய வீட்டிற்குப் போக நேரிட்டது. (11)

அவனை உயிர்ப்பியுங்கள். உங்களை வாழ்த்துகிறேன். ('வரம் பெற்றுக்கொள்' என்று) நீங்கள் கூறிய சொல் பொய்யாகக் கூடாது. நான், 'உங்களுடைய புதல்வனைப் பிழைக்க வைக்கிறேன்' என்று அந்தணருக்கு உறுதி அளித்திருக்கிறேன்.'' (12)

இராமனுடைய சொற்களைக் கேட்ட தேவதையின் தலைவர்கள், இராமனிடத்தில் பிரீதி கொண்டிருந்த தேவதைகள் மகிழ்ச்சியோடுகூடப் பதில் சொன்னார்கள்— (13)

''காகுத்தரே! கவலையை விடுங்கள். அந்தச் சிறுவன் இன்றைய தினமே உயிரைப் பெற்று, தன் உற்றார்–உறவினரோடு சேர்ந்துவிட்டான். (14)

காகுத்தரே! எந்த நிமிடத்தில், தவம் செய்த வேளாளன் வெட்டி வீழ்த்தப்பட்டானோ, அதே நிமிடத்தில், சிறுவன் உடலில் உயிர் புகுந்து கொண்டது. (15)

ஆண்மை மிக்கவனே! உனக்கு நலன்கள் உண்டாகட்டும். இராமா! நாங்கள் அகஸ்தியருடைய ஆசிரமத்தைக் காண விரும்புகிறோம். (16)

'பன்னிரண்டு ஆண்டுகள் தண்ணீரில் மிதந்து படுத்துக் கொண்டிருப்பது' என்று அவர் மேற்கொண்ட விரதம் நிறைவடைந்துவிட்டது. (17)

ரகுநந்தனா! நாங்கள், அந்த முனிவருக்கு வாழ்த்துக் கூறுவதற்காகப் போய்க் கொண்டிருக்கிறோம். உனக்கு நலம் விளைக. தலைசிறந்த அந்த முனிவரைத் தரிசிப்பதற்கு நீயும் வருவாயாக.'' (18)

''அவ்வாறே செய்கிறேன்'' என்று தேவதைகளிடம் கூறிவிட்டு, பொன்னால் அலங்கரிக்கப்பட்ட புஷ்பக விமானத்தில் ஏறிக்கொண்டார், இராமன். (19)

அதையடுத்து, கணக்கில்லாத விமானங்களில் தேவதைகள் ஏறிக்கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள். அவர்களைத் தொடர்ந்து, இராமனும் அகஸ்தியரின் ஆசிரமத்திற்குச் சென்றார். (20)

தபோநிதியான தருமாத்மா அகஸ்தியர், தேவர்கள் வந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்து, எல்லோருக்கும் சமமாகவே உபசாரம் செய்தார். (21)

மாமுனிவரின் உபசாரங்களை ஏற்றுக் கொண்டு, அவருக்குப் பதில் மரியாதை செய்த தேவர்கள், தங்களுடன் வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு, மகிழ்ச்சியுடன் தேவலோகம் சென்றார்கள். (22)

Koviloor Digital Library

க$_3$தேஷு தேஷு காகுத்ஸ்த$_2$: புஷ்பகாத$_3$வருஹ்ய ச ।
ததோऽபி$_4$வாத$_3$யாமாஸ ஹ்யக$_3$ஸ்த்யம்ருஷிஸத்தமம் ॥ (23)

ஸோऽபி$_4$வாத்$_3$ய மஹாத்மாநம் ஜ்வலந்தமிவ தேஜஸா ।
ஆதித்$_2$யம் பரமம் ப்ராப்ய நிஷஸாத$_3$ நராதி$_4$ப: ॥ (24)

தமுவாச மஹாதேஜா: கும்ப$_4$யோநிர்மஹாதபா: ।
ஸ்வாக$_3$தம் தே நரஶ்ரேஷ்ட$_2$ தி$_3$ஷ்ட்யா ப்ராப்தோऽஸி ராக$_4$வ ॥ (25)

த்வம் மே ப$_3$ஹுமதோ ராம கு$_3$ணைர்ப$_3$ஹுபி$_4$ருத்தமை: ।
அதிதி$_2$: பூஜநீயஶ்ச மம நித்யம் ஹ்ருதி$_3$ ஸ்தி$_2$த: ॥ (26)

ஸுரா ஹி கத$_2$யந்தி த்வாமாக$_3$தம் ஶூத்$_3$ரகா$_4$திநம் ।
ப்$_3$ராஹ்மணஸ்ய து த$_4$ர்மேண த்வயா ஜீவாபித: ஸுத: ॥ (27)

உஷ்யதாம் சேஹ ரஜநீ ஸகாஶே மம ராக$_4$வ ।
ப்ரப$_4$ாதே புஷ்பகேண த்வம் க$_3$ந்தாஸி புரமேவ ஹி ॥ (28)

த்வம் ஹி நாராயண: ஸ்ரீமாந்ஸ்த்வயி ஸர்வம் ப்ரதிஷ்டி$_2$தம் ।
த்வம் ப்ரபு$_4$: ஸர்வபூ$_4$தாநாம் புருஷஸ்த்வம் ஸநாதந: ॥ (29)

இத$_3$ம் சாப$_4$ரணம் ஸௌம்ய நிர்மிதம் விஶ்வகர்மணா ।
தி$_3$வ்யம் தி$_3$வ்யேந வபுஷா தீ$_3$ப்யமாநம் ஸ்வதேஜஸா ॥ (30)

ப்ரதிக்$_3$ருஹ்ணீஷ்வ காகுத்ஸ்த$_2$ மத்ப்ரியம் குரு ராக$_4$வ ।
த$_3$த்தஸ்ய ஹி புநர்தா$_3$நே ஸுமஹத் ப$_2$லமுச்யதே ॥ (31)

ப$_4$ரணே ஹி ப$_4$வாஞ்ஶக்த: ஸேந்த்$_3$ராணாம் மருதாமபி ।
த்வம் ஹி ஶக்தஸ்தாரயிதும் ஸேந்த்$_3$ராநபி தி$_3$வௌகஸ: ॥ (32)

தஸ்மாத் ப்ரதா$_3$ஸ்யே விதி$_4$வத்தத் ப்ரதீச்ச$_2$ நராதி$_4$ப ।
தி$_3$வ்யமாப$_4$ரணம் சித்ரம் ப்ரதீ$_3$ப்தமிவ பா$_4$ஸ்கரம் ॥ (33)

அதோ$_2$வாச மஹாத்மாநமிக்ஷ்வாகூணாம் மஹாரத$_2$: ।
ராமோ மதிமதாம் ஶ்ரேஷ்ட$_2$: க்ஷத்ரத$_4$ர்மமநுஸ்மரந் ॥ (34)

ப்ரதிக்$_3$ரஹோऽயம் ப$_4$க$_3$வந் ப்$_3$ராஹ்மணஸ்யாவிக$_3$ர்ஹித: ।
க்$_3$ருஹ்ணீயாம் க்ஷத்ரியோऽஹம் வை கத$_2$ம் ப்$_3$ராஹ்மணபுங்க$_3$வ ॥ (35)

ப்$_3$ராஹ்மணேந விஶேஷேண த$_3$த்தம் தத்$_3$வக்துமர்ஹஸி ।
ஏவமுக்தஸ்து ராமேண ப்ரத்யுவாச மஹாந்ருஷி: ॥ (36)

ஆஸந் க்ருதயுகே$_3$ ராம ப்$_3$ரஹ்மபூ$_4$தே புராயுகே$_3$ ।
அபார்தி$_2$வா: ப்ரஜா: ஸர்வா: ஸுராணாம் து ஶதக்ரது: ॥ (37)

தா: ப்ரஜா தே$_3$வதே$_3$வேஶம் ராஜார்த$_2$ம் ஸமுபாத்$_3$ரவந் ।
ஸுராணாம் ஸ்த$_2$ாபிதோ ராஜா த்வயா தே$_3$வ ஶதக்ரது: ॥ (38)

Koviloor Digital Library

அவர்கள் எல்லோரும் சென்றபின், புஷ்பகத்திலிருந்து இறங்கிய இராமன், சிறந்த முனிவராகிய அகஸ்தியரை வணங்கினார். (23)

தன் தவவலிமையினால் கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கும் மாமுனிவரை வணங்கியபின், அவர் அளித்த உபசாரங்களை ஏற்றுக்கொண்டு, இராமன் ஓர் இருக்கையில் அமர்ந்தார். (24)

தவச்செல்வரும் மகாதேஜஸ்வியுமான அகஸ்தியர், இராமனைப் பார்த்து, ''மன்னனே! இராகவனே! உனக்கு நல்வரவு கூறுகிறேன். அதிருஷ்டவசமாக நீ இங்கே வந்திருக்கிறாய்'' என்று கூறினார். (25)

''இராமா! ஏராளமான உயர்குணங்களால், நீ என் மனத்தில் இடம் பெற்றுவிட்டாய்! நீ, இப்போது ஒரு விருந்தினனாக வந்திருக்கிறாய்; கௌரவத்திற்குரியவன், நீ; எப்போதும், என் உள்ளத்தில் இருந்து கொண்டிருக்கிறாய். (26)

'அறம் தவறிய வழியைப் பின்பற்றி, தவத்தில் ஈடுபட்ட வேளாளனைக் கொன்ற இராமன் வந்து கொண்டிருக்கிறார்' என்று தேவர்கள் கூறினார்கள். உன்னிடம் தருமபலம் இருந்ததால், அந்தணரின் இறந்துபோன மைந்தனுக்கு மீண்டும் உயிர் கொடுத்தாய். (27)

இராகவா! இன்றிரவு முழுவதும் என் அருகில் இங்கே இரு. பொழுது விடிந்ததும், புஷ்பகத்தில் ஏறி பட்டணத்திற்குச் செல்லலாம். நீயே ஸ்ரீமந்நாராயணன்; பிரபஞ்சம் அனைத்தும் உன்னிடம் நிலைகொண்டிருக்கிறது; எல்லா உயிர்ப்பிராணிகளுக்கும் நீயே தலைவன்; நீயே பரமபுருஷன்; தொடக்கம் காணமுடியாத தொன்மையன். (28,29)

திருவளர் செல்வனே! விசுவகர்மாவினால் செய்யப்பட்ட ஆபரணம், இது. தகதகப்பான ஒளியாலும் மனங்கவர் வடிவமைப்பினாலும் சிறந்து விளங்கும் இந்த அணிகலனை ஏற்றுக்கொள். காகுத்தனே! இராகவா! (இதை ஏற்றுக்கொள்வதன் மூலம்) எனக்குப் பிரியமான காரியத்தைச் செய்தவன் ஆவாய். ஒருவரால் கொடுக்கப்பட்ட ஒரு பொருளை, (தானே வைத்துக் கொள்ளாமல்) பிறருக்குக் கொடுத்துவிட்டால், அளவில்லாத புண்ணியம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (30,31)

இந்த அணிகலனை அணிந்து கொள்வதற்கு, இந்திரன், மருத்கணங்கள் முதலான தேவதைகளைக் காட்டிலும் நீயே தகுதி உடையவன்! இந்திரன் முதலான தேவர்களைக் காக்கும் வல்லமை உனக்கு உண்டு. மன்னனே! அதனால், சூரியனைப் போல் ஒளிவீசுவதும் மிகவும் அழகானதும் தெய்வத்தன்மை பெற்றதுமான இந்த அணிகலனை முறைப்படி பெற்றுக் கொள்வாயாக.'' (32,33)

இக்ஷ்வாகு பரம்பரையில் தோன்றியவரும், மிகச்சிறந்த தேர்வீரரும் அறிஞர்களுள் சிறந்தவருமான இராமன், க்ஷத்திரிய நெறியை நினைவிற்கொண்டு, மகாத்மா அகஸ்தியரைப் பார்த்துக் கூறினார்— (34)

''பகவானே! தானம் ஏற்பது என்பது அந்தணர்களுக்கு இழிசெயல் அன்று. அந்தணோத்தமரே! க்ஷத்திரியனான நான், இந்தப் பொருளைத் தானமாகப் பெற்றுக்கொள்வது எவ்வாறு நியாயமாகும்? குறிப்பாக, அந்தணரால் (தானம் பெறுவதற்கு உரிமையுடைய ஒருவரால்) கொடுக்கப்படும் பொருளை எவ்வாறு ஏற்பது? என்று தாங்கள் கூறுங்கள்.'' இவ்வாறு, இராமன் கூறியவுடன், மாமுனிவர் அகஸ்தியர் பதில் கூறினார்— (35,36)

''பிரும்மதேவரால் படைக்கப்பட்ட முதலாவது கிருதயுகத்தில், மண்ணுலக மக்கள் அனைவருக்கும் தலைவனாக எவரும் இருக்கவில்லை. தேவர்களுக்கோ, இந்திரன் இருந்தான். அப்போது மக்கள் எல்லோரும் தேவதேவரான பிரும்மாவிடம் சென்று, ஓர் அரசனை நியமிக்கும்படி வேண்டினார்கள். 'தேவரே! (நூறு யாகம் செய்தவன்) இந்திரன், அமரர்களுக்குத் தலைவனாகத் தங்களால் நியமிக்கப்பட்டார். (37,38)

Koviloor Digital Library

ப்ரயச்ச$_2$ நோ ஹி லோகேஶ பார்தி$_2$வம் நரபுங்க$_3$வம் ।
தஸ்மை பூஜாம் ப்ரயுஞ்ஜாநா தூ$_4$தபாபாஸ்சரேமஹி ॥ (39)

ந வஸாமோ விநா ராக்ஞா ஏஷ நோ நிஸ்சய: பர: ।
ப்ரஜாநாம் வசநம் ஸ்ருத்வா நிஸ்சயித்வார்த$_2$முத்தமம் ॥ (40)

ததோ ப்$_3$ரஹ்மா ஸுரஸ்ரேஷ்டே$_2$ா லோகபாலாந் ஸவாஸவாந் ।
ஸமாஹூயாப்$_3$ரவீத் ஸர்வாந்ஸ்தேஜோப$_4$ாக$_3$ாந் ப்ரயச்ச$_2$த ॥ (41)

ததோ த$_3$து$_3$ர்லோகபாலா: ஸர்வே ப$_4$ாக$_3$ாந் ஸ்வதேஜஸ: ।
அக்ஷுபச்ச ததோ ப்$_3$ரஹ்மா யதோ ஜாத: க்ஷுபோ ந்ருப: ॥ (42)

தம் ப்$_3$ரஹ்மா லோகபாலாநாம் ஸஹாம்ஶை: ஸமயோஜயத் ।
ததோ த$_3$தெ$_3$ள ந்ருபம் தாஸாம் ப்ரஜாநாமீஸ்வரம் க்ஷுபம் ॥ (43)

தத்ரைந்த்$_3$ரேண ச ப$_4$ாகே$_3$ந மஹீமாக்ஞாபயந்ந்ருப: ।
வாருணேந து ப$_4$ாகே$_3$ந வபு: புஷ்யதி ராக$_4$வ ॥ (44)

கௌபே$_3$ரேண து ப$_4$ாகே$_3$ந வித்தமாஸாம் த$_3$தெ$_3$ள தத$_3$ா ।
யஸ்து யாம்யோऽப$_4$வத்$_3$ப$_4$ாக$_3$ஸ்தேந ஶாஸ்தி ஸ்ம ஸ ப்ரஜா: ॥ (45)

தத்ரைந்த்$_3$ரேண நரஸ்ரேஷ்ட$_2$ ப$_4$ாகே$_3$ந ரகு$_4$நந்த$_3$ந ।
ப்ரதிக்$_3$ருஹ்ணீஷ்வ ப$_4$த்$_3$ரம் தே தாரணார்த$_2$ம் மம ப்ரபே$_4$ா ॥ (46)

தஸ்ய தத்$_3$வசநம் ஸ்ருத்வா ருஷே: பரமத$_4$ார்மிகம் ।
தத்$_3$ராம: ப்ரதிஜக்$_3$ராஹ முநேராப$_4$ரணம் வரம் ॥ (47)

ப்ரதிக்$_3$ருஹ்ய ததோ ராமஸ்தத$_3$ாப$_4$ரணமுத்தமம் ।
ஆக$_3$மம் தஸ்ய தீ$_3$ப்தஸ்ய ப்ரஷ்டுமேவோபசக்ரமே ॥ (48)

அத்யத்$_3$பு$_4$தமித$_3$ம் தி$_3$வ்யவபுஷா யுக்தமுத்தமம் ।
கத$_2$ம் ப$_4$க$_3$வதா ப்ராப்தம் குதோ வா கேந வா ஹ்ருதம் ॥ (49)

குதூஹலிதயா ப்$_3$ரஹ்மந் ப்ருச்ச$_2$ாமி த்வம் மஹாயஶ: ।
ஆஸ்சர்யாணாம் ப$_3$ஹூநாம் ஹி நிதி$_4$: பரமகோ ப$_4$வாந் ॥ (50)

ஏவம் ப்$_3$ருவதி காகுத்ஸ்தே$_2$ முநிர்வாக்யமத$_2$ாப்$_3$ரவீத் ।
ஸ்ருணு ராம யத$_2$ா வ்ருத்தம் புரா த்ரேதாயுகே$_3$ யுகே$_3$ ॥ (51)

ரமணியப்ரதே$_3$ஶேऽஸ்மிந் வநே யத்$_3$த்$_3$ருஷ்டவாநஹம் ।
ஆஸ்சர்யம் மே மஹாபா$_3$ஹோ த$_3$ாநமாஸ்ரித்ய கேவலம் ॥ (52)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகியே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஷட்ஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

அதைப் போலவே, ஒரு சிறந்த மனிதரை, நாடாளும் மன்னனாக எங்களுக்குக் கொடுங்கள். அவரை, நாங்கள் மிக்க மரியாதையுடன் நடத்தி, பாவம் நீங்கியவர்களாக வாழ்வோம். (39)

மன்னன் இல்லாமல் நாங்கள் இருக்கமாட்டோம். இதுவே எங்களுடைய உறுதியான முடிவு.'' குடிமக்களின் இந்த முடிவைக் கேட்ட பிரும்மா, தான் செய்யவேண்டிய காரியத்தையும் நிச்சயித்துக் கொண்டு, உலகக் காவலர்களான இந்திரன் முதலியோரை அழைப்பித்து, ''நீங்கள் ஒவ்வொருவரும் தத்தம் ஆற்றலில் ஒரு பகுதியைத் தாருங்கள்'' என்று கூறினார். (40,41)

அப்போது, உலக நாயகர்கள் எல்லோரும் தத்தம் சிறப்புச் சக்தியின் ஒரு பகுதியைத் தந்தார்கள். அந்தச் சமயத்தில் திசைக்காவலர்களின் சக்திகளும் ஒருங்கே வந்ததால் பிரும்மாவுக்குத் தும்மல் உண்டாயிற்று. அந்தத் தும்மலிலிருந்து மன்னன் பிறந்தான். (42)

அவனை, திசைக் காவலர்கள் கொடுத்த ஆற்றல் பகுதிகளுடன் இணைத்தார். தும்மலில் தோன்றிய (திசைக்காவலர்களின் சக்திகளைப் பெற்றுள்ள) மன்னனை, பிரும்மா, மக்கள் தலைவனாக அவர்களிடம் கொடுத்தார். (43)

மன்னன், இந்திரனிடமிருந்து பெற்ற சக்தியால் பூவுலகில் ஆணையைச் செலுத்தினான்; வருணனிடமிருந்து பெற்ற சக்தியால் (நீரால்) மக்களின் உடலைப் போஷித்தான். (44)

குபேரனுடைய தேஜஸின் அம்சத்தால் செல்வத்திற்கு அதிபதியானான். யமனிடமிருந்து பெற்ற சக்தியால், குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுக்கும் அதிகாரத்தைப் பெற்றான். (45)

மன்னனே! (இராமா!) இந்திரனுடைய ஓர் அம்சம் உன்னிடம் இருப்பதால், என்னை உய்விப்பதற்காக, இதனை (ஆபரணத்தை)த் தானமாக ஏற்றுக்கொள். உனக்கு மங்களம் உண்டாகட்டும்.'' (46)

உயர் அறநெறிக்குகந்த அகஸ்திய முனிவரின் சொற்களைக் கேட்ட இராமன், மிகச்சிறந்ததான அந்த ஆபரணத்தை முனிவரிடமிருந்து பெற்றுக் கொண்டார். (47)

உத்தமமான அந்த ஆபரணத்தைப் பெற்றுக் கொண்ட இராமன், ''பேரொளி வீசும் இந்த ஆபரணம் முனிவருக்கு எப்படிக் கிடைத்தது?'' என்று கேட்டார். (48)

''மிக ஆச்சரியமாக விளங்கும் இது தெய்விகத் தன்மை பொருந்தியது; அழகுமிக்கது; உயர்வானது. தங்களுக்கு இது எவ்வாறு கிடைத்தது? எங்கிருந்து, யாரால் கொண்டு வரப்பட்டது? (49)

பிராமணோத்தமரே! தெரிந்துகொள்ள வேண்டும் என்ற மனத்துடிப்பினால் கேட்கிறேன். தாங்கள் பெரும் புகழ்பெற்றவர்; வியப்பூட்டும் ஏராளமான விஷயங்களுக்குக் கருவூலம் போன்றவர், தாங்கள்.'' (50)

இவ்வாறு, இராமன் கேட்டதும், ''இராமா, முன்னர் ஒரு திரேதாயுகத்தில் நடந்த வரலாற்றைக் கேள்'' என்று பதில் சொன்னார், அகஸதிய முனிவர். (51)

''மிக்க எழிலுடன் விளங்கிய இந்தப் பிரதேசத்தில், தானம் வாங்குவது சம்பந்தமாக, நான் எதைக் கண்டேனோ, ஆச்சரியமான அந்தத் தகவலைக் கேள்.'' (52)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எழுபத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஸப்தஸப்ததிதம: ஸர்க$_3$:

ஸ்வர்கி$_3$ப்ரஶ்ந:

புரா த்ரேதாயுகே$_3$ ராம ஹ்யரண்யம் ப$_3$ஹுவிஸ்தரம் ।
ஸமந்தாத்$_3$யோஜநஶதம் நிர்ம்ருக$_3$ம் பக்ஷிவர்ஜிதம் ॥ (1)

தஸ்மிந்நிர்மாநுஷேऽரண்யே குர்வாணஸ்தப உத்தமம் ।
அஹமாக்ரமிதும் ஸௌம்ய தத$_3$ரண்யமுபாக$_3$மம் ॥ (2)

தஸ்ய ரூபமரண்யஸ்ய நிர்தே$_3$ஷ்டும் ந ஶஶாக ஹ ।
ப$_2$லமூலை: ஸுக$_2$ாஸ்வாதை$_3$ர்ப$_3$ஹுரூபைஶ்ச பாத$_3$பை: ॥ (3)

தஸ்யாரண்யஸ்ய மத்$_4$யே து ஸரோ யோஜநமாயதம் ।
ஹம்ஸகாரண்ட$_3$வாகீர்ணம் சக்ரவாகோபஶோபி$_4$தம் ॥ (4)

பத்$_3$மோத்பலஸமாகீர்ணம் ஸமதிக்ராந்தஶைவலம் ।
தத$_3$ாஶ்சர்யமிவாத்யர்த$_2$ம் ஸுக$_2$ாஸ்வாத$_3$மநுத்தமம் ॥ (5)

அரஜஸ்கம் தத$_2$ாக்ஷோப்$_4$யம் ஶ்ரீமத்பக்ஷிக$_3$ணாயுதம் ।
ஸமீபே தஸ்ய ஸரஸோ மஹத$_3$த்$_3$பு$_4$தமாஶ்ரமம் ॥ (6)

புராணம் புண்யமத்யர்த$_2$ம் தபஸ்விஜநவர்ஜிதம் ।
தத்ராஹமவஸம் ராத்ரிம் நைத$_3$ாகீ$_4$ம் புருஷர்ஷப$_4$ ॥ (7)

ப்ரப$_4$ாதே கால்யமுத்த$_2$ாய ஸரஸ்தது$_3$பசக்ரமே ।
அத$_2$ாபஶ்யம் ஶவம் தத்ர ஸுபுஷ்டமஜரம் க்வசித் ॥ (8)

பங்க்திபே$_4$தே$_3$ந புஷ்டாங்க$_3$ம் ஸமாஶ்ரிதஸரோவரம் ।
திஷ்ட$_2$ந்தம் பரயா லக்ஷ்ம்யா தஸ்மிந்ஸ்தோயாஶயே ந்ருப ॥ (9)

தமர்த$_2$ம் சிந்தயாநோऽஹம் முஹூர்தம் தத்ர ராக$_4$வ ।
உஷிதோऽஸ்மி ஸரஸ்தீரே கிம் ந்வித$_3$ம் ஸ்யாதி$_3$தி ப்ரபே$_4$ா ॥ (10)

அத$_2$ாபஶ்யம் முஹூர்தேந தி$_3$வ்யமத்$_3$பு$_4$தத$_3$ர்ஶநம் ।
விமாநம் பரமோத$_3$ாரம் ஹம்ஸயுக்தம் மநோஜவம் ॥ (11)

அத்யர்த$_2$ம் ஸ்வர்கி$_3$ணம் தத்ர விமாநே ரகு$_4$நந்த$_3$ந ।
உபாஸ்தேऽப்ஸரஸாம் வீர ஸஹஸ்ரம் தி$_3$வ்யபூ$_4$ஷணம் ॥ (12)

க$_3$ாயந்தி தி$_3$வ்யகே$_3$யாநி வாத$_3$யந்தி தத$_2$ாபரா: ।
க்ஷ்வேலயந்தி தத$_2$ா சாந்யா ந்ருத்யந்தி ச தத$_2$ாபரா: ॥ (13)

அபராஶ்சந்த்$_3$ரரஶ்ம்யாபை$_4$ர்ஹேமத$_3$ண்டை$_3$ஶ்ச சாமரை: ।
தே$_3$ாதூ$_4$யுர்வத$_3$நம் தஸ்ய புண்ட$_3$ரீகநிபே$_4$க்ஷணம் ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : எழுபத்தேழு

அகஸ்தியர் கூறிய ஸ்வர்கி வரலாறு

(அகஸ்தியர் கூறுகிறார்—) இராமா! முன்னொரு திரேதாயுகத்தில், நூறுயோஜனை பரப்பளவுள்ள மிக விஸ்தாரமான காடாக இந்த இடம் விளங்கியது. அங்கே விலங்குகளும் இல்லை; பறவைகளும் இல்லை. கண்மணியே! உத்தமமான தவம் செய்வதற்கு ஏற்றதான ஓர் இடத்தைத் தேடிக்கொண்டு சுற்றி வருகையில், இந்தக் காட்டை அடைந்தேன். (1,2)

இந்தக் காட்டினுடைய அமைப்பே எவ்வளவு கவர்ச்சிகரமாக இருந்தது என்பதை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது! உண்ணத்தக்கவைகளும் சுவையுள்ளவைகளுமான கனிகளும் கிழங்குகளும் இருந்தன; பல வகையானவைகளும், பல உருவம் கொண்டவைகளுமான மரங்கள் செழிப்பாக வளர்ந்திருந்தன. (3)

காட்டின் நடுப்பகுதியில், ஒவ்வொரு யோஜனை நீள–அகலங்கொண்ட ஓர் ஏரி இருந்தது. அன்னம், காரண்டவம், சக்ரவாகம் முதலிய நீர்ப்பறவைகள் ஏரிக்கு அழகு சேர்த்தன. (4)

அந்த ஏரி, மிகவும் ஆச்சரியத்தைக் கொடுப்பதாக இருந்தது. தாமரை, நீலோத்பலம் முதலிய மலர்கள் மண்டியிருந்தன. பாசி என்பது காணப்படவேயில்லை. ஏரியின் தண்ணீர் சுவையுடன் கூடி, மனத்திற்குத் திருப்தி அளிப்பதாக இருந்தது. (5)

தண்ணீர் மாசுமருவில்லாமல் தூயதாக இருந்தது; ஏரியில், கண்கவர் பறவைக் கூட்டங்கள் இருந்தன. அந்த ஏரியின் அருகில் அற்புதமான ஓர் ஆசிரமம் காணப்பட்டது. பழமையான, புண்ணியமான, தவப்பயனைத் தரவல்ல அந்த ஆசிரமத்தில் தவசி யாரும் இல்லை. காளை போன்றவனே! அந்த ஆசிரமத்தில், ஆனி மாதத்தில் ஓர் இரவு தங்கினேன். (6,7)

அதிகாலையில் எழுந்து, காலைக் கடன்களை நிறைவேற்றும் பொருட்டு, அந்த ஏரியை நோக்கிச் சென்றேன். அப்போது அங்கே திடமான உடலைக் கொண்டதும் அழுக்குப் படியாததுமான ஒரு சடலத்தைக் கண்டேன். (8)

பஞ்சபூதங்களின் (கொழுப்பு, சதை, எலும்பு முதலியவைகளின்) ஒழுங்கான சேர்க்கையால் புஷ்டியான உடல் உறுப்புக்களுடன், ஏரிவரை வியாபித்துக் கிடந்தது. மன்னனே! அந்தச் சடலம் மிகுந்த ஒளியுடன் ஏரிக்கரையில் காணப்பட்டது. (9)

ரகுநந்தனா! அந்தச் சடலத்தைக் கண்டு, 'இது என்ன?' என்று யோசித்தவாறே ஏரியின் கரையில் இரண்டு நாழிகை நேரம் நின்றுகொண்டிருந்தேன். (10)

சிறிதுநேரம் சென்றபின், அற்புதமான தெய்விகக் காட்சியைக் கண்டேன். அன்னப்பறவைகளால் சுமக்கப்பட்ட மிகச்சிறந்த ஒரு விமானம் மனோவேகத்துடன் வந்து இறங்குவதைக் கண்டேன். அந்த விமானத்தில் தேவலோகவாசியான ஒருவர் வீற்றிருந்தார். ரகுநந்தனா! பொன் அணிகலன்கள் அணிந்த ஆயிரக்கணக்கான அப்சரப் பெண்டிர் அவருக்குச் சேவை செய்து கொண்டிருந்தார்கள். (11,12)

சிலர் இனிய பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார்கள்; வேறு சிலர், மிருதங்கம் போன்ற தாளவாத்தியங்களை முழக்கிக் கொண்டிருந்தார்கள்; மற்றும் சிலர் நடனமாடிக் கொண்டிருந்தார்கள்; சிலர் விளையாட்டுத்தனமாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். (13)

தாமரைமலர் போன்ற கண்கள் படைத்த அந்த சுவர்க்கவாசிக்கு, சில அப்சரப் பெண்டிர் நிலாக்கதிர் போன்று ஒளிவீசுவதும், தங்கத்தாலான கைப்பிடியுடையதுமான சாமரங்களை வீசிக் கொண்டிருந்தார்கள். (14)

Koviloor Digital Library

தத: ஸிம்ஹாஸநம் த்யக்த்வா மேருகூடமிவாம்ஶுமாந் ।
பஶ்யதோ மே தத$_3$ா ராம விமாநாத$_3$வருஹ்ய ச ॥
தம் ஶவம் ப$_4$க்ஷயாமாஸ ஸ ஸ்வர்கீ$_3$ ரகு$_4$நந்த$_3$ந ॥ (15)

தத$_2$ா பு$_4$க்த்வா யத$_2$ாகாமம் மாம்ஸம் ப$_3$ஹுஸுபீவரம் ।
அவதீர்ய ஸர: ஸ்வர்கீ$_3$ ஸம்ஸ்ப்ரஷ்டுமுபசக்ரமே ॥ (16)

உபஸ்ப்ருஶ்ய யத$_2$ாந்யாயம் ஸ ஸ்வர்கீ$_3$ ரகு$_4$புங்க$_3$வ ।
ஆரோடு$_4$முபசக்ராம விமாநவரமுத்தமம் ॥ (17)

தமஹம் தே$_3$வஸங்காஶமாரோஹந்தமுதீ$_3$க்ஷ்ய வை ।
விமாநமப்$_3$ரவம் வாக்யம் ஸ்வர்கி$_3$ணம் புருஷர்ஷப$_4$ ॥
கோ ப$_4$வாந் தே$_3$வஸங்காஶ ஆஹாரஶ்ச விக$_3$ர்ஹித: ॥ (18)

த்வயேத$_3$ம் பு$_4$ஜ்யதே ஸௌம்ய கிமர்த$_2$ம் வக்துமர்ஹஸி ।
கஸ்ய ஸ்யாதீ$_3$த்$_3$ருஶோ ப$_4$ாவ ஆஹாரோ தே$_3$வஸம்மத: ॥ (19)

ஆஶ்சர்யம் வர்ததே ஸௌம்ய ஶ்ரோதுமிச்ச$_2$ாமி தத்த்வத: ।
நாஹமௌபயிகம் மந்யே தவ ப$_4$க்ஷ்யமித$_3$ம் ஶவம் ॥ (20)

இத்யேவமுக்த: ஸ நரேந்த்$_3$ர நாகீ கௌதூஹலாத் ஸூந்ருதயா கி$_3$ரா ச ।
ஶ்ருத்வா ச வாக்யம் மம ஸர்வமேதத் ஸர்வம் தத$_2$ா சாகத$_2$யந்மமேதி ॥ (21)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஸப்தஸப்ததிதம: ஸர்க$_3$: ॥

அஷ்டஸப்ததிதம: ஸர்க$_3$:

ஆப$_4$ரணாக$_3$ம:

ஶ்ருத்வா து ப$_4$ாஷிதம் வாக்யம் மம ராம ஶுப$_4$ாக்ஷரம் ।
ப்ராஞ்ஜலி: ப்ரத்யுவாசேத$_3$ம் ஸ ஸ்வர்கீ$_3$ ரகு$_4$நந்த$_3$ந ॥ (1)

ஶ்ருணு ப்$_3$ரஹ்மந் புரா வ்ருத்தம் மமைதத் ஸுக$_2$து$_3$:க$_2$யோ: ।
அநதிக்ரமணீயம் ஹி யத$_2$ா ப்ருச்ச$_2$ஸி மாம் த்$_3$விஜ ॥ (2)

புரா வைத$_3$ர்ப$_4$கோ ராஜா பிதா மம மஹாயஶா: ।
ஸுதே$_3$வ இதி விக்$_2$யாதஸ்த்ரிஷு லோகேஷு வீர்யவாந் ॥ (3)

தஸ்ய புத்ரத்$_3$வயம் ப்$_3$ரஹ்மந் த்$_3$வாப்$_4$யாம் ஸ்த்ரீப்$_4$யாமஜாயத ।
அஹம் ஶ்வேத இதி க்$_2$யாதோ யவீயாந் ஸுரதே$_2$ாऽப$_4$வத் ॥ (4)

தத: பிதரி ஸ்வர்யாதே பௌரா மாமப்$_4$யஷேசயந் ।
தத்ராஹம் க்ருதவாந் ராஜ்யம் த$_4$ர்ம்யம் ச ஸுஸமாஹித: ॥ (5)

ஏவம் வர்ஷஸஹஸ்ராணி மமாதீதாநி ஸுவ்ரத ।
ராஜ்யம் காரயதோ ப்$_3$ரஹ்மந் ப்ரஜா த$_4$ர்மேண ரக்ஷத: ॥ (6)

Koviloor Digital Library

ரகுநந்தனா! பின்னர் அவர், மேருமலையிலிருந்து இறங்கி வரும் சூரியனைப் போல் சிம்மாசனத்திலிருந்து எழுந்து வந்து, என்னைப் பார்த்ததும் விமானத்திலிருந்து இறங்கி, அந்தச் சடலத்தை உண்ணத் தொடங்கினார். (15)

சடலத்தின் செழிப்பான மாமிசத்தை வேண்டியது மட்டும் உண்ட பின்னர், ஏரியில் இறங்கி முகம், கை–கால்களைச் சுத்தம் செய்து கொண்டார். (16)

ரகுகுல மாணிக்கமே! தன்னை நன்றாகத் தூய்மைப்படுத்திக் கொண்ட பின்னர், உயர்ந்ததான அந்த விமானத்தில் ஏறத் தொடங்கினார். (17)

புருஷோத்தமனே! தேவர்களைப் போல் ஒளிவீசும் அவர் விமானத்தில் ஏறுவதைப் பார்த்து, அவரிடம், ''தேவர் போல் ஒளிவீசும் தாங்கள் யார்? (தேவதை போன்ற தெய்விகத் தோற்றம் கொண்டிருந்தாலும்) இழிவான ஆகாரத்தைப் புசிக்கிறீர்களே?'' என்று கேட்டேன். (18)

''சான்றோரே! தாங்கள் ஏன் ஒரு சவத்தை உண்கிறீர்கள்? தயவுசெய்து சொல்ல வேண்டும். வெறுக்கத்தக்க இப்படிப்பட்ட உணவை உட்கொள்வது தேவதைகளுக்கு உகந்ததுதானா? (19)

சான்றோரே! உங்கள் செயல் மிகவும் திடுக்கிட வைப்பதாக இருக்கிறது. உண்மையை அறிந்துக்கொள்ள விரும்புகிறேன். சவத்தின் உடல் தங்களுக்கு உரிய உணவு அல்ல என்று நான் கருதுகிறேன்.'' (20)

மன்னனே! உண்மையைத் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்ற ஆவலால், இனிமையாக நான் பேசியதைக் கேட்ட தேவலோகவாசி, எல்லா விவரங்களையும் என்னிடம் தெரிவித்தார். (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எழுபத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தெட்டு

ஆபரணம் எவ்வாறு கிடைத்தது?

இராமா! இவ்வாறு, நான் தெளிவாகக் கூறியதைக் கேட்டதும், தேவலோகவாசியான அவர், கைகளைக் கூப்பிக் கொண்டு பதில் கூறினார்— (1)

''பிராமணோத்தமரே! கடந்து செல்ல முடியாத சுக–துக்கங்களின் காரணத்தைச் சொல்கிறேன், கேளுங்கள். இந்த நிகழ்ச்சி முன்னர் எப்போதோ நடந்தது. (2)

முன்னொரு காலத்தில், என்னுடைய புகழ்பெற்ற தகப்பனார் விதர்பம் என்னும் நாட்டின் மன்னனாக இருந்தார். சுதேவன் என்பது அவருடைய பெயர். மூன்று உலகங்களிலும் பெயர் பெற்ற பராக்கிரமம் உடையவர். வேதவித்தகரே! அவருடைய இரு மனைவியரிடமிருந்தும் இரண்டு பிள்ளைகள் தோன்றினார்கள். நான் மூத்த மைந்தன்; சுவேதன் என்று பெயர். இளையவன் பெயர் சுரதன். (3,4)

எங்களுடைய தந்தையார் விண்ணுலகம் சென்றதும், நகர மக்கள் எனக்கு முடிசூட்டினார்கள். நான், பொறுப்புடன் அறம் தவறாமல் ஆட்சிபுரிந்து வந்தேன். (5)

நல்விரதங்களை அனுஷ்டிப்பவரே! அறநெறி வழுவாமல் மக்களைக் காப்பாற்றிக் கொண்டு ஆட்சி செய்து வருகையில், ஓராயிரம் ஆண்டுகள் கழிந்தன. (6)

Koviloor Digital Library

ஸோऽஹம் நிமித்தே கஸ்மிந்ஶ்சித்$_3$விக்ஞாதாயுர்த்$_3$விஜோத்தம ।
காலத$_4$ர்மம் ஹ்ருதி$_3$ ந்யஸ்ய ததோ வநமுபாக$_3$மம் ॥ (7)

ஸோऽஹம் வநமித$_3$ம் து$_3$ர்க$_3$ம் ம்ருக$_3$பக்ஷிவிவர்ஜிதம் ।
தபஶ்சர்தும் ப்ரவிஷ்டோऽஸ்மி ஸமீபே ஸரஸ: ஶுபே$_4$ ॥ (8)

ப்$_4$ராதரம் ஸுரத$_2$ம் ராஜ்யே ஹ்யபி$_4$ஷிச்ய மஹீபதிம் ।
இத$_3$ம் ஸர: ஸமாஸாத்$_3$ய தபஸ்தப்தம் மயா சிரம் ॥ (9)

ஸோऽஹம் வர்ஷஸஹஸ்ராணி தபஸ்த்ரீணி மஹாவநே ।
தப்த்வா ஸுது$_3$ஷ்கரம் ப்ராப்தோ ப்$_3$ரஹ்மலோகமநுத்தமம் ॥ (10)

தஸ்ய மே ஸ்வர்க$_3$பூ$_4$தஸ்ய க்ஷுத்பிபாஸே த்$_3$விஜோத்தம ।
பா$_3$தே$_4$தே பரமோதா$_3$ர ததோऽஹம் வ்யதி$_2$தேந்த்$_3$ரிய: ॥
க$_3$த்வா த்ரிபு$_4$வநஶ்ரேஷ்ட$_2$ம் பிதாமஹமுவாச ஹ ॥ (11)

ப$_4$க$_3$வந் ப்$_3$ரஹ்மலோகோऽயம் க்ஷுத்பிபாஸாவிவர்ஜித: ।
கஸ்யாயம் கர்மண: பாக: க்ஷுத்பிபாஸாநுகோ$_3$ ஹ்யஹம் ॥
ஆஹார: கஶ்ச மே தே$_3$வ தந்மே ப்$_3$ரூஹி பிதாமஹ ॥ (12)

பிதாமஹஸ்து மாமாஹ தவாஹார: ஸுதே$_3$வஜ ।
ஸ்வாதூ$_3$நி ஸ்வாநி மாம்ஸாநி தாநி ப$_4$க்ஷய நித்யஶ: ॥ (13)

ஸ்வஶரீரம் த்வயா புஷ்டம் குர்வதா தப உத்தமம் ।
அநுப்தம் ரோஹதே ஶ்வேத ந கதா$_3$சிந்மஹாமதே ॥ (14)

த்ருப்திர்ந தேऽஸ்தி ஸூக்ஷ்மாபி வநே ஸத்த்வநிஷேவிதே ।
புரா த்வாம் பி$_4$க்ஷமாணாய பி$_4$க்ஷா வை யதயே ந்ருப ॥ (15)

ந ஹி த$_3$த்தா த்வயேந்த்$_3$ராப$_4$ யஸ்மாத$_3$தித$_2$யேऽபி வை ।
த$_3$த்தம் ந தேऽஸ்தி ஸூக்ஷ்மோऽபி தப ஏவ நிஷேவஸே ॥ (16)

தேந ஸ்வர்க$_3$க$_3$தோ வத்ஸ பா$_3$த்$_4$யஸே க்ஷுத்பிபாஸயா ।
ஸ த்வம் ஸுபுஷ்டமாஹாரை: ஸ்வஶரீரமநுத்தமம் ॥
ப$_4$க்ஷயித்வாம்ருதரஸம் தேந த்ருப்திர்ப$_4$விஷ்யதி ॥ (17)

யதா$_3$ து தத்$_3$வநம் ஶ்வேத அக$_3$ஸ்த்ய: ஸுமஹாந்ருஷி: ।
ஆக$_3$மிஷ்யதி து$_3$ர்த$_4$ர்ஷஸ்ததா$_3$ க்ருச்ச்$_2$ராத்$_3$விமோக்ஷ்யஸே ॥ (18)

ஸ ஹி தாரயிதும் ஸௌம்ய ஶக்த: ஸுரக$_3$ணாநபி ।
கிம் புநஸ்த்வாம் மஹாபா$_3$ஹோ க்ஷுத்பிபாஸாவஶம் க$_3$தம் ॥ (19)

ஸோऽஹம் ப$_4$க$_3$வத: ஶ்ருத்வா தே$_3$வதே$_3$வஸ்ய நிஶ்சயம் ।
ஆஹாரம் க$_3$ர்ஹிதம் குர்மி ஸ்வஶரீரம் த்$_3$விஜோத்தம ॥ (20)

ப$_3$ஹூந் வர்ஷக$_3$ணாந் ப்$_3$ரஹ்மந் பு$_4$ஜ்யமாநமித$_3$ம் மயா ।
க்ஷயம் நாப்$_4$யேதி ப்$_3$ரஹ்மர்ஷே த்ருப்திஶ்சாபி மமோத்தமா ॥ (21)

Koviloor Digital Library

அந்தணோத்தமரே! ஒரு சமயம் ஏதோ ஒரு காரணத்தால், என்னுடைய ஆயுளின் முடிவு நாள் தெரியவந்தது. அந்த நாளை நினைவில் வைத்துக் கொண்டு, நான் காட்டை நோக்கிச் சென்றேன். (7)

அப்போது, யாரும் உள்ளே நுழைய முடியாத விலங்குகள்–பறவைகள் இல்லாத இந்தக் காட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தேன். அழகான ஏரிக்கு அருகில் (ஆசிரமம் அமைத்துக் கொண்டு) தவம் செய்யத் தொடங்கினேன். (8)

சகோதரன் சுரதனை நாட்டின் மன்னனாகப் பட்டாபிஷேகம் செய்வித்துவிட்டு, இந்த ஏரிக்கரைக்கு வந்து நீண்ட காலம் தவம் புரிந்தேன். (9)

இந்த மாபெரும் காட்டில், மூவாயிரம் ஆண்டுகள் செயற்கரிய தவம் செய்தேன். அதனால், எப்பாடுபட்டும் அடையமுடியாத பிரும்மலோகத்தைப் பெற்றேன். (10)

அந்தணோத்தமரே! பிரும்மலோகத்தை அடைந்த என்னை பசியும் தாகமும் வறுத்து எடுத்தன. கருணைமிக்க முனிவரே! பசி–தாகத்தினால் புலன்கள் கலங்கி துன்பப்பட்ட நான், மூவுலகத் தலைவரான பிரும்மாவை அணுகிக் கேட்டேன். (11)

பகவானே! இந்தப் பிரும்மலோகத்தில் பசி–தாகம் ஏற்படாது (என்று அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள்). என்னுடைய, எந்தக் கர்மாவின் பயனால் பசி–தாகம் என்னைத் தாக்குகிறது? பிதாமகரே! எனக்கு என்ன உணவு? என்பதைத் தயவுசெய்து கூறுங்கள். (12)

இதைக் கேட்டதும், பிரும்மா கூறினார்— ‘சுதேவன் மைந்தனே! மண்ணுலகில் உன்னுடைய உடலின் சுவையான மாமிசத்தையே எந்நாளும் புசிப்பாயாக. (13)

சுவேதனே! உத்தமமான தவத்தைச் செய்து, உன் உடலின் செழுமையைப் பெருக்கிக் கொண்டாய். பேரறிஞனே! தண்ணீர் ஊற்றாமல் எந்தச் செடியும் தானாக வளர்வதில்லை. (தவம் செய்தால் மட்டும் போதாது; அது நல்ல பலனைத் தருவதற்கு தானம் என்ற தண்ணீரையும் ஊற்றவேண்டும்.) (14)

அமைதி நிலவும் வனத்தில் இருந்த உனக்கு, சிறிதளவும் திருப்தி ஏற்படவில்லை. மன்னனே! முன்னர் ஒரு சமயம், பிச்சை கேட்டுக் கொண்டு வந்த வறிஞருக்கு, நீ பிச்சை போடவில்லை. இந்திரன் போல் ஒளிவீசுபவனே! நீ, ஏழைகளுக்கோ, தெய்வங்களுக்கோ, முன்னோர்களுக்கோ அன்னம் அளித்ததேயில்லை; தவம் செய்வதிலேயே மூழ்கியிருந்தாய். (15,16)

குழந்தாய்! அதனால், பிரும்மலோகம் வந்தாலும் பசி–தாகங்கள் உன்னைத் தாக்குகின்றன. புஷ்டியான உணவுகளால் செழிப்பாக வளர்ந்திருந்த அமுதச்சாறு நிறைந்த உன் சரீரத்தையே புசித்து, திருப்தியை அடைவாய். (17)

சுவேதனே! மிகவுயர்ந்த முனிவரான அகஸ்தியர் அந்தக் காட்டுக்கு எப்போது வருவாரோ, அப்போது இந்தத் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவாய். (18)

செல்வனே! அவர் (அகஸ்தியர்) தேவர்களையும் துன்பக்கடலிலிருந்து கடத்துவிக்கும் ஆற்றலுடையவர். பெருந்தோளனே! வெறும் பசி–தாகத்தினால் துன்பப்படும் உன்னை விடுவிக்க அவரால் முடியாதா, என்ன? (என்று பிரும்மா கூறி முடித்தார்.)’ (19)

அந்தணோத்தமரே! தேவர்களுக்கெல்லாம் தலைவரான பிரும்மாவின் உறுதியான சொற்களைக் கேட்ட நான், என்னுடைய உடலான வெறுக்கத்தக்க உணவைப் புசித்து வருகிறேன். (20)

பிரும்மரிஷியே! நான் மிக நீண்ட காலமாக இதனை உண்டு வருகிறேன். ஆனால், இது(சடலம்) குறைவடைவதில்லை; எனக்குத் திருப்தியும் ஏற்படுகிறது. (21)

Koviloor Digital Library

தஸ்ய மே க்ருச்ச்2ரபூ4தஸ்ய க்ருச்ச்2ராத3ஸ்மாத்3விமோக்ஷய ।
அந்யேஷாம் ந க3திர்ஹ்யத்ர கும்ப4யோநிம்ருதே த்3விஜம் ॥ (22)

இத3மாப4ரணம் ஸௌம்ய தாரணார்த2ம் த்3விஜோத்தம ।
ப்ரதிக்3ருஹ்ணீஷ்வ ப4த்3ரம் தே ப்ரஸாத3ம் கர்துமர்ஹஸி ॥ (23)

இத3ம் தாவத் ஸுவர்ணம் ச த4நம் வஸ்த்ராணி ச த்3விஜ ।
ப4க்ஷ்யம் போ4ஜ்யம் ச ப்3ரஹ்மர்ஷே த3தா3ம்யாப4ரணாநி ச ॥ (24)

ஸர்வாந் காமாந் ப்ரயச்ச2ாமி போ4க3ாம்ஶ்ச முநிபுங்க3வ ।
தாரணே ப4க3வந் மஹ்யம் ப்ரஸாத3ம் கர்துமர்ஹஸி ॥ (25)

தஸ்யாஹம் ஸ்வர்கி3ணோ வாக்யம் ஶ்ருத்வா து3:க2ஸமந்விதம் ।
தாரணாயோபஜக்3ராஹ தத3ாப4ரணமுத்தமம் ॥ (26)

மயா ப்ரதிக்3ருஹீதே து தஸ்மிந்நாப4ரணே ஶுபே4 ।
மாநுஷ: பூர்வகோ தே3ஹோ ராஜர்ஷேர்விநநாஶ ஹ ॥ (27)

ப்ரநஷ்டே து ஶரீரேऽஸௌ ராஜர்ஷி: பரயா முத3ா ।
த்ருப்த: ப்ரமுதி3தோ ராஜா ஜக3ாம த்ரிதி3வம் ஸுக2ம் ॥ (28)

தேநேத3ம் ஶக்ரதுல்யேந தி3வ்யமாப4ரணம் மம ।
தஸ்மிந்நிமித்தே காகுத்ஸ்த2 த3த்தமத்3பு4தத3ர்ஶநம் ॥ (29)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 அஷ்டஸப்ததிதம: ஸர்க3: ॥

ஏகோநாஶீதிதம: ஸர்க3:

த3ண்ட3ராஜ்யநிவேஶ:

தத3த்3பு4ததமம் வாக்யம் ஶ்ருத்வாக3ஸ்த்யஸ்ய ராக4வ: ।
கௌ3ரவாத்3விஸ்மயாச்சைவ புந: ப்ரஷ்டும் ப்ரசக்ரமே ॥ (1)

ப4க3வந்ஸ்தத்3வநம் கோ4ரம் தபஸ்தப்யதி யத்ர ஸ: ।
ஶ்வேதோ வைத3ர்ப4கோ ராஜா கத2ம் ஸ்யாத3ம்ருக3த்3விஜம் ॥ (2)

தத்3வநம் ஸ கத2ம் ராஜா ஶூந்யம் மநுஜவர்ஜிதம் ।
தபஶ்சர்தும் ப்ரவிஷ்ட: ஸ ஶ்ரோதுமிச்ச2ாமி தத்த்வத: ॥ (3)

ராமஸ்ய வசநம் ஶ்ருத்வா கௌதூஹலஸமந்விதம் ।
வாக்யம் பரமதேஜஸ்வீ வக்துமேவோபசக்ரமே ॥ (4)

புரா க்ருதயுகே3 ராம மநுர்த3ண்ட3த4ர: ப்ரபு4: ।
தஸ்ய புத்ரோ மஹாநாஸீதி3க்ஷ்வாகு: குலநந்த3ந: ॥ (5)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_27_Back

Koviloor Digital Library

இவ்வாறு, துன்பத்தில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் என்னைத் துன்பத்திலிருந்து விடுவிப்பீர்களாக. அந்தணரான அகஸ்தியரைத் தவிர வேறு எவரும் எனக்குப் புகலிடம் இல்லை. சான்றோரே! கஷ்டத்திலிருந்து என்னை விடுவிப்பதற்காக, இந்த ஆபரணத்தைத் தானமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். தங்களுக்கு நலமே உண்டாகட்டும். என்னிடம் தாங்கள் இரக்கம் காட்ட வேண்டும். (22,23)

இந்த ஆபரணம் மற்றும் தங்கம், செல்வம், ஆடை, உணவுப் பொருள்கள், பல அணிகலன்கள் ஆகியவற்றையும் தங்களுக்குத் தருகிறேன். (24)

மாமுனிவரே! தாங்கள் விரும்பும் மற்றப் பொருள்களையும் போக வஸ்துக்களையும் தருகிறேன். பகவானே! இந்தக் கஷ்டத்திலிருந்து என்னை விடுவிக்கத் தாங்கள் திருவுள்ளம் பற்ற வேண்டும்.'' (25)

சுவர்க்கவாசியின் துயரம் நிறைந்த சொற்களைக் கேட்ட நான், அவரைத் துன்பத்திலிருந்து விடுவிப்பதற்காக உத்தமமான இந்த ஆபரணத்தைப் பெற்றுக் கொண்டேன். (26)

மங்களமான அந்த ஆபரணத்தைத் தானமாக நான் பெற்றுக் கொண்ட விநாடியிலேயே, அந்த ராஜரிஷியின் முந்தைய மனிதவுடல் மறைந்துவிட்டது. (27)

சடலம் மறைந்து போனவுடன் அவர் மிகுந்த மகிழ்ச்சியுடன் திருப்தியடைந்து, உவகை பொங்க, சுகமாக விண்ணுலகத்திற்கு ஏகினார். (28)

காகுத்தனே! இந்திரனுக்கு நிகரான மன்னன் சுவேதன், பசி–தாகத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக, கவின்மிகு தோற்றமுடைய இந்த ஆபரணத்தை, எனக்குத் தானமாகக் கொடுத்தார். (29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எழுபத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எழுபத்தொன்பது

மன்னன் தண்டனின் ஆட்சி

முற்றிலும் புதுமையானதும் பிரமிக்க வைப்பதுமான அகஸ்தியருடைய சொற்களைக் கேட்டவுடன், அவரிடம் இராமனுக்கு இருந்த மதிப்பு பெருகியது. அத்துடன், மேலும் கேட்க வேண்டும் என்ற ஆவலும் உண்டாயிற்று. அதனால், மறுபடியும் அவரைக் கேட்கத் தொடங்கினார்— (1)

''ஐயனே! விதர்ப நாட்டு மன்னன் சுவேதன் தவம் செய்த பயங்கரமான காடு, விலங்குகளும் பறவைகளும் இல்லாத இடமாக எவ்வாறு ஆயிற்று? (2)

மனித நடமாட்டமேயில்லாத அந்தக் காட்டில் மன்னர் ஏன் தவம் செய்ய முடிவு செய்தார்? உண்மையைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.'' (3)

இராமனுடைய ஆவல் மிகுந்த சொற்களைக் கேட்ட தபோபலம் மிக்க மாமுனிவர், பதில் சொல்லத் தொடங்கினார்— (4)

''இராமா! முன்னர் ஒரு கிருதயுகத்தில் செங்கோல் தாங்கிய மன்னர் மனு, இம்மண்ணுலகில் ஆட்சிபுரிந்து வந்தார். அவருக்கு, அந்தப் பரம்பரைக்கே பெருமையைச் சேர்க்கும் இக்ஷ்வாகு என்பவன் புதல்வனாகப் பிறந்தான். (5)

Koviloor Digital Library

தம் புத்ரம் பூர்வகே ராஜ்யே நிக்ஷிப்ய பு$_4$வி து$_3$ர்ஜயம் ।
ப்ருதி$_2$வ்யாம் ராஜவம்ஶாநாம் ப$_4$வ கர்தேத்யுவாச ஹ ॥ (6)

ததே$_2$தி ச ப்ரதிக்ஞாதம் பிது: புத்ரேண ராக$_4$வ ।
தத: பரமஸந்துஷ்டோ மநு: புத்ரமுவாச ஹ ॥ (7)

ப்ரீதோऽஸ்மி பரமோதா$_3$ர த்வம் கர்தாஸி ந ஸம்ஶய: ।
த$_3$ண்டே$_3$ந ச ப்ரஜா ரக்ஷ மா ச த$_3$ண்ட$_3$மகாரணே ॥ (8)

அபராதி$_4$ஷு யோ த$_3$ண்ட$_3$: பாத்யதே மாநவேஷு வை ।
ஸ த$_3$ண்டோ$_3$ விதி$_4$வந்முக்த: ஸ்வர்க$_3$ம் நயதி பார்தி$_2$வம் ॥ (9)

தஸ்மாத்$_3$த$_3$ண்டே$_3$ மஹாபா$_3$ஹோ யத்நவாந் ப$_4$வ புத்ரக ।
த$_4$ர்மோ ஹி பரமோ லோகே குர்வதஸ்தே ப$_4$விஷ்யதி ॥ (10)

இதி தம் ப$_3$ஹு ஸந்தி$_3$ஶ்ய மநு: புத்ரம் ஸமாதி$_4$நா ।
ஜக$_3$ாம த்ரிதி$_3$வம் ஹ்ருஷ்டோ ப்$_3$ரஹ்மலோகம் ஸநாதநம் ॥ (11)

ப்ரயாதே த்ரிதி$_3$வம் தஸ்மிந்நிக்ஷ்வாகுரமிதப்ரப$_4$: ।
ஜநயிஷ்யே கத$_2$ம் புத்ராநிதி சிந்தாபரோऽப$_4$வத் ॥ (12)

கர்மபி$_4$ர்ப$_3$ஹுரூபைஶ்ச தைஸ்தைர்மநுஸுத: ஸுதாந் ।
ஜநயாமாஸ த$_4$ர்மாத்மா ஶதம் தே$_3$வஸுதோபமாந் ॥ (13)

தேஷாமவரஜஸ்தாத ஸர்வேஷாம் ரகு$_4$நந்த$_3$ந ।
மூட$_4$ஶ்சாக்ருதவித்$_3$யஶ்ச ந ஶுஶ்ரூஷதி பூர்வஜாந் ॥ (14)

நாம தஸ்ய ச த$_3$ண்டே$_3$தி பிதா சக்ரேऽல்பமேத$_4$ஸ: ।
அவஶ்யம் த$_3$ண்ட$_3$பதநம் ஶரீரேऽஸ்ய ப$_4$விஷ்யதி ॥ (15)

அபஶ்யமாநஸ்தம் தே$_3$ஶம் கே$_4$ாரம் புத்ரஸ்ய ராக$_4$வ ।
விந்த்$_4$யஶைவலயோர்மத்$_4$யே ராஜ்யம் ப்ராதா$_3$த$_3$ரிந்த$_3$ம ॥ (16)

ஸ த$_3$ண்ட$_3$ஸ்தத்ர ராஜாபூ$_4$த்$_3$ரம்யே பர்வதரோத$_4$ஸி ।
புரம் சாப்ரதிமம் ராம ந்யவேஶயத$_3$நுத்தமம் ॥ (17)

புரஸ்ய சாகரோந்நாம மது$_4$மந்தமிதி ப்ரபே$_4$ா ।
புரோஹிதம் துஶநஸம் வரயாமாஸ ஸுவ்ரதம் ॥ (18)

ஏவம் ஸ ராஜா தத்$_3$ராஜ்யமகரோத் ஸபுரோஹித: ।
ப்ரஹ்ருஷ்டமநுஜாகீர்ணம் தே$_3$வராஜ்யம் யதா$_2$ வ்ருஷா ॥ (19)

தத: ஸ ராஜா மநுஜேந்த்$_3$ரபுத்ர: ஸார்த$_4$ம் ச தேநோஶநஸா தத$_3$ாநீம் ।
சகார ராஜ்யம் ஸுமஹந்மஹாத்மா ஶக்ரோ தி$_3$வீவோஶநஸா ஸமேத: ॥ (20)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகோநாஶீதிதம: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

மூத்த புதல்வனும் வெற்றிகொள்ள முடியாதவனுமான அவனை, பூமண்டலத்தின் அரசனாக முடிசூட்டி, 'உலகத்தில் அரச பரம்பரையினரை உண்டாக்குவாயாக' என்று சொன்னார். (6)

'அவ்வாறே செய்கிறேன்' என்று தந்தைக்கு வாக்களித்தார், மைந்தன். அதனால் மிகவும் மகிழ்ச்சியடைந்த மனு, மகனை நோக்கிக் கூறினார்— (7)

'நல்லிதயம் கொண்டவனே! நான் உன் சொற்களைக் கேட்டு மிகவும் மகிழ்கிறேன். அரச பரம்பரையை நீ உண்டாக்குவாய் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. துஷ்டர்களுக்கு உரிய தண்டனை கொடுத்து, மக்களைப் பரிபாலிக்க வேண்டும். ஆனால், குற்றம் செய்யாதவனுக்குத் தண்டனை கொடுக்கக் கூடாது. (8)

குற்றம் செய்த மனிதர்களுக்குச் சட்டப்படி கொடுக்கும் தண்டனை, தண்டனை கொடுக்கும் மன்னனைத் தேவலோகத்திற்கு அழைத்துச் செல்கிறது. அதனால், தோள்வலிமிக்க மைந்தனே! தண்டனை கொடுப்பதில் நீ கவனமாக இருக்க வேண்டும். இவ்வாறு, உண்மையான குற்றவாளிக்கு, அவன் செய்த குற்றத்திற்கேற்ப தண்டனையை அளிப்பதன் மூலம், உலகில் தருமத்தைச் செய்ததாகிற புண்ணியம் கிடைக்கிறது.' (9,10)

இவ்வாறாக மன்னன் மனு, பல அறிவுரைகளைப் புதல்வனுக்குக் கூறிவிட்டு, சமாதி நிலையை அடைந்து மகிழ்ச்சியுடன் விண்ணுலகம் சென்றார் – சநாதனமான பிரும்மலோகத்தை அடைந்தார். அவர் பிரும்மலோகம் சென்றடைந்ததும், பேரொளி வீசும் இக்ஷ்வாகு, 'எவ்வாறு நான் புதல்வர்களைப் பிறப்பிப்பேன்?' என்ற கவலையில் மூழ்கினார். (11,12)

அப்போது, வேள்வி, தானம், தவம் என்பதான பலவகையான கர்மாக்கள் மூலம், தேவகுமாரர்கள் போல் ஒளிவீசும் நூறு புதல்வர்களை உற்பத்தி செய்தார், மனுவின் மைந்தர் (இக்ஷ்வாகு). (13)

குழந்தாய்! (இராமா!) அவர்களில் கடைசியாகத் தோன்றிய புத்திரன் அறிவில்லாதவனாகவும் கல்வி கற்காதவனாகவும் இருந்ததால், தன் மூத்தவர்களுக்குப் பணிவிடை செய்யாதவனாக இருந்தான். 'அறிவில்லாத இந்தப் பையனின் உடலில் தடி அடி விழப்போகிறது' என்று உணர்ந்து கொண்ட தந்தை, தண்டம் என்றே அவனுக்குப் பெயர் வைத்தார். (14,15)

எதிரிகளை அடக்கும் இராகவா! அந்தப் புதல்வனுக்குரிய பொருத்தமான இடத்தைக் காணாத தந்தை, விந்திய–சைவல மலைகளுக்கிடையேயான பிரதேசத்திற்கு மன்னனாக்கினார். தண்டன் மன்னனாக ஆனவுடன், மலையடிவாரத்தில், ஈடிணையில்லாத உத்தமமான நகரம் ஒன்றைத் தான் வசிப்பதற்காக அமைத்துக் கொண்டான். (16,17)

ஐயனே! அந்தப் பட்டணத்திற்கு மதுமத் என்று பெயரிட்டான். விரத அனுஷ்டானமுடைய சுக்ராசார்யாரைத் தன்னுடைய புரோகிதராக இருக்கும்படி வேண்டிக் கொண்டான். (18)

இவ்வாறு, மகிழ்ச்சியும் ஆற்றலும் மிக்க தேவலோகவாசிகளைப் போன்ற குடிமக்களால் நிறைந்த அந்த நகரத்தில், புரோகிதரின் வழிகாட்டுதலின்படி ஆட்சிபுரிந்து வந்தான், மன்னன் தண்டன். (19)

பெருமைக்குரிய மன்னரின் மைந்தனான அவன், தேவலோகத்தில் பிருஹஸ்பதியின் ஆலோசனைக்கிணங்க அரசு செலுத்தும் இந்திரனைப் போல், சுக்ராசார்யாரின் ஆலோசனையைக் கேட்டு, நல்லாட்சி புரிந்து வந்தான்.'' (20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எழுபத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

அஶீதிதம: ஸர்க$_3$:

ப்ருகுபுத்ரீஸங்க$_3$ம:

ஏதத$_3$ாக்$_2$யாய ராமாய மஹர்ஷி: கும்ப$_4$ஸம்ப$_4$வ: ।
அஸ்யாமேவாபரம் வாக்யம் கத$_2$யாமுபசக்ரமே ॥ (1)

தத: ஸ த$_3$ண்ட$_3$: காகுத்ஸ்த$_2$ ப$_3$ஹுவர்ஷக$_3$ணாயுதம் ।
அகரோத்தத்ர த$_3$ாந்தாத்மா ராஜ்யம் நிஹதகண்டகம் ॥ (2)

அத$_2$ காலே து கஸ்மிம்ஶ்சித்$_3$ராஜா ப$_4$ார்க$_3$வமாஶ்ரமம் ।
ரமணீயமுபாக்ராமச்சைத்ரே மாஸி மநோஹரே ॥ (3)

தத்ர ப$_4$ார்க$_3$வகந்யாம் ச ரூபேணாப்ரதிமாம் பு$_4$வி ।
விசரந்தீம் வநோத்$_3$தே$_3$ஶே த$_3$ண்டே$_3$ாऽபஶ்யத$_3$நுத்தமாம் ॥ (4)

ஸ த்$_3$ருஷ்ட்வா தாம் ஸுது$_3$ர்மேத$_4$ா அநங்க$_3$ஶரபீடி$_3$த: ।
அபி$_4$க$_3$ம்ய ஸுஸம்விக்$_3$நாம் கந்யாம் வசநமப்$_3$ரவீத் ॥ (5)

குதஸ்த்வமஸி ஸுஶ்ரோணி கஸ்ய வாஸி ஸுதா ஶுபே$_4$ ।
பீடி$_3$தோऽஹமநங்கே$_3$ந ப்ருச்ச$_2$ாமி த்வாம் ஶுப$_4$ாநநே ॥ (6)

தஸ்ய சைவம் ப்$_3$ருவாணஸ்ய மோஹோந்மத்தஸ்ய காமிந: ।
ப$_4$ார்க$_3$வீ ப்ரத்யுவாசேத$_3$ம் வச: ஸாநுநயம் ந்ருபம் ॥ (7)

ப$_4$ார்க$_3$வஸ்ய ஸுதாம் வித்$_3$தி$_4$ தே$_3$வஸ்யாக்லிஷ்டகர்மண: ।
அரஜாம் நாம ராஜேந்த்$_3$ர ஜ்யேஷ்ட$_2$ாமாஶ்ரமவாஸிநீம் ॥ (8)

மா மாம் ஸ்ப்ருஶ ப$_3$லாத்$_3$ராஜந் கந்யா பித்ருவஶா ஹ்யஹம் ।
கு$_3$ரு: பிதா மே ராஜேந்த்$_3$ர த்வம் ச ஶிஷ்யோ மஹாத்மந: ॥ (9)

வ்யஸநம் ஸுமஹத் க்ருத்$_3$த$_4$: ஸ தே த$_3$த்$_3$யாந்மஹாதபா: ।
யதி$_3$ வாந்யந்மயா கார்யம் த$_4$ர்மத்$_3$ருஷ்டேந ஸத்பத$_2$ா ॥ (10)

வரயஸ்வ ந்ருபஶ்ரேஷ்ட$_2$ பிதரம் மே மஹாத்$_3$யுதிம் ।
அந்யத$_2$ா து ப$_2$லம் துப்$_4$யம் ப$_4$வேத்$_3$கே$_4$ாராபி$_4$ஸம்ஹிதம் ॥ (11)

க்ரோதே$_4$ந ஹி பிதா மேऽஸௌ த்ரைலோக்யமபி நிர்த$_3$ஹேத் ।
த$_3$ாஸ்யதே சாநவத்$_3$யாங்க$_3$ தவ மாம் யாசித: பிதா ॥ (12)

ஏவம் ப்$_3$ருவாணாமரஜாம் த$_3$ண்ட$_3$: காமவஶம் க$_3$த: ।
ப்ரத்யுவாச மதே$_3$ாந்மத்த: ஶிரஸ்யாத$_4$ாய சாஞ்ஜலிம் ॥ (13)

ப்ரஸாத$_3$ம் குரு ஸுஶ்ரோணி ந காலம் க்ஷேப்துமர்ஹஸி ।
த்வத்க்ருதே ஹி மம ப்ராணா விதீ$_3$ர்யந்தே வராநநே ॥ (14)

த்வாம் ப்ராப்ய மே வதே$_4$ா வா ஸ்யாச்ச$_2$ாபோ வா யதி$_3$ தா$_3$ருண: ।
ப$_4$க்தம் ப$_4$ஜஸ்வ மாம் பீ$_4$ரு ப$_4$ஜமாநம் ஸுவிஹ்வலம் ॥ (15)

Koviloor Digital Library

ஸர்க்கம் : எண்பது

பிருகுவின் புதல்வியைக் கைப்பற்றுதல்

குடத்தில் தோன்றிய மாமுனிவரான அகஸ்தியர், இராமனிடம் இவ்வாறு கூறிவிட்டு, இதுவரை சொல்லி வந்ததன் தொடர்ச்சியாக, வேறொரு கதையைச் சொல்லத் தொடங்கினார்— (1)

''காகுத்தனே! தண்டன் என்ற அந்த மன்னன், புலன்களை அடக்கி, எதிர்ப்பு எதுவுமில்லாமல் அந்த இடத்தில் வெகு நீண்டகாலம் ஆட்சிபுரிந்து வந்தான். (2)

பின்னர், ஒரு சமயம் மனங்கவரும் சித்திரை மாதத்தில் (வசந்த ருதுவில்) சுக்ராசார்யாருடைய அழகிய ஆசிரமத்திற்கு வந்தான், தண்டன். (3)

அங்கே, உலகில் எவ்விடத்திலும் இணையில்லாத தோற்றமுடையவளும் பேரழகியுமான பிருகுவின் புதல்வி காட்டுப் பகுதிகளில் உலாவிக் கொண்டிருப்பதைக் கண்டான். (4)

தீயமதி படைத்த அவன், அவளைக் கண்டதுமே மன்மத பாணங்களால் பீடிக்கப்பட்டவனாய், அச்சத்தால் நடுங்கிக் கொண்டிருந்த அந்தக் கன்னிகையின் அருகில் சென்று கேட்டான்— (5)

'அழகியவளே! நீ எங்கிருந்து வந்திருக்கிறாய்? யாருடைய புதல்வி? நங்காய்! மன்மதனால் பீடிக்கப்பட்டுள்ள நான் கேட்கிறேன். பதில் கூறு.' (6)

காம மயக்கத்தால் அறிவு கலங்கியிருந்த அவன் இவ்வாறு கேட்டதும், பிருகு முனிவரின் புதல்வி மிகவும் விநயத்துடன் மன்னனைப் பார்த்துக் கூறினாள்— (7)

'மன்னருள் மாணிக்கமே! நான், புண்ணியச் செயல்கள் புரியும் சுக்ராசார்யாருடைய புதல்வி; அரஜா என்று பெயர்; இந்த ஆசிரமத்தில் இருந்து கொண்டிருக்கிறேன். (8)

மன்னரே! என்னைப் பலாத்காரம் செய்ய முற்படாதீர்கள். தந்தையின் கட்டுப்பாட்டிலுள்ள கன்னிப் பெண், நான். பேரரசரே! என் தந்தை, உங்கள் ஆசார்யர்; மகாத்மாவான அவருடைய சீடர், தாங்கள். (9)

மாபெரும் தவசியான அவர் கோபம் கொண்டால், உங்களுக்குக் கெடுதியைச் செய்ய வல்லவர். (காமத்தை அடக்க முடியாத தாங்கள், என்னை அடைய விரும்பினால்,) அறநூல்கள் கூறும் நேர்வழியில் சென்று, தேசு படைத்த என் தந்தையிடம் சென்று, முறைப்படி என்னைக் கோருங்கள். வேறுவிதமாக முயன்றால் பயங்கரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். (10,11)

என் தந்தை, தன் கோபாக்னியால் மூன்று உலகத்தையும் எரிக்கும் ஆற்றல் படைத்தவர். குறைவில்லாத அங்கங்களை உடையவரே! தாங்கள் என் தந்தையிடம் வேண்டிக் கொண்டால், அவர், என்னை உங்களுக்குக் (கன்னிகாதானம் செய்து) கொடுத்து விடுவார்.' (12)

இவ்வாறு, அரஜை கூறியதைக் கேட்டுக் காமவசப்பட்டிருந்த தண்டன், கைகளைத் தலைக்கு மேல் தூக்கிக் கொண்டு வணக்கத்துடன் பதில் கூறினான்— (13)

'அழகியே! என்னிடம் கருணை காட்டு. வீணாகக் காலத்தைக் கடத்தாதே. சுந்தரி! உனக்காக என் மனம் துடிதுடிக்கிறது. (14)

உன்னை அடைந்தபின், நான் வதம் செய்யப்பட்டாலோ, பயங்கரமான சாபம் கொடுக்கப்பட்டாலோ கூட கவலைப்பட மாட்டேன்! பேரழகியே! மனம் கலங்கி உன்னையே நினைத்துக் கொண்டிருக்கும் உன்னுடைய பக்தனான என்னை ஏற்றுக்கொள்.' (15)

Koviloor Digital Library

ஏவமுக்த்வா து தாம் கந்யாம் தே$_3$ார்ப்$_4$யாம் க்$_3$ருஹ்ய ப$_3$லாத்$_3$ப$_3$லீ ।
விஸ்பு$_2$ரந்தீம் யத$_2$ாகாமம் மைது$_2$நாயோபசக்ரமே ॥ (16)

ஏதமர்த$_2$ம் மஹாகே$_4$ாரம் த$_3$ண்ட$_3$: க்ருத்வா ஸுத$_3$ாருணம் ।
நக$_3$ரம் ப்ரயயாவாஶு மது$_4$மந்தமநுத்தமம் ॥ (17)

அரஜாபி ருத$_3$ந்தீ ஸா ஆஶ்ரமஸ்யாவிதூ$_3$ரத: ।
ப்ரதீக்ஷந்தீ ஸுஸந்த்ரஸ்தா பிதரம் தே$_3$வஸந்நிப$_4$ம் ॥ (18)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ அஶீதிதம: ஸர்க$_3$: ॥

ஏகாஶீதிதம: ஸர்க$_3$:

ஶுக்ரஶாப:

ஸ முஹூர்தாது$_3$பஶ்ருத்ய தே$_3$வர்ஷிரமிதப்ரப$_4$: ।
ஸ்வமாஶ்ரமம் ஶிஷ்யவ்ருத: க்ஷுத$_4$ார்த: ஸம்ந்யவர்தத ॥ (1)

ஸோऽபஶ்யத$_3$ரஜாம் தீ$_3$நாம் ரஜஸா ஸமபி$_4$ப்லுதாம் ।
ஜ்யோத்ஸ்நாமிவாருணக்$_3$ரஸ்தாம் ப்ரத்யூஷே ந விராஜதீம் ॥ (2)

தஸ்ய ரோஷ: ஸமப$_4$வத் க்ஷுத$_4$ார்தஸ்ய விஶேஷத: ।
நிர்த$_3$ஹந்நிவ லோகாம்ஸ்த்ரீஞ்ஶிஷ்யாந்ஶ்சைதது$_3$வாச ஹ ॥ (3)

பஶ்யத்$_4$வம் விபரீதஸ்ய த$_3$ண்ட$_3$ஸ்யாவிஜிதாத்மந: ।
விபத்திம் கே$_4$ாரஸங்காஶாம் க்ருத்$_3$த$_4$ாமக்$_3$நிஶிக$_2$ாமிவ ॥ (4)

க்ஷயோऽஸ்ய து$_3$ர்மதே: ப்ராப்த: ஸாநுக$_3$ஸ்ய து$_3$ராத்மந: ।
ய: ப்ரதீ$_3$ப்தாம் ஹுதாஶஸ்ய ஶிக$_2$ாம் வை ஸ்ப்ரஷ்டுமிச்ச$_2$தி ॥ (5)

யஸ்மாத் ஸ க்ருதவாந் பாபமீத்$_3$ருஶம் கே$_4$ாரஸம்ஹிதம் ।
தஸ்மாத் ப்ராப்ஸ்யதி து$_3$ர்மேத$_4$ா: ப$_2$லம் பாபஸ்ய கர்மண: ॥ (6)

ஸப்தராத்ரேண ராஜாஸௌ ஸப்$_4$ருத்யப$_3$லவாஹந: ।
பாபகர்மஸமாசாரோ வத$_4$ம் ப்ராப்ஸ்யதி து$_3$ர்மதி: ॥ (7)

ஸமந்தாத்$_3$யோஜநஶதம் விஷயம் சாஸ்ய து$_3$ர்மதே: ।
த$_4$க்ஷ்யதே பாம்ஸுவர்ஷேண மஹதா பாகஶாஸந: ॥ (8)

ஸர்வஸத்த்வாநி யாநீஹ ஸ்த$_2$ாவராணி சராணி ச ।
மஹதா பாம்ஸுவர்ஷேண விலயம் ஸர்வதோऽக$_3$மந் ॥ (9)

த$_3$ண்ட$_3$ஸ்ய விஷயோ யாவத்தாவத் ஸர்வஸமுச்ச$_2$ரயம் ।
பாம்ஸுவர்ஷமிவாலக்ஷ்யம் ஸப்தராத்ரம் ப$_4$விஷ்யதி ॥ (10)

இத்யுக்த்வா க்ரோத$_4$தாம்ராக்ஷஸ்தத$_3$ாஶ்ரமநிவாஸிநம் ।
ஜநம் ஜநபத$_3$ாந்தேஷு ஸ்தீ$_2$யதாமிதி சாப்$_3$ரவீத் ॥ (11)

Koviloor Digital Library

இவ்வாறு கூறிவிட்டு, பலம் மிகுந்த அவன், நடுங்கிக் கொண்டிருந்த அவளைக் கைகளால் கட்டியணைத்து, விருப்பம் போல் அனுபவிக்கத் தொடங்கினான். (16)

மிக பயங்கரமான வெறுக்கத்தக்க இந்தக் காரியத்தைச் செய்துவிட்டு ஒப்பற்றதும், உத்தமமானதுமான மதுமத் என்னும் நகரை தண்டன் விரைவில் அடைந்தான். (17)

ஆசிரமத்தின் அருகில், மிகவும் அச்சத்துடன் அழுதுகொண்டு, தேவர்கள் போல் ஆற்றல் கொண்ட தந்தையை எதிர்பார்த்தவாறு மகள் அரஜை நின்றுகொண்டிருந்தாள். (18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எண்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்தொன்று

சுக்ராசார்யார் கொடுத்த சாபம்

எல்லையற்ற தவப்பொலிவுடன் விளங்கும் சுக்ராசார்யாருக்கு, சிறிது நேரத்திற்குப் பின் அரஜை பலாத்காரம் செய்யப்பட்ட செய்தி கிடைத்தது. பசியால் வருந்திக் கொண்டிருந்த அவர், சீடர்கள் புடைசூழ ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தார். (1)

அவர், விடியற்காலை வேளையில், அருணோதயத்தின் செம்மையில், தன் ஒளி இழந்து நிற்கும் சந்திரனைப் போல் தூசி படிந்தவளாய், மனம் நொந்து நிற்கும் அரஜையைக் கண்டார். (2)

பசியோடிருந்த அவருக்கு மிகவும் கோபம் உண்டாயிற்று. மூன்று உலகங்களையும் எரித்து விடுபவர் போல், சீடர்களை அழைத்து(ப் பின்வருமாறு) கூறினார்— (3)

'பாருங்கள்! கோபம் கொண்டுள்ள நான், முறை தவறி நடந்த தண்டனுக்கு நெருப்புக் சுவாலைபோல் எப்படிப்பட்ட கடுமையான கஷ்டத்தைக் கொடுக்கப் போகிறேன் என்பதைக் காணுங்கள். (4)

கெடுமதி கொண்ட இந்தத் தீயவனுக்கும் இவனுடைய பணியாளர்களுக்கும் அழிவுக்காலம் வந்துவிட்டது. அதனால்தான், கொழுந்துவிட்டு எரியும் நெருப்பின் சுவாலையைக் கையால் தொட விரும்புகிறான். (5)

பயங்கரமான பாவத்தைச் செய்துவிட்ட தீயமதி படைத்த தண்டன், அதன் பலனை அனுபவிக்கத்தான் போகிறான். (6)

பாவத்தைச் செய்துவிட்ட இந்த மன்னன், ஏவலாளர்கள்–படைகளுடன்கூட ஏழு இரவுகளுக்குள் அழிவை அடையப் போகிறான். (7)

கெடுமதி கொண்ட இந்த மன்னனின் நூறு யோஜனை நீளமும் நூறு யோஜனை அகலமும் கொண்ட ராஜ்யத்தில், தேவராஜனான இந்திரன் புழுதிமாரி பெய்து அழிக்கப் போகிறான். (8)

இங்கேயுள்ள உயிர்ப் பிராணிகள் மற்றும் அசையாப் பொருள்கள் எல்லாமும் புழுதி மழையினால் மூடப்பட்டுவிடப் போகின்றன. தண்டனுடைய ராஜ்யம் எதுவரை பரவியிருக்கிறதோ, அதனிடையிலுள்ள உயிர்ப்பிராணிகள், ஜடப்பொருள்கள் எல்லாம் புழுதியில் மூழ்கி கண்ணுக்குப் புலப்படாமல் போகப் போகின்றன.' (9,10)

(சுக்ராசார்யார்) கோபத்தால் சிவந்த கண்களுடன் இவ்வாறு கூறிவிட்டு, ஆசிரமத்திலிருந்த மக்களைப் பார்த்து, 'தண்டனின் நாட்டுக்கு அப்பால் சென்றுவிடுங்கள்' என்று சொன்னார். (11)

Koviloor Digital Library

ஶ்ருத்வா தூஶநஸோ வாக்யம் ஸோஶ்ரமாவஸதே₂ா ஜந: ।
நிஷ்க்ராந்தோ விஷயாத்தஸ்மாத் ஸ்த₂ாநம் சக்ரேஸ்த₂ ப₃ாஹ்யத: ॥ (12)

ஸ ததே₂ாக்த்வா முநிஜநமரஜாமித₃மப்₃ரவீத் ।
இஹைவ வஸ து₃ர்மேதே₄ ஆஶ்ரமே ஸுஸமாஹிதா ॥ (13)

இத₃ம் யோஜநபர்யந்தம் ஸர: ஸுருசிரப்ரப₄ம் ।
அரஜே விஜ்வரா பு₄ங்க்ஷ்வ காலஶ்சாத்ர ப்ரதீக்ஷ்யதாம் ॥ (14)

த்வத்ஸமீபே ச யே ஸத்த்வா வாஸமேஷ்யந்தி தாம் நிஶாம் ।
அவத்₄யா: பாம்ஸுவர்ஷேண தே ப₄விஷ்யந்தி நித்யத₃ா ॥ (15)

ஶ்ருத்வா நியோக₃ம் ப்₃ரஹ்மர்ஷே: ஸாரஜா ப₄ார்க₃வீ தத₃ா ।
ததே₂தி பிதரம் ப்ராஹ ப₄ார்க₃வம் ப்₄ருஶது₃:கி₂தா ॥
இத்யுக்த்வா ப₄ார்க₃வோ வாஸமந்யத்ர ஸமகாரயத் ॥ (16)

தச்ச ராஜ்யம் நரேந்த்₃ரஸ்ய ஸப்₄ருத்யப₃லவாஹநம் ।
ஸப்தாஹாத்₃ப₄ஸ்மஸாத்₃பூ₄தம் யதே₂ாக்தம் ப்₃ரஹ்மவாதி₃நா ॥ (17)

தஸ்யாஸௌ த₃ண்ட₃விஷயோ விந்த்₄யஶைவலயோர்ந்ருப ।
ஶப்தோ ப்₃ரஹ்மர்ஷிணா தேந வைத₄ர்ம்யே ஸஹிதே க்ருதே ॥
தத: ப்ரப்₄ருதி காகுத்ஸ்த₂ த₃ண்ட₃காரண்யமுச்யதே ॥ (18)

தபஸ்விந: ஸ்தி₂தா ஹ்யத்ர ஜநஸ்த₂ாநமதோஸப₄வத் ।
ஏதத்தே ஸர்வமாக்₂யாதம் யந்மாம் ப்ருச்ச₂தி ராக₄வ ॥ (19)

ஸந்த்₄யாமுபாஸிதும் வீர ஸமயோ ஹ்யதிவர்ததே ।
ஏதே மஹர்ஷய: ஸர்வே பூர்ணகும்ப₄ா: ஸமந்தத: ॥
க்ருதோத₃கா நரவ்யாக்₄ர ஆதி₃த்யம் பர்யுபாஸதே ॥ (20)

ஸ தைர்ப்₃ராஹ்மணமப்₄யஸ்தம் ஸஹிதைர்ப்₃ரஹ்மவித்தமை: ।
ரவிரஸ்தம் க₃தோ ராம க₃ச்சே₂ாத₃கமுபஸ்ப்ருஶ ॥ (21)

இத்யார்ஷே ஶ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
உத்தரகாண்டே₃ ஏகாஶீதிதம: ஸர்க₃: ॥

த்₃வ்யஶீதிதம: ஸர்க₃:

ராமநிவர்தநம்

ருஷேர்வசநமாக்ஞாய ராம: ஸந்த்₄யாமுபாஸிதும் ।
உபாக்ராமத் ஸர: புண்யமப்ஸரோக₃ணஸேவிதம் ॥ (1)

தத்ரோத₃கமுபஸ்ப்ருஶ்ய ஸந்த்₄யாமந்வாஸ்ய பஶ்சிமாம் ।
ஆஶ்ரமம் ப்ராவிஶத்₃ராம: கும்ப₄யோநேர்மஹாத்மந: ॥ (2)

Koviloor Digital Library

சுக்ரரின் உத்தரவைக் கேட்ட ஆசிரமவாசிகள், அந்த நாட்டிலிருந்து புறப்பட்டு, அதன் எல்லைக்கு வெளியில் இருப்பிடம் அமைத்துக் கொண்டார்கள். (12)

ஆசிரமவாசிகளான முனிவர்களிடம் மேற்கண்டவாறு கூறிவிட்டு, அரஜையை நோக்கி, 'தீயமதி படைத்தவளே! இறைவனைத் தியானித்துக் கொண்டு இங்கேயே இருப்பாயாக' என்றார். (13)

'ஒரு யோஜனை விஸ்தீரணம் கொண்ட அழகான ஏரி இங்கே இருக்கிறது. கவலைப்படாமல், இதன் நீரை அருந்திக் கொண்டு, நல்ல காலத்தை எதிர்பார்த்துக் கொண்டு நாட்களைக் கழித்து வா. (14)

புழுதிமாரி பெய்கின்ற அந்த இரவில், உன் அருகில் இருக்கும் உயிர்ப்பிராணிகள் புழுதியினால் உயிர்துறக்க மாட்டா. அவை எப்போதும் உயிருடன் இருக்கும்.' (15)

பிரும்மரிஷியின் சொற்களைக் கேட்ட அரஜை, தந்தையார் பிருகு முனிவரை நோக்கி, மிகுந்த துக்கத்துடன், 'தாங்கள் கூறியபடியே ஆகட்டும்' என்றாள். இவ்வாறு அரஜை கூறக்கேட்ட பிருகு முனிவர் வேறோர் இடத்திற்குக் குடிபெயர்ந்தார். (16)

மன்னன் தண்டனுடைய அந்த நாடு, வேதோத்தமர் வாக்குப்படி, ஏவலாளர்–படைவீரர்களோடு, ஏழு நாட்களுக்குள் சாம்பலாயிற்று. (மண் மூடிப்போயிற்று.) (17)

மன்னனே! விந்தியம்–சைவலம் ஆகிய மலைகளுக்கு இடைப்பட்ட பிரதேசத்தில் தண்டனுடைய நாடு இருந்தது. கிருதயுகத்தில் இவ்வாறு தருமம் தவறி நடந்ததால் பிரும்மரிஷியினால் சபிக்கப்பட்ட இந்த நாடு, அன்று முதற்கொண்டு 'தண்டகாரண்யம்' என்று வழங்கப்படுகிறது. (18)

இராகவா! தவம் செய்பவர்கள் இந்த இடத்திற்கு வந்து வசிக்கத் தொடங்கினார்கள். அதனால், இந்த இடத்திற்கு 'ஜனஸ்தானம்' என்ற பெயர் ஏற்பட்டது. ரகுநந்தனா! நீ கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லிவிட்டேன். (19)

மாவீரனே! சந்த்யாகாலக் கடன்களை நிறைவேற்றுவதற்கான காலம் கடந்து கொண்டிருக்கிறது. இந்த மாமுனிவர்கள் எல்லோரும் நீராடிவிட்டு, கையில் நீர் நிறைந்த கும்பங்களை ஏந்திக் கொண்டு, சூரியனை வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள். (20)

இராமனே! வேதவித்தகர்கள் ஒன்றுகூடிக் கூறிய வேதமந்திரங்களைக் கேட்டபடியே, சூரியன் மேற்கு மலையில் மறைந்துவிட்டான். நீயும் சென்று நீராடி, மாலைக் கடன்களை முடித்துவிட்டு வா.'' (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எண்பத்தோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்திரண்டு

இராமன் அயோத்திக்குத் திரும்புதல்

முனிவருடைய கட்டளையை ஏற்று, மாலைக்கடன்களை நிறைவேற்றுவதற்காக புண்ணியமானதும் அப்சரப் பெண்டிர்கள் கூடியிருந்ததுமான ஏரிக்குச் சென்றார், இராமன். (1)

அங்கு நீராடிவிட்டு, மாலைப் பிரார்த்தனைகளை முடித்துக் கொண்டு, மாபெரும் தவசியான அகஸ்தியருடைய ஆசிரமத்திற்குத் திரும்பி வந்தார். (2)

Koviloor Digital Library

தஸ்யாக$_3$ஸ்த்யோ ப$_3$ஹுகு$_3$ணம் கந்த$_3$மூலம் ததௌ$_2$ஷதி$_4$ம் ।
ஶால்யாதீ$_3$நி பவித்ராணி போ$_4$ஜநார்த$_2$மகல்பயத் ॥ (3)

ஸ பு$_4$க்தவாந்நரஶ்ரேஷ்ட$_2$ஸ்தத$_3$ந்நமம்ருதோபமம் ।
ப்ரீதஶ்ச பரிதுஷ்டஶ்ச தாம் ராத்ரிம் ஸமுபாவிஶத் ॥ (4)

ப்ரபா$_4$தே கல்யமுத்தா$_2$ய க்ருத்வாஹ்நிகமரிந்த$_3$ம: ।
ருஷிம் ஸமுபசக்ராம க$_3$மநாய ரகூ$_4$த்தம: ॥ (5)

அபி$_4$வாத்$_3$யாப்$_3$ரவீத்$_3$ராமோ மஹர்ஷிம் கும்ப$_4$ஸம்ப$_4$வம் ।
ஆப்ருச்சே$_2$ ஸ்வாம் புரீம் க$_3$ந்தும் மாமநுக்ஞாதுமர்ஹஸி ॥ (6)

த$_4$ந்யோऽஸ்ம்யநுக்$_3$ருஹீதோऽஸ்மி த$_3$ர்ஶநேந மஹாத்மந: ।
த்$_3$ரஷ்டும் சைவாக$_3$மிஷ்யாமி பாவநார்த$_2$மிஹாத்மந: ॥ (7)

தத$_2$ா வத$_3$தி காகுத்ஸ்தே$_2$ வாக்யமத்$_3$பு$_4$தத$_3$ர்ஶநம் ।
உவாச பரமப்ரீதோ த$_4$ர்மநேத்ரஸ்தபோத$_4$ந: ॥ (8)

அத்யத்$_3$பு$_4$தமித$_3$ம் வாக்யம் தவ ராம ஶுபா$_4$க்ஷரம் ।
பாவந: ஸர்வபூ$_4$தாநாம் த்வமேவ ரகு$_4$நந்த$_3$ந ॥ (9)

முஹூர்தமபி ராம த்வாம் யே ச பஶ்யந்தி கேசந ।
பாவிதா: ஸ்வர்க$_3$பூ$_4$தாஶ்ச பூஜ்யாஸ்தே ஸர்வதை$_3$வதை: ॥ (10)

யே ச த்வாம் கோ$_4$ரசக்ஷுர்பி$_4$: பஶ்யந்தி ப்ராணிநோ பு$_4$வி ।
ஹதாஸ்தே யமத$_3$ண்டே$_3$ந ஸத்$_3$யோ நிரயகா$_3$மிந: ॥ (11)

ஈத்$_3$ருஶஸ்த்வம் ரகு$_4$ஶ்ரேஷ்ட$_2$ பாவந: ஸர்வதே$_3$ஹிநாம் ।
பு$_4$வி த்வாம் கத$_2$யந்தோऽபி ஸித்$_3$தி$_4$மேஷ்யந்தி ராக$_4$வ ॥ (12)

க$_3$ச்ச$_2$ சாரிஷ்டமவ்யக்$_3$ர: பந்தா$_2$நமகுதோப$_4$யம் ।
ப்ரஶாதி$_4$ ராஜ்யம் த$_4$ர்மேண க$_3$திர்ஹி ஜக$_3$தோ ப$_4$வாந் ॥ (13)

ஏவமுக்தஸ்து முநிநா ப்ராஞ்ஜலி: ப்ரக்$_3$ரஹோ ந்ருப: ।
அப்$_4$யவாத$_3$யத ப்ராக்ஞஸ்தம்ருஷிம் ஸத்யஶீலிநம் ॥ (14)

அபி$_4$வாத்$_3$ய முநிஶ்ரேஷ்ட$_2$ம் தாம்ஶ்ச ஸர்வாம்ஸ்தபோத$_4$நாந் ।
அத்$_4$யாரோஹத்தத$_3$வ்யக்$_3$ர: புஷ்பகம் ஹேமபூ$_4$ஷிதம் ॥ (15)

தம் ப்ரயாந்தம் முநிக$_3$ணா ஹ்யாஶீர்வாதை$_3$: ஸமந்தத: ।
அபூஜயந் மஹேந்த்$_3$ராப$_4$ம் ஸஹஸ்ராக்ஷமிவாமரா: ॥ (16)

ஸ்வஸ்த$_2$: ஸ த$_3$த்$_3$ருஶே ராம: புஷ்பகே ஹேமபூ$_4$ஷிதே ।
ஶஶீ மேக$_4$ஸமீபஸ்தோ$_2$ யதா$_2$ ஜலத$_4$ராக$_3$மே ॥ (17)

ததோऽர்த$_4$தி$_3$வஸே ப்ராப்தே பூஜ்யமாநஸ்ததஸ்தத: ।
அயோத்$_4$யாம் ப்ராப்ய காகுத்ஸ்தோ$_2$ மத்$_4$யகக்ஷ்யாமவாருஹத் ॥ (18)

Koviloor Digital Library

அங்கே அகஸ்தியர், பலவித சுவையுடைய கிழங்குகள், வேர்கள், உடல் நலிவையும் முதுமையையும் தடுத்து நிறுத்தும் மூலிகைகள் மற்றும் உணவு வகைகள் ஆகியவற்றை இராமனுக்குச் சமர்ப்பித்தார். (3)

அமுதத்திற்கொப்பான அந்த உணவுப்பொருள்களை உண்டு மகிழ்ந்த அவர், அங்கேயே அவ்விரவைக் கழித்தார். (4)

இராமன் விடியற்காலையில் கண்விழித்து, காலைக்கடன்களை உரிய காலத்தில் செய்து முடித்துவிட்டு, விடைபெற்றுக் கொள்வதற்காக முனிவரிடம் சென்றார். (5)

மாமுனிவர் அகஸ்தியரை வணங்கி, ''என் பட்டணத்திற்குத் திரும்பிச் செல்வதற்குத் தங்கள் அனுமதியைக் கோருகிறேன்'' என்று சொன்னார். (6)

''தங்களைப் போன்ற மகாத்மாவைத் தரிசித்ததனால், நான் பெரும்பேறு பெற்றவனாகிவிட்டேன்; பேரருள் கிடைக்கப் பெற்றேன். என்னை நானே புனிதப்படுத்திக் கொள்வதற்காகத் தங்களைத் தரிசிப்பதற்கு மறுபடியும் வருவேன்.'' (7)

இவ்வாறு இராமன் கூறியதைக் கேட்ட, ஞானத்தை அடைவதற்கு அறத்தைக் கைக்கொண்டு நடப்பதையே சாதனமாகக் கொண்ட தவச்செல்வர் மிகவும் மகிழ்ச்சியுடன் பதில் கூறினார்— (8)

''ரகுநந்தனா! நீ கூறிய மங்களமான சொற்கள் மிகவும் அற்புதமானவை. எல்லா உயிர்களையும் புனிதப்படுத்துபவன், நீயல்லவா? இராமா! உன்னைச் சிறிதுநேரமே பார்த்தாலும் போதும், அவர்கள் பாவங்கள் நீங்கப் பெற்றவர்களாக தேவலோகம் செல்கிறார்கள். அங்கே தேவதைகளால் போற்றப்படுகிறார்கள். (9,10)

மண்ணுலகில், எந்தப் பிராணிகள் உன்னைக் குரூரமாகப் பார்க்கின்றனவோ, அவைகள் யமனால் தண்டிக்கப்பட்டு உடனே நரகத்தில் வீழ்த்தப்படுகிறார்கள். (11)

ரகுகுல திலகமே! உடல் கொண்ட எல்லாப் பிராணிகளையும் புனிதப்படுத்தும் மகாவல்லமை படைத்தவன், நீ. இராகவா! உலகில் உன்னைப் பற்றிப் பேசுபவர்கள்கூட, பிறவிப்பயனை அடைந்து விடுகிறார்கள். (12)

நீ மனவுறுதியுடன் செல்வாயாக; கலங்க வேண்டாம். செல்லும் வழியில் உனக்கு எவ்விதக் கஷ்டமும் ஏற்படாது. அறநெறிகளின்படி ஆட்சி செலுத்துவாயாக. ஏனென்றால், இந்த உலகமே உன்னிடத்தில்தான் அடங்கியிருக்கிறது.'' (13)

முனிவர் இவ்வாறு கூறியதும், மன்னர், தன் இரு கைகளையும் தலைக்குமேல் கூப்பிக் கொண்டு, சத்தியம் தவறாத முனிவரை மீண்டும் வணங்கினார். (14)

தலைசிறந்த முனிவரையும் மற்றும் அங்கிருந்த தவச்செல்வர்களையும் வணங்கிவிட்டு, பொன் அணிகளால் அலங்கரிக்கப்பட்ட புஷ்பகத்தில் சஞ்சலமில்லாத மனத்துடன் ஏறிக்கொண்டார். (15)

அமரர்கள், இந்திரன் புறப்பட்டுச் செல்லும்போது ஆசி கூறுவதைப் போல, இந்திரன் நிகர் இராமன் புறப்பட்டுச் சென்றபோது, முனிவர் கூட்டங்கள் எல்லாப் புறங்களிலிருந்தும் ஆசி கூறினார்கள். (16)

பொன் வேலைப்பாடுகள் நிறைந்த புஷ்பகம் ஆகாயத்தில் சென்றபோது, அதில் அமர்ந்திருந்த இராமன், மாரிக்கால மேகங்களிடையே காணப்படும் முழுநிலவைப் போல் காணப்பட்டார்! (17)

ஆங்காங்கே வரவேற்கப்பட்டுப் பாராட்டப் பெற்ற இராமன், நண்பகல் கடந்த வேளையில் அயோத்தியை அடைந்து அரண்மனையின் உள்கட்டில் இறங்கினார். (18)

Koviloor Digital Library

ததோ விஸ்ருஜ்ய ருசிரம் புஷ்பகம் காமக$_3$ாமி தத் ।
விஸர்ஜயித்வா க$_3$ச்சே$_2$தி ஸ்வஸ்தி தேऽஸ்த்விதி ச ப்ரபு$_4$: ॥ (19)

கக்ஷ்யாந்தரவிநிக்ஷிப்தம் த்$_3$வா:ஸ்த$_2$ம் ராமோऽப்$_3$ரவீத்$_3$வச: ।
லக்ஷ்மணம் ப$_4$ரதம் சைவ க$_3$த்வா தௌ லகு$_4$விக்ரமௌ ॥
மமாக$_3$மநமாக்$_2$யாய ஶப்$_3$த$_3$ாபயத மா சிரம் ॥ (20)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்$_3$வ்யஶீதிதம: ஸர்க$_3$: ॥

த்ர்யஶீதிதம: ஸர்க$_3$:

ராஜஸூயாஜிஹீர்ஷா

தச்ச்$_2$ருத்வா ப$_4$ாஷிதம் தஸ்ய ராமஸ்யாக்லிஷ்டகர்மண: ।
த்$_3$வா:ஸ்த$_2$: குமாராவாஹூய ராக$_4$வாய ந்யவேத$_3$யத் ॥ (1)

த்$_3$ருஷ்ட்வா து ராக$_4$வ: ப்ராப்தௌ ப்ரியௌ ப$_4$ரதலக்ஷ்மணௌ ।
பரிஷ்வஜ்ய தத$_3$ா ராமோ வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (2)

க்ருதம் மயா யத$_2$ா தத்$_2$யம் த்$_3$விஜகார்யமநுத்தமம் ।
த$_4$ர்மஸேதுமதோ பூ$_4$ய: கர்துமிச்ச$_2$ாமி ராக$_4$வௌ ॥ (3)

அக்ஷய்யஶ்சாவ்யயஶ்சைவ த$_4$ர்மஸேதுர்மதோ மம ।
த$_4$ர்மப்ரஸாத$_4$கம் ஹ்யேதத் ஸர்வபாபப்ரணாஶநம் ॥ (4)

யுவாப்$_4$யாமாத்மபூ$_4$தாப்$_4$யாம் ராஜஸூயமநுத்தமம் ।
ஸஹிதோ யஷ்டுமிச்ச$_2$ாமி தத்ர த$_4$ர்மோ ஹி ஶாஶ்வத: ॥ (5)

இஷ்ட்வா து ராஜஸூயேந மித்ர: ஶத்ருநிப$_3$ர்ஹண: ।
ஸுஹுதேந ஸுயக்ஞேந வருணத்வமுபாக$_3$மத் ॥ (6)

ஸோமஶ்ச ராஜஸூயேந இஷ்ட்வா த$_4$ர்மேண த$_4$ர்மவித் ।
ப்ராப்தஶ்ச ஸர்வலோகேஷு கீர்திம் ஸ்த$_2$ாநம் ச ஶாஶ்வதம் ॥ (7)

அஸ்மிந்நஹநி யச்ச்$_2$ரேயஶ்சிந்த்யதாம் தந்மயா ஸஹ ।
ஹிதம் சாயதியுக்தம் ச ப்ரயதௌ வக்துமர்ஹத$_2$: ॥ (8)

ஶ்ருத்வா து ராக$_4$வஸ்யைதத்$_3$வாக்யம் வாக்யவிஶாரத$_3$: ।
ப$_4$ரத: ப்ராஞ்ஜலிர்பூ$_4$த்வா வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (9)

த்வயி த$_4$ர்ம: பர: ஸாதே$_4$ா த்வயி ஸர்வா வஸுந்த$_4$ரா ।
ப்ரதிஷ்டி$_2$தா மஹாபா$_3$ஹோ யஶஶ்சாமிதவிக்ரம ॥ (10)

மஹீபாலாஶ்ச ஸர்வே த்வாம் ப்ரஜாபதிமிவாமரா: ।
நிரீக்ஷந்தே மஹாத்மாநம் லோகநாத$_2$ம் யத$_2$ா வயம் ॥ (11)

Koviloor Digital Library

பின்னர், மனம் போல் செல்லக்கூடிய அழகிய புஷ்பகத்தைத் தன் இடத்திற்கும் போவதற்கு விடைகொடுத்து, ''சென்று வா. உனக்கு நல்லதே உண்டாகட்டும்'' என்று மொழிந்தார். (19)

அந்த இடைகழியின் உள்ளேயிருந்த காவற்காரனை நோக்கி, ''மாவீரர்களான பரத–லட்சுமணர்களிடம் சென்று, நான் திரும்பி வந்துவிட்டதைக் கூறு. உடனே வந்து என்னைப் பார்க்கும்படி சொல்வாயாக'' என்று ஆணையிட்டார். (20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எண்பத்திரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்து மூன்று

ராஜசூயம் செய்யலாமே!

அரிய செயல்களையும் எளிதாகச் செய்து முடிக்கும் இராமன் கூறியதைக் கேட்ட வாயிற்காப்போன், பரத–லட்சுமணர்களை அழைத்துக் கொண்டு வந்து, இராமனிடம் (அவர்கள் வருகையைத்) தெரிவித்தான். பாசம் மிகுந்த பரத–லட்சுமணர்களைக் கண்டதும், அவர்களை மார்புறக் கட்டித் தழுவிய இராமன், பின்வருமாறு கூறினார்— (1,2)

''அந்த அந்தணருக்குக் கொடுக்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்பட்டுவிட்டது. (அவருடைய மகன் உயிர் பெற்றுவிட்டான்.) ரகுகுல மாணிக்கங்களே! அரச தருமத்தின் எல்லைக்கோடாகக் கருதப்படும் ராஜசூய வேள்வியை நடத்த விரும்புகிறேன். (3)

ராஜசூய வேள்வி, எப்போதும் குறையாத அழிவில்லாத நற்பயனை அளிக்கவல்லது என்று நான் கருதுகிறேன். அந்த வேள்வி, தருமத்தைச் செழிக்கச் செய்வது; எல்லாப் பாவங்களையும் போக்க வல்லது. (4)

என் உயிராகவே விளங்கும் உங்களுடன்கூட மிக உயர்ந்ததான ராஜசூய யாகத்தைச் செய்ய விரும்புகிறேன். ஏனென்றால், அரச தருமம் அதில்தான் நிலைகொண்டிருக்கிறது. (5)

எதிரிகளை மாய்க்கும் மித்ரன், முறையாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட அக்னியில் நன்றாக அவிகளைச் சொரிந்து, ராஜசூயம் செய்து, வருணன் என்ற பதவியைப் பெற்றார். (6)

அறம் அறிந்த தேவதை சோமன், முறைப்படி ராஜசூய யாகம் செய்து, எல்லா உலகங்களிலும் பெரும் புகழையும், நிலையான கௌரவத்தையும் பெற்றார். (7)

ஆகவே, இன்றைய தினம் நீங்கள் இருவரும் இங்கேயே என்னுடன் உட்கார்ந்து கொண்டு, எந்த மாதிரியான சடங்கு, நம் மக்களுக்கும் விண்ணுலகில் நமக்கும் நன்மை பயக்கும் என்பதைச் சிதறவிடாத மனத்துடன் சிந்தித்து ஆலோசனை கூறுங்கள்.'' (8)

பேச்சில் வல்லவனான பரதன் இராமபிரானுடைய இந்தச் சொற்களைக் கேட்டு, கைகளைக் கூப்பிக் கொண்டு வணக்கத்துடன் கூறினான்— (9)

''மாட்சிமை மிக்கவரே! தங்களிடமே உயர்நெறியான தருமம் நிலைகொண்டுள்ளது. பெருந்தோளரே! இந்தப் புவிமண்டலம் தங்களையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. எல்லையில்லா ஆற்றல் கொண்டவரே! தங்களிடமே புகழ் நிலைத்து நிற்கிறது. (10)

தேவதைகள், பிரஜாபதி பிரும்மாவை மகாத்மாவாகவும் அனைத்துலகத் தலைவராகவும் ஏற்றுக் கௌரவிப்பதைப் போலவே, நாங்களும் மற்ற சிற்றரசர்களும், தங்களையே மகாபுருஷராகவும் அனைத்துலகத் தலைவராகவும் கருதுகிறோம். (11)

Koviloor Digital Library

ப்ரஜாஶ்ச பித்ருவத்3ராஜந் பஶ்யந்தி த்வாம் மஹாப3ல ।
ப்ருதி2வ்யா க3திபூ4தோऽஸி ப்ராணிநாமபி ராக4வ ॥ (12)

ஸ த்வமேவம்வித4ம் யக்ஞமாஹர்தாஸி கத2ம் ந்ருப ।
ப்ருதி2வ்யாம் ராஜவம்ஶாநாம் விநாஶோ யத்ர த்3ருஶ்யதே ॥ (13)

ப்ருதி2வ்யாம் யே ச புருஷா ராஜந் பௌருஷமாக3தா: ।
ஸர்வேஷாம் ப4விதா தத்ர ஸம்க்ஷய: ஸர்வகோபஜ: ॥ (14)

ஸ த்வம் புருஷஶார்தூ3ல கு3ணைரதுலவிக்ரம ।
ப்ருதி2வீம் நார்ஹஸே ஹந்தும் வஶே ஹி தவ வர்ததே ॥ (15)

ப4ரதஸ்ய து தத்3வாக்யம் ஶ்ருத்வாம்ருதமயம் தத3ா ।
ப்ரஹர்ஷமதுலம் லேபே4 ராம: ஸத்யபராக்ரம: ॥ (16)

உவாச ச ஶுப4ம் வாக்யம் கைகேய்யாநந்த3வர்த4நம் ।
ப்ரீதோऽஸ்மி பரிதுஷ்டோऽஸ்மி தவாத்3ய வசநேऽநக4 ॥ (17)

இத3ம் வசநமக்லீப3ம் த்வயா த4ர்மஸமாகதம் ।
வ்யாஹ்ருதம் புருஷவ்யாக்4ர ப்ருதி2வ்யா: பரிபாலநம் ॥ (18)

ஏஷ்யத3ஸ்மத3பி4ப்ராயாத்3ராஜஸூயாத் க்ரதூத்தமாத் ।
நிவர்தயாமி த4ர்மக்ஞ தவ ஸுவ்யாஹ்ருதேந ச ॥ (19)

லோகபீட3ாகரம் கர்ம ந கர்தவ்யம் விசக்ஷணை: ।
பா3லாநாம் து ஶுப4ம் வாக்யம் க்3ராஹ்யம் லக்ஷ்மணபூர்வஜ ॥
தஸ்மாச்ச்2ருணோமி தே வாக்யம் ஸாது4யுக்தம் மஹாமதே ॥ (20)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 த்ர்யஶீதிதம: ஸர்க3: ॥

சதுரஶீதிதம: ஸர்க3:

வ்ருத்ரதபோவர்ணநம்

ததோ2க்தவதி ராமே து ப4ரதே ச மஹாத்மநி ।
லக்ஷ்மணோऽத2 ஶுப4ம் வாக்யமுவாச ரகு4நந்த3நம் ॥ (1)

அஶ்வமேதோ4 மஹாயக்ஞ: பாவந: ஸர்வபாப்மநாம் ।
பாவநஸ்தவ து3ர்த4ர்ஷோ ரோசதாம் ரகு4நந்த3ந ॥ (2)

ஶ்ரூயதே ஹி புரா வ்ருத்தம் வாஸவே ஸுமஹாத்மநி ।
ப்3ரஹ்மஹத்யாவ்ருத: ஶக்ரோ ஹயமேதே4ந பாவித: ॥ (3)

புரா கில மஹாபா3ஹோ தே3வாஸுரஸமாக3மே ।
வ்ருத்ரோ நாம மஹாநாஸீத்3தை3தேயோ லோகஸம்மத: ॥ (4)

Koviloor Digital Library

மன்னரே! மக்கள் தங்களைத் தத்தம் தந்தையைப் போலவே எண்ணி அன்பு செலுத்துகிறார்கள். மகாபலம் பொருந்திய வேந்தரே! இந்த உலகத்திற்கும் உயிர்களுக்கும் தாங்களே அடைக்கலமாக விளங்குகிறீர்கள். (12)

உலகில், ராஜசூயம் செய்வதால் அரச பரம்பரைகள் அழிந்துப் போகின்றன என்பது கண்கூடாகத் தெரிகிறது. (எதிர்த்து வரும் மன்னர்களுடன் போரிட்டு, வெற்றி பெற்றால்தான் ராஜசூயம் செய்யமுடியும். போர் என்றால், அழிவு தவிர்க்க முடியாததாகிவிடும்.) வேந்தே! அப்படியிருக்கும்போது, இந்த வேள்வியைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் தங்களுக்கு எப்படித் தோன்றிற்று? (13)

உலகிலுள்ள ஆண்மை படைத்த ஆண்கள் அனைவருக்கும் கோபம் ஏற்பட்டு, அந்த வேள்வி காரணமாக அழிவு ஏற்படுகிறது. (14)

ஆண்புலியே! எல்லா நற்குணங்களும் பொருந்திய மகாபராக்கிரமசாலியே! தங்கள் ஆதிக்கத்திலுள்ள இந்த உலகைத் தாங்களே கொன்றுவிடக்கூடாது.'' (15)

பரதனுடைய அமுதமயமான சொற்களைக் கேட்ட, பொய்யாகாத பராக்கிரமமுடைய இராமன் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தார். (16)

(இராமன்) கைகேயியின் புதல்வனைப் பார்த்து, ''மாசற்றவனே! உன்னுடைய தெளிவான பேச்சினால் நான் மனம் நெகிழ்ந்துள்ளேன்; மகிழ்ச்சி அடைந்துள்ளேன்! ஆண்சிங்கமே! கருணை நிரம்பியதும் அறத்தின் பாற்பட்டதுமான உன் பேச்சு, உலகத்தையே காப்பாற்றக்கூடியது. (17,18)

அறம் அறிந்தவனே! உன்னுடைய அறிவுபூர்வமான வாதத்தைக் கேட்ட பின்னர், ராஜசூயம் செய்யவேண்டும் என்ற எண்ணத்திலிருந்து, நான் என் மனத்தைத் திருப்பிக் கொள்கிறேன். (19)

பேரறிவு படைத்தவனே! புத்திமான்கள் உலகத்திற்குத் துன்பம் தரும் செயல்களைச் செய்யக் கூடாது. இலக்குவனுக்கு மூத்தவனே! நலம் தரும் அறிவுரையென்றால், பாலகர்களிடமிருந்தும் ஏற்கத்தக்கதே. நியாயமான உன் சொற்களை நான் ஏற்றுக் கொள்கிறேன்.'' (20)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எண்பத்து மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்து நான்கு

விருத்திரனின் தவத்தை வருணித்தல்

இராமனும் மகாத்மா பரதனும் இவ்வாறு பேசி முடித்ததும், ரகுநந்தனரைப் பார்த்து, (பின்வரும்) இனிய மொழிகளை இலக்குவன் கூறினான்— (1)

ரகுநந்தனரே! அசுவமேதம் என்ற மகாவேள்வி எல்லாப் பாவங்களையும் போக்கக் கூடியது; மிகவும் புனிதமானது; செய்வதற்கு அரியது. அதனால், இந்தப் பெரும் வேள்வியைச் செய்ய, தாங்கள் மனம் கொள்ளலாமே? (2)

முன்னொரு காலத்தில், மகாத்மாவான இந்திரன், பிரும்மஹத்தி (வேதவித்தகனைக் கொலை செய்தல்) தோஷத்தினால் பாதிக்கப்பட்ட போது, அசுவமேத யாகம் செய்து, அந்தப் பாவத்திலிருந்து விடுதலை அடைந்தான் என்ற வரலாற்றைக் கேட்கிறோம். பெருந்தோளரே! முன்னர், தேவர்களும் அசுரர்களும் ஒற்றுமையாக இணைந்து வாழ்ந்து கொண்டிருந்தபோது, விருத்திரன் என்ற பெயர் கொண்ட அசுரன் எல்லோராலும் போற்றப்படுபவனாக இருந்தான். (3,4)

Koviloor Digital Library

விஸ்தீர்ணோ யோஜநஶதமுச்ச்$_{2}$ரிதஸ்த்ரிகு$_{3}$ணம் தத: ।
அநுராகே$_{3}$ண லோகாம்ஸ்த்ரீந் ஸ்நேஹாத் பஶ்யதி ஸர்வத: ॥ (5)

த$_{4}$ர்மக்ஞஶ்ச க்ருதக்ஞஶ்ச பு$_{3}$த்$_{3}$த்$_{4}$யா ச பரிநிஷ்டி$_{2}$த: ।
ஶஶாஸ ப்ருதி$_{2}$வீம் ஸ்பீ$_{2}$தாம் த$_{4}$ர்மேண ஸுஸமாஹித: ॥ (6)

தஸ்மிந் ப்ரஶாஸதி தத$_{3}$ா ஸர்வகாமது$_{3}$க$_{4}$ா மஹீ ।
ரஸவந்தி ப்ரஸூநாநி மூலாநி ச ப$_{2}$லாநி ச ॥ (7)

அக்ருஷ்டபச்யா ப்ருதி$_{2}$வீ ஸுஸம்பந்நா மஹாத்மந: ।
ஸ ராஜ்யம் தாத்$_{3}$ருஶம் பு$_{4}$ங்க்தே ஸ்பீ$_{2}$தமத்$_{3}$பு$_{4}$தத$_{3}$ர்ஶநம் ॥ (8)

தஸ்ய பு$_{3}$த்$_{3}$தி$_{4}$: ஸமுத்பந்நா தப: குர்யாமநுத்தமம் ।
தபோ ஹி பரமம் ஶ்ரேய: ஸம்மோஹமிதரத் ஸுக$_{2}$ம் ॥ (9)

ஸ நிக்ஷிப்ய ஸுதம் ஜ்யேஷ்ட$_{2}$ம் பௌரேஷு மது$_{4}$ரேஶ்வரம் ।
தப உக்$_{3}$ரம் ஸமாதிஷ்ட$_{2}$த்தாபயந் ஸர்வதே$_{3}$வதா: ॥ (10)

தபஸ்தப்யதி வ்ருத்ரே து வாஸவ: பரமார்தவத் ।
விஷ்ணும் ஸமுபஸங்க்ரம்ய வாக்யமேதது$_{3}$வாச ஹ ॥ (11)

தபஸ்யதா மஹாப$_{3}$ாஹோ லோகா வ்ருத்ரேண நிர்ஜிதா: ।
ப$_{3}$லவாந் ஸ ஹி த$_{4}$ர்மாத்மா நைநம் ஶக்ஷ்யாமி ஶாஸிதும் ॥ (12)

யத்$_{3}$யஸௌ தப ஆதிஷ்டே$_{2}$த்$_{3}$பூ$_{4}$ய ஏவாஸுரேஶ்வர: ।
யாவல்லோகா த$_{4}$ரிஷ்யந்தி தாவத$_{3}$ஸ்ய வஶாநுகா$_{3}$: ॥ (13)

தம் சைநம் பரமோதா$_{3}$ரமுபேக்ஷஸி மஹாப$_{3}$ல ।
க்ஷணம் ஹி ந ப$_{4}$வேத்$_{3}$வ்ருத்ர: க்ருத்$_{3}$தே$_{4}$ த்வயி ஸுரேஶ்வர ॥ (14)

யத$_{3}$ா ஹி ப்ரீதிஸம்யோக$_{3}$ம் த்வயா விஷ்ணோ ஸமாக$_{3}$த: ।
தத$_{3}$ாப்ரப்$_{4}$ருதி லோகாநாம் நாத$_{2}$த்வமுபலப்$_{3}$த$_{4}$வாந் ॥ (15)

ஸ த்வம் ப்ரஸாத$_{3}$ம் தே$_{3}$வாநாம் குருஷ்வ ஸுஸமாஹித: ।
த்வத்க்ருதேந ஹி ஸர்வம் ஸ்யாத் ப்ரஶாந்தமருஜம் ஜக$_{3}$த் ॥ (16)

இமே ஹி ஸர்வே விஷ்ணோ த்வாம் நிரீக்ஷந்தே தி$_{3}$வௌகஸ: ।
வ்ருத்ரக$_{4}$ாதேந மஹதா தேஷாம் ஸாஹ்யம் குருஷ்வ ஹ ॥ (17)

த்வயா ஹி நித்யஶ: ஸாஹ்யம் க்ருதமேஷாம் மஹாத்மநாம் ।
அஸஹ்யமித$_{3}$மந்யேஷாமக$_{3}$தீநாம் க$_{3}$திர்ப$_{4}$வாந் ॥ (18)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_{3}$ராமாயணே வால்மீகீயே ஆதி$_{3}$காவ்யே
உத்தரகாண்டே$_{3}$ சதுரஶீதிதம: ஸர்க$_{3}$: ॥

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_28_Back

Koviloor Digital Library

அவன் நூறு யோஜனை அகலமும், முந்நூறு யோஜனை உயரமும் உடையவனாக இருந்தான். மூன்று உலக மக்களையும் மிகவும் பாசத்துடன் நேசித்து வந்தான். (5)

அவன் அரச தருமம் அறிந்தவன்; செய்நன்றி மறவாதவன்; நல்லறிவில் நிலைப்பெற்றவன். தன–தானியச் செழிப்புடன் விளங்கிய உலகத்தைச் சஞ்சலமில்லாத மனத்துடன் ஆண்டு வந்தான். மக்கள் விரும்பும் எல்லாப் பொருள்களையும் குறைவின்றி வழங்கக்கூடிய வையகம், அவனுடைய ஆட்சிக் காலத்தில் சுவையும் சாறுமுடைய கிழங்குகளையும் பழங்களையும் கொடுத்தது. (6,7)

மகாத்மாவான விருத்திரனின் ஆட்சிக் காலத்தில், பயிர் நிலத்தை உழுது விதை விதைக்காமலே பயிர்கள் தோன்றி வளர்ந்து நல்ல மகசூலை அளித்தன. இவ்வாறாக, அந்த அசுரன், செல்வச் செழுமையும் பொருள் வளமும் கொண்ட அரசை அனுபவித்துக் கொண்டிருந்தான். (8)

'நான் மிகவும் உத்தமமான தவத்தைச் செய்யவேண்டும்; ஏனென்றால், மிக உயர்ந்த ஆன்மநிலையை அடைவதற்கு அது ஒன்றுதான் சிறந்த வழி. மற்ற எல்லா சுகங்களும் வெறும் மனமயக்கங்களே' என்ற எண்ணம், ஒரு சமயம் அவனுக்கு உண்டாயிற்று. (9)

அவன், தன் மூத்த புதல்வன் மதுரன் என்பவனை நாட்டின் மன்னனாக்கிவிட்டு, எல்லாத் தேவதைகளையும் தவிக்கச் செய்யும் மிகக் கடுமையான தவம் செய்வதில் ஈடுபட்டான். (10)

விருத்திரன் தவம் செய்யத் தொடங்கியதும், இந்திரன் மிகவும் மனங்கலங்கி, மகாவிஷ்ணுவிடம் சென்று (பின்வருமாறு) கூறினான்— (11)

''பெருந்தோளரே! விருத்திரன், தவத்தினால் எல்லா உலகங்களையும் வென்றுவிட்டான். தருமாத்மாவான அவன் மிகவும் ஆற்றல் பெற்றவனாகிவிட்டான். இனி, என்னால் அவனை அடக்கி ஆள முடியாது. (12)

அவன் இம்மாதிரி தவம் செய்துக் கொண்டே இருப்பானேயானால், மூன்று உலகங்களும் நிலைபெற்றிருக்கும் காலம் வரை, எல்லா தேவதைகளும் அவன் ஆணைக்குக் கட்டுப்பட்டே இருக்க வேண்டியிருக்கும். மகாபலம் பொருந்தியவரே! விசாலமனம் படைத்த அவனை, தாங்கள் பொருட்படுத்தாதிருக்கிறீர்களே. (ஏன்?) தேவர் தலைவரே! தாங்கள் கோபம் கொண்டால், ஒரு விநாடிகூட அவனால் உயிருடன் இருக்க முடியாது. (13,14)

மகாவிஷ்ணுவே! (அவனுடைய தவத்தினால் மகிழ்ந்து,) எது முதற்கொண்டு, தாங்கள் அவனிடம் அன்புகொள்ளத் தொடங்கினீர்களோ, அது முதற்கொண்டு அவன் எல்லா உலகங்களுக்கும் தலைவனாகிவிட்டான். (15)

எனவே, தாங்கள் இந்த விஷயத்தில் மனத்தைச் செலுத்தி, தேவர்களுக்கு நன்மையைச் செய்ய திருவுள்ளம் கொள்ளவேண்டும். தங்கள் கருணையால்தான், இவ்வுலகம் நோயற்றதாகவும் (கவலையற்றதாகவும்) அமைதியுடனும் இருக்க முடியும். (16)

மகாவிஷ்ணுவே! வானுலகத்தவர் அனைவரும் தங்களையே நம்பிக் கொண்டிருக்கிறார்கள். விருத்திர வதம் என்னும் மாபெரும் செயலைச் செய்து, அவர்களை உய்விக்க வேண்டும். (17)

மகா உத்தமர்களான தேவர்களுக்குத் தாங்கள் எப்போதும் உதவிசெய்து வந்திருக்கிறீர்கள். அசுரனின் தவத்தால் ஏற்பட்டுள்ள துன்பங்கள், பிறரால் பொறுக்க முடியாதவை. வேறு புகலிடம் இல்லாத அமரர்களுக்குத் தாங்கள்தான் புகலிடம்.'' (18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எண்பத்து நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

பஞ்சாஶீதிதம: ஸர்க$_3$:

வ்ருத்ரவத$_4$:

லக்ஷ்மணஸ்ய து தத்$_3$வாக்யம் ஶ்ருத்வா ஶத்ருநிப$_3$ர்ஹண: ।
வ்ருத்ரக$_4$ாதமஶேஷேண கத$_2$யேத்யாஹ ஸுவ்ரத ॥ (1)

ராக$_4$வேணைவமுக்தஸ்து ஸுமித்ராநந்த$_3$வர்த$_4$ந: ।
பூ$_4$ய ஏவ கத$_2$ாம் தி$_3$வ்யாம் கத$_2$யாமாஸ ஸுவ்ரத: ॥ (2)

ஸஹஸ்ராக்ஷவச: ஶ்ருத்வா ஸர்வேஷாம் ச தி$_3$வௌகஸாம் ।
விஷ்ணுர்தே$_3$வாநுவாசேத$_3$ம் ஸர்வாநிந்த்$_3$ரபுரோக$_3$மாந் ॥ (3)

பூர்வம் ஸௌஹ்ருத$_3$ப$_3$த்$_3$தே$_4$ா஽ஸ்மி வ்ருத்ரஸ்ய து மஹாத்மந: ।
தேந யுஷ்மத்ப்ரியார்த$_2$ம் ஹி நாஹம் ஹந்மி மஹாஸுரம் ॥ (4)

அவஶ்யம் கரணீயம் ச ப$_4$வதாம் ஸுக$_2$முத்தமம் ।
தஸ்மாது$_3$பாயமாக்$_2$யாஸ்யே யேந வ்ருத்ரோ நிஹந்யதே ॥ (5)

த்ரித$_4$ாபூ$_4$தம் கரிஷ்யாமி ஹ்யாத்மாநம் ஸுரஸத்தமா: ।
தேந வ்ருத்ரம் ஸஹஸ்ராக்ஷோ வதி$_4$ஷ்யதி ந ஸம்ஶய: ॥ (6)

ஏகாம்ஶோ வாஸவம் யாது த்$_3$விதீயோ வஜ்ரமேவ து ।
த்ருதீயோ பூ$_4$தலம் ஶக்ரஸ்தத$_3$ா வ்ருத்ரம் வதி$_4$ஷ்யதி ॥ (7)

தத$_2$ா ப்$_3$ருவதி தே$_3$வேஶே தே$_3$வா வாக்யமத$_2$ாப்$_3$ருவந் ।
ஏவமேதந்ந ஸந்தே$_3$ஹோ யத$_2$ா வத$_3$ஸி தை$_3$த்யஹந் ॥ (8)

ப$_4$த்$_3$ரம் தே஽ஸ்து க$_3$மிஷ்யாமோ வ்ருத்ராஸுரவதை$_4$ஷிண: ।
ப$_4$ஜஸ்வ பரமோத$_3$ார வாஸவம் ஸ்வேந தேஜஸா ॥ (9)

தத: ஸர்வே மஹாத்மாந: ஸஹஸ்ராக்ஷபுரோக$_3$மா: ।
தத$_3$ரண்யமுபாக்ராமந் யத்ர வ்ருத்ரோ மஹாஸுர: ॥ (10)

தே஽பஶ்யம்ஸ்தேஜஸா பூ$_4$தம் தப்யந்தமஸுரோத்தமம் ।
பிப$_3$ந்தமிவ லோகாம்ஸ்த்ரீந்நிர்த$_3$ஹந்தமிவாம்ப$_3$ரம் ॥ (11)

த்$_3$ருஷ்ட்வைவ சாஸுரஶ்ரேஷ்ட$_2$ம் தே$_3$வாஸ்த்ராஸமுபாக$_3$மந் ।
கத$_2$மேநம் வதி$_4$ஷ்யாம: கத$_2$ம் ந ஸ்யாத் பராஜய: ॥ (12)

தேஷாம் சிந்தயதாம் தத்ர ஸஹஸ்ராக்ஷ: புரந்த$_3$ர: ।
வஜ்ரம் ப்ரக்$_3$ருஹ்ய பாணிப்$_4$யாம் ப்ராஹிணோத்$_3$வ்ருத்ரமூர்த$_4$நி ॥ (13)

காலாக்$_3$நிநேவ கே$_4$ாரேண தப்தேநேவ மஹார்சிஷா ।
பததா வ்ருத்ரஶிரஸா ஜக$_3$த்த்ராஸமுபாக$_3$மத் ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : எண்பத்தைந்து

விருத்திரன் வதம்

இலக்குவனுடைய உரையைக் கேட்டு, எதிரிகளை மாய்ப்பவரும் நல்விரதங்களைக் கடைப்பிடிப்பவருமான இராமன், ''விருத்திராசுரன் வதம் பற்றிய முழு வரலாற்றையும் சொல்'' என்று கூறினார். இராமபிரான் இவ்வாறு கூறியதும், சுமித்திரையின் புதல்வனும் நல்விரதங்களைக் கடைப்பிடிப்பவனுமான இலக்குவன், புனிதமான அந்தக் கதையைத் தொடர்ந்து சொல்லத் தொடங்கினான்— (1,2)

''இந்திரன் மற்றும் வானுலகத்தார் அனைவருடைய சொற்களையும் கேட்ட மகாவிஷ்ணு, இந்திரன் முதலான அவர்கள் அனைவரையும் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (3)

'தேவதைகளே! பேருள்ளம் கொண்ட விருத்திராசுரனுடன், முந்தைய பழங்காலத்திலிருந்தே எனக்கு சிநேகப் பிணைப்பு உள்ளது. அதனால், உங்கள் திருப்திக்காக, நான் அந்த மகாசுரனைக் கொல்லமாட்டேன். (ஆனால் நான்,) உங்களுக்கு நிச்சயமாக நன்மை செய்யவேண்டும். அதனால், விருத்திரன் மாய்வதற்கான ஓர் உபாயத்தைக் கூறுகிறேன். (4,5)

தேவர்களே! நான், என்னை மூன்று பகுதிகளாகச் செய்து கொள்கிறேன். (என்னுடைய பேராற்றலை மூவகையாகக் கூறு செய்து கொள்கிறேன். அவற்றில் ஒன்றின் மூலம்) இந்திரன், விருத்திரனைக் கொல்வான் என்பதில் சந்தேகமில்லை. (6)

(என்னுடைய அளவுகடந்த ஆற்றலில்) ஓர் அம்சம் இந்திரனைச் சென்றடையட்டும்; மற்றொன்று, வஜ்ராயுதத்தில் இடம் கொள்ளட்டும்; மூன்றாவது அம்சம், பூமியை அடையட்டும். (இந்த மாறுதல் நிகழ்ந்த) பின்னர் இந்திரன், விருத்திரனைக் கொல்வான். (சிந்தனைக்கெட்டாத விருத்திரனின் பேருடல் தரையில் சாயும்போது, அதன் வீழ்ச்சியைத் தாங்கிக் கொள்ளும் சக்தி பூமிக்கு இருக்காது. ஆகவே, விஷ்ணுவின் தெய்விக ஆற்றல் பூமிக்குள் மறைந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.)' (7)

இவ்வாறு, தேவதைகளின் தேவரான மகாவிஷ்ணு கூறியவுடன், 'அசுரர்களை மாய்ப்பவரே! தாங்கள் சொன்னபடியே ஆகட்டும்' என்று இசைந்தார்கள். (8)

'தாங்கள் வாழ்க! விருத்திரனின் அழிவை விரும்பும் நாங்கள், 'அது நிறைவேறும்' என்ற நம்பிக்கையுடன் செல்கிறோம். கருணை மிக்கவரே! தாங்கள், தங்கள் பேராற்றலின் ஓர் அம்சத்தை இந்திரனுக்குக் கொடுங்கள்.' (9)

பின்னர், இந்திரன் முதலான எல்லா தேவர்களும், மகாசுரன் விருத்திரன் இருந்த காட்டை அடைந்தார்கள். அசுரோத்தமனான விருத்திரன், தன் தவ ஒளியால் எல்லாப் பக்கங்களிலும் வியாபித்திருப்பதையும், மூன்று உலகங்களையும் குடித்து விடுபவன் போலும், ஆகாயத்தையே எரித்து விடுபவன் போலும் (கற்பனைக்கெட்டாத மகத்தான ஆற்றலுடன் விளங்குவதை) அவர்கள் கண்டார்கள். (10,11)

அந்த மகாசுரனைப் பார்த்தமாத்திரத்திலேயே தேவர்கள் பேரச்சம் அடைந்தார்கள். 'இவனை நாம் எப்படிக் கொல்வது? நமக்குத் தோல்வி ஏற்படாமலிருக்க என்ன செய்வது?' என்று ஆலோசிக்கத் தொடங்கினார்கள். இவ்வாறு, அவர்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போதே, கைகளால் (வலது கையால்) வஜ்ரத்தைப் பற்றிக் கொண்ட இந்திரன், விருத்திரனின் தலையைக் குறிவைத்து, அதைச் செலுத்தினான். (12,13)

ஊழிக்கால அக்னியைப்போல் மிகவும் பயங்கரமாகவும், கொழுந்துவிட்டு எரியும் பெரிய நெருப்புப்போல் ஒளிவீசிக் கொண்டும் சென்ற வஜ்ரத்தினால் வெட்டப்பட்டுக் கீழே விழுந்த விருத்திரனின் தலையைக் கண்டு உலகமே பயத்தில் தவித்தது. (14)

Koviloor Digital Library

அஸம்ப4ாவ்யம் வத4ம் தஸ்ய வ்ருத்ரஸ்ய விபு3த4ாதி4ப: ।
சிந்தயாநோ ஜக3ாமாஶு லோகஸ்யாந்தம் மஹாயஶா: ॥ (15)

தமிந்த்3ரம் ப்3ரஹ்மஹத்த்யாஶு க3ச்ச2ந்தமநுக3ச்ச2தி ।
அபதச்சாஸ்ய கா3த்ரேஷு தமிந்த்3ரம் து3:க2மாவிஶத் ॥ (16)

ஹதாரய: ப்ரநஷ்டேந்த்3ரா தே3வா: ஸாக்3நிபுரோக3மா: ।
விஷ்ணும் த்ரிபு4வநேஶாநம் முஹுர்முஹுரபூஜயந் ॥ (17)

த்வம் க3தி: பரமேஶாந பூர்வஜோ ஜக3த: பிதா ।
ரக்ஷார்த2ம் ஸர்வபூ4தாநாம் விஷ்ணுத்வமுபஜக்3மிவாந் ॥ (18)

ஹதஶ்சாயம் த்வயா வ்ருத்ரோ ப்3ரஹ்மஹத்த்யா ச வாஸவம் ।
ப3ாத4தே ஸுரஶார்தூ3ல மோக்ஷம் தஸ்யா விநிர்தி3ஶ ॥ (19)

தேஷாம் தத்3வசநம் ஶ்ருத்வா தே3வாநாம் விஷ்ணுரப்3ரவீத் ।
மாமேவ யஜதாம் ஶக்ர: பாவயிஷ்யாமி வஜ்ரிணம் ॥ (20)

புண்யேந ஹயமேதே4ந மாமிஷ்ட்வா பாகஶாஸந: ।
புநரேஷ்யதி தே3வாநாமிந்த்3ரத்வமகுதோப4யம் ॥ (21)

ஏவம் ஸந்தி3ஶ்ய தாம் வாணீம் தே3வாநாமம்ருதோபமாம் ।
ஜக3ாம விஷ்ணுர்தே3வேஶ: ஸ்தூயமாநஸ்த்ரிவிஷ்டபம் ॥ (22)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 பஞ்சாஶீதிதம: ஸர்க3: ॥

ஷட3ஶீதிதம: ஸர்க3:

இந்த்3ரஸ்ய ப்3ரஹ்மஹத்யாதரணம்

தத3ா வ்ருத்ரவத4ம் ஸர்வமகி2லேந ஸ லக்ஷ்மண: ।
கத2யித்வா நரஶ்ரேஷ்ட2: கத2ாஶேஷம் ப்ரசக்ரமே ॥ (1)

ததோ ஹதே மஹாவீர்யே வ்ருத்ரே தே3வப4யங்கரே ।
ப்3ரஹ்மஹத்யாவ்ருத: ஶக்ர: ஸம்ஜ்ஞாம் லேபே4 ந வ்ருத்ரஹா ॥ (2)

ஸோऽந்தமாஶ்ரித்ய லோகாநாம் நஷ்டஸம்ஜ்ஞோ விசேதந: ।
காலம் தத்ராவஸத் கஞ்சித்வேஷ்டமாந இவோரக3: ॥ (3)

அத2 நஷ்டே ஸஹஸ்ராக்ஷ உத்3விக்3நமப4வஜ்ஜக3த் ।
பூ4மிஶ்ச த்4வஸ்தஸங்காஶா நி:ஸ்நேஹா ஶுஷ்ககாநநா ॥ (4)

நி:ஸ்ரோதஸஶ்ச தே ஸர்வே ஹ்ரத3ாஶ்ச ஸரிதஸ்தத2ா ।
ஸம்க்ஷோப4ஶ்சைவ ஸத்த்வாநாமநாவ்ருஷ்டிக்ருதோऽப4வத் ॥ (5)

க்ஷீயமாணே து லோகேऽஸ்மிந் ஸம்ப்4ராந்தமநஸ: ஸுரா: ।
யது3க்தம் விஷ்ணுநா பூர்வம் தம் யக்ஞம் ஸமுபாநயந் ॥ (6)

Koviloor Digital Library

பெரும் புகழுக்குரிய இந்திரன், 'குற்றமேதும் செய்யாத விருத்திரனைக் கொலைச் செய்தது சரியானது அல்ல' என்பதை உணர்ந்து கொண்டு, அனைத்துலகங்களுக்கும் கடைசியாக உள்ள லோகாலோக மலைக்கு அப்பாலிருந்த இருள் சூழ்ந்த பிரதேசத்திற்குச் சென்றுவிட்டான். (15)

அவ்விடத்திற்குச் சென்று கொண்டிருந்த இந்திரனை, பிரும்மஹத்தி(பாவம்) துரத்திச் சென்று உடனே பற்றிக் கொண்டது. அது, அவன் உடலைப் பற்றிக் கொண்டதும், அவனுக்கு மிகவும் துக்கம் ஏற்பட்டது. (16)

தேவர்களின் எதிரிகள் அழிந்துபோய் விட்டார்கள். ஆனால், இந்திரன் காணப்படவில்லையே? அதனால், தேவர்கள் அக்னியை முன்னிலைப்படுத்தி, மூன்று உலகங்களுக்கும் தலைவரான மகாவிஷ்ணுவைத் தொடர்ந்து வழிபட்டார்கள். (17)

'பெருந்தெய்வமே! தாங்களே எங்களுக்குப் புகலிடம்; எல்லாவற்றுக்கும் முன்னால் தோன்றியவர்; உலகத்தின் தந்தை; எல்லா உயிர்களையும் பாதுகாப்பதற்காக விஷ்ணு என்ற பதவியை மேற்கொண்டீர்கள். தங்களால் விருத்திரன் கொல்லப்பட்டான். பிரும்மஹத்தி பாவம், இந்திரனைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. தேவர் தலைவரே! இந்திரன் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியைக் கூறி அருள்புரியுங்கள்.' (18,19)

தேவர்களின் வேண்டுகோளைக் கேட்ட விஷ்ணு பதில் கூறினார்— 'இந்திரன், என்னைக் குறித்து வேள்வி செய்யட்டும். வஜ்ரதாரியான அவனை, நான் புனிதமடையச் செய்கிறேன். (20)

மிகவும் புண்ணியத்தைக் கொடுக்கும் அசுவமேத யாகம் செய்து, வேள்வித் தலைவனான என்னை ஆராதித்தால், இந்திரன் பாவம் நீங்கியவனாகி, மீண்டும் இந்திரப் பதவியை அடைவான். பின்னர், எவரைக் கண்டும் அஞ்ச வேண்டிய நிலை ஏற்படாது.' (21)

இவ்வாறு, அவர்கள் உய்வடைவதற்கான வழியை அமுதம் போன்ற மொழிகளால் கூறிவிட்டு, அவர்களால் தோத்தரிக்கப்பட்ட அமரர்கோன் விஷ்ணு வைகுண்டத்திற்குச் சென்றார்.'' (22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எண்பத்தைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்தாறு

இந்திரன் புனிதமடைந்தான்!

விருத்திராசுரனின் வீழ்ச்சி பற்றிய விவரங்களைச் சொல்லிய ஆண்டகை இலக்குவன், கதையைத் தொடர்ந்து கூறத் தொடங்கினான்— (1)

''தேவர்களுக்கெல்லாம் பேரச்சத்தைக் கொடுத்துக் கொண்டிருந்த மாவீரனான விருத்திரன் மாய்க்கப்பட்டதும், பிரும்மஹத்தியினால் சூழப்பட்ட இந்திரன் வெகுநேரம் வரை சுயஉணர்வைப் பெறவில்லை. உலகங்களின் எல்லைக்கு அப்பால் சென்றடைந்த இந்திரன், நினைவும் உணர்ச்சியும் இல்லாதவனாக, சிறிது காலம் பாம்பைப்போல் சுருண்டு கிடந்தான். (2,3)

இந்திரன், எவர் கண்ணிலும்படாமல் இருள் பகுதியில் மறைந்து கொண்டதும், உலகம் கலங்கித் தத்தளித்துப் போயிற்று; பூமியின் தோற்றம் குலைந்தது; நீர்மை குறைந்தது; காடுகள் பட்டுப்போயின. எல்லா மடுக்களிலும் நீரோடைகளிலும் நீர் வற்றிப் போயிற்று; மழை பெய்யாததால் எல்லா உயிர்களுக்கும் தவிப்பு உண்டாயிற்று. (4,5)

உலகம் நசித்துப் போகத் தொடங்கியது. அதனால், தேவர்களுடைய இதயத்தில் கலக்கம் ஏற்பட்டது. அப்போது, முன்னர் விஷ்ணு கூறிய வேள்வி பற்றிய நினைவு வந்தது. (6)

Koviloor Digital Library

தத: ஸர்வே ஸுரக$_3$ணா: ஸோபாத்$_4$யாயா: ஸஹர்ஷிபி$_4$: ।
தம் தே$_3$ஶம் ஸமுபாஜக்$_3$முர்யத்ரேந்த்$_3$ரோ ப$_4$யமோஹித: ॥ (7)

தே து த்$_3$ருஷ்ட்வா ஸஹஸ்ராக்ஷமாவ்ருதம் ப்$_3$ரஹ்மஹத்யயா ।
தம் புரஸ்க்ருத்ய தே$_3$வேஶமஶ்வமேத$_4$முபாக்ரமந் ॥ (8)

ததோऽஶ்வமேத$_4$: ஸுமஹாந் மஹேந்த்$_3$ரஸ்ய மஹாத்மந: ।
வவ்ருதே$_4$ ப்$_3$ரஹ்மஹத்யாயா: பாவநார்த$_2$ம் நரேஶ்வர ॥ (9)

ததோ யக்ஞே ஸமாப்தே து ப்$_3$ரஹ்மஹத்யா மஹாத்மந: ।
அபி$_4$க$_3$ம்யாப்$_3$ரவீத்$_3$வாக்யம் க்வ மே ஸ்தா$_2$நம் விதா$_4$ஸ்யத$_2$ ॥ (10)

தே தாமூசுஸ்ததா$_3$ தே$_3$வாஸ்துஷ்டா: ப்ரீதிஸமந்விதா: ।
சதுர்தா$_4$ விப$_4$ஜாத்மாநமாத்மநைவ து$_3$ராஸதே$_3$ ॥ (11)

தே$_3$வாநாம் பா$_4$ஷிதம் ஶ்ருத்வா ப்$_3$ரஹ்மஹத்யா மஹாத்மநாம் ।
ஸந்நிதௌ$_4$ ஸ்தா$_2$நமந்யத்ர வரயாமாஸ து$_3$ர்வஸா ॥ (12)

ஏகேநாம்ஶேந வத்ஸ்யாமி பூர்ணோதா$_3$ஸு நதீ$_3$ஷு வை ।
சதுரோ வார்ஷிகாந் மாஸாந் த$_3$ர்பக்$_4$நீ காமவாரிணீ ॥ (13)

பூ$_4$ம்யாமஹம் ஸர்வகாலமேகேநாம்ஶேந து$_3$ர்வஸா ।
வஸிஷ்யாமி ந ஸந்தே$_3$ஹ: ஸத்யேநைதத்$_3$ப்$_3$ரவீமி வ: ॥ (14)

யோऽயமம்ஶஸ்த்ருதீயோ மே ஸ்த்ரீஷு யௌவநஶாலிஷு ।
த்ரிராத்ரம் த$_3$ர்பபூர்ணாஸு வஸிஷ்யே த$_3$ர்பகா$_4$திநீ ॥ (15)

ஹந்தாரோ ப்$_3$ராஹ்மணாந் யே து ம்ருஷாபூர்வமதூ$_3$ஷகாந் ।
தாந்ஶ்சதுர்தே$_2$ந பா$_4$கே$_3$ந ஸம்ஶ்ரயிஷ்யே ஸுரர்ஷபா$_4$: ॥ (16)

ப்ரத்யூசுஸ்தாம் ததோ தே$_3$வா யதா$_2$ வத$_3$ஸி து$_3$ர்வஸே ।
ததா$_2$ ப$_4$வது தத் ஸர்வம் ஸாத$_4$யஸ்வ யதீ$_3$ப்ஸிதம் ॥ (17)

தத: ப்ரீத்யாந்விதா தே$_3$வா: ஸஹஸ்ராக்ஷம் வவந்தி$_3$ரே ।
விஜ்வர: ஸ ச பூதாத்மா வாஸவ: ஸமபத்$_3$யத ॥ (18)

ப்ரஶாந்தம் ச ஜக$_3$த் ஸர்வம் ஸஹஸ்ராக்ஷே ப்ரதிஷ்டி$_2$தே ।
யக்ஞம் சாத்$_3$பு$_4$தஸங்காஶம் ததா$_3$ ஶக்ரோऽப்$_4$யபூஜயத் ॥ (19)

ஈத்$_3$ருஶோ ஹ்யஶ்வமேத$_4$ஸ்ய ப்ரபா$_4$வோ ரகு$_4$நந்த$_3$ந ।
யஜஸ்வ ஸுமஹாபா$_4$க$_3$ ஹயமேதே$_4$ந பார்தி$_2$வ ॥ (20)

இதி லக்ஷ்மணவாக்யமுத்தமம் ந்ருபதிரதீவ மநோஹரம் மஹாத்மா ।
பரிதோஷமவாப ஹ்ருஷ்டசேதா நிஶமய்யேந்த்$_3$ரஸமாநவிக்ரமௌஜா: ॥ (21)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஷட$_3$ஶீதிதம: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

உடனே, ஆசார்யர்களும் முனிவர்களும் உடன்வர, தேவர்கள் எல்லோரும், இந்திரன் பயத்தினால் மயங்கிக் கிடந்த இடத்தைச் சென்றடைந்தார்கள். பிரும்மஹத்தி பாவத்தினால் இந்திரன் ஆட்கொள்ளப்பட்டிருப்பதைக் கண்டார்கள். என்றாலும், அவனை முன்னிலைப்படுத்தி அசுவமேத யாகத்தைச் செய்யத் தொடங்கினார்கள். (7,8)

பேருள்ளம் கொண்ட இந்திரனால் ஆரம்பிக்கப்பட்ட அந்த மகாவேள்வி – இந்திரனைப் பிரும்மஹத்தி பாவத்திலிருந்து விடுவித்துப் புனிதப்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்ட வேள்வி – சரியாக நடந்தது. (9)

வேள்வி நிறைவேறியதும் இந்திரனைப் பற்றியிருந்த பிரும்மஹத்தி விலகி, தேவர்களிடம் வந்து, 'எனக்கு எங்கே இடம் வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டது. (10)

இதைக் கேட்டதும் தேவர்கள் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தார்கள். 'எவராலும் வெல்ல முடியாத ஆற்றல் கொண்ட பிரும்மஹத்தியே! நீ, உன்னை நான்கு பாகங்களாகச் செய்து கொள்' என்றார்கள். (11)

மகாத்மாக்களான தேவர்கள் கூறியதைக் கேட்டு, இந்திரனின் உடலில் மிகவும் வேதனையுடன் இருந்து கொண்டிருந்த பிரும்மஹத்தி, தன்னை நான்கு பாகங்களாகச் செய்து கொண்டு, 'எனக்கு வேறு இடத்தைக் கொடுங்கள்' என்று கேட்டது. (12)

(அது, மேலும் சொல்லிற்று.) 'நான், என்னுடைய ஒரு பகுதியினால், மாரிக்காலமான நான்கு மாதங்கள், நீர் புரண்டோடும் ஆறுகளில் வசிப்பேன். அப்போது, நான் என் இஷ்டம் போல் எந்தப் பக்கத்திலும் பெருகிச் செல்வேன்; பிறருடைய கொட்டத்தை அடக்குவேன். (13)

என்னுடைய இரண்டாவது பகுதியினால், நான் எப்போதும் பூமியில் வசித்துக் கொண்டிருப்பேன்; சந்தேகப்பட வேண்டாம். இதை நான் சத்தியமாகக் கூறுகிறேன். (14)

என்னுடைய மூன்றாவது பாகத்தினால், செருக்குற்று விளங்கும் இளம்பெண்களிடம், ஒவ்வொரு மாதமும் மூன்று இரவுகள் தங்கி, அவர்கள் கர்வத்தை அடக்குவேன். (15)

தேவர்களே! ஒரு பொய்யைச் சொல்லி, எவரையும் நிந்திக்காத வேதவித்தகரைக் கொலை செய்பவர்களை, என்னுடைய நான்காவது பாகத்தினால் பற்றிக் கொள்வேன்.' (16)

தேவர்கள் பதில் சொன்னார்கள்— 'பிரும்மஹத்தியே! நீ சொன்னபடியே எல்லாம் ஆகட்டும். உன் விருப்பத்தை நடத்திக் காட்டு.' (17)

பின்னர், மனத்திருப்தியடைந்த தேவர்கள் ஆயிரங்கண்ணனான இந்திரனை வணங்கினார்கள். இந்திரன் புனிதமடைந்து கவலையற்றவனான். (18)

இந்திரன், தன் பதவியில் அமர்ந்தவுடன் உலகம் முழுவதும் அமைதி அடைந்தது. அற்புதமான பலனை வழங்கும் ஆற்றல் கொண்ட அந்த மகாவேள்வியை இந்திரனும் புகழ்ந்துரைத்தான். (19)

ரகுநந்தனா! அசுவமேத யாகத்தின் சக்தி இவ்வளவு மகத்தானது. மன்னரே! மிகவும் பேறு பெற்றவரே! தாங்கள் அசுவமேத யாகத்தைச் செய்யவேண்டும்.'' (20)

இவ்வாறு, உயர்ந்ததும் மனத்திற்கு உவப்பளிப்பதுமான சொற்களை, இலக்குவன் கூறியதைக் கேட்டு, பெருந்தகை இராமபிரான், உள்ளத்தில் உவகை பொங்க பெருமகிழ்ச்சி அடைந்தார். (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எண்பத்தாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஸப்தாஸீதிதம: ஸர்க$_3$:

இளஸ்த்ரீத்வப்ராப்தி:

தச்ச்$_2$ருத்வா லக்ஷ்மணேநோக்தம் வாக்யம் வாக்யவிஶாரத$_3$: ।
ப்ரத்யுவாச மஹாதேஜா: ப்ரஹஸந் ராக$_4$வோ வச: ॥ (1)

ஏவமேவ நரஶ்ரேஷ்ட$_2$ யத$_2$ா வத$_3$ஸி லக்ஷ்மண ।
வ்ருத்ரக$_4$ாதமஶேஷேண வாஜிமேத$_4$ப$_2$லம் ச யத் ॥ (2)

ஶ்ரூயதே ஹி புரா ஸௌம்ய கர்த$_3$மஸ்ய ப்ரஜாபதே: ।
புத்ரோ ப$_3$ாஹ்லீஶ்வர: ஶ்ரீமாநிளோ நாம மஹாயஶா: ॥ (3)

ஸ ராஜா ப்ருதி$_2$வீம் ஸர்வாம் வஶே க்ருத்வா ஸுத$_4$ார்மிக: ।
ராஜ்யம் சைவ நரவ்யாக்$_4$ர புத்ரவத் பர்யபாலயத் ॥ (4)

ஸுரைஶ்ச பரமோத$_3$ாரைர்தை$_3$தேயைஶ்ச மஹாத$_4$நை: ।
நாக$_3$ராக்ஷஸக$_3$ந்த$_4$ர்வைர்யக்ஷைஶ்ச ஸுமஹாத்மபி$_4$: ॥ (5)

பூஜ்யதே நித்யஶ: ஸௌம்ய ப$_4$யார்தை ரகு$_4$நந்த$_3$ந ।
அபி$_3$ப்$_4$யம்ஶ்ச த்ரயோ லோகா: ஸரோஷஸ்ய மஹாத்மந: ॥ (6)

ஸ ராஜா தாத்$_3$ருஶோ ஹ்யாஸீத்$_3$த$_4$ர்மே வீர்யே ச நிஷ்டி$_2$த: ।
பு$_3$த்$_3$த்$_4$யா ச பரமோத$_3$ாரோ ப$_3$ாஹ்லீகேஶோ மஹாயஶா: ॥ (7)

ஸ ப்ரசக்ரே மஹாப$_3$ாஹுர்ம்ருக$_3$யாம் ருசிரே வநே ।
சைத்ரே மநோரமே மாஸி ஸப்$_4$ருத்யப$_3$லவாஹந: ॥ (8)

ப்ரஜக்$_4$நே ச ந்ருபோऽரண்யே ம்ருக$_3$ாஞ்ஶதஸஹஸ்ரஶ: ।
ஹத்வைவ த்ருப்திர்நாபூ$_4$ச்ச ராக்ஞஸ்தஸ்ய மஹாத்மந: ॥ (9)

நாநாம்ருக$_3$ாணாமயுதம் வத்$_4$யமாநம் மஹாத்மநா ।
யத்ர ஜாதோ மஹாஸேநஸ்தம் தே$_3$ஶமுபசக்ரமே ॥ (10)

தஸ்மிந் ப்ரதே$_3$ஶே தே$_3$வேஶ: ஶைலராஜஸுதாம் ஹர: ।
ரமயாமாஸ து$_3$ர்த$_4$ர்ஷ: ஸர்வைரநுசரை: ஸஹ ॥ (11)

க்ருத்வா ஸ்த்ரீரூபமாத்மாநமுமேஶோ கே$_3$ாபதித்$_4$வஜ: ।
தே$_3$வ்யா: ப்ரியசிகீர்ஷு: ஸம்ஸ்தஸ்மிந் பர்வதநிர்ஜரே ॥ (12)

யே து தத்ர வநோத்$_3$தே$_3$ஶே ஸத்த்வா: புருஷவாதி$_3$ந: ।
வ்ருக்ஷா: புருஷநாமாநஸ்தேऽப$_4$வந்ஸ்த்ரீஜநாஸ்தத$_3$ா ॥
யச்ச கிஞ்சந தத் ஸர்வம் நாரீஸம்க்ஞம் ப$_3$பூ$_4$வ ஹ ॥ (13)

ஏதஸ்மிந்நந்தரே ராஜா ஸ இள: கர்த$_3$மாத்மஜ: ।
நிக்$_4$நந் ம்ருக$_3$ஸஹஸ்ராணி தம் தே$_3$ஶமுபசக்ரமே ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : எண்பத்தேழு

மன்னன் இளன் வரலாறு

பேச்சில் வல்லவனான இலக்குவன் கூறியதைக் கேட்ட மகாதேஜஸ்வியான இராமன், சற்றே புன்னகைத்துப் பதில் கூறினார்— (1)

''லட்சுமணா! மானுடத்திலகமே! விருத்திரனின் வதம் மற்றும் அசுவமேத யாகத்தின் பலன் பற்றி, நீ கூறியதெல்லாம் உண்மையே. (2)

செல்வனே! முன்னர், கர்தமப் பிரஜாபதியின் புதல்வரும் பாஹ்லீக தேசத்தின் வேந்தருமான இளன் குறித்தும், இப்படி ஒரு வரலாறு கூறப்படுகிறது. (3)

மனிதப் புலியே! அவர் (இளன்), இந்த உலகம் முழுவதையும் தன்வசத்திற்குக் கொண்டு வந்து, அறம் தவறாமல், நாட்டு மக்களைத் தன் மைந்தர்கள் போலவே கருதிப் பேணிப் பாதுகாத்தார். (4)

பேருள்ளம் கொண்ட தேவர்கள், செல்வந்தர்களான அசுரர்கள், நாக–ராக்ஷஸ–கந்தர்வர்கள் மற்றும் மகாத்மாக்களான யக்ஷர்கள் ஆகியோர், அவரிடம் கொண்ட அச்சத்தினால், நாள்தோறும் அவரைப் பூசித்து வந்தார்கள். மாட்சிமைமிக்க அவருக்குக் கோபம் வந்தால், மூன்று உலகங்களும் நடுங்கிப் போகும். (5,6)

அந்த மன்னர், அந்த அளவுக்கு அறநெறியிலும் வீரத்திலும் ஒப்புயர்வற்று விளங்கினார். பெரும் புகழ்கொண்ட பாஹ்லீக மன்னர், தன் அறிவுத்திறனாலும் கொடைத்திறனாலும் பெருமையோடு வாழ்ந்தார். (7)

மாவீரரான அவர், மனங்கவரும் எழிலுடன் விளங்கும் ஒரு சித்திரை மாதத்தில், ஏவலர்–படை–வாகனங்களுடன் ஓர் அழகிய காட்டுக்குச் சென்று வேட்டையில் ஈடுபட்டார். (8)

காட்டில் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் விலங்குகளைக் கொன்ற பின்னரும், பெருவீரரான அவருக்குத் திருப்தி உண்டாகவில்லை. (9)

பல்வகைப்பட்ட, பல்லாயிரக்கணக்கான விலங்குகளை வேட்டையாடிய இளன் என்ற அந்த வீரர், மகாசேனர் (முருகப்பெருமான்) அவதரித்த இடத்திற்குச் சென்றார். (10)

அந்த இடத்தில், தேவதேவரான பரமேசுவரன், எவராலும் வெல்லமுடியாத தன் பணியாளர்களோடு இருந்து கொண்டு, மலையரசன் மகளுடன் (பார்வதியுடன்) இன்பமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தார். (11)

காளைக் கொடியுடைய உமாகாந்தன், பார்வதிக்கு பிரியம் செய்யும் எண்ணத்துடன், தன்னைப் பெண் உருவமாக மாற்றிக் கொண்டு, நீர்வீழ்ச்சியின் அருகில் அவருடன் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். (12)

அப்போது, காட்டின் அந்தப் பகுதியிலிருந்த, ஆண்பால் பெயரைக் கொண்ட உயிர்கள், மரங்கள் எல்லாம் பெண்பாலாக மாறின. அங்கிருந்தனவெல்லாம் பெண் அடையாளத்தைப் பெற்றன. (13)

இதனிடையில், கர்தமரின் புதல்வரான மன்னர் இளன், ஆயிரக்கணக்கான விலங்குகளைக் கொன்றபின், அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். (14)

Koviloor Digital Library

ஸ த்$_3$ருஷ்ட்வா ஸ்த்ரீக்ருதம் ஸர்வம் ஸவ்யாளம்ருக$_3$பக்ஷிகம் ।
ஆத்மாநம் ஸ்த்ரீக்ருதம் சைவ ஸாநுக$_3$ம் ரகு$_4$நந்த$_3$ந ॥ (15)

தஸ்ய து$_3$:க$_2$ம் மஹச்சாஸீத்$_3$த்$_3$ருஷ்ட்வாத்மாநம் ததா$_2$க$_3$தம் ।
உமாபதேஶ்ச தத் கர்ம க்ஞாத்வா த்ராஸமுபாக$_3$மத் ॥ (16)

ததோ தே$_3$வம் மஹாத்மாநம் ஶிதிகண்ட$_2$ம் கபர்தி$_3$நம் ।
ஜகா$_3$ம ஶரணம் ராஜா ஸப்$_4$ருத்யப$_3$லவாஹந: ॥ (17)

தத: ப்ரஹஸ்ய வரத$_3$: ஸஹ தே$_3$வ்யா மஹேஶ்வர: ।
ப்ரஜாபதிஸுதம் வாக்யமுவாச வரத$_3$: ஸ்வயம் ॥ (18)

உத்திஷ்டோ$_2$த்திஷ்ட$_2$ ராஜர்ஷே கார்த$_3$மேய மஹாப$_3$ல ।
புருஷத்வம்ருதே ஸௌம்ய வரம் வரய ஸுவ்ரத ॥ (19)

தத: ஸ ராஜா து$_3$:கா$_2$ர்த: ப்ரத்யாக்$_2$யாதோ மஹாத்மநா ।
ந ச ஜக்$_3$ராஹ ஸ்த்ரீபூ$_4$தோ வரமந்யம் ஸுரோத்தமாத் ॥ (20)

தத: ஶோகேந மஹதா ஶைலராஜஸுதாம் ந்ருப: ।
ப்ரணிபத்ய ஹ்யுமாம் தே$_3$வீம் ஸர்வேணைவாந்தராத்மநா ॥ (21)

ஈஶே வராணாம் வரதே$_3$ லோகாநாமஸி பா$_4$மிநீ ।
அமோக$_4$த$_3$ர்ஶநே தே$_3$வி ப$_4$ஜ ஸௌம்யேந சக்ஷுஷா ॥ (22)

ஹ்ருத்$_3$க$_3$தம் தஸ்ய ராஜர்ஷேர்விக்ஞாய ஹரஸந்நிதௌ$_4$ ।
ப்ரத்யுவாச ஶுப$_4$ம் வாக்யம் தே$_3$வீ ருத்$_3$ரஸ்ய ஸம்மதா ॥ (23)

அர்த$_4$ஸ்ய தே$_3$வோ வரதோ$_3$ வரார்த$_4$ஸ்ய தவ ஹ்யஹம் ।
தஸ்மாத$_3$ர்த$_4$ம் க்$_3$ருஹாண த்வம் ஸ்த்ரீபும்ஸோர்யாவதி$_3$ச்ச$_2$ஸி ॥ (24)

ததத்$_3$பு$_4$ததரம் ஶ்ருத்வா தே$_3$வ்யா வரமநுத்தமம் ।
ஸம்ப்ரஹ்ருஷ்டமநா பூ$_4$த்வா ராஜா வாக்யமதா$_2$ப்$_3$ரவீத் ॥ (25)

யதி$_3$ தே$_3$வி ப்ரஸந்நா மே ரூபேணாப்ரதிமா பு$_4$வி ।
மாஸம் ஸ்த்ரீத்வமுபாஸித்வா மாஸம் ஸ்யாம் புருஷ: புந: ॥ (26)

ஈப்ஸிதம் தஸ்ய விக்ஞாய தே$_3$வீ ஸுருசிராநநா ।
ப்ரத்யுவாச ஶுப$_4$ம் வாக்யமேவமேவ ப$_4$விஷ்யதி ॥ (27)

ராஜந் புருஷபூ$_4$தஸ்த்வம் ஸ்த்ரீபா$_4$வம் ந ஸ்மரிஷ்யஸி ।
ஸ்த்ரீபூ$_4$தஶ்ச பரம் மாஸம் ந ஸ்மரிஷ்யஸி பௌருஷம் ॥ (28)

ஏவம் ஸ ராஜா புருஷோ மாஸம் பூ$_4$த்வாத$_2$ கார்த$_3$மி: ।
த்ரைலோக்யஸுந்த$_3$ரீ நாரீ மாஸமேகமிளாப$_4$வத் ॥ (29)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஸப்தாஶீதிதம: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

ரகுநந்தனா! (லட்சுமணா!) அவ்விடத்தில் சர்ப்பம்–விலங்குகள்–பறவைகள் எல்லாம் பெண்பாலாக மாறியிருப்பதைக் கண்ட அவர், தன்னுடன் வந்தவர்களும் தானும் பெண்ணாக மாறிவிட்டிருப்பதைக் கண்டார். (15)

அவ்வாறு தானும் பெண்ணாக மாறிவிட்டிருப்பதைக் கண்ட அவருக்கு, மிகவும் துக்கம் உண்டாயிற்று. இந்த மாற்றம், பரமேசுவரனின் செயல் என்றறிந்து அச்சமடைந்தார். (16)

உடனே, நீலகண்டரும் சடாமுடி தரித்தவருமான கைலாயபதியை, ஏவலர்–படைகள்–வாகனங்களோடு சென்று அடைக்கலம் அடைந்தார். (17)

அப்போது, பார்வதிதேவியுடன் இருந்தவரும், அடியார் வேண்டும் வரம் அளிப்பவருமான மகேசுவரன், மெல்ல நகைத்து, பிரஜாபதியின் மைந்தரான இளனை நோக்கிக் கூறினார்— 'ராஜரிஷியே! எழுந்திராய்! கர்தமரின் புதல்வனே! மகாபலம் கொண்டவனே! எழுந்திராய். செல்வனே! ஆணாக மாற்றுவது என்ற ஒன்றைத் தவிர வேறு எந்த வரம் வேண்டுமானாலும் கேள்.' (18,19)

பெண்ணாக மாறிவிட்டதால் மிகவும் துக்கத்திலிருந்த மன்னன், பரமேசுவரன் இவ்வாறு பதில் கூறியதும், அவரிடமிருந்து வேறு எந்த வரத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. (20)

மிகவும் சோகத்திலிருந்த மன்னன், மலையரசன் மகளான உமாதேவியை மனதாரப் பணிந்து, 'தாங்கள்தான் எல்லா உலகங்களுக்கும் தலைவி; எல்லோருக்கும் வரம் அளிப்பவர்; தேவி! தங்கள் தரிசனம், பயனைக் கொடுக்காமல் இருக்காது. கருணை நிறைந்த பார்வையால் என்னைப் பாருங்கள்' என்று வேண்டினார். (21,22)

ராஜரிஷியின் அந்தரங்கத்தைத் தெரிந்துக் கொண்ட பார்வதிதேவி, ருத்ரபகவான் அருகில் இருக்கும்போதே மனத்திற்கினிய பதிலைக் கூறினார்— (23)

'நீ எதிர்பார்க்கும் வரத்தில், ஒரு பாதியை மகாதேவரும், மறுபாதியை நானும் கொடுப்பதாக ஆகும். (ஆண் பாதியும் பெண் பாதியும் சேர்ந்து ஓர் உருக்கொண்ட அர்த்தநாரீஸ்வரர் ஆயிற்றே?) அதனால், என்னால் கொடுக்கக் கூடிய பாதி வரத்தைப் பெற்றுக்கொள். ஆண்–பெண் என்ற இரண்டில் எவ்வாறு, எவ்வளவு காலம் இருக்க விரும்புகிறாயோ, அதைக் கூறு.' (24)

தேவியினுடைய மிக ஆச்சரியமான உத்தமமான அந்த வரத்தைக் கேட்டு, மனமகிழ்ந்த மன்னர் பின்வருமாறு கூறினார்— (25)

'அன்னையே! தாங்கள் என்னிடம் கருணை காட்ட விரும்பினால், ஒப்புவமையில்லாத பேரழகு கொண்ட பெண்ணாக ஒரு மாத காலமும், பின்னர், ஒரு மாத காலம் ஆணாகவும் இருக்கும் வரத்தை அருளுங்கள்.' (26)

எழில்மிக்க முகமுடைய அன்னை பார்வதி, அவர் கருத்தை அறிந்து கொண்டு, 'அவ்வாறே ஆகுக' என்ற இனிய மொழிகளைக் கூறினார். (27)

'மன்னனே! நீ, பெண்ணாக இருக்கும் காலத்தில் ஆணாக இருந்தபோது நடந்த செயல்களை நினைவு கொள்ள மாட்டாய்; ஆணாக மாறியவுடன், பெண் காலச் செயல்களை நினைவில் வைத்திருக்க மாட்டாய்.' (28)

இவ்வாறு, கர்தமரின் புதல்வரான இளன் ஒரு மாத காலம் ஆணாக இருந்துவிட்டு, அடுத்த ஒரு மாதம் மூவுலகப் பேரழகியான இளா என்ற மங்கையாக மாறி வந்தார்.'' (29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எண்பத்தேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

அஷ்டாஶீதிதம: ஸர்க$_3$:

இளா–பு$_3$த$_4$ஸமாக$_3$ம:

தாம் கத$_2$ாமிலஸம்ப$_3$த்$_3$த$_4$ாம் ராமேண ஸமுதீ$_3$ரிதாம் ।
லக்ஷ்மணோ ப$_4$ரதஶ்சைவ ஶ்ருத்வா பரமவிஸ்மிதௌ ॥ (1)

தௌ ராமம் ப்ராஞ்ஜலீ பூ$_4$த்வா தஸ்ய ராஜ்ஞோ மஹாத்மந: ।
விஸ்தரம் தஸ்ய ப$_4$ாவஸ்ய தத$_3$ா பப்ரச்ச$_2$து: புந: ॥ (2)

கத$_2$ம் ஸ ராஜா ஸ்த்ரீபூ$_4$தோ வர்தயாமாஸ து$_3$ர்க$_3$தி: ।
புருஷ: ஸ யத$_3$ா பூ$_4$த: காம் வ்ருத்திம் வர்தயத்யஸௌ ॥ (3)

தயோஸ்தத்$_3$ப$_4$ாஷிதம் ஶ்ருத்வா கௌதூஹலஸமந்விதம் ।
கத$_2$யாமாஸ காகுத்ஸ்த$_2$ஸ்தஸ்ய ராஜ்ஞோ யத$_2$ாக$_3$தம் ॥ (4)

தமேவ ப்ரத$_2$மம் மாஸம் ஸ்த்ரீபூ$_4$தா லோகஸுந்த$_3$ரீ ।
தாபி$_4$: பரிவ்ருதா ஸ்த்ரீபி$_4$ர்யே ச பூர்வம் பத$_3$ாநுக$_3$ா: ॥ (5)

தத் காநநம் விக$_3$ாஹ்யாஶு விஜஹ்ரே லோகஸுந்த$_3$ரீ ।
த்$_3$ருமகு$_3$ல்மலதாகீர்ணம் பத்$_3$ப்$_4$யாம் பத்$_3$மத$_3$லேக்ஷணா ॥ (6)

வாஹநாநி ச ஸர்வாணி ஸா த்யக்த்வா வை ஸமந்தத: ।
பர்வதாபே$_4$ாக$_3$விவரே தஸ்மிந் ரேமே இளா தத$_3$ா ॥ (7)

அத$_2$ தஸ்மிந் வநோத்$_3$தே$_3$ஶே பர்வதஸ்யாவிதூ$_3$ரத: ।
ஸர: ஸுருசிரப்ரக்$_2$யம் நாநாபக்ஷிக$_3$ணைர்யுதம் ॥ (8)

த$_3$த$_3$ர்ஶ ஸா த்விலா தஸ்மிந் பு$_3$த$_4$ம் ஸோமஸுதம் தத: ।
ஜ்வலந்தம் ஸ்வேந வபுஷா பூர்ணம் ஸோமமிவோதி$_3$தம் ॥ (9)

தபந்தம் ச தபஸ்தீவ்ரமம்பே$_4$ாமத்$_4$யே து$_3$ராஸத$_3$ம் ।
யஶஸ்கரம் காமகரம் தாருண்யே பர்யவஸ்தி$_2$தம் ॥ (10)

ஸா தம் ஜலாஶயம் ஸர்வம் க்ஷோப$_4$யாமாஸ விஸ்மிதா ।
ஸஹகை$_3$: பூர்வபுருஷை: ஸ்த்ரீபூ$_4$தை ரகு$_4$நந்த$_3$ந ॥ (11)

பு$_3$த$_4$ஸ்து தாம் ஸமீக்ஷ்யைவ காமப$_3$ாணவஶம் க$_3$த: ।
நோபலேபே$_4$ தத$_3$ாத்மாநம் ஸஞ்சசால தத$_3$ாம்ப$_4$ஸி ॥ (12)

இளாம் நிரீக்ஷமாணஸ்து த்ரைலோக்யாப்$_4$யதி$_4$காம் ஶுப$_4$ாம் ।
சிந்தாம் ஸமப்$_4$யதிக்ராமத் கா ந்வியம் தே$_3$வதாதி$_4$கா ॥ (13)

ந தே$_3$வீஷு ந நாகீ$_3$ஷு நாஸுரீஷ்வப்ஸர:ஸு ச ।
த்$_3$ருஷ்டபூர்வா மயா காசித்$_3$ரூபேணாநேந ஶோபி$_4$தா ॥ (14)

ஸத்$_3$ருஶீயம் மம ப$_4$வேத்$_3$யதி$_3$ நாந்யபரிக்$_3$ரஹ: ।
இதி பு$_3$த்$_3$தி$_4$ம் ஸமாஸ்த$_2$ாய ஜலாத் கூலமுபாக$_3$மத் ॥ (15)

Koviloor Digital Library

ஸர்க்கம் : எண்பத்தெட்டு

இளா–புதன் சந்திப்பு

இராமன் சொன்ன, இளன் சம்பந்தப்பட்ட அந்தக் கதையைக் கேட்ட பரத–லட்சுமணர்கள் மிகவும் வியப்பை அடைந்தார்கள் (1)

அவர்கள் இருவரும், இராமன் எதிரில் கைகளைக் கூப்பிக் கொண்டு, மகாத்மாவான மன்னன் இளனின் ஆண்–பெண்ணாக மாறும் விருத்தாந்தத்தை விரிவாகக் கேட்க விரும்பி, மறுபடியும் கேட்டார்கள்— (2)

''பெண்மை என்ற தாழ்ந்த நிலையில் அந்த மன்னன் எவ்வாறு நடந்துகொண்டார்? ஆணாக மாறிய நிலையில் என்ன காரியங்களைச் செய்தார்?'' (3)

ஆர்வத்தோடு கூடிய அவர்களுடைய பேச்சைக் கேட்ட காகுத்த இராமன், இளன் மன்னன் செயல்பட்ட விதத்தை நடந்தவாறே கூறத் தொடங்கினார்— (4)

''முதல் மாதத்தில் உலகப் பேரழகியாக மாறிய தாமரைக் கண்ணாளாகிய அவள், அவருடன் வந்த பணியாட்களும் பெண்ணுருவம் பெற்று, அவர்கள் பின்தொடர, மரங்கள்–புதர்கள்–கொடிகள் நிறைந்த ஒரு காட்டுக்குச் சென்று, கால்களால் நடந்தவாறே சஞ்சரிக்கத் தொடங்கினாள். (5,6)

வாகனங்களையெல்லாம் ஆங்காங்கே விட்டுவிட்டு, விசாலமான பர்வதங்களின் இடைப்பகுதிகளில் இளா நடைபயின்றாள். (7)

அந்தப் பிரதேசத்திலிருந்த காட்டில், மலைக்கு அண்மையில், பல்வகையான பறவைக் கூட்டங்கள் வசிப்பதும் அழகானதுமான ஓர் ஏரியில், சோமனின் புதல்வரான புதன், உதயமான முழுநிலவைப் போன்ற தன்னுடைய சரீர காந்தியினால் ஒளிவீசிக் கொண்டு, தவம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தாள், இளா. (8,9)

யாராலும் சென்றடைய முடியாத நீர்ப்பரப்பினிடையே, புகழ்பெற்றவரும் காமத்தைத் தூண்டுபவரும் வாலிபத்தில் நிலைபெற்றிருப்பவரும் தீவிரமான தவத்தில் ஈடுபட்டிருந்தவருமான அவரைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கிய இளை, முன்னர் ஆண்களாக இருந்து, இப்போது பெண்களாகிவிட்டிருந்த தன் பணியாட்களோடு சேர்ந்து, அந்த ஏரியைக் கலக்கினாள். (10,11)

புதன், அவளைக் கண்டதுமே காமவசப்பட்டார். தவத்தில் மனம் செல்லவில்லை. நீர்ப்பரப்பில் தவித்து நின்றார். (12)

மூன்று உலகங்களிலுமிருந்த அழகான பெண்களைக் காட்டிலும் மிக அழகாக விளங்கிய இளையைக் கண்டு, 'தேவலோகத்துப் பெண்களைவிட அதிக சோபையுடன் பிரகாசிக்கும் இவள் யார்?' என்று சிந்திக்கத் தொடங்கினார். (13)

தேவ–நாக–அசுர–அப்சரப் பெண்டிர்களில் இவ்வளவு சோபையுடன் விளங்கும் மங்கை எவளையும் நான் இதுவரை கண்டதேயில்லை. (14)

இவளுக்குத் திருமணம் ஆகாமல் இருந்தால், என் மனைவியாகத் தக்கவள் என்று நிச்சயித்து நீர்ப்பரப்பிலிருந்து எழுந்து ஏரிக்கரையை அடைந்தார். (15)

Koviloor Digital Library

ஆஶ்ரமம் ஸமுபாக$_3$ம்ய ததஸ்தா: ப்ரமதோ$_3$த்தமா: ।
ஶப்$_3$தா$_3$பயத த$_4$ர்மாத்மா தாஸ்ஸைநம் ச வவந்தி$_3$ரே ॥ (16)

ஸ தா: பப்ரச்ச$_2$ த$_4$ர்மாத்மா கஸ்யைஷா லோகஸுந்த$_3$ரீ ।
கிமர்த$_2$மாக$_3$தா சைவ ஸர்வமாக்$_2$யாத மா சிரம் ॥ (17)

ஶுப$_4$ம் து தஸ்ய தத்$_3$வாக்யம் மது$_4$ரம் மது$_4$ராக்ஷரம் ।
ஶ்ருத்வா ஸ்த்ரியஶ்ச தா: ஸர்வா ஊசுர்மது$_4$ரயா கி$_3$ரா ॥ (18)

அஸ்மாகமேஷா ஸுஶ்ரோணீ ப்ரபு$_4$த்வே வர்த்ததே ஸதா$_3$ ।
அபதி: காநநாந்தேஷு ஸஹாஸ்மாபி$_4$ஶ்சரத்யஸௌ ॥ (19)

தத்$_3$வாக்யமவ்யக்தபத$_3$ம் தாஸாம் ஸ்த்ரீணாம் நிஶம்ய ச ।
வித்$_3$யாமாவர்திநீம் புண்யாமாவர்தயத ஸ த்$_3$விஜ: ॥ (20)

ஸோऽர்த$_2$ம் விதி$_3$த்வா ஸகலம் தஸ்ய ராக்ஞோ யதா$_2$க$_3$தம் ।
ஸர்வா ஏவ ஸ்த்ரியஸ்தாஶ்ச ப$_3$பா$_4$ஷே முநிபுங்க$_3$வ: ॥ (21)

அத்ர கிம்புருஷீபூ$_4$த்வா ஶைலரோத$_4$ஸி வத்ஸ்யத$_2$ ।
ஆவாஸஸ்து கி$_3$ராவஸ்மிஞ்ஶீக்$_4$ரமேவ விதீ$_4$யதாம் ॥ (22)

மூலபத்ரப$_2$லை: ஸர்வா வர்தயிஷ்யத$_2$ நித்யதா$_3$ ।
ஸ்த்ரிய: கிம்புருஷாந்நாம ப$_4$ர்த்ரூந் ஸமுபலப்ஸ்யத$_2$ ॥ (23)

தாம் ஶ்ருத்வா ஸோமபுத்ரஸ்ய வாசம் கிம்புருஷீக்ருதா: ।
உபாஸாஞ்சக்ரிரே ஶைலம் வத்$_4$வஸ்தா ப$_3$ஹுலாஸ்ததா$_3$ ॥ (24)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ அஷ்டாஶீதிதம: ஸர்க$_3$: ॥

ஏகோநநவதிதம: ஸர்க$_3$:

புரூரவோஜநநம்

ஶ்ருத்வா கிம்புருஷோத்பத்திம் லக்ஷ்மணோ ப$_4$ரதஸ்ததா$_3$ ।
ஆஶ்சர்யாமிதி சாப்$_3$ரூதாமுபௌ$_4$ ராமம் ஜநேஶ்வரம் ॥ (1)

அத$_2$ ராம: கதா$_2$மேதாம் பூ$_4$ய ஏவ மஹாயஶா: ।
கத$_2$யாமாஸ த$_4$ர்மாத்மா ப்ரஜாபதிஸுதஸ்ய வை ॥ (2)

ஸர்வாஸ்தா வித்$_3$ருதா த்$_3$ருஷ்ட்வா கிந்நரீருஷிஸத்தம: ।
உவாச ரூபஸம்பந்நாம் தாம் ஸ்த்ரியம் ப்ரஹஸந்நிவ ॥ (3)

ஸோமஸ்யாஹம் ஸுத$_3$யித: ஸுத: ஸுருசிராநநே ।
ப$_4$ஜஸ்வ மாம் வராரோஹே ப$_4$க்த்யா ஸ்நிக்$_3$தே$_4$ந சக்ஷுஷா ॥ (4)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ஶூந்யே ஸ்வஜநவர்ஜிதா ।
இளா ஸுருசிரப்ரக்$_2$யம் ப்ரத்யுவாச மஹாக்$_3$ரஹம் ॥ (5)

Koviloor Digital Library

பின்னர், தன் ஆசிரமத்தை அடைந்த அவர் பெருங்குரல் கொடுத்து, அந்தப் பேரழகிகளை அழைத்தார். அவர்கள் அவ்விடம் வந்து தருமாத்மாவான அவரை வணங்கினார்கள். (16)

அறநெறியாளனான அவர், அவர்களைப் பார்த்து, 'உலக அழகியாக விளங்கும் அவள் யார்? இங்கு ஏன் வந்திருக்கிறாள்? என்ற விவரங்களை தாமதமில்லாமல் கூறுங்கள்' என்று கேட்டார். (17)

இனிய சொற்களோடு, மனங்கவரும் முறையில் கூறப்பட்ட அந்த உரையைக் கேட்ட பெண்கள் எல்லோரும் செவிக்கினிய மொழியில் பதில் கூறினார்கள்— (18)

'பேரழகியான இவர் எங்களுடைய நிரந்தரத் தலைவியாக இருந்து வருகிறார். கணவரை அடையாத இவர், காட்டின் உட்புறங்களில் எங்களுடன் சுற்றி வருகிறார்.' (19)

பெண்கள் கூறிய தெளிவான பதிலைக் கேட்ட க்ஷத்திரியரான புதன், (உடனடியாகத் தன் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கக்கூடிய) ஆவர்த்தினீ என்ற மந்திரத்தை ஜபிக்கத் தொடங்கினார். (20)

அந்த மன்னனுடைய (இளனுடைய) முழுவரலாற்றையும் நடந்தவாறே அறிந்து கொண்ட முனிவர் (புதன்), அந்தப் பெண்களைப் பார்த்துக் கூறினார்— 'நீங்கள் எல்லோரும் கிம்புருஷி(கின்னரி)களாக மாறி மலையடிவாரத்தில் வசித்துக் கொண்டிருங்கள். இந்த மலையடிவாரத்தில் நீங்கள் குடியிருப்பதற்கான (குடிசை அமைத்தல் போன்ற) ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள். (21,22)

கிழங்கு–பழம்–இலைகள் முதலியனவே எப்போதும் உங்கள் உணவாகும். கிம்புருஷன் (கின்னரன்) என்ற ஆண்களைக் கணவர்களாக அடைவீர்கள்.' (23)

சோமனுடைய புதல்வர் புதனுடைய சொற்களைக் கேட்ட, கிம்புருஷிகளாக மாற்றப்பட்ட அவர்கள் மலையில் வசிக்கத் தொடங்கினார்கள். அவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.'' (24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எண்பத்தெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : எண்பத்தொன்பது

புரூரவன் பிறப்பு

கிம்புருஷர்கள் தோன்றிய வரலாற்றைக் கேட்ட பரத–லட்சுமணர்கள், மக்கட்தலைவராகிய இராமனைப் பார்த்து, 'இது மிகவும் வினோதமாக இருக்கிறது!' என்று கூறினார்கள். (1)

பின்னர், பெரும்புகழ் கொண்ட இராமன், பிரஜாபதி கர்தமருடைய புதல்வன் இளன் பற்றிய மேலும் விபரங்களைக் கூறத் தொடங்கினார்— (2)

''கின்னரிகள் எல்லோரும் மலையடிவாரத்திற்குச் சென்றபின், பேரழகு நிறைந்த அந்த மங்கை இளையைப் பார்த்து, மெல்லிய புன்சிரிப்புடன், மாமுனிவர் கூறினார்— 'எழில் திகழ் முகத்தாளே! நான், சோமனுடைய பேரன்புக்குரிய புதல்வன். பெண்ணரசியே! நட்பும் அன்பும் கொண்ட பார்வையால் என்னைப் பார். என்னை, உன்னுடையவனாக ஆக்கிக் கொள்.' (3,4)

தன்னுடன் வந்தவர்கள் யாரும் இல்லாமல் தனித்துவிடப்பட்ட அவள், கண்கவர் அழகுடன் விளங்கிய சிறந்த கிரகத்தை(புதனை)ப் பார்த்துப் பதில் சொன்னாள்— (5)

Koviloor Digital Library

அஹம் காமசரீ ஸௌம்ய தவாஸ்மி வஶவர்திநீ ।
ப்ரஸாதி$_4$ மாம் ஸோமஸுத யதே$_2$ச்ச$_2$ஸி தத$_2$ா குரு ॥ (6)

தஸ்யாஸ்தத$_3$த்$_3$பு$_4$தப்ரக்$_2$யம் ஶ்ருத்வா ஹர்ஷமுபாக$_3$த: ।
ஸ வை காமீ ஸஹ தயா ரேமே சந்த்$_3$ரமஸ: ஸுத: ॥ (7)

பு$_3$த$_4$ஸ்ய மாத$_4$வோ மாஸஸ்தாமிளாம் ருசிராநநாம் ।
க$_3$தோ ரமயதோऽத்யர்த$_2$ம் க்ஷணவத்தஸ்ய காமிந: ॥ (8)

அத$_2$ மாஸே து ஸம்பூர்ணே பூர்ணேந்து$_3$ஸத்$_3$ருஶாநந: ।
ப்ரஜாபதிஸுத: ஸ்ரீமாஞ்ஶயநே ப்ரத்யபு$_3$த்$_4$யத ॥ (9)

ஸோऽபஶ்யத் ஸோமஜம் தத்ர தபந்தம் ஸலிலாஶயே ।
ஊர்த்$_4$வபா$_3$ஹும் நிராலம்ப$_3$ம் தம் ராஜா ப்ரத்யபா$_4$ஷத ॥ (10)

ப$_4$க$_3$வந் பர்வதம் து$_3$ர்க$_3$ம் ப்ரவிஷ்டோऽஸ்மி ஸஹாநுக$_3$: ।
ந து பஶ்யாமி தத் ஸைந்யம் க்வ நு தே மாமகா க$_3$தா: ॥ (11)

தச்ச்$_2$ருத்வா தஸ்ய ராஜர்ஷேர்நஷ்டஸம்க்ஞஸ்ய பா$_4$ஷிதம் ।
ப்ரத்யுவாச ஶுப$_4$ம் வாக்யம் ஸாந்த்வயந் பரயா கி$_3$ரா ॥ (12)

அஶ்மவர்ஷேண மஹதா ப்$_4$ருத்யாஸ்தே விநிபாதிதா: ।
த்வம் சாஶ்ரமபதே$_3$ ஸுப்தோ வாதவர்ஷப$_4$யார்தி$_3$த: ॥ (13)

ஸமாஶ்வஸிஹி ப$_4$த்$_3$ரம் தே நிர்ப$_4$யோ விக$_3$தஜ்வர: ।
ப$_2$லமூலாஶநோ வீர நிவஸேஹ யத$_2$ாஸுக$_2$ம் ॥ (14)

ஸ ராஜா தேந வாக்யேந ப்ரத்யாஶ்வஸ்தோ மஹாமதி: ।
ப்ரத்யுவாச ததோ வாக்யம் தீ$_3$நோ ப்$_4$ருத்யக்ஷயாத்$_3$ப்$_4$ருஶம் ॥ (15)

த்யக்ஷ்யாம்யஹம் ஸ்வகம் ராஜ்யம் நாஹம் ப்$_4$ருத்யைர்விநாக்ருத: ।
வர்தயேயம் க்ஷணம் ப்$_3$ரஹ்மந் ஸமநுக்ஞாதுமர்ஹஸி ॥ (16)

ஸுதோ த$_4$ர்மபரோ ப்$_3$ரஹ்மஞ்ஜ்யேஷ்டோ$_2$ா மம மஹாயஶா: ।
ஶஶபி$_3$ந்து$_3$ரிதி க்$_2$யாத: ஸ மே ராஜ்யம் ப்ரபத்ஸ்யதே ॥ (17)

ந ஹி ஶக்ஷ்யாம்யஹம் ஹித்வா ப்$_4$ருத்யதா$_3$ராந் ஸுகா$_2$ந்விதாந் ।
ப்ரதிவக்தும் மஹாதேஜ: கிஞ்சித$_3$ப்யஶுப$_4$ம் வச: ॥ (18)

தத$_2$ா ப்$_3$ருவதி ராஜேந்த்$_3$ரே பு$_3$த$_4$: பரமமத்$_3$பு$_4$தம் ।
ஸாந்த்வபூர்வமதே$_2$ாவாச வாஸஸ்த இஹ ரோசதாம் ॥ (19)

ந ஸந்தாபஸ்த்வயா கார்ய: கார்த$_3$மேய மஹாப$_3$ல ।
ஸம்வத்ஸரோஷிதஸ்யேஹ காரயிஷ்யாமி தே ஹிதம் ॥ (20)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா பு$_3$த$_4$ஸ்யாக்லிஷ்டகர்மண: ।
வாஸாய வித$_3$தே$_4$ பு$_3$த்$_3$தி$_4$ம் யது$_3$க்தம் ப்$_3$ரஹ்மவாதி$_3$நா ॥ (21)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_29_Back

Koviloor Digital Library

'சோமனின் புதல்வரே! எழிலரசரே! நான் விருப்பம் போல் சுற்றித் திரிபவள். இப்போது உங்கள் வசத்தில் இருக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும்? என்று ஆணையிடுங்கள். தங்கள் விருப்பப்படி செய்யலாம்.' (6)

இளையினுடைய அற்புதச் சொற்களைக் கேட்ட சந்திரனின் புதல்வரான புதன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். காமவசப்பட்ட அவர் அவளுடன் கூடிக் களித்தார். (7)

கவின்மிகு முகமுடைய இளையுடன், காமக்களியாட்டத்தில் மூழ்கித் திளைத்ததில், புதனுக்கு வைகாசி மாதம் முழுவதும் ஒரு நொடிப் பொழுதாக ஓடிப் போயிற்று. (8)

ஒரு மாதம் நிறைவடைந்ததும், கர்தமப் பிரஜாபதியின் மைந்தன் இளன், ஆணாக மாறி படுக்கையிலிருந்து விழித்தெழுந்தார். சந்திரனின் புதல்வனான புதன், நீர்ப்பரப்பில் இருகைகளையும் மேலே தூக்கிக் கொண்டு, எவ்விதப் பிடிப்பும் இல்லாமல் தவம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து, அவரைக் கேட்டார்— (9,10)

'ஐயனே! என் ஏவலர்களுடன்கூட நுழைய முடியாத மலையை அடைந்தேன். இப்போது, என்னுடன் வந்த படைவீரர்களைக் காணவில்லை. என்னுடைய மக்கள் எங்கே சென்றிருக்கிறார்கள்?' (11)

முந்தைய நினைவுகளை இழந்திருந்த ராஜரிஷி இளன் கூறியதைக் கேட்டு, அவரைச் சமாதானம் செய்யும்வண்ணம், தெளிவான சொற்களால் புதன் பதில் கூறினார்— (12)

'உன் ஏவலர்கள் எல்லோரும் பலமான கல்மாரியினால் தாக்கப்பட்டு உயிரிழந்தார்கள். காற்று–மழைக்கு அஞ்சி, ஆசிரமத்திற்குள் வந்த நீ, அங்கேயே படுத்து உறங்கிவிட்டாய். (13)

வீரனே! இப்போது நீ தைரியமாக இருக்க வேண்டும். அச்சமும் கவலையும் இல்லாமல், கனி–கிழங்குகளைப் புசித்துக் கொண்டு இங்கேயே சுகமாகக் காலங்கழிப்பாய்.' (14)

மகாபுத்திசாலியான மன்னன் இளன், புதனின் சொற்களைக் கேட்டு ஆறுதலடைந்தார். என்றாலும், பணியாளர்கள் அனைவரும் அழிந்து போனதால் மனம் நொந்துபோன அவர் (பின்வருமாறு) கூறினார்— (15)

'ஐயனே! என்னுடைய வேலைக்காரர்கள் உயிர்துறந்து விட்டார்கள் என்பதால், நான் என் ராஜ்யத்தைத் துறக்க முடியாது. இனி, ஒரு நொடி பொழுதுகூட இங்கே இருக்கமாட்டேன். தயவு செய்து எனக்கு விடைகொடுங்கள். (16)

பெருந்தகையீர்! என்னுடைய மூத்த புதல்வன் சசபிந்து என்ற பெயரால் பெரும்புகழ் பெற்றவன். நான், என் நாட்டிற்குச் சென்று, அவனுக்கு முடிசூட்டியபின் அவன் ஆட்சிப் பொறுப்பை ஏற்பான். (17)

பேரொளி வீசும் முனிவரே! நாட்டில் என்னுடைய மனைவி–மக்கள்–வேலைக்காரர்கள் சுகமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை விட்டுப் பிரிந்து, நான் இங்கேயே தங்கிவிட முடியாது. நான், தங்கள் சொல்லை மீறிச் செல்லாதபடிக்கு, எனக்கு உகந்த ஆணையை அருளவேண்டும்.' (18)

இவ்வாறு, மன்னன் இளன் கூறியதைக் கேட்ட புதன், அவருக்கு ஆறுதலளிக்கும்விதமாக, 'நீ இங்கே தங்கியிருப்பதே நல்லது' என்ற இனிய சொற்களைக் கூறினார். (19)

'கர்தமர் புதல்வனே! மகாபலசாலியே! நீ துக்கப்பட வேண்டாம். ஓர் ஆண்டுக்காலம் இங்கே வசித்தாயேயானால், உன் நலனுக்கான சில வழிகளைக் கூறுவேன்.' (20)

நற்றவம் புரிபவரும் வேதவல்லுநருமான புதன் கூறியதைக் கேட்ட இளன், அவர் சொற்படியே நடக்கத் தீர்மானித்தார். (21)

Koviloor Digital Library

மாஸம் ஸ ஸ்த்ரீ தத$_2$ா பூ$_4$த்வா ரமயத்யநிஶம் ஶுப$_4$ா ।
மாஸம் புருஷப$_4$ாவேந த$_4$ர்மபு$_3$த்$_3$தி$_4$ம் சகார ஸ: ॥ (22)

தத: ஸா நவமே மாஸி இளா ஸோமஸுதாத் ஸுதம் ।
ஜநயாமாஸ ஸுஶ்ரோணீ புரூரவஸமூர்ஜிதம் ॥ (23)

ஜாதமாத்ரம் து ஸுஶ்ரோணீ பித்ருஹஸ்தே ந்யவேஶயத் ।
பு$_3$த$_4$ஸ்ய ஸமவர்ணாப$_4$மிளாபுத்ரம் மஹாப$_3$லம் ॥ (24)

பு$_3$த$_4$ஸ்து புருஷீபூ$_4$தம் ஸ வை ஸம்வத்ஸராந்தரம் ।
கத$_2$ாபீ$_4$ ரமயாமாஸ த$_4$ர்மயுக்தாபி$_4$ராத்மவாந் ॥ (25)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகோநநவதிதம: ஸர்க$_3$: ॥

நவதிதம: ஸர்க$_3$:

இளாபௌருஷப்ராப்தி:

ததோ$_2$க்தவதி ராமே து தஸ்ய ஜந்ம தத$_3$த்$_3$பு$_4$தம் ।
உவாச லக்ஷ்மணோ பூ$_4$யோ ப$_4$ரதஶ்ச மஹாயஶா: ॥ (1)

இளா ஸா ஸோமபுத்ரஸ்ய ஸம்வத்ஸரமதோ$_2$ஷிதா ।
அகரோத் கிம் நரஶ்ரேஷ்ட$_2$ தத்த்வம் ஶம்ஸிதுமர்ஹஸி ॥ (2)

தயோஸ்தத்$_3$வாக்யமாது$_4$ர்யம் நிஶம்ய பரிப்ருச்ச$_2$தோ: ।
ராம: புநருவாசேமாம் ப்ரஜாபதிஸுதே கத$_2$ாம் ॥ (3)

புருஷத்வம் க$_3$தே ஶூரே பு$_3$த$_4$: பரமபு$_3$த்$_3$தி$_4$மாந் ।
ஸம்வர்தம் பரமோத$_3$ாரமாஜுஹாவ மஹாயஶா: ॥ (4)

ச்யவநம் ப்$_4$ருகு$_3$புத்ரம் ச முநிம் சாரிஷ்டநேமிநம் ।
ப்ரமோத$_3$நம் மோத$_3$கரம் தத$_2$ா து$_3$ர்வாஸஸம் முநிம் ॥ (5)

ஏதாந் ஸர்வாந் ஸமாநீய வாக்யக்ஞஸ்தத்த்வத$_3$ர்ஶிந: ।
உவாச ஸர்வாந் ஸுஹ்ருதோ$_3$ தை$_4$ர்யேண ஸுஸமாஹிதாந் ॥ (6)

அயம் ராஜா மஹாப$_3$ாஹு: கர்த$_3$மஸ்ய இள: ஸுத: ।
ஜாநீதைநம் யத$_2$ாபூ$_4$தம் ஶ்ரேயோ ஹ்யஸ்ய விதீ$_4$யதாம் ॥ (7)

தேஷாம் ஸம்வத$_3$தாமேவ தமாஶ்ரமமுபாக$_3$மத் ।
கர்த$_3$மஸ்து மஹாதேஜா த்$_3$விஜை: ஸஹ மஹாத்மபி$_4$: ॥ (8)

புலஸ்த்யஶ்ச க்ரதுஶ்சைவ வஷட்காரஸ்ததை$_2$வ ச ।
ஓங்காரஶ்ச மஹாதேஜாஸ்தமாஶ்ரமமுபாக$_3$மத் ॥ (9)

தே ஸர்வே ஹ்ருஷ்டமநஸ: பரஸ்பரஸமாக$_3$மே ।
ஹிதைஷிணோ ப$_3$ாஹ்லிபதே: ப்ருத$_2$க்$_3$வாக்யாந்யத$_2$ாப்$_3$ருவந் ॥ (10)

Koviloor Digital Library

ஒரு மாதம் முழுவதும் பெண்மையை அடைந்து, (புதனுடன்) காமநுகர்ச்சியில் ஈடுபட்டு, பின்னர், அடுத்த மாதம் ஆண் தன்மையை அடைந்து அறச்செயல்களைச் செய்து வந்தார். (22)

ஒன்பதாவது மாதத்தில், அழகியான இளை, சந்திரனின் மைந்தனான புதன் மூலமாக, ஆற்றலும் அழகும் மிக்க ஒரு மகனை ஈன்றெடுத்தாள். அவன் பெயர், புரூரவஸ். (23)

அழகியான இளை, புதனுடையதைப் போன்று தண்ணொளி வீசுபவனும் மகாபலம் பொருந்தியவனுமான அவன் பிறந்தவுடனேயே (வைதிகச்) சடங்குகள் செய்விப்பதற்காக, அவனுடைய தந்தையின் கையில் ஒப்படைத்தாள். (24)

ஓர் ஆண்டு நிறைவு பெறும் வரையில், எந்தெந்த மாதங்களில் இளை, இளனாக மாறினாளோ அப்போதெல்லாம், மனவடக்கமுடைய புதன் அறநெறிக் கதைகளைக் கூறி சமாளித்து வந்தார்.'' (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
எண்பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூறு

இளா, ஆணாகவே மாறினாள்!

இராமன், புரூரவஸின் பிறப்பைப் பற்றிய கதையைக் கூறிமுடித்ததும், பெரும்புகழ் கொண்ட பரத–லட்சுமணர்கள் மீண்டும் கூறினார்கள்— (1)

''மனிதரேறே! புதனுடன் கூட இளா ஓர் ஆண்டுக்காலம் வசித்த பின்னர், அவள் என்ன செய்தாள்? என்பதைக் கூற வேண்டுகிறோம்.'' (2)

கேள்வி கேட்ட அவர்களுடைய சொற்களின் இனிய சுவையை ரசித்த இராமன், கர்தம பிரஜாபதியின் மைந்தன் இளனுடைய கதையைத் தொடர்ந்தார். (3)

''பெரும்புகழ் பெற்றவர்களே! இளன், ஆணாக இருக்கும் ஒரு மாதத்தில், மிகவும் அறிவாளியான புதன், மிக்க கருணையுள்ள சம்வர்த்தகரைக் கூப்பிட்டார். பிருகுவின் மைந்தரான சியவனர், அரிஷ்டநேமி, பிரமோதனர், மோதகர் மற்றும் துர்வாசர் ஆகியோரை அழைத்தார். (4,5)

பேச்சில் வல்லவரான புதன், ஆத்ம தத்துவம் அறிந்தவர்களான இவர்கள் எல்லோரையும் அழைத்து, மனச்சஞ்சலமில்லாத தைரியத்துடன் விளங்கும் அந்த நண்பர்களையெல்லாம் பார்த்து, பின்வருமாறு கூறினார்— (6)

'வலிமைமிக்க இந்த மன்னன் இளன், கர்தமருடைய புதல்வன். இவனுக்கு நேர்ந்துள்ள கதியை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். இவனுக்கு நலம் ஏற்படக்கூடிய ஒரு வழியைக் காட்டுங்கள்.' (7)

அவர்கள் இவ்வாறு சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போதே, மகாதேஜஸ்வியான கர்தமர், வேதவித்தகர்களுடன்கூட அந்த ஆசிரமத்தை வந்தடைந்தார். (8)

புலஸ்தியர், க்ரது, வஷட்காரம் மற்றும் பேராற்றலுடைய ஓங்காரம் முதலியன (உடல் உருவேற்று) ஆசிரமத்தை அடைந்தார்கள். (9)

ஒருவரையொருவர் சந்திக்க முடிந்ததில் பெருமகிழ்ச்சி கொண்ட அவர்கள் எல்லோரும், பாஹ்லீக மன்னனின் நலனை விரும்பி, தத்தம் கருத்துக்களைக் கூறத் தொடங்கினார்கள். (10)

Koviloor Digital Library

கர்த$_3$மஸ்த்வப்$_3$ரவீத்$_3$வாக்யம் ஸுதார்த$_2$ம் பரமம் ஹிதம் ।
த்$_3$விஜா: ஸ்ருணுத மத்$_3$வாக்யம் யச்ச்$_2$ரேய: பார்தி$_2$வஸ்ய ஹி ॥ (11)

நாந்யம் பஸ்யாமி பை$_4$ஷஜ்யமந்தரா வ்ருஷப$_4$த்$_4$வஜம் ।
நாஸ்வமேத$_4$ாத் பரோ யக்ஞ: ப்ரியஸ்சைவ மஹாத்மந: ॥ (12)

தஸ்மாத்$_3$யஜாமஹே ஸர்வே பார்தி$_2$வார்தே$_2$ து$_3$ராஸத$_3$ம் ।
கர்த$_3$மேநைவமுக்தாஸ்து ஸர்வ ஏவ த்$_3$விஜர்ஷப$_4$ா: ॥ (13)

ரோசயந்தி ஸ்ம தம் யக்ஞம் ருத்$_3$ரஸ்யாராத$_4$நம் ப்ரதி ।
ஸம்வர்தஸ்ய து ராஜர்ஷே: ஸிஷ்ய: பரபுரஞ்ஜய: ॥ (14)

மருத்த இதி விக்$_2$யாதஸ்தம் யக்ஞம் ஸமுபாஹரத் ।
ததோ யக்ஞோ மஹாநாஸீத்$_3$பு$_3$த$_4$ாஸ்ரமஸமீபத: ॥ (15)

ருத்$_3$ரஸ்ச பரமம் தோஷம் ஜக$_3$ாம ஸுமஹாயஸா: ।
அத$_2$ யக்ஞே ஸமாப்தே து ப்ரீத: பரமயா முத$_3$ா ॥ (16)

உமாபதிர்த்$_3$விஜாந் ஸர்வாநுவாச இளஸந்நிதெ$_4$ள ।
ப்ரீதோ஽ஸ்மி ஹயமேதே$_4$ந ப$_4$க்த்யா ச த்$_3$விஜஸத்தமா: ॥ (17)

அஸ்ய ப$_3$ாஹ்லீபதேஸ்சைவ கிம் கரோமி ப்ரியம் ஸுப$_4$ம் ।
தத$_2$ா வத$_3$தி தே$_3$வேஸே த்$_3$விஜாஸ்தே ஸுஸமாஹிதா: ॥ (18)

ப்ரஸாத$_3$யந்தி தே$_3$வேஸம் யத$_2$ா ஸ்யாத் புருஷஸ்த்விலா ।
தத: ப்ரீதோ மஹாதே$_3$வ: புருஷத்வம் த$_3$தெ$_3$ள புந: ॥ (19)

இளாயை ஸ மஹாதேஜா த$_3$த்த்வா சாந்தரதீ$_4$யத ।
நிர்வ்ருத்தே ஹயமேதே$_4$ து க$_3$தஸ்சாத$_3$ர்ஸநம் ஹர: ॥ (20)

யத$_2$ாக$_3$தம் த்$_3$விஜா: ஸர்வே ஹ்யக$_3$ச்ச$_2$ந் தீ$_3$ர்க$_4$த$_3$ர்ஸிந: ।
ராஜா ப$_3$ாஹ்லிமுத்ஸ்ருஜ்ய மத்$_4$யதே$_3$ஸே ஹ்யநுத்தமம் ॥ (21)

நிவேஸயாமாஸ புரம் ப்ரதிஷ்ட$_2$ாநம் யஸஸ்கரம் ।
ஸஸபி$_3$ந்து$_3$ஸ்து ராஜர்ஷிர்ப$_3$ாஹ்லிம் பரபுரஞ்ஜய: ॥ (22)

ப்ரதிஷ்ட$_2$ாநே இளோ ராஜா ப்ரஜாபதிஸுதோ ப$_3$லீ ।
ஸ காலே ப்ராப்தவாந்(ல்)லோகமிளோ ப்$_3$ராஹ்மமநுத்தமம் ॥ (23)

ஐள: புரூரவா ராஜா ப்ரதிஷ்ட$_2$ாநமவாப்தவாந் ।
ஈத்$_3$ருஸோ ஹ்யஸ்வமேத$_4$ஸ்ய ப்ரப$_4$ாவ: புருஷர்ஷபெ$_4$ள ॥
ஸ்த்ரீபூ$_4$த: பௌருஷம் லேபே$_4$ யச்சாந்யத$_3$பி து$_3$ர்லப$_4$ம் ॥ (24)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ நவதிதம: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

கர்தமர், மைந்தனுக்கு மிகவும் மேலான நலன் ஏற்படவேண்டும் என்ற கருத்துடன், 'வேதோத்தமர்களே! மன்னனுடைய பரம மங்களத்தை முன்னிட்டு, நான் சொல்லப் போவதைக் கேளுங்கள்' என்று சொல்லத் தொடங்கினார். (11)

'காளைக் கொடியோன் பரமேசுவரனைக் காட்டிலும் மேலான இன்னொரு மருத்துவரை நான் காணவில்லை; அவருக்கு மிகவும் பிரியமானவற்றுள் அசுவமேத யாகத்தைக் காட்டிலும் வேறு எதுவும் இல்லை. (12)

மன்னன் நலன் அடையவேண்டும் என்பதற்காக, செயற்கரிய அந்த யாகத்தை நாம் நடத்துவோம்.' கர்தமர் இவ்வாறு கூறியதும், அங்கு கூடியிருந்த அந்தணோத்தமர்கள் அனைவரும் ருத்ரனைத் திருப்தி செய்விப்பதற்காக, அந்த யாகத்தைச் செய்வது சாலச்சிறந்தது என்று தீர்மானித்தார்கள். (13)

ராஜரிஷி சம்வர்த்தகரின் சீடனும், ராஜரிஷியும், எதிரிகளின் நகரங்களைக் கைப்பற்றுபவனுமான மருத்தன் என்று பெயர் பெற்றவன் வேள்விக்கான ஏற்பாடுகளைச் செய்தான். (14)

புதனுடைய ஆசிரமத்திற்கு அருகிலேயே மகத்தான அந்த வேள்வி நடைபெற்றது. மகிமை மிக்கவரான ருத்ரதேவன் மிகவும் திருப்தி அடைந்தார். (15)

வேள்வி நிறைவடைந்ததும், மிகவும் மகிழ்ச்சியுடனிருந்த உமாகாந்தரான பரமசிவன், இளன் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, எல்லா வேதோத்தமர்களையும் பார்த்துக் கூறினார்— 'அந்தணோத்தமர்களே! நீங்கள் பக்தியுடன் செய்த அசுவமேத யாகத்தினால், நான் மனமகிழ்ச்சி அடைந்துள்ளேன். பாஹ்லீக மன்னனின் நன்மைக்காக நான் என்ன செய்ய வேண்டும்?' (16,17)

இவ்வாறு, தேவதேவனான பரமேசுவரன் கேட்டவுடன், அந்தணோத்தமர்கள் எல்லோரும் மனமொன்றிய நிலையில், இளா (மங்கை) ஆணாகவே மாறவேண்டும் என்று அவரை வேண்டிக் கொண்டார்கள். (18)

திருப்தியுடனிருந்த மகாதேவர், இளாவுக்கு மீண்டும் ஆண்தன்மையைக் கொடுத்தார். கொடுத்துவிட்டு, மகாதேஜஸ்வியான அவர் மறைந்தருளினார். (19)

அசுவமேதம் நிறைவடைந்து, சங்கரன் தரிசனமும் கிடைத்த பின்னர், தொலைநோக்குடைய அந்தணர்கள் அனைவரும் வந்தவாறே திரும்பிச் சென்றார்கள். (20)

மன்னன் (இளன்), பாஹ்லீக நாட்டை விட்டுவிட்டு கங்கை–யமுனை நதிகளுக்கிடையில், உத்தமமானதும் புகழ்தரக் கூடியதுமான பிரதிஷ்டானம் என்ற நகரை நிர்மாணித்து, அதில் வசிக்கத் தொடங்கினார். (21)

எதிரிகளின் நகரத்தை வெற்றி கொள்பவனும் ராஜரிஷியுமான சசபிந்து, பாஹ்லீகத்தில் ஆட்சி செய்தான்; பலம் மிக்கவரும் கர்தமரின் மைந்தருமான மன்னன் இளன், பிரதிஷ்டானத்தில் ஆட்சி செய்தார். (22)

இறுதிக்காலம் வந்ததும், மிக உயர்ந்ததான பிரும்மலோகத்தை இளன் அடைந்தார். (பின்பு) அவர் மைந்தன் புரூரவஸ் பிரதிஷ்டானத்தின் அரசனானான். (23)

ஆண்காளைகளே! அசுவமேத யாகத்தின் மகிமையால், பெண்ணாக மாறியிருந்தவர் ஆணாக மாறிவிட்டார்! மேலும், கிடைத்தற்கரிய பல அரிய பொருள்களையும் அடைந்தார்.'' (24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
தொண்ணூறாவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

ஏகநவதிதம: ஸர்க$_3$:

யக்ஞஸம்விதா$_4$நம்

ஏததா$_3$க்$_2$யாய காகுத்ஸ்தோ$_2$ ப்$_4$ராத்ருப்$_4$யாமமிதப்ரப$_4$: ।
லக்ஷ்மணம் புநரேவாஹ த$_4$ர்மயுக்தமித$_3$ம் வச: ॥ (1)

வஸிஷ்ட$_2$ம் வாமதே$_3$வம் ச ஜாபா$_3$லிமத$_2$ காஶ்யபம் ।
த்$_3$விஜாம்ஶ்ச ஸர்வப்ரவராநஶ்வமேத$_4$புரஸ்க்ருதாந் ॥ (2)

ஏதாந் ஸர்வாந் ஸமாநீய மந்த்ரயித்வா ச லக்ஷ்மண ।
ஹயம் லக்ஷணஸம்பந்நம் விமோக்ஷ்யாமி ஸமாதி$_4$நா ॥ (3)

தத்$_3$வாக்யம் ராக$_4$வேணோக்தம் ஶ்ருத்வா த்வரிதவிக்ரம: ।
த்$_3$விஜாந் ஸர்வாந் ஸமாஹூய த$_3$ர்ஶயாமாஸ ராக$_4$வம் ॥ (4)

தே த்$_3$ருஷ்ட்வா தே$_3$வஸங்காஶம் க்ருதபாதா$_3$பி$_4$வந்த$_3$நம் ।
ராக$_4$வம் ஸுது$_3$ராத$_4$ர்ஷமாஶீர்பி$_4$: ஸமபூஜயந் ॥ (5)

ப்ராஞ்ஜலி: ஸ ததா$_3$ பூ$_4$த்வா ராக$_4$வோ த்$_3$விஜஸத்தமாந் ।
ஆசசக்ஷேऽஶ்வமேத$_4$ஸ்ய ஹ்யபி$_4$ப்ராயம் மஹாயஶா: ॥ (6)

தே து ராமஸ்ய தச்ச்$_2$ருத்வா நமஸ்க்ருத்வா வ்ருஷத்$_4$வஜம் ।
அஶ்வமேத$_4$ம் த்$_3$விஜா: ஸர்வே பூஜயந்தி ஸ்ம ஸர்வஶ: ॥ (7)

ஸ தேஷாம் த்$_3$விஜமுக்$_2$யாநாம் வாக்யமத்$_3$பு$_4$தத$_3$ர்ஶநம் ।
அஶ்வமேதா$_4$ஶ்ரிதம் ஶ்ருத்வா ப்$_4$ருஶம் ப்ரீதோऽப$_4$வத்ததா$_3$ ॥ (8)

விக்ஞாய கர்ம தத்தேஷாம் ராமோ லக்ஷ்மணமப்$_3$ரவீத் ।
ப்ரேஷயஸ்வ த்$_3$ருதம் தூ$_3$தாந் ஸுக்$_3$ரீவாய மஹாத்மநே ॥ (9)

யதா$_2$ மஹத்$_3$பி$_4$ர்ஹரிபி$_4$ர்ப$_3$ஹுபி$_4$ஶ்ச வநௌகஸாம் ।
ஸார்த$_4$மாக$_3$ச்ச$_2$ ப$_4$த்$_3$ரம் தே ஹ்யநுபோ$_4$க்தும் மஹோத்ஸவம் ॥ (10)

விபீ$_4$ஷணஶ்ச ரக்ஷோபி$_4$: காமகை$_3$ர்ப$_3$ஹுபி$_4$ர்வ்ருத: ।
அஶ்வமேத$_4$ம் மஹாயக்ஞமாயாத்வதுலவிக்ரம: ॥ (11)

ராஜாநஶ்ச மஹாபா$_4$கா$_3$ யே மே ப்ரியசிகீர்ஷவ: ।
ஸாநுகா$_3$: க்ஷிப்ரமாயாந்து யக்ஞம் த்$_3$ரஷ்டுமநுத்தமம் ॥ (12)

தே$_3$ஶாந்தரக$_3$தா யே ச த்$_3$விஜா த$_4$ர்மஸமாஹிதா: ।
ஆமந்த்ரயஸ்வ தாந் ஸர்வாநஶ்வமேதா$_4$ய லக்ஷ்மண ॥ (13)

ருஷயஶ்ச மஹாபா$_3$ஹோ ஆஹூயந்தாம் தபோத$_4$நா: ।
தே$_3$ஶாந்தரக$_3$தா: ஸர்வே ஸதா$_3$ராஶ்ச த்$_3$விஜாதய: ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : தொண்ணூற்றொன்று

அசுவமேதம் செய்ய இராமன் ஆணையிடுதல்

எல்லையில்லா ஒளிவீசும் காகுத்த இராமன், சகோதரர்களிடம் மேற்கண்டவாறு கூறிவிட்டு, இலக்குவனை நோக்கி அறத்தோடிணைந்த பின்வரும் சொற்களைக் கூறினார்— (1)

''லட்சுமணா! அசுவமேத யாகம் செய்விக்கும் அந்தணர்களில் முதன்மையானவர்களாகவும், மற்ற எல்லா வைதிகச் சடங்குகளிலும் கைதேர்ந்தவர்களாகவுமுள்ள வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காசியபர் முதலிய எல்லா வேதவித்தகர்களையும் அழைத்து, அவர்களிடம் ஆலோசனை கேட்டு, மிக்க கவனத்துடன், மங்கள லட்சணங்கள் பொருந்திய குதிரையைத் தேர்ந்தெடுத்து, அதன் கால்போன போக்கில் சஞ்சரிப்பதற்கு விடப்போகிறேன்.'' (2,3)

இவ்வாறு இராகவன் சொன்னதைக் கேட்டு, செயல்களை விரைவாகச் செய்து முடிக்கும் இலக்குவன் எல்லா அந்தணர்களையும் அழைப்பித்து, இராமனைச் சந்திக்கச் செய்தான். (4)

தேவர்களைப் போல் பிரகாசிப்பவரும், எவராலும் வெல்ல முடியாதவருமான இராமன், தங்கள் பாதங்களில் வணங்கிவிட்டு நின்று கொண்டிருப்பதைப் பார்த்த அவர்கள், நல்லாசிகள் கூறிப் போற்றினார்கள். (5)

இராமன், அந்தணோத்தமர்களுக்கு எதிரில் கைகளைக் கூப்பிக் கொண்டு, அசுவமேதம் செய்யவேண்டும் என்ற தன் எண்ணத்தை வெளியிட்டார். (6)

இராமனுடைய சொற்களைக் கேட்ட அந்தணோத்தமர்கள், பரமேசுவரனை மனத்தால் வணங்கி, அசுவமேதத்தின் அளவற்ற பெருமையைப் பலவகையாலும் விளக்கத் தொடங்கினார்கள். (7)

அசுவமேதம் சம்பந்தமாக மிகவும் நுட்பமான ஞானத்தைப் பெற்றிருந்த அந்தணப் பெரியோர்களின் மொழிகளைக் கேட்ட இராமன் மிகவும் திருப்தி அடைந்தார். (8)

அந்த யாகத்தைச் செய்விப்பதில் அவர்கள் இசைவைத் தெரிந்துக் கொண்ட இராமன், லட்சுமணனை நோக்கி, ''பேருடல் கொண்ட வனவாசிகளான வானரர்களுடன்கூட வந்து, வேள்வி என்ற பெருநிகழ்ச்சியைக் கண்டு களிப்பாயாக; வாழ்க, நீ – என்று, மகாத்மா சுக்ரீவனுக்குத் தூதர்கள் மூலம் விரைவில் செய்தி அனுப்புவாயாக'' என்று கூறினார். (9,10)

''அத்துடன், இணையற்ற பராக்கிரமம் கொண்ட விபீஷணனுக்கும், 'மனம் போல் செல்லக் கூடிய அநேக அரக்கர்களோடுகூட, மாபெரும் அசுவமேதப் பெருவிழாவிற்கு எழுந்தருள வேண்டும்' என்று செய்தி அனுப்பு. (11)

மேலும், எனக்குப் பிரியமானதைச் செய்ய விரும்பும் பாக்கியசாலிகளான மன்னர்கள், மிக உயர்ந்த வேள்வியைக் காண்பதற்கு, தம் பரிவாரங்களுடன் விரைவில் வந்து சேரட்டும். (12)

லட்சுமணா! வேறு வேலை நிமித்தமாக, பிற நாடுகளுக்குச் சென்றுள்ள அறம் தவறாதவர்களான அந்தணர்கள் அனைவருக்கும், அசுவமேதத்திற்கு வந்தருளும்படி அழைப்பு விடுப்பாயாக. (13)

பெருந்தோளனே! தவச்செல்வர்களான முனிவர்களையும், வேறு நாடுகளுக்கு மனைவியுடன் சென்றுள்ள இருபிறப்பாளர்களையும் அழைப்பாயாக. (14)

Koviloor Digital Library

ததை$_2$வ தாலாவசராஸ்ததை$_2$வ நடநர்தகா: ।
யக்ஞவாடஶ்ச ஸுமஹாந் கோ$_3$மத்யா நைமிஶே வநே ॥ (15)

ஆக்ஞாப்யதாம் மஹாபா$_3$ஹோ தத்$_3$தி$_4$ புண்யமநுத்தமம் ।
ஶாந்தயஶ்ச மஹாபா$_3$ஹோ ப்ரவர்த்யந்தாம் ஸமந்தத: ॥ (16)

ஶதஶஶ்சாபி த$_4$ர்மக்ஞா: க்ரதுமுக்$_2$யமநுத்தமம் ।
அநுபூ$_4$ய மஹாயக்ஞம் நைமிஶே ரகு$_4$நந்த$_3$ந ॥ (17)

துஷ்ட: புஷ்டஶ்ச ஸர்வேऽஸௌ மாநிதஶ்ச யதா$_2$விதி$_4$ ।
ப்ரீதிம் யாஸ்யதி த$_4$ர்மக்ஞ ஶீக்$_4$ரமாமந்த்ர்யதாம் ஜந: ॥ (18)

ஶதம் வாஹஸஹஸ்ராணாம் தண்டு$_3$லாநாம் வபுஷ்மதாம் ।
அயுதம் திலமுத்$_3$கா$_3$நாம் ப்ரயாத்வக்$_3$ரே மஹாப$_3$ல ॥ (19)

சணகாநாம் குலித்தா$_2$நாம் மாஷாணாம் லவணஸ்ய ச ।
அதோऽநுரூபம் ஸ்நேஹம் ச க$_3$ந்த$_4$ம் ஸம்க்ஷிப்தமேவ ச ॥ (20)

ஸுவர்ணகோட்யோ ப$_3$ஹுலா ஹிரண்யஸ்ய ஶதோத்தரா: ।
அக்$_3$ரதோ ப$_4$ரத: க்ருத்வா க$_3$ச்ச$_2$த்வக்$_3$ரே ஸமாதி$_4$நா ॥ (21)

அந்தரா பண்யவீத்$_2$யஶ்ச ஸர்வே ச நடநர்தகா: ।
ஸூதா$_3$ நார்யஶ்ச ப$_3$ஹவோ நித்யம் யௌவநஶாலிந: ॥ (22)

ப$_4$ரதேந து ஸார்த$_4$ம் தே யாந்து ஸைந்யாநி சாக்$_3$ரத: ।
நைக$_3$மா ப$_3$லவ்ருத்$_3$தா$_4$ஶ்ச த்$_3$விஜாஶ்ச ஸுஸமாஹிதா: ॥ (23)

கர்மாந்திகாந் வர்த$_4$கிந: கோஶாத்$_4$யக்ஷாம்ஶ்ச நைக$_3$மாந் ।
மம மாத்ரூஸ்ததா$_2$ ஸர்வா: குமாராந்த:புராணி ச ॥ (24)

காஞ்சநீம் மம பத்நீம் ச தீ$_3$க்ஷாயாம் க்ஞாம்ஶ்ச கர்மணி ।
அக்$_3$ரதோ ப$_4$ரத: க்ருத்வா க$_3$ச்ச$_2$த்வக்$_3$ரே மஹாயஶா: ॥ (25)

உபகார்யா மஹார்ஹாஶ்ச பார்தி$_2$வாநாம் மஹௌஜஸாம் ।
ஸாநுகா$_3$நாம் நரஶ்ரேஷ்டோ$_2$ வ்யாதி$_3$தே$_3$ஶ மஹாப$_3$ல: ॥ (26)

அந்நபாநாநி வஸ்த்ராணி அநுகா$_3$நாம் மஹாத்மநாம் ।
ப$_4$ரத: ஸ ததா$_3$ யாத: ஶத்ருக்$_4$நஸஹிதஸ்ததா$_3$ ॥ (27)

வாநராஶ்ச மஹாத்மாந: ஸுக்$_3$ரீவஸஹிதாஸ்ததா$_3$ ।
விப்ராணாம் ப்ரவரா: ஸர்வே சக்ருஶ்ச பரிவேஷணம் ॥ (28)

விபீ$_4$ஷணஶ்ச ரக்ஷோபி$_4$: ஸ்த்ரீபி$_4$ஶ்ச ப$_3$ஹுபி$_4$ர்வ்ருத: ।
ருஷீணாமுக்$_3$ரதபஸாம் பூஜாம் சக்ரே மஹாத்மநாம் ॥ (29)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகநவதிதம: ஸர்க$_3$: ॥

Koviloor Digital Library

நாடக அரங்குகளில், கையில் தாளம் வைத்துக் கொண்டு நிகழ்ச்சி நடத்தும் சூத்திரதாரர்கள், நடிகர்கள், நாட்டியம் ஆடுவோர் ஆகியோருக்கும் அழைப்பு அனுப்பு. நைமிசாரண்யத்தில், கோமதி ஆற்றின் கரையில் மிக விசாலமான வேள்விச்சாலை அமைப்பதற்கு உத்தரவு போடு. அந்த இடம் மிகவும் புனிதமானது; உயர்ந்தது. இடையூறில்லாமல் வேள்வி நிறைவேறுவதற்காக எல்லா இடங்களிலும் சாந்தி கர்மாக்கள் செய்யப்படட்டும். (15,16)

ரகுநந்தனா! நைமிசாரண்யத்தில் நடைபெறவுள்ள இணையில்லாத பெருமை கொண்ட வேள்வியை நூற்றுக்கணக்கான அறநெறியாளர்கள் கண்டுகளித்து, முறைப்படி மரியாதை செய்யப்பட்டு, உடலும் மனமும் மகிழ்ந்து திருப்தி அடையும்படி ஏற்பாடுகளைச் செய். அறம் அறிந்தவனே! (நாட்டு) மக்கள் எல்லோருக்கும் அழைப்பு அனுப்பு. (17,18)

மகாபலசாலியே! லட்சக்கணக்கான பொதிமாடுகள் உயர்தர அரிசி மூட்டைகளையும், பத்தாயிரம் பொதிகாளைகள் எள்–பருப்பு ஆகியவற்றையும் சுமந்து கொண்டு முன்னதாகச் செல்லட்டும். (19)

கொத்துக்கடலை, கொள்ளு, உளுந்து, உப்பு முதலியனவும், (ஆயிரக்கணக்கான மக்களின் போஜனத்திற்குத்) தேவையான அளவு எண்ணெய் பொருள்களும், அறைக்கப்படாத சந்தனமும் முன்னால் போகட்டும். (20)

பரதன், கோடிக்கணக்கான தங்கம்–வெள்ளி நாணயங்களை எடுத்துக் கொண்டு, மிகவும் கவனத்துடன் முன்னே செல்வானாக. (21)

போகும் வழியில் அத்தியாவசியப் பொருள்கள் வாங்கி விற்பதற்காகக் கடைவீதிகள் நிறுவப்படவேண்டும்; நடிகர்கள்–நடனமாடுவோர் எல்லோரும் செல்லவேண்டும்; சமையற்காரர்களும், எப்போதும் இளமையோடு இருக்கும் பெண்பாலரும் செல்லவேண்டும். (22)

பரதனுக்கு முன் அணியில் படைவீரர்கள் செல்லட்டும். சாஸ்திர வல்லுநர்கள், இளமையிலேயே மெய்ஞ்ஞானம் பெற்றவர்கள், மனம் ஒருமைப்பட்ட அந்தணர்கள், பல்வகைத் தொழில்புரியும் தொழிலாளர்கள், தச்சர்கள், கருவூலக்காப்பாளர்கள், வேதவிற்பன்னர்கள், என்னுடைய எல்லாத் தாய்மார்கள், அந்தப்புரத்திலுள்ள (பரதன் முதலியோரின்) மனைவியர், என்னுடைய மனைவி சீதையின் தங்கப்பதுமை, வேள்வியை நடத்தும்முறை தெரிந்த அந்தணர்கள் முதலியோர் பரதனுடன்கூட முன்னதாகச் செல்வார்களாக. (23–25)

மாட்சிமை மிக்கவர்களும் கௌரவத்திற்கு உரியவர்களுமான சிற்றரசர்கள் மற்றும் அவர்களுடன் வருவோர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். குடிதண்ணீர், உணவு, உடை போன்றவைகளும் அவர்களுக்குக் குறைவில்லாமல் கிடைக்க வேண்டும்'' என்று மகாபலம் பொருந்திய இராமன் கட்டளையிட்டார். இதைக் கேட்டு, பரதனும் சத்ருக்னனும் முன்னதாகச் சென்றனர். (26,27)

சுக்ரீவனுடன் வந்திருந்த பக்தி–சிரத்தையுள்ள வானரர்கள், முக்கியஸ்தர்களுக்கும் விப்ரர்களுக்கும் உணவு பரிமாறினார்கள். (28)

ஏராளமான அரக்கர்களுடனும் பெண்மணிகளுடனும் வந்திருந்த விபீஷணன், கடுமையான தவம் செய்துவரும் மகாத்மாக்களை வரவேற்று உபசரிக்கும் பணியைச் செய்தான். (29)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
தொண்ணூற்றோராவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

த்$_3$விநவதிதம: ஸர்க$_3$:

அஶ்வமேத$_4$:

தத் ஸர்வமகி$_2$லேநாஶு ஸம்ஸ்த$_2$ாப்ய ப$_4$ரதாக்$_3$ரஜ: ।
ஹயம் லக்ஷணஸம்பந்நம் க்ருஷ்ணஸாரம் முமோச ஹ ॥ (1)

ருத்விக்$_3$பி$_4$ர்லக்ஷ்மணம் ஸார்த$_4$மஶ்வதந்த்ரே நியோஜ்ய ச ।
ததோऽப்$_4$யக$_3$ச்ச$_2$த் காகுத்ஸ்த$_2$: ஸஹ ஸைந்யேந நைமிஶம் ॥ (2)

யக்ஞவாடம் மஹாப$_3$ாஹுர்த்$_3$ருஷ்ட்வா பரமமத்$_3$பு$_4$தம் ।
ப்ரஹர்ஷமதுலம் லேபே$_4$ ஶ்ரீமாநிதி வசோऽப்$_3$ரவீத் ॥ (3)

நைமிஶே வஸதஸ்தஸ்ய ஸர்வ ஏவ நராதி$_4$பா: ।
ஆநிந்யுருபஹாராம்ஶ்ச தாந் ராம: ப்ரத்யபூஜயத் ॥ (4)

உபகார்யா மஹார்ஹாஶ்ச பார்தி$_2$வாநாம் மஹாத்மநாம் ।
ஸாநுக$_3$ாநாம் நரஶ்ரேஷ்டே$_2$ா வ்யாதி$_3$தே$_3$ஶ மஹாமதி: ॥ (5)

அந்நபாநாநி வஸ்த்ராணி ஸாநுக$_3$ாநாம் மஹாத்மநாம் ।
ப$_4$ரத: ஸந்த$_3$த$_3$ாவாஶு ஶத்ருக்$_4$நஸஹிதஸ்தத$_3$ா ॥ (6)

வாநராஶ்ச மஹாத்மாந: ஸுக்$_3$ரீவஸஹிதாஸ்தத$_3$ா ।
விப்ராணாம் ப்ரணதா: ஸர்வே சக்ரிரே பரிவேஷணம் ॥ (7)

விபீ$_4$ஷணஶ்ச ரக்ஷோபி$_4$ர்ப$_3$ஹுபி$_4$: ஸ்ரக்$_3$விபி$_4$ர்வ்ருத: ।
ருஷீணாமுக்$_3$ரதபஸாம் பூஜாம் சக்ரே மஹாத்மநாம் ॥ (8)

ஏவம் ஸுவிஹிதோ யக்ஞோ ஹயமேதே$_4$ாऽப்$_4$யவர்தத ।
லக்ஷ்மணேநாபி$_4$கு$_3$ப்தா ச ஹயசர்யா ப்ரவர்தத ॥
ஈத்$_3$ருஶம் ராஜஸிம்ஹஸ்ய யக்ஞப்ரவரமுத்தமம் ॥ (9)

நாந்ய: ஶப்$_3$தே$_3$ாऽப$_4$வத்தத்ர ஹயமேதே$_4$ மஹாத்மந: ।
ச$_2$ந்த$_3$தோ தே$_3$ஹி தே$_3$ஹீதி யாவத்துஷ்யந்தி யாசகா: ॥ (10)

தாவத் ஸர்வாணி த$_3$த்தாநி க்ரதுமத்$_4$யே மஹாத்மந: ।
விவித$_4$ாநி ச கௌ$_3$ட$_3$ாநி க$_2$ாண்ட$_3$வாநி ததை$_2$வ ச ॥ (11)

ந நிஸ்ஸ்ருதம் ப$_4$வத்யோஷ்ட$_2$ாத்$_3$வசநம் யாவத$_3$ர்தி$_2$நாம் ।
தாவத்$_3$வாநரரக்ஷோபி$_4$ர்த$_3$த்தமேவாப்$_4$யத்$_3$ருஶ்யத ॥ (12)

ந கஶ்சிந்மலிநஸ்தத்ர தீ$_3$நோ வாப்யத$_2$ கர்ஶித: ।
தஸ்மிந் யக்ஞவரே ராக்ஞோ ஹ்ருஷ்டபுஷ்டஜநாவ்ருதே ॥ (13)

யே ச தத்ர மஹாத்மாநோ முநயஶ்சிரஜீவிந: ।
நாஸ்மரம்ஸ்தாத்$_3$ருஶம் யக்ஞம் நாப்யாஸீத் ஸ கத$_3$ாசந ॥ (14)

Koviloor Digital Library

ஸர்க்கம் : தொண்ணூற்றிரண்டு

அசுவமேத யாகம்

மேற்கண்டவாறு முன்னேற்பாடுகளுக்கான ஆணைகளைப் பிறப்பித்துவிட்டு, பரதனின் தமையனார் (இராமன்), நல்ல லட்சணங்கள் பொருந்திய கருநிறங்கொண்ட குதிரையை அவிழ்த்துவிட்டார். (1)

ரித்விக்குகள் (வேள்விக் கலை அறிந்தவர்கள்) உடன்வர, குதிரையைப் பாதுகாப்பதற்காக இலக்குவனை நியமித்தார். பிறகு, படைவீரர்கள் புடைசூழ தானே நைமிசாரண்யத்திற்குப் புறப்பட்டார். (2)

மிக அற்புதமாக அமைக்கப்பட்டிருந்த வேள்விச்சாலையைப் பார்த்து, எல்லையில்லா ஆனந்தம் அடைந்த அவர், 'ஆகா! என்ன அழகு!' என்று தன் வியப்பை வெளியிட்டார். (3)

நைமிசத்தில் இராமன் தங்கியிருந்த போது, எல்லா அரசர்களும் காணிக்கைகள் கொண்டுவந்து சமர்ப்பித்தார்கள். இராமபிரான் அவைகளை ஏற்றுக்கொண்டு மறு மரியாதை செய்தார். (4)

பேரறிஞரான இராமன், வந்திருந்த போற்றுதலுக்குரிய மன்னர்களுக்கும் அவர்களுடைய பணியாளர்களுக்கும் சௌகரியமான இருப்பிடங்கள் (கூடாரங்கள்) அமைத்துத் தரும்படி கட்டளையிட்டார். (5)

முக்கியஸ்தர்களுடன் வந்திருந்தவர்களுக்குத் தேவையான உணவு, நீர், ஆடை முதலியவற்றை சத்ருக்னனும் பரதனும் உடனடியாகக் கொடுத்தார்கள். (6)

சுக்ரீவனுடன் வந்திருந்த தூய மனமுடைய வானரர்கள் எல்லோரும் பணிவுடன்கூட விப்ரர்களுக்கு உணவு பரிமாறினார்கள். (7)

மாலை அணிந்த ஏராளமான அரக்கர்கள் புடைசூழ வந்திருந்த விபீஷணன், கடுமையான தவமியற்றும் முனிவர்களை வரவேற்று உபசரிக்கும் பணியைச் செய்தான். (8)

இவ்வாறு, தக்க முன்னேற்பாடுகளுடன்கூட அசுவமேதம் நடந்து கொண்டிருந்தது. இலக்குவனுடைய பாதுகாப்புடன், பூமண்டலத்தைச் சுற்றி வரும்படி விடப்பட்ட குதிரையின் யாத்திரையும் நல்லவிதமாக நிறைவடைந்தது. மன்னருள் வேங்கை போன்ற இராமபிரானுடைய வேள்வி மிக விமரிசையாக நடந்தது. (9)

மகாத்மா இராமன் நடத்திய அந்த வேள்வியில், யாசகர்கள் மனம் நிறைவுபெறும் வரையில், எல்லாப் பொருள்களும் பல்வகை வெல்லப் பண்டங்களும் இனிப்பு வகைகளும் 'கொடு, கொடு' என்ற சொல்லே கேட்கப்பட்டது. (10,11)

பொருள் யாசிப்போர், வாயைத் திறந்து 'போதும், போதும்' என்று சொல்லாத வரையில், அரக்கர்களும் வானரர்களும் எல்லாப் பண்டங்களையும் அளித்துக் கொண்டே இருந்தார்கள் என்பதை எல்லோரும் பார்த்தார்கள். (12)

மனவளமும் உடல்வளமும் பெற்ற மக்கள் நிறைந்திருந்த இராமனின் அந்த மாவேள்வியில் அழுக்கடைந்தவரோ, பரிதாபமானவரோ, மனம் ஒடிந்துபோனவரோ காணப்படவேயில்லை. (எல்லோரும் அவ்வளவு கவனமாக உபசரிக்கப்பட்டார்கள்.) (13)

நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து கொண்டிருந்த முனிவர்களுக்கு இவ்வளவு மகத்தான வேள்வியை, இதற்கு முன்னர் ஒருபோதும் கண்டதாக நினைவுக்கு வரவில்லை. (14)

Koviloor Digital Library

ய: க்ருத்யவாந் ஸுவர்ணேந ஸுவர்ணம் லப4தே ஸ்ம ஸ: ।
வித்தார்தீ2 லப4தே வித்தம் ரத்நார்தீ2 ரத்நமேவ ச ॥ (15)

ரஜதாநாம் ஸுவர்ணநாமஶ்மநாமத2 வாஸஸாம் ।
அநிஶம் தீ3யமாநாநாம் ராஶி: ஸமுபத்3ருஶ்யதே ॥ (16)

ந ஶக்ரஸ்ய த4நேஶஸ்ய யமஸ்ய வருணஸ்ய வா ।
ஈத்3ருஶோ த்3ருஷ்டபூர்வோ ந ஏவமுசுஸ்தபோத4நா: ॥ (17)

ஸர்வத்ர வாநராஸ்தஸ்து2: ஸர்வத்ரைவ ச ராக்ஷஸா: ।
வாஸோத4நாந்நமர்தி2ப்4ய: பூர்ணஹஸ்தா த3து3ர்ப்4ருஶம் ॥ (18)

ஈத்3ருஶோ ராஜஸிம்ஹஸ்ய யக்ஞ: ஸர்வகு3ணாந்வித: ।
ஸம்வத்ஸரமதோ2 ஸாக்3ரம் வர்ததே ந ச ஹீயதே ॥ (19)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 த்3விநவதிதம: ஸர்க3: ॥

த்ரிநவதிதம: ஸர்க3:

வால்மீகிஸந்தே3ஶ:

வர்தமாநே ததா2பூ4தே யக்ஞே ச பரமாத்3பு4தே ।
ஸஶிஷ்ய ஆஜகா3மாஶு வால்மீகிர்முநிபுங்க3வ: ॥ (1)

ஸ த்3ருஷ்ட்வா தி3வ்யஸங்காஶம் யக்ஞமத்3பு4தத3ர்ஶநம் ।
ஏகாந்தே ருஷிவாடாநாம் சகார உடஜாஞ்சு2பா4ந் ॥ (2)

ஶகடாந்ஶ்ச ப3ஹூந் பூர்ணாந் ப2லமூலைஶ்ச ஶோப4நாந் ।
வால்மீகிவாடே ருசிரே ஸ்தா2பயந்நவிதூ3ரத: ॥ (3)

ஆஸீத் ஸுபூஜிதோ ராக்ஞா முநிபி4ஶ்ச மஹாத்மபி4: ।
வால்மீகி: ஸுமஹாதேஜா ந்யவஸத் பரமாத்மவாந் ॥ (4)

ஸ ஶிஷ்யாவப்3ரவீத்3த்4ருஷ்டோ யுவாம் க3த்வா ஸமாஹிதௌ ।
க்ருத்ஸ்நம் ராமாயணம் காவ்யம் கா3யேதா2ம் பரயா முதா3 ॥ (5)

ருஷிவாடேஷு புண்யேஷு ப்3ராஹ்மணாவஸதே2ஷு ச ।
ரத்2யாஸு ராஜமார்கே3ஷு பார்தி2வாநாம் க்3ருஹேஷு ச ॥ (6)

ராமஸ்ய ப4வநத்3வாரி யத்ர கர்ம ப்ரவர்ததே ।
ருத்விஜாமக்3ரதஶ்சைவ தத்ர கே3யம் விஶேஷத: ॥ (7)

இமாநி ச ப2லாந்யத்ர ஸ்வாதூ3நி விவிதா4நி ச ।
ஜாதாநி பர்வதாக்3ரேஷு சாஸ்வாத்3யாஸ்வாத்3ய கா3யதாம் ॥ (8)

Koviloor Digital Library

எவருக்குத் தங்கம் தேவைப்பட்டதோ, அவர் தங்கத்தைப் பெற்றார்; அதுபோல, பொருளை விரும்பியவர் பொருளையும், இரத்தினங்களைப் பெற விரும்பியவர் இரத்தினங்களையும் பெற்றார்கள். (15)

வெள்ளி, (தளவரிசை, சுவர்களுக்குத் தேவையான) வண்ணமயமான கற்கள், ஆடைகள் முதலியன வழங்கப்படுவதற்காகக் குவியல்களாகக் குவிந்திருந்தன. (16)

அங்கு வந்திருந்த தவச்செல்வர்கள், ''இத்தகைய பிரும்மாண்டமான வேள்வியை இந்திரன், குபேரன், யமன், வருணன் ஆகியோர்கூட நடத்தியதில்லை'' என்று பேசிக் கொண்டார்கள். (17)

எல்லா இடங்களிலும் வானரர்களும் அரக்கர்களும் நின்றுகொண்டு ஆடை–பொருள்–உணவு கேட்டவர்களுக்கெல்லாம் கைநிறைய எடுத்து வழங்கிக் கொண்டிருந்தார்கள். (18)

எல்லாச் சிறப்புக்களுடனும் விளங்கிய, அரசவேங்கை இராமன் நடத்திய வேள்வி ஓராண்டுக்கும் மேலாக வளர்ந்தது. (அவர், தொடர்ந்து வேள்வியை மீண்டும் மீண்டும் நடத்தினார்.) (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
தொண்ணூற்றிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்று மூன்று

வால்மீகி ஆணை

மிகவும் கோலாகலமான முறையில் அந்த வேள்வி நடந்து கொண்டிருந்தபோது, தலைசிறந்த முனிவரான வால்மீகி தன் சீடர்களுடன் அவ்விடம் வந்து சேர்ந்தார். (1)

பேரழகுடன் விளங்கும் மண்டபத்தில் நடைபெறும் அற்புதக் காட்சியான வேள்வியைப் பார்த்துவிட்டு, முனிவர்கள் தங்குவதற்கு என்று தனிமையாக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில், அழகிய குடில்களை அமைத்துக் கொண்டார். (2)

வால்மீகியின் எழிலார்ந்த குடில்களுக்கு அருகில், உணவுப் பொருள்கள் மற்றும் கனி–கிழங்குகள் நிறைந்த பல வண்டிகள் நிறுத்தப்பட்டன. (3)

மன்னர் இராமனாலும் மகாத்மாக்களான முனிவர்களாலும் நன்றாகக் கௌரவிக்கப்பட்ட தவச்செல்வரும் ஆத்மஞானியுமான வால்மீகி, அவ்விடத்தில் சுகமாகத் தங்கியிருந்தார். (4)

மனமகிழ்ச்சியுடனிருந்த அவர், தன் இரு சீடர்களையும் அழைத்து, ''நீங்கள் இருவரும் ஒன்றிய மனத்துடன் இராமாயண காவியம் முழுவதையும் ஆங்காங்கே சென்று உள்ளக்களிப்புடன் பாடுங்கள்'' என்று கூறினார். (5)

''புனிதமான முனிவர்களின் குடில்களிலும், அந்தணர்கள் வசிக்கும் இடங்களிலும், சாலைகளிலும், அரசபாட்டைகளிலும், சிற்றரசர் இல்லங்களிலும், இராமனுடைய மாளிகை வாசற்புறத்தில் வேள்வி நடக்குமிடத்திலும், வேள்வியாளர்கள் முன்னிலையிலும் கண்டிப்பாக (இராமகதை) பாடப்பட வேண்டும். (6,7)

மலைச்சிகரங்களில் உற்பத்தியான பற்பல வகையான சுவையுள்ள பழங்களை, அவ்வப்போது புசித்துக் கொண்டும் பாடிக் கொண்டும் (உற்சாகத்தோடு) இருங்கள். (8)

Koviloor Digital Library

ந யாஸ்யத$_2$: ஶ்ரமம் வத்ஸௌ ப$_4$க்ஷயித்வா ப$_2$லாநி வை ।
மூலாநி ச ஸும்ருஷ்டாநி ந ராகா$_3$த் பரிஹாஸ்யத$_2$: ॥ (9)

யதி$_3$ ஶப்$_3$தா$_3$பயேத்$_3$ராம: ஶ்ரவணாய மஹீபதி: ।
ருஷீணாமுபவிஷ்டாநாம் ததோ கே$_3$யம் ப்ரவர்ததாம் ॥ (10)

தி$_3$வஸே விம்ஶதி: ஸர்கா$_3$ கே$_3$யா மது$_4$ரயா கி$_3$ரா ।
ப்ரமாணைர்ப$_3$ஹுபி$_4$ஸ்தத்ர யதோ$_2$த்$_3$தி$_3$ஷ்டா மயா புரா ॥ (11)

லோப$_4$ஶ்சாபி ந கர்தவ்ய: ஸ்வல்போऽபி த$_4$நகாங்க்ஷயா ।
கிம் த$_4$நேநாஶ்ரமஸ்தா$_2$நாம் ப$_2$லமூலோபஜீவிநாம் ॥ (12)

யதி$_3$ ப்ருச்சே$_2$த்: ஸ காகுத்ஸ்தோ$_2$ யுவாம் கஸ்யேதி தா$_3$ரகௌ ।
ஆவாம் வால்மீகிஶிஷ்யௌ ஸ்வோ ப்$_3$ரூதமேவம் நராதி$_4$பம் ॥ (13)

இமாஸ்தந்த்ரீ: ஸுமது$_4$ரா: ஸ்தா$_2$நம் வா பூர்வத$_3$ர்ஶநம் ।
மூர்ச$_2$யித்வா ஸுமது$_4$ரம் கா$_3$யேதா$_2$ம் விக$_3$தஜ்வரௌ ॥ (14)

ஆதி$_3$ப்ரப்$_4$ருதி கே$_3$யம் ஸ்யாந்ந சாவக்ஞாய பார்தி$_2$வம் ।
பிதா ஹி ஸர்வபூ$_4$தாநாம் ராஜா ப$_4$வதி த$_4$ர்மத: ॥ (15)

தத்$_3$யுவாம் ஹ்ருஷ்டமநஸௌ ஶ்வ: ப்ரபா$_4$தே ஸமாஸ்தி$_2$தௌ ।
கா$_3$யேதா$_2$ம் மது$_4$ரம் கே$_3$யம் தந்த்ரீலயஸமந்விதம் ॥ (16)

இதி ஸந்தி$_3$ஶ்ய ப$_3$ஹுஶோ முநி: ப்ராசேதஸஸ்ததா$_3$ ।
வால்மீகி: பரமோதா$_3$ரஸ்தூஷ்ணீமாஸீந்மஹாயஶா: ॥ (17)

ஸந்தி$_3$ஷ்டௌ முநிநா தேந தாவுபௌ$_4$ மைதி$_2$லீஸுதௌ ।
ததை$_2$வ கரவாவேதி நிர்ஜக்$_3$மதுரரிந்த$_3$மௌ ॥ (18)

தாமத்$_3$பு$_4$தாம் தௌ ஹ்ருத$_3$யே குமாரௌ
நிவேஶ்ய வாணீம்ருஷிபா$_4$ஷிதாம் ததா$_3$ ।
ஸமுத்ஸுகௌ தௌ ஸமமூஷதுர்நிஶாம்
யதா$_2$ஶ்விநௌ பா$_4$ர்க$_3$வநீதிஸம்ஹிதாம் ॥ (19)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்ரிநவதிதம: ஸர்க$_3$: ॥

சதுர்நவதிதம: ஸர்க$_3$:

ராமாயணகா$_3$நம்

தௌ ரஜந்யாம் ப்ரபா$_4$தாயாம் ஸ்நாதௌ ஹுதஹுதாஶநௌ ।
யதோ$_2$க்தம்ருஷிணா பூர்வம் ஸர்வம் தத்ரோபகா$_3$யதாம் ॥ (1)

தாம் ஸ ஶுஶ்ராவ காகுத்ஸ்த$_2$: பூர்வாசார்யவிநிர்மிதாம் ।
அபூர்வாம் பாட்$_2$யஜாதிம் ச கே$_3$யேந ஸமலங்க்ருதாம் ॥ (2)

Koviloor Digital Library

குழந்தைகளே! இங்குள்ள சுவைமிக்க கனி–கிழங்குகளைப் புசித்தீர்களேயானால், உங்களுக்கு ஒருபோதும் களைப்புத் தோன்றாது; குரல் இனிமையும் குன்றிப்போகாது. புவியாளும் வேந்தனான இராமன், உங்கள் பாட்டைக் கேட்பதற்கு விரும்பி அழைத்தால், முனிவர்கள் அமர்ந்திருக்கும் அந்த அரங்கத்தில் நீங்கள் தொடர்ந்து பாடலாம். (9,10)

முன்னர், பலவித சான்றுகளுடன், 'இந்த இடத்தில் தொடங்கி, இந்த இடத்தில் நிறுத்த வேண்டும்' என்று பகுதிகளாகப் பிரித்து சொல்லிக் கொடுத்திருக்கிறேனே. அதன்படி, இனிமையான குரலால், நாள்தோறும் இருபது ஸர்க்கம் வீதம் பாடவேண்டும். பொருளுக்கு ஆசைப்பட்டு, மனம் பரிதவித்து எதையும் செய்யக்கூடாது. ஆசிரமத்தில் இருந்து கொண்டு, கனி–கிழங்குகளை உணவாகக் கொண்டு உயிர்வாழ்பவர்களுக்குச் செல்வத்தினால் என்ன பயன்? (11,12)

காகுத்த இராமன், 'நீங்கள் யாருடைய புதல்வர்கள்?' என்று கேட்டால், (நேரிடையாக அதற்குப் பதில் அளிக்காமல்,) 'நாங்கள் வால்மீகியின் சீடர்கள்' என்று பதில் கூறுங்கள். (13)

இந்த வீணையில் ஏழு தந்திகள் உள்ளன. இவைகளிலிருந்து இனிமையான நாதம் உண்டாகும். தந்திகளில், முன்னர் கேட்டறியாத ஆச்சரியமான ஸ்வரத்தை உண்டாக்கும் கட்டைகள் உள்ளன. நீங்கள் மனம் குழம்பாமல், உரிய முறையில் ஸ்வரக் கட்டைகளை அழுத்தி, இனிய ஒலியெழுப்பிப் பாடுங்கள். (14)

தொடக்கம் முதற்கொண்டு இந்தக் காவியத்தை நீங்கள் பாடவேண்டும். மன்னனுக்கு எவ்வித அவமரியாதையும் ஏற்பட்டுவிடக்கூடாது. தருமத்தின் நோக்கில் பார்த்தால், மன்னன் என்பவன் எல்லா உயிர்களுக்கும் தந்தை போன்றவன். ஆகவே, நீங்கள் இருவரும் உவகையுடனும் ஒன்றிய மனத்துடனும், நாளைக் காலையிலேயே, வீணையை இனிமையாக மீட்டிக் கொண்டு இராமாயண கானத்தைத் தொடங்குங்கள்.'' (15,16)

பெரும் புகழ் கொண்டவரும், பிரசேதஸ் மரபில் தோன்றியவருமான வால்மீகி, மேற்கண்டவாறு கூறிவிட்டு மௌனமானார். (17)

மிதிலை மன்னரின் குமாரியின் மைந்தர்களும், எதிரிகளை அடக்கவல்லவர்களுமான அவ்விருவரும், முனிவரின் ஆணையைக் கேட்டதும், ''அவ்வாறே செய்கிறோம்'' என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள். (18)

சுக்ராசார்யாரின் நீதிநூலை நன்றாகக் கற்றறிந்த அசுவினீ குமாரர்களைப் போல, அவ்விருவரும் முனிவர் கூறிய சொற்களை மனத்திலிருத்தி, துடிப்போடு அந்த இரவைக் கழித்தார்கள். (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
தொண்ணூற்று மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்று நான்கு

இராமாயண அரங்கேற்றம்

அந்த இரவு கழிந்து, பொழுது விடிந்தவுடன் அவ்விருவரும் நீராடிவிட்டு, சந்த்யாவந்தனம், ஔபாஸனம் முதலிய கர்மாக்களை முடித்துக் கொண்டு, முனிவர் (வால்மீகி) கூறியபடி, இராமகாதையைத் தொடக்கத்திலிருந்து இசைக்கத் தொடங்கினார்கள். (1)

பாடகர்களுடைய ஆசிரியரால் முன்னால் கற்பிக்கப்பட்ட அந்தக் காவியத்தை, இராமபிரான் செவிகளால் கேட்டார். இதற்குமுன் கேட்டறியாத அபூர்வ காவியம், இசைச் சிறப்புக்களுடன் ஆக்கப்பட்டிருந்ததை உணர்ந்தார். (2)

Koviloor Digital Library

ப்ரமாணைர்ப$_3$ஹுபி$_4$ர்யுக்தாம் தந்த்ரீலயஸமந்விதாம் ।
ப$_3$ாலாப்$_4$யாம் ராக$_4$வ: ஶ்ருத்வா கௌதூஹலபரோऽப$_4$வத் ॥ (3)

அத$_2$ கர்மாந்தரே ராஜா ஸமாஹூய மஹாமுநீந் ।
பார்தி$_2$வாம்ஶ்ச நரவ்யாக்$_4$ர: பண்டி$_3$தாந்நைக$_3$மாம்ஸ்தத$_2$ா ॥ (4)

பௌராணிகாஞ்ஶப்$_3$த$_3$விதே$_3$ா யே ச வ்ருத்$_3$த$_4$ா த்$_3$விஜாதய: ।
ஸ்வராணாம் லக்ஷணக்ஞாம்ஶ்ச உத்ஸுகாந் த்$_3$விஜஸத்தமாந் ॥ (5)

லக்ஷணக்ஞாம்ஶ்ச க$_3$ாந்த$_4$ர்வாந்நைக$_3$மாம்ஶ்ச விஶேஷத: ।
பாத$_3$ாக்ஷரஸமாஸக்ஞாந்ஶ்ச$_2$ந்த$_3$ஸ்ஸு பரிநிஷ்டி$_2$தாந் ॥ (6)

கலமாத்ராவிப$_4$ாக$_3$க்ஞாஞ்ஜ்யௌதிஷே ச பரம் க$_3$தாந் ।
க்ரியாகல்பவித$_3$ஶ்சைவ தத$_2$ா காவ்யவிதே$_3$ா ஜநாந் ॥ (7)

ப$_4$ாஷாக்ஞாநிங்கி$_3$தக்ஞாம்ஶ்ச நைக$_3$மாம்ஶ்சாப்யஶேஷத: ।
ஹேதூபசாரகுஶலாந் வசநே சாபி ஹைதுகாந் ॥ (8)

ச$_2$ந்தே$_3$ாவித$_3$: புராணக்ஞாந் வைதி$_3$காந் த்$_3$விஜஸத்தமாந் ।
சித்ரக்ஞாந் வ்ருத்தஸூத்ரக்ஞாந் கீ$_3$தந்ருத்யவிஶாரத$_3$ாந் ॥ (9)

ஶாஸ்த்ரக்ஞாந்நீதிநிபுணாந் வேத$_3$ாந்தார்த$_2$ப்ரபே$_3$ாத$_4$காந் ।
ஏதாந் ஸர்வாந் ஸமாநீய க$_3$ாதாரௌ ஸமவேஶயத் ॥ (10)

த்$_3$ருஷ்ட்வா முநிக$_3$ணா: ஸர்வே பார்தி$_2$வாஶ்ச மஹௌஜஸ: ।
பிப$_3$ந்த இவ சக்ஷுர்ப்$_4$யாம் ராஜாநம் க$_3$ாயகௌ ச தௌ ॥
ஊசு: பரஸ்பரம் சேத$_3$ம் ஸர்வ ஏவ ஸமந்தத: ॥ (11)

உப$_4$ௌ ராமஸ்ய ஸத்$_3$ருஶௌ பி$_3$ம்ப$_3$ாத்$_3$பி$_3$ம்ப$_3$மிவோத்தி$_2$தௌ ।
ஜடிலௌ யதி$_3$ ந ஸ்யாதாம் ந வல்கலத$_4$ரௌ யதி$_3$ ॥
விஶேஷம் நாதி$_4$க$_3$ச்ச$_2$ாமோ க$_3$ாயதோ ராக$_4$வஸ்ய ச ॥ (12)

தேஷாம் ஸம்வத$_3$தாமேவம் ஶ்ரோத்ரூணாம் ஹர்ஷவர்த$_4$நம் ।
கே$_3$யம் ப்ரசக்ரதுஸ்தத்ர தாவுப$_4$ௌ முநித$_3$ாரகௌ ॥ (13)

தத: ப்ரவ்ருத்தம் மது$_4$ரம் க$_3$ாந்த$_4$ர்வமதிமாநுஷம் ।
ந ச த்ருப்திம் யயு: ஸர்வே ஶ்ரோதாரோ க$_3$ாநஸம்பத$_3$ா ॥ (14)

ப்ரவ்ருத்தமாதி$_3$த: பூர்வஸர்க$_3$ம் நாரத$_3$த$_3$ர்ஶிதம் ।
தத: ப்ரப்$_4$ருதி ஸர்க$_3$ாம்ஶ்ச யாவத்$_3$விம்ஶத்யக$_3$ாயதாம் ॥ (15)

ததோऽபராஹ்ணஸமயே ராக$_4$வ: ஸமப$_4$ாஷத ।
ஶ்ருத்வா விம்ஶதிஸர்க$_3$ாந்ஸ்தாந் ப்$_4$ராதரம் ப்$_4$ராத்ருவத்ஸல: ॥ (16)

அஷ்டாத$_3$ஶஸஹஸ்ராணி ஸுவர்ணஸ்ய மஹாத்மநோ: ।
ப்ரயச்ச$_2$ ஶீக்$_4$ரம் காகுத்ஸ்த$_2$ யத$_3$ந்யத$_3$பி$_4$காங்க்ஷிதம் ॥ (17)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_30_Back

Koviloor Digital Library

துரிதம்–மத்யமம்–சவுக்கம் என்ற காலப் பிரமாணங்களுக்கு ஏற்ப, தந்தி ஒலியுடன் இழைந்து வரும் சிறுவர்களின் இனிய கானத்தைக் கேட்ட இராகவன், அதில் மிகவும் அக்கறை காட்டினார். (3)

ஆண்புலி நிகர் மன்னர், வேள்விச் சடங்குகளில் இடைவேளை கிடைக்கும்போது, சிற்றரசர்கள், வேத அறிஞர்கள், பௌராணிகர்கள், இலக்கண வல்லுநர்கள், மூத்த இருபிறப்பாளர்கள், ஸ்வரங்களின் இலட்சணமறிந்தவர்கள், கந்தர்வக்கலை அறிந்தவர்கள், ஆர்வமுள்ள குடிமக்கள், வெவ்வேறு பனுவல் வகைகளை அறிந்தவர்கள், ஸ்வரங்களின் துரித–மத்யமம்–சவுக்க கால அளவுகளைக் கண்டறிந்தவர்கள், சோதிடக் கலை வல்லுநர்கள், சடங்குகளின் செயல்முறைகளைக் கற்றுத் தேர்ந்தவர்கள், காவிய அமைப்பு அறிந்தவர்கள், பல்மொழி வித்தகர்கள், எண்ணங்களையும் மெய்ப்பாடுகளையும் உணர்த்த வல்லவர்கள், எல்லா புறநகர் மக்கள், தர்க்க சாஸ்திர நிபுணர்கள், காரண–காரியங்களை அலசி ஆராய்பவர்கள், பா இனங்கள், புராணங்கள் அறிந்த வேதவிற்பன்னர்களான இருபிறப்பாளர்கள், ரதபந்தம் (தேரில் கொடி முதல் சக்கரம் வரை படிப்படியாக வர்ணிக்கும் முறை) போன்ற சித்திரப்பாக்களை எழுதக் கூடியவர்கள், வாழ்க்கை நெறிமுறைகளைக் கூறும் நூல்களைக் கற்றறிந்தவர்கள், இசை–நாட்டியக் கலைஞர்கள், பல்கலை வித்தகர்கள், உபநிடதங்களின் ஆழமான பொருளை எடுத்துரைக்க வல்லவர்கள் ஆகிய எல்லோரையும் ஓர் இடத்தில் கூட்டி, பாடகர்கள் இருவரையும் ஆசனத்தில் அமர வைத்தார், இராகவன். (4–10)

எல்லா முனிவர்களும், பேராற்றல் பொருந்திய மன்னர்களும், அவ்விரு பாடகர்களையும் மன்னர் இராமனையும் கண்களால் பருகி விடுபவர்கள்போல் பார்த்து, எல்லோரையும் நோட்டம்விட்டு, ஒருவருக்கொருவர் பின்வருமாறு பேசிக் கொண்டார்கள்— (11)

''இருவரும், இராமனுடைய தோற்றத்தையே கொண்டிருக்கிறார்கள் – பிம்பத்திலிருந்து பிரதிபிம்பம் தோன்றுவதைப் போல. இருவரும் சடாமகுடம் இல்லாமலும் மரவுரி தரிக்காமலும் இருந்தால், இராமனுக்கும் இந்தப் பாடகர்களுக்குமிடையே எந்த வேற்றுமையையும் நாம் காண்கிலோம்.'' (12)

மக்கள், கேட்பவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்படி, இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போதே, முனிவரின் சீடர்களான அவ்விருவரும் பாடத் தொடங்கினார்கள். (13)

மானுடம் கடந்த இசைவெள்ளம் இனிமையாக அங்கே பாயத் தொடங்கியது. இசை ஆர்வம் உள்ள ரசிகர்கள் எவ்வளவு கேட்டும், 'போதும்' என்ற மனநிறைவை அடையவில்லை. (14)

(அவ்விருவரும்) நாரதரால் கூறப்பட்ட முதல் ஸர்க்கத்திலிருந்து இருபதாவது ஸர்க்கம் வரையில் பாடினார்கள். (15)

பிற்பகல் வந்ததும், சகோதர பாசமுடைய இராமன், இருபது ஸர்க்கங்களைக் கேட்டுவிட்டு, ''பரதா! மகத்தான பெருமைக்குரிய இவ்விருவருக்கும், பதினெட்டாயிரம் பொற்காசுகள் உடனே கொடு. மேலும், அவர்கள் என்ன கேட்டாலும் கொடுப்பாயாக'' என்று உத்தரவிட்டார். (16,17)

Koviloor Digital Library

த3தௌ3 ஶீக்4ரம் ஸ காகுத்ஸ்தே2ா ப3ாலயோர்வை ப்ருத2க்ப்ருத2க் ।
தீ3யமாநம் ஸுவர்ணம் து நாக்3ருஹ்ணீதாம் குஶீலவௌ ॥ (18)

ஊசதுஶ்ச மஹாத்மாநௌ கிமநேநேதி விஸ்மிதௌ ।
வந்யேந ப2லமூலேந நிரதௌ வநவாஸிநௌ ॥
ஸுவர்ணேந ஹிரண்யேந கிம் கரிஷ்யாவஹே வநே ॥ (19)

தத2ா தயோ: ப்ரப்3ருவதோ: குதூஹலஸமந்விதா: ।
ஶ்ரோதாரஶ்சைவ ராமஶ்ச ஸர்வ ஏவ ஸுவிஸ்மிதா: ॥ (20)

தஸ்ய சைவாக3மம் ராம: காவ்யஸ்ய ஶ்ரோதுமுத்ஸுக: ।
பப்ரச்ச2 தௌ மஹாதேஜாஸ்தாவுபௌ4 முநித3ாரகௌ ॥ (21)

கிம்ப்ரமாணமித3ம் காவ்யம் கா ப்ரதிஷ்ட2ா மஹாத்மந: ।
கர்தா காவ்யஸ்ய மஹத: க்வ சாஸௌ முநிபுங்க3வ: ॥ (22)

ப்ருச்ச2ந்தம் ராக4வம் வாக்யமூசதுர்முநித3ாரகௌ ।
வால்மீகிர்ப4க3வாந் கர்தா ஸம்ப்ராப்தோ யக்ஞஸம்வித4ாம் ॥
யேநேத3ம் சரிதம் துப்4யமஶேஷம் ஸம்ப்ரத3ர்ஶிதம் ॥ (23)

ஸம்நிப3த்3த4ம் ஹி ஶ்லோகாநாம் சதுர்விம்ஶத்ஸஹஸ்ரகம் ।
உபாக்2யாநஶதம் சைவ ப4ார்க3வேண தபஸ்விநா ॥ (24)

ஆதி3ப்ரப்4ருதி வை ராஜந் பஞ்ச ஸர்க3ஶதாநி ச ।
காண்ட3ாநி ஷட் க்ருதாநீஹ ஸோத்தராணி மஹாத்மநா ॥ (25)

க்ருதாநி கு3ருணாஸ்மாகம்ருஷிணா சரிதம் தவ ।
ப்ரதிஷ்ட2ா ஜீவிதம் யாவத்தாவத் ஸர்வஸ்ய வர்ததே ॥ (26)

யதி3 பு3த்3தி4: க்ருதா ராஜஞ்ஶ்ரவணாய மஹாரத2 ।
கர்மாந்தரே க்ஷணீபூ4தஸ்தச்ச்2ருணுஷ்வ ஸஹாநுஜ: ॥ (27)

ப3ாட4மித்யப்3ரவீத்3ராமஸ்தௌ சாநுக்ஞாப்ய ராக4வம் ।
ப்ரஹ்ருஷ்டௌ ஜக்3மது: ஸ்த2ாநம் யத்ராஸ்தே முநிபுங்க3வ: ॥ (28)

ராமோऽபி முநிபி4: ஸார்த4ம் பார்தி2வைஶ்ச மஹாத்மபி4: ।
ஶ்ருத்வா தத்3கீ3திமாது4ர்யம் கர்மஶாலாமுபாக3மத் ॥ (29)

ஶுஶ்ராவ தத்தாலலயோபபந்நம் ஸர்க3ாந்விதம் ஸுஸ்வரஶப்3த3யுக்தம் ।
தந்த்ரீலயவ்யஞ்ஜநயோக3யுக்தம் குஶீலவாப்4யாம் பரிகீ3யமாநம் ॥ (30)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 சதுர்நவதிதம: ஸர்க3: ॥

Koviloor Digital Library

பரதன், அவ்விரு சிறுவர்களுக்கும் தனித்தனியே பொற்காசுகள் வழங்கினார். ஆனால், குச–லவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர். (18)

வியப்படைந்த அவ்விருவரும், ''காட்டில் கிடைக்கும் கனி–கிழங்குகளைப் புசித்துக் கொண்டு வாழும் நாங்கள், தங்கம்–வெள்ளியை வைத்துக்கொண்டு என்ன செய்வோம்?'' என்று கூறினார்கள். (19)

அவர்கள் இருவரும் இவ்வாறு பேசியதைக் கேட்ட மக்கள் எல்லோரும், இராமனும்கூட மனம் பூரித்து வியப்படைந்தார்கள். (20)

அந்தக் காவியம் எங்கிருந்து கிடைத்தது என்றறிய விருப்பம் கொண்ட இராமன், முனிவரின் சீடர்களும் மகாதேஜஸ்விகளுமான அவர்களைப் பார்த்துக் கேட்டார்— (21)

''இந்த மகாகாவியத்தில் பாடல்கள் எண்ணிக்கை எவ்வளவு? இதை எழுதிய பெருமகனார் எங்கே இருக்கிறார்? இந்த மாபெரும் இலக்கியத்தை எழுதிய முனிவர் யார்? இப்போது எங்கே இருக்கிறார்?'' (22)

முனிவரின் சீடர்களான அவ்விருவரும், மேற்கண்டவாறு கேள்விகள் கேட்ட இராமனைப் பார்த்து, ''தங்களுடைய வரலாறு முழுவதையும் எடுத்துக் கூறும் இந்த மகாகாவியத்தை எழுதியவர், பகவான் வால்மீகி. தற்சமயம், இந்த வேள்வியைப் பார்ப்பதற்காக இங்கே வந்திருக்கிறார்'' என்றார்கள். (23)

''மாபெரும் தவசியான அவரால் இயற்றப்பட்ட, இந்தக் காவியத்தில் இருபத்து நான்காயிரம் சுலோகங்கள் உள்ளன. நூறு உபகதைகளும் இருக்கின்றன. (24)

மன்னரே! தொடக்கத்திலிருந்து ஐநூறு ஸர்க்கங்களும் ஆறு காண்டங்களும், பின்னர் உத்தர காண்டமும் மகாத்மா வால்மீகியால் எழுதப்பட்டன. (25)

எங்கள் ஆசார்யரான முனிவரால், தங்கள் வரலாறு முழுவதும் எழுதப்பட்டிருக்கிறது. இந்தக் காவியத்தில் தங்கள் வாழ்க்கையின் இறுதி வரையிலான செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. (26)

மாவீரரே! மன்னரே! இதைக் கேட்பதற்கு விருப்பம் இருக்குமேயானால், வேள்விச் சடங்குகளுக்கிடையே இடைவேளையில், தங்கள் சகோதரர்களுடன்கூட சுகமாக வீற்றிருந்து கேளுங்கள்.'' (27)

''அப்படியே செய்யலாம்'' என்று கூறி, அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பினார். அவ்விருவரும் மனம் களித்தவர்களாக முனிவர் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார்கள். (28)

இனிமையான இசையைக் கேட்டு மகிழ்ந்த இராமன், முனிவர்களும் சிற்றரசர்களும் புடைசூழ வேள்விச்சாலைக்குப் புறப்பட்டுச் சென்றார். (29)

இவ்வாறு, அந்த முதல் நாளன்று, பல ஸர்க்கங்களைச் செவிக்கினிய ஒலியுடனும் சொற்கட்டுக்களுடனும் நிறைந்து, தாளம்–லயம் இழைய, வீணையின் ஒலியுடன் கலந்து வெளிப்போந்த காவிய இசையை, இராமன் கேட்டு மகிழ்ந்தார். (30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
தொண்ணூற்று நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

Koviloor Digital Library

பஞ்சநவதிதம: ஸர்க$_3$:

வால்மீகிதூ$_3$தப்ரேஷணம்

ராமோ ப$_3$ஹூந்யஹாந்யேவம் தத்$_3$கீ$_3$தம் பரமம் ஶுப$_4$ம் ।
ஶுஶ்ராவ முநிபி$_4$: ஸார்த$_4$ம் பார்தி$_2$வை: ஸஹ வாநரை: ॥ (1)

தஸ்மிந் கீ$_3$தே து விஜ்ஞாய ஸீதாபுத்ரௌ குஶீலவௌ ।
தஸ்யா: பரிஷதோ$_3$ மத்$_4$யே ராமோ வசநமப்$_3$ரவீத் ॥ (2)

தூ$_3$தாஞ்ஶுத்$_3$த$_4$ஸமாசாராநாஹூயாத்மமநீஷயா ।
மத்$_3$வசோ ப்$_3$ரூத க$_3$ச்ச$_2$த்$_4$வமிதோ ப$_4$க$_3$வதோऽந்திகம் ॥ (3)

யதி$_3$ ஶுத்$_3$த$_4$ஸமாசாரா யதி$_3$ வா வீதகல்மஷா ।
கரோத்விஹாத்மந: ஶுத்$_3$தி$_4$மநுமாந்ய மஹாமுநிம் ॥ (4)

ச$_2$ந்த$_3$ம் முநேஶ்ச விஜ்ஞாய ஸீதாயாஶ்ச மநோக$_3$தம் ।
ப்ரத்யயம் தா$_3$துகாமாயாஸ்தத: ஶம்ஸத மே லகு$_4$ ॥ (5)

ஶ்வ: ப்ரபா$_4$தே து ஶபத$_2$ம் மைதி$_2$லீ ஜநகாத்மஜா ।
கரோது பரிஷந்மத்$_4$யே ஶோத$_4$நார்த$_2$ம் மமைவ ச ॥ (6)

ஶ்ருத்வா து ராக$_4$வஸ்யைதத்$_3$வச: பரமமத்$_3$பு$_4$தம் ।
தூ$_3$தா: ஸம்ப்ரயயுர்வாடம் யத்ராஸ்தே முநிபுங்க$_3$வ: ॥ (7)

தே ப்ரணம்ய மஹாத்மாநம் ஜ்வலந்தமமிதப்ரப$_4$ம் ।
ஊசுஸ்தே ராமவாக்யாநி ம்ருதூ$_3$நி மது$_4$ராணி ச ॥ (8)

தேஷாம் தத்$_3$வ்யாஹ்ருதம் ஶ்ருத்வா ராமஸ்ய ச மநோக$_3$தம் ।
விஜ்ஞாய ஸுமஹாதேஜா முநிர்வாக்யமதா$_2$ப்$_3$ரவீத் ॥ (9)

ஏவம் ப$_4$வது ப$_4$த்$_3$ரம் வோ யதா$_2$ வத$_3$தி ராக$_4$வ: ।
ததா$_2$ கரிஷ்யதே ஸீதா தை$_3$வதம் ஹி பதி: ஸ்த்ரியா: ॥ (10)

ததோ$_2$க்தா முநிநா ஸர்வே ராமதூ$_3$தா மஹௌஜஸம் ।
ப்ரத்யேத்ய ராக$_4$வம் க்ஷிப்ரம் முநிவாக்யம் ப$_3$பா$_4$ஷிரே ॥ (11)

தத: ப்ரஹ்ருஷ்ட: காகுத்ஸ்த$_2$: ஶ்ருத்வா வாக்யம் மஹாத்மந: ।
ருஷீம்ஸ்தத்ர ஸமேதாம்ஶ்ச ராஜ்ஞஶ்சைவாப்$_4$யபா$_4$ஷத ॥ (12)

ப$_4$க$_3$வந்த: ஸஶிஷ்யா வை ஸாநுகா$_3$ஶ்ச நராதி$_4$பா: ।
பஶ்யந்து ஸீதாஶபத$_2$ம் யஶ்சைவாந்யோऽபி காங்க்ஷதே ॥ (13)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ராக$_4$வஸ்ய மஹாத்மந: ।
ஸர்வேஷாம்ருஷிமுக்$_2$யாநாம் ஸாது$_4$வாதோ$_3$ மஹாநபூ$_4$த் ॥ (14)

ராஜாநஶ்ச மஹாத்மாநம் ப்ரஶம்ஸந்தி ஸ்ம ராக$_4$வம் ।
உபபந்நம் நரஶ்ரேஷ்ட$_2$ த்வய்யேவ பு$_4$வி நாந்யத: ॥ (15)

Koviloor Digital Library

ஸர்க்கம் : தொண்ணூற்றைந்து

வால்மீகியிடம் தூதர் வருகை

இவ்வாறு, இராமபிரான், முனிவர்கள்—மன்னர்கள்—வானரர்களோடுகூட, அநேக நாட்கள் வரை உத்தமமான இராமாயண இசைப்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தார். (1)

இசையாக வழங்கப்பட்ட அந்த வரலாற்றிலிருந்து குச—லவர்கள், சீதையின் புதல்வர்கள் என்பதை அறிந்து கொண்டு, இராமன் அந்த அவையில் (பின்வருமாறு) கூறினார். (2)

நல்லொழுக்கமுடைய தூதர்களை அழைத்து, தன்னுடைய அறிவினால் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்துவிட்டு, ''தூதர்களே! பகவான் வால்மீகி இருக்குமிடம் சென்று, நான் சொல்லப் போகும் செய்தியைக் கூறுங்கள்'' என்றார். (3)

''சீதை தூய நடத்தையுடையவள்; எவ்விதப் பாவமும் செய்யாதவள் – என்றால், மாமுனிவராகிய தங்கள் அனுமதியைப் பெற்று, இங்கு வந்து மக்கள் கூடியிருக்கும் இந்த சபையில், தன் தூய்மையை நிருபிக்கட்டும். (4)

(சீதை) இங்கே வந்து தன் தூய்மையை நிருபிக்கத் தயாராக இருக்கிறாளா? என்பது குறித்த, முனிவருடைய மற்றும் சீதையினுடைய எண்ணத்தை, உடனே எனக்குத் தெரிவியுங்கள். (5)

ஜனகன் புதல்வியான சீதை, நாளைக் காலை இந்த சபா மண்டபத்திற்கு வந்து, அவள் மீதும் என் மீதும் சுமத்தப்பட்டுள்ள களங்கத்தைப் போக்க வேண்டும்.'' (6)

புதுமையான இந்த உரையை இராமனிடமிருந்து கேட்ட தூதர்கள், வேள்விச் சாலையிலிருந்து புறப்பட்டு, முனிவர் இருந்த இடத்திற்குச் சென்றார்கள். (7)

எல்லையற்ற ஒளியுடன் பிரகாசிக்கும் மகாத்மா வால்மீகியை வணங்கிவிட்டு, இராமன் கூறியனுப்பிய செய்தியை, இனிய மென்சொற்களால் விண்ணப்பித்துக் கொண்டார்கள். (8)

அவர்கள் சொற்களிலிருந்து இராமனுடைய மனவோட்டத்தைப் புரிந்து கொண்ட வால்மீகி, பின்வருமாறு கூறினார்— (9)

''இராமன் எப்படிச் சொல்கிறாரோ, அப்படியே ஆகட்டும். அவர் சொல்லியபடியே சீதை செய்வாள். ஏனென்றால், பெண்களுக்குக் கணவர்தானே கண்கண்ட தெய்வம்?'' (10)

மாவீரர்களான இராம தூதர்கள் அனைவரும் முனிவர் கூறியதைக் கேட்ட பின்னர், உடனே திரும்பி வந்து, முனிவர் கூறியதைத் தெரிவித்துக் கொண்டார்கள். (11)

மகாத்மா வால்மீகி கூறியனுப்பியதைக் கேட்ட இராமன் மனமகிழ்ந்து, அங்கு கூடியிருந்த முனிவர்களையும் அரசர்களையும் பார்த்துக் கூறினார்— (12)

''வணக்கத்திற்குரிய முனிவர்களாகிய நீங்கள் தத்தம் சீடர்களுடனும், அரசர்கள் தத்தம் பரிவாரங்களுடனும் வாருங்கள். அத்துடன், சீதையின் சபதத்தைக் கேட்க விரும்பும் மற்றவர்களும் இங்கே வந்து கூடுவார்களாக.'' (13)

இராமனுடைய சொற்களைக் கேட்ட முனிவர்கள், 'அதுவே சரி' என்று ஒரு மனதாக இசைவுக்குரல் கொடுத்தார்கள். (14)

மகாத்மாக்களான அரசர்கள் இராமனைப் புகழ்ந்து, ''மனிதருள் மாணிக்கமே! இவ்வுலகில், இவ்வளவு கம்பீரமாகப் பேசுவதற்குத் தங்களைத் தவிர வேறு எவராலும் முடியாது!'' என்றார்கள். (15)

Koviloor Digital Library

ஏவம் விநிஶ்சயம் க்ருத்வா ஶ்வோபூ$_4$த இதி ராக$_4$வ: ।
விஸர்ஜயாமாஸ தத$_3$ா ஸர்வாம்ஸ்தாஞ்ஶத்ருஸூத$_3$ந: ॥ (16)

இதி ஸம்ப்ரவிசார்ய ராஜஸிம்ஹ: ஶ்வோபூ$_4$தே ஶபத$_2$ஸ்ய நிஶ்சயம் வை ।
விஸஸர்ஜ முநீந்ந்ருபாம்ஶ்ச ஸர்வாந் ஸ மஹாத்மா மஹதோ மஹாநுப$_4$ாவ: ॥ (17)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ பஞ்சநவதிதம: ஸர்க$_3$: ॥

ஷண்ணவதிதம: ஸர்க$_3$:

வால்மீகிப்ரத்யயத$_3$ாநம்

தஸ்யாம் ரஜந்யாம் வ்யுஷ்டாயாம் யக்ஞவாடக$_3$தோ ந்ருப: ।
ருஷீந் ஸர்வாந் மஹாதேஜா: ஶப்$_3$த$_3$ாபயதி ராக$_4$வ: ॥ (1)

வஸிஷ்டே$_2$ா வாமதே$_3$வஶ்ச ஜாப$_3$ாலிரத$_2$ காஶ்யப: ।
விஶ்வாமித்ரோ தீ$_3$ர்க$_4$தபா து$_3$ர்வாஸாஶ்ச மஹாதபா: ॥ (2)

புலஸ்த்யோऽபி தத$_2$ா ஶக்திர்ப$_4$ார்க$_3$வஶ்சைவ வாமந: ।
மார்கண்டே$_3$யஶ்ச தீ$_3$ர்க$_4$ாயுர்மௌத்$_3$க$_3$ல்யஶ்ச மஹாயஶா: ॥ (3)

க$_3$ர்க$_3$ஶ்ச ச்யவநஶ்சைவ ஶதாநந்த$_3$ஶ்ச த$_4$ர்மவித் ।
ப$_4$ரத்$_3$வாஜஶ்ச தேஜஸ்வீ ஹ்யக்$_3$நிபுத்ரஶ்ச ஸுப்ரப$_4$: ॥ (4)

நாரத$_3$: பர்வதஶ்சைவ கௌ$_3$தமஶ்ச மஹாயஶா: ।
காத்யாயந: ஸுயக்ஞஶ்ச ஹ்யக$_3$ஸ்த்யஸ்தபஸாம் நிதி$_4$: ॥ (5)

ஏதே சாந்யே ச பஹவோ முநய: ஸம்ஶிதவ்ரதா: ।
கௌதூஹல ஸமாவிஷ்டா ஸர்வ ஏவ ஸமாகதா: ॥ (6)

ராக்ஷஸாஶ்ச மஹாவீர்யா வாநராஶ்ச மஹாப$_3$லா: ।
ஸர்வ ஏவ ஸமாஜக்$_3$முர்மஹாத்மாந: குதூஹலாத் ॥ (7)

க்ஷத்ரியா யே ச ஶூத்$_3$ராஶ்ச வைஶ்யாஶ்சைவ ஸஹஸ்ரஶ: ।
நாநாதே$_3$ஶக$_3$தாஶ்சைவ ப்$_3$ராஹ்மணா: ஸம்ஶிதவ்ரதா: ॥ (8)

க்ஞாநநிஷ்ட$_2$ா: கர்மநிஷ்ட$_2$ா யோக$_3$நிஷ்ட$_2$ாஸ்தத$_2$ாபரே ।
ஸீதாஶபத$_2$வீக்ஷார்த$_2$ம் ஸர்வ ஏவ ஸமாக$_3$தா: ॥ (9)

தத$_3$ா ஸமாக$_3$தம் ஸர்வமஶ்மபூ$_4$தமிவாசலம் ।
ஶ்ருத்வா முநிவரஸ்தூர்ணம் ஸஸீத: ஸமுபாக$_3$மத் ॥ (10)

தம்ருஷிம் ப்ருஷ்ட$_2$த: ஸீதா த்வந்வக$_3$ச்ச$_2$த$_3$வாங்முகீ$_2$ ।
க்ருதாஞ்ஜலிர்ப$_3$ாஷ்பக$_3$லா க்ருத்வா ராமம் மநோக$_3$தம் ॥ (11)

த்$_3$ருஷ்ட்வா ஶ்ருதிமிவாயாந்தீம் ப்$_3$ரஹ்மாணமநுக$_3$ாமிநீம் ।
வால்மீகே: ப்ருஷ்ட$_2$த: ஸீதாம் ஸாது$_4$வாதே$_3$ா மஹாநபூ$_4$த் ॥ (12)

Koviloor Digital Library

இவ்வாறு, மறுநாள் சீதை சபதம் செய்வாள் என்பதை உறுதியாக அறிவித்துவிட்டு, எதிரிகளை அடக்கும் இராமன், அவர்களுக்கு விடைகொடுத்து அனுப்பினார். (16)

சிங்கம் போன்ற வலிமைமிக்க இராமன், மறுநாள் சீதை சபதம் செய்வாள் என்பதை நிச்சயப்படுத்தி, மகான்களான முனிவர்களையும் அரசர்களையும் அவரவர் இருப்பிடத்திற்கு அனுப்பி வைத்தார். (17)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
தொண்ணூற்றைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றாறு

வால்மீகியின் சாட்சியம்

அந்த இரவு கழிந்து பொழுது புலர்ந்ததும், வேள்விச் சாலைக்கு வந்த மன்னர் இராகவன் எல்லா முனிவர்களையும் அழைப்பித்தார். (1)

வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், நெடுங்காலம் தவம் செய்த விசுவாமித்திரர், பெருந்தவசியான துர்வாசர், புலஸ்தியர், சக்தி, பார்கவர், வாமனர், நீண்டகாலம் வாழும் மார்க்கண்டேயர், பெரும் புகழ்கொண்ட மௌத்கல்யர், கர்கர், சியவனர், அறம் அறிந்த சதாநந்தர், தவஒளி வீசும் பரத்வாஜர், ஒளிமிக்க அக்னிபுத்திரர், நாரதர், பர்வதர், புகழ்பெற்ற கௌதமர், காத்யாயனர், சுயக்ஞர், தவத்தின் பொக்கிஷம் போன்ற அகஸ்தியர் – இவர்களும், கட்டுப்பாட்டுடன் விரதங்களைக் கைக்கொள்ளும் மற்றும் பலரும், மிகுந்த ஆர்வத்துடன் கூடியிருந்த அனைவரும், மாவீரம் கொண்ட அரக்கர்கள் மற்றும் பெரும் பலசாலிகளான வானரர்கள் அனைவரும் மகாத்மா இராமன் அழைப்புக்கிணங்கி ஒன்று கூடினார்கள். (2–7)

அரச–வேளாள–வணிக மரபினர் ஆயிரக்கணக்கானோரும், பல நாடுகளிலிருந்தும் வந்திருந்த ஆசார நியமங்களைப் பின்பற்றும் அந்தணர்களும், ஞான–கர்ம–யோக நிஷ்டர்கள் மற்றும் பலரும், சீதை சபதம் கூறுவதைக் காண்பதற்காக, அங்கே வந்து கூடினார்கள். (8,9)

அங்கே கூடியிருந்தவர்கள் எல்லோரும் கல்லாகச் சமைந்து, மலைபோல் அசையாமல் வீற்றிருந்தார்கள். இதை (அனைவரும் கூடிவிட்டார்கள் என்பதை)க் கேட்டதும், மாமுனிவர் சீதையோடுகூட விரைவாக அவ்விடம் வந்து சேர்ந்தார். (10)

அந்த முனிவருக்கு(வால்மீகிக்கு)ப் பின்னால் கீழ்நோக்கித் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு, கைகளைக் கூப்பியவண்ணம், கண்களில் நீர்சோர வந்து கொண்டிருந்தாள், (சீதை). அவள் மனத்தில் இராமனையே சிந்தித்துக் கொண்டிருந்தாள். (11)

வால்மீகியின் பின்னால் வந்து கொண்டிருந்த சீதை, பிரும்மாவைப் பின்தொடர்ந்து வரும் வேதத்தைப் போல் விளங்கினாள். அவளைக் கண்டதும், ''ஆகா! என்ன பேறு பெற்றாள்!'' என்று எல்லோரும் நெகிழ்ச்சியுடன் கூறினார்கள். (12)

Koviloor Digital Library

ததோ ஹலஹலாஶப்$_3$த$_3$: ஸர்வேஷாமேவமாப$_3$பெ$_4$ள ।
து$_3$:க$_2$ஜந்மவிஶாலேந ஶோகேநாகுலிதாத்மநாம் ॥ (13)

ஸாது$_4$ ராமேதி கேசித்து ஸாது$_4$ ஸீதேதி சாபரே ।
உப$_4$ாவேவ ச தத்ராந்யே ப்ரேக்ஷகா: ஸம்ப்ரசுக்ருஶு: ॥ (14)

ததோ மத்$_4$யே ஜநௌக$_4$ஸ்ய ப்ரவிஶ்ய முநிபுங்க$_3$வ: ।
ஸீதாஸஹாயோ வால்மீகிரிதி ஹோவாச ராக$_4$வம் ॥ (15)

இயம் த$_3$ாஶரதே$_2$ ஸீதா ஸுவ்ரதா த$_4$ர்மசாரிணீ ।
அபவாத$_3$ாத் பரித்யக்தா மமாஶ்ரமஸமீபத: ॥ (16)

லோகாபவாத$_3$பீ$_4$தஸ்ய தவ ராம மஹாவ்ரத ।
ப்ரத்யயம் த$_3$ாஸ்யதே ஸீதா தம$_3$நுக்ஞாதுமர்ஹஸி ॥ (17)

இமௌ து ஜாநகீபுத்ராவுபெ$_4$ள ச யமஜாதகௌ ।
ஸுதௌ தவைவ து$_3$ர்த$_4$ர்ஷௌ ஸத்யமேதத்$_3$ப்$_3$ரவீமி தே ॥ (18)

ப்ரசேதஸோऽஹம் த$_3$ஶம: புத்ரோ ராக$_4$வநந்த$_3$ந ।
ந ஸ்மராம்யந்ருதம் வாக்யமிமௌ து தவ புத்ரகௌ ॥ (19)

ப$_3$ஹுவர்ஷஸஹஸ்ராணி தபஶ்சர்யா மயா க்ருதா ।
நோபாஶ்நீயாம் ப$_2$லம் தஸ்யா து$_3$ஷ்டேயம் யதி$_3$ மைதி$_2$லி ॥ (20)

மநஸா கர்மணா வாசா பூ$_4$தபூர்வம் ந கில்பி$_3$ஷம் ।
தஸ்யாஹம் ப$_2$லமஶ்நாமி அபாபா யதி$_3$ மைதி$_2$லீ ॥ (21)

அஹம் பஞ்சஸு பூ$_4$தேஷு மநஷ்ஷஷ்டே$_2$ஷு ராக$_4$வ ।
விசிந்த்ய ஸீதா ஶுத்$_3$தே$_4$தி ஜக்$_3$ராஹ வநநிர்ஜரே ॥ (22)

இயம் ஶுத்$_3$த$_4$ஸமாசாரா அபாபா பதிதே$_3$வதா ।
லோகாபவாத$_3$பீ$_4$தஸ்ய ப்ரத்யயம் தவ த$_3$ாஸ்யதி ॥ (23)

தஸ்மாதி$_3$யம் நரவராத்மஜ ஶுத்$_3$த$_4$ப$_4$ாவா
தி$_3$வ்யேந த்$_3$ருஷ்டிவிஷயேண தத$_3$ா ப்ரவிஷ்டா ।
லோகாபவாத$_3$கலுஷீக்ருதசேதஸா யா
த்யக்தா த்வயா ப்ரியதமா விதி$_3$தாபி ஶுத்$_3$த$_4$ா ॥ (24)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஷண்ணவதிதம: ஸர்க$_3$: ॥

ஸப்தநவதிதம: ஸர்க$_3$:

ஸீதாரஸாதலப்ரவேஶ:

வால்மீகிநைவமுக்தஸ்து ராக$_4$வ: ப்ரத்யப$_4$ாஷத ।
ப்ராஞ்ஜலிர்ஜக$_3$தோ மத்$_4$யே த்$_3$ருஷ்ட்வா தாம் வரவர்ணிநீம் ॥ (1)

Koviloor Digital Library

அந்தச் சமயம், இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த எல்லோருடைய உள்ளத்திலும் துக்கம் தோன்றி, சோகத்தால் தவித்தார்கள். அவர்களுடைய மனத்துயரத்தின் வெளிப்பாடாக 'அடாடா!' என்ற ஒலி எங்கும் எழுந்தது. (13)

'இராமன் பாக்கியசாலி!' என்றார்கள், சிலர்; வேறு சிலர், 'சீதை பாக்கியசாலி' என்றார்கள். பார்வையாளர்களான மற்றும் சிலர், 'இருவருமே பாக்கியசாலிகள்!' என்று கூவினார்கள். (14)

மக்களின் பெருங்கூட்டத்தினிடையே சீதையோடு சென்ற மாமுனிவர், இராகவனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— ''தசரத குமாரா! இந்த சீதை, நல்விரதங்களை அனுஷ்டிப்பவள்; அறநெறியில் செல்பவள். உங்களுக்கு ஏற்பட்ட பழிச்சொல்லிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக, என் ஆசிரமத்தின் அருகில் உங்களால் கைவிடப்பட்டவள். (15,16)

இராமா! பண்பாளரே! உலகத்தின் பழிச்சொல்லுக்குப் பயந்த உங்களுக்குத் தன் தூய்மையை நிலைநாட்டும் சாட்சியத்தைக் காட்டப் போகிறாள், சீதை. அதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும். இவ்விருவரும், சீதையின் புதல்வர்கள்; இரட்டையாகப் பிறந்தவர்கள்; உங்களுடைய குமாரர்கள்; எளிதில் வெல்ல முடியாதவர்கள். நான், உங்களிடம் சத்தியமாகக் கூறுகிறேன். (17,18)

ரகுநந்தனா! நான், பிரசேதஸின் பத்தாவது மைந்தன். நான், இதுவரை பொய் சொன்னதாக எனக்கு நினைவே இல்லை. (நான் பொய் பேசியதே இல்லை.) இவ்விருவரும் உங்கள் புத்திரர்கள்தான். (19)

நான் அநேக ஆயிரமாண்டுகள் தவம் செய்திருக்கிறேன். மைதிலி மாசுபடிந்தவள் என்பது உண்மையானால், என் நீண்ட தவத்தின் பலன் எனக்குக் கிடைக்காமல் போகட்டும். (20)

நான், மனம்–மொழி–மெய்களால் இதுவரை பாவம் செய்ததில்லை. சீதை குற்றமற்றவள் என்பது நிரூபிக்கப்பட்டால், நான் செய்துள்ள புண்ணியச் செயல்களின் பயனை அடைவேனாக. காட்டுப் பகுதியில் ஓர் அருவியின் அருகில் காணப்பட்ட இவளை, ஐந்து புலன்களாலும் ஆறாவதாக மனத்தினாலும் சோதித்துப் பார்த்து, 'சீதை தூய்மையானவள்' என்று உறுதியடைந்ததால், இவளை என் பொறுப்பில் வைத்துக் கொண்டேன். (21,22)

இவள் தூய நடவடிக்கை உடையவள்; பாவம் செய்யாதவள்; கணவனையே தெய்வமாகக் கொண்டவள். மக்களின் பழிச்சொல்லைக் கேட்டு அச்சமடைந்த உங்களுக்குத் தன் தூய்மையை நிரூபிக்கப் போகிறாள். (23)

மாமன்னரின் மைந்தரே! இவள் சுத்தமானவள் என்பதை என் ஞானக்கண்ணால் அறிந்து கொண்டேன். அதனால்தான், என் ஆசிரமத்திற்குள் அனுமதிக்கப்பட்டாள். மக்களின் பழிச்சொல்லைக் கேட்டதால் கலங்கிப் போன நீங்கள், எந்த மாதரசியைத் துறந்தீர்களோ, அவள் உங்களுக்கு மிகவும் பிரியமானவள். அவள் தூய்மையானவள் என்பது உங்களுக்கும் தெரியும்.'' (24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
தொண்ணூற்றாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றேழு

சீதை ரஸாதலம் புகுதல்

வால்மீகி இவ்வாறு கூறி முடித்தவுடன், குணவதியான சீதையின்மேல் பார்வையைச் செலுத்திவிட்டு, மக்களவையில் கைகளைக் கூப்பிக் கொண்டு இராமன் பதில் கூறினார்— (1)

Koviloor Digital Library

ஏவமேதந்மஹாப$_4$க$_3$ யத$_2$ா வத$_3$ஸி த$_4$ர்மவித் ।
ப்ரத்யயஸ்து மம ப்$_3$ரஹ்மந்ஸ்தவ வாக்யைரகல்மஷை: ॥ (2)

ப்ரத்யயஸ்து புரா வ்ருத்தோ வைதே$_3$ஹ்யா: ஸுரஸந்நிதெ$_4$ள ।
ஶபத$_2$ஸ்து க்ருதஸ்தத்ர தேந வேஶ்ம ப்ரவேஶிதா ॥ (3)

லோகாபவாதே$_3$ா ப$_3$லவாந் யேந த்யக்தா ஹி மைதி$_2$லீ ।
ஸேயம் லோகப$_4$யாத்$_3$ப்$_3$ரஹ்மந்நபாபேத்யபி$_4$ஜாநதா ॥ (4)

பரித்யக்த்தா மயா ஸீதா தத்$_3$ப$_4$வாந் க்ஷந்துமர்ஹதி ।
ஜாநாமி சேமௌ புத்ரௌ மே யமஜாதௌ குஶீலவௌ ॥ (5)

ஶுத்$_3$த$_4$ாயாம் ஜக$_3$தோ மத்$_4$யே மைதி$_2$ல்யாம் ப்ரீதிரஸ்து மே ।
அபி$_4$ப்ராயம் து விஜ்ஞாய ராமஸ்ய ஸுரஸத்தமா: ॥ (6)

ஸீதாயா: ஶபதே$_2$ தஸ்மிந் மஹேந்த்$_3$ராத்$_3$யா மஹௌஜஸ: ।
பிதாமஹம் புரஸ்க்ருத்ய ஸர்வ ஏவ ஸமாக$_3$தா: ॥ (7)

ஆதி$_3$த்யா வஸவோ ருத்$_3$ரா ஹ்யஶ்விநௌ ஸமருத்$_3$க$_3$ணா: ।
க$_3$ந்த$_4$ர்வாப்ஸரஸஶ்சைவ ஸர்வ ஏவ ஸமாக$_3$தா: ॥ (8)

ஸாத்$_4$யாஶ்ச விஶ்வே தே$_3$வாஶ்ச ஸர்வே ச பரமர்ஷய: ।
நாகா: ஸுபர்ணா: ஸித்தாஶ்ச தே ஸர்வே ஹ்ருஷ்டமாநஸா: ॥ (9)

ஸீதாஶபத$_2$ஸம்ப்$_4$ராந்தா: ஸர்வ ஏவ ஸமாக$_3$தா: ।
த்$_3$ருஷ்ட்வா தே$_3$வாந்ருஷீம்ஶ்சைவ ராக$_4$வ: புநரப்$_3$ரவீத் ॥ (10)

ப்ரத்யயோ மே ஸுரஶ்ரேஷ்ட$_2$ா ருஷிவாக்யைரகல்மஷை: ।
ஶுத்$_3$த$_4$ாயாம் ஜக$_3$தோ மத்$_4$யே வைதே$_3$ஹ்யாம் ப்ரீதிரஸ்து மே ॥ (11)

ததோ வாயு: ஶுப$_4$: புண்யோ தி$_3$வ்யக$_3$ந்தே$_4$ா மநோரம: ।
தஜ்ஜநௌக$_4$ம் ஸுரஶ்ரேஷ்டே$_2$ா ஹ்லாத$_3$யாமாஸ ஸர்வத: ॥ (12)

தத$_3$த்$_3$பு$_4$தமிவாசிந்த்யம் நிரைக்ஷந்த ஸமாக$_3$தா: ।
மாநவா: ஸர்வராஷ்ட்ரேப்$_4$ய: பூர்வம் க்ருதயுகே$_3$ யத$_2$ா ॥ (13)

ஸர்வாந் ஸமாக$_3$தாந் த்$_3$ருஷ்ட்வா ஸீதா காஷாயவாஸிநீ ।
அப்$_3$ரவீத் ப்ராஞ்ஜலிர்வாக்யமதே$_4$ாத்$_3$ருஷ்டிராவாங்முகீ$_2$ ॥ (14)

யத$_2$ாஹம் ராக$_4$வாத$_3$ந்யம் மநஸாபி ந சிந்தயே ।
தத$_2$ா மே மாத$_4$வீ தே$_3$வீ விவரம் த$_3$ாதுமர்ஹதி ॥ (15)

மநஸா கர்மணா வாசா யத$_2$ா ராமம் ஸமர்சயே ।
தத$_2$ா மே மாத$_4$வீ தே$_3$வீ விவரம் த$_3$ாதுமர்ஹதி ॥ (16)

யதை$_2$தத் ஸத்யமுக்தம் மே வேத்$_3$மி ராமாத் பரம் ந ச ।
தத$_2$ா மே மாத$_4$வீ தே$_3$வீ விவரம் த$_3$ாதுமர்ஹதி ॥ (17)

Koviloor Digital Library

''பேரருளாளரே! தாங்கள் அறம் அறிந்தவர். தாங்கள் கூறியதெல்லாம் உண்மையே. பிரும்மஞானியே! குற்றமற்ற சாட்சியமான தங்கள் சொற்களைக் கேட்டதும், சீதையின் தூய்மை பற்றி எனக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. (2)

முன்னொரு தடவை, தேவர்களுக்கு முன்னிலையில் சீதைத் தன் கற்பை நிரூபித்துச் சபதம் செய்தாள். அதனால்தான், (அவள் மாசற்றவள் என்பதை உறுதி செய்து கொண்டபின்,) என் மாளிகைக்குள் அவளை அனுமதித்தேன். (3)

மக்களின் குற்றச்சாட்டு என்பது மிகவும் வலிமையுடையது. அதனால்தான், நான் சீதையைத் துறந்தேன். பிரும்மஞானியே! இவள் குற்றமற்றவள் என்பது எனக்குத் தெரியும். என்றாலும், மக்கட்சமுதாயத்தின் வலிமைக்கு அஞ்சியே இவளைக் கைவிட நேர்ந்தது. (4)

அருளாளரே! நான் சீதையைத் துறந்தேன். (அதை மறுக்க முடியாது.) அதற்காகத் தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். குச–லவர்களான இந்த இரட்டையர், என் புதல்வர்கள் என்பதை அறிவேன். (5)

என்றாலும் மக்களுக்கு, சீதையின் தூய்மை நிரூபிக்கப்பட்டால்தான், மைதிலிடம் எனக்கு அன்பு உண்டாகும்.'' இராமனுடைய உள்ளக்கிடக்கையைப் புரிந்து கொண்ட இந்திரன் முதலான முக்கிய தேவதைகள் பிரும்மாவை முன்னிட்டுக் கொண்டு, சீதையின் சபதத்தைக் கேட்பதற்காக அங்கே வந்து கூடினார்கள். (6,7)

பன்னிரு ஆதித்யர்கள், அஷ்ட வசுக்கள், பதினோரு ருத்ரர்கள், அசுவினீ தேவர்கள், மருத்கணங்கள், கந்தர்வர்கள், அப்சரசுகள் ஆகிய எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். (8)

ஸாத்யர்கள், விசுவேதேவர்கள், எல்லா மாமுனிவர்கள், நாகர்கள், கருடர்கள், ஸித்தர்கள் ஆகிய எல்லோரும், சீதை சபதம் செய்யும் காட்சியைக் காணும் பதற்றத்துடன் மனக்களிப்புடன் வந்திருந்தார்கள். அப்போது தேவர்களையும் முனிவர்களையும் பார்த்து, இராமன் மறுபடியும் கூறினார்— (9,10)

''தேவோத்தமர்களே! முனிவர் வால்மீகியின் அப்பழுக்கற்ற சொற்களால் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. என்றாலும், மக்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கும்போது, வைதேகி, தன் தூய்மையை நிரூபித்தால் எனக்கு அதிக மகிழ்ச்சி ஏற்படும்.'' (11)

அப்போது, திவ்வியமான நறுமணம் நிறைந்தவரும், மனத்திற்கு ஆனந்தத்தைக் கொடுப்பவரும், உத்தம தேவதையுமான வாயு பகவான் மென்மையாக வீசி, அங்கு கூடியிருந்த எல்லோருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தார். (12)

முன்னர், கிருதயுகத்தில் நடப்பது போல், எல்லா நாடுகளிலிருந்தும் வந்திருந்த மக்கள், இதற்கு முன் நிகழ்ந்திராததும் எண்ணிப் பார்க்க முடியாததுமான, அந்தக் காட்சியைக் கண்ணால் கண்டார்கள். (13)

அப்போது, காவி உடை அணிந்த சீதை, அங்கே கூடியிருந்தவர்கள் முன்பாகக் கைகளைக் கூப்பிக்கொண்டு, தலைகுனிந்து, பார்வை கீழ்நோக்கியிருக்கக் கூறினாள்— (14)

''நான், பிரபு இராமனைத் தவிர வேறு எந்த ஆடவனையும் மனத்தால் சிந்தித்துக்கூடப் பார்த்ததில்லை என்பது சத்தியமானால், பூமாதேவி எனக்கு அடைக்கலம் தருவாளாக. (15)

நான் மனம்–மொழி–செயல்களால் இராமனையே போற்றி வந்தேன் என்பது உண்மையானால், பூமாதேவி எனக்கு அடைக்கலம் தருவாளாக. (16)

பகவான் இராமனைத் தவிர வேறு எந்த ஆடவனையும் நான் அறியேன் என்பது சத்தியமானால், பூமாதேவி எனக்கு அடைக்கலம் தருவாளாக.'' (17)

Koviloor Digital Library

தத2ா ஶபந்த்யாம் வைதே3ஹ்யாம் ப்ராது3ராஸீத்தத3்பு4தம் ।
பூ4தலாது3த்தி2தம் தி3வ்யம் ஸிம்ஹாஸநமநுத்தமம் ॥ (18)

த்4ரியமாணம் ஶிரோபி4ஸ்து நாகை3ரமிதவிக்ரமை: ।
தி3வ்யம் தி3வ்யேந வபுஷா தி3வ்யரத்நவிபூ4ஷிதை: ॥ (19)

தஸ்மிம்ஸ்து த4ரணீ தே3வீ பா3ஹுப்4யாம் க்3ருஹ்ய மைதி2லீம் ।
ஸ்வாக3தேநாபி4நந்த்3யைநாமாஸநே சோபவேஶயத் ॥ (20)

தாமாஸநக3தாம் த்3ருஷ்ட்வா ப்ரவிஶந்தீம் ரஸாதலம் ।
புஷ்பவ்ருஷ்டிரவிச்சி2ந்நா தி3வ்யா ஸீதாமவாகிரத் ॥ (21)

ஸாது4காரஶ்ச ஸுமஹாந் தே3வாநாம் ஸஹஸோத்தி2த: ।
ஸாது4 ஸாத்4விதி வை ஸீதே யஸ்யாஸ்தே ஶீலமீத்3ருஶம் ॥ (22)

ஏவம் ப3ஹுவித4ா வாசோ ஹ்யந்தரிக்ஷக3தா: ஸுரா: ।
வ்யாஜஹ்ருர்ஹ்ருஷ்டமநஸோ த்3ருஷ்ட்வா ஸீதாப்ரவேஶநம் ॥ (23)

யஜ்ஞவாடக3தாஶ்சாபி முநய: ஸர்வ ஏவ தே ।
ராஜாநஶ்ச நரவ்யாக்4ரா விஸ்மயாந்நோபரேமிரே ॥ (24)

அந்தரிக்ஷே ச பூ4மௌ ச ஸர்வே ஸ்த2ாவரஜங்க3மா: ।
தா3நவாஶ்ச மஹாகாயா: பாதாளே பந்நக2ாதி4பா: ॥ (25)

கேசித்3விநேது3: ஸம்ஹ்ருஷ்டா: கேசித்3த்4யாநபராயணா: ।
கேசித்3ராமம் நிரீக்ஷந்தே கேசித் ஸீதாமசேதநா: ॥ (26)

ஸீதாப்ரவேஶநம் த்3ருஷ்ட்வா தேஷாமாஸீத் ஸமாக3ம: ।
தந் முஹூர்தமிவாத்யர்த2ம் ஸமம் ஸம்மோஹிதம் ஜக3த் ॥ (27)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 ஸப்தநவதிதம: ஸர்க3: ॥

அஷ்டநவதிதம: ஸர்க3:

ராமகோபோபஶம:

ரஸாதலம் ப்ரவிஷ்டாயாம் வைதே3ஹ்யாம் ஸர்வவாநரா: ।
சுக்ருஶு: ஸாது4 ஸாத்4வீதி முநயோ ராமஸந்நிதௌ4 ॥ (1)

த3ண்ட3காஷ்ட2மவஷ்டப்4ய பா3ஷ்பவ்யாகுலிதேக்ஷண: ।
அவாக்ஶிரா தீ3நமநா ராமோ ஹ்யாஸீத் ஸுது3:கி2த: ॥ (2)

ஸ ருதி3த்வா சிரம் காலம் ப3ஹுஶோ பா3ஷ்பமுத்ஸ்ருஜந் ।
க்ரோத4ஶோகஸமாவிஷ்டோ ராமோ வசநமப்3ரவீத் ॥ (3)

Koviloor Digital Library

இவ்வாறு, வைதேகி சபதம் செய்து முடித்ததும், மிக அழகான, திவ்வியமான, விசாலமான ஒரு சிம்மாசனம் தரையிலிருந்து வெளிப்போந்தது. (18)

உயர்ந்த இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட, ஒப்பற்ற பலம் பொருந்திய நாகர்கள், தெய்விக உடல் பெற்று, தங்கள் தலைமேல் அதனைச் சுமந்து கொண்டிருந்தார்கள். (19)

சிம்மாசனத்தில் வீற்றிருந்த பூமாதேவி, தன் இரு கைகளாலும் மைதிலியை அணைத்து, வரவேற்கும் முறையில் பாராட்டுக் கூறி, அவளை ஆசனத்தில் அமர்த்திக் கொண்டாள். (20)

சிம்மாசனத்தில் அமர்ந்து, ரஸாதலத்திற்குச் செல்லும் சீதையை (தேவதைகள்) பார்த்தார்கள். சீதையின்மேல் வானத்திலிருந்து இடைவிடாது மலர்மாரி பொழிந்தது. (21)

தேவர்கள், ''ஆகா! என்ன பேறு பெற்றாள், சீதை!'' என்று வாழ்த்தினார்கள். ''அம்மா, சீதே! உன் குணம் எவ்வளவு போற்றத்தக்கது! நன்று... நன்று!'' என்று பாராட்டினார்கள். (22)

சீதை, ரஸாதலத்திற்குள் செல்வதை, ஆகாயத்தில் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்த தேவதைகள், இவ்வாறான பாராட்டு மொழிகளைக் கூறி மகிழ்ந்தார்கள். (23)

வேள்விச்சாலையில் வீற்றிருந்த முனிவர்களும் ஆற்றல்மிக்க அரசர்களும் அடைந்த வியப்புக்கு அளவேயில்லை. (24)

விண்ணிலும் மண்ணிலுமிருந்த எல்லா சராசரப் பிராணிகளும், பாதாளத்திலிருந்த பேருடல் கொண்ட தானவர்களும், நாகத் தலைவர்களும் ஆச்சரியம் அடைந்தார்கள். (25)

சிலர் மனக்களிப்புடன் குரல் கொடுத்தார்கள்; சிலர் செய்வதறியாது தியானத்தில் ஆழ்ந்து போனார்கள்; சிலர் கண்கொட்டாமல் இராமபிரானையே நோக்கினார்கள்; சிலர் உணர்விழந்து சீதையைப் பார்த்தார்கள். (26)

சீதை ரஸாதலத்திற்குள் செல்லும் காட்சியைக் கண்ட மக்கள் எல்லோரும் ஆனந்தம், சோகம் முதலான பற்பல உணர்வுகளை ஒன்றாகப் பெற்றார்கள். சிறிதுநேரத்திற்கு, அங்கு கூடியிருந்த மக்கள் அனைவரும் மயக்கத்தில் மூழ்கியதைப் போல் செயலற்றுப் போனார்கள். (27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
தொண்ணூற்றேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றெட்டு

இராமன் சாந்தம் அடைந்தார்!

வைதேகி ரஸாதலம் புகுந்தவுடன், இராமனின் அருகில் அமர்ந்திருந்த வானரர்களும் முனிவர்களும், ''ஆகா! சீதே! என்ன பேறு பெற்றாய்!'' என்று வாயார வாழ்த்தினார்கள். (1)

ஆனால், இராமனுடைய நிலை வேறாக இருந்தது. ஒரு கைத்தடியை ஊன்றி அதைப் பற்றுக்கோடாகக் கொண்டு (நின்ற நிலையில்) கண்களில் நீர் பெருக, தலைகுனிந்து, மனம் வெதும்பி மிகவும் துயரத்தை அடைந்தார், இராமன். (2)

வெகுநேரம் வரை கண்ணீர் பெருக்கி அழுதுவிட்டு, கோபமும் சோகமும் சேர்ந்த நிலையில் இராமன் (பின்வருமாறு) கூறினார்— (3)

Koviloor Digital Library

அபூ$_4$தபூர்வம் ஶோகம் மே மந: ஸ்ப்ரஷ்டுமிவேச்ச$_2$தி ।
பஶ்யதோ மே யதா$_2$ நஷ்டா ஸீதா ஶ்ரீரிவ ரூபிணீ ॥ (4)

ஸாத$_3$ர்ஶநம் புரா ஸீதா லங்காம் பாரே மஹோத$_3$தே$_4$: ।
ததஶ்சாபி மயாநீதா கிம் புநர்வஸுதா$_4$தலாத் ॥ (5)

வஸுதே$_4$ தே$_3$வி ப$_4$வதி ஸீதா நிர்யாத்யதாம் மம ।
த$_3$ர்ஶயிஷ்யாமி வா ரோஷம் யதா$_2$ மாமவக$_3$ச்ச$_2$ஸி ॥ (6)

காமம் ஶ்வஶ்ரூர்மமைவ த்வம் த்வத்ஸகாஶாத்$_3$தி$_4$ மைதி$_2$லீ ।
கர்ஷதா ஹலஹஸ்தேந ஜநகேநோத்$_3$த்$_4$ருதா புரா ॥ (7)

தஸ்மாந்நிர்யாத்யதாம் ஸீதா விவரம் வா ப்ரயச்ச$_2$ மே ।
பாதாளே நாகப்ருஷ்டே$_2$ வா வஸேயம் ஸஹிதஸ்தயா ॥ (8)

ஆநய த்வம் ஹி தாம் ஸீதாம் மத்தோऽஹம் மைதி$_2$லிக்ருதே ।
ந மே தா$_3$ஸ்யஸி சேத் ஸீதாம் யதா$_2$ரூபாம் மஹீதலே ॥ (9)

ஸபர்வதவநாம் க்ருத்ஸ்நாம் வித$_4$மிஷ்யாமி தே ஸ்தி$_2$திம் ।
நாஶயிஷ்யாம்யஹம் பூ$_4$மிம் ஸர்வமாபோ ப$_4$வத்விஹ ॥ (10)

ஏவம்ப்$_3$ருவாணே காகுத்ஸ்தே$_2$ க்ரோத$_4$ஶோகஸமந்விதே ।
ப்$_3$ரஹ்மா ஸுரக$_3$ணை: ஸார்த$_4$முவாச ரகு$_4$நந்த$_3$நம் ॥ (11)

ராம ராம ந ஸந்தாபம் கர்துமர்ஹஸி ஸுவ்ரத ।
ஸ்மர த்வம் பூர்வகம் பா$_4$வம் மந்த்ரம் சாமித்ரகர்ஶந ॥ (12)

ந க$_2$லு த்வாம் மஹாபா$_3$ஹோ ஸ்மாரயேயமநுத்தமம் ।
இமம் முஹூர்தம் து$_3$ர்த$_4$ர்ஷ ஸ்மர த்வம் ஜந்ம வைஷ்ணவம் ॥ (13)

ஸீதா ஹி விமலா ஸாத்$_4$வீ தவ பூர்வபராயணா ।
நாக$_3$லோகம் ஸுக$_2$ம் ப்ராயாத்த்வதா$_3$ஶ்ரயதபோப$_3$லாத் ॥ (14)

ஸ்வர்கே$_3$ தே ஸங்க$_3$மோ பூ$_4$யோ ப$_4$விஷ்யதி ந ஸம்ஶய: ।
அஸ்யாஸ்து பரிஷந்மத்$_4$யே யத்$_3$ப்$_3$ரவீமி நிபோ$_3$த$_4$ தத் ॥ (15)

ஏததே$_3$வ ஹி காவ்யம் தே காவ்யாநாமுத்தமம் ஶ்ருதம் ।
ஸர்வம் விஸ்தரதோ ராம வ்யாக்$_2$யாஸ்யதி ந ஸம்ஶய: ॥ (16)

ஜந்மப்ரப்$_4$ருதி தே வீர ஸுக$_2$து$_3$:கோ$_2$பஸேவநம் ।
ப$_4$விஷ்யது$_3$த்தரம் சேஹ ஸர்வம் வால்மீகிநா க்ருதம் ॥ (17)

ஆதி$_3$காவ்யமித$_3$ம் ராம த்வயி ஸர்வம் ப்ரதிஷ்டி$_2$தம் ।
ந ஹ்யந்யோऽர்ஹதி காவ்யாநாம் யஶோபா$_4$க்$_3$ராக$_4$வாத்$_3$ருதே ॥ (18)

Koviloor Digital Library

''என்னுடைய கண்களுக்கு எதிரிலேயே மகாலட்சுமியே உருவெடுத்து வந்தாற்போன்ற சீதை (பூமிக்குள் சென்று) மறைந்தாள் என்பதால், இதற்கு முன் அனுபவித்திராத வேதனையை, என் மனம் அடைகிறது. (4)

முன்னர், பெருங்கடலுக்கு அப்பால், ஒரு தடவை என் கண்ணிலிருந்து மறைந்து போனாள். (இராவணனால் களவாடிச் செல்லப்பட்டாள்.) கடந்து செல்ல முடியாத கடலையும் கடந்து சென்று, நான் அவளை மீட்டுக்கொண்டு வந்தேன் என்னும்போது, இதோ கண்ணுக்குத் தெரிகிற பூமியின் அடியிலிருந்து மீட்டுக் கொண்டு வரமாட்டேனா, என்ன? (5)

(இனி, பூமியை நோக்கிப் பேசுகிறார்—) அம்மா, பூமிப்பிராட்டியே! நீ வாழ்க! சீதையை எனக்குத் திரும்பக் கொடுத்துவிடு. நீ, என் வேண்டுகோளை அலட்சியப்படுத்தினால், நான் என் கோபத்தை வெளிக்காட்டுவேன். (6)

நீ என்னுடைய மாமியார் அல்லவா? முன்பு, ஜனகர், கலப்பை கொண்டு நிலத்தை உழுதபோது, உன்னிடமிருந்து தோன்றியவள் தானே, ஜானகி. அதனால், சீதையைத் திரும்பக் கொடுத்துவிடு. அல்லது, என்னையும் உன் மடியில் ஏற்றுக்கொள். ஏனென்றால், பாதாளமோ தேவலோகமோ? எதுவாக இருந்தாலும் நான் சீதையுடன் கூடவே வாழ விரும்புகிறேன். (7,8)

மைதிலியைக் காணாமல் நான் பித்தனாகிவிட்டேன். என்னுடைய சீதையை உடனே கொண்டு வா. பூதேவியே! அவள் பூமிக்குள் மறைந்தபோது எவ்வாறு இருந்தாளோ, அதேபோல சீதையை என்னிடம் கொடுக்காவிட்டால், உன் மீது நிலைத்திருக்கும் மலைகள், காடுகள் முதலியவைகளைப் பாழாக்கி விடுவேன்; பூமியை நான் அழித்து, எல்லா இடங்களையும் நீரில் மூழ்கடித்து விடுவேன்.'' (9,10)

கோபமும் சோகமும் கூடிக் கலந்து, இராமன் மேற்கண்டவாறு சொல்லிக் கொண்டிருக்கும்போது, தேவர்கள் கூட்டத்தோடு வந்த பிரும்மா, அவரிடம் பின்வருமாறு கூறினார்— (11)

''இராமனே! நீங்கள் வருத்தம் அடைய வேண்டாம். நல்விரதங்களை அனுஷ்டிப்பவரே! பகைவர்களை அழிப்பவரே! உங்களுடைய பழமையான உருவத்தையும், தேவர்களோடு செய்த ஆலோசனையையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். (12)

பெருந்தோளரே! ஒப்பற்ற உங்கள் அநாதி வடிவத்தை, நான் நினைவூட்டுவதாகக் கருத வேண்டாம். வெற்றி கொள்ள முடியாத மாவீரரே! இந்த நேரத்தில், தாங்கள் விஷ்ணுவின் அம்சமாகத் தோன்றியவர் என்பதை நினைத்துப் பாருங்கள். (13)

சீதை அப்பழுக்கற்றவர்; முதலிலிருந்தே தங்களைச் சார்ந்திருப்பவர்தானே? தங்களை அண்டியிருந்த பலத்தினால், சுகமாக நாகலோகம் போய்ச் சேர்ந்தார். (அதை, ஒரு காரணமாகக் கொண்டு, பரமபதம் போய்ச் சேர்ந்தார்.) (14)

தாங்கள், மீண்டும் அவரை வைகுண்டத்தில் சந்திப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்போது, இந்தப் பேரவையில் நான் கூறப்போவதை, தாங்கள் செவிகொடுத்துக் கேட்கவேண்டும். (15)

தங்களுடைய இந்த வரலாற்றுக் காவியம், இலக்கியங்களில் ஈடு–இணையற்றது. இராமா! தங்கள் வரலாறு முழுவதையும் விஸ்தாரமாகக் கூறுகிறது. (16)

வீரரே! தாங்கள் (தசரதன் புதல்வராகப்) பிறந்ததிலிருந்து அனுபவித்த சுக–துக்கங்கள் மற்றும் எதிர்காலத்தில் நடக்கப்போகும் (சீதை, ரஸாதலம் செல்லுதல் போன்ற) சம்பவங்கள் எல்லாம் வால்மீகியினால் கூறப்பட்டுள்ளன. இராமனே! இது, எல்லாவற்றுக்கும் முதன்மையான காவியம். இதில் காணப்படுவனவெல்லாம் தங்களையே பிடிமானமாகக் கொண்டுள்ளன. ரகுகுலத்தில் தோன்றிய தங்களைத் தவிர, வேறு யாரும் மகாகாவிய நாயகனாகும் தகுதி பெற்றாரில்லை. (17,18)

Koviloor Digital Library

ஶ்ருதம் தே பூர்வமேதத்$_3$தி$_4$ மயா ஸர்வம் ஸுரை: ஸஹ ।
தி$_3$வ்யமத்$_3$பு$_4$தரூபம் ச ஸத்யவாக்யமநாவ்ருதம் ॥ (19)

ஸ த்வம் புருஷஶார்தூ$_3$ல த$_4$ர்மேண ஸுஸமாஹித: ।
ஶேஷம் ப$_4$விஷ்யம் காகுத்ஸ்த$_2$ காவ்யம் ராமாயணம் ஶ்ருணு ॥ (20)

உத்தரம் நாம காவ்யஸ்ய ஶேஷமத்ர மஹாயஶ: ।
தச்ச்$_2$ருணுஷ்வ மஹாதேஜ ருஷிபி$_4$: ஸார்த$_4$முத்தமம் ॥ (21)

ந க$_2$ல்வந்யேந காகுத்ஸ்த$_2$ ஶ்ரோதவ்யமித$_3$முத்தமம் ।
பரமம் ருஷிணா வீர த்வயைவ ரகு$_4$நந்த$_3$ந ॥ (22)

ஏதாவது$_3$க்த்வா வசநம் ப்$_3$ரஹ்மா த்ரிபு$_4$வநேஶ்வர: ।
ஜகா$_3$ம த்ரிதி$_3$வம் தே$_3$வோ தே$_3$வை: ஸஹ ஸபா$_3$ந்த$_4$வை: ॥ (23)

யே ச தத்ர மஹாத்மாந ருஷயோ ப்$_3$ராஹ்மலௌகிகா: ।
ப்$_3$ரஹ்மணா ஸமநுக்ஞாதா ந்யவர்தந்த மஹௌஜஸ: ॥
உத்தரம் ஶ்ரோதுமநஸோ ப$_4$விஷ்யம் யச்ச ராக$_4$வே ॥ (24)

ததோ ராம: ஶுபா$_4$ம் வாணீம் தே$_3$வதே$_3$வேந பா$_4$ஷிதாம் ।
ஶ்ருத்வா பரமதேஜஸ்வீ வால்மீகிமித$_3$மப்$_3$ரவீத் ॥ (25)

பகவஞ்ஶ்ரோதுமநஸ ருஷயோ ப்$_3$ராஹ்மலௌகிகா: ।
ப$_4$விஷ்யது$_3$த்தரம் யந்மே ஶ்வோபூ$_4$தே ஸம்ப்ரவர்ததாம் ॥ (26)

ஏவம் விநிஶ்சயம் க்ருத்வா ஸம்ப்ரக்$_3$ருஹ்ய குஶீலவௌ ।
தம் ஜநௌக$_4$ம் விஸ்ருஜ்யாத$_2$ பர்ணஶாலாமுபாக$_3$மத் ॥
தாமேவ ஶோசத: ஸீதாம் ஸா வ்யதீயாய ஶர்வரீ ॥ (27)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ அஷ்டநவதிதம: ஸர்க$_3$: ॥

ஏகோநஶததம: ஸர்க$_3$:

கௌஸல்யாதி$_3$காலத$_4$ர்ம:

ரஜந்யாம் து ப்ரபா$_4$தாயாம் ஸமாநீய மஹாமுநீந் ।
கீ$_3$யதாமவிஶங்காப்$_4$யாம் ராம: புத்ராவுவாச ஹ ॥ (1)

தத: ஸமுபவிஷ்டேஷு ப்$_3$ரஹ்மர்ஷிஷு மஹாத்மஸு ।
ப$_4$விஷ்யது$_3$த்தரம் காவ்யம் ஜகா$_3$துஸ்தௌ குஶீலவௌ ॥ (2)

ப்ரவிஷ்டாயாம் து ஸீதாயாம் பூ$_4$தலம் ஸத்யஸம்பதா$_3$ ।
தஸ்யாவஸாநே யக்ஞஸ்ய ராம: பரமது$_3$ர்மநா: ॥ (3)

அபஶ்யமாநோ வைதே$_3$ஹீம் மேநே ஶூந்யமித$_3$ம் ஜகத் ।
ஶோகேந பரமாயஸ்தோ ந ஶாந்திம் மநஸாக$_3$மத் ॥ (4)

Koviloor Digital Library

இந்தக் காவியத்தை, தேவதைகளோடுகூட நான் முன்னரே கேட்டிருக்கிறேன். இது, தெய்விகமானது; அற்புதமானது. இதில், எந்த விஷயமும் மூடி மறைக்கப்படவில்லை; அனைத்தும் உண்மையே. (19)

புலிநிகர் ஆண்மையாளரே! அறவழியில் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, மீதியுள்ள இராமாயண காவியத்தைக் கேளுங்கள். இந்தக் காவியத்தின் எஞ்சிய பகுதி உத்தர காண்டம் என்று சொல்லப்படுகிறது. பெரும்புகழ் பெற்றவரே! மகாதேஜஸ்வியே! உத்தமமான அந்தப் பகுதியை முனிவர்களோடுகூடத் தாங்களும் கேளுங்கள். (20,21)

காகுத்தரே! உத்தமமான இந்தக் காவியத்தை, ராஜரிஷியான தாங்கள்தான் முதலில் கேட்க வேண்டும்; பிறர், பின்னர்கூடக் கேட்டுக் கொள்ளலாம்.'' (22)

மூன்று உலகங்களுக்கும் அதிபதியான பிரும்மா, இவ்வாறு கூறிவிட்டு, தேவர்களோடும் உற்றார்களோடும் விண்ணுலகம் சென்றார். (23)

பிரும்மலோகத்திலிருந்து அங்கு வந்திருந்த மகாத்மாக்களான முனிவர்கள், பிரும்மாவின் அனுமதி பெற்று, இராமனின் எதிர்காலம் பற்றிக் கூறும் உத்தர காண்டத்தைக் கேட்பதற்காக (பிரும்மலோகம் போகாமலே) திரும்பி வந்தனர். (24)

தேவதேவரான பிரும்மா புகன்ற மங்களமான உரையைக் கேட்ட இராமன், தவ ஆற்றல் மிக்கவரான வால்மீகியைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (25)

''ஐயனே! பிரும்மலோகவாசிகளான முனிவர்கள், என்னுடைய எதிர்கால நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கும் உத்தர காண்டத்தைக் கேட்க விரும்புகிறார்கள். எனவே, அதனை நாளைக் காலையில் தொடங்கலாம்.'' (26)

இவ்வாறு, தீர்மானம் செய்துவிட்டு, குச–லவர்களை உடன் அழைத்துக் கொண்டு, கூடியிருந்த மக்களுக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டு (வேள்வி நிறைவடைந்துவிட்டதால்), வால்மீகி தன் குடிலைச் சென்றடைந்தார். உத்தமியான சீதையைப் பற்றி நினைத்துக் கொண்டே இரவைக் கழித்தார். இராமன். (27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
தொண்ணூற்றெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றொன்பது

கௌசல்யை முதலியோரின் இறுதிக்காலம்

இரவு கழிந்து பகல் வந்ததும், இராமன் எல்லா மாமுனிவர்களையும் ஓரிடத்தில் கூடவைத்து, தன் குமாரர்களைப் பார்த்து, ''நீங்கள் மனச்சஞ்சலமில்லாமல், இராமாயணத்தின் எஞ்சியுள்ள பகுதியைப் பாடுங்கள்'' என்று கூறினார். (1)

மகாத்மாக்களான பிரும்மரிஷிகள் சௌகரியமாக அமர்ந்து கொண்ட பிறகு, இராமனின் எதிர்காலத்தை எடுத்துரைக்கும் உத்தர காண்டத்தை, குச–லவர்கள் இசையுடன் பாடத் தொடங்கினார்கள். (2)

தன்னுடைய சத்திய பலத்தினால், பூமிக்குள் சீதை சென்றுவிட்ட பிறகு, வேள்வி நிறைவடைந்தும்கூட மிகவும் துக்கத்திலிருந்த இராமன், சீதையைக் காணாததால் இந்த உலகமே சூன்யமாகி விட்டதாக எண்ணினார். மிகுந்த வருத்தத்தின் தாக்குதலால், மனம் அமைதியை அடையவில்லை. (3,4)

Koviloor Digital Library

விஸ்ருஜ்ய பார்தி$_2$வாந் ஸர்வாந்ருக்ஷவாநரராக்ஷஸாந் ।
ஜநௌக$_4$ம் விப்ரமுக்$_2$யாநாம் வித்தபூர்வம் விஸ்ருஜ்ய ச ॥
ஏவம் ஸமாப்ய யக்ஞம் து விதி$_4$வத் ஸ து ராக$_4$வ: ॥ (5)

ததோ விஸ்ருஜ்ய தாந் ஸர்வாந் ராமோ ராஜீவலோசந: ।
ஹ்ருதி$_3$ க்ருத்வா தத$_3$ா ஸீதாமயோத்$_4$யாம் ப்ரவிவேஶ ஹ ॥ (6)

இஷ்டயக்ஞோ நரபதி: புத்ரத்$_3$வயஸமந்வித: ।
ந ஸீதாயா: பராம் ப$_4$ார்யாம் வவ்ரே ஸ ரகு$_4$நந்த$_3$ந: ॥
யக்ஞே யக்ஞே ச பத்ந்யர்த$_2$ம் ஜாநகீ காஞ்சநீ ப$_4$வத் ॥ (7)

த$_3$ஶ வர்ஷஸஹஸ்ராணி வாஜிமேத$_4$ாநத$_2$ாகரோத் ।
வாஜபேயாந் த$_3$ஶகு$_3$ணாம்ஸ்தத$_2$ா ப$_3$ஹுஸுவர்ணகாந் ॥ (8)

அக்$_3$நிஷ்டோமாதிராத்ராப்$_4$யாம் கோ$_3$ஸவைஶ்ச மஹாத$_4$நை: ।
ஈஜே க்ரதுபி$_4$ரந்யைஶ்ச ஸ ஸ்ரீமாநாப்தத$_3$க்ஷிணை: ॥ (9)

ஏவம் ஸ கால: ஸுமஹாந் ராஜ்யஸ்த$_2$ஸ்ய மஹாத்மந: ।
த$_4$ர்மே ப்ரயதமாநஸ்ய வ்யதீயாத்$_3$ராக$_4$வஸ்ய து ॥ (10)

அநுரஞ்ஜந்தி ராஜாநமஹந்யஹநி ராக$_4$வம் ।
ருக்ஷவாநரரக்ஷாம்ஸி ஸ்தி$_2$தா ராமஸ்ய ஶாஸநே ॥ (11)

காலே வர்ஷதி பர்ஜந்ய: ஸுபி$_4$க்ஷம் விமலா தி$_3$ஶ: ।
ஹ்ருஷ்டபுஷ்டஜநாகீர்ணம் புரம் ஜநபத$_3$ாஸ்தத$_2$ா ॥ (12)

நாகாலே ம்ரியதே கஶ்சிந்ந வ்யாதி$_4$: ப்ராணிநாம் தத$_2$ா ।
நாநர்தோ$_2$ா வித்$_3$யதே கஶ்சித்$_3$ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி ॥ (13)

அத$_2$ தீ$_3$ர்க$_4$ஸ்ய காலஸ்ய ராமமாதா யஶஸ்விநீ ।
புத்ரபௌத்ரை: பரிவ்ருதா காலத$_4$ர்மமுபாக$_3$மத் ॥ (14)

அந்வியாய ஸுமித்ரா ச கைகேயீ ச யஶஸ்விநீ ।
த$_4$ர்மம் க்ருத்வா ப$_3$ஹுவித$_4$ம் த்ரிதி$_3$வே பர்யவஸ்தி$_2$தா ॥ (15)

ஸர்வா: ப்ரமுதி$_3$தா: ஸ்வர்கே$_3$ ராக்ஞா த$_3$ஶரதே$_2$ந ச ।
ஸமாக$_3$தா மஹாப$_4$ாக$_3$ா: ஸர்வத$_4$ர்மம் ச லேபி$_4$ரே ॥ (16)

தாஸாம் ராமோ மஹாத$_3$ாநம் காலே காலே ப்ரயச்ச$_2$தி ।
மாத்ரூணாமவிஶேஷேண ப்$_3$ராஹ்மணேஷு தபஸ்விஷு ॥ (17)

பித்ர்யாணி ப்$_3$ரஹ்மரத்நாநி யக்ஞாந் பரமது$_3$ஸ்தராந் ।
சகார ராமோ த$_4$ர்மாத்மா பித்ரூந் தே$_3$வாந் விவர்த$_4$யந் ॥ (18)

Koviloor Digital Library

வேள்வியைக் காண வந்திருந்த குறுநில மன்னர்கள், கரடிகள், வானரர்கள், அரக்கர்கள் மற்றும் மக்கட்கூட்டத்தினருக்கும், வேதோத்தமர்களுக்கும் ஏராளமான செல்வத்தைக் கொடுத்து அனுப்பி வைத்தார். இவ்வாறாக, முறைப்படி வேள்வியை நிறைவு செய்தார், இராமன். பின்னர், எஞ்சியிருந்தவர்களையும் அனுப்பிவிட்டுத் தாமரைக் கண்ணராகிய இராமன், சீதையை நெஞ்சில் நினைத்துக் கொண்டே, அயோத்தியில் புகுந்தார். (5,6)

வேள்வியை முடித்துக் கொண்ட இராமன், தன் இரு புதல்வர்களோடும்கூட வசிக்கத் தொடங்கினார். ரகுநந்தனர், சீதையைத் தவிர வேறு எவரையும் மணந்து கொள்ளவில்லை. அதனால், ஒவ்வொரு வேள்வியின் போதும் சீதையின் தங்கப்பதுமையை உடன் வைத்துக் கொண்டார். (7)

கணக்கில்லாத அசுவமேத யாகம், அதைப்போல் பத்து மடங்கு வாஜபேய யாகம் ஆகியவற்றை ஏராளமான பொற்காசுகளைத் தட்சிணையாக வழங்கி, பத்தாயிரம் ஆண்டுக்காலம் வேள்வி செய்தார். (8)

திருநிறைசெல்வரான இராமன், அக்னிஷ்டோமம், அதிராத்ரம், கோஸவம் மற்றும் உயர்வான வேள்விகளை, வேண்டிய அளவு தட்சிணை கொடுத்து, அதிக பொருட்செலவுடன் செய்து முடித்தார். (9)

இவ்வாறாக, மாமன்னராகிய இராமன் மிக நீண்ட காலம் அறநெறி தவறாது ஆட்சி செலுத்தினார். (10)

இராமனுக்குச் சேவை செய்வதற்காக அயோத்தியில் அவர் ஆணைப்படி தங்கியிருந்த கரடி–வானர–அரக்கர்கள், நாள்தோறும் இராகவனுக்கு உகந்தவாறு பணிசெய்து, அவரை மகிழ்வுடன் வைத்திருந்தார்கள். (11)

தேவைப்பட்ட காலங்களில் மேகம் மழையைப் பொழிந்தது; எல்லாத் திசைகளும் குற்றங்குறை இல்லாமல் செழிப்பாக இருந்தன. நகரமும் புறநகர்ப் பகுதிகளும் மனநிறைவும் உடல்வளமும் பெற்ற மக்களால் நிறைந்திருந்தன. (12)

இராமன் அறநெறி வழுவாமல் ஆட்சிபுரியும் காலத்தில், குறைந்த வயதில் யாரும் மரணமடையவில்லை; உயிர்ப் பிராணிகளுக்கு உடல்நோய் வந்ததில்லை; யாருக்கும் எவ்விதத் தொந்தரவும் ஏற்பட்டதில்லை. (13)

பின்னர், இராமனுடைய தாயாரும் புகழ் மிக்கவளுமான கௌசல்யை, மகன்–பேரன்களோடு சுகமாக வாழ்ந்தபின், வாழ்க்கையின் இறுதியை அடைந்தாள். (14)

சுமித்திரையும், கீர்த்திமிக்க கைகேயியும் மூத்த அரசியின் வழியைத் தொடர்ந்து சென்றார்கள். அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் பலவகையான அறப்பணிகளைச் செய்தார்கள். கடைசியில், புண்ணியப் பயனாக சுவர்க்கத்தை அடைந்தார்கள். (15)

அங்கே (சுவர்க்கத்தை), மன்னர் தசரதனை அடைந்து எல்லோரும் மனமகிழ்ச்சி அடைந்தார்கள். பெரும் பாக்கியசாலிகளான அவர்களனைவரும், அவரவர் செய்த அறச்செயல்களின் புண்ணியப் பயன்களைப் பெற்றார்கள். (16)

இராமன், அவரவர்களுக்கு உரிய திதி நாட்களில், அவர்களிடையே எவ்வித வேற்றுமையும் பாராட்டாமல், தவசிகளுக்கும் வேதவித்தகர்களுக்கும் ஏராளமாக தானம் கொடுத்து வந்தார். (17)

அறத்தின் நாயகனான இராமன், அளவில்லாத செல்வங்களை வேதியர்களுக்குக் கொடுத்து, முன்னோர்களுக்குச் செய்ய வேண்டிய, செயற்கரிய பிண்டபித்ரு–அக்னி காரியங்களையும் நீர்க்கடன்களையும் செய்து, பித்ரு தேவதைகளை மனமகிழச் செய்தார். (18)

Koviloor Digital Library

ஏவம் வர்ஷஸஹஸ்ராணி ப3ஹூந்யத2 யயு: ஸுக2ம் ।
யக்ஞைர்ப3ஹுவிதை4ம் த4ர்மம் வர்த4யாநஸ்ய ஸர்வதா3 ॥ (19)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 ஏகோநஶததம: ஸர்க3: ॥

ஶததம: ஸர்க3:

க3ந்த4ர்வவிஷயவிஜயயாத்ரா

கஸ்யசித்த்வத2 காலஸ்ய யுதா4ஜித் கேகயோ ந்ருப: ।
ஸ்வகு3ரும் ப்ரேஷயாமாஸ ராக4வாய மஹாத்மநே ॥ (1)

கா3ர்க்3யமங்கி3ரஸ: புத்ரம் ப்3ரஹ்மர்ஷிமமிதப்ரப4ம் ।
த3ஶ சாஶ்வஸஹஸ்ராணி ப்ரீதிதா3நமநுத்தமம் ॥ (2)

கம்ப3ளாநி ச ரத்நாநி சித்ரவஸ்த்ரமதோ2த்தமம் ।
ராமாய ப்ரத3தௌ3 ராஜா ஶுபா4ந்யாப4ரணாநி ச ॥ (3)

ஶ்ருத்வா து ராக4வோ தீ4மாந் ப்3ரஹ்மர்ஷிம் கா3ர்க்3யமாக3தம் ।
மாதுலஸ்யாஶ்வபதிந: ப்ரஹிதம் தந்மஹாத்4த4நம் ॥ (4)

ப்ரத்யுத்3க3ம்ய ச காகுத்ஸ்த2: க்ரோஶமாத்ரம் ஸஹாநுஜ: ।
கா3ர்க்3யம் ஸம்பூஜயாமாஸ யதா2 ஶக்ரோ ப்3ருஹஸ்பதிம் ॥ (5)

ததா2 ஸம்பூஜ்ய தம்ருஷிம் தத்3த4நம் ப்ரதிக்3ருஹ்ய ச ।
ப்ருஷ்ட்வா ப்ரதிபத3ம் ஸர்வம் குஶலம் மாதுலஸ்ய ச ॥ (6)

உபவிஷ்டம் மஹாபா4க3ம் ராம: ப்ரஷ்டும் ப்ரசக்ரமே ।
கிமாஹ மாதுலோ வாக்யம் யத3ர்த2ம் ப4க3வாநிஹ ॥ (7)

ப்ராப்தோ வாக்யவிதா3ம் ஶ்ரேஷ்ட2: ஸாக்ஷாதி3வ ப்3ருஹஸ்பதி: ।
ராமஸ்ய பா4ஷிதம் ஶ்ருத்வா மஹர்ஷி: கார்யவிஸ்தரம் ॥ (8)

வக்துமத்3பு4தஸங்காஶம் ராக4வாயோபசக்ரமே ।
மாதுலஸ்தே மஹாபா3ஹோ வாக்யமாஹ நரர்ஷப4 ॥ (9)

யுதா4ஜித் ப்ரீதிஸம்யுக்தம் ஶ்ரூயதாம் யதி3 ரோசதே ।
அயம் க3ந்த4ர்வவிஷய: ப2லமூலோபஶோபி4த: ॥ (10)

ஸிந்தோ4ருப4யத: பார்ஶ்வே தே3ஶ: பரமஶோப4ந: ।
தம் ச ரக்ஷந்தி க3ந்த4ர்வா: ஸாயுதா4 யுத்3த4கோவிதா3: ॥ (11)

ஶைலூஷஸ்ய ஸுதா வீர த்ரிகோட்யோ வை மஹாப3லா: ।
தாந் விநிர்ஜித்ய காகுத்ஸ்த2 க3ந்த4ர்வநக3ரம் ஶுப4ம் ॥ (12)

நிவேஶய மஹாபா3ஹோ ஸ்வபுரே ஸுஸமாஹிதே ।
அந்யஸ்ய ந க3திஸ்தத்ர தே3ஶ: பரமஶோப4ந: ॥ (13)

Koviloor Digital Library

இவ்வாறு, இராமன் வேள்விகளின் வாயிலாகப் பலவித தருமங்களை நடத்திக் கொண்டு, சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கையில் பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்தன. (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
தொண்ணூற்றொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூறு

பரதன், கந்தர்வ நாட்டின் மீது படையெடுத்தல்

இவ்வாறு, காலம் சென்று கொண்டிருக்கும்போது, ஒரு சமயம், கேகய நாட்டின் மன்னன் யுதாஜித், பேரரசர் இராமனிடம் தன் ஆசார்யரை அனுப்பி வைத்தார். (1)

ஆசார்யர் கார்க்யர், அங்கிரஸின் புதல்வர்; பிரும்மரிஷி; தேசு மிக்கவர். இராமபிரானிடம் தனக்கிருந்த பேரன்பை வெளிக்காட்டும் வகையில், பத்தாயிரம் குதிரைகள், சால்வைகள், இரத்தினங்கள், அழகிய வேலைப்பாடமைந்த ஆடைகள், கண்கவர் அணிகலன்கள் முதலியவற்றையும் ஆசார்யர் மூலம் அனுப்பி வைத்தார், யுதாஜித். (2,3)

பேரறிஞரான இராமன், மாமன் அசுவபதியின் குமாரரான யுதாஜித்தால் அனுப்பப்பெற்ற கார்க்யர், கணக்கில்லாத அன்புக்காணிக்கைகளுடன் வந்து கொண்டிருக்கிறார் என்பதைக் கேட்டதும், தன் சகோதரர்களுடன்கூட அயோத்தியிலிருந்து ஒரு கோச தூரம் முன்னே சென்று, பிருஹஸ்பதியை இந்திரன் கோலாகலமாக வரவேற்புதைப் போன்று, மாமுனிவர் கார்க்கியரை விமரிசையாக வரவேற்றார். (4,5)

முனிவரைத் தக்க முறையில் கௌரவித்து, அவர் அளித்த அன்புக் காணிக்கைகளை ஏற்றுக் கொண்டு, மாமனுடைய குடும்பத்தினரின் நல்வாழ்வு பற்றி விசாரித்துவிட்டு, தக்கதொரு ஆசனத்தில் அமர்ந்து கொண்ட மாமுனிவரை நோக்கி, இராமன் கேட்கத் தொடங்கினார்— ''சிறந்த முறையில் பேசுவதற்கு, சாட்சாத் பிருஹஸ்பதி போன்றவர், தாங்கள். தேவரீரிடம் மாமா என்ன செய்தி சொல்லியனுப்பி இருக்கிறார்?'' (6,7)

இராமன் கேட்டதும், மாமுனிவர் விநோதமான ஒரு செயலைப் பற்றி, இராமனிடம் விளக்கமாகக் கூறத் தொடங்கினார்— (8)

''தோள்வலி மிக்கவரே! மன்னரே! உங்களுடைய மாமன் யுதாஜித் பேரன்புடன் சொல்லியனுப்பியதை, நீங்கள் விரும்பினால் கேட்கலாம். (9)

(அவர் சொல்லியனுப்பிய செய்தி) கந்தர்வர்களுடைய நாட்டில் கனி–கிழங்குகள் ஏராளம்; சிந்து நதியின் இரு கரைகளையும் ஒட்டியுள்ள நாடு; மிகவும் வளமானது. (நமது நாட்டை ஒட்டினாற்போல் இருக்கிறது.) (10)

வீரரே! கந்தர்வ மன்னன் சைலூஷனுடைய குமாரர்கள் மூன்று கோடிப் பேர்கள்; மகாபலசாலிகள்; போர்க் கலையில் வல்லவர்கள்; ஆயுதம் தரித்தவர்கள். இவர்கள் அந்த நாட்டைப் பாதுகாத்து வருகிறார்கள். (11)

காகுத்தரே! அவர்களை வென்று அழகான கந்தர்வ நகரத்தை உங்கள் வசப்படுத்திக் கொண்டு, அதில் எழுந்தருள்வீராக. (12)

மிகவும் பாதுகாப்புடன் விளங்கும் அந்த நாட்டிற்குள், தங்களைத் தவிர வேறு எவராலும் உள்ளே செல்ல முடியாது. பெருந்தோளரே! இதுபற்றிச் சிந்தித்துப் பாருங்கள். நான், உங்களுக்குப் பாதகமான யோசனையைக் கூறமாட்டேன்.'' (13)

Koviloor Digital Library

ரோசதாம் தே மஹாபா$_3$ஹோ நாஹம் த்வாமஹிதம் வதே$_3$ ।
தச்ச்$_2$ருத்வா ராக$_4$வ: ப்ரீதோ மஹர்ஷேர்மாதுலஸ்ய ச ॥ (14)

உவாச ப$_3$ாட$_4$மித்யேவ ப$_4$ரதம் சாந்வவைக்ஷத ।
ஸோऽப்$_3$ரவீத்$_3$ராக$_4$வ: ப்ரீத: ஸாஞ்ஜலிப்ரக்$_3$ரஹோ த்$_3$விஜம் ॥ (15)

இமௌ குமாரௌ தம் தே$_3$ஶம் ப்$_3$ரஹ்மர்ஷே விசரிஷ்யத: ।
ப$_4$ரதஸ்யாத்மஜௌ வீரௌ தக்ஷ: புஷ்கல ஏவ ச ॥ (16)

மாதுலேந ஸுகு$_3$ப்தௌ து த$_4$ர்மேண ஸுஸமாஹிதௌ ।
ப$_4$ரதம் சாக்$_3$ரத: க்ருத்வா குமாரௌ ஸப$_3$லாநுகௌ$_3$ ॥ (17)

நிஹத்ய க$_3$ந்த$_4$ர்வஸுதாந் த்$_3$வே புரே விப$_4$ஜிஷ்யத: ।
நிவேஶ்ய தே புரவரே ஆத்மஜௌ ஸந்நிவேஶ்ய ச ॥ (18)

ஆக$_3$மிஷ்யதி மே பூ$_4$ய: ஸகாஶமதித$_4$ார்மிக: ।
ப்$_3$ரஹ்மர்ஷிமேவமுக்த்வா து ப$_4$ரதம் ஸப$_3$லாநுக$_3$ம் ॥ (19)

ஆக்ஞாபயாமாஸ தத$_3$ா குமாரௌ சாப்$_4$யஷேசயத் ।
நக்ஷத்ரேண ச ஸௌம்யேந புரஸ்க்ருத்யாங்கி$_3$ர:ஸுதம் ॥ (20)

ப$_4$ரத: ஸஹ ஸைந்யேந குமாராப்$_4$யாம் விநிர்யயௌ ।
ஸா ஸேநா ஶக்ரயுக்தேவ நக$_3$ராந்நிர்யயாவத$_2$ ॥ (21)

ராக$_4$வாநுக$_3$தா தூ$_3$ரம் து$_3$ராத$_4$ர்ஷா ஸுரைரபி ।
மாம்ஸாத$_3$ாநி ச ஸத்த்வாநி ரக்ஷாம்ஸி ஸுமஹாந்தி ச ॥ (22)

அநுஜக்$_3$முர்ஹி ப$_4$ரதம் ருதி$_4$ரஸ்ய பிபாஸயா ।
பூ$_4$தக்$_3$ராமாஶ்ச ப$_3$ஹவோ மாம்ஸப$_4$க்ஷா: ஸுதா$_3$ருணா: ॥ (23)

க$_3$ந்த$_4$ர்வபுத்ரமாம்ஸாநி பே$_4$க்துகாமா: ஸஹஸ்ரஶ: ।
ஸிம்ஹவ்யாக்$_4$ரவராஹணாம் கே$_2$சராணாம் ச பக்ஷிணாம் ॥ (24)

ப$_3$ஹூநி வை ஸஹஸ்ராணி ஸேநாயா யயுரக்$_3$ரத: ।
அத்$_4$யர்த$_4$மாஸமுஷிதா பதி$_2$ ஸேநா நிராமயா ॥
ஹ்ருஷ்டபுஷ்டஜநாகீர்ணா கேகயம் ஸமுபாக$_3$மத் ॥ (25)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஶததம: ஸர்க$_3$: ॥

ஏகோத்தரஶததம: ஸர்க$_3$:

தக்ஷபுஷ்கலநிவேஶ:

ஶ்ருத்வா ஸேநாபதிம் ப்ராப்தம் ப$_4$ரதம் கேகயாதி$_4$ப: ।
யுத$_4$ாஜித்$_3$கா$_3$ர்க்$_3$யஸஹிதம் பராம் ப்ரீதிமுபாக$_3$மத் ॥ (1)

Koviloor Digital Library

இராமன் அதைக் கேட்டு, முனிவர்–மன்னர் செய்தியால் உவகையடைந்து, ''அவ்வாறே செய்யலாம்'' என்று பதில் கூறிவிட்டு, பரதனைக் கண்களால் நோக்கினார். (14)

அந்தணர் முன் கைகளைக் கூப்பிக்கொண்டு, நிறைந்த மனத்துடன் இராமன் கூறினார்— ''பிரும்மரிஷியே! இவ்விரு குமாரர்களும் பரதனுடைய புதல்வர்களான தட்சன்–புஷ்கலன் என்பவர்கள்; மாமனால் நன்றாகப் பாதுகாக்கப்பட்டவர்கள்; அறநெறியில் உறுதியாக நிற்பவர்கள். இவர்கள், அந்த கந்தர்வ நாட்டைச் சுற்றிப் பார்ப்பார்கள். (15,16)

பரதனை முன்னிட்டுக் கொண்டு, படைவீரர்களும் ஏவலர்களும் உடன்செல்ல, இவ்விருவரும் கந்தர்வ மன்னனின் புதல்வர்களைக் கொன்று, அந்த நாட்டை இரண்டு நகரங்களாக வகுத்துக் கொள்வார்கள். (17)

சிறந்ததான அந்த நகரங்களில் தன் புதல்வர்களை ஆட்சியில் அமர்த்திவிட்டு, பரமதார்மிகனான பரதன் என்னிடம் மீண்டும் வந்து சேருவான்.'' (18)

பிரும்மரிஷியிடம் இவ்வாறு கூறிவிட்டு, இரு குமாரர்களுக்கும் அப்போதே பட்டம் சூட்டி, படைவீரர்–பணியாட்களுடன் செல்லுமாறு பரதனுக்கு ஆணையிட்டார். (19)

சுபமான தாரகை கூடிய நாளில், அங்கிரஸின் குமாரர் கார்க்யரை முன்னிட்டுக் கொண்டு, படைகளுடனும் தன் இரு புதல்வர்களுடனும் பரதன் புறப்பட்டுச் சென்றான். (20)

அந்தப் படை, இந்திரனால் ஏவிவிடப்பட்ட சேனை போல் மிகவும் உற்சாகத்துடன் அயோத்தியிலிருந்து வெளியே புறப்பட்டுச் சென்றது. தேவர்களாலும் வெற்றி கொள்ள முடியாத அந்த சைன்யத்துடன் இராமன் சிறிதுதூரம் சென்றார். (21)

மாமிசம் உண்ணும் பிராணிகளும், பேருருவம் படைத்த இராக்கதர்களும், போர்க்களத்தில் இரத்தம் குடிக்கும் பேராசையுடன் பரதனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். (22)

பயங்கரமானவைகளும், புலால் உண்பவைகளுமான பூதங்களின் ஏராளமான கூட்டங்களும் கந்தர்வ மன்னனின் புதல்வர்களுடைய உடல்களைப் புசிக்கும் பேராசையுடன் ஆயிரக்கணக்கில் சென்றன. (23)

அநேக ஆயிரக்கணக்கான சிங்கம், புலி, பன்றி, வானத்தில் பறக்கும் (கழுகு முதலான) பறவைகள் சேனையின் முன்னதாகச் சென்றன. (24)

மனவளமும் உடல்வளமும் நிரம்பப் பெற்ற ஆரோக்கியமான வீரர்களைக் கொண்ட அந்த சேனை போகும் வழியில் ஒன்றரை மாதங்களைக் கழித்தபின், கேகய நாட்டைச் சென்றடைந்தது. (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நூறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றியொன்று

கந்தர்வர் வீழ்ச்சியும், தட்ச–புஷ்கலன் ஆட்சியும்

முனிவர் கார்க்யரோடுகூட, படைத்தலைமை ஏற்று பரதனே வந்திருக்கிறான் என்பதைக் கேட்டதும், கேகய மன்னன் யுதாஜித் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். (1)

Koviloor Digital Library

ஸ நிர்யயௌ ஜநௌகே4ந மஹதா கேகயாதி4ப: ।
த்வரமாணோऽபி4சக்ராம க3ந்த4ர்வாந் காமரூபிண: ॥ (2)

ப4ரதஶ்ச யுதா4ஜிச்ச ஸமேதௌ லகு4விக்ரமை: ।
க3ந்த4ர்வநக3ரம் ப்ராப்தௌ ஸப3லௌ ஸபதா3நுகௌ3 ॥ (3)

ஶ்ருத்வா து ப4ரதம் ப்ராப்தம் க3ந்த4ர்வாஸ்தே ஸமாக3தா: ।
யோத்3து4காமா மஹாவீர்யா வ்யநத3ந் வை ஸமந்தத: ॥ (4)

தத: ஸமப4வத்3யுத்3த4ம் துமுலம் ரோமஹர்ஷணம் ।
ஸப்தராத்ரம் மஹாபீ4மம் ந சாந்யதரயோர்ஜய: ॥ (5)

க2ட்3க3ஶக்தித4நுர்க்3ராஹா நத்3ய: ஶோணிதஸம்ஸ்ரவா: ।
ந்ருகளேப3ரவாஹிந்ய: ப்ரவ்ருத்தா: ஸர்வதோ தி3ஶம் ॥ (6)

ததோ ராமாநுஜ: க்ருத்3த4: காலஸ்யாஸ்த்ரம் ஸுதா3ருணம் ।
ஸம்வர்தம் நாம ப4ரதோ க3ந்த4ர்வேஷ்வப்4யசோத3யத் ॥ (7)

தே ப3த்3தா4: காலபாஶேந ஸம்வர்தேந விதா3ரிதா: ।
க்ஷணேநாபி4ஹதாஸ்தேந திஸ்ர: கோட்யோ மஹாத்மநாம் ॥ (8)

தம் கா4தம் கோ4ரஸங்காஶம் ந ஸ்மரந்தி தி3வௌகஸ: ।
நிமேஷாந்தரமாத்ரேண தாத்3ருஶாநாம் மஹாத்மநாம் ॥ (9)

ஹதேஷு தேஷு ஸர்வேஷு ப4ரத: கைகயீஸுத: ।
நிவேஶயாமாஸ ததா3 ஸம்ருத்3தே4 த்3வே புரோத்தமே ॥ (10)

தக்ஷம் தக்ஷஶிலாயாம் து புஷ்கலம் புஷ்கலாவதே ।
க3ந்த4ர்வதே3ஶே ருசிரே கா3ந்தா4ரவிஷயே ச ஸ: ॥ (11)

த4நரத்நௌக4ஸம்பூர்ணே காநநைருபஶோபி4தே ।
அந்யோந்யஸங்க4ர்ஷக்ருதே ஸ்பர்த4யா கு3ணவிஸ்தரை: ॥ (12)

உபே4 ஸுருசிரப்ரக்2யே வ்யவஹாரைரகில்பி3ஷை: ।
உத்3யாநயாநஸம்பூர்ணே ஸுவிப4க்தாந்தராபணே ॥ (13)

உபே4 புரவரே ரம்யே விஸ்தரைருபஶோபி4தே ।
க்3ருஹமுக்2யை: ஸுருசிரைர்விமாநஸமவர்ணிபி4: ॥ (14)

ஶோபி4தே ஶோப4நீயைஶ்ச தே3வாயதநவிஸ்தரை: ।
தாலைஸ்தமாலைஸ்திலகைர்ப3குலைருபஶோபி4தே ॥ (15)

நிவேஶ்ய பஞ்சபி4ர்வர்ஷைர்ப4ரதோ ராக4வாநுஜ: ।
புநராயாந்மஹாபா3ஹுரயோத்4யாம் கைகயீஸுத: ॥ (16)

ஸோऽபி4வாத்3ய மஹாத்மாநம் ஸாக்ஷாத்3த4ர்மமிவாபரம் ।
ராக4வம் ப4ரத: ஶ்ரீமாந் ப்3ரஹ்மாணமிவ வாஸவ: ॥ (17)

Koviloor Digital Library

கேகய மன்னர், மக்கள் கூட்டத்தோடு விரைவாக வெளியே வந்து, விருப்பம்போல் உருவம் ஏற்கக் கூடிய கந்தர்வர்களை எதிர்த்துச் சென்றார். (2)

பரதனும் யுதாஜித்தும், தத்தம் படைவீரர்களுடனும் பணியாட்களுடனும்கூட ஒன்றுசேர்ந்து வெகுவேகமாகச் சென்று, கந்தர்வ நகரத்தை முற்றுகையிட்டார்கள். (3)

பரதன் வந்திருப்பதைக் கேட்டு, மகாவீரர்களுடன் போர்புரியும் விருப்பம் உடைய கந்தர்வர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, எல்லாப் பக்கங்களிலும் நின்று கர்ஜனை செய்தார்கள். (4)

பின்னர், உரோமச் சிலிர்ப்பை உண்டாக்குவதும் பெரும் சத்தமும் களேபரமும் கூடியதுமான போர் நிகழ்ந்தது. ஏழு நாட்கள் தொடர்ந்து நடந்த பயங்கரமான சண்டைக்குப் பிறகும், வெற்றி எந்தப் பக்கத்தினருக்கும் கிடைக்கவில்லை. (5)

எண்திசையிலும் இரத்த ஆறுகள் ஓடின; கத்தி, வேல், வில் முதலிய முதலைகள் அவற்றில் மிதந்தன; மனிதச் சடலங்கள் இரத்தப் பிரவாகத்தில் அடித்துச் செல்லப்பட்டன. (6)

அப்போது, இராமனின் தம்பியான பரதன், மிகவும் கோபம் கொண்டு, காலனை அதிதேவதையாகக் கொண்டதும் மிகவும் பயங்கரமானதுமான ஸம்வர்த்தம் என்ற பெயர் கொண்ட அஸ்திரத்தைச் செலுத்தினான். (7)

காலபாசத்தினால் பிணைக்கப்பட்ட மூன்று கோடி கந்தர்வர்களும், ஸம்வர்த்தத்தினால் துளைக்கப்பட்டு, நொடிப்பொழுதில் மாய்க்கப்பட்டார்கள். (8)

கண்ணிமைக்கும் நேரத்தில், மகாபராக்கிரமசாலிகளான அப்பேர்ப்பட்ட கந்தர்வர்கள் கொல்லப்பட்டதைப் போன்ற பயங்கரமான ஒரு காட்சியை, இதற்கு முன் பார்த்திருப்பதாக, தேவர்களுக்குக்கூட நினைவே இல்லை. (9)

கந்தர்வர்கள் எல்லோரும் மடிந்த பின்னர், கைகேயியின் புதல்வன் பரதன், வளம் மிகுந்த இரண்டு பட்டணங்களை உருவாக்கினான். (10)

அழகான கந்தர்வ நாட்டில் தட்சசிலா என்ற நகரை நிர்மாணித்து, அதில் தட்சனை அரசனாக்கினான். காந்தார நாட்டில் புஷ்கலாவதம் என்ற பட்டணத்தை ஏற்படுத்தி, புஷ்கலனிடம் அதை ஒப்படைத்தான். (11)

(அந்த நகரங்கள்) செல்வம், இரத்தினக் குவியல்கள் நிறைந்து, சிறு வனங்கள் அழகு செய்ய, குடிமக்களுக்கு நற்பயன்களைத் தருவதில் போட்டி போடுவது போல் விளங்கின. (12)

இரண்டு நகரங்களும் அழகாக இருந்தன; மக்களின் பழக்க–வழக்கங்கள் குற்றமில்லாமல் இருந்தன; பூங்காக்களும் வாகனங்களும் நிறைவாக இருந்தன; கடைவீதிகள் ஆங்காங்கே உரிய முறையில் நிறுவப்பட்டிருந்தன. (13)

கண்கவர் பட்டணங்கள் இரண்டும், அதிசயமான பொருள்களால் மேலும் அழகைக் கூட்டின; எழில்மிகு மாபெரும் மாளிகைகள், தேவதைகளின் இருப்பிடங்களைப் போல் அழகும் விஸ்தாரமும் கொண்டு விளங்கின; பனைமரம், தமாலம், திலகம், மகிழ மரம் முதலியன அழகு சேர்த்தன. (14,15)

இராமனுடைய தம்பி, அவ்விருவரையும் இரு பட்டணங்களிலும் ஆட்சியில் அமர்த்திவிட்டு, ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அயோத்திக்குத் திரும்பி வந்தான். இந்திரன், பிரும்மாவை வணங்கி ஆசி பெறுவதைப் போல, அறக்கடவுளே இன்னோர் உருவம் ஏற்று வந்தாற்போன்ற மகாத்மா இராமனை, திருநிறை செல்வனான பரதன் வணங்கினான். (16,17)

Koviloor Digital Library

ஶஶம்ஸ ச யத$_2$ாவ்ருத்தம் க$_3$ந்த$_4$ர்வவத$_4$முத்தமம் ।
நிவேஶநம் ச தே$_3$ஶஸ்ய ஶ்ருத்வா ப்ரீதோऽஸ்ய ராக$_4$வ: ॥ (18)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

த்$_3$வ்யுத்தரஶததம: ஸர்க$_3$:

அங்க$_3$த$_3$சந்த்$_3$ரகேதுநிவேஶ:

தச்ச்$_2$ருத்வா ஹர்ஷமாபேதே$_3$ ராக$_4$வோ ப்$_4$ராத்ருபி$_4$: ஸஹ ।
வாக்யம் சாத்$_3$பு$_4$தஸங்காஶம் தத$_3$ா ப்ரோவாச லக்ஷ்மணம் ॥ (1)

இமௌ குமாரௌ ஸௌமித்ரே தவ த$_4$ர்மவிஶாரதௌ$_3$ ।
அங்க$_3$த$_3$ஶ்சந்த்$_3$ரகேதுஶ்ச ராஜ்யார்தே$_2$ த்$_3$ருட$_4$விக்ரமௌ ॥ (2)

இமௌ ராஜ்யேऽபி$_4$ஷேக்ஷ்யாமி தே$_3$ஶ: ஸாது$_4$ விதீ$_4$யதாம் ।
ரமணீயோ ஹ்யஸம்ப$_3$ாதே$_4$ா ரமேதாம் யத்ர த$_4$ந்விநௌ ॥ (3)

ந ராக்ஞா யத்ர பீட$_3$ா ஸ்யாந்நாஶ்ரமாணாம் விநாஶநம் ।
ஸ தே$_3$ஶோ த்$_3$ருஶ்யதாம் ஸௌம்ய நாபராத்$_4$யாமஹே யத$_2$ா ॥ (4)

ததே$_2$ாக்தவதி ராமே து ப$_4$ரத: ப்ரத்யுவாச ஹ ।
அயம் காருபதே$_2$ா தே$_3$ஶோ ரமணீயோ நிராமய: ॥ (5)

நிவேஶ்யதாம் தத்ர புரமங்க$_3$த$_3$ஸ்ய மஹாத்மந: ।
சந்த்$_3$ரகேதோ: ஸுருசிரம் சந்த்$_3$ரகாந்தம் நிராமயம் ॥ (6)

தத்$_3$வாக்யம் ப$_4$ரதேநோக்தம் ப்ரதிஜக்$_3$ராஹ ராக$_4$வ: ।
தம் ச க்ருத்வா வஶே தே$_3$ஶமங்க$_3$த$_3$ஸ்ய ந்யவேஶயத் ॥ (7)

அங்க$_3$தீ$_3$யா புரீ ரம்யா ஹ்யங்க$_3$த$_3$ஸ்ய நிவேஶிதா ।
ரமணீயா ஸுகு$_3$ப்தா ச ராமேணாக்லிஷ்டகர்மணா ॥ (8)

சந்த்$_3$ரகேதோஸ்து மல்லஸ்ய மல்லபூ$_4$ம்யாம் நிவேஶிதா ।
சந்த்$_3$ரகாந்தேதி விக்$_2$யாதா தி$_3$வ்யா ஸ்வர்க$_3$புரீ யத$_2$ா ॥ (9)

ததோ ராம: பராம் ப்ரீதிம் லக்ஷ்மணோ ப$_4$ரதஸ்தத$_2$ா ।
யயுர்யுத்$_3$தே$_4$ து$_3$ராத$_4$ர்ஷா அபி$_4$ஷேகம் ச சக்ரிரே ॥ (10)

அபி$_4$ஷிச்ய குமாரௌ ஸ ப்ரஸ்த$_2$ாபயதி ராக$_4$வ: ।
அங்க$_3$த$_3$ம் பஶ்சிமாம் பூ$_4$மிம் சந்த்$_3$ரகேதுமுத$_3$ங்முக$_2$ம் ॥ (11)

அங்க$_3$த$_3$ம் சாபி ஸௌமித்ரிர்லக்ஷ்மணோऽநுஜக$_3$ாம ஹ ।
சந்த்$_3$ரகேதோஸ்து ப$_4$ரத: பார்ஷ்ணிக்$_3$ராஹோ ப$_3$பூ$_4$வ ஹ ॥ (12)

Koviloor Digital Library

பின்னர், கந்தர்வர்களை அழித்து, இரண்டு நாடுகளை உண்டாக்கிய செய்தியை, நடந்தவாறே பரதன் கூறினான். அதைக் கேட்ட இராமன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். (18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நூற்றியோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றியிரண்டு

அங்கதனுக்கும் சந்திரகேதுவுக்கும் அரசு அளித்தல்

கந்தர்வதேசம் சம்பந்தமாக பரதன் சொன்னதைக் கேட்ட இராமனும் மற்ற சகோதரர்களும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அப்போது, இலக்குவனை நோக்கிப் புதுமையான ஒரு விஷயத்தை இராமன் கூறினார்— (1)

''லட்சுமணா! உன்னுடைய இந்த இரண்டு குமாரர்களான அங்கதனும் சந்திரகேதுவும் அறநூல்களை முற்றிலும் கற்றறிந்தவர்கள்; ஒரு நாட்டை ஆட்சி செய்யும் வலிமையும் உறுதியும் படைத்தவர்கள். (2)

இவர்களை நான், மன்னர்களாக பட்டாபிஷேகம் செய்விக்கப் போகிறேன். சிறப்பான நாட்டைக் கண்டுபிடி. அந்த நாடு, அழகானதாகவும் விசாலமானதாகவும், வில்லாளிகளான இவர்கள் சுகமாக வாழக்கூடியதாகவும் இருக்க வேண்டும். (3)

தம்பி! எந்தப் பிரதேசத்தை, நாம் கைப்பற்றுவதனால் பிற மன்னர்களுக்குத் துன்பமும் கோபமும் உண்டாகாதோ, முனிவர்களின் ஆசிரமங்களை அழிக்க வேண்டியிருக்காதோ, நாம் மற்றவர்களுக்குக் கேடு செய்ததாக ஆகாதோ, அப்படிப்பட்ட இடத்தைக் கண்டுபிடிப்பாய்.'' (4)

இராமபிரான் இவ்வாறு கூறிமுடித்ததும், பரதன் கூறினான்— ''மன்னா! காருபதம் என்ற நாடு அழகானது; நோய்–நொடியற்றது. மாவீரனான அங்கதனுக்காக அங்கே ஒரு புதிய நகரம் உண்டாக்கப்படலாம். அதேபோல், சந்திரகேதுவுக்காக எழில்மிக்கதும் நோய்–நொடிகள் அண்டாததுமான சந்திரகாந்தம் என்ற பட்டணத்தை நிர்மாணிக்கலாம்.'' (5,6)

பரதன் கூறிய ஆலோசனையை இராமன் ஏற்றுக்கொண்டார். காருபத நாட்டைக் கைப்பற்றி, அங்கதனை அங்கே அரசன் ஆக்கினார். (7)

அரிய செயல்களை எளிதில் செய்து முடிக்கும் இராமன், அங்கதன் வசிப்பதற்காக அங்கதீயா என்னும் நகரை நிர்மாணித்தார். அந்த நகரம் எழில்மிக்கதாகவும் பாதுகாப்புடனும் விளங்கியது. (8)

மகா உத்தமனான சந்திரகேதுவுக்கு, மல்ல நாட்டின் வடக்கில், தேவலோக பட்டணத்திற்கு நிகரான, சந்திரகாந்தா என்ற பெயருடைய நகரம் நிர்மாணிக்கப்பட்டது. (9)

இதனால், இராம–லட்சுமண–பரதர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். போரில் எவராலும் வெற்றிக் கொள்ள முடியாத அவர்கள், இரு குமாரர்களுக்கும் பட்டாபிஷேகம் செய்வித்தார்கள். (10)

இரு குமாரர்களுக்கும் பட்டம் சூட்டியபின், அங்கதனை மேற்கு திசையிலும், சந்திரகேதுவை வடக்கு திசையிலும் இராமன் அனுப்பி வைத்தார். (11)

அங்கதனுடன் சுமித்திரையின் புதல்வனான இலக்குவன் சென்றான்; சந்திரகேதுவுக்குப் பாதுகாவலாக பரதன் சென்றான். (12)

Koviloor Digital Library

லக்ஷ்மணஸ்த்வங்க$_3$தீயாயாம் ஸம்வத்ஸரமதே$_2$ாஷித: ।
புத்ரே ஸ்தி$_2$தே து$_3$ராத$_4$ர்ஷே ஹ்யயோத்$_4$யாம் புநராக$_3$மத் ॥ (13)

ப$_4$ரதோऽபி ததை$_2$வோஷ்ய ஸம்வத்ஸரமதோऽதி$_4$கம் ।
அயோத்$_4$யாம் புநராக$_3$ம்ய ராமபாத$_3$ாவுபாஸ்த ஸ: ॥ (14)

உபெ$_4$ள ஸௌமித்ரிப$_4$ரதௌ ராமபாத$_3$ாவநுவ்ரதௌ ।
காலம் க$_3$தமபி ஸ்நேஹாந்ந ஜக்ஞாதேऽதித$_4$ார்மிகௌ ॥ (15)

ஏவம் வர்ஷஸஹஸ்ராணி த$_3$ஶ தேஷாம் யயுஸ்தத$_3$ா ।
த$_4$ர்மே ப்ரயதமாநாநாம் பௌரகார்யேஷு நித்யத$_3$ா ॥ (16)

விஹ்ருத்ய காலம் பரிபூர்ணமாநஸா:
ஶ்ரியா வ்ருதா த$_4$ர்மபுரே ஸுஸம்ஸ்தி$_2$தா: ।
த்ரய: ஸமித்$_3$த$_4$ா இவ தீ$_3$ப்ததேஜஸோ
மஹாத்$_4$வரே ஸாது$_4$ ஹுதாஸ்த்ரயோऽக்$_3$நய: ॥ (17)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்$_3$வ்யுத்தரஶததம: ஸர்க$_3$: ॥

த்ர்யுத்தரஶததம: ஸர்க$_3$:

காலாக$_3$மநம்

கஸ்யசித்த்வத$_2$ காலஸ்ய ராமே த$_4$ர்மபதே$_2$ ஸ்தி$_2$தே ।
காலஸ்தாபஸரூபேண ராஜத்$_3$வாரமுபாக$_3$மத் ॥ (1)

ஸோऽப்$_3$ரவீல்லக்ஷ்மணம் வாக்யம் த்$_4$ருதிமந்தம் யஶஸ்விநம் ।
மாம் நிவேத$_3$ய ராமாய ஸம்ப்ராப்தம் கார்யகெ$_3$ளரவாத் ॥ (2)

தூ$_3$தோऽஸ்ம்யதிப$_3$லஸ்யாஹம் மஹர்ஷேரமிதௌஜஸ: ।
ராமம் தி$_3$த்$_3$ருக்ஷுராயாத: கார்யேண ஹி மஹாப$_3$ல ॥ (3)

தஸ்ய தத்$_3$வசநம் ஶ்ருத்வா ஸௌமித்ரிஸ்த்வரயாந்வித: ।
ந்யவேத$_3$யத ராமாய தாபஸம் தம் ஸமாக$_3$தம் ॥ (4)

ஜயஸ்வ ராம த$_4$ர்மேண உபெ$_4$ள லோகௌ மஹாத்$_3$யுதே ।
தூ$_3$தஸ்த்வாம் த்$_3$ரஷ்டுமாயாதஸ்தபஸா ப$_4$ாஸ்கரப்ரப$_4$: ॥ (5)

தத்$_3$வாக்யம் லக்ஷ்மணேநோக்தம் ஶ்ருத்வா ராம உவாச ஹ ।
ப்ரவேஶ்யதாம் முநிஸ்தாத மஹௌஜாஸ்தஸ்ய வாக்யத்$_4$ருத் ॥ (6)

ஸௌமித்ரிஸ்து ததே$_2$த்யுக்த்வா ப்ராவேஶயத தம் முநிம் ।
ஜ்வலந்தமிவ தேஜோபி$_4$: ப்ரத$_3$ஹந்தமிவாம்ஶுபி$_4$: ॥ (7)

Koviloor Digital Library

இலக்குவன், அங்கதீயா நாட்டில் ஓர் ஆண்டுக்காலம் தங்கினான். அவனுடைய மைந்தன், ஆட்சி நிர்வாகத்தைத் தனியே நடத்தும் திறன் பெற்றவுடன் அயோத்திக்குத் திரும்பி வந்து, இராமன் திருவடிகளை வணங்கினான். (13)

அவ்வாறே, சந்திரகாந்த நகரில், ஓர் ஆண்டுக்குச் சற்று அதிகமாகவே தங்கியிருந்த பிறகு, அயோத்திக்குத் திரும்பி வந்து, இராமன் திருவடிகளை வணங்கினான், பரதன். (14)

இலக்குவனும் பரதனும் இராமபாதசேவையில் குறைவிலாப் பற்றுக் கொண்டிருந்தார்கள். அறநெறியாளர்களான அவர்கள், இராமபாதசேவையில் வெகுகாலம் ஈடுபட்டிருந்தாலும், அந்தப் பணியில் முழுமுனைப்போடு இருந்ததால் காலம் கழிந்ததை உணரவில்லை. (15)

அறச்செயல்களில் ஊக்கமும், மக்கள் பணிகளில் கவனமும் செலுத்திய அவர்கள், பத்தாயிரம் ஆண்டுகளைக் கழித்துவிட்டார்கள். (16)

தரும காரியங்களின் நிலைக்களனாக, செல்வச்செழிப்பு மிக்க நகரமாக விளங்கிய அயோத்தியில், நிறைந்த மனத்துடன் வாழ்ந்த அந்த மூவரும், வேள்விச் சாலையில் நிறைய ஆகுதி பெற்ற மூன்று அக்னிகளும் கொழுந்துவிட்டு ஜொலிப்பதைப் போல, மிகவும் பிரகாசத்துடன் விளங்கினார்கள். (17)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நூற்றியிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்று மூன்று

இராமனைச் சந்திக்க, காலன் வந்தான்!

இராமன், அறநெறியில் நின்று செங்கோலோச்சிக் கொண்டிருக்கையில், காலதேவன் ஒரு தவசியின் வடிவமேற்று, அரசமாளிகையின் நுழைவாயிலுக்கு வந்தான். (1)

வாயிற்புறத்திலிருந்த புகழ்மிக்கவனும் தைரியமிக்கவனுமான இலக்குவனைக் கண்டு, ''ஒரு முக்கிய காரியம் பற்றி, இராமனுடன் பேசுவதற்காக நான் வந்திருக்கிறேன் என்பதை அவரிடம் தெரிவிப்பாயாக'' என்றான். (2)

''மிகவும் ஆற்றல் மிக்கவனே! நான், மாமுனிவர் அதிபலர் என்பவரின் தூதன். முக்கியமான ஒரு செய்தியுடன், இராமசந்திரனைக் காண வந்திருக்கிறேன்.'' (3)

அவனுடைய சொற்களைக் கேட்ட இலக்குவன், வேகமாக உள்ளே சென்று, ஒரு தவசி வந்திருக்கும் செய்தியை இராமனிடம் கூறினான்— ''பேரொளி வீசுபவரே! அரசநீதியிலிருந்து ஒரு சிறிதும் பிறழாமல் ஆட்சிபுரியும் தங்களுக்கு இவ்வுலகிலும் அவ்வுலகிலும் வெற்றி உண்டாவதாகுக. தவத்தின் பேராற்றலால் சூரியனைப் போல் ஒளிவீசும் ஒரு முனிவர், தூதன் என்ற பணியை ஏற்று, தங்களைக் காண வந்திருக்கிறார்.'' (4,5)

இலக்குவன் கூறியதைக் கேட்டபின், ''அன்பனே! தன்னுடைய குருவின் செய்தியைக் கொண்டு வந்திருக்கும், தவப் பேரொளி வீசும் முனிவரை உடனே உள்ளே அனுப்பு'' என்று இராமன் கூறினார். (6)

''அப்படியே'' என்று பதில் கூறிய லட்சுமணன், தபோபலத்தினால் ஒளிவீசுபவரும், செங்கதிர்களால் சுட்டு விடுபவர் போல் விளங்கியவருமான அந்த முனிவரை உள்ளே அனுப்பி வைத்தான். (7)

Koviloor Digital Library

ஸோऽபி$_4$க$_3$ம்ய ரகு$_4$ஶ்ரேஷ்ட$_2$ம் தீ$_3$ப்யமாநம் ஸ்வதேஜஸா ।
ருஷிர்மது$_4$ரயா வாசா வர்த$_4$ஸ்வேத்யாஹ ராக$_4$வம் ॥ (8)

தஸ்மை ராமோ மஹாதேஜா: பூஜாமர்க்$_4$யபுரோக$_3$மாம் ।
த$_3$தௌ$_3$ குஶலமவ்யக்$_3$ரம் ப்ரஷ்டுமேவோபசக்ரமே ॥ (9)

ப்ருஷ்டஶ்ச குஶலம் தேந ராமேண வத$_3$தாம் வர: ।
ஆஸநே காஞ்சநே தி$_3$வ்யே நிஷஸாத$_3$ மஹாயஶா: ॥ (10)

தமுவாச ததோ ராம: ஸ்வாக$_3$தம் தே மஹாமுநே ।
ப்ராபயஸ்வ ச வாக்யாநி யதோ தூ$_3$தஸ்த்வமாக$_3$த: ॥ (11)

சோதி$_3$தோ ராஜஸிம்ஹேந முநிர்வாக்யமபா$_4$ஷத ।
த்$_3$வந்த்$_3$வமேதத் ப்ரவக்தவ்யம் ஹிதம் வை யத்$_3$யபேக்ஷஸே ॥ (12)

ய: ஶ்ருணோதி நிரீக்ஷேத்$_3$வா ஸ வத்$_4$யோ ப$_4$விதா தவ ।
ப$_4$வேத்$_3$வை முநிமுக்$_2$யஸ்ய வசநம் யத்$_3$யபேக்ஷஸே ॥ (13)

ஸ ததே$_2$தி ப்ரதிக்ஞாய ராமோ லக்ஷ்மணமப்$_3$ரவீத் ।
த்$_3$வாரி திஷ்ட$_2$ மஹாபா$_3$ஹோ ப்ரதிஹாரம் விஸர்ஜய ॥ (14)

ஸ மே வத்$_4$ய: க$_3$லு ப$_4$வேத் கதா$_2$ம் த்$_3$வந்த்$_3$வம் ஸமீரிதாம் ।
ருஷேர்மம ச ஸௌமித்ரே பஶ்யேத்$_3$வா ஶ்ருணுயாச்ச ய: ॥ (15)

ததோ நிக்ஷிப்ய காகுத்ஸ்தோ$_2$ லக்ஷ்மணம் த்$_3$வாரி ஸங்க்$_3$ரஹம் ।
தமுவாச முநே வாக்யம் கத$_2$யஸ்வேதி ராக$_4$வ: ॥ (16)

யத்தே மநீஷிதம் வாக்யம் யேந வாஸி ஸமாஹித: ।
கத$_2$யஸ்வாவிஶங்கஸ்த்வம் மமாபி ஹ்ருதி$_3$ வர்ததே ॥ (17)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ த்ர்யுத்தரஶததம: ஸர்க$_3$: ॥

சதுருத்தரஶததம: ஸர்க$_3$:

பிதாமஹவாக்யக$_2$த$_2$நம்

ஶ்ருணு ராஜந் மஹாஸத்த்வ யத$_3$ர்த$_2$மஹமாக$_3$த: ।
பிதாமஹேந தே$_3$வேந ப்ரேஷிதோऽஸ்மி மஹாப$_3$ல ॥ (1)

தவாஹம் பூர்வகே பா$_4$வே புத்ர: பரபுரஞ்ஜய ।
மாயாஸம்பா$_4$விதோ வீர கால: ஸர்வஸமாஹர: ॥ (2)

பிதாமஹஶ்ச ப$_4$க$_3$வாநாஹ லோகபதி: ப்ரபு$_4$: ।
ஸமயஸ்தே க்ருத: ஸௌம்ய ஸ்வாம்(ல்)லோகாந் பரிரக்ஷிதும் ॥ (3)

Koviloor Digital Library

தன்னுடைய ஆன்மவொளியினால் பிரகாசிக்கும் ரகுகுல திலகமான இராமனை நெருங்கி, ''வாழ்க! வளர்க!'' என்று இனிய குரலில் முனிவர் ஆசி கூறினார். மகாதேஜஸ்வியான இராமன், அர்க்ய–பாத்ய உபசாரங்களைச் செய்து அவரை வரவேற்றபின், தெளிவான மனத்துடன், முனிவரின் நலன் பற்றி விசாரிக்கத் தொடங்கினார். (8,9)

இராமன் அவ்வாறு கேட்டதும், பேச்சில் வல்லவரும் கீர்த்தி பெற்றவருமான முனிவர் திவ்வியமான பொன் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். பின்னர், அவரைப் பார்த்து, ''மாமுனிவரே! தங்கள் வரவு நல்வரவாகுக. நீங்கள் ஒரு தூதராக வந்திருப்பதால், உங்களிடம் சொல்லி அனுப்பிய செய்தியை என்னிடம் கூறுங்கள்'' என்றார், இராமன். (10,11)

சிங்கம் நிகர் வலிமைமிக்க மன்னரான இராமன், இவ்வாறு தூண்டிவிட்டதும், முனிவர் கூறினார்— ''நம்முடைய நலனை கருத்தில் கொண்டு பார்த்தால், நான் சொல்ல வந்த ரகசியம், நாம் இருவர் மட்டும் தனித்து இருக்கும்போதுதான் சொல்லப்பட வேண்டும். (12)

மாமுனிவருடைய ரகசியச் செய்தியை நீங்கள் கேட்க விரும்பினால், ஒரு நிபந்தனைக்கு உட்பட வேண்டும். எவனொருவன் நாம் இருவரும் பேசுவதைக் கேட்கிறானோ, அல்லது பார்க்கிறானோ, அவன் உங்களால் கொல்லத்தக்கவன்.'' (13)

இராமன், ''அவ்வாறே நடக்கும்'' என்று உறுதி கூறிவிட்டு, லட்சுமணனைப் பார்த்து, ''பெருந்தோளனே! வாயிற்காப்போனை அனுப்பிவிட்டு, நீயே வாயிற்படியில் நின்று காவல் செய்வாயாக'' என்றார். (14)

''லட்சுமணா! எவனொருவன் நாங்கள் இருவரும் தனித்துப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்கிறானோ அல்லது பார்க்கிறானோ, அவன் நிச்சயமாகக் கொல்லப்படுவான்.'' (15)

இலக்குவனை, வாயிற்படியில் கவனமாக இருக்கும்படி நியமித்துவிட்டு, தூதரைப் பார்த்து, ''முனிவர் சொல்லியனுப்பிய செய்தியைக் கூறுங்கள்'' என்று இராமன் சொன்னார். (16)

''முனிவரே! தாங்கள் எதைச் சொல்ல விரும்புகிறீர்களோ, எதைச் சொல்வதற்காக இங்கே வந்திருக்கிறீர்களோ, அந்த ரகசியத்தை, எவ்விதத் தயக்கமும் இல்லாமல் இப்போது கூறலாம். அதைக் கேட்பதற்கு நானும் துடித்துக் கொண்டிருக்கிறேன்.'' (17)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நூற்று மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்று நான்கு

பிரும்மாவின் செய்தியை இராமனுக்குக் கூறுதல்

(தூதராக வந்த முனிவர் கூறுகிறார்—) மன்னரே! மாவீரரே! பலம் மிக்கவரே! பிதாமகர் பிரும்மதேவரால் நான் அனுப்பப்பட்டிருக்கிறேன். நான் எதற்காக வந்திருக்கிறேனோ, அதைக் கேளுங்கள். பகைவரின் நகரங்களை வெற்றி கொள்பவரே! உலகப் படைப்பின் தொடக்க நிலையில், அதாவது, ஹிரண்யகர்பனின் தோற்றம் ஏற்பட்ட காலத்தில், மாயையின் துணைகொண்டு, நான் உங்களிடமிருந்து பிறந்தேன். எல்லாவற்றையும் அழிக்கும் என்னை, காலன் என்று அழைப்பார்கள். (1,2)

உலகத் தலைவரும் நாயகரும் பிதாமகருமான பகவான் பிரும்மா, பின்வருமாறு சொல்லியனுப்பி இருக்கிறார்— ''ஐயனே! பிரும்மலோகம் முதலான விண்ணுலகங்களைத் காக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. (3)

Koviloor Digital Library

ஸம்க்ஷிப்ய ஹி புரா லோகாந் மாயயா ஸ்வயமேவ ஹி ।
மஹார்ணவே ஶயாநோऽப்ஸு மாம் த்வம் பூர்வமஜீஜந: ॥ (4)

பே$_4$ாக$_3$வந்தம் ததோ நாக$_3$மநந்தமுத$_3$கேஶயம் ।
மாயயா ஜநயித்வா த்வம் த்$_3$வௌ ச ஸத்த்வௌ மஹாப$_3$லௌ ॥ (5)

மது$_4$ம் ச கைடப$_4$ம் சைவ யயோரஸ்தி$_2$சயைர்வ்ருதா ।
இயம் பர்வதஸம்ப$_3$ாத$_4$ா மேதி$_3$நீ சாப$_4$வத் தத$_3$ா ॥ (6)

பத்$_3$மே தி$_3$வ்யேऽர்கஸங்காஶே நாப்$_4$யாமுத்பாத்$_3$ய மாமபி ।
ப்ராஜாபத்யம் த்வயா கர்ம மயி ஸர்வம் நிவேஶிதம் ॥ (7)

ஸோऽஹம் ஸந்ந்யஸ்தப$_4$ாரோ ஹி த்வாமுபாஸே ஜக$_3$த்பதிம் ।
ரக்ஷாம் வித$_4$த்ஸ்வ பூ$_4$தேஷு மம தேஜஸ்கரோ ப$_4$வாந் ॥ (8)

ததஸ்த்வமபி து$_3$ர்த$_4$ர்ஷாத்தஸ்மாத்$_3$ப$_4$ாவாத் ஸநாதநாத் ।
ரக்ஷார்த$_2$ம் ஸர்வபூ$_4$தாநாம் விஷ்ணுத்வமுபஜக்$_3$மிவாந் ॥ (9)

அதி$_3$த்யாம் வீர்யவாந் புத்ரோ ப்$_4$ராத்ரூணாம் வீர்யவர்த$_4$ந: ।
ஸமுத்பந்நேஷு க்ருத்யேஷு தேஷாம் ஸாஹ்யாய கல்பஸே ॥ (10)

ஸ த்வம் வித்ராஸ்யமாநாஸு ப்ரஜாஸு ஜக$_3$தாம் வர ।
ராவணஸ்ய வத$_4$ாகாங்க்ஷீ மாநுஷேஷு மநோऽத$_3$த$_4$ா: ॥ (11)

த$_3$ஶ வர்ஷஸஹஸ்ராணி த$_3$ஶ வர்ஷஶதாநி ச ।
க்ருத்வா வாஸஸ்ய நியதிம் ஸ்வயமேவாத்மநா புரா ॥ (12)

ஸ த்வம் மநோமய: புத்ர: பூர்ணாயுர்மாநுஷேஷ்விஹ ।
காலோऽயம் தே நரஶ்ரேஷ்ட$_2$ ஸமீபமுபவர்திதும் ॥ (13)

யதி$_3$ பூ$_4$யோ மஹாராஜ ப்ரஜா இச்ச$_2$ஸ்யுபாஸிதும் ।
வஸ வா வீர ப$_4$த்$_3$ரம் த ஏவமாஹ பிதாமஹ: ॥ (14)

அத$_2$வா விஜிகீ$_3$ஷா தே ஸுரலோகாய ராக$_4$வ ।
ஸநாத$_2$ா விஷ்ணுநா தே$_3$வா ப$_4$வந்து விக$_3$தஜ்வரா: ॥ (15)

ஶ்ருத்வா பிதாமஹேநோக்தம் வாக்யம் காலஸமீரிதம் ।
ராக$_4$வ: ப்ரஹஸந் வாக்யம் ஸர்வஸம்ஹாரமப்$_3$ரவீத் ॥ (16)

ஶ்ருத்வா மே தே$_3$வதே$_3$வஸ்ய வாக்யம் பரமமத்$_3$பு$_4$தம் ।
ப்ரீதிர்ஹி மஹதீ ஜாதா தவாக$_3$மநஸம்ப$_4$வா ॥ (17)

த்ரயாணாமபி லோகாநாம் கார்யார்த$_2$ம் மம ஸம்ப$_4$வ: ।
ப$_4$த்$_3$ரம் தேऽஸ்து க$_3$மிஷ்யாமி யத ஏவாஹமாக$_3$த: ॥ (18)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_32_Back

Koviloor Digital Library

அறிவுக்கெட்டாத தொன்மையான காலத்தில் மாயையின் துணை கொண்டு, எல்லா உலகங்களையும் தங்கள் உடலில் மறைத்துக் கொண்டு, பெருங்கடலில் படுத்துக் கொண்டிருந்தீர்கள். பிறகு, இந்த உலகப் படைப்பின் தொடக்கத்தில், எல்லாவற்றுக்கும் முதலாக என்னை(பிரும்மாவை)ப் படைத்தீர்கள். (4)

பின்னர், பெரிய படமும் சரீரமும் கொண்டு, நீரில் வசிக்கும் அனந்தன் என்ற நாகத்தை மாயையின் துணை கொண்டு படைத்தீர்கள். மிகவும் பலசாலிகளான இரண்டு உயிர்ப்பிராணிகளைத் தோற்றுவித்தீர்கள். மது, கைடபன் என்று பெயர் கொண்ட அவ்விருவரின் எலும்புக் குவியலால் மலைகள் நிறைந்த இவ்வுலகம் அப்போது உண்டாயிற்று. அதனால், மேதினீ என்ற பெயரையும் அடைந்தது. (5,6)

தங்களுடைய தொப்புளிலிருந்து சூரியன்போல் ஒளிவீசும் திவ்வியமான தாமரை மலர் முகிழ்த்தெழுந்தது. தாங்கள், அந்தத் தாமரையில் என்னை உண்டாக்கினீர்கள். மக்களைத் தோற்றுவிக்கும் எல்லாப் பணிகளும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டன. (7)

என்மேல், உலகப்படைப்பு என்ற சுமை ஏற்றி வைக்கப்பட்டவுடன், அனைத்துலகத் தலைவரான தங்களைப் பிரார்த்தித்தேன். ‘என் படைப்புத் தொழிலுக்குத் தேவையான அறிவையும் ஊக்கத்தையும் அளிப்பவர், தாங்கள் அல்லவா? தாங்கள் எல்லா உயிர்களினுள்ளும் கலந்திருந்து, அவைகளைக் காக்கவேண்டும்.' (8)

பின்னர், நினைவுக்கெட்டாத பழமையான பிரமிப்பூட்டும் அந்தத் தோற்றத்திலிருந்து, எல்லா உயிர்ப் பிராணிகளையும் காப்பாற்றுவதற்காக, விஷ்ணு என்ற வடிவத்தில் வெளிப்பட்டீர்கள். பிறகு, தாங்கள் அதிதியின் கருப்பையிலிருந்து ஆற்றல்மிக்க வாமனராக அவதாரம் செய்து, சகோதரர்களான இந்திரன் முதலியோரின் ஆற்றலை வளர்த்தீர்கள். (அவர்களுக்கு வெற்றியை தேடித் தந்தீர்கள்.) தேவைப்பட்ட காலங்களில், தேவைப்பட்ட முறையில் அவர்களுக்கு உதவிபுரிந்து வருகிறீர்கள். (9,10)

உலகத் தலைவரே! மக்கள் இராவணனால் துன்புறுத்தப்பட்டபோது, அவனை மாய்க்க விரும்பிய தாங்கள், மானுட அவதாரம் செய்வதில் மனத்தைச் செலுத்தினீர்கள். (11)

மானுட உலகில் பதினோராயிரம் ஆண்டுக்காலம் வாழ்வது என்ற கால எல்லையையும் தாங்கள் நிச்சயித்துக் கொண்டீர்கள். (12)

மனிதருள் மாணிக்கமே! இந்த உலகில் ஒரு தம்பதிக்கு மகனாகப் பிறந்து, ‘இவ்வளவு காலம் வரை வாழ்வது' என்று தாங்கள் சங்கல்பித்தீர்களோ, அந்தக் காலகெடு நிறைவடைந்துவிட்டது. இப்போது, தாங்கள் எங்களிடம் திரும்பி வரவேண்டிய தருணம் வந்துவிட்டது. (13)

மாமன்னரே! தாங்கள் இன்னும் சிறிதுகாலம் இங்கிருந்து கொண்டு, மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றினால், அவ்வாறே செய்வீர்களாக. இராகவனே! வைகுண்டத்திற்குத் திரும்பவேண்டும் என்று ஆசைப்பட்டால் அவசியம் வந்துவிடுங்கள். தாங்கள் அங்கு வந்துவிட்டால், தேவர்கள், ‘விஷ்ணு காப்பாற்றுவார்' என்ற நம்பிக்கையுடன் கவலையை மறந்து வாழ்வார்கள்! வாழ்க, தாங்கள்!'' என்று பிரும்மா சொல்லியனுப்பினார். (14,15)

பிரும்மாவின் செய்தியை காலன் கூறக் கேட்டதும், இராமன் சற்றே புன்னகைத்து, எல்லா உயிர்களையும் பறித்துச் செல்லும் காலனை நோக்கிக் கூறினார்— (16)

''தேவதேவரான பிரும்மாவிடமிருந்து அற்புதமான செய்தியைக் கொண்டு வந்த உங்கள் வருகையால், எனக்கு மிகவும் மனநிறைவு உண்டாகிறது. மூன்று உலகங்களின் நன்மைக்காக நான் இந்த அவதாரம் எடுத்தேன். என் அவதார நோக்கம் நிறைவேறிவிட்டது. அதனால், நான் எவ்விடத்திலிருந்து வந்தேனோ, அதே இடத்திற்குத் திரும்பிச் செல்வேன். (17,18)

Koviloor Digital Library

ஹ்ருத்$_3$க$_3$தோ ஹ்யஸி ஸம்ப்ராப்தோ ந மே தத்ர விசாரணா ।
மயா ஹி ஸர்வக்ருத்யேஷு தே$_3$வாநாம் வஶவர்திநா ॥
ஸ்தா$_2$தவ்யம் ஸர்வஸம்ஹார யதா$_2$ ஹ்யாஹ பிதாமஹ: ॥ (19)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ சதுருத்தரஶததம: ஸர்க$_3$: ॥

பஞ்சோத்தரஶததம: ஸர்க$_3$:

து$_3$ர்வாஸோऽபி$_4$க$_3$ம:

ததா$_2$ தயோ: ஸம்வத$_3$தோர்து$_3$ர்வாஸா ப$_4$க$_3$வாந்ருஷி: ।
ராமஸ்ய த$_3$ர்ஶநாகாங்க்ஷீ ராஜத்$_3$வாரமுபாக$_3$மத் ॥ (1)

ஸோऽபி$_4$க$_3$ம்ய து ஸௌமித்ரிமுவாச ருஷிஸத்தம: ।
ராமம் த$_3$ர்ஶய மே ஶீக்$_4$ரம் புரா மேऽர்தோ$_2$ऽதிவர்ததே ॥ (2)

முநேஸ்து பா$_4$ஷிதம் ஶ்ருத்வா லக்ஷ்மண: பரவீரஹா ।
அபி$_4$வாத்$_3$ய மஹாத்மாநம் வாக்யமேதது$_3$வாச ஹ ॥ (3)

கிம் கார்யம் ப்$_3$ரூஹி ப$_4$க$_3$வந் கோ வார்த$_2$: கிம் கரோம்யஹம் ।
வ்யக்$_3$ரோ ஹி ராக$_4$வோ ப்$_3$ரஹ்மந் முஹூர்தம் ப்ரதிபால்யதாம் ॥ (4)

தச்ச்$_2$ருத்வா ருஷிஶார்தூ$_3$ல: க்ரோதே$_4$ந கலுஷீக்ருத: ।
உவாச லக்ஷ்மணம் வாக்யம் நிர்த$_3$ஹந்நிவ சக்ஷுஷா ॥ (5)

அஸ்மிந் க்ஷணே மாம் ஸௌமித்ரே ராமாய ப்ரதிவேத$_3$ய ।
அஸ்மிந் க்ஷணே மாம் ஸௌமித்ரே ந நிவேத$_3$யஸே யதி$_3$ ॥ (6)

விஷயம் த்வாம் புரம் சைவ ஶபிஷ்யே ராக$_4$வம் ததா$_2$ ।
பா$_4$ரதம் சைவ ஸௌமித்ரே யுஷ்மாகம் யா ச ஸந்ததி: ॥ (7)

ந ஹி ஶக்ஷ்யாம்யஹம் பூ$_4$யோ மந்யும் தா$_4$ரயிதும் ஹ்ருதி$_3$ ।
தச்ச்$_2$ருத்வா கோ$_4$ரஸங்காஶம் வாக்யம் தஸ்ய மஹாத்மந: ॥ (8)

சிந்தயாமாஸ மநஸா தஸ்ய வாக்யஸ்ய நிஶ்சயம் ।
ஏகஸ்ய மரணம் மேऽஸ்து மா பூ$_4$த் ஸர்வவிநாஶநம் ॥ (9)

இதி புத்$_3$த்$_4$யா விநிஶ்சித்ய ராக$_4$வாய ந்யவேத$_3$யத் ।
லக்ஷ்மணஸ்ய வச: ஶ்ருத்வா ராம: காலம் விஸ்ருஜ்ய ச ॥ (10)

நி:ஸ்ருத்ய த்வரிதம் ராஜா அத்ரே: புத்ரம் த$_3$த$_3$ர்ஶ ஹ ।
ஸோऽபி$_4$வாத்$_3$ய மஹாத்மாநம் ஜ்வலந்தமிவ தேஜஸா ॥ (11)

Koviloor Digital Library

எல்லாவற்றையும் அழிக்கும் காலனே! நான், என் மனத்திற்குள் உன்னைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். அதனால், நீ இப்போது வந்தது குறித்து வியப்படையவில்லை. நான் எல்லாக் காரியங்களையும் தேவர்கள் இஷ்டப்படிதான் செய்யவேண்டும். (அவர்களுக்கு நன்மை ஏற்படும்விதமாகத்தான் செய்யவேண்டும்.) ஆகவே, பிரும்மா சொல்லியனுப்பியுள்ளபடி செய்கிறேன்.'' (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நூற்று நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றைந்து

துர்வாசர் வருகை

அவர்கள் இருவரும் (இராமனும் காலனும்) இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போது, இராமனைக் காண்பதற்காக, பகவான் துர்வாச முனிவர் அரசமாளிகையின் நுழைவாயிலை வந்தடைந்தார். (1)

தவ ஆற்றல் மிக்க அவர், லட்சுமணனிடம் சென்று, ''நான் உடனே இராமனைப் பார்க்க வேண்டும். தாமதம் ஏற்பட்டால், நான் வந்த காரியம் கெட்டுப் போகும்'' என்றார். (2)

எதிரிகளை மாய்க்கும் வல்லமை கொண்ட இலக்குவன், முனிவர் கூறியதைக் கேட்டதும், மகாத்மாவான அவரை வணங்கிவிட்டுப் பின்வருமாறு கூறினான்— (3)

''பகவானே! தங்களுக்கு ஆகவேண்டிய காரியம் என்ன? எந்தப் பயனை உத்தேசித்து வந்திருக்கிறீர்கள்? நான் தங்களுக்கு என்ன பணி செய்யவேண்டும்? பிரும்மன்! மன்னர் இராமபிரான் தற்போது வேறு வேலையில் ஈடுபட்டுள்ளார். தாங்கள் அருள்கூர்ந்து சிறிதுநேரம் காத்திருக்க வேண்டும்.'' (4)

மாமுனிவராகிய அவர் கோபத்தினால் மனம் கலங்கி, பார்வையாலேயே எரித்து விடுபவர்போல் பார்த்து, லட்சுமணனை நோக்கிக் கூறினார்— (5)

''லட்சுமணா! இந்த விநாடியிலேயே, இராமனிடம் நான் இங்கு வந்திருக்கும் தகவலைத் தெரிவி. நான் வந்திருப்பதை இப்போதே நீ அவருக்குத் தெரிவிக்கவில்லையானால், இந்த நாட்டையும், உன்னையும், நகரத்தையும், இராமனையும், பரதனையும், உங்களுடைய சந்ததிகளையும் சபித்து (அழித்து) விடுவேன். இனிமேலும், என்னால் கோபத்தை என் நெஞ்சில் தாங்கிக் கொண்டிருக்க முடியாது.'' (6,7)

அளவற்ற தவ ஆற்றல் கொண்ட அந்த முனிவரின் மிகவும் பயங்கரமான சொற்களைக் கேட்ட லட்சுமணன், அவர் சொல்லியபடியே எல்லோருக்கும் சாபம் கொடுக்கவல்லவர் என்பதில் சந்தேகமில்லை என்பதை உணர்ந்து கொண்டான். (8)

'என் ஒருவனுடைய மரணம் நேர்ந்தால் பரவாயில்லை; எல்லோருக்கும் மரணம் ஏற்பட வேண்டாம்' என்று முடிவு செய்து, (இராமன் விதித்தத் தடையை மீறி, உள்ளே சென்று) துர்வாசர் வந்திருப்பதைத் தெரிவித்தான். (9)

இலக்குவன் கூறியதைக் கேட்ட இராமன், காலனை அனுப்பிவிட்டு, விரைவில் வெளியே வந்து, அத்ரியின் புதல்வரைச் சந்தித்தார். தபோபலத்தினால் பிரகாசிக்கும் மகாத்மா துர்வாசரை வணங்கிவிட்டு, காகுத்த இராமன், கைகளைக் கூப்பிக் கொண்டு, ''அடியேன் செய்ய வேண்டிய பணி, எதுவோ?'' என்று கேட்டார். (10,11)

Koviloor Digital Library

கிம் கார்யமிதி காகுத்ஸ்த$_2$: க்ருதாஞ்ஜலிரபா$_4$ஷத ।
தத்$_3$வாக்யம் ராக$_4$வேணோக்தம் ஶ்ருத்வா முநிவர: ப்ரபு$_4$ம் ॥ (12)
ப்ரத்யாஹ ராமம் து$_3$ர்வாஸா: ஶ்ரூயதாம் த$_4$ர்மவத்ஸல ।
அத்$_3$ய வர்ஷஸஹஸ்ரஸ்ய ஸமாப்திஸ்தபஸோ மம ॥ (13)

ஸோऽஹம் போ$_4$ஜநமிச்சா$_2$மி யதா$_2$ஸித்$_3$த$_4$ம் தவாநக$_4$ ।
தச்ச்$_2$ருத்வா வசநம் ராஜா ராக$_4$வ: ப்ரீதமாநஸ: ॥ (14)

போ$_4$ஜநம் முநிமுக்$_2$யாய யதா$_2$ஸித்$_3$த$_4$முபாஹரத் ।
ஸ து பு$_4$க்த்வா முநிஶ்ரேஷ்ட$_2$ஸ்தத$_3$ந்நமம்ருதோபமம் ॥ (15)

ஸாது$_4$ ராமேதி ஸம்பா$_4$ஷ்ய ஸ்வமாஶ்ரமமுபாக$_3$மத் ।
தஸ்மிந் க$_3$தே முநிவரே ஸ்வாஶ்ரமம் லக்ஷ்மணாக்$_3$ரஜ: ॥ (16)

ஸம்ஸ்ம்ருத்ய காலவாக்யாநி ததோ து$_3$:க$_2$முபாக$_3$மத் ।
து$_3$:கே$_2$ந ச ஸுஸந்தப்த: ஸ்ம்ருத்வா தத்$_3$கோ$_4$ரத$_3$ர்ஶநம் ॥ (17)

அவாங்முகோ$_2$ தீ$_3$நமநா வ்யாஹர்தும் ந ஶஶாக ஹ ।
ததோ பு$_3$த்$_3$த்$_4$யா விநிஶ்சித்ய காலவாக்யாநி ராக$_4$வ: ॥
நைதத$_3$ஸ்தீதி நிஶ்சித்ய தூஷ்ணீமாஸீந்மஹாயஶா: ॥ (18)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ பஞ்சோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

ஷடு$_3$த்தரஶததம: ஸர்க$_3$:

லக்ஷ்மணபரித்யாக$_3$:

அவாங்முக$_2$மதோ$_2$ தீ$_3$நம் த்$_3$ருஷ்ட்வா ஸோமமிவாப்லுதம் ।
ராக$_4$வம் லக்ஷ்மணோ வாக்யம் ஹ்ருஷ்டோ மது$_4$ரமப்$_3$ரவீத் ॥ (1)
ந ஸந்தாபம் மஹாபா$_3$ஹோ மத$_3$ர்த$_2$ம் கர்துமர்ஹஸி ।
பூர்வநிர்மாணப$_3$த்$_3$தா$_4$ ஹி காலஸ்ய க$_3$திரீத்$_3$ருஶீ ॥ (2)

ஜஹி மாம் ஸௌம்ய விஸ்ரப்$_3$த$_4$ம் ப்ரதிஜ்ஞாம் பரிபாலய ।
ஹீநப்ரதிஜ்ஞா: காகுத்ஸ்த$_2$ ப்ரயாந்தி நரகம் நரா: ॥ (3)

யதி$_3$ ப்ரீதிர்மஹாராஜ யத்$_3$யநுக்$_3$ராஹ்யதா மயி ।
ஜஹி மாம் நிர்விஶங்கஸ்த்வம் த$_4$ர்மம் வர்த$_4$ய ராக$_4$வ ॥ (4)

லக்ஷ்மணேந ததோ$_2$க்தஸ்து ராம: ப்ரசலிதேந்த்$_3$ரிய: ।
மந்த்ரிண: ஸமுபாநீய ததை$_2$வ ச புரோத$_4$ஸம் ॥ (5)

அப்$_3$ரவீச்ச ததா$_3$ வ்ருத்தம் தேஷாம் மத்$_4$யே ஸ ராக$_4$வ: ।
து$_3$ர்வாஸோऽபி$_4$க$_3$மம் ஸைவ ப்ரதிஜ்ஞாம் தாபஸஸ்ய ச ॥ (6)

Koviloor Digital Library

தலைசிறந்த முனிவரான அவர், இராமன் கூறியதைக் கேட்டுவிட்டு, இராமனைப் பார்த்துப் பதில் கூறினார்— ''அறத்தைப் பரிபாலிப்பவரே! கேளுங்கள். நான், ஆயிரம் ஆண்டுக்காலம் தவம் செய்து, இப்போதுதான் நிறைவு செய்தேன். குற்றமற்றவரே! (இப்போது பசியுடன் இருக்கிறேன்.) உங்களுக்காகப் பக்குவம் செய்யப்பட்டுள்ள உணவைப் புசிக்க விரும்புகிறேன்.'' (12,13)

முனிவரின் சொற்களைக் கேட்டு மகிழ்ந்த இராமன், பக்குவமாகியிருந்த உணவை, முக்கிய முனிவராகிய அவருக்கு அளித்து உண்பித்தார். (14)

அமுதம் போலிருந்த அந்த உணவைப் புசித்துவிட்டு, ''இராமா! ரொம்ப நன்றாக இருந்தது!'' என்று வாழ்த்தியபின், தன் ஆசிரமத்திற்குச் சென்றார். (15)

முனிவர் தன்னுடைய ஆசிரமத்திற்குச் சென்றபிறகு, இலக்குவனின் தமையனார், காலன் கூறிய சொற்களை (நிபந்தனைகளை) எண்ணிப் பார்த்து மிகவும் துக்கம் அடைந்தார். (நாம் இருவரும் பேசுவதை எவன் கேட்கிறானோ, அல்லது பார்க்கிறானோ அவன் கொல்லப்படத்தக்கவன் – என்ற) பயங்கரமான காட்சியை எண்ணிப் பார்த்து, துயரத்தால் வெந்துபோன அவர், தலையைக் குனிந்து கொண்டு நின்றார். அவரால் எதுவும் பேசமுடியவில்லை. (16,17)

பின்னர், காலன் கூறிய சொற்களைப் புத்திபூர்வமாக ஆராய்ந்து பார்த்து, 'அவ்வாறு நடக்கக்கூடாது' என்று தீர்மானித்துப் பேசாமலிருந்தார். (லட்சுமணன் செய்த குற்றத்தை நினைவில் வைத்துக் கொள்ளவில்லை.) (18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நூற்றைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றியாறு

இராமன், இலக்குவனைத் துறந்தார்!

ராகுவினால் கவ்வப்பட்ட சந்திரன் போல் ஒளியிழந்து போயிருந்த இராமனின் முகம், துக்கத்தின் காரணமாகக் கீழ்நோக்கிக் குனிந்திருப்பதைக் கண்ட லட்சுமணன், இராமனைப் பார்த்து மனமகிழ்ச்சியுடன் இனிமையாகக் கூறினான்— (1)

''பெருந்தோளரே! என் பொருட்டுத் தாங்கள் வருத்தம் அடையக்கூடாது. முற்பிறவிகளில் செய்த வினைப்பயன்களை ஜீவன் அனுபவித்தே ஆகவேண்டும். காலத்தினுடைய போக்கு இப்படியாகத்தான் இருக்கும். அதை மாற்ற முடியாது. (2)

பெருந்தகையே! தயக்கம் காட்டாமல் என்னைத் தியாகம் செய்துவிட்டு, (காலனுக்குக்) கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுங்கள். காகுத்தரே! கொடுத்த வாக்கைக் காப்பாற்றாத மனிதர்கள் நரகத்தை அடைகிறார்கள். (3)

மாமன்னரே! என்னிடம் தங்களுக்குப் பாசம் இருக்குமேயானால், என்னிடம் தயவுகாட்ட விரும்பினீர்களேயானால், கொஞ்சமும் கவலைப்படாமல் என்னைக் கொன்றுபோடுங்கள்; தருமத்தைக் காப்பாற்றுங்கள்.'' (4)

இவ்வாறு லட்சுமணன் கூறியதும், இராமன் பொறிகலங்கிப் போனார். புரோகிதரையும் அமைச்சர்களையும் அழைத்துவரச் செய்து, அவர்களிடம் தவசிக்கு(காலனுக்கு)ச் செய்து கொடுத்த வாக்குறுதி, பின்னர், துர்வாசர் வருகை ஆகிய எல்லாவற்றையும் நடந்தவாறே விவரித்தார். (5,6)

Koviloor Digital Library

தச்ச்2ருத்வா மந்த்ரிண: ஸர்வே ஸோபாத்4யாயா: ஸமாஸத ।
வஸிஷ்ட2ஸ்து மஹாதேஜா வாக்யமேதது3வாச ஹ ॥ (7)

த்3ருஷ்டமேதந்மஹாபா3ஹோ க்ஷயம் தே ரோமஹர்ஷணம் ।
லக்ஷ்மணேந வியோக3ஶ்ச தவ ராம மஹாயஶ: ॥ (8)

த்யஜைநம் ப3லவாந் காலோ மா ப்ரதிக்ஞாம் வ்ருதா2 க்ருதா2: ।
விநஷ்டாயாம் ப்ரதிக்ஞாயாம் த4ர்மோऽபி ச லயம் வ்ரஜேத் ॥ (9)

ததோ த4ர்மே விநஷ்டே து த்ரைலோக்யம் ஸசராசரம் ।
ஸதே3வர்ஷிக3ணம் ஸர்வம் விநஶ்யேத்து ந ஸம்ஶய: ॥ (10)

ஸ த்வம் புருஷஶார்தூ3ல த்ரைலோக்யஸ்யாபி4பாலநாத் ।
லக்ஷ்மணேந விநா சாத்3ய ஜக3த் ஸ்வஸ்த2ம் குருஷ்வ ஹ ॥ (11)

தேஷாம் தத் ஸமவேதாநாம் வாக்யம் த4ர்மார்த2ஸம்ஹிதம் ।
ஶ்ருத்வா பரிஷதோ3 மத்4யே ராமோ லக்ஷ்மணமப்3ரவீத் ॥ (12)

விஸர்ஜயே த்வாம் ஸௌமித்ரே மா பூ4த்3த4ர்மவிபர்யய: ।
த்யாகோ3 வதோ4 வா விஹித: ஸாதூ4நாம் தூப4யம் ஸமம் ॥ (13)

ராமேண பா4ஷிதே வாக்யே பா3ஷ்பவ்யாகுலிதேந்த்3ரிய: ।
லக்ஷ்மணஸ்த்வரிதம் ப்ராயாத் ஸ்வக்3ருஹம் ந விவேஶ ஹ ॥ (14)

ஸ க3த்வா ஸரயூதீரமுபஸ்ப்ருஶ்ய க்ருதாஞ்ஜலி: ।
நிக்3ருஹ்ய ஸர்வஸ்ரோதாம்ஸி நி:ஶ்வாஸம் ந முமோச ஹ ॥ (15)

அநிஶ்வஸந்தம் யுக்தம் தம் ஸஶக்ரா: ஸாப்ஸரோக3ணா: ।
தே3வா: ஸர்ஷிக3ணா: ஸர்வே புஷ்பைரப்4யகிரம்ஸ்ததா3 ॥ (16)

அத்3ருஶ்யம் ஸர்வமநுஜை: ஸஶரீரம் மஹாப3லம் ।
ப்ரக்3ருஹ்ய லக்ஷ்மணம் ஶக்ரஸ்த்ரிதி3வம் ஸம்விவேஶ ஹ ॥ (17)

ததோ விஷ்ணோஶ்சதுர்பா4க3மாக3தம் ஸுரஸத்தமா: ।
த்3ருஷ்ட்வா ப்ரமுதி3தா: ஸர்வேऽபூஜயந் ஸமஹர்ஷய: ॥ (18)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 ஷடு3த்தரஶததம: ஸர்க3: ॥

ஸப்தோத்தரஶததம: ஸர்க3:

குஶலவாபி4ஷேக:

விஸ்ருஜ்ய லக்ஷ்மணம் ராமோ து3:க2ஶோகஸமந்வித: ।
புரோத4ஸம் மந்த்ரிணஶ்ச நைக3மாம்ஶ்சேத3மப்3ரவீத் ॥ (1)

Koviloor Digital Library

இதைக் கேட்டதும் எல்லா அமைச்சர்களும் குருமார்களும், 'என்ன சொல்வது?' என்பது புரியாமல் பேசாமலிருந்தார்கள். மகாதேஜஸ்வியான வசிஷ்டர் அப்போது பேசலுற்றார்— (7)

''பெருந்தோளனே! பெரும்புகழ் பெற்றவனே! உரோமச் சிலிர்ப்பை உண்டாக்கும் இந்தச் செய்தியையும், உன்னோடுகூட இன்னும் பலர் வைகுண்டம் செல்ல வேண்டியிருப்பதையும், இலக்குவனைப் பிரிந்து நீ இருக்க நேரிடும் என்பதையும், என் தவ வலிமையினால் முன்னரே கண்டறிந்து கொண்டேன். (8)

இவனை (லட்சுமணனை)த் துறப்பாயாக. காலம் மிகவும் வலிமையுடையது. கொடுத்த வாக்குறுதியைப் பொய்யாக்கிவிட வேண்டாம். கொடுத்த வாக்குறுதி காப்பாற்றப்படவில்லை என்றால், தருமம் மறைந்தே போய்விடும். தருமம் அழிந்து போனால், சராசரங்கள் அடங்கிய மூன்று உலகங்களும், தேவ–முனிவர் கூட்டங்களும் மற்றும் எல்லாமும் அழிந்துவிடும். (9,10)

ஆண்புலியே! மூன்று உலகங்களும் காப்பாற்றப்பட வேண்டும் என்ற நோக்கில், இலக்குவனைத் துறந்துவிடுவதுதான் சாலச்சிறந்தது. இனி, லட்சுமணன் இல்லாமலே, (நீ ஒருவனாகவே அரசு அலுவல்களைக் கவனித்து,) இந்த உலகம் நிம்மதியுடன் இருக்க வாக்குறுதியைக் காப்பாற்று.'' (11)

அறம்–பொருள் நிறைந்த இந்தச் சொற்களை, அங்கு கூடியிருந்தவர்களோடுகூடக் கேட்ட இராமன், அந்த அவையில் லட்சுமணனைப் பார்த்துக் கூறினார்— (12)

''சுமித்திரையின் மைந்தனே! நான் உன்னைத் துறந்துவிட்டேன். அறம் பிறழ்ந்ததாக ஆகவேண்டாம். ஒருவனைக் கைவிட்டு விடுதல் அல்லது வதம் செய்தல் என்பது அங்கீகரிக்கப்பட்ட சட்டம். சான்றோர்களுக்கு இரண்டும் சமம்தான்.'' (13)

இராமன் சொல்லி முடித்ததும், புலன்கள் கலங்கி கண்ணீர் பெருக்கிய இலக்குவன், உடனே வெளியே புறப்பட்டுச் சென்றான். ஆனால், அவன் தன் மாளிகைக்குச் செல்லவில்லை. (14)

அவன் சரயு நதியை அடைந்து, ஆசமனம் செய்து, கைகளைக் கூப்பிக் கொண்டு, எல்லாப் புலன்களையும் கட்டுப்படுத்தி, பிராணவாயுவின் ஓட்டத்தை நிறுத்தினான். (15)

லட்சுமணன், யோகத்தால் மூச்சுவிடுவதை நிறுத்திவிட்டான். இதை அறிந்து கொண்ட இந்திரன் முதலிய தேவர்கள், அப்சரப் பெண்டிர், முனிவர் கூட்டங்கள் எல்லாம் அவன்மேல் மலர்மாரி பொழிந்தார்கள். மகாபலசாலியான லட்சுமணன், தன் உடலை மனிதர்கள் பார்க்க முடியாதபடி மறைத்துக் கொண்டான். அப்போது இந்திரன், லட்சுமணனைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு விண்ணுலகம் சென்றான். (16,17)

பின்னர், மகாவிஷ்ணுவின் நான்கில் ஒரு பகுதியான லட்சுமணன் வந்துவிட்டதைக் கண்டு, தேவர்களும் முனிவர்களும் மகிழ்ச்சியடைந்து, அவனை வரவேற்றுப் போற்றினார்கள். (18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நூற்றாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றியேழு

குச–லவர்களுக்குப் பட்டம் சூட்டுதல்

இலக்குவனைக் கைவிட்டுவிட்ட பின்னர், இராமன் மிக்க துயரமும் கவலையும் அடைந்து குருமார்கள், அமைச்சர்கள், மக்கட்தலைவர்கள் ஆகியவர்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்— (1)

Koviloor Digital Library

அத்$_3$ய ராஜ்யேऽபி$_4$ஷேக்ஷ்யாமி ப$_4$ரதம் த$_4$ர்மவத்ஸலம் ।
அயோத்$_4$யாயா: பதிம் வீரம் ததோ யாஸ்யாம்யஹம் வநம் ॥ (2)

ப்ரவேஶயத ஸம்ப$_4$ராந் மா பூ$_4$த் காலஸ்ய பர்யய: ।
அத்$_3$யைவாஹம் க$_3$மிஷ்யாமி லக்ஷ்மணேந க$_3$தாம் க$_3$திம் ॥ (3)

தச்ச்$_2$ருத்வா ராக$_4$வேணோக்தம் ஸர்வா: ப்ரக்ருதயோ ப்$_4$ருஶம் ।
மூர்த$_4$பி$_4$: ப்ரணதா பூ$_4$மௌ க$_3$தஸத்த்வா இவாப$_4$வந் ॥ (4)

ப$_4$ரதஶ்ச விஸம்க்ஞோऽபூ$_4$ச்ச்$_2$ருத்வா ராமஸ்ய பா$_4$ஷிதம் ।
ராஜ்யம் விக$_3$ர்ஹயாமாஸ ராக$_4$வம் சேத$_3$மப்$_3$ரவீத் ॥ (5)

ஸத்யேநாஹம் ஶபே ராஜந் ஸ்வர்க$_3$லோகே ந சைவ ஹி ।
ந காமயே யதா$_2$ ராஜ்யம் த்வாம் விநா ரகு$_4$நந்த$_3$ந ॥ (6)

இமௌ குஶலவௌ ராஜந்நபி$_4$ஷிஞ்ச நராதி$_4$ப ।
கோஸலேஷு குஶம் வீரமுத்தரேஷு ததா$_2$ லவம் ॥ (7)

ஶத்ருக்$_4$நஸ்ய து க$_3$ச்ச$_2$ந்து தூ$_3$தாஸ்த்வரிதவிக்ரமா: ।
இத$_3$ம் க$_3$மநமஸ்மாகம் ஸவர்கா$_3$யாக்$_2$யாந்து மா சிரம் ॥ (8)

தச்ச்$_2$ருத்வா ப$_4$ரதேநோக்தம் த்$_3$ருஷ்ட்வா சாபி ஹ்யதோ$_4$முகா$_2$ந் ।
பௌராந் து$_3$:கே$_2$ந ஸந்தப்தாந் வஸிஷ்டோ$_2$ வாக்யமப்$_3$ரவீத் ॥ (9)

வத்ஸ ராம இமா: பஶ்ய த$_4$ரணீம் ப்ரக்ருதீர்க$_3$தா: ।
க்ஞாத்வைஷாமீப்ஸிதம் கார்யம் மா சைஷாம் விப்ரியம் க்ருதா$_2$: ॥ (10)

வஸிஷ்ட$_2$ஸ்ய து வாக்யேந உத்தா$_2$ப்ய ப்ரக்ருதீஜநம் ।
கிம் கரோமீதி காகுத்ஸ்த$_2$: ஸர்வா வசநமப்$_3$ரவீத் ॥ (11)

தத: ஸர்வா ப்ரக்ருதயோ ராமம் வசநமப்$_3$ருவந் ।
க$_3$ச்ச$_2$ந்தமநுக$_3$ச்சா$_2$மோ யத்ர ராம க$_3$மிஷ்யஸி ॥ (12)

பௌரேஷு யதி$_3$ தே ப்ரீதிர்யதி$_3$ ஸ்நேஹோ ஹ்யநுத்தம: ।
ஸபுத்ரதா$_3$ரா: காகுத்ஸ்த$_2$ ஸமாக$_3$ச்சா$_2$ம ஸத்பத$_2$ம் ॥ (13)

தபோவநம் வா து$_3$ர்க$_3$ம் வா நதீ$_3$மம்போ$_4$நிதி$_4$ம் ததா$_2$ ।
வயம் தே யதி$_3$ ந த்யாஜ்யா: ஸர்வாந்நோ நய ஈஶ்வர ॥ (14)

ஏஷா ந: பரமா ப்ரீதிரேஷ ந: பரமோ வர: ।
ஹ்ருத்$_3$க$_3$தா ந: ஸதா$_3$ ப்ரீதிஸ்தவாநுக$_3$மநே ந்ருப ॥ (15)

Koviloor Digital Library

''இப்போது, தருமத்தில் பிடிப்புள்ள வீரன் பரதனை அயோத்தியின் மன்னனாகப் பட்டம் சூட்டப் போகிறேன். பிறகு, நான் காட்டுக்குச் செல்வேன். (2)

பட்டாபிஷேகத்திற்குத் தேவையான பொருள்களை உடனே கொண்டு வாருங்கள். காலதாமதம் வேண்டாம். இலக்குவன் சென்ற வழியைப் பின்பற்றி, நானும் இப்போதே செல்லப் போகிறேன்.'' (3)

இராமன் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டதும், எல்லா மக்களும் தலையால் தரையைத் தொட்டு (தங்கள் எல்லையற்ற சோகத்தை வெளிப்படுத்தி), உயிரற்றவர்கள்போல் ஆனார்கள். (4)

இராமன் கூறியதைக் கேட்ட பரதன், தன் சுயநினைவை இழந்தான். ஆட்சி புரிவதை இகழ்ந்துப் பேசினான். பின்னர், இராமனைப் பார்த்துக் கூறினான்— (5)

''மன்னரே! ரகுநந்தனா! நான் சத்தியத்தின்மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன். தாங்கள் இல்லாமல், அரசபோகம் எனக்குத் தேவையில்லை. ஏன், தாங்கள் இல்லாவிட்டால் சுவர்க்க போகமும் எனக்கு வேண்டாம். (6)

மன்னரே! குச–லவர்களுக்குப் பட்டம் சூட்டுங்கள். தென்கோசல நாட்டை குசனுக்கும், வடகோசலத்தை லவனுக்கும் அளியுங்கள். (7)

வேகமாக செல்லக்கூடிய தூதர்கள், சத்ருக்னனிடம் சென்று நாம் எல்லோரும் சுவர்க்கம் செல்கிறோம் என்னும் செய்தியைத் தெரிவிக்கட்டும். காலதாமதம் வேண்டாம்.'' (8)

பரதன் இவ்வாறு கூறியதைக் கேட்டும், நகர மக்கள் துக்கம் தாங்காமல் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டிருப்பதையும் பார்த்த வசிஷ்டர் (பின்வருமாறு) கூறினார்— (9)

''குழந்தாய், இராமனே! தலையைத் தரையில் படும்படியாக வைத்துக் கொண்டு, மக்கள் எல்லோரும் துக்கப்படுவதைப் பார். இவர்களுடைய எண்ணத்தை அறிந்து கொண்டு, அதற்கேற்ப நடப்பாய். இவர்கள் மனத்திற்கு ஒவ்வாததைச் செய்யாதே. (10)

வசிஷ்டருடைய அறிவுரையைக் கேட்ட இராமன், எல்லா மக்களையும் தலைநிமிர்ந்து நிற்கச் செய்து, அவர்கள் எல்லோரையும் பார்த்து, ''நான் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?'' என்று கேட்டார். (11)

அப்போது, எல்லா மக்களும் இராமனைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார்கள்— ''இராமா! தாங்கள் எங்கே செல்கிறீர்களோ, அதே இடத்திற்குத் தங்களைப் பின்பற்றி வருவோம். (12)

குடிமக்களிடம் தாங்கள் திருப்தி அடைந்தவராக இருப்பீர்களேயானால், அவர்களிடம் அளவற்ற அன்பு வைத்திருப்பீர்களேயானால், காகுத்தரே! மனைவி–மக்களுடன் தாங்கள் செல்லும் நல்ல வழியிலேயே நாங்களும் உடன் வருவோம். (13)

நாங்கள் எல்லோரும் தங்களால் கைவிடத்தக்கவர் அல்லர் என்று நினைத்தால், தாங்கள் செல்லும் இடம் – தவச்சாலை, உட்புகமுடியாத கோட்டை, ஆறு, கடல் ஆகிய எதுவாக இருந்தாலும் – எங்களையும் தங்களுடன் அழைத்துச் செல்வீர்களாக. (14)

இதுதான் எங்களுக்கு மனநிம்மதியை அளிக்கக் கூடிய செயல்; இதுதான் நாங்கள் கோரும் பெரிய வரம். மன்னரே! தங்களைப் பின்தொடர்ந்து வருவதுதான், எங்கள் நெஞ்சில் எப்போதும் அமைதியை உண்டாக்கும்.'' (15)

Koviloor Digital Library

பௌராணாம் த்$_{3}$ருட$_{4}$பக்திம் ச ப$_{3}$ாட$_{4}$மித்யேவ ஸோऽப்$_{3}$ரவீத் ।
ஸ்வக்ருதாந்தம் சாந்வவேக்ஷ்ய தஸ்மிந்நஹநி ராக$_{4}$வ: ॥ (16)

கோஸலேஷு குஶம் வீரமுத்தரேஷு தத$_{2}$ா லவம் ।
அபி$_{4}$ஷிச்ய மஹாத்மாநாவுபௌ$_{4}$ள ராம: குஶீலவௌ ॥ (17)

அபி$_{4}$ஷிக்தௌ ஸுதாவங்கே ப்ரதிஷ்ட$_{2}$ாப்ய புரே தத: ।
பரிஷ்வஜ்ய மஹாப$_{3}$ாஹுர்மூர்த்$_{4}$ந்யுபாக்$_{4}$ராய சாஸக்ருத் ॥ (18)

ரத$_{2}$ாநாம் து ஸஹஸ்ராணி நாக$_{3}$ாநாமயுதாநி ச ।
த$_{3}$ஶாயுதாநி சாஶ்வாநாமேகைகஸ்ய த$_{4}$நம் த$_{3}$தௌ$_{3}$ள ॥ (19)

ப$_{3}$ஹுரத்நௌ ப$_{3}$ஹுத$_{4}$நௌ ஹ்ருஷ்டபுஷ்டஜநாவ்ருதௌ ।
ஸ்வே புரே ப்ரேஷயாமாஸ ப்$_{4}$ராதரௌ து குஶீலவௌ ॥ (20)

அபி$_{4}$ஷிச்ய ஸுதௌ வீரௌ ப்ரதிஷ்ட$_{2}$ாப்ய புரே தத$_{3}$ா ।
தூ$_{3}$தாந் ஸம்ப்ரேஷயாமாஸ ஶத்ருக்$_{4}$நாய மஹாத்மநே ॥ (21)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_{3}$ராமாயணே வால்மீகீயே ஆதி$_{3}$காவ்யே
உத்தரகாண்டே$_{3}$ ஸப்தோத்தரஶததம: ஸர்க$_{3}$: ॥

அஷ்டோத்தரஶததம: ஸர்க$_{3}$:

விபீ$_{4}$ஷணாத்$_{3}$யாதே$_{3}$ஶ:

தே தூ$_{3}$தா ராமவாக்யேந சோதி$_{3}$தா லகு$_{4}$விக்ரமா: ।
ப்ரஜக்$_{3}$முர்மது$_{4}$ராம் ஶீக்$_{4}$ரம் சக்ருர்வாஸம் ச நாத்$_{4}$வநி ॥ (1)

தே து த்ரிபி$_{4}$ரஹோராத்ரை: ஸம்ப்ராப்ய மது$_{4}$ராமத$_{2}$ ।
ஶத்ருக்$_{4}$நாய யத$_{2}$ாதத்த்வமாசக்$_{2}$யு: ஸர்வமேவ தத் ॥ (2)

லக்ஷ்மணஸ்ய பரித்யாக$_{3}$ம் ப்ரதிக்ஞாம் ராக$_{4}$வஸ்ய ச ।
புத்ரயோரபி$_{4}$ஷேகம் ச பௌராநுக$_{3}$மநம் தத$_{2}$ா ॥ (3)

குஶஸ்ய நக$_{3}$ரீ ரம்யா விந்த்$_{4}$யபர்வதரோத$_{4}$ஸி ।
குஶாவதீதி நாம்நா ஸா க்ருதா ராமேண தீ$_{4}$மதா ॥
ஶ்ராவஸ்தீதி புரீ ரம்யா ஶ்ராவிதா ச லவஸ்ய ச ॥ (4)

அயோத்$_{4}$யாம் விஜநாம் க்ருத்வா ராக$_{4}$வோ ப$_{4}$ரதஸ்தத$_{2}$ா ।
ஸ்வர்க$_{3}$ஸ்ய க$_{3}$மநோத்$_{3}$யோக$_{3}$ம் க்ருதவந்தௌ மஹாரதௌ$_{2}$ள ॥ (5)

ஏவம் ஸர்வம் நிவேத்$_{3}$யாஶு ஶத்ருக்$_{4}$நாய மஹாத்மநே ।
விரேமுஸ்தே ததோ தூ$_{3}$தாஸ்த்வர ராஜேதி சாப்$_{3}$ருவந் ॥ (6)

தச்ச்$_{2}$ருத்வா கோ$_{4}$ரஸங்காஶம் குலக்ஷயமுபஸ்தி$_{2}$தம் ।
ப்ரக்ருதீஸ்து ஸமாநீய காஞ்சநம் ச புரோத$_{4}$ஸம் ॥
தேஷாம் ஸர்வம் யத$_{2}$ாவ்ருத்தமப்$_{3}$ரவீத்$_{3}$ரகு$_{4}$நந்த$_{3}$ந: ॥ (7)

Koviloor Digital Library

குடிமக்களின் உறுதியான பேரன்பைக் கண்ட இராமன், "அவ்வாறே ஆகட்டும்" என்று கூறினார். தன்னுடைய கடமையையும் நினைத்துப் பார்த்து, அதே நாளில், தென்கோசலத்திற்கு அதிபதியாக வீரன் குசனையும், வடகோசல மன்னனாக லவனையும் முடிசூட்டினார். குச–லவர்களுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்த பின்னர், இரு குமாரர்களையும் கட்டியணைத்து, மடியில் வைத்துக் கொண்டு, பல தடவை உச்சிமுகர்ந்து, அவரவர்களுடைய தலைநகரங்களுக்கு அனுப்பி வைத்தார். (16–18)

ஒவ்வொருவருக்கும் ஆயிரக்கணக்கான தேர்கள், பதினாயிரக்கணக்கான யானைகள், லட்சக்கணக்கான குதிரைகள் மற்றும் செல்வத்தையும் கொடுத்தார். (19)

சகோதரர்களான குச–லவர்களுக்கு அநேகவித இரத்தினங்களையும் பலவகையான செல்வங்களையும் கொடுத்தார். மனவளம், உடல்வளம் கொண்ட மக்களால் சூழப்பட்டவர்களாக, அவரவர் நகரத்திற்கு அனுப்பி வைத்தார். (20)

குமாரர்களுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்துவிட்டு, அவரவர் நகரங்களில் நிலைபெறச் செய்த பின்னர், மகாத்மாவான சத்ருக்னனுக்குத் தூதர்களை அனுப்பினார், இராமன். (21)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நூற்றியேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றியெட்டு

விபீஷணன் முதலியோருக்கு இட்ட கட்டளை

வேகமாக செல்லக்கூடிய தூதர்கள், இராமனுடைய ஆணைப்படி, வழியில் எங்கும் தங்காமல் வெகுவிரைவாக மதுராபுரி நோக்கிச் சென்றார்கள். (1)

அவர்கள், இரவுபகலாக மூன்று நாள்கள் பயணம் செய்து மதுரையை அடைந்தார்கள். சத்ருக்னனைச் சந்தித்து, அயோத்தியில் நிகழ்ந்த எல்லாவற்றையும் நடந்தவாறே விவரித்தார்கள். (2)

இராமனுடைய வாக்குறுதி, லட்சுமணனைத் துறத்தல், இரு குமாரர்களுக்கும் பட்டாபிஷேகம், குடிமக்கள் இராமனுடன் செல்லும் தீர்மானம் ஆகிய எல்லாவற்றையும் எடுத்துரைத்தார்கள். (3)

பேரறிஞரான இராமன், விந்தியமலை அடிவாரத்தில் குசாவதி என்னும் அழகான நகரத்தை நிர்மாணித்து, குசனின் தலைநகராக்கினார். அதேபோல், சிராவஸ்தி என்னும் எழில்மிக்க நகரத்தை லவனின் தலைநகராக்கினார். (4)

தேர்வீரர்களான பரதனும் இராமனும், அயோத்தியைக் காலி செய்துவிட்டு, நகர மக்கள் அனைவரோடும்கூட தேவலோகம் செல்வதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள்." (5)

இவ்வாறு, நிகழ்ந்த எல்லாவற்றையும் மகாத்மாவான சத்ருக்னனிடம் தெரிவித்துவிட்டு, "மன்னனே! விரைவாகப் புறப்படுங்கள்" என்று தூண்டிவிட்டார்கள். (6)

தன்னுடைய பரம்பரைக்குப் பயங்கரமான அழிவு நேரவிருப்பதைக் கேட்டறிந்த சத்ருக்னன், எல்லா மக்களையும், காஞ்சனர் என்ற பெயருள்ள புரோகிதரையும் அழைப்பித்து, தூதர்களிடமிருந்து தான் கேட்ட எல்லா விபரங்களையும் கூறினான். (7)

Koviloor Digital Library

ஆத்மநஶ்ச விபர்யாஸம் ப$_4$விஷ்யம் ப்$_4$ராத்ருபி$_4$: ஸஹ ।
தத: புத்ரத்$_3$வயம் வீர: ஸோऽப்$_4$யஷிஞ்சந்நராதி$_4$ப: ॥ (8)

ஸுபா$_3$ஹுர்மது$_4$ராம் லேபே$_4$ ஶத்ருகா$_4$தீ ச வைதி$_3$ஶம் ।
த்$_3$விதா$_4$ க்ருத்வா து தாம் ஸேநாம் மாது$_4$ரீம் புத்ரயோர்த்$_3$வயோ: ॥ (9)

த$_4$நம் ச யுக்தம் க்ருத்வா வை ஸ்தா$_2$பயாமாஸ பார்தி$_2$வ: ।
ஸுபா$_3$ஹும் மது$_4$ராயாம் ச வைதி$_3$ஶே ஶத்ருகா$_4$திநம் ॥
யயௌ ஸ்தா$_2$ப்ய ததா$_3$யோத்$_4$யாம் ரதே$_2$நைகேந ராக$_4$வ: ॥ (10)

ஸ த$_3$த$_3$ர்ஶ மஹாத்மாநம் ஜ்வலந்தமிவ பாவகம் ।
ஸூக்ஷ்மக்ஷௌமாம்ப$_3$ரத$_4$ரம் முநிபி$_4$: ஸார்த$_4$மக்ஷயை: ॥ (11)

ஸோऽபி$_4$வாத்$_3$ய ததோ ராமம் ப்ராஞ்ஜலி: ப்ரயதேந்த்$_3$ரிய: ।
உவாச வாக்யம் த$_4$ர்மஜ்ஞம் த$_4$ர்மமேவாநுசிந்தயந் ॥ (12)

க்ருத்வாபி$_4$ஷேகம் ஸுதயோர்யுக்தம் ராக$_4$வநந்த$_3$ந ।
தவாநுக$_3$மநே ராஜந் வித்$_3$தி$_4$ மாம் க்ருதநிஶ்சயம் ॥ (13)

ந சாந்யத$_3$பி வக்தவ்யமதோ வீர ந ஶாஸநம் ।
விலோக்யமாநமிச்சா$_2$மி த்வத்$_3$விதே$_4$ந விஶேஷத: ॥ (14)

தஸ்ய தாம் பு$_3$த்$_3$தி$_4$மக்லீபா$_3$ம் விஜ்ஞாய ரகு$_4$நந்த$_3$ந: ।
பா$_3$ட$_4$மித்யேவ ஶத்ருக்$_4$நம் ராமோ வாக்யமுவாச ஹ ॥ (15)

தஸ்ய வாக்யஸ்ய வாக்யாந்தே வாநரா: காமரூபிண: ।
ருக்ஷராக்ஷஸஸங்கா$_4$ஶ்ச ஸமாபேதுரநேகஶ: ॥
ஸுக்$_3$ரீவம் தே புரஸ்க்ருத்ய ஸர்வ ஏவ ஸமாக$_3$தா: ॥ (16)

தே ராமம் த்$_3$ரஷ்டுமநஸ: ஸ்வர்கா$_3$யாபி$_4$முக$_2$ம் ஸ்தி$_2$தம் ।
தே$_3$வபுத்ரா ருஷிஸுதா க$_3$ந்த$_4$ர்வாணாம் ஸுதாஸ்ததா$_2$ ॥ (17)

ராமக்ஷயம் விதி$_3$த்வா தே ஸர்வே ஏவ ஸமாக$_3$தா: ।
தே ராமமபி$_4$வாத்$_3$யோசு: ஸர்வே வாநரராக்ஷஸா: ॥ (18)

தவாநுக$_3$மநே ராஜந் ஸம்ப்ராப்தா: க்ருதநிஶ்சயா: ।
யதி$_3$ ராம விநாஸ்மாபி$_4$ர்க$_3$ச்சே$_2$ஸ்த்வம் புருஷோத்தம ॥ (19)

யமத$_3$ண்ட$_3$மிவோத்$_3$யம்ய த்வயா ஸ்ம விநிபாதிதா: ।
ஏதைரேவமுக்த: காகுத்ஸ்தோ$_2$ பா$_3$ட$_4$மித்யப்$_3$ரவீத் ஸ்மயந் ॥ (20)

ஏதஸ்மிந்நந்தரே ராமம் ஸுக்$_3$ரீவோऽபி மஹாப$_3$ல: ।
ப்ரணம்ய விதி$_4$வத்$_3$வீரம் விஜ்ஞாபயிதுமுத்$_3$யத: ॥ (21)

Koviloor Digital Library

மற்ற சகோதரர்களோடு, தானும் உடலைத் தியாகம் செய்யவிருப்பதையும் சொன்னான். பிறகு, தன் இரு குமாரர்களுக்கும் பட்டாபிஷேகம் செய்வித்தான். (8)

சுபாகு (என்ற மைந்தன்) மதுரை அரசைப் பெற்றான்; சத்ருகாதி (என்ற புதல்வன்) விதிசா என்ற பகுதியை அடைந்தான். மதுரையின் படைகளை இரு பிரிவுகளாகப் பிரித்து, சத்ருக்னன் தன் இரு புதல்வர்களுக்கும் சமமாகக் கொடுத்தான். மேலும், பாகப்பிரிவினை செய்யக்கூடிய செல்வங்களைச் சமமாகப் பிரித்துக் கொடுத்தான். இவ்வாறாக, சுபாகுவை மதுரையிலும், சத்ருகாதியை விதிசா நாட்டிலும் சத்ருக்னன் நிலைநிறுத்தினான். அவ்வாறு ஆட்சியை உறுதி செய்துவிட்டு, ஒரு தேரில் ஏறி, தன்னந்தனியனாக அயோத்திக்குச் சென்றான். (9,10)

அழிவற்ற முனிவர்களோடு வீற்றிருந்த ஒப்புயர்வில்லாத இராமன், மிகவுயர்ந்த பட்டாடை அணிந்து, தன் உள்ளொளியால் ஒளிவீசிக் கொண்டிருப்பதையும் கண்டான். (11)

புலன்களைத் தன்வசத்தில் வைத்திருந்த அவன் இராமனை வணங்கிவிட்டு, கைகளைக் கூப்பிக் கொண்டான். அறம் அறிந்தவரான இராமனை நோக்கி, அறவழியில் சிந்தனை செலுத்தும் சத்ருக்னன் சொல்லலுற்றான். (12)

''ரகு குலத்தின் ஆனந்தக் களஞ்சியமே! என் இரண்டு புதல்வர்களுக்கும் பட்டாபிஷேகம் செய்வித்து, ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்துவிட்டேன். மன்னரே! தங்களுடன் கூடவே செல்வது என்ற முடிவுடன் நான் வந்திருக்கிறேன். (13)

வீரரே! அதனால், வேறுவிதமாக ஆணையிட்டு என்னைத் தண்டித்து விடாதீர்கள். என் கோரிக்கையின் அங்கீகாரத்தையே எதிர்பார்க்கிறேன். தங்களைப் போன்றவர்கள் எப்போதும் பேரருள் செய்பவர்கள், அல்லவா?'' (14)

சத்ருக்னனுடைய உறுதியான தீர்மானத்தைப் புரிந்து கொண்ட இராமன், ''அவ்வாறே ஆகுக'' என்று பதில் கூறினார். (15)

இவ்வாறு, அவர் சொல்லி முடித்ததும், இஷ்டம்போல் உருவம் எடுக்கக்கூடிய வானரர்கள், கரடிகள், அரக்கர்கள் முதலியோர் சுக்ரீவனை முன்னிட்டுக் கொண்டு ஏராளமாக வந்து சேர்ந்தார்கள். (16)

விண்ணுலகம் செல்வதற்கு ஆயத்தமாக நிற்கும் இராமபிரானைத் தரிசனம் செய்வதற்காக தேவகுமாரர்கள், முனிகுமாரர்கள், கந்தர்வர்களின் குமாரர்கள் அங்கு வந்திருந்தார்கள். (17)

இராமபிரானின் லீலை நிறைவடைந்து விட்டதை அறிந்து கொண்ட அவர்கள், அப்போது அங்கே கூடிநின்று இராமனை வணங்கினார்கள். எல்லா வானரர்களும் அரக்கர்களும் (பின்வருமாறு) கூறினார்கள்— (18)

''மாமன்னரே! புருஷோத்தமரே! தங்களைப் பின்தொடர்ந்து செல்வது என்ற நிச்சயத்துடன் நாங்கள் வந்திருக்கிறோம். நாங்கள் இல்லாமல் தாங்கள் செல்வது என்று நிச்சயித்தால், யமதண்டத்தினால் தாக்கப்பட்டு தரையில் சாய்க்கப்பட்டவர்கள்போல் ஆவோம்.'' அவர்கள் இவ்வாறு கூறியதும், இராமன் சற்றே புன்னகைத்து, ''உங்கள் விருப்பப்படியே ஆகட்டும்'' என்று கூறினார். (19,20)

இதனிடையில், மகாபலசாலியான சுக்ரீவன் இராமனை முறைப்படி வணங்கி, ஏதோ விண்ணப்பித்துக் கொள்ளத் துடித்தான். (21)

Koviloor Digital Library

அபி$_4$ஷிச்யாங்க$_3$த$_3$ம் வீரமாக$_3$தோऽஸ்மி நரேஸ்வர ।
தவாநுக$_3$மநே ராஜந் வித்$_3$தி$_4$ மாம் க்ருதநிஸ்சயம் ॥ (22)

தஸ்ய தத்$_3$வசநம் ஸ்ருத்வா ராமோ ரமயதாம் வர: ।
வாநரேந்த்$_3$ரமதே$_2$ாவாச மைத்ரம் தஸ்யாநுசிந்தயந் ॥ (23)

ஸகே$_2$ ஸ்ருணுஷ்வ ஸுக்$_3$ரீவ ந த்வயாஹம் விநாக்ருத: ।
கச்$_3$சே$_2$யம் தே$_3$வலோகம் வா பரமம் வா பத$_3$ம் மஹத் ॥ (24)

விபீ$_4$ஷணமதே$_2$ாவாச ராக்ஷஸேந்த்$_3$ரம் மஹாயஸா: ।
யாவத் ப்ரஜா த$_4$ரிஷ்யந்தி தாவத்த்வம் வை விபீ$_4$ஷண ॥
ராக்ஷஸேந்த்$_3$ர மஹாவீர்ய லங்காஸ்த$_2$: ஸ்வம் த$_4$ரிஷ்யஸி ॥ (25)

யாவச்சந்த்$_3$ரஸ்ச ஸூர்யஸ்ச யாவத்திஷ்ட$_2$தி மேதி$_3$நீ ।
யாவச்ச மத்கத$_2$ா லோகே தாவத்$_3$ராஜ்யம் தவாஸ்த்விஹ ॥
ஸாஸிதஸ்த்வம் ஸகி$_2$த்வேந கார்யம் தே மம ஸாஸநம் ॥ (26)

ப்ரஜா: ஸம்ரக்ஷ த$_4$ர்மேண நோத்தரம் வக்துமர்ஹஸி ।
கிம்சாந்யத்$_3$வக்துமிச்ச$_2$ாமி ராக்ஷஸேந்த்$_3$ர மஹாமதே ॥ (27)

ஆராத$_4$ய ஜக$_3$ந்நாத$_2$மிக்ஷ்வாகுகுலதை$_3$வதம் ।
ஆராத$_4$நீயமநிஸம் ஸர்வைர்தே$_3$வை: ஸவாஸவை: ॥ (28)

ததே$_2$தி ப்ரதிஜக்$_3$ராஹ ராமவாக்யம் விபீ$_4$ஷண: ।
ராஜா ராக்ஷஸமுக்$_2$யாநாம் ராக$_4$வாக்ஞாமநுஸ்மரந் ॥ (29)

தமேவமுக்த்வா காகுத்ஸ்தே$_2$ா ஹநூமந்தமத$_2$াப்$_3$ரவீத் ।
ஜீவிதே க்ருதபு$_3$த்$_3$தி$_4$ஸ்த்வம் மா ப்ரதிக்ஞாம் விலோபய ॥ (30)

மத்கத$_2$ா: ப்ரசரிஷ்யந்தி யாவல்லோகே ஹரீஸ்வர ।
தாவத்$_3$ரமஸ்வ ஸுப்ரீதோ மத்$_3$வாக்யமநுபாலயந் ॥ (31)

ஏவமுக்தஸ்து ஹநுமாந் ராக$_4$வேண மஹாத்மநா ।
வாக்யம் விக்ஞாபயாமாஸ பரம் ஹர்ஷமவாப்ய ச ॥ (32)

யாவத்தவ கத$_2$ா லோகே விசரிஷ்யதி பாவநீ ।
தாவத் ஸ்த$_2$ாஸ்யாமி மேதி$_3$ந்யாம் தவாக்ஞாமநுபாலயந் ॥ (33)

ஜாம்ப$_3$வந்தம் ததே$_2$ாக்த்வா து வ்ருத்$_3$த$_4$ம் ப்$_3$ரஹ்மஸுதம் தத$_2$ா ।
மைந்த$_3$ம் ச த்$_3$விவித$_3$ம் சைவ பஞ்ச ஜாம்ப$_3$வதா ஸஹ ॥
யாவத் கலிஸ்ச ஸம்ப்ராப்தஸ்தாவஜ்ஜீவத ஸர்வத$_3$ா ॥ (34)

Koviloor Digital Library

''பெருந்தகையாளரே! வீரனான அங்கதனுக்குப் பட்டம் சூட்டிவிட்டேன். தங்களுடனே செல்லும் உறுதியுடன் வந்திருக்கிறேன்.'' (22)

பிறருக்கு ஆனந்தம் அளிப்பவர்களில் மிகச்சிறந்தவரான இராமன், வானர மன்னனுடன் இருக்கும் நட்பை நினைவிற்கொண்டு, ''சுக்ரீவனே! நண்பனே! கேள், நீ இல்லாமல், தேவலோகமோ, அல்லது பரமபதமோ, அல்லது வேறு உயர்ந்த இடத்திற்கோ போகவே மாட்டேன்!'' (23,24)

பெரும்புகழ் கொண்ட இராமன், அரக்கர் தலைவனான விபீஷணனை நோக்கிக் கூறினார்— ''விபீஷணா! உலகில் மக்கள் எதுவரை உயிர்வாழ்கிறார்களோ, அவ்வளவு காலம்வரை, இலங்கையில் உடலுடன் இருக்கப் போகிறாய். (25)

உலகில் சூரிய–சந்திரர்கள் இருக்கும் நாள்வரை, என் வரலாறு உலகில் நின்று நிலவும் காலம் வரை நீ இங்கு இருப்பாய். நான், நட்பு முறையில் இவையனைத்தையும் கூறியுள்ளேன். என்னுடைய ஆணைப்படியே நீ நடக்கவேண்டும். (26)

அறநெறி வழுவாமல் குடிமக்களைக் காப்பாற்று. பேரறிவாளனே! அரக்கர் மன்னனே! நான், மேலும் ஒரு செய்தி சொல்ல விரும்புகிறேன். (27)

இக்ஷ்வாகு மரபினரின் குலதேவதையான பகவான் ஜகந்நாதனை வழிபட்டு வருவாயாக. எல்லா தேவதைகளாலும் இந்திரனாலும்கூட, அவர் எப்போதும் ஆராதிக்கத்தக்கவர்.'' (28)

அரக்கத் தலைவர்களுக்கெல்லாம் மன்னனான விபீஷணன், இராமனுடைய ஆணையை ஏற்றுக் கொண்டான். இராமனுடைய ஆணையை மனத்தில் பதித்துக் கொண்டான். (29)

அவனிடம் (விபீஷணனிடம்) மேற்கண்டவாறு கூறிவிட்டு, (இராமன்) அனுமானை நோக்கி, ''நீண்ட நெடுங்காலம் இவ்வுலகில் வாழவேண்டும் என்று நிச்சயம் செய்திருக்கிறாய். அந்தச் சொல்லை அழித்துவிடாதே. (30)

என்னுடைய கதைகள் எவ்வளவு காலம்வரை உலகில் பேசப்படுகின்றனவோ, அவ்வளவு காலம் என் கட்டளையை நினைவிற்கொண்டு, மன நிறைவுடன் இன்பமாக இரு.'' (31)

மகாத்மா இராமன் இவ்வாறு கூறியதும், மிகவும் மகிழ்ச்சியடைந்த அனுமான், பின்வருமாறு விண்ணப்பித்துக் கொண்டார்— (32)

''புனிதமான தங்கள் கதை இவ்வுலகில் எதுவரை பேசப்படுகிறதோ, அதுவரை, தங்கள் கட்டளையை நினைவிற்கொண்டு, மண்ணுலகில் இருந்து கொண்டிருப்பேன்.'' (33)

பின்னர், பிரும்மாவின் புதல்வரும் முதியவருமான ஜாம்பவான் மற்றும் மைந்தன்–த்விவிதனை நோக்கி, ''நீங்கள் ஐவரும் (ஜாம்பவான், விபீஷணன், அனுமான், மைந்தன், த்விவிதன்) கலியுகம் தோன்றும் வரையில் இங்கே இருப்பீர்களாக'' என்று கூறினார், இராமன். (34)

Koviloor Digital Library

தாநேவமுக்த்வா காகுத்ஸ்த$_2$: ஸர்வாம்ஸ்தாந்ருக்ஷவாநராந் ।
உவாச ப$_3$ாட$_4$ம் க$_3$ச்ச$_2$த்$_4$வம் மயா ஸார்த$_4$ம் யதே$_2$ப்ஸிதம் ॥ (35)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ அஷ்டோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

நவோத்தரஶததம: ஸர்க$_3$:

ஸ்ரீராமமஹாப்ரஸ்த$_2$ாநம்

ப்ரப$_4$ாதாயாம் து ஶர்வர்யாம் ப்ருது$_2$வக்ஷா மஹாயஶா: ।
ராம: கமலபத்ராக்ஷ: புரோத$_4$ஸமத$_2$ாப்$_3$ரவீத் ॥ (1)

அக்$_3$நிஹோத்ரம் வ்ரஜத்வக்$_3$ரே தீ$_3$ப்யமாநம் ஸஹ த்$_3$விஜை: ।
வாஜபேயாதபத்ரம் ச ஶோப$_4$மாநம் மஹாபதே$_2$ ॥ (2)

ததோ வஸிஷ்ட$_2$ஸ்தேஜஸ்வீ ஸர்வம் நிரவஶேஷத: ।
சகார விதி$_4$வத்$_3$த$_4$ர்மம் மஹாப்ராஸ்த$_2$ாநிகம் விதி$_4$ம் ॥ (3)

தத: ஸூக்ஷ்மாம்ப$_3$ரத$_4$ரோ ப்$_3$ரஹ்மமாவர்தயந் பரம் ।
குஶாந் க்$_3$ருஹீத்வா பாணிப்$_4$யாம் ப்ரஸஜ்ய ப்ரயயாவத$_2$ ॥ (4)

அவ்யாஹரந் க்வசித்கிஞ்சிந்நிஶ்சேஷ்டோ நி:ஸுக$_2$: பதி$_2$ ।
நிர்ஜக$_3$ாம க்$_3$ருஹாத்தஸ்மாத்$_3$தீ$_3$ப்யமாந இவாம்ஶுமாந் ॥ (5)

ராமஸ்ய த$_3$க்ஷிணே பார்ஶ்வே ஸபத்$_3$மா ஸ்ரீருபாஶ்ரிதா ।
ஸவ்யே து ஹ்ரீர்மஹாதே$_3$வீ வ்யவஸாயஸ்தத$_2$ாக்$_3$ரத: ॥ (6)

ஶரா நாநாவித$_4$ாஶ்சாபி த$_4$நுராயதமுத்தமம் ।
தத$_2$ாயுத$_4$ாநி தே ஸர்வே யயு: புருஷவிக்$_3$ரஹா: ॥ (7)

வேத$_3$ா ப்$_3$ராஹ்மணரூபேண கா$_3$யத்ரீ ஸர்வரக்ஷிணீ ।
ஓங்காரோத$_2$ வஷட்கார: ஸர்வே ராமமநுவ்ரதா: ॥ (8)

ருஷயஶ்ச மஹாத்மாந: ஸர்வ ஏவ மஹீஸுரா: ।
அந்வக$_3$ச்ச$_2$ந் மஹாத்மாநம் ஸ்வர்க$_3$த்$_3$வாரமபாவ்ருதம் ॥ (9)

தம் யாந்தமநுக$_3$ச்ச$_2$ந்தி ஹ்யந்த:புரசரா: ஸ்த்ரிய: ।
ஸவ்ருத்$_3$த$_4$ப$_3$ாலத$_3$ாஸீகா: ஸவர்ஷத$_4$ரகிங்கரா: ॥ (10)

ஸாந்த:புரஶ்ச ப$_4$ரத: ஶத்ருக்$_4$நஸஹிதோ யயௌ ।
ராமம் க$_3$திமுபாக$_3$ம்ய ஸாக்$_3$நிஹோத்ரமநுவ்ரத: ॥ (11)

தே ச ஸர்வே மஹாத்மாந: ஸாக்$_3$நிஹோத்ரா: ஸமாக$_3$தா: ।
ஸபுத்ரத$_3$ாரா: காகுத்ஸ்த$_2$மநுஜக்$_3$முர்மஹாமதிம் ॥ (12)

1906 Valmiki Ramayan Part 5 (Tamil)_Section_33_Back

Koviloor Digital Library

அவர்களிடம் இவ்வாறு கூறிவிட்டு, அங்குக் கூடியிருந்த கரடிகளையும் வானரர்களையும் பார்த்து, ''நீங்கள் விரும்பியபடி என்னுடன் வரலாம்'' என்று காகுத்தர் கூறினார். (35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நூற்றியெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றியொன்பது

இராமன் திருநாட்டுக்குப் புறப்படுதல்

இரவு கழிந்து, பொழுது விடிந்ததும் விசாலமான மார்பினை உடையவரும் பெரும் கீர்த்தி பெற்றவரும், தாமரைக் கண்ணருமான இராமன், புரோகிதரிடம் (பின்வருமாறு) கூறினார்— ''கொழுந்துவிட்டெரியும் என்னுடைய அக்னிஹோத்ர குண்டம், வேதவித்தகர்களுடன் முன்னே செல்வதாக. திருநாட்டுக்கு எழுந்தருளும் இந்த யாத்திரையில், வாஜபேய யாகத்தின் போது நிறுவப்பட்ட அழகான குடையும் உடன் வரவேண்டும்.'' (1,2)

அவர் இவ்வாறு கூறியவுடன், தவப்பொலிவுடன் விளங்கும் வசிஷ்டர், மகாபிரஸ்தான (நெடுந்தொலைவுப் பயணம்) காலத்தில் செய்ய வேண்டிய வைதிகச் சடங்குகள் அனைத்தையும் முழுமையாகச் செய்து முடித்தார். (3)

பின்னர் இராமன், சூட்சுமமான ஆடை அணிந்து கொண்டு, இரு கைகளிலும் குசம் என்ற தர்பத்தை ஏந்திக்கொண்டு, பரப்பிரும்ம விளக்கமான வேதமந்திரங்களை உச்சரித்துக் கொண்டு, சரயு நதிக்கரைக்குச் சென்றார். (4)

அந்தச் சமயம், வேத மந்திரங்களைத் தவிர வேறு எந்த ஒரு சொல்லையும் பேசவில்லை; பாதையில் நடந்து செல்வது என்பதைத் தவிர வேறு ஒரு செயலையும் செய்யவில்லை. உலக சுகத்தைத் துறந்து, கதிரொளி வீசும் சூரியனைப்போல் பிரகாசித்துக் கொண்டு, தன் இருப்பிடத்திலிருந்து வெளியேறிச் சென்றார். (5)

இராமனுடைய வலதுபுறத்தில் கையில் தாமரைமலர் தாங்கிய ஸ்ரீதேவியும், இடதுபுறத்தில் பூதேவியும், முன்புறத்தில் அழிவுசக்தியும் சென்றார்கள். (6)

பலவகையான அம்புகள், விசாலமான விற்கள், மற்ற ஆயுதங்கள் எல்லாம் ஆண் உருவம் ஏற்று பகவானுடன் சென்றார்கள், (சென்றன). (7)

அந்தணர் வடிவமேற்றுக் கொண்டு நான்கு வேதங்களும், எல்லோரையும் காப்பாற்றும் காயத்ரிதேவி, ஓங்காரம், வஷட்காரம் ஆகியவையும் இராமனுடன் சென்றன. (8)

மகாத்மாக்களான முனிவர்கள், எல்லா வேதவித்தகர்கள், திறந்து வைக்கப்பட்ட வைகுண்ட வாசலைப் போன்ற இராமனுடன் சென்றார்கள். (9)

அந்தப்புரத்திலிருந்த பெண்மணிகள், வயோதிக மாதர்கள், இளம்பெண்கள், வேலைக்காரிகள், திருநங்கைகள் (அலிகள்) மற்றும் பணியாளர்கள் ஆகியவரனைவரும் இராமனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். (10)

சத்ருக்னனோடுகூட அந்தப்புரப் பெண்மணிகளுடன், இராமன் செல்லும் வழியில், தன் அக்னிஹோத்திரத்தை எடுத்துக் கொண்டு சென்றான், பரதன். (11)

மகாமனஸ்விகளான அவர்கள் எல்லோரும் தத்தம் அக்னிஹோத்ரம், மனைவி–மைந்தர்கள் உடன்வர, பேரறிவாளரான இராமனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். (12)

Koviloor Digital Library

மந்த்ரிணோ ப்$_4$ருத்யவர்க$_3$ாஸ்ச ஸபுத்ரபஸூப$_3$ாந்த$_4$வா: ।
ஸர்வே ஸஹாநுக$_3$ா ராமமந்வக$_3$ச்ச$_2$ந் ப்ரஹ்ருஷ்டவத் ॥ (13)

தத: ஸர்வா: ப்ரக்ருதயோ ஹ்ருஷ்டபுஷ்டஜநாவ்ருதா: ।
க$_3$ச்ச$_2$ந்தமந்வக$_3$ச்ச$_2$ம்ஸ்தம் ராக$_4$வம் கு$_3$ணரஞ்ஜிதா: ॥ (14)

தத: ஸஸ்த்ரீபுமாம்ஸஸ்தே ஸபக்ஷிபஸூவாஹநா: ।
ராக$_4$வஸ்யாநுக$_3$ா: ஸர்வே ஹ்ருஷ்டா விக$_3$தகல்மஷா: ॥ (15)

ஸ்நாதா: ப்ரமுதி$_3$தா: ஸர்வே ஹ்ருஷ்டா: புஷ்டாஸ்ச வாநரா: ।
த்$_3$ருட$_4$ம் கிலகிலாஸப்$_3$தை$_3$: ஸர்வம் ராமமநுவ்ரதம் ॥ (16)

ந தத்ர கஸ்சித்$_3$தீ$_3$நோ வா வ்ரீடி$_3$தோ வாபி து$_3$:கி$_2$த: ।
ஹ்ருஷ்டம் ப்ரமுதி$_3$தம் ஸர்வம் ப$_3$பூ$_4$வ பரமாத்$_3$பு$_4$தம் ॥ (17)

த்$_3$ரஷ்டுகாமோऽத$_2$ நிர்யாந்தம் ராமம் ஜாநபதே$_3$ா ஜந: ।
ய: ப்ராப்த: ஸோऽபி த்$_3$ருஷ்ட்வைவ ஸ்வர்க$_3$ாயாநுக$_3$தோ முத$_3$ா ॥ (18)

ருக்ஷவாநரரக்ஷாம்ஸி ஜநாஸ்ச புரவாஸிந: ।
ஆக$_3$ச்ச$_2$ந் பரயா ப$_4$க்த்யா ப்ருஷ்ட$_2$த: ஸுஸமாஹிதா: ॥ (19)

யாநி பூ$_4$தாநி நக$_3$ரேऽப்யந்தர்த$_4$ாநக$_3$தாநி ச ।
ராக$_4$வம் தாந்யநுயயு: ஸ்வர்க$_3$ாய ஸமுபஸ்தி$_2$தம் ॥ (20)

யாநி பஸ்யந்தி காகுத்ஸ்த$_2$ம் ஸ்த$_2$ாவராணி சராணி ச ।
ஸர்வாணி ராமக$_3$மநே ஹ்யநுஜக்$_3$முர்ஹி தாந்யபி ॥ (21)

நோச்ச$_2$வஸத்தத$_3$யோத்$_4$யாயாம் ஸுஸூக்ஷ்மமபி த்$_3$ருஸ்யதே ।
திர்யக்$_3$யோநிக$_3$தாஸ்சாபி ஸர்வே ராமமநுவ்ரதா: ॥ (22)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ நவோத்தரஸததம: ஸர்க$_3$: ॥

த$_3$ஸோத்தரஸததம: ஸர்க$_3$:

ஸஹாநுக$_3$ஸ்ரீராமஸ்வர்க$_3$ாரோஹ:

அத்$_4$யர்த$_4$யோஜநம் க$_3$த்வா நதீ$_3$ம் பஸ்சாந்முக$_2$ாஸ்ரிதாம் ।
ஸரயூம் புண்யஸலிலாம் த$_3$த$_3$ர்ஸ ரகு$_4$நந்த$_3$ந: ॥ (1)

தாம் நதீ$_3$மாகுலாவர்தாம் ஸர்வத்ராநுஸரந்ந்ருப: ।
ஆக$_3$த: ஸப்ரஜோ ராமஸ்தம் தே$_3$ஸம் ரகு$_4$நந்த$_3$ந: ॥ (2)

அத$_2$ தஸ்மிந் முஹூர்தே து ப்$_3$ரஹ்மா லோகபிதாமஹ: ।
ஸர்வை: பரிவ்ருதோ தே$_3$வைர்ருஷிபி$_4$ஸ்ச மஹாத்மபி$_4$: ॥
ஆயயௌ யத்ர காகுத்ஸ்த$_2$: ஸ்வர்க$_3$ாய ஸமுபஸ்தி$_2$த: ॥ (3)

Koviloor Digital Library

எல்லா அமைச்சர்களும், பணியாளர்களும் தத்தம் புதல்வர்கள், பசுக்கள், உறவினர்கள் மற்றும் தம்மைச் சார்ந்து இருப்பவர்களோடுகூட, மிக்க மகிழ்ச்சியுடன் இராமனுக்குப் பின்னால் சென்றார்கள். (13)

மனவளமும் உடல்வளமும் பெற்ற மனிதர்கள் நிறைந்த அக்கூட்டத்தில், இராமனுடைய இனிய குணங்களால் வசீகரிக்கப்பட்ட மற்றப் பிராணிகளும், அந்த நெடும்பயணத்தில் சேர்ந்து கொண்டன. அந்தப் பயணத்தில் சென்று கொண்டிருந்த ஆண்களும், பெண்களும், பறவை–விலங்கு–வாகனங்களும் பாவங்கள் அற்றவர்களாக மனக்களிப்புடன் இராமனைப் பின்தொடர்ந்தார்கள். (14,15)

மகிழ்ச்சியும் தெம்பும் உடைய எல்லா வானரர்களும் நீராடிவிட்டு, இயல்பான களிப்புமிக்க 'கிலகில' சப்தத்தை எழுப்பிக் கொண்டு, இராமனையே நினைத்துக் கொண்டு சென்றார்கள். அந்தப் பயணத்தில் பங்கு கொண்டவர்களில் மனம் நொந்தவர்களோ, புண்பட்டவர்களோ ஒருவர்கூட இல்லை. எல்லோரும் அற்புதமான முறையில் குறைவில்லாத மகிழ்ச்சியை அடைந்து உடன் சென்றார்கள். (16,17)

புறநகர்ப் பகுதியிலிருந்து, இராமனுடைய நெடும்பயணத்தைக் காண வந்தவன், அவரைக் கண்டதும், அவனும் மகிழ்ச்சியோடு விண்ணுலகம் செல்வதற்காக, அவரைப் பின்தொடர்ந்தான். கரடி–வானர–அரக்கர்களும், நகர மக்களும் மிகவும் பக்தியோடுகூட, மனத்தை ஒருநிலைப்படுத்தி, இராமப்பிரபுவைப் பின்தொடர்ந்தார்கள். (18,19)

அயோத்தி நகரத்தில், கண்களுக்குப் புலப்படாமல் வசித்துக் கொண்டிருந்த பூதங்களும், வைகுண்டம் செல்லும் பேராவலுடன் இராமன் பின்னே சென்றன. (20)

சராசரப் பிராணிகளில், எவையெவை இராமன் செல்வதைப் பார்த்தனவோ, அவைகளும் இராமயாத்திரையில் சேர்ந்து கொண்டன. (21)

அப்போது அயோத்தியில், உயிர்மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் சின்னஞ்சிறு பிராணி எதுவுமில்லை. (உயிர் பெற்றிருந்த எல்லாப் பிராணிகளும் இராமனுடன் சென்றுவிட்டன.) விலங்கினங்களாக இருந்த பிராணிகளும் இராமனிடம் பக்தி கொண்டு அவருடன் சென்றுவிட்டன. (22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நூற்றொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப்பத்து

இராமன் பரமபதம் எழுந்தருளல்

அயோத்தியிலிருந்து ஒன்றரை யோஜனை தூரம் மேற்கு நோக்கிச் சென்றதும், புனிதப்படுத்தும் நீர்ப்பெருக்கையுடைய சரயூ நதியைக் கண்டார், இராமன். (1)

சரயூ நதியில் எல்லாப் பக்கங்களிலும் நீர்ச்சுழல்கள் காணப்பட்டன. நானாதிசைகளிலும் சுற்றிப் பார்த்துவிட்டு, ஒரு நல்ல இடத்தைப் பார்த்து (தேர்வு செய்து), எல்லா மக்களோடும் இராமன் அவ்விடம் வந்து சேர்ந்தார். (2)

அதே நேரத்தில், அனைத்து உலகப் பிதாமகரான பிரும்மதேவர், எல்லா தேவர்களாலும் மகாத்மாக்களான முனிவர்களாலும் புடைசூழப்பட்டவராக, சுவர்க்கம் செல்வதற்கு ஏற்ற இடமாக, எந்த இடத்தை இராமன் தீர்மானித்திருந்தாரோ, அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். (3)

Koviloor Digital Library

விமாநஶதகோடிபி$_4$ர்தி$_3$வ்யாபி$_4$ரபி$_4$ஸம்வ்ருத: ।
தி$_3$வ்யதேஜோவ்ருதம் வ்யோம ஜ்யோதிர்பூ$_4$தமநுத்தமம் ॥ (4)

ஸ்வயம்ப்ரபை$_4$: ஸ்வதேஜோபி$_4$: ஸ்வர்கி$_3$பி$_4$: புண்யகர்மபி$_4$: ।
புண்யா வாதா வவுஶ்சைவ க$_3$ந்த$_4$வந்த: ஸுக$_2$ப்ரதா$_3$: ॥ (5)

பபாத புஷ்பவ்ருஷ்டிஶ்ச தே$_3$வைர்முக்தா மஹௌக$_4$வத் ।
தஸ்மிம்ஸ்தூர்யஶதை: கீர்ணே க$_3$ந்த$_4$ர்வாப்ஸரஸங்குலே ॥ (6)

ஸரயூஸலிலம் ராம: பத்$_3$ப்$_4$யாம் ஸமுபசக்ரமே ॥ (7)

தத: பிதாமஹோ வாணீமந்தரிக்ஷாத$_3$பா$_4$ஷத ।
ஆக$_3$ச்ச$_2$ விஷ்ணோ ப$_4$த்$_3$ரம் தே தி$_3$ஷ்ட்யா ப்ராப்தோऽஸி ராக$_4$வ ॥ (8)

ப்$_4$ராத்ருபி$_4$: ஸஹ தே$_3$வாபை$_4$: ப்ரவிஶஸ்வ ஸ்வகாம் தநும் ।
யாமிச்ச$_2$ஸி மஹாபா$_3$ஹோ தாம் தநும் ப்ரவிஶ ஸ்வகாம் ॥ (9)

வைஷ்ணவீம் தாம் மஹாதேஜஸ்தத்$_3$வாகாஶம் ஸநாதநம் ।
த்வம் ஹி லோகக$_3$திர்தே$_3$வ ந த்வாம் கேசித் ப்ரஜாநதே ॥ (10)

ருதே மாயாம் விஶாலாக்ஷீம் தவ பூர்வபரிக்$_3$ரஹாம் ।
த்வாமசிந்த்யம் மஹத்$_3$பூ$_4$தமக்ஷயம் ஸர்வஸங்க்$_3$ரஹம் ॥
யாமிச்ச$_2$ஸி மஹாதேஜஸ்தாம் தநும் ப்ரவிஶ ஸ்வயம் ॥ (11)

பிதாமஹவச: ஶ்ருத்வா விநிஶ்சித்ய மஹாமதி: ।
விவேஶ வைஷ்ணவம் தேஜ: ஸஶரீர: ஸஹாநுஜ: ॥
ததோ விஷ்ணுமயம் தே$_3$வம் பூஜயந்தி ஸ்ம தே$_3$வதா: ॥ (12)

ஸாத்$_4$யா மருத்$_3$க$_3$ணாஶ்சைவ ஸேந்த்$_3$ரா: ஸாக்$_3$நிபுரோக$_3$மா: ।
யே ச தி$_3$வ்யா ருஷிக$_3$ணா க$_3$ந்த$_4$ர்வாப்ஸரஸஶ்ச யா: ॥
ஸுபர்ணநாக$_3$யக்ஷாஶ்ச தை$_3$த்யதா$_3$நவராக்ஷஸா: ॥ (13)

ஸர்வம் புஷ்டம் ப்ரமுதி$_3$தம் ஸுஸம்பூர்ணமநோரத$_2$ம் ।
ஸாது$_4$ ஸாத்$_4$விதி தைர்தே$_3$வைஸ்த்ரிதி$_3$வம் க$_3$தகல்மஷம் ॥ (14)

அத$_2$ விஷ்ணுர்மஹாதேஜா: பிதாமஹமுவாச ஹ ।
ஏஷாம் லோகம் ஜநௌக$_4$நாம் தா$_3$துமர்ஹஸி ஸுவ்ரத ॥ (15)

இமே ஹி ஸர்வே ஸ்நேஹாந்மாமநுயாதா மநஸ்விந: ।
ப$_4$க்தா ஹி ப$_4$ஜிதவ்யாஶ்ச த்யக்தாத்மாநஶ்ச மத்க்ருதே ॥ (16)

தச்ச்$_2$ருத்வா விஷ்ணுவசநம் ப்$_3$ரஹ்மா லோககு$_3$ரு: ப்ரபு$_4$: ।
லோகாந் ஸாந்தாநிகாந்நாம யாஸ்யந்தீமே ஸமாக$_3$தா: ॥ (17)

Koviloor Digital Library

தெய்விகமான நூறு கோடி விமானங்களால் நிரப்பப்பட்ட ஆகாயம், திவ்வியமான ஒளியினால் சூழப்பட்டு, கண்குளிர் பிரகாசத்தைத் தந்தது. (4)

புண்ணிய கர்மாக்களைச் செய்து தேவலோகவாசிகளான மேலோர்கள், இயல்பான தம் உள்ளொளியினால் அந்த இடத்தை (வானத்தை)ப் பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தார்கள். புனிதமான காற்று, நறுமணத்துடன்கூட வந்து சௌக்கியமாக உடலைத் தழுவிக் கொண்டு சென்றது. (5)

தேவர்கள் குவியல் குவியலாக மலர்மாரி பொழிந்தார்கள்; கந்தர்வர்களும் அப்சரசுகளும் கூடி நின்று நூற்றுக்கணக்கான இசைக்கருவிகளை மீட்டினார்கள். (6)

சரயூ நதியின் நீரில், இராமன் தன் இரு பாதங்களையும் வைத்தார். (7)

அப்போது, ஆகாயத்திலிருந்து பிரும்மா புகன்றார்— ''விஷ்ணு பகவானே வருக! தங்கள் வரவு நல்வரவாகுக. இராகவனே! நாங்கள் செய்த பெரும் பேற்றினால், தங்களை மீண்டும் அடைந்திருக்கிறோம்! (8)

தேவர்களுக்கு நிகராக ஒளிவீசும் தங்கள் சகோதரர்களுடன், தங்களுடையதேயான மூலத்திருவுடலை ஏற்றுக் கொள்ளுங்கள். பெருந்தோளரே! உங்கள் மூல வடிவத்தில், எந்த உடலைப் பெற விரும்புகிறீர்களோ, அந்த உடலில் பிரவேசிப்பீர்களாக. (9)

(தாங்கள்) பேரொளி வீசும் விஷ்ணுவின் வடிவத்தை, அல்லது தொடக்கம் காண முடியாத ஆகாய வடிவத்தை ஏற்கலாம். உலகத்தின் புகலிடம், தாங்களே. தங்களுடைய தொன்மையான சக்தியை யோகமாயா வடிவினளான அகலமான கண்களையுடைய சீதாதேவியைத் தவிர, தங்களை யாரொருவரும் அறியமாட்டார்கள். ஏனென்றால், தாங்கள் சிந்தனைக்கு அப்பாற்பட்டவர்; பேருருவம் பெற்றவர்; அழிவில்லாதவர்; எல்லாவற்றையும் உள்ளடக்கியவர். ஒளிமிக்க எந்த வடிவத்தை ஏற்க விரும்புகிறீர்களோ, அந்த உடலுக்குள் தாங்களே புகுந்து கொள்ளுங்கள்.'' (10,11)

பேரறிவாளரான இராமன், பிரும்மாவின் சொற்களைக் கேட்டதும் ஒரு தீர்மானத்திற்கு வந்து, ஒளிமிக்க தன் சரீரத்துடனும் சகோதரர்களுடனும் மகாவிஷ்ணுவின் உடலில் புகுந்தார். உடனே, தேவர்கள், விஷ்ணுமயமான உலகநாயகரைப் பூசிக்கத் தொடங்கினார்கள். (12)

ஸாத்யர்கள், மருத்கணங்கள், இந்திரன், அக்னியை முன்னிட்டுக் கொண்டு வந்த தேவர்கள், தேவலோக முனிவர்கள், கந்தர்வர்கள், அப்சரசுகள், கருடன், நாகர்கள், யக்ஷர்கள், தைத்யர்கள், தானவர்கள், அரக்கர்கள் ஆகியோர்களும் பகவானைத் துதிக்க ஆரம்பித்தார்கள். (13)

பகவான், தன் சொந்த இடத்திற்குத் திரும்பி வந்துவிட்டதால், எல்லோரும் தங்கள் விருப்பம் கைகூடிவிட்டதைக் கண்டு மகிழ்ச்சியில் ஆழ்ந்தார்கள். தேவலோகத்தின் துன்பங்கள் நீங்கியதால், ''ஆகா! நல்லபடி ஆயிற்று!'' என்று ஆரவாரித்தார்கள். (14)

பின்னர், விஷ்ணு வடிவமாகவே ஆகிவிட்டிருந்த இராமன், ''என்னுடன் வந்திருக்கும் எல்லா மக்களுக்கும் நல்ல உலகங்களை அளிப்பீர்களாக'' என்றார். (15)

''நல்ல உள்ளம் படைத்த இவர்கள் எல்லோரும் என் பக்தர்கள்; என்னிடம் உள்ள சிநேகத்தினால் என்னைப் பின்தொடர்ந்து வந்திருக்கிறார்கள். இவர்கள், என் பொருட்டு தங்கள் சுக–சௌக்கியங்களைத் தியாகம் செய்துவிட்டு வந்திருக்கிறார்கள். என் அருளுக்குப் பாத்திரமானவர்கள்.'' (16)

விஷ்ணுவின் சொற்களைக் கேட்ட, உலக குருவான பிரும்மா, ''இவர்கள் எல்லோரும் 'சாந்தானிகம்' என்ற புண்ணிய உலகத்தை அடையப் போகிறார்கள்'' என்றார். (17)

Koviloor Digital Library

யச்ச திர்யக்3க3தம் கிஞ்சித்த்வாமேவமநுசிந்தயத் ।
ப்ரணாம்ஸ்த்யக்ஷயதி ப4க்த்யா வை தத்ஸந்தாநே நிவத்ஸ்யதி ॥
ஸர்வைர்ப்3ரஹ்மகு3ணைர்யுக்தே ப்3ரஹ்மலோகாத3நந்தரே ॥ (18)

வாநராஶ்ச ஸ்வகாம் யோநிம்ருக்ஷாஶ்சைவ தத2ா யயு: ।
யேப்4யோ விநி:ஸ்ருதா: ஸர்வே ஸுரேப்4ய: ஸுரஸம்ப4வா: ॥ (19)

தேஷு ப்ரவிவிஶே சைவ ஸுக்3ரீவ: ஸூர்யமண்ட3லம் ।
பஶ்யதாம் ஸர்வதே3வாநாம் ஸ்வாந் பித்ரூந் ப்ரதிபேதி3ரே ॥ (20)

ததே2ாக்தவதி தே3வேஶே கோ3ப்ரதாரமுபாக3தா: ।
பே4ஜிரே ஸரயூம் ஸர்வே ஹர்ஷபூர்ணாஶ்ருவிக்லவா: ॥ (21)

அவகா3ஹ்ய ஜலம் யோ ய: ப்ராணீ ஹ்யாஸீத் ப்ரஹ்ருஷ்டவத் ।
மாநுஷம் தே3ஹமுத்ஸ்ருஜ்ய விமாநம் ஸோऽத்4யரோஹத ॥ (22)

திர்யக்3யோநிக3தாநாம் ச ஶதாநி ஸரயூஜலம் ।
ஸம்ப்ராப்ய த்ரிதி3வம் ஜக்3மு: ப்ரப4ாஸுரவபூம்ஷி ச ॥
தி3வ்யா தி3வ்யேந வபுஷா தே3வா தீ3ப்தா இவாப4வந் ॥ (23)

க3த்வா து ஸரயூதோயம் ஸ்த2ாவராணி சராணி ச ।
ப்ராப்ய தத்தோயவிக்லேத3ம் தே3வலோகமுபாக3மந் ॥ (24)

தஸ்மிந்நபி ஸமாபந்நா ருக்ஷவாநரராக்ஷஸா: ।
தேऽபி ஸ்வர்க3ம் ப்ரவிவிஶுர்தே3ஹாந்நிக்ஷிப்ய சாம்ப4ஸி ॥ (25)

தத: ஸமாக3தாந் ஸர்வாந் ஸ்த2ாப்ய லோககு3ருர்தி3வி ।
ஜகா3ம த்ரித3ஶை: ஸார்த4ம் ஸதா3 ஹ்ருஷ்டைர்தி3வம் மஹத் ॥ (26)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகியே ஆதி3காவ்யே
உத்தரகாண்டே3 த3ஶோத்தரஶததம: ஸர்க3: ॥

ஏகாத3ஶோத்தரஶததம: ஸர்க3:

ஸ்ரீமத்3ராமாயணப2லஶ்ருதி:

ஏதாவதே3தத3ாக்2யாநம் ஸோத்தரம் ப்3ரஹ்மபூஜிதம் ।
ராமாயணமிதி க்2யாதம் முக்2யம் வால்மீகிநா க்ருதம் ॥ (1)

தத: ப்ரதிஷ்டி2தோ விஷ்ணு: ஸ்வர்க3லோகே யத2ாபுரம் ।
யேந வ்யாப்தமித3ம் ஸர்வம் த்ரைலோக்யம் ஸசராசரம் ॥ (2)

ததோ தே3வா: ஸக3ந்த4ர்வா: ஸித்3த4ாஶ்ச பரமர்ஷய: ।
நித்யம் ஶ்ருண்வந்தி ஸந்துஷ்டா தி3வ்யம் ராமாயணம் தி3வி ॥ (3)

Koviloor Digital Library

விலங்கு வடிவம் கொண்டிருப்பவர்கள், தங்களையே பக்தியுடன் நினைத்துக் கொண்டு உயிர் விடுவார்களேயானால், அவர்களும் சாந்தானிகம் அடைவார்கள். சாந்தானிகம் என்ற விண்ணுலகம், பிரும்மலோகத்திற்கு உரியதான சிறப்பு இயல்புகளைப் பெற்றது; பிரும்மலோகத்திற்கு அருகில் இருப்பது. (18)

வானரர்களும் கரடிகளும் எந்தெந்த தேவர்களிடமிருந்து (அம்சமாகத்) தோன்றினார்களோ, அந்தந்த தேவ வடிவத்தில் புகுந்து கொண்டார்கள். (19)

அவர்கள், அவ்வாறு புகுந்து கொண்டதும், சுக்ரீவன் சூரியமண்டலம் சென்றடைந்தான். இவ்வாறே, மற்ற வானரர்களும் தேவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, தத்தம் தந்தையின் வடிவத்தை அடைந்தார்கள். (20)

பிரும்மா, ''எல்லாப் பிராணிகளும் சாந்தானிகம் சென்றடைவார்கள்'' என்று சொன்னவுடன், சரயூ நதியின் கோப்ரதாரம் என்னும் நீராடும் துறையில் கூடியிருந்த எல்லா மக்களும், பேரானந்தக் கண்ணீர் வடித்து ஆற்றில் மூழ்கத் தொடங்கினார்கள். (21)

எந்தப் பிராணி, உள்ளம் மகிழ நீரோட்டத்தில் தலைமூழ்கியதோ, அது மானுட உடலைத் துறந்து, தேவலோகத்திலிருந்து வந்திருந்த விமானத்தில் ஏறிக் கொண்டது. (22)

விலங்குப் பிறவி எடுத்திருந்த நூற்றுக்கணக்கான உயிர்கள், சரயூ நதியில் மூழ்கியதும் ஒளிமிகுந்த சரீரங்களைப் பெற்று விண்ணுலகம் சென்றார்கள். திவ்வியமான உடல்களைப் பெற்ற அவர்கள், தேவர்களைப் போல் இளமையும் ஒளியும் பெற்று தேவர்கள் ஆனார்கள். (23)

அசையும் பொருள்களும், அசையாப் பொருள்களும் சரயூ நதியின் புனித நீரில் நனைந்து, (திவ்விய சரீரம் பெற்று) தேவலோகத்தை அடைந்தார்கள். (24)

அப்போது, (தற்செயலாக) அங்கு வந்து சேர்ந்த கரடி–வானர–அரக்கர்களும், சரயூ நீரோட்டத்தில் குதித்து, சுவர்க்க லோகத்திற்குள் புகுந்தார்கள். (25)

பின்னர், அங்கு வந்திருந்த எல்லோருக்கும் சாந்தானிகப் புண்ணிய உலகில் இடம் கொடுத்துவிட்டு, உலக குரு பிரும்மா, பெருமகிழ்ச்சியுடனிருந்த தேவர்களுடன் மேலுலகம் சென்றார். (26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நூற்றுப்பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப்பதினொன்று

இராமாயண மகிமை

(குச–லவர்கள் கூறுகிறார்கள்—) பிரும்மாவினால் அங்கீகரிக்கப்பட்ட, இராமாயணம் என்று புகழ்பெற்ற உத்தமமான இந்த மகாகாவியம், உத்தர காண்டத்தின் இந்த நிறைவுப் பகுதி வரை, மாமுனிவர் வால்மீகியால் எழுதப்பட்டது. (1)

இதுவரை சொன்னபடி, பகவான் ஸ்ரீராமன், மூல வடிவான விஷ்ணு ஸ்வரூபத்தை ஏற்று ஸ்ரீவைகுண்டத்தில் நிலையாக இருந்து வருகிறார். சராசரங்கள் நிறைந்த மூன்று உலகங்களும் அவரால் வியாபிக்கப்பட்டுள்ளன. (2)

எப்போதும் தேவலோகத்தில், தேவ–கந்தர்வ–ஸித்த–மாமுனிவர்கள் மகிழ்ச்சியுடன் இராமாயணத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். (3)

Koviloor Digital Library

இத$_3$மாக்$_2$யாநமாயுஷ்யம் ஸௌப$_4$ாக்$_3$யம் பாபநாஶநம் ।
ராமாயணம் வேத$_3$ஸமம் ஶ்ராத்$_3$தே$_4$ஷு ஶ்ராவயேத்$_3$பு$_4$த$_4$: ॥ (4)

அபுத்ரோ லப$_4$தே புத்ரமத$_4$நோ லப$_4$தே த$_4$நம் ।
ஸர்வபாபை: ப்ரமுச்யேத பத$_3$மப்யஸ்ய ய: படே$_2$த் ॥ (5)

பாபாந்யபி ச ய: குர்யாத$_3$ஹந்யஹநி மாநவ: ।
பட$_2$த்யேகமபி ஶ்லோகம் பாபாத் ஸ பரிமுச்யதே ॥ (6)

வாசகாய ச த$_3$ாதவ்யம் வஸ்த்ரம் தே$_4$நு ஹிரண்யகம் ।
வாசகே பரிதுஷ்டே து துஷ்டா: ஸ்யு: ஸர்வதே$_3$வதா: ॥ (7)

ஏதத$_3$ாக்$_2$யாநமாயுஷ்யம் பட$_2$ந் ராமாயணம் நர: ।
ஸபுத்ரபௌத்ரோ லோகே஽ஸ்மிந் ப்ரேத்ய சேஹ மஹீயதே ॥ (8)

ராமாயணம் கே$_3$ாவிஸர்கே$_3$ மத்$_4$யாஹ்நே வா ஸமாஹித: ।
ஸாயாஹ்நே வாபராஹ்ணே ச வாசயந் நாவஸீத$_3$தி ॥ (9)

அயோத்$_4$யாபி புரீ ரம்யா ஶூந்யா வர்ஷக$_3$ணாந் ப$_3$ஹூந் ।
ருஷப$_4$ம் ப்ராப்ய ராஜாநம் நிவாஸமுபயாஸ்யதி ॥ (10)

ஏதத$_3$ாக்$_2$யாநமாயுஷ்யம் ஸப$_4$விஷ்யம் ஸஹோத்தரம் ।
க்ருதவாந் ப்ரசேதஸ: புத்ரஸதத்$_3$ ப்$_3$ரஹ்மாப்யந்வமந்யத ॥ (11)

அஶ்வமேத$_4$ஸஹஸ்ரஸ்ய வாஜபேயாயுதஸ்ய ச ।
லப$_4$தே ஶ்ரவணாதே$_3$வ ஸர்க$_3$ஸ்யைகஸ்ய மாநவ: ॥ (12)

ப்ரயாக$_3$ாதீ$_3$நி தீர்த$_2$ாநி க$_3$ங்க$_3$ாத்$_3$யா: ஸரிதஸ்தத$_2$ா ।
நைமிஶாதீ$_3$ந்யரண்யாநி குருக்ஷேத்ராதி$_3$காந்யபி ॥
க$_3$தாநி தேந லோகே஽ஸ்மிந் யேந ராமாயணம் ஶ்ருதம் ॥ (13)

ஹேமப$_4$ாரம் குருக்ஷேத்ரே க்$_3$ரஸ்தே ப$_4$ாநௌ ப்ரயச்ச$_2$தி ।
யஶ்ச ராமாயணம் லோகே ஶ்ருணோதி ஸத்$_3$ருஶாவுபௌ$_4$ ॥ (14)

ஸம்யக் ஶ்ரத்$_3$த$_4$ாஸமாயுக்த: ஶ்ருணுதே ராக$_4$வீம் கத$_2$ாம் ।
ஸர்வபாபாத் ப்ரமுச்யேத விஷ்ணுலோகம் ஸ க$_3$ச்ச$_2$தி ॥ (15)

ஆதி$_3$காவ்யமித$_3$ம் த்வார்ஷம் புரா வால்மீகிநா க்ருதம் ।
ய: ஶ்ருணோதி ஸத$_3$ா ப$_4$க்த்யா ஸ க$_3$ச்சே$_2$த்$_3$வைஷ்ணவீம் தநும் ॥ (16)

புத்ரத$_3$ாராஶ்ச வர்த$_4$ந்தே ஸம்பத$_3$: ஸந்ததிஸ்தத$_2$ா ।
ஸத்யமேதத்$_3$விதி$_3$த்வா து ஶ்ரோதவ்யம் நியதாத்மபி$_4$: ॥
க$_3$ாயத்ர்யாஶ்ச ஸ்வரூபம் தத்$_3$ராமாயணமநுத்தமம் ॥ (17)

Koviloor Digital Library

இந்த மகாகாவியம், ஆயுளையும் செல்வச் செழிப்பையும் வளர்ப்பது; பாவங்களை அழிப்பது. வேதங்களுக்கு நிகரான இக்காவியத்தை, முன்னோர் குறித்து நடத்தும் சிராத்தச் சடங்குகளில் படிக்கச் செய்து, (பிதிரர்களைக்) கேட்பிக்க வேண்டும். (4)

இந்தத் தொடர்நிலை நூலின் பாடல்களில், ஒரு செய்யுளின் கால் பகுதியைப் படிப்பவன்கூட எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான்; புதல்வன் இல்லாதவன் புதல்வனைப் பெறுகிறான்; பொருள் இல்லாதவன் பொருளை அடைகிறான். (5)

நாள்தோறும் பாவங்களைச் செய்து வருபவன், இராமாயணத்தில் ஒரேயொரு சுலோகத்தை மட்டும் படித்தால்கூட பாவத்திலிருந்து விடுபடுகிறான். (6)

இராமாயணத்தைச் சொற்பொழிவாற்றும் பண்டிதருக்கு, ஆடை–பசு–பொன் முதலியவற்றைக் கொடுக்க வேண்டும். கதை சொல்லுபவர் மகிழ்ச்சி அடைந்தால், எல்லா தேவதைகளும் திருப்தி அடைகிறார்கள். (7)

இந்த மகாகாவியமான இராமாயணத்தைத் தினந்தோறும் படிப்பவர், இவ்வுலகில் புதல்வர்–பேரன்களோடு நல்வாழ்வு வாழ்ந்து, பின்னர், மேலுலகம் சென்றதும் அங்கேயும் பெருமைப்படுத்தப்படுகிறார். (8)

எவனொருவன் நாள்தோறும் முற்பகல், நண்பகல், பிற்பகல் அல்லது மாலை வேளையில், ஒருநிலைப்பட்ட மனத்துடன் படிக்கிறானோ, அவனை எந்த ஒரு துக்கமும் எந்தக் காலத்திலும் அண்டுவதில்லை. (9)

(இராமன் பரமபதத்திற்கு எழுந்தருளியபின்) அழகிய பட்டணமான அயோத்தி, நீண்ட நெடுங்காலத்திற்கு சூன்யமாக இருக்கும். பின்னர் ஒரு சமயம், ரிஷபன் என்பவரை மன்னனாகப் பெற்றதும் மக்கள் வந்து கூடுவார்கள். (10)

பிரசேதஸின் புதல்வரான வால்மீகி முனிவர், அசுவமேத யாகத்தின் நிறைவுக்குப் பிறகு நடந்த கதையையும் உத்தர காண்டத்தில் சேர்த்து, இந்த மகாகாவியத்தை (இராமாயணத்தை)ப் படைத்துள்ளார். பிரும்மதேவரும், இந்தக் காவியத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் உண்மையானவை என்பதை ஏற்று அங்கீகரித்திருக்கிறார். (11)

இந்தக் காவியத்தின் ஒரு ஸர்க்கத்தையாவது செவியாரக் கேட்கும் மனிதர், அவ்விதம் கேட்பதினாலேயே ஆயிரம் அசுவமேதம், பத்தாயிரம் வாஜபேயம் செய்த புண்ணியத்தை அடைகிறார். (12)

எவனொருவன் இவ்வுலகில் இராமாயணத்தைக் கேட்கிறானோ, அவன், பிரயாகை முதலான புண்ணியத் தலங்கள், கங்கை முதலான புனித ஆறுகள், தவசிகள் வாழும் நைமிசாரண்யம் முதலான வனங்கள், குருக்ஷேத்திரம் முதலான புண்ணியத் தலங்களுக்குச் சென்று வந்தால் கிடைக்கும் அளப்பரிய புண்ணியத்தைப் பெறுகிறான்! (13)

குருக்ஷேத்திரத்தில், சூரிய கிரகண காலத்தில் ஒரு குவியல் தங்கம் தானம் செய்பவன் அடையும் மகாபுண்ணியமும், நாள்தோறும் இராமாயணத்தைக் கேட்பவன் அடையும் புண்ணியமும் சமமானவை. இராமபிரானுடைய இந்தக் கதையை, மிகுந்த பக்தி–விசுவாசத்தோடு கேட்பவன், எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு விஷ்ணுலோகத்தை அடைகிறான். (14,15)

பண்டைய காலத்தில், வால்மீகியினால் இயற்றப்பட்ட வேதத்திற்கு இணையான, தொன்மையான இந்தக் காவியத்தை, எவன் எப்போதும் பக்தியுடன் கேட்கிறானோ, அவன் விஷ்ணுசாரூப்யத்தை அடைகிறான். அவனுக்கு மனைவி–மக்கள், செல்வம், குலம் முதலியன வளர்ச்சி அடைகின்றன. இது சத்தியமான வார்த்தை என்று உணர்ந்து, புலன்களை வசப்படுத்தி இதனைக் கேட்க வேண்டும். உத்தமமான இந்த இராமாயணம், காயத்ரி வடிவமானது. (மகா மந்திர சக்தி உடையது.) (16,17)

Koviloor Digital Library

அபுத்ரோ லப$_4$தே புத்ரமத$_4$நோ லப$_4$தே த$_4$நம் ।
ஸர்வபாபை: ப்ரமுச்யேத பத$_3$மப்யஸ்ய ய: படே$_2$த் ॥ (18)

ய: படே$_2$ச்ச்$_2$ருணுயாந்நித்யம் சரிதம் ராக$_4$வஸ்ய ஹ ।
ப$_4$க்த்யா நிஷ்கல்மஷோ பூ$_4$த்வா தீ$_3$ர்க$_4$மாயுரவாப்நுயாத் ॥ (19)

சிந்தயேத்$_3$ராக$_4$வம் நித்யம் ஶ்ரேய: ப்ராப்தும் ய இச்ச$_2$தி ।
ஶ்ராவயேதி$_3$த$_3$மாக்$_2$யாநம் ப்$_3$ராஹ்மணேப்$_4$யோ தி$_3$நே தி$_3$நே ॥ (20)

யஸ்த்வித$_3$ம் ரகு$_4$நாத$_2$ஸ்ய சரிதம் ஸகலம் படே$_2$த் ।
ஸோऽஸுக்ஷயே விஷ்ணுலோகம் க$_3$ச்ச$_2$த்யேவ ந ஸம்ஶய: ॥ (21)

பிதா பிதாமஹஸ்தஸ்ய ததை$_2$வ ப்ரபிதாமஹ: ।
தத்பிதா தத்பிதா சைவ விஷ்ணும் யாந்தி ந ஸம்ஶய: ॥ (22)

சதுர்வர்க$_3$ப்ரத$_3$ம் நித்யம் சரிதம் ராக$_4$வஸ்ய து ।
தஸ்மாத்$_3$யத்நவதா நித்யம் ஶ்ரோதவ்யம் பரமம் ஸதா$_3$ ॥ (23)

ஶ்ருண்வந் ராமாயணம் ப$_4$க்த்யா ய: பாத$_3$ம் பத$_3$மேவ வா ।
ஸ யாதி ப்$_3$ரஹ்மண: ஸ்த$_2$ாநம் ப்$_3$ரஹ்மணா பூஜ்யதே ஸதா$_3$ ॥ (24)

ஏவமேதத் புராவ்ருத்தமாக்$_2$யாநம் ப$_4$த்$_3$ரமஸ்து வ: ।
ப்ரவ்யாஹரத விஸ்ரப்$_3$த$_4$ம் ப$_3$லம் விஷ்ணோ: ப்ரவர்த$_4$தாம் ॥ (25)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
உத்தரகாண்டே$_3$ ஏகாத$_3$ஶோத்தரஶததம: ஸர்க$_3$: ॥

॥ ஸ்ரீமத்$_3$வால்மீகிராமாயணே உத்தரகாண்ட$_3$: ஸம்பூர்ண: ॥

॥ ஸ்ரீமத்$_3$வால்மீகிராமாயணம் ஸம்பூர்ணம் ॥

॥ ஶுப$_4$ம் பூ$_4$யாத் ॥

Koviloor Digital Library

இதில், ஒரு சுலோகத்தின் கால்பகுதியை படிப்பவன்கூட, புதல்வன் இல்லாதவன் புதல்வனை அடைவான்; செல்வம் இல்லாதவன் செல்வத்தைப் பெறுவான்; எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுதலை பெறுவான். (18)

எவனொருவன், மாசற்றவனாய் பக்தியோடுகூட நாள்தோறும் இராமபிரானுடைய வரலாற்றைப் படிக்கிறானோ அல்லது கேட்கிறானோ, அவன் நீண்ட ஆயுளைப் பெறுவான். (19)

தன்னுடைய ஆன்மிக மேன்மையை விரும்புகிறவன், எப்போதும் இராமனைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். தினந்தோறும், அந்தணர்களுக்கு இந்தக் கதையை சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். (20)

ரகுநாதனுடைய சரிதத்தை முழுமையாகப் படிப்பவன், மரணமடைந்த பிறகு விஷ்ணுலோகத்தை அடைகிறான் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை! (21)

அப்படிப்பட்டவனுடைய தந்தை, பாட்டனார், கொள்ளுப் பாட்டனார், அவருடைய தந்தை, அந்தத் தந்தையின் தந்தையும்கூட (முன், ஐந்து தலைமுறையினர்கூட) விஷ்ணுலோகத்தை அடைகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. (22)

இராமனுடைய இந்த சரித்திரம், தரும–அர்த்த–காம–மோக்ஷம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் கொடுக்கக் கூடியது. ஆகையால், மனமொன்றி நாள்தோறும் இந்த மகாகாவியத்தைக் கேட்க வேண்டும். (23)

இராமாயண காவியத்தில், ஒரு சுலோகத்தின் கால்பகுதி அல்லது ஒரு பதத்தையாவது பக்தியுடன் செவிமடுப்பவன் பிரும்மலோகம் செல்கிறான். அங்கே அவரால் போற்றப்படுகிறான். (24)

தொன்மையான இந்தப் புண்ணியக் கதையை எல்லோரும் பக்தி விசுவாசத்துடன் படிப்பார்களாக! எல்லோருக்கும் நலமே ஏற்படுவதாகுக! பகவான் விஷ்ணுவே! தாங்கள் வாழ்க! வெல்க! நின்புகழ் ஓங்குக! (25)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் உத்தர காண்டத்தில்
நூற்றுப்பதினோராவது ஸர்க்கம் முற்றிற்று.

உத்தர காண்டம் முற்றிற்று.

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் நிறைவடைந்தது.

நன்றே விளைக.

"இராமன் திருவடி எண்ணுக மனமே!"

Koviloor Digital Library

॥ ஸ்ரீஹரி: ॥

கீதா பிரஸ்ஸின் பாராயண நூல்கள்

	Code No.	பக்கங்கள்	
1.	743	256	ஸ்ரீமத் பகவத்கீதா மூலம் (சமஸ்கிருதம்–தமிழ்)
2.	793	256	ஸ்ரீமத் பகவத்கீதா – தமிழ் மூலம் & விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் – தமிழ் மூலம்
3.	795	128	ஸ்ரீமத் பகவத்கீதா – பொழிப்புரை
4.	800	1024	ஸ்ரீமத் பகவத்கீதா–தத்வவிவேசனீ – [மூலம் (சமஸ்கிருதம்–தமிழ்) – பதவுரை–பொழிப்புரை–விளக்கவுரை]
5.	823	288	ஸ்ரீமத் பகவத்கீதா – [மூலம் (சமஸ்கிருதம்–தமிழ்) – பதவுரை–பொழிப்புரை]
6.	1426	1112	ஸ்ரீமத் பகவத்கீதா – ஸாதக ஸஞ்ஜீவநீ – [மூலம் (சமஸ்கிருதம்–தமிழ்) – பதவுரை–விளக்கவுரை] (1 முதல் 9 அத்தியாயங்கள்)
7.	1427	928	(10 முதல் 18 அத்தியாயங்கள்)
8.	389	236	கீதா மாதுர்யம் (ஸ்ரீமத் பகவத்கீதா – வினா-விடை)
9.	600	64	ஸ்ரீஹநுமாந் சாலீஸா – தமிழ் மூலம்
10.	794	64	விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் – தமிழ் மூலம்
11.	1256	336	அத்யாத்ம ராமாயணம் – தமிழ் மொழிபெயர்ப்பு
12.	1606	304	ஸ்ரீமந் நாராயணீயம் – தமிழ் மூலம்–விளக்கவுரை
13.	—	304	கம்ப ராமாயணம் – சுந்தர காண்டம் (பாடல்கள்)
14.	1534	426	சுந்தர காண்டம் (ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்) – (மூன்றாவது பாகம்) – (தமிழ் மூலம் – மொழிபெயர்ப்பு)
15.	1618	328	சுந்தர காண்டம் (ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்) – பொழிப்புரை
16.	1619	248	சுந்தர காண்டம் (ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்) – தமிழ் மூலம்
17.	1788	112	ஸ்ரீ முருகன் துதிமாலை (தோத்திரத் தொகுப்பு)
18.	1789	160	திருப்பாவை விளக்கம்

ஸ்ரீமத் பாகவத மகாபுராணம்
(தமிழ் மூலம் – மொழிபெயர்ப்பு)

19.	1843	736	பத்தாவது ஸ்கந்தம் – ஸ்ரீகிருஷ்ண லீலாம்ருதம்
20.	1605	272	பதினோராவது ஸ்கந்தம் – ஸ்ரீ உத்தவ கீதை

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்
(தமிழ் மூலம் – மொழிபெயர்ப்பு)

21.	—	1056	முதல் பாகம் – (பால காண்டம் – அயோத்தியா காண்டம்)
22.	—	768	இரண்டாவது பாகம் – (ஆரண்ய காண்டம் – கிஷ்கிந்தா காண்டம்)
23.	—	864	நான்காவது பாகம் – (யுத்த காண்டம்)

அறிவுரை நல்கும் நூல்கள்

24.	127	96	பயனுள்ள கதைகள்
25.	365	96	பசுப் பராமரிப்பின் நற்பயன்கள் – கதைகள்
26.	423	64	கர்ம ரஹஸ்யம்
27.	499	32	நாரத பக்தி ஸூத்ரம்
28.	536	72	கீதை கற்பதன் பயன்கள்

Koviloor Digital Library

	Code No.	பக்கங்கள்	
29.	550	64	திருநாமஜபத்தின் மஹிமை
30.	551	64	தூய்மையான உணவுப் பழக்கம்
31.	553	192	குடும்பத்தில் எப்படி இருக்க வேண்டும்? (1 லட்சம் பிரதிகள் விற்பனை)
32.	568	88	சரணாகதி
33.	601	96	பகவான் ஸ்ரீகிருஷ்ணன்
34.	607	32	எல்லோருக்கும் மேன்மை எப்படி ஏற்படும்?
35.	608	96	பக்தராஜ ஹனுமான்
36.	609	32	மஹாபாரதத்திலுள்ள ஸாவித்ரீ–ஸத்யவான் கதைகள்
37.	642	96	ஸ்ரீகிருஷ்ணனின் நண்பரான உத்தவரின் கதை
38.	643	96	பகவான் உறையும் ஐந்து இடங்கள்
39.	644	64	சுசீலா – ஓர் லக்ஷ்யப் பெண்மணி
40.	645	96	மஹாபாரதத்திலுள்ள நள–தமயந்தி கதைகள்
41.	646	96	பல்சுவைக் கதைகள்
42.	655	112	ஒன்றே செய்மின்! நன்றே செய்வீர்!!
43.	741	64	மஹாத்மா விதுரர்
44.	805	32	தாய்மையின் அவல நிலை
45.	850	128	மஹான்களுடைய அமுத மொழிகள்
46.	952	128	மஹான்களின் மணிமொழிகள்
47.	953	128	மஹான்களின் சீரிய உபதேசம்
48.	1007	224	கடையோனுக்கும் கடவுட்காட்சி
49.	1110	128	ஆயிரம் அமுதத் துளிகள்
50.	1117	112	நாட்டின் இன்றைய நிலையும், அதன் விளைவுகளும்
51.	1134	64	கீதையின் பெருமையை விளக்கும் கதைகள்
52.	1243	125	உண்மையான சுகம்
53.	1246	96	பக்த சரித்திரம்
54.	1289	80	ஸாதனை நெறி
55.	1353	176	ராமாயணத்தில் சில முக்கிய பாத்திரங்கள்
56.	1354	160	மஹாபாரதத்தில் சில முக்கிய பாத்திரங்கள்
57.	1480	144	செயல்கள் அனைத்தும் பகவானுக்கே
58.	1481	144	பகவானை நேரில் காண்பதற்கான வழி
59.	1482	144	பக்தி யோகத்தின் பெருமை

இந்நூல்கள் அனைத்தும் அனைவரும் வாங்கி பயனடைய மிக மலிவான விலையில் வெளியிடப்பட்டுள்ளது. எங்களது நிறுவனம் ஆன்மீகம் மற்றும் மானிட நல்லொழுக்கம் வளர உதவும் நூல்களை தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம், உருது, குஜராத்தி, மராத்தி, பெங்காலி, ஒரியா, அஸ்ஸாமியா மற்றும் நேபாளி மொழிகளில் பல ஆண்டுகளாக வெளியிடுகிறோம் என்பதை மிக்க பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களது தமிழ்நாடு கிளை :

கீதா பிரஸ் புத்தக நிலையம்,
கீதா பிரஸ் மேன்ஷன்,
8/1 M, ரேஸ் கோர்ஸ் சாலை (தாமஸ் பார்க் பஸ்–ஸ்டாப் அருகில்),

Koviloor Digital Library

Shri Hari

OUR ENGLISH PUBLICATIONS

457 **Shrimad Bhagavadgita – Tattva-vivechani** With Sanskrit text, Translation and Deatiled Commentary [By Jayadayal Goyandka]

458 **Shrimad Bhagavadgita – Sadhaka Sanjivani** With Sanskrit text, Transliteration, Translation and Detailed Commentary [By Swami Ramsukhdas]

455 **Shrimad Bhagavadgita** [Sanskrit Text and English Translation] Pocket Size

534 **Shrimad Bhagavadgita** [Sanskrit Text and English Translation] [Hard Bound Edition] Pocket Size

470 **Shrimad Bhagavadgita** – Roman Gita [Sanskrit Text, Transliteration and English Translation]

452, 453 **Shrimad Valmiki-Ramayana** [With Sanskrit Text and English Translation] Set of two volumes

456 **Shri Ramacharitamanas** [With Hindi Text and English Translation]

786 **Shri Ramacharitamanas** (Medium Size]

564, 565 **Shrimad Bhagavata** [With Sanskrit Text and English Translation] Set of two volumes

783 **Abortion Right or Wrong? You Decide.** [By Gopi Nath Agrawal]

494 **The Immanence of God** [By Madan Mohan Malaviya]

808 **Nava Durga** [Story with the Picture]

By JAYADAYAL GOYANDKA

477 **Gems of Truth** [Vol. I]
478 **Gems of Truth** [Vol II]
479 **Sure Steps to God-Realization**
481 **Way to Divine Bliss**
484 **What is Dharma? What is God?**
480 **Instructive Eleven Stories**
520 **Secret of Jnana Yoga**
521 **Secret of Prem Yoga**
522 **Secret of Karma Yoga**
523 **Secret of Bhakti Yoga**

By HANUMAN PRASAD PODDAR

482 **Look Beyond the Veil**
483 **Turn to God**
485 **Path to Divinity**
486 **Wavelets of Bliss & the Divine Message**
620 **The Divine Name and Its Practice**
622 **How to Attain Eternal Happiness?**

By SWAMI RAMSUKHDAS

498 **In Search of Supreme Abode**
619 **Ease in God-Realization**
471 **Benedictory Discourses**
473 **Art of Living**
487 **Gita Madurya**
472 **How to Lead A Household Life**
570 **Let us Know the Truth**
638 **Sahaj Sadhana**
634 **God is Everything**
621 **Invaluable Advice**
474 **Be Good**
497 **Truthfulness of Life**
669 **The Divine Name**
476 **How to be Self-Reliant**
552 **Way to Attain the Supreme Bliss**
562 **Ancient Idealism for Modernday Living**

A. No. 30629

Koviloor Digital Library

Koviloor Digital Library

॥ ஓம் ஸ்ரீபரமாத்மநே நம: ॥



இராமேஸ்வரத்தில் ஸ்ரீராமனின் சிவலிங்க பூஜை

Gita Press, Gorakhpur—273005

Ph. (0551) 2334721, 2331250, 2331251